வெளியீடு—23—7—1975]
[Issued—23—7—1975]

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை 1975 ஏப்ரல் 8

**Tuesday 8th April 1975**

தொகுதி LXX—எண் 1

**Volume LXX—No. 1**

©
தமிழ் நாடு அரசு
*1975*

GOVERNMENT OF TAMIL NADU
1975

*சட்டமன்றப் பேரவைத் துறை*
*சென்னை-600009.*

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-600009.*

விலை 50 காசுகள்]
PRICE 50 Paise]

D
V&11,31 N75
31N75.70
61707

# Tamil Nadu Legislative Assembly Debates

THIRTEENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*8th to 11th April* 1975.

(Volume LXX—Nos. 1 to 4)

TABLE OF CONTENTS.

*Tuesday, 8th April* 1975.


Personnel of the Government of Tamil Nadu ... i—vi

Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... vii

List of Members of the Tamil Nadu Legislative Assembly with their Constituencies ... ... ix—xvi

1. Questions and Answers ... ... ... 1—30

2. Voting on Demands for Grants for 1975-76 (cont.)
   - (*a*) Demand No. 2—State Excise Department.
   - (*b*) *Demand No.* 8—Elections.
   - (*c*) Demand No. 9—Head of State, Ministers and Headquarters Staff.
   - (d) Demand No. 41—Relief on account of Natural Calamities.
   - (*e*) Demand No. 42—Pensions and other Retirement Benefits ... ... ... ... ...
   - (*f*) Demand No. 43—Miscellaneous .. ..
   - (g) Demand No. 46—Compensation and Assignments ... ... ... ... ...
   - (h) Demand No. 57—Loans and Advances by State Government .. .. .. ..

3. Papers laid on the Table .. .. .. .. 114

PAGES

*Wednesday, 9th April* 1975.

1. Questions and Answers ... ... ... ... 135—163
2. Point of order—
   Non-resignation of the Minister of Public Works even after the announcement of judicial enquiry against him ... ... ... ... ... 163—178
3. Calling attention—
   Closure of pathway leading to Thachur Harijan colony in Aruvikarai village, Kanniyakumari district, by an individual and the necessity for forming another pathway ... ... ... 179
4. Government Bill—
   Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Re-enacting Bill, 1975 ... 179—180
5. Voting on Demands for Grants for 1975-76 (cont).
   (*a*) Demand No. 21—Fisheries ... ... ...
   (*b*) Demand No. 30—Social Welfare ... ... 180—224, 225—231
6. Announcement— ... ... ... ...
   Business of the House ... ... ... ... 224—225
7. Papers laid on the Table ... ... ... ... 237

*Thursday, 10th April* 1975.

1. Questions and Answers ... ... ... ... 277—309
2. Points of order—
   (*a*) Delay in replying to short-notice questions ... and Call Attention notices ... ... 309—310
   (*b*) Taking up of Call Attention Notice immediately after Question Hour ... ... 319—320
3. Points of information—
   (*a*) Seizure of paddy from Nachiar Temple by Civil Supplies Department ... ... ... 31[illegible]
   (*b*) Discussion of Constitution Amendment Bill regarding integration of Sikkim with Union of India ... ... ... ... ... ... 318—319
4. Adjournment Motion—
   Situation *re.* electricity ... ... ... ... 311—317



PAGES

*Thursday, 10th April*—cont.

5. Minister's statement—
   Chief Minister's statement on the presence of Chinese' fishing boats in Madras Harbour ... 317—318
6. Calling attention—
   Fire accident in Mullaiyur, Tiruchirappalli district and consequent hardships to some persons ... 320—321
7. Voting on Demands for Grants for 1975-76 (cont.)—
   Demand No. 7—State Legislature ... ... 321—380
8. Announcement—
   Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1975 ... 380
9. Government Bill—
   Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1975 ... 381
10. Papers laid on the Table .. .. .. 381

*Friday, 11th April* 1975.

1. Questions and Answers .. .. .. 383—454
2. Minister's statement—
   Correction to an answer given to a supplementary by the Hon. Thiru K. Anbazhagan ... ... 455
3. Privilege Matter—
   Thiru M. Kannappan's statement *re.* alleged offering of a Diamond Necklace to Kanniyakumari Amman by the Prime Minister of India. 455—474
4. Calling Attention—
   (*a*) Release of effluent into Tambiraparani river by the Sun Paper Mills, Cheranmadevi ... 474—482
   (*b*) Action of Electricity Board in collecting crores of rupees by enhancing deposit from consumers ... ... ... ... 482—486
5. Announcement—
   Tamil Nadu Electricity Duty (Amendment) Bill, 1975 ... ... ... ... ... ... 486

PAGES

*Friday, 11th April 1975*—cont.

6. Government Bills—
(*a*) Tamil Nadu Electricity Duty (Amendment) Bill, 1975 .. .. .. .. 487
(*b*) Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1975 (L.A. Bill No. 15 of 1975) .. .. .. 491—507, 510—553

7. Points of Order—
(*a*) Chair's passing on to the next subject by the without giving an opportunity to a Member to raise a Point of Order .. .. .. 487—489
(*b*) Member's speech causing reflection on the Chair .. .. .. .. .. 489—490
(*c*) Propriety of the announcement of the Hon. Leader of the House *re.* grant of pension to Legislators in the absence of a provision in the Rules or Articles of the Constitution for the same. 490—491

8. Personal Explanation—
Personal explanation by Thiru P. Seenivasan on the distorted publication in 'Tamil Murasu' of his reply to the question raised by the Chief Minister ... ... ... ... ... 508—509

9. Papers laid on the Table .. .. .. 554—574

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர்.

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, ஆயத்துறை.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், நகர அமைப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின்தங்கிய வகுப்பினர் நலன், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராம தான இயக்கங்கள்.

5. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார். பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

6. மாண்புமிகு திரு. செ. மாதவன் (உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறுநிதி உதவி, ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

7. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, கம்பெனிகள், மின்சாரம், முகமதியர் அறக் கட்டளைகள்.

8. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பகுதி, வேளாண்மை பொறியியல் சம்பந்தமான பகுதிகள், வட்டாரக் கூட்டுறவுச் சங்கங்கள், இணைப்பு அளவிலான கழகங்கள் உட்பட்ட மாவட்டச் சங்கங்கள்.

9. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சி தலைவர்கள், இளைஞர் அணி சேரணி.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், குடிநீர் வாரியம்.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு. எடைகள், அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், வேலை வாய்ப்பும் பயிற்சி அளித்தலும், குடிசை மாற்று வாரியம்.

12. மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், மீனவம். இரவலர்கள் விடுதி, அநாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகளும் கண்காணிப்புப் பணிகளும்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (வணிக வரித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வணிக வரிகள், சிங்கோனா உட்பட காடுகள், கால் நடை வளர்ப்பு, கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம்.



14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்-அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அற நிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் வழங்குத் துறை, பால்வள மூலைப்புத் திட்டங்கள், தமிழ் நாடு பால்வள நிறுவனங்கள், விளம்பரம், பொதுத் தொடர்பு, படச் சுருள் தொழில் நுட்பவியல்.

16. மாண்புமிகு திரு. என். இராசாங்கம் (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள், திரைப்படச் சட்டம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

HIS EXCELLENCY THIRU KODARDAS KALIDAS SHAH

### Members of the Council of Ministers

1. THE HON. DR. M. KARUNANIDHI: (Chief Minister) in-charge of Public, Finance, Planning, General Administration, matters relating to Indian Civil Service Officers and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition and Excise.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN: (Minister for Education and Tourism) in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN: (Minister for Health) in-charge of Public Health, Medicine and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN: (Minister for Backward Classes) in-charge of Backward Classes, Registration, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRU P. U. SHANMUGAM: (Minister for Public Works) in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

6. THE HON. THIRU S. MADHAVAN: (Minister for Food and Co-operation) in-charge of Food and Co-operation, Agricultural Refinance, Textiles, Yarn, Handlooms, Law, Courts and Prisons.

7. THE HON. THIRU S. J. SADIQ PASHA: (Minister for Industries) in-charge of Industries, Mines and Minerals, Iron and Steel Control, Companies, Electricity and W[illegible]

8. THE HON. THIRU Si. Pa. ADITANAR : (Minister for Agriculture) in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Agro-Engineering and Services Co-operative Societies at the Block, District and apex level including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM : (Minister for Revenue) in-charge of Revenue, Board of Revenue, Districts Revenue Establishment, Deputy Collectors, Youth Service Corps and Prosperity Brigade.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY : (Minister for Local Administration), in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions and Water Board.

11. THE HON. THIRU K. RAJARAM : (Minister for Labour), in-charge of Labour, Housing, Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics, Employment and Training and Slum Clearance Board.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI : (Minister for Social Welfare), in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN : (Minister for Commercial Taxes in-charge of Commercial Taxes, Forest including Cinchona, Animal Husbandry, Legislation on Money Lending, Rural Indebtedness and Legislation on Chits.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN : (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk Operation Flood Project, Tamil Nadu Dairy Development Corporation, Information and Public Relations and Film Technology.

16. THE HON. THIRU N. RAJANGAM : (Minister for Harijan Welfare) in-charge of Harijan Welfare, Indians Oversees and Refugees and Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

### பேரவைத் துணைத் தலைவர்

திரு. என். கணபதி, பி.எஸ்.ஸி., பி.எல்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. டாக்டர் க. நாகராசன்.
2. திரு. துரைமுருகன்.
3. திரு. கு. காமாட்சி.
4. திரு. கா. காளிமுத்து.
5. திரு. என். டென்னிஸ்.
6. திரு. கே. கந்தசாமி.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### குழு அலுவலர்

திரு. ப. சுப்பராயன், எம். ஏ.

### உதவிச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்

திரு. கே. சுந்தரராசன்.

### எஸ்டேட் அதிகாரி

திரு. வி. சிதாரமன், பி.காம்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதி (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, மாண்புமிகு திரு. சி.வி.எம். (அமைச்சர்). | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். அ. .. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அரங்கநாயகம், திரு. செ. .. .. | கோயம்புத்தூர்-மேற்கு. |
| 6 அழகமுத்து, திரு. து. ப. .. .. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 7 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 8 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 9 அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 10 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 12 ஆண்டி அம்பலம், திரு. எம். .. .. | மேலூர் வடக்கு. |
| 13 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ |
| 14 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 16 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர் |
| 17 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 18 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 19 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திகுளம் |
| 20 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 21 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி |
| 22 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 23 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 24 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 25 இராசாராம், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்). | சேலம்-2. |
| 26 இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர். (செ.வ.) |
| 27 இராதாகிருட்டிணன், திரு. எம். எஸ். .. | தண்டராம்பட்டு |
| 28 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 29 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 30 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 31 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 32 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.). |
| 33 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 34 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 35 இராஜாங்கம், மாண்புமிகு திரு. என். .. (அமைச்சர்). | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 36 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. .. | கன்னியாகுமரி. |
| 37 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 38 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 39 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 40 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 41 கணபதி, மாண்புமிகு திரு. என். .. (பேரவைத் துணைத் தலைவர்). | பாபநாசம். |
| 42 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 43 கணேசன், திரு. எல். .. .. | ஒரத்தநாடு. |
| 44 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 45 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 46 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின் பிரிட்ஜ். |
| 47 கதிரவன், திரு. கா. மு. .. .. .. | தென்காசி. |
| 48 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 49 கந்தசாமி, திரு. கே. பி. .. .. .. | சாத்தான்குளம் |
| 50 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 51 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 52 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 53 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 54 கருணாநிதி, திரு. தாழை மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 55 கருணைநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 56 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ |
| 57 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 58 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. | முதுகளத்தூர். |
| 59 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 60 கார்த்திசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 61 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 62 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 63 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 64 கிருட்டிணன், திரு. நா. .. .. .. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 67 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 68 குப்பல் இராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 69 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 70 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 71 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 72 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 73 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 74 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.). |
| 75 கோபால், திரு. கே. பி. .. .. .. | கம்பம். |
| 76 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டிணம் |
| 77 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 78 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |
| 79 கோவிந்தன், மாண்புமிகு புலவர் கா. (பேரவைத் தலைவர்). | செய்யாறு. |
| 80 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 81 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 82 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம் |
| 83 சதாசிவம், திரு. செ. .. .. .. | ஆண்டிமடம் |
| 84 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை |
| 86 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 87 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 88 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 89 சத்தியவாணிமுத்து, திருமதி .. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 90 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. — | இராமநாதபுரம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 91 சம்பத், திரு. டி. வி. | செம்பனார்கோவில். |
| 92 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 93 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 94 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி |
| 96 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 97 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 98 சீனிவாசன், திரு. பெ. | விருதுநகர். |
| 99 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 100 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 101 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 102 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 103 சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 104 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஓசூர் (செ. வ.) |
| 105 சின்னவெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 106 சுந்தரம், திரு. ஓ. என். | திண்டுக்கல். |
| 107 சுப்பிரமணியம், திரு. எ. | சிங்காநல்லூர். |
| 108 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலம் |
| 109 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 110 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 111 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 112 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 113 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 114 சுப்பையா, திரு. கே. வீ. | ஆலங்குடி. |
| 115 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 116 சுப்பையா, திரு. எ. ஆர். | கடையநல்லூர். |
| 117 சுருளிவேல், திரு. மு. | போடிநாயக்கனூர். |
| 118 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 119 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 120 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 121 ஜெயராமன், திரு. சி. | சேலம்-1. |
| 122 செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர் (செ. வ.) |
| 123 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 124 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 125 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 126 சோலையா, திரு. த. | மானாமதுரை. |
| 127 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 128 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 129 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 130 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 131 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை—மேற்கு. |
| 132 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 134 தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 135 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்றாம்பள்ளி |
| 136 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 137 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 138 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 139 துரைசாமி திரு. எ. க. | குடியாத்தம். |
| 140 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 141 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 142 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 143 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 144 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 145 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 146 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 147 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 148 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 149 நரசிம்மன், திரு. எ. சி. | ஆரணி. |
| 150 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 151 நாகராஜன், டாக்டர் க. | வடமதுரை. |
| 152 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ. |
| 153 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டன்சத்திரம். |
| 154 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. | ஆத்தூர். |
| 155 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 156 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 157 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 158 நைனுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 159 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 160 பத்மாவதி, திருமதி. ஏ. கோ. | முகையூர். |
| 161 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 162 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 163 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 164 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 165 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 166 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 167 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 168 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 169 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 170 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 171 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 172 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 173 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 174 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 175 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 176 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 177 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 178 பாலையா, திரு. ஏ. | கொளச்சல். |
| 179 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 180 பெரியசாமி, திரு. தி. ஈ. | அவினாசி. |
| 181 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 182 பெருமாள், திரு. ஏ. ஆர். | காரியப்பட்டி. |
| 183 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 184 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 185 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 186 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 187 பொன்னுரங்கம், திரு. ஏ. எம். | சோளிங்கபுரம். |
| 188 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 189 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 190 மதியழகன், திரு. கே.ஏ. | ஆயிரம் விளக்கு. |
| 191 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 192 மலைக்கண்ணன், திரு. வீ | இளையாங்குடி. |
| 193 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 194 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 195 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 196 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்), |
| 197 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 198 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 199 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 200 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 201 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 202 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 203 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 204 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிரி. |
| 205 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 206 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 207 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 208 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 209 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 210 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 211 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 212 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 213 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில் |
| 214 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 215 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 216 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 217 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 218 இராஜா, திரு. ஏ. எம். | பவானி. |
| 219 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 220 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 221 லத்தீப், திரு. எம். எ. | வாணியம்பாடி. |
| 222 வகாப், திரு. கே. எ. | ராணிப்பேட்டை. |
| 223 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 224 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 225 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கற்பட்டு. |
| 226 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 227 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 228 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 229 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 230 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 231 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 232 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 233 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 234 ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 235 வெற்றிடம் | வீரபாண்டி |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள் :—

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.

3 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1975 ஏப்ரல் 8.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### *Powers of Director of School Education*

* 581 *Q.*—THIRU D. S. A. SIVAPRAKASAM : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that the administrative powers of the Director of School Education have been decentralised ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பள்ளிக் கல்வி இயக்குநர் மட்டத்தில் செய்யப்பட்டு வந்த சில பணிகளை கீழ் மட்ட அதிகாரிகள் செய்தால் நிர்வாகம் நன்கு நடைபெறு மாதலின், அதற்குத் தேவையான சில அதிகாரங்களை தலைமைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர்கள் போன்ற கீழ்மட்ட அலுவலர் களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் பற்றிய அறிக்கை * அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, துவக்கப்பள்ளிக்காகத் தனியாக ஒரு இயக்குநரை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று ஏற்கெனவே பல தடவை இந்த மன்றத்தில் நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அப் படிப்பட்ட உத்தேசம் இல்லை.

* 115-118-ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## Co-education High Schools.

*582 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that certain High Schools, where there was co-education have been bifurcated into two schools ; and

(*b*) if so, the number of such schools bifurcated during 1974-75 ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். : (அ) ஆம்.

(இ) ஒன்று.

திரு. என். கே. பழனிசாமி : 1973-74-ஆம் ஆண்டில் இம்மாதிரி எத்தனை பள்ளிக்கூடங்கள் எண்ணிக்கை அடிப்படையில் தனித் தனியாகப் பிரிக்கப்பட்டன ? 1975-76-ஆம் ஆண்டில் எத்தனை பள்ளிகளை இம் மாதிரி பிரிப்பதாக சர்க்காருக்கு உத்தேசம் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1974-75-ஆம் ஆண்டில் திருபுவனத்திலிருந்த அரசினர் பள்ளியில் ஏராளமான மாணவியர் இருந்த காரணத்தால், அந்தப் பள்ளியை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை வந்தது. ஆண்கள் அரசினர் பள்ளி, பெண்கள் அரசினர் பள்ளி என்று தனியாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. 1975-76 ஆம் ஆண்டைப் பொறுத்து இன்னும் முடிவாக வில்லை. அதுபற்றி கோரிக்கைகள் பிறகுதான் வரும்.

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, சில பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்து, நிர்வாக வசதியை முன்னிட்டு "பைஃபர்கேட்" பண்ண அனுமதி கேட்டால் "என்டௌமெண்ட்" கட்டச் சொல்கிறார்கள். புதிதாக ஒன்றும் பள்ளி நடத்துவதில்லை. இருக்கிற பள்ளியை, நிர்வாக நலனை உத்தேசித்து, மாணவர்கள் திறம்பட கல்வி கற்கவேண்டும் என்ற காரணத்தால் "பைஃபர்கேட்" செய்வதற்கு அனுமதி கேட்கிறார்கள். இம் மாதிரி பள்ளிகளிடமிருந்து "என்டௌமெண்ட்" கேட்காமல் அங்கீகாரம் அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனியாகப் பிரிக்கும்போது தனி உயர்நிலைப் பள்ளி ஆகிறது. அதற்குத் தலைமை ஆசிரியர் நியமித்து, அலுவலகங்கள், மற்றவைகள் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறபோது, அதற்கு வைப்பு நிதி தனியாக வைப்பதுதான் நியாயமாக இருக்கிறது. ஆகவேதான், சட்டப்படி வற்புறுத்தப்பட்டு வருகிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, பெண்கள் பள்ளிகள் இருக்கின்ற இடத்தில ஆண்கள் பள்ளிகளும் இருக்கின்றன. ஆண்கள் பள்ளிகளில் பெண்களை "அட்மிட்" செய்யக் கூடாது என்ற உத்தரவு



இருந்தும் அதை மீறி சில பள்ளிகளில் பெண்களை "அட்மிட்" செய்கிறார்கள். அவ்விதம் உத்தரவை மீறும் பள்ளிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா ? குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த நிலை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி தெளிவாகவே நாம் அறிக்கை விட்டிருக்கிறோம். ஆண்கள் பள்ளிகள் இருக்கும் ஊரில் பெண்கள் பள்ளிகள் இருக்குமானால், அங்கே பெண்கள் பள்ளியில்தான் பெண்களைச் சேர்க்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால், தொன்றுதொட்டு சிலபல இடங்களில் இந்த நிலைமை இருக்கக்கூடும். பல இடங்களில் பெண்கள் பள்ளிகள் இருக்கும் போது, அங்கே ஆண்கள் பள்ளியில் பெண்களை சேர்க்கக்கூடாது என்பது தான் விதி. அதை மீறி சில எதிர்பாராத நேர்வுகளில் ஓரிரு இடங்களில் அனுமதி பெற்று ஓரிருவரைச் சேர்க்கலாம் என்று இருக்கிறது. அரசு உத்தரவு இல்லாமல், அரசு அனுமதி பெறாமல் சேர்க்கக்கூடாது. அப்படிச் சேர்த்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். அந்த நடவடிக்கைகள் எடுக்கின்ற வகைகளில்தான் மானியம் தருவதை நிறுத்துவது போன்ற பல்வேறு முறைகளைச் செய்யவேண்டி வரும். அதைப்பற்றி அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரியும் மாவட்டக் கல்வி அதிகாரியும் முறைப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இரு பால் மாணவர்களும் சேர்ந்து படிக்கின்ற—அதிலும் மிக அதிகமான மாணவர்கள் எண்ணிக்கையுள்ள—உயர்நிலைப்பள்ளி மாயூரத்தில் உள்ள கூறைநாடு உயர்நிலைபள்ளி என்ற நிலை பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. அதை அரசினர் ஏற்று நடத்த முன்வருவதாகக் கூறப்படுகிறது. மிக அதிகமான மாணவர் தொகை உள்ள, இருபால் மாணவர்கள் படிக்கின்ற அந்த கூறைநாடு நகராட்சி உயர்நிலைப் பள்ளியைப் பிரித்து, அரசினர் மாணவியர் உயர்நிலைப் பள்ளியாகவும், அரசினர் மாணவர் உயர்நிலைப் பள்ளியாகவும் அமைப்பதற்கு வழிவகை காண அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நிபந்தனை அடிப்படையில் பிரிப்பதற்கு முன்வந்தால் அரசாங்கம் பார்த்து, நிபந்தனைகள் நிறைவேற்றப்படுகிற நிலைமையில் அதற்கு ஒத்துழைப்புத் தரலாம். ஆனால், அரசினர் அதை எடுத்துக் கொள்வதா என்பதைப் பற்றிய விவரக் குறிப்பு இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானம் என்கின்றபோது, ஆண்களையும், பெண்களையும் ஒரே பள்ளியில் படிக்க வைத்து வளர்த்துக் கொண்டு வருவது நல்லதல்லவா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பெண்களுக்குத் தனி உயர்நிலைப்பள்ளியும், ஆண்களுக்குத் தனி உயர்நிலைப்பள்ளியும் இருக்க வேண்டும் என்று பலரும் விரும்புகிறார்கள் அப்படிப்பட்ட இடங்களில் அந்த வேண்டுகோளை நிறைவேற்றுகிறோம்.

ஆனால், அப்படிப்பட்ட நிலைமைகளிலும் கூட, ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கலாம் என்று வைத்துவிட்டால் போதுமான எண்ணிக்கை மாணவர்கள் வருவதில்லை. அப்படி வராத சூழ்நிலை ஏற்படும்போது அங்கேயிருக்கிற ஆசிரியர்களுக்கு வேலை இழப்பு ஏற்படுகிறது. ஆகவே தான் இதை அவரவர்கள் விருப்பப்படி நடத்துவதற்கு விட்டுவிட்டால் பல இடங்களில் பல சங்கடங்கள் வருகின்றன. ஆகவேதான் பிரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. எங்கெங்கு பெண்கள் உயர்நிலைப்பள்ளி இருக்கிறதோ அங்கே உள்ள ஆண்கள் பள்ளிகளில் பெண்களை சேர்க்கக்கூடாது என்று நாம் விதிகள் வகுத்திருக்கிறோம்.

திரு. த. சோலையா : இருபால் மாணவர்கள் சேர்ந்து படிக்கின்ற உயர்நிலைப்பள்ளிகள் எத்தனை 1974–75–ஆம் ஆண்டிலும், 1975–76 ஆம் ஆண்டில் இதுநாள் வரையிலும் பிரிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் வந்திருக்கின்றன? அதன்மீது அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதலிலேயே குறிப்பிட்டேன். 1974–75–இல் திருப்புவனத்திலிருந்து மட்டும் கோரிக்கை வந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மற்றவற்றைப் பற்றி விவரக் குறிப்புகள் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்பொழுது ஆண்களும் பெண்களும் ஒரு சில பள்ளிக்கூடங்களில் சேர்ந்து படிக்கிறார்கள். அப்படிப்பட்ட பள்ளிகளைப் பிரிக்கின்ற நேரத்தில் ஒரு சில ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அப்படிப் பாதிக்கப்படுகிற ஆசிரியர்களுக்கு அண்மையில் இருக்கும் பள்ளிக்கூடங்களில் வேலை கொடுக்க அரசாங்கம் ஏதாவது உத்தரவு பிறப்பிக்குமா? அப்படி இல்லாமலிருந்தால் அந்தப் பள்ளிக்கூடத்தில் பல்லாண்டுக் காலமாக வேலை செய்த ஆசிரியர்கள், வேலை இழக்க நேரிட்டால் அவர்களுக்கு என்ன பாதுகாப்பு அளிக்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசினர் பள்ளிகளாக இருந்தால் அரசினர் பள்ளிகளில் அல்லது கழக உயர்நிலைப் பள்ளிகளில் அவர்களை வேலைக்கு சேர்த்துக் கொள்ள வாய்ப்புகள் ஏற்படுத்தித் தருகிறோம். ஆனால், தனியார் பள்ளிகளில் வேலை செய்கிறவர்கள் பாதிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்படும்போது பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் பாதிக்கப்படாத சூழ்நிலையை உருவாக்கி அவர்களை வேலையில் அமர்த்திக் கொள்ள வேண்டும். யாரையும் வேலையைவிட்டு நீக்கக்கூடாது என்று நிபந்தனை விதித்து இப்பொழுது அனுமதி வழங்கும் முயற்சியை நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து கல்வி பயின்று வருகிறார்கள். அந்தப் பள்ளிகளைப் பிரித்து, ஆண்களுக்கு வேறு பள்ளி, பெண்களுக்கு வேறு பள்ளி என்று அமைக்க அரசு உத்தரவிடுவார்களா?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தந்த நகராட்சி மன்றம்தான் அதை முடிவு செய்ய வேண்டும். நகரங்களைப் பொறுத்தவரையில் ஒரு தனிப் பள்ளி வைக்க வேண்டுமென்றால், அதற்கு இட வசதி, கட்டட வசதி மற்றவைகள் தேவைப்படும். கட்டட வசதி இட வசதி இருந்து, தனியாக உயர்நிலைப்பள்ளி பிரித்து நடத்துவதற்கான சூழ்நிலை நகராட்சி மன்றங்கள் ஏற்படுத்தித்தந்தால் அரசு அதைபற்றி பரிசீலிக்கும்.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளி வரையில் "கோ-எஜுகேஷன்" இருக்கிறது. க்ராஜுவேட், போஸ்ட்-க்ராஜுவேட் படிப்புக்கும் "கோ-எஜுகேஷன்" இருக்கிறது. ஆனால், இடையில் பி. யு. சி.-இல் மட்டும் "கோ-எஜுகேஷன்" தேவை இல்லை என்று யூனிவர்சிடி உத்தரவிடுகிறதே, இதில் அரசுக்கும் யூனிவர்சிடிக்கும் ஏதாவது கொள்கை வேறுபாடு இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஓரிடத்தில் பெண்கள் கல்லூரி இல்லாமல், ஆண்கள் கல்லூரி மட்டுமே இருந்தால், அந்த இடத்தில் ஆண்கள் கல்லூரியில் பெண்களையும் சேர்க்க வழிவகை செய்யுமாறு கோரிக்கையை அரசு பல்கலைக்கழகங்களுக்கு விட்டுக்கொண்டு வந்திருக்கிறது. மதுரைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில் அதை ஓரளவு ஏற்றுக் கொண்டிருக்கிறது. குறிப்பிட்ட அளவுக்கு மிகுதியாக மாணவர்கள் சேர்ந்து அந்தக் கல்லூரிகளில் இரண்டு பெண் பேராசிரியைகள் இருந்தால் பெண்கள் தங்குவதற்கென்று தனி இடமும், மற்ற வசதிகளும் செய்துதரவேண்டும். அப்படிச் செய்துத் தந்தால் அந்தக் கல்லூரிகளில் பெண்களை சேர்த்துக் கொள்ள அனுமதி அளிக்கலாம் என்று மதுரைப் பல்கலைக் கழகம் முடிவு எடுத்திருக்கிறது. அதே முடிவை சென்னை பல்கலைக் கழகமும் எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து வருகிறோம்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இப்போது தனியார் உயர்நிலைப் பள்ளிகளிலே கல்வியின் தரம் நன்றாக இருக்கிறது என்ற காரணத்திற்காகப் பெண்களை அவற்றில் சேர்த்து படிக்க வைக்கிறார்கள். இப்படித் தரமான கல்வியைப் பெறுவதற்குப் சில இடங்களில் அவர்களுக்கு தனிச் சலுகைகள் அளிக்கப்படுவதோடு ஆண் பெண் சேர்ந்து படிப்பதற்கும் வசதியிருக்கிறது. இப்படிப்பட்ட தரத்தை அரசினர் பள்ளிகளில் ஏற்படுத்த அரசாங்கம் ஏதாவது திட்டங்கள் வைத்திருக்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசினர் பள்ளிகள் தரமான கல்வியை அளிக்கின்றன என்பதற்கு எவ்வளவோ எடுத்துக்காட்டுகள் வைக்க முடியும். அதே மாதிரி தனியார் பள்ளிகளில் சில தரமற்றவை என்பதற்கும் எடுத்துக்காட்டுகள் உள்ளன. அரசு சில வரைமுறைகளை வைத்திருக்கின்றன. அப்படி இல்லாவிட்டால் பற்பல நெருக்கடிகள் ஏற்பட்டு விடும், ஏற்படுகின்றன. 800, 900 மாணவர்கள் உள்ள ஊர்களில் இருக்கிற பள்ளிகளில் 300 பெண்கள்தான் இருக்கின்

றனர். இட்டத்தட்ட 50 சதவீதம்தான் இருக்கிறது. பெண்களுக்கு என்று உயர்நிலைப் பள்ளிகள் வைக்காவிட்டால், அதன் காரணத்தால் ஆசிரியர்கள் பலருக்கு வேலையை இழக்கும் நிலை ஏற்படுகின்றது. அதை எல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்து தான் எங்கு எங்கு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் வைக்க முடியுமோ, அங்கு எல்லாம் அவைகளை வைத்திருக்கிறது.

திரு. ஏ. பாலையா : தலைவர் அவர்களே, மக்கள் தொகை அதிகம் இல்லாத கிராமங்களில் ஏற்கெனவேயே உயர்நிலைப் பள்ளிகள் செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும் அதே கிராமத்தில் இன்னொரு தனியார் பெண் பள்ளியை ஆரம்பிப்பது சரிதானா. அப்படி இருப்பதனால் 2 பள்ளிகளும் நடைபெற முடியாத நிலைமை ஏற்படுகிறது. அதன் காரணத்தால் ஆசிரியர்கள் பலர் வேலை வாய்ப்பை இழக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசாங்கத்தினுடைய கொள்கை அதுதான். ஒரு குறிப்பிட்ட இடத்தில் உயர்நிலைப் பள்ளி இருந்தால் அதைச் சுற்றி 5 மைல் தொலைவுக்குள் வேறு ஒரு பள்ளி அமைக்க வேண்டும். 5 மைல் சுற்றளவுக்குள் வேறு பள்ளி அமைக்கக் கூடிய வசதிகள், சாத்தியக் கூறுகள் இருந்தால் மட்டுமே பள்ளிகள் ஏற்படுத்தலாம் என்ற கொள்கையை வைத்திருக்கிறது. இன்னும் சில பல இடங்களில் ஏற்கெனவேயே நடைபெற்று வருகிற பள்ளிகள் நடைபெறக் கூடாது என்ற நோக்கத்தோடு சில தனியார் பள்ளிகள் துவக்கப்படுகின்றன. இதற்கு எல்லாம் இடம் அளிக்கக் கூடாது என்பது அரசின் கொள்கை.

திரு. வை. பாலசுந்தரம் : நாளுக்கு நாள் சமத்துவம் பேசப் படுகிற இந்நாளில் மாணவர்களிடத்தில் தவறாக எண்ணங்கள் படராமல் இருக்க தோழமை உணர்ச்சியை பாடப் புத்தகங்களில் புகுத்தி, அவற்றை போதிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சம்பந்தமற்ற கேள்வி. இதற்குப் பதில் தேவை இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : கல்லூரிகளில் ஆண்கள் பெண்கள் சேர்ந்து படிக்கும்போது, அதே மாதிரி உயர்நிலைப் பள்ளிகளிலும் மாணவ மாணவியர்கள் படிக்க சேர்ந்து வசதிகள் ஏற்படுத்தினால் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது உயர்ந்த நோக்கமாக இருக்கலாம். பல ஊர்களில் பெண்களுக்கு தனி உயர்நிலைப் பள்ளிகள் இல்லாத காரணத்தால், பெற்றோர்கள் மாணவிகளை பள்ளிக்கு அனுப்பாமல் இருந்து விடுகிறார்கள். படிப்பை நிறுத்தி விடுகிறார்கள். அனுபவத்தில் பார்க்கும்போது பல மாணவிகள் 8-ஆவது வகுப்போடு நின்று விடக் கூடிய "ட்ராப் அவுட்ஸ்" நிலை தான் அதிகமாக இருக்கிறது. எனவே தான் தனியாக பெண்களுக்கு என்று உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தி அவர்களை அதிக அளவில் படிக்க ஏற்பாடு செய்ய வேண்டியுள்ளது.





திரு. கே. என். குமாரசாமி : மாணவ மாணவியர் சேர்ந்து படிக்கிற பள்ளிகளில் கல்வியின் தரம் உயர்ந்திருக்கிறதா ? அல்லது தனித் தனியாக படிக்கிற பள்ளிகளில் உயர்ந்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதில் இரண்டு விதமான கருத்துக்கள் உண்டு. எதுவுமே, மாணவர்களுடைய மனத் திடத்தையும் மனதைக் கட்டுப்படுத்துகின்ற தன்மையையும் பொறுத்து இருக்கிறது. இணைந்து படித்தால் அதிகமாக அறிவு வளருகிறது என்பது உலகில் ஒரு சாரார் கருத்து. தனித் தனியாகப் தான் இருக்க வேண்டு மென்பது மற்றொரு சாராரின் கருத்து.

திரு. பெ. சீனிவாசன் : அமைச்சரின் பதிலிலிருந்து என் கேள்வி எழுகிறது. அருகில் ஏற்படுத்த விரும்பும் பள்ளிகளுக்கு அனுமதி தர மாட்டேன் என்ற அமைச்சர் கூறுகிறார். அந்தக் கொள்கைக்கு விரோதமாக மல்லான் கிணறு என்ற ஊரில் எம். எஸ். பி. ராஜா ஒரு பள்ளி கட்டியிருக்கிறார்கள். ஏற்கெனவேயே இருக்கக் கூடிய பள்ளியை இது பாதித்திருக்கிறது. இந்த ஜூன் மாதத்தில் அதற்குக் கொடுக்க வேண்டிய டெம்பரரி ரிகக்னிஷனை ரதது செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாணவர்கள் சேர்க்கப் பட்டு பள்ளிக் கூடம் நடந்துகொண்டிருக்கிறபடியால், அந்தப் பள்ளிக் கூடம் தொடர்ந்து நடக்கட்டும் என்று விட்டு வைக்கப்பட்டிருக்கிறது.

## நடு நிலைப் பள்ளிகளில் விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள்.

*583 வினா—திரு. வி. ஆலடி அருணா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐநூறுக்கு மேல் எண்ணிக்கை உள்ள நடு நிலைப் பள்ளிகளில் விஞ்ஞான ஆய்வுக் கூடம் திறந்திட அரசிற்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தமிழ் நாட்டில் இருக்கிற பள்ளிக் கூடங்களில் பல இடங்களில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் இல்லாமல் இருக்கின்றன. இந்தக் குறையைப் போக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் இது வரையில் 810 உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் சாதனங்கள் வாங்கவும் ஆய்வுக் கூடக் கட்டடங்களுக்கு உதவு மானியமாகவும் அளிக்கப்பட்டுள்ளன. 1974–75–ஆம் ஆண்டில் மேலும் 55 உயர் நிலைப் பள்ளிகளுக்கு இம்மானியம் வழங்கப்படும். மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான எல்லா அறிவியல் கருவிகளும் கொண்டுள்ள 17 ஆய்வுக் கூட இயல் ஊர்திகள் இயங்குகின்றன. மேலும் 8 ஊர்தி வண்டிகள் 1975–76–ம் ஆண்டில் வாங்கப்படும்.

நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு அவசியமான முறையில் விளக்கம் அளிக்கும் பொருட்டு சில அறிவியல் சாதனங்கள் வாங்குவதற்காக தொடக்கப்பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 1,000 வழங்குவது என்ற அடிப்படையில் அறிவியல் சாதனங்களும் ஏனைய கல்விச் சாதனங்களும் வழங்கும் திட்டம் 1960-ல் தொடங்கப்பட்டது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 11,400 தொடக்கப்பள்ளிகளும் 3,000 உயர் தொடக்கப்பள்ளிகளும் பயன் அடைந்துள்ளன. 1975–76–ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தின் கீழ் 1,220 தொடக்கப்பள்ளிகளும் 334 உயர்தொடக்கப்பள்ளிகளும் பயன் பெறும்.

### நொய்யல் நீர்த் தேக்கத் திட்டம்.

*584 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கரூர் தாலுக்காவில் நொய்யல் நீர்த்தேக்கத் திட்டம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இத் திட்டத்திற்கான விரிவான ஆய்வு தலைப் பொறியாளர்களால் நடத்தப்பட்டு வருகிறது.

### *Silt excluder in Grand Anicut.*

*585 Q.—THIRU G. ILANGOVAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal with the Government to put up a silt excluder at the head reach of Grand Anicut channel ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) நீரியல்-நீர்ப் பண்பியல்; பூண்டி நிறுதனத்தில் மாதிரி ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. பெ. சீனிவாசன் : தமிழ் நாட்டில் இருக்கிற ஏரிகளில் இன்னும் சில்ட் கிளியரன்ஸ் தொடங்கப்படவில்லை. அரசாங்கம் இதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யுமா ?





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேள்வி, பூண்டி நிறுவனத்தில் உள்ள ஆய்வுகள் பற்றியது. வறட்சிப் பணிகளின் கீழ் அந்த ஏரிகளில் சில்ட் கிளியரன்ஸ் செய்யப்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, ஜி. ஏ. கனாலில் வண்டல் படிந்து விடுவதன் காரணமாக ஆண்டு தோறும் பல லட்சம் ரூபாய்செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அந்த "ஹெட் ஸ்லூயிஸ்" அமைந்திருக்கிற இடத்தின் காரணமாகத்தான் வண்டல் படிகிறது என்று, பொறியியல் வல்லுநர்கள் சொல்கிறார்கள். ஆகவே, அந்த "ஹெட் ஸ்லூஸினை" கொஞ்சம் முன்னால் அமைக்கும் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் கருதுவதைப்போல் "ஹெட்ஸ்லூயிஸை" மாற்றியமைக்கும் திட்டம் இல்லை. வண்டல் படியாமல் எப்படி நீரோடு அடித்துச் செல்லச் செய்யலாம் என்பது பற்றி ஆராய்ச்சி நடக்கிறது. ஆராய்ச்சி பற்றிய அறிக்கை வந்தபின்னால் மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று பரிசீலனை செய்யப்படும்.

### *Rajaji Memorial, Guindy.*

*586 Q.—THIRU N. DENNIS :
THIRU N. K. PALANISAMY } : Will the Hon. the Minister for Public Works be pleased to state the progress of works so far made at the Rajaji Memorial in Guindy, Madras ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கிண்டி, ராஜாஜி நினைவாலயம் கட்டுவது தொடர்பான பணி முடிவடைந்து விட்டது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இதன் மொத்தச் செலவு எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா ? அதோடு இராஜாஜியின் நினைவு மண்டபத்தில் வேறு சில அரசியல் தலைவர்களின் படமும் பெயிண்ட் செய்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அப்படி யார் யாருடைய படங்கள் தேசியத் தலைவர்கள் என்ற முறையில் அங்கே இடம் பெற்றிருக்கின்றன என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இதற்காக அரசு 6 லட்சம் ரூபாய் சாங்ஷன் செய்தது. உள்ளே எந்தெந்த படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன என்று கேட்டார்கள். மூதறிஞர் இராஜாஜி அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் என்ற முறையில் கூட அல்ல ; அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட முக்கியமான சம்பவங்களைக் குறிக்கும் படங்களை வைத்திருக்கிறோம். தனிப்பட்ட யாருடைய படமும் அல்ல.

திரு. என். கே. பழனிசாமி : சார், மெயின்டனென்ஸ் செய்வதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறத்து ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பொதுப்பணித் துறை அதை ஏற்றுக்கொள்ளும்.

திரு. கு. அ. பொம்மன்: தலைவரவர்களே, இராஜாஜி அவர்களுடைய நினைவு மண்டபத்திற்கு திறப்பதற்கு நம்முடைய இராஷ்டிரபதி அவர்கள் வருவதாக இருந்தது. அவர்கள் இப்போது வர முடியாததால் திறப்புவிழா தள்ளிபோடப்பட்டிருக்கிறது. இராஷ்டிரபதி வராததால் அண்மையில் ஜெ. பி. நாராயணன் அவர்கள் சென்னைக்கு வர இருக்கிறார்கள்; அவரைக்கொண்டு திறக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ சண்முகம்: தலைவரவர்களே, ஜனாதிபதி வந்து திறப்பதாக இருந்தது. ஆனால் அவர்கள் இப்போது வருவதற்கில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். வேறு யாரைக் கொண்டு திறப்பது என்று அரசு இன்னும் முடிவு செய்யவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த இராஜாஜியினுடைய நினைவு மண்டபம் காந்தியடிகளுடைய நினைவு மண்டபத்தை ஒட்டி இருக்கிறது. அம்மாதிரி அந்த இடத்தில் நினைவு மண்டபம் கட்டுவதற்கு ஏதாவது விசேஷ காரணங்கள் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: காந்தியடிகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர் என்பதற்காக மட்டுமல்ல, காந்தியடிகளின் சம்மந்தியாக இருந்தார் என்பது மட்டுமல்ல, இரு தேசியத் தலைவர்களின் நினைவு மண்டபங்களும் பக்கத்தில் பக்கத்தில் இருப்பதில் தவறு இல்லை என்பதால் அங்கு அமைக்கப்பட்டது.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, the Government has purchased the house in which Rajaji was born in Hosur Taluk two years back. May I know from the Hon. Minister for Public Works what steps have been taken to make it a memorial and a centre of pilgrimage ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அதுபற்றி தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட பெரும் தலைவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கும்போது டில்லியில்கூட வரிசையாக காந்தியடிகள், நேரு, சாஸ்திரி என்று அமைத்திருக்கிறார்கள். அதேமாதிரி இங்கும் எங்கள் ஒப்பற்ற தலைவர் காயிதே மில்லத் அவர்களுக்கு ஒரு நினைவு மண்டபம் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இதுபற்றி இதுவரை எந்தவிதமான கோரிக்கையும் வரவில்லை; இது நியாயமான ஒன்று என்பதை ஒப்புக்கொள்கிறேன்.





திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இராஜாஜி நினைவு மண்டபம் கட்டி முடிந்துவிட்டது. திறப்பு விழாவுக்கு குடியரசுத் தலைவர் வருவதாக இருந்தது; இப்போது வர முடியவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். வருவதாக தேதி கொடுத்துவிட்டு வராமல் இருப்பதற்கு ஏதாவது அரசியல் காரணம் உண்டா ? அப்படி ஏதாவது..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு விடை இல்லை.

வினா 587.

*Mettupalayam–Ooty railway service.*

*587 *Q.*—Thiru R. R. MUNUSAMI
Thiru N. KITTAPPA } : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the State Government have taken any efforts to secure the restoration of the railway service between Mettupalayam and Ooty ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:

(அ) ஆம்.

(இ) ஊட்டி — மேட்டுப்பாளையத்திற்கிடையே செல்லும் 35/36 எண்கள் கொண்ட ரயில் வண்டிகள் 15—7—1974 லிருந்து மீண்டும் விடப்படுகின்றன என்று தென்னிந்திய ரெயில்வே பொது மேலாளர் தெரிவித்துள்ளார்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த உதகை—மேட்டுப்பாளையம் இரயில் பாதையை அடிக்கடி நிறுத்திவிடுகிறார்கள். உதகமண்டலம் ஒரு முக்கியமான சுற்றுலா கேந்திரத்திற்குட்பட்டிருப்பதால், தமிழக அரசே அந்த ரயில் பாதையை ஏற்று நடத்த, மத்திய அரசிடம் கோரி பெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நிலக்கரி பற்றாக்குறை காரணமாக தமிழ்நாட்டில் மட்டுமல்ல, நாடு பூராவிலும் நிறுத்தப்பட்ட இரயில் பாதைகளில் இதுவும் ஒன்று. நம்முடைய வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் இரயில் விடப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்வதுபற்றிய குறிப்பு எதுவும் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. கு. அ. பொம்மன்: தலைவரவர்களே, மேட்டுப்பாளையத்திலிருந்து உதகைக்குச் செல்ல கரி எஞ்சின் போட்டிருப்பதால் மிகவும் மெதுவாக செல்லுகிறது. அது பிரயாணிகளுக்கு கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் டீசல் எஞ்சின் போட மத்திய அரசுக்கு நம்முடைய அரசு சிபாரிசு செய்யுமா ?

[1975 ஏப்ரல் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேட்டதோ கேட்டீர்கள், எலெக்ட்ரிக் எஞ்சின் போட வேண்டுமென்று கேட்கக்கூடாதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கேட்கலாம். மத்திய அரசுக்கு இதுபற்றிய தகவல் தரப்படும்.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, ஊட்டி இரயில் வேகமாகச் சென்றால் எப்போதும் ஆபத்துதான். இப்போது இருக்கிற இந்த நிலையில் கண்கொள்ளா காட்சியைக் காணமுடிகிறது. ஆகவே, இதே நிலை நீடித்திருக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அங்கத்தினர் சொல்லுவது போல மலைப்பாதையில் கொஞ்சம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. இருந்தாலும் ரொம்பவும் மெதுவாகப் போகிறதா என்று தெரியவில்லை; டீசல் எஞ்சின் போடுவதில் எந்தவிதமான தவறும் இல்லை என்று கருதுகிறேன்.

*Issue of ration cards.*

*588 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether it is a fact that new ration cards have not yet been supplied to a number of house holders in Madras City;

(b) if so, the reasons therefor; and

(c) the action taken to speed up the work?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ), (இ) அண்டு (உ) சென்னையில் புதிய குடும்பக் கார்டுகள் வழங்கும் பணி 5—3—75 முதல் தொடங்கப்பட்டிருக்கிறது; விரைவில் இப்பணி முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணி முடிந்தவுடன் இப்போது கார்டு இல்லாதவர்களுக்கும் கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கேள்வியையும் எடுத்துக் கொள்ளலாம்.

*589 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether it is a fact that ration card holders in the City of Madras and Coimbatore area are permitted to draw their quota of rice for a month in bulk; and

(b) if so, the reasons for the same?



1975 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. செ. மாதவன்:

(அ) இல்லை. இரு வாரங்களுக்கு ஒருமுறை வழங்கப்படுகிறது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: சார், மாதம் ஒன்றுக்கு 55,000 டன் வருகிறது, ஆறு மாதத்திற்கு கிட்டத்தட்ட 5½ லட்சம் டன் தேவை என்று அறிக்கை இருக்கிறது. கார்டுகளுக்கு விநியோகம் செய்ய இன்னும் அதிகமான அளவுக்கு அரிசி வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்; அது பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். எப்போது பரிசீலனை முடியும்? அவர்கள் பரிசீலனை முடிவதற்குள் பஞ்சம் தீர்ந்துவிடும் போலிருக்கிறது. ஆக பஞ்சம் தீர்ந்த பிறகுதான் கொடுப்பார்களா? இருக்கின்ற அரிசியைக்கொண்டு இப்போது கார்டுகளுக்கு எப்படி விநியோகம் செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பரிசீலிக்கிறோம் என்று, நீண்ட நாள் எடுத்துக்கொள்வது கஷ்டமான சூழ்நிலைதான் உருவாக்கும் என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அது உண்மைதான். தமிழ்நாட்டிற்கு அரிசி பற்றாக்குறை இருக்கிறது. மத்திய அரசின் இருப்பிலிருந்து கொடுக்க முடியவில்லை என்ற நிலை ஏற்பட்டால் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டுமென்ற உண்மையை மத்திய அரசு உணர்ந்திருந்தபோதிலும், பரிசீலிக்கிறோம், வெளிநாட்டு செலாவணி வேண்டும் என்று சொல்லி காலங்கடத்துவது கவலை அளிப்பதாக இருக்கிறது.

Thiru K. M. SUBRAMANIAM: Sir, while the citizens of Madras are thankful for the appointment of special staff for enumeration work from 5-3-75, still a lot of enumeration work has to be done and ration cards issued. Will the Government take steps as they have taken for enumeration work to issue ration cards as quickly as possible and before the end of April atleast?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த மாதத்திற்குள் எப்படியும் முடித்துவிடலாம் என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். விரைவுபடுத்த வேண்டுமென்று அடிக்கடி ஆலோசனை சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, இந்தக் குடும்ப கார்டுகளை வாங்கி, சிலர் மார்வாடி கடையில் அடமானம் வைப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்போதும் அந்த நிலைமை இல்லாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அரிசி கிடைக்காத இந்தக் காலத்தில் அரிசி உண்மையாகத் தேவைப்படக்கூடியவர்கள் அப்படி செய்யமாட்டார்கள். சிலர் தவறு செய்திருக்கிறார்கள் என்பது உண்மை. அதைக் கண்டுபிடித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, ஏற்கனவே கார்டு கிடைக்காதவர்களுடைய கார்டுகளை வேறு சிலர் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக என் வீட்டுக்கு இன்னும் கார்டு கிடைக்கவில்லை. அதிகாரிகளிடம் சொல்லியும் கிடைக்கவில்லை. எனக்கு வரவேண்டிய கார்டை வேறு யாரோ பயன்படுத்திக் கொண்டிருப்பதாக ஒரு தகவல் இருக்கிறது. அப்படி மற்றவர்களுடைய கார்டுகளைப் பயன் படுத்தும் வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வருவாய் அதிகம என்ற காரணத்தால் அந்த கார்டுக்கு அதிகம் கிராக்கி இருக்காது என்று கருதுகிறேன். அவர்களுடைய கார்டு 500 ரூபாய் வருமானத்திற்கு மேற்பட்டதாகத்தான் இருக்கும். (திரு. பெ. சீனிவாசன் : 450 ரூபாய்) 500–க்கு குறைந்த வருமானம் என்று சொல்கிறார் ; நம்பக் கூடியதாக இல்லை. கார்டு வேண்டுமென்று கேட்டால் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், பல கார்டு ஹோல்டர்களுக்கு இந்த அரிசிக்குப் பதில் கோதுமை கொடுக்கப்படுகிறது. சென்ற ஒன்றரை மாதமாக கோதுமை கொடுக்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம் ? மீண்டும் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படுமா ?

[முற்பகல் 9–30]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, 500 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு ஏற்கெனவே 5 கிலோ கோதுமை கொடுத்தோம். இப்போது 10 கிலோ கொடுத்து வருகிறோம். அப்படி கிடைக்காதவர்கள் யாராவது இருப்பார்களானால் நிச்சயமாக அதைப்பற்றி விசாரிக்கலாம். இப்போது பெரும்பாலும் நகரத்தைப் பொறுத்த அளவிற்கு 500 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்கள் இதை மகிழ்ச்சியோடு வாங்கிக் கொள்கிறார்கள்.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் பல கிராமங்களுக்கு உணவுக் கார்டுகள் வழங்கப்படவில்லை. இது அரசுக்குத் தெரியுமா ? வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உணவு கிடைக்க அட்டைகளை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, பஞ்சத்தால், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஏராளமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று ஆட்சித் தலைவர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டு இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் நல்ல முறையில் நடப்பதாகத் தான் தகவல்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, சென்னை நகரத்தில் 500 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு இரண்டு கிலோ அரிசி போடுவதாகவும் அந்த அரிசி 2½ ரூபாய்க்கு விற்பதாகவும் பல கடைகளிலே அந்த அரிசி கொடுக்கப்படுவதில் புழுக்கள் இருப்பதாகவும் நேற்று கூட



ான்னால் சொல்லப்பட்டது. இது சம்பந்தமாக அரசு கவனம் செலுத்தியதா ? இதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, 5 கிலோ அரிசி இடைக்கால ஏற்பாடாக, அட்ஹாக் பேசிசில் கொடுத்தோம். அது ஆந்திரா ரைஸ். 2½ ரூபாய் விலை. நேற்றே கூட அங்கத்தினர் அவர்கள் என்னிடம் கொண்டு வந்து காண்பித்தார்கள். ஆச்சரியமாக இருந்தது. தமிழ் நாட்டில் கிடைக்கிற அரிசியைப் போல அருமையான அரிசி, மோசமான அரிசி அல்ல. நேற்று அவர் என்னிடம் காண்பித்த போது, இப்படி முழு பூசணியை சோற்றில் மறைப்பது போல சொல்லக் கூடாது, நல்ல அரிசிதான் என்றேன். அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். அது நல்ல அரிசி தான். இருந்தாலும் பூசணம் பிடித்திருக்கிறது. சாக்கில் போட்டு கட்டியிருக்கிற காரணத்தினால் பூசணம் பிடித்திருக்கிறது. ஆகவே, அதை மோசமான அரிசி என்று சொல்வது தவறு.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, கோவை நகரத்தைப் பொறுத்த வரை, சில இடங்களில் குடும்பக் கார்டு கொடுப்பதில், குடும்பக் கார்டை பரிசீலனை செய்வதில் சிக்கல் இருக்கிறது. முனிசிபாலிடியைக் கேட்டால் பஞ்சாயத்து போர்டைக் கேளுங்கள் என்கிறார்கள், பஞ்சாயத்து போர்டைக் கேட்டால் முனிசிபாலிடியைக் கேளுங்கள் என்கிறார்கள். ஆகவே, இரண்டிலும் இல்லாமல், குடும்பக் கார்டு கிடைக்காமல் பல குடும்பங்கள் பரிதவிக்கிறார்கள். ஆகவே, இப்படி குடும்பக்கார்டு இல்லாதவர்களுக்கு உடனடியாக குடும்ப கார்டு கொடுக்க அரசு உத்திரவிடுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செ. திரு. மாதவன் : தலைவரவர்களே, இப்படி ஆங்காங்கே விட்டுப்போயிருக்குமானால் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. இ. ராமசாமி : தலைவரவர்களே, வால்பாறை பகுதியில் தேயிலை, காப்பி மட்டும் தான் விளைகிறது. உணவுப் பொருள்கள் உற்பத்தி ஆகவில்லை. அங்கே குடும்பக் கார்டுக்கு வாரத்திற்கு 3 கிலோ கொடுக்கிறார்கள். ஆனால் நீலகிரியில்—அங்கேயும் காப்பி, தேயிலைதான் விளைகிறது—5 கிலோ கொடுக்கிறார்கள். இதை வைத்து வால்பாறையிலுள்ள தொழிற் சங்கங்கள் போராட்டம் நடத்தி அவர்கள் 10 நாட்கள் சிறை-தண்டனை கூட அனுபவித்தார்கள். ஆகவே, அவர்களுக்கும் குடும்பத்திற்கு 5 கிலோ என்று கொடுப்பதற்கு அரசு முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, 10 நாட்கள் தண்டனை கொடுக்கப்பட்டாலும் உடனடியாக அவர்களை விட்டு விடும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆலோசனை சொன்னோம். அப்படி விட்டதாகச் சொன்னார்கள். கோவை மாவட்டத்தைப் பொறுத்த அளவிற்கு மற்ற பகுதியில் கொடுப்பதைவிட மலைப் பகுதிக்கு அதிகமாகக்

கொடுப்பதாகச் சொன்னார்கள். சட்ட மன்ற உறுப்பினரவர்கள் அடிக்கடி கவலையோடு இதைப்பற்றிச் சொல்கிறார்கள். நீலகிரியில் கொடுப்பதைப் போன்று இந்த மலைப்பகுதிக்கும் கொடுக்கவேண்டுமென்பது அவர்கள் கோரிக்கை. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவரவர்களுக்கு எப்படியும் இந்த மலைவாழ் பகுதி மக்களுக்கு, அரிசி அதிகமாகக் கிடைக்காத காரணத்தினால் கோதுமையாவது அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று ஆலோசனை சொல்லியிருக்கிறோம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தற்போது நகரப் பஞ்சாயத்து பகுதிகளிலேயும், நகரங்களிலேயும் குடும்பக் கார்டு வழங்கியிருக்கிறோம். இவ்வாறு கிராமப் பகுதிகளுக்கும் குடும்பக் கார்டு வழங்க அரசு ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, நாடு முழுவதும் நாம் பங்கீட்டு முறையைக் கொண்டுவரவில்லை. கிராமங்களாக இருந்தாலும், அது வறட்சிப் பகுதியாக அல்லது தொழிலாளர்கள் பகுதியாக இருந்தால் கவனம் செலுத்துவோம்.

திரு.என்.கே.பழனிசாமி : தலைவரவர்களே, மாதம் இரண்டுதரம் விநியோகம் செய்தாலும் அல்லது ஒரேதரம் விநியோகம் செய்தாலும் ஒரே அளவைத்தான் கொடுக்கப்போகிறோம். இப்படி விநியோகம் செய்யப்படுவதை கியூவில் வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, மாதம் ஒரு முறையாக விநியோகம் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இது ஒரு நல்ல யோசனை, இதைப் பரிசீலித்துப் பார்த்தோம். ஆனால், உற்பத்தி ஆகிற இடங்களிலிருந்து தமிழ் நாடு முழுவதும் கொண்டு சென்று பங்கீடு செய்வதென்றால் ஒரு மாத அளவிற்குப் பொருள்களைக் கொடுக்கக் கூடிய அளவிற்கு இப்போது வசதிகள் இல்லை. இதனால்தான் சிக்கல். ஆகவே, 15 நாட்களுக்கு ஒருமுறை கொடுக்கிறோம்.

திரு. வி. பழனிவேலு : தலைவரவர்களே, சென்னை நகரத்தில் இப்போது புதிய அட்டைகள் வழங்கப்படுவதைப்போல வறட்சிப் பகுதியில் இருக்கிற நகரங்களுக்கு புதிய பங்கீடு அட்டைகள் வழங்க அரசு முடிவு எடுத்திருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, புதிய பங்கீடு அட்டை என்றாலும் ஏற்கெனவே இருந்ததுதான். என்யூமரேஷன் என்ற முறையில் தவறு ஏற்படாமல் பார்ப்பதற்கு சென்னை நகரத்தில் மட்டும் இந்த ஏற்பாடு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்போது, குடும்பக் கார்டுகளுக்கு 15 தினங்களுக்கு ஒரு தடவை அரிசி வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். பொருளாதார நிலைமையில் மிகவும் மோசமாக இருக்கிற கிராமப்புற மக்களுக்கு 15 தினங்களுக்கு ஒன்றாகச் சேர்த்து அரிசியை வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, வாரத்திற்கு ஒருமுறை கடைகளில் அரிசி வழங்க வழி வகுக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, 15 நாட்களுக்கு ஒருமுறை வழங்கினால் ஆங்காங்கே எளிதில் கொண்டுபோய்ச் சேர்க்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் கூறிய ஆலோசனை நியாயமானது. சில இடங்களில் மக்களை ஏன் கார்டுகளுக்கு வாங்கவில்லையென்று கேட்டதற்கு வாரத்திற்கு ஒருமுறைதானே கூலி கிடைக்கிறது என்று சொன்னார்கள். நாளாவட்டத்தில் அரிசி இருப்பைப் பொறுத்த அளவிற்கு இப்படிக் கொடுப்பதைப் பற்றி ஆட்சேபனை இல்லை.

திரு. த. சோலையா : தலைவரவர்களே, குடும்பக் கார்டு முறையில் அரிசி விநியோகம் செய்யப்படுகிறது. நபர் வாரியாகக் கொடுக்கப்படும் என்ற பேச்சு அடிபட்டது. அப்படி நபர் வாரியாகக்கொடுக்க அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கின்றதென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, சில இடங்களில்தான் இந்த முறை பின்பற்றப்படுகிறது. நாடு முழுவதும் குடும்பப் பங்கீட்டு முறை இருந்தால்தான் இந்த ஏற்பாட்டை நாம் செய்ய முடியும்.

திரு. சே. என். குமாரசாமி : தலைவரவர்களே, கார்டுகள் நகரங்களில் சரியானமுறையில் கொடுக்கப்படாமல் இருப்பதன் காரணமாக போலிக் கார்டுகள் சில இடங்களில் நிறைய இருக்கிறதென்று நாம் கேள்விப்படுகிறோம். அதேநேரத்தில் அரிசி விநியோகிக்கிறவர்களிடத்திலேயே போலிக் கார்டுகள் நடமாடுவதாக தகவல் வருகிறது. இது சம்பந்தமாக 'அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்து போலிக் கார்டுகள் பிடிக்கப்பட்டிருக்கின்றதாவென்று அறிய விரும்புகிறேன். கார்டு கொடுப்பதில் உள்ள தாமதத்தைப் போக்க சென்ஸஸ் கணக்கு இருக்கிறதல்லவா, அதன் பிரகாரம் கொடுக்கலாமே, இதைப் பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறதென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, போலிக் கார்டு என்ற வார்த்தை பொருத்தமாக இருக்காது. அதிகமான கார்டுகள் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். இல்லாதவர்கள் பேரில், ஒரே குடும்பத்தில் இரண்டு, மூன்று கார்டுகள், இப்படி எக்ஸஸ் கார்டுகள் என்று இவைகளை கண்டு பிடித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. காலதாமதத்தைப்பற்றி கேட்டார்கள். ஏற்கெனவே இருக்கிற கார்டுகளை அனுமதித்திருக்கிறோம். சில இடங்களில், விட்டுப் போயிருக்கிற இடங்களில் பிரச்சினை இருக்கிறது. இப்படி எங்கெங்கே இருக்கிறதென்று கண்டு பிடித்து அதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, கிராமங்களில் ரேஷன் விநியோகத்தைப் பொறுத்தவரை பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களை தீடீரென்று உருவாக்கி, ஊர் பொதுக் கமிட்டிகளை நியமித்து விநியோகம் செய்கிறார்கள். அவர்கள் போகும்போது, வரும்போது ஏற்படுகிற செலவுகளைச் சரிக்கட்ட கோதுமையில் இரண்டு பைசா, அரிசியில் 3 பைசா, என்று சில இடங்களில் அதிகமாக வைத்து விற்கிறார்கள். சில இடங்களில் அசல் விலைக்கே கொடுக்கிறார்கள். இதை விடுத்து சர்வீஸ் சார்ஜ் என்று அரசாங்கமே நிர்ணயம் செய்து விலையோடு சேர்த்து விற்க ஏற்பாடு செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன் : தலைவரவர்களே, கிராமங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் பல கிராமங்களுக்கும், தொலைவிலுள்ள கிராமங்களுக்கும் சேர்ந்திருப்பதால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. 500 மக்கள் தொகை உள்ள, 100 மக்கள் தொகை உள்ள கிராமங்களில் இந்த விநியோக வேலையை எங்கள் கிராமங்களுக்குத் தரவேண்டுமென்று கேட்டார்கள். ராமநாதபுரம் மாவட்டத்தில் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஒரு நல்ல உணர்வை மக்களிடத்தில் ஏற்படுத்தி ஆங்காங்கே கிராமங்களில் குழுக்களை அமைத்து நாங்கள் வாங்கிக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். அதை நாம் ஊக்குவித்திருக்கிறோம். அப்படிப்பட்ட இடங்களில் இந்தப் பிரச்சினை எழுவது உண்மை.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, எல்லாக் கிராமங்களுக்கும் விநியோகம் செய்வது என்பது முடியாத ஒன்றுதான். இருந்தாலும், பிர்கா அளவிலாவது குடும்ப ரேஷன் ஷாப்புகளைத் திறக்க அரசு உத்தேசித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இப்போது இருக்கிற முறைப்படி வறட்சிப் பகுதிகள், தொழிலாளர் வாழ்கிற பகுதிகள், நெசவாளர் வாழ்கிற பகுதிகள், மற்றும் எங்கெங்கே தட்டுப்பாடு இருக்கிறதோ அங்கேயெல்லாம் கடைகளைத் திறக்கவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆலோசனை கூறியிருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது வறட்சிப் பகுதிகள் பூராவிற்கும் உணவுப் பங்கீடு அட்டைகள் வழங்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். தர்மபுரி மாவட்டத்தில், அது வறட்சிப் பகுதி என்று அறிவிக்கப்பட்டும், நேற்றுவரை பங்கீடு கார்டு வழங்கப்படவில்லை, ஆனால் உணவுப் பொருள்கள் வழங்கப்படவில்லை. ஆகவே வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்ட அந்தப் பகுதிகளுக்கு உடனடியாக வழங்க வேண்டிய நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் எடுப்பார்களாவென்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன் : தலைவரவர்களே, தர்மபுரி சட்டமன்ற உறுப்பினர் இதே சட்ட மன்றத்தில் எங்கள் மாவட்டத்திற்கு ஏராளமான உணவு தானியங்கள் வந்திருக்கின்றனவென்று சொன்னார்கள். அதை அங்கத்தினர் அவர்கள் கேட்டிருப்பார்கள் என்று நம்புகிறேன்.



திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இப்போது உணவு தானியங்களை விநியோகிக்கிற கடைகளில் ஆயிரம் கார்டுகளுக்கு மேல் இரண்டாயிரம் கார்டுகளுக்கு விநியோகம் செய்வது சிரமமாக இருக்கிறது. வாங்குகிறவர்களுக்கும் சிரமமாக இருக்கிறது. இந்த முறையை மாற்றி இப்படி விநியோகிக்கிற கடைகளுக்கு 500 கார்டுகளுக்கு அதிகப்படாமல் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஏற்கெனவே இந்தக் கடைகளுக்கு 5 ஆயிரம்வரை கார்டுகள் இருந்தது. அண்மையில் எடுத்த முடிவின்படி குறைந்தபட்சம் 2 ஆயிரத்துக்கும் கீழே இருக்க வேண்டுமென்று முடிவு செய்தோம். இதிலுள்ள பிரச்சனை என்னவென்றால் கார்டுகள் இரண்டாயிரத்திற்கும் கீழே போகும்போது அந்தக் கடையின் செலவிற்கு கட்டுபடியாகாது. அது வையபிள் யூனிட்டாக இருக்காது. பஞ்சத்தை உத்தேசித்து கிராம மக்கள் முன்வருவார்களானால் பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒத்துழைப்பு தருவார்களானால் இப்படிப்பட்ட பொறுப்பை அவர்களிடம் ஒப்படைக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறோம்.

*Sewage plant in Madras.*

*590 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that a second sewage plant is to be set up in the outskirts of Madras shortly ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :

(அ) and (இ) :

சென்னை மாநகரில் மேற்குப் புறநகர்ப் பகுதியில் கோயம்பேட்டில் கழிவு நீர் சுத்திகரிப்பு இரண்டாவது இயந்திரம் அமைக்கப்பட இருக்கிறது. இம்மாதிரி இயந்திரம் ஒன்று நேசப்பாக்கத்தில் நிறுவப்பட்டுள்ளது.

கோடம்பாக்கம், தியாகராயநகர், மேற்குப் புறநகர்ப் பகுதிகள் ஆகியவற்றில் சேரும் கழிவு நீரை குழாய்கள் மூலம் கோயம்பேட்டிற்குக் கொண்டு செல்லும் திட்டம் முடிவடைந்துள்ளது. தொடக்கத்தில் நாளொன்றுக்கு 6 மில்லியன் காலன் கழிவு நீர் கோயம்பேட்டிற்கு கொண்டு செல்லப்படும்.

இக்கழிவு நீரை சுத்திகரிக்கும் இயந்திரத்தை ரூ.77.62 இலட்சம் செலவில் அமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 18 மாதங்களில் இது முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு என். கே. பழனிசாமி : நகரம் அதிகமாக விரிந்து இருப்பதன் காரணமாக இப்போதுள்ள நிலைமையை அனுசரித்து சர்க்கார் இந்த வசதியை அதிகப்படுத்த திட்டம் ஏதாவது வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : முன்பு ஒரே இடத்தில் 32 பம்பு செட்டுகளைப்போட்டு காசிமேட்டில் வேலை செய்து வந்தார்கள். இதை விரிவுபடுத்த வேண்டுமென்றுதான் 'இப்போது சென்னை நகரை ஐந்து மண்டலமாகப் பிரித்து—முதல் மண்டலம் 209 லட்சம், இரண்டாவது மண்டலம் 211 லட்சம், மூன்றாவது மண்டலம் 135 லட்சம், நான்காவது மண்டலம் 116 லட்சம், ஐந்தாவது மண்டலம் 278 லட்சம் என்ற அளவுக்கு திட்டமிட்டு நிதி ஒதுக்கி—முதலாவது திட்டம் முடிந்து விட்டது. இரண்டாவது திட்டம் முடிவடையும் தருவாயில் இருக்கிறது. பாக்கித் திட்டங்களும் தொடர்ந்து எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, இதில் குறிப்பிட்டுள்ள திட்டப்படி—எம்.ஜி.ஆர். நகருக்கு அப்பால் உள்ள குடிசைப் பகுதிகளை பத்தாண்டுகளுக்கு முன்பே வேறுபுறம் போகவேண்டுமென்று மாநகராட்சியும், அரசும் தெரிவித்திருந்தாலும் கூட அந்தக் குடிசைகள் இன்னமும் அகற்றப்படாமல் இருக்கின்றன. அந்தக் குடிசைகளை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஒரு குறிப்பிட்ட பகுதியிலுள்ள கேள்வி—தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துப் பதில் சொல்ல முடியும்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்.

*591 வினா : திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலும், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலும் இன்னும் சொந்தக் கல் கட்டடம் இல்லாத ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் எங்கெங்கே உள்ளன ?

(இ) கல் கட்டடம் இல்லாத ஊர்களில் அவற்றைக் கட்டி முடிக்க மேற்கொண்டுள்ள சிறப்பு நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :

(அ) and (இ) விவர அறிக்கை @ ஒன்று சட்டப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த இரண்டு ஒன்றியங்களிலும் இன்னும் அதிகமான பள்ளிக்கூடங்களுக்குச் சொந்தக் கட்டிடம் இல்லாமல் இருக்கின்றன. இந்த இரண்டு ஒன்றியமும் பிற்பட்ட

@119-120-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



நிலையில் இருப்பதால்—பரிசுச் சீட்டின் வருமானத்தைக் கொண்டாவது அல்லது வேறுவகையிலாவது மீதமிருக்கிற பள்ளிக்கூடங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித்தர உரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலே 91 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன என்றால் 49 பள்ளிக்கூடங்களுக்கு சொந்தக் கட்டிடம் இருக்கின்றன. 1974-75-இல் 13 பள்ளிக்கூடங்களுக்கு சொந்தக் கட்டிடம் கட்டப்படுகிறது. மீதமுள்ளது 29 தான். அடுத்து வரும் ஆண்டுகளில் படிப்படியாக கட்டி முடிக்கப்படும்.

எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் 78 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. 49-க்கு சொந்தக் கட்டிடம் இருக்கிறது. 3-க்கு கட்டிடங்கள் இந்த ஆண்டில் கட்டப்படுகின்றன. மீதமிருப்பதற்கும் சொந்தக் கட்டிடம் கட்டித்தர முயற்சி மேற்கொள்ளப்படும்.

ஐயாவையனாற்றின் குறுக்கே பாலம்

* 592 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மாயூரம் ஒன்றியம், கொற்கை எனும் ஊரில் ஐயாவையனாற்றுக்குக் குறுக்கே பாலம் அமைத்திடும் பணி தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : சட்ட மன்ற உறுப்பினர் குறிப்பிடுகிறதான பால வேலையை முன் வைப்பு வேலையாக நெடுஞ்சாலைத் துறைப்பணியினரிடம் ஒப்படைத்து செயல்படுத்த மாயூரம் ஊராட்சி ஒன்றியப் பொதுக்குழு தீர்மானித்துள்ளது. இதற்கான தேவையான நடவடிக்கைகளை ஊராட்சி ஒன்றிய ஆணையர் எடுத்து வருகிறார்.

திரு. என். கிட்டப்பா : பாலம் கட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஊராட்சி ஒன்றிய ஆணையர் எடுத்து வருவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாயூரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நான். அந்தத் தொகுதியில் கட்டுவதற்கு எடுத்துக்கொண்ட பாலங்கள் பல அப்படியே பாதியில் நிற்கின்றன—இன்னும் கொண்டத்தூர் மண்ணியார் பாலம் அமைக்கும் காண்டிராக்டர் தம்மை அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினரின் உறவினர் என்று சொல்லிக்கொண்டு 200 மூட்டைகளுக்குமேல் சிமிண்டை விற்றிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு இருக்கக்கூடாது. கேள்வியாகப் போடுங்கள்.

திரு. என். கிட்டப்பா : அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நான்தான் அவர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அருள்கூர்ந்து அந்த விஷயத்தில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்துக்கொள்வதோடு அந்தப் பாலங்களைக் கட்டி முடிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அவர்தான் அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் காண்டிராக்டர் யார் என்பதும் அவருக்குத் தெரிந்திருக்கும். அதிகாரிகளிடத்தில் சொல்லி தக்க நடவடிக்கை எடுக்கலாம் நாங்கள் அந்தப் பகுதிக்கு வரும்போது சொன்னாலும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## வானொலி மன்றங்கள்

* 593 வினா —திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில், 1973-74 ஆம் ஆண்டின் சிறந்த வானொலி மன்றம் என ஏதேனும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எது ?

(உ) இப்படிப்பட்ட வானொலி மன்றங்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த குறிச்சி என்னும் கிராம வானொலி மன்றம்.

(உ) விவர அறிக்கை @ அவைமுன் தனியே வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த வானொலி மன்றங்களை எல்லாம் பெரும்பாலும் ஏழை எளிய உழவர்கள் நடத்துவது இல்லை. யார் நடத்துகிறார்கள் என்பது கிராமவாசிகளுக்குத் தெரியும். இந்த மன்றங்களுக்கு வானொலி நிலையங்கள் என்ன என்ன உதவிகளை அளிக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : வானொலி நிலையங்கள் இவற்றிற்கு எந்த உதவியும் செய்யவில்லை. கிராம மக்களின் முன்னேற்றத்திற்காக செய்திகளை எல்லாம்—விவசாயம்—நல்வாழ்வு—இளைஞர் சீரணி—இன்னும் ஐந்தாண்டுத் திட்டங்கள்—ஆகியவற்றைப்பற்றி எல்லாம் கேள்விகள் கேட்டு பல விளக்கங்களைப் பெற்று செயல்படுகிறார்கள். இந்த மன்றங்கள் எப்படிச் செயல்படுகின்றன என்பதை மாவட்ட ஆட்சித்

@ 121 ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.





தலைவர் பரிசோதனை செய்கிறார். பயன்தரக்கூடிய பல கேள்விகளைக் கேட்டு விளக்கங்களைப் பெறுகிற மன்றத்திற்கு என்று மாநில அளவில் ரூ. 300ம், மாவட்ட அளவில் ரூ. 200ம் மாநில அரசால்தான் பரிசு அளிக்கப்படுகிறது.

## *Madras–Coimbatore Express bus service*

*594 *Q.*—Thiru K. M. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Express bus service between Madras and Coimbatore hitherto operated via Vaniambadi, Krishnagiri, Dharmapuri, Mettur is now being operated in a different route ; and

(*b*) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) சென்னை—கோயம்புத்தூர் வழித்தடம் சுற்றிவளைத்துச் செல்வதாக இருந்ததாலும், பயண நேரம் அதிகமாயிருந்ததாலும் அதிக வருவாய் ஈட்டும் பொருட்டு இந்த வழித்தடம் 1—1—1972முதல் வேலூர், வாணியம்பாடி, திருப்பத்தூர், மாத்தூர், தருமபுரி, மேட்டூர் வழியாகத் திருப்பிவிடப்பட்டது.

Thiru K. M. SUBRAMANIAM : Sir, those who want to travel through Krishnagiri find it very difficult to do so. So, will the Government consider the routing of at least one Express Service through Krishnagiri from Madras ?

The Hon. Thiru S. RAMACHANDRAN : Sir, the very fact that the route has been uneconomical shows that passengers have not preferred it. As such, there is no proposal by the Government to route the bus service through Krishnagiri.

## *Toilet facilities for long distance passengers*

*595 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the State Transport Department to provide latrines wherever long distance buses stop ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) (இ) இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : நீண்டதூர பஸ்கள் நாற்பது மைல்களுக்கு, முப்பது மைல்களுக்கு நிற்கிறது. அந்தமாதிரி இடங்களில் லெட்ரின் வசதி செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : புதியதாக இல்லை என்று சொன்னேன். ஏற்கெனவே சென்னை, திண்டிவனம், மதுரை, தஞ்சை, சேலம், கோவை, திருநெல்வேலி, நாகர்கோவில் என்று பல இடங்களில் அந்த வசதி செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஏற்கனவே இருக்கின்ற அந்த லெட்ரின்கள் மோசமான நிலையில் இருக்கின்றன. குறிப்பாக திருச்சி, மதுரை, திருநெல்வேலி போன்ற இடங்களில் அந்த வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. லேட்னிங் பஸ்கள் 100 மைல்களுக்கு ஓரிடத்தில் நிற்கிறது. கோயம்பத்தூரில் இருக்கின்ற முறையைக் கையாண்டாவது—ஒவ்வொரு இடத்திற்கும் ஒரு தொழிலாளியை நியமித்து—அவ்வப்போது சுத்தம் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கையை—அதற்காக பயணிகளிடம் ஒரு கட்டணம் கூட வசூலித்துக் கொண்டால் தவருக இருக்காது—எடுத்துக் கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் யோசனை நல்ல யோசனை.

திரு. பெ. சீனிவாசன் : ஏற்கெனவே சொன்னபடி இந்த நீண்டதூர பஸ்களில், புஷ்பாக் சீட்டாக, வசதியாக அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கொள்கை அளவில் ஒப்புக் கொள்ளப்படுகிறது.

திரு. ரு. காமாட்சி : தலைவரவர்களே, நெடுஞ்சாலையில் பஸ் போய் நிற்கின்ற இடங்களில கழிப்பிடம் இல்லாவிட்டாலும் சாப்பிடுவதற்குக் கூட நல்ல வசதியில்லாமல் இருக்கிறது. விழுப்புரத்திலே பஸ் நிற்கிறது. எந்த ஓட்டலிலும் போய் சாப்பிட முடியவில்லை. 20 நிமிடத்திலே பஸ்ஸை எடுத்து விடுகிருர்கள். திருச்சி போன்ற பகுதிகளுக்குப் போக 7½ மணி நேரமாகிறது. அதை 6 அல்லது 6½ மணி நேரத்திலே விட வசதிகள் செய்து தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பயணிகள் வசதிகள் என்ற அடிப்படையில் முதலில் ஏற்கனவே இருக்கின்ற கழிவு அறைகளைச் சுத்தமாகப் பாதுகாத்துக் கொள்வதற்காக மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் சொன்னதைப் போல் ஒரு யோசனையை மேற்கொள்ளலாம் என்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது.





அடுத்து, அங்கங்கே அவர்களுக்கு உணவு வசதிகளை ஏற்பாடு செய்கின்ற வகையில் கூடுமான வரையில் அங்கே கட்டிடங்களை நாமே கட்டி, அதை ஏலத்திற்கு விட்டு, அதிலே உணவு வகைகளை வழங்கலாம் என்ற ஒரு யோசனையின் அடிப்படையில் மாமண்டூரிலே மட்டும் முதலாவதாக ஒரு கட்டிடத்தைக் கட்டி, அதற்கான ஏற்பாட்டைச் செய்வதாக இருக்கிறோம். படிப்படியாக மற்ற இடங்களிலும் அரசுப் போக்குவரத்துத் துறை சார்பிலே அத்தகைய கட்டிடங்கள் அமைக்கப்பெற்று பயணிகளுக்கு அத்தகைய ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, விழுப்புரத்திலே அநேகமாக எல்லா பஸ்களும் நிற்கின்றன. விழுப்புரத்திலும் சாப்பாட்டுக் கென்றிருந்த ஓரிடமும் இப்பொழுது மூடப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்லாமல், பொதுவாக, சிறுநீர் கழிக்க எந்த இடமும் இல்லாத நிலைமையிருக்கிறது. ஆகவே, முக்கியமான சென்டர்களிலேயாவது உடனடியாகக் கவனித்து, அதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, விழுப்புரத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல், உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

## *Accidents involving Pallavan Transport buses*

*596 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) the number of deaths in the City of Madras during 1973 and 1974 due to accidents involving the Pallavan Transport buses ; and

(*b*) the measures taken to prevent such accidents ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் சம்பந்தப்பட்ட விபத்துக்களில் 1973-ல் 53 பேரும், 1974-ல் 91 பேரும் உயிர் இழந்தனர்.

(இ) விபத்துக்களைத் தவிர்க்க கீழ்க்காணும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பேருந்துப் பயணிகளை ஒழுங்குபடுத்தி அனுப்புவதற்காக, போக்குவரத்துச் சீரமைப்பாளர்கள், சீரணித் தொண்டர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். பேருந்துப் படிகளில் நின்று பயணம் செய்வதைத் தடுக்க பல்லவன் போக்குவரத்துக் கழகமும், காவல் துறையினரும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். பேருந்து வலவர்களுக்காக, "சாலைப் பாதுகாப்பு" பற்றிய வகுப்பு ஒன்று சென்னை, தொழிலாளர் கல்வி வட்டார இயக்குநர் உதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த விபத்துக்களிலே இறந்தவர்களுக்கு ஏதாவது நஷ்டயீடு கொடுக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால், இனிமேல் அந்த மாதிரி விபத்துக்களில் இறப்பவர்களுக்கு நஷ்டயீடு கொடுப்பதற்கு வேண்டிய ஒரு முறையான ஏற்பாடு செய்யப்படுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அவ்வப்போது நஷ்டயீடு அந்த விபத்துக்களுக்கேற்றாற்போல் accident compensation வழங்கப்பட்டு வருகிறது.

## *Common Good Fund of Religious Endowments Department*

*597 *Q*.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that there are regulations govering the expenditure incurred from out of the Common Good Fund of the Commissioner of Hindu Religious and Charitable Endowments Department ; and

(*b*) if so, whether a copy of the same will be placed on the table of the House ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) அவையின் மேசைமீது இதுபற்றி நகல்கள் @ வைக்கப்படுகின்றது.

திரு. என். கே. பழனிசாமி : சார், கோயில்களில் பழுது ஏற்பட்டால், அவைகளை ரிப்பேர் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட தொகையையோ, பூரா தொகையையோ, சர்க்காருடைய அனுமதி பெற்று கொடுப்பதாக இந்த அறிக்கையிலேயிருக்கிறது. அனுமதிக்க எந்தெந்த விதிகளை பூர்த்தி செய்ய வேண்டும் ? அல்லது பிரையாரிட்டி பேசிசிலே கொடுக்கப்படுகிறதா ? எந்த அடிப்படையிலே இந்தமாதிரி உதவி கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அந்தந்த கோயில்களுடைய வருமானத்தைப் பொறுத்தவரையில் பிரிவு 12 இரண்டாவது துணைப் பிரிவின் கீழ் நிர்வாக நிதியாக, அட்மினிஸ்ட்ரேடிவ் ஃபண்ட் என்பதாகச் செலுத்த வேண்டும். அதற்கடுத்த பிரிவு 192-ல் இரண்டாவது பிரிவு தணிக்கை நிதி. அந்த இரண்டு, நிர்வாக நிதி, தணிக்கை நிதி இரண்டும் செலுத்தியது போக, மீதியிருக்கிற பணத்தை எந்தெந்த வகையிலே செலவிட வேண்டுமென்பதற்கு விதிகளை நாம் வைத்திருக்கிறோம். அந்தந்தக் கோயில்களிலே நிர்வாகச் செலவு போக

@ 121—125ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மீதியிருக்கின்ற பணத்தை மற்றக் கோயில்களுக்கு நிதி மாற்றம் செய்வதாக இருந்தாலும் அல்லது சமுதாயத் துறையிலே தேவையான காரியங்களைச் செய்வதாக இருந்தாலும் ஏற்கெனவே அவையிலே வைக்கப்பட்டிருக்கிற குறிப்பினுடைய விதிகளின் அடிப்படையில் அந்த நிதியை மாற்றம் செய்து செயல்பட்டு வருகிறோம்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் குடும்பப் பாதுகாப்பு நிதி கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த நிதி இந்த நிதியிலிருந்து கொடுக்கப்படுமா ? அல்லது அதற்கென்று தனியாக நிதி திரட்டப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, குடும்பப் பாதுகாப்பு நிதியைப் பொறுத்தவரையில் கோயில் ஊழியர்களுக்கு எந்த வகையில் செயல்படுத்தலாம் என்பதைப் பற்றி தற்பொழுது அரசாங்கம் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. ஆனால், ஏற்கனவே அரசாங்க ஊழியர்களுக்கு இருப்பதைப் போல் கோயில் ஊழியர்களுக்கும் அந்தத் திட்டத்தைப் பயன்படுத்த வேண்டுமென்ற முடிவு வரவு—செலவுத் திட்டத்திலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், எந்தெந்த வகையில் நிதி சேர்ப்பது, எந்தெந்த வகையிலே ஊழியர்கள் குடும்பத்திற்குப் பாதுகாப்பு வழங்குவது என்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலித்து, வருகின்ற ஜூன் மாதம் 3-ம் தேதியிலிருந்து அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவிருக்கிறது.

## அறநிலையத்துறையின் கீழுள்ள ஆலயங்கள்

*598 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழ் நாட்டிலுள்ள இந்து அறநிலைய ஆட்சித்துறையினரின் பொறுப்பிலுள்ள எந்தெந்த ஆலயங்களின் ஆண்டு வருமானம் இருபத்தைந்து லட்சமும் அதைத் தாண்டியும் உள்ளன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :

(1) அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயில், பழனி.

(2) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில், திருச்செந்தூர்.

(3) அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில், மதுரை.

(4) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில், திருத்தணி.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அறநிலையத்துறைக்குக் கட்டுப்படாமல், அதே நேரத்தில் பல, இலட்சக்கணக்கான ரூபாய்க்கு வருமானமுடைய கோயில்களாக தர்மபுரம் ஆதினத்திற்குக் கட்டுப்பட்ட 27 கோயில்கள் தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்றன. எனவே, அத்தகைய கோயில்களை அறநிலையத்துறையின் கீழ் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா அத்தகைய கோயில்களை அறநிலையத்துறையின் கீழ் கொண்டுவர முடியாததற்கான சங்கடங்கள் என்னவென்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட, அப்படிப்பட்ட 27 கோயில்கள் மட்டுமல்ல, நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், இன்னும் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட கோயில்களை இந்தத் துறையினுடைய பொறுப்பிலே நாம்கொண்டு வர வேண்டும். அது மட்டுமல்லாமல், மத சம்மந்தமான கட்டளைகள் அன்ன தானம் செய்வது அல்லது வேத பாடசாலைகள் நடத்துவது, இப்படிப்பட்ட கட்டளைகள் கூட ஏராளமாக தனியார் பொறுப்பிலே இருக்கின்றன. ஏற்கனவே பிற மாநிலங்களில், ஆந்திரா போன்ற மாநிலங்களில் இப்படிப்பட்ட அறக்கட்டளைகள் அறநிலையத் துறை நிர்வாகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்து விட வேண்டுமென்று ஏற்கனவே சட்டம் போட்டு செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அந்த அடிப்படையில் நம்முடைய மாநிலத்திலே இருக்கிற மத சம்பந்தமான கட்டளைகள் அத்தனையையும் இலாகாவினுடைய நிர்வாகத்தின்கீழ் கொண்டு வர வேண்டுமென்று அரசாங்கத்திலே ஆலோசனை செய்து கொண்டு வருகிறோம்.

இந்தக் கோயில்களைப் பொறுத்தவரையில், எல்லாக் கோயில்களையும் நம்முடைய துறையின் நிர்வாகத்தின் கீழ் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையிலே இந்த ஆண்டு 21,000 கோயில்களை இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டு வந்திருக்கிறோம்.

## சூணம்பேடு கிராமத்தில் சமுதாயக் கூடம்

* 599 வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தாலுக்காவிலுள்ள சூணம்பேடு அரிசன குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: மதுராந்தகம் தாலுக்காவிலுள்ள சூணம்பேடு அரிசனக் குடியிருப்புப் பகுதியில் 1974–75-ம் ஆண்டில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஏற்கனவே உத்தரவு பிறப்பித்துள்ளது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, 1973–74–லேயே இந்தச் சமுதாயக் கூடம் அமைப்பதாக இருந்தது. 1974–75–லே தீர்மானிக்கப்பட்டது. அது விரைவிலே முடிவடையும் என்கின்ற உத்தரவாதத்தை அரசு அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, 1974 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26 ஆம் தேதி அன்று அதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதை யார் செய்வது என்ற முறையில் விவாதம் வந்தபொழுது, 1975 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி அன்று நம்முடைய தமிழ் நாட்டு வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகமே அந்தக் கட்டிட வேலையை முடிக்க வேண்டுமென்று அரசு கேட்டுக் கொண்டுள்ளது.





## தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகள்

* 600 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில், 1974-ம் ஆண்டில், தீண்டாமை ஒழிப்புக் குற்றங்கள் சம்பந்தமாக ஏதேனும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அவற்றுள் தண்டனையில் முடிந்த, அபராதம் விதிக்கப்பட்ட வழக்குகள் முறையே எத்தனை?

(உ) இன்னும் எத்தனை வழக்குகள் முடியாமல் உள்ளன?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:

(அ) ஆம். 144 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(இ) அவற்றுள் தண்டனையில் முடிந்த வழக்குகள் 31-லும் அபராதம் மட்டுமே விதிக்கப்பட்டுள்ளன.

(உ) 40 வழக்குகள்.

திரு. எம். சுரேந்திரன்: சார், இந்த 144 வழக்குகளிலே 30 வழக்குகளிலே தண்டனை விதிக்கப்பட்டது என்று கூறினார்கள். தொடர்ந்து இம்மாதிரியான வழக்குகளை நிலைநிறுத்துவதற்கு முடியாத நிலைமையிருக்கிறது என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது என்றே கருதுகிறேன். ஆகவே, இம்மாதிரி வழக்குகளை நடத்துவதற்கு வேறு நடவடிக்கைகளை கையாண்டு, உண்மையாகக் குற்றவாளிகளை தண்டனைக்குட்படுத்த, அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, 144 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 31 வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றன. 40 வழக்குகள் இப்பொழுது நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, 50 சதவிகித வழக்குகள் நடவடிக்கை எடுக்கப்பட்டவை. குறிப்பில் இல்லை. எனது அனுபவத்தை வைத்துச் சொல்லும்போது அங்கங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊர்ப் பெரியவர்கள் சமாதானம் செய்து, இம்மாதிரி செய்யக்கூடாது, இனிமேல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று புத்திமதி சொல்கிறார்கள். அது கூட இந்த நாட்டுக்குத் தேவை. அதைக்கூட மீறினால் நடவடிக்கை எடுக்க அவர்களுக்கு அந்த உரிமை உண்டு. அதைச் செய்து வருகிறார்கள்.

[முற்பகல் 10.00 மணி]

திருமதி ஜோதிவெங்கடாசலம்: தலைவர் அவர்களே, இந்தத் தீண்டாமை ஒழிப்பு வழக்குகளில் ஏற்படக்கூடிய இடைஞ்சல்கள் ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தின் அடிப்படையிலே பெரும்பாலாக சமாதானம் செய்தும் குற்றவாளிகள் சரிவரத் தண்டிக்கப்பட இயலாத நிலைமை இருப்பதால் அந்தச் சட்டத்திலே திருத்தம் செய்து அதைத் திருத்தியமைக்க அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்யுமா?

[1975 ஏப்ரல் 8

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: சட்டத்தை மாற்றியமைக்க வேண்டிய நிலைமை இல்லை. காரணம இருக்கிற சட்டத்தின்படி உள்ள படியே நடவடிக்கை எடுத்தால் அதுவே பெரிய தண்டனையாக இருக்கும் சட்ட மன்ற உறுப்பினர்கள், இங்கே கேள்வி கேட்கிற உறுப்பினர்கள் வெளியே இதே முறையைக் கையாள முடியவில்லை. அங்குள்ள நிலைமையை உத்தேசித்து சமாதானம் செய்வதில் ஈடுபடுகிற நிலைமை வந்து விடுகிறது. இதனால் இரண்டு வகையான லாபம். ஒன்று அப்படிப்பட்டவர்கள் தன்னை அறியாமல், சட்டத்தின் நிலைமை தெரியாமல் அப்படிச் செய்கிறவர்கள் திருந்தி தங்களை மாற்றிக்கொள்வார்கள், இரண்டாவது அதைப் பார்த்து மற்றவர்களும் திருந்தவேண்டுமென்பது. சட்டத்திற்குரிய படி தண்டனை கொடுப்பது என்றால் அது காலம் போகப்போகத்தான் செய்யப்படமுடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

[2.] 1975-76 ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் : 2—மாநில ஆயத் தீர்வை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின் கீழ் ரூ. 62,77,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

DR. H. V. HANDE: Sir, to discuss policy, I mover "That the allotment of Rs. 62,77,000 under Demand No. 2-State Excise Department be reduced by Rs. 100. "

THIRU B. VENKATASWAMY: Sir, to discuss policy, I move, "That the allotment of Rs. 62,77,000 under Demand No. 2-State Excise Department—be reduced by Rs. 100."

THIRU K. P. GOPAL: Sir, to discuss about the failure of the Government to take necessary steps to prevent illicit distillation and sale of arrack and also ganja plantation, I move—

"That the allotment of Rs. 62,77,000 under Demand No. 2—State Excise Department—be reduced by Rs. 100.



1975 ஏப்ரல் 8]

திரு, எம். பேரவைத் தலைவர் சுரேந்திரன் அவர்களே, பிரெஞ்ச் பாலீஷ் தயாரிப்பதில் "நான் பாய்லன்" ஆல்கஹால் தயாரிப்பதை நிறுத்துவது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 62,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, கள்ளச் சாராயம் காய்ச்சுவதை தடுக்க ஒவ்வொரு போலீஸ் நிலையத்திலும் சர்வ கட்சி உஷார் கமிட்டிகள் அமைப்பது பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 62,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) நிதிக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

" நிதிக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ 1,94,86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ."

THIRU B. VENKATASWAMY: Sir, to discuss about the defective manner of preparation of voters' list for the coming General Elections, I move—

"That the allotment of Rs. 1,94,86,000 under Demand No. 8—Elections—be reduced by Rs. 100."

THIRU J. JAMES: Sir, to discuss about the necessity to prepare a revised electoral roll instead of amending the existing electoral rolls for the 1976 General Elections, I move—

"That the allotment of Rs. 1,94,86,000 under Demand No. 8—Elections—be reduced by Rs. 100."

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, சட்டமன்றத் தேர்தலில் வேட்பாளர்களுக்கு ஆகும் செலவுகளை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,94,86,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1975 ஏப்ரல் 8

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, விகிதாசார தேர்தல் முறையை அமல் செய்து மைனாரிட்டிகளுக்குத் தேர்தலில் வாய்ப்பளிப்பது பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,94,86,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(இ) நிதிக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

" நிதிக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,32,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

"THIRU B. VENKATASWAMY : Sir, to discuss about the need to acknowledge the letters sent to Ministers and the action taken reported to sender of those letters, I move—

That the allotment of Rs. 10,32,71,000 under Demand No. 9 — Head of State, Ministers and Headquarters Staff- be reduced by Rs. 100."

THIRU G. R. EDMUND : Sir, to discuss about the unrest prevailing among the N.G.O.'s on account of non-grant of increased D.A. on a par with Central Government Employees, I move—

"That the allotment of Rs.10,32,71,000 under Demand No. 9-Head of State, Ministers and Headquarters Staff—be reduced by Rs. 100."

THIRU J. JAMES : Sir, to discuss about the necessity to reduce the number of Ministers in view of the fact that several Boards and Corporations have been formed and they are placed under the Chairmanship of non-Officials, I move-"That the allotment of Rs. 10,32,71,000 under Demand No. 9— Head of State, Ministers and Headquartors Staff-be reduced by Rs. 100."

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, உரிய காலத்தில் நகரசபைகளுக்குத் தேர்தல் நடத்தாததைப் பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப்பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ 10,32,71,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



1975 ஏப்ரல் 8]

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, மேட்டூர் வீட்டு மனை ஒழுங்கு படுத்துவது, அடமானம் செய்வது சம்பந்தமாக வருவாய் வாரிய உறுப்பினரால் அனுப்பப்பட்ட பரிந்துரை பல நாளாகியும் அதற்கான உத்தரவுகள் பிறப்பிக்காமல் இருப்பது குறித்து விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 10,32,71,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஈ) நிதிக் கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 20,00,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, வறட்சிப் பணிகளில் ஈடுபடும் கூலியாட்களுக்குக் குறைந்தது 5 ரூபாய் கூலி வழங்கவும், கூலியின் பாதியை உணவுப் பொருளாக வழங்கவும் வழிகாணுவது குறித்து விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 20,00,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, குளித்தலை வட்டத்திலுள்ள ரெங்கநாதபுரம், கட்டளை, மணவாசி, மேலக்கட்டளை, வீரராக்கியம் ஆகிய அமராவதி ஆற்றுப் பாசனப் பகுதிகளை வறட்சிப் பகுதியாக அறிவித்து நிவாரணப் பணி துவக்க வேண்டிய அவசியம் பற்றி எடுத்துக்கூற—

" நிதிக் கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 20,00,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

THIRU J. JAMES : Sir, to disscuss about the necessity to raise the Thirupparappu weir and extend the Thirupparappu right bank channel upto Chittharal and Velliancodu Panchayat in drought relief scheme, I move—

"That the allotment of Rs. 20,00,00,000 under Demand No. 41 Relief on account of Natural Calamities—be reduced by Rs. 100".

THIRU K. H. BOMMAN : Sir, to disscuss about the need to appoint a separate Minister for Natural Calamities, I move—

"That the allotment of. Rs. 20,00,00,000 under Demand No. 41 —Relief on account of Natural Calamities—be reduced by Rs. 100".

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பஞ்சம் பிழைக்க வெளியேறியுள்ள 4 இலட்சம் அகதிகளுக்கு சொந்த ஊரில் மறுவாழ்வு அளிப்பது சம்பந்தமாக விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 20,00,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(உ) நிதிக் கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,23,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேணடும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவர் அவர்களே, பென்ஷன் கமிஷன் அமைக்கப்பட வேண்டியதின் அவசியத்தை எடுத்துக்கூற—

"நிதிக் கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக் கால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 10,23,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU N. DENNIS : Sir, to discuss about the failure of the Government to give old age pension to all the eligible old people, I move—

"That the allotment of Rs. 10,23,97,000 under Demand No. 42 Pensions and other Rertirement Benefits—be reduced by Rs. 100."

THIRU B. VENKATASWAMY : Sir, to discuss about the need to cpen a number of care centres for pensioners and to provide subsidise residential quarters to them, I move—

"That the allotment of Rs. 10,23,97,000 under Demand No. 42—pensions and other Retirement ybBenefits—be reduced by Rs. 100."



THIRU K. T. K. TANGAMANI : Sir, to discuss about the need to pay pensions to freedom fighters in time, I move—

"That the allotment of Rs. 10,23,97,000 under Demand No. 42—Pensions and other Retirement Benefits—be reduced by Rs. 100 ."

(ஊ) நிதிக் கோரிக்கை எண். 43—பல்வகை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண். 43—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 24,51,32,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU N. DENNIS : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 24,51,32,000 under Demand No. 43—Miscellaneous—be reduced by Rs. 100."

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இலங்கை பர்மா, போன்ற நாடுகளிலிருந்து அகதிகளாக தாயகம் திரும்பி வந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு உதவும் பணியை விரைவு படுத்த வேண்டும் என்பதைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 43—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 24,51,32,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(எ) நிதிக் கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,54,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU R. PONNAPPA NADAR : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 9,54,74,000 under Demand No. 46—Compensation and Assignments—be reduced by Rs. 100 ."

DR. H. V. HANDE : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 9,54,74,000 under Demand No. 46—Compensation and Assignments — be reduced by Rs. 100 ."

(ஏ) நிதிக் கோரிக்கை எண். 57—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 57—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 42,31,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, விவசாய தொழிலாளர்களுக்கு அரசாங்க கடன் வழங்குவதில் ஆஸ்திப் பொறுப்பு ஒரு தடைக்கல்லாக இருப்பது குறித்தும் அதைத் தவிர்த்து அவரவர் வீடு, மனை, மாடு, ஆடு இவைகளை ஆதாரமாக வைத்து விநியோகம் செய்ய வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 57—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 42,31,15,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்."

THIRU J. JAMES: Sir, to discuss about the necessity to reduce the rates of interest collected for the loans given to agriculturists by Government, I move—

"That the allotment of Rs. 42,31,15,000 under Demand No. 57—Loans and Advances by State Government—be reduced by Rs. 100".

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மானியக் கோரிக்கைகள் பற்றிய கொள்கைக் குறிப்புகள்* பேரவையில் வைக்கப்பட்டுள்ளன. அவைகள் நடைமுறைக் குறிப்பில் பதிவாக வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்களுடைய விவாதங்களுக்குப் பிறகு என்னுடைய பதிலில் விளக்கங்களை அளிக்க விரும்புகிறேன் என்று கூறி அமர்கிறேன்.

*திரு. ஆலடி அருணா: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பல்வேறு இனங்களின் தலைப்புகளின் கீழ் கோரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகளுக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே அளிக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்தின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

*125–133-ம் பக்கங்களில் இணைப்பு V, VI ஆக அச்சிடப்பட்டுள்ளன.



நாட்டிலே பயங்கரமான பஞ்சம் தலைவிரித்தாடுகின்ற பரிதாபச் சூழ்நிலையில் ஒவ்வொரு அரசியல் கட்சியும் தன்னுடைய பரிவை, தன்னுடைய ஆதரவை பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்குக் காட்டும் வகையில் தீவிரமாக நல்ல முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன.

ஆளுங்கட்சியைப் பொறுத்த வரையில் ஒரு நிதி வசூலிக்க ஏற்பாடு செய்து அதற்கான முறையில் தன்னுடைய பணியைச் செய்து கொண்டிருக்கிறது. இத்தகைய குழுவை அமைத்து அவர்கள் நிதி நிலையைப் பெருக்குவதற்கு முன்னாலேயே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பஞ்ச நிவாரணப் பணிகளுக்காக ஒரு குழு அமைத்து எங்கள் கட்சியின் பொதுச் செயலாளர் புரட்சித் தலைவர் அவர்கள் 1,35,000 ரூபாயை அந்தக் குழுவின் பணிகளுக்காக கொடுத்திருக்கிறார்கள். இன்னும் அந்தக் குழு மேலும் தீவிரமாக பணியாற்ற உண்டியல் ஏந்தியும், பல நிகழ்ச்சிகளை நடத்தியும் நாங்கள் பஞ்ச நிவாரணப் பணிகளுக்காகத் தீவிரமாகச் செய்து கொண்டிருக்கிறோம்.

அதே அடிப்படையில் ஆளுங் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு நிதிக் குழுவை அமைத்து தங்களாலான பணிகளை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்கத் திருநாட்டைச் சேர்ந்தவர்கள் கேர் நிறுவனத்தின் சார்பில் சுமார் 3 கோடி ரூபாய்க்கு மேலான உணவுப் பொருட்களை வழங்கியிருக்கிறார்கள். 60 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பால் பவுடரைத் தந்திருக்கின்றார்கள்.

அதே அடிப்படையில் மத்திய சர்க்காரும் 1969-ம் ஆண்டு இத்தகைய துயர் துடைப்புப் பணிகளுக்காக எந்த உள்ளத்தோடு, எந்த உணர்வோடு உறுதுணை புரிந்ததோ அதே அடிப்படையில் இந்தக் கட்டத்திலும், இந்தச் சந்தர்ப்பத்திலும் துணை புரிகிறது என்பதை முதலமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் நம்முடைய பஞ்ச பாழ்நிலையைப் போக்குவதற்காக $7\frac{1}{2}$ கோடி ரூபாய் வரையில் கடன் உதவி தந்திருக்கிறார்கள். மேலும் மாதம் 1-க்கு 60,000 டன் கோதுமையை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். இவைகள் போதுமானதாக இல்லாமலிருக்கலாம். மேலும் அதிகமான தேவைகள் இருக்கலாம். நம்முடைய கோரிக்கைகளை அல்லது நாம் கொடுத்த குரலை இன்னும் மத்திய சர்க்கார் முழுதாக ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனாலும் இவைகள் ஓரளவிற்கு நம்முடைய துயரைத் தணிக்கும் வகையில் இந்த உதவிகள் நமக்கு துணையாக இருக்கிறது என்பதை இந்த மன்றம் ஒத்துக் கொள்ளும் என்றே நான் மனதார நம்புகிறேன்.

நான் இந்த மன்றத்தில் ஒரு பிரச்னையைக் கொண்டு வருவது என்னுடைய தலையாய கடமை என்றே கருதுகிறேன். இந்த அரசாங்கம் இவ்வளவு பரிதாபகரமான சூழ்நிலையில் பஞ்ச சூழ்நிலையில், வறட்சி சூழ்நிலையில், வரலாறு காணாத விபரீதச் சூழ்நிலையில் மத்திய சர்க்காரின் கடன் உதவிகளைப் பயன்படுத்தாமல் தவறு இழைத்திருக்கிறது. அதை ஒழுங்காக பயன்படுத்திக் கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டை இந்த மன்றத்தில் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

[திரு. ஆலடி அருணா] [1975 ஏப்ரல் 8

அண்மையில் மத்திய சர்க்காரின் நிதியமைச்சராக இருக்கின்ற பெருமதிப்பிற்குரிய திரு. சுப்பிரமணியம் அவர்கள் சென்னையில் நிருபர்கள் மத்தியிலே பேசும்பொழுது ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பத்திரிகையிலே படித்த நேரத்தில் உண்மையிலேயே நமக்குப் பதட்டம் ஏற்பட்டது. ஏப்ரல் மாத தேவைகளைப் பற்றியோ, அதற்குப் பின்வரும் மாதங்களுக்கான தேவைகள் பற்றியோ மதிப்பீடு எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை. மதிப்பீடுகள் கிடைத்தவுடன் மத்திய அரசு அவற்றை பரிசீலனை செய்து தக்க உதவி செய்யும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் உதவி செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

ஆனால் இந்த அரசு தங்களுக்கு எவ்வளவு தேவை, மதிப்பீடு என்ன, கணிப்பு என்ன என்பதைப்பற்றி மத்திய அரசுக்குத் தெரிவிக்காமல் இருக்கிறது. இதை நான் இந்த நேரத்தில் சொல்லும் பொழுது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த மன்றத்தில் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். கடந்தமுறை இது சம்பந்தமாக ஒரு பேச்சு வந்த நேரத்தில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், மாநிலத்திற்குத் தரும் உதவி எதுவாக இருந்தாலும் அந்த உதவி மாநிலத்தின் திட்டச் செலவுக்கான ஆண்டு நிதி ஒதுக்கீட்டுக்கு அப்பாற்பட்ட நிலையில் தமிழக வறட்சி துயர் துடைப்புப் பணிகளுக்கு மத்திய சர்க்கார் இவ்வளவு பணம் தருவார்கள் அல்லது தரப்போகிறார்கள் என்று அறிவிக்கப்பட்டால், மத்திய சர்க்காரில் சுப்பிரமணியம் நிதி அமைச்சராக உள்ள வரையில் வறட்சிப் பணிகளுக்காக பணம் கேட்பதில்லை என்ற முடிவிலிருந்து மீண்டும் மாறி பரிசீலிப்பதற்கு அரசு முன்வரும் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

நான் இப்பொழுது சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்திலிருந்து தராமல் வேறு வகையில் தர வேண்டும், அவர்கள் தரும் பணத்தைத் திட்டச் செலவில் கழிக்கக் கூடாது, அப்படியானால்தான் பணமே கேட்போம் என்ற அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் மத்திய சர்க்காரில் நிதியமைச்சராக நீடிக்கின்ற வரையில் பணம் வாங்க மாட்டோம் வறட்சி நிதியாக என்று முதலிலே நிபந்தனை போட்டார். இப்பொழுது இரண்டாவதாக, பிளானுக்கான பணத்திலிருந்து பணம் தருவதாக இருந்தால் தேவையில்லை, வேறு நிதியிலிருந்து தருவதானால் அந்தப் பணத்தைப் பெறுவோம் என்று இரண்டாவது நிபந்தனையை புதிய வடிவத்தில் இந்த மன்றத்தில் தந்திருக்கிறார்கள். நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன், அரசாங்கம் போடும் பிளானிலிருந்துதான் வறட்சிக்குப் பணம் செலவழிக்க வேண்டுமென்று மத்திய சர்க்கார் முடிவெடுக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? கடந்தகாலத்தில், 1964ஆம் ஆண்டில் இப்படி வறட்சிப் பணிகளுக்கு நிதிகளை ஏப்படிச் செலவு செய்வது



1975 ஏப்ரல் 8] [திரு. ஆலடி அருணா]

என்பதற்கு மத்திய சர்க்கார் ஒரு கொள்கையை வைத்திருந்தது. அதன் மூலம் தங்கள் கையிலுள்ள பணத்தை அதற்கு வேண்டிய மாநிலத்திற்கு நியாயமற்ற முறையில், அவர்களுடைய விருப்பப்படி கொடுக்கும் அளவில் ஒரு கொள்கை வைத்திருந்தது. இதையெல்லாம் பற்றி மத்திய சர்க்காரிடத்தில் எல்லா மாநில அரசுகளும் எதிர்த்தன. இப்படிக் கொடுப்பதால் பாரபட்சம் நடக்கிறது, எனவே, திட்டச் செலவிலிருந்து பணம் தர வேண்டுமென்று மத்திய அரசை நிர்ப்பந்தப்படுத்தியதே, நிதி ஆணைக் குழுவை நிர்ப்பந்தப்படுத்தியதே மாநில அரசுகள்தான். இதை ஆறாவது நிதிநிலைக் குழு, சிக்ஸ்த் பைனான்ஸ் கமிஷன் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

"We have no hesitation in urging that if the serious distortions and inequitis caused in our scheme of federal finance by mounting expenditure on relief are to be corrected, whatever assistance is provided to a State for drought relief or flood control should be adjusted against the ceilings of Central assistance for the Plan."

இப்படி அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதே பைனான்ஸ் கமிஷனில் ஒவ்வொரு மாநிலமும் ஒரு நேஷனல் ஃபண்ட் என்று, தேசிய நிதி என்று அமைத்து அதன் மூலம் வறட்சிப் பணிகளைப் சந்திக்கலாமா என்ற ஆலோசனை சொல்லப்பட்ட நேரத்தில் நம்முடைய அரசாங்கமும் அதைக் கடுமையாக எதிர்த்திருக்கிறது. அதையும் ஃபைனான்ஸ் கமிஷன் மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறது.

"A majortity of the States are also opposed to the setting up a National Fund. Andhra Pradesh, Assam, Gujarat Haryana, Madhya Pradesh, Maharashtra, Meghalaya, Nagaland, Orissa, Tamil Nadu, Uttar Pradesh and West Bengal are opposed to the establishment of a National Fund."

என்று சிக்ஸ்த் ஃபைனான்ஸ் கமிஷன் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் என்னவென்றால், இப்படி ஒரு தேசிய நிதியிலிருந்து வறட்சிப் பணிகளுக்கு நிதி ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லிவிட்டு, சிக்ஸ்த் ஃபைனான்ஸ் கமிஷனிடத்தில் கருத்தைச் சொல்லும் பொழுது பிளானிங் கமிஷனிலிருந்து பெற்றால் போதும் என்ற கருத்துக்கு ஒப்புதல் அளித்துவிட்டு, இன்றைக்கு அதற்கு முற்றிலும் மாறாக ஒரு நிபந்தனை விதிப்பது என்றால் இந்த அரசாங்கம் மத்திய சர்க்காரோடு வலுக்கட்டாயமாக ஒரு பிரச்னையை உண்டாக்குகிறதே தவிர வறட்சி பணிகளில் நியாயமான கடமைகளைச் செலுத்துவதில் இந்த அரசாங்கத்திற்கு அக்கறை இல்லை என்பதைத்தான் அது காட்டுகிறது.

சந்தர்ப்பத்திற்குச் சந்தர்ப்பம் புதிய வாதங்களை, புதிய நிபந்தனைகளைச் சொல்லுகிறார்கள். இதைப்பார்த்தால் ஓநாய் ஆட்டுக் குட்டி கதை போல் இருக்கிறது. ஓநாய் ஓடையிலிருந்து தண்ணீர் குடித்தபோது ஆட்டுக்

குட்டியைப் பார்த்து கேட்டதுபோல் நீங்கள் நிபந்தனைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த அரசு ஓநாயாக இருக்கலாம், ஆனால் எதிரே இருந்து தண்ணீர் குடிப்பது ஆட்டுக் குட்டி அல்ல, புலிக்குட்டி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை மனதில் கொண்டு நிபந்தனைகளை விதிக்க வேண்டும்.

இந்த அரசாங்கம் தன்னுடைய தவறுகளைத் திருத்திக்கொள்ளக் கூடியதாக இல்லை, குறைகளைப் போக்கிக்கொள்ளக்கூடியதாக இல்லை, களங்கங்களை அகற்றிக்கொள்ளக்கூடியதாக இல்லை. நல்லமுறையில் செயல்படமனமற்ற முறையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேவையில்லாத வாதங்களை நியாமற்ற பதில்களைத் துணிந்து சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அமைச்சர்கள் மீது பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்களை இந்த மன்றத்தில் பொறுப்புமிக்க எதிர்க்கட்சித் தலைவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் எல்லாம் கடந்த காலத்தில் பொறுப்புமிக்க அமைச்சரவர்கள் அவர்கள் மீது சுமத்தப்பட்ட காலத்தில் ஆளும் பொறுப்பில் இருக்கின்ற பிரதம அமைச்சராக இருந்தாலும், மாநிலத்திலே இருக்கின்ற முதலமைச்சராக இருந்தாலும் சரி—"என்னுடைய அமைச்சர் மீதா குற்றம் சாட்டுகிறாய், அவர் அரிச்சந்திரனின் வாரிசு, அதைச் சொல்ல உனக்கு யோக்கியதை இல்லை" என்று கடந்த காலத்தில் யாரும் வாதித்தது இல்லை. இந்த மன்றத்தில் இருக்கும் பெரியவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.

டி. டி. கிருஷ்ணமாச்சாரி மீது குற்றம் சாட்டப்பட்ட நேரத்தில், முந்திரா ஊழலுக்கும் அவருக்கும் தொடர்பு இருக்கிறது என்று குற்றம் சாட்டப்பட்ட நேரத்தில், டி. டி. கே. அவர்களுக்கும் நேரு அவர்களுக்கும் எவ்வளவோ நெருக்கம், அன்பு இருந்தும், டி. டி. கிருஷ்ணமாச்சாரியும், பெருமதிப்பிற்குரிய காமராஜரும் எவ்வளவுதான் வேண்டியவர் என்றாலும் திரு. சக்ளா அவர்கள் தலைமையின்கீழ் விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதைப் போல் கெய்ரான் மீது அகாலி தளம் புலி பாய்ந்தது. ஆனால் கெய்ரான் கிலி கொள்ளவில்லை. காங்கிரஸ் கட்சியைக் காப்பாற்ற ஒவ்வொரு கட்டத்திலும் பஞ்சாப் மாநிலத்தில் உறுதியோடு போராடினார். அந்தக் கெய்ரானுக்கு எதிராக ஊழல் குற்றம் சாட்டிய நேரத்தில் "கெய்ரான் மீதா ஊழல் குற்றச்சாட்டு" என்று நேரு கேட்கவில்லை. அவர் மீது விசாரணைக்கு ஒத்துக் கொண்டார். அதெல்லாம் பழங்கதையாக முதலமைச்சருக்குத தெரியும். என்ஷியண்ட் ஹிஸ்டரியாகத் தெரியும். அவருக்குச் சில மாடர்ன் ஹிஸ்டரி நிகழ்ச்சிகளைக் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேற்கு வங்கத்தில் நான்கு அமைச்சர்கள் மீது ஊழல் புகார் சொல்லப்பட்டது அதற்கான விசாரணை தேவை என்று கேட்டபோது அங்கிருக்கும் முதலமைச்சர் ரே அவர்கள் "என்னுடைய அமைச்சர்களா, அவர்கள் பத்தரை மாற்றுத் தங்கம், பசும்பொன்னுக்கும் மேலானவர்கள்" என்று வாதிடவில்லை நான்கு அமைச்சர் மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் மீது விசாரணை நடத்தி அதிலே மூன்று பேர்கள் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டு பதவியை விட்டுக் கீழே இறக்கப்பட்டிருக்கிறார்கள்.



பக்கத்தில் இருக்கும் கேரளத்தில் அச்சுதமேனன் அவர்கள் ஒட்டுத் துணியை உடுத்திக் கொண்டிருப்பதுபோல் அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருப்பவர்கள் அங்கிருக்கும் நிதியமைச்சர் மீது குற்றம் சாட்டப்பட்டது. அதற்கான விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் ஒன்றரைக் கோடி ரூபாய் அரிசி பேர ஊழல் குற்றச்சாட்டு பெருமதிப்பிற்குரிய ப. உ. சண்முகம் அவர்கள் மீது, இந்த மன்றத்தில் எத்தனை ஆதாரங்கள், எத்தனை தகவல்கள், எத்தனை விளக்கங்கள், எத்தனை நியாயங்கள் இவைகளை எல்லாம் கேட்டு அரசாங்கம் விசாரணைக்கு ஏற்பாடு செய்ததா என்றால் இல்லை. பொதுப்படையான குற்றச்சாட்டைக் கூறினால் ஆதாரம் இருக்கிறதா என்று ஆணவத்தோடு கேட்பது; ஆதாரத்தோடு பேசினால் அமைதியாக இருப்பது; இதை இந்த அரசாங்கம் ராஜதந்திரமாக வைத்திருக்கிறது.

இந்த அரசாங்கத்திற்கு மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் மீது விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் சொல்லுகிற குற்றச்சாட்டுகள் ஊழல் குற்றச்சாட்டுக்கள்—பிரைமாஃபேசியாகப் பரிசீலிக்கத்தக்கதாக இருக்கிறதா என்பதை ஆராய சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஒருவருக்கு அனுப்பி வைத்து ஆராயுங்கள். அதற்கான செலவை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொள்ளும். நாங்கள் சொல்லுகிற குற்றச்சாட்டில் பிரைமாஃபேசி கேஸ் இல்லையென்று சுப்ரீம் கோர்ட் நீதிபதி சொல்லுவார்களேயானால் இந்த மன்றம் தருகிற தண்டனை எதுவாக இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ள நான் தயாராக இருக்கிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> நண்பர் அருணா அவர்கள் அமைச்சர் ப. உ. சண்முகம் மீது என்ன குறிப்பிட்ட குற்றச்சாட்டு என்று சொன்னால் நாங்கள் நீதி விசாரணை வைக்கத் தயாராக இருக்கிறோம்

<u>திரு. ஆலடி அருணா :</u> ஏ. எம். அசோஷியேட்டட் டிரேடர்ஸ் திட்டமிட்டு அரசாங்கத்தை ஏமாற்ற வேண்டுமென்பதற்காக தாண்டவராயன் மூலம் அவர்கள் 19—3—71-ல் இந்த அரசாங்கத்திற்கு ஒரு கடிதம் எழுதினார்கள். தாண்டவராயன் என்பவர் ஏ. எம். அசோஷியேட்டட் டிரேடர்சில் ஒரு போலி வேலைக்காரர். ஏ. எம். அசோஷியேட்டட் டிரேடர்ஸுக்கு உதவி செய்ய வேண்டுமென்பதற்காக தன்னுடைய அதிகாரத்தை ப. உ. ச. தவறாகப் பயன்படுத்தினார் என்பது எங்களுடைய குற்றச்சாட்டு. 19—3—1971-ல் ஒரு கடிதம் எழுதுகிறார்கள். 24—3—1971-ல் அமைச்சர் அனுமதியளித்திருக்கிறார்கள். 8—4—1971-ல் உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது.

நான் எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால், அமைச்சர் ப.உ.ச. அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கிறார், ஏ. எம். அசோஷியேட் நிறுவனம் என்பது ஒரு போலி நிறுவனம். அரசாங்கத்தை ஏமாற்ற சட்டத்தின் சந்துபொந்துகளுக்குள் புகுந்து செயல்பட்டது. அமைச்சருக்கு இதெல்லாம் தெரிந்தே கொடுத்தார் என்பதுதான் குற்றச்சாட்டு. நான் சொல்லுகிற குற்றச்சாட்டில் பிரைமாஃபேசி கேஸ் இல்லை, பழி, அவதூறு வேண்டுமென்றே சொல்லப்பட்டிருக்கிறது என்று சுப்ரீம்

கோர்ட் நீதிபதி சொன்னால் என் பதவியை நான் துறக்கத் தயாராக இருக்கிறேன். இதைத்தான் இந்த மன்றத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதலமைச்சர் அவர்கள் அளித்த பதலின்போது கூட சில விவரங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் அதைத் தெளிவுபடுத்துவார்களானால் நல்லது. அமைச்சர் ப. உ. ச. அவர்களே தொடர்ந்து வற்புறுத்தி வருகிறார்கள். "ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைச் சொல்லும்போது அதற்கு நீதி விசாரணை வைக்கவேண்டும். வைத்தால்தான் நல்லது; அப்போதுதான் நாட்டு மக்களுக்குத் தெளிவு ஏற்படும்" என்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சனையைப் பற்றி அரசாங்கத்தின் சார்பில் மிகத் தெளிவாகப் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. தாண்டவராயன் கொடுத்த டெண்டரை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது என்பது ஒரு பகுதி. இன்னொரு பகுதி தாண்டவராயன் பேரிலே தவருகப் பர்மிட் வாங்கியவர்கள் பர்மிட்டைத் தவருகப் பயன்படுத்தி கடத்தலில் ஈடுபட்டார்கள் என்பது. இந்த இரண்டிலும் ப. உ. ச. அவர்கள் மீது என்ன குற்றச்சாட்டு? அவர்கள் தெளிவாகச் சொல்லுவார்களானல், திட்டவட்டமான குற்றச்சாட்டைச் சொல்வார்களானல் அந்தக் குற்றச்சாட்டை பற்றி நீதி விசாரணை நடத்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இந்த மன்றத்தில்—அமைச்சர் அவர்களுக்கு நினைவு இருக்கும் என்று கருதுகிறேன்—பதில் சொல்லும்போது..

Mr. DEPUTY SPEAKER : You are going in a different way. The Hon. Minister had put a specific question to the hon. Member Aladi Aruna and he is answering a specific question put to him Let him finish and then I will give the hon. Member an opportunity.

திரு. ஆலடி அருணா : தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இரண்டு பிரச்சனைகளை இந்த மன்றத்திற்குச் சொன்னார்கள். நான் அதை விளக்க வேண்டாமென்று நினைத்தேன். ஏற்கெனவே 27 நிமிடங்கள் இந்த மன்றத்தில் விளக்கி இருக்கிறேன். அரைத்த மாவையே அரைக்க வேண்டாமென்று விட்டு விட்டேன். அது தேவை என்று சட்ட அமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள். அரசாங்கத்தினுடைய எஸ்டிமேட் கமிட்டி—

"Thandavarayan did not participate in the tender auction held on the 9th March 1971"

என்று மிகத் தெளிவாக டி. ஐ. ஜி. புட் செல் சொல்லியிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறது. உங்களுடைய அதிகாரி சொல்லியிருக்கிறார்—

"He did not participate in the tender auction held on the 9th March 1971" என்று

அறிக்கையைப் படித்துப் பாருங்கள்.





மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதல் பகுதி டெண்டர் கொடுக்கும் போது முறைகேடு நடந்திருக்கிறது, தாண்டவராயன் டெண்டரை ஏற்றுக் கொண்டதில் முறைகேடு நடந்திருக்கிறது, அதைப்பற்றி விசாரணை செய்ய வேண்டுமென்று அங்கத்தினர் கூறுகிறார் என்று நினைக்கிறேன்.

திரு. ஆலடி அருணா : முதலாவது டெண்டரே சட்ட விரோதமாக இருக்கிறது. இரண்டாவது டெண்டர் கிடைக்காத தாண்டவராயன் அரசாங்கத்திற்கு கடிதம் எழுதுகிறார். குறிப்புபிட்ட தேதியில் கடிதம் குறிப்பிட்ட தேதியில் இன்ன விலைக்கு எடுத்துக்கொள்கிறேன் என்று கடிதம் எழுதியுள்ளார். மற்ற டெண்டர்காரர்கள் என்ன விலை கேட்டார்கள்; செக்ரடேரியட்டில் இருந்து உங்களுடைய ஆஃபர் என்ன என்று அரசாங்கம் கேட்டதா? சொல்லட்டும் இந்த அரசு. அப்படி யாரும் கேட்கவில்லை ஆனல் தாண்டவராயனுக்கு கொடுத்தார்கள் இது முறை கேடு இல்லையா? சட்டத்தைத் தவருக பயன்படுத்தியது இல்லையா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதைப் பற்றி நீண்ட விவாதம் செய்தார்கள். நாங்களும் ஆதாரத்தோடு பைல்களைக் காட்டி பதில் சொல்லியிருக்கிறோம். அது வேறு பிரச்சினை. இப்போது கேட்க விரும்புவது—தாண்டவராயனுக்கு கொடுத்ததில் மூன்று டெண்டர்களுக்குப் பின்னல் நெகோஷியேட் டெண்டரில் தவறு நடந்திருக்கிறதா? அதைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்று சொன்னால் அதிலே பு. உ. ச. தவறு செய்திருக்கிறார் என்பதுதான் வாதமா? அப்படிப்பட்ட வாதமாக இருந்தால் இப்போதே பதில் சொல்லத் தயாராக இருக்கிறோம்.

திரு. ஆலடி அருணா : அதுமட்டுமல்ல வாதம். டெண்டரில் முறையாக நடக்கவில்லை. அப்படி தவருக ப. உ. ச. கொடுத்ததற்கு தலைமைச் செயலகத்திலிருந்து உத்தரவு போயிருக்கிறது. 24—3—1971-ல் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவானது அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்திக் கொடுக்கப்பட்ட உத்தரவு. 82 லட்சம் ரூபாய் பெருமானமுள்ள அரசாங்கத்தின் நெல்லைக் கொடுக்கும் போது யார் யார் டெண்டர் போட்டார்கள் அந்த நபருக்கு சால்வன்சி இருக்கிறதா, உரிமம் இருக்கிறதா......................

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பதில் சொல்ல என்ன தயக்கம்? நீங்கள் எல்லாம் பேசினீர்கள். அரசாங்கத்தின் சார்பிலும் பதில் சொன்னார்கள். அந்த ஃபைல்களை எல்லாம் கேட்டீர்கள். நீங்கள் எல்லாம் படித்துப் பார்த்தீர்கள். அருணா அவர்கள் வரி வரியாக படித்துப் பார்த்தார். மூன்று டெண்டர்களுக்குப் பின்னலே நெகோஷியேட்டட் டெண்டர் என்ற முறையில் தாண்டவராயனுக்குக் கொடுத்தது தவறு என்றால் அதிலே ப. உ. ச. தவறு செய்திருக்கிறார்; இதைப் பற்றி விசாரிக்க வேண்டுமென்று சொன்னால் அதற்கு உடனடியாகப் பதில் சொல்லத் தயாராக இருக்கிறோம்.

திரு. பெ. சீனிவாசன் : தாண்டவராயன் He is almost a pauper.

[1975 ஏப்ரல் 8

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : The hon. Member Thiru Aladi Aruna has to answer the question put to him by the Hon. Minister. The Hon. Minister has answered the question put to him by the hon. Member. அவர் முடிக்கட்டும்.

Thiru P. SEENIVASAN : The hon. Member belongs to our party.

[முற்பகல் 10-30.]

தாண்டவராயன் இப்படிப்பட்ட ஆள் என்பதைத் தெரிந்துதான் டெண்டர் கொடுத்திருக்கிறீர்கள் என்பது அவர்கள் குற்றச்சாட்டு. தாண்டவராயன் என்பவர் யார் என்று தெரியாமல் கொடுக்கப்பட்டதா ? ஆகவே, அதைப்பற்றிச் சொல்லாமல் அமைச்சர் பூசி மெழுகிக் கொண்டு போகிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் ஒன்றும் பூசி மெழுகிக் கொண்டு போகவில்லை. இதன்பேரில் விவரமாக பதில் சொல்லப்பட்டிருக்கிறது. அனைத்துக் கட்சித்தலைவர்களும் பார்த்து ஒவ்வொரு பகுதியாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. அருணா அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் தெளிவாக இதுதான் குற்றச்சாட்டு என்று சொன்னால் உடனடியாக வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கத் தயாராயிருக்கிறோம். அதற்கு அருணா அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள தயாராயிருக்கிறார்களா ?

திரு. ஆலடி அருணா : அதைத்தான் சொல்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் கலெக்டர் அவர்கள் முதன்முதலாக டெண்டர் கேட்ட நேரத்தில் அதற்கான எர்னஸ்ட் டெபாஸிட் பணத்தை தாண்டவராயன் கட்டவில்லை. இரண்டாவது டெண்டர் வரும்போது முதலில் கட்டிய ரூ. 25,000-ஐ இதில் அட்ஜஸ்ட் செய்து கொள்ளுங்கள் என்று மீதிப் பணத்தை நான் வந்து தருகிறேன் என்றும் சொன்னார்கள். அதுவும் முறைகேடு. கலெக்டர் அவர்களுக்கு................

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விவரங்கள் பற்றி ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறோம். இப்போது கடைசி கட்டத்தில் இருக்கிறோம். தாண்டவராயனுக்கு நெகோஷியேடெட் டெண்டர் என்ற முறையில் அரசு டெண்டர் கொடுத்தது என்று சொல்கிறார்கள் ; அதை ஒத்துக்கொள்கிறோம். அது ஒப்புக்கொண்ட வாதம். அதில் ப. உ. ச. தவறு செய்திருக்கிறார்கள் ; அதற்கு நீதிபதி விசாரணை தேவை ; அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று திரு. ஆலடி அருணா சொல்கிறார்களா ?

திரு. செ. அரங்கநாயகம் : எங்கள் தரப்பிலிருந்து சொல்லப்படுகிற வாதம் ; எஸ்டிமேட்ஸ் கமிட்டி அறிக்கையில் டி.ஐ.ஜி. ரிப்போர்ட்டையும் அவர்கள் சேர்த்திருக்கிறார்கள். அதில் டி.ஐ.ஜி. சொல்வது டெண்டர் இன்வைட் செய்த ஸ்டேஜில் சதி ஆரம்பமாகிவிட்டது என்று சொல்கிறார்கள்.



1975 ஏப்ரல் 8] [திரு. செ. அரங்கநாயகம்]

அப்படியானால் அந்தச் சதி ஆரம்பமானதற்குப் பின்னால் தாண்டவராயனுக்கு அந்தப் பெர்மிட் கிடைக்க யார் யார் உதவி செய்தார்கள் ; அவர்கள் எல்லாம் இந்தச் சதிக்கு உடந்தை என்று கருதப் படுவார்களா ? அந்த அடிப்படையில் பார்க்கிறபோது கலெக்டர் அவர்கள் பைலில் என்ன எழுதியிருக்கிறார்கள் என்றால் அன்று உணவு அமைச்சராக இருந்தவர்கள் வாய்மொழி பேரில் தாண்டவராயனுக்கு இந்த பெர்மிட்டை கொடுத்ததாகச் சொல்லி இருக்கிறார்கள். அப்படியானால் அந்தச் சதிக்கு உடந்தையான குற்றத்தை அமைச்சர் அவர்கள் செய்ததாகாதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது ஒரு புது வியாக்யானமாக இருக்கிறது. அப்படி எந்தக் கலெக்டரும் எழுதியதாக யாரும் பார்க்கவில்லை. எல்லாக் கட்சி தலைவர்களும் பைலை பார்த்தார்கள். ஒரு அமைச்சர் சொல்லி உத்தரவு போட்டார்கள் என்று அவர்கள் சொல்வது தப்பு. இப்படிப்பட்ட தவறான; உண்மைக்குப் புறம்பான தகவலை இந்த மன்றத்துக்குத் தரக்கூடாது. இது பெரிய அபவாதம். அது வேறு விஷயம்.

பெர்மிட் வாங்கியவர்கள் திட்டமிட்டு கொடுத்த பெர்மிட்டை தவறாக பயன்படுத்தினார்கள் என்பது அரசாங்கமே போட்ட வழக்கு. இதில் ஆராய்ச்சி தேவையில்லை. அரசாங்கமே க்ரிமினல் கோர்டில் சில பேர்கள் கூட்டாகச் சேர்ந்து சதி செய்து தவறாக பர்மிட் வாங்கியிருக்கிறார்கள். வாங்கிய பெர்மிட்டை தவறாகக் கடத்தலுக்கு பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பது அரசாங்கமே போட்ட வழக்கு. இது போலீசாரே கண்டுபிடித்த வழக்கு. அதற்கு எஸ்டிமேட் கமிட்டியே பாராட்டு கூறியிருக்கிறார்கள்; அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதற்காக, அது கோர்ட்டில் இருக்கிறது. அருணா அவர்கள் தெளிவாகப் பேசி வந்தார்கள். மற்றவர்கள் குறுக்கிட்டு திசை திருப்பக்கூடாது. அவர்கள் நல்ல முடிவிற்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்தால் நாங்கள் நடவடிக்கை எடுக்கத் தயாராயிருக்கிறோம்.

திரு. ஆலடி அருணா : 24—3—1971-ல் தாண்டவராயனுக்குச் சாதகமாக அஸோஷியேடெட் ட்ரேடர்ஸ்க்கு போட்ட உத்தரவில் மட்டும் முறைகேடு நடந்திருக்கிறது என்பதல்ல............

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த வழக்கில் இரண்டு பகுதிகள்; ஒன்று க்ரிமினல் வழக்கு. இன்னொன்று நெகோஷியேடெட் டெண்டர் தாண்டவராயனுக்கு கொடுக்க ஒப்புக் கொண்டது அரசாங்கம் ; அதில் ப.உ.ச. தவறு செய்தார்கள்; அதைப் பற்றி விசாரிக்க வேண்டும்; அதற்கு நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று அருணா அவர்கள் சொல்கிறார்களா ?

திரு. ஆலடி அருணா : இந்த நெகோஷியேடெட் டெண்டரில் மட்டும் தவறு நடக்கவில்லை. ஆரம்பித்த டெண்டரிலிருந்து தவறு. அந்தத் தவறின் தொடர்ச்சி நெகோஷியேடெட் டெண்டர் வரை கொண்டு போயிருக்கிறது. எனவே கீழேயிருந்து முழுமையாக விசாரித்தால்தான் ஒப்புக் கொள்ள முடியும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த விசாரணைக்கு நாங்கள் தயாராயிருக்கிறோம். மூன்றாவது டெண்டருக்குப் பின்னால் நெகோஷியேட்டெட் டெண்டர் என்ற முறையில் அரசு தலையிட்டு உத்தரவு போட்டது. அதில ப. உ. ச. தவறாக நடந்துகொண்டிருக்கிறார்கள், அதைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்று சொன்னால், அதைத் தெளிவாகச் சொன்னால் விசாரிக்கத் தயாராயிருக்கிறோம்.

திரு. ஆலடி அருணா : அமைச்சர் அவர்கள் தவறான தகவலை மன்றத்திற்குத் தருகிறார்கள். தஞ்சை கோவாப்பரேட்டிவ் மார்கெட்டிங் பெடரேஷன் தலைவர் தியாகராஜ முதலியார். அவர்கள் அரசாங்கத்திற்கு ஒன்றரைக்கோடி ரூபாய் பெறுமானமுள்ள அரிசி கையிருப்பு இருக்கிறது என்று எழுதினார்கள். முதலில் அது உங்களுக்குத் தெரிந்த பிறகுதான் மாவட்ட ஆட்சித் தலைவரை அழைத்து டெண்டர் கேட்டீர்கள். உங்களுக்குத் தெரியாமல் ஆரம்பத்தில் ஏதோ நடந்தது போலவும் மூன்றாவது டெண்டர்......................

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சொல்லாததை கற்பனையாகச் சொல்லக்கூடாது. டி.ஸி.எம்.எப்.க்குச் சொந்தமான நெல்லை வெளி மாநிலங்களுக்கு விற்க அரசு முடிவு எடுத்தது. அது வேறு விஷயம். மூன்றாவது டெண்டருக்குப் பிறகு நெகோஷியேட்டெட் டெண்டரில் கொடுக்க அரசாங்கம் முடிவு எடுத்தது, அது தவறு, அதைப்பற்றி விசாரிக்க வேண்டும் என்று சொன்னால் விசாரிக்கத் தயாராகயிருக்கிறோம்.

திரு. ஆலடி அருணா : தியாகராஜ முதலியார் கலெக்டருக்கா கடிதம் எழுதினார் ? அன்றிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அந்தோணி அவர்கள்......................

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நீதிபதி விசாரணை வைக்கத் தயார் ப. உ. ச. மீது என்று சொல்லியாகிவிட்டது. இப்போது அருணா அவர்களின் கடமை பாக்கியிருக்கிறது. அதைத்தான் திரும்பத் திரும்ப சட்ட அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறுகிறார்கள். ப. உ. ச. மீது இந்த விவகாரத்தில் தவறு இருக்கிறது, ஆகவே விசாரணை வைக்க வேண்டும் என்று ஆலடி அருணா அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால் இந்த அரசாங்கம் நீதி விசாரணை வைக்கத் தயாராயிருக்கிறது.

திரு. ஆலடி அருணா : நீதி விசாரணை வைக்க வேண்டும் என்று தான் முதலில் இருந்தே சொல்லி வருகிறேன். நான் சொல்வது இலேயிருந்து விசாரணை நடத்த வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ப. உ. ச. மீது தவறு இருக்கிறது, நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன், விசாரணை வையுங்கள் என்று அருணா அவர்கள் சொல்ல வேண்டும்.

திரு. ஆலடி அருணா : நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். இதில் விசாரணை செய்ய சுப்ரீம் கோர்ட்டிலிருந்து ஒரு நீதிபதியை வைக்க வேண்டும் அல்லது பிற மாநிலத்தில் உள்ள ஹைகோர்ட் நீதிபதி ஒருவரை வைக்க வேண்டும். அப்போது பொறுப்பேற்றுக் கொள்ளத் தயார்.





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதைச் சொன்னால் அவர்கள் அப்படித்தான் பேசுவார்கள். கேரளாவில் யாரை நீதிபதியாக வைத்தார்கள் என்பது அருணா அவர்களுக்குத் தெரியும். இப்போது அருணா அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள் நீதி விசாரணை வைப்பதற்கு. அதற்கு அரசாங்கம் தயாராகயிருக்கிறது. அவ்வாறு விசாரணை வைக்கப்படும் என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆலடி அருணா : நீதி விசாரணை அரசாங்கம் நிர்ணயித்த தினத்தில் வர நான் தயாராயிருக்கிறேன். ஆனால் சுப்ரீம் கோர்ட்டில் இருந்து ஒரு நீதிபதி வரவேண்டும். அல்லது பிற மாநிலத்தில் உள்ள ஒரு ஹைகோர்ட் நீதிபதி வர வேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் ஒரு கருத்து சொன்னார்கள். கேரளத்தில் என்ன நடைபெற்றது, அச்சுத மேனன் எப்படி செய்தார் என்று சொன்னார்கள். அதைப்பற்றி விளக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். அது ஒரு நியாயமான கேள்வியும் கூட. ஆகவே, அதைப்பற்றி விளக்க விரும்புகிறேன்.

திரு. எல். கணேசன் : ஆலடி அருணா அவர்கள் எதெற்கெடுத்தாலும் அடுத்த மாநிலத்தில் உள்ள உயர் நீதிமன்ற நீதிபதி, உச்ச உயர் நீதிமன்ற நீதிபதி வரவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அது நம் மாநிலத்தில் உள்ள உயர் நீதிமன்ற நீதிபதிகளை கறை படுத்துவதாகாதா ? அவர்களை இழிவுபடுத்துவதாகாதா ? நாட்டில் இருப்பவர்கள் நம் உயர் நீதிமன்றத்தைப் புகழ்ந்து கொண்டிருக்கும்போது எதற்கெடுத்தாலும் சுப்ரீம் கோர்ட்டில் இருந்து வரவேண்டும் என்று பேசிக் கொண்டிருப்பது இந்த நாட்டு மக்களையும், இந்த நாட்டு நிர்வாகத்தில் இருப்பவர்களையும் இழிவு படுத்துவதாகாதா ?

திரு. கோவை செழியன் : வெளி மாநிலத்திலிருந்து அல்லது சுப்ரீம் கோர்ட்டில் இருந்து ஒரு நீதிபதி வரவேண்டும் என்று திரு. ஆலடி அருணா அவர்கள் சொன்னதற்குப் பல காரணங்கள் உண்டு. அதைப் பற்றி நான் இங்கே விளக்கிச் சொன்னால் நீங்கள் அவற்றையெல்லாம் எக்ஸ்பஞ்ச் செய்து விடுவீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் எக்ஸ்பஞ்ச் செய்வதல்ல, திரு. அருணா அவர்கள் விளக்கட்டும்.

திரு. கோவை செழியன் : ஜட்ஜ்களைப் பற்றி பேச ஆரம்பித்தால் அவை குறிப்பேட்டில் ஏறாது.

திரு. ஆலடி அருணா : சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளும் நாம் ஏற்றுக் கொண்டுள்ள நீதிபதிகள்தான். அவர்கள் கீழ் நாம் இருக்கிறோம். பக்கத்து மாநிலம் என்றால் பகை மாநிலமா ? நம் ஸிஸ்டர் ஸ்டேட்ஸ் தான். அதை ஏற்றுக் கொள்வதில் தவறு இல்லை. இதை நான் சொல்லக் காரணம் நியாயமான நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தான். கிராம மக்கள் சொல்வார்கள், வெள்ளையன் ஆண்ட காலத்தில் எப்படி நீதி இருந்தது என்று. அதனால் வெள்ளைக்காரர்கள் எல்லாம் யோக்கியமானவர்கள் என்ற பொருள் அல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : போலீஸ் மானியத்தின்மீது பேசுகிற நேரத்தில் போலீஸார் போட்ட வழக்குகள் நீதிமன்றங்களில் தோற்கடிக்கப்பட்டுவிட்டன, அந்த அளவிற்கு இங்கு நீதி ஒழுங்காக நிலை நாட்டப்படுகிறது என்ற அளவிற்கு நீதிமன்றங்கள் புகழ்ந்து பேசப்பட்டிருக்கின்றன. எவ்வளவோ வழக்குகள், சர்க்கார் சார்பில் போடப்பட்ட வழக்குகள் நீதிமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன. அப்படியிருக்க இதில் மட்டும் வெளி மாநிலத்தில் இருந்து ஒரு நீதிபதி வரவேண்டுமென்று சொல்வது எப்படி முறையாகும் ?

திரு. கோவை செழியன் : * * * * * *

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் . . . .

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, திரு. கோவை செழியன் இப்போது பேசிய இந்தப் போர்ஷனைப் பொறுத்த அளவிற்கு, சபைக் குறிப்பில் இருப்பது நல்லதல்ல எனக் கருதுகிறேன். நீதி மன்றங்களுக்கு நிர்வாக அதிகாரங்கள் இருக்கின்றன. அதைப்பற்றி இங்கே பேச ஆரம்பித்தால் அது நல்லதல்ல.

திரு. கோவை செழியன் : * * * * *
நான் சொல்வதை எக்ஸ்பஞ்ச் பண்ணுவதானால் பண்ணிக் கொள்ளுங்கள். ஆனால் நான் பேசினால் இங்கே இருக்கிறவர்கள் தெரிந்து கொள்வார்கள். அதனால் நான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அட்மினிஸ்ட்ரேடிவ் ட்யூடீஸ் ஹைகோர்ட்டிற்கு இருக்கிறது. கான்ஸ்டிட்யூஷனில் அதுபற்றி பேசக் கூடாது என்று இருக்கிறது. ஆகவே, அந்தப் போர்ஷன் நம் ரிகார்டில் இருப்பது நல்லதல்ல. ஆகவே அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும்.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் போலீஸ் மானியக் கோரிக்கையில் இப்படிச் சொல்லவில்லையே, இப்போது ஹை கோர்ட் நீதிபதியை ஒத்துக் கொள்ள மாட்டேன் என்கிறார்களே என்று சொல்கிற இந்தக் கேள்வி உண்மையான கேள்வியாகத் தெரியும். எனவே நான் பதில் சொல்கிறேன். கீழ் மட்டத்தில் வழக்குகளை விசாரிக்கிற போது இரண்டு பட்ட கருத்துக்களைச் சொல்லவில்லை. ஹை கோர்ட்டில் யார் யாருக்கு நீதிபதி பதவி கொடுக்கவேண்டுமென்று பரிந்துரை செய்வது இந்த அமைச்சரவையாகும். இதில்

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





*பேவரிடிசம், நெபாடிசம் இருப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. தொடர்பு நிலையில் நாம் இருப்பதால் இப்படி இருப்பதற்குச் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. There is an opportunity என்று சொல்லுகிறேன். எனவேதான், ஒரு நியாயமான, சார்பற்ற நீதிபதியை, சுப்ரீம் கோர்ட் நீதிபதியை நியமிக்க என்ன தயக்கம் என்று கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாநில அமைச்சர்கள் மீது இருக்கிற புகார்களை சுப்ரீம் கோர்ட் நீதிபதி விசாரிக்க வேண்டுமென்றால் மத்திய அமைச்சர்கள் மீது இருக்கிற புகார்களை எந்த நீதிபதியைக் கொண்டு விசாரிப்பது?

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, இதைப் பற்றி தாராளமாகச் சொல்லுங்கள், ஏராளமாகச் சொல்லுங்கள், நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, மாநில அரசு சிபாரிசு செய்திருக்கிற காரணத்தினால் நீதிபதி தவறாக நடக்கலாம் என்ற கருத்தைச் சொல்வது முறையல்ல. இது சபைக் குறிப்பில் இருக்கக் கூடாது. அவர்களை நான் கேட்பது, சுப்ரீம் கோர்ட் நீதிபதியை பிரதம அமைச்சர் சிபாரிசு செய்கிறார். அந்த நீதிபதியைப் பற்றி அவர் உயர்வாகப் பேசி நம்முடைய நீதிபதியைக் குறைவாகப் பேசுவது சரியா என்று கேட்கிறேன்.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, நான் குறையாகப் பேசவில்லை. There is an opportunity for nepotism and favouritism என்று சொன்னேன். நான் தவறான அடிப்படையில் சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நீதி விசாரணை மாண்புமிகு திரு. ப. உ. ச. மேல் வைக்க நான் தயார் என்ற பிறகும், அந்தப் பிரச்சனையிலிருந்து நழுவி ஓடி அருணா அவர்கள் சுப்ரீம் கோர்ட் நீதிபதி வேண்டுமென்று சொல்கிறார்கள்.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, நான் ஓடவில்லை. ஆலடி அருணா ஓட மாட்டான். கடைசி வரைக்கும் நிற்பான். அதில் யாருக்கும் கவலை வேண்டாம் .

திரு. சி.. ஆறுமுகம் : *

திரு. ஆலடி அருணா : *

* மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது

திரு. ஆலடி அருணா: எனவே என்னைப் போய் ஏன் இந்த நீதிபதியை ஒதுக்கிக்கொள்ளக்கூடாது என்று கேட்டால் மாண்புமிகு முதலமைச்சரவர்களை நான் திருப்பிக் கேட்கக் கூடாதா? அவர்கள் ஏன் சுப்ரீம் கோர்ட் நீதிபதியை ஒத்துக் கொள்ளக்கூடாது, அதில் என்ன ஆட்சேபனை இருக்கிறது, தவறு இருக்கிறது என்று நான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுடைய வாதம் எவ்வளவு தவறாக இருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட பேசுகிறேன். இந்த அரசு பரிந்துரை செய்தவர்கள் உயர்நீதி மன்றத்தில் இருக்கிறார்கள், தொடர்பு இருக்க வாய்ப்பு உண்டு என்றால் திருமதி இந்திரா காந்தி அமைச்சரவை சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளை நியமிக்கிறார்கள். அங்கே தொடர்பு இருக்க வாய்ப்பு இல்லை என்று இப்படிச் சொல்வது முரண்பட்ட வாதம் என்று எடுத்துச் சொல்கிறேன்.

திரு. ஆலடி அருணா: தலைவரவர்களே, இங்கே பரிந்துரை செய்தவர்கள் உயர்நீதி மன்றத்தில் இருக்கிறார்கள். பெருமதிப்பிற்குரிய திருமதி இந்திரா காந்தி அவர்கள் பரிந்துரை செய்தவர்கள் சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறார்கள். ஆகவே இரண்டு பேரும் வேண்டாம். பக்கத்து மாநிலத்திற்குப் போவோம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, பக்கத்து மாநிலத்திலும் உறுப்பினர் அவர்கள் தொடர்பு கொண்டிருக்கக்கூடிய கட்சியினுடைய அமைச்சரவை சிபாரிசு செய்தவர்கள்தான் அந்த உயர்நீதி மன்றத்தில் இருப்பார்கள். நானாக இந்த வார்த்தையைச் சொல்லவில்லை. உறுப்பினர் சொன்ன வாதப்படி சொல்கிறேன். ஆகவே தான் அங்கத்தினர் அவர்களின் வாதம் முரண்பட்ட வாதம் என்று சொல்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, கேரள நீதிபதியை வைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, என்னுடைய வாதமெல்லாம் யார் சிபாரிசு செய்து, குடியரசுத் தலைவர் போட்டாலும் நீதிபதி நீதிபதிதான். அவர் பொது நீதிபதிதான். அவருடைய விசாரணையை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்பது அரசினுடைய வாதம். திரு. ஆலடி அருணா அவர்கள் கட்சியைக் கொண்டு வந்து நீதித் துறையோடு இணைக்கிறார்கள். இந்த வாதம் தவறு என்பதற்காக இதை எடுத்துக் காட்டுகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, நீதியைக் கோருகிறவர்கள் நீதி, நியாயம் கிடைக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்கிற போது, நீதி கிடைக்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறார்களே தவிர இதில் வேறு காரணம் இல்லை.





திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, நம்முடைய திரு. சுரேந்திரன் அவர்கள் நியாயமான நீதி கிடைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் சொந்த அம்மாவை வேண்டாமென்று இன்னொரு மாநில அம்மாவை கூப்பிடுகிறார்கள்.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆலடி அருணா அவர்கள் பேசும்போது * என்று சொன்னார்கள். அது சபைக் குறிப்பில் இருப்பது நல்லதல்ல. ஆகவே அதை சபைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ' * ' இவை எதுவுமே அவைக்குறிப்பில் இருக்காது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாநில நீதிபதி வேண்டாமென்றால் திரு. ஆலடி அருணா அவர்களுக்குச் சுலபமான வழி இருக்கிறது. ஏற்கனவே இங்கே சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. அந்த சட்டத்தின்படி ஒருவரை நியமித்திருக்கிறோம். ராஜஸ்தானிலே, திருமதி இந்திரா காந்தியின் காங்கிரஸ் கட்சி நிறைவேற்றியிருக்கிற சட்டத்தை விட உயர்ந்த சட்டம் இங்கே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அங்கே முதலமைச்சரை இணைத்துக் கொள்ளவில்லை, அமைச்சரவை மீது குற்றம் நிரூபிக்கப்பட்டால் தண்டனை எதும் கிடையாது, குற்றம் சொல்லியவர்களுக்கு தண்டனை கொடுக்க சட்டம் இருக்கிறது. ஆனால் இங்கே முதலமைச்சரை உள்ளிட்டு எல்லா அமைச்சர்கள் மீதும் குற்றம் நிரூபிக்கப்பட்டால் 7 ஆண்டு காலம் தண்டனை விதிக்க பரிந்துரை செய்யலாம். மாண்புமிகு திரு ப. உ. ச. மீது புகாரை திரு.வெங்கடாத்திரி அவர்களிடம் கொடுங்கள். நாங்கள் கூட கொடுக்கலாம். கொடுக்கிறோம். விசாரிக்கலாம். விசாரித்து அவர் ஒரு தீர்ப்பை அளிப்பார்கள். அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் மாண்புமிகு திரு. ப. உ. ச. மீது குற்றம் இருந்தால் வேறொரு வழக்கு மன்றத்தில் வழக்கைத் தொடர வேண்டும். இதில் சுப்ரீம் கோர்ட் வரை போகலாம். இந்தப் புகாரை திரு. வெங்கடாத்திரி அவர்களிடம் கொடுக்கச் சம்மதிக்கிறார்களா?

திரு. ஆலடி அருணா: தலைவரவர்களே, தமிழக அரசு நிறைவேற்றியிருக்கிற லஞ்ச ஒழிப்புச் சட்டத்தைப் பற்றி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதனுடைய கருத்தைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. அது ஒரு கருப்புச் சட்டம் என்று......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இதில் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போக வழி இருக்கிறது. திரு. வெங்கடாத்திரி அவர்கள் விசாரித்து முடிவு அறிவிப்பார்களானால் அந்த முடிவை எதிர்த்து, ஒட்டி,

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

அரசு எடுக்கிற நடவடிக்கையை எதிர்த்து இங்கே இருக்கிற கீழ்க் கோர்ட்டிலிருந்து சுப்ரீம் கோர்ட் வரை போக வழி இருக்கிறது. திரு. ஆலடி அருணா அவர்கள் தயாராக இருக்கிறார்களா?

திரு. ஆலடி அருணா: தலைவரவர்களே, நான் ஒன்றன்பின் ஒன்றாக விளக்கி விடுகிறேன். இந்த சட்டத்தைப் பொறுத்த அளவில்....

மாண்புமிகு டாக்டர் மு.கருணாநிதி: தலைவரவர்களே, இந்தச் சட்டத்தைப் பற்றி விமரிசிக்க வேண்டிய தேவையில்லை. நான் சொன்னது இரண்டு வழிகள்தான். அருணா அவர்கள் மாண்புமிகு திரு ப, உ. சண்முகம் அவர்கள் மீது குற்றம் இருக்கிறது என்றார்கள். நீதி விசாரணையை ஒத்துக்கொண்டிருக்கிறது. சுப்ரீம் கோர்ட் வரை போகவேண்டுமானால் இதில் வழி இருக்கிறது. நான் சொன்ன வழியும் இருக்கிறது. ஆகவே இந்தப் பிரச்சினை இதோடு முடிவடைகிறது.

திரு ஆலடி அருணா: தலைவரவர்களே சுப்ரீம் கோர்ட் நீதிபதி விசாரணைக்கு எப்போதும் தயாராக இருக்கிறேன். தைரியம் இருந்தால்........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஆக, இதிலிருந்து ஆலடி அருணா அவர்கள் பின் வாங்கிவிட்டார் என்று புரிகிறது.

திரு ஆலடி அருணா: தலைவரவர்களே, இந்த மன்றத்தில் பெரும்பான்மையை வைத்துக்கொண்டு பேசுகிறார்கள். யார் பின் வாங்கினார்கள், யார் பின் வாங்குவார்கள் என்பது மக்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அமைச்சர் ப.உ. சண்முகம் மீது கூறப்படும் புகார் மீது நீதி விசாரணை வைக்கப்படும் என்று நான் இப்போது தெரிவித்து விட்டேன். இனிமேல் யாரும் இதை திசை திருப்பத் தேவையில்லை.

திரு ஆலடி அருணா: தலைவரவர்களே, சுப்ரீம் கோர்ட் நீதிபதியை வைத்து விசாரணை செய்வதானால் நான் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள்.

திரு ஆலடி அருணா: தலைவரவர்களே, எனவே இந்த அரசாங்கம் தன்னுடைய தவறுகளை, குறைகளைப் போக்கிக் கொள்வதில் அக்கறை காட்டவில்லை. இருக்கிற மட்டில் எதையோ செய்வோம் என்று அவ்வளவு அநியாயங்களுக்கும் இந்த அரசாங்கத்தின் ஆதரவு அளிக்கப்படும் என்ற நிலையிருக்கிறது என்பது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தாகும். பல்வேறு பிரச்சினைகளை நினைவுறுத்துவது என் கடமையாகும். பொதுவாக அரசாங்கம் எம். பி.எஸ்.ஸிக்கு ஆளைத் தேர்ந்தெடுப்பதிலும்..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 40 நிமிஷம் ஆகி இருக்கிறது.





திரு ஆலடி அருணா: எம்.பி எஸ்.ஸிக்கு ஆளைத் தேர்ந்தெடுப்பதிலும் அரசாங்கம் தவறான முறைகளைக் கையாளுகிறது. தவறான கொள்கையைப் பின்பற்றுகிறது என்று இந்த நேரத்தில் குற்றஞ்சாட்ட ஆசைப்படுகிறேன். அமைச்சர்கள் இதிலே தலையிடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை எதை வைத்து நிரூபிக்கிறோம் என்றால் எம்.பி.எஸ்.ஸிக்கு காகிதப் பென்சில் மார்க் போடுகிறார்கள். உலகத்தில் இந்த மாதிரி நிலைமை வேறு எங்காவது உண்டா? எதற்காக காகிதப் பென்சிலில் மார்க் போடுகிறார்கள்? பின்னாலே திருத்திக்கொள்ளலாம், வேண்டிய மார்க்கை போட்டுக் கொள்ளலாம். ஆகவே, காகிதப் பென்சிலில் மார்க் போடப்படுகிறது.

இதைவிட விசித்திரம், எம்.பி.எஸ்.ஸிக்கு எக்ஸ்பர்ட்டுகளைப் போடுகிறார்கள். பொருளாதாரம் என்றால் பொருளாதாரப் பேராசிரியர், பௌதீகம் என்றால் பௌதீகப் பேராசிரியர், கணிதம் என்றால் கணிதப் பேராசிரியர் ஆக இவர்களுக்குத்தான் அந்தந்த விவரம் தெரியும், நியாயம் தெரியும் என்று அரசாங்கம் எக்ஸ்பர்ட்களை அனுப்புகிறது. ஆனால் பரிதாபம், அவர்கள் அங்கே போய் மார்க் போடக் கூடாது. உட்கார்ந்து கொண்டிருக்கவேண்டும். என்ன மார்க் போடுகிறார்கள். யார் போடுகிறார்கள், சரியாகப் பதில் சொன்னார்களா, இவைகளைப் பற்றியெல்லாம் கேட்க அவர்களுக்கு உரிமை இல்லை. இப்படி எக்ஸ்பர்ட்டுகளை அனுப்பிவிட்டு அவர்களுக்கு மார்க் போட உரிமை இல்லையென்றால் இந்த அரசாங்கம் தலையிடுவதற்கே இந்த கொள்கையைப் பின்பற்றுகிறது. எனவேதான் . . .

திரு கு. காமாட்சி: ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்கார்ந்துகொண்டே பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கிறீர்களே.

திரு கு., காமாட்சி: ஆலடி அருணா பேசும்போது மார்க்குகளை பென்சிலால் போடுகிறார்கள் என்றார்கள் . . .

Dr. H. V. HANDE : Sir, for a long time I have been trying to catch your eye to raise a valid point of order......

Mr. DEPUTY SPEAKER : I have to decide whether the point of order is valid or not.

Dr. H. V. HANDE : The Hon. Chief Minister has made a categorical statement in this House that he is prepared to hold an enquiry with regard to Thiru P. U. Shanmugam, as a cause of action arising out of the speach of Thiru Aladi Aruna. But the point is that there is the 24th Report of the Estimates Committee and it would be necessary and would be in order only if the Hon. Chief Minister is prepared to hold the enquiry against Thiru P. U. Shanmugam on the basis o the renort of the Estimates Committee. This I

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1975 ஏப்ரல் 8

have been stating on the floor of this House many times. There are two parts. The first is with regard to Thiru Thandavarayan and the second part is with regard to Thiru Abdul Salam. I had mentioned in this House that contracts were given even after it was discovered that he had committed some mistake................

MR. DEPUTY SPEAKER : Be brief.

DR. H. V. HANDE : I would be very brief.

When I mentioned that, Thiru P. U. Shanmugam refuted it. Later on he came forward and said that he agreed with it. He said that what Dr. Hande had stated was correct but the contracts were given not by him. There are a number of facts mentioned in that report of the Estimates Committee. Therefore, I demand on the floor of this House on behalf of Anna D.M.K., that a Commissoin of Enquiry be held to find out all the lonpholes pointed out in the Report with regard to Thiru P. U. Shanmugam,

MR. DEPUTY SPEAKER : This is not a point of order.

DR. H. V. HANDE : I would like to get a categorical answer from the Hon, Chief Minister on the question I posed to him and he should not side-track the whole issue.

மாண்புமிகு திரு செ. மாதவன்: ஆலடி அருணா தெளிவாக ஒப்புக் கொண்டதை, டாக்டர் ஹாண்டே பின் வாங்குவதுபோல் இருக்கிறது. எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் உணவு இலாகாவைப்பற்றி பல்வேறு தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இங்கே எழுப்பப்பட்டிருக்கிற பிரச்சினை என்னவென்றால் ப. உ. சண்முகம் அவர்கள் சில தவறுகள் செய்திருக்கிறார்கள் என்கிறார்கள். தாண்டவராயன் டெண்டர் சம்பந்தப் பட்ட தவறு என்கிறார்கள். இந்தக் குறிப்பிட்ட குற்றச்சாட்டிற்கு விசாரணை வைத்தால் எல்லாம் தெளிவாகிவிடும் விசாரணை வையுங்கள் என்று சொன்னார்கள். வேறு எங்காவது தவறு நடந்து அதற்கு ப.உ. சண்முகம் பொறுப்பு என்றாலும் விசாரணை வைக்கவேண்டு மென்றால் குறிப்பிட்ட பிரச்சினை என்னவென்று சொல்லுங்கள். விசா ரணைக்குத் தயார். பொறுத்தமற்ற குற்றச் சாட்டுக்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்றுதான் சொல்லுகிறோம். இன்னும் பார்க்கப் போனால் அந்த காண்டிராக்டர் மேல் அரசாங்கமே வழக்குப் போட்டிருக் கிறது. நாங்களே வழக்குப் போட்டிருக்கிறோம். தாண்டவராயனோடு ப.உ. சண்முகம் சேர்ந்து தவறு செய்தாரா? இதுதான் கேள்வி. இதற்குத்தான் நீதி விசாரணைக்குத் தயார் என்கிறோம்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே: நான் சொல்லுவது எஸ்டிமேட்ஸ் கமிட்டியின்..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு வெள்ளைச்சாமியைப் பேசுமாறு அழைக்கிறேன்.



1975 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நீதி விசாரணைக்குத் தயார் என்று சொல்லியாகிவிட்டது. டாக்டர் ஹாண்டே அவர்கள் திசை திருப்ப வேண்டிய அவசியம் இல்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : டெர்ம்ஸ் ஆ∴ப் ரெ∴பரன்ஸ் என்ன? அதைத் தெளிவாகச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாங்கள் தெளிவாகச் சொல்லி யிருக்கிறோம். திட்டவட்டமாகச் சொல்லிவிட்டோம். நீங்கள் தான் எதைப்பற்றி விசாரணை வேண்டுமென்று தெளிவாகச் சொல்லவில்லை. டெர்ம்ஸ் ஆ∴ப் ரெ∴பரன்ஸ் எங்களைக் கேட்கக்கூடாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் சொல்லுவது என்னவென்றால்.....

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி: ** (திருவாளர்கள் முனு ஆதி, கோவை செழியன், செபமாலை, எல்லோரும் ஒரேநேரத்தில் பேச எழுந்தனர்.)

DR. H. V. HANDE : He has come in true colours.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாங்கள்தான் தெளிவாகச் சொல்லிவிட்டோமே. மறுபடி, மறுபடி எழுந்து நின்றால் எப்படி? தாண்டவராயனுக்குக் கொடுக்கப்பட்ட நெகோஷியேடட் டெண்டரில் ப உ. சண்முகம் சம்பந்தப்பட்டு தவறு இழைத்திருக்கிறாரா? அதன் பேரில் விசாரணைக்குத் தயார்.

[பல உறுப்பினர்கள் எழுந்தார்கள்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள், முதலில் எல்லோரும் உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கோபா வேசமாகவும் மிக்க ஆத்திரத்துடனும் கருத்துக்களை எடுத்து வைக்கிற பல எதிர்க் கட்சிக்காரர்கள் இங்கே இருக்கிறார்கள். நான் பேசுகிற போது பொறுமையாக இருந்தார்கள். திரு, மாதவன் பேசும்போது அவரை பூராவும் பேச விடாமல் குறுக்கிடுகிறார்கள்.

DR. H. V. HANDE : Sir, on a point of personal explanation I am very glad that the Hon. Chief Minister has raised this point.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1975 ஏப்ரல் 8

நான் கூற விரும்புவதெல்லாம், நான் பேசுகிற நேரத்திலே அமைச்சர்கள் எவ்வளவோ முறை குறுக்கிடுகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டை பலமுறை நான் இங்கே வைத்திருக்கிறேன். திரு. மாதவன் அவர்கள் பேசும்போது, நான் இடையிலே திசை திருப்பி விடுவதாகக் குறிப்பிட்டார்கள். நான் இங்கு பேசுவது எதற்காக என்றால், நீதி விசாரணை வேண்டுமென்று நாங்கள் ஏன் கேட்கிறோம் என்பது உலகத்திற்குத் தெரியட்டும் என்பதற்காகத்தான். (பல குறுக்கீடுகள்).

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் பேச எழுந்த போது அமைச்சர் ** என்று கூறியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படிச் சொன்னது சரியில்லை தான். சொன்ன முறையும் சரியில்லைதான். ஆனால் சில சந்தர்ப்பங்களில், சூழ் நிலையில் அப்படித்தான் சொல்லத் தோன்றும்.

(திருவாளர்கள் கோவை செழியன், சௌந்தர பாண்டியன், முனு ஆதி, பெ. சீனிவாசன் அனைவரும் ஒரே சமயத்தில் பேச எழுந்து நின்றனர், கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெள்ளைச்சாமியை பேச அழைக்கிறேன்.

(முற்பகல் 11-00)

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். நம்முடைய சட்ட மன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தாலும் அமைச்சர்களாக இருந்தாலும் அவரவர் இடத்திலே இருந்து பேசுவதுதான் முறையானது என்று விதி முறை இருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்கள் இடம் மாறி உட்கார்ந்து பேசுவது முறையானதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் இடம் மாறி பேசிய பேச்சை குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்திரவிடுகிறேன்.

திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச் சாமி : தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு நம்முடைய தமிழ் நாட்டில் மதுவிலக்குத் திட்டத்தை நம்முடைய அரசு செயல்படுத்தி மக்களுடைய நல்லாதரவைப் பெற்றதற்காக இந்த நேரத்தில் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1975 ஏப்ரல் 8] [திரு காதர் பாட்சா என்ற வெள்ளைசாமி]

மதுவிலக்குக்கொள்கை காந்தியடிகளின் கொள்கை. அந்தக்கொள்கையை காந்தியடிகளால் நீண்ட நாட்களாக நம்முடைய நாட்டுக்கு மதுவிலக்குத் திட்டம் வேண்டும் என்று சொல்லப்பட்ட அந்த விருப்பத்தை எந்த காங்கிரஸ் கட்சி ஆளும் மாநிலமும் நிறைவேற்றாத போது, நம்முடை மாநிலத்தில் சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறோம். அப்படிப்பட்ட இந்த அரசை உண்மையிலேயே மற்ற மாநிலத்தவர்களும் காந்தியடிகளுடைய கொள்கையை ஏற்றுக்கொண்ட தலைவர்களும் இன்றைய தினம் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆயத்தீர்வையை வசூலிக்கின்ற நேரத்தில் நம்முடைய அரசாங்கம் கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்பு மதுவிலக்கை ஒத்தி வைத்த நேரத்தில், முதல் முதலாக ஏலம் விட்டு, மதுக்கடைகளை ஏலம் எடுத்தவர்கள், சாராயக் கடை, கள்ளுக் கடைகளை நடத்த எந்த விதமான ஒப்பந்தமும் செய்யாததால் அந்த ஆண்டு உண்மையிலேயே கடை நடத்த முடியவில்லை. ஆனால் ஒரு நாள் கூட கடை நடத்தாதவர்களிடம் ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின் மூலம் ஏலத் தொகையை வசூல் செய்ய வருவாய்த் துறை அதிகாரிகள் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கோவை செழியன் அவர்களும் திரு. பெரியசாமி அவர்களும் பேசிக்கொண்டிருப்பது சபையின் நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருக்கிறது. தயவு செய்து உறுப்பினர்கள் தங்களுக்குள் பேசுவதைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி : மார்ச் மாதம் வரை அதை ஒத்தி வைத்திருந்தார்கள். ஏலம் எடுத்தும் ஒரு நாள் கூட அவர்கள் கடை நடத்தவில்லை. அப்படி கடை நடத்தாமல் இருந்த போதிலும் அவர்களிடமிருந்து 20,000 ரூபாய், 30,000 ரூபாய் என்று வசூல் செய்ய நடவடிக்கை எடுப்பதால் அவர்களுடைய பொருளாதார நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான் அந்த முதலாண்டு ஏலம் எடுத்து, கடை நடத்தாதவர்களுக்கு அந்தத் தொகையை வஜா செய்து கொடுக்க வேண்டுமென்று மெத்த பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அந்த வஜா செய்வதன் மூலம் ஜப்தி நடவடிக்கை எடுத்திருக்கிற வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு தகுந்த தாக்கீது அனுப்பி, அதை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மதுவிலக்குத் திட்டத்தில் காவல் துறையினர் இன்னும் சற்று கண்காணிப்பாக இருக்க வேண்டும். காவல் துறையின் ஒத்துழைப்புடன்தான் இந்த மதுவிலக்குத் திட்டத்தை சிறப்பாக நடத்த முடியும். இப்போது ஆங்காங்கு கள்ளச் சந்தையில் கள்ளச்சாராயம் விற்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ஆங்காங்கு இருக்கிற காவல் துறையினர் இதில் கண்காணிப்பாக இருந்து தகுந்த நடவடிக்கை எடுத்து, இந்த கள்ளச் சாராயம் விற்பனையை தடை செய்ய வேண்டும். பனை மரங்களி

லிருந்து கள்ளத் தனமாக கள் இறக்குபவர்களை எல்லாம் கண்காணித்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, தீவிரமாக இந்த மது விலக்குத் திட்டத்தை அமுல் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல நீதி மன்றங்களில் காவல் துறையினர் மதுவிலக்குத் திட்டத்தை செயல்படுத்துவது சம்பந்தமாக கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களு மற்றும் மதுவிலக்குக் குற்றங்களுக்காக வழக்குப் போடும்போது அரசாங்கம் நிர்ணயித்துள்ள அளவுக்கு தண்டனை வழங்காமல், அரசாங்கம் இந்த மதுவிலக்கு சட்டத்திற்காக ஏற்படுத்தியிருக்கிற தண்டனை முழுவதையும் கொடுக்காமல் மிகச் சுலபமாக 5 ரூபாய், 10 ரூபாய் என்று அபராதம் விதித்து தீர்ப்பளிக்கிறார்கள். அதனால் இந்தக் குற்றங்கள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகின்றன. ஆகவே, அரசாங்கம், இயற்றியிருக்கிற சட்டத்திற்கு உட்பட்டு தண்டனை முழுவதையும் குற்றவாளிகளுக்கு விதிக்க நீதிமன்றங்களுடன் நம்முடைய அரசு தொடர்பு கொண்டு, ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் துயர் தணிப்புத் திட்டம் மிகச் செம்மையாக நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. எந்தக் காலத்திலும் இயற்கை சீற்றங்களால் பெருமளவில் பாதிக்கப்படக் கூடியது எங்கள் மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டம்தான். முன்பு புயல், வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களால் இராமநாதபுரம் மாவட்டம் பெருமளவில் பாதிக்கப்பட்டது. இப்போது மழை இல்லாமல், வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம் என்ன பாவம் செய்ததோ தெரியவில்லை; எப்போதுமே இயற்கை சீற்றங்களால் பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஆண்டாண்டு தோறும் ஏதாவது ஒரு வகையில் பாதிக்கப்படுகிறது.

1956-ம் ஆண்டில் பெரும் புயல், வெள்ளம் வந்து பாதிக்கப்பட்டது. 1964-ம் ஆண்டு இராமேஸ்வரத்தில் பெரும் புயல் உருவாகி, கடுமையான பாதிப்பு ஏற்பட்டது. 1969-70-ல் மழை இல்லாமல் வறட்சியால் பாதிக்கப்பட்டது. இப்போது 1974-75 ஆம் ஆண்டில் மிகப்பெரும் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. 100 ஆண்டு காலத்தில் இப்படிப்பட்ட ஒரு வறட்சி நிலை ஏற்பட்டதில்லை என்ற அளவுக்கு மிகக் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் எந்தப் பக்கம் பார்த்தாலும் ஒரே தரிசாகக் கிடக்கிறது. லட்சோப லட்சம் மக்கள் அங்கிருந்து வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த நிலைமைகளை எல்லாம் நேரில் கண்டறிந்து, அந்த மாவட்ட மக்களுக்காக நல்லதொரு வேலை வாய்ப்புத் திட்டத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். மார்ச் மாதம் வரை ஏறத்தாழ 10 கோடி ரூபாய் அளவில் நல்ல பல வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். அதிகமாக பாதிக்கப்பட்ட இராமநாதபுரம் மக்களுக்கு அதிகம் நிதி ஒதுக்கி, வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்: ஆங்காங்கு குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தி, அங்கு இருக்கக்கூடிய மக்களுக்கு உணவுப் பொருட்கள்



வழங்கி, நல்ல முறையில் பல உதவிகளைச் செய்திருப்பதற்காக அந்த மாவட்ட மக்களின் சார்பாக இந்த அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மற்ற அமைச்சர் பெரு மக்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த அளவுக்கு மிகப் பாதிக்கப்பட்டிருக்கிற இராமநாதபுரம் மாவட்டத்திற்கு இந்தத் துயர் தணிப்பு திட்டத்தில் இன்னும் பல வேலைகளை எடுத்து, பல்வேறு வசதிகளைச் செய்ய வேண்டும். மார்ச் மாதம் வரை ஒதுக்கியிருந்த நிதி ஒதுக்கீடுகள் எல்லாம் தீர்ந்துவிட்டன. ஆனால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் எல்லாம், பாதி பாதியாக முடிவுற்றிருக்கின்றன. மேலும் நிதி தேவைப்படுவதால் அந்த வேலைகள் அப்படியே நிற்கின்றன. இந்த வேலைகள் பூரணமாக நிறைவேறினால் நல்ல பலன் கிடைக்கும். பொதுப் பணித் துறை கண்மாயாக இருந்தாலும், ஊராட்சி ஒன்றிய கண்மாய்களாக இருந்தாலும், ஊராட்சி உடைமையாக இருந்தாலும் மேற்கொள்ளப்பட்ட பணிகள் முழுமையாக முடிவடைந்தால்தான் நமக்கு எதிர் காலத்திலே நல்ல பலன் கிடைக்கும். இப்போது முழுமையாக முடிக்கப்படாமல் இருக்கிறது. அதற்குக் காரணம் நிதிப் பற்றாக்குறைதான். முழுவதுமாக வேலைகள் செய்யப்பட வேண்டியிருப்பதால் 1975-76 ஆம் ஆண்டு, இந்த நிதி ஒதுக்கீட்டில் மிக அதிகமான அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து அரைகுறையாக நிற்கும் வேலைகளை முடிக்க ஏற்பாடு செய்தால் இன்னும் அதிக மான அளவுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். கண்மாய்களை பூரணமாக மராமத்து செய்வதற்கும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதனால் இந்த பொதுப் பணித் துறையின் மூலம் ஏற்படுகிற வேலைகளை எல்லாம் நடப்பாண்டில் வேகமாகச் செய்ய, அதிகமாகப் பணியாளர்களை வேண்டுமானாலும் நியமனம் செய்து, விரைவில் முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிச் செய்யும்போது அங்கு வாழ்கிற விவசாயத் தொழிலாளர்களுக்கு, விவசாயம் செய்து வாழ்கிற மக்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும். இப்போது அங்கே இருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. கால்நடைகளுக்கு தீவனம் வாங்க முடியாத அளவுக்கு பொருளாதார நெருக்கடி இருக்கிறது. அதனால் விவசாயிகளாக இருக்கக்கூடியவர்களுக்கு அரசாங்கத்திடமிருந்து ஏதாவது தக்காவி கடன் போன்ற கடன்களை கொடுத்து, கால் நடைகளுக்கு தீவனம் வாங்க, நிலங்களை மராமத்து செய்து அபிவிருத்தி செய்து கொள்ள ஏற்பாடு செய்தால் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் ஓரளவு உயரும். ஆகவே, அரசாங்கத் துறையிலிருந்தாவது அல்லது கூட்டுறவுத் துறையின் மூலமாகவாவது விவசாய மக்களுக்குக் கடன் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வறட்சி நேரத்திலும் எங்காவது நீறுற்று இருந்தால் அந்த பகுதிகளில் விவசாயம் செய்து, உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள். இப்படி ஒரு சில இடங்களில் உணவுப் பொருள் உற்பத்தி செய்வதால்

அங்குள்ள மக்கள் ஓரளவு வசதியாக இருக்கிறார்கள். இப்படி ஒரு கிராமத்திற்கு அல்லது ஒரு ஊராட்சிக்கு ஒன்றிரண்டு இடங்களில்தான் நீறுற்றிருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் சமுதாயக் கிணறுகளை அதிக நிதி ஒதுக்கீடு செய்தாவது அவசியமாக வெட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனத் துறையில் பொதுப்பணித் துறை நம்பிக்கொண்டிருப்பது கால்வாய்கள், நீண்ட ஆறுகளைத்தான். இந்த நேரத்தில் ஆங்காங்கே கடலிலே போய் வீணாகி விடுகிற தண்ணீரை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள ஏதாவது திட்டங்களை வகுத்து செயல்பட வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் மலட்டாறு, கிருதமால் நதி போன்றவை இருக்கின்றன. இந்த வறட்சி நேரத்தில் அப்படிப்பட்ட ஆறுகளையும், கால்வாய்களையும் மராமத்து செய்து, அவைகளில் உள்ள தண்ணீர் வீணாகாமல் முழுவதையும் பயன்படுத்திக்கொள்ள ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க சம்பந்தப்பட்ட பொதுப்பணித் துறை பொறியாளர்களுக்குத் தகுந்த தாக்கீது அனுப்பி, வறட்சிப் பணிகளாகச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல கூட்டுறவுக் கடன், நில வள வங்கிக் கடன் போன்ற கடன்கள் எல்லாம் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மேலும் தாராளமாகக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போது கிடைக்கின்ற உதவியினால் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் கிணறுகள் வெட்டியிருக்கிறார்கள்.

இந்த அரசின் நல்லதொரு சலுகையாக முதலமைச்சர் அவர்கள் ஆயில் பம்புசெட்டு வைப்பவர்களுக்கு 1,000 ரூபாய் இனாம் என்று வழங்கி வருகிறார்கள். இத்தகைய சலுகைகளை இந்த நாட்டு மக்கள் இதுவரையில் கண்டதில்லை; இனி மேலும் காணப்போவதில்லை என்ற உறுதியை நிச்சயமாக விவசாயிகளாக உள்ள ஒவ்வொருவரும் எண்ணிப் பார்த்து, இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள். அந்த அளவுக்கு நல்ல நல்ல சலுகைகளை எல்லாம் இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. மேலும் மேலும் அரசு செய்யும் என்று விவசாயிகள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். நாமெல்லாம் நல்ல முறையில் பாதுகாக்கப்படுவோம் என்று அவர்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அரசும் தாமாகவே முன்வந்து அவர்களுக்குத் தொடர்ந்து பல்வேறு சலுகைகளைச் செய்ய வேண்டும். ஏனென்றால் மற்ற அமைப்புகளைப்போல், மற்ற தொழிலாளர்களைப்போல் விவசாயிகளுக்கு என்று கோரிக்கைகளை வைத்து வலியுறுத்திப் பெறுவதற்கு ஒரு சங்கம் இல்லை. மற்ற தொழிலாளர்களாக இருந்தால் போராட்டம் செய்வதற்கு என்று அவர்களுக்கு ஒரு சங்கம் இருக்கிறது.

இங்கே சாதாரண வெற்றிலை பாக்குக் கடைக்குக் கூட கூட்டமைப்பு இருக்கிறது. ஆனால் விவசாயிகளிடத்திலே அதுபோன்ற ஒரு கூட்டமைப்பு இல்லாத காரணத்தினால் அவர்கள் தங்களுடைய குறைகளை அவ்வப்போது



அரசாங்கத்திற்குக் கூட்டாக எடுத்துச்சொல்லி—தங்களுக்கு வேண்டிய நல்ல காரியங்களைச் செய்துகொள்ள முடியவில்லை. அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு இந்த அரசுதான்—அவர்கள் படுகிற கஷ்டத்தை உணர்ந்து ஆழ் கிணறுகளையும், நிரந்தரமான நீர்ப்பாசனத் திட்டங்களையும் உருவாக்கிக் கொடுத்து—அவர்களுக்கு வேண்டிய உரம், விதை, மாடு ஆகியவற்றுக்குக் கடன் உதவி அளித்து, அவர்களது வாழ்வை வளப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனது இராமநாதபுரம் மாவட்டம் இயற்கைச் சீற்றத்திற்கு ஆளாகி இருக்கிற காரணத்தினால் அங்கே நிரந்தரமான நீர்ப் பாசனத் திட்டத்திற்கு வழிவகை செய்தாக வேண்டும்.

நிலவள வங்கி மூலமாகக் கடன் கொடுக்கிறபோது தூரம் ஓர் இடையூறாக இருக்கிறது. ஒரு கிணற்றுக்கும் இன்னொரு கிணற்றுக்கும் இடையே 500 அடி இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஒரு குடும்பத்திற்கு உள்ள சொத்து 2 ஏக்கரை அண்ணன் தம்பி பகிர்ந்து கொண்டால் ஆளுக்கு ஒரு ஏக்கர் என்கிறபோது இருநூறு அடி, 150 அடிக்குள்ளாகவே இன்னொரு கிணறு எடுக்க வேண்டிய நிலை வருகிறது. தேவையான நீர் ஊற்று இருந்தால் அதுபோல கிணறு எடுக்க கடன் உதவி அளிக்க வேண்டும். ரிசர்வ் வங்கியின் தடை அதற்கு இருப்பதால் மாநில அரசே தன்னுடைய சொந்த ஆதாரங்களில் இருந்தாவது கடன் உதவி அளிக்க வேண்டும். முதல்வர் அவர்கள் தக்காவிக் கடனாக 5 கோடி அளிக்க முன்வந்திருப்பது பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். ஏற்கனவே கிணற்றின் ஊற்றுக்கள் துரிதமாக கீழே போய்க்கொண்டிருக்கின்றன. ஆகவே, கிணறுகளை துரிதமாக ஆழப்படுத்த அரசாங்கப் பணியாளர்களையாவது நியமித்து இந்தத் தொகையை துயர் தணிப்பு வேலையில் செலவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவுத் துறையில் கொடுக்கப்பட்ட கடன்களுக்கான தவணையை அரசு இந்த ஆண்டு தள்ளி வைத்திருக்கிறது. ஆனால் வட்டியை, வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வட்டி கட்டக் கூடிய நிலைமையில் கூட இல்லை. மிக மோசமான பொருளாதார நிலையில் இருப்பதால் வட்டியையும் சேர்த்து தள்ளி வைக்க அரசாங்கம் ஏதேனும் பெரு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வருகிற கார் காலத்தில் மழை பெய்தாலும் கூட விவசாயிகளினால் உடனடியாக விவசாயத்தைச் செய்ய முடியாது. நியாய விலைக் கடைகளின் மூலம் கோதுமையை வாங்கித்தான் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு விவசாய காலத்தில் விதை, உரம் போன்றவற்றை எல்லாம் கொடுத்து உதவ வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்திற்கு நிரந்தரமான பாசன வசதியை இந்தத் துயர் தணிப்பு திட்டங்களின் கீழேயே ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டு, என் உரையை முடித்துக் கொள்றேன், வணக்கம்.

*THIRU K. M. SUBRAMANIAM : Honourable Deputy Speaker, Sir, I congratulate the Government for having re-introduced prohibition. But unfortunately in this State the enforcement of the rules prohibiting drinking is not at all administered properly. There is severe abuse, why

severe abuse ,horrible abuse of enforcement of prohibition. The net result is that people have stopped drinking openly but they have not stopped, drinking in private at all. Those who have stopped totally may be 10 per cent. There lot of smuggling is going on; a bottle of beer costs Rs. 6.00 in Bangalore but it is being brought to Madras and sold at Rs. 12 per bottle. That is how smuggling is going on.

Similarly the sale of spirit, with which many alcoholic drinks are being manufactured, has increased. Such drinks have increased and Government is finding itself in a very difficult situation because many people have gone to Court and got orders. I know a case where a certain gentleman was making Rs. 18 lakhs a year on sale of spirit alone. His licence was suspended (unfortunately I cannot say his name since there could not be reflection on people not present here), but he got a writ and got the licence again. This sort of thing is going on.

Apart from this a police unit was formed for enforce ment, with a D.I.G., 20 gazetted officers and 35 inspectors and a lot of constables. Today it is still working. But what is the work they are doing, I am not able to follow. I think everybody knows, including Ministers, that there is severe abuse of these powers and nobody is there to control them. In 1971 elections, politicians had to depend on smugglers and hoarders and in 1976 elections, I think politicians may have to depend on illicit distillers and illicit liquor sellers for finance. What I say, is let this kind of thing be put an end to. I hope and trust that people indulging in such illicit liquor trade will be severely dealt with. I heard that one of the sentries in a police station was found drunk. If such things happen, what can we say about others?

Due to limited time available, leaving prohibition, I shall have to say something on a very important point, viz., pension, and that too about teachers' pension. All those who retired before 1971 whether he is higher elementary school teacher, High school teacher, B.A.,B.Ed. or M.A.,B.Ed. irrespective of qualification, the pension is Rs. 50 plus Rs. 10 totalling Rs. 60. Irrespective of the number of years of service he has put in ,this is what the teachers get, I mean, those who retired before 1971. The pension which a higher elementary teacher gets if he has retired before 1971 is Rs. 60, whereas if he has retired afterwards he gets Rs 75.

Similarly, the S.S.L.C. trained teacher gets Rs. 60 if he has retired before 1971 but Rs. 119 if he has retired after 1971. The position with regard to B.A.,B.Ts., M.A.,B.Ts. is Rs. 60 if retired before 1971 and Rs. 145 if retired after 1971. I hope and trust Government will consider this question and rectify the disparity. Even with regard to D.A. the pensioners only get half of what a serviceman gets. This disparity should have to be removed.





Similarly for N.G.O.s who retied before 1971 and those who retired after 1971, there is wide gap inpension. D.A. is to cover the extarsie in cost of living. Why should it be half for.

pensioners and full for those in service? The disparity should have to be removed. The old family system has gone. Previously pensioners could depend upon their sons. Now the sons depend on pensioners. That is how the change has come. This disparity has to be removed. I am told that Government is considering the various aspects of pension. I hope Government will do away with the disparity in D.A. for pensioners and those in service and both will get the same amount.

Sir, coming to the most important point about loans and grants to various institutions, they are given on the basis of certain rules framed long, long ago. So far as the present Constitution is concerned, and the Centre-State relation is concerned, there is a Finance Commission appointed every 5 years which decides the legitimate amounts to be paid to each State. But so far as the local bodies and the State Government are concerned, there is no such Finance Commission.

So far as the City of Madras is concerned, I have to say certain things. I have been a councillor for many years. When I entered the Corporation as a Councillor the revenue was then Rs. 3½ crores a year. In 1974–75, the revenue was Rs. 14 crores and this year it is being estimated at Rs. 18 crores. Who are paying this ? 50 per cent of the population are paying this. On this account the per capita incidence of Corporation tax per year is Rs. 100. It is not a small amount. Th isis only the Corporation Tax. Then there is the State tax.

The revenue of Rs. 500 crores is paid by five crores of people. That is another Rs. 100 per head. Then there is the Central tax and that is another 150 or 175 rupees. All put together the citizen of Madras has to pay Rs. 350 per year as tax and that is about Rs. 30 a month and one rupee per day. What is the reason? When the tax structure was framed in 1919 there was no sales tax. There was no excise duty. The Corporation or Municipalities had entirely to depend on property tax. Supposing I invest my money on shares and debentures I do not pay these taxes. But if I own a house, about 33 per cent of my income I have to pay as Corporation tax. Can there be a greater/larger anomoly? I request the Chief Minister and the Minister for Local Self-Government to consider seriously this tax structure of the City Corporation and see that this proposed new increase intaxation is not made at all. It is horrible increase on house property alone. My earnest request is they must increase the loans and grants to these local bodies. Or at least the Government would do well to defer this increase in property tax by two years. I know the Special Officer would immediately ask 'where am I to go for funds'. Well, funds are

[THIRU K. M. Subramaniam] [1975 ஏப்ரல் 8

with the Tamil Nadu Government. They must increase the grant by another Rs 5 or 6 crores and not impose this extra property tax, at least for two years to come. Thank you, Sir, for giving me the opportunity.

திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற பல்வேறு வகை மானியங்களை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

எடுத்த எடுப்பிலேயே, இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் நன்றியைக் கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் எதைப் பிரச்னையாக வைத்து, நாட்டிலேயுள்ள மக்களெல்லாம் தவறான முறையிலே புரிந்துகொள்ளக்கூடிய வகையிலே எது பிரச்சாரத்திற்காகப் பயன்பட்டு வந்ததோ அதையெல்லாம் போக்குகின்ற முறையில், இன்றையதினம் தன்னுடைய அமைச்சரவையிலே இருக்கிற ஒரு அமைச்சர் பேரிலே மனுநீதி என்று சொல்லப்படுகின்ற அளவிலே, குற்றம் இழைத்தவன் தன் மகனாயினும் கொல்லுவது என் கடன் என்று செய்த மனு நீதிச் சோழன் என்ற வகையிலே, நீதி விசாரணைக்காக ஆணையிடுகிறேன் என்று சொன்னார்களே, அதற்காக எல்லா கட்சிகளின் சார்பிலே நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம்.

இராமாயணக் கதையிலேகூடப் பார்க்கிறோம். தன்னுடைய துணைவியார் பத்தினியல்லவென்று ஒரு * * சொன்னான் என்றவுடனே..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * * என்று சொல்லாதீர்கள், அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். சலவைத் தொழிலாளி என்று சொல்லுங்கள்.

திரு. கே. எ. வகாப் : சலவைத் தொழிலாளி ஒருவர் சொன்னார் என்ற காரணத்திற்காக அக்கினிப் பிரவேசத்திற்குத் தயாராகி விட்ட அப்படிப்பட்ட கதைகள்தான் இந்த நேரத்திலே எனக்கு நினைவிற்கு வருகிறது.

இன்றையதினம் நான் நீதி விசாரணை வைக்கிறேன் என்று கூறி விட்ட பிறகு கூட, அதிலிருந்து நழுவுகின்ற வகையிலே என் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் இருக்கிறார்கள் என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம். எந்த நீதி விசாரணை வேண்டுமென்று இரண்டு மூன்று ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருந்தார்களோ அந்த நீதி விசாரணை வைப்பதாக உறுதிப்படுத்தி, அதை ஒரு அமைச்சருக்கு இரண்டு அமைச்சர் மாறி மாறி சொல்வதைப் பார்க்கின்றபொழுது போகிற போக்கிலே புழுதியை வாரி இறைப்பது போல், புழுதியை எழுப்பிவிட்டார்கள். புழுதியை எழுப்பியவுடன் மழை பெய்கிறது. மழை பெய்தால் எங்கே தாங்கள் அந்த சேற்றிலே உழன்றுவிடுவோம் என்றுதான் அவர்கள் பயப்படுகிறார்களென்ற அளவில் நாட்டிலேயிருக்கின்ற மக்கள் இன்றையதினம் சந்தேகிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1975 ஏப்ரல் 8]

THIRU P. SEENIVASAN : On a point of order, Sir, I don't think the Honourable Member has so much right to accuse A.D.M.K. Let him do his Bhajana, but not accuse us.

திரு. கே. எ. வகாப் : நான் பஜனை செய்யவில்லை. பஜனை செய்வது அவர்கள் பழக்கமாக இருக்கலாம். இன்றையதினம் நாட்டிலே இருக்கிற உண்மை நிலைமை என்ன? இன்றையதினம் எந்த ஊழல் புகார்களைச் சொல்கிறேன், சொல்கிறேன் என்று சொல்கிறார்களோ, அதற்கு விசாரணை வைத்து விட்டேன், வைத்து விட்டேன் என்று சொன்ன பிறகு கூட, இங்கே இருக்கிற நீதிபதி கூடாது, அங்கே உச்ச நீதி மன்ற நீதிபதி வேண்டுமென்று சொல்கிறார்களே, கேரளத்திலிருந்து நீதிபதி வரவேண்டுமென்று சொல்கிறார்களே? கேரளத்திலிருந்து நீதிபதி வரவேண்டுமென்று கேட்பதில் அவர்களுக்கு என்ன அக்கறையிருக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. நெருப்பிலே இறங்குவது என்று முடிவு செய்துவிட்டபிறகு, தமிழ் நாட்டு விறகில் எரிக்கக்கூடாது, இந்திராகாந்தி தோட்டத்து விறகிலேதான் எரிக்க வேண்டும், அல்லது கேரளாவிலிருந்து கொண்டு வருகிற விறகிலேதான் எரிக்கவேண்டுமென்று ஏன் சொல்லுகிறார்கள் என்பதை உலகம் உணர்ந்து கொள்ளவேண்டும். அடுத்தபடியாக, இங்கே இருந்து நீதிபதி கூடாது உலக நீதிமன்றத்திலேயிருந்து நீதிபதி வரவேண்டும், அவர் வந்தால் தான் நீதி கிடைக்கும் என்று இவர்கள் சொன்னால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

நான் நன்றி கூறுவது எதற்காகவென்றால், இன்றையதினம் எங்கள் மாவட்ட அமைச்சர் பேரிலே கூறப்படுகின்ற குற்றச்சாட்டுகளை எங்கள் மாவட்டத்திற்கு ஏற்பட்ட களங்கமாக நாங்கள் கருதுகிறோம். அந்தக் களங்கம் நீங்க நீங்கள் உத்தரவிட்டிருக்கிறீர்கள். அதை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். நீதி விசாரணையை மற்றக் கட்சித் தலைவர்களும் கேட்டார்கள். நீதி விசாரணை அமைக்கப்படும் என்று அறிவித்த போது மற்ற கட்சிக்காரர்களும் மற்றத் தலைவர்களும் இங்கே அமர்ந்திருந்தார்கள். ஆனால், அதை யாருமே வரவேற்றதாகத் தெரியவில்லை. அதில் என்ன மர்மமோ தெரியவில்லை. அதிலிருந்து எப்படி மர்மத்தைப் புரிந்து கொள்வது என்று தெரியவில்லை. பிரசாரத்திற்காகத்தான் நீங்கள் நீதி விசாரணை கேட்டீர்கள். மக்களை ஏமாற்ற, அந்த அடிப்படையிலே செய்யப்பட்டதுதான் அது. அதை மக்கள் புரிந்துகொண்டு விட்டதற்காக நன்றி சொல்ல ஆசைப்படுகிறேன்.

மதுவிலக்கை அமுல்படுத்தியதற்கு எங்களுடைய மனப்பூர்வமான ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறோம். அதே நேரத்திலே அண்மையிலே விளம்பரம் வருகிறது, மறுபடியும் மதுவிலக்கு ரத்து செய்யப்படும் என்பது போல். வெளியிலே விளம்பரம் செய்யப்படுகிறது. சினிமாக்களிலே விளம்பரம் செய்யப்படுகிறது. இன்றையதினம் ஹைகோர்ட்டிலே அளிக்கப்பட்ட உத்தரவின் காரணமாக, குடிப்பவர்கள் லைசென்ஸ் பெற செலுத்த வேண்டிய தொகை குறைக்கப்படும் என்று சொன்னதன் காரணமாக, இன்றையதினம் மதுவிலக்கை அமுல்படுத்துவதை ரத்து செய்வார்கள்....

[1975 ஏப்ரல் 8

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுதே சொல்லிவிடுகிறேன், அது ஒரு தவறான பிரச்சாரம். இப்பொழுது உயர்நீதி மன்றத்திலே வழங்கப்பட்டிருக்கிற தீர்ப்பு அரசு பெர்மிட் ஹோல்டர்ஸுக்கு ரூ. 500 என்கின்ற வகையிலே கட்டணம் நிர்ணயித்திருக்கிறது. ரூ. 500 அதிகம் என்று வழக்கு போட்டார்கள், அதைக் குறைக்க வேண்டுமென்ற வகையிலே உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. அவ்வளவே தவிர, மறுபடியும் மதுவிலக்கை ஒத்திவைப்பதற்கான எந்தச் சூழ்நிலையும் கிடையாது என்பதை நான் அழுத்தந்திருத்தமாக முஸ்லீம் லீக் கட்சி மகிழ்ச்சி கொள்கிற அளவிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

திரு. கே. ஏ. வகாப்: நிச்சயமாக அதிலே எங்களுக்கு நம்பிக்கையுண்டு..........

திரு. கோவை செழியன்: சார், அதைப்பற்றிய முடிவு.....

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: உறுப்பினர் பேசுகிறார், சீஃப் மினிஸ்டர் பதில் சொல்லியிருக்கிறார், நீங்கள் என்ன இடையிலே?

திரு. கோவை செழியன்: நாங்கள் பேசும்போது மாத்திரம் அவர்கள் கேட்கலாமா..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் பார்ட்டி லீடர் கேட்கலாமே, உங்களுக்கு அந்த ரைட் இல்லை.......

திரு. கோவை செழியன்: பார்ட்டி லீடர் 24 மணிநேரமும் அங்கேயே உட்கார்ந்துகொண்டிருக்கமுடியுமா? உயர்நீதி மன்றத்திலே 30 நாட்களுக்குள்ளாக அரசாங்கத்திடமிருந்து பதில் தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்களே, அரசாங்கம் அதைப்பற்றி முடிவு எடுத்துவிட்டதா? அப்படியென்றால் அந்த முடிவை இந்த மன்றத்திற்கு அறிவிப்பதிலே என்ன தவறு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உயர்நீதி மன்றத்தினுடைய தீர்ப்பை அமல்படுத்தவேண்டிய அவசியத்திலே அரசு இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். எவ்வளவு தொகை என்பது எல்லாம் அரசாங்கத்தினுடைய ஆணையாக அல்லது விதிமுறைகள் போடுகிறபோது தொகை நிர்ணயித்து வெளியிடப்படும்.

திரு. கே. ஏ. வகாப்: எங்களுக்கு நம்பிக்கையுண்டு நிச்சயமாக நீங்கள் இப்போது இருக்கிற நடைமுறையை மாற்றமாட்டீர்கள் என்று, ஆனால் வெளியிலே தவறான பிரச்சாரம் செய்யப்படுகிறது. தொகையைக் குறைக்கிறபோது டாக்டர்கள் சர்டிபிகேட் வாங்கி லைசென்ஸ் வாங்கவேண்டுமென்று சொல்கிறபோது அதிலே அதிகமான கட்டுப்பாடுகளைப்போட்டு உஷார் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளச் சாராயப் பிரச்சினை ஓரளவுக்குக் குறைந்திருக்கிறது என்றாலும் கூட இன்னும் பரிபூரணமாக ஒழிக்கப்படவில்லை, அதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும். வெட்டுத் தீர்மானம்கூட நான் இதைப்பற்றிக் கொடுத்



1975 ஏப்ரல் 8] [திரு. கே. ஏ. வகாப்]

இருக்கிறேன், ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் சர்வகட்சி ஊரார் கமிட்டி ஒன்று வைக்கலாம். அதனால் இன்னொரு நன்மைகூட இருக்கிறது, சில நேரங்களிலே போலீஸ்காரர்களே குடிக்கிறார்கள் அந்தப் பழக்கத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள், இந்தக் கமிட்டி இருந்தால் அப்படிப்பட்ட தவறுகள் ஏற்படுவதைத் தடுக்கலாம், ஆகவே அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேர்தல்களைப் பற்றியும் பேசவேண்டியவர்களாக இருக்கிறோம், திடீரென்று தேர்தல் வருகிறது, தேர்தல் வருகிறது என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள், ஆனால் அந்த நிலைமை போய் இந்தக் காலத்திலே தேர்தல் வருமா என்று அச்சப்படக்கூடிய சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். இந்தியத் துணைக் கண்டத்திலே பிரதம அமைச்சராக இருக்கிற அம்மையார் அவர்கள் ஆட்கொள்ளக்கூடிய அபாயம் இருக்கிறது என்று எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் அச்சப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. தேர்தல் கமிஷன் அவர்களுடைய கைப்பாவையாக இருக்கக்கூடிய நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம்.

சில மாதங்களுக்கு முன்னாலே வீடுகளுக்குச் சென்று கணக்கெடுத்து தேர்தல் வரப்போகிறது என்ற சூழ்நிலையை சொன்னார்கள், டெல்லியிலிருந்து அப்படிப்பட்ட நிலைமை வந்திருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு தேர்தல் நடத்தப்படுமா என்பதே சந்தேகமாக இருக்கிறது. அதற்குக் காரணம் வடக்கே இருக்கிற மாநிலங்களிலே அவர்களுக்கு செல்வாக்கு குறைந்து வருவதால் அப்படி முடிவு செய்திருக்கலாம்.

இந்த நாட்டினுடைய எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அங்கே இருக்கிற பிரதமர் ஜோஸியத்தின் அடிப்படையிலேதான் செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. தேர்தல் நடத்தவேண்டுமா ஜோஸியத்தைப் பார்த்துத் தான் முடிவு செய்கிறார்கள், எல்லாமே ஜோஸியம் பார்த்துத்தான் முடிவு செய்கிறார்கள், தேர்தல் நடத்தவேண்டுமா வேண்டாமா—நடத்தவேண்டாம் என்று முடிவு செய்தது ஜோஸியம் பார்த்துத்தான் என்று அந்த ஜோஸியரே சொல்லி இருக்கிறார். இப்படி இந்த நாட்டிலே ஜோஸியத்தின் அடிப்படையிலேதான் எல்லாம் போய்க்கொண்டிருக்கிறது என்று அச்சப்படவேண்டியிருக்கிறது.

தேர்தல் காலத்திலே பலவிதமான சட்டங்களைப் பயன்படுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது, மீஸா என்ற சட்டம் இருக்கிறது, டி. ஐ. ஆர். சட்டம் இருக்கிறது, இதையெல்லாம் வைத்துக்கொண்டு எதிர்க் கட்சிகளை அடக்குகின்ற முயற்சியிலே மத்திய அரசாங்கம் இறங்கியிருக்கிறது. அதை உடனடியாக நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்தாவுல்லா புகாரி என்பவர் மதத்தினுடைய தலைவர், அவர் 400, 500 ஆண்டுகளாக உள்ள ஜும்மா மசூதியின் இமாமாக இருந்தவர், அந்த உரிமையைப் பறிக்கவேண்டுமென்ற முறையிலே கள்ளக்கடத்தல் காரர்களைப் பிடிக்க வைத்திருக்கின்ற சட்டத்தைப் பயன்படுத்தி ஒரு மார்க்க தலைவரை அடக்கப் பார்க்கிறார்கள். இப்படிப்பட்ட சட்டங்களையெல்லாம் தேர்தல் காலங்களில் வாபஸ் பெறவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுச் சொல்கிறேன்.

அடுத்து எம். பி.க்கள், எம். எல். ஏ.க்கள் தேர்தலுக்கு வாக்காளர்களின் வயதைக் குறைக்கவேண்டுமென்று முடிவு செய்து மத்திய அரசின் செலக்ட் கமிட்டியில் அந்தச் சட்டம் இருப்பதாக அறிகிறோம். இப்போது இருக்கிற வயது இருந்தால்தான் நல்லமுறையிலே இருக்கும். இன்னும் நம்முடைய நாட்டிலே பொருளாதார வளர்ச்சி, கல்வி வளர்ச்சி ஏற்பட்டபிறகு வேண்டுமானால் அதைப்பற்றி யோசிக்கலாம், இப்போது இருக்கிற வயது அளவே நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் போட்டியிடவேண்டுமென்றால் அவர்களுக்கு குறைந்தபட்ச தகுதிகள் பற்றி விதிமுறைகள் வைக்கவேண்டும். குறைந்தபட்சம் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களாக இருந்தால்தான் எம்.எல்.ஏ. தேர்தலிலே போட்டியிடமுடியும், அதேபோன்று நகராட்சிகள் தேர்தலுக்கு குறைந்தபட்சம் 8-வது வகுப்புவரை படித்து இருக்கவேண்டுமென்று கொண்டுவரவேண்டும்.

**THIRU K. M. SUBRAMANIAM :** I am raising a point of order. These are subjects to be dealt with in the Lok Sabha and not here. Apart from the point of order, I may tell my friend that if it is confined to educated people, corruption will go up and it will not go down.

திரு. கே. எ. வகாப்: படித்தவர்கள் தவறு செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அது அவர்களுடைய கட்சியின் கருத்தாக இருக்கலாம்.

**MR. DEPUTY SPEAKER :** The Honourable Member wants to deal with elections. He wants to use our recommendatory powers to the Central Government.

**THIRU P. SEENIVASAN :** Why don't you expunge all those words—if educated peolpe come to polities, it will be more corruptive?

**MR. DEPUTY SPEAKER :** Corruption may go up. That is what he says.

**THIRU P. SEENIVASAN :** In what way?

திரு. கே. எ. வகாப்: அது அவர்களுடைய கட்சிக் கருத்தாக இருக்கலாம். நான் என்னுடைய கட்சியின் கருத்தைச் சொல்கிறேன். இதைச் செய்வதற்கு மத்திய அரசுதான் ஏற்பாடு செய்யவேண்டுமென்று இருந்தாலும் இதைப் பற்றி மத்திய அரசுக்கு நாம் சிபாரிசு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற முற்படுகிறேன். குறிப்பாக, மதுவிலக்கு இப்போது அமுலில் இருக்கிறது, இருந்தாலும்



நாட்டிலே கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களும் கள்ளச்சாராயம் குடிப்பவர்களும் அதிகரித்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்குச் சரியான முறையிலே அரசு கண்காணிப்புச் செய்து கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களுக்கு கள்ளச்சாராயம் குடிப்பவர்களுக்கு அதிகமாகத் தண்டனை கொடுக்கக்கூடிய முறையிலே சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். 500 ரூபாய் கொடுத்தால்தான் லைசென்ஸ் கொடுக்கப்படும் என்ற நிலைமை நீதிமன்றத்திலே இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தாலும்கூட நாம் சுப்ரீம்கோர்ட்டிலே அதை எடுத்துச் சென்று ஸ்டே வாங்கியிருக்கலாம், அப்படி வாங்கினால் அதிகமாக குடிப்பவர்களின் எண்ணிக்கையை குறைக்க முடியும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறபோது தேர்தல் செலவுகளை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவேண்டும். குறிப்பாக, தேர்தல் காலங்களில் உறுப்பினர்களுக்கு அதிகமாக செலவுகள் ஏற்படுகின்றன. அந்தச் செலவுகளை தேர்தலில் நிற்கிறவர்களுக்கு எல்லாம் கொடுக்கவேண்டுமென்று வைத்தால் ஒரு தொகுதியிலே 50 பேர்கள் நிற்கக்கூடிய நிலைமை வரும், அப்படி ஆசைப்படுவார்கள், ஆகவே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்காவது அந்தச் செலவுகளைக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

தேர்தல் காலங்களில் பொது இடங்களில் கூட்டம் போடுவதற்கு ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குத்தான் அனுமதி கொடுக்கிறார்கள், எதிர்க் கட்சிக்காரர்களுக்கு கொடுப்பதில்லை. ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்த இடங்களுக்கு முறையாக மனுக்கள் கொடுக்காமல் இருந்தால்கூட எதிர்க்கட்சிக்காரர்கள் அந்த இடங்களைக் கேட்டிருந்தால் ஆளுங் கட்சிக்குக் கொடுக்கவேண்டுமென்ற ஒரே காரணத்தால் அந்த இடங்கள் எதிர்க் கட்சிக் காரர்களுக்கு மறுக்கப்படுகின்றன. இந்த நிலைமையை மாற்றி எதிர்க்கட்சிக் காரர்களுக்கும் அந்த இடங்களைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிக்கு வந்தால் முறையாக நிகழ்ச்சி நிரல் தெரிவித்தால் அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் வருகிறபோது தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கக் கூடிய நிலைமை ஏற்படும்.

குறிப்பாக இரண்டு நாட்களுக்கு முன்பு நமது பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்திருந்தார்கள். ஆனால் அன்று—ஞாயிற்றுக்கிழமையன்று—நான் ஊரில்தான் இருந்தேன். எனக்கு அமைச்சர் வந்திருந்தது தெரியாது. ஆனால் ஒன்றியச் செயலாளர்களும், இப்படிப்பட்டவர்களும் இவர்கள் வருவதை எப்படித் தெரிந்து கொள்கிறார்களோ தெரியவில்லை. அவர்கள் தெரிந்து செல்கிறார்கள். ஆனால், முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள்

அங்கு போய் அமைச்சரிடம் தொகுதி நிலைமை பற்றி எடுத்துக்கூற முடியாத அவல நிலை இருக்கிறது. இந்த நிலையை மாற்ற வேண்டும். ஏனென்றால் எந்தக் கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் அவர்களுக்கு அந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றபடி நகராட்சி, மாநகராட்சித் தேர்தல்களையெல்லாம் குறிப்பிட்ட காலத்தில் நடத்தாமல் தள்ளிப் போட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஏனென்றால் தேர்தல் வந்தால் இந்த அரசாங்கத்திற்குப் பயமாக இருக்கிறதோ என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பிட்ட காலத்தில் தேர்தல்கள் நடக்கட்டும், அந்த நேரங்களில் யார் ஆட்சிக்கு வந்தாலும் பரவாயில்லை என்ற நல்லெண்ணத்தோடு அந்தத் தேர்தல்களை முறையாக நடத்த வேண்டும். வர இருக்கின்ற ஊராட்சி மன்றத் தேர்தலைக்கூடத் தள்ளிப் போடக்கூடிய அவல நிலை இருக்கிறதோ என்று ஐயப்படுகிறேன். அப்படியில்லாமல் ஊராட்சி மன்றத் தேர்தல்களை முறைப்படி அந்த மாதங்களில் நடத்த இந்த அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்திலேயே ஓரிரு பகுதிகள்தான் இன்றையதினம் நல்ல நிலைமையில் இருக்கின்றன. மற்றப் பகுதிகளெல்லாம் கடும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு மோசமான நிலையில் இருக்கின்றன. ஆண்டிப்பட்டி பகுதியிலும், குஜிலியம்பாறை பகுதியிலும் மிகுந்த வறட்சியாக இருக்கிறது. அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை. அவர்கள் குடிதண்ணீருக்குக்கூட மிகவும் கஷ்டப்படும் சூழ்நிலை இருக்கிறது. குடிநீர்ப் பிரச்சினைகள் இன்றைக்கு ஒன்றியங்களின் மூலமா தீர்க்கப்படும் என்று கூறிக்கொண்டிருக்கிறோம். ஆனால் ஒன்றியங்கள் குடிதண்ணீர் கிணறுகளை ஆழப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டால் அங்கேயுள்ள ஏ.ஈ. அல்லது டி.டி.ஓ., இப்படிப்பட்டவர்கள் வந்து ப்ரீ-மெஷர்மெண்டு எடுத்த பிறகுதான் செய்ய வேண்டியிருக்கிறது. அப்படித்தான் சென்ற மாதம் ஒரு ஏ.ஈ. யைப் போட்டிருக்கிறார்கள். அவர் 10 நாட்கள்தான் அங்கு வந்து வேலை செய்கிறார்கள்.

இந்த வறட்சிக் காலத்தில் உதவிப் பொறியாளர்களை நியமித்து அவர்கள் வந்தால்தான் ஆழப்படுத்தும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த நேரங்களில் ஆங்காங்குள்ள ஒன்றியங்களுக்கு, அந்த அதிகாரங்களைக் கொடுத்து அங்குள்ள யூனியன் எஞ்சினியர்களைக் கொண்டே, ப்ரீ-மெஷர்மெண்ட் எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மற்றபடி மதுரை மாவட்டத்தில் வத்தலகுண்டு கணவாய்ப்பட்டி ஆகிய பகுதிகளை வறட்சிப் பகுதிகளில் சேர்க்கவில்லை. அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வேலைவாய்ப்பின்றி திண்டாடும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மதுரை மாவட்டத்தில் வத்தலகுண்டு, கணவாய்பட்டி ஆகிய இப்படிப்பட்ட பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





படித்தவர்கள் வேலையில்லாமல் இங்கு மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். பி.ஏ., எம்.ஏ., படித்த பட்டதாரிகளெல்லாம் வேலையில்லாமல் அலைந்து கொண்டிருக்கின்ற அவல நிலை இருக்கிறது. ஆகவே, இளைஞர் அணி என்ற முறையில் ஒருசிலருக்கு வேலைவாய்ப்பு கொடுத்தாலும்கூட அதனால் எந்தவிதமான முன்னேற்றமும் படித்தவர்கள் மத்தியில் பெருமளவிற்கு ஏற்படவில்லை. ஆகவே, படித்தவர்களுக்கு நிரந்தரமான வேலைகளை ஏற்படுத்த இந்த அரசு முன் வர வேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியங்களை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

பணமழை பொழிந்து கொண்டிருந்த மதுவிலக்கு சம்பந்தப்பட்ட கொள்கையில் நம்முடைய முதல்வரவர்கள் நிமிர்ந்து நின்று, எப்படியும் பணம் சம்பாதிக்கலாம் என்ற இழிநிலையைவிட இப்படித்தான் அரசு இருக்க வேண்டும், நாம் நடக்க வேண்டுமென்ற கொள்கையில் உறுதி கொண்டவராக அந்த கொள்கையில் இருந்ததை இந்தியா பூராவும் உள்ளவர்கள் பாராட்டினார்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது. இப்படிப்பட்ட கொள்கையில் தீவிரமாக இருக்கிறார்கள், திறமையைக் காட்டுகிறார்கள் என்பதை இங்கிருக்கின்றவர்கள் காழ்ப்புணர்ச்சிக் காரணமாக சிலர் தூற்றினாலும், அகில இந்தியா பூராவுமே இந்தக் கொள்கையை, முதல்வரவர்களின் முடிவை எப்படியெல்லாம் வரவேற்றார்கள் என்பதைப் பார்த்துக் கொண்டிருந்தோம். அப்படி அவர்களுடைய முடிவை நாடு வரவேற்கிறது என்று சொல்லும் நேரத்தில் இதிலே ஏற்றத்தாழ்வுகள் கூடாது, இருப்பவன் குடிக்கிறான், இல்லாதவன் அதைப் பார்த்து ஏங்குகிறான் என்ற நிலையை மாற்றி, இருப்பவனும் வாங்கிக் குடிக்கக் கூடாது என்ற இலட்சிய முடிவை நம்முடைய அரசு எடுக்கும் என்று கருதுகிறேன். தீவிரமான முடிவுகளை எடுப்பதில் பழக்கப்பட்டவர் நம்முடைய முதல்வர், அவர் இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று தங்கள் மூலமாகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளுக்கடைகளை ஒழித்த காரணத்தால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் பாட்டாளிகள், தொழிலாளர்கள் 40,000 பேர் சங்கடப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசு அவர்களுக்கு உதவி வழங்கவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதற்கு மேலாக, அவர்களுக்கு மானியம் வழங்கி மரம் ஏறும் தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கையில் நல்லபடியாக வாழ்வதற்கு அவர்களுக்கு மாற்று வழி காட்ட வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கடப்பாக்கம் பகுதியில் ஏறத்தாழ 40,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசு மானியம் வழங்கியிருக்கிறது. ஆனால் அது போதாது என்று தெரிவித்துக் கொண்டு

[திரு. வை. பாலசுந்தரம்] [1975 ஏப்ரல் 8

அவர்களுக்கு பனை வெல்லம் காய்ச்சும் தொழிற்சாலையை உருவாக்கி, அந்தத் தொழிற்சாலைக்கு அந்த மரம் ஏறும் தொழிலாளர்களைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்குள்ள வறட்சிப் பிரச்னையில் முதல்வரவர்கள் நாட்டம் கொண்டு எப்படியெல்லாம் பணியாற்றுகிறார்கள், எப்படியெல்லாம் பணிகளைத் தொடருகிறார்கள் என்று நினைக்கும்பொழுது நம்முடைய முதல்வரவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. யார், எத்தகைய சொற்களைச் சொன்னாலும் பரவாயில்லை, மக்களுக்குச் சேவை செய்வதே கடமை என்று அதில் கண் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டினாலும், எங்களுக்கு மானம் தான் பெரியது என்று கருதி, தமிழர்களின் தன்மானத்தைப் பாதுகாக்க, தமிழர்களின் தன்மானத்தை நிலை நிறுத்த தமிழக மக்களிடமிருந்து நிதி சேர்க்கிறார்கள். நான் பார்க்கிறேன், அதிலேகூட தவறு காண்கிறார்கள். அதனால்தான் நம்முடைய முதல்வரவர்கள் செய்யும் காரியம், ஒரு ரூபாயாக இருந்தாலும் அதைக்கூடப் பத்திரிகையிலே வெளியிடுகிறார்கள். இதைப் பார்த்த பிறகு கூட களங்கம் கற்பிக்கிறார்கள், ஊழல் ஊழல் என்று சொல்கிறார்கள்.... எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

எனக்கு முன் பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஆலடி அருணா அவர்கள் இங்கே ஊழல் ஊழல் என்று சொல்லி இந்த அரசின்மீது களங்கம் கற்பித்தார்கள். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் பேசியிருப்பதை நான் குறிப்பேட்டிலே பார்த்தேன். ஊழல் ஊழல் என்று பத்திரிகைகள் விஷமப் பிரச்சாரம் செய்கிறது, ஊழல் ஊழல் என்று பேசி வருவதால் ஊழல் ஆகிவிடாது, நாமெல்லாம் கோயபல்ஸ் இறந்து விட்டான் என்று நினைத்துக்கொண்டிருந்தோம், அவன் இப்பொழுது அவதாரம் செய்திருப்பதைப் பார்க்கிறேன் என்ற கருத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தலைவரவர்களே, தங்கள் மூலம் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், கோயபல்ஸ் எப்பொழுது அவதாரம் எடுத்தான் என்று. சொல்லும்பொழுது குற்றச்சாட்டுகள் இருந்தால் சொல்லுங்கள், ஆனால் நீங்கள் தூய்மையானவர்களா என்று மனச்சாட்சியைத் தொட்டுப் பாருங்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது, திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையின்மீது குற்றச்சாட்டுகளைச் சொல்லுகிறீர்களே, ஆளுங்கட்சியாக இவர்கள் இருப்பதால் குற்றச்சாட்டுகளைச் சொல்வது என்றால், எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் தங்கள் கணக்கை மறைக்கலாம், ஊழல் செய்யலாம் என்று அர்த்தம் அல்ல.

ஆலடி அருணா அவர்களைக் கேட்கிறேன், தங்கள் தலைவர் மதிப்பிற்குரிய எம். ஜி. ஆர். அவர்கள் 1967ஆம் ஆண்டிலே சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அப்பொழுது சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் கணக்குக் காட்ட வேண்டுமென்று அவை முடிவெடுத்தது. அதன் பிரகாரம் 1967ஆம் ஆண்டிலேயிருந்து 1969 ஆம் ஆண்டு வரையில் உங்களுடைய தலைவர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள்



1975 ஏப்ரல் 8] [திரு. வை. பாலசுந்தரம்]

கணக்குக் கொடுத்தார். 1969ஆம் ஆண்டிலிருந்து 1974, 1975–ஆண்டு வரையில் கணக்குக் காட்டாததன் மர்மம் என்ன? ஊழலிலே சிக்கி வருகிறார்களா, ஊழலிலே உழன்று கொண்டிருக்கிறார்களா? முதலிலே உங்களுடைய தலைவரைத் திருத்துங்கள். உங்கள் மீது ஊழலை வைத்துக் கொண்டு, ஊழலிலே உழன்று கொண்டு மற்றவர்களைப் பார்த்து ஊழல் ஊழல் என்று சொல்லும் காரணத்தால் மக்கள் மன்றம் தீர்ப்பாக ஏற்றுக் கொள்ளாது என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. குழ. செல்லையா : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல முறை இந்த மன்றத்தில் இதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். கணக்குக் காட்டவில்லை என்று சொல்லுகிறார்கள். இந்த மன்றத்தில் பேசுகிறபோது ஒரு அமைச்சர் அவர்கள் "எனக்கு வீடு கிடையாது, கார் இல்லை" என்றெல்லாம் சொல்லியிருக்கிறார். உண்மைக்கு மாறாக ஏமாற்றுகிற கணக்கைக் காட்டுவதைவிட கணக்குக் காட்டாமலே இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்லியது வரை பதில் சொல்லுங்கள். இன்னொரு பிரச்சனைக்குப் போக வேண்டாம். நம்முடைய அவையில் பாயின்ட் ஆப் ஆர்டர் படுகிற பாடு இருக்கிறதே, அதைப் பற்றி ஒன்றும் சொல்ல முடியவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. செல்லையா அவர்கள் "ஏமாற்றுகிற கணக்கைக் காட்டுவதைவிட காட்டாமலே இருக்கலாம்" என்று சொன்னார்கள். அதனுடைய அர்த்தம் என்ன?

திரு. குழ. செல்லையா : ஒரு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படிச் சொல்லுகிறார்கள். எங்களுடைய புரட்சித் தலைவருடைய கணக்கு இன்கம்டாக்ஸ் கோர்ட்டில் இருக்கிறது. அது முடிந்து வருகிற வரையில் கணக்கைக் கொடுக்க முடியாது. உறுப்பினர் அவர்கள் தவறான தகவல்களையே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. பெ. சீனிவாசன் : நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எம். ஜி. ஆர். ஏன் சட்டசபைக்கு வரவில்லை என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். அவர் சட்டசபைக்கு வரவில்லை. இருந்தாலும் நாள்தோறும் முதலமைச்சர் அவர்களோ, அவருடைய சீடகோடிகளோ அவரைப்பற்றி ஏன் இப்படி ஜபம் செய்கிறார்கள் என்று புரியவில்லை.

திரு. சி. ஆறுமுகம் : இன்று நாடே வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும்போது சட்டமன்றத்திற்கு அவர் வரவேண்டாமா?

திரு. பெ. சீனிவாசன் : அவர் ஏன் அனாவசியமாக எழுந்திருக்க வேண்டும். அவரை எப்படி நீங்கள் அலவ் பண்ணுகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சீனிவாசன் அவர்களும், திரு. குழ. செல்லையா அவர்களும் எப்படி எழுந்து பேசினார்களோ அதே முறையில்தான் ஆறுமுகம் எழுந்து பேசுகிறார். (குறுக்கீடு) மாற்றி மாற்றி பதில் சொல்லிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் எப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லுங்கள்.

திரு. பெ. சீனிவாசன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.....எப்படி பாயின்ட் ஆப் ஆர்டரின் கீழ்க் கொண்டு வருவது என்று யோசிக்கிறேன். இந்த வறட்சி நிலைமையின்போது எங்கள் கட்சித் தலைவர் சட்டசபைக்கு வரவில்லை என்று சொல்லுகிறார்கள். அவர்கள் வறட்சி நிவாரண நிதிக்காகப் பணம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. இராம அரங்கண்ணல் : கணக்கு பற்றி இங்கே பேசப்பட்டது. ஒரு படத்திற்கு எவ்வளவு பணம் வாங்குகிறார் என்பதை அவருடைய தலைவர் சொல்லுவாரா? வெள்ளைக் கணக்கில் செழியன் அவர்கள் பட்டத்தை விற்கத் தயாராக இருக்கிறாரா?

திரு. பெ. சீனிவாசன் : திரு. அரங்கண்ணல் எவ்வளவு சம்பாதிக்கிறார் என்ற கணக்கை, ஒழுங்காக வெள்ளைக் கணக்கைத் தர முடியுமா? திருவள்ளுவர் படத்தைக் காட்டுகிறார், திருக்குறளை முதலிலே சொல்லுகிறார். அவர் ஈட்டிய மொத்த வருமானத்தை வெளிப்படையாகச் சொல்ல முடியுமா?

திரு. இராம அரங்கண்ணல் : நான் அந்தச் சவாலை ஏற்றுக் கொள்ளுகிறேன். கணக்கு இருக்கிறது.

திரு. பெ. சீனிவாசன் : முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும், உங்களுக்கும் தெரியும், எங்களுக்கும் தெரியும். ஏன் நாட்டை ஏமாற்றுகிறீர்கள்?

திரு. கோவை செழியன் : நான் மட்டும் அவரை வைத்துப் படம் எடுக்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படம் எடுத்தார்கள். அவரைப் பார்ட்னராகச் சேர்த்துப் படம் எடுத்தார்கள். அவர்கள் சேர்ந்து தவறு செய்ததாகச் சொல்லட்டும். நீங்களே மேகலா பிக்சர்சில் பார்ட்னராக இருந்திருக்கிறீர்கள்....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுதான் சொல்லுகிறேன்—இன்னொருவரை நோக்கி ஒரு விரலைக் காட்டும்போது தன்னை நோக்கி மூன்று விரல்கள் இருப்பதை மறந்து விடக்கூடாது.

திரு. கோவை செழியன் : நான் முடிச்சை அவிழ்க்க வேண்டுமென்று சொல்லுகிறேன். அவர்கள் கத்தியால் அறுக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முடிச்சவிழ்ப்பது உங்கள் வேலை. எங்களுக்குத் தெரியாது.





திரு. வை. பாலசுந்தரம் : உங்களைப் பற்றிக் கூறும்போது எவ்வளவு கோபம் வருகிறது உங்களுக்கு ? அதே போல் எங்களைப் பற்றி, எங்கள் தலைவர்களைப் பற்றி, அமைச்சர்களைப் பற்றிப் பேசும்போது நாங்கள் மட்டும் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டுமா ? நான் கேட்ட கேள்விக்குப் பதில் வரவில்லை. 1967–69 வரை அவர் கணக்குக் கொடுத்திருக்கிறார். மன சாட்சியோடு சொல்லட்டும் அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பாலசுந்தரம் அவர்கள் ஒரு கணக்கைக் கேட்டால் அவரவர்கள் ஒவ்வொரு கணக்கைப் பற்றி விமர்சிக்கக் கூடிய நிலைமை உண்டாகும்.

திரு. வை. பாலசுந்தரம் : நான் இதைப் படித்தால் நேரம் ஜாஸ்தியாகும். அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் இதைக் கையில் வைத்துக் கொண்டு—இப்போது வேண்டாம், ராத்திரி படுக்கப் போகும்போது சிந்தித்துப் பார்த்துத் தீர்ப்புக் கூறட்டும். உங்கள் மடியில் கனத்தை வைத்துக் கொண்டு பிறரைக் குற்றம் சாட்டுகிறீர்களே என்பதுதான் என்னுடைய கேள்வியாகும்.

நம்முடைய முதல்வர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்வதெல்லாம் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் தயவுசெய்து அச்சம் கொள்ளாதீர்கள். நாட்டு மக்கள் தெளிவடைந்து வருகிறார்கள். யார் இந்த நாட்டைக் கெடுக்கிற குள்ள நரிகள் என்பதற்குத் திட்டவட்டமாகத் தீர்ப்புக்கு தயாராக இருக்கிறார்கள்— 1977-ல்—1976-ல். தேர்தலைப் பற்றிப் பல ஆரூடங்கள் வருகிற காரணத்தால் 1977, 78 என்று எனக்கும் பேச்சுத் தடுமாறுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நாட்டு மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். இந்த மன்றம் மட்டும் தீர்ப்பாக இருந்து விடாது என்பதைத் தங்கள் மூலமாக முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டு மக்கள் “ஊழல் ஊழல்” என்று சொல்லுகிறவர்களுடைய உண்மையான தன்மைகளை அலசி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். 1967-க்கு முன்னால் எப்படி இருந்தார்கள், இப்போது எப்படி இருக்கிறார்கள் என்பதை எல்லாம் தெரிந்திருக்கிறார்கள். அதைப் பற்றி முதல்வர் அவர்கள் கவலை கொள்ளாமல் எதிர்காலத்திலே மிகத் தீவிரமான நாலரைக் கோடி தமிழ் மக்களை வழி நடத்திச் செல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமக்கு இந்தச் சட்டமன்றமே சாசுவதமா என்றால் இல்லை. நான் இந்த உறுப்பினர்களைச் சொல்லவில்லை. இந்தக் கோட்டையே நமக்குச் சொந்தம் இல்லை. இந்தக் கோட்டையிலே இருப்பதற்குக்கூட ஒரு ரூபாய் வாடகை கொடுக்கிறோம் என்று கேள்விப்பட்டேன். நான் கேட்டுக்கொள்வதெல்லாம் மத்திய சர்க்கார் ஆதிக்கத்தில் இருக்கும் இந்தக் கோட்டையையும், கோட்டையைச் சுற்றியிருக்கும் பகுதிகளையும் சட்டமன்றத்தின் ஆட்சிக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. வை. பாலசுந்தரம்] [1975 ஏப்ரல் 8

நாட்டிலே இருக்கும் இன்றைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், நாட்டில் இருக்கும் நாலரைக் கோடி மக்களை வழி நடத்திச் செல்லவும் இன்றைக்கு இருக்கும் முதல்வர் அவர்களால்தான் முடியும் என்ற திட்டவட்டமான நம்பிக்கையை நாட்டு மக்கள் கொண்டிருக்கிறார்கள் என்று கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. என். கே. பழனிசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, ஒன்றரை மாதத்திற்கு முன்பு இருந்த வறட்சி நிலைமையை விட இன்று மூன்று மடங்கு, நான்கு மடங்கு கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. மக்கள் சொல்லொணாத் துன்பம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். முன்பாவது பக்கத்தில் குடிதண்ணீருக்கு வழி இல்லையென்று சொன்னால் பாசனக் கிணற்றில் போய்த் தண்ணீர் கொண்டு வந்தார்கள். இப்போது ஊர் களில் மைல் கணக்காகச் சென்றாலும் ஒரு குடம் தண்ணீர் கூடக் கிடைக்க முடியாத அளவுக்கு நெருக்கடியான நிலைமை இருக்கிறது. ஏற்கெனவே வெட்டப்பட்ட கிணறுகளைத் தொடர்ந்து வெட்டிக் கொண்டே இருந்தாலும் சிலவற்றிலேதான் தண்ணீர் கிடைக்கிறதே தவிர போதுமான அளவுக்குக் குடிதண்ணீர் வசதி இல்லை. ஏற்கெனவே ஒவ்வொரு யூனியனிலும் 50, 60 கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் இருந்தது. இப்போது 150, 200 கிணறுகளில் தண்ணீர் இல்லாத நிலைமை இருக்கிறது. சர்க்கார் அந்த அளவுக்கு இன்றையதினம் கிணறுகளை ஆழப் படுத்த வேண்டிய நிலைமையில் இருக்கிறது.

குளங்கள், குட்டைகள் தூர் எடுப்பதற்கு $1\frac{1}{4}$ ரூபாய், $2\frac{1}{2}$ ரூபாய் தான் கூலி கிடைக்கிறது. பக்கத்தில் இருக்கும் மண்ணை வெட்ட ரொம்பக் கடினமாக இருக்கிறது. கூலியும் கட்டுவது இல்லை. வேலையும் முடிவதில்லை. மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கூட வறட்சிப் பகுதியில் கூலியைத் தானியமாகக் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். அதை அவசியம் செய்யவேண்டும்.

(நண்பகல் 12-00)

சர்க்கார் ஏன் அவர்களின்மீது போட்ட கேஸ்களை வாபஸ் வாங்கக் கூடாது என்று கேட்கிறேன். பஞ்ச நிவாரண வேலைகள் என்று எடுத்துக் கொண்டால், லிங்க் ரோடுகளாக இருந்தாலும் சரி அல்லது பள்ளிக் கட்டடங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணமாக இருந்தாலும் சரி, அல்லது வாட்டர் சப்ளைக்காக ஒதுக்கப்பட்ட பணமாக இருந்தாலும் சரி ஒதுக்கப்பட்ட மானியம் பூராவையும் நிறுத்திவிட்டார்கள் சென்ற ஆண்டு. மத்திய சர்க்கார் கொடுக்கக்கூடிய பணம் ஆறரைக் கோடி ரூபாய் அதையும் இதையும் சேர்த்து பஞ்ச நிவாரண வேலைகளை மேற்கொள்ள வேண்டும்.

எனக்கு ஒரு சந்தேகம். சர்சார்ஜை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் வருடாவருடம் சர்க்கார் மாச்சிங் கிரான்ட் கொடுக்க வேண்டும். 374 யூனியன்களுக்கும் கிட்ட தட்ட போன ஆண்டு பத்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டும் பத்து கோடி [illegible] போன ஆண்டு நிறுத்திய வேலைகள் இந்த ஆண்டு செய்யப்படுமோ?



1975 ஏப்ரல் 8] (திரு. என். கே. பழனிசாமி)

மேற்கொண்டு கிரான்ட்ஸ் கொடுக்கப்படுமா என்பது தெளிவாக இல்லை. சவுத் வெஸ்ட் மான்ஸூன் வந்துவிட்டால் இந்தப் பிரச்னை தீர்ந்துவிடு மென்று கருத வேண்டாம். இருபது இஞ்ச் மழை பெய்தாலும் தீராது, அந்த அளவிற்கு வறட்சி நிலை இருக்கிறது.

இந்தப் பணிகளை அக்டோபர் மாதம் வரை நீடித்தால்தான் ஓரள விற்கு ஜனங்களுக்கு நிவாரணம் கிடைக்கும். குட்டை வேலைகள், ரோடு வேலைகள் தீர்ந்திருக்கலாம். ஆனால் அக்டோபர் வரை என்ன வேலை? எனவே புதுத் திட்டங்களைத் தயாரித்து கிராம மக்களுக்கு என்னென்ன விதத்தில் புதிதாக வேலைகள் கொடுக்கமுடியுமோ அந்த அளவிற்கு வேலைகள் கொடுக்கவேண்டும். இப்போது ஆறு கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

கோவையை எடுத்துக்கொண்டால் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக் கிறது. ஆனால் ஒன்றரை மாதத்திலேயே ஒரு கோடிக்கு மேல் செல வாகிவிட்டது. எங்கள் பஞ்சாயத்து யூனியனுக்கு நான்கு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இரண்டு லட்சம் அளவிற்கு பணம் கொடுத்தாகிவிட்டது. சர்க்கார் போட்ட திட்டப்படி 55 கோடி ரூபாய் என்று சொல்வதுதான் கரெக்ட். அந்த அளவிற்கு இருந்தால்தான் பஞ்ச நிவாரண வேலைகளை தொடர்ந்து நடத்தமுடியும். இதற்காக முதல் அமைச்சர் அவர்கள் ஒரு பண்ட் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இரண்டு கோடி ரூபாய் வசூல் செய்து பஞ்ச நிவாரண வேலைகளைத் தீர்க்கமுடியாது.

சுப்பிரமணியம் வரும்போது ஜனங்களின் பிரதிநிதிகளைப் பார்த்து கேவலமான முறையில் சொல்வது தப்பு. பொறுப்புள்ள மந்திரி கணக்கு பார்த்துத்தான் பணம் கொடுப்பேன் என்று சொல்வது சரியல்ல. அவர்கள் நேரடியாக வந்து கொடுக்கமுடியாது. அதற்குள்ள மெஷினரி சர்க்கார்தான். ஆகவே இந்தச் சர்க்கார் மூலமாகத்தான் உணவு மற்ற வைகளைக் கொடுக்க முடியும் மக்களுக்கு. இந்த மாதிரியான சிக்கலில் இங்கு மாட்டிக்கொண்டு முழித்ததைப் பார்க்கிறோம்.

இதை நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அப்படியே விட்டுவிட்டு கோடிக்கணக்கான மக்கள் பஞ்சத்தால் கஷ்டப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து நிவாரண வேலைகளைச் செய்ய வேண்டும். ப்ளானுக்குள் இருந்து பணம் கொடுத்தாலும் சரி அல்லது ப்ளானுக்கு வெளியே இருந்து பணம் கொடுத்தாலும் சரி ப்ளானுக்கு உள் இருந்து பணத்தைக் கொடுத்தால் ஏன் நாம் வாங்கக் கூடாது?. ஆகவே, மாநில சர்க்கார் மத்திய சர்க்கார் என்று பார்க்காமல் உடனடியாக அந்தப் பணத்தைப் பெற்று பஞ்ச நிவாரண வேலைகளைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த வறட்சி வருகிறது.

(திரு. என். கே. பழனிசாமி) [1975 ஏப்ரல் 8

மாநில சுயாட்சி, ஆன்டி மலையாளி ஸ்டான்ட், ஆன்டி சென்டர் இந்த மூன்று கொள்கைகளும் மக்களுக்கு நல்லதல்ல; மக்களுக்கு இதனால் ஒருவித பிரயோஜனமும் இல்லை.

கோவையில் இருந்து எங்கள் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கேரளாவிற்கு ஒரு டெலிகேஷனை அனுப்பினோம். தண்ணீர் கொடுக்க முடியுமா என்பதைப்பற்றி. எல்லாக் கட்சித் தலைவர்களையும் அவர்கள் சந்தித்தார்கள். சிறுவாணி வாட்டர் இருபதினாயிரம் காலன் தண்ணீர் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்கள். இதுவரை இரண்டாயிரம் காலன்தான் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இரண்டு சர்க்கார்களும் கலந்து நல்லதொரு முடிவை எடுக்கவேண்டும். நான்கு மூட்டை கிடைத்தால் ஒரு மூட்டை கொடுப்பது என்பதை ஒத்துக்கொண்டு இரண்டு மாநில சர்க்கார்களும் ஒரு ஒப்பந்தத்திற்கு வருமேயானால் இராமநாதபுரம் ஜில்லா தண்ணீர் வசதி பெறமுடியும்.

புன்னம்புழா—பாண்டியாறு திட்டத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போது கோவை ஜில்லாவிற்குத் தண்ணீர் கிடைக்க வழி ஏற்படும்.

அடுத்தபடியாக, மதுவிலக்கு. மதுவிலக்கு பற்றி மொட்டையாக இருக்கிறது. இது எப்படி அமல் செய்யப்படுகிறது என்பதைப் பற்றி விளக்கவே இல்லை. அந்த ரிப்போர்ட்டையும் இதில் சேர்த்திருந்தால் நன்றாகயிருந்திருக்கும். மதுவிலக்கு ஸஸ்பென்ட் செய்யப்பட்டபோது என்ன நிலை இருந்ததோ அதே நிலைதான் இன்றும் இருக்கிறது. முன்னால் என்ன சட்டம் இருந்ததோ அதே சட்டம்தான் இப்போதும் இருக்கிறது.

சென்னையை எடுத்துக்கொண்டால் 19 சப் மாஜிஸ்ட்ரேட்ஸ் கோர்ட்டுகள் இருக்கின்றன. அதில் 15-ல் இந்த ப்ரொஹிபிஷன் கேஸ்கள்தான் வருகின்றன. 1971-ல் நிலைமை என்ன இருந்ததோ, இரண்டு நாட்களில் சுமார் 500, அதே நிலைமைதான் இன்றும் இருக்கிறது. குடிக்கிறவர்கள் ஜாஸ்தியாகி இருக்கிறார்கள். இது சர்க்காருக்கும் தெரியும். சமீபத்தில் 70 காலன் சாராயம் பிடிக்கப்பட்டது. போலீஸோடு முட்டி மோதியதால் அதைப் பிடித்தார்கள், இல்லாவிட்டால் அதையும் செய்திருக்க மாட்டார்கள். இப்போது எக்ஸைஸ் டிப்பார்ட்மெண்டும் சேர்ந்திருக்கிறது. முன்பு ரெகுலர் போலீஸ் மாமூல் வாங்கிக் கொண்டிருந்தது. இப்போது இவர்களோடு போட்டி, இரண்டு பேர்களுக்கும் மோதல் வந்துவிட்டது. மாமூல் போகவில்லை என்றால் ரெகுலர் போலீஸ் போய் பிடிப்பது.

இப்போது நிலைமை என்னவென்றால் சாராயம் காய்ச்சக் கூடியவர்கள் இரண்டு பேர்களுக்கும் மாமூல் கொடுக்கும் நிலை வந்துவிட்டது. இப்போது எட்டு ப்ருவரிஸ் இருக்கின்றன. மதுவிலக்கு அமல் செய்யப்பட்டால் இதற்கு ஏன் அனுமதி கொடுக்கவேண்டும்? இண்டஸ்ட்ரியல் பர்பஸ்க்காக வெளியே அனுப்புவதற்கு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் அதில் உற்பத்தியாவதில் இருந்து ஏராளமாக கள்ளச்சாராயம் விற்பனையாவது எல்லோருக்கும் தெரியும்.



1975 ஏப்ரல் 8] [திரு. என். கே. பழனிசாமி]

இந்தியன் மேட்.' பாரின் லிக்கருக்கு பெர்மிட் கொடுத்தார்கள். கோடிக் கணக்கான ரூபாய் அளவிற்கு வாங்கி வைத்தார்கள். மதுவிலக்கை அமலுக்குக் கொண்டு வந்தவுடன் அந்தக் கடைகள் பூராவையும் நிறுத்தி விட்டார்கள். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னதுபோல் வர வேண்டிய எக்ஸைஸ் வரி வரவில்லை. அதற்காக அட்டாச் செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். எக்ஸைஸ் வரி கட்டவேண்டியவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவில்லை. சாராயம் காய்ச்சி ஏலம் எடுத்து பணம் கட்டவேண்டியவர்கள் கட்டவில்லை. அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை. லட்சக்கணக்கில் சம்பாதிக்கும் இவர்கள் மீது ஏன் நடவடிக் வடிக்கை எடுக்கக்கூடாது? இவர்களிடம் இருந்து ஏன் வசூல் செய்யக் கூடாது என்று கேட்கிறேன்.

பின், ஹைகோர்ட்டில் இருந்து ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது, ரூ. 500 போட்டதுபற்றி. அவர்கள் கோர்ட்டுக்கு சென்று ரூ. 500 என்ற கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப் பற்றி நான் ஏற்கெனவே இந்த சபையில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இப்போது தீர்ப்பு வந்திருக்கிறது. இந்த பெர்மிட் ஸிஸ்டமே ஒரு லஞ்சம். குடிக்கக்கூடாது என்று சொன்னால் இந்த பெர்மிட்டை ரத்து செய்ய வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, பர்மிட் கூட கொடுக்கக்கூடாது என்று இந்த நிலை ஏற்கெனவே சுப்ரீம் கோர்ட் வரையில் சென்று நோயின் காரணமாக பர்மிட்டுகள் வழங்கப் பட வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு இருக்கிறது...

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, ஆகவே 50 ரூபாய்க்கு பர்மிட் கொடுத்தால் லட்சக்கணக்கான பேர்கள் வாங்க ஆரம்பிப்பார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, என்ன சந்தேகம் இதில் ஏற்படுகிறதென்றால் இப்படி தீர்ப்பு வந்த பிறகு பத்திரிகையில் வந்த செய்தி 50 ரூபாய் கொடுத்து லைசன்ஸ் வாங்கி எந்தக் கடையில் வேண்டுமானாலும் வாங்கலாம், ப்ரொஹிபிஷன் ரத்து பண்ணக்கூடிய நிலை இருக்கிறது என்று வந்தது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் முதலில் பதில் சொல்லும்போது திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இங்கே இல்லை. திரு. வகாப் அவர்கள் பேசும்போது கேட்டார்கள். இவ்வாறு பிரச்சாரம் நடைபெறுகிறது என்றார்கள். அது தவறு, இங்கே மதுவிலக்கு மீண்டும் நடைமுறைபடுத்தப்பட்டிருப்பது எந்த முறையிலும் பின் வாங்க வில்லை என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அவர்கள் எழுப்பிய விவகாரம் பர்மிட் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்பது. அது எவ்வளவு என்பதைப் பற்றி யோசித்து அரசு தனியாக அறிக்கை வெளியிடும் என்று கூறியிருக்கிறேன்.

அவர்களுக்குக் கூட்டுறவு ஸ்டோர் மூலமாக தரப்படும். சில இடங்களில் தனியார் கடைகள் இருப்பதாகச் சொன்னார்கள். கூட்டுறவு சொஸைடிக்கு ஃபர்ஸ்ட் பிரிஃப்பரன்ஸ் தரப்படுகிறது. கடைகளுக்கும் பர்மிட் தரப்படுகிறது. இந்த மதுவகையருக்கள் விற்கிற கடைகளை ஏலத்தில் விடலாமா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிஷந்தான், சீக்கிரம் முடியுங்கள்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே 50 ரூபாய் என்று சொன்னால் டாக்டர் சர்டிபிகேட்டை எப்படி இருந்தாலும் வாங்கிக் கொண்டு பர்மிட் வாங்கிக் கொள்ளலாம். இது நேச்சுரலாக, ப்ரோஹிபிஷனை எடுத்த மாதிரி ஆகிவிடும், லட்சக்கணக்கான பேர்கள் பர்மிட் வாங்கிக்கொள்வார்கள். ஏற்கெனவே நாம் ப்ரொஹிபிஷனை இம்ப்ளிமெண்ட் பண்ண முடியவில்லை, நடத்த முடியவில்லை. சில பேர்களுக்குச் சௌகரியம் செய்வதற்காக இதைச் சட்ட பூர்வமாகச் செய்வது நல்லதல்ல என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஆ. கு. சுப்பையா: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியங்கள் மீது அந்த மானியங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த இயற்கைச் சீற்றங்களுக்கு 20 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது உண்மையில் போதுமானதல்ல. இன்றையதினம் நடைமுறையில் நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சியின் விளைவாக ஏற்பட்டிருக்கிற நெருக்கடியை நாம் பார்க்கிற போது 20 கோடி ரூபாய் மிக மிகக் குறைவாக இருந்து கொண்டிருக்கிறது. இன்றையதினம் வறட்சி நிவாரண வேலைகள் வெகு வேகமாக, துரிதமாக மற்றவர்களால் பாராட்டப்படக்கூடிய முறையில் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். இம்மாதிரி செய்யக் கூடிய வேலைகளைத் தொடர்ந்து நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு ஒரு பெரிய குற்றச்சாட்டை சொன்னார்கள். மத்திய அரசுக்கு நாம் எவ்வளவு ரூபாய் செலவு செய்யவேண்டுமென்ற மதிப்பீட்டைத் தயார் செய்து நம்முடைய அரசு கொடுக்க வில்லை, கொடுத்திருந்தால் கேட்ட தொகையை அனுப்பியிருப்போம் என்று மத்திய அரசினுடைய நிதி அமைச்சர் சொன்னதாக இங்கு குறிப்பிட்டார்கள். இது எந்த அளவிற்குச் சரி என்பதை நமது முதலமைச்சரவர்கள் சபைக்கு தெரியப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சி சம்பந்தமாக உத்திரவுகள் எல்லா அலுவலகங்களுக்கும் முறையாக அனுப்பப்படவில்லையென்று தெரிகிறது என்று என் தொகுதியிலிருந்து வரக்கூடிய செய்திகள் காட்டுகின்றன, வரி வஜா, கிஸ்தி வஜா சர்க்கார் கொடுக்கிற கடன்கள், இவைகளை வசூலிக்க வேண்டாமென்ற, உத்திரவுகளை கீழேயிருக்கிற அதிகாரிகளுக்கு உடனடியாக அனுப்பியாக





வேண்டும். இல்லையென்றால் கீழே இருக்கிற அதிகாரிகள், கிராம அதிகாரிகள், தாசில்தார்கள் போன்றவர்கள் கடன்களைக் கொடுத்துத்தான் ஆக வேண்டுமென்று கேட்கிற போது அது பெரிய நிர்ப்பந்தமாக தெரிகிறது அதுமட்டுமல்லாமல் மற்றவர்கள் இதைக் காரணம் வைத்து கிளர்ச்சிக்கு ஆயத்தம் பண்ணக்கூடிய நிலையை ஏற்படுத்துகிறார்கள். ஆகவே உத்திரவுகள் மேலிருந்து கீழேயுள்ள சகல பேர்களுக்கும் எந்தக் கிராமங்களில் வறட்சி ஏற்பட்டிருக்கிறதென்று அறிவித்திருக்கிறோமோ அந்தக் கிராமங்களுடைய அதிகாரிகளுக்கும் உத்திரவுகளைக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் ஓய்வூதியமாக இன்றையதினம் 20 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இது குறைவான தொகையாகும். நாதியற்றவர்கள் குடும்பத்திற்கு வாரிசு இல்லாதவர்களாகிய இவர்களுக்கு அரசாங்கம்தான் வாரிசாக இருந்துகொண்டிருக்கிறது. முதலமைச்சரவர்களே வாரிசு என்று சொல்லலாம். இவர்களுக்கு ஊதியம் மாதம் 20 ரூபாய் என்று சொன்னால் இந்த ரூபாயை வைத்துக்கொண்டு எப்படி ஜீவனம் செய்ய முடியும் என்பதை யோசனை செய்து பார்க்கவேண்டும். 50 ரூபாய் அளவில் கொடுத்தாலும் நியாயமாக இருக்குமென்று சொல்ல முடியாது. அதைக் குறைந்தப் பட்சமாக கொடுக்கலாம். இது 200, 300 பேர்களுக்குமேல் கிடைக்கவில்லை. இதற்காக ஒதுக்கப்படுகிற ஒரு கோடி ரூபாய் குறைந்த தொகையாகும். ஒருவர் இறந்த பிறகுதான் மற்றொருவருக்கு இந்த ஊதியத்திற்குச் சிபாரிசு செய்வோம் என்று தாசில்தாரோ, ஆர். டி. ஓவோ சொல்கிறார்கள். ஒருவர் இறந்த பிறகுதான் மற்றொருவருக்கு ஓய்வூதியம் என்று சொல்வது நியாயமில்லை. வயதானவர்கள், வாரிசு இல்லாத இவர்களுக்கு அரசாங்கம் வாரிசாக இருந்து இந்த ஓய்வூதியத்தைக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டும். அதிகத் தொகை இதற்காக ஒதுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அரசாங்கத்திலிருந்து கடன் வழங்கப்படுகிறது. இப்படி கடன் கொடுப்பதெல்லாம் சொத்துடையவர்களுக்குத்தான் கொடுக்கிறார்கள். சொத்துள்ளவர்கள், அதிகச் செல்வாக்கு உள்ளவர்கள், பெரிய மனிதர்கள் இவர்கள் அரசாங்கத்தில் ஒதுக்கியுள்ள கடன்களில் 70 சதவீதத்திற்கு மேல் பெற்று விடுகிறார்கள். சாதாரணமானவர்களுக்கு இந்தக் கடன் கிடைப்பதில்லை. அப்படி கிடைத்தாலும் கடன் வாங்கக்கூடிய காலம் அதிகமாகிறது. மேலும் இதிலே செலவு செய்யக்கூடிய தொகையைப் பார்த்தால் கஷ்டமாக இருக்கிறது. 200 ரூபாய் ஒருவர் கடன் கேட்டால் 100 ரூபாய் அவர் செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது.

கடன் கொடுக்கக்கூடிய சட்டத்தின் விதிகளை மாற்றியமைக்க வேண்டும். சுலபமாக கடன் கிடைக்க வழி வகைகளைச் செய்யவேண்டும். நம் நாட்டில் படிக்காதவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். கைரேகை வைக்கக்கூடியவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்குக் கடன் கொடுப்பது கஷ்டம் என்று சொல்லுகிறார்கள். அம்மாதிரியாக இருக்கக்கூடியவர்கள் கடன் வாங்காத நிலை ஏற்படுகிறது. அதையும் அரசாங்கம் கவனித்து ஆவன செய்யவேண்டும்.

நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு பொங்கல், தீபாவளி பண்டிகைகளுக்காக அல்லது அவர்கள் தம் மகன், மகள் திருமணங்களுக்காக கடன் வேண்டுமென்றால் கொடுக்க வழிகாணவேண்டும். அவர்களுக்குத் திருப்பி பணத்தைச் செலுத்துவதற்குத் தகுதி இல்லாதுபோனாலும் குறைந்தபட்சம் 200 ரூபாய், 300 ரூபாய் வரையிலும் கடன் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம். அப்படி செய்தால் லட்சக்கணக்கான ஏழை குடும்பங்களுக்கு அரசாங்கம் கடன் கொடுத்து உதவி செய்யக் கூடிய நிலை ஏற்படும். அப்படி அவர்களுக்குக் கொடுத்த கடனை திருப்பி எப்படி வசூல் பண்ணுவது, எந்த முறையில் திருப்பி வாங்குவது என்பதை அரசாங்கம் ஆலோசித்து இம்மாதிரி உள்ள ஏழைகளுக்குக் கடன் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் மதுவிலக்கு அமுலுக்கு வந்திருக்கிறது. மதுவிலக்கு நீண்ட ஆராய்ச்சிக்குப் பிறகு அமுலில் வந்திருக்கிறது. ஏற்கெனவே மதுவிலக்கு இருந்தபோது இதில் மிகப் பெரிய தோல்வி ஏற்பட்டு எங்கு பார்த்தாலும் குடிசைத் தொழிலாக அமைத்து அருந்துகிறார்கள் என்று சொல்லி எல்லா கட்சிகளும் சேர்ந்து மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் ரத்து செய்யப் பட்டு மீண்டும் இப்போது மதுவிலக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. நடைமுறையில் பார்த்தால் எல்லா கிராமங்களிலேயுமே சாராயம் காய்ச்சுகிற நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு, இந்தியாவில் இருக்கக்கூடிய எல்லா மாநிலங்களிலும் கட்டாய மதுவிலக்கைக் கொண்டு வந்தாலொழிய வேறு வழி இல்லை. இல்லையென்றால் நம் மாநிலத்தில் மட்டும் மதுவிலக்கை வைத்துக்கொண்டு குறை சொல்லிக்கொண்டிருக்கிற நிலைதான் ஏற்படும். பாண்டிச்சேரி தமிழ் நாட்டோடு ஒன்றாகக் கலந்திருக்கிறது. ஒரு கிராமம் பாண்டிச்சேரி என்றால் இன்னொரு கிராமம் தமிழ்நாடாக இருக்கிறது. அங்கே குடிக்கலாம், இங்கே குடிக்கக்கூடாது என்று சொல்கிற தத்துவம் நியாயமாக இல்லை. இந்தியா முழுவதிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கண்டிப்பாக இந்திய அரசை அணுகி மதுவிலக்கை இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் கொண்டு வருவதன் மூலம்தான் காந்தியின் கொள்கையை நிறைவேற்ற முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இறுதியாக, அமைச்சர்கள் சம்பந்தமாக இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்வது தவறு என்று சொல்கிறார்கள். மக்களுடைய பிரதிநிதிகள் அவர்கள். மக்களுடைய குறைகளை கேட்டறியக்கூடிய நிலையை உருவாக்கிக்கொள்வது நல்லது. ஒரு காலத்தில் மக்களுக்கு அமைச்சர்கள் யார் என்று தெரியாத நிலை இருந்தது. இன்றையதினம் அமைச்சர்கள் நிறைய சுற்றுப்பிரயாணம் செய்ய வேண்டும் என்பது என்னுடைய வாதமாகும். ஒரு மாவட்டத்தை 4 பகுதிகளாக பிரித்து அமைச்சர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் கண்டிப்பாக சுற்றுப்பிரயாணம் செய்தாக வேண்டும். அங்கேயிருக்கிற மக்களின் குறைகளைக் கேட்கவேண்டும். அவர்களைச் சந்திக்க ஒரு குறிப்பிட்ட மணி நேரத்தை ஒதுக்கவேண்டும். அப்போதுதான் மக்கள் தங்கள் குறைகளைத் தாராளமாக



தைரியமாகச் சொல்வார்கள். அப்படிச் சொல்வதன் மூலம், அமைச்சர்கள் எதெது நியாயமானது என்று கண்டு, எவைகளைச் செய்து முடிக்க முடியுமோ அவைகளுக்கு உத்தரவு இட முடியும். உடனடியாக மக்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யமுடியும்.

அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் மேற்கொள்வதால் கோடிக்கணக்கில் செலவு செய்து விடுகிறார்கள் என்று சொல்கிற வாதமெல்லாம் நியாயமல்ல, வேண்டுமானால் வாதத்திற்காகப் பேசிக் கொண்டிருக்கலாம். ஆனால் அது நடைமுறைக்குப் பொருத்தமில்லாத வாதமாகும். அமைச்சர்கள் புயல் வேகத்தில் மாவட்ட முழுவதும் பிரயாணம் செய்கிறார்கள், இதனால் பொதுமக்களைச் சந்திப்பதற்கு சாத்தியப்படாமல் போய்விடுகிறது. ஆகவே, அமைச்சர்கள் பொதுமக்களைச் சந்திப்பதற்கு, மக்கள் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கு காலங்களை முறைப்படுத்தி, சந்தித்து குறைகளை கேட்டறியக் கூடிய நிலையை ஏற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக பஞ்சாயத்து யூனியன் தேர்தல்கள் நிச்சயமாக விரைவில் நடக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆர். கண்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எனக்குமுன் பேசிய எதிர்க்கட்சிக்காரர்கள் 9 ஆண்டுக் காலமாக இங்கே நடைபெற்று வருகிற............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 10 நிமிஷம் தான் உங்களுக்கு.

திரு. எம். ஆர். கண்ணன் : 15 நிமிஷம்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் இல்லை. நேரம் இல்லை. 10 நிமிஷம் தான்....

திரு. எம். ஆர். கண்ணன் : எதிர்க்கட்சிக்காரர்கள் அட்மினிஸ்ட்ரேடிவ் குறைகளைத்தான் சொன்னார்களே தவிர, அரசு எந்தக் கொள்கையை விட்டிருக்கிறது என்று கூறவேயில்லை. 9 ஆண்டுக் காலம் யாரும் குறை சொல்லமுடியாத அளவிற்கு இந்த அரசு நடந்து கொண்டிருக்கிறது.

ஆலடி அருணா ஒரு நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டார். அதை உடனடியாக அரசு ஒத்துக் கொண்டுவிட்டது. இப்படி என்ன என்ன குறைகள் கூறப்படுகின்றனவோ அவைகள் அவ்வப்போது களையப் படுகின்றன என்பதைக்கண்டு நாம் பெருமைப் படவேண்டும்.

ஊழல், ஊழல் என்றார்கள். இங்கேயே ஊழல் குற்றச்சாட்டுகளை எடுத்துக் கூறச் சொன்னோம். அந்த வாய்ப்பும் கொடுத்தோம். அதற்காக என்று தனியாக ஒரு அமைப்பைக் கூட ஏற்படுத்தியிருக்கிறோம். இதுவரையில் எங்கும் அந்த ஊழல் குற்றச் சாட்டுகள் பற்றிக் கூறவேயில்லை.

மனுநீதிச் சோழன் என்றார்கள். பகுத்தறிவற்ற, ஐந்தறிவுள்ள பிராணியின் திருப்திக்காக ஆறறிவு உள்ள சோழன் தன் மகனின் உயிரைத் தேர்க்காலில் போக்கினான் என்று சொல்வதைப் பகுத்தறிவுள்ளவர்கள் ஏற்றுக் கொள்ள இயலாது. அது கதைக்காகத்தான் இருக்கும். அதேமாதிரிதான், ராமன் தன் மனைவியைத் தீக் குளிக்கச் சொன்னதாக கதை இருக்கிறது. பகுத்தறிவுக்கு இது எல்லாம் ஒத்து வருமா ? அப்புறம் மனசாட்சியைப் பற்றிப் பேசினார்கள். அதெல்லாம் ஏற்றுக் கொள்ள முடியாது. பிக் பாக்கட் அடிக்கிறவன் கூட மனசாட்சியைப் பற்றித் தான் பேசுவான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் ஆகிக் கொண்டிருக்கிறது.

திரு. எம். ஆர். கண்ணன் : மதுவிலக்கு கொண்டு வந்து விட்டோம். குடிப்பவர்களைப் பிடிக்கும் போலீஸ் நண்பர்கள், விற்பவர்கள் யார் என்று விசாரித்து அவர்களையும் பிடிக்க வேண்டும். குடித்தவர்களுக்கு ரூ. 10 என்று அபராதம் விதித்தால், 10 பேர் குடித்தார்கள் என்றால் ரூ. 100 அபராதம் ஆகிறது. அதே ரூ. 100 அபராதத்தை விற்கிறவர்களுக்கும் போட்டால், மதுவிலக்கு பெரும் வெற்றியாகிவிடும்.

ஸ்பிரிட், ஊசென்னை சர்க்காரால் நடத்தப்படும் கடைகளுக்கோ, கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கோ கொடுக்க வேண்டும். தனியாருக்குக்கு கொடுக்கவே கூடாது.

மதுக் கஷாயம் கட்டாயமாக ஒழிக்கப்பட வேண்டும்.

எலெக்ஷனுக்கு ஓட்டு போடுவதைக் கட்டாயமாக்க வேண்டும். எலெக்ஷனுக்கென்று பல கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து ஓட்டுப் போடாமல் ஓட்டுப் போட வேண்டியவர்கள் நிம்மதியாக வீட்டில் உட்கார்ந்து கொண்டு விடுகிறார்கள். அப்படி வராதவர்களை பிராசிகியூட் செய்ய வேண்டும்.

ஓட்டர் லிஸ்ட்களை அவ்வப்போது திருத்த வேண்டும், எப்போதும் தயாராக வைத்திருக்க வேண்டும். இறந்தவர்கள் பெயர்களை அவ்வப்போது நீக்கி விட வேண்டும். எலக்ஷன் எப்போது வருகிறதோ அப்போது நீக்கல், சேர்த்தல் வேலைகளை வைத்துக் கொள்ள வேண்டும். முனிசிபல் தேர்தலுக்கு ஒரு பட்டியல், சட்டசபை தேர்தலுக்கு ஒரு பட்டியல், பாராளுமன்றத் தேர்தலுக்கு ஒரு பட்டியல் என்று இப்படி தனித் தனியாக தயாரித்துக் கொண்டிருக்கக் கூடாது. அனாவசிய செலவு.

தேர்தல் பிரச்சாரங்கள் செய்யும்போது ஒரு டிவிஷனுக்கு ஒரு மேடை அமைத்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கட்சியின் பொதுக்கூட்டம் நடத்திக்கொள்ளச் செய்ய வேண்டும். போலீஸ்காரர்களுக்கும் தொல்லை இல்லை.



தேர்தல் செலவுகளை சர்க்காரே ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது தேர்தல் செலவுக் கணக்கே கேட்கக் கூடாது. சட்ட மன்றத்தில் சத்தியப் பிரமாணம் எடுக்க வேண்டியிருப்பதால் தப்புக் கணக்கு சொல்ல வேண்டிய அவசியம் இல்லாமல் இருக்கும் என்பதற்காகக் கூறுகிறேன்.

அமைச்சர்களைப் பற்றிச் சொல்ல வேண்டும். அவர்கள் தங்கள் சொந்த சௌகரியங்களை மறந்து விட்டு மக்களுக்காக உழைக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டுத் தொல்லைகள் எதுவும் இருக்கக்கூடாது. அவர்களுடைய குழந்தைகள் வசதிகளுக்கு முன்னுரிமை தர வேண்டும்............

(பிற்பகல் 12–30)

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, முக்கியமான பல்வேறு மானியங்கள் இன்று விவாதிப்பதற்காக சட்டமன்றத்திற்கு வந்திருக்கின்றன. நான் முதலில் குறிப்பாக தேர்தல் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இன்று திடீர் தேர்தல் என்று அவசர அவசரமாக அறிவிப்புகள் வந்தவண்ணம் இருக்கின்றன. திடீர் தேர்தல்பற்றி மாநில அரசுக்கு மத்திய அரசு உத்தரவு ஏதாவது போட்டிருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. திடீரென்று எலக்டோரல் ரோலை ரிவைஸ் பண்ண வேண்டுமென்ற அடிப்படையில் வேலைகள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. இதெல்லாம் அவசர அவசியமாக நடந்துகொண்டிருக்கிறது. அதனால் இதில் பல்வேறு தவறுகளும் நடந்துகொண்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தமாதிரி அவசரமாக திடீர் தேர்தல் என்ற அடிப்படையில் தேர்தல் நடத்தினால் ஜனநாயகத்திற்குக் கொடுக்க வேண்டிய மதிப்பை கொடுத்திருக்கிறோமா, ஜனநாயகத்தை மதிக்கிறோமா என்பதைச் சந்தேகக் கண்ணோட்டத்தோடு உற்றுப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1976-லே தேர்தல் வருகிறதா அதற்கு முன்னதாக தேர்தல் வருகிறதா என்பதைப்பற்றி திட்டவட்டமான அறிவிப்பு இதுவரையும் செய்யவில்லை. நம்முடைய மாநில அரசும் செய்யவில்லை ; மத்திய அரசும் செய்யவில்லை. இந்தமாதிரி இருக்கின்ற ஒரு நிலைமையில் என்னென்ன நடக்குமோ என்று சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பழைய எலெக்டோரல் ரோலில் திருத்தம்தான் செய்கிறார்களே தவிர புதிய எலக்டோரல் ரோல் தயார் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். பல்வேறு இடங்களில் பழைய ரோலில் திருத்தம் என்ற முறையிலேதான் காரியங்கள் செய்துகொண்டிருக்கிறார்களே தவிர வேறு காரியங்கள் ஒன்றும் நடக்கவில்லை. தேர்தல் சுமுகமாக நடக்க வேண்டும், அதிலும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் தேர்தல் நடக்க வழிவகை செய்ய வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1975 எப்ரல் 8

இன்றிருக்கிற நிலைமையில் தேர்தல் எப்போது வரும் என்று திட்ட வட்டமான அறிவிப்பு எதுவும் இல்லை. மத்திய அரசும் எலெக்ஷன் கமிஷனும் என்ன எண்ணம் கொண்டிருக்கிறார்கள் என்பதை முதலமைச்சரவர்கள் விளக்குவார்கள் என்று கருதுகிறேன். இவ்வளவு அவசர அவசியமாக தேர்தல் நடத்த வேண்டுமென்று சொல்லக் காரணம் என்ன? எலக்டோரல் ரோலை உடனடியாகத் திருத்துவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தேர்தல் பற்றிய கணக்குவழக்குகளைக் கொடுப்பது பற்றி பல்வேறு வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். கட்சி செய்கிற செலவை கணக்கிலே எடுத்துக் கொள்ள வேண்டுமா வேண்டாமா என்ற பிரச்சனை எல்லாம் இருக்கிறது. தேர்தல் முறைகளை சீரமைக்க வேண்டும். அதற்கு சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டுமென்ற ஆலோசனைகளை எல்லாம் கருத்திற்கொண்டு மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் முனைந்து ஈடுபட்டு, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஒரு நாட்டின் ஜனநாயகத்தைப் பேணி, உரிமையைக் கட்டிக் காப்பதற்கு தேர்தல் இன்றியமையாத கருவியாக இருப்பதால் நிச்சயமாக இந்தத் தேர்தலை நடத்துகின்ற நேரத்தில் நல்லமுறையில் நடத்த அரசாங்கம் வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

தேர்தலைப் பொறுத்தவரையில் ஏதோ சட்டமன்றத்திற்கும், பாராளுமன்றத்திற்கும் மட்டுமின்றி, பஞ்சாயத்துத் தேர்தல் நடக்க வேண்டும்; இரண்டு கார்ப்பரேஷன்களின் தேர்தல் நடக்க வேண்டும், முனிசிபல் தேர்தல்களை நடத்த வேண்டும். வேண்டுமென்றே அரசாங்கம் இந்தத் தேர்தல்களை ஒத்திப்போட்டுக் கொண்டிருக்கிறது என்று மக்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக இன்றைக்கு மக்களைச் சந்திக்க நாம் எல்லோரும் அஞ்சுகிறோம்; ஆளும் கட்சியும், எதிர்க்கட்சிகளும் அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள்; எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் மௌனமாக இருக்கிறார்கள்; ஏன் இவர்கள் அரசாங்கத்திற்குச் சொல்லவில்லை, தேர்தலை நடத்த வேண்டுமென்று ஏன் கேட்கவில்லை என்று பல்வேறு இடங்களில் பொதுமக்கள் என்னைப் போன்றவர்களைக் கேட்கிறார்கள். ஆகையால் இந்த மாநகராட்சிகள், நகராட்சிகள், பஞ்சாயத்துக்கள் தேர்தல்களை உடனடியாக நடத்த அரசாங்கம் என்னென்ன ஏற்பாடுகளைச் செய்யப் போகிறது என்பதை இந்த நேரத்தில் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எக்சைஸ் இலாகா பற்றி இரண்டொரு கருத்துக்கள் கூற விரும்புகிறேன். எக்சைஸ் இலாகாவைப் பொறுத்தவரையில் அதற்கு ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மதுவிலக்கானது அமுல் நடத்தப்பட்டிருக்கிறது. இந்த இலாகாவிலே இருக்கிறவர்கள் எல்லாம் மதுவிலக்குச் சம்பந்தப்பட்ட குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்களா அல்லது அப்படியே இருந்து கொண்டிருக்கிறார்களா என்பதைப்பற்றி நாம் அறிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.



1975 எப்ரல் 8] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

பொதுவாக, இப்போது மதுவிலக்குக் குற்றங்கள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. கள்ளச்சாராயம் சம்பந்தப்பட்ட குற்றங்கள் பல்வேறு இடங்களிலிருந்து வந்து கொண்டிருக்கின்றன என்று பத்திரிகைகளில் செய்தி வருவதைப் பார்க்கிறோம். இதிலே கொஞ்சம் கண்டிப்பாக இருந்து அரசாங்கம் செயல்பட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்காரி காண்டராக்ட் சம்பந்தப்பட்டவரையில் பல்வேறு சங்கடங்கள் இருப்பதாகச் சொல்லி வெட்டுத் தீர்மானங்கள் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். சிலர் அதிகத் தொகைக்கு ஏலம் எடுத்து விட்டு, ஒரு நாள்கூட கடை நடத்தவில்லை. அப்படி இருந்தும் அரசாங்கம் அவர்கள்மீது வழக்கு தொடர்ந்து முழுத் தொகையையும் வசூல் செய்ய வேண்டுமென்ற நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது.

என்னைக் கேட்டால் இந்தமாதிரி கேஸ்களில் என்னென்ன செய்ய வேண்டுமென்று இலாகா பரிசிலனை செய்யவேண்டும். காண்ட்ராக்ட் சட்டப்படிக்கு அல்லது ஒப்பந்தச் சட்டப்படிக்கு அவர்கள் மீது நஷ்டத்தை ஈடாக்குவதற்கான அவசியம் இருந்தாலும், சட்டம் இருந்தாலும் அதற்கான நடவடிக்கை எடுப்பது பொருத்தமாக இருக்குமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஏனென்றால் அந்தக் காண்ட்ராக்டை செட்டில் செய்யவில்லை. அந்தக் காண்ட்ராக்டிலே மறு ஏலத்தில் ஏற்பட்ட நஷ்டத்தை அவர்களிடமிருந்து வசூலிப்பது என்றால் கஷ்டம். ஆகவே, அந்த மாதிரி நிபந்தனைகளை எல்லாம் ஏற்படுத்தாமல் விட்டுவிடுவதுதான் பொருத்தம். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்கினால் பாதிக்கப்பட்ட மரம் ஏறும் தொழிலாளர்கள் இன்றும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைக்கு வழிவகை செய்யும் விஷயங்களில் அரசாங்கம் ஊக்கம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொன்றுதொட்டே அந்தத் தொழிலைத் தவிர வேறு எந்தத் தொழிலும் செய்து பழக்கமில்லாதவர்கள் அவர்கள். அவர்களுக்கு மாற்று வேலை கொடுப்பதாக இருந்தாலும் சற்று கடினமாகத்தான் இருக்கும். இருந்தாலும், அவர்களுடைய வாழ்க்கைக்கு, ஏதாவது வழிவகை செய்யும் வகையில், அவர்கள் செய்வதற்கு ஏற்ற மாற்று வேலைகளைக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அமைச்சர்களுடைய சுற்றுப்பிரயாணத்தைப் பற்றிப் பல்வேறு கருத்துக்களை எல்லாம் இங்கே எடுத்துக் கூறினார்கள். என்னைப் பொறுத்தவரையில் அமைச்சர்கள் குறிப்பிட்ட மாதத்தில் இத்தனை நாள் சுற்றுப்பிரயாணம் செய்ய வேண்டும்; மற்ற நாட்களில் தலைநகரில் இருக்க வேண்டுமென்று திட்டவட்டமான அளவுக்கு விதிமுறைகள் இருக்க வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன். இரண்டு அல்லது மூன்று அமைச்சர்கள் நிச்சயமாக தலைநகரில் எப்போதும் இருக்க வேண்டுமென்ற

ஏற்பாடு இருந்தால்தான் இங்கு அரசாங்கத்திற்கு வரக்கூடிய எல்லாப் பிரச்சனைகளையும் அவர்கள் பைசல் செய்வதற்கு ஏற்பாடாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதல்லாமல், இன்று பல்வேறு இடங்களில் அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தால் அரசாங்கத்தின் பைல்கள் இங்கே தேங்கி, முடங்கிக் கிடக்கும் நிலைதான் இருக்கும். இரண்டாவதாக, குறிப்பிட்ட காலத்திலே "சர்குலேஷன்" என்று சொல்கிற பைல்கள் வந்தால், அதற்கு ஒரு முடிவான உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும். இல்லை என்றால், அது நீண்டு கொண்டே போகுமானால், காலதாமதம் ஏற்படுமானால், அது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறதோ அந்த முக்கியத்துவத்தை இழந்துவிடும். ஆகையால் இந்தமாதிரி காரியங்களை நான் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செக்ரெட்டேரியேட்டைப் பொறுத்தவரையில் இந்த இடத்தை மாற்ற வேண்டும்; தனியொரு இடத்தில் அமைக்கப்பட வேண்டும்; அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் கூறினார்கள். ஆனால் இப்போது செக்ரெட்டேரியேட் இங்குதான் இருக்க வேண்டுமென்ற நிலைமை உருவாகி இருக்கிறதா அல்லது நமக்கு நன்மையாக இருந்து, அரசாங்க அலுவலர்களுக்கும் சௌகரியமான முறையில் வேறு ஒரு இடத்தில் தலைமைச் செயலகம் அமையப் போகிறதா என்பதை முதலமைச்சர் தன்னுடைய பதிலிலே விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேறு இடத்தில் தலைமைச் செயலகம் அமைவதற்கு மத்திய அரசு அதிகப் பணம் கொடுக்க வேண்டும். மாநில அரசுதான் அதற்கான செலவு முழுவதையும் செய்ய வேண்டுமென்று சொன்னால் அது மிகத் தவறானது; சற்று கடினமானதும்கூட.

இப்போது இருக்கிற டி. ஏ. யைப் பொறுத்தவரையில், நம்முடைய அரசு ஊழியர்களுக்கு எல்லாம் மத்திய அரசு எவ்வளவு டி. ஏ. கொடுக்கிறதோ அந்த அளவு கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார்கள். ஒரே வேலை செய்கிறவர்கள் இரண்டு இடங்களில் இருப்பதால் அவர்களுக்குக் கொடுக்கின்ற ஊதியம் இரண்டு விதமாக இருக்கக் கூடாது. டி. ஏ. யைப் பொறுத்தவரையிலாவது ஒரே வீதத்தில் இருக்க வேண்டும். இப்போது நம்முடைய மாநில அரசு ஊழியர்களுக்குக் குறைவாக இருக்கிறது. டி. ஏ. காலாகாலத்தில் கிடைக்கவில்லை என்றும் கூறுகிறார்கள். இதைச் சீர்செய்து, உரிய காலத்தில் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் ஊழியர்கள் சரியானமுறையில் நிச்சயமாக பணியாற்ற இயலாமல் போய்விடும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல இன்றைக்கு நம்முடைய அரசாங்கத்திற்கு பல்வேறு வாகனங்கள் இருக்கின்றன. "ஸ்டாப்ஃ கார்" என்ற முறையில் பல கார்கள் இருக்கின்றன. அதற்குச் செலவாகின்ற பணத்தைப் பார்த்தால் மிக அதிகமாக இருக்கிறது. இப்போது நாம் சிக்கனம் என்ற முறையில் பல்வேறு கருத்துக்களைக் கூறிக்கொண்டிருக்கிறோம்.





ஆனால் இந்த ஆஸ்டரிடி எல்லாம் ஸ்டாப் கார் போன்றவைகளை உபயோகப்படுத்துவதில் நிர்ணயம் இல்லாத தன்மையில் இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்தவும் அமைச்சரவை வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஓய்வு ஊதியத்தைப் பற்றி நான் ஒரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஓய்வு ஊதியம் பற்றி பல்வேறு இடங்களில் இருந்து புகார்கள் வந்தவண்ணமாக இருக்கின்றன. காலாகாலங்களில் கொடுக்கப்படுவதில்லை என்ற புகார்கள் இருக்கின்றன. என் கையில் பல்வேறு புகார்கள் இருக்கின்றன. குறிப்பாக ஒரு புகாரை மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களது கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 1971-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 8-ம் தேதியிலே எலெக்ட்ரிசிடி போர்டில் டெபுடி சீப் அக்கவுண்டெண்டாக இருந்தவர் தக்கலையில் ஓய்வு பெற்றிருக்கிறார். அவருக்கு இதுகாறும் க்ராஜுடியோ, பென்ஷனோ கொடுக்கப்படவில்லை. நான்கு வருடம் முடிந்து ஐந்தாவது வருடத்திலே இருக்கிறார். அவரது குடும்பம் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

இதுபோல எலெக்ட்ரிசிடி போர்டில் பல்வேறு நபர்கள் இருக்கிறார்கள். அவர்கள் திருவிதாங்கூர் கொச்சியில் இருந்து மாற்றப்பட்ட காரணத்தினால் ஓய்வூதியம் நிர்ணயம் செய்வதிலே பல்வேறு தாமதங்கள் ஏற்படுகின்றன. இதையெல்லாம் கவனித்து உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும்.

இன்னும் 1960-இல் ஓய்வு பெற்றவர் என்பதற்காக ஓய்வு ஊதியம் இல்லை என்கிறார்கள். இதையெல்லாம் புனர்பரிசீலனை செய்ய வேண்டும். வயது வந்தவர்களுக்கு குறைந்தபட்சம் பென்ஷன் கொடுக்கிறோமே அதைப்போலவாவது பல்லாண்டுகள் வேலை செய்து ஓய்வு பெற்றவர்களுக்கு இத்தனை ஆண்டுகளுக்கு முன்னால் ஓய்வு பெற்றவர்களுக்கு இல்லை என்காது பென்ஷன் கொடுக்கிற திட்டத்தினை அமல் நடத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பென்ஷனர்களுக்கு இப்போது கொடுக்கிற டி. ஏ. போதாது. உத்தியோகத்தில் இருக்கிறவர்களுக்கு எந்த அளவுக்குக் கொடுக்கிறார்களோ அந்த அளவுக்குக் கொடுக்க வேண்டும் என்பது என் கருத்து. வாழ்க்கைப் புள்ளியின் அடிப்படையில்தான் டி. ஏ. வழங்கப்படுகிறது. பென்ஷனர்சுகளுக்கும் அதைச் சற்று உயர்த்திக் கொடுக்க வேண்டும். இன்றைக்குக் கொடுக்கக்கூடியது மிகக் குறைவு என்ற கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக, பொலிடிகல் சபரர்சுகளுக்கு பென்ஷன் கொடுப்பதிலும் பல புகார்கள் இருக்கின்றன. ஐ. என். ஏ. பிரிவில் இருந்தவர்களுக்கு பென்ஷன் தரவில்லை என்று புகார் கொடுத்திருக்கிறார்கள். தகுதிச் சான்றிதழ்கள் பெறுவதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. இதையும் அரசாங்கம் கவனித்து ஆவன செய்ய வேண்டும்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1975 ஏப்ரல் 8

தேசிய இயக்கத்தில் ஈடுபட்ட இன்னும் பலருக்கும் கிடைக்காமல் இருக்கிறது. இன்னொரு விஷயம்—மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு—எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு பென்ஷன் வழங்க ஒரு திட்டம் இருந்தது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு சிலர் உதவி பெற்று வருகிறார்கள் என்றாலும் இதில் உள்ள சங்கடம்—சிறை சென்ற எல்லோருக்கும் ரெக்கார்டுகள் இல்லை. ஒரு சிலருக்கே கிடைத்திருக்கிறது. மற்றவர்களை—அண்டர் ட்ரையல் ப்ரிசினர்ஸ் என்ற முறையில் போலீஸ் லாக்கப்பிலேயே வைத்திருந்தார்கள். திருவிதாங்கூர்—கொச்சி தமிழ் நாடு காங்கிரஸ் நடத்திய போராட்டத்தில் ஆயிரக் கணக்கான பேர்கள்—அது வெகு ஜன இயக்கமாக இருந்த காரணத்தினால்—பல்வேறு நபர்கள் ஈடுபட்டார்கள். அவர்களில் கொஞ்ச பேருக்குத்தான் பென்ஷன் கொடுத்திருக்கிறார்கள். மற்றவர்களுக்கும் அந்த உதவித் தொகை கிடைக்க ஆவன செய்ய வேண்டும். அதிலும் அவர்கள் தகுதிச் சான்றிதழ் பெறுவதில்தான் கஷ்டம் இருக்கிறது. அவர்களோடு கூட இருந்த எம். எல். ஏ. யோ, மற்றவர்களோ சர்டிபிகேட் வழங்கினால் போதும் என்ற நிலைமைக்கு வந்தாக வேண்டும். மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு கொடுக்கின்ற முறையில் இவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, இன்னொரு விஷயத்தை நான் இங்கே குறிப்பிடவேண்டுமென்று நினைக்கிறேன். வறட்சிபற்றி பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஒரு இடத்திற்குச் செய்கிற வேலைகளைப்போலவே இன்னொரு இடத்திற்குச் செய்யமுடியாது. அந்த அந்த இடத்திற்கு ஏற்றாற்போலச் செய்ய வேண்டியது அவசியம். குறிப்பாக, பைப் மூலமாகத் தண்ணீர் கொடுப்பது வறட்சிப் பணியின் கீழ் வராது என்று எங்கள் பகுதியில் சொல்லப்படுகிறது. எங்கள் மாவட்டத்தில்—கன்னியாகுமரி கடைசிப் பகுதியில் பைப் மூலம் தான் தண்ணீர் கொடுத்தாக வேண்டும். அதைத் தவிர வேறு வழியில்லை—அங்கே, ஸ்பெஷல் கேஸ் என்ற முறையிலாவது அந்தப் பகுதியில் குழாய் மூலம் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த வறட்சித் திட்டத்தின் கீழ். இதுபோல செய்து கொடுக்க வேண்டுமென்று அந்தப் பகுதியில் உள்ளவர்கள் மனுக் கொடுத்திருக்கிறார்கள். அதையும் அரசாங்கம் கவனித்து அவர்களது கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு இடங்களில் உணவுப் பண்டங்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. வறட்சி நிலைமையாக இருக்கிற காரணத்தினால் உடனடியாக அந்தந்தப் பகுதிகளில் அட்டைகளை வழங்கி அங்குள்ளவர்களுக்கு எல்லாம் உணவு தானியங்களை விநியோகம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு—இது போல பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக துன்புறுகிற மக்களது துயரைத் துடைக்க தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறி என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



1975 ஏப்ரல் 8]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சற்றேறப்ப 120 கோடி ரூபாய்க்கு பல்வேறு தலைப்புகளில் ஆளுநர், அமைச்சர்கள், மதுவிலக்கு, வறட்சி நிவாரணம்—இப்படிப்பட்ட வகைகளில் ஒதுக்கப்படுகின்ற இந்த மானியக் கோரிக்கைகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்துள்ள சில கருத்துக்களுக்கு என்னுடைய விளக்கங்களை வைத்திட விரும்புகிறேன்.

நம்முடைய நண்பர் திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் அமைச்சர்கள் மாவட்டங்களில் அதிக அளவில் சுற்றுப்பயணங்களை மேற்கொள்ள வேண்டுமென்ற முறையீட்டை அவருடைய உரையின் மீது இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

நம்முடைய பழைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அமைச்சர்கள் தலைமைச் செயலகத்தில் அதிக நாட்கள் இருந்திடவேண்டும்; பொதுமக்களுடைய முறையீடுகளைப் பெற்று பரிசீலிக்கவும், ஆவன செய்யவும் அதுவே உகந்த வழி என்று குறிப்பிட்டார்கள்.

அமைச்சர்களைப் பொறுத்து நான் கடந்த ஆண்டிலேயே சில விவரங்களைத் தந்திருக்கிறேன்.

அவர்கள் 1974–75 இல் தலைமைச் செயலகத்தில்—சென்னையில் இருந்த நாட்களைப் பார்த்தால்—என்னைப் பொறுத்தவரையில் முதலமைச்சர் 1974–75 இல் சென்னையில் 299 நாட்கள் இருந்திருக்கிறேன்.

கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர்—நாவலர் அவர்கள் 266 நாட்கள் சென்னையில்—தலைநகரில் தங்கியிருந்திருக்கிறார்கள்.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அவர்கள் 304 நாட்கள் இருந்திருக்கிறார்கள்.

பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர் திரு. என். வி. என். அவர்கள் 322 நாட்கள் இருந்திருக்கிறார்கள்.

பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் தலைநகரத்தில் 280 நாட்கள் இருந்திருக்கிறார்கள்.

உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் 261 நாட்கள் தங்கியிருந்திருக்கிறார்கள்.

தொழில்துறை அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் 233 நாட்கள் சென்னையிலே, தலைநகரத்திலே இருந்திருக்கிறார்கள்.

வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ஆதித்தனார் அவர்கள் 316 நாட்கள் சென்னையிலே இருந்திருக்கிறார்கள்.

வருவாய்த்துறை அமைச்சர்—திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் 140 நாட்கள் சென்னையில் இருந்திருக்கிறார்கள்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மன்னை நாராயணசாமி அவர்கள் 180 நாட்கள் சென்னையிலே இருந்திருக்கிறார்கள்.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள் 235 நாட்கள் சென்னையில் தங்கி இருந்திருக்கிறார்கள்—இது ஆச்சரியமான விஷயம்.

சமூகநலத்துறை அமைச்சர் திரு. சி. வி. எம். அண்ணாமலை 251 நாட்கள் சென்னையில் இருந்திருக்கிறார்கள்.

வணிக வரித்துறை அமைச்சர் திரு. ஒ. பி. இராமன் அவர்கள் 274 நாட்கள் தலைநகரில் தங்கி இருக்கிறார்கள்.

போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் 212 நாட்கள் தங்கியிருக்கிறார்கள்.

அறநிலையத்துறை அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் 222 நாட்கள் தங்கியிருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. இராசாங்கம் அவர்கள் 215 நாட்கள் தலைநகரில் தங்கி இருந்திருக்கிறார்கள்.

ஆகவே, அமைச்சர்கள் தலைநகரத்திலே தங்குவதில்லை, அவர்கள் வெளியூர்களிலேயே சுற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்கின்ற, பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்து வைத்த வாதம் அவ்வளவு பொருத்தமுடையதாக இல்லையென்பதற்காகத்தான் நான் இதை எடுத்துக் கூறினேன்.

தொடக்கத்திலேயே, நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் தேர்தலைப் பற்றி........................

<u>திருமதி த. ந. அனந்தநாயகி</u> : அமைச்சர்கள் தலைநகரத்திலே இருக்கிறார்களே தவிர, தலைமைச் செயலகத்திற்கு வருவதில்லையென்பது தான் முக்கியமான குற்றச்சாட்டு.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : அம்மையார் அவர்கள் இல்லத்திலேயே வந்து பார்க்கின்ற அளவுக்கு உரிமை படைத்தவர்கள். ஆகவே, அந்தக் கவலை தேவையில்லை.

நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள் தேர்தல்களைக் குறித்துச் சொன்னார்கள். அவசர அவசரமாக வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டு காரியங்கள் நடைபெற்றிக்கின்றன. அதன் காரணமாக வாக்காளர்களைப்



பதிவு செய்வதிலே சில குறைபாடுகள் ஏற்பட்டிருக்கக்கூடும். ஏன் இவ்வளவு அவசரமாக இந்தக் காரியங்களைச் செய்யவேண்டுமென்றெல்லாம் அவர்கள் கேட்டார்கள்.

இது மாநில அரசினுடைய செயல் அல்லவென்பதையும் மாநில அரசிற்கு மத்தியிலே இருக்கிற தலைமைத் தேர்தல் ஆணைக்குழு பிறப்பிக்கின்ற கட்டளைகளை நிறைவேற்றுகின்ற வகையிலேதான் நாம் நடக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதையும் நான் கூற விரும்புகிறேன்.

ஆனாலும் அதன் காரணமாக வாக்காளர்களுடைய தொகை குறைந்து விட்டதாக நாம் எண்ணிவிடக்கூடாது. 1971-ம் ஆண்டு தமிழ்நாடு முழுவதும், எல்லா மாவட்டங்களிலும் உள்ள வாக்காளர்களுடைய எண்ணிக்கை 2,30,64,858 ஆகும். இப்பொழுது, 42,67,214 வாக்காளர்கள் கூடுதலாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆக, 1975-ம் ஆண்டு வாக்காளர் கணக்கெடுப்பின்படி 2,73,32,072 பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இது 18½ சதவிகிதத்திற்கு மேலாக 1971-லே இருந்ததைவிட அதிகமான தொகையென்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே மாநில அரசு எந்தவிதமான அவசரத்தையும் காட்டிட விரும்பவில்லை. மாநில அரசின் சார்பில் நம்முடைய மாநில அளவிலே இருக்கிற தலைமை ஆணையாளர் அவர்கள் ஒரு குறிப்பினை மத்திய தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்தார்கள். எந்த வகையிலே என்றால், 2—12—1974-லிருந்து 26—12—1974 வரையில் ஏறத்தாழ 4 வாரங்கள் enumeration என்கின்ற வகையிலேயும் அதற்குப் பிறகு preliminary publication என்கின்ற வகையில் 14—7—1975 என்கின்ற தேதியையும் குறிப்பிட்டு last date for receipt of claims and objections அதற்கென்று 13—8—1975 என்கின்ற தேதியைக் குறிப்பிட்டு disposal of claims and objections என்பதற்கு 25—8—1975 என்கின்ற தேதியைக்குறிப்பிட்டு printing of final list of amendments 25—9—1975 என்கின்ற தேதியைக் குறிப்பிட்டு final publication என்பதற்கு 1—10—1975, அதாவது அக்டோபர் 1975 வரையிலே—இவ்வளவு தாராளமாகக் காலத்தை ஒதுக்கி, மத்தியத் தேர்தல் ஆணைக்குழுவிற்கு நம்முடைய தேர்தல் ஆணையாளர் அறிக்கையைச் சமர்பித்தார். இப்படி இருக்கலாம் என்கின்ற கருத்தினை எடுத்துரைத்தார். ஆனால், நமக்குள்ள குறிப்பின்படி

**The Election Commission has agreed for an intensive revision with modification in the programme to finally publish the electoral rolls by 30th June 1975 instead of 1st October 1975 as suggested by us.**

என்ற அளவில் நாம் 1—10—1975-லே அதை முடிவாக அறிவிக்கலாம், நல்ல நீண்ட இடைவெளி வாக்காளர்களைச் சேர்ப்பதற்கும், வருகின்ற

ஆட்சேபணைக் குறிப்புக்களைப் பற்றி பரிசீலிப்பதற்கும், இறுதியாக வாக்காளர் பட்டியலைத் தயாரித்து வெளியிடுவதற்கும் நீண்டகாலத்தை ஒதுக்கலாம் என்று சொன்னதற்கு மாறாக, மத்தியிலேயிருக்கிற ஆணைக் குழு பிறப்பித்த உத்தரவு 30—6—1975-ஒடு, ஜூன் மாதத்தோடு, ஜூன் 30-ம் தேதியோடு அதை முடித்தாகி விடவேண்டுமென்கிற அளவிலே அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள். அதை நடைமுறைப்படுத்தலாம் என்று எண்ணிய நேரத்தில், 28—12—1974-ம் தேதியன்று ஒரு டெலக்ஸ் மெஸேஜ் இங்கேயுள்ள தேர்தல் ஆணையாளருக்கு வந்தது. அந்த டெலக்ஸ் மெஸேஜிலே வந்த குறிப்பு :

The Commission has decided that a revision of electoral rolls during 1975 should be in accordance with the crash programme as was done during 1969-70.

என்ற அளவிலே, மத்திய தேர்தல் ஆணைக்குழு ஒரு டெலக்ஸ் செய்தியை அனுப்பியது. அந்தச் செய்தியின்படி அவர்கள் வகுத்த தேதிகளின்படி 1975-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28-ம் நாளோடு இதனுடைய வாக்காளர் பட்டியலுடைய இறுதி வடிவம் வெளியிடப்பட்டாக வேண்டும். நாம் முதலிலே எழுதி அனுப்பியது அக்டோபர் மாதம் வரையிலும் என்று. அவர்கள் ஒத்துக்கொண்டது ஜூன் மாதத்திற்குள்ளே முடித்து விடுங்கள் என்று. பிறகு 1974-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ம் தேதியிலே அவர்கள் அவசரமாக அனுப்பிய டெலக்ஸ் மெஸேஜ் மூலம் பிப்ரவரி மாதத்திற்குள்ளாக நீங்கள் இதை முடித்துவிட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த வகையிலே பணிகள் தீவிரமாக நடைபெற்று, வாக்காளர்கள் பதிவு முடிவுற்று, அவர்கள் சொன்னபடி பிப்ரவரி திங்களுக்குள் எல்லா வேலைகளையும் நாம் முடித்து அனுப்பி வைத்திருக்கிறோம். ஆகவே, மாநில அரசின்மீது எந்தக் குறைபாட்டையும் சொல்வதற்கில்லையென்பதையும் இங்கேயிருக்கிற தேர்தல் ஆணையாளர் மத்தியத் தேர்தல் ஆணைக் குழுவின்படி நடக்கவேண்டியவர் என்பதையும் பொன்னப்ப நாடார் அவர்கள் குற்றச்சாட்டுக்கு நான் பதிலாக அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தேர்தல் எப்பொழுது நடத்த வேண்டுமென்று ஏதாவது தகவல் வந்திருக்கிறதா ? திடீர்த் தேர்தலுக்கு நாங்களெல்லாம் தயார்படுத்திக் கொள்ளலாமா என்பதை முதலமைச்சரவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உங்களுடைய நிலையிலேதான் நாங்களும் இருக்கிறோம். எங்களுக்கு எந்தத் தகவலும் அதைப்பற்றி இல்லை.

அடுத்து, இந்த அவையிலே முக்கியமாகப் பேசப்பட்ட பிரச்னை இந்த மக்கள் மீது, மதுவிலக்குப்பற்றி போட்ட. . . .





திரு. கே. டி. கே. தங்கமணி : நமது மாநிலத்தைப் பொறுத்த வரையிலே எப்பொழுது தேர்தல் நடக்கும் என்பதைப்பற்றி சொல்ல முடியும் அல்லவா ? சாதாரணமாக இருந்தால் 1976-லே நடக்கும். அதற்கு முன்பு நடத்துவதற்காக ஏதாவது அரசுக்கு ஆலோசனை இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொதுத் தேர்தல் என்பது டெல்லியிலே இருக்கிற மத்திய தேர்தல் ஆணைக் குழு தீர்மானிக்க வேண்டிய ஒன்றாகும். மேலிடத்திலிருப்பவர்கள் தீர்மானிக்க வேண்டிய ஒன்றாகும். நான் அவ்வளவுதான் சூசகமாகச் சொல்லமுடியும். ஆகவே, என்னைவிட திரு. தங்கமணிக்குத்தான் இந்த இரகசியம் நன்றாகப் புரிந்திருக்க முடியும், இப்பொழுதுள்ள சூழ்நிலையின்படி. ஆகவே, அவர் என் வாயிலேயிருந்து வரவழைப்பதென்றால் அதிலே தோல்விதான் ஏற்படும். ஏனென்றால், சொல்வதற்கு என்னிடத்திலே தகவல் இல்லை. ஆகவே, தங்கமணி அவர்கள் என்னிடம் இரகசியமாகச் சொன்னால்கூடப் பரவாயில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஒருவேளை பொதுத் தேர்தல் நடந்தால், அவர்கள் கலைத்தால் நீங்களும் சட்டசபையைக் கலைத்து விட்டு நடத்துவீர்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படி ஒன்று நடக்கும் போது பார்ப்போம் கலைப்பதா, கலைப்பதில்லையாவென்பதை.

தலைவரவர்களே, மதுவிலக்கைப் பற்றி பல உறுப்பினர்களும் நல்லபல கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மதுவிலக்கு மறுபடியும் நடைமுறைப்படுத்தப்படுவதை நம்முடைய முஸ்லிம் லீக் கட்சியின் சார்பிலே பேசிய நண்பர் யூசுப் அவர்களும், ஏன், எதிர்க் கட்சி வரிசையிலே இருந்து பேசியவர்களும் பாராட்டிவிட்டு அதே நேரத்திலே குற்றங்கள் நிறைய நடைபெறுகின்றன, அவைகளைக் கண்டுபிடிப்பதிலே மதுவிலக்குக்கென அமைந்துள்ள சிறப்புக் காவல் துறையினர் தங்களுடைய கடமையை மேலும் செம்மையாகச் செய்ய வேண்டுமென்றெல்லாம் குறிப்பிட்டார்கள். நான் அந்தத் தலைப்பிலும் சில விவரங்களை அவைக்குச் சொல்ல வேண்டியவனாய் இருக்கிறேன்.

மதுவிலக்கு மறுபடியும் அமுல்படுத்தப்பட்ட 1974-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதி முதல் 1975-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதி வரை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற மதுவிலக்குக் குற்றங்கள் 2,03,256 ஆகும்.

இதில் கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காக 22,910 பேர்,

சாராயம் வைத்திருந்ததற்காக 80,977 பேர்,

குடி போதையில் இருந்ததற்காக 77,673 பேர்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 ஏப்ரல் 8

இந்த 5, 6 மாதங்களில் இந்தக் குற்றங்களுக்காக சிறைக்கு அனுப்பப் பட்டவர்களுடைய எண்ணிக்கை 21,202. அதிலே, சேலத்திலே மாத்திரம் 10,504 பேர்கள் ஆகும்.

(பிற்பகல் 1–00)

அபராதம் விதிக்கப்பட்டவர்கள் 77,160 பேர்கள், அபராதமும் சிறைத் தண்டனையும் பெற்றவர்கள் 33,176 பேர்கள்.

இந்த அபராதத்தின் மூலமாக மாத்திரம் நமக்குக் கிடைத்திருக்கிற தொகை 52 லட்சம் ரூபாய் ஆகும், இந்த ஐந்தாறு மாதங்களில் அபராதத் தொகையின் மூலமாக வந்த வருவாய் 52 லட்சம் ரூபாய் ஆகும்.

மதுவிலக்கின் காரணமாக மரம் ஏறுகின்ற தொழிலாளர்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டுவிட்டது என்பதை பொன்னப்ப நாடார் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அவர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதற்கு 40 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு சிறப்புத் திட்டத்தைத் தயாரித்து அதிலே 25% மாநில அரசும் 75 சத வீதத்தை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவும் ஏற்று இன்றைக்கு அந்தத் தொழிலாளர்களுக்கான கருவிகள், சாதனங்கள் எல்லாம் வழங்கப்படுகின்றன. அதன்படி அந்தப் பயன்பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 20,293 பேர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நிதியுதவித் தொகை இதுவரையில் 40,58,600 ரூபாய் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அவர்களை கைவிட்டுவிடவில்லை.

மதுவிலக்குக் கொள்கை வெற்றி பெறவேண்டுமானால் நான் அடிக்கடி இந்த மாமன்றத்திலே எடுத்துச் சொன்னது போலவும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் காந்தியடிகளுடைய இந்தக் கொள்கை இந்தியா முழுமையும் நிறைவேற்றப்படவேண்டுமென்று சொன்ன அந்த அடிப் படையிலேயும் இது அகில இந்திய அடிப்படையிலே ஏற்றுக்கொள்ளப் பட்ட கொள்கையாக ஆகி எல்லா மாநிலங்களிலும் செயல்படுத்தப்பட்டால் தான் அது தமிழ்நாடு மாநில அளவிலேயும் வெற்றிகரமாகச் செயல் படுத்தப்படமுடியும் என்பதை மறந்துவிடக்கூடாது. அதற்காக மது விலக்குக் குற்றவாளிகள் பிடிக்கப்படாது விடப்படுவார்கள், பிடிக்கப்படாது விடப்படுகிறார்கள் என்பது அல்ல. தீவிர நடவடிக்கைகளை மதுவிலக்குக் காவல் துறை பிரிவினர் எடுத்ததன் விளைவாகத்தான் இவ்வளவு குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவு குற்றங்கள் என்று சொல்கிற நேரத்திலே, எ, அப்பா! 6 மாதங்களிலே இவ்வளவா! என்று எண்ணத் தோன்றும். இந்த 6 மாத காலத்திலே இதுவரையிலும் பிடிபடாத குற்றங்களும் பிடிபடுகின்றன என்பதை இந்த விவரங்களிலிருந்து காவல் துறையைப் பாராட்டியும் எடுத்துக் கொள்ளலாம். 1967–68-ம் ஆண்டில் 2,11,987 பேர்கள் ஒரு ஆண்டுக் காலத்திலே சிறைச்சாலையிலே மதுவிலக்கு சம்பந்தமான குற்றங்களில் பிடிபட்டவர்கள் இருந்தார்கள். இந்தக் குற்றங்களிலே பிடிக்கப்பட்டவர்கள் 1968–69-ம் ஆண்டில் 2,70,962 பேர்களும்



1975 ஏப்ரல் 8] [டாக்டர் மு. கருணாநிதி]

1969–70-ம் ஆண்டில் 3.25,810 பேர்களும், 1970–71 ஆம் ஆண்டில் 3,46,699 பேர்களும் என்ற அளவிற்கு இந்தத் தொகை வளர்ந்து கொண்டே வந்தது, சாராயம் காய்ச்சுதல், சாராயம், வைத்திருத்தல், குடிபோதையில் இருத்தல் என்ற வகையிலே.

இன்னொரு விவரத்தையும் சொல்லியாக வேண்டும். டி.எல். 1, டி. எல். 2 இவைகளுக்கு ஏன் இங்கேயே தொழிற்சாலைகள் தரவேண்டு மென்று எல்லாம்கூட எடுத்துச் சொன்னார்கள்; டி.எல். 1, டி.எல். 2 என்பது இப்படிப்பட்ட லைசென்ஸ்களைப் பெறுவது இந்த அரசு வந்தபிறகு உருவாக்கப்பட்ட ஒன்று அல்ல.

1966–67ஆம் ஆண்டிலே 94 பேர்களுக்கு இந்த லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருந்தன. 1971–72 ஆம் ஆண்டில் 93 பேர்கள்; 1972–73 ஆம் ஆண்டில் 90 பேர்கள் அதிகமாக அல்ல—94 பேர்கள் இப்போது 90 பேர்கள்தான் லைசென்ஸ்தாரர்களாக இருக்கிறார்கள்.

இதிலே கவனிக்கத்தக்க அம்சம் என்னவென்றால் 1966–67ஆம் ஆண்டிலே 94 பேர்களாக இருந்தபோது அவர்கள் டி.எல். 1 என்ற அந்த லைசென்ஸ் அடிப்படையிலே வாங்கிக்கொண்ட லிட்டர் 21,87,835 பெற்றார்கள். மதுவிலக்கு அமுலில் இருந்தபோது 21,87,000 லிட்டரைத்தான் அவர்கள் தங்கள் லைசென்ஸ் அடிப்படையிலே பெற்றார்கள்.

பிறகு, 1971–72ஆம் ஆண்டிலே நாம் மதுவிலக்கை ஒத்திவைத்த நேரத்திலே 8,56,409 லிட்டரைத்தான் பெற்றுக்கொண்டார்கள். 1972 73ஆம் ஆண்டில் 6,91,000 லிட்டரைத்தான் பெற்றுக்கொண்டார்கள். இப் போது மீண்டும் மதுவிலக்கு நடைமுறைக்கு வந்துவிட்ட காரணத்தினாலே பழைய 21 லட்சத்திற்கு நிச்சயமாக அவர்கள் செல்வார்கள். இது இன்றைக்கு இருக்கிற நிலைமை.

அதைப்போலவே டி.எல். 2. இதைப் பார்த்தாலும் 1966–67ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்த காலத்திலே இந்த உரிமங்கள் பெற்றவர்களின் எண்ணிக்கை 430; இன்றைக்கு அப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை 356 தான். அதிகப்படியாகப் பெற்றார்கள் என்ற எண்ணிக்கை அல்ல, முன்பு 430ஆக இருந்த எண்ணிக்கை இன்றைக்கு 356 ஆகக் குறைந்து இருக்கிறது.

மதுவிலக்கு அமலில் இருந்த 1969–70ஆம் ஆண்டிலே 47,12,389 லிட்டரைப் பெற்றார்கள். மதுவிலக்கு ஒத்திவைக்கப்பட்ட பிறகு 1971-72 ஆம் ஆண்டில் 20,98,000 லிட்டராக அது குறைந்தது.

ஆக, இந்த டி.எல். 1, டி.எல். 2 உரிமதாரர்கள் இதைத் தவறான வகையிலே பயன்படுத்துகிறார்கள் என்ற செய்திகள் அரசுக்கும் இந்தத் துறையினுடைய காவல் அதிகாரிகளுக்கும் அடிக்கடி வந்ததன் காரணமாக நம்முடைய ரெவின்யூ போர்டின் சார்பில் 27—3—1975 அன்று தவறாகப் பயன்படுத்துகின்ற உரிமதாரர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு அரசு ஆணை, ஆணை எண

98 என்பதின்கீழ் 27—3—1975-லே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதிலே பல அம்சங்கள் பல்வேறு வகையிலே எப்படி எப்படி கண்டிப்பாக இருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டு இருந்தாலும் ஒன்றை மாத்திரம் இங்கே படித்துக்காட்ட விரும்புகிறேன்.

It may be made compulsory that the spirit obtained by all categories of D.L. series licensees is brought into account and only after verification by the Range Officer concerned or a Revenue Official not lower in rank than a Deputy Tahsildar, is allowed to be sold. என்கின்ற வகையிலே இவைகளெல்லாம் கட்டுப்படுத்தப்பட, தவருக நடந்தால் உடனடியாக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க இன்றைக்கு போர்டு ஆப் ரெவன்யூ தந்த கருத்துக்களை ஏற்று, அரசு ஆணையாகப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மேலும் அனைவருக்கும் இதிலே அக்கறை இருக்கிறது. மதுவிலக்கை நடைமுறைப்படுத்துகின்ற இந்த நேரத்தில் இதை வெற்றிகரமாக நடத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பொது வாழ்க்கையிலே அக்கறை கொண்டவர்கள் சமுதாய மேம்பாட்டிலே அக்கறைகொண்டவர்கள் அனைவரும் இதற்கு ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஓய்வூதியங்களைப் பற்றி இங்கே பொன்னப்ப நாடார் அவர்களும் மற்றவர்களும் எடுத்துச் சொன்னார்கள். இந்த ஓய்வூதியத்தில் இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு எவ்வளவு சலுகைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். 1960 ஆம் ஆண்டிலே ஓய்வூதியங்கள் சட்டப்படி 25 ஆண்டுக் காலம் ஒரு அரசுப் பணியாளர் பணிபுரிந்திருந்தால் சராசரி ஊதியத்திலே 30/80 என்ற விகிதத்திலேதான் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. அதனை 1972 ஆம் ஆண்டு இந்த அரசு மாற்றியமைத்து 30/80 என்ற விகிதத்தை அதிகப்படுத்தி 33/80 என்ற விகிதத்தைக் கொண்டு வந்து இருக்கிறோம்.

அதைப்போலவே கிராஜுட்டி, பணிக்கொடைக்கு அதிகபட்சம் பதினைந்து மாத ஊதியம் என்று இருந்ததை பதினாரரை மாத ஊதியம் என்ற அளவில் உயர்த்தியிருக்கிறோம்.

அகவிலைப்படி போதாது என்று பொன்னப்ப நாடார் இங்கே ரொம்ப ஆதங்கப்பட்டுக்கொண்டார். அவர்களுடைய காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் எந்தவிதமான அகவிலைப்படியும் ஓய்வுபெற்ற அலுவலர்களுக்குத் தரப்படவில்லை. 1972 ஆம் ஆண்டுதான் அவர்களுக்கு அகவிலைப்படி, மற்ற அரசு ஊழியர்களுக்கெல்லாம் தந்தபோது ஐந்து ரூபாய் தரப்பட்டது. பிறகு 1972 இல் அது பத்து ரூபாயாக உயர்த்தப்பட்டது. மீண்டும் 1-10-1973 முதல் 15 ரூபாயாக ஆக்கப்பட்டது. மீண்டும் 1—10—1974 இல் அதுவும் 20 ரூபாயாக உயர்த்தப்பட்டு தரப்பட்டு வருகிறது. இப்போது 1—2—1975 முதல் இந்த அகவிலைப்படி 28 ரூபாய் என்கிற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

அதுமாத்திரமல்ல சராசரி ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு 12 மாதம் என்று இருந்ததை, பத்து மாதம் என்று குறைத்துக் கணக்கிடுவதால் அவர்களுக்கு இப்போது ஆதாயம் அதிகமாகக் கிடைக்கிறது





பணிசெய்யும் காலத்தில் ஏற்படும் இடையீடுகள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு ஓய்வூதியப் பணி காலம் கணக்கிடுவதற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஓய்வூதியம் பெற வயது வரும் நாளில் குறிப்பிட்ட நாளைக் கணக்கிடாமல் அந்த மாதக் கடைசிநாளைக் கணக்கில் எடுத்துகொள்ளப்படுகிறது. உதாரணமாக, ஒருவர் அந்த மாதத்தில் இரண்டாம் தேதி ஓய்வுபெறுகிறார் என்றால் அந்த இரண்டாம் தேதி வரை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் அந்த மாதம் கடைசி வரையில் அவரை வேலையில் இருக்க அனுமதித்து அதற்குச் சம்பளமும் தரப்பட்டு அந்தத் தேதிவரையில் கணக்கிட்டு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

நிலையான பதவி வகித்த எவரும் 1—10—1969 முதல் ஓய்வூதியம் பெற தகுதி உடையவர் ஆவார்.

குறைந்த அளவு ஓய்வூதியம் எப்படி இருந்தது என்றால் 1—3—1970 முதல் மாதம் ஒன்றுக்கு 30 ரூபாய் என்று இருந்தது. பிறகு 1—4—1972 முதல் அதை 40 ரூபாய் ஆக்கினோம். இப்போது அதை 1—4—1973 முதல் 50 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். ஓய்வூதியத்திற்கு இருந்துவந்த மேல்வரம்பு 1,800 ரூபாய் என்பதை நாம் நீக்கிவிட்டோம்.

மிக மிக முக்கியமாக, ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் மருத்துவச் சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அண்மையிலே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

ஓய்வு பெறுபவர்கள் ஓய்வு பெற்ற இடத்திலிருந்து சொந்த ஊருக்குப் போகிறபோது பயணப்படி வழங்க வேண்டுமென்ற கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறது.

ஓய்வூதியம் விரைவில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நல்லதொரு கருத்தை திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இங்கே சொன்னார்கள். அதிலே உள்ள சிக்கல்கள் தவிர்க்கப்பட்டு அது விரைவாகக் கிடைப்பதற்கு பண விடைத்தாள் (மணி ஆர்டர்) மூலம்கூட இன்றைக்கு அனுப்பப்படுகிறது. இருந்தாலும், அந்த ஓய்வூதியம் பெறுபவர்கள் பற்றி ஒப்புதல் கிடைப்பதற்கான சங்கடங்கள் இருக்கின்றன. அவைகளைப் போக்கி கூடிய விரைவில் இது கிடைப்பதற்கு அரசு தன்னாலான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திருமதி த.ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, இன்றைக்கும் பென்ஷனதாரர்கள் நியாயமான குறைகளைச் சொல்கிறார்கள். நீங்கள் half the D.A. என்று மற்றவர்களுக்குக் கொடுக்கும் டி.ஏ.யில் பாதியைத்தான் தருகிறீர்கள், அதை ஏன் முழுமையாகத் தரக்கூடாது? இன்னொரு விஷயம், பத்தாண்டுகளுக்கு முன்

கம்யூட் செய்திருந்தால், 10 ஆண்டுகளுக்குப் பிறகு பென்ஷன் முழுவதும் தர முயற்சிப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வாக்குறுதி என்னவாகும் என்றும் அறிய விரும்புகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, முதியோர்களுக்கு உதவித் தொகை வழங்குகிறோம். ஒருவர் செத்தால்தான் மற்றவரை லிஸ்டில் சேர்க்கிறார்கள். மேலும் 20 ரூபாய் என்று கொடுப்பது மிகவும் குறைவு. அது உயர்த்தப்படுமா என்பதற்கு முதலமைச்சரவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அம்மையார் அவர்கள் சொன்னதும், நண்பர் சுப்பையா அவர்கள் சொன்னதும் ஏற்ற வகையில், உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

விடுதலை வீரர்கள் ஓய்வூதியம் பற்றியும், இந்தி எதிர்ப்பு வீரர்கள் ஓய்வூதியம் பற்றியும், எல்லைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியம் பற்றியும் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது விடுதலை வீரர்களுக்கு, 1967-68ஆம் ஆண்டிலே 11 இலட்சம் ரூபாய் ஆண்டுக்கு வழங்கப்பட்டதற்கு மாறாக 1974-75-ஆம் ஆண்டில் ஏறத்தாழ 65 இலட்சம் ரூபாய் விடுதலை வீரர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 7,996 பேர் இதன் மூலம் பயனடைகிறார்கள். இன்னும் முடிவுறாத நிலையில் உள்ள விண்ணப்பங்கள் 978 தான் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

அதைப்போலவே இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றிய வீரர்களுக்கு ஓய்வூதியம் தருவதில் இருக்கும் சங்கடங்களைப்பற்றிச் சொன்னார்கள். அவைகள் டெல்லியிலுள்ள தலைமையிடத்தில் சரி பார்க்கப்பட வேண்டியிருக்கிறது. வருமானம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து விவரம் சேகரிக்கப்பட வேண்டியிருக்கிறது. சிறைத்தண்டனைபற்றி சிறை மேற்பார்வையாளர்களிடமிருந்து தகுதிச் சான்றிதழ் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. இந்த ரிகார்டுகள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டு இதனால் தடங்கல் இருக்கிறது. அவைகளையும் போக்குவதற்குத் துரிதமாக ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டுமென்று நான் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

தாமிரப் பட்டயம் வழங்குவதைப் பொறுத்தவரையில் மத்திய அரசு சார்பாக வழங்கப்பட்டது. நம்முடைய மாநில வீரர்கள் 2,356 பேர்களுக்குத்தான் கிடைத்தது. அவர்கள் நிர்ணயித்த விதிமுறைகளின்படி, எனவே, தமிழகத்திலே இருக்கின்ற இந்திய நாட்டின் விடுதலை வீரர்களுக்கு மத்திய அரசு வழங்காவிட்டாலும் மாநில அரசு தமிழக அரசின் சார்பில் வழங்க முடிவுசெய்து விடுதலை வீரர் பட்டயத்தை மேலும் 5,175 பேர்களுக்கு வழங்கியிருக்கிறது.

இந்தி எதிர்ப்பு வீரர்கள் சம்பந்தமாக இதுவரையிலே 629 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே போராட்டத்திலே ஈடுபட்ட எல்லைப்போராட்ட வீரர்களும், திருத்தணி



V211,31 N75 3,N25-70



எல்லைப் போராட்ட வீரர்களும் அடங்குவார்கள். மேலும் வரும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்கள் சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே, இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களைப் பற்றிய குறிப்புகள் சிறைச்சாலைத் தகவல்களில் எதுவுமே கிடைக்கவில்லை என்று. வேதனையோடு அவர் தெரிவித்தார். நான் கூட வேதனையோடு சொல்லிக்கொள்ளுவேன், 1965 ஆம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடைய தொகை பல லட்சக்கணக்கிலே இருக்கும் என்பதை அன்றைய தினம் முதலமைச்சராக இருந்த பெருமதிப்பிற்குரிய திரு. பக்தவத்சலம் அவர்களேகூட அறிந்திருக்கிறார்கள். ஆனால், அப்பொழுது இரண்டு மூன்று மாதங்கள் சிறைச்சாலையிலே இருந்தவர்களையெல்லாம் கூட—சொல்லவே எனக்கு நாக் கூசுகிறது—அப்படிச் சிறைச்சாலையில் இருந்தார்கள் என்று எந்தப் பதிவும் கூடச் செய்யாமல் அவர்கள் சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டு 2, 3 மாத காலம் சிறையிலே வைக்கப்பட்டு பிறகு விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களையெல்லாம் இன்றைக்குக் கண்டுபிடித்து அவர்களின் மனுக்களை ஆராய்ந்து வருகிறோம். இந்தி எதிர்ப்புப் போரா... ...ரும் எல்லைப் போராட்ட வீரர்களுக்கு உள்ள அதே கஷ்... ...கிறது. அவர்களுக்கு இந்த மனுக்களை ஆராய்ந்... ...வதில் சிரமம் இருக்கிறது. இருந்தாலும் அந்தச் சிரமங்... ...பாராமல், இவை சரியானவை என்று கருதப்படுகிற அந்த வி... ...ப்பங்கள் ஏற்கப்பட்டு அதற்கு ஆவன செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

61707

அடுத்து வறட்சி நிவாரண நிதி பற்றி .

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, ... தியாகிகளுக்கு ஜெயிலிலேயிருந்து கொடுக்கும் அத்தாட்சி இல்லா... ...மிருந்து தலைவர் யாராவது சர்டிபிகேட் கொடுத்தால் ... என்று சொன்னதைப்போல இந்தி எதிர்ப்பு தியாகிகளுக்கும் அந்த சான்றிதழ் வாங்குவதில் கடினமாக இருக்கிறது. பலருக்குக் கிடைக்கவில்லை. எனவே, அவர்களுடன் இருந்த சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது அமைச்சர்களோ சான்றிதழ்கள் கொடுத்தால் அவைகளை ஏற்றுக் கொள்ளும் வகையில் முதலமைச்சரவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, முன்பே நான் சொல்லியிருக்கிறேன். இதில் இலட்சக்கணக்கான மாணவர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் "கேரியர்" ஸ்பாயிலாகி இருக்கிறது. பலபேர் பட்டம்கூட வாங்க முடியவில்லை. அவர்கள் ஒவ்வொருவரையும் தேடிக் கண்டுபிடிப்பது கூடச் சிரமம். அப்படிப்பட்டவர்கள் அணுகும்பொழுது மானியம் கொடுக்காவிட்டாலும் அவர்களுக்கு அரசாங்க உத்தியோகம் கொடுப்பதிலேயாவது சலுகை காட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தி எதிர்ப்புப் போராட்டம் பல கட்டங்களில் நடந்திருக்கிறது. 1952-ல் கூட இந்த இரயில்வே ஸ்டேஷன்களிலே உள்ள எழுத்துக்களை அழித்து இரண்டு மூன்று மாதங்கள் சிறைத் தண்டனை பெற்றிருக்கிறார்கள். இராஜாஜி முதலமைச்சராக இருந்த காலத்தில்கூட பலபேர் சிறைச்சாலைக்குப் போயிருக்கிறார்கள். அவர்களையும் சேர்த்துக் கொள்ளப்படுமா? அது சம்பந்தமாக என்ன கூறுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, 1938 ஆம் ஆண்டிலே, இராஜாஜி அவர்கள் கட்டாய இந்தியைப் புகுத்திய காலத்திலேயிருந்து கணக்கிலே எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் திரு. வீராசாமி அவர்கள் கேட்டதைப் போலவும், நண்பர் திரு. சீனிவாசன் அவர்கள் கேட்டதைப் போலவும், இலட்சக்கணக்கான மாணவர்கள் பாழ்படுத்தப்பட்டார்கள், பாழ்பட்டார்கள், பலர் சிறைச்சாலையிலே இருந்ததற்கான அத்தாட்சிகள் இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்பட்டதைப்போல முன்னாள் அமைச்சர்கள் அல்லது காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் அல்லது குறிப்பிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் நற்சான்று வழங்கினால் வழங்கப்படுமா என்று கேட்கப்பட்டது. அப்படி வழங்கப்படும் நற்சான்றுகளையும் மீண்டும் ஒரு பரிசீலனை செய்து தான் நாமும் அவைகளை ஏற்றுக்கொள்கிறோமே அல்லாமல் எல்லா நற்சான்றுகளையும் ஏற்றுக் கொள்வது என்றால், பிறகு சட்ட மன்ற உறுப்பினர்கள் பாடு ரொம்ப ஆபத்தாகிவிடும். அமைச்சர்கள் அல்லது கட்சியின் தலைவர்கள் இவர்களெல்லாம் மிகுந்த பிரச்னைக்கு ஆளாகிவிடுவார்கள். அப்படியே வழங்கினாலும் கூட அவைகளையும் பரிசீலித்துத்தான் அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வறட்சிப் பணிகளைப்பற்றி ஏறத்தாழ 20 கோடி ரூபாய் அதற்காக இந்த ஆண்டு திட்டமில்லாத செலவாக வறட்சிப் பணிகளுக்கு மட்டும் செலவிடுவது என்று ஒதுக்கப்பட்டிருப்பதால் அதுபற்றிப் பல கருத்துக்கள் இந்த மாமன்றத்திலே எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

இதிலே நண்பர் திரு. ஆலடி அருணா அவர்கள் பேசும்பொழுது தேசிய நிதி என்று ஏற்படுத்தினால், அது இயற்கையின் சீற்றத்தால் இந்தியாவிலே எங்கே கஷ்டம் ஏற்பட்டாலும் அந்தத் தேசிய நிதியிலிருந்து எடுத்துக் கொள்ளலாம் என்ற வகையிலே கூறப்பட்ட மத்திய அரசின் யோசனையை ஆந்திரா, அசாம், குஜராத், ஹரியானா, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, மேகாலயா, நாகாலாந்து, ஒரிசா, தமிழ் நாடு, உத்திரப்பிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள் எதிர்த்ததைக் குறிப்பிட்டார்கள். இவ்வளவு மாநிலங்களும் எதிர்த்ததற்குக் காரணம் என்னவென்றால், ஏதோ நமக்கு தேசிய உணர்வு இல்லை என்று வேண்டுமானால் யாராவது தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றித் தவறான பிரச்சாரம் செய்பவர்கள் சொல்லிக்கொண்டிருக்கலாம். ஆனால் இவ்வளவு



மாநிலங்களும் சேர்ந்து எதிர்த்ததற்குக் காரணம் ஒவ்வொரு மாநிலமும் எந்த அடிப்படையில் இதற்கு நிதியைச் செலுத்த வேண்டுமென்பதிலும் அதை மத்திய அரசு தரும் மானியங்களில் சரிக்கட்டுவதா அல்லது மாநில அரசுகள் தனியாக இதற்காக நிதி செலுத்துவதா என்பதிலும் முடிவு செய்வது கடினமாகிவிடும் என்பதால்தான் நம்முடைய மாநிலம் கருத்து தெரிவித்தது. இதே வகையிலேதான் மற்ற மாநிலங்களும் கருத்தை அறிவித்தனவே தவிர ஏதோ தேசிய நிதி, துயர் தணிப்புககாக ஒதுக்கப்படுவதை தேவை இல்லை என்ற அளவில் நாம் கூறவில்லை. இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படும் என்றுதான் எல்லா மாநிலங்களும் கட்டுப்பாடாக அதனால் வரும் சங்கடங்களைக் கூறி தேவையில்லை என்று கூறினார்கள்.

ஆறாவது நிதி ஆணைக் குழுவின் வறட்சி நிதி பற்றிய கொள்கைக்கு ஏற்கெனவேயே இந்த அரசு ஒத்துக்கொண்டதாகக் கூறினார்கள்.

ஆறாவது நிதி ஆணைக் குழு இவைகளையெல்லாம் மாநில அரசுகளைக் கலந்து முடிவு எடுப்பதில்லை. தாங்கள் எடுத்த கருத்துக்களை அறிவிக்கிறார்கள். அந்தக் கருத்துக்களுக்கு மாறான கருத்துக்களை நாம் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டே வருகிறோம். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? வறட்சி நிதி கொடுத்தால் அதைத் திட்டத் தொகையில் கழித்துக் கொள்ள வேண்டுமென்பது ஆறாவது நிதிக் குழுவின் யோசனை ஆகும். அது இயலாதது. ஒரு வகையில் கொடுத்துவிட்டு ஒரு வகையில் அதைக் கழித்துக் கொள்வதால் திட்டங்கள் தேக்கப்பட்டுவிடும். திட்டங்களைச் செயல்படுத்த முடியாத சூழ்நிலை உருவாகும். ஆகவே, வறட்சி நிவாரண நிதியை அப்படிக் கழித்துக் கொள்ளக்கூடாது என்று நம்முடைய அரசு சார்பாக வாதித்து வருகிறது.

ஏதோ நம்முடைய மாநிலத்திற்கு வரவேண்டியதை இழந்து விடுவதா என்றெல்லாம் சொன்னார்கள்—ஆலடி அருணா அவர்கள் கொஞ்சம் வேகமாகக் கேட்டார்கள். இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் பேசுகிற நேரத்திலே கூட நல்ல வேளையாக சுப்பிரமணியத்தின் போக்கைக் கண்டித்துவிட்டு, இருந்தாலும் நம்முடைய அரசு மத்திய சர்க்காரிடத்திலிருந்து நிதியைப் பெற்றுக்கொள்ளலாம் என்று எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சுப்பிரமணியத்தின் அந்தப் பேச்சு கண்டிக்கத்தக்கது என்று கூறியபோது அந்த உள்ள உணர்வு, அவருக்கு இருக்கிற மனசாட்சியை நான் அறிந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1969-70 முதல் 1972-73 வரை இயற்கையின் சீற்றங்களால் ஏற்பட்ட சங்கடங்களைத் தீர்க்க மத்திய அரசு எந்த வகையில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் உதவி இருக்கிறது என்று எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் ஒரு முறை திரு. அருணாவே இந்த மன்றத்தில் பேசியதாக எனக்கு நினைவு. 1969-ல் இருந்து 1972-73 வரை கொடுக்கப்பட்ட உதவித் தொகை—

மராட்டியத்திற்கு மாத்திரம் 1969-73 வரை 103 43 கோடி ரூபாய் தந்திருக்கிறார்கள் துயர் தணிப்புக்காக.

ராஜஸ்தானுக்கு 91·01 கோடி ரூபாய்;

ஆந்திரத்திற்கு 82·43 கோடி ரூபாய்;

மேற்கு வங்கத்திற்கு 52·84 கோடி ரூபாய்;

குஜராத்திற்கு 43·64 கோடி ரூபாய்;

பீகாருக்கு 37·50 கோடி ரூபாய்:

தமிழ் நாட்டிற்கு 17·76 கோடி ரூபாய் 1969–73 வரை வழங்கியிருக்கிறார்கள்.

அங்கே எல்லாம் அதிகமாக வழங்கினார்கள், இங்கே குறைவாக வழங்கினார்கள் என்ற சர்ச்சைக்குக் கூட இடம் அளிக்காமல்—ஆனால் வழங்கப்படுகிற தொகையை நீங்கள் திட்டத்தில் கழித்துக்கொள்கிறீர்களே, அது சரியல்ல என்பதுதான் நம்முடைய அரசின் வாதம் இங்கிருக்கும் மற்றக் கட்சிக்காரர்கள் வாதமும் கூட அந்த வகையில்தான் அமைந்திருக்கிறது.

மற்ற மாநில அரசுகள் ஒரே கட்சியின் கீழ் உள்ள அரசுகளாக இருப்பதால் அவர்கள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தத்தளிக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் தங்கள் கருத்துக்களை நிதிக் குழுவிடத்திலும், திட்டக் குழுவிடத்திலும் நம்மைப் போல வெளிப்படையாக அறிவிக்காவிட்டாலும், அவர்களுக்கு இருக்கும் சங்கடங்களை மற்ற மாநில முதலமைச்சர்களுடன் தெரிவித்திருக்கிறார்கள். அவ்வளவுதான்.

ஏதோ சுப்பிரமணியம் அவர்கள் இங்கு வந்து பேசிய பிறகு அவர் நிதியமைச்சராக அங்கு இருக்கும் வரை பணம் தேவையில்லை, வாங்க மாட்டோம் என்று நாம் அறிவித்துவிட்டு அதற்குப் பிறகு இன்னொரு நிபந்தனை விதித்தேன். நான் பின்வாங்கிவிட்டேன் என்றெல்லாம் கருத்துப்பட இங்கே பேசப்பட்டது. சுப்பிரமணியம் அவர்கள் கணக்குப் பார்த்துத் தான் தரப்படும் என்று தியாகராய நகர் கூட்டத்தில் அறிவித்தார். அதற்குப் பிறகு நாம் வறட்சி நிவாரண நிதி திரட்ட ஆரம்பித்ததும் 'அவரும், அவரைச் சார்ந்திருக்கும் கட்சியினர், அவர்களுடைய தோழமைக் கட்சியினர் எல்லாம் வறட்சி நிவாரண நிதி தரமுடியாது, தருவதைத் தடுப்போம் என்ற அளவில் பேசிக்கொண்டிருந்துவிட்டு, அவரே அவருடைய ஒரு மாத ஊதியத்தை தமிழக அரசு திரட்டுகிற வறட்சி நிதிக்கு தந்தார். அதற்காக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டேன். அதற்குப் பிறகு அவரே தமிழ் நாட்டில் உள்ள பல பகுதிகளுக்குச் சென்று வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டார். பணிகள் செம்மையாக நடைபெறுகின்றன என்ற பாராட்டுதலையும் அறிவித்துவிட்டு டில்லிப் பட்டணத்திற்குத் திரும்பச் சென்றார்.

அவைத் தலைவர் அரங்கண்ணல் குறிப்பிட்டதுபோல் இன்னும் அடுத்த ஒதுக்கீட்டுக்கான மதிப்பீட்டைத் தமிழக அரசு அனுப்பி வைக்கவில்லை என்று சுப்பிரமணியம் குறிப்பிட்டதாகக் கூறினார். உண்மைதான், அனுப்பி வைக்கவில்லை.





கவர்னர்கள் மாநாட்டில் கூட கவர்னர் அவர்கள் நமது கருத்தை வற்புறுத்தி யிருக்கிறார்கள். நாம் எடுத்திருக்கும் நிலை வறட்சிக்காகத் தரப்படுகிற பணம் திட்டத்திலிருந்து கழித்துக் கொள்ளப்படக் கூடாது என்பதாகும்., இது ஏதோ சுப்பிரமணியம் பிரச்சினைக்குப் பிறகு எடுத்த முடிவு என்று யாரும் கருதத் தேவையில்லை.

1975–76–ம் ஆண்டு நிதி நிலை அறிக்கை இந்த மன்றத்தில் மார்ச் திங்கள் முதல் நாள் இந்த அவையில் படிக்கப்பட்ட போதே 7 ஆம் பக்கத்தில் நான் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அதில்,

"......................துயர் தணிப்புப் பணிகளுக்காக மத்திய அரசிடம் நாம் கோரும் உதவி, கூடுதல் நிதி வசதியாகவே அமைய வேண்டும். மத்திய அரசிடம் நாம் கேட்கும் தொகை, வரும் ஆண்டுகளில் மத்திய அரசு தரும் இயல்பான திட்ட நிதி உதவியை முன்னதாகவே தருவது என்று அமைந்து, அடுத்த ஆண்டுத் திட்டத்தில் குறைக்கப்பட்டு விட்டால், நமக்குப் பயன் எதும் இராது. வெறும் கணக்கு வழக்காக எட்டளவில் இல்லாமல, உண்மையான நிதி உதவி, மத்திய அரசிடமிருந்து நமக்குக் கிட்ட வேண்டுமென்பதே நமது கருத்து" என்று சொல்லியிருக்கிறேன்.

இந்தக் கருத்தைத்தான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லி வருகிறோம். இப்போதும் சொல்கிறோம். கவர்னர் பெருமான் டில்லிக்குச் சென்றபோது விவாதித்த நேரத்தில் ஆளுநர் அவர்களிடத்தில் அதைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். இதைக் கழித்துக் கொள்வது என்றால் ஐந்தாவது திட்ட காலத்தில் இதைக் கழித்துக்கொள்ள வேண்டாம். ஆறாவது திட்ட காலத்தில் வேண்டுமானால் கழித்துக் கொள்வது பற்றி பிறகு முடிவு எடுக்கலாம் என்று கூறினேன். அந்தக் கருத்தை வலியுறுத்த வேண்டும் என்ற என்னுடைய கருத்தை ஆளுநர் அவர்களிடத்தில் எடுத்துச் சொன்னேன். அவர்கள் அங்கு அதைப் பிரதிபலித்திருப்பதாகக்கூட பத்திரிகையில் கண்டிருக்கிறோம்.

ஏனென்றால், இது 1975–ம் ஆண்டு. 1976–ம் ஆண்டு நாங்களே தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தச் சர்க்காருக்கு வரலாம், அல்லது காங்கிரஸ் கட்சியே தேர்ந்தெடுக்கப்பட்டு சர்க்காருக்கு வரலாம் அல்லது இப்போதே யார் யார் எந்தெந்த அமைச்சர்கள் என்று அறுதியிட்டுக் கொண்டு மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற வேறு சில கட்சிகளும் இங்கே அமைச்சரவைக்கு—இந்த அரசுக்கு வரலாம். அப்படி வருகிற நேரத்தில் நாங்கள் அந்தப் புதிய அரசுக்கு இப்படிப்பட்ட ஒரு தொல்லையை ஏற்படுத்திவிட்டுப் போக எண்ணவில்லை, நினைக்கவில்லை.

ஏனென்றால், இப்போது, 20 கோடி, 25 கோடி ரூபாய் தந்து விட்டு அடுத்த ஆண்டு இந்த அரசுக்கு ஒதுக்கப்படுகிற திட்டத் தொகையில் மத்திய அரசு உதவித் தொகையில் 70 சதவிகிதம் கடனாகவும், 30 சதவிகிதம் மானியமாகவும் தருவதிலே ஐந்நூறு கோடி ரூபாயை அடுத்த ஆண்டே கழித்துக்கொள்வது என்றால் அடுத்த ஆண்டு—1976-77-ம்

ஆண்டுத் திட்டம் மிக மிகச் சங்கடத்திற்கு ஆளாகும். அப்போது அமைகிற புதிய சர்க்கார் அந்த வேதனையைச் சந்திக்க வேண்டிய துன்பகரமான ஒரு சூழ்நிலைக்கு ஆளாகும். இவைகளை எல்லாம் மனதில் வைத்துத் தான் நாம் சொல்லுகிறோம். இதற்குப் பிறகாவது எட்மண்ட் போன்றவர்கள், நியாயமாகத்தான் வாதிடுகிறார்கள் இப்போதுள்ள அரசினர் என்று கருதுவார்கள் என்று எண்ணுகிறேன்.

வறட்சி நிவாரணத்திற்காக என்ற தலைப்பில் கொடுத்துவிட்டு பிறகு திட்டத் தொகையில் கழித்துக்கொண்டால் விளம்பரத்திற்கு தெரியும். மத்திய சர்க்கார் வறட்சிக்காக இத்தனை கோடி ரூபாய் தமிழகத்திற்குத் தந்தது என்பது ஆனால் உண்மையான நிலை என்ன? உண்மை நிலை திட்டங்களில் அந்தந்த தொகை கழித்துக் கொள்ளப்பட்டு அரசு சங்கடத்திற்கு ஆளாக நேரிடும். ஆகவேதான் நான் விதித்திருக்கும் நிபந்தனை கூட அல்ல இன்றைக்கு வைத்திருக்கும் கோரிக்கை இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கழித்துக் கொள்ளாமல் பிறகு ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே கழித்துக் கொள்வதைப் பற்றி யோசிக்கலாம் என்ற வகையில் கருத்துகள் இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்றது—டில்லி சர்க்காருக்கு. மற்ற மாநில அரசுகளும் இதே கருத்தைத் கொண்டிருக்கும் என்றாலும் அவர்களை வெளிப்படையாக அறிவிப்பார்களா இல்லையா என்பது வேறு விஷயம். இந்தியத் திருநாட்டில் தமிழக மாநிலத்தில் இருக்கும் இந்த அரசு மற்ற மாநிலங்கள் சார்பாக வாதிடுவதை மற்ற மாநில அரசுகள் நிச்சயமாக மனமார வெளியே சொல்ல அச்சம் இருந்தாலும்கூட பாராட்டுவார்கள் என்று நான் கருதுகிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: முதலமைச்சர் அவர்கள் கூறியதிலிருந்து மற்ற மாநிலங்களுக்கு வறட்சி நிதிக்காக மத்திய அரசு கொடுத்த தொகை உள்ளபடியே பலமடங்கு அதிகமாக இருக்கிறது. மத்திய சர்க்கார் இந்த முறையின் மூலம் திட்டத் தொகையில் சேர்ப்பது மூலமே பாரபட்சம் இல்லாமல் பின்னால் திட்டத்திற்குப் போராடி பஞ்ச நிவாரணத்திற்கும் சேர்த்துக் கேட்கலாம் அல்லவா? மகாராஷ்டிராவுக்கு அவ்வளவு பணம் கொடுத்திருக்கிறார்கள், பஞ்ச நிவாரணம் என்ற பெயரில் சலுகையாகக் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் சொன்ன அந்தக் கணக்கு விவரங்கள் எல்லாம் ஆறாவது நிதிக் குழுவுக்கு முந்தியவை. இப்போது சொல்லப்பட்ட விவரங்கள் ஆறாவது நிதிக் குழுவால் வந்திருக்கிற விளைவுகள்.

திரு. ஆலடி அருணா: மத்திய சர்க்கார் திட்ட ஒதுக்கீடு பணத்தில் இருந்து பிடித்துக் கொள்ள வேண்டுமென்று வந்ததற்குக் காரணமே மத்திய சர்க்கார் பிற மாநிலங்களுக்கு அரசியல் அடிப்படையில் அதிகமான



அளவுக்கு செலவழிக்கும் அளவுக்கு நடந்துகொண்ட காரணத்தால்தான் முறையாக, கட்டுப்பாடாக கொடுக்க வேண்டுமென்ற முறையில்தான் இப்படி ஒரு முறையைக் கொண்டுவர வேண்டுமென்று நிதி ஆணைக் குழு கொண்டு வந்திருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பரவாயில்லை, நண்பர் அருணா அவர்கள் மத்திய சர்க்கார் இந்த நிதியை எல்லாம் அரசியல் அடிப்படையில்தான் வழங்குகிறது என்று ஆறாவது நிதிக்குழு சுட்டிக் காட்டியிருப்பதை எடுத்துக் காட்டியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய சர்க்கார் அரசியல் அடிப்படையில்தான் இதையெல்லாம் செய்கிறது. அரசியல் அடிப்படையில், திட்டத் தொகையில் கழித்துக் கொள்வதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? அதைக் கேட்டுச் செய்யலாம்.

திரு. ஆலடி அருணா: கடந்த காலத்தில் அப்படி நடந்தது மத்திய சர்க்கார். மற்ற மாநிலங்கள் அதைத் தவிர்க்க இந்த முறை ஓரளவு நல்ல முறை கூட. இப்போது அவர்கள் 30 சதவிகிதம் மானியமாகத் தருகிறார்கள், அதனால் அதிகப் பணம் கிடைக்குமே, அதை ஏன் இழக்க வேண்டும் என்றுதான் நண்பர் சீனிவாசன் கேட்கிறார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது 20 கோடி ரூபாய் கொடுத்துவிட்டு அடுத்த ஆண்டுத் திட்டத்திலே 5 கோடி ரூபாய் கழித்துக் கொள்ளலாம் என்று வந்தால் நமக்கு அடுத்த ஆண்டு திட்டத்திற்கு சென்ட்ரல் அசிஸ்டென்ஸ் 40 கோடி என்று கணக்கிட்டு அதிலே 5 கோடி கழித்து 35 கோடி தான் சென்ட்ரல் அசிஸ்டென்ஸ் கிடைக்கும்.

(பிற்பகல் 1.30).

பிறகு நாம் ரிசோர்ஸஸ்-ஐ பெருக்கவேண்டியிருக்கும். இப்படிப்பட்ட சங்கடங்கள் பொருளாதார ரீதியில் எல்லா மாநிலங்களாலும் இன்றைக்கு எடுத்து வைக்கப்பட்டிருக்கிற சங்கடங்களாகும். ஏதோ மத்திய அரசுக்காக வாதாடுவதற்காக நம்முடைய மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்க முனைவது நல்லதல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: மத்திய அரசு செய்தது தவறாக இருந்தால் நாங்களும் உங்களோடு சேர்ந்து கண்டிக்கிறோம். மத்திய அரசு வறட்சிப் பணிகள் என்ற பெயரால் மற்ற மாநிலங்களுக்குக கூடுதல் தொகை ஒரு காலத்தில் அந்த தொகையை எதிர்காலத்திலும் தரக் கூடும். அதைத் தடுப்பதற்கு இது ஒரு செக் பாய்ண்ட்டாக இருக்கலாம் அல்லவா? அதை இப்போது பயன்படுத்திக்கொள்ளலாம். பின்னால் எப்போதாவது கூடுதல் பணம் வேண்டுமென்றால் போய்க் கேட்கலாமே.

திருமதி த. ந. அனந்தநாயகி: மற்ற மாநிலங்கள். பஞ்சப் பிரதேசங்கள்—எங்கெங்கு பஞ்சம் வருகிறது என்று அவைகளை பஞ்சப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள். நீங்கள் அப்படி பிர

கடனப்படுத்திருேம் என்று சொல்கிறீர்களா? சில சில காரியங்களைத்தான் செய்திருக்கிறோம். மகாராஷ்ட்ராவில் அவர்கள் அவ்வளவு பணம் வாங்கியிருக்கிறார்கள் என்றால்—

You do not declare the entire district as a famine area. The entire Maharashtra has been declared as a famine stricken State.

அவர்கள் அப்படிப் பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள். நீங்கள் அப்படி பிரகடனப்படுத்தவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒரு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே நோட்டிபை செய்த விவரங்களைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் இருப்பது சரியல்ல. எங்கெங்கு வறட்சி இருக்கிறதோ அந்தப் பகுதிகள் அனைத்தும் வறட்சிப் பகுதிகள் என்று நோட்டிபை செய்யப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடு) 130 அல்ல, 11,000 க்கு மேற்பட்ட கிராமங்கள்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 76,000 கிராமங்களில் 51,000 க்கு மேற்பட்ட கிராமங்கள் வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The Hon. Chief Minister says 11,000 villages. The Revenue Minister says 51,000 villages ....

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தமிழ் நாடு பூராவும், மொத்தமாக உள்ள 76,000 கிராமங்களில் 51,000 கிராமங்கள் வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆலடி. அருணா : இதில் சொல்லப்பட்டிருக்கிறது.

" The expenditure which stood at Rs. 151·87 crores in 1969-70 crose to an all Time peak of Rs. 318 crores in 1972-73".

இந்த அளவிற்கு வறட்சிப் பணிகள் என்ற பெயரால் பிற மாநிலங்கள் வாங்கியிருக்கின்றன. நமக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பங்கு கிடைக்கவில்லை. ஆகவே, மத்திய அரசு செய்த தவறை அல்லது தவறான வழியைக் கண்டிக்கும் நேரத்தில் இப்போது கிடைப்பதை வாங்கிக் கொண்டு பின்னால் வேண்டுமென்றால் பணத்திற்கு எழுதலாம். இப்போது மானியம் 30% கிடைப்பதை நாம் பெற்றுக்கொள்ளாமல் இருப்பது சர்க்கார் தவறு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் சொன்னது டெவிஷ்யு வில்லேஜ்களைப் பற்றிச் சொன்னேன். அதில் ஒன்றும் குழப்பம் இல்லை. அவர்கள் சொல்கிறார்கள் - ஏன் வாங்கிக் கொள்ளக்கூடாது? ஏன் வாங்கிக் கொள்ளக்கூடாது என்றால் புறம்படியும் அரசியல் காரணத்திற்குத் தான் அவர்கள் இன்றைக்குப் பயன்படுத்துகிறார்கள். வறட்சி நிவாரணத்திற்குப் இவ்வளவு பணம் தந்தோம் என்று அறிவித்துவிட்டு திட்டத் தொகையில் ரகசியமாகக் கழித்துக் கொள்கிறார்கள். அதற்காகத்தான



வேண்டாம் என்று சொல்கிறோம். திட்டத் தொகையில் கழித்துக் கொள்ளக்கூடாது, திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக வறட்சி நிவாரணச் செலவுகள் நடைபெற வேண்டும் என்பது நம் கொள்கை. அது சுப்பிரமணியம் விவகாரத்திற்குப் பிறகு வகுத்த கொள்கை அல்ல. மார்ச் 1-ம் தேதி நம் வரவுச் செலவுத் திட்டத்தில் இந்தக் கொள்கையை வகுத்திருக்கிறோம். அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் இன்றைக்கும் நின்று கொண்டிருக்கிறோம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வேண்டுமானால் வேறு கொள்கை இருக்கலாம். அவர்களுக்கு, எப்படியும் பணம் தந்தால் போதும், அந்தப் பணத்தை வாங்கிச் செலவழிக்கலாம், திட்டம் தொலைந்தாலும் பரவாயில்லை என்று எண்ணுவார்களேயானால் அதை நாம் ஆவலோடு எடுத்துக் கொள்ள முடியாது.

நமக்கிருக்கிற ஆவல் எல்லாம் திட்டப் பணிகள் நடைபெற வேண்டும். இன்றைக்கு திட்டத்தொகையில் சேராத அளவிற்கு இயற்கையின் சீற்றத்தால் திடீரென்று வந்துவிட்ட இந்த வறட்சி நிவாரணப் பணிகள் நிறைவேற வேண்டும். அதற்குத் தனியாக பணம் வேண்டும் என்பதுதான் நம் கருத்தாகும். அந்தக் கருத்தைதான் இன்றைக்கு மத்திய அரசிடம் நாம் வலியுறுத்தி வருகிறோம். மத்திய அரசு அந்தக் கருத்தை ஒருவேளை ஏற்றுக் கொள்ளக்கூடும் என்று கருதுகிறேன்.

அதற்கிடையில் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளாத அளவிற்கு தடங்கலாக உறுப்பினர்களின் வாதங்கள் இருத்தலாகாது என்று இங்கு எடுத்துக் கூறி இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட பல்வேறு கருத்துக்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொண்டு, சில சில தனிப்பட்ட குறைபாடுகள் இவைகளைப் பற்றியெல்லாம் இங்கு எடுத்துச் சொல்லப்பட்டன, அவைகளை எல்லாம் அதிகாரிகள் கவனித்து ஒழுங்கு செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெறும் என்று கூறிக் கொண்டு இந்த அளவில் அமைகிறேன். வணக்கம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சென்ற முறை சொல்லப்பட்டது, சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் ரெயில்வே பாஸ் கொடுக்கப்படும் என்று. இன்று ................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு டிமாண்ட் இருக்கிறது. அதில் கேட்கலாம்.

திரு. எம். சுரேந்திரன் : ஆறாவது நிதிக் கமிஷனில் வறட்சிகள், வெள்ளங்கள் இவற்றிற்கு நிதி வழங்குவதில் எல்லாயிடங்களுக்கும் ஒரே கொள்கை இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு கொள்கை வகுத்து அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் நம்முடைய மாநிலத்திற்காக ஒரு கோடி ரூபாய் தந்திருப்பதாக புள்ளி விவரம் இருக்கிறது. அதை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரசங்கம் வேண்டாம்.

__திரு. எம். சுரேந்திரன் :__ எல்லா மாநிலங்களும் சந்தர்ப்பம் வரும் போது வறட்சி என்று சொல்லி தனித்தனியாக பணம் செய்து கொண்டிருக்கிற மாதிரி சொல்லப்படுகிறது. எல்லா மாநிலங்களுக்கும் ஒரே கொள்கை அடிப்படையில் இருக்க வேண்டுமென்று அதன் அடிப்படையில் நாலரை அல்லது ஐந்து கோடி ரூபாய் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தர வேண்டும் என்று, கணக்கிட்டு அதில் நம் பங்கு எவ்வளவு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, அப்படி அந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டதற்குப் பின்னால்.........

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ இதுவா விளக்கம் பெறுவது ?

__திரு. பெ. சீனிவாசன் :__ முதல் அமைச்சர் அவர்கள் ஒரு ஸ்டாண்ட் எடுத்திருக்கிறார்கள்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ திருப்பித் திருப்பிக் கேட்க வேண்டிய தில்லை. அவர்கள் தெளிவாகச் சொல்லி விட்டார்கள். மறுபடியும் விளக்க வேண்டியதில்லை. அந்தப் பொருளை விட்டு வேறு பொருள் இருந்தால் சொல்லுங்கள்.

__திரு. பெ. சீனிவாசன் :__ இப்போது முதல் அமைச்சர் அவர்கள் நிதி திரட்டி வறட்சி நிவாரணம் செய்வதாகச் சொல்கிறார்கள். மத்திய அரசின், திட்டத்திற்குப்பட்ட பணத்தை வாங்க முடியாது என்று சொல்கிறார்கள். அதனால் வறட்சி நிவாரணப் பணிகள் பாதிக்கப்படுமா? சேர்க்கப் படுகிற தொகை வறட்சி நிவாரணத்திற்கு போதுமானது என்று முதல் அமைச்சர் கருதுகிறார்களா ? அப்படி கருதவில்லை என்றால் வேறு மாற்று வழி என்ன ?

__மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :__ இப்போது சேர்க்கப்படுகிற தொகை போதுமானது என்று நான் சொல்லவில்லை. அந்தத் தொகை இன்னும் ஓரளவுக்குக் கூடுதலாக வரக்கூடும். அதுவும் போதுமானதாக இருக்காது. இருந்தாலும் நம் திட்டக் தொகையை மத்திய அரசிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டு வருகிறோம். அந்தத் திட்டத் தொகையை அதிகமாகத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு வருகிறோம். அந்தத் தொகையை அவர்கள் வழங்கியாக வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகிறோம். எப்படியும் சமாளித்து விடுவோம்.

மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் நிலைமையை உணர்ந்து இந்த மாநிலத்திற்கு மாத்திரமல்ல, எல்லா மாநிலங்களுக்கும் திட்டம் அல்லது திட்டத் தொகை அல்லாத வகையில் இந்த வறட்சிப் பணிகளுக்குத் தருவது என்கின்ற முறையை வகுத்துக் கொள்ளவும் எல்லாத் திட்டங்களையும் ஏற்கின்ற வகையில் இல்லாவிட்டாலும் இந்த ஆண்டுக்கு வருகிற ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கழித்துக் கொள்ள லாம் என்ற வகையில் இல்லாது, ஒரு திட்டக் காலத்தை தள்ளிப்போடுகிற வகையில் மத்திய அரசு முன்வந்தால் நமக்கு பயன் உள்ளதாக இருக்கும். இல்லாவிட்டால் நான பட்ஜெட் உரையில் குறிப்பிட்டதுபோல் வெறும் எட்டளவு கொடுக்கிற அளவிற்குத்தான் அது இருக்கும்.



__திரு. கோவை செழியன் :__ மாண்புமிகு முதல் அமைச்சர் சொல்லும் போது இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கிய நிதியை பின்னால் அவர்கள் திருப்பித் தரமாட்டார்கள். ஆகவே அதை நான் கேட்கவில்லை என்ற முறையில் சொன்னார்கள். இப்போது உடனடியாக தேவைப்படுகிறது. நான் சொல்வது அந்தப் பணத்தை வாங்கிக் கொள்ளுங்கள். அந்தத் திட்டத்திற்கு தேவைப்படும். இப்போது அதைப் பயன்படுத்திக்கொண்டு பின்னால் திட்டத்திற்கு பணம் குறையும் என்றால் அப்போது போராடி வாங்கிக் கொள்ளலாம். இப்போது கிடைக்கிற பணத்தை முதலில் வாங்கிக் கொண்டு பின்னால் வேண்டுமானால் சண்டை போடலாம்.........

__மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :__ ஒருவேளை அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள சில உறுப்பினர்களின் முறையாக இருக்கலாம். வாங்கவேண்டியதை எல்லாம் வாங்கிக் கொள்வது, பிறகு கொடுத்தவர்களை ஏமாற்றிவிடுவது, அந்தக் கொள்கை கூடாது, அது எங்களுக்கு ஒத்து வராது.

நிதிச் கோரிக்கை 2-க்கு கொடுக்கப்பட்டிருந்த திரு. பி. வெங்கடசாமி, திரு. எம். சுரேந்திரன், திரு. கே. எ. வகாப் ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப்பெறப்பட்டன.

திரு. கே. பி. கோபால், டாக்டர் எச்.வி. ஹாண்டே ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்கள் வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப்பெறப்பட்டன வாகக் கருதப்பட்டன.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ பேரவை முன்னுள்ள கேள்வி :

" நிதிக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின் கீழ் ரூ. 62,77,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் "

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 8-க்கு கொடுக்கப்பட்டிருந்த திரு. பி. வெங்கட சாமி, திரு. ஜே. ஜேம்ஸ், திரு. பெ. சௌந்தரபாண்டியன், திரு. கே.எ. வகாப் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ பேரவை முன்னுள்ள கேள்வி :

" நிதிக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,94,86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கபபட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

[1975 ஏப்ரல் 8

நிதிக் கோரிக்கை எண். 9-க்கு கொடுக்கப்பட்டிருந்த திரு. பி. வெங்கடசாமி, திரு. க. உரொ. எட்மண்ட், திரு. சோ. அழகர்சாமி, திரு. ஜே. ஜேம்ஸ், திரு. எம். சுரேந்திரன் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

" நிதிக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,32,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண். 41-க்கு கொடுக்கப்பட்டிருந்த திரு. எம். சுரேந்திரன், திரு. பெ. சௌந்தரபாண்டியன், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. கு. அ. பொம்மன், திரு. சோ. அழகர்சாமி ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "நிதிக் கோரிக்கை எண் 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 20,00,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண். 42-க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்த டாக்டர் எச். வி. ஹாண்டே இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பட்டதாக கருதப்பட்டது.

திரு. என். டென்னிஸ், திரு. பி. வெங்கடசாமி, திரு. கே. டி. கே. தங்கமணி, ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : " நிதிக் கோரிக்கை 42—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,23,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும். "

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



1975 ஏப்ரல் 8]

நிதிக் கோரிக்கை எண். 43-க்கு கொடுக்கப்பட்டிருந்த திரு. என். டென்னிஸ், திரு. பெ. சௌந்தரபாண்டியன் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : " நிதிக் கோரிக்கை எண் 43—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 24,51,32,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண். 46—க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்த டாக்டர் எச்.வி. ஹாண்டே இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பட்டதாக கருதப்பட்டது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி " நிதிக் கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,54,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும். "

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண். 57-க்கு கொடுக்கப்பட்டிருந்த திரு.சோ. அழகர்சாமி, திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : " நிதிக் கோரிக்கை எண். 57—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 42,31,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-43-மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

(3) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. STATUTORY RULES AND ORDERS

*'Nil.'*

## B. REPORTS, NOTIFICATIONS AND OTHER PAPERS.

@ 157. A Review of the Working of the Stationery and Printing Department during the year 1974-75 (English and Tamil).

@ 158. Speech of Hon. Thiru S. Ramachandran, Minister for Transport on Demand No. 44—Stationery and Printing, 1975-76 (English and Tamil).

@ 159. A Review on the Administration and Enforcement of Prohibition and Excise Laws in Tamil Nadu State during 1974-75 (English and Tamil).

@ 160. Policy Note relating to Youth Service Corps, 1975-76 (English and Tamil).

@ 161. Errata to Review on Road Transport in Tamil Nadu 1974-75 (English).

% 162. The recommendations made by "The Transport Experts Committee" [*vide* Assurance given by Hon. Minister for Transport while answering question No. 460 (Legislative Assembly) on 25 th March 1975].

% 163. Errata to Review on Road Transport in Tamil Nadu (Tamil).

---

@ Despatched to members on 5th April 1975.

% Laid on the table of the House on 7th April 1975.



### இணைப்பு I

[1-ம் பக்கத்தில் 581-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குறிய விடையைக் காண்க.]

### THE NATURE OF POWERS DELEGATED AND THE OFFICERS TO WHOM THEY HAVE BEEN DELEGATED.

| *Serial number and nature of the power delegated.* | *Designation of the Officer to whom it has been delegated.* |
|---|---|
| (1) | (2) |
| 1. Power to condone shortage of working days in schools. | District Educational Officers in respect of Elementary, Higher Elementary, High Schools and Special Schools for Boys and Inspectresses of Girls Schools in respect of High Schools and Special Schools for Girls. |
| 2. Power to grant age exemption up to six months in deserving cases for admission of under-aged pupils in all standards except Standard I. | District Educational Officers/ Inspectresses of Girls School and Inspectresses of Anglo-Indian Schools, as the case may be. |
| 3. Release of advance grants to Midday Meals Centres in Panchayat Union areas. | District Educational Officers (with effect from the grant due for the quarter beginning on 1st July 1974). |
| 4. Migration of students from one High School to another permission to offer certain subjects for S S.L.C. after studying the subjects privately. | Chief Educational Officers in respect of Boys' as well as Girls' Schools. |
| 5. Migration of students—Permission to condone entries in the S.S.L.C. book regarding their study in Standards IX or IX and X as the case may be. | Chief Educational Officers. |

| *Serial number nature of the power delegated.* (1) | *Designation of the Officer to whom it has been delgated.* (2) |
|---|---|
| 6. Transfers and postings of School Assistants and Deputy Inspector of Schools, etc., in the Tamil Nadu Educational Subordinate Service. | Chief Educational Officers within their respective jurisdictions and outside the respective jurisdiction, if both the Chief Educational Officers concerned mutually agree. If they do not agree, such cases shall be referred to the Joint Director of School Education for orders. |
| 7. Office of the Director of School Education, Audit-staff Decentralised. | The Accounts of the Aided High Schools, Training Schools, Boarding Homes and Orphanages are audited by the Deputy Inspectors (Accounts). All of them were attached to the Office of the Director of School Education, Madras. They are now ordered to be stationed at the respective Office of the Chief Educational Officers. |
| 8. Transfers and postings of Commercial Instructors employed in Government High Schools under Bifurcated Courses. | Chief Educational Officers within their jurisdiction and outside the jurisdiction and also, when the concerned Chief Educational Officers mutually agree. If they do not agree, such cases shall be referred to the Joint Director of School Education for orders. |
| 9. Admission of over and above the prescribed number of pupils in classes in Anglo-Indian Schools. | Full powers to the Inspectresses of Anglo-Indian Schools. |
| 10. Power to condone the deficiency in the minimum of seventeen hours of work per week to Class Teachers. | District Educational Officers/ Inspectresses of Girls Schools. |



| *Serial number and nature of the power delegated.* (1) | *Designation of the Officer to whom it has been delegated.* (2) |
|---|---|
| 11. Grant of leave other than special disability leave to Gazetted Officers in the School Education Department. | Chief Educational Officers in respect of grant of leave to District Educational Officers, Inspectresses of Girls Schools and Gazetted Headmasters and Headmistresses in their jurisdiction, when the period of leave does not exceed one month. |
| 12. Powers to issue postings to the Officers borne on the Tamil Nadu Educational Service. | Power to repost District Educational Officers, Inspectresses of Girls Schools, Headmasters and Headmistresses to the same post on return from leave when the period of leave does not exceed one month has been delegated to Chief Educational Officers. |
| 13. General Provident Fund sanction of temporary advances (Ordinary)—Delegation of powers. | Chief Educational Officers concerned in respect of Gazetted Officers lower in rank than of Chief Educational Officers in the School Education Department. District Educational Officers concerned in respect of all non-Gazetted Officers in the School Education Department. |
| 14. Powers to the Chief Educational Officers in regard to sanction of leave. | Chief Educational Officers are empowered to sanction leave for following personnel.<br>1. All members borne on the Tamil Nadu Educational Subordinate Service including the members of the staff appointed for the bifurcated |

| *Serial number and nature of the power delegated.* (1) | *Designation of the Officer to whom it has been delegated.* (2) |
|---|---|
| | courses under their jurisdiction in respect of whom the authority competent to make appointments is the Joint Director of School Education.<br><br>2. Superintendents/Head clerks and Assistants in Tamil Nadu Ministerial service and who are employed in their own office and institutions in their jurisdictions.<br><br>3. Head clerks and Assistants in the Offices of the Inspectresses of Girls Schools situated in the Headquarters of the Chief Educational Officers concerned. |
| 15. Sanction of leave and increment to all non-gazetted Government Servants in the Office of the Director of School Education. | Personal Assistant to the Director of School Education. |
| 16. Power to sanction Boarding grants to the Indian Homes for Children. | District Educational Officers (for a period of one year in the first instance). |
| | Apart from this the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Act, 1973 and the rules under that Act also confer many powers on the Chief Educational Officers and District Educational Officers. |



## இணைப்பு II.

(20-ம் பக்கத்தில் 591-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

(அ) கும்முடிப்பூண்டி, எல்லாப்புரம் ஊராட்சி ஒன்றியங்களில் பள்ளிக் கட்டிடங்கள் இன்னும் கட்டப்படாமல் உள்ள கிராமங்களைக் காட்டும் விவர அறிக்கை ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(இ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 91 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் (79 தொடக்கப்பள்ளிகள், 12 உயர் தொடக்கப் பள்ளிகள்) 42 பள்ளிகளுக்கு (1 உயர் தொடக்கப் பள்ளி, 41 தொடக்கப் பள்ளிகள்), இன்னும் சொந்தக் கட்டிடங்கள் கட்ட வேண்டியுள்ளன என்று செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். 13 தொடக்கப்பள்ளிகளுக்கான கட்டிடப் பணிகள் 1974–75 ஆம் ஆண்டில மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன என்றும் அவர் அறிவித்துள்ளார். மேலும் எஞ்சிய 29 பள்ளிகளுக்கான கட்டிடங்கள் அடுத்து வரும் ஆண்டுகளில் படிப்படியாகக் கட்டி முடிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் மொத்தமுள்ள 78 ஊராட்சி ஒன்றியங்களில் (64 தொடக்கப்பள்ளிகள், 14 உயர் தொடக்கப்பள்ளிகள்) 29 பள்ளிகளுக்கு (27 தொடக்கப் பள்ளிகள், 2 உயர் தொடக்கப்பள்ளிகள்) இன்னும் சொந்தக் கட்டிடங்கள் கட்டப்படவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். 3 தொடக்கப் பள்ளிகளின் நேர்வில், 1973–74, 1974–75 ஆம் ஆண்டுகளில் கிராமப் பணிகள் மானியத்தின் கீழ் செய்யப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகையைக் கொண்டு கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அடுத்துவரும் ஆண்டுகளில் செய்யப்படும் ஒதுக்கீட்டைக் கொண்டு எஞ்சிய 26 பள்ளிக் கட்டிடங்களும் படிப்படியாகக் கட்டப்படும்.

[1975 ஏப்ரல் 8

## விவர அறிக்கை.

செங்கை மாவட்டம், கும்மிடிப்பூண்டி மற்றும் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியங்களில் சொந்தப் பள்ளிக் கட்டிடங்கள் இல்லாத கிராமங்களின் பெயர்கள்:—

### கும்முடிப்பூண்டிப் ஊராட்சி ஒன்றியம்.

1. தேர்வாய்.
2. எகுமதுரை.
3. பெட்டிகுப்பம்.
4. சுத்தூர நத்தம
5. பெரிய ஓபலாபுரம்
6. சிறு புலால்பேட்.
7. ஈரடி மேலப்பாக்கம்
8. மதரப்பாக்கம்.
9. மகாலிங்கநகர்.
10. கும்பச்சிந்தலா.
11. ஓபசமுத்திரம்.
12. மங்கலம்.
13. பாலவாக்கம்.

பள்ளிக் கட்டிட வேலை நடை பெற்று வருகின்றது.

14. தண்டலச்சேரி.
15. தொக்கானூர்.
16. தொக்கானூர் பர்மா காலனி.
17. நாயுடு குப்பம்.
18. தம்புரெட்டி பாளையம்.
19. ராமச்சந்திரபுரம்.
20. மேல்பாக்கம்.
21. சின்னபுலியூர்.
22. ஐயர்கண்டிகை.
23. பெரியபுலியூர் அக்ரகாரம்.
24. பலிகாபேட்டை.
25. கொண்டமங்களூர்
26. குருவாட்டுச்சேரி.
27. பில்லிகுப்பம்.
28. கோபால்ரெட்டி கண்டிகை.
29. பன்னூர்.
30. வாணியமல்லி.
31. பூவாலை அகரம்.
32. எம். எம். கண்டிகை.
33. புதூர்.
34. நாகராஜகண்டிகை.
35. கொங்கல்.
36. பெரியகுப்பம்.
37. மணலி.
38. அண்ணுவரம்.
39. கம்மாவா பாளையம்.
40. ராமநாயக்கன் கண்டிகை.
41. அப்பாவரம்.
42. வல்லம்பேடு குப்பம்.

### எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம்.

1. அக்கரப்பாக்கம்.
2. மாலந்தூர்.
3. மேட்டுப்பாளையம்.

பள்ளிக் கட்டிட வேலை நடைபெற்று வருகின்றது.

4. சித்திரப்பாக்கம்.
5. கடநல்லூர்.
6. ஆயால்சேரி.
7. சங்கிலிகுப்பம்.
8. அளிஞ்சி வாக்கம்.
9. கிருஷ்ணாபுரம் பண்டிகை.
10. கல்பட்டு.
11. காக்கவாக்கம்.
12. பெத்தநாயகன்பேட்டை.
13. மாம்பள்ளம்.
14. கதர்வேடு.
15. மதுரவாசல்.
16. சூரம்பாக்கம்.
17. நெய்வேலி.
18. பெருமுடிவாக்கம்.
19. ஏரிகுப்பம்.
20. செங்காத்தகுளம்.
21. மேலசெம்பேடு.
22. தொல்வேடு.
23. சேத்துப்பாக்கம்.
24. அகரம் கண்டிகை.
25. செங்கரை.
26. கீல்கரமனூர்.
27. பால்ரெட்டி கண்டிகை.
28. தும்பாக்கம்.
29. அத்திவாக்கம் அரிசன காலனி



1975 ஏப்ரல் 8]

## இணைப்பு III

(22-ம் பக்கத்தில் 593 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

பரிசுக்குரிய கிராம வானொலி மன்றங்கள் கீழ்க்காணும் முறையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

2. கிராம வானொலி மன்ற உறுப்பினர்கள், தங்களுக்கென ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளில் தொடர்ச்சியாகக் கலந்து கொண்டு, கேட்கப்படும் வினாக்களில் எண்ணிக்கை, அவற்றிற்கு அனைத்திந்திய வானொலி நிலையத்தின் வாயிலாக ஒலிப்பரப்பப்படும் விடைகளின் எண்ணிக்கையைக் கொண்டும் ;

3. கிராம வானொலி மன்றங்களுக்குகென ஏற்பட்டுள்ள பதிவேடுகளில், தக்கவாறு நிகழ்ச்சிகளின் விவரங்கள் குறிக்கப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதைக் கொண்டும் ;

4. நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதன் பயனாக, அறிந்தவற்றைத் தங்களுக்குள் விவாதித்து, வளர்ச்சிக்கான புதியவற்றை நடைமுறையில் செயல்படுத்தி, பலன் கண்ட அளவினைக்கொண்டும், மாவட்ட அளவில் பரிசு பெறுவதற்குறிய கிராம வானொலி மன்றங்கள், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் முடிவே அரசால் ஏற்றுக்கொள்ளப் பெறுகிறது.

5. மாநில அளவில் பரிசு பெறும் கிராம வானொலி மன்றம், திருச்சிராப்பள்ளி அனைத்திந்திய வானொலி நிலைய இயக்குநர் அவர்கள் வாயிலாக, தேர்ந்தெடுக்கப் பெறுகிறது. மாநிலப் பரிசு பெறும் மன்றங்களுக்கு, மாவட்ட பரிசு கொடுக்கப்படமாட்டாது.

6. ஏற்கெனவே பரிசு பெற்ற கிராம வானொலி மன்றங்கள், மீண்டும் பரிசு பெறத் தகுதியுடையனவல்ல.

## இணைப்பு IV.

(26-ம் பக்கத்தில் 597 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

தமிழ்நாடு இந்து சமய அறநிலைய சட்டம், 1959, பிரிவு, 91(1)ன் நகல்.

தாமாக விரும்பித் தரும் சமய நிறுவனங்களின் உபரி நிதியிலிருந்தும் அல்லது தனி நபர்களின் நன்கொடைகளிலிருந்தும், தேவை நிலையிலுள்ள கோயில்கள், அவற்றின் கட்டிடங்கள் ஓவியங்கள் ஆகியவற்றைத் திருப்பணி செய்து பாதுகாக்கவும் எல்லோருக்கும் உரிய பொது

வான கொள்கைகளையோ அல்லது ஏதேனும் ஒரு பிரிவிற்குரிய சமய நிறுவனங்களின் கொள்கைகளையோ பரப்பவும், வளர்க்கவும் சட்டத்தின் 66-ம் பிரிவின் துணைப் பிரிவு (1இல்) குறிப்பிடப்பட்டுள்ள செயல்களின் ஏதாவது ஒன்றிற்குப் பயன்படுத்தவும், இந்து சமய அறக்கட்டளைப் பொது நல நிதி என்ற பெயரால், ஒரு நிதியை ஏற்படுத்துவதற்கு ஆணையருக்குச் சட்டப்படி உரிமை உண்டு.

இனி இதன் கீழே, இப்பிரிவில் "மேற்சொல்லப்பட்ட நிதி" என்று இது குறிக்கப்படும்.

(2) இந்த நிதி ஆணையரின் பொறுப்பில், விதி முறைகள் வரையறுக்கப்படுவதற்கேற்ப ஆணையரால் நிர்வகிக்கப்பட்டு வரும்.

1 (அ) : சட்ட பிரிவு 12ன் துணைப் பிரிவு 2 மற்றும் சட்டப் பிரிவு 92ன் உட்பிரிவு 2 ஆகியவற்றின்படி திரும்பச் செலுத்தப் பெற வேண்டிய தொகைகளைச் செலுத்திய பின், எஞ்சியுள்ள தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகளின் நிர்வாக நிதியிலிருந்து, ஏதேனும் உபரித் தொகையையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ, அரசு ஆணையின்மீது, அவ்வாணையில் குறிப்பிடப் பெறும் வகையில் மேற்சொல்லிய நிதிக்கு ஆணையர் நிதி மாற்றம் செய்யலாம்.

### சட்டம் 97(2) பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட இந்து சமய அறக்கட்டளைகளின் பொது நல நிதியின் நிர்வாகம்.

1. குறுந்தலைப்பு—இந்த விதிகள் "1962 ஆம் ஆண்டின் இந்து சமய அறநிலையக் கட்டளைகளின் பொது நல நிதி நிர்வாக விதிகள்" என்றழைக்கப்படும்.

2. இந்நிதிக்குப் பெறப்படும் தொகைகளைச் செலுத்துதல்—. "இந்து சமய அறநிலையக் கட்டளை நிதி வரவுகள் (அ) இந்து சமய அறநிலையக் கட்டளை நிதி, அரசு பட்ஜெட், எஸ். டெபாசிட் மற்றும் முன்பணம் 11, வட்டியில்லா டெபாசிட்" என்ற பெருந்தலைப்பின் கீழ் "எண். 4, தன்னிச்சைச் சகாயத்தொகை, தனி நபர் அல்லது தனி நிறுவனங்கள் அல்லது அறநிலையங்களிலிருந்து" என்ற விரிவுத் தலைப்பில், இந்த இந்து சமய அறநிலையக் கட்டளைப் பொது நல நிதிக்குப் பெறப்படும் எல்லாத் தொகைகளும், உடனடியாகச் செலுத்தப்படல் வேண்டும்.

3. <u>பிரிவு 97 உட்பிரிவு (1)ன் படி மனுக்களின் மீது ஆணையர் தற்காலிக</u> முடிவு எடுத்தல்.—சட்டப்பிரிவு 97 உட்பிரிவு (1)ல் விவரிக்கப்பட்டுள்ள செயல்களுக்கான மனுக்கள் வரப்பெற்றவுடன் உரிய பரிசீலனைக்குப் பின், வேண்டப்பட்ட தொகையையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ பயன்படுத்துவது பற்றி, ஆணையர் தற்காலிக முடிவு எடுக்கலாம். மேலும், உரிய விசாரணைக்குப்பின் தமது தற்காலிக முடிவை மாற்ற ஆணையருக்கு அதிகாரம் உண்டு.





4. நிதி உதவி அளிப்பது பற்றித் தடையுரைகள் இருப்பின் தெரிவிக்குமாறு அறிக்கை வெளியிடுதல். –

(1) நிதி உதவி வழங்கும் திட்டத்திற்குத் தடையுரைகள் அல்லது கருத்துரைகள் கோரும் அறிக்கை, மாவட்ட அரசிதழ் மற்றும் தமிழக அரசிதழ் ஆகியவற்றில் வெளியிடப்படல் வேண்டும்.

(2) மேலும் ஒட்டுதல் மூலமும் அது வெளியிடப்படல் வேண்டும்.—

(அ) நிதி உதவி விரும்பும் நிறுவனத்தின் அறிவுப்புப் பலகை அல்லது முன் கதவு மற்றும் (ஆ) நிறுவனம் அமையப் பெற்றுள்ள பகுதியின் மீது நிர்வாகப் பொறுப்புள்ள உதவி ஆணையர் மற்றும் துணை ஆணையர் அலுவலகங்களின் விளம்பரப் பலகை.

5. <u>அறிவிப்பின் உள்ளடக்கம்.</u>

விதி 4ல் குறிக்கப் பெற்ற இவ்வறிக்கையானது, தடையுரைகள் அல்லது கருத்துரைகள் அனுப்பப்படவேண்டியதற்குரிய தேதி ஒன்றினை அவ்வறிக்கை வெளியிட்டத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குக் குறையாத படி வரையறுத்தல் வேண்டும். மேலும் அவ்வறிக்கையில் தடையுரைகள் அல்லது கருத்துரைகளை ஆராய விசாரணை நடைபெறும் தேதியையும் கூட, வரையறை செய்து குறிப்பிடுதல் வேண்டும்.

6. <u>ஆணையரின் இறுதி உத்திரவுகள்.—</u>

தடையுரைகளோ, கருத்துரைகளோ ஏதாவது இருப்பின், அவைகளை விசாரித்த பின்னும், பிறகு முறையாக ஆராய்ந்த பிறகும், ஆணையர் இறுதி உத்திரவுகளைப் பிறப்பித்தல் வேண்டும். ஆணையரின் உத்திரவு, விதி 4ல் குறிப்பிடப் பெற்ற அறிக்கை வெளியிடப்பெற்ற அதே முறையில், வெளியிடப்படுதல் வேண்டும்.

## COPY OF SECTION 97 (1) OF THE TAMIL NADU HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS ACT, 1959.

It shall be lawful for the Commissioner to create a Fund to be called the Hindu Religious and Charitable Endowments Common Good Fund (hereinafter in this section referred to as the said fund) out of the contributions voluntarily made by the religious institutions from their surplus funds or by any person for the renovation and preservation of needy temples and their buildings and paintings for the promotion and propagation of tenets common to all or any class of religious institutions and for any of the purposes specified in sub-section (1) of ection 66.

Creati Hindu gious Charit Endow ments Comm Good F

(2) The said fund shall be vested in, and administered by the Commissioner in such manner as may be prescribed.

(1-A) The Commissioner may, on a direction from the Government transfer to the said Fund any surplus or such portion thereof as may be specified in the direction, remaining in the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Administration Fund after the repayment of the amounts specified in sub-section (2) of section 12 and sub-section (2) of section 92.

## RULES FRAMED UNDER SECTION 97 (2) OF THE ACT ADMINISTRATION OF THE HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS COMMON GOOD FUND.

1. *Short title.*—These rules may be called "THE ADMINISTRATION OF THE HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS COMMON GOOD FUND RULES, 1962".

2. *Crediting the moneys received towards the Fund.*—All the moneys received as contributions towards the Hindu Religious and Charitable Endowments Common Good Fund shall be immediately credited to the detailed head "4. Voluntary contributions by religious institutions or any private institution or person" under the Major head "S. Deposits and Advances—II. Deposits not bearing interest" Hindu Religious and Charitable Endowments Fund. Receipts—(A) Hindu Religious and Charitable Endowments Administration Fund of the State Budget.

3. *Commissioner to provisionally decide applications under sub-section (1) of section 97.*—On receipt of application for the purposes mentioned in sub-section (1) of section 97, the Commissioner may after due consideration, provisionally decide the purposes for which the amounts requested or parts thereof may be utilised. He shall have power also to modify his provisional decision after due inquiry.

4. *Publication of notice inviting objections to grant aid.*— (1) A notice shall be published in the District Gazette and in the *Fort St. George Gazette*, inviting objections or suggestions regarding the proposal to grant aid.

(2) it shall also be published by affixture—

(a) on the notice board or the front door of the institution requiring aid; and

(b) on the notice board of the offices of the Deputy Commissioner and of the Assistant Commissioner having jurisdiction over the area in which the institution is situat



5. *Contents of the notice.*—The notice referred to in rule 4 shall specify the date which should not be less than thirty days from the date of its publication, within which objections or suggestions may be sent. It shall also specify the date on which the enquiry will be held to consider the objection or suggestions.

6. *Final orders of the Commissioner.*—After inquiry into the objections and suggestions, if any, and after due consideration, the Commissioner shall pass final orders. The orders of the Commissioner shall be published in the same manner as the notice referred to in rule 4.

(Published in Part V, page 663 of the *Fort St. George Gazette*, dated 2nd May 1962.)

## இணைப்பு V.

(36-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

1974–75 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மதுவிலக்கு ஆயத் தீர்வைச் சட்டங்களை நிர்வகித்தலும், செயற்படுத்தலும் பற்றிய ஆய்வுரை.

### 1. தோற்றுவாய்.

1974 ஆம் ஆண்டில் செப்டம்பர் திங்கள் முதல் நாளிலிருந்து தமிழ்நாட்டில் முழு மதுவிலக்கை மீண்டும் செயல்படுத்துவதென்று அரசு முடிவு செய்தது. அதன் விளைவாக, தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு மதுவிலக்கு (செயற்படுவதை நிறுத்தி வைத்தல்) சட்டமும், தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு ஆயத்தீர்வை சட்டமும் ரத்து செய்யப்பட்டன. இம்மாநிலத்தில் இயங்கிவந்த சாராயக் கடைகளும் 1974 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31-ம் நாளில் மூடப்பட்டன. சாராய வடிசாலைகள் சாராய உற்பத்தியை நிறுத்தி விட்டு அதற்கு பதிலாக தொழில்களுக்குத் தேவையான சாராவியை மட்டுமே உற்பத்தி செய்தன. ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய மாநில அரசுகளும், மத்திய அரசும் கேட்டுக் கொண்டதற்கிணங்க பிற மாநிலங்களின் தொழில் துறைத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு இம் மாநிலத்திலிருந்து சாராவி எற்றுமதி அனுமதிக்கப்பட்டது. பீர் தயாரிப்பதற்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்த பீர் தயாரிக்கும் எட்டுத் தொழிற் சாலைகளிடமும், 1974 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1ஆம் நாள் முதல் முழு அளவில் மதுவிலக்கு செயலுக்குக் கொண்டுவரப்பட்டதன் காரணமாக அவை பீர் தயாரிக்க அனுமதிப்பதற்கு இயலாது என்று தெரிவிக்கப்பட்டது.

## 2. உபரி சாராவியைப் பயன்படுத்தல்.

1974 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் நாளிலிருந்து மதுவிலக்கு மீண்டும் செயலுக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து, இம் மாநிலத்தில் தயாரிக்கப்படும் சாராவி உற்பத்தி உபரியாகியுள்ளது. உபரி சாராவியை எவ்வாறு பயன்படுத்துவது என்னும் கருத்தை அரசு பரிசீலனை செய்துள்ளது. சாராவியை அடிப்படையாகக் கொண்டு தொழில்கள் இந்த உபரி சாராவியை பயன்படுத்திக் கொள்ள அனுமதிப்பது என அரசு முடிவு செய்துள்ளது. அதற்கிணங்க, மொத்தம் 315 இலட்சம் லிட்டர் உபரி சாராவியை, சாராவியை அடிப்படையாகக் கொண்ட தொழில்களில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## 3. ஆயத்தீர்வை வருவாயின் கீழ் அரசுக்குச் சேரவேண்டிய தொகைகள்.

முன்னாள் ஆயத் தீர்வை உரிமதாரர்கள் ஏராளமானவர்களிடமிருந்து அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளன. தமிழ்நாடு 1864 ஆம் ஆண்டு வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் (தங்கள் மீது) வருவாய்த் துறை அதிகாரிகள் எடுத்துள்ள நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படக் கூடாது எனவும், அரசுக்கு ஏற்பட்டிருந்த வருவாய் இழப்புத் தங்களது செயலுக்கு அப்பாற் பட்ட நிலையில் ஏற்பட்டிருந்ததாகும் எனவும் தங்களிடமிருந்து தொகை எதுவும் வசூலிக்கப்படக் கூடாது எனவும் அவர்கள் முறையிட்டுள்ளனர். அவர்களது முறையீடுகள் குறித்து முடிவு எடுக்கப்படுகிறவரையில், அரசுக்கு சேர வேண்டிய ஆயத் தீர்வை நிலுவைகளை வசூலிப்பதற்காக வருவாய் வசூலிப்பு சட்டத்தின் கீழ் ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்கள் விற்பனை எதுவும் 1975ஆம் ஆண்டில் மார்ச் திங்கள் 1ஆம் நாள் வரையில் நடத்தப்படக்கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. அவர்களது முறையீடுகள் மேலும் பரிசீலனையில் உள்ளன.

## 4. ஆயுர்வேத மருந்துத் தயாரிப்புகள்.

ஆயுர்வேத மருந்து தயாரிப்புகள் உட்பட மருந்துத் தயாரிப்புகள் அழகு சாதனத் தயாரிப்புகள் அனைத்தின் உற்பத்தி, விற்பனை பயன் கொள்ளல் ஆகியவை 1955 ஆம் ஆண்டு மருந்து அழகு சாதனத் தயாரிப்புகள் (ஆயத் தீர்வைகள்) சட்டம், அதன் கீழ் இயற்றப்பட்டவிதிகள் ஆகியவற்றின் விதித் துறைகளால் முறைப்படுத்தப்படுகின்றன. இது ஒரு மத்தியச் சட்டம் ஆகும். எனினும், ஆயத் தீர்வை வசூலிக்கும் பொருட்டு இது மாநில அரசால் நிர்வகிக்கப்படுகிறது. இந்த விதிகளின் திருத்தம் எதுவும் இயற்றுவதாயிருப்பின் அது மத்திய அரசாலேயே பிறப்பிக்கப்பட வேண்டும். ஆயுர் வேத மருந்துத் தயாரிப்புகளைத் தவறுகப் பயன்படுத்திய நிகழ்ச்சிகள் ஏற்கெனவே நிகழ்ந்து உள்ளன வாதலால் (மத்திய சட்டமாகிய) மருந்துகள், அழகு சாதனத் தயாரிப்புகள் சட்டத்திற்கு பாதகமின்றியே, ஆயுர் வேத மருந்துத் தயாரிப்புகளின் உற்பத்தி, விற்பனை, பயன் கொள்ளல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்காகத் தனி விதிகள் இயற்றுவது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.





## 5. தனிப்பட்டவர்கள் மது அருந்துவதற்கான அனுமதி ஏற்பாடு.

1-9-1974ஆம் நாள் முதல் தமிழ்நாட்டில் முழு மது விலக்கு மீண்டும் செயலுக்குக் கொண்டு வரப்பட்டதனைத் தொடர்ந்து, அந்நாள் தொட்டு தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1937) மீண்டும் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. தனிப்பட்டவர்கள் மது அருந்துவதற்கான அனுமதி, F.L. உரிமங்கள், ஏனைய உரிமங்கள் ஆகியவற்றை வழங்குவது தொடர்பான, பின்னர் அவ்வப்போது திருத்தப்பட்டவாறுள்ள தமிழ்நாடு 1960ஆம் ஆண்டு மது (உரிம அனுமதி) விதிகளும் 1-9-1974ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தன. தமிழ்நாடு 1960-ம் ஆண்டு மது (உரிம அனுமதி) விதிகளின் கீழ் தனிப்பட்டவர்களுக்கு மது அருந்துவதற்கான அனுமதிச் சீட்டுகள் 30-8-1971க்கு முன்னர் வழங்கப்பட்டன. அவை பல்வேறு வகைப்பட்டவையாகும். கீழே விவரித்துள்ளவாறு அதே வகைப்பட்ட அனுமதிச் சீட்டுகள் தற்போது இந்த விதிகளின் கீழ் வழங்கப்படுகின்றன :—

(1) உடல் நலத்தின் அடிப்படையில் அனுமதிச் சீட்டுகள்.

(2) தற்காலிகமாகக் குடியிருப்பவர்களுக்கு அனுமதிச் சீட்டுகள்.

(3) தனியுரிமை பெற்றவர்களுக்கு சிறப்பு அனுமதிச் சீட்டுகள்.

(4) பார்வையாளர்களுக்கான அனுமதிச் சீட்டுகள்.

(5) சுற்றுலாப் பயணிகளுக்கும், வெளிநாட்டவர்களுக்கும் இடைக்கால அனுமதிச் சீட்டுகள்.

(6) முப்படை அதிகாரிகளுக்கு அனுமதிச் சீட்டுகள்.

(7) வணிகக் கப்பலில் பணிபுரியும் கடற்படை வீரர்களுக்கு (அதிகாரிகள், படைவீரர்கள்) அனுமதிச் சீட்டுகள்.

(8) ஏனைய மாநிலங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் இம்மாநிலத்தில் உள்ள நட்சத்திர ஓட்டல்களில் நடைபெறும் கூட்டங்கள், கருத்தரங்குகள், மாநாடுகள், ஆகியவற்றில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளுக்குச் சிறப்பு அனுமதிச் சீட்டுகள்.

### A. உடல் நலம் குறித்து தனிப்பட்டவர் மது அருந்துவதற்கான அனுமதிச் சீட்டுகள்.

மருத்துவச் சான்றிதழின் அடிப்படையில் உடல் நலம் குறித்து தனிப்பட்டவர்களுக்கு மது அருந்துவதற்கான அனுமதிச் சீட்டுகள் வழங்கும் நடைமுறை 1-9-1974லிருந்து திருத்தியமைக்கப்பட்டது. மது அருந்துவதற்கான அனுமதிச் சீட்டுகள் 30-8-1971க்கு முன்னர் வைத்திருந்தவர்களும் 1-9-1974ல் அல்லது அதற்குப் பின்னர் மது அருந்துவதற்கான அனுமதிச் சீட்டைப் பெற்று மது அருந்த விழைபவர்களுமான நபர்கள் அந்த அனுமதிச் சீட்டைப் பெறுவதற்கு இயலும் வகையில் அரசுக்கு நேரடியாக விண்ணப்பித்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். இந்தச் சலுகை 31-3-1975 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மருத்துவச் சான்றிதழின் அடிப்படையில் உடம் நலம் குறித்து மது அருந்துவதற்காக 3,000 அனுமதிச் சீட்டுக்களை அரசு வழங்கி உள்ளது.

## B. F.L. தொடர் உரிமங்கள்.

(a) 1974-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நாளிலிருந்து முழு அளவிலான மதுவிலக்கு மீண்டும் செயலுக்குக் கொண்டு வரப்பட்டதின் விளைவாக [தமிழ்நாடு 1960-ம் ஆண்டு மது அருந்தும் (உரிம-அனுமதி) விதிகளின் கீழ் வருபவர்கள்] இம்மாநிலத்தில் F.L.I. மது விற்பனைச் செய்யும் முன்னுள்ள உரிமதாரர்களும், 31-8-1974 அன்று உரிமங்களின் செல்திறன் முடிவடைவதாய் உள்ளவர்களுமான உரிமதாரர்கள் தங்களிடம் விற்பனையாகாமல் உள்ள மதுவை ஏற்றுமதிக் கட்டணம் வசூலிக்காமல் இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டனர். மாற்று ஏற்பாடாக, இம்மாநிலத்தில் மதுவினை விற்பனை செய்வதற்கான புதிய F.L. தொடர் உரிமங்களைப் பெற்றுள்ளவர்களுக்கு தங்களிடமுள்ள மது இருப்பை விற்பனை செய்யவும் அனுமதிக்கப் பட்டனர். மதுவை விற்பனை செய்வது தொடர்பாக ஏனைய வில்லைப்பதாரர்களை விட கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரிமம் வழங்குவது என்று அரசு முடிவு எடுத்ததையொட்டி தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்கு சட்டம் தக்கவாறு திருத்தப்பட்டது. அவ்வண்ணமே, புட்டிகளில் அடைக்கப் பட்ட மதுவை, சென்னை, மதுரை, கோயம்புத்தூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், வேலூர் ஆகிய இடங்களில் மது அருந்துவதற்கான உரிமங்கள் வைத்துள்ளவர்களுக்கும், தகுதியுள்ள ஏனைய உரிமதாரர்களுக்கும் விற்பனை செய்ய கூட்டுறவுச் சங்கங்களுக்கு F.L.I, உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. வரையறுக்கப்பட்ட ஆண்டு உரிமக் கட்டணத்தைச் செலுத்துவதன் மேல் இந்த F.L.I. உரிமங்களை வழங்குவதற்கு, சென்னை, வருவாய்த் துறை வாரியம் (மதுவிலக்கு ஆயத்துறை), மதுவிலக்கு ஆயத் துறை ஆணையாளருக்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளது. F.L.I. உரிமங்கள் தவிர, தமிழ்நாடு 1960-ம் ஆண்டு மது அருந்துவதற்கான (உரிம அனுமதி) வழங்குவதற்கான விதிகளின் கீழ் ஏனைய F.M. உரிமங்களும் அதிகாரம் பெற்ற உரிமங்களும் 30-8-1971க்கு முன்னர் அவை எப்படி வழங்கப்பட்டனவோ அப்படியே வழங்கப்பட்டன.

(b) தமிழ்நாட்டில் மதுவிலக்கு செயலில் இருந்தபோது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் நட்சத்திர ஓட்டல்களுக்கும் சுற்றுலா பயணிமாளிகைகளுக்கும், இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் பயணிகள் விடுதிகளுக்கும், கடற்கரை ஓட்டல்களுக்கும், தமிழ்நாடு 1960-ம் ஆண்டு மது அருந்துவதற்கான (உரிம-அனுமதி) விதிகளின் கீழ், F.L.3/3A படிவத்தில் உரிமங்கள் வழங்கப்பட்டன. நட்சத்திர ஓட்டல்களுக்கு உரிமங்கள் வழங்குவதென மாநிலத்தில் மீண்டும் மதுவிலக்கு கொண்டுவந்த பின்னர், முடிவு செய்யப்பட்டது. கடற்கரை ஓட்டல்களுக்கு அத்தகைய உரிமங்களை அளிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

(c) அந்நிய செலாவணியை அதிகம் ஈட்டித் தருவதும், அதிகம் பேருக்கு வேலை வாய்ப்பைத் தருவதுமான சுற்றுலாவை வளர்ப்பதன் அவசியத்தைக் கருத்திற் கொண்டு, நட்சத்திர ஓட்டல்களில் தங்குகின்ற மது அருந்துவதற்கான உரிமங்கள் வைத்துள்ள இந்தியர்கள் உட்பட வனையோருக்கும், அங்கு நடை பெறுகின்ற கூட்டங்கள், கருத்தரங்குகள்,



மாநாடுகள், ஆகியவற்றில் கலந்து கொள்வதற்காக ஏனைய மாநிலங்களிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் வரும் பிரதிநிதிகளுக்கும், மதுவை வழங்குவதற்காக தமிழ்நாடு 1960-ம் ஆண்டு மது அருந்துவதற்கான (உரிம அனுமதி) விதிகள் அண்மையில் திருத்தப் பட்டன. இதற்காக வரையறுக்கப்பட்ட உரிமக் கட்டணத்தை வசூலிப்பதின் பேரில் நட்சத்திர ஓட்டல்களின் மேலாளர்களுக்கு சிறப்புத் தொகுப்பு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

### 6. பணியாளர்கள்.

1-9-1974-லிருந்து முழு அளவில் மதுவிலக்கை மீண்டும் செயலுக்குக் கொண்டு வந்ததன் விளைவாக ஆயத்துறைச் சட்டங்களை நிர்வகிப்பதற் காக அனுமதிக்கப்பட்ட வருவாய்த்துறை பணியாளர்களின் எண்ணிக்கை பெரிதும் குறைக்கப்பட்டுள்ளது. மதுவிலக்கை, திறம்படச் செயல்படுத்து வதற்காக இது குறித்து ஒப்புதல் வழங்கப்பட்ட (அரசிதழ் பதிவுபெற்ற, அரசிதழ் பதிவு பெறாத) காவல் துறைப் பணியாளர்களை தொடர்ந்து பணியில் வைத்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டது. காவல் துறை அதிகாரிகளைக் கலந்து பேசப்பட்டது. மது விலக்குச் சட்டத்தை மீறு கின்ற அல்லது மீறுவதற்கு உடந்தையாக இருக்கின்ற அல்லது மீறத் தூண்டுகின்ற நபர்களைத் கடுமையாகத் தண்டிக்க நடவடிக்கை எடுக்கு மாறு அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். கள்ளத்தனமாக மது விற்பனை செய்யும் வணிகர்களுடன் ஒத்துழைக்கின்ற காவல் துறைப் பணி யாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 7. வருவாய்.

1974-75 திருத்த மதிப்பீட்டில் 2,474·71 லட்ச ரூபாய் வருவாயாகச் சேர்க்கப்பட்டுள்ளது. 1975-76 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 2,65·55 லட்ச ரூபாய் ஆயத்துறை வருவாயாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

## இணைப்பு-VI

[36-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### இளைஞர் அணித் திட்டம்.

### மானியம் எண். 43.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

படித்த, வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் சமூகப் பணியில், தங்களைத் தாமே அர்ப்பணித்துக்கொள்ள இளைஞர் அணித் திட்டத்தினை ஆரம் பித்ததில் "தமிழக அரசு" தன்னிகரற்ற முதலிடம் வகிக்கிறது. இந்தியாவிலேயே முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட இந்த இளைஞர் அணித் திட்டம், தமிழக முதல்வர் அவர்களின் 1971-72-ம் ஆண்டின் பட்ஜெட்) வரவு-செலவு அறிக்கை உரையிலே அறிவிக்கப்பட்டது. இந்த

இளைஞர் அணித் திட்டம் 1971-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல், மூன்றாண்டுகட்கு மேலாக செயல்பட்டு வருகிறது. இத் திட்டம், படித்த, வேலை வாய்ப்பற்றவர்களின் எண்ணிக்கையை ஓரளவிற்கு குறைக்கவும், கிராமப்புற மக்களின், பொருளாதாரம், சமூக நலன், கல்வி மற்றும் நல்வாழ்வு, ஆகியவைகள் அடங்கிய வாழ்க்கைத் தரத்தை மேம்பாடு அடையச் செய்யவும் குறிக்கோள் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் சாதனைக்கான வரையறுக்கப்பட்ட குறிக்கோள்கள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த குறிக்கோள்களை இளைஞர் அணித் திட்டத்தின் மதிப்பீட்டுக் குழு ஆய்வு செய்து சில சிறிய மாறுதல்களைச் செய்துள்ளது. தற்போதுள்ள குறிக்கோள்கள் பின்வருமாறு :—

(அ) கிராமங்களில் 15—30 வரை வயதுக்குடையவர்கள் அனைவருக்கும் எழுதப் படிக்கக் கற்றுக்கொடுத்தல்.

(ஆ) கிராமப் புறங்களில் இளைஞர் மன்றங்களை அமைத்து விளையாட்டுப் போட்டிகள், கலாச்சார நிகழ்ச்சிகள் நடத்தி, அதன் மூலமாக தீண்டாமையையும், பிறவகை சமூக அநீதிகளையும் எதிர்த்து பிரச்சாரம் செய்தல் ;

(இ) எளிய, செலவற்ற குழிக் கழிப்பிடங்கள் அல்லது ஆராய்ச்சி செய்யப்பட்ட நவீன முறைக் கழிவிடங்கள் ஆகியவற்றை கிராம மக்களிடையே எடுத்துக் காட்டுவதன் மூலம் நல்ல சுற்றுப்புற சுகாதாரத்தையும் உடல் சுகாதாரத்தை உருவாக்க உயர்த்துதல் ;

(ஈ) குறித்த காலத்திற்கொருமுறை சுகாதார இயக்கங்களை நடத்துதல் ;

(உ) கிராமப்புற மக்கள் எளிய இயந்திரங்களைப் பயன்படுத்த உதவி செய்தல் (தொழில் நுட்பத் துறையில் பயிற்சி பெற்றுள்ள தொண்டர்கள் மட்டுமே இத்தகைய பணியில் ஈடுபட எதிர்பார்க்கப்படுகிறது).

பட்டம் பெற்ற அல்லது பட்டயத் தகுதி பெற்றவர்கள் இந்த அணியில் சேரலாம். இதில் சேருவோருக்கு வயது மேல் வரம்பு, தேர்ந்தெடுக்கபடும் ஆண்டின், ஜூலை திங்கள் முதல் தேதியில் 30 ஆகும். ஒவ்வொரு தொண்டரும் மாதம் ரூ. 175 கௌரவத் தொகையாகப் பெறுவர். இந்த இளைஞர் அணியினரின் பணிக்காலம், இவர்களது பயிற்சி காலத்தையும் சேர்த்து இரண்டாண்டுகளாகும். அதன் பின்பு அவர்கள் பணியினின்று விடுவிக்கப்படுவார்கள். இருந்த போதிலும், 1971–72-ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டர்களுக்கு முதல் தடவையாக ஓராண்டு காலத்திற்கு நீடிப்பு வழங்கப்பட்டது. 1972–73-ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டர்களுக்கு குறைந்த காலத்திற்கு நீடிப்பு வழங்கப்பட்டது. அரசு மறுபடியும் தற்போது 1971–72, 1972–73-ம் ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டர்கள், தங்களது பதவிக்காலம் முறையே நான்காண்டுகளாகும், மூன்றாண்டுகளுக்கும் பூர்த்தியாகும் வரை அவர்களது பதவிக் காலத்தை மறுபடியும் நீடிக்க உத்தரவிட்டுள்ளது.





இளைஞர் அணித் திட்டத்தில் இதுவரை சேர்க்கப்பட்டவர்களின் விபரம் பின்வருமாறு :—

| ஆண்டு. | | ஆண். | பெண். |
|---|---|---|---|
| 1971–72 | .. .. .. | 1,801 | 199 |
| 1972–73 | .. .. .. | 1,450 | 150 |
| 1973–74 | .. .. .. | 1,525 | 275 |
| 1974–75 | .. .. .. | 400 | 250 |
| மொத்தம் | .. | 5,176 | 874 |

1975-ம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ம் நாளன்று உள்ள விவரப்படி பணியிலுள்ள இளைஞர் அணித் தொண்டர்களின் ஆண்டுவாரி விபரம் வருமாறு :—

| ஆண்டு. | | ஆண். | பெண். |
|---|---|---|---|
| 1971–72 | .. .. .. | 506 | 91 |
| 1972–73 | .. .. .. | 637 | 105 |
| 1973–74 | .. .. .. | 926 | 233 |
| 1974–75 | .. .. .. | 424 | 222 |
| மொத்தம் | .. | 2,493 | 651 |

மற்றதொண்டர்கள் மாற்றுப் பணிகள் கிடைக்கப்பெற்று அணியிலிருந்து விலகிவிட்டனர். சிலர் வேறு காரணங்களை முன்னிட்டும் விலகினர்.

முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டர்களுக்கு 5 ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் ஏதாவதொன்றில் ஒரு மாதத்திற்குப் பயிற்சியளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சி போதுமானதல்ல என அனுபவ வாயிலாக அறிந்து தொண்டர்களுக்கான பயிற்சி காலத்தையும், பயிற்சியின் திட்டத்தையும் மாற்றம் செய்ய அரசு தீர்மானித்தது. கோவை மாவட்டத்திலுள்ள பவானிசாகர் ஊரக விரிவாக்கப்பயிற்சி நிலையம், இளைஞர் அணி பயிற்சி நிலையம் என்ற பெயரில் ஆண் தொண்டர்கட்கு

இரண்டு மாதங்கள் பயிற்சியளிப்பதற்காக சமூக நலத்துறையால் 1972-ம் ஆண்டு ஜூன் திங்கள் 1-ம் நாள் முதல் எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த பயிற்சி நிலையம் தற்போது மூடப்பட்டு, தற்போது ஆண் தொண்டர்கள், ஆறு வார காலத்திற்கு தனியார் துறை பயிற்சி நிலையங்களான மதுரை மாவட்டத்திலுள்ள காந்தி கிராமம் ஊரக பயிற்சி நிலையத்திற்கும், சென்னை, மதுரை சமூகப்பணி பள்ளிகட்கும் பயிற்ககான கட்டணத்துடன் பயிற்சிக்கு அனுப்பப்படுகின்றனர். பெண் தொண்டர்களும் மேலே கூறப்பட்ட மூன்று பயிற்சி நிலையங்களில் மருத்துவ சமூகப் பணிகளில் இரண்டு திங்கள் பயிற்சி பெறுகின்றனர்.

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது ஆண்டில், அதாவது, 1971–72-ல் தொண்டர்கள் நியமனம் செய்யப்பட 100 ஊராட்சி ஒன்றியங்கள் அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டன. 1972–73-ல் அடுத்த 100 ஊராட்சி ஒன்றியங்களை அரசு தேர்ந்தெடுத்தது. 1973–74-ல் மாநிலத்தில் உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களில் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஏற்காடு, கொல்லிமலை வட்டாரங்களைத் தவிர மீதமுள்ள வட்டாரங்களைத் தேர்ந்தெடுத்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டர்களின் நியமன உத்தரவில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வட்டாரத்தின் பெயரும், இளைஞர் அணி இயக்குநரால் குறிப்பிடப்படுகிறது. வட்டாரத்திலுள்ள கிராமங்கள், அந்த மாவட்டத்தின் ஆட்சியாளரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இரண்டு அல்லது மூன்று தொண்டர்கள் அடங்கிய குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு கிராமத்திலும் அமைந்து அதன் குறிக்கோள்களை அந்த கிராமத்தில் நிறைவேற்ற வேண்டும் என்பதே அரசின் முக்கிய நோக்கமாகும். தொண்டர்கள் கூடுமானவரை அவர்களது சொந்த மாவட்டத்திலேயே நியமனம் செய்யப்படுகிறார்கள்.

இளைஞர் அணித் திட்டத்தின் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையின்படி 10 சதவீத ஆண் தொண்டர்கள் கிராமப் புறங்களில் உள்ள பள்ளிகளில் நியமனம் செய்ய அரசு தீர்மானித்தது. அதன்படி ஒரு உயர்நிலைப் பள்ளிக்கு, ஒரு தொண்டர் வீதம் கிராமப்புறங்களில் உள்ள 254 உயர்நிலைப் பள்ளிகளில் தொண்டர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். மேலும் கிராமப்புறங்களில் உள்ள 500 உயர்நிலைப் பள்ளிகள், தொண்டர்கள் நியமனம் செய்யப்படுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. உயர்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள், இந்த தொண்டர்களின் பணியினை நேரடி கண்காணிப்பு செய்வார்கள்.

பெண் தொண்டர்கள், பயிற்சி முடிந்த பின்பு அரசு மருத்துவமனைகள், தனியார்துறை நிலையங்களுடன் சம்பந்தப்பட்டுள்ள தொழுநோய் ஒழிப்பு, ஊனமுற்றவர்களின் மறுவாழ்வு, காசநோய் விடுதி, அனாதை இல்லங்கள் ஆகிய நிலையங்களில் மருத்துவ, சமூகப் பணி ஊழியர்களாக நியமனம் செய்யப்படுகிறார்கள்.



**கண்காணிப்பு.**

தற்போது வட்டார வளர்ச்சி அலுவலர்களே, ஆண் தொண்டர்களின் பணியினை கண்காணித்து வருகிறார்கள். எல்லா வட்டார வளர்ச்சி அலுவலர்களும் தொண்டர்களுக்கு உரிய முறையில் வழி காட்ட இளைஞர் அணி பயிற்சி நிலையத்தில், ஒவ்வொரு அணியாக பயிற்சியளிக்கப்பட்டுள்ளார்கள். கோட்ட அளவில், கோட்டவளர்ச்சி அலுவலர்கள் இளைஞர் அணியினருக்கு பொறுப்பாக இருப்பார்கள். மாவட்ட ஆட்சியாளர்களின் (ஊரக வளர்ச்சிப் பிரிவு) தனி உதவியாளர் இளைஞர் அணித்திட்ட உதவி இயக்குநர் என்ற பெயருடன், மாவட்ட அளவில் தொண்டர்களின் பணிகளை கவனிப்பார். பெண் தொண்டர்கள், அவர்கள் பணிபுரியும் நிலையத்தின் தலைமை அலுவலரின் நேரடி கண்காணிப்பில் பணிபுரிவர்.

**அரசுப் பணியில் சலுகை.**

இளைஞர் அணித் திட்டத்தில், ஓராண்டும் அதற்கு மேலாக பணி புரிவதை மாநில அரசு சார்பு பணிகட்கு நியமனம் செய்யப்படுவதற்கு முன்னுரிமை தகுதியாக எடுத்துக்கொள்ள அரசு உத்திரவிட்டுள்ளது. இதனால் மற்ற தகுதிகள் சமமாக இருப்பின் தொண்டர்கள் அரசு பணியில் முன்னுரிமை கிடைக்கப் பெறுவார்கள். இளைஞர் அணித் திட்டத்தில் தொண்டர்களாகப் பணி புரிந்த காலம் (தொடர்ந்தும், தொடர்ந்திராமலும்) அரசு சார்பு பணிகட்கு நியமனம் செய்யப்படுவதற்குரிய உச்ச வரம்பு வயதை கணிக்கும் போது அதிகபட்சம் இரண்டாண்டுகள்வரை கழிக்கப்படும். வேலை தேடித்தரும் நிலையம் இளைஞர் அணியினருக்கு முதன்மை அளிக்குமாறு விதிமுறைகள் திருத்தப்பட்டுள்ளன.

எல்லா மாவட்ட ஆட்சியாளர்களும், தொண்டர்கள் பணிகள் செய்த விபரத்தை மாத அறிக்கையில் அனுப்ப கோரப்பட்டுள்ளார்கள். இந்த அறிக்கைகள்,* இளைஞர் அணி இயக்குநரால் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வறிக்கை அரசிற்கு மாதந்தோறும் அனுப்பப்படுகிறது.

இளைஞர் அணித் திட்டம், இந்திய அரசினரால் தனி வேலை வாய்ப்புத் திட்டம் என கருதப்பட்டு 1973–74ஆம் ஆண்டு வரை சமபங்கு அளவில் நிதி உதவியளிக்கப்பட்டு வந்தது. பின்பு 1972–73-ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த தனி வேலை வாய்ப்புத் திட்டம், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடரப்படாததால், 1974-ம் ஆண்டு மார்ச்சு திங்களுக்குப் பின் இந்த நிதியுதவி அளிக்கப்படாது என இந்திய அரசு தற்போது தெரிவித்துள்ளது.

மற்ற மாநிலங்களான மேற்கு வங்காளம், அரியானா, பஞ்சாப், ஆந்திரா, கர்நாடகம், மத்தியபிரதேசம் ஆகியவைகள் தங்கள் மாநிலங்களில் இத்தகைய திட்டத்தை அமுல்படுத்த இத்திட்டத்தின் விவரங்களை கோரியுள்ளன.

**UNICEF** நிறுவனத்தின் பிரதிநிதிகள், டெல்லியிலிருந்து தமிழகத்திற்கு வருகை புரிந்து இளைஞர் அணித் தொண்டர்கள் பணிபுரியும் விபரத்தை ஆய்வு செய்து நல்ல பாராட்டுக்களை வழங்கியுள்ளார்கள்.

அரசு இளைஞர் அணித் திட்டத்திற்காக தனியாக ஒரு தலைமை துறையினை ஏற்படுத்தி இந்திய அரசினரால் "பரம வசிஸ்ட சேவா மெடல்" விருது பெற்று ஓய்வு பெற்றுள்ள மேஜர் ஜெனரல் கே. வ. எஸ். ராஜா என்பவரை இளைஞர் அணித் திட்ட கௌரவ இயக்குநராக நியமனம் செய்துள்ளது.

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

---

### புதன்கிழமை, 1975 ஏப்ரல் 9.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### RAJA SARFOJI COLLEGE, THANJAVUR

*601 Q THIRU—N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(a) whether post-graduate courses in English and in Economics are offered for the students in Raja Sarfoji Government College, Thanjavur ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, இராஜா சர்போஜி காலேஜில் எம்.ஏ., எம்.எஸ்ஸி.,போன்ற போஸ்ட்–கிராஜுவேட் கோர்ஸ் வகுப்புகளைச் சர்க்கார் ஏன் இன்னும் ஆரம்பிக்கவில்லை ? அவற்றிற்கு ஏற்பாடு செய்ய சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே எம்.எஸ்ஸி. (மாதமாடிக்ஸ்), எம்.எஸ்ஸி. (பிசிக்ஸ்) மேல் பட்டப் படிப்புகள் இருந்து வருகின்றன. ஆனால், அங்கே பொருளாதாரத் துறையில் எம். ஏ. வகுப்பு திறக்கப்பட வேண்டும் என்ற தன்மையை எடுத்து வைத்தார்கள். இட நெருக்கடி காரணமாக சென்ற ஆண்டே பல்கலைக் கழகம் அனுமதி கொடுக்கவில்லை. இட வசதி ஏற்படுத்திக்கொண்டு இந்த ஆண்டு பல்கலைக் கழகத்தினிடத்தில் அது பற்றி முயற்சி செய்யலாம் என்று அரசு கருதிக்கொண்டிருக்கிறது.

## PUBLICATION OF TEXT BOOKS.

*602 Q. THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state:

(a) whether it is a fact that the Tamil Nadu Text Books Society has been directed recently by the Government to nationalise text-books in respect of certain subjects in addition to those already nationalised; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ): ஒரு அறிக்கை@ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, மலையாளம், கன்னடம், தெலுங்கு, உருது முதலிய சிறுபான்மை மொழிகளிலுள்ள பாட நூல்கள் இருக்கிறது. இந்தி மொழியைப் பற்றி இல்லை. அப்படியானால், சர்க்கார் இந்தி மொழியை எதிர்க்கிறார்களா? அல்லது இந்தித் திணிப்பை எதிர்க்கிறார்களா? ஏன் இந்தி மொழியை இதில் சேர்த்துக் கொள்ளவில்லை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சிறுபான்மையோர் மொழிகள் என்ற வகையில் மலையாளம், கன்னடம், தெலுங்கு, உருது ஆகிய மொழிகளில் பாட நூல்களை மெல்ல மெல்ல உருவாக்கிக் கொண்டு வருகிறார்கள். இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுக்காக இரண்டே இரண்டு பள்ளிகள்தான்–இந்தியைப் பாட மொழியாகவும் வகுப்பு மொழியாகவும் கொண்டு–சென்னையில் இயங்கி வருகின்றன. இரண்டு பள்ளிகளுக்காக நாம் இந்தி மொழியில் பாடப் புத்தகங்களைத் தயாரிக்க முடியாது. ஆகையால், அவற்றிற்கேற்ற புத்தகங்களை அவர்கள் அரசாங்கத்தின் அனுமதி பெற்று வாங்கிக் கொள்கிறார்கள்.

திரு. தி. பொன்னுமலை: பாடப்புத்தகத்தில் பெரியார் அவர்களுடைய வரலாறும் அவருடைய பகுத்தறிவுப் பிரசாரங்களும் இடம் பெறுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இன்ன பொருள் பாட புத்தகங்களில் இடம் பெற வேண்டும் என்று அரசாங்கம் ஆணை இடுவதற்கில்லை. அதற்கென்று வல்லுநர்கள் குழு இருக்கிறது. அந்த வல்லுநர்கள் குழு ஆராய்ந்து எந்த எந்த வகுப்புக்களில் எந்த எந்த பாடங்களைப் புகுத்த வேண்டும் என்பதைத் தீர்மானிக்கிறார்கள். ஆனால், பொதுவாக, நாட்டுக்கு உழைத்த நல்லவர்கள், உலகுக்கு உழைத்த உத்தமர்கள், விடுதலை வீரர்கள் ஆகிய பல்வேறு பேரறிஞர்களுடைய வரலாறுகளெல்லாம், அந்தந்த வகுப்பின் தன்மைக்கேற்ப பாடங்கள் எழுதப்பட்டு, அவை பல்வேறு பாடங்களிலே இடம் பெறுகின்றன.

---

@ 238–239-ம் பக்கங்களில் இணைப்பு 1–ஆக அச்சிடப்பட்டுள்ளது.





திரு. என். இட்டப்பா: தலைவர் அவர்களே, பாடப் புத்தகங்களில் தந்தை பெரியார் அவர்களுடைய கருத்தோவியங்கள் இடம்பெற வேண்டும் என்று தமிழக அரசு சிபார்சு செய்ததை அந்தப் பாடப் புத்தகக் குழு ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லப்படுவது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே நான் முதலிலேயே சொன்னேன், அந்த சிபாரிசை அரசு செய்வதில்லை. பாடப்புத்தகங்களை, அதற்கென்று அமைக்கப்பட்ட வல்லுநர் குழு ஆராய்கிறார்கள். யாருக்காவது விருப்பங்கள் இருக்குமானால் அவர்கள் வல்லுநர் குழுவுக்குத் தெரிவிக்கலாம். அவற்றை வல்லுநர் குழு ஆராய்ந்து முடிவு எடுக்கிறார்கள். பல்வேறு நூல்களிலிருந்து திரட்டிப் பல்வேறு தலைவர்களுடைய வரலாறுகளெல்லாம் பல்வேறு பாடங்களில் வரப்பெற்று இருக்கின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, விஞ்ஞானம், கணிதம் போன்ற நூல்களுக்கு இந்த தேசியமாக்குவதில் முன்னுரிமை நல்கி அதிலே தரமான புத்தகங்களைத்தேசியமயமாக்குவதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே. கிட்டதட்ட பத்தாவது வகுப்பு வரையில் அறிவியல், கணிதம் மற்றவைகளுக்கெல்லாம் பாட நூல்கள் பாட நூல் நிறுவனத்தின் சார்பாகக் கொண்டுவந்து விட்டோம். ஆனால், சிறுபான்மை மொழியினர்க்குரிய பாடப் புத்தகங்கள் அவர்களுடைய நலன் கருதி ஏற்கெனவே தமிழில் கொண்டு வரப்பட்டிருக்கின்ற பாடத் திட்டங்களுக்கேற்ப மலையாளம், கன்னடம், தெலுங்கு, உருது ஆகிய மொழிகளில் மொழிபெயர்த்து அந்த நூல்களையும் கொண்டுவந்திருக்கிறோம்.

திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பாடப்புத்தகங்களை அரசு வெளியிட்டதில் அரசுக்கு ஊதியம் கிடைத்திருக்கிறதா? அல்லது இழப்பு ஏற்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பாட நூல்கள் வெளியிடுவதில் அரசுக்கு இலாபம் ஏற்பட்டிருக்கிறது என்பது கல்வி மானியக் கோரிக்கை வந்தபோதே அதில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: பாடப்புத்தகங்கள் தயாரிக்கின்ற வல்லுநர் குழு பூரண சுதந்திரம் உள்ளதாக இருக்கிறதா? அல்லது அவர்கள் தயாரித்து முடிவாகும்போது, அமைச்சரைக் கலந்து, அவர்கள் ஆலோசனையின் பேரில்தான் முடிவு செய்யப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அந்தப் பாட நூல் வல்லுநர் குழு முழுச்சுதந்திரம் பெற்றிருக்கிறது. என்ன பாடம் என்பது அமைச்சருக்குத் தெரியாது. என்ன சிலபஸ்

என்பதுகூட அமைச்சருக்குத் தெரியாது. என்ன பாடம் வைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க அமைச்சருக்கு நேரமும் கிடையாது. இதையெல்லாம் வல்லுநர் குழு ஆராய்கிறார்கள். வகுப்புக்களுக்கேற்ப, பாடத் திட்டங்களுக்கு ஏற்ப, நிபுணர்களைத் தேர்ந்தெடுத்து அதிலே இணைக்கிறார்கள். பாடங்களில் தவறு இருக்கிறது என்று யாராவது சுட்டிக் காட்டினால், அது அந்த வல்லுநர் குழுவின் கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டு அப்படிப்பட்ட தவறுகளெல்லாம் திருத்தப்பட வேண்டும் என்று அக்குழு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, தனியார் பாடப்புத்தகங்கள் வெளியிட்டதற்குப் பதிலாக அரசு வெளியிடுவதால் மாணவர்களுக்குக் குறைந்த விலையில் புத்தகங்கள் கிடைக்கின்றனவா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முன்பே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். அரசு வெளியிடக்கூடிய பாடப் புத்தகங்களின் விலை மிகக் குறைவாக இருக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். தனியார் வெளியிடக்கூடிய பாடப்புத்தகங்களின் விலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அரசு வெளியிடும் பாடப்புத்தகங்களின் விலை மிக மிகக் குறைந்ததாகத்தான் இருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டினுடைய மொழி இந்தி மொழியாகவும், பெரும்பான்மை மாநிலங்களில் பேசக்கூடிய மொழியாகவும் இருப்பதால், நம்முடைய மாநிலத்தில் இந்தி மொழியைக்கட்டாயமாக இல்லாவிட்டாலும், இஷ்டப்பாடமாக வைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாடப்புத்தகங்களை வெளியிடுவது பற்றி மட்டும் கேளுங்கள். மற்றவற்றிற்குப் போக வேண்டாம்.

திரு. கே. என். குமாரசாமி : இந்தி மொழியைக் கற்க பாடங்களில் வகை செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த அவையே, மும்மொழித் திட்டம் அல்ல, இரு மொழித் திட்டம்தான் என்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அந்த அடிப்படையில் நாம் பாடத்திட்டங்களை வகுத்து இருக்கிறோம். ஆனால், சிறுபான்மையினருக்கு வாய்ப்பு அளிக்கும் முறையில், இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டிருப்பவர்களின் நலனுக்காக சென்னையில் இரண்டு உயர்நிலைப்பள்ளிகளில் இந்தியைப் பாட மொழியாக்கி அதற்கு வகை செய்திருக்கிறோம். அந்த வகையில் இந்திக்கும் இடங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. வை. பாலசுந்தரம் : தமிழ் நாடு பாட நூல் நிறுவனம், அதை இயக்கிக் கொண்டிருக்கின்ற வல்லுநர்கள், நல்ல திறமையுள்ள எழுத்தாளர்களையும் சிறந்த நூல்கள் வைத்துக் கொண்டிருக்கிறவர்களையும் அணுகி அவர்களை ஊக்குவிக்க வழிவகை செய்யுமா ?





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த வகையில்தான் எந்த எந்தத் துறையில் யார் யார் வல்லுநர்களாக இருக்கிறார்கள் என்பதையும், ஏற்கனவே வெளியிட்ட நூல்கள் அறிவுத்திறன், ஆராய்ச்சித்திறன், மொழித்திறன் ஆகியவற்றின் தன்மையையும் கணக்கில் எடுத்து, விரிவான முறையில் பலரிடத்தில் ஒப்படைக்கிறார்கள். அவர்கள் எழுதிக் கொடுத்தபிறகு, இரண்டு, மூன்று பேர் எழுதித் தந்ததிலிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுத்து புத்தகமாக வெளியிடுகிறார்கள். எந்த ஒரு புத்தகம் தேர்ந்தெடுக்கப்பட்டதோ அதனை வல்லுநர் குழுவும் தனியாக அலசி ஆராய்ந்து பார்த்து, அதைப் பாடநூலாக வெளியிடுகிற முயற்சியினை தமிழ் நாடு பாட நூல் நிறுவனம் மேற்கொண்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த வல்லுநர் குழு எத்தனை ஆண்டுக்காலம் பதவியில் இருக்க தற்போது வழிவகை செய்யப்பட்டிருக்கிறது? பாடத்திட்டங்களை மாற்றியமைக்கும் கருத்து இருந்ததே, அது எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது இரண்டு மூன்று ஆண்டுக் காலமாக மாற்றியமைக்கப்பட்ட புதிய பாடப் புதித்தகங்கள்தான் நடைமுறையில் இருந்து கொண்டு வருகின்றன. கிட்டத்தட்ட ஏழாவது வகுப்பு வரை நாம் புதிய பாடத் திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவந்துவிட்டோம். 8—9 வகுப்புகளைப் பொறுத்து புதிய பாடத் திட்டம் வருகின்ற ஆண்டிலிருந்து அமலுக்கு வர இருக்கிறது. ஓரிரு ஆண்டுக் காலத்தில் பத்தாவது வகுப்பு வரையில் பாடங்கள் புதிய பாடத் திட்டத்தின் அடிப்படையில் கொண்டுவரப்படும். இந்த முறையில்தான் அந்தக் குழுவினர் பணியினை மேற்கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது சென்னை நகரில் இரண்டு பள்ளிகளில் இந்தி படிக்க வாய்ப்பு செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்த பள்ளிகளில் படிக்காத மாணவர்களும் வெளியிலே தனியாக இந்தி படிக்கிறார்கள். இரு மொழிக் கொள்கையை நம்முடைய அரசு ஏற்றிருந்தாலும்கூட, நிறைய பேர்கள் இந்தி படிக்கிறார்கள். ஆகையால் இந்தி படிக்கிறவர்களுக்கும் பாடப்புத்தகங்கள் வெளியிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவர்கள் தனிப்பட்ட முறையில் எவ்வளவு மொழிகள் வேண்டுமானாலும் படிக்கலாம். அரசு இரு மொழிக் கொள்கைக்கு வழிவகை செய்திருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் இந்தி பிரசார சபை இருக்கிறது. இந்தி படிக்க விரும்புபவர்கள் அதன் மூலமும் படிக்கலாம். அதை அரசு தடுப்பதில்லை. நம்முடைய அரசின் இரு மொழிக் கொள்கையின்படி அரசாங்கப் பாடப்புத்தக நிறுவனத்தில் புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, பாடப் புத்தகங்களை அச்சிட்டுப் பள்ளிகளுக்கு வழங்குவதைப்போல பள்ளிகளிலுள்ள நூல் நிலையங்களுக்குத் தேவையான புத்தகங்களையும் அச்சிட்டு வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பாடப் புத்தகங்களாக அச்சிட்டு வெளியிடுகிற நூல்களும் நூல் நிலையங்களில் இடம் பெறுகின்றன. நூல் நிலையங்களுக்குத் தேவையான புத்தகங்கள் முழுவதையும் அச்சிட்டு வழங்குவது என்பது இயலாது. உலகம் முழுவதிலும் இருக்கக்கூடிய தேவையான நூல்களை வாங்கி நூல் நிலையங்களில் வைக்க வேண்டும்.

திரு. அ. ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்த பாடப் புத்தக நிறுவனத்தில் வல்லுநர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த வல்லுநர்கள் யார் யார் என்று விபரத்தை அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய விவரம் தற்போது இல்லை. ஒவ்வொரு பாடத்திற்கும் 3, 4 வல்லுநர்கள் இருக்கிறார்கள். அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

சிறுவாணிப் பகுதியை சுற்றுலா மையமாக்கல்.

*603. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி–சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

சிறுவாணிப் பகுதியை சுற்றுலாப் பகுதியாக ஆக்க அரசு ஆலோசித்து வருகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த சிறுவாணிப்பகுதியை சுற்றுலா மையமாக மாற்றியமைக்க ஏதேனும் வாய்ப்பு இருக்கிறதா என்று கண்டறியப்பட்டுள்ளதா? அதற்கு எவ்வளவு தொகை செலவழிக்க வேண்டியுள்ளது என்ற விபரம் அறியப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சிறுவாணிப் பகுதியை சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு எதும் இல்லை. அதற்குக் காரணம் சிறுவாணி கேரள மாநில எல்லைக்குள் இருக்கிறது. அவர்கள் அனுமதியோடுதான் நாம் ஏதாவது செய்ய முடியும். சுற்றுலா மையமாக்க வேண்டுமானால் அவர்களுடைய எல்லைக்குள் இருப்பதால் அவர்கள்தான் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். நீரினைத் தூய்மைப்படுத்துகின்ற திட்டம் மட்டும் தான் தமிழ்நாட்டில் இருக்கிறது. அந்த இடம் சுற்றுலாவுக்கு ஏற்ற இடமாக இருக்காது.



திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, சிறுவாணியின் கீழ்ப் பகுதியில் கோவை நகரசபையின் மூலம் தங்கும் விடுதி கட்டப் பட்டிருக்கிறது. அதைப்போல மேல்பகுதியில் மைலம் பங்களா என்று கட்டியிருக்கிறார்கள். அந்த விடுதிகளில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு இடமளிக்கும்படி நகரசபைக்கு உத்திரவிடப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தத் துறைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. அந்த ஓய்வு இல்லங்கள் எல்லாம் பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும் என்று கருதுகிறேன். அவர்கள்தான் அதற்கு வேண்டிய வசதி வாய்ப்புகளைச் செய்து தரவேண்டியிருக்கும். ஏராளமான மக்கள் வந்து, தங்குவதற்கு இடம் இல்லாமல் தவிக்கிறார்கள் என்ற நிலை ஏற்படும்போதுதான் சுற்றுலா வாரியத்தின்மூலம் தங்கும் விடுதி கட்ட ஏற்பாடு செய்யப்படும். அப்படிப்பட்ட நிலைமை அங்கு இல்லை. இப்போது அங்கே இருக்கின்ற தங்கும் விடுதிகளில் யார் யாருக்கு இடம் ஒதுக்குவது என்பதை அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, சிறுவாணிக் குடிநீர்த் திட்டத்திலிருந்து கோவை நகர மக்களுக்கு குடிதண்ணீர் கிடைக்கிறது. அந்த இடம் ஒரு பாதுகாப்பான இடமாக இருக்க வேண்டும். ஆகவே, பிரயாணிகள் அங்கு வருவதற்கு ஏற்பாடு செய்யாமல், அதை ஒரு சுற்றுலா இடமாக அபிவிருத்தி செய்யாமல் பாதுகாப்பான இடமாகவே தொடர்ந்து இருக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் அமைச்சர் அவர்கள் ஏற்கனவே சொன்னார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன். நீரைத் தூய்மைப்படுத்தும் இடம்தான் நம்முடைய எல்லைக்குள் இருக்கிறது. அது எப்போதும் பாதுகாப்பான இடமாக இருக்கவேண்டும்; அப்படித்தான் இருந்துவருகிறது. அதனால் அதை சுற்றுலாவுக்கு ஏற்ற இடமாக மாற்றுவதற்கில்லை.

## THENGAPATTANAM-KUZHITHURAI ROAD.

*604. Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken to reconstruct the culvert one furlong north of Thengappattanam junction on the Thengappattanam-Kuzhithurai Road ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பாலத்தை அகலப் படுத்தும் பணிக்கு ரூ. 10,000-க்கான மதிப்பீடு ஒப்பளிக்கப்பட்டு இப்பணி நிறைவேற்றுவதற்கு ஒப்படைக்கப்பட்டது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, எப்போது அந்தப் பாலம் முடிவடையும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, சிமெண்ட் பற்றாக்குறையினால் இத்திட்டம் தொடங்கப்படாமல் இருந்தது. அநேகமாக இப்போது தொடங்கப்பட்டுவிடும் என்று கருதுகிறேன்.

## MULLANGANAVILAI-THOLYAVETTY ROAD.

*605 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to repair the Mullanganavilai-Tholyavetty Road in Killiyoor village Kanyakumari district ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வேலை எடுத்துக் கொள்ளப் பட்டது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இது ஒரு பஸ் ரூட்டாக இருக்கிறது. அந்தச் சாலை மிகவும் மோசமாக இருப்பதால் வேலையை உடனடியாக செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? எப்போது வேலை முடிவடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வேலை நடந்துகொண்டிருக் கிறது. கொடுத்திருக்கிற தகவல்படி 31—3—1975-க்குள் முடிக்கப் பட்டிருக்க வேண்டும். முடிக்கவில்லை என்றால் விரைவில் முடிக்கப் பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## BRIDGE ACROSS KUZHITHURAI RIVER.

*606. Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) when the bridge work across Kuzhithurai River at Gnaramilai-Kadavu, in Vilvancode taluk, Kanyakumari district will be started ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) ஒப்பந்தப்புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன. இப்பணியை நிறைவேற்றுவதற்கான நிறுவனத்தை முடிவு செய்த பின்னர் இதில் வேலை தொடங்கப்படும்.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, முன்னால் ஒதுக்கப் பட்டிருந்த எஸ்டிமேட்டுக்கும் இப்போது இருக்கிற எஸ்டிமேட் தொகைக்கும் வித்தியாசம் இருப்பதாகத் தெரிகிறது. முன்னால்





இருந்த எஸ்டிமேட் தொகையைவிடக் குறைத்திருக்கிறார்களா? இப்போதைய எஸ்டிமேட் தொகை எவ்வளவு? இந்த வேலை எப்போது ஆரம்பிக்கப்படும், எப்போது முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எஸ்டிமேட் 25 லட்சம் ரூபாய். டெண்டர் கோரப்பட்டிருக்கிறது. Last date for receipt of tenders 26—3—75 அதற்குள் அரசுக்கு வந்திருக்க வேண்டும் ; இன்னும் வரவில்லை. வந்தவுடன் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

## சோலையார்பேட்டையில் பயணியர் மாளிகை.

* 607. வினா—திரு. ஜி. ராமசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) சோலையார்பேட்டையில் பயணியர் மாளிகை கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, ஜோலார்பேட்டை ஒரு முக்கியமான இரயில் சந்திப்பு இடமாக இருக்கிறது. ஆகவே, அங்கு இப்போது இல்லை என்றாலும் அடுத்தாண்டிலாவது பயணிகள் விடுதி கட்டப்படுமா ? ஆற்காட்டிலும் பை பாஸ் ரோடு போகும் இடத்தை அமைச்சரவர்கள் பார்த்திருக்கிறார்கள். அங்கும், ஜோலார்பேட்டையிலும் ட்ராவலர்ஸ் பங்களா கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது ஜோலார்பேட்டை பற்றிய கேள்வி. அங்கு இப்போது தேவையில்லை என்று அரசு முடிவு செய்திருக் கிறது.

## PROCUREMENT OF PADDY.

*608. Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether it is a fact that the Tamil Nadu Government has proposed a paddy levy on the land owner and the tenant making them jointly and severally responsible for the levy ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) லெவி செலுத்துவது, நில உடமையாளர், குத்தகைதாரர், இருவருடைய கூட்டுப் பொறுப்பாகும். அவரவர்க்குரிய பங்கைச் செலுத்த வேண்டும். பங்கு நிர்ணயிப்பதில் சிக்கல் எழுந்தால் Authorised Officer முடிவுக்கு விடப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த லெவி, கொள்முதல் விஷயமாக சமீபத்தில் தஞ்சாவூரில் இருக்கக்கூடிய விவசாயிகள் இந்த இலாகா அதிகாரிகளைச் சந்தித்து 'ப்ரொடக்ஷன் பேசிசில்' லெவி போட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். ஆகையால் இப்போது இருக்கக் கூடிய கொள்முதல் முறையை மாற்றி, ஒரு புதிய கொள்கையை, வைத்து அதன் மூலம் சிறிய விவசாயிகளிடமிருந்து குறைந்த அளவிலும், பெரிய விவசாயிகளிடமிருந்து தேவைக்குப் போக மிஞ்சியுள்ள முழுவதையும் கொள்முதல் செய்வது என்ற முறையில் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எப்போதும் உற்பத்தி அடிப்படையில்தான் கொள்முதல் எவ்வளவு என்று நிர்ணயம் செய்து கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால் எவ்வளவு உற்பத்தி என்பதில்தான் தகராறு இருக்கிறது. நம்முடைய இலாகாவினர் கூடுதலாகச் சொல்வதாக விவசாயிகள் சொல்கிறார்கள். விவசாயிகளுக்குப் பாதகம் இல்லாமல் அவர்களுடைய உண்மையான தேவையைப் பூர்த்தி செய்துவிட்டு, மீதமுள்ளதைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE : Are the Government aware that in pursuance of having this policy of procurement without tears, the Civil Supplies Authorities with the help of police raided the Srinivasa Perumal Temple....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பின்னால் வினா எண் 610 வருகிறது. அதில் கேளுங்கள். இது லெவி மட்டும்தான்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இன்றைக்கு இருக்கிற இந்த லெவி முறையில் சிறு சிறு விவசாயிகள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். பெரும் நிலச் சுவான்தார்கள் பாதிக்கப்படாமல் இருக்கிறார்கள். அதனால் இந்த லெவி முறையில் ஏஜெண்டுகள் மூலம் அல்லது ரைஸ் மில் மூலம் கொள்முதல் செய்யும் முறையை விட்டுவிட்டு, அரசாங்கமே நிலச்சுவான்தார்களின் தேவைக்குப் போக மீதம் உள்ள நெல் முழுவதையும் வாங்க ஏற்பாடு செய்தால் பொருத்தமாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்யப்படுமோ ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பெரிய விவசாயிகளை விட்டு விட்டார்கள் என்று நாம் கற்பனை செய்துகொள்வது நல்லதல்ல. அரசாங்கம் நியாயமான முறையில்தான் நடந்து கொள்கிறது. பெரிய நிலச்சுவான்தார்கள் வீட்டிலிருந்து நெல் கட்டாயமாக எடுக்கப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான மூட்டைகள் வைத்திருந்த ஒரு மிராஸ்தார் வீட்டில் போலீசார் சென்று நெல்லை எடுத்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் நீதிமன்றத்திற்குக்கூடப் போயிருக்கிறார்கள். ஒரு பெரிய விவசாயி நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தை அவருடைய குடும்பத்தார் பேரில் பிரித்து வைத்திருக்கிறார். அதையும் கண்டுபிடித்து, அந்த நெல்லையும் எடுத்திருக்கிறோம். அவர்கள் எடுத்த நெல்லைத் திருப்பித் தர வேண்டுமென்று "சூட் நோட்டீஸ்" கூடக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் சில பெரிய விவசாயிகள் தங்கள் பக்கம் வரக்கூடாது என்று "இன்ஜங்ஷன்" வாங்கியிருக்கிறார்கள். ஆகவே, பெரிய விவசாயிகளிடம் நாம் போகவில்லை என்று சொல்வது தவறு.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 609, 610 ஆகிய இரண்டுக்கும் பதில் அளித்து விடுங்கள்.

## HULLING CHARGES.

*609 Q—.THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(*a*) whether there is any proposal under the consideration of the Government to fix the hulling charges , charged by the Rice Mills in the State ;and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தற்போதைக்கு இந்த உத்தேசம் இல்லை.

(இ) கேள்விக்கு இடம் இல்லை.

## பதுக்கல் நெல்லை கைப்பற்றல்.

* 610 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு உணவு-கூட்டுறவு துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ் நாட்டில் 1974-ம் ஆண்டு, ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் பிடிக்கப்பட்ட பதுக்கல் நெல் மூட்டைகள் எத்தனை ?

(இ) இவைகளுக்கு விலையாகக் கொடுக்கப்பட்ட ரூபாய் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 16,654 மூட்டைகள் நெல் ; மேலும் 5,372 மூட்டைகள் அரிசி.

(இ) பதுக்கல்காரர்கள்மீது தொடுக்கப்பட்ட வழக்குகள் முடிவு பெற்ற பின்பு அம்முடிவுகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. ஏ. வகாப்: தலைவர் அவர்களே, இன்றையதினம் உற்பத்தி எவ்வளவு என்பதுபற்றி தீர்மானிக்கப்படவில்லை. கணபதியா பிள்ளை அவர்கள் தம் அறிக்கையிலேயே ஏக்கருக்கு 10 மூட்டை சராசரி என்று கொடுத்திருக்கிறார்கள். நிலக்காரர்களிடத்தில் லெவியை வற்புறுத்கிறோம். குத்தகைக்காரர்களிடத்தில் எந்த நோட்டீசும் செலுத்துவதில்லை. இதைப்பற்றிப் பரிசீலித்து இரண்டு பேரும் லெவி கொடுப்பதை வற்புறுத்த ஏற்பாடு செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஏற்கனவே நான் சொன்னபடி இரண்டுபேரும் கொடுத்தாக வேண்டும். இரண்டுபேர்களும் கொடுக்க வேண்டுமென்றுதான் வற்புறுத்தியிருக்கிறோம்.

Dr. H. V. HANDE: Sir, are Government aware that in spite of their policy of procurement without tears, that the Civil Supplies officials, with the help of the Reserve Police, raided the Srinivasa Perumal Temple at Nachiarkoil last evening, broke open the granaries in the Vahana Mandapam and the built-in granaries inside the temple as also the store room and took away 540 kalams of paddy store there for daily pooja and festivals ? Are the Government aware that it is important on the part of the Government to see that religious sentiments are not hurt and are the Government aware that the 33 inmates in the orphanage attached to the temple, do not know from where they will be getting their next meal. In view of the unrest prevailing there because of this, may I know the steps taken by the Government to see that the policy announced namely, 'procurement without tears' will be strictly adhered to by the officials ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இதுபற்றி கோவை செழியன் அவர்கள் காலையில் தெரிவித்தார்கள் காலையில் இதனை நான் பத்திரிகையில் பார்த்தவுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பேசினேன். உடனடியாக இதுபற்றி விசாரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும், அறநிலையத் துறை அதிகாரிகளை விசாரிக்கச் சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகையில் வந்துள்ளது உண்மையாக இருந்தால் அதற்காக நான் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கோவில் நிர்வாகிகளே 'தவறு செய்திருந்தாலும் அதிகாரிகள் அந்தத் துறையில் மேலே உள்ள டெபுடி கமிஷனர், கமிஷனர் மூலமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கலாம். அப்படிச் செய்யாது இதுபோல நடந்துகொண்டிருப்பார்களானால் அது தவறாகும். கோவிலுக்கு வேண்டிய நெல்லைக் கொடுத்தாக வேண்டுமென்று ஆட்சித் தலைவரிடம் சொல்லியிருக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: காலையில் வந்த செய்திப்படி சம்பந்தப்பட்ட ஆலயத்தில் அதிகாரிகள் தவறான முறையில் நடந்திருப்பதாகவே தோன்றுகிறது—இது போல மற்ற ஆலயங்களிலும் ஏற்படாமல் இருப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ளுமா ?





மாண்புமிகு திரு. செ. மாதவன்: பத்திரிகைச் செய்தியை முழுமையாக நம்பி முடிவிற்கு வந்துவிடுவதற்கில்லை. அதுபோல நடைபெறக் கூடாது என்பதுதான் வாதம். கோவில்களில் பதுக்கல் இருக்கும் என்று நினைத்துச் செயல்பட முடியாது. அப்படியே இருந்தாலும் அங்குள்ளவர்களும் அரசின் வேறு ஒரு துறையைச் சேர்ந்தவர்களாதலால்—அந்தத் துறை மேலதிகாரிகளின் மூலமாகச் செய்திருக்கலாம். செய்தி உண்மையாக இருக்குமானால் அது தவறுதான்.

திரு. ஆ. கு. சுப்பையா: நெல் கொள்முதல் சம்பந்தமாக சிறிய விவசாயிகள்—நிலப்பிரபுக்கள் ஆகியவர்களுடைய குடும்பச் செலவுக்கான தானியத்தைக் கணக்கில் கழித்துவிட்டு மீதியுள்ள அனைத்து நெல்லையும் கண்டிப்பாகக் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தஞ்சை மாவட்டத்தில் உள்ளவர்கள் இந்தக் கருத்தைத்தான் சொல்கிறார்கள். இது சரியான கருத்து என்று கருதுகிறேன். ஒவ்வொரு விவசாயியும்—தன்னுடைய குடும்பத்திற்குத் தேவையானது—விவசாயப் பணிகளுக்குத் தேவையானது எவ்வளவு என்பதைச் சொன்னால் அதை ஒதுக்கிவிட்டுப் பாக்கியில் லெவிக்கு எடுத்துக் கொள்ளலாம். இதில் என்ன சங்கடம் என்றால் கடைசிக் காலத்தில் இந்தக் கோரிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். இதுவரை என்ன செய்தார்கள், கையில் இருந்த நெல்லை விற்றுவிட்டார்களா என்கிற சந்தேகம் எல்லாம் வருகிறது. இதைப் பரிசீலித்துத்தான் முடிவு எடுப்பதாக இருக்கிறோம்.

திரு. என். கே. பழனிசாமி: தஞ்சை மாவட்டத்தில் பத்து நாளைக்கு முன்பு ஒரு மிராசுதார் வீட்டில் சோதனையிட்டு 1,600 மூட்டை சர்க்காரால் எடுக்கப்பட்டிருக்கிறது. இதற்காகச் சர்க்காரைப் பாராட்டுகிறேன். ஆனால் சிறிய விவசாயிகள் வீட்டில் ஒரு மூட்டையைக்கூடச் சாப்பாட்டிற்கு விடாது எடுத்துக் கொள்கிறார்கள். அவர்களுடைய குடும்பச் சாப்பாட்டிற்கு வேண்டியவற்றையாவது வைத்துக்கொள்ள அனுமதி தருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விவசாயிகளுடைய சாப்பாட்டிற்குக் கூட இல்லாமல் நெல்லைப் பறிப்பது தவறு. தஞ்சையில் ஒரு மிராசுதாரருக்கு 126 ஏக்கரா இருக்கிறது. அவர் விளைவித்தது 1,100 கலம். விவசாயச் செலவு—சாப்பாட்டிற்கே அந்த 1,100 கலம் தேவை என்று வாதாடுகிறார். இப்படி 126 ஏக்கராவுக்குச் சொந்தமானவர் லெவிக்கு ஒரு மூட்டைகூடத் தரமாட்டேன் என்று வாதம் பண்ணினால் அதை எப்படி ஏற்றுக்கொள்வது ? இரண்டு பக்கமும் தவறு இருப்பதாகத் தெரிகிறது. என்றாலும் வாங்கிச் சாப்பிடுகிறவர்களின் வசதியையும் கவனித்துச் செயல்பட வேண்டியிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா: கொள்முதலுக்கு லெவி கொடுக்கவேண்டும் என்று சொல்லி—அதிகாரிகளைக் கொண்டும்—போலீஸ் துறையைக் கொண்டும் கொடுக்காதவர்கள் நெல் பறிக்கப்படுகிறது. இதனால் எல்லாம்

நமக்கு அதிகமாகச் செலவாகிறது. இப்படி ஆகிற செலவில் ஒரு பகுதியை விவசாயிகளுக்கே நெல் விலையில் கூட்டிக் கொடுக்கலாம். ஒரு ஏக்கருக்கு இவ்வளவு லெவி—அதை இந்த இடத்தில் கொண்டுவந்து அவர்களே கொடுத்துவிட வேண்டும் என்று அறிவிக்கலாம். அப்படிக் கொடுக்கத் தவறியவர்களது சொத்தையே ஜப்தி செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நெல்லைப் போய் எடுப்பதற்கே ஆட்சேபனை—சொத்தைப் பறிமுதல் செய்வதானால் ஆட்சேபனை பலமாக இருக்கும். உண்மையில் இந்த ஆண்டு விளைச்சல் குறைவு—மகசூல் குறைவு. இதை உணர்ந்துதான் செயல்பட வேண்டியிருக்கிறது. என்றாலும் இருக்கின்ற நெல்லைக் கொண்டுவந்து வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்குக் கொடுத்தாக வேண்டியிருக்கிறது—இதில் கொஞ்சம் சிரமம் இருக்கிறது—இது சென்ற ஆண்டு இல்லை—அதற்கு முந்திய ஆண்டும் இல்லை. இந்த ஆண்டு விவசாயிகளும் அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டும்.

திரு. வி, ஆடெி அருணா : இன்றைக்குக் கொள்முதலுக்குப் போதுமான அளவு தானியம் கிடைக்காததற்குக் காரணம் ஒன்று கொள்முதல் விலை குறைவு—விவசாயிகளுக்குக் காலத்தில் உரம் கொடுக்காதது—விவசாயிகளுக்குச் சாகுபடி காலத்தில் குறைந்த விலையில் உரம் கொடுக்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: உரத்தின் விலையை மத்திய சர்க்கார் 2 மடங்காக ஆக்கியிருக்கிறது. எங்களைக் குறைத்துக் கொடுக்கச் சொல்கிறார்கள். உரம் 2 மடங்கு விலை உயர்ந்து—விலைவாசிகள் உயர்ந்திருக்கிற அளவுக்கு நெல் விலை உயரவில்லை என்கிறார்கள் — அதற்கு ஏற்றபடி விலை உயர்ந்தால் வாங்கி உண்பவர்கள் நிலை என்ன ஆகும் என்பதையும் சிந்தித்துத்தான் 1969 ஆம் ஆண்டில் மூட்டை 42 ரூபாய்க்கு வாங்கினோம் என்றால் இன்றைக்கு 89 ரூபாய் கொடுத்து வாங்குகிறோம். இந்த அளவுக்கு விவசாயிகளுக்கு உதவி செய்கிறோம்.

திரு. கே. எ. வகாப்: பதுக்கல் நெல்லை வெளிக் கொணர்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வதை வரவேற்கிறோம். தங்களுக்குத் தேவையான நெல்லை அவர்கள் வீட்டில் வைத்துக்கொள்வதைக் கூடப் பதுக்கல் என்று நடவடிக்கை எடுத்துப் பறித்துக்கொண்டுவிடக் கூடாது. இன்றைக்கு செங்கல்பட்டு மாவட்டத்தில் 19 லட்சத்திற்கு நெல் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்துப் பல லாரிகளையும் பல மோட்டார் வண்டிகளையும் கைப்பற்றி இருக்கிறார்கள். அவற்றை எல்லாம் பறிமுதல் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விவசாயிகளிடத்தில் நெல் பதுக்கப்படுவது என்பதும் சரியானதல்ல. அதற்காகத்தான் அவர்கள் தங்கள் கைவசம் உள்ள ஸ்டாக்கை பக்கத்திலுள்ள அதிகாரிகளுக்குத்





தெரிவித்துவிட வேண்டும் என்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்வது சட்டத்தின்கீழ் வந்துவிடும். விவசாயிகள் என்ற பேரால்—வியாபாரிகள் நெல்லைப் பதுக்கி—கடத்தலில் ஈடுபடுவது பயங்கரமான குற்றம்—இதில் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்கிறோம்.

திரு. நா. வீராசாமி : கொள்முதலுக்குக் கொடுக்கமாட்டேன் என்று எந்த விவசாயி சொன்னாலும் அது தவறு. கொள்முதலுக்குக் கொடுத்துவிட்டு தங்கள் தேவைக்கான நெல்போக— பாக்கி ஒரு மூட்டை இரண்டு மூட்டை நெல்லை அவர்கள் மார்கெட்டில் கொண்டு போய்விற்பது தவறு அல்ல ஆனால் அப்படி விற்பதற்கு அவர்கள் எடுத்துக் கொண்டு போகிறபோது அவற்றையும் அதிகாரிகள் பறித்துக் கொண்டு அந்த விவசாயிகளைத் துன்புறுத்துகிறார்கள். அதற்கு இந்த அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-30]

மாண்புமிகு செ. மாதவன் : அப்படி நஷ்டம் ஏற்படாது. அதில் உள்ள சிக்கல் என்ன என்றால், லெவி எவ்வளவு என்று போடுகிறோம். அவ்வளவு கொடுப்பதில்லை. பகுதி கொடுக்கிறார்கள். முழுமையான லெவி கொடுத்ததாக கணக்கிலே வராது. ஒருவர் அதிகாரி போட்ட லெவி கொடுத்து இருந்தால், ரசீது வைத்திருந்தால், நெல் விற்கலாம் என்று திட்டவட்டமாகச் சொல்லுகிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, இந்த லெவி கொள்முதலிலே சில இடங்களிலே அரசாங்கம் நிர்ணயிக்கிற அளவு கொடுக்க முடிவது இல்லை. சில இடங்களில் கொடுக்கலாம். இப்படிப்பட்ட சிக்கல் இருக்கும்போது கணக்கு முறையில் சரியாக இல்லாத காரணத்தால் அதிகமாகக் கொள்முதல் போடுகிறார்கள். இதனால் புகார் வருகிறது. இது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை எடுத்து எந்தெந்தப் பிரதேசத்திலே எந்த அளவுக்கு விளைச்சல் இருக்கிறதோ, அதைக் கணக்கில் எடுத்து இந்த பிரொக்யூர்மெண்ட் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது நிர்ணயிப்பதில் கருத்து வேறுபாடு இருக்கிறது. தஞ்சை ஜில்லா விவசாயிகளைப் பார்க்கும்போது ஒரு விவசாயி நிலத்தில் இவ்வளவு விளைந்து இருக்கிறது என்று பார்த்து நாம் போட்ட லெவி பொருத்தமாக இருந்தது. பக்கத்திலே இருந்த விவசாயி நிலத்தில் விளைச்சல் இல்லை. இந்த ஆண்டு அசாதாரணமான நிலைமை. நூறு ஆண்டு காணாத நிலைமை. நிலத்திற்கு நிலம் உற்பத்தி வேறுபடுகிறது. இதிலே சிக்கல் இருக்கிறது. அதிகாரிகள் கிராம விவசாயிகளைக் கலந்து அவர்களுடைய சொந்த நெல்லைப் பறித்துவிடாது பார்த்துக்கொள்ள வேண்டுமென்று திட்டவட்டமாகச்சொல்லி இருக்கிறோம்.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, லெவி கொடுத்ததற்குப் பின்னால் உபரி நெல் விற்பதற்கு தஞ்சை மாட்டத்தில் உபரி நெல் ரூ. 55க்கு அரசு வாங்கும்படி உத்தரவு இட்டிருக்கிறது. திருச்சி, கோவை மாவட்டங்களில் உபரி நெல் தனியார் ரூ. 110லிருந்து ரூ. 150 வரை ஒரு மூட்டைக்கு வாங்குகிறார்கள். ஆகவே தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகளுக்கு உபரி நெல்லுக்கு விலை அதிகம் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: உபரி பகுதியில் எப்படி நெல் கொள்முதல் செய்ய வேண்டுமென்று அறிவித்து இருக்கிறோம். தஞ்சை மாவட்டத்தில் உபரி நெல்லுக்கு ரூ. 100 வரை கொடுக்கிறோம். அரிசி விலை எந்த அளவுக்கு உயர்ந்து இருக்கிறது என்று தெரியும். அதற்கு மேலே அரிசி விலை உயருமானால் பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள்.

THIRU. K. S. KOTHANDARAMAIAH : On account of failure of rains the entire Hosur taluk has been declared as drought affected area. The crops have failed. The Officers enter the houses and tease people to give paddy. When the people have nothing there to eat, how can they give ? I have got quit a number of complaints. Will the Hon. Minister for Food and Cooperation be pleased to instruct the Officers concerned not to harass the people ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அங்கே விளையாத பகுதி முழுவதும் விளையாத பகுதி என்று இருக்குமானால் அங்கு அப்படிக் கொள்முதல் செய்கிற நிலை இருக்குமானால் அங்கத்தினர் அவர்கள் கருத்தை மாவட்ட ஆட்சியாளருக்குத் தகவலாகத் தெரிவிப்போம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இப்போது அரசுக்கு சிரமம் இருக்கின்றது. விவசாயிகளுக்கும் சிரமம் எத்தனையோ ? ஓப்பன் மார்க்கெட் விலை வித்தியாசம் இருக்கின்றது. ஆகவே, மார்க்கெட்டின் சர்ப்ளஸ் அத்தனையும் அரசாங்கம் கொள்முதல் செய்து இன்னும் விவசாயிகளுக்குக் கட்டுப்பாடான விலை கொடுத் அரசு கொள்முதல் செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கடுமையான விலை என்பதிலே சர்ச்சை இருக்கின்றது. இன்றைக்கு இருக்கின்ற ஓப்பன் மார்க்கெட் விலை ஏற்றுக்கொள்ள முடியாது. அதை ஏற்றுக்கொண்டோமானால் பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள். மார்க்கெட்டின் சர்ப்ளஸ் என்பது தியாரிடிகல். லெவியே கூடாது என்று சொல்லுகிறபோது மார்க்கெட்டின் சர்ப்ளஸ் என்பது தியரிடிகல்.



புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, பெரிய நிலப்பிரபுக்களுக்கு சலுகை வழங்கப்படுகிறது என்று புகார் வந்து இருக்கிறது. எந்தெந்த விவசாயிகளிடம் எந்த அளவு நிலங்கள் இருக்கின்றன, அவர்களிடமிருந்து எந்த அளவுக்கு ப்ரொக்யூர்மெண்ட் செய்யப்பட்டது என்ற விவரம் குறித்து அந்தந்த ஊராட்சி மன்ற அலுவலகங்களில், கூட்டாட்சி அலுவலகங்களில் வைக்க அரசு முன்வருமா ? புகார்கள் குறிப்பிட்டும் வரலாம், பொதுவாகவும் வரலாம், இதுபற்றிக் கவலைப்படக்கூடாது. சில பெரிய விவசாயிகள் நீதி மன்றத்திற்குச் சென்று இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இப்படிப்பட்டவர்களைக் கொண்டு அலுவலர்கள் பயந்துவிடுகிறார்கள், நடவடிக்கை எடுப்பது இல்லை என்ற தவறை விலக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முடியும்.

திரு. என். கே. பழனிசாமி : இப்பொழுது நெருக்கடியாக இருக்கின்ற சமயத்தில் 3 போகம் நிலம் உள்ளவர்களுக்கு உரம், பூச்சி மருந்துபோன்ற சலுகை கொடுத்து ப்ரொக்யூர்மெண்ட் செய்யாமல் இப்படிக் கொள்முதல் செய்வது சரியா ? எந்த இடத்தில் விளைச்சல் இருக்கின்றது. என்று பார்த்துக் கொள்முதல் செய்ய ஏற்பாடு வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படிப்பட்ட திட்டம் இந்த மாமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. இது ஓரளவு விவசாயிகளால் வரவேற்கப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அரசாங்கம் கொள்முதல் செய்கிற நெல் இப்போது தனியார் இடம் அரைவைக்கு கொடுக்கப்படுகிறது. இதனால் சில தவறுகள் ஏற்படுகின்றன். அரசாங்கம் கொள்முதல் செய்கிற நெல்லை அரசே அரைவை செய்வதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்மிடத்திலே பல பெரிய ஆலைகள் இப்போது இருக்கின்றன. அதிலே ஓரளவுக்கு அரிசி அரைக்கிறோம். தனியாரிடம் கொடுக்கின்ற நெல்லை அரிசியாக வாங்குவதில் பல சிக்கல்கள் நேர்ந்து இருக்கின்றன. இந்த ஆண்டு உடனடியாக மாற்றிவிட முடியாது என்று நினைக்கிறேன். நீண்டகாலத் திட்டம் இட்டு இதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், இப்போது வேளாண்மை மிகவும் பாதிக்கப்பட்டு விளைச்சல் மிகவும் குறைந்து இருக்கின்ற காரணத்தால் விசேஷ நிலைமைகள் ஏற்பட்டு இருக்கின்றன. விவசாயிகளுக்குச் சாதகமான கொள்முதல் முறை அமைக்கப்பட்டு இருந்தால் இந்த சிக்கல் வந்து இருக்காது என்று தோன்றுகிறது. ஏக்கர் அடிப்படையில் இப்போது நெல் கொள்முதல் செய்கிறார்கள். கிராமங்களில் அடங்கல் என்று வைத்து எவ்வளவு விளைகிறது என்று கணக்கு எடுக்கிறார்கள். இதில் சிக்கல் ஏற்படுகிறது என்பதை அரசு உணருமா ? இந்த அடங்கலை மாற்றி,

விளைவு பற்றிய சரியான விவரங்களைக் கிராம அதிகாரிகள் தயாரிக்கவும், அதில் தவறுகள் ஏற்பட்டால் நடவடிக்கை எடுக்கவும், விளைவு அடிப் படையில் கொள்முதல் நிர்ணயிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு ஏக்கருக்கு எவ்வளவு விளைச்சல், கணக்கிலே ஒரு ஏக்கருக்கு நெல் எவ்வளவு விளைச்சல் ஆகும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்கின்றது. விவசாய இலாகாவைக் கலந்து ஆலோசிக்கிறோம். அவர்கள் எந்த அளவுக்கு மழை பெய்து இருக்கின்றது, தண்ணீர் எவ்வளவு விட்டு இருக்கிறார்கள், பயிர் விளைச்சல் எவ்வளவு ஆகலாம் என்று சொல்வது உண்மையாக இருக் கிறது, உண்மையில்லாமலும் இருக்கிறது. இந்த நிலைமை இருக்கின்ற காரணத்தால் இந்த அலுவலர்கள் என்னென்ன செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சியாளரிடம் யோசனை கூறி இருக்கிறோம்.

திரு. வி. பழனிவேலு: தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தின் உர விலை ஏற்றம் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். இரண்டு மடங்காக உரம் விலை அதிகரித்த காரணத்தால் கொள்முதல் விலைக்கு விவசாயிகள் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்ட மன்றம் ஒரு தீர்மானம் போட்டு மத்திய அரசை நீங்கள் உரம் குறைந்த விலைக்குக் கொடுங்கள், இல்லாவிட்டால் நெல்விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கனவே நெல்லுக்கு அதிக விலை நிர்ணயிக்க வேண்டு மென்று அரசு வற்புறுத்தி வருகிறது.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு எவ்வளவு நெல் வைத்துக்கொள்ளலாம் என்பதிலே சில சிக்கல்கள் ஏற்பட்டு இருக்கின்றன. சில இடங்களில் 3 போகம், 2 போகம் விளைகிறது. பரம்பிக்குளம் ஆழியார் பகுதியில் 2 வருடத்திற்கு ஒரு தடவை பயிர் செய்கிறார்கள். 2 வருடத்திற்கு ஒருமுறை விளைகிற காரணத்தால் இந்தக் குடியானவர்கள் சாப்பாட்டிற்கும் விதைக்கும் வைத்துக்கொள்ள அரசு இதைத் தனியாகக் கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஸ்டாக் வைத்துக்கொள்வதை பொறுத்த அளவில் எவ்வளவு நெல் தன்னிடம் இருக்கிறது என்று அறிவித்து விட்டால் போதும். அதிலே கட்டுப்பாடு செய்யவில்லை. ப்ரொக் யூர்மெண்ட்க்கு எவ்வளவு தேவை என்ற கணக்கை மாவட்ட ஆட்சியாளர் தருவார்.

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, உறுப்பினர் சித்தமல்லி சோமசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டது போல தஞ்சை மாவட்டத்தில் உபரி நெல் அதிக விலைக்கு விற்க முடிவது இல்லை. தஞ்சை மாவட்டத்திற்கு இந்தச் சலுகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. மாதவன் : தஞ்சை மாவட்டம்தான் இன்றைக்கு தமிழ்நாட்டை காப்பாற்றி வருகிறது. இந்த மாவட்டத்திற்கு எல்லாவித உதவியும் செய்யப்படும்.

திரு. அ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மத்திய அரசு கூடுதலாக கொடுக்கவில்லை என்றாலும் மாநில அரசு கொஞ்சம் கூடுதலாக சேர்த்துக் கொடுத்தால் நிச்சயமாக விவசாயிகள் அரசுக்கு கொடுக்க முன் வருவார்கள். அரசாங்கம் கொஞ்சம் சேர்த்துக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் நாம் ஏற்கெனவே செய்திருக்கிறோம். ரூ. 74 மத்திய அரசாங்கம் சொல்லியிருக்கிறது. நாம் ரூ. 89 கொடுக்கிறோம். சர்ப்ளஸ் நெல்லை ரூ. 100க்-கு வாங்குகிறோம்.

திரு. கே. எ. வகாப் : உரம் இரட்டிப்பான விலையாகியிருக்கிறது என்று சொன்னார்கள். உண்மையிலே கூட ரூ. 15 கூட்டி இருக்கிறார்கள். இப்படி விலையை கூட்டிக்கொண்டே போகிறார்கள். நீங்களும் கேட்கிறீர்கள். நாங்களும் கேட்கிறோம், விவசாயிகளும் கேட்கிறார்கள். ஆகவே, பிரச்னையைத் தீர்க்க வேண்டும். ஆகவே, மத்திய அரசை சொல்லிக் கொண்டிருக்காமல், இப்பொழுது ஏறி இருக்கிற விலையையாவது தமிழக அரசே ஏற்றுக் கொள்ள முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சொல்லிக்கொண்டுதான் இருக்க வேண்டும் கேட்டுக்கொண்டுதான் இருக்கவேண்டும். மத்திய அரசாங்கம் இறங்கி வரும் வரை நாம் அப்படித்தான் செய்யவேண்டும்.

குடிநீர் வழங்கும் திட்டங்கள்

*611 வினா

திரு. வா. முத்து : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் மல்லசமுத்திரம் பேரூராட்சிக்கு குடி தண்ணீர் வழங்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : சேலம் மாவட்டம், மல்லசமுத்திரம் பேரூராட்சியின் வெங்கடேசபுரியில் ரூபாய் இருபதாயிரம் செலவில் இரு ஆழ் துளைக் கிணறுகள் போடப்பட்டு அத்துடன் கையினால் இயக்கப்படும் குழாய்கள் பொருத்தப்பட்டு வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.

*612 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to remove the silt in the Rama nayakani tank near Hosur Town and to deepen it, for supplying drinking water to Hosur Town; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, it is a very big tank and the entire Hosur Town depends upon this tank for drinking and other purposes. Once it is filled there would be water for two or three years, but on account of the silt there, its capacity is going down every year and the people suffer. This year it is empty. So, if the local panchayat or panchayat union has no funds, may I request the Hon. Minister to ask at least the Public Works Department to undertake the work so that the people may not suffer ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாரயணசாமி : தலைவர் அவர்களே, இது பெரிய டாங்காக இருந்தாலும் அதிலேயிருக்கிற தண்ணீர் 32 மில்லியன் கன அடிதான் மழை பெய்தால் சேருகிறது. அதற்கு பாசனம் 80 ஏக்கர் இருக்கிற காரணத்தாலே, அந்த பாசனத்திற்கான நீர் அதற்கு போத வில்லை என்ற காரணத்தினால்—முன்னே எஸ்டிமேட் போட்டிருக்கிறார்கள் அங்கேயிருந்து தண்ணீர் எடுக்க வேண்டுமென்று. பின்னர் அது பாசனத் திற்குத்தான் தகுதி என்பதால்—அதை கைவிட்டு விட்டார்கள். இப் பொழுது ரூ. 32·78 இலட்சத்துக்கு எஸ்டிமேட் போட்டு, ஓசூர் மற்றும் மத்தகிரி பேரூராட்சி மற்றும் அரசு கால்நடை பண்ணை ஆகியவைகளுக்குத் தண்ணீர் வழங்கும் திட்டம் இணைந்துள்ளது. அரசு கால்நடை பண்ணைக்கு கொடுக்க இருக்கும் 0·25 மில்லியன் லிட்டருடன் சேர்த்து சுமார் 4·24 மில்லியன் லிட்டர் தண்ணீருக்காகத் திட்டம் போட்டிருக்கிறார்கள். அதை சி.இ. பாஸ் செய்திருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் அதற்கான ஒப்புதலை தருமானால் நிச்சயமாக அந்த வேலை செயல்பாட்டிற்க்கு எடுத்துக் கொள்ளப்படும்

மருங்கூர்—தோவாளை சாலை

*613 வினா.—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

குமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் தாலுகா, மருங்கூரிலிருந்து காமநாயக்கனபுதூர் வழியாக தோவாளைச் சானலுக்கு செல்லும் சாலையினைச் செப்பனிடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அகஸ்தீஸ்வரம் ஒன்றியம் இச்சாலையை மேம்படுத்த ஆவன செய்து கொண்டிருக்கிறது.



திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : தலைவரவர்களே, இந்த அகஸ்தீஸ்வரம் ஒன்றியத்தின் நிதி நிலைமை அதைச் சரிவர பழுதுபார்க்க இடம் கொடுக்கவில்லையென்று கூறப்படுகிறது. ஆகவே, அந்த ரோடை நெடுஞ்சாலை இலாகாவிடம் ஒப்படைத்து, அந்த நெடுஞ்சாலை இலாகா மூலமாகப் பழுதுபார்க்கவும், அதன் குறுக்கே போகிற தோவாளை சாலையின் மேல் பாலம் கட்டவும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, அதன் மொத்த நீளம் 2·4 கிலோ மீட்டர். 1973–74-ல் 1 கிலோ மீட்டர் முடிந்திருக்கிறது. 1974–75-ல் இன்னொரு கிலோ மீட்டர் முடிந்திருக்கிறது. மீதியுள்ளது 0·4 கிலோ மீட்டர். அதையும் பஞ்சாயத்து யூனியன் முடிக்கத் தீர்மானித்திருக்கிறது. முடித்துவிடுவார்கள்.

சாக்கடைத் துப்புறவுப் பணி

*614 வினா.—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) இந்த ஆண்டு, சனவரித் திங்களில், சாக்கடைத் துப்புறவுப் பணியில் ஈடுபட்ட மூன்று ஊழியர்கள் விஷ வாயுவில் இறந்துவிட்டனர் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இனியாவது அம்மாதிரி ஏற்படாமல் இருக்க அரசு எடுக்க இருக்கும் பாதுகாப்பு நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) சாக்கடைத் துப்புரவுப்பணியில் ஈடுபடும் தொழிலாளி வேலையில் இறங்கும் முன்னர் முன்னெச்சரிக்கையாக ஒரு கயிற்றினை தன் தோளைச் சுற்றியும், இடுப்பைச் சுற்றியும் கட்டிக் கொண்டுள்ளாரா என்று உறுதி செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறு அவர், கயிற்றினைக் கட்டிக் கொண்டிருப்பின் அபாயம் ஏற்படுங்கால், அவரை மேலே இழுத்துவிடலாம். வாயு முகமூடி அணிந்து கொள்ளுதல், ஆழமான சாக்கடை அடைப்புகளை நீக்குவதற்கான சாதனங்களை உபயோகிப்பது போன்ற நவீன பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆய்வில் உள்ளன.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்தச் சாக்கடைத் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருக்கிற ஊழியர்கள் ஏற்கெனவே மிக தரித்திரப்பட்ட நிலையிலுள்ளவர்களாக இருப்பார்கள். இறந்த அந்த 3 தொழிலாளிகள் குடும்பங்களுக்குப் பாதுகாப்பு நிதி கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அவர்களுக்கு குடும்பப் பாதுகாப்பு நிதி ரூபாய் 10,000 கிடைத்ததா ? அல்லது வேறு ஏதாவது உதவி செய்யப்பட்டதாவென்பதை அறிய விரும்பு

கிறேன். இப்பொழுது பாதுகாப்பு நடவடிக்கையாக கயிற்றைக் கட்டுவதோடு, அபாயம் ஏற்படும்போது வெளியே இழுத்துவிடுவது போன்றவை செய்யப்பட்டாலும், வேறு நல்ல பாதுகாப்பான ஏற்பாட்டை அவர்களுக்குச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, அவர்கள் இறந்த அன்றே ரூ. 500 சவம் எடுப்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு முதலமைச்சர் நிதியிலிருந்து ரூபாய் 1,000, ரூபாய் 1,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய துணைவியர் 3 பேருக்கும் பெர்மனென்ட் உத்தியோகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இறந்தவர்களிலே ஒருவர்தான் பர்மனென்ட் உத்தியோகம் செய்தவர். அவருக்கு ரூபாய் 10,000 கிடைக்க வழி செய்யப்பட்டிருக்கிறது. மற்ற இரண்டுபேரும் நிரந்தரக் கூலிகள் அல்ல. இருந்தாலும் மூன்று பேர்களின் மனைவிகளுக்கும் ரூபாய் 200 பெறத்தக்க வகையில் சென்னையிலே வேலை செய்கிறவர்களுக்கு உள்ள ஊதியச் சலுகைகள் அத்தனையும் கொடுத்து, வேலை கொடுத்திருக்கிறோம்.

இதற்காக மூன்று இயந்திரங்கள் உள்ளன. அதிலே ஒன்று வேலை செய்யவில்லை. அந்த இயந்திரங்கள் சில இடங்களிலேதான் வேலை செய்கின்றன. மற்ற இடங்களிலே வேலை செய்யும்போது மேற்பார்வை அலுவலர்கள் அந்த இடத்திலே வேலை செய்ய இறங்குகிற தொழிலாளி சில பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். தொழிலாளி இறங்கி வேலை செய்ய வேண்டிய சாக்கடை நுழைவாயிலில் இருபுறத்திலும், வாயு, வெளியேறுவதற்காக, போதுமான நேரத்திற்கு திறந்து வைத்திருத்தல்; பொதுவாக சாக்கடையிலுள்ள அடைப்புகளை சாக்கடையோட்ட பாதையிலேயே அகற்றுவதற்கு முயலுதல்; நுழைவாயில் வழியாக இறங்கும் வரை எதிர்பாராத அபாயங்களினின்று வெளியில் இழுத்துத் தப்புவிக்க இடுப்பைச் சுற்றி, காப்புக் கயிற்றினைக் கட்டிக் கொண்ட பின்னர்தான் நுழைவாயில் வழியாக இறங்க அனுமதிக்கப்படும்; மண்ணெண்ணெய் விளக்குகள் திறந்த எண்ணெய் விளக்குகளை இறங்கும் வழியிலுள்ள வாயு எரித்து விடுமாதலால் அவற்றை விடுத்து மின்விளக்கை (Torch light) மட்டுமே கையாளவேண்டும்; ஒருவரே தொடர்ந்து குழாய்களில் இறங்கி மூழ்கி வேலை செய்வதால் ஏற்படும் தளர்ச்சியைக் தவிர்க்க முறை வைத்து (by turns) தொழிலாளிகள் அனுப்பப்படுகின்றனர். சாக்கடைக் குழாய்களில் நீர்மட்டம் குறைந்த அளவில் இருக்கும்போதுதான் பொதுவாக இதுபோன்ற வேலைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. சில குறிப்பிட்ட பகுதிகளில் இப்படிப்பட்ட வேலைகளை உச்சி வேளையிலோ அல்லது பிற்பகல் தொடக்கத்திலோ மேற்கொள்ள இயலும்; பெரும்பாலும் எல்லாப் பகுதிகளிலும் இவ்வாறான வேலைகளை நள்ளிரவு நேரத்தில்தான் செய்ய இயலும். இத்தகைய விதிமுறைகளை வைத்துத்தான் தொடங்க வேண்டும். சிலர் அந்த விதிமுறைகளுக்கு மாறாக நடந்து கொள்கிறார்கள். எதேச்சையாக ஏதோ 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது 4 ஆண்டுகளுக்கு ஒரு இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.





திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, இந்தச் சாக்கடைத் துப்புரவுத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள் அனைவரும் தாழ்த்தப்பட்டவர்கள். அவர்களுக்கு இந்தக் கருணைமிக்க அரசு, குடும்ப நலப் பாதுகாப்புத் திட்டத்தை விஸ்தரித்து, அவர்களுக்குரிய பாதுகாப்பை அளிக்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாதவர்கள் என்று அல்ல. குடும்ப நலத் திட்டம் எல்லோருக்குமே இருக்கிறது. நான் முன்னமே சொன்னமாதிரி, ஒருவருக்கு அத்திட்டத்திலிருந்து நிதி கிடைக்க வழி செய்யப்பட்டது. மற்ற இருவர் காஷுவல் லேபர் என்ற காரணத்தாலே இந்தத் திட்டம் செயல்படவில்லை. வேறு ஏதாவது வழியிருந்தால் பார்க்கலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி நெல்லிக்குப்பம்: தலைவர் அவர்களே, சென்னையிலே இப்படி அடிக்கடி விபத்துக்கள் தொடர்ந்து நடந்துகொண்டிருப்பதற்குக் காரணம் இறங்கி வேலை செய்யக்கூடிய தொழிலாளிகள் இடுப்பிலே நீண்ட கயிற்றைக் கட்டிக் கொண்டு இறங்குகிறார்களே தவிர, அவர்கள் உள்ளே போய் சுவாசிக்கின்ற காற்று விஷக் காற்றாக இருக்கிறது. அதிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு தொழிலாளியும் ஆக்ஸிஜன் மாஸ்க்கை முதுகிலே கட்டிக் கொண்டு இறங்க வேண்டுமென்று வைக்க வேண்டும். அவர்கள் 1 மணி நேரம், 2 மணி நேரம் வேலை செய்தாலும் கூட பாதகம் ஏற்படாது. உள்ளே மிட்டேன் என்ற விஷ வாயுதான் இருக்கும். ஆகவே, ஆக்ஸிஜன் மாஸ்க்கை முதுகிலே கட்டிக் கொண்டு இறங்கினால் அவர்கள் இறக்க வேண்டிய அவசியமில்லை.

**It is pure negligence on the part of the Corporation here to allow these workers like this.**

ஆகையினால், எதிர்காலத்திலே அந்தத் தொழிலாளிகள் விளக்குவைத்துக் கொண்டு இறங்குவது என்ற நடவடிக்கைகளை எல்லாம் விட்டுவிட்டு, ஒவ்வொரு தொழிலாளியும் ஆக்ஸிஜன் மாஸ்க்கை வைத்துக் கொண்டு இறங்க வேண்டுமென அரசாங்கம் உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, நான் கூறியவையெல்லாம் அதற்கான விதிமுறைகள்தான். ஒரு சூப்பர்வைசர் கண்காணிக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம். அதைச் சரியாக செய்யவில்லையென்று, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. முகமூடியெல்லாம் கொடுக்கப்படுகிறது. இருந்தாலும் சிலர்—தைரியமாக வேண்டாமென்று அங்கே இருக்கிற சூப்பர்வைசர்களிடம்—சொல்லிவிட் இறங்குகிறார்கள். அது தவறாக நடந்திருக்கிறதே தவிர, கார்ப்பரேஷன் அத்தனை நடவடிக்கையையும் எடுத்திருக்கிறார்கள். இனிமேல் தொழிலாளிகள் இறங்காமலிருக்க நடவடிக்கையை எடுத்திருக்கிறோம். மூன்றிலே ஒரு இயந்திரம் பழுதுபட்டிருக்கிறது. 10 இயந்திரங்கள் தேவை—சென்னை முழுவதற்கும் நாம் அதைப் பெற நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

திரு. ஈ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விதிகளைப் படித்தார்கள். அழகாகத்தான் இருக்கின்றன. அந்த விதிகள் எல்லாம் இருந்தாலும் கூட அடிக்கடி சென்னை நகரத்திலே இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படுவதாக செய்திகளைப் பார்க்கிறோம். மேல் அதிகாரிகள் தான் தவறு செய்திருக்கிறார்கள் என்ற மாதிரியாக வரும். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது இந்த விதிமுறைகளை யெல்லாம் கட்டாயமாக அமல்படுத்துகின்ற முறையிலே தவறுக்குக் காரணமானவர்கள் பொறுப்பேற்கின்ற வகையிலே ஏற்பாடு செய்யப்படுமா என்பதோடு இந்த மாஸ்க் முதலியவைகளை அணிந்து கொண்டுதான் அந்தப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று கட்டாயமாக்குவதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அடிக்கடி ஒன்றும் நடக்கவில்லை. இதையே அடிக்கடி என்று சொல்வார்கள்போல் இருக்கிறது. விதிகள் போடுவது எல்லாம் கட்டுப்பட்டு நடப்பதற்குத்தான் போடப்பட்டிருக்கிறது. ஒரு சில இடங்களிலே இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது. இனி கடுமையான நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இரண்டு தொழிலாளர்கள் கேஷுவல் தொழிலாளர்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் எவ்வளவு காலமாக கேஷுவல் லேபராக இருந்தார்கள் ? நீண்ட காலமாக கேஷுவல் லேபராக இருந்தால் அவர்களுக்கு விசேஷ உதவிகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : முன்னாலேயே சொன்னேன். எவ்வளவு காலம் என்ற தகவல் இல்லை. பல்வேறு உதவிகள் செய்யவேண்டுமென்ற முறையிலேதான் அவர்கள் ஒவ்வொருவருக்கும் 1,000 ரூபாய் 1,000, ரூபாய் என்று அளித்திருக்கிறோம். அவருடைய திணைவியாருக்கு நிரந்தர வேலை கொடுத்திருக்கிறோம். கிட்டத்தட்ட 200 ரூபாய்க்கு மேல் சம்பளம் கிடைக்கக்கூடிய முறையில் உதவி செய்திருக்கிறோம்.

## FOREST BASED INDUSTRIES.

*615 Q.— THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state the progress made so far in the introduction of the scheme "Economic plantations" to meet the growing raw material requirements of forest based industries ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : காடுபடு பொருள்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்களுக்கு மூலப் பொருள்களின் தேவைகளைப் பெருமளவில் நிறைவு செய்வதற்காக, ஐந்து ஆண்டுத் திட்டங்களின் கீழ் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மலைத் தோட்டப்பயிர்களை வனத்துறை வைத்துப் பயிரிட்டு வருகிறது. இதுவரையிலும் 84,622 ஏக்கர்கள் பயிரிடப்பட்டிருகின்றன.





திரு. என். கே. பழனிசாமி : நீலகிரியில் நடுவட்டம் பகுதியிலே ஐஸ்கிரீமிற்குத் தேவையான வனிலா எஸ்ஸென்ஸ், பப்பர்மின்ட் எஸ்ஸென்ஸ் எல்லாம் குறைந்த அளவிலேதான் செய்யப்படுகிறது. 5 ஆயிரம் ஏக்கர் பாரஸ்ட் லேண்ட் ஆக இருந்தாலும் இன்னும் அதிகப்படி செய்தால்தான் பாரின் எக்சேஞ்ச் மிச்சமாகும். ஆகவே அதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ? அதோடு மத்திய சர்க்கார் பாரஸ்ட் வெல்தை இன்க்ரீஸ் செய்யவேண்டுமென்று ஏதாவது சொல்லியிருக்கிறார்களா? இந்த அடிப்படையிலே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையிலே காட்டு வளத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் நிதிஒதுக்கீடு செய்யப்படுகிறது. அந்த அடிப்படையிலே ஒவ்வொரு ஆண்டும் வளர்த்ததன் விளைவாக 84,622 ஏக்கர் நிலம் வளர்க்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் 5 ஆயிரம் ஏக்கர் அளவிற்கு வளர்ப்பதற்குத் திட்டம் இருக்கிறது. இதுபோன்ற சாத்தியக்கூறுகள் இருக்கிற இடங்களைப் பரிசீலனை செய்து எடுத்துக்கொள்வது நல்லதுதான்.

## MODERN SLAUGHTER HOUSE.

*616 Q. THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state the present stage of the proposal to set up a modern slaughter house in Tamil Nadu with Central assistance ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இது குறித்து செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும்? எந்த முறையில் அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மத்திய அரசு வேளாண்மைத் துறை அமைச்சரிடமிருந்து ஒரு பரிந்துரை நமக்கு வந்தது. அதைப், பரிசீலனை செய்து மத்திய அரசும் இதிலே பங்குதாரராக இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது, அதோடு மாநில அரசு, கார்ப்பரேஷன் மூன்றும் சேர்ந்து நடத்தலாம் என்ற குறிப்பு இருக்கிறது. பங்குதாரர் ஆன பிறகு வங்கியிலிருந்து மூலதனம் பெறலாம் என்று மத்திய அரசிடமிருந்து செயற் குறிப்பு வந்திருக்கிறது. மீட் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் என்ற முறையில் தனி அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார், அவர் அறிக்கை கொடுத்து இருக்கிறார், அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. முதல் கட்டமாக இரண்டு கோடி ரூபாய் இருந்தால்தான் நவீன முறையில் இதை செய்ய முடியும் என்று குறிப்பிலே காணப்படுகிறது.

## சென்னை—கண்ணம்பாக்கம் பேருந்துப்பணி

* 617 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வழித்தடம் எண் 113 பேருந்தினை கண்ணம்பாக்கத்திலிருந்து நாயுடுகுப்பம் கிராமம் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு காலதாமதம் ஆவதேன் ?

(இ) இது எப்போது நிறைவேறும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :(அ) & (இ) சென்னையிலிருந்து (பேசின் பாலம்) கண்ணம்பாக்கம் செல்லும் வழித்தடம் எண் 113 நாட்டுடைமையாக்கப்பட்ட ஒரு வழித்தடமாகும். இந்த வழித்தடம், ஏற்பளிக்கப்பட்ட ஒரு திட்டத்தின் கீழ் உள்ளது. இந்த வழித்தடத்தில் வேறுபாடுகள் ஏதேனும் செய்யப்பட்டால், ஏற்பளிக்கப்பட்ட திட்டத்தை ரத்து செய்ய வேண்டிய நிலை ஏற்படும். மேலும், நாயுடுகுப்பம் கிராமம் நீங்கலாக அணுகு சாலைகள் ஆந்திர மாநிலத்தின் வழியா அமைந்துள்ளதாகத் தெரிகிறது. எனவே, திட்டத்தையே திருத்தி அமைத்தாலொழிய மாற்றங்கள் செய்வதற்கான செயற்குறிப்பை நிறைவேற்ற முடியாது. ஆந்திர மாநிலத்தின் இசைவைப் பெற்றாலொழிய இவ்வழித்தடத்தை மாற்றியமைக்க முடியாது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்தினுடைய கிராமங்கள் இடையிலே வருகின்றன என்று சொல்கிறார்கள். படாஸ்கர் கமிட்டியின் அறிக்கையினாலே இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நாயுடுகுப்பம் எகுமதுரை போன்ற கிராமங்களில் பஸ் போக்குவரத்து இல்லாமல் கஷ்டப்படுகிற நிலை இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் இதற்கு வழியைக் கண்டுபிடித்து போக்குவரத்து ஏற்படுத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசு இதைப் பரிசீலனை செய்யும்.

## சென்னை—போந்தவாக்கம் பேருந்துப்பணி

*618 வினா— திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழித்தடம் எண் 113-ஏ (சென்னை முதல் போந்தவாக்கம் வரை) பேருந்து சீராகச் சென்று வரவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) 1974—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில், சென்னையிலிருந்து போந்தவாக்கம் சென்றுவந்த 113ஏ பேருந்து ஒன்று மட்டும், பெரிய பாளையத்தில் நடைபெற்ற திருவிழாவிற்காக சென்னையிலிருந்து பெரிய பாளையத்திற்கு அனுப்பப்பட்டு வந்தது. ஆகவே, மொத்தப் பயணத் தடவைகளில் 25 சதவீதம் இயக்கப்படவில்லை. அக்டோபர் 1974 முதல் பேருந்துகள் எப்போதும்போல் செலுத்தப்படுகின்றன.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, திருவிழாக் காலங்களில் அந்த ஊருக்குப் போய்க்கொண்டிருக்கிற பஸ்களை வேறு ஊரில் திருவிழா நடக்கின்ற காரணத்தினால் அங்கே அனுப்பிவிடுகிறார்கள். அதனால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, வழக்கமாக விடப்படுகிற ஊர்களுக்கே ஒரு நாளும் தவறாமல் செல்லும் முறையில் தொடர்ந்து 113ஏ என்ற பஸ் தடங்கல் இல்லாமல் சென்றுவர ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : திருவிழாக் காலங்களில் எதிர்பாரா அளவிற்கு கூட்டம் நெரிசல் இருப்பதால் உடனடியாக, அங்கேயிருந்து பல்வேறு இடங்களுக்கு மக்கள் செல்லவேண்டிய நிலைமை இருப்பதால் அப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஒருநாள், இரண்டு நாள் தான் திருவிழாக்கள் நடைபெறும் என்ற காரணத்தால் பெரும் பாதிப்பு ஒன்றும் இதனால் ஏற்பட்டுவிடாது.

## TRAINING PROGRAMME FOR TEMPLE GUIDES

*619 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the details of the training given to the Temple guides in the Training Centre at Madurai ;

(b) the number trained so far ;

(c) whether there is any proposal under the consideration of the Government to open more training centres in the State ; and

(d) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) மதுரை அருங்காட்சியகத்தின் மேற்பார்வையில் 1974-ம் ஆண்டு "வழி காட்டுவோர் பயிற்சி வகுப்பு" முதல் நிலை, இடைநிலை, துவக்கநிலை என மூன்று இனங்களாக நடத்தப்பட்டது. இப்பயிற்சி வகுப்புகளில் சமயம், தத்துவம், கலாச்சாரம், மொழி, இலக்கியங்கள், சமூகவியல், கட்டிடக்கலை, சுற்றுலா முதலான பொருள் குறித்து பயிற்சி கொடுக்கப்பட்டது. பயிற்சியை முடித்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

(இ) 90.

(உ) இல்லை.

(எ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: எத்தனை பேர்கள் இதிலே படித்து வருகிறார்கள்? இதற்காக ஏற்படக்கூடிய செலவை ஹச். ஆர். அண்ட் சி. போர்டே ஏற்றுக்கொள்கிறதா அல்லது அரசு கொடுக்கிறதா, இது மதுரை கோயிலுக்கு மட்டுந்தானா? மற்ற கோயில்களுக்கும் சேர்த்தா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: சாதாரணமாக இந்தப் பயிற்சி வகுப்பு மத்திய அரசால் சென்னையில் நடத்தப்படுகிறது. மதுரை மீனாட்சி கோயில் மியூஸியத்தின் சார்பில் கடந்த ஆண்டு பயிற்சி கொடுக்கப் பட்டது. முதல்நிலை 36 பயிற்சி வகுப்புகள், இடைநிலை 37 பயிற்சி வகுப்புக்கள், துவக்கநிலை 20 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இதற்காகக் கட்டணம் 100, 50, 30 முறையே வசூலிக்கப்பட்டது. மேற்கொண்டு செலவு இருந்தால் கோயில் நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது என்று கருதுகிறேன். இந்தப் பயிற்சி பெற்றவர்கள் கோயில் முழுநேரப் பணியாளர்களாக சிலரும் பகுதிநேரப் பணியாளர்களாகச் சிலரும் இருக்கிறார்கள். ஏற்கனவே பணியாற்றிவருகிறவர்கள் முறையாகத் தங்கள் பணியை ஆற்றுவதற்கான முறையிலே இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

## RATES FOR ARCHANAS.

*620 Q. THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(a) whether it is a fact that the rates for Archanas in temples under the control of Hindu Religious and Charitable Endowments Department in the State have been increased; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இந்து சமய அறநிலைய இலாகாவின் அதிகார வரம்பிற்குட்பட்ட ஆலயங்களில் சிலவற்றில் மட்டும் ஆலய நிர்வாகிகளால் அர்ச்சனைக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன.

(இ) சம்பந்தப்பட்ட திருக்கோயில்களின் நிர்வாகச் செலவுகள் அதிகரிப்பை ஈடு கட்டவும், திருக்கோயில்களின் நிதி நிலைமையை அபிவிருத்தி செய்வதற்காகவும் அர்ச்சனைக் கட்டண உயர்வு செய்யப் பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: இந்த அர்ச்சனைக் கட்டணம் பழனியிலே ஒரு விதமாகவும் மதுரையிலே ஒருவிதமாகவும் ஒவ்வொரு கோயிலிலும் ஒவ்வொரு விதமாகவும் இருக்கிறதே, ஏழை சாமி, பணக்கார சாமி



என்று வித்தியாசம் ஏதாவது இருக்கிறதா? அர்ச்சனைக் கட்டணத்தை எல்லா இடங்களிலும் சீராக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: சாமிகளில் பணக்கார சாமி, ஏழை சாமி என்று கிடையாது. வருகின்ற பக்தர்கள் கொடுக்கிற காணிக்கையை பொறுத்துதான் அந்தந்த இடங்களிலே வருமானம் இருந்து வருகிறது. கோயில் பணிகளை சீராக நிறைவேற்றக்கூடிய முறையிலேயும், சமுதாயநலத் திட்டங்களைக் கருத்தில் கொண்டும், நிர்வாகத்தைச் செம்மையாக நடத்துகின்ற நிலைமையைப் பொறுத்தும் கட்டணம் உயர்த்தப்பட்டு இருக்கிறதே தவிர, சாமிகளிலே ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசம் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி(*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-00)

## 2. நடைமுறைக் கேள்வி

தம்மீது நீதி விசாரணை அறிவிக்கப்பட்டும் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் தம் பதவியை இராசினாமா செய்யாதது குறித்து.

திரு. கோவை செழியன்: பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நேற்றைய தினம் இந்த மன்றம் முடிவடைந்ததற்குப் பின் மாலை நேரத்தில் ஒரு அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். அதன்படி நேற்று காலையிலே அவர்கள் ஒத்துக்கொண்ட ஒரு நீதி விசாரணைக்கு சென்னை உயர்நீதிமன்றத்திலே இருக்கின்ற ஒரு நீதிபதியின் பெயரைச் சொல்லி, அந்த நீதிபதி விசாரணை செய்வார்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அப்படி அறிவித்ததற்குப் பிறகுகூட மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் இந்த மன்றத்திலே இருக்கிறார்கள், ஆகவே, அவர்கள் இராஜினாமா செய்யவில்லை என்று தெரிகிறது. ஏற்கனவே கேரளாவில் கோவிந்த நாயர், தாமஸ் என்ற இரண்டு அமைச்சர்கள் மீது நீதி விசாரணை செய்வது என்று நடவடிக்கை எடுத்தவுடன் அவர்கள் இராஜினாமா செய்து விட்டார்கள். லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் தாஷ்கண்ட் நகரத்திற்குச் செல்லுவதற்கு முன்னால் டி.டி கே. அவர்கள்மீது "ஃபாரின் எக்சேஞ்ச் ரெகுலேஷன்" சம்பந்தமாக ஒரு சந்தேகம் இருக்கிறது என்று நீதி விசாரணை ஒன்றைப் போட்டார்கள். அதைப் போட்டவுடனே டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் அந்த மந்திரி பதவியிலிருந்து இராஜினாமா செய்துவிட்டு, பத்திரிகை நிருபர்களிடத்திலே சொன்னார்கள், அவர்கள் சொன்ன வாசகத்தை நான் இங்கே சொல்லுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இது பாயின்ட் ஆஃப் ஆர்டர். இதில் பிரசங்கம் செய்யக்கூடாது. பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்னவென்று சொல்லுங்கள். அவர்கள் பண்ணியிருக்கிறார்கள், இவர்கள் பண்ணவில்லை என்பதுதானே உங்கள் கேள்வி?

திரு. <u>கோவை செழியன் :</u> இந்த ஒன்றை மட்டும் ஏற்றுக்கொள்ளுங்கள்.

**No man with any iota of self respect will continue as Minister and face enquiry.**

என்று அவர்கள் கோபமாகச் சொல்லி, நான் இராஜினாமா செய்வதோடு டெல்லியிலேயிருந்து விசாரணைக்கு ஒத்துழைக்கப் போகிறேன் என்று சொன்னார்கள். ஆகவே, இன்றைய தினம் இந்த விசாரணை நடக்கும் பொழுது ப. உ. சண்முகம் அவர்கள் அமைச்சராக இருப்பதால் விசாரணை தடைப்படும் என்று நம்புகிறோம். அதுமட்டுமல்லாமல், ப. உ. சண்முகம் அவர்கள் ஏற்கனவே குறிப்பிட்ட இந்த கேஸ் சம்பந்தமாக, இந்தக் குற்றச்சாட்டு சம்பந்தமாக, நான் மட்டுமல்லாமல் முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருப்பதாலும் மாண்புமிகு முதலமைச்சரவர்களும் மற்றவர்களும் இதிலேயிருந்து இராஜினாமா செய்துவிட்டு இந்த விசாரணை வெற்றிகரமாக நடக்க ஏற்பாடு செய்வார்களா?

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> தலைவரவர்களே, செழியன் அவர்கள் முதலிலே அபாண்டமான செய்தியைச் சொன்னார்கள். இவைகளைப் பத்திரிகையிலே பிரச்சாரம் செய்ய சிலர் இருக்கிறார்கள் என்ற மார்க்கங்கள் இருப்பதால் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று பேசுகிறார்கள். முதலமைச்சர் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று மாண்புமிகு அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் சொன்னதாக உண்மைக்கு மாறான கருத்தை செழியன் சொல்கிறார். அதை முற்றிலும் மறுக்கிறேன்.

இராசினாமா செய்யும் விஷயம் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்ட கேரளத்திலே அண்மையிலே மூன்று அமைச்சர்கள் மீது நீதி விசாரணைபோடப்பட்டது. ரிடையர்ட் ஹைகோர்ட் ஜட்ஜ் அவர்கள்தான் இந்த விசாரணையை நடத்தினார்கள். அந்த நீதி விசாரணை நடந்தபொழுது மூன்று அமைச்சர்களும் தொடர்ந்து பதவி வகித்திருக்கிறார்கள். அந்த நீதி விசாரணை முடிவடைந்துவிட்டது. அதற்குப் பிறகு இப்பொழுது இரண்டு அமைச்சர்கள்மீது அதே கேரளத்திலே நீதிவிசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிலே ஒரு அமைச்சர்மீதான விசாரணைக்கு ரிடையர்ட் ஹைகோர்ட் ஜட்ஜும், இன்னொரு அமைச்சர் மீதான விசாரணைக்கு "சிட்டிங் ஹைகோர்ட் ஜட்ஜும்" போடப்பட்டிருக்கிறார்கள். இந்த நீதி விசாரணையை "ஒத்துக்கொண்ட எந்த அமைச்சரும் இராசினாமா செய்யவில்லை, தொடர்ந்து பதவியிலேதான் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



<u>திரு. கோவை செழியன் :</u> தாமஸ் அவர்கள்......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அதை எல்லாம் பின்னால் கேட்டுக் கொள்ளுங்கள்.

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே :</u> சார், சட்டமன்றம் நடந்துகொண்டிருக்கும் நேரத்தில் எந்தவொரு அறிவிப்பைக் கொடுத்தாலும் நம்முடைய சட்டசபையின் மரபுகளின் பிரகாரம் இங்கேதான் சொல்லவேண்டும். ஆனால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நேற்று இங்கே அறிவிக்காமல் மாலை நேரத்தில் ஜஸ்டிஸ் இராமபிரசாத ராவ் அவர்கள் நியமிக்கப் பட்டிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். ஆனால் முறைப்படி இங்கே அறிவித்திருக்க வேண்டும். அது மட்டுமல்ல, இந்த விசாரணையைப் பொறுத்தவரையில் ஒட்டுமொத்தமாக, எஸ்டிமேட்ஸ் கமிட்டியின் ரிபோர்ட்டில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அத்தனையையும் ஒட்டுமொத்தமாகப் பார்த்து, "டெர்ம்ஸ் ஆஃப் ரெஃபரென்"ஸை என்லார்ஜ் செய்திருப்பார்கள் என்று கருதினேன். ஆனால் அவர்கள் அதையும் செய்யவில்லை. ஜட்ஜைப்பற்றிச் சொல்லும் நேரத்தில் எதிர்க்கட்சிகளையெல்லாம் கலந்து கொண்டு முடிவெடுத்துச் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அப்படிச் செய்திருந்தால் நாங்கள் மதிக்கக்கூடிய அளவில் இருந்திருக்கும். பாராட்டக்கூடிய அளவில் இருந்திருக்கும். இந்த இரண்டு விஷயங்களைப் பற்றி விளக்க வேண்டும்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> தலைவரவர்களே, அவையில் அறிவிப்பு [illegible] அந்த அறிவிப்பு இந்த அவையிலே சொல்லப்பட்டது. நீதிவிசாரணை வைக்கப்படும் என்ற அறிவிப்பு சொல்லப் பட்டிருக்கிறது. அரசாங்க ஆணையை அவையிலே பிறப்பிக்க முடியாது. ஆகவே, அரசாங்கத்தின் அறிக்கையை அல்லது அரசாங்கத்தின் ஆணையை —அறிவிப்பை ஒட்டி நடைபெற்றிருப்பதை அவையிலே சொல்ல வேண்டிய அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> தலைவரவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் முன்னாள் உணவிலாக்கா அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் மீது இருக்கின்ற புகார்கள்மீது என்கொயரி நடத்துவதுபற்றிய ஒரு செய்தியை இங்கே அறிவித்தார்கள். இப்பொழுது கமிஷன் நியமனம் செய்யப்பட்டிருப்பது அரசாங்கத்தின் நிர்வாக ஆணையின்படி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த பிரச்சினையானது, இந்த சட்டமன்றத்தில் எழுப்பப்பட்டு விவாதிக்கப்பட்டு அதன் அடிப்படையிலே இப்பொழுது என்கொயரி கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. என்கொயரி கமிஷன் ஆக்டின்படி ஒன்றில் அரசாங்கம் இந்த என்கொயரி கமிஷனை தனது நிர்வாக ஆணைப்படி நியமனம் செய்ய வேண்டும். அல்லது சட்டமன்றத்திலோ அல்லது பாராளுமன்றத்திலோ தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இப்படிப்பட்ட கமிஷன் நியமனம் செய்யப்பட வேண்டும். இங்கே நடந்தது, இந்தச் சட்டமன்றத்திலே இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டு, இன்றைய தினம் என்

கொயரி கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான தீர்மானம் இந்தச் சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்டு, அந்த என்கொயரிக்கு என்னென்ன "டெர்ம்ஸ் ஆஃப் ரெஃபரென்ஸ்" என்று இங்கே முடிவு செய்யப்பட்டு, அந்த முறையிலே இந்த என்கொயரி கமிஷன் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்குமாருக இந்தச் சட்டமன்றத்திலே எழுப்பப்பட்ட பிரச்னைப்பற்றி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த விதியிலே இருக்கிறது ?

திரு. ஜே. ஜேம்ஸ்: செக்ஷன் 3. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய விதிமுறைகளிலே எந்த விதிமுறையிலே இருக்கிறது ? எந்த விதியிலே தீர்மானம் போட்டு நியமிக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறது ?

THIRU J. JAMES: Section 3 reads that an Enquiry Commission may be appointed by the Government or it shall be appointed by a resolution passed in the State Legislature or Parliament.

என்று இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது நான் கூறுவது என்னவென்றால், இங்கே எழுப்பப்பட்ட பிரச்னை இது, சட்ட மன்றத்திலே விவாதிக்கப்பட்டது. ஆகவே, என்கொயரி கமிஷன் நியமிக்கும்பொழுது இங்கே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அப்படி நியமித்திருக்க வேண்டும். அதில் டெர்ம்ஸ் ஆஃப் ரெஃபரென்ஸ் கூட முடிவு செய்திருக்கலாம். அதற்குமாருக இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் சூழ்நிலை ஏதோ அரசாங்கம் தாராள மனதோடு இம்மாதிரி புகார் மீது அரசாங்கத்தின் மீது சொல்லப்பட்ட களங்கத்தைத் தீர்த்துக்கொள்வதற்காகத் தாங்களாகவே முன்வந்து என்கொகோயரி கமிஷன் நியமிப்பதைப் போல மாண்புமிகு முதலமைச்சரவர்களின் அறிக்கை தோன்றுகிறது. ஆகவே, இது ஒழுங்கானது அல்ல. இதற்குத் தீர்மானம் நிறைவேற்றி என்கொயரி கமிஷனைப்பற்றித் தீர்மானித்திருக்க வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, ஒரு அரசாங்கம் குற்றச்சாட்டை எதிர்க்கட்சியிலேயிருந்து சொன்னால் உடனடியாகப் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறது என்று அரசாங்கம் முடிவெடுப்பதுதான் இப்பொழுது சங்கடமாக இருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையில் எதிர்கட்சியிலே இருப்பவர்கள் சொன்னாலும் சரி அல்லது யார் சொன்னாலும் சரி, குறிப்பிட்ட ஒரு குற்றச்சாட்டைச் சொன்னால் விசாரிக்கத் தயாராக இருக்கிறோம் என்று இந்த மன்றத்திலே சொல்லப்பட்டு, அந்த அடிப்படையிலே இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய வாதமெல்லாம் அரசாங்கம் இந்த உத்தரவைப் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்றத்திலே தீர்மானம் கொண்டு வருவதா இல்லையா என்பது அவர்கள் பிரச்சனை. ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் பொறுப்புள்ள அங்கத்தினர்



நான் பொறுப்பேற்கிறேன் என்று சொல்லி, அமைச்சர்மீது குறிப்பாகவும், திட்டவட்டமாகவும் குற்றச்சாட்டைச் சொன்னதற்குப் பிறகு என்கொயரி செய்ய வேண்டுமென்று, ஜனநாயக முறைப்படி இந்த அரசு நிறைவேற்றியிருக்கிறது. இதில் ஒன்றும் தவறு கிடையாது.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I would like to offer a few remarks. I was listening with rapt attention to the announcement made by the Chief Minister. He was just stating one or two precedents and said that in Kerala the Ministers did not tender their resignations. The Law that is obtaining in Kerala is entirely different. There it was an enquiry not under the Commission of Enquiry Act of 1952; it was a separate order of Government. There, supposing a person writes certain things and remits 500 rupees as court fees, an enquiry would be constituted and the case enquired into. If there is a *prima facie* case, the matter would be proceeded with and further action taken. That is the procedure in Kerala, whereas here we act under the Commission of Enquiry Act, a Central Act. The State Government or the Central Government can order an enquiry and that would be just and proper so that an impartial enquiry may be conducted.

The Minister should tender his resignation. Then only, Sir, a fair enquiry could be conducted. There is some force in the argument advanced by other hon. Members of this House demanding his resignation. Government should reconsider their stand. With this, I resume my seat.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அமைச்சர்கள் மீது சில குற்றச்சாட்டுக்களைச் சொல்லி, அதை அரசாங்கம் விசாரிக்க வேண்டுமென்று—எதிர்க்கட்சிக் குற்றச்சாட்டை ஏற்று விசாரணை செய்ய வேண்டுமென்று முடிவு எடுக்கும்போதெல்லாம் அமைச்சர்கள் ராஜினாமா செய்ய வேண்டுமென்ற கருத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொன்னால் அது ஜனநாயகத்திற்கு முரண்பட்ட ஒரு கோரிக்கையாகும். எப்போதும் ஒரு குற்றச்சாட்டு நிரூபிக்கப்படக்கூடிய ஆதாரம்—பிரைமா ஃபேசி கேஸ் இருக்கிறது என்ற நிலையில் தான் இப்படிப்பட்ட கோரிக்கைகள் எழுப்பப்பட வேண்டும். அப்படியில்லாமல் இப்படிப்பட்ட ஒரு கோரிக்கையை ஏற்றுக் கொள்வது என்றால் எல்லா அமைச்சர்கள் பேரிலும் ஏதாவது ஒரு குற்றச்சாட்டு தரப்பட்டு உண்மை தெரிய விசாரிக்க முனைந்தால் ராஜினாமா செய்ய வேண்டுமென்றால் அது ஜனநாயகப் பாரம்பரியத்திற்கு உகந்தது அல்ல, அந்த நிலையில் பிரதம அமைச்சரிலிருந்து எந்த அமைச்சராக இருந்தாலும் இருக்க மாட்டார்கள். இங்கே இதை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று சொல்லுகிறார்கள். பாராளுமன்றத்தில் நாள்தோறும் குற்றச்சாட்டுக்களைச் சொல்லுகிறார்கள். அதுவும் ஆதாரங்களோடு குற்றச்சாட்டைச் சொல்லுகிறார்கள். ஆகவே, ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ளவர்

பட்ட கோரிக்கைகளை வைக்கக்கூடாது. பிரைமா ஃபேசி கேஸ் இருக்கிறது என்ற நிலை ஏற்படுமானால் ஜனநாயகத்திற்குத் தலை வணங்க இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நேற்றைய தினம் இந்த விவாதிக்கும்போது சுப்ரீம்கோர்ட் நீதிபதியைப் போடுவதா, அடுத்த மாநில நீதிபதியைப் போடுவதா என்றெல்லாம் விவாதிக்கப் பட்டு கடைசியில் முதலமைச்சர் பேசுகிறபோது வெங்கடாத்திரி கோர்ட்டில்தான் வழக்கு தொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டு, இங்கிருக்கும் அங்கத்தினர்கள் எல்லாம் ஏற்கனவே சட்டம் செய்யப் பட்டிருப்பதால் வெங்கடாத்திரியைத்தான் இதை விசாரிக்க நீதிபதியாகப் போடப்போகிறார்கள் என்று எண்ணத்தை உண்டாக்கி விட்டு, இன்றைக்கு திரு. ராமபிரசாத ராவை இதற்கு நீதிபதியாகப் போட்டிருக்கிறோம் என்று சொல்லியிருப்பது சரியானதுதானா ? இது நியாயமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. சுரேந்திரன் அவர்கள் சொன்னதுபோல் சொல்லவில்லை. நண்பர் அருணா அவர்கள் கேட்டது போல் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போக ஒரு வழி இருக்கிறது, வெங்கடாத்திரி இன்னொரு சட்டத்தின்படி ஜட்ஜாகப் போடப்பட்டிருக்கிறார், அந்த அடிப்படையில் அந்தச் சட்டம் பொதுமக்கள் பிரதிநிதிகள் தவறு இழைப்பார்களானால் அவர்களைப் பற்றிக் கூறுகிற புகார்களை விசாரிக்கும் சட்டம். அந்தச் சட்டத்தின்படி வேண்டுமென்றே அவதூறாக யாராவது குற்றம் சாட்டினால் அப்படி நிரூபிக்கப்படவில்லை என்றால் அவர்களுக்கு மூன்று ஆண்டு தண்டனை; அமைச்சர்களோ, முதலமைச்சரோ குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டால் 7 ஆண்டு காலம் தண்டனை. அந்தத் தண்டனையை வெங்கடாத்திரியே கொடுத்து விடுவது இல்லை. அவர் அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்வார். அரசாங்கம் அந்தச் சிபாரிசை அமல்படுத்த,உடனடியாக அரசாங்கம் அமைச்சருக்குத் தண்டனை வழங்க வேண்டுமென்று உடனடியாக அரசாங்கம் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லும், அல்லது குற்றம் சாட்டியவர் வேண்டுமென்றே சாட்டினார் என்ற வகையிலும் பரிந்துரை செய்யப்பட்டால் அரசாங்கம் அந்த நடவடிக்கையை எடுக்கும். அப்படி எடுக்கும்போது கீழ்க் கோர்ட்டிலிருந்து உச்ச நீதிமன்றம் வரை போகலாம். அதற்கும் வழி இருக்கிறது. அதையும் செய்யலாம் என்றுதான் சொன்னேன். இப்போதும் காரியம் மிஞ்சி விடவில்லை. இப்போதும் சுரேந்திரன் அவர்களுக்குத் தைரியம் இருந்தால் அவர்கள் செல்லலாம்.

திரு. க. உரோ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றத்தில் கருத்துச் சொல்லும்போது மாண்புமிகு அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் மீது கொடுக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கு பிரைமா ஃபேசி கேஸ் இருந்தால் அவரைப் பதவியிலிருந்து ராசிநாமாச் செய்யச் சொல்லி, எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுவது நியாயம் என்று சொன்னார்கள்.



ஆனால் மதிப்பீட்டுக் குழுவினர் கொடுத்த அறிக்கையில் சில குற்றச்சாட்டுக்களைச் சொல்லியிருக்கிறார்கள். தாண்டவராயன் விவகாரங்கள், அதைப் போல் நம்முடைய தென்னாற்காடு மாவட்டத்தில் அறகண்டநல்லூர் ரைஸ் மில் விவகாரங்கள் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லி ஏற்கெனவே அது சம்பந்தமான வழக்குகள் நீதிமன்றத்தில் இருக்கின்றன என்று அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள் எனவே, மதிப்பீட்டுக் குழு அறிக்கையில் பிரைமா ஃபேசி கேஸ் இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு ப.உ. சண்முகம் அவர்கள் மீது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நீதிவிசாரணை செய்ய நீதிபதியை நியமித்தது இந்த வழக்கில் ஒரு பிரைமா ஃபேசி கேஸ் இருக்கிறது என்ற அடிப்படையில்தான் அந்த விசாரணைக்கு இங்கே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆகவே பிரைமா ஃபேசி கேஸ் இல்லையென்று சொல்லுவதில் எந்தவித நியாயமும் இல்லை. ஆகவே, பிரைமா ஃபேசி கேஸ் இருப்பதால் நம்முடைய ப.உ.ச. அவர்கள் ராசிநாமாச் செய்வதுதான் முறை.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேரளாவில் அப்படி நடைபெறவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். கேரளாவில் இரண்டும் நடைபெற்றிருக்கிறது. அங்கே ராசிநாமா செய்தும் இருக்கிறார்கள். சில அமைச்சர்கள் ராசிநாமா செய்யவில்லை. எது நல்ல முன் மாதிரியோ அதைக் கடைப்பிடிக்க வேண்டும். அந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் இப்போதுதான் முதல் முதலாக ஒரு விசாரணை நடக்கப்போகிறது. அந்த அடிப்படையில் நல்ல ஒரு பாரம்பாரியத்தை உருவாக்குகிற வகையில் ப.உ.ச. அவர்கள் தன் பதவியை ராசிநாமா செய்து இந்த விசாரணைக்கு உட்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னது போல் ஒரு அமைச்சரவையையே இப்படிக் கலைத்து விடலாம். ஒரு புதிய சர்க்கார் வருவதாக வைத்துக் கொள்வோம். உங்களுடைய தலைவர் எம். ஜி. ஆர். முதலமைச்சராக வந்து உட்காருவதாக வைத்துக்கொள்வோம். நாங்கள் எதிர்க்கட்சியில் வருவதாக வைத்துக்கொள்வோம். கற்பனை! (ஆரவாரம்) அப்படிப்பட்ட நேரத்தில் நாங்கள் இப்படிப்பட்ட புகார்களை—எம். ஜி. ஆர். மேல் புகார் கொடுக்கவா முடியாது? அந்நியச் செலாவணி, வருமான வரி பாக்கி என்று ஆயிரக்கணக்கான ஊழல் பட்டியல் அப்போது தயாராகும். அவற்றுக்கெல்லாம் நீதிவிசாரணை வைக்கச் சொல்லி, ராஜிநாமா செய் என்றால் அப்போதும் இதைத்தான் சொல்லுவார்கள். "பிரைமாஃபேசிகேஸ் இருந்தால் ராஜிநாமா செய்யத் தயாராக இருக்கிறேன்" என்று அவர் சொல்லுவார். வேண்டுமென்றே ஒவ்வொரு முறையும் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி நிரூபிக்கிறோம். ஆதாரம் இருக்கிறது. நீதிவிசாரணை நடத்துங்கள் என்றால் முதலமைச்சர் அடுத்து 15 அமைச்சர்கள், 16 அமைச்சர்கள் பேரிலும் ஒவ்வொரு குற்றச்சாட்டுச் சொல்லி நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்த பிறகு அமைச்சரவையே இருக்காது. இது ஜனநாயகத்திற்கு உகந்த வழி அல்ல.

திரு. க. உரோ. எட்மண்ட் : நாங்கள் குற்றச்சாட்டைச் கொடுத்தவுடனேயே ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்லுவதாக முதலமைச்சர் அவர்கள் விவாதிப்பது நியாயமாகாது. நாங்கள் குற்றச்சாட்டைக் கொடுத்தவுடனேயே அவர்களை ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. இன்னும் சொல்லப்போனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் இங்கிருக்கும் அமைச்சர் மீதெல்லாம் குற்றச்சாட்டுகள் கொடுத்திருக்கிறார். அவர்களை எல்லாம் ராஜினாமா செய்யவேண்டுமென்று சொல்லவில்லை.

திரு. கு. காமாட்சி : அவரை இங்கு வந்து சொல்லச் சொல்லுங்கள்.

திரு. சி. ஆறுமுகம் : அவரை இங்கு வந்து சொல்லச் சொல்லுங்கள்.

(பல உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்)

திரு. க. உரோ. எட்மண்ட் : 1972 டிசம்பர் மாதம் 2–ம் தேதி இந்த மன்றத்தில் ஒன்றரை மணி நேரம் அவர் இங்கே குற்றச்சாட்டுகளை எடுத்துச் சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அதற்கெல்லாம் போக வேண்டாம். இந்த பாயிண்டுக்கு வாருங்கள்.

திரு. க. உரோ. எட்மண்ட் : என்னைப் பேச விடுங்கள். குற்றச்சாட்டுகள் கொடுத்த காரணத்தாலேயே அவர்கள் எல்லாம் ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. திரு. ப. உ. ச. மீது நீதி விசாரணை வைக்க முதலமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டிருப்பதன் அடிப்படையே அதிலே பிரைமா ஃபேசி கேஸ் இருப்பதாக உள்ள பூர்வமாக உணர்ந்து, இந்த விசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். ஆகவே, அவர் ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்லுகிறோமே தவிர, அத்தனை பேரும் பதவி விலக வேண்டுமென்று சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சொல்லப்பட்டவை குற்றச்சாட்டுத்தானா என்பதை ஆராயத்தான் நீதி விசாரணை போடப்பட்டிருக்கிறது. பிரைமா ஃபேசி கேஸ் இருக்கிறதா இல்லையா என்று சொல்ல வேண்டியது நியமிக்கப்பட்டிருக்கும் ஜட்ஜின் வேலை. பிரைமா ஃபேசி கேஸ் இருக்கிறது என்று சொல்லுவார்களானால் ப. உ. சா. அவர்கள் ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறார். நான் கூடச் சொல்லத் தேவையில்லை, அவரே தயாராக இருக்கிறார். நீதி விசாரணை என்றால் நீங்கள் எல்லாம் பெரிய தூய்மையானவர்கள் போலவும், பெரிய உத்தமர்கள் போலவும், இயேசுநாதர் பரம்பரைபோலவும் இங்கே உட்கார்ந்திருக்கும் ஆளும் கட்சியில் உள்ளவர்கள் தூய்மை கெட்டவர்கள், களங்கங்கள் உள்ளவர்கள் என்று



கூறுவது முறையல்ல. உங்களுடைய தலைவர் தி. மு. க. விலிருந்து அண்ணா தி. மு. க. வுக்கு வருகிற ஒவ்வொரு எம்.எல்.ஏ. யையும் நீதி விசாரணை நடத்தித்தான் எடுப்பேன் என்றார். எடுத்தாரா? நீதி விசாரணை நடைபெற்றதா?

திரு. கோவை செழியன் : முதலமைச்சர் அவர்களுக்கு இவ்வளவு ஆத்திரம் வரவேண்டியதில்லை.

(கூச்சல்—குழப்பம்.)

திரு. ஆலடி அருணா : மதிப்பிற்குரிய அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்கள் மீது நீதி விசாரணைக்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது எனவே அவர்கள் ராஜினாமா செய்வதுதான் ஹெல்தி டெமாக்ரட்டிக் கன்வென்ஷன் என்று அண்ணா திராவிட முன்னேற்ற, கழகம் வாதிடுகிறது. நீதி விசாரணைக்கு உத்தரவிட்ட பிறகு பதவியில் நீடிப்பது என்பதற்கும் வரலாற்றில் உதாரணங்கள் இருக்கின்றன. பதவியை விட்டு விலகியதற்கும் உதாரணங்கள் இருக்கின்றன. ஆனால் ஹெல்தி டெமாக்ரட்டிக் கன்வென்ஷன் பதவியை விட்டு விலகுவதுதான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ப்ரைமா ஃபேசி கேஸ் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. அதை நீதிபதி அவர்கள் தான் நிர்ணயிக்கவேண்டும் என்று சொன்னார்கள். இந்த அவையிலேயே ப்ரைமா ஃபேசி கேஸ் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை என்றால் எப்படி? அருணா அவர்கள் சொல்வது அவையின் முடிவு அல்ல. அல்லது அவர்களைச் சார்ந்தவர்கள் சொல்வது அவையின் முடிவு அல்ல.

(கூச்சல்—குழப்பம்.)

திரு. ஆலடி அருணா : இந்த அவையில் பல்வேறு குற்றச்சாட்டுகள் பல்வேறு அமைச்சர்கள்மீது சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தக் குற்றச்சாட்டுகள் மீதெல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் நீதி விசாரணைக்கு, உத்தரவிடவில்லை. இதுதான் எதிர்கட்சி போராடிப்பெற்ற முதல் வெற்றிக் களம். ப்ரைமா ஃபேசி கேஸ் இருப்பதை ஒத்துக்கொண்டுதான் நீதி விசாரணை போடப்பட்டிருக்கிறது. எனவே இந்த அவையைப் பொறுத்த மட்டில்—இதை என் கருத்தாகச் சொல்கிறேன்—ப்ரைமா ஃபேசி கேஸ் இருப்பதை ஒத்துக்கொண்டுதான் இந்த விசாரணை போடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதே அவையில் இந்த விவகாரத்தில்—ப.உ.ச. மீது — பல நேரங்களில் விவாதம் நடைபெற்றபோதும் கூட நேற்றைய தினம் அருணா அவர்கள் குறிப்பாகச் சொன்னதுபோல் யாரும் சொல்லவில்லை. ப.உ.ச. வுக்கு இதில் சம்பந்தம் இருக்கிறது என்று அவர்கள் திட்டவட்டமாக நேற்றையதினம்தான் சொன்னார்கள். இதில் ஏற்கனவே கூட ப.உ.ச. மீது அவர்கள் இப்படி அடிக்கடி பேசப்படுகிறது, ஒரு

நீதிபதியை வைத்து விசாரணை வையுங்கள் என்று என்னைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். திட்டவட்டமாகக் குற்றச்சாட்டுகள் வராத வரையில் எப்படி நீதி விசாரணை வைப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தோம். நேற்றைய தினம்தான் ப.உ.ச. அவர்கள் மீது குற்றம் இருக்கிறது, நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று, அருணா அவர்கள் கூறியதற்குப் பிறகு நீதி விசாரணை வைப்பதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறோம். நீதிபதி அவர்களையும் நியமித்திருக்கிறோம். ப்ரைமா ஃபேசி கேஸ் இருக்கிறது என்று நீதிபதி அவர்கள் சொன்னால் அடுத்த வினாடியே ப.உ.ச. ராஜிநாமா செய்யத் தயாராயிருக்கிறார்கள்.

(கூச்சல்—குழப்பம்.)

<u>திரு. ஆலடி அருணா :</u> நான் நேற்றைய தினம் 27 நிமிடங்கள் பேசினேன். அந்த 27 நிமிடங்களிலும் இந்த ஊழல் புகாரைப்பற்றித்தான் பேசினேன். அந்த ஊழல் புகாரைப்பற்றி பேசும்போது இந்த ஊழலில் அமைச்சர் ப.உ.ச. வுக்கு சம்பந்தம் இருக்கிறது, அவரும் உடந்தை என்று சொன்னவுடன் நீதி விசாரணை போட முதல் அமைச்சர் ஒத்துக்கொண்டார்கள். முதல் அமைச்சர் அவர்களுக்கு நினைவில்லாவிட்டால் எனது பழைய பேச்சை எடுத்துப் பார்க்கட்டும். ஆறு மாதங்களுக்கு முன்பு......

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> நான் உங்கள் பழைய பேச்சுக்களை படித்துப்பார்த்து எவ்வளவோ வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறேன்.

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே :</u> இந்தச் சபையில் நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறநேரத்தில்தாங்கள் பலமுறைசொல்லியிருக்கிறீர்கள், உணர்ச்சி வசத்தில் சில வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது என்று. தங்களிடம் ஒரு விண்ணப்பமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இங்கு ஆலடி அருணா அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது முதல் அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர்களுக்கு அதைச் சமாளிக்கக் கூடிய சக்தி இருக்கிறது. அந்த நேரத்தில் அவ்வளவு பேர்களும் உணர்ச்சிவசமாக ஷேம், ஷேம் என்று சொன்னார்கள். அப்படி இந்தத் தரப்பிலிருந்தும் கூட வருவதற்குக் கஷ்டம் கிடையாது. நாங்களும் சொல்லலாம், ப.உ.ச. ராஜிநாமா செய்யவேண்டும், ஷேம், ஷேம் என்று சொல்லலாம். அருணா அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள் முதல் அமைச்சரவர்கள் நேற்றைய தினம் அருணா அவர்கள் சொன்னதற்கு....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஒரு பாயிண்டை விட்டு இன்னொரு இடத்திற்குப் போகிறீர்களே?

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே :</u> அவர்கள் உண்மைக்கு மாறான தகவலைத் தருகிறார்கள். திரு. ஜி. விசுவநாதன் எம். பி. அவர்கள் கூட....

(கூச்சல்—குழப்பம்.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவர்கள் குரல் எழுப்பினார்கள் என்றால்......





<u>டாக்டர் எச். வி. ஹாண்டே :</u> அது நியாயமா என்று கேட்கிறேன். அப்படியானால் நாங்களும் ஷேம் ஷேம் என்று சொல்வோம்.

(கூச்சல்—குழப்பம்.)

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே :</u> நீங்கள் தீர்ப்புக் கொடுங்கள், ஏற்றுக் கொள்கிறோம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இந்த அவையில் வந்து எந்த விதமான குரலும் எழுப்பக்கூடாது. அது எல்லோருக்கும் பொருந்தும். ஆனால் எதிர்க்கட்சியிலிருந்து எழுப்பப்படும்போது நாம் ஆத்திரப்படுகிறோம், அதே நேரத்தில் நாம் குரல் எழுப்பும்போது :—

“ ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுஉண்டோ மன்னும் உயிர்க்கு.”

எனவே பிறரிடம் குற்றம் காண்பதற்கு முன்பு நம் குற்றத்தை உணர வேண்டும். உறுப்பினர்கள் அனைவரும் அந்த முறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

<u>திரு. கோவை செழியன் :</u> நமது உயர்நீதிமன்ற ஜட்ஜை........

(கூச்சல்—குழப்பம்.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஜட்ஜைப் பற்றி குறை சொல்லக் கூடாது.

(கூச்சல்—குழப்பம்.)

<u>திரு. எம். சுரேந்திரன் :</u> பாயிண்ட் ஆப் ஆர்டர். இங்கே முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது இரண்டு கருத்துக்களைச் சொன்னார்கள். அதைப்பற்றி விளக்க விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> விளக்கவேண்டாம், உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன ?

<u>திரு. எம். சுரேந்திரன் :</u> அவர்கள் சொல்கிறபோது, நேற்றையதினம் அருணா அவர்கள் குறிப்பிட்டுச்சொன்ன பின்னால்தான் இந்த உத்தரவு போடப்பட்டது என்று சொன்னார்கள். இது ஒரு ஹைகோர்ட் நீதிபதியை நியமிக்கிற விஷயம். நேற்று அருணா அவர்கள் பேசியவுடன் சீஃப் ஜஸ்டிஸ் அவர்களைக் கலந்து இம்மாதிரி ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வது அனுபவத்திற்குப் பொருந்தியதா ? அது ஒன்று இன்னொன்று, ப்ரைமா பேஸி கேஸ் இருக்கிறதா இல்லையா என்பது......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள்.

<u>திரு. எம். சுரேந்திரன் :</u> நீங்கள் சொல்லுங்கள். சபையை திசை திருப்பலாமா என்று கேட்கிறேன்.

(கூச்சல்—குழப்பம்.)

[1975 ஏப்ரல் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன என்று மட்டும் சொல்லுங்கள்.

திரு. எம். சுரேந்திரன் : நேற்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்ன போது நீதிபதி வெங்கடாத்திரி அவர்களைப் பற்றி முதலில் குறிப்பிட்டதைப் பற்றி ஏற்கனவே சொன்னேன். இதில் ப்ரைமா பேஸி கேஸ் இருக்கிறதா இல்லையா என்பது கேள்வி. நேற்று அருணா அவர்கள் குறிப்பிட்டுப் பேசிய பிறகு இந்த நீதிபதியை நியமித்ததாகச் சொல்கிறார்கள். நேற்று அருணா அவர்கள் குறிப்பிட்டுக் கூறியதற்குப் பின்னால் நேற்று மாலை பேப்பரில் நீதிபதி விசாரணை வருகிற அளவிற்கு சீஃப் ஜஸ்டிஸோ கலந்து செய்தோம் என்று சொல்லுகிற முறையில் இந்தச் சபையில் சொல்லி இருக்கிறார்கள். அடுத்து, இரண்டாவதாக, எஸ்டிமேட்ஸ் கமிட்டி அமைச்சர் அவர்கள் மீது இத்தகைய........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எஸ்டிமேட்ஸ் கமிட்டி என்ன சொல்லியிருக்கிறது என்பது இதில் எப்படி வரும்? உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டரைப் பற்றிச் சொல்லுங்கள்.

திரு. எம். சுரேந்திரன் : ஒரு பாயிண்டை ரெயிஸ் செய்யவே அனுமதிக்கமாட்டேன் என்று சொல்லுகிறீர்களே, நான் சொல்வதைக் கேட்டுப் பிறகு சொல்லுங்கள். நேற்று அருணா அவர்கள் சொன்னதற்குப் பின்னால் இந்த நீதிபதி விசாரணைக்கு ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார்கள்...... எஸ்டிமேட்ஸ் கமிட்டி ஒரு அமைச்சர்மீது இவ்வளவு பெரியதொரு குற்றச்சாட்டை சொல்லியிருக்கிறது. அதன்பேரில் விவாதம் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. அப்படித் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும்போது ........

திரு. இராம அரங்கண்ணல் : பாயிண்ட் ஆப் ஆர்டர்.

**He is misleading the House, I say.**

திரு. எம். சுரேந்திரன் : நான் என் பாயிண்ட் ஆப் ஆர்டரைச் சொல்லி முடித்த பிறகு அவர்கள் பேசட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நமது விதிமுறைகளை மீறினால் அல்லது நமது மரபுகளை மீறினால் அதைச் சுட்டிக்காட்டலாம். உங்களது பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள்.

திரு. எம். சுரேந்திரன் : தவறான செய்திகளை இங்கு வெளியிடக் கூடாது என்று சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் எதுவுமில்லை.

(முற்பகல் 10-30)

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, நான் சொல்வதைக் கேட்காமலே சொல்கிறார்களே.



1975 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் 5 நிமிஷமாகப் பேசுவதைக் கேட்டுத்தான் பதில் சொல்லியிருக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, நான் சொல்வது முழுவதையும் கேட்டுப் பதில் சொல்லுங்கள். நான் பேசி முடிப்பதற்கு முன்பே பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லையென்று எப்படிச் சொல்ல முடியும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, நீதி விசாரணை வேண்டுமென்று குரல் கொடுத்தவர்களுக்கெல்லாம் இப்போது நீதிபதி நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றவுடன் ஒரு பயம், அச்சம் ஏன் ஏற்படுகிறதென்று தெரியவில்லை. இங்கே திரு. சுரேந்திரன் அவர்கள் ஒரு தவறான கருத்தைச் சொல்கிறார்கள் (குறுக்கீடு).

திரு. சுரேந்திரன் அவர்கள் புதிதாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். எவ்வளவு பெரிய கருத்தை பொறுப்புள்ள அங்கத்தினர் இந்த மன்றத்தில் சொல்லுகிறார்கள் என்பதை மன்றத்தில் உள்ளவர்கள் அமைதியாக சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எஸ்டிமேட் குழு அறிக்கையில் மாண்புமிகு திரு. ப. உ. ச. அவர்கள் மீது குறை சொல்லப்பட்டிருக்கிறது, குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது என்று எவ்வளவு தவறான கருத்தை, எஸ்டிமேட் கமிட்டி ரிப்போர்ட் வாதத்திற்கு வந்ததற்குப் பின்னாலே இல்லாத ஒன்றைக் கற்பித்துச்சொல்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். அந்த அறிக்கையில் இவ்வாறு எந்தவிதமான கருத்தும் சொல்லப்படவில்லை. இந்த மன்றத்திலே இது பற்றி விவாதங்கள் நடந்தபோது அரசாங்கத் தரப்பில் திரும்பத் திரும்ப அவர்கள் சொன்ன போது, குறிப்பிட்ட குற்றச்சாட்டிற்கு விசாரணை வைப்பதற்கு அவர்கள் உட்பட வேண்டுமென்று சொல்லி, அப்படியானால் விசாரணை செய்யத் தயாராக இருக்கிறோம் என்று நேற்று மட்டுமல்ல, பல நாட்கள் முதல்வரவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ஆலடி அருணா அவர்கள் தைரியத்தோடு, தெளிவோடு நேற்று சட்டமன்றத்திற்கு வந்து ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி அதற்குப் பொறுப்பேற்கிறேன் என்று சொன்னதால் அவருடைய பெருந்தன்மையில், தைரியத்தில் நம்பிக்கை வைத்து நாங்கள் அதை ஏற்றுக்கொண்டு விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறோம். இதில் ஒரு விதமான தவறும் கிடையாது. திரு. ஆலடி அருணா அவர்கள் சுப்ரீம் கோர்ட்டிற்குப் போகவேண்டுமென்று சொன்னார்கள். நாம் சட்டம் போட்டிருக்கிறோம். இதில் அருமையான வாய்ப்பைத் தந்திருக்கிறோம். தைரியமாகச் சென்று வாருங்கள் என்று முதல்வரவர்கள் பதில் சொன்னார்கள். திரு. ஆலடி அருணா அவர்களுக்குப் புரியும், அவர் சட்டம் பயின்றவர்கள். திரு. சுரேந்திரன் அவர்களுக்கு இந்த உணர்வு வருமானால், தைரியம் வருமானால் அவர்களும் இதை ஏற்றுக் கொள்ளலாம். தடுக்க மாட்டோம். திரு. ஆலடி அருணாவிற்கு யோசனை சொன்னோம். திரு. சுரேந்திரன் அவர்களுக்கும் இந்த யோசனையைச் சொல்கிறோம். நீங்கள் சுப்ரீம் கோர்ட் வரை செல்லலாம். காங்கிரஸ் கட்சி கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருக்கிற சட்டத்தை நாங்கள் சட்டமாக்கி இருக்கிறோம். அந்த காங்கிரஸ் கட்சியைச்

சேர்ந்தவர் திரு. சுரேந்திரன் அவர்கள். அவர்கள் சுப்ரீம் கோர்ட்டில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். மகிழ்ச்சி. இந்த சட்டப்படி நடவடிக்கை எடுத்து சுப்ரீம் கோர்ட் வரை சென்று இதை நடத்த முயற்சி எடுத்தால் அவருக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, இப்போதாவது எனக்குப் பேச சந்தர்ப்பம் கொடுக்கிறீர்களா? அமைச்சரவர்கள் சொன்னதற்கு நான் பதில் சொல்ல வேண்டாமா?

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, இந்த மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பொறுப்புள்ள குழு ஊழலைப் பற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பித்த பின்னாலே அதன் அடிப்படையில் எதிர்க்கட்சியில் இருக்கிற நாங்கள் மாண்புமிகு ப. உ. ச. அவர்கள் மீது நீதி விசாரணை நடத்தவேண்டுமென்று வற்புறுத்தியதற்குப் பின்னால் முதலமைச்சரவர்கள் நீதி விசாரணை ஏற்படுத்தியதற்குப் பின்னாலே குற்றவாளிக் கூண்டில் குற்றவாளியாக நிறுத்தப்பட்டிருக்கிற ஒரு அமைச்சர் தொடர்ந்து இந்தப் பதவியில்....

திரு. இராம அரங்கண்ணல் : தலைவரவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்....

THIRU G. R. EDMUND : Sir, I have not finished my point of order. There cannot be any point of order in between.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எட்மண்ட், எஸ்டிமேட் கமிட்டி அறிக்கையில் குற்றம் சாட்டியிருக்கிறது என்று சொல்கிறீர்களே, எந்தப் பகுதியில் மாண்புமிகு அமைச்சர் மீது குற்றம் சாட்டியிருக்கிறது என்று சொல்லுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, என்னைப் பேச விடாமல் ஒவ்வொரு வார்த்தைக்கும் கேள்வி கேட்டால் நான் என்ன பதில் சொல்வது?

I cannot explain my stand in one or two sentences.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எவ்வளவு நேரம் பேச வேண்டுமோ அவ்வளவு நேரம் பேசுகிறீர்கள். எட்மண்ட் நீங்கள் நிதானமாக, உணர்ச்சி வயப்படாமல் பேசுங்கள். எஸ்டிமேட் கமிட்டி அறிக்கையை கொடுத்திருக்கிறோம். இன்ன இடத்தில் அமைச்சர் மீது குற்றச்சாட்டு இருக்கிறது என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதோ இருக்கிறது எஸ்டிமேட் கமிட்டி அறிக்கை. இதிலே எங்கே கூறப்பட்டிருக்கிறது, ப. உ. ச. மீது தவறு இருக்கிறது என்று?

THIRU V. KRISHNAMOORTHY (Nellikuppam): Mr. Speaker, Sir, On a point of information ......



திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, இந்த மதிப்பீட்டுக் குழு அறிக்கையில் மாண்புமிகு ப. உ. ச. மீது குற்றச்சாட்டு எங்கேயிருக்கிறதென்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கோபமாகக் கேட்டு என் முன்னாலே அறிக்கையை வீசி எறிந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மெத்தப் பணிவோடு சொல்லிக் கொள்வதெல்லாம் இந்த அறிக்கையில் தாண்டவராயன் ஊழலைப் பற்றி சொல்லியிருக்கிறது. இந்த தாண்டவராயன் சம்பந்தப்பட்ட ஃபைல்களை எதிர்க்கட்சித் தலைவர்களுக்குக் காட்டியிருக்கிறார்கள். அந்த ஃபைலில் கடைசி உத்தரவில் மாண்புமிகு ப. உ. ச. அவர்கள் கையொப்பம் இட்டிருக்கிறார்கள். அதுவும் இருக்கிறது. அவர்கள் தாண்டவராயன் ஊழலில் உடந்தையாக இருந்திருக்கிறார்கள். ஆகவே........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், எஸ்டிமேட் கமிட்டி அறிக்கையில் மாண்புமிகு ப.உ.ச. மீது எங்கே தவறு என்று கூறப்பட்டிருக்கிறதென்று திரு. எட்மண்ட் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, என்னுடைய குற்றச்சாட்டு எஸ்டிமேட் கமிட்டி ரிப்போர்ட்டை வைத்து மாத்திரமல்ல. அவர்கள் இதை முதலில் புரிந்து கொள்ளவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, "மாத்திரமல்ல" என்று சொல்லி தப்பித்துக் கொள்ளக்கூடாது. எஸ்டிமேட் கமிட்டி அறிக்கையில் அப்படிப்பட்ட குற்றச்சாட்டு மாண்புமிகு ப.உ.ச.மீது சுமத்தப்பட்டிருக்கிறதா?

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் திருப்பித் திருப்பி எஸ்டிமேட் கமிட்டி அறிக்கையில் மாண்புமிகு ப. உ. ச. மீது நேரடியாகக் குற்றச் சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கிறதா என்று கேட்கிறார்கள். நேரடியாகச் சொல்லப்படவில்லை. (குறுக்கீடு).

நாங்கள் சொன்னது எஸ்டிமேட் கமிட்டி அறிக்கையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எந்த இடத்தில் இருக்கிறதென்று கேட்டால், அப்படி தெளிவாக சொல்லப்படவில்லை (குறுக்கீடு).

நேரடியாகச் சொல்லப்படவில்லை என்பதற்கும் தெளிவாகச் சொல்லப்படவில்லை என்பதற்கும் வித்தியாசம் இல்லையா? தெளிவாக whether it is clear நேரடியாக whether it is direct என்று கேட்டால், I say it is clear, but it is not direct. The charge against the Hon. Minister P. U. Shanmugam is indirect, but the charge is very clear. என்று சொல்கிறோம். இது தான் என்னுடைய கன்டென்ஷன். நாங்கள் சொல்கிறோம். தாண்டவராயன் ஊழலைப் பற்றி இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. 1½ கோடி ரூபாய் மதிப்புள்ள அரிசி வெளி மாநிலங்களுக்குக் கடத்தப்பட்டதில் அந்த ஃபைலில் மாண்புமிகு ப. உ. ச. அவர்கள் கையொப்பம் இட்டிருக்கிறார்கள். அவர்கள் நேரடியாக உடந்தை இல்லையென்றாலும் மறைமுகமாக உடந்தையாக இருந்திருக்கிறார். பிரைமா பேசி கேஸ் இருக்கிறதா இல்லையாவென்றால் நாங்கள்

நிரூபித்த பின்னாலே பிரைமா ஃபேசி கேஸ் இருக்கிறது. அவர் ராஜினாமா செய்யமாட்டார் என்று குற்றவாளிக் கூண்டில் இருக்கிற குற்றம் சாட்டப்பட்ட அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பாதுகாப்பு கொடுப்பது வேடிக்கையாக இருக்கிறது, விந்தையாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய அறிக்கையை எதிர்த்து இந்த ஆட்சேபணையை எதிர்த்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் வெளி நடப்பு செய்கிறோம்.

(அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தனர்.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நீதி விசாரணை வேண்டுமென்று சொல்லுவார்கள், வைத்தால் ஓடுவார்கள் என்பதற்கு இதைவிட வேறு அத்தாட்சித் தேவையே இல்லை.

## 3. கவன ஈர்ப்பு.

குமரி மாவட்டம் அருவிக்கரை கிராமத்திலுள்ள தச்சூர் அரிசன காலனிக்குப் போகும் பாதையை ஒரு தனி நபர் மூடியதும் வேறு ஒரு பாதை அமைக்க வேண்டியதின் அவசியமும் குறித்து

THIRU J. JAMES: Mr. Speaker Sir, I call the attention of Hon. the Minister for Harijan Welfare to a matter of urgent public importance, namely, the closure of the pathway leading to Thachoor Harijan Colony in Aruvikarai village, Kalkulam taluk, Kanyakumari district by an individual and the necessity to form a road along the pathway to the above Harijan Colony.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், அருவிக்கரை கிராமத்திலுள்ள தச்சூர் அரிசனக் காலனியிலுள்ள அரிசனங்கள் இதுகாறும் கீழ்க்காணும் மூன்று பாதைகளை உபயோகித்து வந்தார்கள்.

(1) தனியார் நிலங்களின் புல எண் 137, 107, 108 வழியாகச் சென்று கொண்டிருந்த பாதை;

(2) திருவெட்டார் உயர்நிலைப்பள்ளி சுற்று இடத்தின் வழியாகச் சென்று கொண்டிருக்கும் பாதை;

(3) அரிசனக் காலனியின் தென்புறமாகச் செல்லும் வெகுதூரமுள்ள சுற்றுப் பாதை;

உயர்நிலைப்பள்ளி நிர்வாகத்தினரால் எந்த நேரத்திலும் மூடப்படும் வாய்ப்பு உள்ளதாலும், வெகுதூரமுள்ளதாகவும், சுற்றுப்பாதையாகவும் நன்செய் நிலங்களின் வழியாகவும் தோட்டங்களின் வழியாகவும் போக வேண்டி இருப்பதாலும் மேற்கண்ட (2), (3)-ல் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகளை அரிசனங்கள் அதிகமாக உபயோகிப்பதில்லை. குறுகிய தூரமுள்ளதாகவும் வசதியாகவும் இருப்பதால் மேலே (1)-ல் கூறப்பட்ட தனியார் நிலங்களின் வழியாகச் செல்லும் பாதையைத்தான் அரிசனங்கள் அதிகமாக உபயோகப்படுத்தி வந்தார்கள். இப்பாதை



செல்லும் நிலச் சொந்தக்காரர்களில் ஒருவர் (புல எண் 137-ன் சொந்தக்காரர்) அந் நிலத்தில் சுற்றுச் சுவர் எடுத்து இதுகாறும் இருந்து வந்த பாதையை மூடிவிட்டார்.

அரிசனங்கள் விண்ணப்பித்துக் கொண்டதின் பேரில் தாசில்தாரும், மாவட்ட நல அதிகாரியும் மேற்படி இடத்தைப் பார்வையிட்ட பொழுது புல எண் 137-ன் சொந்தக்காரர் மேற்கண்ட பாதை அரிசனங்களின் உபயோகத்திற்காக அல்லவென்றும், திரு தேவசகாயம் என்ற தனி நபரின் உபயோகத்திற்காகவே இருப்பதால் மேற்படி நிலத்தின் ஆர்ஜிதத்திற்கு ஆட்சேபணை தெரிவித்துள்ளார். இப்பாதை அரிசனங்களுக்கு வசதியாக இருப்பதாகவும், இப்பாதை வசதி அளிப்பதற்கான ஆர்ஜித நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கூறி 28—2—1975-ல் மாவட்ட ஆட்சியாளர் அரசுக்கு ஒரு அறிக்கை அனுப்பி உள்ளார். மேற்படி நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கும்படி மாவட்ட ஆட்சியாளர் பணிக்கப்பட்டுள்ளார். நில ஆர்ஜித நடவடிக்கைகளின் செயற்குறிப்பு மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகவே இந்தக் கவன ஈர்ப்புக் குறிப்பிற்கு அவசியம் இல்லையெனக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் விடுத்துள்ள ஆணைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தனி நபர் ஒருவர் அரிசன மக்கள் நீண்ட நாட்களாக உபயோகித்து வந்த பாதையைச் சுற்றிலும் மதில் சுவர் எழுப்பி தடைப்படுத்தினதால் சென்ற 4, 5 மாதங்களாக அரிசன மக்கள் வெளியே செல்வதற்கு வழி இல்லாமல் சிறைவாசம் அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். இப்படி அவர்கள் சிறைவாசத்தை அதிக நாள் நீடிக்காமல் உடனடியாக விமோசனம் அளிக்கிற வகையில் அமைச்சரவர்கள் விடுத்துள்ள ஆணைப்படி அந்த நிலத்தை உடனடியாக ஆர்ஜிதம் செய்வதற்கும் அவர்களுக்கு வழிப் பாதை அமைத்துக் கொடுக்கவும் கலெக்டர் அவர்களுக்கு உத்திரவு பிறப்பிக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, இப்போது தான் ஒரு வாரத்திற்கு முன்னாலே, இந்த நோட்டீஸ் வந்ததற்குப் பிறகு உடனடியாக பாதை போடும்படியாக அரசு, ஆட்சியாளருக்கு ஆணை பிறப்பித்துள்ளது.

## (4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம்: இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

## (5) 1975-76-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) நிதிக் கோரிக்கை எண் 21—மீனளம்.

மாண்புமிகு திரு. சி.வி.எம். அண்ணாமலை: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,42,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU R. PONNAPPA NADAR : Sir, to discuss about the necessity to construct a pier in Colachel to make it a good fishing harbour, I move—

'That the allotment of Rs. 1,42,53,000 under Demand No. 21—Fisheries—be reduced by Rs. 100.'

THIRU B. VENKATASWAMY : Sir, to discuss the need to introduce deep sea fishing boats in the State, I move—

'That the allotment of Rs. 1,42,53,000 under Demand No. 21—Fisheries—be reduced by Rs. 100.'

THIRU A. SUBRAMANIAM : Sir, to discuss policy I move—

'That the allotment of Rs. 1,42,53,000 under Demand No. 21—Fisheries—be reduced by Rs. 100.'

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, தூரக்கடலில் சென்று மீன் பிடிக்கும் மீனவர்களுக்குப் பாதுகாப்பும், உயிரிழக்கும்போது அரசு உதவிகள் செய்வது பற்றி விவாதிக்க—

"நிதி க்கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,42,53,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும் என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.



### (ஆ) நிதிக் கோரிக்கை எண் 30—சமூக நலன்.

மாண்புமிகு திரு. சி.வி.எம். அண்ணாமலை: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 30— சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,60,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

THIRU J. JAMES : Sir, to discuss the necessity to give priority in the matter of employment for physically handicapped people by the Government, I move—

'That the allotment of Rs. 2,60,73,000 under Demand No. 30—Social Welfare be reduced by Rs. 100.

THIRU A. SUBRAMANIAM : Sir to urge the immediate re-opening of the Victoria Memorial School for the Blind, Poonamallee, and the necessity to institute a public enquiry about the incidents preceding the closure as well as about the affairs of the School, I move—

'That the allotment of Rs. 2,60,73,000 under Demand No. 30—Social Welfare—be reduced by Rs. 100'.

THIRU B. VENKATASWAMY : Sir, to discuss the need to open more orphanages in the State, I move—

'That the allotment of Rs. 2,60,73,000 under Demand No. 30—Social Welfare—be reduced by Rs. 100'.

திரு. கே.எ. வகாப்: தலைவர் அவர்களே, அனாதைக் குழந்தைகளுக்கும், ஏழை விதவைகளுக்கும் உதவித் தொகைகள் அளிப்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,60,73,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன் மொழிகின்றேன்.

மாண்புமிகு திரு. சி.வி.எம். அண்ணாமலை: பேரவைத் தலைவர் அவர்களே, மீனளத் துறை மானியம் 1975-76-ம் ஆண்டு கோரிக்கைக்கு விளக்கமான குறிப்பு *உறுப்பினர்கள் பார்வைக்கு அனுப்பப்பட்டு தற்போது மாமன்றத்தில் வைக்கப்பட்டு இருக்கின்றது. இந்தக் குறிப்பீடுகளை இம் மாமன்ற நடவடிக்கையில் இணைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

* 240—256-ம் பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

இதைப் போலவே சமூகநல மானியம் குறித்த 1975-76-ஆம் ஆண்டுக்கான விளக்கமான கோரிக்கை** ஒன்று உறுப்பினர்களுடைய மேற்பார்வைக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டு தற்போது மாமன்றத்தில் வைக்கப்பட்டு இருக்கின்றது. இந்தக்குறிப்பினையும் நடவடிக்கையில்இணைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு, உறுப்பினர்கள் தங்களுடைய நல்ல அறிவுரைகளைக் கூறி, கேட்ட பிறகு இது பற்றிய விளக்கம் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன.

* திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை மீது எங்கள் கட்சியினர் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு சில கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன்.

நம் நாடு சுதந்திரம் அடைந்து 27 ஆண்டுகள் ஆகியும் பல சமுதாயத்தினர் பொருளாதார நிலையில் சமூக நிலையில் மோசமாக இருக்கின்றனர். அவர்கள் நிலை இன்னும் மிகமோசமான நிலைமையில் இருந்து கொண்டு இருக்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாக இருப்பவர்கள் மீனவர்கள் சமூகம் என்று கூறலாம். முக்கியமாக அவர்கள் கடலிலே நம்பிக்கை வைத்து வாழ்க்கை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அதை உயிர்த் தொழிலாக நம்பி வாழ்கிற நிலையில் நடத்துகிறார்கள்.

மீனவர்கள் இன்னும் ஏழ்மையான நிலையில் இருக்கின்றார்கள். ...ம் வறுமையின் சின்னமாகக் காட்சியளிக்கிறார்கள்: கடலையே தம் சொத்தாக வைத்து அதை நம்பி வாழ்கிற நிலையில் இருக்கிறார்கள். அவர்களிடம் பொருளாதாரத்தில் பலஹீனம் பல சிக்கல்கள், கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இன்று கடலோர கிராமங்களைப் பார்த்தால் போதுமான சாலைகள் இல்லாத நிலையையும், மின் ஒளிவசதி இல்லாத நிலையையும், குடி தண்ணீர் வசதி இல்லாத நிலையையும் காணலாம். இந்த நிலைமைகளைப் போக்குவதற்கு அரசும், மின் இலாகாவும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுடைய பொருளாதார சமூக வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படுத்த அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வழிவகை செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் நீண்ட கடற்கரை ஆயிரம் கிலோ மீட்டர்கள் இருக்கிறது. மிகவும் ஒடுங்கிய விஸ்தீரண இடத்தில் மீனவர்கள் வசிக்கிறார்கள். இவர்களுக்கு மீன் பிடிப்பது ஒரே தொழில். இவர்களுக்கு மீன் பிடிப்புத் தொழில எல்லா காலங்களிலும் பயன் கொடுப்பதாக இல்லை. மீன் தொழில் அவர்களுக்கு இல்லாத காலங்களில் அவர்கள் வறுமையில், பட்டினியில் இருக்க வேண்டிய நிலையில் இருக்கின்றனர். இந்தக் காரணத்

**257—276-ம் பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பட்டுள்ளது.





தால் மீன் தொழில் இல்லாத காலங்களில் அவர்களுக்கு மாற்றுத் தொழில் அரசாங்கம் வகுத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று பழமையான முறைப்படி பெரும்பாலானோர் மீன் பிடிக்கிற நிலையில் இருக்கிறார்கள். கட்டு மரங்களில், வள்ளங்களில் மீன் பிடிக்கிறார்கள். மீனவர்கள் திரும்பி வருவார்களா என்ற கவலையில் வீட்டில் உள்ள அவர்களுடைய குடும்பத்தினர் இருக்க வேண்டிய நிலை இருக்கின்றது. கடலுக்குப் போனால் அடுத்த நாள் வருவார்களோ என்ற நிலை இருக்கின்றது. அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று கட்டு மரம் அவர்களுக்குச் சொந்தமாக இல்லை. அவர்கள் பெரிய முதலாளிகளிடம் வேலை செய்கிற நிலை ஏற்படுகின்றது. இரண்டு மூன்று ரூபாய்க்கு என்ற குறைந்த நிலையில் அவர்கள் சம்பளத்திற்கு, கூலிக்கு வேலை செய்கிறார்கள். அவர்களுக்குத் தொடர்ந்து வேலை கிடைக்காத நிலையும் இருக்கின்றது. கட்டு மரங்கள், வலைகள் பரம்பரையாக மீன் பிடிக்கிறவர்களுக்குச் சொந்தமாக இல்லை. இவைகள் மீன் பிடி தொழில் செய்கிறவர்களுக்குச் சொந்தமாகக் கூடிய வகையில் மானியம் கொடுக்க வேண்டும், கடன் கொடுக்க வேண்டும். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்ஷூரன்ஸ் முறை இந்த மீன் பிடி தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீன் பிடித் தொழிலில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. எல்லா காலங்களிலும் மீன் அகப்படுவது இல்லை, எல்லோருக்கும் ஒன்று போல மீன் கிடைப்பது இல்லை. அவர்கள் பாக்கியத்தைப் பொறுத்தது. இது இந்தத் தொழில் தோன்றிய பழைய காலத்திலிருந்து இருக்கின்றது. எந்த எந்தக் கடலில் இன்னின்ன மீன் கிடைக்கிறது என்பதை அரசு ஆராய்ந்து இத்தனை மைல்களுக்கு அப்பால் மீன் கிடைக்கிறது என்பதை மீனவர்களுக்கு அறிவிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இறால் மீன் போன்ற உயர்ந்த ரக மீன்களுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. வெளிநாடுகளில் அதற்கு நல்ல மார்க்கெட் இருக்கிறது. அந்நியச் செலாவணி ஈட்டக்கூடியதாக இந்த ரக மீன்கள் இருக்கின்றன. ஆனால் அதன் முழுப் பயனையும் நம்முடைய மீனவர்கள் அடைகிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை. அரசு அதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். கேரளத்தில் இருக்கக்கூடிய வியாபாரிகள் இந்த மீன்களை வாங்கி, வெளிநாடுகளுக்கு அனுப்பக் கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அதனால் மீனவர்கள் அதன் முழுப் பயனையும் அடைய முடியவில்லை; முழு விலையும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. முழு விலையும் மீனவர்களுக்குக் கிடைக்க வழிவகை காணவேண்டும். அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்முடைய அரசாங்கமே இங்குள்ள மீனவர்கள் பிடிக்கின்ற மீன்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்தால் நம்முடைய மீனவர்களுக்கு முழுப் பயனும்

கிடைக்கும்; அந்நியச் செலாவணியும் நமக்குக் கிடைக்கும். அதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இயந்திரப் படகுகளை எடுத்துக்கொண்டால் இப்போது 1,600 இயந்திரப் படகுகள்தான் வழங்கப்பட்டிருக்கின்றன என்று அறிக்கையில் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் மொத்தமாகப் பார்க்கும்போது சில குறிப்பிட்ட கிராமங்களுக்கு அதிகமாக இயந்திரப் படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன; சில கிராமங்களுக்கு ஒன்றும் இல்லை; சில கிராமங்களுக்கு மிகக் குறைந்த எண்ணிக்கையில்தான் கொடுத்திருக்கிறார்கள். சீட்டு முறையில் கொடுக் கப்பட்டாலும் ஒரு சில குறிப்பிட்ட கிராமங்களுக்கு மட்டும் அதிகமாக வழங்கப்படுவது சரியல்ல. எல்லாக் கிராமங்களுக்கும் பரவலாகக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். எல்லாக் கிராமங்களுக்கும் சம வாய்ப்பில் விசைப்படகுகள் கிடைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இயந்திரப் படகுகளில் இருக்கிற இயந்திரங்கள் பல பழுதடைந்து மோசமாக இருக்கின்றன. அதனால் மீனவர்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகையால் நல்ல இயந்திரங்கள் பொருத்தப்பட்ட இயந்திரப் படகுகளை வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் நல்ல இயந்திரங் களைக் கொடுக்க சில வழிவகைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளை ஒழுங்காக தீவிரமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இயந்திரப் படகுகள் இன்னும் அதிக அளவில் மீனவர்களுக்கு வழங் கப்பட வேண்டியிருக்கிறது. மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கிறது. அவர்களுக்கு வழங்கப் பட்டிருக்கிற விசைப்படகுகளின் எண்ணிக்கையோ வெறும் 1,600 தான். இது போதாது. ஆகையால் இன்னும் அதிக அளவு மெகனைஸ்ட் போட் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, கட்டுமரங்கள், வள்ளங்கள் மூலம் மீன் பிடிக்கின்றவர் களுக்கும் மெகனைஸ்ட் போட்டில் மீன் பிடிக்கின்றவர்களுக்கும் அடிக்கடி சண்டை ஏற்படுகிறது. கட்டுமரங்கள், வள்ளங்களில் மீன் பிடிக்கின்றவர் களின் வலைகளை மெகனைஸ்ட் போட்டில் மீன் பிடிப்பவர்கள் அறுத்துவிடு கிறார்கள். அதனால் அவர்களுக்குப் பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற் படுகிறது. ஆகவே, அடிக்கடி சண்டைகள் ஏற்படுகின்றன.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மெகனைஸ்ட் போட் வைத்திருப்பவர்கள் கரையோரத்தில் மீன் பிடிப் பதால் கட்டுமரங்கள், வள்ளங்கள் மூலம் மீன்பிடிப்பவர்களுக்கு மீன் கிடைக்காத நிலை ஏற்படுகிறது. ஆகையால் இத்தனை மைல்களுக்கு அப்பால் சென்றுதான் விசைப்படகு வைத்திருப்பவர்கள் மீன் பிடிக்க வேண்டுமென்று கட்டாயமான ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இப்போதும் அந்த ஏற்பாடு இருப்பதாகத் தெரிகிறது. ஆனால், ஒழுங்காக





அது செயல்படுத்தப்படவில்லை. இருக்கின்ற விதிமுறைகளை ஒழுங்காக செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு மீன்பிடித் தொழிலில் ஈடுபடாதவர் களுக்கும் விசைப்படகுகள் கொடுத்திருக்கிறார்கள். மேலும் கொடுக்கக் கூடிய நிலை இருக்கிறது. அப்படிக் கொடுப்பது சரியல்ல. உண்மையாக இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மட்டும்தான் விசைப்படகுகள் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்போது மீன்பிடித் தொழிலில் ஈடுபடாத சில வியாபாரிகள் அதை வேறு ஒருவரின் பெயரில் பினாமி முறையில் வாங்கி, லாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் விசைப்படகுகளை வாங்கி அவர்கள் விற்கக்கூடிய சூழ்நிலையும் இருக்கிறது. ஆகையால், விசைப் படகுகளை வாங்கியவர்கள் சரியாக உபயோகப்படுத்துகிறார்களா என்பதை கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விசைப்படகுகளுக்கு போதுமான டீசல் எண்ணெய் இப்போது கிடைக் காத ஒரு நிலைமை இருக்கிறது. அதை மாற்றி, போதுமான அளவுக்கு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

விசைப்படகுகள் பழுதுபட்டால் அவற்றைச் சரிபார்க்கவோர்க் ஷாப் வசதி இல்லாமல் இருக்கிறது, ஆகையால் 25 மைல்களுக்கு ஒரு ஒர்க் ஷாப் பாவது அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கடலில் உயிரிழந்துவிடுகிறவர்கள் குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது; பொருளாதார நிலையில் மிகவும் மோசமாக இருக்கிற அவர்களுக்குக் குறைந்தது 5,000 ரூபாய் என்ற அளவுக் காவது கொடுக்க வேண்டும்.

பஞ்ச காலங்களில் கடலோர மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்ட நேரங்களில் அவர்களுக்கு இலவசமாக மரவள்ளிக் கிழங்கு, இதர உணவு தானியங்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

கடல் அரிப்பினால் கன்னியாகுமரி மாவட்டத்தில் பல கிராமங்கள் அடிக்கடி பாதிக்கப்படுகின்றன. சில நேரங்களிலே கிராமங்களே இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு கடல் அரிப்பினால் கிராமங்கள் பாதிக்கப் படுகின்றன. கடல் அரிப்பு ஏற்படாமல் இருப்பதற்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் காணவேண்டும். மேலும் கடல் அரிப்பு ஏற்படாத வண்ணம் தடுப்புச் சுவர் கட்டி, ஒரு நிரந்தரமான பரிகாரம் காணும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அல்லது கன்னியாகுமரியில் கடற்கரையில் மீனவ கிராமங்களே இல்லாது போய் விடும்.

இந்த அறிக்கையில் கன்னியாகுமரி மாவட்டத்தைத் தவிர வேறு சில இடங்களில் மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பது பற்றி

சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையின் 19-வது பக்கத்தில் இரண்டு இடங்களில் வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்திற்கு வகை செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு கட்டுவது பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. அவர்களுக்கும் வீடு கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இனையும் சின்னத்துறையில் ஏழை மீனவர்களுக்கு பல ஆண்டுகளுக்கு முன் திருவிதாங்கூர்-கொச்சி அரசால் வீடுகட்ட கொடுத்த தொகையைப் பெற அரசு தீவிர நடவடிக்கை எடுக்கிறது. அதைக் கைவிட அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சரவர்களின் உரையின் ஆரம்பத்தில் தமிழ்நாட்டில் கிழக்குக் கடலோரப் பகுதி ஆயிரம் கிலோமீட்டர் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் நமக்கு கிழக்குக் கடற்கரை மட்டுமல்ல; மேற்குக் கடற்கரையும் இருக்கிறது. அரபிக்கடலோரத்தில் அதிக நீளமுள்ள கடற்கரை இருக்கிறது. அதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அங்குள்ள மீனவ சமூகத்திற்கான நல்ல காரியங்கள் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குளச்சலில் பழைய துறைமுகம் ஒன்று இருக்கிறது. அதை ஒரு மீன்பிடி துறைமுகமாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

லீபுரம், முட்டம் போன்ற இடங்களையும் மீன்பிடித் துறைமுகங்களாக ஆக்க நடவடிக்கை எடுக்க வேண்மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நைலான் நூல் கிடைக்காத ஒரு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இந்த நைலான் நூல் நியாய விலையில் அதிக அளவில் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சலில் இருந்து கொல்லங்கோடு வரையில் ஒரு கடலோர சாலை அமைக்க வேண்டும்.

இப்போது உள்நாட்டு மீன் வளங்களைப் பெருக்குவதில் அதிக உற்சாகம் காட்டுவதாகத் தெரியவில்லை. உள்நாட்டு மீன் வளங்களைப் பெருக்கினால் உள்நாட்டு மீனவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்; உணவுக்கும் அது பெரிதும் உதவியாக இருக்கும். அது சத்துணவு. ஆகவே, பெருமளவில் எல்லாக் குளங்களிலும் மீன் வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, சமூக நலத் துறையை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு இளைஞர் அணி என்ற அமைப்பு இருக்கிறது. இளைஞரணியில் இருக்கக்கூடியவர்களின் வேலை நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறது. அவர்களுக்கு நிரந்தரமாக வேலை கொடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,





தொழு நோய் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் கன்னியாகுமரி மாவட்டம் தவிர வேறு பல மாவட்டங்களில் இருக்கின்றன. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் இல்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சலில் ஒரு தொழு நோய் மருத்துவமனை இருக்கிறது. அதற்கு அதிக அளவில் மானியம் கொடுத்தால் அந்த மருத்துவ மனையை நல்ல முறையில் விருத்தி செய்து, சிகிச்சை அளிக்க வாய்ப்பு ஏற்படும்.

உடல் ஊனமுற்றோர்களில் படித்தவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அவர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஐரேணிபுரத்தில் குருடர் பள்ளி ஒன்று இருக்கிறது. அதற்கு அரசு அங்கீகாரம் கிடைக்கவில்லை. விரைவில் அதற்கு அங்கீகாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கொட்டாரம் என்ற இடத்தில் ஒரு செவிடர் பள்ளி இருக்கிறது. அரசு அதற்கு அதிக மானியம் கொடுப்பதோடு, ஆசிரியர் சம்பளத்தையும் அதிகமாக ஒழுங்காகக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொழு நோய் இருந்தால் அவர்களுக்குக் கட்டாயமாக ஸ்டெர்லைசேஷன் செய்வது நல்லது; அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கை ரிக்ஷா இன்றைக்கு ஒழிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கை வண்டி வைத்து இழுக்கக்கூடிய நிலை இருக்கிறது. மிகக் கஷ்டமான வேலை. அதையும் மாற்றி, அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–00)

* THIRUMATHI ALDA M. FOWLER : Mr. Deputy Speaker, Sir, I wish to bring before this House a few remarks relating to the Demand for Social Welfare. I feel, Sir, that the amount demanded is totally inadequate. I say so because one has to consider the amount of work that is before the Government for its achievement. I do not think that one-hundredth part of the work is being touched. There is so much more to do and, therefore, I feel that the amount is totally inadequate. I say this because to me this is most meaningful of all the Demands. The Government works on a person to person basis. Government guides the individuals i.e., the future citizen from the cradle to the grave. Therefore, the importance to be attached to this Department has to be taken seriously.

[Thirumathi Alda M. Fowler] [1975 ஏப்ரல் 9

I do not think we realise the kind of work done by Social Service Department. We ourselves are going to suffer in the long run. The work achieved by this department acts as a guide to individuals to change into new characters and personalities because of the altered environment. In the early stage when you take the little infant into the creche or Balwadi, we start at that point, to teach hygiene and sanitation, If we are to teach the child after it had crossed the age of 5 or 6, it is already too late. We start at this point to teach the correct habits of hygiene.

In the nursery stage, the child is trained in mind and body ; it should be taught good manners. I am afraid I have to say this because we are not aware that we have very bad manners and good manners have to be taught to the child from the earliest stage possible.

For example, going up a flight of stairs, one is confronted by four or five people coming down, it is almost as if the group of people would trample on you. Good manners is for you to move to one side and allow the others to pass. This has to be taught to the child at the early stage. Walking down the corridor if a person suddenly stops, placing his hands on his hips, he creates a road block. This person has not realised that he has inconvenienced many other people. So, these small things, though small, should be inculcated in the minds of children from the earliest stage of life. Later on, in adult life, the teaching to mothers in the methods of house-keeping, child care and other things are of vital importance because it is here that we train children to be good citizens.

Now in the teaching of skills also, self-reliance should be instilled in the minds of people. We have to help them to be self-reliant. They should be able to develop a sense of pride in their own workmanship in whatever they do whether they are in small industries or production units. We have to teach them a slogan so that they realise that every day they are getting better, so that they must become self-respecting people with good homes and with security in their homes. There is a tendency amongst us to run after Government for everything. We expect Government to spoonfeed us all through our lives. This is wrong psychologically. We should teach them the slogan of " Onwards, Forwards and Upwards". That is our goal and we should also say to them that is the goal that can be achieved in their lifetime. It is not something that will come about in the not too distant future.

So, let us impress on these people that the goal is achievable and it is, therefore, for them to put forth the efforts to achieve the goal.

I feel there should be a picturesque idea of the progress made. I hope the Government will give us graphs to indicate the progress made. We



1975 April 9] [Thirumathi Alda M. Fowler]

want to see it so that we may know what was achieved last year and how far we have gone and are going, and how much of work has been covered.

Regarding voluntary agencies there are so many people who are willing to lend themselves for this work of social welfare. It is a potential that is before us and we have to make use of it. We have to encourage voluntary agencies, whether in cities or villages, we have to use them because they will give their willing assistance to do the work which the Government is trying to achieve.

Regarding the physically handicapped, Sir, I feel that we have not even touched the fringe. All that we have done is the mere fringe and there are large areas of work not yet touched. Occupational therapy is a field which is essential and which is good for the handicapped. But Occupational Therapists are very few and far between.

Disabled people have such a lot of time at their disposal and therefore this time has to be utilised so that they will be kept interested and occupied in various ways. So, whether it is costly or not, we have to give the materials, and equipment to occupy the time of these people. Residential centres also are very few. Naturally disabled persons cannot transport themselves from one place to another easily and they can do it with much difficulty. Also they must have an attendant to go along with them. Equipments required for the wards, the maintenance required for the wards must also be thought of and the supply of these items should be speeded up. Also children cannot go to various places and they can go there only by buses with inconvenience. So I feel that maintenance grants should be given to hospitals or centres that work with the disabled so that they can be made residents.

Though I do congratulate the Government on their achievement, there is still so much more that has been left undone and so much more that they would like to do. Therefore I feel that the Government and all of us here and the public also should look once again the monies required and demanded for this important Demand. I feel that if we can enhance these grants, the work will be speeded up.

Thank you, Sir.

திரு. குழ. செல்லையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீனள மானியத்தின்மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்தினை நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டு எல்லையிலுள்ள, ஆயிரம் கிலோமீட்டர் எல்லையிலே, சுமார் 3 இலட்சம் மீனவச் சமுதாய மக்களுக்கு வாழ்வளிக்கின்ற ஒரு திட்டம் உருவாக்கப்பட்டிருந்தாலும் இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்த வரையிலே மீனவர் சமுதாயம் எந்தச் சூழ்நிலையிலே வசித்துக் கொண் டிருக்கிறதென்பதை நாம் எண்ணிப் பார்க்க மறந்து விடக்கூடாது. அவர்களுடைய அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரை யிலே, இன்றைக்குத் தோணி கடலிலே போய்விட்டு வெளியிலே வந்தால் தான், வீட்டிலே அடுப்பெரியும் என்ற சூழ்நிலையிலே, அவர்கள் தமிழ கத்திலே இருப்பதை நாம் மறந்து விடக்கூடாது.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, இன்றைக்கு நாட்டுப் படகுக் காரர்களுக்கும் விசைப் படகுக்காரர்களுக்கும் இருக்கிற போராட்டங்கள் மிக அதிகமாக வளர்ந்து வருகின்றன என்பதை எண்ணிப் பார்க்க மறந்து விடக்கூடாது. நாட்டுப் படகுக்காரர்கள் பெரும் பகுதியாக இருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் இன்றைக்கு 1,500 இயந்திரப் படகுகள் இருப்பதாகக் கணக்கிலிருந்து தெரிகிறது. மொத்தம் 3 இலட்சம் பேர், 150 கிராமங்களுக்கு மேல், இத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அண்ணா அவர்கள் 1968–லே நாட்டுப் படகையெல் லாம் இயந்திரம் பொருத்திய படகுகளாக, விசைப் படகுகளாக ஆக்க, ஜப்பானோடு கூட்டாகச் சேர்ந்து ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டம் எந்த அளவில் இருக்கிறது என்று எங்களுக்குத் தெரிய வில்லை. ஆனால் இன்றைக்குப் பார்க்கும்போது 5 குதிரை சக்தி ஆயில் இன்ஜினை அதில் பொருத்திப் பயன்படுத்தினால், இந்தப் பிரச்சினைகள் தீர்கிற வகையிலே, நல்ல முறையிலே 15 மைல் வேகத்திலே செல்லக் கூடிய அளவுக்கு, மீன் பிடிக்க அப்படகுகளைப் பயன்படுத்தக் கூடிய சூழ்நிலையிருக்கிறதென்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 3 மாதங்களுக்கு முன்பாக, தூத்துக்குடி பகுதியில் 5 ஹார்ஸ் பவர் இன்ஜின் பொருத்திய நாட்டுப் படகுகள் வெள்ளோட்டம் விட்டுப் பார்க்கப் பட்டன. அந்தப் படகுகள் ஓரளவு மீனவச் சமுதாயத்தவர்களுக்கு உதவி கரமாக இருக்கின்றன என்பதைச் சொல்லவிரும்புகிறேன். ஆனால் ஆயில் இன்ஜின்களை அளிக்கிற அந்தத் தனியார் கம்பெனிக்காரர்கள் சொல்வது, தனிப்பட்ட நபர்களுக்குத் தரமுடியாது—அரசாங்கம் காரண்டி கொடுத் தால்தான் தர முடியும் என்று கிர்லோஸ்கர் கம்பெனிக்காரர்கள் சொல் கிறார்கள். ஆனால் நான் அந்தக் கம்பெனிக்குத்தான் காரண்டி கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்தவர் கள் எந்த இன்ஜினைக் கேட்கிறார்களோ, அந்த இன்ஜினைத் தயாரிக்கும் கம்பெனியிடத்திலே அரசாங்கம் காரண்டி கொடுத்து, நாட்டுப்படகுகளை எல்லாம் சிறிய இயந்திரங்களைப் பொருத்திய படகுகளாக்க, முயற்சி செய்யலாம், அதற்குத் தனியார் கம்பெனிகளுக்கு அரசாங்கம் காரண்டி கொடுக்கலாம் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்குப் படகிலே இருப்பவர்கள் எல்லாம் படகுகளின் சொந்தக்காரர்கள் அல்ல. இன்றைக்கு 100 படகுகள் ஓடு





கின்றன என்றால், அவற்றில் 90 பேர்கள் அப்படகுகளின் சொந்தக் காரர்கள் அல்ல. தனிப்பட்ட முதலாளிகள், சிறிய படகுகளையும் பெரிய படகுகளையும் சொந்தப் பணத்தைக் கொடுத்து வாங்கி, அதை ஒரு தொழிலாகச் செய்கிறார்கள். மீனவச் சமுதாய மக்கள் மீன் தொழிலை நம்பியிருக்கிற மக்கள். அவர்கள் எல்லோரும் சொந்தப் படகை வைத் திருப்பதில்லை. படகுக்குச் சொந்தக்காரன்—முதலாளி கரையிலே நின்று கொண்டு எப்போது தோணி வரும் என்று பார்க்கிறான். தோணி கரைக்கு வந்தவுடன், அதிலுள்ள மீன் ஏலத்திற்கு விடப்படுகிறது. அந்த மீனை விற்று ரூ. 100 வந்தால், ரூ. 50 ஐ அவன் எடுத்துக்கொள்கிறான். மீதமுள்ள ரூ. 50–ஐ 4, 5 தொழிலாளிகள் பங்கு போட்டுக்கொள் கிறார்கள். இது ஆண்டாண்டு காலமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிற காரியமாகும். இதனால் ரூ. 10,000–க்கு நாட்டுப் படகை வாங்கிவிடுகிற ஒரு முதலாளி, ஓராண்டுக் காலத்திலே ரூ. 50,000 மோ, ரூ. 70,000 மோ சம்பாதிக்கிறான். ஆனால் தொழில் செய்கிற மீனவச் சமுதாய மக்கள் கூலியாட்களாக, வேலையாட்களாகப் பயன்படுத்தப்படுகிறார்களே தவிர, அவர்களுக்கு எந்தவிதமான நிரந்தரப் பாதுகாப்பும் இல்லை. ஒரு நாளைக்கு மீன் பிடிபடவில்லையென்றால். வெறும் போட்டாகத்தான் வரும். அன்றைக்கு வெறுமனே வீட்டுக்குப் போகவேண்டும். ஆகவே அரசாங்கம் என்ன செய்யவேண்டுமென்றால், தொழில் செய்கிற மீன வனுக்கு அந்தப் படகு சொந்தம் என்கிற சட்டத்தை அரசாங்கம் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உழுகிறவனுக்கே நிலம் சொந்தம் என்ற வகையில் எப்படி சட்டம் இயற்றியிருக்கிறோமோ, அதே போல் எல்லோருக்குமே அல்ல, ரூ. 10,000 போட்டு, ரூ. 50,000, ரூ. 1 இலட்சம் பெற்றுத்தந்திருக்கிற மீனவச் சமுதாய மக்களுக்கு, அந்தப் படகுகளை அவற்றைச் உபயோகப் படுத்துகிறவர்களுக்கு சொந்தமாக ஆக்கச் சட்டம் கொண்டு வரவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நாட்டுப் படகுகளுக்கும் விசைப்படகுகளுக்கும் இருக்கிற தக ராறுகள் ஏராளமாகும். அதனை இந்த மன்றத்திலேயே நான் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். சான்றாகச் சொல்ல வேண்டுமானால், நாட்டுப் படகுக்காரர்கள் எப்பொழுது மீன் பிடிக்கவேண்டும், விசைப் படகுக் காரர்கள் எப்பொழுது போகவேண்டுமென்ற பிரச்சினைகள் மாவட்டவாரி யாக, சென்னையிலேயிருந்து, இராமேஸ்வரம், இராமநாதபுரம் வரை இருந்து வருகின்றன.

எங்கள் பேராவூரணித் தொகுதியைப் பொறுத்தவரை மல்லிப்பட் டினத்திலே ஆர்.டி.ஓ.வை வைத்து, அதனை முறையாக்கிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி வந்தோம். ஆனால், அதிலேயும் பிரச்னை வந்தது. நீண்ட காலமாகத் தீர்க்கப்படாத பிரச்னை. அரசு தற்காலிகமாக, மீனளத்துறை அதிகாரிகளை வைத்துப் பரிகாரம் செய்தாலும் அது பயன ளிக்கவில்லை. சாதாரண ஏழைஎளிய மீனவர்கள்தான் நாட்டுப் படகை வைத்திருக்கிறார்கள். அவர்கள்தான் இதனால் பாதிக்கப்பட்டிருகிறார்கள். ரூ. 30,000–க்கான வலையிருந்தால்தான் அவர்கள் மீன்பிடிக்க முடியும்.

மீனவர்களுக்குள் தகராறு ஏற்பட்டு படகு உடைந்து போவது மட்டுமல்ல, ரூ. 40,000, ரூ. 30,000 மதிப்புள்ள வலைகள் அறுக்கப்பட்டு, வாழ்வற்றிருக்கக்கூடிய நிலையும் ஏற்படுகிறது.

மல்லிப்பட்டணத்திலே 9—1—1975–லே நாட்டுப் படகுக்காரர்களுக்கும் விசைப் படகுக்காரர்களுக்கும் ஏற்பட்ட மோதலின் காரணமாக இரண்டு பேர் இறந்திருக்கிறார்கள். மல்லிப்பட்டணத்திலே இருக்கிற எம். எஸ். சையத் மொகம்மது ஐ. பி. 217 என்ற விசைப்படகிலே போய், நாட்டுப் படகும் போய், அதில் இரண்டு பேர் இறந்திருக்கிறார்கள். 4 பேர் மீன் பிடிக்கச் சென்றார்கள். படகுகள் ஒன்றோடொன்று மோதியதன் காரணமாக, இரண்டு பேர் இறந்து விட்டார்கள். 9—1—1975, இரவு 8 மணி அளவிலே மோதியதில், 2 பேர் இறந்து போய், கீழே விழுந்து காணவில்லையென்ற செய்தி வந்தது. தேடிப் பார்த்து, 12—1—1975 அன்று வீரைய்யன் என்பவர் கிடைத்தார். 13–ம் தேதி, பொடிசிங்கன் என்பவர் பிணம் கிடைத்திருக்கிறது. இராசேந்திரன், சுப்பையன் ஆகியோர் மீட்கப்பட்டு, கரையில் வந்து சேர்ந்திருக்கிறார்கள். இறந்து போன வீரையனை நம்பி இருக்கிறவர்கள் 11 பேர். அவருடைய வருமானத்தை நம்பித்தான் அந்தக் குடும்பம் வாழவேண்டிய நிலையிருக்கிறது. அதே போல், இறந்துபோன பொடிசிங்கன் என்ற மீனவரை நம்பி 7 பேர் அந்தக் குடும்பத்திலே இருக்கிறார்கள்.

அந்த 7 பேரும் பொடிசிங்கன் என்பவர் தொழில் செய்து வீட்டுக்கு வந்தால்தான் சாப்பாடு என்ற நிலைமையில் இருக்கிறார்கள். இதைப் பற்றி முதலமைச்சர் அவர்களுக்குப் பலமுறை தெரிவித்தாகிவிட்டது. இது வரையில் அந்தக் குடும்பங்களுக்கு எந்த விதமான சலுகையும் உதவியும் செய்யப்படவில்லை என்பதை வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அல்லது மோதியதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பது தெளிவாக்கப்படவில்லை.

அதற்காகத்தான் நான் சொன்னேன், எல்லாவற்றையும் எஞ்சின் வைத்த போட்களாக மாற்றியமைத்தால் இந்தப் பிரச்னை தீரும். சென்னை போன்ற இடங்களில் விசைப்படகுகள், நாட்டுப் படகுகள் மோதல் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

அதிராம்பட்டினத்தில் இந்நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு ஊரிலும் இப்படிப்பட்ட நிலைமை பெரிய கலவரம் நடந்து கொண்டிருக்கிறது. இதிலே அரசாங்கம் மிகக் கவனமாக இருக்க வேண்டுமென்றும் ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். விசைப் படகுகளைப் பொறுத்த வரையில் காலையிலே செல்ல வேண்டுமென்று சட்டம் கொண்டு வர வேண்டும். ஏழு மணி அல்லது 7½ மணிக்குக் கடலில் இறங்கினால் 3 மைல் சென்று தங்களுடைய டிராலர்களைப் பயனபடுத்திக் கொள்ளலாம். நாட்டுப் படகுகள் அப்போது வெளியே வந்துவிடும். ஆகவே, விசைப்படகுகளுக்கும் நாட்டுப் படகுகளுக்கும் மோதல் ஏற்படாது. விசைப் படகுக்காரர்கள் கிளம்புகிறபோது—இதற்காக நாங்கள் கேட்டுக் கொண்டதற்குப் பிறகு ஒரு திட்டத்தை ஆர்.டி.ஓ. வைத்திருக்கிறார்—காவல் நிலையத்திற்கு சென்று அங்கே கையெழுத்துப் போட்டுவிட்டு அவர்கள் போக வேண்டும் இது





அருமையான திட்டம். விசைப் படகுக்காரர்கள் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் பாஸ் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். பரிசோதனை செய்கிறபோது அவர்கள் அந்த பாஸை வைத்திருக்க வேண்டும்.

இப்போது நிலைமை மோசமாக இருக்கிறது. பல உயிர்கள் போகின்றன, பல குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன, மீனவர்கள் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். இறால் மீன் என்பது சில சில காலங்களில் தான் கிடைக்கிறது. தங்கத்தைப்போல் இருக்கிறது. விலை உயர்ந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. டென்னிஸ் சொன்னதைப்போல அந்த மீனவர்களுக்கு அதனால் லாபம் கிடையாது.

மல்லிப்பட்டணத்திலே, உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், ஒரு கிலோ இறால் மீன் 40 ரூபாய்தான் கொடுக்கிறார் வியாபாரி. ஆனால் அதே வியாபாரி வெளியிலே அதை கொண்டு போய் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்புகிற நேரத்திலே அங்கே 120 ரூபாய் 130 ரூபாய்க்கு அவர்கள் விற்கிறார்கள். பாடுபட்டுப் பிடித்துக் கொண்டுவருகிற மீனவர்களுக்கு 40 ரூபாய்தான் கிடைக்கிறது. ஆனால் ஒன்றும் செய்யாத வியாபாரிக்கு 120 ரூபாய் கிடைக்கிறது. இதை அரசாங்கமே செய்யலாம். அல்லது கூட்டுறவுச் சங்கம் மூலமாகச் செய்யலாம். கேரளா, கர்நாடகம் போன்ற மாநிலங்களிலே உள்ள வியாபாரிகள் இங்கே வந்து வாங்கிக் கொண்டுபோய் கொள்ளை லாபம் சம்பாதிக்கிறார்கள். சும்மா இருந்து கொண்டிருக்கிற வியாபாரிக்கு 80 ரூபாய் லாபம் கிடைக்கிறது. ஆனால் பாடுபட்டு உழைக்கிற மீனவர்களுக்கு அது கிடைப்பது இல்லை. அரசாங்கமே பதப்படுத்துகிற முயற்சியை மேற்கொண்டு வெளிநாடுகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தால் அன்னியச் செலவாணியும் கிடைக்கும், பாடுபடுகிற மீனவர்களுக்கு அதிகமாக தொகையும் கிடைக்கும் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். நிம்மதியாக வாழமுடியும். ஆகவே இறால் வியாபாரத்தைத் தனியார்களுக்குக் கொடுக்காமல் அரசாங்கமே செய்ய வேண்டும்.

சில படகுகளை அரசாங்கம் கட்டுவதற்கும் தனியார் கட்டுவதற்கும் தொகையில் வித்தியாசம் இருக்கிறது. அரசாங்கம் கட்டினால் அதிகமாக இருக்கிறது. அதையே தனியார் கட்டினால் விலை குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். படகு வைத்திருக்கிறவர்கள் எஞ்சின் கேட்டால் அரசாங்கம் தரமாட்டேன் என்கிறது, படகோடு சேர்த்து வாங்கினால்தான் தரப்படும் என்று சொல்கிறார்கள். எஞ்சின் வேண்டுமென்று கேட்டாலும் கேட்கிற எஞ்சினைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஸ்டேட் பிஷரிஸ் கமிட்டி என்று இருக்கிறது, அதிலே எதிர்க்கட்சியினர் யாரும் இல்லை. ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் இருக்கிறார்கள். அதிலே அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். முன்பு இருந்த கமிட்டியிலே எட்மண்ட் அவர்கள் இருந்தார்கள். மத்திய அரசாங்கம் வைத்திருக்கிற அட்வைசரி கமிட்டியில் அவர் இப்போதும் உறுப்பினராக இருக்கிறார். இந்தக் கமிட்டியிலே மெம்பர்களாக இருந்தால் தான் எல்லாவற்றையும் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும்.

அடுத்தது சமூகநலம், தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் இல்லம் 7, 8 இடங்களில் இருக்கின்றன. இது ஏதோ விளம்பரத்திற்காகச் செய்யப் படுகிறது. தெருவிலே தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள், எச்சிலைக்குப் போராடக் கூடிய நிலைமையில் இருக்கிறார்கள்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் 1 மணிக்குப் பிறகு கோட்டைக்குப் பின்னாலே இருக்கிற ஓட்டலுக்குப் பக்கத்தில் பார்த்தால் நாயோடு அவர்கள் போட்டி போட்டுகொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்குப் பின்னாலே பார்த்தாலும்கூட அவர்கள் நாயோடு போட்டியிடக் கூடிய நிலைமையில்தான் இருக்கிறார்கள். விளம்பரத்திற்காக இந்தக் காரியத்தைச் செய்வதை விட உண்மையிலேயே தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு அவர்கள் வாழ்வதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. கு. பெரியசாமி அவர்கள் தலைப்பாகை அணிந்து அமர்ந்திருந்தார்.)

திரு. கு. காமாட்சி : நம்முடைய சபைக்கு மகாராஜா வந்து உட்கார்ந்து இருப்பதைப்போல் தெரிகிறது. அது யார் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எடுத்துவிட்டார், மகாராஜா முடியரசிலிருந்து குடியரசிற்கு வந்துவிட்டார். (சிரிப்பு.)

மாண்புமிகு திரு. சி.வி.எம். அண்ணாமலை : அங்கத்தினர் மறுவாழ்வு இல்லங்களிலே குற்றங்கள் ஏதாவது கண்டுபிடித்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். தொழுநோய் பிச்சைக்காரர்கள் தெருவிலே இருக்கிறார்கள் என்று சொன்னார்கள், பிச்சையெடுப்பதைத் தடுப்பதற்குச் சட்டம் வர இருக்கிறது. தொழுநோய்க்காரர்களை நாமே கட்டாயப்படுத்தி இல்லத்திலே சேர்ப்பதில்லை. அவரவர்களாக முன்வந்தால் சேர்த்துக் கொள்ளப் பட்டு நல்லமுறையிலே கண்காணிக்கப்பட்டு நோய் தீர மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு அவர்கள் மனத் தெளிவுபெற்று எதிர்காலத்திலே தன்னிறைவுபெற்று தன்காலிலேயே நிற்கக்கூடிய அளவிற்குச் செய்யக்கூடிய நல்ல திட்டம்; விளம்பரத்திற்காகச் செய்யப்படுகிற திட்டம் அல்ல. சமுதாய நலத்தை மனத்திலே வைத்து உணர்ச்சிப் பூர்வமாகச் செய்யப்படுகிற திட்டம், இந்தத் திட்டம் காந்தியடிகளின் நெறியிலே அண்ணா அவர்களின் வழியிலே நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய முதன்மையான திட்டம்தான் என்பதை நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. குழ. செல்லையா : சட்டம் கொண்டுவருகிற நிலைமை இருக்கட்டும். இன்றைக்கு அவர்கள் நிலைமை மோசமாக இருக்கிறது. ஆகவே, விளம்பரத்திற்காகச் செய்யாமல் உண்மையிலேயே அவர்கள் நல்ல வாழ்வைப் பெறக்கூடிய முயற்சியில் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீனவர்களுக்கு வீட்டுவசதி, மருத்துவவசதி, பள்ளி வசதிகள் எல்லாம்—கார்ப்பரேஷன் வீடு கட்டுவது சரியல்ல—அரசாங்கமே மீனவர்களுக்குத் தனியாக இவற்றையெல்லாம் செய்து கொடுக்க வேண்டு



மென்று கேட்டுக் கொள்கிறேன். முதலமைச்சர் சொன்னார்கள், பூம்புகா ல் வீடுகள் கட்டப்படுகின்றன என்று. மீனவர்கள் பூம்புகாரில் மட்டும ல்லை. தமிழகம் முழுவதும் மீனவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவர் ளுக்கும் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும். பூம்புகாரில் கட்டப்படுகிற த்தனை வீடுகளையும் மீனவர்களுக்கே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. மு. வேதாசலம் : துணைத்தலைவர் அவர்களே, இன்று நம்முடைய மைச்சர் கொண்டுவந்திருக்கிற மீன்வள மானியத்தை ஆதரித்து நான் பசக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டிலே பெரிய கடற்கரை இருப் தை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். அதிலே மீன்களும், இறால்களும் ற்றும் விலை உயர்ந்த பொருள்களும் இருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

(முற்பகல் 11—30)

இருந்தாலும் ஏழை மீனவர்களால் அதைத் தகுந்த முறையிலே டிக்க முடியாமல் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். அவர்களுக்கு விஞ்ஞான றையிலே மீன் பிடிப்பதற்கான கருவிகளைத் தந்து உதவுவதற்கு நிறைய ானியங்களைத் தர வேண்டும். இப்பொழுது சில மானியங்கள் நிறுத்தப் ட்டிருக்கின்றன. விசைப்படகுகளுக்கான மானியம் இல்லை, எஞ்சின்களுக் ான மானியம் இல்லை, மீன் பிடிக்கிற வலைக்கான மானியம் இல்லை. இந்த மானியங்கள் அவசியமானவை. இவற்றை நம்முடைய கலைஞர் ஆட்சியில் தரவேண்டும், தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலே மீன்பிடிக்க துறைமுகம் ஒன்றைக் கட்டுகி றார்கள். அந்தப் பகுதியில், கடற்கரை ஓரங்களில் கடல் அரிப்பினால் மீனவர் குப்பங்கள் அரித்துக் கொண்டே போவதை நீங்கள் அறிவீர்கள். தடுதற்காக, உடனடியாக இராயபுரம் பகுதியிலிருந்து திருவொற்றியூர் பகுதி வரையில் பெரிய தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர்களுக்காக எவ்வளவோ நல்ல, அழகான திட்டங்களைத் தந்திருக்கிறீர்கள், அதற்காக அமைச்சரவர்களை நான் பாராட்டுகிறேன். மீனவர் குப்பங்களில் சென்று பார்த்தால் மிகவும் மோசமான நிலையில் குடிசைப் பகுதிகளில் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்வதற்கான வசதியில்லாத நிலையில் குடிசைகள் இருக்கின்றன. அவர்களுக்கு நல்ல திட்டத்தைத் தந்திருக்கிறார்கள், 5,000 வீடுகள் 2 கோடி ரூபாய் செலவிலே கட்டித்தர நம்முடைய கலைஞர் ஆட்சியில் ஏற்பாடு செய்திருப்பதை நான் பாராட்டுகிறேன். அதேபோல் குடிசைகளில் வாழ்கின்ற கடற்கரைப் பகுதியில் ரோடு வசதிகள் இல்லை. அந்தப் பகுதியில் ஆறு நடுக்கே போகிறது, அதைத் தாண்டி நடந்து போகிறார்கள். எனவே அதற்குப் பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர்கள் நத்தம் புறம்போக்கு நிலங்களில் வாழ்கிறார்கள். இது வரையில் அவர்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்குத் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. மு. வேதாசலம்] [1975 ஏப்ரல் 9

மீனவர்கள் மிகவும் பின்தங்கிய மோசமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பல தடவை இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறேன். மீனவர் இனத்தைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் லிஸ்டிலே சேர்க்க வேண்டும் அல்லது மோஸ்ட் பேக்வார்ட் கிளாசாக சேர்க்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

" மீனவர்களுக்காக ஃபிஷரீஸ் டெவலெப்மெண்ட் கார்ப்பரேஷன் ஏற்படுத்தியிருக்கிறார்கள், அதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் ஏப்ரல் மாதம் இந்த கார்ப்பரேஷன் தொடங்கப்பட்டது. அதற்குமுன் ஒரு படகின் விலை 54,893 ரூபாயாக இருந்தது. இப்பொழுது கார்ப்பரேஷன் தொடங்கியதற்குப் பிறகு சுமார் 1,20,000 ரூபாய்க்கு மேலாக இருக்கிறது. ஏழை மீனவர்கள், கட்டுமரத்தில் சென்று உயிர் வாழ்பவர்கள், கட்டுமரத்தில் சென்று மீன் பிடிப்பவர்கள் இப்படி 1,20,000 ரூபாய் கொடுத்து எப்படி வாங்க முடியும்? தயவுசெய்து அமைச்சரவர்கள் நன்றாகச் சிந்தித்துப் பரிசீலனை செய்ய வேண்டும். எனவே மீனவர்களுக்கு சப்சிடி தந்தால்தான், மானியம் தந்தால்தான் அவர்கள் வாழ முடியும்.

கடலிலே இறால்கள் இருக்கின்றன. கடலிலே விலை உயர்ந்த பொருட்கள் இருக்கின்றன, ஆனால் அவற்றை எடுத்து வருவதற்கான வசதிமிக்க கருவிகள், விஞ்ஞானக் கருவிகள் இல்லை. விஞ்ஞானக் கருவிகள் ஏழை மீனவர்களால் வாங்க முடியாது. அவர்கள் வாங்குவதற்கான சக்தியில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு எல்லாத் துறைகளிலேயும் சப்சிடி தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேறொரு காரணத்தை வைத்து முதலிலே சப்சிடி வழங்கப்பட்டது. விசைப் படகுகளுக்குத் தரப்பட்டது. பிறகு அந்த சப்சிடி தேவையில்லை என்று கருத வேண்டாம். இது உணவுப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு உதவியாக இருக்கும். மற்ற நாடுகளில், பக்கத்து மாநிலங்களில், கேரளாவிலே சப்சிடி கொடுக்கிறார்கள், கர்நாடகத்திலே சப்சிடி கொடுக்கிறார்கள், ஆந்திராவிலே சப்சிடி கொடுக்கிறார்கள், உலக நாட்டிலேயே கொடுக்கிறார்கள். எனவே நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள். இப்படிப்பட்ட ஏழை மீனவர்கள் பெரிய கடற்கரை இருந்தும் அவர்கள் வாழ முடியாமல் இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு உதவியாக 10 கோடி ரூபாயிலே ஒரு மாஸ்டர் பிளான் போடவேண்டும். அப்படிப்பட்ட பெரிய திட்டத்தைத் தீட்டுவதற்கு 10 கோடி ரூபாய் செலவு செய்தால் 30 கோடி ரூபாயாகக் கிடைக்குமென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, மீனவர்களுக்காக இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டுகிறேன்.

திரு. கு. பெரியசாமி : தலைவரவர்களே, மீனளத் துறை சம்பந்தமாகப் பேசுகிற நேரத்தில, தமிழ்நாட்டில் பிடிக்கப்படும் இறால் என்ற வர்க்கம் கேரளாவிற்குக் கடத்தப்பட்டது என்று சொல்லி......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் பேசுவதில் சந்தேகம் இருந்தால் சொல்லுங்கள். தனியாகப் பேச வேண்டுமென்றால் அதற்கு வாய்ப்பு தருகிறேன்.



1976 ஏப்ரல் 9]

திரு. கு. பெரியசாமி: கேரளாவிற்குக் கொண்டு போகப்பட்டு அவர்கள் அன்னியச் செலாவணியை ஈட்டுகிறார்கள். அதை ஏன் தமிழ்நாட்டில செய்யக்கூடாது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மந்திரி பிறகு பதில் சொல்வார்.

திரு. மு. வேதாசலம் : ஏராளமான மீன்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளைப் பிடிக்க மீனவர்களால் முடியவில்லை. ஆகவே, அவர்களுக்குத் தகுந்த மான்யம் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாட்டிலே உணவுப் பஞ்சம். அதைப்போலவே, கடலிலேயும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அங்கேயும் டிரௌட் ஏற்பட்டிருக்கிறது. இறால் மீன்களும், மற்ற மீன்களும் கிடைக்கவில்லை. ஆகவே, விவசாயிகளுக்கு டிரௌட் ரிலீஃப் கொடுப்பதைப் போலவே மீனவர்களுக்கும் மாதா மாதம் அவர்கள் கொடுக்க வேண்டிய பாக்கியைத் தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் எ. ஜே. காலனி, சி. ஜே. காலனி, புது காமராஜ் நகர் ஆகிய பகுதிகள் 20 ஆண்டுகளாக லீஸ் லேண்டாக மீனவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர்கள் வசிக்கின்ற கடற்கரைப் பகுதிகளிலே ஏற்படுத்தப்படும் டவுன் ஷிப்களில் மீனவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை. அந்த நகரியங்களில் மீனவ உறுப்பினர்கள் அதிகமாக நியமனம் செய்ய வேண்டுமென்று வேண்டிவிரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். மீனவர்களுக்கு இன்னும் நல்ல காரியங்களைச் செய்வதற்குத் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். பெரிய டிராலர்கள் சம்பந்தமாக மண்டபத்தில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்தாலும் மீனவர்களைத் தாழ்த்தப்பட்ட மக்களின் லிஸ்டிலே சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, மீனளம், சமூக நலன் சம்பந்தமான மானியக் கோரிக்கைகளின் பேரில் நான் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடலிலே மீன் பிடிக்கும் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்குச் சொந்த முறையிலே படகுகள் வைத்து மீன் பிடித்து, அவர்கள் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்கான பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதிலே சிலசில காரியங்கள் செய்திருந்தாலும் அந்தச் சமுதாயத்திற்குப் போதுமான அளவிற்கு நிச்சயமாகப் பலனளிக்கவில்லை என்றுகூடச் சொல்ல முடியும். காரணம் என்னவென்று கேட்டால் அவர்கள் தங்கள் வாழ்க்கையிலே முன்னேறக்கூடிய அளவிற்கு உள்ள சமுதாயமாக உண்டாக்கக்கூடிய

சூழ்நிலையை இன்னும் அரசாங்கம் தீவிரப் படுத்தியாக வேண்டும்.. சொந்த முறையிலே சிறுசிறு படகுகளில் மோட்டார் அமைத்துக் கொடுத்து அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் மேலும் பல திட்டங்களை வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மீன் உற்பத்தி, உணவு உற்பத்திக்கு எடுத்துக் காட்டாக நம் நாட்டிலே உள்ள மக்களுக்கு மிகமிக அத்தியாவசியமானதாகும். ஆனால் தமிழ் நாட்டிலே பிடிக்கப்பட்டு வியாபாரத் துறையின்மூலம் மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆகவே தமிழ்நாட்டிலேயுள்ள மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைப்பதற்கான வாய்ப்பை உருவாக்க முயற்சிக்க வேண்டும். பல்வேறு கடற்கரைப்பகுதிகளிலேயும் உள்ள மீனவ சமுதாயத்தினருக்கு இந்தத் தொழிலிலே அபாயகரமான சூழ்நிலை இல்லாத அளவிலே செய்ய வேண்டும்.

சமுதாய நலனிலேயும் பல்வேறு குறைகள் இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். தமிழ் நாட்டிலே சமுதாயத்தை மேம்படுத்துவதிலே எடுத்த முயற்சிகளுக்குப் பலன் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. ஆங்காங்கு மாடு நுனிப்புல்லை மேய்வதைப் போல அமலாக்கிக் கொண்டிருக்கிறார்கள். சென்னை நகரத்திலே பார்த்தால் பல்வேறு பிச்சைக்காரர்கள் ரோட்டிலே செல்ல முடியாத அளவிற்கு அரித்து எடுக்கிறார்கள். 6 வயது, 10 வயது குழந்தைகளெல்லாம் ஹோட்டல்களுக்கு முன்னால் பிச்சையெடுத்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையைப் பார்க்கிறோம். இந்த நிலைமை தேவைதானா ? இதற்காகத் தொழுநோய்ப் பிச்சைக்காரர் விடுதி, சமூக நலக் குழந்தைகள் விடுதி இருப்பதாக அறிக்கையில் இருக்கிறது, சமுதாயத்தில் இந்த அளவிற்குக் கீழ்மட்டத்தில் இருக்கும் மக்களுக்கு நச்சுப் பாம்பு மாதிரி இருப்பதை அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டும். ஏதோ திட்டம் தீட்டி விட்டோம் என்று உட்கார்ந்து கொண்டு இருந்துவிட முடியாது. இப்படிப்பட்டவர்களுக்கு என்ன ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த அறிக்கையிலே ஏதோ ஒரு ஜில்லாவிற்கு ஓரிடத்திலே 40 பேர், 60 பேர்களுக்கு மட்டும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்று கூறப்படுகிறதே தவிர ஒட்டு மொத்தமாக அந்த நலனைப் பேணிக் காப்பதில் ஏழை எளிய மக்களுக்கு என்ன செய்திருக்கிறோம் என்பதைப் பார்த்தால் இந்த நிதி ஒதுக்கத்திலே சொல்லியிருப்பது போதுமானதாக இல்லை என்றுதான் என்னால் சொல்ல முடியும்.

இன்றைக்கு சாதாரணமாக கிராமத்தில் இருக்கும் குழந்தைகள், ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள், கீழ் நிலையில் இருக்கும் குழந்தைகள், விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் குழந்தைகள் அனாதைகளாக வேறு வழி இல்லாதவர்களாக, தாய் தந்தையற்ற குழந்தைகளாக, பிச்சைக்காரர்களாக மாறக்கூடிய நிலை ஏற்பட்டு இருக்கிறது. அவர்களைப் பாதுகாக்கும் முழுப்பொறுப்பையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும். பிச்சை எடுப்பது ஒரு தொழில் என்று இருக்கிற நிலையை மாற்ற வேண்டும்.



தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் எவ்வளவு பேர் வெளியே திரிகிறார்கள் ? அவர்களை ஏன் தொழு நோய் ஆஸ்பத்திரியிலேயோ, பிச்சைக்காரர்கள் விடுதியிலேயோ கொண்டு போய்விடவில்லை ? திட்டம் இருந்தாலும் அது செயல் படாத நிலைமையில் பாதுகாப்பற்ற நிலைமை இருப்பதைத் தவிர்க்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விதவைப் பெண்களுக்கு சமுதாயத்தில் ஒரு பாதுகாப்பு வேண்டும். அரசாங்கமே தொழிலும், வேலை வாய்ப்பும் அளிக்க வேண்டும். தையல் வேலை, மற்ற வேலைகளை அவர்களுக்குப் பரவலாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

பூந்தமல்லியில் கண் இல்லாதவர்களுக்கு ஒரு பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளி மூடப்பட்டு ஆறு ஏழு மாதங்கள் ஆகின்றன என்று நினைக்கிறேன். என்ன காரணத்தால் அது மூடப்பட்டது ? அவர்கள் சாப்பிடுகிற உணவில் கல் அதிகமாக இருந்தது, நல்ல உணவு கொடுக்கவில்லை. காய்கறி கொடுக்கவில்லை என்று பிரின்சிபாலைக் கேட்ட காரணத்தால் அவர்களை அடித்து, உதைத்து வெளியே அனுப்பிவிட்டு அந்தப் பள்ளியினை மூடியிருக்கிறார்கள். அவர்கள் நேரடியாக அமைச்சர் அவர்களிடம் நிலைமையைச் சொல்ல வந்தால் அமைச்சர் அவர்களைப் பார்க்க முடியாமல் சென்றிருக்கிறார்கள். பிரின்சிபாலின் கோபம், கவுரவம் "எப்படிக் குருட்டுப் பயல்கள் என்னை எதிர்த்துக் கேட்கிறார்கள்" என்ற காரணத்தால் அவர்கள் பள்ளியை மூடியிருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:</u> மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான கருத்தை இந்த அவை முன் வைக்கிறார்கள். ஆகையால் அதை விளக்க வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது. அதுபற்றிய முழு விளக்கத்தையும் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

அந்தகர் பள்ளியினுடைய மாணவர்கள் எந்த வகையிலே நடந்து கொண்டார்கள் என்ற உண்மை நிலையை அருள்கூர்ந்து பொதுவான கருத்தில் இருந்து நோக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் பள்ளிக்குச் செல்லாமல் ஒரு அரசியல் கிளர்ச்சி போல் வழியிலே செல்கிற பஸ்களையும், மற்றும் கார்களையும் தாக்கியதோடு போலீசாரையும் கையினால் ஓங்கி அடிக்கும் அளவுக்கு வேறு சில அரசியல்வாதிகளின் தூண்டுதலால் நடந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் முறைதவறி நடந்தும் கூட அரசு அவர்களுடைய இரங்கத்தக்க நிலைக்காக வருத்தப்பட்டு இரங்கி அவர்களுடைய குறைகள் யாது என்று அறிய சமூக நலத் துறைச் செயலாளரை அனுப்பினேன்.

அவர்கள் ஆறு விதமான கோரிக்கைகளைச் சொன்னார்கள். அந்த ஆறு விதமான கோரிக்கைகளில் மிகவும் அழுத்தமாக அவர்கள் சொன்ன கோரிக்கை "அங்கு பணியாற்றுகின்ற ஒரு மாதத்தில் ஓய்வு பெற இருக்கின்ற முதல்வர் அவர்களை மாற்ற வேண்டும்" என்பதாகும். அவர்கள் கேட்ட ஆறு கோரிக்கைகளில் ஐந்து கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதாகக் கூறினோம். அதாவது 30 ரூபாய் உணவுக்காகக் கொடுப்பது

போதாது என்றார்கள். 40 ரூபாய் என்று அதனை ஆக்கி மேலும் 5 ரூபாய் போட்டு 45 ரூபாய் என்று உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். தனிப்பட்ட பாடப் புத்தகங்கள் வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதுபோன்று ஐந்து விதமான கோரிக்கைகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. ஆறாவது கோரிக்கை பள்ளி முதல்வரை மாற்ற வேண்டுமென்பது.

நான் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்படி ஒவ்வொரு கல்லூரியிலும், படிக்கின்ற மாணவர்கள் முதல்வரை மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசு ஏற்பது என்று வந்து விட்டால் இந்த நாட்டிலே இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் நிலைமை என்னவாகும்?

இந்த அந்தகர் பள்ளி ஆடவர்களை மட்டும் கொண்ட பள்ளி அல்ல. பெண் மகளிரும் கொண்ட பள்ளி. ஆடவர், பெண்டிர் இருக்கும் பள்ளிகளில் ஒழுக்க நெறிகளைக் கடைபிடிப்பது, கட்டுப்படுத்துவது, கண்காணிப்பது முதல்வர் அவர்கள் தலையாய கடமை. இதிலே வேலை நிறுத்தத்திற்குக் காரணமாக இருந்தது மட்டுமல்லாமல், ஒரு சில மாணவர்கள் உண்மையிலேயே அடக்க நிலை இல்லாமல், வேலை நிறுத்தத்திற்குத் தூண்டுதல் வெளியிலே இருந்து வந்தது என்ற நிலையில் தற்போது அந்த மாணவர்கள் நடந்து கொண்ட விதத்திற்கு வருத்தம் தெரிவித்து நாங்கள் ஒழுங்காக நடக்கிறோம் என்று எழுதிக் கொடுத்த பிறகு அவர்களுடைய குற்றத்தைப் பொறுத்து இப்போது முறையாக அந்தப் பள்ளி நடத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. கோவை செழியன் : ஏற்கனவே இந்த மன்றத்தில் இதைப் பற்றி விவாதித்திருக்கிறார்கள். அந்தக் கண்ணில்லாத மாணவர்களை எதிர்க் கட்சிக்காரர்களாகிய நாங்கள் எல்லாம் அங்கு போய்ப் பார்த்தோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள்—கண் இல்லாத அந்த மாணவர்கள் போலீசாரை அடித்தார்கள் என்று. கொஞ்சமாவது சிந்தித்துப் பார்க்கவேண்டாமா ? கண் இல்லாதவர்கள் அந்தக் காரியத்தைச் செய்ய முடியுமா ? அதற்கு மாறாக அந்தக் கண் இல்லாத மாணவர்களை டைனிங் ஹாலில் போட்டுப் பூட்டி விறகுக் கட்டையால் அடித்திருக்கிறார்கள். அந்தக் காயங்களை எல்லாம் நாங்கள் பார்த்தோம். அதற்கு மூலகாரணம் அந்த பிரின்சிபால்தான். அது தனிப் பிரச்சினை. அதை நான் விவாதிக்க விரும்பவில்லை.

அவர்கள் அப்படித் தாக்கப்பட்ட கொடுமையைப் பார்க்கின்றபோது மனிதாபிமானம் உள்ள யாரும் பொறுத்துக் கொள்ளமுடியாது. எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும். கண்ணில்லாத பத்து, பன்னிரண்டு வயதுள்ள மாணவர்கள் எப்படிப் போலீஸ்காரர்களை அடித்திருக்க முடியும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள். நீங்கள் பேசுவதே விதிமுறைக்கு உட்பட்டதல்ல. அமைச்சருக்கும் பேசிக்கொண்டிருக்கும் உறுப்பினருக்குமிடையே நீங்கள் தலையிட்டு ஒரு



விஷயத்தைச் சொல்லும்போது அதுவே தனிப் பேச்சாக இருக்கக் கூடாது. நீங்கள் பேசிவிட்டுப் போய்விடுகிறீர்கள். நாங்கள் இங்கே இரண்டு, இரண்டரை மணி வரை இருக்க வேண்டியிருக்கிறது.

திரு. கோவை செழியன் : நேரில் பார்த்ததைச் சொல்லுகிறேன். அவர்கள் போலீசாரை அடித்ததாகத் தவறாகச் சொல்ல வேண்டாம்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : நண்பர் செழியன் அவர்கள் கண் இல்லாத அந்தகர்களுக்குக் காட்டுகிற கருணையைப் பாராட்டுகிறேன். இந்த அரசு கண் இல்லாத அந்தகர்களுக்கு அவர்களுடைய குறைபாடுகளைப் போக்க எந்த அளவுக்குக் காரியங்களை ஆற்றி வருகிறது என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். முதல்வர் அவர்கள் சொன்னது போல் பத்திரிகையில் தலைப்புப் பெறுவதற்காக பேசுவதானால் பேசட்டும், வேண்டாமென்று சொல்லவில்லை. கண் பார்வை இல்லாதவர்கள் மீது எங்களுக்கு என் விரோதம் வரப் போகிறது? அந்த மக்கள் மீது இரக்கம் காட்டுவதற்கு மாறாக ஆத்திரம் காட்ட என்ன அவசியம் வந்துவிட்டது ? பொதுவாக ஒழுக்க நெறிகளை இளம் பிள்ளைகள் மத்தியில் கடைப்பிடிப்பதில் கஷ்டம் இருக்கிறது, பருவத்தின் காரணமாக இது போன்ற கிளர்ச்சிகளில் ஈடுபடுகிறார்கள் என்பதை மட்டும் நண்பர் செழியன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. ஏ. சுப்பிரமணியம் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. குமாரசாமியே கேட்கட்டும். உங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்தான். அவர் விளக்கம் கேட்கட்டுமே.

திரு. ஏ. சுப்பிரமணியம் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். அமைச்சர் அவர்கள் திரும்பத் திரும்ப இரண்டு தடவை, ஒன்றை இன்சின்யுவேஷன் போல் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் அவருக்கு அதிகாரிகளிடத்தில் இருந்து வந்திருக்கும் அறிக்கையை மட்டும் வைத்துப் பார்க்காமல் நாங்கள் என்ன சொல்லுகிறோம் என்பதையும் கேட்க வேண்டும். அவர்கள் கொடுக்கிற அறிக்கையை அப்படியே எடுத்துக் கொள்ளாமல், போலீசாரை அவர்கள் தாக்கினார்கள், அடித்தார்கள் என்றால், கண் தெரியாத பிள்ளைகள் எப்படிச் செய்ய முடியும் என்று நினைத்துப் பார்க்க வேண்டாமா ? கண் தெரிகின்றவர்கள் செய்தார்கள் என்று சொன்னாலாவது கொஞ்சம் பொருத்தமாக இருக்கும். அந்தப் பள்ளி இப்போது தொடர்ந்து நடக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

அதே நேரத்தில் மேலும் இத்தகைய குறைபாடுகள் வராமல், அவர்கள் கண் தெரியாத பிள்ளைகளாக இருப்பதால் பலவற்றை அவர்கள் பார்க்க முடியாது என்ற காரணத்தால் குறைகள் நேராமல் அமைச்சர் அவர்கள் பார்த்துக் கொள்ளவேண்டும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, அந்தக் கண் இல்லாத பிள்ளைகளின் பள்ளித் தலைவர் பல்லாண்டுகளாக அங்கு இருந்தவர். அவர் மீது திடீரென்று ஒரு புகார் ஏற்பட்டு அவர்கள் வேண்டாம்

என்று மாணவர்கள் சொல்வதற்கு ஒரு காரணம் இருந்திருக்கவேண்டும் அமைச்சரே அவர்கள் கூறுகிற காரணத்தைப்போல் அவர்கள் வயதுக் கோளாறால் ஏதாவது தவறான காரியத்தை—செய்தார்கள் என்று ஒப்புக்கொள்ள நான் . தயாராயில்லை—செய்தார்கள் என்றால் இந்த அரசாங்கம் எந்த அடிப்படையில் அதை ஆராய்ந்து முடிவுக்கு வந்தார்கள் ? ஒருதலைப் பட்சமாக இந்த முடிவுக்கு வந்து மாணவர்களை மாத்திரம் குற்றஞ்சாட்டுவது சரியா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி எம். அண்ணாமலை : இதுபோன்ற குறுக்கீடுகள் வந்து, இதைப்பற்றி தெளிவாக ஒரு விளக்கம் பெற இந்த மன்றத்திற்கு வாய்ப்பு அளித்ததாக நான் கருதுகிறேன். பொதுவாக உணவு வகையில் அவர்களுக்கு ஏற்பட்ட குறைகள் காரணமாக ஆரம்பத்தில் குரல் எழுப்பினார்கள். அதைப் பற்றி எனக்குத் தகவல் கிடைத்தது. உடனடியாக பத்து ரூபாய் உயர்த்தித்தரப்பட்டது. அதுவும் நிதித்துறையின் அனுமதியைப் பெறாமலேயே அந்தகர்கள், கண்ணற்றவர்கள், பார்வையற்றவர்கள், அவர்களுக்கு இதனால் நல்ல உணவு கொள்ள முடியாது என்ற முறையில் மிக்க கருணையோடு முதல் அமைச்சர் கலைஞர் அவர்கள் அனுமதி பெற்று நிதிச் செயலாளருக்கு பிறகு அறிவிக்கலாம் என்ற முறையில் உடனடியாக ஒப்புதல் தரப்பட்டு ரூ. 40 என்று கொடுத்தோம். அதுபோதவில்லை என்று மீண்டும் கிளர்ச்சி செய்தார்கள். அப்போது ரூ. 45 என்று கொடுத்தோம். அப்படிக் கொடுத்த பிறகும் சில பேர்கள் தனிப்பட்ட முறையில் இந்த ப்ளாக்கிலிருந்து அந்த ப்ளாக்கிற்குச் செல்லக்கூடாது, அந்த இடத்திலிருந்து இந்த இடத்திற்குப்போகக் கூடாது என்று பள்ளிக்கூட சட்ட திட்டங்களை அமல்படுத்துவதில், ஒழுங்குமுறை நடவடிக்கை எடுப்பதில் அந்த முதல்வர் சிறிது கண்டிப்பாக இருந்ததால் இப்படிப்பட்ட இடையூறுகள் அங்கு பொதுவாக ஏற்பட்டன.

திரு. சுப்ரமண்யம் அவர்கள் சொன்னார்கள். கண் இல்லாதவர்கள் போலீஸ்காரர்களை அடித்தார்கள் என்பதை எப்படி ஒப்புக்கொள்ளலாம் என்று. உண்மையில் இதுதான் விந்தை. இது சிந்திக்க வேண்டிய ஒன்று. அரசுக்குத் தகவல் வந்தது. கண் தெரியாதவர்கள் வழியில் செல்கிற கார்களை மடக்குகிறார்கள், வருகிறவர்கள் போகிறவர்களை மடக்குகிறார்கள். முதல்வர் ஒழிக என்று கோஷம் போடுகிறார்கள். அதைப் பள்ளிக்கூடத்தில் வைத்துக் கொண்டால் பரவாயில்லை. போக்குவரத்துக்கு நெரிசல் ஏற்படுகிற வகையில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிற வகையில் கண் பார்வையற்றவர்கள் செயல்படுகிறார்கள்.

அவர்களை அடிக்கலாமா அல்லது கைது செய்யலாமா என்று கேட்டபோது எங்கள் துறை மூலம் காவல் துறைக்கு அறிவுறுத்தப்பட்டது. அவர்கள் பார்வையற்றவர்கள், அவர்களை கண்டிப்பாக நடத்தக் கூடாது. அவர்களிடம் இனிமையாகப் பேசி அவர்களது உள்ளங்களை கவர முற்படுங்கள் என்றுதான் சொல்லப்பட்டது. போக்குவரத்தைப் போக ஒட்டாமல் தடுத்தபோது, போகச் சொல்லி போக மாட்டோம் என்று சொன்னவுடன் அவர்களைத் தள்ளியபோது அவர்களை அடித்திருக்கிறார்கள். கண்



பார்வையற்றவர்கள். குருடர்கள் காவல் துறையினரை அடித்ததாகச் சொன்னால் உலகம் சிரிக்குமே, ஆகவே நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று கூறிய பெருமை இந்த இலாகாவிற்கு உண்டு.

திரு. கே. என். குமாரசாமி: முதல் அமைச்சர் அவர்களைப் போய் பார்க்கக் கூடாது என்று தடுக்கப்பட்டிருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்களைப் போய்ப் பார்ப்பதை ஏன் தடுக்க வேண்டும்? முதல் அமைச்சர் அவர்களைப் பார்த்து விவரங்களைச் சொல்லியிருந்தால் இந்தப் பிரச்சினை அன்றே தீர்ந்திருக்கும். அவர்கள் உணவு சாப்பிட மறுத்தார்கள் என்பதற்காக உதைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடம் போய் என்ன அரசியல் பேச முடியும்? ஆகவே உண்மை நிலை என்ன என்று ஆராய்ந்து இது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாமல்இருப்பதற்கு வழிவகை காணவேண்டும் இல்லாவிடில் எந்த சமுதாய நலனை மேம்படுத்த வேண்டும் என்று நினைக்கிறோமா அது நடக்காமல் போய்விடும். அடுத்தபடியாக, பல்வேறு தொழிற்சாலைகளில் ஊனமுற்றோருக்கு வாழ்வளிக்கக் கூடிய வகையில் வேலை வாய்ப்புகள் தரப்பட வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் நேரம் முடிந்துவிட்டது. இண்டரப்ஷன்ஸ் எட்டு நிமிடம். ஆக 18 நிமிடங்கள். கண்தெரியாதவர்கள் பிரச்னை என்பதால் சிறிது அதிக நேரம் கொடுத்திருக்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: ஊனமுற்றோருக்கு வேலைகள் கற்றுக் கொடுக்கிறோம் என்று மட்டும் இருக்கக்கூடாது.

அடுத்தபடியாக, குழந்தைகளுக்கு சத்துணவு கொடுப்பது, இரண்டு இடங்களில் வைப்பதால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடாது. பல முக்கியமான பகுதிகளிலும் அதுபோன்ற இல்லங்கள் திறக்கப்பட வேண்டும். சத்துணவு இன்றி அநேகம் குழந்தைகள் இறந்துபோய் விடுகின்றன. எனவே இந்த இல்லங்கள் அமைக்கும் திட்டம் விஸ்தரிக்கப்பட வேண்டும். அதோடு ஊனமுற்றோருக்கு தகுந்த வேலைவாய்ப்புகள் தேடித்தர வேண்டும். அவர்களது இழிநிலை போக்கப்பட வேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU K. PERIASWAMY rose.

MR. DEPUTY SPEAKER : Let the hon. Member resume his seat...

THIRU K. PERIASWAMY : Am I not to speak, Sir........

MR. DEPUTY SPEAKER : You cannot.

திரு. எம்.எஸ்.கே. சத்தியேந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாடு அதிகமான கடற்கரைப் பகுதிகளைப் பெற்றிருக்கிற மாநிலம் என்பது அனைவரும் அறிந்ததே. கடலில் கிடைக்கக்கூடிய செல்வத்தை அதிகம் பெறக்கூடிய விதத்தில் டீப் ஸீ சர்வே போன்றவற்

றைச் செய்து கடலில் இருக்கிற செல்வங்கள் அனைத்தையும் நாம் பெற்ருக வேண்டும் என்ற கருத்துக்கு எந்தவிமான மாற்றுக்கருத்தும் நிச்சயமாக இருக்கமுடியாது. வறட்சியான இந்த நேரத்தில் கடற்கரைப் பக்கத்தில் இருப்பவர்கள் மீனை அதிகமாக உண்பதால் அவர்கள் வறட்சி நிலைமையை ஓரளவிற்கு சமாளிக்கிருர்கள் என்பதை மறந்துவிடுவதற்கில்லை.

கடற்கரை வளம் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக பாம்பன் பகுதியில் மின்சாரம் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று சொல்கிருர்கள். கடல் அலைகளில் இருந்து மேலை நாடுகளில் மின்சாரம் எடுப்பதாக அறிகிரேம்.

அதேபோல் அதிகமாக ஆழமான பகுதிகளில் இருந்து, பாம்பன் போன்ற பகுதிகளிலிருந்து மின்சாரம் எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக விஞ்ஞானிகள் சொல்கிருர்கள். அதை நாம் கருத்தில் கொண்டு மின்சாரம் எடுக்கக்கூடிய அளவில் கடலில் இருந்து பல செல்வங்களை நாம் பெற்ருக வேண்டும்.

அதிகப்படியான அன்னியச் செலவாணி பெற்று தருகிற காரியத்தை நம் மீனவ மக்கள் செய்துகொண்டிருக்கிருர்கள். அந்த மீனவர்களுக்கும் அரசு நன்றிக் கடன் செலுத்துவதுபோல் அவர்களுக்கு மீனவர்கள் இல்லங்கள் கட்டித் தருகின்ற திட்டத்தை நடப்பாண்டில் அறிவித்ததற்கு மீனவர்கள் சார்பாக இந்த அரசுக்கு நான் நன்றி செலுத்திக்கொள்கிறேன். மீனவர்கள் இல்லங்கள் கட்டுகிற நேரத்தில் ராமநாதபுரம் தீவுப் பகுதியில் இருக்கிற மீனவர்களை மனதில் வைத்துக்கொண்டு அவர்களுக்கும் இல்லங்கள் கட்டித்தருகிற காரியத்தைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று ஆயிரத்திற்கு மேற்பட்ட போட்கள் வழங்கப்படுகின்றன. அந்தப் படகுகளை வைத்து தொழில் புரிகிறவர்கள் உண்மையிலேயே இந்த சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள்தான் அதிகமா என்ருல் உண்மையில் அப்படியல்ல நிலைமை. அதிகப் பொருளாதார வசதிகள் படைத்தவர்கள் படகுகள் கொடுக்கப்படுகிற மீனவர்களிடம் சென்று அதிக விலைக்கு அந்தப் படகுகளை வாங்கி அவர்கள் அவர்களை வைத்தே தொழில் நடத்திக் கொண்டிருக்கிருர்கள்.

(நண்பகல் 12–00).

இதன் காரணமாக உண்மையான மீனவர்கள் பயன் பெற முடியாத ஒரு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அதுவும் கார்ப்பரேஷனுக ஏற்பட்டதற்குப் பிறகு திரு. வேதாசலம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல முன்பு இருந்ததை விட இன்று இரண்டு மடங்கு விலையேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக படகுகள் வாங்கப்படவில்லை. அதிகமான படகுகள் உற்பத்தியாகியும் மீனவர்கள் அவைகளை வாங்க தயக்கம் காட்டுகிருர்கள். மேலும் இதற்கான சப்சிடி நிறுத்தப்பட்டிருக்கிறது.





மேலும் மீனவர்களுக்கு நிரந்தரமான வேலை இல்லை. இதனுல் மீனவர்கள் மிகுந்த சோதனையான நேரத்தில் இருக்கிருர்கள்.

படகு கட்டுகிற நிலையத்தில் இருக்கிற படகுகளை வினியோகம் செய்வதற்கு மாற்று யோசனையை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். ஜப்பான் நாட்டில் மீனவர்களுக்கு அரசு படகுகளையெல்லாம் தானே சொந்த உடமையாக வைத்துக்கொண்டு வாடகைக்குக் கொடுக்கிற திட்டத்தை வைத்திருப்பதாக அறிகிறேன். அந்த அடிப்படையில் கடற்கரை ஓரங்களில் இருக்கிற மீனவர்களுக்கு அரசு இந்தப் படகுகளை வாடகைக்குக் கொடுத்து அவர்கள் பிடித்து வருகிற மீன்களையெல்லாம், விரால் போன்றவைகளை கார்ப்பரேஷன் மூலமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அந்நிய நாட்டிற்கு மீன்களை அனுப்புகிற உரிமையைத் தனியார்களுக்கு கொடுக்கக் கூடாது. இப்படி தடைப்படுத்தி, கார்ப்பரேஷன் மூலமாக வியாபாரம் செய்தால் மீனவர்களுக்கு நிரந்தரமாக வேலையும், விலையும் கிடைக்கும். ஏழை மீனவர்களுக்கு அவர்கள் அரும்பாடு பட்டு கடலில் பிடித்து வருகிற மீன்களுக்கு அதிக விலை கிடைக்கக் கூடிய வாய்ப்பு கிடைக்கும். இந்தத் திட்டத்தை அரசு பரிசீலனையில் எடுத்துக் கொள்ள வேண்டும். சங்கு குளிக்கிற தொழிலாளர்களுக்கு அவர்கள் பிரச்சனையை ஆராய்ந்து அந்தத் தொழிலாளர்களுக்கு உரிமை கிடைத்தது போல இந்த மீனவர்கள் பிரச்சனையில் மீனவர் சமுதாயம் பயன்படுகிற வகையில் இந்தத் திட்டத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

1964-ஆம் ஆண்டில் ராமேஸ்வரம் பகுதியில் ஏற்பட்ட புயலின் காரணமாக அந்தப் பகுதியில் இருக்கிற "கரை வலை" தொழிலாளர்களுக்கு அரசு 9 லட்ச ரூபாய் கடனுக வழங்கியது. இந்த "கரை வலை" தொழிலாளர்கள் இந்தத் தொழிலைச் சரியாகச் செய்ய முடியாமல் மின்சாரப் படகுகள் வந்ததன் காரணமாக அவர்களுடைய தொழில் பாதிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையில் அவர்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலைமையில் இருக்கிருர்கள். பல ஆண்டுகளாகவே தொடர்ந்து அவர்களுடைய இந்தக் கடனை வஜா செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் வைத்திருக்கிருர்கள். முதல் அமைச்சரவர்களும், மீனளத் துறை அமைச்சரவர்களும் இந்த நியாயமான கோரிக்கை மீது பரிவான முடிவை அறிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

கார்ப்பரேஷன் பணிகளை நாம் இன்னமும் நிச்சயமாக அதிகரிக்க வேண்டும். அதன் மூலமாக—கார்ப்பரேஷன் மூலமாக—ஏற்றுமதியைச் செய்தோம் என்ருல் அதிகமான அளவிற்கு நமக்கு அன்னியச் செலாவணி கிடைப்பதற்கு வழி கிடைக்கும்.

அதே போன்று இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வந்து படகுகள் அத்தனையும் இன்ஷ்யூர் செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிரேம். இப்படிக் கட்டாயப்படுத்துகிற நேரத்தில் மீனவர்களுக்கு திடீரென்று அவர்களுடைய படகுகள் எரிந்து விட்டதென்ருல் பணத்தைக் கொடுப்பதற்கு இன்ஷூரன்ஸ் கம்பெனிக்காரர்கள் தயக்கம் காட்டுகிருர்கள்.

உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எஸ்.டி.வி. 276 படகு மண்டபத்தில் இருக்கிற படகு கட்டுகிற நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது. இரவு நிறுத்தி வைக்கப்பட்ட படகு திடீரென்று எரிந்து படகு முழுவதும் சாம்பலாகிப் போய்விட்டது. இதற்குப் பிறகு இந்த இன்ஷூரன்ஸ் கம்பெனியிடம் பணம் கேட்டால், அவர்கள் பணத்தைக் கொடுக்க மறுக்கிறார்கள். அவர்கள் சொல்லுகிற காரணம், நீங்கள் ஏன் காவலுக்கு யாரையும் வைக்கவில்லையென்று கேட்கிறார்கள். படகு கட்டுகிற நிலையத்தில் அன்னியர் யாரும் உள்ளே செல்லக் கூடாது என்ற தடை இருக்கிறது. இப்படி உள்ளே அன்னியர் யாரும் செல்ல முடியாத காரணத்தினால் அரசாங்கப் பொறுப்பில் உள்ள அந்தப் படகு கட்டும் நிலையத்தின் பொறுப்பில் படகை விட்டுச் சென்றார்கள். இப்படி அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ள நிலையத்தில் விட்டுச் சென்ற படகு எரிந்துவிட்டது. இதற்குத் தரவேண்டிய பணத்தைக் கொடுக்க இன்ஷூரன்ஸ் கம்பெனிக்காரர்கள் காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு அரசாங்கம் ஏதாவது வகை செய்ய வேண்டும். அந்த ஏழை மீனவர் இரண்டு மாதங்கள் தான் அந்தப் படகை வைத்து தொழில் செய்திருக்கிறார். இரண்டு மாதங்களுக்குப் பிறகு அவர் படகு எரிந்து போயிருக்கிறது. அவருக்காக சட்டத்தைத் தளர்த்தியாவது வேறு ஒரு படகை வழங்க வழி இருக்கிறதாவென்று ஆய்வு செய்து வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மீனவர் துறையில் பணியாற்றுகிறவர்கள், குறிப்பாக தீவுப் பகுதியில் பணியாற்றுகிறவர்கள் நீண்ட நாட்களாக ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் தீவுப் படியை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இது நியாயமான கோரிக்கை. உடனடியாக கவனித்து, இந்தக் கோரிக்கைக்குச் செவி சாய்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன.

இராமநாதபுரம் பகுதியில் இருக்கிற மீனவர்களுக்காக அங்கிருக்கிற ஏ.டி. அலுவலகம் சிவகங்கையில் இருக்கிறது. அதிகமாக மீனவர்கள் உள்ள பகுதியில், இராமநாதபுரம் வட்டத்தில் அந்த அலுவலகத்தைக் கொண்டு வந்தாக வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு அமைச்சரவர்களிடம் அங்கு வருகை புரிந்த நேரத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களும் உரிய நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்து இருககிறார்கள். உடனடியாக இதைச் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அங்கேயிருக்கிற மீனவர்கள் பிடிக்கிற சங்குகளை, மற்ற கடலில் கிடைக்கிற பொருள்களையெல்லாம் கல்கத்தாவிற்கு அனுப்பி கல்கத்தாவில் இருக்கிற தொழிற்சாலை மூலமாக வளையல்கள், மற்ற பொருள்கள் செய்து தமிழ் நாட்டிற்கு வந்து விற்பனை செய்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றி அமைக்க வேண்டும். இங்கேயே சங்கு தொழிற்சாலையை ஏற்படுத்தியாகவேண்டும். கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் இந்த சங்கு தொழிற்சாலையை ஏற்படுத்தினால் தூத்துக்குடி, இராமேஸ்வரம் பகுதிகளில் இருப்பவர்கள் எல்லோருக்கும் நிச்சயமாக தொழில் கிடைக்கும் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.





மண்டபம் பகுதியில் இருக்கிற ஃபிஷ் மீல் பிளாண்டை தனியார்களுக்கு வாடகைக்கு விடுவதாக, இந்த மாதிரி யோசனை இருந்ததாகக் கேள்விப்படுகிறேன். இப்படித் தனியாருக்கு விடுவதைத் தடுத்தாக வேண்டும். இந்த ஃபிஷ் மீல் பிளாண்டில் அதிகக் கவனம் எடுத்து நாமே இதை நடத்த வேண்டும். மீன்களை அதிகமாகப் பிடிக்காத காரணத்தினால் இந்த மாதிரி யோசனை இருந்தால், மீன்களை அதிகமாகப் பெறுவதற்கு நிச்சயமாக இரண்டு படகுகளை அதிகப்படியான மீன்களைப் பிடிக்க கொடுக்க வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாம்பன், தங்கச்சிமடம் போன்ற இடங்களில் ஜெட்டிகளைக் கட்டித் தர வேண்டும், என்ற கோரிக்கை நீண்ட நாட்களாகவே இருந்து கொண்டு வருகிறது. அந்தக் கோரிக்கையையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மண்டபம் பகுதியில்...............

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, எந்த டிமாண்டைப்பற்றிப் பேசப்படுகிறதோ அந்த டிமாண்டுக்குரிய அமைச்சரவர்கள் இங்கே சபையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**MR. DEPUTY SPEAKER :** It is not imperative that the concerned Minister should be here and that is the general principle. When the Minister goes out, he goes out after instructing his colleague to take down notes so that he can give a proper reply. He has gone for consultation.

**THIRU K. M. SUBRAMANIAM :** As the Fisheries Demand is under discussion, may I know whether fish will be distributed as was done in the case of Demand relating to milk.............

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, இதே பிரச்சினை பல முறை எழுப்பப்பட்டுத் தீர்ப்பைச் சொல்லியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : தலைவரவர்களே, என்னிடத்தில் வெளியே போய் வருகிறேன் என்று சொல்லிவிட்டு உறுப்பினர்களின் பேச்சைக் குறிப்பெடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன் : தலைவரவர்களே, மண்டபம் பகுதியில் இருக்கிற ஃப்ரிசிங் யூனிட்டின் கபாசிடியை நாம் நிச்சயமாக அதிகமாக்கினால் அந்தப் பகுதியில் இருக்கிற மீனவர்களுக்கு இது பெரிய அளவில் பயன் தரக் கூடிய திட்டமாக இருக்கும். அதே போன்று நார்வே நாட்டைச் சேர்ந்தவர்கள் மண்டபம் பகுதிக்கு அதிகமான உதவியினைச் செய்திருக்கிறார்கள். அந்த உதவியைத் தொடர்ந்து பெறுவதற்கான திட்டத்தை நாம் செய்து தீரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த அரசுடன் தொடர்பு கொண்டு அதிகமான உதவி பெற்று மீனவர்களுக்கு அதிகமான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்

கொள்கிறேன். அதே போன்று "கரை வலை" தொழிலாளர்களுக்கும் இயந்திரப் படகு வைத்திருப்பவர்களுக்கும் இடையில் தகராறுகள் ஏற்படுகின்றன, அவைகளைத் தீர்ப்பதற்குப் பல திட்டங்களை அரசு வைத்திருக்கிறது. நிச்சயமாக................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுடைய நேரம் ஆகி விட்டது.

திரு. கே.ஏ. வகாப்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மீனளம், சமுதாய நலம் ஆகியவற்றில் என் கட்சிச் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல முனைகிறேன்.

உலகத்திலே அழகான கடற்கரையைப் பெற்றிருக்கின்ற நம் தமிழகத்தில் வளமான மீன் வளம்கடலில் இருக்கிறது என்பதில் நமக்குப் பெருமை இருக்கிறது. இப்படிப்பட்ட பெருமையை நாம் தெரிந்து கொண்டதைவிட எங்கோ இருக்கிற சீனுக்காரன் நல்ல முறையில் தெரிந்துகொண்டு இங்கே மீன் பிடிப்பதற்காக வரவேண்டிய அளவிலே நம்முடைய மீன் வளத்தைப்பற்றி . அவர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிற போது நம்முடைய மீன் வளத்தை நாமே சரியாகத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறோமே என்ற ஐயப்பாடு இருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, சீனுக்காரர்கள் மீன் பிடிக்க இங்கு வரவில்லை. ஆய்வு பார்க்க வந்தார்கள். ஆகவே உறுப்பினர் அவர்கள் மீன் பிடிக்க வந்தார்கள் என்று சொல்வது தவறு.

திரு பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, அவர்கள் சீனுக்காரர்களா அல்லது வேறு யார் என்று தெரியவில்லை.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, அவர்கள் சொன்ன காரணம் இது. நம்முடைய போலீஸ், மற்றும் இந்த நாட்டில் இருக்கிற உளவு ஸ்தாபனங்கள் கண்டுபிடிக்க வேண்டும். அவர்கள் மீன் பிடிக்க வந்தால் வளமான மீன் பிடிக்கக் கூடிய பகுதியாக இருக்கிறது என்பதற்காகச் சொன்னேன். ஆனால் அவர்கள் வேறு விஷயத்திற்காக வந்தார்கள் என்று சொல்லி, கடற்கரையில் இருக்கிற மீனவர்களுக்கு அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் மீன் பிடிக்க வரவில்லை, ஆள் பிடிக்க வந்தார்கள் என்று பரவலாகப் பேசிக் கொள்கிறார்கள். 'இதைப் பற்றிப் பேச வேண்டிய அவசியம் என்னவென்று கேட்டால் மீன் வளத்தைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு இதைக் கூறினேனேயொழிய வேறு அல்ல.

கடற்கரையில் மீனவர்கள் வாழ்கிற இடங்களைப்பற்றியெல்லாம் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். வசதியற்ற முறையில் அவைகள் இருக்கின்றன. பக்கிங்காம் கால்வாய் போகிற காரணத்தால் அது மெயின்லெண்டோடு தொடர்பு இல்லாத ஒரு தீவாக ஆகிவிட்ட காரணத்தால், இப்போது பெரிய குப்பத்தில் கலவரம் நடந்தபோது உடனடியாகத்





தொடர்பு கொள்ள முடியாத காரணத்தால் இதைச் சீர்படுத்தி வசதி செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரை கேட்டுக் கொள்கிறேன்.

.. அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிற திட்டம் வரவேற்கக் கூடிய திட்டம். உள்நாட்டிலேயே மீன் பிடிக்கிறவர்கள் வாழ்க்கை நிலை கேவலமாக இருக்கின்றது. கடற்கரையில் வாழ்கிறவர்களைவிட பின் தங்கியதாக இருக்கிறது. உள் நாட்டிலே இருக்கின்ற மீனவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் அதிகமாகக் கொடுப்பது இல்லை. மற்றத் தொழில்களுக்கு கொடுக் ற உதவியை இவர்களுக்குச் செய்ய வேண்டும். வந்தவாசியில் மீனவர்கள் சமுதாயம் இருக்கிறது. ஓய்வு நேரங்களில் நெசவுத் தொழில் நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு நெசவுக் கூட்டுறவுத் துறையிலிருந்து உதவி செய்ய வேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் செரல்லிக் கொள்கிறேன்.

மீன் உணவைப் பற்றி நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஏன் என்று கேட்டால் நாட்டில் உணவுப் பற்றாக்குறை இருக்கும்போது இது எவ்வளவு அவசியம் என்பது இதை உண்பவர்களுக்குத் தெரியும். எவ்வளவு ருசியான தன்மையில் உள்ள மீன்கள் இருக்கின்றன. எந்த விதத்தில் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பது பற்றி இங்கே சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஜப்பான் போன்ற நாடுகளில் அவர்களுடைய கடலில் மீன் வளர்க்கின்ற திட்டம் இருக்கிறது. நம் நாட்டிலே கூட அப்படி அமைத்து வளர்ப்பது, மீன் பண்ணை அமைப்பது, எங்கே அதிகமாக காணப்படுகிறதோ அங்கே ஒரு ஏரியாவைக் குறிப்பிட்டு மக்களை பாதிக்காத முறையில் அதற்கு உணவு போட்டு அதை வளர்க்கிற திட்டம் தீட்டினால் நன்றாக இருக்கும்.முள் இல்லாத மீன் வகைகள் ஊட்டி போன்ற பகுதிகளில் இருக்கின்றன. நம்முடைய ஏரிகளில் குறிப்பாக வீராணம் போன்ற பெரிய ஏரிகளில் மத்திய அரசாங்கத்தினுடைய உதவியுடன் விரிவாகத் திட்டம் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முன்பு இரால் வெளிநாட்டுக்கு சென்று கொண்டு இருந்தது. பல சிக்கல்கள் காரணமாக ஏற்றுமதி குறைந்து இருக்கிறது. வெளி நாட்டினர் போட்டி அதிகமாக இருக்கின்றது. நம் நாட்டிலே கேரளா கூட போட்டி போடுகிறது, ஜப்பான் போட்டி போடுகிறது. இதைச் சமாளிக்கிற முறையில், அந்நிய செலாவணி சம்பாதிக்கின்ற முறையில் இதை ஊக்குவித்து ஏற்றுமதியைக் கூடுதலாக்க வேண்டும்.

இதே போன்று தவளைக் காலுக்கு கிராக்கி வெளிநாட்டில் இருக்கிறது. தவளைக் கால் சூப்புப் பற்றி பிரமாதமாகச் சொல்கிறார்கள். ஜாக்குலைன் கென்னடி, எலிஸபெத் டெய்லர் இதை விரும்பிச் சாப்பிடுகிறார்கள் என்ற அளவுக்குத் தவளைக் கால் பிரமாதமாக வரவேற்கப்படுகிறது. இதன் ஏற்றுமதியை அதிகப்படுத்த வேண்டும்.

அனாதைகள் பொறுத்த வரையில் அவர்கள் ஆண்டவன் குழந்தைகள். அவர்களுக்கு இலவச உதவிகள் செய்வதில் நம்முடைய ஆட்சி முன் நிற்கிறது என்பதில் எந்த விதச் சந்தேகமும் இல்லை. அனாதை விடுதி நடத்தி வருகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் பாளையங்கோட்டையில் ஒன்று நடக்கிறது. அவர்கள் அரசாங்கத்துடைய உதவி பெற்று நடத்தவில்லை. அரசாங்கம் சில கண்டிஷன்கள் போடுகிற காரணத்தால் அதை அவர்கள் நடத்த முடியாத காரணத்தால் அவர்கள் ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் இருக்கிறார்கள். அப்படிபட்டவர்கள் கட்டடங்கள் கட்டுவதற்கு மானியங்கள் அல்லது வேறு உதவி தொகைகள் அளிக்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அப்படி நடத்தப்படுகிற விடுதியிலிருந்து வெளியே வருகின்ற இந்த மாணவர்களுக்கோ, மாணவியர்களுக்கோ அரசாங்கம் வேலை வாய்ப்புத் தர முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் இன்றைய தினம் தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்கு நல்வாழ்வு இல்லம் அமைத்து இருக்கிறார்கள். இருந்தாலும் கூட, தெருக்களிலே கோவில்களிலே அல்லது பெரிய தர்கா பக்கங்களில் பிச்சைக்காரர்கள் இருந்து கொண்டு இருக்கிறார்கள். இந்த பிச்சைக்காரர்கள் இந்த இல்லங்களில் நல்வாழ்வு இருந்தும் துன்ப வாழ்க்கை இருப்பதாக நினைத்துக்கொண்டு பிச்சை எடுக்கிற சூழ்நிலை இருக்கிறது. இவர்களை கட்டாயப்படுத்தி அந்த இல்லங்களுக்குச் செல்ல வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசாங்க சார்பில் நடத்தப்பட்டு வருகின்ற ஒரு தொழிற்சாலை எண்ணூரில் நீண்டகாலமாக மூடிக்கிடக்கிறது. இதை உடனடியாக துவங்க வேண்டும். அல்லது யாருக்காவது குத்தகைக்கு விட்டு அவர்கள் நடத்த ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

இன்று விதவைப் பெண்கள், அனாதைப் பெண்களுக்கு உதவி செய்கிற தீவிரத் திட்டத்தை முதலமைச்சர் தன்னுடைய பிறந்த நாள் விழாவில் அறிவிப்பார்கள் என்று நினைக்கிறேன். அப்படிப்பட்ட திட்டம் இந்த சமுதாயத்திற்குத் தேவை. இந்தத் திட்டத்தை அரசு பணிவன்போடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு மீனவ அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மான்ய கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

தமிழகக் கடற்கரை ஆயிரம் கிலோ மீட்டருக்கு அதிகமாக இருக்கின்றது. அந்தக் கடற்கரையிலே செல்வங்கள் அபரிமிதமாக கிடைக்கின்றன. 150 கிராமங்களில் 3 லட்சம் பேருக்கு மேல் வேலைவாய்ப்பு இருக்கின்றது.





இந்தக் கடற்கரையில் உள்ள மக்கள் நவீன முறையை கையாண்டு மீன் பிடித்து குறைந்த விலையில் பொது மக்களுக்குக் கொடுப்பதற்கும், இவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கவும், இறால் போன்ற நல்ல ரகங்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து அதன் மூலமாக அந்நியச் செலாவணி ஈட்டுவதற்கும் ஆன பெரும் பணியினை நாம் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம்.

குறிப்பாக, படகு கட்டுதல்பற்றி எடுத்துக் கொண்டால் 1200 இயந்திரப் படகுகளுக்கு மேல் கொடுத்து இருக்கிறோம். ஆனால் இன்றைக்கு 90 சத விகிதம் இந்த படகுகளைத் தங்கள் கையில் வைத்துக் கொள்ளவில்லை. 3, 4, பேர் உள்ள குழுவுக்கு அரசு இயந்திரப் படகுகளை வழங்கி இருக்கின்றது. என்ன காரணமோ தெரியவில்லை. எந்த நபர்களுக்குப் படகு கொடுத்தோமோ அவர்கள் கையில் இல்லை. அரசு இதில் அதிகமாகக் கவனம் செலுத்தி என்ன காரணத்திற்காக மீனவர்கள் இந்தப் படகுகளை மற்றவர்களுக்கு விற்று விடுகிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்.

படகுகளை 3 பேருக்கு நாம் அல்லாட் செய்தால் அந்த இடத்திலேயே 30 ஆயிரம், 40 ஆயிரம் என்று அவர்களுக்குக் கொடுத்து விட்டு படகுகளைத் தனியார் எடுத்துச் சென்று விடுகிறார்கள். இதைத் தடுத்து நிறுத்தி ஆக வேண்டும். இந்தப் படகுகளைக் கட்டுவதற்கு இன்று அதிகச் செலவாகிறது. 54 ஆயிரம் ரூபாயில் படகு முன்பு கட்ட முடிந்தது. இன்றைக்கு ரூ. 1,20,000 க்கு மேல் கட்டுவதற்குச் செலவாகிறது. இவ்வளவு செலவு செய்தும் மீனவர்களுக்குக் கிடைக்கவில்லை. கிடைத்தாலும் இந்தப் படகு மீனவ சமுதாயத்திற்குப் பயன்படவில்லை என்பதைச் சற்று சிந்தித்துப் பார்த்து அதற்கான ஒரு மாற்று வசதி செய்து ஆக வேண்டும்.

இதிலே ஒரு சிறிய யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். நாட்டுப் படகுகள் இன்றைக்கு அதிகமாகத் தமிழ்நாட்டில் இருக்கின்றன. இந்த நாட்டுப் படகுகளுக்கு இயந்திரங்கள் பொருத்தி மாற்றி ஆக வேண்டும். அப்படி மாற்றினால் நாட்டுப் படகுக்காரர்களுக்கும் இயந்திரப் படகுக்காரர்களுக்கும் இருக்கின்ற தகராறு ஓரளவு குறையும். ஆறு மாதத்திற்கு முன்னால் தூத்துக்குடியில் ஒரு நாட்டுப் படகிலே இயந்திரம் வைத்து வெள்ளோட்டம் நடத்தினார்கள். அதற்கு நானும் திரு. எட்மண்டும் சென்று இருந்தோம். இதன் விலை ரூ. 3,000. அதிலே 10 ஆயிரம் மதிப்புள்ள இயந்திரம் பொருத்தினால் போதும். 13 ஆயிரம் செலவிலே மீனவர்களுக்கு நல்ல இயந்திரப் படகைக் கொடுக்கலாம் என்ற கருத்தை மீனவர்கள் பலர் ஆதரிக்கிறார்கள்.

நான் பல மீனவர்களைச் சந்தித்து, இப்படி 13,000 ரூபாய் செலவில் இந்தப் படகை வைத்தால் பயனுள்ளதாக இருக்குமா என்று கேட்டேன். அவர்கள் பயனுள்ளதாக இருக்கும். அப்படிச் செய்தால் தனிப்பட்ட மீனவர்கள் சிறு தொகையில் படகு வைத்துக் கொள்ள வசதியாக இருக்கும்; 1,50,000 ரூபாயில் விசைப்படகு வைப்பதை விட, இந்த வகைப் படகுகளுக்கு அதிகமாகத் தொகை ஒதுக்கினால் மீனவர்கள் வரவேற்பார்கள்

[திரு. இரா. இராமலிங்கம்] [1975 ஏப்ரல் 9

என்று சொன்னார்கள். ஆகையால் மீனவர்கள் 3,000 ரூபாய் அளவில் நாட்டுப் படகுகள் வைத்திருக்கிறார்கள்; அதில் 10,000 ரூபாய் செலவில் இயந்திரங்கள் வாங்கிப் பொருத்துவதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மீனவர்களுக்கு தூத்துக்குடியில் ஒரு பயிற்சி நிலையம் இருக்கிறது. நூற்றுக்கணக்கில் மாணவர்கள் பயிற்சி பெற்று வெளி வந்து கொண்டிருக்கிறார்கள். அங்கு கடந்த ஆண்டு தேர்ச்சி நடக்கும் போது சில ஒழுங்கீனங்கள் கையாளப்பட்டன. தேர்வு செய்வதில் இந்த இலாகாவினர் நல்ல முறையில் நடந்துகொண்டாலும் வெளியே இருந்து வந்து அந்த கமிட்டியில் இடம் பெற்றவர்கள் தவறு செய்கிறார்கள். அந்தமாதிரியான தவறுகள் மேலும் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தூத்துக்குடியில் முக்கியமான தொழில் முத்துக் குளிப்பு. 1961-ம் ஆண்டு முத்துக்குளிப்பு நடைபெற்றது. அதற்குப் பின்னால் கடந்த 14 ஆண்டுகளாக முத்துக்குளிப்பு நடைபெறவில்லை. இரண்டு ஆண்டு களுக்கு முன்னால் இந்த மன்றத்தில் அடுத்தாண்டு எப்படியும் முத்துக் குளிப்பு நடக்கும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் இதுவரையில் இல்லை. அதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிய வேண்டும்.

முத்துச் சிப்பிகள் கடலில் வளர வழி இல்லை என்று இன்றைக்குக் கண்டறிந்து கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களைச் சந்தித்துக் கேட்ட போது முத்துப் சிப்பிகள் மூன்று ஆண்டுகளில் பூர்த்தியடைந்துவிடும். மூன்று ஆண்டுகளில் முத்து கொடுக்கக் கூடிய அளவுக்குப் பூரண வளர்ச்சி அடைந்துவிடும்; ஆனால் முத்துச் சிப்பிகளை திருக்கை என்ற ஒரு வகை மீன் விழுங்கிவிடுவதால் முத்துச் சிப்பிகள் வளரவில்லை என்று சொன்னார்கள்.

தமிழ்நாட்டில் முத்துக் குளிப்புத் தொழில் பன்னெடுங் காலமாக இருந்து வந்திருக்கிறது. "பாண்டி நாடு முத்துடைத்து" என்று சொல்வார்கள். தமிழ்நாட்டு முத்துக்கள் உரோமாபுரி நாட்டுப் பெண்கள் கழுத்தை அலங்கரித்தன என்று சரித்திரம் கூறுகிறது. ஆகவே, இந்தத் தொழில் வளர்வதற்கு ஜப்பான் போன்ற நாடுகளில் முத்துச் சிப்பிகளைச் செயற்கை முறையில் வளர்க்க என்ன ஏற்பாடுகளைச் செய் கிறார்களோ அதேபோல நம்முடைய தமிழ்நாட்டிலும் செய்ய வேண்டும். இப்போது அப்படிச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இதிலே துரிதமான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தூத்துக்குடியில் இன்னொரு முக்கியமான தொழிலும் நடை பெறுகிறது. அதுதான் சங்கு குளிப்புத் தொழில். அதில் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கு குளிப்பவர்கள் அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம்



1975 ஏப்ரல் 9] [திரு. இரா. இராமலிங்கம்]

கேட்டால் சங்கு குளிப்பால் முத்துச் சிப்பிகள் இருக்கிற இடங்கள் பாதிக்கப்படும்; ஆகவே கண்காணிப்பு வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட அந்தத் தொழிலாளர்களுக்கு, அரசின் கண்காணிப்பில் இருக்கிற அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கிற கூலி மிகவும் குறைவாக இருக்கிறது. 2¼ இஞ்ச் முதல் 3 இஞ்ச் வரையில் உள்ள சங்குக்கு ரூ. 1.25 தான் விலை கொடுக்கிறார்கள். ஆனால் மற்ற மாவட்டங் களில் இதே அளவுள்ள சங்குக்கு ரூ. 2.50 கொடுக்கிறார்கள்.

நெல்லை மாவட்டத்தில் சங்கு குளிப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்கள் அரசின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவர்கள்; நியாயமான விலையும் பெற முடியாமல் இருக்கிறார்கள். ஆகையால் அவர்களுடைய சங்குக்கு நியாய விலை கொடுக்க வேண்டும். இந்தத் துறையிலுள்ள அதிகாரிகள் அதைப்பற்றி விசாரித்து, அரசுக்குச் சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இப்போது சீசன் முடியும் நிலையில் இருக்கிறது. உடனடியாக அந்தத் தொழிலாளர்களுக்கு இந்த சீசன் பூராவுக்கும் எடுத்த சங்குகளுக்கு ரூ. 1.25 என்பதை மாற்றி, அதிக விலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இன்றைக்கு சங்கு குளிப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். 50 அடி, 60 அடி ஆழத்தில் போய் சங்குகளை எடுக்க வேண்டியிருக்கிறது. காலிலே கல்லைக் கட்டிக்கொண்டு மேலே இருந்து கீழே இறங்குகிறார்கள். கீழே போய்ச் சேர ஒரு நிமிடம் ஆகும். ஒரு நிமிடம் அல்லது ஒன்றரை நிமிடத்திற்குள் சங்குகளைத் தேடி எடுக்கிறார்கள். பின் அரை அல்லது ஒரு நிமிடத்தில் மேலே வந்துவிடுகிறார்கள். இத் தொழிலில் மூச்சுத் திணறி சாகக்கூடிய நிலைமை கூட ஏற்படுகிறது. 2, 3 நிமிடங்களுக்குள் எந்தவிதமான நவீன கருவிகளும் இல்லாமல் சங்கு குளித்து வருகிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு நியாயமான கூலி கிடைக்கின்ற வகையில் சங்குகளுக்கு விலை கொடுக்க வேண்டும். அதோடு, இந்த அபாயத்திலிருந்து அவர் களைக் காப்பாற்றுவதற்கு நவீனக் கருவிகளையும் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இரண்டு தொழிலாளர்கள் சங்கு குளிக்கும்போது இறந்துவிட்டார்கள். அவர்களுக்கு இன்னும் காம்பன் சேஷன் கொடுக்கவில்லை. காம்பன்சேஷன் வேண்டுமென்று அரசுக்கு விண்ணப்பித்தால் கோர்ட்டுக்குச் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படிக் கோர்ட்டுக்குப் போகாமல், தொழில் அதிபர்களுடன் பேசி, எவ்வளவு அதிகத் தொகை கொடுக்க முடியுமோ அதைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இறந்து போனவர்களுக்கு 8,000 ரூபாய் காம்பன்சேஷன் தரவேண்டுமென்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். 2, 3 ஆண்டுகளாக அவர்களுக்கு ஒன்றும் கொடுக்காமல் கோர்ட் வரை சென்று, இப்போது தீர்ப்பாகி இருக்கிறது.

மீனவர்கள் எல்லாம் சமுதாயத்தில் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்தால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள்

அவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. கிறிஸ்தவர்கள் என்ற காரணத்தால் அவர்களுடைய உரிமை மறுக்கப்படுகிறது. சமுதாயத்தில் மிகவும் தாழ்ந்த நிலையில் இருப்பதால் அவர்களைக் குறைந்த பட்சம் "மோஸ்ட் பாக்வெர்டு" பிரிவிலாவது சேர்த்து, படிப்பு வசதியும் வேலை வாய்ப்பும் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, இந்த சமூக நலத் திட்டத்திலே என்னுடைய கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சமூக நலத் திட்டத்திலே இன்றைக்குப் பெண்கள் சீர்திருத்தப் பள்ளி என்று வேலூரிலே ஒரு தையல் நிலையம் இருக்கிறது. அந்த தையல் நிலையத்தில் இன்றைக்கு 20 அல்லது 30 இடங்கள்தான் உண்டு. அந்த இடங்களில் அதிகாரிகள் பல இடங்களை நிரப்பி விடுகிறார்கள். மற்ற இடங்களுக்கு விண்ணப்பங்கள் நூற்றுக் கணக்கில் வருகின்றன. அந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதற்கு ஒரு கமிட்டி போட்டு, அந்தக் கமிட்டி நேர்முகத் தேர்வு நடத்துகிறார்கள். அந்தத் தேர்வில் அவர்களுக்கு இஷ்டமானவர்களை எடுத்துக்கொள்கிறார்கள். மற்ற விண்ணப்பதாரர்களுக்கு அங்கு இடமில்லை. அப்படி இடம் கிடைக்காமல் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அந்த முறையை மாற்றி, 100, 200 இடங்களை ஏற்படுத்தி, வருகின்ற எல்லோருக்கும் தையல் பயிற்சி கொடுத்து, அவர்கள் தானே தைத்து, தொழில் செய்து வாழ்க்கை நடத்த அரசாங்கம் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த உடல் ஊனமுற்றோருக்கு ஒருசில உதவிகள் செய்யப்படுகின்றன. அதாவது, உடல் ஊனமுற்றோருக்கு விண்ணப்பம் கொடுக்கப்படுகிறது, அந்த விண்ணப்பத்தில் என்ன இருக்கிறது என்றால், பரீட்சையில் தேறும் வரையில்தான் உடல் ஊனமுற்றோருக்கு உதவுவோம்; தொழில் பரீட்சையில் தேர்ந்த பிறகு வேலையை அவர்களாகவே தேடிக்கொள்ள வேண்டும் என்று அந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி இல்லாமல் பரீட்சையில் தேறிய உடன், அரசாங்கமே உடல் ஊனமுற்றோருக்கு வேலை கொடுக்க வேண்டும். அவர்களே வேலை தேடிக் கொள்ள வேண்டுமென்றால், இன்றைக்குப் பட்டப் படிப்பு பெற்றவர்களே வேலை இல்லாமல் கஷ்டப்படும் போது உடல் ஊனமுற்றவர்கள் எப்படி வேலை தேடமுடியும்? ஆகையால் உடல் ஊனமுற்றோருக்குத் தொழில் பயிற்சி முடிந்தவுடன் அரசாங்கமே வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்குச் சாதாரண ஏழைக் குடும்பத்தில் உள்ள தாய்மார்கள் குழந்தைகளை வளர்க்க முடியாமல், ரொம்ப கீழ்த்தரத்தில் உள்ளவர்கள் தங்கள் குழந்தைகளைத் வளர்க்க முடியாமல் பால் மணம் மாறாத பச்சிளம் குழந்தைகளைத் தெருவிலே போட்டுவிட்டுப் போகிறார்கள். மாவட்ட வாரியாகக் குழந்தைகளைக் காப்பாற்றும் இல்லங்களை ஏற்படுத்தி,





அந்த மாதிரியான குழந்தைகளை எடுத்து வளர்கக அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் குழந்தைகளைத் தெருவிலே போடும் நிலைமை ஏற்படாது. ஆகவே, குழந்தைகள் இல்லங்கள் ஏற்படுத்தி, குழந்தைகளை வளர்க்கும் பணியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12–30)

அதோடு இன்றைக்கு ஒரு யூனியனுக்கு ஒரு தொழிற் பயிற்சிப் பள்ளி என்று இருக்கிறது. ஒரு தையல் ஆசிரியரைப் போட்டு ஒரு யூனியனில் உள்ள 10 கிராமங்களில் உள்ளவர்களுக்குச் சொல்லித் தரச் சொல்கிறபோது, மெஷின் ரிப்பேர் என்றால் பத்து நாட்கள் பயிற்சி இல்லாமல் போகிறது. ஆசிரியர்களையும், மெஷின்களையும் அதிகப்படுத்த வேண்டும். மேலும் குடும்ப வேலையைக் கூடக் கவனிக்காது இருபத்து நான்கு மணி நேரமும் சொல்லித் தருவதிலேயே செலவிடுகிற ஆசிரியர்களுக்கு 200 ரூபாய் சம்பளம் என்பது மிகக் குறைவு. சம்பளத்தையும் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் கட்சியைச் சேர்ந்த சிங்காரவேலு செட்டியார் என்பவர் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான். சிங்கார வேலுச் செட்டியாரை சிங்கம் என்று சொல்வார்கள். அவரது சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் கடலோரங்களில் வீடுகள் இல்லாது குடிசைகளில் தவிக்கிறார்கள். அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரவேண்டும். அவர்களுக்கு நல்வாழ்வளிக்க இந்த அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் சமுதாய முன்னேற்றத் திட்டங்கள் என்று இருக்கின்றன. இன்றைக்குள்ள நிலையில் இதனால் எந்தவிதமான நன்மையோ, பிரயோசனமோ ஆண்களுக்கும் சரி-பெண்களுக்கும் சரி ஏற்படவில்லை. யூனியன் பூராவுக்கும் இந்தப் பணிகளுக்கு ஒருவர்தான் இருக்கிறார். இதனால் நன்மை வரவேண்டுமென்றால் அவர்களை அதிகப்படுத்தி நல்ல ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தால் நல்லது என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, யூத்கோடைரப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். 30 வயதுக்குள் இருக்கிறவர்களை எடுத்து அவர்களுக்குப் பயிற்சி அளித்து—பயிற்சிக் காலத்திற்குப் பிறகு அவர்கள் ஊரக விரிவுப் பணிகள் செய்யும் போது, 175 ரூபாய் உதவித் தொகை என்று அரசு கொடுத்து வருகிறார்கள். 1971லேயே ஆரம்பிக்கப்பட்ட ஸ்கீம் இது. இதிலே எத்தனை பேர் பயிற்சி பெற்றார்கள்? பிறகு அவர்களிலே எத்தனை பேர்களுக்கு வேலை அரசாங்கத்தில் கொடுக்கப்படுகிறது? இந்த விவரம் ஒன்றும் இங்கே கொடுக்கப்படவில்லை. அரசாங்கப் பணிக்கு ஏஜ் லிமிட் வேறு வந்துவிடும். இதில் பங்கு பெறுகிறவர்களுக்கு அரசாங்கப் பணிக்கு வேலைவாய்ப்புக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்

பட்டிருக்கிறதே தவிர வேலை கொடுத்திருக்கிருர்களா? இந்தப் பயிற்சித் திட்டமே பிரயோசனமே இல்லை. அவர்களுக்கு எந்த விதமான சலுகையும் கொடுக்கவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

சமூக நலத் திட்டத்தின் அடிப்படையில் குழந்தைகளுக்குச் சத்துணவு கொடுப்பதுபற்றி இங்கே சொல்லப்படுகிறது. 3 ரொட்டி துண்டுகளைக் கொடுப்பது—அதிலே இவ்வளவு 225 கலோரி சத்துக் கிடைக்கிறது என்றெல்லாம் சொல்வது அழகாக இருக்கிறது. நடைமுறையில் ஒரு குழந்தைக்கு ஒரு ரொட்டித் துண்டு கூடக் கிடைப்பதில்லை. இந்தத் திட்டம் ஒழுங்காக நடைபெறவில்லை என்பதைத்தான் நான் கூற விரும்புகிறேன். இது ஒழுங்காக நடைபெற அரசு தக்க முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மற்றும் பால சேவிகாஸ்—30 ரூபாய் சம்பளம்—20 ரூபாய் குழந்தைகளுக்கு உணவு வழங்க என்று பிரித்துப்போட்டிருக்கிருர்கள். என்ன காரணம் என்று புரியவில்லை. சமையல் கூடங்களில் கன்வீனருக்கு 7 ரூபாய், சில்லரை வேலைக்கு 8 ரூபாய் ஆயாவுக்கு 6 ரூபாய்—ஆயாவுக்கு மாதம் 6 ரூபாய் என்றுல் இது எப்படி நியாயமாய் இருக்கும்? இன்றைக்கு இருக்கக்கூடிய விலைவாசி என்ன? படி அரிசி 6 அல்லது 7 ரூபாய். இதை எல்லாம் ஆராய்ந்து நியாயமான முறையிலே கொடுத்தால்—இந்தத் திட்டம் நல்ல முறையில் செயல்பட வழி இருக்கும். இதை ஆராய்ந்து மறுபரிசீலனை செய்து தக்க முறையில்—ஆயாவுக்கு ரூபாய் 6 என்பதை உயர்த்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஆர்பனேஜூக்குக் கொடுக்கிற தொகை குறைவாக இருக்கிறது. ஔவை ஹோம் நன்ருக நடக்கிறது. நீங்கள் அட்ஹாக்காக 25 ரூபாய் ஒவ்வொரு குழந்தைக்கும் என்று கொடுங்கள். இப்போது கொடுக்கும் தொகையை **Ad hoc basis**-இல் கொடுக்கவும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை.)

அப்ரூவ்டு ஸ்கூல்ஸ் அதற்கு டைரெக்டரைப் போட்டிருக்கிருேமே தவிர இன்னும் நிரந்தரமாக்கப்படவில்லை. இதை வருத்தத்தோடு சொல்கிறேன். உத்தியோகஸ்தர்களைப் போட்டால் அவர்களை அங்கே நிரந்தரமாக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சமூக நலத் திட்டத்தின் சார்பாக சபைமுன் கோரியிருக்கின்ற மானியத் தொகையை பார்வேட் பிளாக் கட்சியின் சார்பில் வரவேற்று—காந்தியடிகள்—ரஸ்கின் போன்ற நல்ல பல அறிஞர்களின் கருத்துக்கேற்ப சமுதாயத்தின் கடைநிலையில்—சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட—தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக இத் துறை பணியாற்றி வருவதைப் பாராட்டுகிறேன். இது இன்னும் பல பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும்—இந்த நன்மைகள் கிடைக்காத பகுதிகளுக்கும் கிடைக்க வேண்டும் என்பதைத்



தான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தத் திட்டங்களுக்கு டாக்டர் கலைஞரிடத்தில் கேட்டு, இன்னும் அதிகத் தொகை பெற்ருலும் கூட நல்லது என்பது என் கருத்து. மனிதாபிமான கருத்தோட்டத்திலே செயல்படுகிற துறை இது.

பெண்கள்—உடல் ஊனமுற்ருேர்—ஆகியவர்களுக்கு எல்லாம் உதவி செய்கிற பணிகள் இருக்கின்றன. குறிப்பாக தையல் நிலையங்களைத்தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாயப் பெண்களுக்காக அங்கங்கே அமைக்கிருேம். டி நோட்டிபைட் ட்ரைப்ஸ் பெண்களுக்காக உசிலம்பட்டியில் கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதை ப்ரொடெக்ஷன் கம் ட்ரெயினிங் சென்டர் என்று விருத்தி செய்ய வேண்டும். இதற்காக ஒரு விடுதியையும் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கு பயிற்சி அளிக்கிற ஆசிரியர்களுக்குக் குறைந்த சம்பளத்தை அளிக்கிருர்கள். அந்தச் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அது மிகக் குறைந்த சம்பளம். உழைப்புக்குகந்த ஊதியத்தை நாம் கொடுத்தால்தான் உரிய உழைப்பு நமக்குக் கிடைக்குமென்ற நிலையில் சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், சோஷியல் வெல்ஃபேர் என்று பார்க்கிற நேரத்தில் கள்ளர் ரெக்ளமெஷன் டீச்சர்ஸைப் பொறுத்தவரையிலே 1/2 மில்லியன் ஜாப் திட்டத்தின்கீழ் 123 பேரைப் போட்டு 6 மாதத்திற்கு மேலாகிறது. சோஷியல் வெல்ஃபேர் செயலாளரிடம் நான் பலமுறை ரெப்ரசன்டேஷன் செய்திருக்கிறேன். மதுரையில் 24 ஆசிரியர்களுக்கு 6 மாதமாகச் சம்பளம் வரவில்லையென்றும் மற்றவர்களுக்கு சனவரி மாதத்திலிருந்து சம்பளம் வரவில்லையென்றும் குறிப்பிட்டோம். அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உசிலம்பட்டிப் பகுதியில் டி.பி. போன்றவைகள் பற்றி இன்வெஸ்டிகேட் செய்ததிலே, அது அதிகமாகப் பரவியிருப்பதாக மெடிக்கல் ரிப்போர்ட் கூறுகிறது. ஆகவே, பிரோகிராம்படி, நியூட்ரிஷன் சப்ளை செய்யவும், அந்த ஸ்கீமை விஸ்தரிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதன் ஏரியாவையும் விஸ்தரிக்க வேண்டும்.

இன்னும் பிற்பட்டவர்களுக்கு டைப்ரைட்டிங், ஷார்ட்ஹாண்ட் போன்றவற்றைக் கற்றுத்தர, ஒரு சென்டரை ஆரம்பிக்க வேண்டும், **for less educated and unemployed-girls**— அதன் மூலம் அவர்களுக்கு வேலை கொடுக்க முடியும். அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இதைப் பாராட்டி அமர்கிறேன்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, மீனள மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, மீனவ மக்களுக்குப் பல நன்மைகள் செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு இந்த மீனள மானியம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனுல், மீனவ வாரியத்தால் பலன் கிடைக்கவில்லை

[திரு. தொ. ப. சீனிவாசன்] [1975 ஏப்ரல் 9

யென்ற ஒரு எண்ணத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் படகு வாங்கும்போது, தனியாரிடம் இருக்கும் விலையைவிட, இந்த வாரியத்திடம் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அரசிடம் படகு வாங்குபவர்கள் குறைந்துவிட்டார்கள். மேலும், படகு வாங்க அளித்து வந்த மானியத்தையும் நிறுத்திவிட்டார்கள். மற்ற எல்லா மாநிலங்களிலும் மீனவர்களுக்குப் படகு வாங்க மானியம் கொடுக்கிறார்கள். அதை ஏனோ கடந்த ஆண்டிலிருந்து நம்முடைய மாநிலத்தில் நிறுத்தி விட்டார்கள். அது மீனவர்களுக்குப் பெரிய குறையாக இருக்கிறது. ஆகவே, படகு வாங்க அளிக்கும் மானியத்தை மீண்டும் அளிக்க மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எந்த மாநிலத்திலும் இல்லாத ஒன்றை, மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய சிறப்பான அம்சத்தை இந்த மாநிலத்திலே நமது முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக மீனவ மக்கள் எல்லோரும் மிகவும் பாராட்டுகிறார்கள்.

உள்நாட்டிலே, மீனவர்கள் பல சங்கடங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் வீடு கட்டும் திட்டத்திலே வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது தமிழ்நாடெங்கும் பெரிய வறட்சி இருக்கிறது. வறட்சியான நேரத்திலே தண்ணீரில்லாமல் உள்நாட்டு மீன் பிடிப்புகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. உள்நாட்டிலே மீன் பிடிப்பவர்கள், மீன் பிடிக்க வாய்ப்பில்லாமலிருக்கிறது. ஆகவே, உள்நாட்டு மீனவர்களுக்குக் கடனாகவோ, சிறுதொகையை மானியமாகவோ அளித்தால், ஓரளவு வாழ்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொரு குறைபாட்டையும் சொல்ல ஆசைப்படுகிறேன். 1972-ம் ஆண்டிலிருந்து ஏரிகளை குத்தகைக்கு விடும்போது மீனவர்கள் சங்கங்களுக்கு 10 சதவிகிதம் குத்தகைக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், செயல்முறையிலே எந்த மாவட்ட ஆட்சித் தலைவரும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்தச் சலுகையை அளிப்பதில்லை. இதை மன்றத்தின் மூலமாகக் கோடிட்டுக் காட்டி, அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

சமுதாய நலத் திட்டம்பற்றி சொல்லும்போது, எங்களுடைய வடஆற்காடு மாவட்டத்திலே, மல்லவாடியிலே பிச்சைக்காரர் மறு வாழ்வு இல்லத்தை நடத்துகிறார்கள். அதை அங்கிருக்கிற மக்கள் காட்சிப் பொருளாக வந்து பார்த்துவிட்டுப் செல்கிறார்கள். முதலமைச்சர் திட்டத்தைப் பேப்பரிலே பார்க்கிறார்களே தவிர, அங்கே நேரடியாகச் சென்று பார்க்கும் [illegible] கலைஞர் அவர்களை மனமாரப் பாராட்டுகிறார்கள். அங்கேயிருக்கின்ற [illegible]ராட்சி ஒன்றியத் தலைவர்களும், பேரூராட்சித் தலைவர்களும் சேர்ந்து குடியரசு தினம், தீபாவளி, பொங்கல் தினங்களில் சிறந்த உணவை அவர்களுக்கு நாங்கள் அளிக்கிறோம், அதற்கான செலவை



1975 ஏப்ரல் 9] [திரு. தொ.ப. சீனிவாசன்]

நாங்களே ஏற்றுக் கொள்கிறோம், அவர்களுக்கு வடை, பாயசத்தோடு சாப்பாடு அளிக்கும்போது, அதை அவர்கள் மிகவும் மகிழ்ச்சியோடு வரவேற்கிறார்கள், ஆகவே, அதனை அரசாங்கமே அளித்தால் மிகவும் உபயோகமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொரு சிறப்பான திட்டம் போளூரிலே இருந்தது. அங்கேயிருக்கின்ற ஜவ்வாது மலைப்பகுதியிலே மூங்கில் வளர்ந்து வருகிறது. வாழ்விழந்த தாய்மார்களுக்கு மூங்கில் கூடை தயாரிக்கக் கற்றுக் கொடுக்க ஒரு பயிற்சிக் கூடம் இருந்தது. அதை ஏனோ தெரியவில்லை, திடீரென்று மூடிவிட்டார்கள். அதனால், அந்தத் தாய்மார்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அங்கே இன்ஸ்ட்ரக்டராக இருந்தவருடைய நிலைமை வெகு மோசமாக இருக்கிறது. அவர் தூத்துக்குடியிலே தங்கியிருக்கின்ற நிலைமை இருக்கிறது. அவருடைய மனைவி, குழந்தைகள் அத்தனை பேரும் இறந்து விட்டார்கள். மற்றொருவர் மனக் கோளாறு காரணமாக வேலைக்குச் செல்லாமல் இருந்துவிட்டார். இந்தக் குறைபாடுகளைப் பற்றி, சமுதாய நல இயக்குநர் அவர்களைச் சந்தித்துச் சொல்லச் சென்றேன். அந்த இயக்குநர் அவர்கள் ஒரு சட்டமன்ற உறுப்பினரை நடத்திய விதத்தை இங்கே சொல்லாமலிருக்க முடியாது. அமைச்சரிடம் சொல்வதற்கு முன்பாக, இயக்குநரிடம் சொல்ல வேண்டுமென்று சென்றிருந்தேன். நான் சீட்டுக் கொடுத்தும், அந்தச் சீட்டை வாங்கிக் கொண்ட இயக்குநர் அவர்கள் என்னை அழைக்காமல், பிறகு நான் உள்ளே சென்ற பிறகு, சொல்வதைச் சொல்லிவிட்டு, சீட்டைக் கொடுத்துவிட்டுப் போ என்று சொல்லிவிட்டார். இந்த அரசு எண்ணத்திற்கேற்ப அதிகாரிகள், இயக்குநர் அவர்கள் நடந்து கொண்டால் சிறப்பாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, உள்நாட்டு மீனவர்களுக்கு இருக்கிற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, கடலிலே மீன் பிடிக்க, பயிற்சி நிலையங்களிலே இருப்பவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். அதே போல், இந்த மீனவச் சமுதாயத்திலே இருக்கிறவர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த நிலைமைகளையும் தயவு செய்து அனுசரித்து ஏற்க வேண்டும். இந்த இலாகாவிலே, வேலை வாய்ப்புத் தரும்போது, மீனவ மக்களுக்கு, மீனவப் பயிற்சி பெற்ற மீனவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

*<u>திருமதி த. ந. அனந்தநாயகி:</u> சபாநாயகர் அவர்களே, இந்தச் சமூக நல இலாகாவும் மீன் இலாகாவும் இரண்டுமே சில முக்கிய கருத்துக்களைக் கொண்டவை. ஆனாலும் நேரம் கிடையாது. எவ்வளவுக்கெவ்வளவு வேகமாகச் சொல்ல முடியுமோ, அவ்வளவுக்கவ்வளவு வேகமாகக் கருத்துக்களைச் சொல்ல முயற்சி எடுத்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, சமுதாய நலத்திற்காக 2 கோடி சில்லரை, சற்றேறக் குறைய ரூபாய் 3 கோடி ஒதுக்கப்படுகிறது. அந்த அளவிலிருக்கிற இந்த நலத்துறை உண்மையிலேயே நலத்துறையாக விளங்க வேண்டுமென்ற

ஆசையிருக்குமானால், எவ்வளவுக்கெவ்வளவு வாலன்டரி ஆர்கனைசேஷன்ஸை ஊக்குவிக்கிறீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு நல்லது. இந்த அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறபடி, இன்றைக்குச் சமுதாய நல போர்டுக்குப் பலவாறாக பல கிராண்டுகளைக் கொடுக்கிறார்கள். அதையெல்லாம் முழுக்க முழுக்க அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் கொடுப்பதை நாம் பார்க்கிறோம். இதையெல்லாம் விட்டுவிட்டு, உண்மையிலே சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணமுடையவர்களை ஊக்குவிக்க வேண்டும். சிலருக்குத் தன்னாலேயே ஊக்கம் இருக்கும். சிலபேர் யோசித்துக் கொண்டிருப்பார்கள். நீங்கள் போடுகின்ற அதிகாரிகள், டைரக்டராக இருக்கட்டும், டிஸ்டிரிக்ட் ஆஃபீசர்களாகட்டும் அவர்கள் எத்தனை ஸ்தாபனங்களை ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் ஆரம்பிப்பதை, போடுகின்ற கண்டிஷன்களாலே மூடிவிடப் பார்க்கிறார்களே தவிர, அவர்களாகப் போய் இந்தக் காரியங்களைச் செய்கின்ற சூழ்நிலை இருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மகளிர் மன்றங்கள் என்று பஞ்சாயத்து யூனியன்களிடம் சொல்கிறார்கள். யார் வீட்டிலோ சூயிங் மெஷின் தூங்கும். ஒரு வேலையும் நடப்பது கிடையாது. கணக்கு மட்டும் எழுதுகிறோம், ரூபாய் ... 4,000 கொடுக்கிறோம் வருஷத்திற்கு என்று. மகளிர் மன்றங்களுக்கு எதற்காகப் பணம் செலவழிக்கிறோமோ, அந்தப் பணம் அதற்காகச் செலவாகிறதா என்பதில் அக்கறை காட்ட வேண்டும். நாம், ஏதோ திணிக்கிற மாதிரித் திணிக்கிறோமே தவிர, யாருக்குச் சேவை மனப்பான்மையிருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து, கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இங்கேயிருக்கிற அதிகாரிகளுக்கு இல்லையென்று கவலையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்காக முதலமைச்சரவர்கள் அக்கறை எடுத்து, விடுதிகளையெல்லாம் கட்டியிருக்கிறார்கள். சென்னை நகரத்திலே பஸ் ஸ்டாண்டிலே, ரெயில்வே ஸ்டேஷன்களிலே முழுக்க முழுக்கத் தொழுநோய்க்காரர்கள். கோயில் வாசல்களிலே முழுக்க முழுக்கத் தொழுநோய்க்காரர்கள். விடுதி அங்கேயிருக்கிறது. தொழுநோய்க்காரர்கள் வீதியிலேதான் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். பரனூரில் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் ? அவர்களுக்கு அங்கே இடம் கொடுக்க என்ன கஷ்டம் ? தலைநகரத்திலே இவ்வளவு தொழுநோய்க்காரர்கள் இருக்கிறார்கள்.. ஒவ்வொரு கோயில் வாசலிலேயும் எக்கச்சக்கமாகத் தொழுநோய்க்காரர்கள். விடுதி கட்டி, வேறு யாரையாவது வைத்திருக்கிறார்களா என்று தெரியவில்லை............

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுதே வேண்டுமானாலும் நாம் இருவரும் பரனூருக்குச் சென்று பார்க்கலாம். அங்கே தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்களா ? வேறு யாராவது இருக்கிறார்களா என்பதை நேரிலேயே தெரிந்து கொள்ளலாம். அம்மையார் அவர்கள் எப்பொழுது வரத்தயார் என்று தெரிவித்தால் ஏற்பாடு செய்கிறேன்.



திருமதி த. ந. அனந்தநாயகி : ஆனால், வெளியிலே இவ்வளவு பேர் இருக்கிறார்களே, அதற்கென்ன சொல்கிறீர்கள் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இன்னும் வெளியிலே சில தொழுநோய்க்காரர்கள்—பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள், அவர்களைப் பிடிக்க வேண்டுமென்று சொல்லுங்கள். அதற்காகத்தான் இந்தச் சட்டத்தையே திருத்தவேண்டுமென்ற வகையிலே அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அதற்காக, பிச்சைக்கார இல்லங்களிலே தொழுநோய்ப் பிச்சைக்காரர்களே இல்லை, வேறு யாரோ இருக்கிறார்களே என்று உண்மைக்கு மாறாகச் சொல்லக்கூடாது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இவர்களைப் பார்த்தவுடனே எங்களுக்கு அந்த சந்தேகம் வருகிறது. தலைநகரத்திலே பார்த்தால் ரோடுகளிலேயும் டிராபிக் சிக்னல்களுக்குப் பக்கத்திலேயும் பார்த்தால் நின்றுகொண்டிருக்கிறார்களே, ஏன் அவர்களைப்பிடிக்கவில்லை, ஆகவே, அங்கே யாரும் இல்லையா என்ற சந்தேகம் எங்களுக்கு வருகிறது. அந்தச் சந்தேகம் எனக்கு மாத்திரம் அல்ல, எந்தப் பிரஜைக்கும் சந்தேகம் வருகிறது. ஆகவே, அவர்களையும் பிடித்து அந்த இல்லங்களிலே சேர்த்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சத்துணவுத் திட்டம். சத்துணவு என்று சொல்லிக் கட்சியின் அடிப்படையிலே மன்றங்களுக்குக் கொடுத்து விட்டுவிடுகிறார்கள். இதனால் உண்மையிலேயே மக்களுக்கு ரொட்டியோ பாலோ போய்ச் சேருவதில்லை. அவர்கள் வெளியிலே விற்கிறார்கள். 'யாருக்குப் போக வேண்டுமோ, அங்கே போகாமல் இடையிலே இருக்கிறவர்களிடம் சிக்கி அந்த உணவு வெளியிலே விலைக்கு விற்கப்படுகிறது என்றால் இதைக் கண்டு பிடிக்க வேண்டும். இம்மாதிரி நிலைமைகளை மாற்றி அவற்றை மாதர் சங்கங்கள் மூலமாக விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்ததாக மீன்பிடி துறை. 1,000 கிலோ மீட்டருக்கு கரை இருக்கிறது. ஆனால், எத்தனை மீன்பிடி துறைகள் கட்டியிருக்கிறீர்கள் நீங்கள் ? ஒன்று தூத்துக்குடியிலே, இரண்டாவது சென்னையிலே இனிமேல்தான் கட்டப்போகிறீர்கள், அது போதாது....

மாண்புமிகு திரு. சி.வி.எம். அண்ணாமலை : மீன்பிடி துறைமுகங்கள் கட்டுவது என்றால், தமிழக அரசு ஏதோ எண்ணிக்கொண்டவுடன் அந்தத் திட்டத்தைப் போட்டுக் கட்டுவது என்பதல்ல. இங்கே ஆய்வுசெய்து நாம மத்திய அரசுக்கு அனுப்பி விடுகிறோம். பல திட்டங்கள் கிடப்பிலேயே அங்கே கிடக்கின்றன என்பதை நான் அங்கே ஆளுங்கட்சியைச் சேர்ந்த அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்படிப்பட்ட காரியங்களுக்குப் போராடினாலும் நல்லது, அங்கே என் டிலே. டெக்னிகல் அப்ரூவல் என்பதாலா அல்லது டிலே பணம் கொடுப்பதிலா என்று பார்க்க வேண்டும், டெக்னிகல் அப்ரூவல் என்றால் நாமே அதை இங்கே வைத்துக்

[திருமதி. த. ந. அனந்தநாயகி] [1975 ஏப்ரல் 9

கொள்ளலாம். முதலமைச்சர்கள் மாநாட்டிற்குப் போகிறபோது இதை யெல்லாம் சொல்லித் தீர்வு காண வேண்டும். நம்மிடம் மெக்கானைஸ்ட் போட் ரிப்பேர் ஆனால் அதற்கு ராம்ப் கிடையாது, இதனால் ஒரு போட் ரிப்பேராகிவிட்டால் அந்த லிஸ்டிலே காத்திருக்க வேண்டியிருக்கிறது. காரணம் ராம்ப் பெஸிலிட்டிஸ் கிடையாது. ஆகவே, அதிகமாக அந்த வசதியை ஏற்படுத்தித் தரவேண்டும்.

நீங்கள் கொடுத்தீர்களே, 36 அடி போட், மெக்கானைஸ்ட் போட், அதனுடைய நிலைமை என்ன இன்றைக்கு ? பழுதடைந்துவிடுகிறது, மியூஸியம் மாதிரி எல்லாம் நின்று கொண்டிருக்கின்றன. இது தான் கண்ட பலன். மீனவர்கள் யான்மார் வேண்டுமென்று கேட்கிறார்கள், நீங்கள், எங்கெங்கேயோ ரஸ்ட் ஆன எஞ்சினையெல்லாம் கொடுக்கிறீர்கள். இதனால் இன்றைக்கு மீனவர்கள் கையிலிருந்த பணத்தையும் போட்டுவிட்டு நஷ்டப்பட்டுத் தெருவிலே நின்றுகொண்டிருக்கிறார்கள்.

போட் பில்டிங் யார்ட் என்று வைத்திருக்கிறார்கள், அதிலே 350 போட் செய்யப்போகிறோம் என்று சொன்னீர்கள், என்ன ஆயிற்று ? ஒன்று அதிலே பில்ட் பண்ணவேண்டும் அல்லது வெளியிலே காண்ட்ராக்ட் ஆவது விடவேண்டும். அங்கேயும் செய்யாமல் வெளியிலே கொடுப்பது என்றால் என்ன அர்த்தம் ? அங்கே ஏன் செய்யக்கூடாது ? உங்களுடைய கெப்பாஸிடி என்ன? எத்தனை போட்கள் செய்ய முடியும் ? ஏன் செய்யவில்லை? இதையெல்லாம் அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இன்லண்ட் பிஷரிஸ். குளம் குட்டைகளையெல்லாம் லீஸுக்கு விடுகிறார்கள். ஒரு வருஷம் 600 ரூபாய் என்கிறார்கள், இன்னொரு வருஷம் இன்னொரு தொகை என்கிறார்கள். வறட்சி வருஷமாக இருந்தால்கூட மீன் இல்லை செத்துப்போய் விட்டது என்று சொல்லலாம். ஆகவே, **A lot of mal-practice is going on in finland fisheries** என்ற நிலைமை இருக்கிறது. அதையெல்லாம் கூட்டுறவுத் துறையின் மூலமாகச் செய்வதற்காவது ஏற்பாடு செய்ய வேண்டும். ஜி. ஓ. போடுகிறோம், ஆனால், அதை ஏற்றுக்கொண்டு காரியங்கள் நடக்கவில்லை என்ற நிலைமைதான் இருக்கிறது. திட்டங்கள் போடுகிறோம் அந்தத் திட்டங்களின் நன்மைகள் யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குச் சேரவில்லை என்ற நிலைமை இருக்கிறது. சமுதாய நலமாக இருக்கட்டும், மீனளமாக இருக்கட்டும், நல்லமுறையிலே நடக்கிறதா என்ற சந்தேகம் இருக்கிறது என்பதைச் சொல்லிப் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**Thiru B. VENKATASWAMY** : Sir, in support of the cut motions moved on behalf of the Swathanthra Party, I want to say a few words.

In these days of food shortage, fisheries should be extende extensively, because it is a vitamin food. We have in our State 1,000 kilometres of sea shore which is equal to 22 hectares. There should be a large number of mechanised boats. Now it is very little. If we made intensive efforts in catching the fish, 25 per cent of our food problem



1975 April 9] [Thiru B. Venkataswamy]

would be solved. But the Fisheries Department has not done well all these days. The department should be provided with more money to provide more mechanised boats to the fishermen.

There is great export potential also. That should be exploited properly. There is need for fish meal. There also our efforts are not adequate. With taking fish, people in Calcutta and Kerala have a shining skin. There is a shine in their body also. At the same time, it should be seen that the fishermen get a fair price for their catches. Government should do everything to raise their economic standard. There is great demand for fish internally also. There is no great programme for fishing in coastal areas. This is most important.

Hybrid fingerlings should be given to Panchayat Unions for propagation. Panchayat tanks and P.W.D. tanks should be used for raising fresh fish. I request that Panchayat Unions must be given priority in the matter of breeding hybrid fingerlings. Not only the coastal areas, but also internal areas should be exploited in the matter of fish raising.

Coming to Social Welfare, this is the International Women's Year. I understand that the Hon. Chief Minister had announced some facilities for destitute women. It is a happy thing. At the same time since 50 per cent of the population is female sex, it is but fair and proper that 50 per cent of the jobs are reserved for ladies. By that all the ladies will vote for the ruling party.

Regarding Mahila Manrams, the amount of Rs. 4,000 provided is very poor. They are not in a position to increase their activities. The amount should be increased. The activities also should be supervised by Women Welfare Officers. They are not doing their work properly.

(பிற்பகல் 1-00)

Regarding child welfare centres, every panchayat must have a child welfare centre. There are so many poor people in the villages and their children also should be fed well equivalent to children of people in the higher strata of society. People enjoying higher status are having facilities to feed their children well. Poor people in the villages are suffering a lot because their children are not having nutritious food. I request the Hon. Minister to extend these child welfare centres to villages and feed the children there with nutritious food with assistance from institutions like CARE or from State funds. You must see that poor children in every village are fed with nutritious food.

Regarding the physically handicapped, I am really very thankful to the Hon. Minister for all that the Government have done for their welfare. They are the most neglected people and a burden to the society.

[Thiru B. Venkataswamy] [1975 ஏப்ரல் 9

I am very glad that they have also been provided some employment opportunities and given some training in gainful employment.

Because of non-availability of jobs, some ladies take to prostitution. If you want to check up prostitution, I must say that more employment opportunities must be given to such ladies because they are very poor and there is no option for them except to take to prostitution. Day-to-day we are seeing it. So, if we want to minimise prostitution, the Government must see that more employment opportunities are given to such ladies, especially to those who are in need of jobs. Otherwise, poverty among such ladies indirectly encourages prostitution, as has been mentioned in a report in the Illustrated Weekly of India. So, I request the Hon. Minister to consider this matter seriously and see that something is done for such ladies who are entangled in this racket.

Finally I want to stress one matter. A large number of beggars are found in the streets only because of their poverty. There is no use of simply taking them to Beggar Homes and keeping them there. We must provide them with opportunities of some employment. Or, they must be given a piece of land. Because there is no employment or any piece of land for them, they are begging. It is the duty of the Government to see that they are given opportunities for gainful employment. Those who are not having any land or any house must be given land, or co-operative farm should be formed for their benefit. They must be given first priority in the matter of providing employment in the Employment Exchanges, so that we can solve this beggar problem also. Thank you, Sir

## 5. அறிவிப்பு.

## பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (9–4–1975) கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டபடி நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

| | |
|---|---|
| 12–4–1975 (சனிக்கிழமை) .. | தெலுங்கு வருடப் பிறப்பு—விடுமுறை. |
| 13–4–1975 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |
| 14–4–1975 (திங்கட்கிழமை) | தமிழ் வருடப் பிறப்பு—விடுமுறை. |
| 15–4–1975 (செவ்வாய்க்கிழமை)<br>16–4–1975 (புதன்கிழமை) | அரசினர் சட்ட முன்வடிவுகளும் தீர்மானங்களும். |



1975 ஏப்ரல் 9] [பேரவைத் தலைவர்]

| | |
|---|---|
| 17–4–1975 (வியாழக்கிழமை) .. | தனியார் அலுவல்கள். |
| 18–4–1975 (வெள்ளிக்கிழமை)<br>19–4–1975 (சனிக்கிழமை) | அரசினர் சட்ட முன்வடிவுகளும் தீர்மானங்களும். |

## 4. 1975–76-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. சி.வி.எம். அண்ணாமலை : பேரவைத் தலைவர் அவர்களே, மீனளத்துறை மானியம் பற்றியும், சமூக நலத்துறை மானியம் பற்றியும் இந்த இரண்டு கோரிக்கைகள் மீதும் மன்ற உறுப்பினர்கள் புதுமையான கருத்தினை மிக நன்றியுணர்வோடு எங்களுக்கு அளிப்பார்கள் என்று நான் எதிர்பார்த்தேன்.

உண்மையாகவே அரசு எந்தெந்த துறைகளில் விரிவான திட்டத்தை மேற்கொண்டு திட்டமிட்டுச் செயல்படுகிறதோ அதையே இவர்கள் இல்லாதது போன்ற தோற்றுவாயில் அவர்கள் பேச்சின் மூலம் கேட்டிருக்கிறார்கள் என்றாலும் அவர்களுக்கு இதில் இருக்கின்ற ஊக்கத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அந்த வகையிலே, மீன் வளம் ஏழைப் பாட்டாளி மக்களுக்குச் சத்துணவாக, ஊட்டம் நிறைந்த சிறந்த உணவாகக் கருதப்படுகிறது, பாலில் கிடைக்காத பெரும் சத்தை, பழரசத்தில் கிடைக்காத சத்தை, பருப்பு வகைகளில், நெய்யில் கிடைக்காத சத்தை, இப்படிப்பட்ட பொருள்களை உயர்ந்த விலை கொடுத்து வாங்கி உணவு அருந்த முடியாத ஏழை மக்களுக்கு மலிவான விலையிலே நல்ல புரதச் சத்து தரும் ஊட்டச் சத்தாக அமைந்திருப்பது, ஏழை நடுத்தர மக்களுக்கு அமைந்திருப்பது இந்த மீன் என்பது உடல்கூறு வல்லுநர்கள் அனைவரும் ஒருமுகமாகக் கூறும் பேருண்மையாகும்.

அந்தக் கருத்தில் விசைப் படகுகளின் மூலம் வளத்தைப் பெருக்க வேண்டுமென்று ஏறத்தாழ 61 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்ட இந்தத் துறை—இன்றையதினம் நடை போட்டுக்கொண்டிருக்கிறது. இந்த 1967–ஆம் ஆண்டு வரையிலும் ஏறத்தாழ எத்தனை விசைப்படகுகள் வழங்கியிருக்கிறது என்றால் 599 படகுகள்தான் மீனளத் துறையிலே இதற்கு முன் இருந்த அரசில் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கு கூறிய உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காரணம், கழக அரசு பொறுப்பிலே வந்த பிறகு ஏதோ கவனக் குறைவாக நடப்பதைப்போல கருத்து தெரிவித்ததால் இதைக் கூறுகிறேன். விசைப் படகுகள் வழங்குவதன் மூலமும், மற்றும் கட்டுமரங்கள், கலன்கள், படகுகள் போன்றவற்றிற்கும் சாதாரண 5 குதிரை ஓட்டமுள்ள இயந்திரங்கள் பொருத்தப்பட்டு, அவர்களுக்கு மலிவான வகையில் நல்ல சத்துணவைக் கொண்டு வரவும், அதே நேரத்தில் அவர்களுக்குத் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தி அவர்களுக்கிடையே வேலை வாய்ப்பைப் பெருக்கவும் வழிவகை செய்ய வேண்டுமென்ற யோசனையைக் கூறியிருக்கிறீர்கள் என்றாலும் இதற்கு முன் இருந்த அரசு, 61ம் ஆண்டுக் காலத்திற்கு முன் தீட்டப்பட்ட திட்டத்தில், அதில் காட்டியிருக்கிற ஆர்வத்தைப் பார்க்கும் பொழுது 599 விசைப்படகுகள் கொடுக்க முடிந்திருக்கிறது.

[திரு. சி. வி. எம். அண்ணாமலை] [1975 ஏப்ரல் 9

ஆனால், கழகம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு, இந்த எட்டாண்டுக் காலத்தில் அதனுடைய முன்னோடித் திட்டம் எவ்வளவு விரிந்து செயல்பட்டு இருக்கிறது என்பதை உங்களுக்குச் சொன்னால் நீங்கள் களிப்படையாவிட்டாலும் மனதிலேயாவது திருப்தியடைவீர்கள் என்று கருதி இந்தத் தகவலைச் சொல்கிறேன். கழக ஆட்சி அமைந்த 8 ஆண்டுகளில் 1,069 படகுகள் ஏழை மீனவர்களுக்கு முறையாக வழங்கப்பட்டு இருக்கின்றன என்பதையும், இனி வரவிருக்கின்ற காலத்தில் விசைப்படகுகள் வேண்டுமென்று வருந்தி நிற்கும் மீனவர்களுக்கு வேண்டிய அளவிற்கு மின் விசைப் படகுகள் வழங்க நிதிப் பற்றாக்குறை இருப்பதால் மீன் வள கழகம் என்ற ஒரு கழகத்தைத் தோற்றுவித்து, அதன் மூலம் 300–க்கும் மேற்பட்ட மின் படகுகளை வழங்க அரசு திட்டமிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், இங்கே பலவிதமான தகவல்களை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டென்னிஸ் அவர்களும், மற்றும் பேசிய நண்பர்களும் கூறினார்கள். கடல் வளம் பயன்படுத்தப்படவில்லை, நீங்கள் உண்மையாகவே மேலும் முயற்சிக்க வேண்டுமென்று சொன்னார்கள். கடல் வளத்தில் இரால் போன்ற பொருளாதார லாபம் தருகின்ற மீன் வளத்தை ஏன் பெருக்க முனையவில்லை என்று கூறியிருக்கிறார்கள்.

அதேபோன்று அந்த இரால் போன்றவற்றையெல்லாம் இங்கே பிடித்து கேரளம் போன்ற பிற மாநிலங்களுக்குக் கடத்தப்படுகிறது அல்லது விற்கப்படுகிறது என்றும் கூறிய அந்தக் கருத்துக்களைக் கருத்திலே கொண்டுதான் இந்த அரசு அதற்கென்று மீன்வள கழகத்தைத் தோற்றுவித்து வணிக முறையிலேயும், தேசிய பொருளாதார வளர்ச்சி முறையிலேயும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வகையிலேயும், அதற்கு மேலாக ஊட்டச் சத்துணவை இந்த நாட்டு மக்களுக்குத் தருவது மூலம் நல்ல சத்தான, திண்மையான உடல் வளத்தைப் பெற்று ஏற்றம் பெறுவார்கள் என்ற எண்ணத்திலேயும், அவைகளையெல்லாம் மனதிலே வைத்துத்தான் இப்பொழுது இந்தக் கழகம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இங்கே சொன்னார்கள். ஆதிதிராவிட மக்களைவிடக் கேவலமாக மீனவர்கள் மிகவும் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள், அவர்களது துயரத்தை, துன்பத்தைத் துடைக்க இந்த அரசு என்ன செய்தது என்று கேட்பது போன்ற கருத்தைச் சொன்னார்கள். நான் இந்த நேரத்தில் அந்த அருமை நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், உண்மைக்குப் புறம்பானவற்றைச் சொல்ல முனைய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு பெரிய பூசணிக்காயை உள்ளங்கைச் சோற்றில் மறைக்க முற்படுவதைப்போல் மிகப் பெரிய உண்மையை குறுகிய காலத்திலே மறைக்க ஏன் துணிகிறீர்கள் ?

முதல்வரவர்களது நிதி நிலை அறிக்கையில் அழகாகக் கூறி இருக்கிறார்கள், கரையோரப் பகுதியில் வாழும் மீனவர்களுக்கு, குடிசை வாழ் மீனவர்களுக்கு 5,000 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக, அதுவும்



1975 ஏப்ரல் 9] [திரு. சி. வி. எம். அண்ணாமலை]

எப்படிப்பட்ட காலக்கட்டத்தில், வறட்சி பற்றிக்கொண்டு வாடிக்கொண்டு இருக்கிற நேரத்தில், நிதிப் பற்றாக்குறையினால் தொல்லைப்படும் இக்கட்டான காலகட்டத்தில், முதல்வரவர்கள் ஏழை மீனவர்களின் நலன் கருதி அந்த மீனவ மக்களுக்கு, இயற்கையின் சீற்றங்களுக்கும், துன்பங்களுக்கும், புயல் காற்றுக்கும் இடையில் இடர்பட்டு வரும் அப்பாவி மக்களுக்கு 5,000 வீடுகளை உடனடியாகக் கட்டிக்கொடுக்க 2 கோடி ரூபாய்க்கான திட்டத்தை அறிவித்திருக்கும் அந்த அறிவிப்பு உங்களுக்கு மன நிறைவு அளிக்கவில்லையா என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதற்கும் மேலாக முதல்வரவர்கள் அறிவித்த அறிவிப்பில் பூம்புகாரில் 35 இலட்சம் ரூபாய் செலவில் மீனவர்களுக்கு 500 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு, ஏறக்குறைய 132 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீனவர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தில் பூம்புகார் பகுதியில் சுமார் 132 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. வீட்டு வசதி வாரியத்தின் மூலம் மட்டுமல்லாது, கல்பாக்கத்தில் 181 வீடுகள் 2·72 இலட்சத்திலும், அம்மாப்பட்டணத்தில் 200 வீடுகள் 8·25 இலட்சத்திலும் ஆக 381 வீடுகள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகக் கட்டித்தரப்பட்டிருக்கின்றன.

ஏதோ மீனளத் துறையிலே துறையின் மூலமாக படகுகள் வழங்கப்படுகிறதிலே தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. வேண்டியவர்களுக்குச் சலுகைகள் காட்டுகிறார்கள், வேண்டாதவர்களுக்குச் சலுகை அளிப்பதில்லை என்று ஆளும் கட்சிக்கு நோக்கம் கற்பிக்கின்ற முறையிலே மெம்பர்கள் பேசினார்கள். அந்த உறுப்பினர்களுக்கு மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். படகுகள் வழங்குவதில் கட்சிக் கண் கொண்டு இந்த அரசு பார்க்கிறது என்று யாராவது ஆதாரம் காட்டுவார்களானால் நிச்சயமாக இந்த மன்றத்தில் அவர்களிடம் மன்னிப்புக் கோரக் காத்திருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குலுக்கல் அடிப்படையில் பெயர்களை அகரவரிசைப் படுத்தி இன்றைய தினம் படகுகள் வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. வெங்கடசாமியும் மற்றவர்களும் சொன்னார்கள். ஆழ்கடல் சென்று மீன் பிடிப்பதற்கு விரிவான திட்டத்தை மேற்கொள்ளக் கூடாதா ? அதிகமான விசைத் திறன் உள்ள நல்ல டிராலர்களை வைத்துக்கொண்டு மீன் பிடிப்பை அபிவிருத்தி செய்யக்கூடாதா ? அதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கக் கூடாதா? அதன் மூலம் தேசிய வருமானத்தைப் பெருக்கக்கூடாதா ? என்றெல்லாம் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆழ்கடலில் மீன்பிடிக்க வேண்டுமென்றால் இப்போது பெரிய டிராலர்கள் நம்மிடம் இல்லை. அதைப் பெற இத்தாலி நாட்டுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய அந்த டிராலர்கள் நம்மிடம் வந்து சேர ஓராண்டுக் காலம் ஆகுமென்று கூறுகிறார்கள். இதனாலேயே நான்கு டிராலர்களை வாங்குவது என்பதுமட்டு மல்லாமல் நான்கு டிராலர்களை இங்கே உற்பத்தி செய்ய வேண்டுமென்பதற்காக மண்டபத்

தில் நல்ல முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பிடிக்கப்பட்ட மீன்களைப் பத்து பதினைந்து நாள் வைத்திருக்க குளிர்பதன அறைகள் வைத்து வணிக முறையில் மேம்பாடு உடைய தொழிலாக ஆக்க வேண்டுமென்பது இந்த அரசின் முனைப்புத் திட்டம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சிறு சிறு கட்டுமரங்கள் மூலமாகவும், சிறு சிறு தோணிகள் மூலமாகவும் மீன் பிடிக்கின்றவர்களை ஊக்குவிக்கின்ற வகையில் அதிலே குறைந்த குதிரை ஓட்டம் உள்ள இயந்திரத்தைப் பொருத்த முடியுமா என்று கேட்டார்கள். அவர்களை ஊக்குவிப்பது மட்டுமல்லாமல், அவர்கள் பிடித்து வருகின்ற மீன்கள், பல மணி நேரம் இயற்கையின் சீற்றத்திற்கெல்லாம் ஈடு கொடுத்துப் பிடித்து வருகின்ற மீன்கள், கெட்டுவிடுவதன் காரணமாக உரிய விலைக்கு விற்க முடியாமல் போய்விடுகிறது, அப்படி மீன்கள் பழுதுபடாமல் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காக "காப்புப் பெட்டியைக்" கூட 200-க்கு மேற்படாத அளவுக்குக் கொடுக்கும் திட்டம் செயல்படத் தொடங்கியிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மீனவர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதில் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். மீனவர்களுக்கு, அவர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை அளிக்கவும் திட்டமிட்டிருக்கிறோம். மீனவர்கள் பயிற்சி முறையிலே 10 மாதங்கள் தேர்வு பெற்று அதற்குரிய சான்றிதழ் பெற்றிருந்தால் இன்றைக்கு அவர்கள் மட்டுந்தான் மீன்பிடி படகுகளுக்கு விண்ணப்பம் செய்ய வேண்டும் என்று ஏற்பாடு செய்து, அவர்களுக்குத்தான் மீன் பிடி படகுகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை, தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மீனவர்கள் அல்லாதவர்களுக்கு நீங்கள் ஏன் படகுகளை வழங்குகின்றீர்கள் என்று பல உறுப்பினர்கள் சொன்னார்கள். இது மீனவர்கள் தெரியாத்தனமாக, அறியாத்தனமாக, அந்த சமுதாயத் தோழர்களால் ஏற்படுகின்ற கோளாறே தவிர, துறையின் குறையாக அமையவில்லை, அமையாமல் காக்கப்பட்டு வருகிறது.

அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள் — உங்களுடைய படகுகளெல்லாம் எங்கே சரியாக நீரில் ஓடுகின்றன, கரை தட்டி கரை மீது கிடக்கின்றன என்று சொன்னார்கள். எவ்வளவோ பெரிய கப்பல்கள் எல்லாம் கரைதட்டிப் போகின்றன பழுதடைவதன் காரணமாக. பழுதடைந்த காரணத்தால் பழுது பார்க்க கரையில் வைக்கப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நான் குறிப்பிடுவது 36 அடி மெகனைஸ்டு போட்ஸ் அவ்வளவும் கரையில்தான் இருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வேலை முடிந்து, மீன் எல்லாம் பிடித்த பிறகு கடற்கரையில்தான் வைப்பார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அவை வேலைக்குப் போவதே இல்லை. 36 அடி மெகனைஸ்டு போட்ஸ் பூராவும் எவ்வளவோ நாட்களாக கரையிலேயே கிடக்கின்றன. அவை ரிப்பேர் செய்யப்படுகின்றனவா இல்லையா என்பதே தெரியவில்லை.





மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தமிழ்நாட்டில் மீன்வளத் துறைக் கட்டிடம் கட்டி முடிக்கப்படவில்லை என்ற பெரும் குற்றச்சாட்டைப் பல உறுப்பினர்கள் அழுத்தமாக எடுத்துச் சொன்னார்கள். மேலும் பல துறைமுகங்கள் கட்டப்படாமலே இருக்கின்றன என்று வலியுறுத்திப் பேசினார்கள். அவர்களுக்குச் சுருக்கமாக நான் சொல்ல விரும்புவது — கடலூர் மீன்பிடி துறைமுகத்திற்கு 8.50 இலட்சம் செலவு; நாகைப்பட்டினத்தில் 5.66 இலட்சத்தில் ஏற்பட இருக்கிறது. மண்டபத்தில் 10.90 இலட்சத்தில் ஏற்பட இருக்கிறது. இராமநாதபுரம் தோணித் துறையில் 9.90 இலட்சத்தில் ஏற்பட இருக்கிறது. தூத்துக்குடி மீன்பிடி துறைமுகம் 210 இலட்சத்திலே ஏற்படுத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அது போலவே சற்றேக்குறைய ஆறு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட செலவில் சென்னையில் மீன்பிடித் துறைமுகம் கட்ட முதல் கட்ட பணி முடிந்து, அடுத்த கட்டப் பணி செய்யத் திட்டமிடப்பட்டு மத்திய அரசின் மேற்பார்வையில் இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் துறைமுகங்கள் கட்டுவதற்கும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. கோவளம், செங்கற்பட்டு மாவட்டம்; காட்டுப்பாக்கம், செங்கற்பட்டு மாவட்டம்; பறங்கிப்பேட்டை, தோப்புத்துறை, திருமுல்லைவாயல், மண்டபம், தங்கச்சி மடம், புன்னைக்காயல் ஆகிய இடங்களில் மீன்பிடி துறைமுகங்கள் கட்டுவது பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மண்டபத்தில் மட்டும் இப்போது மீனள பயிற்சி நிலையங்கள் ஏறக்குறைய ஆறு இடங்களில் கட்டத் தொடங்கி, சற்றேறக்குறைய ஆயிரத்துக்கு மேற்பட்ட மீனவர்கள் பயிற்சி பெற்று இன்றைய தினம் விசைப் படகுகள் விஞ்ஞான ரீதியோடு நல்ல இயந்திரப் பயிற்சி பெற்றவர்களால் இயக்கப்படுகின்றன. இருந்தாலும் அந்தப் படகுகளை உரிய வகையில் பயன் படுத்திக் கொள்ளாதவர்கள் வேறு வகையில் மாற்றம் செய்வதைக் கண்காணிக்கும் பொறுப்பில் இந்தத் துறையில் இருக்கின்ற துறை அலுவலாளர்கள் கவனித்துக்கொண்டு வருகிறார்கள். கொடுக்கப்படுகின்ற படகுகள் மாற்றுக் கைக்கு மாறாமல் கட்டுப்படுத்துவது என்பது இந்தத் துறைக்கு உண்மையாகவே பெரும் கடினமாக இருக்கிறது.

தமிழக மீன்வளத் துறையால் வழங்கப்பட்டிருக்கிற படகுகள் சில கேரளத்தில் இருப்பதைக் கூட கண்டுபிடித்து, இங்கு சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனவர் குடிமக்கள் படகுகளில் சென்று அங்கு இறந்துவிட்டால் அவர்களுக்கு அளிக்கப்படுகிற நட்டயீட்டுத் தொகையைப் போலவே உள்நாட்டு மீனவர்களுக்கும் அளிக்க வேண்டுமென்று திரு சீனிவாசன் அவர்கள் இங்கு எடுத்துச் சொன்னார்கள். மூன்று மாதங்களுக்கு முன்பு கூட நாம் உள்நாட்டு மீனவருக்கு இதுபோன்ற நட்டயீட்டுத் தொகையை அளித்து, அவர்களுடைய குடும்பத்திற்கு இந்த அரசு கண்டிப்பாக நல்ல ஆதரவைத் தந்து அவர்களின் கண்ணீரைத் துடைக்க ஏற்றளவிற்கு செய்திருக்கிறது.

[திரு. சி. வி. எம். அண்ணாமலை] [1975 எப்ரல் 9

பொதுவாக, இந்தத் துறையின் எதிர்காலம் எந்த முறையில் அமைய வேண்டும் என்று எண்ணுகிறோம் என்றால் இந்தத் துறை தேசிய வருமானத்தைப் பெருக்குவதற்குப் பயன்பட வேண்டும். இந்தத் துறை தென்னாட்டில் உள்ள மக்களின் அதாவது வேலையில்லாத மக்களின் துன்பத்தைப் போக்குவதற்குப் பயன்பட வேண்டும். அதேநேரத்தில் மீன் வளத்தைப் பெருக்குவதற்கும், சத்துணவைப் பெருக்குவதற்கும் இயந்திரங்கள் மூலம் எண்ணெய் எடுத்து அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் ஏற்ப நல்ல மூலாதாரத் திட்டங்களை எல்லாம் இந்த அரசு மேற்கொண்டுவருகிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பசி நேரம், மீன் மீன் என்று சொல்லிக்கொண்டிருந்தால்..........

<u>மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:</u> பல உறுப்பினர்கள் பல கோரிக்கைகளை நாங்கள் சொன்னோம், அதற்கு அமைச்சர் அவர்கள் சரியான விடை பகரவில்லை என்று சொல்வார்களே என்பதற்காகத்தான் விரிவான விளக்கக் குறிப்புகளை எல்லாம் இந்த மன்றத்தின் முன் நான் ஏற்கனவே வைத்திருக்கிறேன் என்றாலும் அதுபற்றி மேலும் விரிவான விளக்கக் குறிப்புகள் என்னிடம் இருக்கின்றன. அதற்குத் தாங்கள் வாய்ப்பு தந்தால் அவர்கள் எண்ணங்களைப் போக்க இயலும். சத்துணவுத் திட்டத்தைப் பற்றி எடுத்துச் சொல்லப்பட்டது. குடும்ப நலத் திட்டத்தைக் கூட குறை சொல்லக்கூடிய அளவிற்கு நம் எதிர்க் கட்சித் தலைவர்களின் உள்ளங்கள் காய்ந்து விடக்கூடாது என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சத்தியம், நேர்மை, ஒழுக்க நெறி இவற்றைக் காக்கின்ற கூடமாக நம் நாடு இருப்பதாக வெளி நாடுகளில் இருப்பவர்கள் கருதுகிறார்கள். அதற்கு அப்பழுக்கு இல்லாத முறையில் நாம் செயல்பட வேண்டும். நம் செயல்களை அவர்கள் கண்காணித்து வருகிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. சமுதாய நலத் திட்டம் என்பது மகளிர் நலத் திட்டம் என்று ஒரு காலத்தில் இயங்கி வந்தது. 70–க்குப் பிறகு சமுதாய நலத் திட்டம் என்ற பெயராக மருவி இன்றைய தினம் தமிழ்நாடு வியக்கத்தக்க அளவிற்கு என் இந்திய உப கண்டமே வியக்கத்தக்க அளவிற்கு மிக அருமையான சமுதாய நலத் திட்டத்தை நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்; அறிவிக்கப்பட்டு அது செயல்பட்டும் வருகிறது.

அதைவிட மேலாக நான் ஒன்றைச் சொன்னால் ஆளும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கு மனத் திருப்தி ஏற்படும். அவர்களோடு இணைந்திருக்கிற வலது கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு மன நிறைவு ஏற்படும். அவர்களோடு புதுத் தொடர்பு ஏற்படுத்தியிருக்கிற அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தினருக்கும் மன மலர்ச்சி ஏற்படும் ஒன்றை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உத்தமர் காந்தி பிறந்த நாள் அன்று ராஜ்பவனத்தில் அவர்களது பிறந்த நாள் தொடக்க விழாவைத் தொடங்கி வைத்தார்கள். அதற்கு நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.



1975 எப்ரல் 9] [திரு. சி.வி. எம். அண்ணாமலை]

தலைமை தாங்கி நடைபெற்ற விழாவில் முதலமைச்சர் அவர்கள் பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு திரு. உமா சங்கர் தீட்சித் அவர்கள் அருமையாகச் சொன்னார்கள். நமது சமுதாய நலத் திட்டம் எல்லோரும் போற்றத் தக்க வகையில் இந்த மாநிலம் மட்டுமல்லாமல் இந்திய துணைக் கண்டமே போற்றுகிற விதத்தில் அது என் கண் எதிரே களி நடனம் புரிகிறது, காந்தி அடிகளின் கனவை நனவாக்கும் வகையில் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமுதாய நலத் திட்டத்தை செயல் படுத்தி வருகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் பேசிய பேச்சை நம் அருமை சகோதரியார் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் தமிழ்ப் படுத்திக் கூறினார்கள்.

காந்தியடிகள் தொழுநோய்க்காரர்களுக்கு மனம் இரங்கினார்கள், ஊன முற்றோருக்காக மனம் இரங்கினார்கள், வாழ்க்கையில் நொந்து கிடந்த மக்களுக்குக் கை கொடுத்து கரை ஏற்ற கனவு கண்டார்கள், அதை நினை வாக்குகிற தலைவராக கலைஞர் கருணாநிதி அவர்கள் இந்த மாநில அரசின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நடத்துகிறார்கள் என்று சொன்னபோது அம்மையார் அவர்கள் மொழிபெயர்க்கத் தயக்கம் காட்டினார்கள். உடனே கலைஞர் அவர்கள், நான் சொல்லவில்லை. தீட்சித் அவர்கள்தான் சொல் லுகிறார்கள், சொல்லுங்கள் என்று சொன்ன பிறகுதான் சொன்னார்கள். காந்திய தத்துவத்திற்கு அப்பழுக்கு இல்லாத முறையில் இந்திய துணைக் கண்டத்தில் சமுதாய நெறியைக் காக்கிற ஆட்சி இந்த ஆட்சிதான்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> அமைச்சர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால், அம்மையார் அவர்கள் மொழிபெயர்க்கும்போது தன் கருத்துக்களைச் சொன் னார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்களா ?

<u>மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :</u> உண்மைக்குப் புறம்பாக அம்மையார் அவர்கள் எப்போதும் சொல்லமாட்டார்கள்.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி :</u> என் மொழி பெயர்ப்புக்கு களங்கம் கற்பிப்பது மாதிரி சொல்கிறார்கள். அவர்கள் கருத்தை அப்படியே சொன்னேன்.

<u>மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :</u> அம்மையார் அவர்கள் உண்மையை அப்போதாவது காந்தி அடிகள் என்ற உடனே ஏதோ ஓரளவாவது உண்மையைப் பேசி..........

<u>திருமதி த. ந. அனந்தநாயகி :</u> நான் உண்மையே பேசாதது மாதிரி யும் இப்போதுதான் பேசியது மாதிரியும் சொல்கிறார்கள். எப்போதும் அம்மையார் உள்ளதை உள்ளபடியே அஞ்சாத நெஞ்சத்தோடு எடுத்துச் சொல்லக்கூடியவர்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> திருமதி அனந்தநாயகி அவர்கள் 'நான்' என்று சொல்லாமல் எப்போதுமே அம்மையார் உண்மையையே சொல்லக்கூடியவர் என்று சொன்னார். அம்மையார் என்பது அவருடைய அம்மையாரா ?

<u>திருமதி த. ந. அனந்தநாயகி</u> : கனம் அமைச்சர் அவர்கள் என்னை அம்மையார் என்று சொன்னார்கள், அதே வார்த்தையைத் திருப்பிச் சொன்னேன்.

<u>மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை</u> : சமுதாய நலத் துறை மூலம் சேவை இல்லங்கள் என்ற பெயரால் தொண்டு நிறுவனங்கள் நடத்தப்படுகின்றன. ஆடவர்கள் நேர்மையற்ற போக்கில் கைவிட்ட அபலைகள், ஏழை எளிய திக்கற்ற விதைவகள், அனாதைகள் இவர்களுக்கு எதிர் காலத்தில் நல்லதொரு வாழ்வை சமைத்துத் தரும் பெரும் திட்டம் இன்றைய தினம் மிக்க, மலையென செய்யப்பட்டு வருகிறது.

தையல் தொழில் பற்றி சொல்லப்பட்டது. இயந்திரம் என்றால் பழுது ஏற்படக்கூடும். மனிதன்கூட அளவிறகு மீறி சாப்பிட்டுவிட்டால் அஜீரணம் ஏற்படுகிறது. வேலை அதிகம் கொடுத்தால் இயந்திரம் கெட்டு விடுகிறது. நான் சொல்வது நோக்கத்தைப் பார்க்க வேண்டும். நாட்டில் எவ்வளவோ சமயங்கள், மதங்கள் இருக்கின்றன. சாஸ்த்திரோத்தமர்கள், குருமார்கள் இருக்கிறார்கள். அவர்கள் இப்படிப்பட்ட அபலைகளுக்கு, விதவைகளுக்கு, அனாதைகளுக்கு, நொண்டிகளுக்கு, முடங்களுக்கு, கண் தெரியாதவர்களுக்கு, காது கேட்காதவர்களுக்கு, மூளை வளர்ச்சி பெறுதவர்களுக்கு காட்டாத உணர்வை, பெற்றெடுத்த தாய்தந்தையர் காட்டாத இரக்கத்தை அரசு அவர்கள்பால் காட்டுகிறது.

அடுத்த வீட்டில் பிறந்து விட்ட ஒரு தொழு நோயாளி, அவன் அங்கு பிறந்துவிட்ட காரணத்தால் நோய் வந்துவிடுவதில்லை. நோய் என்பது நாளாவட்டத்தில்தான் வருகிறது. பிறக்கிறார்கள், வளர்கிறார்கள், பள்ளிக்குச் சென்று படிக்கிறார்கள், பாதியில் நோய் வந்துவிடுகிறது. நோய் வந்த காரணத்தால் சமுதாயம் அவனை ஏற்க மறுக்கிறது. எல்லோரும் வெறுக்கிறார்கள். பெற்ற தாய் வெறுக்கிறாள். பெறுவதற்கு காரணமாக இருந்த தந்தை வெறுக்கிறான். அண்ணன் வெறுக்கிறான். கூடப் பிறந்த தம்பி, தங்கைகள் வெறுக்றார்கள். அந்நிலையில் தொழு நோயாளி பிச்சை பிச்சை என்று தெருவில் அலைகிறான். அவனுக்கு சமுதாயம் இரக்கம் காட்டவில்லை. ஆனால் நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அவர்களது பிறந்த தின பரிசாக தாய் காட்டாத ஒரு இரக்கத்தை, தந்தை காட்டாத ஒரு பரிவை, சமுதாயம் காட்டாத இரக்கத்தைக் காட்டி இன்றையதினம் தமிழக முதல்வர் அவர்கள் தொழு நோயாளிகளுக்காக மறுவாழ்வு இல்லங்கள் கட்டி அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கிற திட்டத்தை அமல்படுத்தி, அந்த மக்களுக்கு மறு வாழ்வு அளித்திருக்கிறார்கள். அம்மையார் அவர்கள் வெளியே இருப்பவர்கள் பிச்சைக்காரர்களைப் போலவும் உள்ளே இருக்கிறவர்கள் நோயற்றவர்கள் போலவும் தெரிகிறது என்று சொன்னார்கள்.

பிற்பகல் 1–30 )

நான் தயவுசெய்து கேட்கிறேன். நீங்கள் அங்கே சென்று அவர்களுக்குப் போடுகிற உணவையும், பரிமாறுகிற இடத்தையும் பார்த்தால் நாமும் அவர்களோடு உட்கார்ந்து சாப்பிட்டு வரலாமாவென்று தோன்றும். இதை நான் அலங்காரத்திற்காகவோ, வசிகரத்திற்காகவோ சொல்லவில்லை.



உண்மைக்குப் புறம்பாக நான் பேசுவதாகக் கருதிவிடக்கூடாது. நான் உண்மையைச் சொல்கிறேன். அத்தகைய சத்துள்ள உணவை நான் கூடச் சாப்பிடமுடியாது. நான் போகும்போது ஒவ்வொரு உணவையும் சாப்பிட்டுப் பார்க்கிறேன். நன்றாக இருக்கிறது, நல்ல முறையில் செய்யப்படுகிறது.

<u>திருமதி ஜோதி வெங்கடாசலம்</u> : தலைவரவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், அவர்கள் போகிற போதெல்லாம் நன்றாகப் போடுகிறார்கள் என்று. மந்திரி வருகிறார் என்றால் ஸ்பெஷலாக இருக்கும். சாதாரணமாக என்ன போடுகிறார்கள் என்று பார்க்க வேண்டும்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : தலைவரவர்களே, அது அம்மையார் அவர்கள் அமைச்சராக இருந்த காலம். இந்தக் காலத்தில் அல்ல.

<u>திருமதி ஜோதி வெங்கடாசலம்</u> : தலைவரவர்களே, அப்போது தொழு நோய் பிச்சைக்காரர் விடுதியே இல்லை.

<u>மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை</u> : தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் இவற்றைச் சொன்னது பாராட்டுக்குரிய ஒன்றாகும். நான் உண்மையாகவே இரண்டு முறை எந்த முன்னறிவிப்பும் இல்லாமல் பரனூர் சென்று பார்த்தபோது அதிகாரிகளெல்லாம், எந்த விதமான எச்சரிக்கையும் செய்யாமல் வந்து விட்டீர்களே, நீங்கள் வருவது தெரிந்திருந்தால் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருப்போம், வரவேற்றிருப்போம் மாலைகூட இல்லையே என்று சொன்னார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, நான் தனிக் குடும்பத்தைப் பார்த்துக் கேட்டேன். பெண்களைப் பார்த்துக் கேட்டேன். அங்கேயிருக்கிற ஆடவர்களைக் கேட்டேன். உங்களுடைய குறைகள் என்னவென்று அவர்களைக் கேட்டிருக்கிறேன். அவர்கள் மனம் விட்டுச் சொல்கிறார்கள்.

இங்கே முதல்வரவர்கள் பக்கத்தில் இருக்கிறார்கள். அவர்களை வைத்துக்கொண்டு எப்படி புகழ்வது என்று வெட்கமாக இருக்கிறது. எங்கள் கண்கண்ட ஆண்டவன் கலைஞர் அவர்கள், கருணாமூர்த்தி அவர்கள் என்று பள்ளு பாடுகிறார்கள். பள்ளுப்பாட்டாக அருமையாகக் கவி எழுதுகிறான். அதற்கு இசை அமைத்து, கொஞ்சமும் தாளம் வழுவாது, பஜனை பாட்டுப் பாடுவதைப் போல, கலைஞர் கருணாநிதி வாழ்க, உங்கள் ஆட்சியில் காணாததைக் கண்டோம், கனாடு உணர்கிறோம், நீண்ட நாட்களுக்குப் புழுவாய்த் துடித்தோம், துன்ப சூழலில் பின்னப்பட்டிருந்தோம். ஒரு கவளம் சோற்றுக்கு அலைந்தோம். உங்கள் ஆட்சியில் நிம்மதியாக வாழ்கிறோம் என்று கருத்துக்களைக் கொண்ட பாக்களை இசையோடு, தாளம் வழுவாது பாடிக் காட்டினார்கள். நீங்களும் வந்து பார்க்க வேண்டும், என்று அம்மையார் அவர்களையும் இந்த நேரத்தில் பணிந்து கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அருமையான சமுதாயத் திட்டத்தைப் பாராட்ட முடியவில்லை என்றால் புரிந்து கொள்ள முடியவில்லை. உண்மையாக நான் கேட்கிறேன். இன்றையதினம் எத்தனையோ கட்சிகள் மாறியிருக்கின்றன. எத்தனையோ அமைச்சர்கள் வந்து போயிருக்கிறார்கள். இளம் பிள்ளை வாதத்தினால் உள்ள பிள்ளைகளுக்கு ஆரம்ப காலத்தில் படிப்பு அறிவு இல்லாவிட்டால் எதிர்காலத்தில் அவர்கள் மருத்துவ சிகிச்சைப் பெற்று நோய் நீங்கி சமுதாயத்தில் வருகிறபோது நடக்க முடியாத தன்மை அவர்களுக்கு ஏற்படுகிறபோது அவர்கள் பிறவிக் குருடர்களாக, படிப்பு அறிவு அற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள் என்று அவர்களைப் பற்றி எண்ணிய ஒரே முதலமைச்சர் யார் என்று கருதுகிறீர்கள்?. அவர் தான், நித்தம் நித்தம் ராஜினாமா செய்யவேண்டுமென்று மற்றவர்கள் கூறுகிறார்களே, திரு எட்மண்ட் அவர்களின் முன்னைய தலைவரான டாக்டர் கலைஞர் அவர்கள்தான். அவர் யாருக்கும் இணை இல்லாதவர். இன்னும் சொல்லப்போனால் ஆசியா கண்டத்திலேயே அதிக செல்வாக்கு பெற்ற முதலமைச்சர் யார் என்றால் அவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆவார்கள்.

இந்த மன்றம் புகழ் வாய்ந்த மன்றமாகும். அத்தகைய இந்த பெருமைக்குரிய மன்றத்தில் இருந்த பெரும் தலைவர்களெல்லாம் முதலமைச்சர் பொறுப்பில் இருந்த காலத்தில் செய்யத் தவறிய காரியத்தை, ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவர், ஒரு கட்சியில் தொண்டனாக இருந்தவர், ஒரு நல்ல தொண்டனுக்குள்ள தூய்மையோடு இப்படிப் பட்ட இளம் பிள்ளை வாத நோயுள்ள குழந்தைகள் 8 வயதில் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிற காலத்தில், 10 வயதில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிற காலத்தில் அவர்கள் ஆரம்ப கல்வியைப் பெறாமல், சீர் கெட்டுப் போய் விடுகிறார்களேயென்று கருதி அவர்கள் எங்கே மருத்துவச் சிகிச்சை பெறுகிறார்களோ அதே இடத்தில் ஒரு பள்ளியை அவர்களுக்காகத் தொடங்கி, அவர்கள் 'அ' என்றால்' அம்மா' என்று சொல்லிட, அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிற தோற்றுவாயை வேறு எந்த அரசு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது என்று பார்க்கவேண்டும். (சிரிப்பு).

சிரிக்காதீர்கள். நான் உங்களைப் பார்த்துக் கேட்கிறேன்.

<u>திரு. ஏ. சுப்பிரமணியம்</u>: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அமைச்சரானவுடனே பேசியிருக்கவேண்டிய பேச்சை வெகு நாட்கள் கழிந்து இப்போது பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை</u>: திரு. சுப்பிரமணியம் அவர்கள் இந்த மானியத்தின்மீது பேசவில்லை. அவர்கள் பேசியிருந்தாலும் அவர்களுக்கும் பதில் சொல்லியிருப்பேன். மற்றவர்கள் பேசியதை அவர் கேட்கவில்லை. அவர்கள் பேசியதோடு இணைத்துப் பேசவேண்டிய காரணத்தினால் இப்படி பேசக் கடமைப்பட்டிருக்கிறேன். விவரங்களை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.





சத்துணவுத் திட்டத்தைப் பற்றி நமது முன்னாள் அமைச்சரும், இன்றைய எதிர்க்கட்சித் துணைத் தலைவருமாகிய அருமை திருவாட்டியார் ஜோதி அம்மையார் அவர்கள் சத்துணவு உணவுக்கு பிஸ்கட் கொடுக்க 5 ரூபாய், 10 ரூபாய் தருகிறார்களேயென்று அந்த ஊழியர்களைப் பற்றிக் கேட்டார்கள். அவர்கள் நிரந்தரமான முழு நேர ஊழியர்கள் அல்லர். இப்படி வழங்குகிற முறை கூட வாரத்திற்கு 6 நாட்கள் வழங்குவதில்லை. 5 நாட்கள், 4 நாட்கள் என்று இந்த அளவிற்குத் தான் என்று ஒரு வரைமுறை ஏற்படுத்தி அவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டும் செய்கிற வேலையாகும். ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் வேலை செய்கிறார்கள். ஓய்வூதியம் போல, ஊக்க ஊதியம் போல அளிக்கப் படுகிறது இந்தத் தொகை என்பதை அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதோடு இந்தத் திட்டத்தை தமிழகமெங்கும் இருக்கிற குடிசை மக்கள் பகுதிக்கும் இல்லாமையினாலும், வறுமையினாலும், வாடும் மக்கள் பகுதிக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்ற நிலை இருக்கிறது. இதன் மூலம் ஏழை எளியவர்கள், தாய்மார்கள், பிரசவத்திற்குப் பிறகு பெற்ற குழந்தைக்குப் பால் ஊட்டுவதற்கு சக்தியற்று தொல்லை படுகிற தாய்மார்கள், 3 மாத குழந்தை முதல் 6 வயது குழந்தை வரையிலும் உள்ளவர்கள் ஆகியவர்களுக்கு இந்த சத்துணவு திட்டம் வேண்டுமென்பதற்காக அருமையான திட்டத்தை இந்த சமூக நலத் துறையின் மூலம் செய்து வருகிறது.

இப்படிச் செய்வதற்கு இதுகாறும் மத்திய அரசாங்கம் பெருமளவிற்கு உதவி செய்து வந்தது. ஒரு வருத்தத்திற்குரிய செய்தியை சொல்கிறேன். அம்மையார் அவர்கள் விலைப் பட்டைப் பற்றி சொல்லி, இதற்காகவாவது போராட்டம் நடத்த வேண்டாமாவென்று கேட்டார்கள். இப்போது கேட்கிறேன் இதற்காகப் போராட்டம் நடத்துங்கள். தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்கள், சாறு பிழிந்த சக்கையாக இருக்கிறார்கள். அவர்களுக்கு படிப்பு அறிவு இல்லாத நிலைமையில் பிள்ளை பெறுவதை கட்டுப்படுத்திக் கொள்கிற சூழ்நிலைமை இல்லை. சுற்றுச் சார்பு நிலைமைகள் சரியாக இல்லை. அவர்களுக்குப் படிப்பறிவு இல்லாத காரணத்தினால் வறுமை அவர்களோடு பிறந்து விட்ட காரணத்தினால் வறுமையினால் வாடியிருக்கிற பெண்கள், இப்படிப் பட்ட அந்த பெண்கள் சமுதாயம் இன்றைய தினம் பிள்ளைப்பேறுகளை அதிகமாகப் பெற்றெடுத்து, சாறு போன தன்மையை, சத்திழந்த தன்மையை அடைந்திருக்கிறார்கள். அந்த மக்களுக்கு சத்துணவைத் தர வேண்டுமானால் அந்த ஏழை வனிதையருக்கு சத்துணவைத் தரவேண்டுமானால் மத்திய அரசாங்கம் நிதி ஆதாரத்தைக் கொடுக்கவேண்டும். இது பற்றி எந்த விதமான பேச்சையும் மத்திய அரசாங்கம் எடுக்கவில்லை. தொடர்ந்து தமிழக அரசு மத்திய அரசாங்கத்திற்கு விண்ணப்பம் போட்டுக் கொண்டிருக்கிறது. விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டோம், ஒரு கோடி அல்ல, 50 லட்சம் தருகிறோம் என்றாவது சொல்லலாம் அல்லவா, அதையும் மத்திய அரசு சொல்லவில்லை. அந்த அளவிற்கு இன்றைய தினம் தாழ்ந்த நிலையில் இருக்கிற மக்கள் சமுதாயத்தைப் பற்றி மத்திய அரசாங்கம் என்ன கருத்து கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக் கூறிக் கொள்கிறேன்.

[திரு. சி. வி. எம். அண்ணாமலை] [1975 ஏப்ரல் 9

அருமைத் தலைவரவர்களே, பொதுவாகவே இங்கே பல நண்பர்கள் அரிய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள்மீது நான் குறை கூறவில்லை. மீனளத் துறையின் மூலமாக, சமுதாய மேம்பாட்டு நலத்துறை மூலமாக செயல்பட்டு வருவதை திருப்பித் திருப்பி கூறியிருக்கிறார்களே தவிர இல்லாத ஒன்றை, கூற்றாக இங்கே கூறவில்லை என்று எடுத்துக் கூறி ஏறக்குறைய எல்லா கோணத்திலிருந்தும் கூறப் பட்டவைகளுக்கு ஒட்டு மொத்தமாகவே பதில் கூறியதாகக் கருதுகிறேன். பேரவைத் தலைவரவர்களே, நேரமாகிவிட்டது, சீக்கிரம் முடித்து விட வேண்டுமென்ற நிலை உள்ளதால் மீண்டும் விளக்கமாகச் சொல்லாமல், நான் சொன்ன கருத்துக்களை மனதில் கொண்டு, வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிற நண்பர்கள் நான் சொன்ன இந்த விளக்கங்களுக்குப் பிறகு அவைகளைத் திரும்பப்பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் கூறிய விளக்கங்களில் முழு நிறைவு பெறவில்லையென்றால் மேலும் கூறுகிற அரிய கருத்துக்களை ஏற்று செயல்படுவோம் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது.

கோரிக்கை எண்: 21-க்கு கொடுக்கப்பட்டிருந்த திரு ஏ. சுப்பிரமணியம், திரு பி. வெங்கடசாமி, திரு கே. ஏ. வகாப் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: எண் நிதிக் கோரிக்கை "21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,42,53,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 30-க்கு கொடுக்கப்பட்டிருந்த திரு ஜே. ஜேம்ஸ், திரு ஏ. சுப்பிரமணியம், திரு பி. வெங்கடசாமி, திரு. கே. ஏ. வகாப் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "நிதிக் கோரிக்கை எண் 30 — சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,60,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



1975 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-40 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

(6) பேரவை முன்வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

@ 168. Notification issued in G.O. Ms. No. 331, Rural Development and Local Administration, dated the 26th February 1975, in regard to an amendment to the Rules for Election of Chairman of Staning Committees under the Madras Corporation. [*Laid on the table of the House under section* 348 (*d*) *of the Madras City Municipal Corporation Act*, 1919 (*Tamil Nadu Act IV of* 1919)].

@ 169. Notification issued in G.O. Ms. No. 1547, Agriculture, dated the 3rd October 1974, in regard to establishment of a market at Budaiur in Thanjavur disrict to provide facilities for the purchase and sale of paddy, groundnut, greengram, blackgram and redgram. [(*Laid on the table of the House under section* 29 (4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959)].

170. Notification issued in G.O. R. No. 218, Commercial Taxes and Religious Endowments, dated 8th October 1974, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharges on benefit film shows in aid of the Chief Minister's Physically Handicapped Rehabilitation Fund. [*Laid on the table of the House under sections* 16 (4) *and* 8 (3) *of the Tamil Nadu Entertainments Tax Act*, 1939 (*Tamil Nadu Act X of* 1939) *and the Tamil Nadu Local Authorities Finance Act*, 1961 (*Tamil Nadu Act* 52 *of* 1961) *respectively*)].

171. Notification issued in G.O. R. No. 320, Commercial Taxes and Religious Endowments, dated the 23rd November 1974, in regard to exemption from liability to entertainments tax and additional surcharge on entertainments tax in respect of exhibition of films for the benefit of children all over Tamil Nadu by the Children's Film Society ofIndia or by their Zonal Distributors, Madras. (*Laid on the table of the House unde section* 16 (4) *of the Tamil Nadu Entertainments Tax Act*, 1939 (*Tamil Nad Act X of* 1939)].

B. *Reports, Notifications and Other Papers.*

% 164. The Performance Budget on Social Welfare, 1975-76.
% 165. The Performance Budget on Fisheries, 1975-76.

Laid on the Table of the House on 8th April 1975
Despatched to Members on 8th April 1975.

[1975 ஏப்ரல் 9

## இணைப்பு—I

[136ஆம் பக்கத்தில் 602ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

---

இதுவரையில தேசியமயமாக்கப்பட்ட பாட புத்தகங்களைத் தவிர 1974-75-ல் தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் வெளியிடவேண்டுமென்று ஆணையிடப்பட்ட நூல்களின் விவரம் :

| | பாடம். | வகுப்பு. |
|---|---|---|
| 1. மலையாளம், கன்னடம் தெலுங்கு,உருது முதலிய சிறுபான்மை மொழிகளிலுள்ள பாட நூல்கள். | கணிதம், அறிவியல் | |
| | வரலாறு,—<br>பூகோளம்— | III, V, VI, & VII |
| 2. ஆங்கில பயிற்று மொழியிலுள்ள நூல்கள். | கணிதம் | VI |
| | அறிவியல் | VI |
| | வரலாறு—<br>பூகோளம்— | VII |
| 3. புதிய பாடத் திட்டத்தின் படி திருத்தியமைக்கப்பட்ட நூல்கள். | கணிதம் (தமிழ்) | IV, V & VI |
| | ஆங்கிலம் | VI & VII |
| | அறிவியல் (தமிழ்) | VI |
| | தமிழ் | VII & IX |
| | வரலாறு —<br>பூகோளம்—<br>(தமிழ்) — | VII |



1975 ஏப்ரல் 9]

Particulurs of the Text a books ordered to be brought out by the Tamil Nadu Text Book Society from 1974-75 in addition to the books already nationalised,

| | *Subject* | *Standard* |
|---|---|---|
| 1, Books in minority languages of Malayalam, Kannada, Telugu and Urdu. | Mathematics & Science | III, IV, V & VI |
| | History & Geography | IV, V, VI,& VII |
| 2. Books in English Medium. | Mathematics | VI |
| | Science | VI |
| | History & Geography | VII |
| 3. New Versions of books in accordance with the revised Syllabus. | Mathematics (Tamil medium) | IV, V, & VI |
| | English | VI & VII |
| | Science (Tamil medium) | VI |
| | Tamil | VII & IX |
| | History & Geography (Tamil medium) | VII |

## இணைப்பு II.

[181-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

மீனளத்துறை மானியம்.

### 1. கொள்கைகள்.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மீன்பிடி தொழில் ஒரு முக்கிய பங்கு வகிக்க ஆரம்பித்துள்ளது. எண்ணிலடங்கா உள்நாட்டு நீர் நிலைகளிலும், தமிழ்நாட்டு கிழக்கு எல்லையிலுள்ள 1,000 கிலோமீட்டர் நீளமுள்ள, ஆய்விடப்படாத கடலிலும் கிடைத்திடும் அபரிதமான மீன் படுவளம் கடற்கரையின், நெடுகிலும் அமைந்துள்ள 150 கிராமங்களில் வாழ்ந்துவரும் மூன்று இலட்சம் மீனவர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதுடன், மற்றுமுள்ள மக்களுக்கும் சத்துணவை அளிக்கின்றது. மீன்பிடி தொழிலின் குறிப்பாக இருல் வகை மீனின் ஏற்றுமதி முக்கியத்துவத்தினால் மரபு வழி வகை வந்த மீனவர்களின் வசமிருந்து மீன்பிடி தொழிலில். தனியார் துறையைச் சார்ந்த வணிகர்கள், தொழிலதிபர்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. இதனால், இம் மாநிலம் இலாபகரமான ஏற்றுமதி வணிகத்தை வளர்த்து, நமது நாட்டிற்கு மிகத் தேவையான அந்நிய செலவாணியை குறிப்பிடத்தக்க அளவு பெற்று வருகிறது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை எய்துதலின் முக்கியத்துவத்தை உணர்ந்து மீன் படுவளத்தினை அதிகரிப்பதன் அவசியத்தை தமிழ்நாடு அரசு உணர்ந்துள்ளது.

(1) மீன் உற்பத்தியில் நவீன முறைகளைக் கையாண்டு மக்களுக்கு குறைந்த விலையில் சத்து நிறைந்த மீன் உணவினை வழங்கிடல் வேண்டி மீன் உற்பத்தியை அதிகரிப்பது.

(2) மீன்பிடி தொழிலில் உள்ள வேலைவாய்ப்பு அளவினை அதிகரிப்பது.

(3) இம் மாநிலம் ஒரு குறிப்பிடத்தக்க வருவாயை அடைந்திடவும், இந்நாட்டிற்கு மதிப்புமிகுந்த அந்நியச் செலவாணியைப் பெற்றிடவும் உதவி புரிவது.

### 2. மீன் வளம்.

சோழமண்டலக் கடற்கரையில் ஒரு பகுதியிலும், பாக் ஜலசந்தி, மன்னார் வளைகுடா, அரபிக்கடல் முதலிய இடங்களிலும் நீண்டு கிடக்கும் கடற்கரையைக் கொண்டுள்ள தமிழ்நாடு இடத்திற்கு இடம் வேறுபட்ட பருவநிலையினையும், மீன்வளத்தினையும் கொண்டுள்ளது. 77,000 சதுர கிலோ மீட்டர் அளவுள்ள கடலடி நிலத்தொடரும், 22 இலட்சம் ஹெக்டேர் அளவுள்ள கடலடி நிலத்தொடர் பகுதியினையும் கொண்ட 10-40 பாகம்



(Fathoms) ஆழம் அளவுள்ள இப்பகுதி மீன் பிடித்ததற்கு ஒரு பெரிய களமாக விளங்குகிறது. இம்மாதிரி ஆழமான கடற்பகுதிகளில் செயற்படும் திறன்வாய்ந்த போதிய அளவு கலன்கள் இல்லாத காரணத்தினால், அடிமட்டம் மற்றும் மேல்மட்டம் மீன்கள் போன்ற பல வகையான மீன்வளம் நிறைந்த ஆழ்கடல் பகுதிகளான வங்காள விரிகுடா, இந்து மகா சமுத்திரம் மற்றும் அரபிக் கடல் முதலியவற்றில் பெரும்பகுதி இன்னமும் பயன்படுத்தப்படாதுள்ளது. உணவு வேளாண்மை நிறுவனம் மற்றும் இந்திய அரசு கணிப்பின்படி தமிழ்நாட்டுக் கடற்கரைப் பகுதியில் உள்ள அடிமட்ட மீன்வளத்தினை இரண்டு மடங்கு அதிகரித்தல் இயலும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. மேல்மட்டப் பகுதிகளில் உள்ள மீன் உற்பத்தியினை நான்கு மடங்காக அதிகரித்திடல் இயலும். தென் மண்டலத்தில் உள்ள கடலடி நிலத்தொடரில் ஆழ்கடல் நண்டுவகைகள், ஆழ்கடல் இருல், மற்றும் பலதரப்பட்ட மீன்கள் கொண்ட மீன்பிடி களங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மன்னார் வளைகுடா மற்றும் பாக் ஜலசந்தியில் நடத்தப்பட்ட மீன்பிடி ஆய்வுகள் மிகுந்த கெளுத்தி மீன்களைக்கொண்ட களங்களைக் கண்டுபிடித்துள்ளன. இந்தியாவின் தென்மேற்கு கடற்கரைப் பகுதியில் இம்மேல்மட்ட மீனான "பொருவா" மிகுதியாகக் கிடைப்பது சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள ஆறுகள், துணை ஆறுகள், கிளையாறுகள் மற்றும் மீன் உற்பத்தி மற்றும் வேளாண்மைக்காக இவற்றில் கட்டப்பட்டுள்ள அணைக்கட்டுகள், பாசன நீர்த்தேக்கங்கள், பருவ மழையினால் நிறையும் நீர்த்தேக்கங்கள் முதலியன 3·51 லட்சம் ஹெக்டேர் அளவுள்ள இயற்கையான உள்நாட்டு மீன்வள அபிவிருத்திக் களமாக அமைந்துள்ளன. இவ்வகை வளத்தினின்று கடந்த இருபது வருடங்களில் மீன் உற்பத்தியை இரண்டு மடங்காக இம்மாநிலம் உயர்த்தியுள்ளது. கணிசமான அளவுக்கு உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்கு முனைப்புடன் மீன் குஞ்சுகளை விடுதல், அறிவியல் அடிப்படையில் மீன்களை வளர்த்தல், நிர்வகித்தல் போன்ற பணிகளை மீன்துறை மேற்கொண்டுள்ளது. இதே போன்று அறிவியல் மீன்பிடிப்பு முறைகளை மேற்கொள்ளுவதன் மூலம் கழிமுகங்கள், காயல்கள், உப்பங்கழிகள் போன்ற 46,750 ஹெக்டேர் பரப்புள்ள உவர் நீர் நிலைகளிலிருந்து இருல்கள், சிப்பிகள், நண்டு வகைகள் போன்ற கழிமுக மீன்வகைகளை நிரம்பப்பெற முடியும் என்பதும் நிச்சயமாகும்.

### 3. முதலீட்டின் அமைப்பு.

மேற்சொன்ன குறிக்கோள்களை அடைவதற்காக தொடர்ந்து செயல்பட்டு வரும் ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் பல்வேறு செயல்முறைகளை இம்மாநிலம் செய்துவருகிறது. திட்டச் செயல்முறைகளை நிறைவேற்ற மாநில அரசால் முதலீடு செய்யப்பட்டுள்ள நிதி விவரம் வருமாறு:—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| முதல் ஐந்தாண்டுத் திட்டம் .. .. .. .. | 31·34 |
| இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் .. .. .. | 75·30 |

[1975 ஏப்ரல் 9

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| மூன்றும் ஐந்தாண்டுத் திட்டம் .. .. | 257·27 |
| ஆண்டுத் திட்டம்—1966-67 .. .. .. .. | 128·69 |
| 1967-68 .. .. .. .. | 150·55 |
| 1968-69 .. .. .. .. | 121·71 |
| நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் .. .. .. | 982·51 |
| ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் (முன் மொழியப் பட்டுள்ளது.) | 1,880·00 |

முதலாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப் பட்டுள்ள தொகையான ரூ. 173·98 லட்சமும், 178·43 லட்சமும் மொத்த முதலீட்டில் முறையே 9·2 சதவிகிதம், 9·4 சதவிகிதம் ஆகும்.

## 4. தமிழ்நாடு மீன்வள அபிவிருத்திக் கழகம்.

வளர்ச்சியடைந்து வரும் திட்டங்கள் எல்லாவற்றையும் செயல்படுத்துவதற்கான நிதி வழங்குவதில் அரசே முக்கிய பங்கேற்றது. வணிக நோக்கோடு செயல்படும் முக்கியமான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு இருக்கின்ற குறைந்த நிதி ஒதுக்கீட்டுகள் வளர்ச்சியடைந்துவரும் இத் தொழிலுக்கு ஏற்ப வேகத்தையும், குறியீட்டையும் அடைவதற்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அரசினால் இயலாமல் இருக்கிறது. இம்மாதிரி வணிகநோக்குத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான நிதியைப் பெறுவதற்கு பல யோசனைகளை அரசு பரிசீலித்து, தமிழ்நாடு மீன்வள அபிவிருத்திக் கழகம் அமைப்பதே நல்லதொரு முடிவு எனக் கண்டது. அதன்படி ஏப்ரல் 1974-ல் மேற்சொன்ன கழகம் அமைக்கப்பட்டது. இக் கழகத்தின் அமைப்பையொட்டி மீன்துறை இதுவரை நடத்தி வந்த வணிகநோக்கு செயல் திட்டங்கள் பல இப்புதிய அமைப்பின்கீழ் மாற்றப் பட்டுள்ளன. இவ்வமைப்பு அரசு மற்றும் மீன்துறையின் கொள்கைகளுக் கேற்ப மீன்வள மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தும் முயற்சியில் தன்னை ஈடுபடுத்தும். மீன் துறையின் வணிகநோக்குப் பிரிவுகளான படகு கட்டும் நிலையங்கள், பதன நிலையங்கள். மீன்தூள் நிலையம், கலனடைப்பு நிலையம் முதலியன ஜூலை 1974-ல் மீன்வள அபிவிருத்திக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து, படகுகள் கட்டுதல், வழங்குதல், ஆழ்கடல் மீன் பிடிப்பு, மீன் பதனம், விற்பனை, மீன்தூள் உற்பத்தி முதலிய சார்ந்துள்ள திட்டங்கள் ஜூலை 1974 முதல் கார்ப்பரேஷனால் செயல்படுத்தப்படுகின்றன. வணிகநோக்கோடு இந்நிலையங்களை இயக்குவதற்கும், புதிய களங்களில் துணிவதற்கும் தேவையான நிதியுதவியை வணிக வங்கிகளிலிருந்து பெறுவதற்கும் கழகம் விடாமுயற்சியுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இக்



1975 ஏப்ரல் 9]

கழகத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முக்கிய சிறப்புக் கூறுகள் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன :—

''அது ரூபாய் 5 கோடி அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்தைக் கொண்டுள்ளது. நான்கு படகு கட்டும் நிலையங்கள், மூன்று பணிப்பொறி நிலைய அமைப்புகள், ஒரு மீன்தூள் நிலையம், ஒரு கலனடைப்புத் தொழிற்சாலை ஆகியவைகளை நிலைச் சொத்துக்களாக மீன்துறையினின்றும் எடுத்துக் கொண்டுள்ளது. மேற்சொன்ன ரூபாய் 80 லட்சம் மதிப்புள்ள வணிகப் பிரிவுக்ள் தவிர அரசு தன் பங்குத் தொகையாக ரூபாய் 50 லட்சம் வழங்கியுள்ளது. கழகம் தனது நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நிதி நிறுவனங்களின் உதவியுடன் செயல்படுத்த வேண்டும். மீனவர்களுக்கு இயந்திரப் படகுகள் வழங்கும் திட்டத்தில் வழிவகைகள், முன்பணமும், விடுதொகைக் கடனும் தந்து கழகத்திற்கு அரசாங்கமும் உதவுகிறது.

மீனவர்களுக்கு 80 சதவிகிதம் தொகையைக் கடனாகத்தர முன்வர ஒத்துக்கொள்ளும் வேளாண்மை மறுநிதி நிறுவனம் மற்றும் வங்கிகளின் உதவியுடன், அரசின் விடு தொகைக் கடனாக 15 சத விகிதம் எஞ்சிய தொகையை ஒதுக்கீட்டாளர்களிடமிருந்து பெற்று மீனவர் குழுக்களுக்கு படகுகளைக் கழகம் வழங்கும். முதல் ஆண்டில் 250 படகுகளைக் கட்டி வழங்க திட்டமுள்ளதுடன், இப்படகுகளின் எண்ணிக்கை வரும் ஆண்டுகளில் தேவைகளுக்கேற்ப 300 முதல் 350 ஆக உயர்த்தப்படும்.

23.6 மீட்டர் நீளமுள்ள ஆறு டிராலர்களை ஆழ்கடல் மீன்பிடிப்புக்கென கழகம் பெற்று இவைகளில் பிடிக்கப்படும் மீன்களை உள்நாட்டுத் தேவைகளுக்கும் ஏற்றுமதிக்கும் பயன்படுத்தும் இயந்திரமயமாக்கும் திட்டத்தின் கீழ் வாடகைதாரர்களால் வாடகைத் தொகைக்காக ஒப் படைக்கும் மீன்களை உள்நாட்டு விற்பனைக்கும் வெளிநாட்டு ஏற்றுமதிக்கும் பயன்படுத்த கழகம் திட்டமிட்டுள்ளது.

நாட்டிலுள்ள மிகப் பெரிய மீன்தூள் நிலையம் இக் கழகத்தின் பொறுப்பில் உள்ளது. இந் நிலையத்தில் உச்ச அளவுக்கு மீன்தூள் உற்பத்தி செய்யப்பட்டு இம்மீன்தூள், கோழி இன அபிவிருத்திக் கழகம், கால்நடை பராமரிப்புத் துறை இவைகளுக்கு வழங்கப்படுவதுடன் அந்நிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும்.

மீன்பிடி தொழிலின் வளர்ந்துவரும் நடவடிக்கைகளுக்கு ஈடு கொடுக்குமுகத்தான் வரும் ஆண்டுகளில் தூத்துக்குடி, சென்னை துறைமுகப் பகுதிகளில் ஒருங்கிணைப்பு மீன் பதன நிலையங்களைக் கழகம் நிறுவும்.

ஏற்கெனவே வழங்கப்பட்ட படகுகள் சிலவற்றிற்கு என்ஜின்கள் புதுப்பிக்க வேண்டியுள்ளது. சில நிபந்தனைகளுக்குட்பட்டு இரண்டாம் முறையாக அசல் ஒதுக்கீட்டாளர்களுக்கு புது என்ஜின்களை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இயற்கையின் கொடுமைகளுக்கு இலக்காகி

மூழ்கிய படகுகள் ஈட்டுறுதி செய்யப்பட்டிருப்பின், அவைகளுக்குப் பதிலாக ஒதுக்கீட்டாளர்களுக்குப் புதிய படகுகள் வழங்கவும் அரசு அனுமதி தந்துள்ளது.

மீனவர்களின் முறையீட்டுக்கிணங்க, ஒதுக்கீடு செய்யப்பட்ட படகுகளில் ஒதுக்கீட்டாளர்களின் விருப்பத்திற்கு ஏற்ப இன்ஜின்களைத் தேர்ந்தெடுக்கவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மீன் பிடிப்பைப் பெருக்கவும், படகுகளின் இயங்கு திறனை மேம்பாடு செய்யவும் குறிப்பிட்ட கோரிக்கைகளுக்கிணங்க, இப்படகுகளில் விஞ்ச், பவர் டேக்-ஆஃப் போன்ற சாதனங்கள் பொருத்தித் தரப்படுகின்றன. இயந்திரமயமாக்கும் திட்டம் அண்மையில் அமைக்கப்பட்டுள்ள மீன் வள அபிவிருத்திக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் மேற்சொன்ன பணிகளைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் கழகம் ஈடுபடும்.

## 5. டிராலர் கட்டும் நிலையம், மண்டபம்.

அண்மைக் கடல் மற்றும் ஆழ்கடல் பகுதிகளிலுள்ள மீன் வளத்தைப் பிடிப்பது நம் நாட்டில் போதிய அளவில் ஸ்டீல் மீன்பிடி டிராலர் கட்டும் நிலையங்கள் அமைப்பதைப் பொருத்ததாகும். அதிர்ஷ்டவசமாக மீனளத் துறை தென்னிந்திய இரெயில்வேயிடமிருந்து எடுத்துக்கொண்டுள்ள 'டிரை டாக்' அமைப்பு நடுத்தர டிராலர் கட்டும் தொழிற்சாலை அமைப்பதற்குப் பொருத்தமான இடமெனக் கண்டறியப்பட்டுள்ளது. இதனால் மண்டபத்தில் ஒரு டிராலர் கட்டும் நிலையம் நிறுவுவதென அரசாங்கம் முடிவு செய்து, தமிழ்நாடு கைத்தொழில் அபிவிருத்தி நிறுவனத்தை கூட்டுத் துறையில் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனம் ஒன்றை அமைத்து மண்டபத்தில் நடுத்தர டிராலர்களைக் கட்டுவதற்கு ஆணை பிறப்பித்துள்ளது. 1974ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ்நாடு கைத்தொழில் அபிவிருத்தி நிறுவனமும் மண்டபத்தில் 'கிரேட் லீ' டிராலர் கட்டும் நிலையம் ஒன்றை நிறுவி மீன் துறையிலிருந்து 'டிரை டாக்' வழுக்குவழி பட்டறை ஆகியவைகளைப் பொறுப்பேற்று இது குறித்த மேல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சமீப காலத்தில் மண்டபம் டிராலர் கட்டும் நிலையத்திலிருந்து வெளிவரும் டிராலர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள், படகுப் பணியாளர்கள், பதனம் செய்வோர், தொழிலாளர்கள் போன்ற எண்ணற்றோருக்கு வேலை வாய்ப்பை அளிப்பதுடன், இம் மாநிலத்தின் மீன் உற்பத்தியையும் பெருக்குவதற்கு உதவும்.

## 6. இயந்திரமயமாக்கல்.

மிகவும் முக்கியமான இயந்திரமாக்கும் திட்டத்தை பொதுத் துறைக் கழகத்திடம் ஒப்படைத்த பிறகு, மீன் துறை ஏற்கெனவே வாடகைக் கொள்முதல் அடிப்படையில் வழங்கிய 1,600 இயந்திரப் படகுகளை நிர்வகிக்க வேண்டிய பணியிலும், படகு கட்டுவதற்கு ஃபெர்ரோ சிமெண்ட் போன்ற பல பொருள்களைக் கொண்டு படகுகள் கட்டும் பணியில் ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளது. படகுகளின் விலையையும் பராமரிப்புச்



செலவையும் குறைக்கும் நோக்குடன் பல்வகைப் பொருள்களைக் கொண்டு படகு கட்டும் பணியில் தொடர்ந்து மீன் துறை ஈடுபட்டுள்ளது. ஃபெர்ரோ சிமெண்ட் படகுகள் கட்டுவதில் மீன் துறை மேற்கொண்டுள்ள ஆரம்ப வேலைகள் அனைவரும் அறிந்ததொன்றாகும். பல்வேறு அளவுள்ள ஃபெர்ரோ சிமெண்ட் படகுகளுக்கென வடிவமைப்புகள் வெளிநாட்டிலிருந்து பெறப்பட்டு 38 அடி படகுகள் 5 கட்டப்பட்டுள்ளதுடன் இன்னும் 5 படகுகள் கட்டும் வேலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 1975–76-ல் கீழ்கண்ட படகுகள் கட்டும் வேலையை இந்நிலையம் மேற்கொள்ளும் :—

32 அடி ஃபெர்ரோ சிமெண்ட் படகு ஒன்று.

31 அடி ஃபெர்ரோ சிமெண்ட் படகு ஒன்று.

படகுகளும் பார்ஜ்களும் ஒன்று.

மேலும் 14.80 இலட்ச ரூபாய் செலவில் லாயிட்ஸ் மேற்பார்வையின்கீழ் ஒரு 54 அடி ஃபெர்ரோ சிமெண்ட் படகை நாகர்கோவிலுள்ள கோட்டாறு சமூக நல சங்கத்திற்காக ஃபெர்ரோ சிமெண்ட் படகு ஆராய்ச்சி நிலையம் கட்டி முடிக்கும். இப் படகு திறம்படக் கட்டி முடிக்கும் தறுவாயில் பணியாளர்கள் இத்தகைய பெரிய படகுகளைக் கட்டுவதில் நல்ல அனுபவம் அடைவார்கள். இத்தகைய அனுபவம் மீன் துறை இத்தகைய படகுகளைக் கட்டுவதை மேற்கொள்ள உதவும்.

சோதனை மீன் பிடிப்புக்கும், பல்வேறு பொருள்களால் கட்டப்படும் படகுகள் கடலின் தன்மை, மீன் பிடியிலுள்ள நிலைமைகளுக்கேற்ப எவ்வாறு செயல்படுகின்றன என்பதையறிய ஒரு 32½ அடி ஃபைபர் கிளாஸ் படகு வாங்க மீன் துறை எண்ணியுள்ளது.

நான்காம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இயந்திரப் படகுகள் கட்டுவதற்கென நிர்ணயிக்கப்பட்ட இலக்கைத் தமிழ்நாடு பெரும்பாலும் எட்டியுள்ளது. இத் திட்டத்தின் முக்கியப் பகுதியான பராமரிப்பு வசதிகள் மீனவர் சமூகப் பொருளாதார நலத் திட்டமாக மீன் துறையால் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. நம் மாநிலத்தில் தற்போது 1,600 இயந்திரப் படகுகள் மீன் பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. இப் படகுகளைச் சீர் செய்வதற்கும், பேணிப் பராமரிப்பதற்குமான பராமரிப்பு நிலையங்கள் முக்கிய மீன் இறங்கு துறைகளான சென்னை, கடலூர், நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி, குளச்சல் போன்ற இடங்களில் மீன் துறையால் நிறுவப்பட்டுள்ளன. கடலூர், தூத்துக்குடி ஆகிய இடங்களிலுள்ள பராமரிப்பு நிலையங்கள் பணிப் பட்டறைகளாக விரிவுபடுத்தப்படுவதுடன் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மல்லிப்பட்டினத்திலும், தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பரங்கிப்பேட்டையிலும் பராமரிப்பு நிலையங்கள் துவக்கப்படவுள்ளன. ஐந்தாம் திட்ட காலத்தில் தற்போதுள்ள 4 பராமரிப்பு நிலையங்கள் பணிப் பட்டறைகளாக விரிவாக்கப்படுவதுடன் பொருத்தமான இடங்களில் மேலும் 10 பராமரிப்பு நிலையங்கள் நிறுவ இலக்கிடப்பட்டுள்ளது.

## 7. நாட்டுப் படகு இயக்குபவர்களுக்கு உதவி.

நாட்டுக் கலன்கள் மற்றும் கட்டுமரங்களின் மீன் பிடித் திறனைப் பெருக்குவதற்கு இக்கலன்களை இயந்திரமாக்குவதற்கு ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாட்டுக் கலன்கள் மற்றும் கட்டு மரங்கள் வைத்திருக்கும் மீனவர்களுக்கு இவைகளை இயந்திரமய மாக்குவதற்கான கடன் அடிப்படையில் ரூ. 1 இலட்சம் மதிப்புள்ள "அவுட்-போர்டு" மோட்டார்களும் ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள "இன்-போர்டு" இன்ஜின்களும் பெற்று வழங்கப்படும். மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களைக் கெடாமல் பாதுகாப்பதற்கான மற்றொரு திட்டம் அரசுக் கடன் உதவியுடன் காப்பிட்ட பெட்டிகளை மீனவர்களுக்கு வழங்குவதாகும். 1975–76-ல் இத்தகைய 200 காப்பிட்ட பெட்டிகளைப் பெற்று மீனவர் களுக்கு வழங்க ஏற்பாடு ள்ளது.

## 8. அளவாய்வும், புதிய மீன் பிடிப்பிடங்களைக் கண்டு பிடித்தலும்.

தமிழ்நாட்டுக் கடற் பகுதியில் வளம் வாய்ந்த கடல் மூலப் பொருள்கள் நிரம்பவுள்ளனவென்பதை நமது ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்தியுள்ளன. மீன் மூலவளங்களின் தன்மை, மீன் பிடிப்பிடங்கள், இவ்விடங்களில் மீன் பிடிபடும் பருவம் இவைகளைக் கண்டறிவதற்கு தேவையான விரிவான அளவாய்வுகளை மேற்கொள்ளுவதற்குத் தேர்ந்த கருவிகளைக் கொண்ட மீன்பிடி கலன்களும், தகுதி வாய்ந்த பணியாளர் தொகுதியும், அவசிய மாகும். அண்மையில் பெறப்பட்ட ஜீங்கா மாதிரி 57' டிராலர்களைக் கொண்டு கடலோரப் பகுதியில் அளவாய்வு வேலைகளும் தூரக்கடல் பகுதியில் மீன் பிடிப்பிடங்களைக் கண்டறியும் வேலைகளும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளன· அளவாய்வு செய்யப்படாத பகுதிகளில் விரை வில் இப்பணியை மேற்கொள்வதற்காக நடப்பு ஆண்டில் மல்லிப்பட்டினத் தில் புதியதோர் அளவாய்வு நிலையம் ஏற்படுத்தப்படவுள்ளதுடன் மேலும் சில படகுகளையும், பணியார் தொகுதியையும் பெற்று 1975–76-ல் கடலூரி லுள்ள அளவாய்வு நிலையத்தை விரிவுப்படுத்தத் திட்டமுள்ளது. அள வாய்வு வேலையை முனைப்புடன் மேற்கொள்ள சென்னை, இராமேசுவரம், கன்னியாகுமரி, ஆகிய இடங்களிலுள்ள அளவாய்வு நிலையங்களுக்கு 43–1/2 அடி, 50 அடி பெரிய படகுகள் வழங்கத் திட்டமுள்ளது. "மருதம்" "முல்லை" ஆகிய 57' மீன்பிடி டிராலர்கள் 1974–75-ல் பாக் ஜலசந்தி, மன்னார் வளைகுடா மற்றும் சென்னையைச் சார்ந்துள்ள கடற் பகுதியில் அளவாய்வைச் செய்து வருகின்றன.

அளவாய்வு மற்றும் புதிய மீன் பிடிப்பிடங்களைக் கண்டறிதல் ஐந்தாம் திட்ட காலத்தில் மீன்துறை செயல்படுத்தும் முக்கிய பணிகளில் ஒன்றாய் அமையும். ஐந்தாம் திட்டத்தில் கடலோர, அளவாய்வை மேற்கொள்ள ரூ. 90 இலட்சமும் சோதனை மீன் பிடிப்பை மேற்கொள்ள ரூ. 76·67 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஐந்தாம் திட்டத்தின் நடப்பு ஆண்டுகளில் அளவாய்வுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான செயல் முறைகளை மீன்துறை வகுக்கும்.



தூரக் கடல் பகுதியில் அளவாய்வு செய்தல் இந்திய அரசின் பொறுப்பாகும். தூத்துக்குடி தூரக் கடல் பகுதியிலுள்ள மீன்வள வாய்ப்புகள் பற்றிய சிறந்த தகவல்களை அறிவதற்கு தூத்துக்குடியிலுள்ள இந்திய அரசின் தூரக் கடல் மீன் பிடிப்பு நிலையம் சிறநத பணியாற்றி வருகிறது. இந்நிலையம் மாநில மீன் துறையின் நெருங்கிய தொடர்புடன் செயல்பட்டு வருகிறது· பர்ஸ்-சின் மற்றும் கடலின் நடுப்பாக டிரால் போன்ற பல்வகை வலைகளைப் பயன்படுத்தி சோதனை மீன் பிடிப்பை இந்நிலையம் நடத்தி வருகிறது. சென்னைக் கடலோரப் பகுதியில் மீன் பிடிப்பிடங்களைக் கண்டறியும் பணியை முனைப்புடன் மேற்கொள்ள சென்னையில் மேலும் ஒரு நிலையத்தை 1972-ல் இந்திய அரசாங்கம் நிறுவியுள்ளது. மாநில அரசின் வேண்டுகோளின் பேரில் கீழைக் கடல் பகுதியிலுள்ள மீன்வள வாய்ப்புகளை அளவாய்வு செய்ய ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டக் குழுவை இந்திய அரசு அணுகியுள்ளது. மாநில மற்றும் மத்திய அரசால் கடலோரம் மற்றும் தூரக் கடல் பகுதிகளில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் அளவாய்வு மற்றும் மீன் பிடிப்பிடங்களைக் கண்டறியும் பணிகள் மீனவர்களுக்கும் இத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கும் பெரும் பயன் அளிக்கும்.

## 9. இயந்திரப் படகுக்கு மீன்பிடி கருவிகள் வழங்குதல்.

இயந்திரமயமாக்கும் திட்டம் மீனவள அபிவிருத்திக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால் ஐந்தாம் திட்டக் காலத்தில் இயந்திரப் படகுகளுடன் நைலான் நூல் வழங்குதல் தமிழ்நாடு மீன்வள அபிவிருத்திக் கழகத்தால் முக்கிய திட்டமாகச் செயல்படுத்தப்படும். எனினும், நடப்பு ஆண்டில் மீனவர்களுக்கு வழங்க ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள நைலான் மீன் துறையால் பெறப்பட்டு கழகத்திடம் ஒப்படைக்கப்படும். 1975–76 முதல் தன் நிதியிலிருந்து கழகமே நைலானைப் பெற்று மீனவர்களுக்கு வழங்கும்.

## 10. உள்நாட்டு மீன்வளம்—(1) உள்நாட்டு நீர்நிலைகளில் விட மீன் குஞ்சுகள் உற்பத்தியும் விநியோகமும்.

சென்ற 30 ஆண்டுகளில் பாசனக் குளங்கள், நீர்த் தேக்கங்கள், மற்றுமுள்ள நீர்நிலைகளில் இடைவிடாமல் முறைப்படி மீன் குஞ்சுகளை மீன் துறை விட்டு வளர்த்ததன் விளைவாக ஐந்தாம் திட்டத் துவக்கத்தில் 0·36 இலட்சம் டன்னாக இருந்த மீன் உற்பத்தி 1.50 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இப் பணிக்கு அதிகப்படியான மீன் குஞ்சுகள் தேவைப் படுவதால் இயற்கை மூலங்களிலிருந்து கிடைக்கும் மீன் குஞ்சுகளின் அளவைப் பெருக்க மூன்று, நான்காம் திட்ட காலத்தில் தூண்டுதல் முறை முட்டை பெறும் கேந்திரங்களை அமைக்க வேண்டியது அவசியமாகிறது. தற்போது தமிழ்நாட்டில் 4·50 கோடி மீன் குஞ்சுகள் தூண்டுதல் முறை முட்டை பெறும் கேந்திரங்களிலிருந்து 1.50 கோடி குஞ்சுகள் இயற்கை மூலகங்களிலிருந்தும் ஆக மொத்தம் 6·00 கோடி மீன் குஞ்சுகள் சேகரிக்கப் படுகின்றன. மாநிலத்தில் தற்போதுள்ள 12 தூண்டுதல் முறை முட்டை பெறும் நிலையங்களைத் தவிர 1975–76-ல் மேலும் ஒரு நிலையம் செங்கற் பட்டு மாவட்டத்திலுள்ள செம்பரம்பாக்கத்தில் நிறுவப்படவுள்ளது. மீன்

வளர்ப்புக்குகந்த எல்லா நீர் நிலைகளிலும் விடுவதற்கு 10·50 கோடி மீன் குஞ்சுகள் தேவைப்படுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, நமது மீன் குஞ்சுகள் தேவையில் இன்னும் 4·50 கோடி மீன் குஞ்சுகளுக்கு வழிவகை செய்ய வேண்டியுள்ளது. இயற்கை மூலங்களிலிருந்து கிடைக்கும் மீன் குஞ்சுகள் கலப்படமாகக் காணப்படுவதால், எப்போதும் சிறந்தவையாய் இருப்பதில்லை. எனவே, நமது தேவையைப் பூர்த்தி செய்வதற்கு கெண்டை வகை மீன்களைத் தூண்டி இனப் பெருக்கம் செய்து நல்ல ரக மீன் குஞ்சுகளைப் பெறுவது அவசியமாயிற்று. இதை எண்ணத்திற்கொண்டு சாத்தனூர் அணை, திருமூர்த்தி, மஞ்சளாறு, அளியாறு நீர்த்தேக்கம் போன்ற இடங்களில் மீன் வளர்ப்புக் குட்டைகள் மீன் குஞ்சு வளர்ப்பிடங்கள் அதிகப்படியாக மேம்பாடு செய்யப்படுகின்றன. தூண்டுதல் முறை முட்டை பெறும் கேந்திரங்களிலிருந்து பெறப்படும் மீன் குஞ்சுகளின் வாழ்வுக் காலத்தை மிகுதிப்படுத்த 1975–76-ல் ஒரு ஜாடி மீன் குஞ்சு தயாரிப்பிடம் பவானிசாகரில் நிறுவப்படவுள்ளது. தூண்டுதல் முறை இனப் பெருக்க முறையில் மீன் குஞ்சுகளைப் பெறுவதற்கு வேண்டிய பிட்யூடரி சுரப்பிகளைப் பாதுகாத்து வைக்க அமராவதி, அளியாறு நகர், திருமூர்த்தி நகர் போன்ற இடங்களிலுள்ள தூண்டுதல் முறை குஞ்சு பெறும் கேந்திரங்களுக்கு குளிர் முறைப் பாதுகாப்புப் பெட்டிகள் வழங்க ஏற்பாடுள்ளது.

### (2) நீர்த் தேக்கங்களில் மீன்வள அபிவிருத்தி.

நீர்த்தேக்கங்களில் மீன் குஞ்சுகளை விடுதல், பாதுகாப்பு நடவடிக்கைகள், மற்றும் உரிமைச் சீட்டு வழங்கியோ அல்லது துறையின் மூலமோ மீன் பிடித்தல் போன்றவை தொடர்ந்து மன நிறைவையளிக்கத்தக்கதாய் இருப்பதுடன் பிடிக்கப்படும் மீன்களும் உள்நாட்டுச் சந்தைகளுக்கும் மேற்கு வங்காளத்திற்கும் அனுப்பப்படுகின்றன. ஏனைய நீர்த் தேக்கங்களில் செய்ததைப் போல் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பிளவுக்கல் நீர்த்தேக்கமும் 1975–76-ல் மீன் வள அபிவிருத்திக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு காலப்போக்கில் மீன் கிடைப்பதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது.

### (3) உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்பாசிக் குத்தகை.

அரசுடைமையாக்கப்பட்ட நீர் நிலைகளிலும் மீன் பிடிக்கும் உரிமையை பொது ஏலத்தில் விடாது மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குத்தகைக்குத் தரப்பட்டு வந்த சலுகை 1972-ம் ஆண்டின் குத்தகைத் தொகையுடன் 10 சத வீத அதிகத் தொகைக்கு 1975–76 இறுதி வரை தொடர்ந்து அளிக்கப்படும்.

## 11. கழிமுக மீன்வளம்.

" மாரிகல்சர் "

கழிமுக மீன் வகைகளைக் கழிமுகங்களிலும், காயல்களிலும் வளர்ப்பது ஆராய்ச்சிக்குரியதோர் பிரச்சினையாய் உள்ளதால் இந்திய வேளாண்மை



ஆய்வுக் குழுவின் உதவியுடன் திட்ட நிதி ஒதுக்கீட்டில் அடையாறு, மணக்குடி, பரங்கிப் பேட்டை போன்ற இடங்களில் இது பற்றிய ஆராய்ச்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காயல்களில் இறால்களை விட்டு வளர்ப்பதில் காட்டப்படும் ஆர்வம். பழவேற்காடு, கோவளம் போன்ற இடங்களில் மீன் துறை விரிவான ஆராய்ச்சியை மேற்கொள்வதற்குத் தூண்டுகோலாய் அமைந்துள்ளது. கழிமுக மீன் வகைகளின் உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் 47,000 ஹெக்டேர் பரப்புள்ள கழிமுக நீர் நிலைகளில் மேம்பாட்டு மீன் வளர்ப்பு முறைகளைப் புகுத்துவதே இத்துறையின் குறிக்கோளாகும். பழவேற்காடு கழிமுகத்தில் அளவாய்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு அங்குள்ள மீன் வளத்தைப் பெருக்கும் நோக்குடன் ஒரு முன்னோடித் திட்டம் அரசால் ஒப்பளிக்கப்பட்டு இத் திட்ட வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழுவின் கூட்டுடன் உவர் நீர் மீன் வளர்ப்பில் சோதனைகளைத் தொடர்ந்து மேற்கொள்தற்கு 1975-76-ல் அடையாறில் மீன் வளர்ப்புக் குட்டைகள் அமைக்கப்படும்.

## 12. பயிற்சி.

புதிதாகப் புகுத்தப்பட்டுள்ள இயந்திரப் படகுகளை இயக்குவதற்குத் தேவையான திறமை வாய்ந்த ஆள்-சக்தியை அளிப்பதற்கும், தேர்ந்த முறையில் தயாரிக்கப்படும் மீன் பிடிக் கருவிகளைக் கையாளுவதற்கும் இளம் மீனவர்களுக்கு பயிற்சியளிக்க பயிற்சி நிலையங்களை மீன் துறை நிறுவியுள்ளது. இப் பயிற்சி நிலையங்களில் நவீன மீன் பிடிமுறைகள், மாலுமி இயல், இயந்திரப் பாடம் ஆகியவைகளில் 10 மாதப் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சி காலத்தில் ஒவ்வொரு மாணவருக்கும் மாதந்தோறும் ரூ. 50 உதவித் தொகையாகத் தரப்படுகிறது. இதுவரை இப் பயிற்சி நிலையங்களில் 4,375 மீனவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு இதில் பெரும்பாலானோர் நம் நாட்டுக் கடலில் மீன் பிடிப்பிற்குட்பட்டுள்ள இயந்திரப் படகுகளில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

மீன்பிடித்தல், மீன்பிடி கருவிகளைத் தயாரித்தல், இன்சினை ஓட்டுதல்-பராமரித்தல், தூண்டுதல் முறை இனப்பெருக்கம், பதனமுறை போன்ற பல்வேறு பிரிவுகளில் மீன்துறைப் பணியாளர்கள் சிறந்த தகவல்களையும், அறிவையும் பெற, சென்னை, கொச்சி, பம்பாய், ஐதராபாத், கட்டாக், பாரக்பூர் போன்ற மத்திய அரசின் பயிற்சி நிலையங்களில் நல்கப்படும் பயிற்சி வசதிகள் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன.

## 13. பனிக்கட்டி நிலையங்கள், குளிர் அறைகள் மற்றும் பதன நிலையங்கள்.

முக்கிய மீன் இறங்குதுறை மற்றும் விற்பனைக் கேந்திரங்களில் பனிக்கட்டி நிலையங்கள், குளிர் அறைகள், உறைய வேய்ப்பு நிலையங்கள் மற்றும் ஏனைய பதன நிலையங்கள் 42 உள்ளன. அரசாங்கத்தின் கொள்கை முடிவுப்படி எண்ணூர், மண்டபம், தூத்துக்குடி போன்ற இடங்களில் செயல்படும் பெரிய பனிக்கட்டி மற்றும் பதன நிலையங்களை, வணிக ரீதியில் இயக்க தமிழ்நாடு மீன்வள அபிவிருத்திக் கழகத்திடம்

ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஏனைய இடங்களிலுள்ள சிறிய நிலையங்கள் அனைத்தும் வசதிகளைக் குறைந்த செலவில் மீனவர்கள் பெற மீன் துறையால் பணித்துறைப் பகுதிகளாக தொடர்ந்து செயல்படுத்தப்படும். 1974–75-ல் நார்வே திட்டத்தின்கீழ் பெறப்பட்ட 2-டன் திறனுள்ள பிளேட் ஃப்ரீசர் எண்ணூரில் நிறுவப்பட்டுள்ளது. இதே திறனுள்ள இன்னும் ஒரு பிளேட் ஃப்ரீசர் பெறப்பட்டு பொருத்தமான இடத்தில் 1975–76-ல் நிறுவப்படவுள்ளது. மீன்களைப் பாதுகாத்து வைக்கவும், விற்பனை செய்யவும் உதவுமுகத்தான் நம் மாநிலத்தில் ஏழு இடங்களிலுள்ள குளிர் அறைகள், உறைய வைப்புக் கிடங்குகளாக மாற்றப்பட உள்ளன. மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்களைப் பாதுகாக்க செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள உய்யாலிக்குப்பத்தில் 1975–76-ல் ஒரு பனிக்கட்டி நிலையம் நிறுவப்படும்.

பெரிய மீன்பிடித் துறைமுகங்களில் பெரிய அளவுள்ள பனிக்கட்டி நிலையங்கள், குளிர் அறை மற்றும் உறைய வைப்புக் கிடங்குகள் நிறுவ வேண்டுமென்பதும், உள்நாட்டில் மீன் விற்பனைக்கு வசதியளிக்க சங்கிலித் தொடர்போல குளிர் அறை உறையவைப்புக் கிடங்கு வசதிகள் நல்க வேண்டு மென்பதும் அரசின் தற்போதைய எண்ணமாகும். அண்மையில் அரசு மேற்கொண்டுள்ள கொள்கை முடிவுப்படி இப்பணிகள் தமிழ்நாடு மீன்வள அபிவிருத்திக் கழகத்தால் செயல்படுத்தப்படும். இதுபோலவே எற்கெனவே கழகத்திடம் ஒப்படைக்கப்பட்ட மண்டபம் மீன் தூள் நிலையமும், தூத்துக்குடியிலுள்ள கலனடைப்புத் தொழிற்சாலையில் வணிக ரீதியில் செயல்படுத்தப்படும்.

எனினும் மீனவர்கள் பிடிக்கும் மீன்களைக் கெடாமற்காத்து புதிய நிலையில் விற்பனை செய்வதற்குதவ சிறியனவாயுள்ள பனிக்கட்டி நிலையங்களும் குளிர் அறைகளும் சமூக நலத் திட்டம் போன்று மீன் துறையால் செயல்படுத்தப்படும்.

## 14. மீன்பிடி தொழில்சார் தொழிற்பேட்டை.

தனியார்களுக்கு உதவியளித்து மீன்பிடி தொழிலில் புகுவதை ஊக்குவிப்பதே அரசின் கொள்கையாகும். இக்கொள்கைக்கு ஒப்ப மீன்பிடி துறைமுகங்களுக்கு மீன்பிடி துறைமுகங்களைச் சார்ந்துள்ள இடங்களை சீர்செய்து அவ்விடங்களில் மீன்பிடி தொழில்சார் கைத்தொழில் அமைப்புகளை நிறுவுவதற்கு வேண்டிய இடத்தைக் கணிசமான வாடகைக்கு தனியார்களுக்குத் தர உதவியளிக்கப்படுகிறது. தூத்துக்குடி, மண்டபம், கடலூர் ஆகிய இடங்களில் மீன்பிடி துறைமுகப் பகுதியிலுள்ள நிலங்களைத் தவிர எண்ணூரிலுள்ள தரிசு நிலங்களும் மேம்பாடு செய்யப்பட்டு மீன்பிடி கைத்தொழில்களை தனியார்கள் நிறுவ சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. எண்ணூர், கடலூர், மண்டபம் போன்ற இடங்களில் உள்ள இத்தகைய சிறு நிலப் பகுதிகள் எற்கெனவே வழங்கப்பட்டுள்ளன.





## 15. முத்து வளம்.

தூத்துக்குடிக் கடலோரப் பகுதியில் சங்கு குளித்தல் புகழ் வாய்ந்ததோர் தொன்மையான தொழில் என்பது அனைவரும் அறிந்ததே. அண்மை ஆண்டுகளில் பல்வகைக் காரணங்களால் இயற்கையாக முத்துச் சிப்பி உற்பத்தி இல்லாமல் உள்ளது. சங்கு பார்களில் பொதுவாக சிப்பிகள் வெறுமையாகி வருவதால் முத்துச் சலாபம் எப்பொழுது புதுப்பிக்கப்படும் என்பதை மதிப்பிட்டுக் கூறுதல் கடினமாயுள்ளது. இதே நேரத்தில் நம்பிக்கையை கைவிடாது மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தின் கூட்டுடன் "முத்து வளர்ப்பு" முறைகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள மீன் துறை ஆலோசித்து வருகிறது. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத் திட்டத்தின் கீழ் "முத்து வளர்ப்புத் திட்டத்தை" செயல்படுத்துவதில் மீன்துறை ஈடுபடும். ஜப்பானில் வணிக அடிப்படையில் பரவலாகக் கையாளப்படும் செயற்கை முத்து வளர்ப்பு முறைகள் சோதனையாக இங்கு மேற்கொள்ளப்படும். இச்சோதனை வெற்றி பெறின் தமிழ் நாட்டுக் கடலோரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் முத்து வளர்ப்புக்கு இத் திட்டம் பெருவாய்ப்புக்களை நல்கும்.

## 16. சங்கு வளம்.

1971-ல் சங்கு மீன்வளத்தை குத்தகைக்கு விடும் கொள்கையை அரசு ஆராய்ந்து தூத்துக்குடி கடலோரப் பகுதியிலுள்ள சங்கு மீன் வளம் நீங்கலாக ஏனைய இடங்களில் தடையற்ற முறையில் சங்கு குளிக்கலாம் என்பதற்கான கீழ்க்கண்ட ஆணையை 1971 மே திங்களில் பிறப்பித்தது:—

(1) தூத்துக்குடி சங்கு சலாபம் நீங்கலாகவுள்ள தமிழ் நாட்டுக் கடலோரச் சங்குச் சலாபப் பகுதிகளில் உரிமை பெற்ற சங்கு குளியாட்களால் தங்குதடையின்றி சங்குகளைச் சேகரிக்கலாம்.

(2) சங்குவளத்தைப் பாதுகாத்தல் மற்றும் ஒழுங்காகப் பிடித்தல் ஆகிய நிபந்தனைகளுக்குட்பட்டு தனிப்பட்ட சங்கு குளியாட்களுக்கு மீன் துறையால் சங்கு பிடிக்கும் உரிமை வழங்கப்படும்.

(3) சங்கு குளியாள் ஒவ்வொருவரும் ஆண்டொன்றுக்கு ரூபாய் 10 உரிமைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும்.

மேற்கண்ட முடிவின்படி தூத்துக்குடி சங்குச் சலாபம் துறையால் ஆண்டுதோறும் நவம்பர் முதல் மே திங்கள் வரை நடத்தப்பட்டு வருகின்கின்றது. ஆண்டொன்றுக்கு 4 முதல் 5 லட்சம் சங்குகள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்டத் தொகையை செலுத்தி குளியாட்களிடமிருந்து பெறப்படும் சங்குகள் டெண்டர் முறையில் விற்பனை செய்யப்படுகின்றன. இருப்புள்ள சங்குகளில் பெரும்பகுதி மேற்கு வங்காள கைத் தொழில் கழகத்திற்கு விற்பனை செய்யப்படுவதுடன் எஞ்சியுள்ளவை சங்குசார் குடிசைத் தொழில்களை ஊக்குவிக்க கூட்டுறவுச் சங்கங்களுக்கு

வழங்க ஒதுக்கப்படுகின்றது. சங்குகளின் விற்பனைத் தொகை தமிழ்நாடு மாநிலக் கணக்காய்வுத் தலைவரால் நிர்ணயிக்கப்பட்டு சங்குகள் உற்பத்திக் கிரயத்துக்குமேல் 15 சத விகிதம் இலாபம் வைத்து விற்கப்படுகின்றன.

## 17. ஆராய்ச்சி.

கன்னியாகுமரி, தூத்துக்குடி, நாகப்பட்டினம், இராமேஸ்வரம், அடையாறு, சேத்துப்பட்டு, எண்ணூர், பவானி சாகர், உதகமண்டலம் ஆகிய இடங்களிலுள்ள மாநில ஆராய்ச்சி நிலையங்கள், கடல் மீன் உயிரியல் நன்னீர் உயிரியல், நீருயிரியல் மீன் வள தொழில் முறை ஆகியவைச் சார்ந்த சிக்கல்களைத் தொடர்ந்து ஆராய்ந்து வருகிறது. கோவளத்தில் "மாரிகல்சர்" பற்றி ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான ஒரு புதிய திட்டமும், கழிவு மீன்களைப் பயன்படுத்துவது குறித்து ஆராய்ச்சியும் உவர்நீர் மீன்வளர்ப்புப் பண்ணையும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் உதவியுடன் சென்னையில் நிறுவப்பட்டுள்ளன. மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தின் கூட்டுடன் முத்து வளர்ப்புப் பற்றி மேற்கொள்ளப் பட்ட ஆராய்ச்சித் திட்டம் தூத்துக்குடியில் தொடர்ந்து தன் வேலைகளைச் செய்து வருகிறது. மாநில அளவில் உள்ள ஆராய்ச்சிக் குழு ஒன்று மீன் துறையில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்பார்வை செய்து அவைகளை அப்போதைக்கப்போது திறனாய்வு செய்து வருகிறது.

## 18. சமூக நலத் திட்டங்கள்.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அவைகளின் உறுப்பினர்களுக்கும் வீடு கட்டுவதற்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கு நிதியுதவியளிக்கப்படு கிறது. மேற்கூறிய காரணத்திற்காக பலகைத் தொட்டி குப்பம் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ. 34,600 (ரூ. 5,600 கடனாகவும், ரூ. 29,000 அரசின் மானியமாகவும்) வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

கடலில் மீன் பிடிக்கும்போது புயல், வெள்ளம் போன்ற இயற்கையின் கொடுமைகளால் தாக்கப்பட்டு உயிரிழக்கும் மீனவக் குடும்பத்திற்கு ரூ. 1,000 நிவாரணமாக வழங்கப்படுகிறது. மீன்பிடி கலங்களையும் கருவிகளையும் புதுப்பிக்கவும், மீனவர்களுக்கு மறு சீர் அமைப்பு நல்கவும், மீன் துறையால் கடனும் மான்யமும் வழங்கப்படுகிறது. கடல் அரிப் பாலோ, எண்ணெய்க் கப்பல் நிறுத்துமிடம், மீன்பிடித் துறைமுகம், அணுசக்தி திட்டம் ஆகியவைகளின் அமைப்பாலோ பாதிக்கப்பட்ட மீனவர் வர்களுக்கு குடியிருப்புக்களை அமைத்து மீனவர்கள் வாழ்வதற்கு மாதிரி மீனவக் கிராமங்களை மீன்துறை உருவாக்குகின்றது. இவ்வாறு கல்பாக்கம், அம்மாப்பட்டினம் ஆகிய இடங்களின் அமைக்கப்பட்டுள்ள இத் தகைய குடியிருப்புக்களில் 373 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

## 19. இந்தியா–நார்வே திட்டம்.

மண்டபத்தில் இந்தியா–நார்வே திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யப் பட்டுள்ள படகு கட்டும் நிலையம், பதன நிலையங்கள் மீன் தூள் நிலையம் ஆகியவை அரசின் கொள்கை முடிவுப்படி தமிழ் நாடு மீன்வள அபி



விருத்திக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. எனினும் இது திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்யப்பட்ட கரையோர வசதிகள் மற்றும் மீனவர் பயிற்சி நிலையம் மீன் துறையுடன் சேர்க்கப்பட்டு மீன் துறையால் நிர்வகிக்கப் பட்டுள்ளது.

உதவி ஒப்பந்தம் முடிவு பெறினும்கூட நம் தேசத்தின் மீன்வள கைத்தொழில் அபிவிருத்தியில் நார்வே அரசாங்கம் தொடர்ந்து அக்கறை செலுத்தி வருகின்றது. 1972-ல் கீழ்க் கண்ட தளவாடங்களை நார்வே அரசாங்கம் "உதவி" அடிப்படையில் வழங்கியுள்ளது.—

மால்கள் மற்றும் பர்ஸ்–சீன் பணிக்கான துணைக் கருவிகள்.

(1) பர்ஸ்–சீன் வலைகள் .. .. .. 2 ஜதை.

(2) துண்டு செய்யும் கத்திகள் .. ..360.

(3) பிளேட் ஃப்ரீசர் .. .. .. 1.

நார்வே திட்டத்தின்கீழ் 1973-ல் கீழ்க்கண்ட தளவாடங்களை வழங்க ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

(1) பிளேட் ஃப்ரீசர் .. .. .. 1.

(2) ஆழ்கடல் மிதப்புகள் .. .. ..250

(3) எக்கோ சவுண்டர்—(சிமராட் இ.எல்.) ..2

பிளேட் ஃப்ரீசர் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது. ஆழ் கடல் மிதப்புகள் மற்றும் எக்கோ சவுண்டர்கள் வழங்குதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 20. அரை மில்லியன் வேலை வாய்ப்புத் திட்டம்.

மீன் துறையில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தவும் கல்விபயின்ற தொழில் நுட்ப யோக்கியதாம்சங்களுள்ளவர்களை பயன்படுத்திக்கொள்ள வும் இந்திய அரசு ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இதன்படி இத் தகைய யோக்கியதாம்சங்கள் உள்ள வேலையற்றவர்களை படகு, கட்டுதல், பதனம் செய்தல், பராமரிப்பு வசதி மற்றும் படகு ஓட்டுதல் ஆகிய பணி களில் அமர்த்துவதற்கு மீன் துறை வழி வகுத்துள்ளது. மீன் துறையால் முன் மொழியப்பட்ட விரிவான திட்டங்கள் இந்திய அரசால் ஒப்பளிக்கப்ப பட்டு மீன் துறையால் செயல்படுத்தப்படுகின்றன. இத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள 23 கூட்டுறவுகளில் 600 பேர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

கல்வி கற்ற வேலையற்றோர்களுக்கு வேலை வழங்க மாநிலம் முழுவதும் நான்கு வகைக் கூட்டுறவுகள் அமைக்கப்பட்டுள்ளன. சேர்க்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் மூலதனம் போன்ற விபரங்கள் கீழே தரப் பட்டுள்ளன.—

| நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள். | அமைக்கப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை. | பணியில் அமர்த்தப்பட்டவர்கள். உறுப்பினர்கள். பட்டதாரிகள். | டிப்ளமோ பெற்றவர்கள். | ஏனையோர்கள். | மொத்தம். | நடைமுறைச் செலவு மூலதனம். ரூ. |
|---|---|---|---|---|---|---|
| படகுகள் கட்டுவதற்கான சங்கங்கள் .. .. .. .. | 3 | 3 | 6 | 115 | 124 | 11,80,000 |
| படகுகள் இயங்குவதற்கான சங்கங்கள் .. .. .. .. | 12 | 70 | 19 | 265 | 360 | 39,24,000 |
| பதனம் செய்வதற்கும் உறைய வைப்பதற்குமென சங்கங்கள் .. | 3 | 14 | 16 | 24 | 54 | 6,22,000 |
| படகுகள் பராமரிப்பதற்கான சங்கங்கள் .. .. .. .. | 5 | 5—5 | 12 | 40 | 62 | 7,38,000 |
| ஏனையவை .. .. .. .. .. .. .. .. | .. | .. | .. | .. | .. | 3,11,000 |
| | 23 | | | | 600 | 67,75,000 |

மீனவக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலதனப் பங்குத் தொகையாக இந்திய அரசு ரூ. 50.39 இலட்சம் அளித்துள்ளது.



## 21. கருத்தரங்குகளும் கூட்டங்களும்.

மாநில மீன்வள ஆலோசனைக் குழுவின் 21-வது கூட்டம் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 1974-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் கன்னியாகுமரியில் நடத்தப்பட்டது.

உள்நாட்டு மீன்வள வளர்ச்சிக் கருத்தரங்கொன்று கோயமுத்தூரி லுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் தலைமையில் 1974-ம் ஆண்டு ஜூன் திங்களில் கோயமுத்தூரில் நடத்தப்பட்டது.

## 22. நிர்வாகம்.

திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள மீன்வள நடவடிக்கைகளையும் எல்லாத் திட்டச் செயல் முறைகளையும் நிர்வகிப் பதற்கும் ஒரு வட்டார அலுவலகம் புதுக்கோட்டையில் 1975–76-ல் துவக்கப்படும்.

## 23. மீன்பிடிப்பு துறைமுகங்கள் மற்றும் இறங்குதுறை வசதிகள் அபிவிருத்தி.

மீன் துறையாலும் தனியார் துறையாலும் மேலும் மேலும் புகுத்தப்பட்டு வரும் டிராலர்களுக்கும் மீன்பிடி விசைப் படகுகளுக்கும் தங்குதுறை மற்றும் இறங்குதுறை வசதிகளின் தேவையை உணர்ந்து இயந்திரமயமாக்கும் திட்டத்திற்குத் துணையாக மாநில கடலோரமாக மீன் பிடித்துறைமுகங்களும் தங்குதுறை வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் கடலூர், நாகைப்பட்டினம், மண்டபம் முதலிய இடங்களில் சிறிய அளவில் தங்கு துறை வசதிகள் முன்னமேயே செய்யப் பட்டு இருக்கின்றன.

தூத்துக்குடியில் ரூ. 210 லட்சம் மதிப்பீட்டில் ஒரு பெரிய மீன்பிடிப் துறைமுகம் கட்டப்பட்டுள்ளது. இந்த துறைமுகம் 400 மீன்பிடி இயந்திரப்படகுகள் தங்குவதற்கு வசதியளிக்கும். நடுத்தர அளவுள்ள டிராலர்கள் தங்குவதற்கு இத் துறைமுகம் கருத்திற் கொள்ளப்பட்டா லும் கடல் தரையில் கடின பாறைகள் இருந்ததின் விளைவாக 9 அடி ஆழத்திற்கு மேல் இத்துறைமுகம் தோண்டப்படவில்லை. முழுவதும் தோண்டுவதற்கு பாறைகளை வெடி வைக்க வேண்டி இருக்குமென்றும் இதற்கு செலவு மிக அதிகமாகும் என்றும் இந்திய அரசு எண்ணியது. எனவே, தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தை இயந்திரப்படகுகள் தங்குவதற்கு மட்டும் பயன்படுத்திக்கொள்ளுமாறு மத்திய அரசு மாநில அரசுக்கு சொன்ன ஆலோசனையை மாநில அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இத்துறைமுகம் ஏற்கனவே செயல்படத் தொடங்கி இங்குள்ள அபிவிருத்தி வசதிகளை இயந்திரப் படகுகள் பயன் படுத்தி வருகின்றன.

[1975 ஏப்ரல் 9

சென்னையில் ஒரு பெரிய மீன்பிடித் துறைமுகம் அமைக்க ரூ. 668 லட்சத்திற்கு மேல் திருத்திய ஒப்பளிப்பை இந்திய அரசு வழங்கியுள்ளது. இப் பணியை செய்துமுடிக்க ஒப்படைக்கப்பட்டுள்ள சென்னை துறைமுக பொறுப்புக்குழு இவ்வேலையை செய்யத் தொடங்கி கிழக்குப்புறத்திலும் வட பகுதியிலும் உள்ள அலை தடுக்குகளில் அமைப்பு வேலை நடைபெற்று வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மல்லிப்பட்டணம் கிராமத்தில் இறங்கு துறை வசதி அமைப்புக்கு ரூ. 10.60 லட்சம் நிதி ஒப்பளிப்பை இந்திய அரசு அண்மையில் வழங்கியுள்ளது. இத்துறைமுக அமைப்பு வேலை 1975–76-ல் மேற்கொள்ளப்படும்.

### 24. முடிவுரை.

ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடான ரூ. 18.80 லட்சத்திற்கெதிராக 1975–76 ஆண்டுத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு ரூ. 1,78·43 லட்சம் என்ற அளவில் இருக்கும். மீனவர்களுக்கு இயந்திரப் படகுகள் வழங்குவதற்கு விடுதொகையாகவும் தன் மூலதனப் பங்காக உள்ள தொகையாகவும் (ஈக்விட்டி கேபிடல்) தமிழ்நாடு மீன்வள அபிவிருத்திக் கழகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட ரூ. 70.00 லட்சம், இதில் உள்ளடங்கும். ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்ட முதலீட்டிற்கேற்ப ஆண்டு திட்டத்திற்கு தற்போதுள்ள கடினமான நிதி நிலைமை காரணமாக அதிகப்படியான நிதி அரசால் ஒதுக்கீடு செய்யமுடியாமல் இருக்கிறது.



1975 ஏப்ரல் 9]

## இணைப்பு II

[182 ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க]

## சமூக நலத் துறை மானியம்

## கொள்கை விளக்கக் குறிப்பு 1975–76

“சமூக நலம்” என்ற தலைப்பின்கீழ் 1975–76 - ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையை நான் இம்மன்றப் பேரவையின் முன் வைத்து ரூ. 260.73 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய அவையின் ஒப்புதலைக் கோருகிறேன்.

### தோற்றுவாய்

2. மகளிர் நலத் துறை 1947 - ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. மகளிர் நல இயக்குநர் ஒருவரைக் கொண்ட முழு அளவிலான துறையொன்று 1955 - ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாடு மாநில சமூக நல வாரியம் 1954 - ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. 1958-ல் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் கொண்டு வரப்பட்டதை அடுத்து, மகளிர் நலத் துறை, மாநில சமூக நல வாரியம், சமுதாய வளர்ச்சித்திட்டத்தின் மகளிர் நலப் பிரிவு ஆகிய மூன்று அமைப்புகளும், 1961 - ஆம் ஆண்டில் ஒருங்கிணைக்கப்பட்டு, தனிப்பட்டதோர் மகளிர் நலத் துறையாக உருவாக்கப்பட்டது. 1972 - ஆம் ஆண்டில் மகளிர் நலத் துறையின் பெயரை, சமூக நலத் துறை என்று மாற்றியதும் குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும். - 1970 ஆம் ஆண்டு முதல் சத்துணவுத் திட்டம், 1974 - ஆம் ஆண்டு முதல் உடல் ஊனமுற்றோர் நலத் திட்டம் போன்ற சிரியதோர் புதிய பொறுப்புக்களுடன் இத் துறை சிறப்பாக செயலாற்றி வருகிறது.

### நிர்வாக அமைப்பு

3. மாநில அளவில் சமூக நலத் துறை இயக்குநரே துறையின் தலைவராவார். துணை இயக்குநர் ஒருவரும், நேர்முக உதவியாளர் இருவரும், குழந்தைகள் நல சிறப்பு அலுவலர் ஒருவரும், சிறப்புச் சத்துணவுத் திட்ட சிறப்பு அலுவலர் இருவரும், முதுநிலை கணக்கு அலுவலர் ஒருவரும், இளநிலை கணக்கு அலுவலர் ஒருவரும், உடல் ஊனமுற்றோர் நல சிறப்பு அலுவலர் ஒருவரும் சமூக நல இயக்குநருக்குத் துணை புரிகின்றனர்.

4. மாவட்ட அளவில் மாவட்ட மகளிர் நல அதிகாரியொருவர் உள்ளார். இத்துறைத் திட்டப் பணிகள் அனைத்திற்கும் இவரே பொறுப்புள்ளவர். மாவட்ட மகளிர் நல அதிகாரிகள் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளாக உயர்த்தப்பட்டுள்ளனர். பஞ்சாயத்து ஒன்றியங்களுடன் இணைக்கப்பட்ட சமூக நலப் பிரிவு அலுவலர்கள், கிராம ஊர் நலப் பணியாளர்கள் ஆகியோர் களப்பணி அலுவலர்கள் ஆவர்.

### மகளிர் நலம்.

5. 1974-75-ஆம் ஆண்டுத் திட்டத்தில் ஏழை மகளிர்களுக்கு பொருளாதார, சமூகப் பொருளாதார நிலைகளில் புது வாழ்வு அளிப்பதற்காக பொருத்தமான திட்டம் தயாரிக்கத் திட்டமிடப் பட்டது. தென்னாற்காடு மாவட்டம் உளுந்தூர்பேட்டையிலும், தர்மபுரி மாவட்டம் ஹரூரிலும் ஆக இரண்டு இடங்களிலும் ஆயத்த உடைகள் தைக்க பயிற்சி அளிக்கும் நிலையங்கள் 1—7—74 முதல் ரூ. 43,000 செலவில் தொடங்கப்பட்டன. பல்வேறு நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு ஒரே சீரான உதவித் தொகை வழங்கப்படவில்லை. ஆதலால் 1974–75-ல் ரூ. 40,300 செலவில் பல்வேறு பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் ஒரு திங்களுக்கு தலா ரூ. 30 வீதம் அளிக்க ஒப்பளிக்கப்பட்டது. எட்டாவது வகுப்புத் தேர்ச்சி பெற்ற மகளிருக்கு, ரூ. 31,500 செலவில், இல்லக் காப்பாளர்களாகவும் (House keepers) இல்லப் பணியாளர்களாகவும் ( House Maids) வேலைவாய்ப்பு பெறுவதற்காக தாம்பரம் பணி இல்லத்தில் பயிற்சியளிப்பதற்கு ஒப்பளிக்கப்பட்டது. மேலும் பெயர் பெற்ற தனியார் நிறுவனங்களுக்கு அனைத்துப் பெண்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்கள் செயல்படுத்த ரூபாய் ஒரு இலட்சம் வரை மானியம் அளிக்கப்படுகிறது.

### பணி இல்லங்கள்.

6. 18 வயது முதல் 30 வயது வரை உள்ள ஆதரவற்ற பெண்களுக்கு, தாம்பரத்திலும் கடலூரிலும் தஞ்சாவூரிலும் ஆக மூன்று பணி இல்லங்களை இத்துறை நடத்தி வருகிறது.



அவர்களுடன், அவர்களின் இரு குழந்தைகளும் சேர்க்கப்படுவர். மேலும் 6 தனியார் தொண்டு நிறுவனங்களுக்கும் பணி இல்லங்கள் நடத்துவதற்கான மானியம் அளிக்கப்படுகிறது.

7. சேவை இல்லப் பயிற்சி முடித்த மாணவிகளுக்கு கீழ்க்கண்ட திட்டப்படி மறுவாழ்வு அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது :—

(i) அரசாங்கத் தொழில் நுட்ப பயிற்சிக்கு அனுப்புவதற்காக தாம்பரம் பணி இல்லத்துடன் 50 பெண்கள் கொண்ட தையல் பயிற்சி நிலையம் இணையாக நடத்தப்பட்டு வருகிறது. மற்ற பணி இல்லங்களும் 15 பெண்கள் கொண்ட தையல் பயிற்சி இல்லங்களை நடத்தி வருகின்றன.

(ii) மூன்று பணி இல்லங்களிலும், ஸ்ரீசேவாமந்திரில் ஒன்றுமாக நான்கு சுருக்கெழுத்து தட்டெழுத்துப் பயிற்சி நிலையங்கள் நடைபெற்று வருகின்றன.

(iii) இளநிலை பிரிவு ஆசிரியைப் பயிற்சி நிலையம் ஒன்றும் தாம்பரம் பணி இல்லத்தில் நடைபெற்று வருகிறது.

(iv) ஆயத்த உடைகள் தைக்கும் பயிற்சி நிலையம் ஒன்று தாம்பரத்திலும், கடலூரிலும் உள்ள பணி இல்லங்களில் நடைபெற்று வருகிறது.

8. தஞ்சை பணி இல்லத்திற்கு ரூ. 81,800 செலவில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அதனை மேலும் விரிவாக்க ரூ. 1,26 லட்சம் செலவில் 1975–76-ல் கட்டுவதற்கு திட்டமிடப் பட்டுள்ளது,

### பணிபுரியும் பெண்கள் இல்லம்.

9. குறைந்த வருவாய், நடுத்தர வருவாய் உள்ள பணிபுரியும் பெண்களுக்கென 1967-ல் 25 பெண்கள் கொண்ட ஒரு பணிபுரியும் பெண்கள் இல்லம் சென்னை மாநகரத்தில் இத்துறை வாயிலாக ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. அதன் ஓராண்டு செலவு ரூ. 34,200 ஆகும்.

### பயிற்சி நிலையங்களும் உற்பத்தி நிலையங்களும்.

10. இரண்டாம், மூன்றும், ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் அரிசனங்கள், பழங்குடியினர், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனங்களைச் சேர்ந்த மகளிர் நலனுக்காக பயிற்சி நிலையங்களும், உற்பத்தி நிலையங்களும் துவக்கப்பட்டு அரிசன

நலத் துறை, பிற்பட்டோர் நலத் துறையின் நிதி உதவியால் இத்துறையின் மேற்பார்வையில் நடத்தப்பட்டு வந்தன. இரண்டாம், மூன்றும், ஐந்தாண்டு திட்ட காலம் முடிவடைந்தபின் இந்த நிலையங்கள் அனைத்தும் சமூக நலத் துறையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் எல்லா வகுப்பைச் சேர்ந்த மகளிருக்காக தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. கிராமப்புற மகளிர் எளிதான குடிசைத் தொழில்கள் வாயிலாக கூடுதல் வருவாய் பெற வாய்ப்பு அளிப்பதே இந்நிலையங்களின் நோக்கமாகும். மூன்று அல்லது நான்கு பிரிவு முடிந்த பின்னர் பயிற்சி நிலையம் உற்பத்தி நிலையமாக மாற்றப்பட்டு பயிற்சி பெற்ற பெண்களுக்கு அவர்களால் முடிக்கப்படும் பொருட்களுக்குத் தகுந்தாற்போல் கூலி வழங்கப்படும்.

### மகளிர் நலக் கிளைகள்.

11. சமூக நலத் துறையின் சாதனைகளுக்குப் பிறப்பிடம் இந்த மகளிர் நலக் கிளைகள்தான். மாநில முழுவதும் 50 மகளிர் நலக் கிளைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இக் கிளைகள் வாயிலாக கிராமப்புற மகளிர் தொடர்பு கொள்ளப்படுகின்றனர். மகளிர் நலக் கிளைக்கு அமைப்பாளர் நியமிக்கப்பட்டு காலையில் முன்னதாக வகுப்புகள் நடத்துகின்றனர். மாலையில் ஒவ்வொரு இல்லத்துக்கும் சென்று குடும்பக் கலை, சத்துணவு, குழந்தை வளர்ப்பு முதலியன குடும்பப் பெண்களுக்குக் கற்றுத் தருகின்றனர். மேலும் மகளிர் கூட்டங்கள் நடத்தி தையல், பாய் முடைதல், தையல் இலைகள் செய்வதற்கான பயிற்சியும் அளிக்கின்றனர். ஒவ்வொரு கிளைக்கும் ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 6,000 செலவாகிறது.

### தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு மானியம்.

12. சமூக, பொருளாதாரத் துறையில் நலிவுற்ற மகளிருக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும் தொண்டு செய்யும் நிறுவனங்களுக்குக் கீழ்க்கண்ட காரணங்களுக்காக அரசு மானியம் வழங்கி வருகிறது :—

(அ) அனாதை மகளிருக்காக பணி இல்லங்கள் நடத்துவதற்கு மானியம். இதன் கீழ் ஐந்து தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் அளிக்கப்படுகிறது.



(ஆ) இளம்பிள்ளை வாதம், மூளை முடக்கு வாதம் ( Cerebral Palsy ) மன வளர்ச்சி அடையாத குழந்தைகளைப் பராமரிக்கும் தொண்டு நிறுவனங்களுக்குப் பேணுதல் மானியம். தவிர, தொழுநோயால் பாதிக்கப்பட்ட பெற்றோர்களின் வலிவுள்ள குழந்தைகள், தொழுநோயாளிகளின் தொழுநோய் குழந்தைகளைப் பராமரிக்கும் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம்.

(இ) மன வளர்ச்சி அடையாத குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கத் தனிப்பட்ட ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க சென்னை பாலவிகார் பயிற்சிப் பள்ளிக்கு மானியம்.

(ஈ) தற்போதுள்ள திட்டங்களை விரிவுபடுத்தவும், பால சேவிகைகளுக்குப் பயிற்சி பாட முறையை அளிக்கவும் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம்.

### குறைந்த அளவுத் திட்டம்.

13. கிராமப் பகுதியிலுள்ள மகளிர் தங்களுக்குள்ள பல்வேறு சமூக பொருளாதார வேற்றுமைகளை மறந்துவிட்டு இந்த மகளிர் மன்றங்களில் வந்து கூடி, தங்கள் முன்னேற்றத்திற்கென நல்ல பல வழிகளைக் கற்பதுடன், ஒருவருக்கொருவர் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதே, இத் திட்டத்தின் நோக்கமாகும். அதற்கேற்ப, ஊராட்சி ஒன்றுக்கு ஒரு மகளிர் மன்றம் விதம் 13,124 மகளிர் மன்றங்கள் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டு, தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ரூ. 4,000 விதம் இத் திட்டத்திற்கு ஒதுக்கப்படுகிறது.

### மகளிர் மன்றங்கள் வாயிலாக சத்துணவு கல்வித் திட்டம்.

14. சத்துணவு கட்புல விளக்கப் பணிகளை மேற்கொண்டு, உள்ளூர் உணவு வகைகளை மேலும் சிறந்த முறையில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது பற்றி அவற்றில் விளக்குவதுடன் சீரான உணவு பற்றி ஆலோசனையும் கூறுவதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும். தெரிந்தெடுக்கப்பட்ட 104 வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக இதுவரை 10 மகளிர் மன்றங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக ஒப்பளிக்கப்பட்ட செலவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

[1975 ஏப்ரல் 9

(1) ஒவ்வொரு மகளிர் மன்றத்திற்கும் ரூ. 500 பெறுமான சமையற்கூட சாதனங்கள் வழங்குதல்.

(2) மகளிர் மன்றம் ஒன்றுக்கு பணியாளர் செலவுக்காகத் திங்களொன்றுக்கு ரூ. 21 வழங்குதல்.

15. இத்திட்டத்தைச் செயற்படுத்த 1974-75-ல் மேலும் மூன்று மகளிர் மன்றங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

மகளிர் மன்றங்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஊக்கமளித்தல்.

16. மகளிர் மன்றங்கள் நடத்தி வருவதை ஊக்கமளிக்கும் வகையில் ஊட்ட உணவுத்திட்டம், குடும்பம், குழந்தைகள் திட்டம் இவ்விரண்டும் செயல்படாத இடங்களில் உள்ள மகளிர் மன்றங்களை மூன்று வகையாக 'அ', 'ஆ', 'இ' என்று பிரித்து சிறந்த மன்றங்களுக்கு முறையே ரூ. 1,000, ரூ. 600, ரூ. 400 பரிசளிக்கப் பட்டு வருகிறது. இது மத்திய அரசின் ஐந்தாண்டு திட்டங் களுக்குட்படாத திட்டமாகும்.

17. ரூ. 1.70 இலட்சம் 1974-75-ல் ஒதுக்கப்பட்டது. ஆனால் மத்திய அரசு நடப்பு ஆண்டில் நிதிக்கட்டுப்பாடு காரணமாக, ரூ. 21,200 தான் ஒதுக்கீடு செய்திருக்கிறது. 1975-76-ம் ஆண்டிலும் இது தொடர்ந்து செயல்படும்.

மகளிர் மன்ற அமைப்பாளர் பயிற்சி.

18. இந்திய அரசின் திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். இந்திய அரசின் கல்வைத் திட்டத்தின்கீழ் இது செயல்படுகிறது. மகளிர் மன்ற அமைப்பாளர்கள் மகளிர் மன்றங்களைச் சிறந்த முறையில் நடத்திச் செல்வதற்கேற்ற வகையில், அவர்களுக்கு சிசுநலன், சிக்கன வாழ்வு, சுகாதாரம், துப்புரவு ஆகிய பாடங்களில் பயிற்சி அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

19. பயிற்சிக்கு அமைப்பாளர்களைத் தெரிந்தெடுப்பதற்கான வயது வரம்பு 20-40 ஆகும். அவர்கள் குறைந்தது 8-வது வகுப்பாவது தேறி இருக்கவேண்டும்.



1975 ஏப்ரல் 9]

குழந்தைகள் நலத் திட்டம்

சிறார் பள்ளிகள்

20. இம்மாநிலத்தில் 1962-ம் ஆண்டு முதற்கொண்டு பாலர் பள்ளிகள் இயங்கி வருகின்றன. கிராமப்புற மகளிர்க்கும் அவர் தம் குழந்தைகட்கும் சேவைபுரியும் இரட்டைக் குறிக்கோளைக் கொண்டு அவை செயல்பட்டு வருகின்றன. முதற்கண் வேலைக்குச் செல்லும் கிராமப்புற மகளிர் தம் குழந்தைகளை பாலர் பள்ளியில் விட்டுச்செல்ல முடிவதால், தங்களுடைய வேலை நேரத்தில் தம் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள வேண்டியது பற்றிக் கவலை அற்று இருக்க முடிகிறது. இரண்டாவதாக, பாலர் பள்ளி திட்ட மானது, குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும் நற்பழக்கத்தை வேரூன்றச் செய்கிறது. இதன் காரணமாகத் தான் இம்மாநிலத்தில் இலவச தொடக்கக் கல்வியளிக்கும் திட்டம் பெருமளவுக்கு வெற்றி கண்டுள்ளது. மேலும், பாலர் பள்ளியில் மாணவர்களிடம் போதுமான அளவுக்குக் கவனம் செலுத்துவது, ஒரு குழந்தை யானது பள்ளிச் சூழ்நிலைக்கேற்ப தன்னை அமைத்துக்கொள்ளும் வகையில் ஆயத்தப்படுத்திக்கொள்ள உதவியாக அமைவதால் தொடக்கப்பள்ளியில் முதலிரண்டு ஆண்டுகள் வீணாகத் தங்க வேண்டி வரும் பிரச்சினையைக் குறைக்கிறது.

21. நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,425 சிறார் பள்ளிகள் தொடங்கப்பட்டு தற்போது 2,665 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. எட்டாம் வகுப்பு வரை படித்த உள்ளூர் பெண்களை கிராமிய அபிவிருத்தி பயிற்சி நிலையங்களுக்கு 3 மாதம் பயிற்சிக்கு அனுப்பி பால சேவிகாவாக நியமிக்கின்றனர். இந்த பால சேவிகைக்கு சிறார் பள்ளி நடத்துவதற்காக, மதிப்பூதியமாக ரூ. 30-ம், உணவு வழங்குவதற்காக ரூ. 20-ம் வழங்கப்படுகிறது. இந்த 2,665 சிறார் பள்ளிகளுள், 600 குழந்தைகள் நல நிலையங்கள் 1973-74-ம் ஆண்டில் படித்த வேலையற்ற பெண்களுக்கு கடுவிரைவுத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டு, எஸ்.எஸ்.எல்.சி. படித்த பெண்களை இரண்டு மாதம் பயிற்சி அளிக்கப்பட்டபின், குழந்தைகள் நல அமைப் பாளராக நியமித்து மாதம் ரூ. 100 வீதம் சம்பளம் வழங்கப் படுகிறது. உதவியாக இருக்கும் ஆயாக்களுக்கு மாதம் ரூ. 30-ம் வழங்கப் படுகிறது. 1973-74 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட குழந்தைகள் நல இல்லங்கள் தவிர, 13 பகல் நேர பராமரிப்பு நிலையங்களும் தொடங்கப்பட்டன. 12 பகல் நேர பராமரிப்பு

[1975 ஏப்ரல் 9

நிலையங்கள் ஏற்கனவே இயங்கி வருகின்றன இந்த நிலையங்கள் குடிசை வாழ் பகுதியில் உள்ள மக்களின் நலனுக்காக குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகளில் உள்ளன.

22. இந்த சிறார் பள்ளிகளில் நேரடி கல்வி பயிற்சி அளிப்பதை விட விளையாட்டுக் கருவிகளின் வாயிலாக பயிற்சி அளிப்பதற்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. ஒவ்வொரு பள்ளிக்கும் கல்வி மற்றும் கருவிகளுக்காக ரூ. 400 அளிக்கப்பட்டுள்ளது.

23. பல சிறார் பள்ளிகள் சொந்தக் கட்டிடத்தில் இல்லை. வாடகைக் கட்டிடத்திலோ அல்லது இலவச, வாடகையற்ற கட்டிடத்திலோ, அல்லது மகளிர் மன்றக் கட்டிடத்திலோதான் நடைபெற்று வருகின்றன. 1974-75-ம் ஆண்டில் கேர் நிறுவனத்தின் ஒத்துழைப்பில் 200 கட்டிடங்கள் கட்டப்படும்.

24. நடைபெற்றுவரும் 2,665 சிறார் பள்ளிகளுள் 1,810 சிறார் பள்ளிகளில் கேர் நிறுவனத்தார் வாயிலாக பாலாஹார் மற்றும் சி.எஸ்.எம். உணவு இலவசமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் சுமார் 141,000 குழந்தைகளும், கர்ப்பிணிகளும் பாலூட்டும் தாய்களும் பயனடைகின்றனர். 140 நிலையங்களில், கலவைத் திட்டத்தின் கீழ் செயல்முறை விளக்க உணவு வழங்கு திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் நான்காவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ், மத்திய அரசு திட்டமாக செயல்பட்டது. 1974-75-ம் ஆண்டில் மாநில ஒதுக்கீட்டில் தொடரப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் உள்ளூரில் கிடைக்கும் தானியங்களைக் கொண்டு உணவு தயாரித்து வழங்கப்படுகிறது. 7,000 குழந்தைகளும், 4,200 பாலூட்டும் தாய்களும், கர்ப்பிணிகளும் பயனடைகின்றனர். பால்வாடி உணவுத் திட்டத்தின் கீழ் 200 நிலையங்களில் 12,000 குழந்தைகளுக்கு துணைச் சத்துணவாக ஒவ்வொரு குழந்தைக்கும் 15 பைசா மதிப்புள்ள உணவு வழங்கப்படுகிறது. 25 பகல் நேர பராமரிப்பு நிலையங்களிலும் ஒரு நாளைக்கு ஒவ்வொரு குழந்தைக்கும் 20 பைசா மதிப்புள்ள உணவு வழங்கப்படுகிறது.

25. அதிகமாக சிறார் பள்ளிகள் நடத்துவதில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாடுதான் முன்னணியில் நிற்கிறது. 2,665 சிறார் பள்ளிகளுள் 2,375 சிறார் பள்ளிகளில்தான் முறையாக உணவு, அட்டவணை 1-ல் உள்ளபடி, வழங்கப்படுகிறது. 200 சிறார் பள்ளிகள், யாதொரு உணவுத் திட்டமும் இன்றி நடைபெறுகின்றன.



1975 ஏப்ரல் 9]

26. தற்போதைய பண விக்கத்தினால் உணவு வழங்கும் திட்டத்தை ஒரு குறிப்பிட்ட தொகைக்குள் செவ்விய முறையில் நடத்த இயலவில்லை. அதனால் சிறார் பள்ளிகள் அனைத்தையும் பாலாஹார், சி. எஸ். எம். உணவு வழங்குத் திட்டத்தின் கீழ் 1975-76-ம் ஆண்டில் கொண்டுவரல் அரசின் ஆய்விலுள்ளது. இதில் தற்சமயம் உணவு வழங்கும் திட்டமின்றி, செயல்பட்டு வரும் 290 பள்ளிகளும் சேர்க்கப்படும்.

27. 1975-76-ம் ஆண்டில் அரிசன மக்கள் நலனுக்காக அரிசன குடியிருப்பு மேம்பாடுக் கழகத்தினால் கட்டப்பெற்ற அரிசன குடியிருப்புகளில் 50 சிறார் பள்ளிகள் தொடங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த சிறார் நல செயல்முறை விளக்கத்திட்டம், பூவிருந்தவல்லி.**

28. இத் திட்டம் 1963-ல் ஒரு முன்னோடி திட்டமாக தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மற்றத்துறைகளை அதாவது கல்வித்துறை, சுகாதாரத்துறை போன்ற துறைகளின் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல் ஆகும். 0—16 வயது தொகுதியைச் சேர்ந்த, மிகவும் குறிப்பாக 0—6 வயதுத் தொகுதியைச் சேர்ந்த, சிறார்களுக்கான இத்திட்டத்தில் சுகாதாரம், கல்வி, சத்துணவு ஆகியவை முக்கிய அம்சங்களாகும்.

29. 0-6 வயது வரம்பிற்குட்பட்ட சிறார்களுக்கு ஒவ்வொரு நிலையத்திலும் சராசரி 40 சிறார்கள் கொண்ட 50 குழந்தை நல நிலையங்களும் ஒவ்வொரு காப்பகத்திலும் சராசரி 10 குழந்தைகள் கொண்ட 10 காப்பகங்கள் (Creche) தொடங்கப்பட்டன. இந்த சிறார் பள்ளிகளுக்கு கல்விச் சாதனங்களும் ஏனைய சாதனங்களும் வழங்கப்பட்டுள்ளன. முழு பயிற்சி பெற்ற பால சேவிகாக்கள் இப்பள்ளிகளை நடத்தி வருகின்றார்கள். இவர்களுக்கு ரூ. 210—5—245—10—325 என்ற அடிப்படையில் ஊதியம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும், பத்து பைசா மதிப்புள்ள நண்பகல் உணவு வழங்கப்பட்டு வருகிறது. பரவலான நோய் தடுப்புத் திட்டமும் செயல்பட்டு வருகிறது.

**ஒருங்கிணைந்த சிறார் நல மேம்பாட்டுப்பணிகள் திட்டம்.**

30. சிறார் பள்ளிகளிலுள்ள குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும், பாலூட்டும் தாய்களுக்கும் பயனளிக்க தொடங்கப்பட்ட

[1975 ஏப்ரல் 9

துணைச் சத்துணவுத் திட்டம் கடந்த சில ஆண்டுகளில் எதிர் பார்த்த அளவிற்கு முன்னேற்றம் அளிக்கவில்லை என்பது அனுபவத்தில் தெரிய வந்துள்ளது. சுகாதாரம், பாதுகாப்பு, நோய்த்தடுப்பு, சத்துணவு குறித்த கல்வி, ஆகியவற்றுடன் சத்துணவுத் திட்டங்களை ஒருங்கிணைப்பதின் வாயிலாக அணுகு முறையை மேற்கொள்ளுவது அவசியம் என்று கருதப்படுகிறது. இதனை உணர்ந்து ஒருங்கிணைந்த சிறுர் நல மேம்பாட்டுப்பணி களுக்கான திட்டமொன்று உருவாக்கப்பட்டது. இந்த திட்டத் தின் கீழ் கீழ்க்கண்ட பணிகளை அளிக்க திட்டமிடப் பட்டுள்ளது :—

(1) துணைச் சத்துணவு ;

(2) சத்துணவுக் கல்வி ;

(3) நோய்த் தடுப்பு ;

(4) உடல் நலப் பரிசோதனை ;

(5) ஆலோசனை கூறும் பணிகள் ;

(6) சிறுர் கல்வி.

31. இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக, இந்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

## குடும்பம்-குழந்தைகள் நலத்திட்டம்.

32. இத்திட்டம் மத்திய சமூக நல வாரியத்தின் 100 விழுக்காடு உதவியுடன் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் வாயிலாக மகளிர், குழந்தைகள், பள்ளிச்சிறுர் ஆகியோருக்கான பணிகளை ஒருங்கிணைந்த முறையில் செயலாக்க முயற்சிக்கப்படுகிறது. 1969-70-ம் ஆண்டில் செங்கை மாவட்டத்தில் வில்லிவாக்கத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்தில் குறிஞ்சிப்பாடியிலும் இரண்டு குடும்பம், குழந்தைகள் நலத்திட்டம் தொடங்கப்பட்டன. 1970-71-ம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் ஆத்தூரிலும், கோவை மாவட்டத்தில் பெரியநாயக்கன்பாளையத்திலுமாக மேலும் இரண்டு திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு திட்டத் திலும் ஒரு தலைமை நிலையமும் ஐந்து கிளை நிலையங்களும் உள்ளன. ஒவ்வொரு திட்டத்திற்கும் கட்டிடத்திற்கென ரூ. 35,000 ஒதுக்கப்பட்டுள்ளது. தலைமை நிலையத்திற்கு



1975 ஏப்ரல் 9]

ரூ. 20,000-மும் ஒவ்வொரு துணை நிலையத்திற்கு ரூ. 3,000-மும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நிலையத்திலும் கீழேகண்ட பணிகள் செயல்படுத்தப்படும் :—

(1) ஆறு வயதிற்குட்பட்ட சிறுர்களுக்கான பள்ளி.

(2) மகளிருக்காக ஒரு பயிற்சித்திட்டம்.

இப்பயிற்சித் திட்டத்தின் கீழ் மனையியல், உணவு முறை, சத்துணவு, சுகாதாரம், குடும்ப நலத் திட்டம், செவிலியர் பணி முதலியன அடங்கும். ஒவ்வொரு பள்ளியிலும் சராசரி 40 சிறுர்கள் இருப்பர். "யூனிசெப்" நிறுவனம் இப்பள்ளிகளுக்கு கல்விச்சாதனங்களையும், ஏனைய சாதனங்களையும் வழங்கி உள்ளது. சிறுர்களுக்கான சுகாதாரத் திட்டமும் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் நாள் ஒன்றுக்கு 20 காசுகள் மதிப்புள்ள நண்பகல் உணவு 30 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு திட்டத்திற்கும் மத்திய சமூக நல வாரியம் 5 ஆண்டுகாலம் வரைக்கும் 100 விழுக்காடு உதவி அளிக்கும். ஐந்து வருடம் முடிந்த பின்னர் இத்திட்டங்களை மாநில அரசு ஏற்று நடத்தும். தென் ஆற்காட்டில் குறிஞ்சிப் பாடியில் உள்ள திட்டமும், செங்கை மாவட்டத்தில் வில்லிவாக்கத் திலுள்ள திட்டமும், கோவை மாவட்டத்தில் பெரியநாயக்கன் பாளையத்திலுள்ள திட்டமும், ஐந்தாண்டு நிறைவு பெற்றமையால் அவைகளை தமிழக அரசின் சமூக நலத்துறை ஏற்றுள்ளது.

## சிறப்புச் சத்துணவுத் திட்டம்.

33. சிறப்புச்சத்துணவுத் திட்டம் 1970-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ், நகரத்தைச் சேர்ந்த குழந்தைகளின் உணவில் இருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய 75 கிராம் எடையுள்ள மூன்று ரொட்டித் துண்டுகள் கொடுக்கப் படுகின்றன. இதில் 225கலோரிகளும் 7.5 கிராம் புரதமும் அடங்கி யுள்ளது. இத்திட்டம் தீவிரமாக நிறைவேற்றப்பட்டு உற்சாக

மாக வரவேற்கப்பட்டு கீழ்க் குறிப்பிட்டுள்ள முன்னேற்றத்தைக் கண்டுள்ளது :—

| ஆண்டு. | திட்ட இலக்கு. | | சாதனை பயனடைந்தோர் | | ஊட்ட நிலையங்களின் எண்ணிக்கை | | நிதி ஒதுக்கீடு. (ரூ. இலட்சத்தில்) | செலவிடப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | நகர்ப்புற மக்கள். | பழங்குடி மக்கள். | நகரப்புற மக்கள். | பழங்குடி மக்கள் | நகர்ப்புற மக்கள் | பழங்குடி மக்கள் | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1970–71 | 80,000 | 1,450 | 80,000 | 1,325 | 282 | 23 | 22·80 | 10·58 |
| 1971–72 | 153,359 | 3,650 | 168,837 | 3,422 | 592 | 54 | 97·34 | 67·30 |
| 1972–73 | 250,000 | 8,000 | 268,657 | 6,907 | 834 | 88 | 155·15 | 104·00 |
| 1973–74 | 270,500 | 7,000 | 269,096 | 6,114 | 893 | 94 | *109·31 | 128·00 |

34. இத் திட்டம் 1974–75-ம் ஆண்டில் தொடர்ச்சியாக கீழ்க் கண்ட ஒதுக்கீடுகளைக் கொண்டு நடத்தப்பட்டு வருகிறது :—

(1) திட்ட ஒதுக்கீடு ரூ. 65 லட்சம்.

(2) நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேமிப்பு ரூபாய் 75 லட்சம்.

(3) இந்திய அரசின் உதவி ரூ. 37 லட்சம்.

கூட்டுத் தொகை ரூ. 177 லட்சம். தற்போது மொத்தம் 2,48,960 குழந்தைகளும், 27,570 தாய்களும் பயன்பெற்று வருகிறார்கள்.

35. 1975–76 ஆம் ஆண்டு இத் திட்டத்தைத் தொடர்ந்து செயலாக்குவது பற்றிய குறிப்பு அரசின் ஆய்விலுள்ளது. இத்திட்டத்தை நடத்த மத்திய அரசே தொடர்ந்து நிதி உதவி அளிக்க வேண்டுமென்று தமிழக அரசு வலியுறுத்தி வருகிறது. 1975–76-ம் ஆண்டு இத் திட்டம் தொடர்ந்து நடைபெறுவது மத்திய அரசின் கொள்கையைப் பொறுத்து அமையும்.

---

* கடந்த ஆண்டுகளில் சேமிப்பு இருந்ததால் இவ்வாண்டு மத்திய அரசின் ஒதுக்கீடு குறைந்தது.



### பிச்சைக்காரர் கவனிப்பு இல்லமும் முகாமும்

36. காவல் துறையிலிருந்து மேல்பாக்கத்திலுள்ள கவனிப்பு முகாமும், காஞ்சிபுரத்திலுள்ள சிறப்பு கவனிப்பு இல்லமும் 1—10—1973, முதல் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கும் நோக்கத்துடன், காவல் துறையிலிருந்து சமூக நலத் துறைக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு "பிச்சை எடுப்பவர் சட்டத்தின்" கீழ் தண்டிக்கப்படும் வயதுவந்த ஆண்களும் பெண்களும் இவ்வில்லங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். தற்போது இவ்விரு இல்லங்களும் காவல் துறையைச் சேர்ந்த பணியாளர் களால் நடத்தப்பட்டு வருகின்றன. மேல்பாக்கத்திலுள்ள அரசு பராமரிப்பு இல்லம் 1954-ல் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வில்லத்தில் 700 ஆண்களையும் 150 பெண்களையும் சேர்க்க அனுமதிக்கப் பட்டுள்ளது.

37. மேல்பாக்கம் அரசினர் கண்காணிப்பு இல்லத்தில் கீழ்க்கண்ட ஐந்து தொழிற்பயிற்சிக் கூடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன :—

(1) தச்சு வேலை.

(2) நெய்தல் வேலை.

(3) மண்பாண்டம் செய்தல்.

(4) தையல் வேலை.

(5) புத்தகம் கட்டுதல்.

இப்பயிற்சிக் கூடங்கள் இக் கலைகளில் தேர்ச்சிபெற்ற ஆசிரியர் களால் நடத்தப்பட்டு வருகின்றன.

38. மேல்பாக்கத்திலுள்ள கண்காணிப்பு இல்லத்தில் உள்ள புத்தகம் கட்டும் தொழிற்கூடத்தில் 10 பணியாளர்கள் பணி புரிகிறார்கள். இக் கூடத்தில் அரசினர் அச்சுக்கூடம், மற்றும் வெளி இடத்து வேலைகளையும் செய்து வருகிறார்கள்.

39. தற்போது புத்தகம் கட்டும் கூடத்திலுள்ள பொறிகள் வேலைகளைச் செவ்வனே செய்வதற்குப் போதுமானதாக இல்லை. எனவே, இக் கூடத்தில் தேவையான பொறிகள் வாங்கி விரிவு

படுத்தி நல்ல முறையில் இயக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 1975–76-ம் ஆண்டு ரூ. 50,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

## உடல் ஊனமுற்றோர்க்கான திட்டம்

40. தமிழ்நாட்டில் உடலூனமுற்றோர் பற்றி எடுக்கப்பட்ட ஆய்வை அடிப்படையாகக் கொண்டும், 1974 மார்ச் திங்களில் வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தொடரின்போது மாமன்றத்தில் முதலமைச்சர் அளித்த உறுதிமொழியை ஒட்டியும், குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும் பாரமாகக் கருதப்படும் உடலூனமுற்றோருக்கு, மறுவாழ்வளிக்கும் மாபெரும் திட்டம் அறிவிக்கப்பட்டது. முதலமைச்சர் அவர்களின் பெயரில் இதற்கென நிதி ஒன்று நிறுவப்பட்டது. நிறுவனங்களிலிருந்தும், தனிப்பட்ட பொதுமக்களிடமிருந்தும் நன்கொடைகள் வந்து குவிந்தன. 28—2—1975 நாள் நிலவரப்படி மொத்தம் ரூ. 1,21,22,643.21 வசூலிக்கப்பட்டது.

41. பல்வேறு அரசுத்துறைகளிலும், அரசு போன்ற நிறுவனங்களிலும் பல்வேறு தொழில்களிலும், பயிற்சி அளிக்கப்படுவதுடன், அலுவலக நடைமுறை இயல் பாடமுறை, தையல் தொழில், பீடி, தீப்பெட்டித் தயாரிப்புத் தொழிலில் பயிற்சி, செங்கற்பட்டு மாவட்டத்தில் முட்டுக்காடு என்னுமிடத்தில் உத்தேச நவீன பயிற்சி—உற்பத்தி தொழிற்பட்டறையில் பயிற்சி ஆகியவை அளிப்பதுடன், இந்த மாபெரும் திட்டத்தில் சக்கர நாற்காலிகள் மூன்று சக்கர சைக்கிள், அலுமினிய ஊன்றுகோல்கள், வெள்ளைப் பிரம்புத்தடிகள், காது கேட்கும் சாதனங்கள் முதலியவை தேவைப்பட்டோருக்கு இலவசமாக வழங்குவதும் அடங்கும். இத்திட்டத்தில் செவிடர், ஊமையர், குருடர்களுக்கு 9 கூடுதல் பள்ளிகள் திறப்பதும், மருத்துவமனைகளில் நீண்ட நாள் அகநிலை நோயாளிகளாகச் சிகிச்சை பெற்றுவரும் இளம் பிள்ளைவாதச் சிறுவர்களின் நலனுக்காக, இம்மாநிலத்தில் 8 தனிப்பள்ளிக் கூடங்கள் திறப்பதும் அடங்கும். மேற்சொல்லியவற்றுடன், உடலூனமுற்றோர் 10,000 பேருக்கு முதியோர் உதவித்தொகை வழங்குவதும் இத்திட்டத்தில் அடங்கும். இந்த உதவித்தொகை பெறுதற்குரிய வயது வரம்பு 60-லிருந்து 55 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் இத்திட்டத்தினால் உடலூனமுற்றோர் 22,000 பேர் பயனடைவர். பல்வேறு பயிற்சித் திட்டங்களுக்குத்



தெரிந்தெடுக்கப்பட்டோர் எண்ணிக்கையையும், இதுவரை பயிற்சி பெற்று சேர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கையையும் இணைப்பு உ-ல் காணலாம்.

42. இத்திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் வெவ்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ரூபாய் 1 கோடிக்கு மேலாகக் கூடிய இத்திட்டத்தின் செலவு முழுவதும் முதற்கண் மாநில நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டு, உடலூனமுற்றோர் மறுவாழ்வுக்குரிய முதலமைச்சரது நிதியிலிருந்து திரும்பப் பெறப்படும்.

## தமிழ்நாடு மாநில சமூக நலக்குழு.

43. இம்மாநிலத்திலுள்ள தொண்டு நிறுவனங்களின் வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் தமிழ்நாடு மாநிலச் சமூக நலக்குழு முக்கியப் பணியாற்றி வந்துள்ளது. அனாதைப் பெண்கள், குழந்தைகள் ஆகியோரின் நலம், புது வாழ்வுக்கான திட்டங்கள், பள்ளி செல்லும் வயதடையா குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்கள் ஆகியோருக்குச் சத்துணவு அளிக்கும் திட்டங்கள், உடலூனமுற்றோர்கள் வாழ, கைத்தொழில் பயிற்சித் திட்டங்கள் ஆகியவற்றைச் செயல்படுத்த மத்திய சமூக நலக் குழுவின் பொது உதவி மானியத் திட்டத்தின் கீழ் அக்குழு தொண்டு நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்குகிறது. இம்மாநிலத்தில் கீழே கண்டுள்ளவாறு சமூக நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக 1974–75-ல் தமிழ்நாடு மாநில சமூக நலக்குழு பல்வேறு தொண்டு நிறுவனங்களுக்கு ரூ. 25.27 லட்சம் அனுமதித்தது.

| தொடர் எண்ணும் இனமும். | நிறுவனங்களின் எண்ணிக்கை. | அனுமதிக்கப் பட்ட மானியம். |
|---|---|---|
| 1. ஆண்டு மானியம் | 198 | 2,20,000 |
| 2. திட்டக் காலம் | 89 | 14,20,000 (ஐந்தாண்டுக் காலத்திற்கு) |
| 3. குறுகிய காலப் பாடமுறை | 3 | 93,800 |
| 4. சமூக பொருளாதாரப் பிரிவு | 4 | 1,38,000 |

[1975 ஏப்ரல் 9

| தொடர் எண்ணும் இனமும். | நிறுவனங்களின் எண்ணிக்கை. | அனுமதிக்கப்பட்ட மானியம். |
|---|---|---|
| 5. மகளிர் மன்றம் | 17 | 87,000 |
| 6. சிறப்பு சத்துணவுத் திட்டம் | [redacted] | 3,67,700 |
| 7. விடுமுறை முகாம் | 18 | 48,000 |
| 8. பணிபுரியும் மகளிர் இல்லம் | 5 | 11,100 |
| 9. குழந்தைகள் காப்பகம் | 1 | 29,400 |
| 10. குடும்ப நல குழந்தைகள் திட்டம் | 2 | |
| | | 25,27,200 |

### ஊனமுற்றோர்க்கான மாநிலக்குழு

44. முதலமைச்சர் ஊனமுற்றோர் மறுவாழ்வு திட்டம் உருவாக்குவதற்கு முன்பே, அரசு சம்பந்தப்பட்ட அமைப்பு ஒன்று வேண்டியதின் அவசியத்தைக் கருத்திற்கொண்டு, ஊனமுற்றோருக்கான மாநிலக்குழு ஒன்றை அரசு ஏற்கனவே ஏற்படுத்தியிருக்கிறது. மாநில அரசின் அதிகாரிகள் சிலரும், இந்திய அரசின் அதிகாரிகள் சிலரும், அரசு அதிகாரிகள் அல்லாத சிலரும் இக்குழுவில் உறுப்பினர்களாவர். தொழில்துறை அமைச்சர் இதன் தலைவராக நியமிக்கப்பட்டார். அரசுச் சார்பற்றவர்களின் பதவிக் காலம் மூன்றாண்டுகளாகும். இக்குழுவின் பரிவுரையின் பேரில் அரசுச் சார்ப்பற்றவர்கள் அரசு நியமனம் செய்யலாம்; மறுநியமனம் செயல்லாம். இக்குழு குறைந்த அளவு ஆறு திங்களுக்கு ஒரு முறையேனும் கூடவேண்டும். அவசரத்தன்மை அல்லது சிறப்புத் தன்மை வாய்ந்த விஷயங்கள் எவற்றையும் பரிசீலிக்கத் தனிப்பட்ட முறையிலும் இவ்வாரியம் கூடும். கூட்டம் நடத்துவதற்கு மேற்படி உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் (தலைவர், செயலாளர் நீங்கலாக) வந்திருக்க வேண்டும். குழு உறுப்பினர்களைக் கொண்டு அவசியமான துணைக் குழுக்களை அமைக்க இக் குழுவுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. நிர்வாகக் காரியங்கள் வகையில் இக்குழுவும் இதன் அலுவலகமும் வேலைவாய்ப்பு-பயிற்சி இயக்குநரின்கீழ் வேலைவாய்ப்பு-பயிற்சித் துறையைச் சேர்ந்த தனியொரு பிரிவாகச் செயல்படும் நன்கொடைகள், வசூல்கள், நிதி வசூல் நிகழ்ச்சிகள்



1975 ஏப்ரல் 9]

ஆகிய வகையிலும் உடல் ஊனமுற்றோரின் நலனுக்கு உகந்தவை என்று இவ்வாரியம் கருதக் கூடிய ஏனைய வழிகளிலும் நிதிகள் சேர்க்கவும் இக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சமூக நல அமைச்சர் இக்குழுவின் தற்போதைய தலைவராவர்.

இக்குழுவின் முக்கிய பணிகள் வருமாறு :—

(i) தமிழ்நாட்டிலுள்ள உடல் ஊனமுற்றோர், குறிப்பாக, பார்வையற்றோர், செவிட்டு-ஊமையர், கைகால் இழந்தவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்கள், தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்கள் ஆகியோருக்குப் புதுவாழ்வு அளிக்கும் பிரச்சினைகள் அளவைக் கண்டறிதல்;

(ii) அரசுடன் கலந்தாலோசித்து உடல் ஊனமுற்றோரில் பெரும்பான்மையினர் வாழ்க்கை நிலையை உயர்த்துவது, முக்கியமாக மருத்துவம், தொழில், சமூக மறுவாழ்வு வகையில் அவர்களின் நிலையை உயர்த்தும் நோக்கம் கொண்ட பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தல்;

(iii) உடல் ஊனமுற்றோருக்குள்ள வேலைவாய்ப்புக்களை கண்டறிவதிலும், அவர்களைக் கூடிய விரைவில் பணியிலமர்த்தவும் வேலை வாய்ப்பகங்களுக்கு உதவி புரிதல்;

(iv) உடல் ஊனமுற்ற தனி நபர்கள் கூட்டாகச் செயல்பட்டு வரும் தனி நபர்கள், உடல் ஊனமுற்றோருக்குப் பயிற்சியளித்தல், சொந்தத் தொழில் நடத்துவதற்கு வகை செய்தல், உடல் ஊனமுற்றோரில் பெரும்பான்மையினர் வாழ்க்கையை வளமாக்குவதற்கென்று மேற்கொள்ளப்படும் ஏனைய முயற்சிகள் ஆகிய வகைகளில் உடல் ஊனமுற்றோர் நலன் தொடர்பான பணிகளைச் செய்துவரும் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு நிதி உதவி அளிப்பது குறித்து பரிசீலனை செய்து நிதியுதவி வழங்குதல்;

(v) உடல் ஊனமுற்றோருக்கு கல்வியும், பயிற்சியும், மறுவாழ்வும் அளிப்பதில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிறுவனங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு நல்கி அவற்றுடன் இணைந்து செயல்படுதல்;

(vi) மேற்சொன்ன நோக்கங்களை நிறைவேற்றுவதற்குரிய வேறெந்தப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

## இணைப்பு III-அ

### விவர அறிக்கை.

### தமிழ் நாட்டிலுள்ள பாலர் பள்ளிகள் உணவு வழங்கும் திட்டம்.

| தொடர் எண். (1) | மாவட்டம். (2) | பாலர் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை. (3) | மாநில சமூக நலக்குழு பொறுப்பேற்கும் உணவு வழங்கு திட்டம். (4) | "கேர்" நிறுவன உணவு வழங்கு திட்டம். (5) | செயல்முறை விளக்க உணவு வழங்கு திட்டம். (6) | பாலாஹார் உணவு வழங்கு திட்டம். (7) | பால்வாடி உணவு வழங்கு திட்டம். (8) | ஒருங்கிணைந்த சிறார் நலத் திட்டம். (9) | குடும்பம் சிறார் நலத் திட்டம். (10) | உணவு வழங்கும் திட்டம் செயலில் இல்லாத பள்ளிகள். (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சென்னை நகரம் | 41 | 16 | .. | 25 | .. | .. | .. | .. | .. |
| 2. | செங்கல்பட்டு | 214 | 4 | 49 | 44 | 23 | 10 | 50 | 6 | 28 |
| 3. | வட ஆற்காடு | 250 | 6 | 105 | 96 | 27 | 15 | .. | .. | 1 |
| 4. | தென்ஆற்காடு | 221 | 2 | 100 | 75 | 28 | 10 | .. | 6 | .. |
| 5. | தஞ்சாவூர் | 302 | 15 | 135 | 88 | .. | 15 | .. | .. | 49 |
| 6. | திருச்சி | 203 | 4 | 79 | 58 | .. | 15 | .. | .. | 47 |
| 7. | புதுக்கோட்டை | 24 | .. | 13 | .. | .. | .. | .. | .. | 11 |
| 8. | சேலம் | 187 | 5 | 80 | 35 | 26 | 10 | .. | .. | 31 |
| 9. | தர்மபுரி | 118 | 2 | 76 | 16 | 14 | 10 | .. | .. | .. |
| 10. | கோயம்புத்தூர் | 204 | 7 | 42 | 73 | 31 | 10 | .. | 6 | 35 |
| 11. | நீலகிரி | 50 | 5 | 20 | 17 | 3 | 5 | .. | .. | .. |
| 12 | மதுரை | 243 | 17 | 64 | 121 | 23 | 10 | .. | 6 | 2 |
| 13. | இராமநாதபுரம் | 246 | 6 | 127 | 42 | 25 | 10 | .. | .. | 36 |
| 14. | கன்னியாகுமரி | 134 | 23 | 56 | 50 | .. | 5 | .. | .. | .. |
| 15. | திருநெல்வேலி | 228 | 13 | 61 | 89 | .. | 15 | .. | .. | 50 |
| | மொத்தம் | 2,665 | 125 | 1,007 | 829 | 200 | 140 | 50 | 24 | 29[illegible] |

## இணைப்பு III-ஆ

**பல்வேறு துறைகளிலும் நிறுவனங்களிலும் பயிற்சி பெற்றுவரும் உடலூனமுற்றோர் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை.**

| | பயிற்சி அளிக்கப்படும் துறைகள் அல்லது நிறுவனங்கள். | பயிற்சி பெற்றிருக்கிற நபர்களின் மொத்த எண்ணிக்கை. | 1-வது தொகுதியில் பயிற்சிபெற இருக்கிற நபர்களின் எண்ணிக்கை. | தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | இதுவரையில் பயிற்சி பெற சேர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | பல்லவன் போக்குவரத்துக் கழகம் .. .. | 200 | 100 | 99 | 99 |
| 2 | அரசுப் போக்குவரத்து .. | 100 | 50 | 50 | 30 |
| 3. | சேரன் போக்குவரத்துக் கழகம் .. .. | 10 | 10 | 9 | 7 |
| 4. | கட்டபொம்மன் போக்கு வரத்துக் கழகம் .. | 20 | 20 | 20 | 6 |
| 5. | டான்சி .. .. | 100 | 100 | 100 | 98 |
| 6. | கைத்தறி .. .. | 200 | 100 | 112 | 81 |
| 7. | அரசினர் அச்சகம் .. | 50 | 25 | 25 | 25 |
| 8. | கதர் கிராமத் தொழில் வாரியம் .. .. | 600 | 600 | 583 | 583 |
| 9. | புள்ளி விவரத் தயாரிப்பு நிலையம் .. | 100 | 50 | 45 | 45 |
| 10. | அலுவலக நடைமுறை இயல் பாடமுறை .. | 400 | 400 | 416 | 240 |
| | மொத்தம் .. | 1780 | 1455 | 1459 | 1214 |

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

### வியாழக்கிழமை, 1975, ஏப்ரல் 10.

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்

#### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

#### மின்சாரத் தொழிலுக்கான ஊதிய ஆலோசனைக்குழு

*3 குறுகிய கால வினா—திரு. நா. வீராசாமி: மாண்புமிகு தொழில் மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) 1973 ஆம் ஆண்டில், இந்திய அரசால் அமைக்கப்பட்ட, மின்சாரத் தொழிலுக்கான ஊதிய ஆலோசனைக் குழு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அக்குழு அமைக்கப்பட்டதன் நோக்கம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) மின் தொழிலுக்கான ஊதிய வீதங்கள் நிர்ணயிக்க ஊதிய ஆலோசனைக் குழு ஒன்றை இந்திய அரசு அமைத்துள்ளது. மின் வாரிய ஊழியர்கள் ஊதிய வீதங்கள், சொற்ப நன்மைகள், பதவித் தொடர்பான வசதிகள் ஏனைய பணி நிபந்தனைகள் ஆகியவற்றை மாற்றி அமைப்பதற்காக தொழிலாளர் சங்கத்திற்கும், மாநில மின்வாரியத் திற்கும் இடையே இருதரப்புப் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கான வழி முறைகளை வகுக்கவும், அத்தகைய பேச்சு வார்த்தைகள் குறித்து குழு விற்கு ஆலோசனை நல்கவும் இது ஏற்படுத்தப்பட்டது..

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, மின்சார வாரியத் தொழிலாளர்களுக்கு ஏதாவது கோரிக்கை இருக்குமானால், மின்சார வாரியமும் தொழிலாளர் பிரதிநிதிகளும் இருசாராரும் பேசித் தீர்த்து முடிவுக்கு வர முடியாவிட்டால், இங்கே மாநில அரசு இருக்கும்போது, மாநில அரசுக்கும் அப்பாற்பட்டு மத்திய அரசு ஏன் இந்தக் குழுவை நியமித்தது? காரணம், ஒரு அரசாங்கம் இங்கே இருப்பதையே அது புறக்கணிப்பதுபோல் இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட கைட்லைன்ஸ் கமிட்டிக்கு நம்முடைய அரசாங்கம் இங்கேயிருக்கிற வாரியத்திலிருந்து யாரும் போகக் கூடாது என்று சொல்ல ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே,

Even during the deliberations of the Guidelines Committee the Chairman had in fact been giving his views that the discussions about the revision of wages should only be at the State level and not at the Central level and he has been also protesting regarding the interim relief to temporary casual labourers.

நம்முடைய அரசாங்கத்தின் அனுமதிபெற்று நியமிக்கப்பட்ட குழு அல்ல. இது ஒரு ஆலோசனைக் குழு என்ற அளவில் மத்திய சர்க்காரால் அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்த ஆலோசனைக் குழுவை அமைப்பதற்கு முன்பாக நம்முடைய மாநில மின்சார வாரியத்தை அவர்கள் கேட்டார்களா? அது சம்பந்தமாக ஏதாவது கருத்து அறிந்தார்களா? இப்படி இந்தியா முழுமையும் இருக்கின்ற ஒரு தன்மையின் அடிப்படையில் இந்தக் கமிட்டி அமைப்பதற்கு என்ன ஆட்சேபனை இருக்க முடியும் என்பதை அமைச்சரவர்கள் வெளியிடுவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நம்முடைய அரசைப் பொறுத்த வரையில் இந்தக் குழுவிற்கு அனுமதி வாங்கியதாகத் தெரியவில்லை.

No Government orders appear to have been issued authorising the Chairman to be member of the Guidelines Committee. The Chairman has not taken the prior approval of the Government before subscribing to the interim recommendations of the Committee.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்தக் குழு நியமிக்கப்பட்ட பிறகு ஊதியம் சம்பந்தமாக ஏதாவது ஆலோசனை வழங்கியிருக்கிறதா? அப்படியானால், அந்த விவரத்தை அறியலாமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்பொழுது அது போன்ற ஆலோசனை ஒன்றும் வரவில்லை.

திரு. நா. வீராசாமி: இந்த கைட்லைன்ஸ் கமிட்டி கொடுக்கின்ற தீர்ப்புகளை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று ஏதாவது விதிமுறை இருக்கிறதா? இங்கிருந்து தொழிலாளர் பிரதிநிதிகள் அங்கே போகிறார்கள். போகின்றபிரதிநிதிகள் நம்முடையதொழிலாளர்களுடைய சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு பெரும்பான்மையான தொழிலாளர்கள் இருக்கும் சங்கத்திலிருந்து அனுப்பப்பட்டவர்கள் அல்ல. பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபோது ஒரு வாரியத்திற்கு ஏதாவது ஒரு தொழிற்சங்கம் இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால், அவர்களாக அந்நேரத்தில்





நாமினேட் செய்திருக்கிறார்கள் இனிமேல் அம்மாதிரி அனுப்பாமல், பெரும்பான்மையான தொழிலாளர்களைக் கொண்ட சங்கத்திலிருந்து அனுப்பப்படும் பிரதிநிதிதான் அங்கீகரிக்கப்படும் என்ற நிலையை உருவாக்குவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, டில்லியில் நடைபெற்ற கூட்டத்தில், குறைந்த அளவு ஊதியம், அகவிலைப்படி, போன்றவைகளை அனுமதிப்பது குறித்த அறிவிப்புகளை குழுவின் வரையறைக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் என்றும், நடத்தக் கருதியுள்ள இருதரப்புப் பேச்சுவார்த்தைகளுக்கான வழிமுறைகள், ஒவ்வொரு நேர்விலும் உள்ள சூழ்நிலைகளையொட்டி நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளின் வாய்ப்பைத் தடுக்கக்கூடிய நிலையில் இருக்காது என்றும், தமிழ்நாடு மின் வாரியத் தலைவர்கள் கருத்துக் கொண்டிருந்தனர். இந்திய அரசு கூட்டவிருக்கும் மின்சார அமைச்சர்களின் கூட்டத்திற்கு இது அனுப்பப்படலாம் என்ற கருத்துரையை குழு ஏற்றுக்கொண்டது.

திரு கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, அகில இந்திய ரீதியில் மின்சாரம் இருக்கின்ற காரணத்தால், அகில இந்திய சம்பள போர்டு ஏற்கெனவே அமைக்கப்பட்டு, அதனுடைய சிபார்சுகளை அந்தந்த மாநிலங்களில் அமைக்கப்பட்டிருக்கும் வாரியங்கள் ஒத்துக்கொண்டிருக்கின்றனவா? அகில இந்திய க்ரீட் வேண்டுமென்ற கோரிக்கை நாட்டில் இருக்கும்போது, அம்மாதிரி கைட்லைன்ஸ், அந்தந்த மாநிலத்திற்குத் தகுந்தபடி, சம்பள விகிதங்களைப் பொறுத்து செய்வது எப்படி முறையற்றதாகும்? அதில் அரசினுடைய கருத்து என்னவாக இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, It is only a wage guidelines committee அது சிபார்சு செய்யும் அட்வைசரி கமிட்டியே தவிர, ஸ்டாச்சுடரி கமிட்டி அல்ல, வேஜ் போர்டு ஆக நியமிக்கப்பட்டு, அதிலே நிர்ணயிக்கும் ஊதிய விகிதங்களைப்பற்றி எந்தவிதமான ஆட்சேபணையும் சொல்ல முடியாது. ஆனால், இது அட்வைசரிபாடியாக நியமிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய வாரியத் தலைவர் அங்கே கருத்துத் தெரிவித்திருக்கிறார். இது ஆலோசனைக் குழுவாகத்தான் மத்திய அரசால் நடத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, எலெக்ட்ரிசிடி போர்டு, எலெக்ட்ரிசிடி இண்டஸ்ட்ரி, அண்டர்டேக்கிங்ஸ் ஆப் கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா—இவை மூன்றுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கிறதாகக் கூறப்படுகிறது. அட்வைசரி பாடியாக இருந்தாலும், இங்கே நேரடியாகக் கவனிப்பது மாநில அரசாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதில் சந்தேகத்திற்குக்கூட இடம் இருக்கிறது. இரண்டு தொழிற் சங்கங்களுக்கு முக்கியத்துவம் தருவதுகூட சந்தேகத்திற்கு இடம்

அளிக்கிறது. ஆகவே, மாநில அரசை நிச்சயமாகக் கலந்து கொள்ள வேண்டும் என்ற யோசனையை நம்முடைய அரசு மத்திய அரசுக்குத் தெரிவிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய அப்படிப்பட்ட ஒரு கருத்தும் நிலவி வருகிறது. நம்முடைய மின் வாரியத தலைவர் தம்முடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதைத்தான் சொன்னேன். மாநில அளவில், சூழ்நிலைக் கேற்ப பேச்சு வார்த்தை நடத்தி முடிவு செய்ய வேண்டிய பிரச்சனை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற கைட்லைன்ஸ் கமிட்டி சரியாகக் கூடுவதில்லை என்று சொல்கிறார்கள். அது தவிர, நம்முடைய தொழிலாளர்கள் பல கோரிக்கை களைக் கேட்கிறார்கள். உதாரணமாக, நெய்வேலியில் ஏற்பட்ட அக்ரிமெண்டில் செக்ஷன் 81-ல் பேசிக் பேயைப்பற்றி சிபார்சு செய்து ந மே அவர்களுக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறோம். அந்த அடிப்படையில் மின் வாரியத்திலும் அப்படிச் செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்து நம்முடைய தொழிலாளர்களுக்கு உதவி செய்ய முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுவைப்பற்றி மட்டும் கேளுங்கள். சம்பளம் பற்றியெல்லாம் கேட்க வேண்டாம்.

திரு. கே. எ. வகாப் : அநுசம்பந்தமாகத்தான் கேட்டேன். திரு. வீராசாமி அவர்களும அதுதான் கேட்டார். அதை அடிப்படையாக வைத்துத்தான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம்முடைய தொழிலாளர்கள் ஊதியம், வேஜ் ரிவிஷன் பற்றி இப்பொழுது பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டு வருகிறது. ஏற்கெனவே நம்முடைய வாரியத்தின் சார்பாக தொழிலாளர்கள் ஏராளமான சலுகைகளைப் பெற்றிருக்கிறார்கள். அதுபற்றி இதே மன்றத்தில் ஸ்டேட்மெண்ட் கொடுத்தபோது சொல்லியிருக்கிறேன்.

திரு. கு. காமாட்சி : மத்திய அரசின் இந்த நடவடிக்கை ஒரு மாநில அரசின் நிர்வாகத்தில் தலையிடுவதாக இருக்கிறதே, இது அரசியல் சட்டத்திற்கு முரணானதல்லவா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் ஏற்கெனவே சொன்னேன. இது ஆலோசனை சொல்கிற குழு (அட்வைசரி கமிட்டி) என்ற முறையில் இயங்குவதில் எந்தவிதமான ஆட்சேபனையும் இருப்பதாகத் தெரியவில்லை.



திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, நாட்டில் இந்தப் பிரச்சினையின் பேரில்—குறிப்பாக தொழிலாளர்கள் சம்பளம் போன்ற பல்வேறு பிரச்சினைகளில் எல்லா மாநிலங்களிலும் சமமாக இருக்க வேண்டிய அளவுக்கு கருத்து வழங்கும் விதத்தில் இந்த ஆலோசனைக் குழு இருப்பதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக இதில் சிக்கல் ஏதும் இல்லையே. இந்தக் குழுவை ஆலோசனைக் குழுவாக ஏற்றுக்கொள்வது நல்லதுதானே?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இது ஒரு ஆலோசனைக் குழுதான். இதனுடைய சிபார்சுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இது "ஸ்டாச்சுடரி பாடி" அல்ல. இப்பொழுதிருக்கும் நிலைமையில் இதுபோன்ற குழுவின் மூலமாக தொழிற் சங்கங்கள்களுக்குள்ளே "ரைவல் யூனியன்" ஏற்பட்டு, பலப்பரீட்சை நடைபெறுவதாகச் சொல்கிறார்கள். நம்முடைய அரசைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே சிபார்சுகள் இல்லாமலே கூட, ஊதிய உயர்வு கொடுத்திருக்கிறோம். அது பற்றி விவரமான அறிக்கை இந்த மன்றத்திலே நான் கொடுத்திருக்கிறேன்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, மத்திய சர்க்கார் போட்டிருக்கிற இந்த "கைட்லைன்ஸ் கமிட்டி" நம்முடைய மாநிலத்திற்கு மட்டும் தானா அல்லது மற்ற மாநிலங்களுக்கும் இப்படிப்பட்ட "கைட்லைன்ஸ் கமிட்டி" போடப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கைட்லைன்ஸ் கமிட்டி ஒன்றுதான். அதில் லேபர் யூனியன் சார்பாகவும், எலக்ட்ரிசிட்டி போர்டு உறுப்பினர்களைக் கொண்டும் ஆலோசனை நடைபெறுகிறது.

திரு. என். கே. பழனிசாமி : சார், பல்வேறு மாநிலங்களில் ஏற்பட்டிருக்கிற தொழிலாளர் போராட்டங்களைத் தவிர்ப்பதற்காக இந்த மாதிரி "கைட்லைன்ஸ் கமிட்டி" ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது பொதுவான பிரச்சினை ஆனால் இந்தக் கூட்டத்திற்கு எலக்ட்ரிசிட்டி போர்டு சேர்மன் ஒவ்வொரு கூட்டத்திற்கும் போகவேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. அப்படி இருக்கும்போது நம்முடைய மாநில சேர்மன் இரண்டொரு கூட்டத்திற்குப் போய் வந்திருக்கிறார். குறைந்த பட்ச ஊதியம் 350 ரூபாய், வேஜ் ரிவிஷன், சர்வீஸ் கண்டிஷன் இந்த மூன்றைப் பொறுத்த வரையில் ஏதாவது சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதா? அதை அமுல் படுத்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மின்சார வாரியத் தலைவர் ஒவ்வொரு கூட்டத்திற்கும் போக வேண்டுமா என்பது தெரியாது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில்,

No Government orders appear to have been issued authorising the Chairman of the Electricity Board to be a member of the Guidelines Committee. The Chairman has not taken the prior approal of the Government before subscribing to the interim recommendations of the Committee.

திரு. எம். சுரேந்திரன் : சார், மின்சாரப் பற்றுக்குறை, உணவுப் பற்றுக்குறை, இது போன்ற பற்றுக்குறை காரணமாக ஒவ்வொரு மாநிலமும் இன்னொரு மாநிலத்தை சார்ந்து இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. அதைப்போல அந்தத் துறையில் பணியாற்றுகிறவர்களும் மற்ற மாநிலத்தில் தொழிலாற்றுகிறவர்களுடன் ஒட்டாகச் சேர்ந்து காரியங்கள் செய்வது நல்லது என்பதால் இந்த கைட்லைன்ஸ் கமிட்டியின் ஆலோசனையை ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது? தனி மாநிலம் என்ற உணர்வு மேலோங்கி நிற்பதால் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று சொல்கிறார்களா அல்லது தொழிலாளர்களுக்கு நன்மை இல்லை என்பதால் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று சொல்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒரு விபரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். ஏற்கெனவே நான் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறேன். இது ஒரு ஆலோசனைக் குழு. இன்னும் ஆலோசனை சொல்லவில்லை. சொன்னாலும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற அவசியம் இல்லை. ஏனென்றால் மாநிலத்திற்கு மாநிலம் ஊதியத்தில் வேறுபாடு இருக்கிறது. சூழ்நிலைகளுக்கேற்ப, நிதிநிலைகளை அனுசரித்துதான் நாம் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. குழுவின் சிபாரிசு எப்படி இருககும் என்று நமக்குத் தெரியாது.

ஏற்கெனவே சொன்னதைப் போல அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், தமிழக அரசின் அனுமதியைப் பெற்று ஆலோசனைக் குழு அமைக்கப்படவில்லை. மின்சார வாரியத் தலைவர் அரசின் அனுமதி பெற்று போகவில்லை. இது தனி மாநிலம் என்ற கருத்தால் யாரும் இந்தக் கருத்தைச் சொல்லவில்லை. மின்சாரப் பற்றுக்குறை, உணவுபற்றுச்குறை என்பது வேறு, ஊதியம் என்பது வேறு. ஊதியம் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. நம்முடைய மாநிலத்தில் மின்சார வாரிய ஊழியர்களுக்கு மற்ற மாநிலங்களிலுள்ளவர்களை விட அதிகமாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, 1969-லே வேஜ் போர்டு கொடுத்த பரிந்துரைகளை ஏற்று, இந்தியாவிலேயே நம்முடைய அரசுதான் மின்சார வாரிய ஊழியர்களுக்கு நான்கு கோடி ரூபாய்க்கு மேல் கூடுதல் கொடுத்து வருகிறது. ஆகவே, இந்த "கைடுலைன்ஸ் கமிட்டி" சிபாரிசு வந்து, அதைப் பரிசீலனை செய்வதை விட, 1974-ஆம் ஆண்டு டிசம்பர்



மாதம் 1-ஆம் தேதி முதல் மாற்றியமைக்கப்பட்ட சம்பளம் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டும் இதுவரையில் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதைக் கொடுப்பதற்கு நம்முடைய அரசு பேச்சு வார்த்தை நடத்தி சுமுகமான முடிவை மேற்கொள்ளலாம். ஏற்கெனவே அமைச்சரவர்கள் கொடுத்த அறிக்கையில் 6 முறை பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இருந்தாலும், இன்னும் ஒரு மாதத்தில் அறிக்கை கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். மொத்தம் 113 காடர்கள் இருக்கின்றன. ஒரு மாதத்திற்குள் எல்லா காடர்கள் பற்றியும் முடிவு செய்வது கஷ்டம்; நிச்சயம் முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை எல்லாம் பின்னால் மின்சார வாரியத்தின் மீதான விவாதம் வரும்போது தெரிவிக்கலாம்.

திரு. நா. வீராசாமி : குறைந்த பட்சம் இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள்ளாவது எல்லா காடர்கள் பற்றியும் முடிவு செய்து, தொழிலாளர்களை அழைத்துப் பேசி, நல்ல முறையில் சம்பளம் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம்முடைய தமிழக அரசைப் பொறுத்தவரையில், நம்முடைய மின்சார வாரியத் தொழிலாளர்களுடன் நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்தி, வேஜ் ரிவைஸ் செய்து கொண்டிருக்கிறோம். இப்போதும் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. எல்லாக் காடர்கள் பற்றியும் ஒரு மாதத்திற்குள் முடிவு செய்வது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல், கஷ்டம்தான். இருப்பினும் விரைவில் முடிவு செய்யப்படும். அதே நேரத்தில் மத்திய அரசின் ஊதிய முடக்குச் சட்டத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதையும் கவனத்தில் கொண்டு முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது.

## தஞ்சை மாவட்டத்தில் சிறப்பங்காடிகள்.

*621 வினா : திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974-75-ம் ஆண்டில், தஞ்சை மாவட்டத்தில் புதிய கூட்டுறவு சிறப்பங்காடிகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், எங்கெங்கு ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) ஆம்.

(இ) திருவாரூர், திருக்காட்டுப்பள்ளி ஆகிய இடங்களில் சிறு சிறப்பங்காடிகள் ஏற்படுத்தும் செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது. நாகப்பட்டினத்தில் ஒரு சிறு சிறப்பங்காடி திறக்க நிதியுதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. பட்டுக்கோட்டையில் ஒரு சிறப்பங்காடி திறக்கப்பட்டுவிட்டது.

## கைதிகளுக்கு செய்தித்தாள்கள் வழங்கல்.

* 622 வினா : டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு செய்தித்தாள்கள், வார, மாத இதழ்கள் வழங்கப்படுகின்றனவா ?

(ஆ) ஆமெனில், அதன் விபரங்கள் யாவை ?

(உ) தென்னகம், சமநீதி போன்ற எதிர்க்கட்சி பத்திரிகைகளும் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(ஆ) "சி" பிரிவு கைதிகளுக்கு ஒவ்வொரு 100 பேருக்கும் அல்லது அதில் மீதமுள்ள பகுதியினருக்கும் கீழ்கண்ட தினசரி தாள்களில் ஏதேனும் ஒன்று வீதம் அரசு செலவில் வழங்கப்பட்டு வருகின்றது.

1. தினமணி (தமிழ்)
2. நவமணி (தமிழ்)
3. தினத்தந்தி (தமிழ்)

கைதிகளிடையே பாகுபாடின்றி ஒவ்வொரு 200 பேருக்கும் அல்லது அதில் மீதமுள்ள பகுதியினருக்கும் கீழ்கண்ட வார, மாதமிருமுறை, மாத இதழ்களில் ஏதேனும் ஒரு இதழ் வீதம் அரசு செலவில் வழங்கபடுகின்றது.

1. ஹோவார்ட் ஜர்னல்
2. சித்திரகுப்தா
3. பாரத்
4. கல்கி





5. ஆனந்தவிகடன்
6. வினோதன்
7. மாத்ரு பூமி
8. சகோதரம்
9. சுபோதா
10. சரஸ்வதி
11. ஜதீத் தில் சேஸ்ப்

(உ) இப்போது செயற்குறிப்பு எதும் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த கைதிகளுக்கு என்னென்ன பத்திரிகைகள் கொடுக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் காலத்தில் போட்டிருந்தார்கள். அதே முறைதான் இப்போதும் பின்பற்றப்பட்டு வருவதாகத் தெரிகிறது. ஏனென்றால் அமைச்சரவர்கள் படித்த பட்டியலைப் பார்த்தால் ரொம்ப காலத்திற்கு முன்னால் போட்ட பட்டியல் மாதிரி இருக்கிறது. அவர்கள் சொன்ன பத்திரிகைகளில் சில வாரப்பத்திரிகைகள் நடக்கிறதா என்று கூடத் தெரியவில்லை. ஆகையால் இப்போது இருக்கிற சில நாளிதழ்களை குறிப்பாக சில கட்சிப் பத்திரிகைகளைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லாம் கன்ண்டம், உருது பத்திரிகைகளாக இருக்கின்றன. அதனால் பெயர் கூட கஷ்டமாக இருக்கிறது. கட்சிப் பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் அந்தந்த கைதிகள் சொந்த செலவில் வாங்கிப் படிக்க விரும்பினால் அதற்கு ஒரு பட்டியல் இருக்கிறது. அதிலுள்ள பத்திரிகைகளை வாங்கிப் படிக்கலாம்.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கைதிகள் படிக்கின்ற பத்திரிகைகள் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதில் தென்னகம், மக்கள் குரல் போன்ற பத்திரிகைகள் இடம் பெறவில்லை. அத்தகைய பத்திரிகைகளையும் கைதிகள் படிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்க செலவில் இல்லை.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, கைதிகளாக இருப்பவர்களுக்கு பத்திரிகைகள் வழங்குவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்கள் படிக்கும்போது அந்தப்பெயர்கள் அவர்களுக்கும் விளங்கவில்லை; நமக்கும் விளங்கவில்லை. ஆகவே, தமிழ் நாட்டிலுள்ள கைதிகளுக்கு தமிழ் பத்திரிகைகள் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ் இதழ் பற்றியும் வாசித்தேன். அதை புரிந்திருப்பார்கள். மலையாளம், கன்னடம், உருது பத்திரிகைகளும் வழங்கப்படுகின்றன. அப்படிப்பட்ட மொழி படித்தவர்களாக இருந்தால் அதை மறுக்க முடியாது.

திரு. எம் சுரேந்திரன் : சார், பல பத்திரிகைகளைப்பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த பத்திரிகைகள் வாங்கப்படுகின்றன என்பதைத் தவிர அவர்கள் படிப்பதற்குப் போதுமான நேரம் அளிக்கப்படுகிறதா ? அதே நேரத்தில் இந்தக் கைதிகள் தனியாக வாங்கி படிக்க அனுமதிக்கப்படும் என்றும் சொன்னார்கள். பாதுகாப்புக்கைதிகளாக இருப்பவர்கள் தவிர மற்றவர்களுக்குள் பணம் வைத்து வாங்கும் முறை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்களே விரும்பினால் அவர்கள் செலவில் வாங்கிக்கொள்ள அனுமதிக்கிறோம்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, பத்திரிகைகளைப்பற்றி சொன்னார்கள். கைதிகள் படிப்பதற்கு புத்தகங்கள் கேட்டால் கொடுக்கப்படுகிறதா? குறிப்பாக, மத சார்பான நூல்கள், குரான், பைபில், இதிகாசங்கள் போன்றவைகளைக் கேட்டால் அப்படிப்பட்ட புத்தகங்களைக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :—ஒரு முறை அவர்கள் சிறைக்குச் சென்று வரவேண்டும். சென்று பார்த்து வந்தால் பல சிறைகளில் இந்த அரிய வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது தெரியும். கைதிகளில் பலர் அங்கிருக்கிற நூலகங்களில் படித்து, தேர்வுகளில் பட்டம் பெறும் வாய்ப்பும் இருக்கிறது.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஏற்கனவே வழங்கப்படும் பத்திரிகைகளிலுள்ள முக்கியமான செய்திகளை மையிட்டு மறைத்துக் கொடுக்கிறார்கள். அதனால் சரியாக செய்திகளை அவர்கள் தெரிந்துக்கொள்ள வழியில்லை. ஆகவே, மையிட்டு மறைக்காமல் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : செய்திகளை மறைப்பது பற்றி சில தெளிவான ஏற்பாடுகளை வைத்திருக்கிறோம். அரசியல் கைதிகளுக்கு சில செய்திகள் மறைக்கப்பட வேண்டியிருக்கிறது. குற்றம், கலகம் இது போன்ற தவறான முறையில் கவனம் செல்லக் கூடிய கருத்துக்கள் இருந்தால் அதை மறைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

திரு. கோவை. செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட மாதிரி அரசியல் கருத்துகள், நல்ல உயர்ந்த வெளிநாட்டு சம்பந்தமான பத்திரிகைகள், பொருளாதார சம்பந்தமான பத்திரிகைகள் படிப்பது கைதிகளுடைய அறிவை விருத்திச் செய்யும். அந்த மாதிரி உள்ள பத்திரிகைகள் எதிர்க்கட்சியிலும் நடத்துகிறார்கள். நல்ல அரசியல் கருத்துக்கள் சொல்கிற எதிர்க்கட்சி பத்திரிகைகளையும் அனுமதிக்க வேண்டும். சில பால் பண்பு ஊட்டுகின்ற பத்திரிகைகள் ஜெயில் கைதிகளுக்கு அனுமதித்தால் மிகவும் சிரமப்படுவார்கள். குடும்பம் இல்லாமல் தனியாக இருக்கிறார்கள். இத்தகைய பத்திரிகைகள் தடை செய்யப்படுமா? அரசியல் கருத்துக்கள் உள்ள பத்திரிகைகள் அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசியல் கருத்துக்களைத் தடுக்கக் கூடாது. அரசியல் கருத்துக்கள் சம்பந்தப்பட்ட பத்திரிகைகளை வாங்க விரும்பினால் சொந்த செலவில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று ஏற்கனவே சொல்லி விட்டேன். வேறு பத்திரிகைகளைப்பற்றிச் சொன்னார்கள். அதிலே அதிக விவரம் தெரியாது. நிச்சயம் அப்படிப்பட்ட நிலை சிறையில் இருப்பதாகத் தெரியவில்லை.

## தமிழில் எழுதப்பட்ட பட்டைகள்.

*623 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாவட்ட நீதிமன்றங்களில் உள்ள (பியூன்) ஊழியர்கள் அணிந்திருக்கிற பட்டைகளில் உள்ள வார்த்தைகள் ஆங்கிலத்தில் சொல்லப்பட்டு எழுத்து வடிவில் தமிழில் உள்ளவற்றை மாற்றி தூய தமிழில் எழுதும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாடு அரசின் கடைநிலை ஊழியர்களுக்குத் தமிழில் எழுதப்பட்ட பட்டைகள் வழங்கிட அரசு ஆணை பிறப்பித்து விட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : கோர்ட்டிலே, பொதுவாக ஆபீசிலே பியூன்கள் டவாலி போட்டுக் கொள்கிறார்கள். பழைய பிரிட்டிஷ் காலத்தில் இருந்த வழக்கத்தை மாற்றி அவர்களுக்கு புது தமிழில் எழுதப்பட்ட பட்டைகள் வழங்க குறிப்பு ஏதாவது உண்டா அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உயர்நீதி மன்றத்துக்கு கருத்துக்களை அனுப்பினால் அவர்கள் பரிந்துரையைக் கேட்டு, அப்படிப்பட்ட கோரிக்கை கவனிக்க செய்யலாம்.

## *Meeting of Southern Regional Electricity Board.*

*531 Q.—Thiru N.K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state :—

(a) whether a meeting of the Southern Regional Electricity Board was held in Bangalore on 21st June 1974 ;

(b) whether the Chairman of the Tamil Nadu Electricity Board participated in the meeting; and

(c) if so, the decisions taken at the meeting?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) : ஆம்.

(உ) தென்பிராந்தியத்தில் மின்சக்தி உற்பத்தித்திட்டங்கள் அனைத்தையும் பிராந்திய அடிப்படையில் முழுமையாக ஆய்வு செய்யும் பணியை தென் பிராந்திய மின் வாரியம் மேற்கொள்ள வேண்டும் என்று பெங்களூரில் **21-6-74** அன்று நடைபெற்ற தென் பிராந்திய மின் வாரியத்தின் **35**-வது கூட்டத்தில் தமிழ்நாடு மின் வாரியத் தலைவர் வலியுறுத்தினார். இக்கருத்துக்கு நல்ல ஆதரவு இருந்தது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு மாநிலத்திலும் தேவைப் படும் மின் சக்தி, மின் உற்பத்தி, எஞ்சிய மின் சக்தி ஆகியவற்றைக் கணக்கிடும் பொறிமூலம் கணக்கிடுவது என்றும், அந்தந்த வட்டாரத்தில் உள்ள பல்வேறு புனல் மின் உற்பத்தி நிலையங்களை உரிய அளவுக்குப் பயன்படுத்திக்கொள் வதற்கான சிறப்பு ஆய்வுகளை மேற்கொள்வதெனவும் முடிவு செய்யப் பட்டது.

திரு. என். கே. பழனிசாமி : சார், நம் சர்க்கார் சார்பில் நம் மாநிலத் திற்கு வேண்டிய மின் உற்பத்தித் திட்டம் ஏதாவது கொடுத்து இருக்கிறார் களா? அப்படியானால் ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய சர்க்கார் அதற்கு ஏதாவது உதவி கொடுப்பதாகச் சொல்லி இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தக் கேள்வியைப் பொறுத்த வரையில் நம்முடைய மின் வாரியத் தலைவர் என்ன கருத்து சொன்னார் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தென் மாநிலத்தில் உள்ள மின் வாரியத் திட்டம் பற்றி முழுமையாகப் பரிசீலிக்க வேண்டுமென்று வற்புறுத்தினால் அது பற்றி கருத்துச் சொல்லப்படும்.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister whether the Hogenakal Project will be commissioned, whether this matter was discussed in this meeting and whether it is going to be commissioned shortly?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது பற்றித் தனியாக எதுவும் இல்லை. தென் மாநில திட்டம் பற்றி ஆராய வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு காமன் க்ரிட் வேண்டுமென்ற ஒரு கருத்து இருந்ததே, அது சம்பந்தமாக பேசி ஏதாவது முடிவு ஏற்பட்டதா? அப்படி இருந்தால், அதன் விவரம் அமைச்சர் தெரிவிப்பாரா?





மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதன் விவரம் என்னிடம் இப்போது இல்லை.

It was decided to computerize the load generation balance in the constituent States for each month of the Fifth Five Year Plan Tamil Nadu Electricity Board has spared the services of an Engineer to assist the Southern Regional Electricity Board in the studies.

### புதிய சர்க்கரை ஆலைகள்

*532 வினா: திரு. மே. சி. தூயமணி; மாண்புமிகு தொழில் மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மேட்டுப்பாளையம் தொகுதி காரமடை பிளிச்சியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவும் ஆக்கப்பணி எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கோயம்புத்தூர் மாவட்டத்தில் நிறுவ இருக்கும் சர்க்கரை தொழிற்சாலையை எந்த இடத்தில் நிறுவுவது என்பது இன்னும் அரசின் ஆய்வில்தான் உள்ளது. இதுபற்றி இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.

திரு. கோவை செழியன் : பேரவை தலைவர் அவர்களே, ஒரு புதிய சர்க்கரை ஆலை அமைக்க வேண்டுமென்றால் சொன்னால் இந்த ஆலைக்கு இவ்வளவு கரும்பு நிரந்தரமாக் வரவேண்டும் என்று இருக்கிறது. ஆனால் கோயம்புத்தூரைப் பொறுத்த வரையில் சோர்ஸ் ஆப் இரிகேஷன் இருக்க வேண்டும். எந்த சோர்ஸ் இல்லாமல் மழையை நம்பி இருக்க வேண்டு மென்று நிலை இருக்கிறது என்று கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஸ்டாடிஸ்டிகல் டிபார்ட்மெண்டில் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள். இந்த அறிக்கையில் இந்த மாதிரியான சாத்தியக் கூறு இல்லை, பெய்லியூர் ஆகும் என்று சொல்லியிருக்கிறார்களே. இந்தமாதிரி ஆலையை கொடுமுடியில் கொண்டுவர ஏற்பாடு செய்தால் நஷ்டம் ஏற்படும் என்று அரசாங்கம் அறி யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கீழ்க்கண்ட காரணத்தால் கோயம்புத்தூர் பாலக்காடு சாலையிலிருந்து தெற்கில் 5 மைல் தொலைவில் உள்ள குனியமுத்தூர் கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டது. குனியமுத்தூரைச் சுற்றி 30 மைல் தொலைவில் கரும்பு சாகுபடி செய்யும் பரப்பளவு சுமார் 27,000 ஏக்கராவாக இருக்கும். ஆனால் இப்பரப்பு காரமடையைச் சுற்றி 19,000 ஏக்கராக இருக்கும். ஆகவே குனியமுத்தூருக்கு 50 சதவீதம் கரும்பு சாகுபடி பரப்பு அதிகமாக இருக்கும். பொள்ளாச்சி வட்டத்தில்

கரும்பு கிடைப்பதால் குனியமுத்தூரில் ஆலையை நிறுவுவதால் இரண்டு பருவங்களிலும், அதாவது சர்க்கரை ஆண்டு பருவத்திலும் சிறப்புப் பருவத்திலும் கரும்பு கிடைக்கும். ஆனால் காரமடையில் ஒரு பருவத்தில்தான், அதாவது ஜூலை செப்டம்பர் சிறப்புப் பருவத்தில்தான் கரும்பு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

கொடிமுடிப் பகுதியில் கொண்டு வர வேண்டுமென்றால் அதைப் பற்றி பின்னால் பரிசீலிக்கலாம்.

திரு. வி. பழனிவேலு: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் பகுதியில் சர்க்கரை ஆலை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றதா? இது என்ன ஆயிற்று, எப்போது ஆரம்பிக்கப் பட உள்ளது என்பதை தெரிந்து கொள்ளலாமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தனிக் கேள்வி போட வேண்டும்.

*533 வினா திரு. த. சோனையா: மாண்புமிகு தொழில் மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஒன்றியத்தில் சர்க்கரை ஆலை ஒன்று புதிதாக அமைக்க திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (ஆ) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கை வட்டத்தில் புதிய சர்க்கரை ஆலையொன்று அமைக்கப்படவிருக்கிறது.

*Central Staff College.*

*624 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) whether the Government are aware of the proposal of the Central Government to start a Central Staff College for Training high level functionaries of Agricultural Universities during the Fifth Plan; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (ஆ) வேளாண்மைக் கல்லூரி பற்றிய விவரங்கள் மாநில அரசிடம் இல்லை.



திரு. என். கே. பழனிசாமி: சார், அதனுடைய வேலை என்ன? இது எங்கு அமைக்கப்படும், அதனுடைய முக்கியமான பணி என்ன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாநில அரசாங்கத்திடம் விவரம் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அதுபற்றி கேள்வி கேட்டால் என்ன அர்த்தம்?

*Tube-well Corporation*

*625 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) whether there is any proposal under the consideration of the Government to set up a Tube-well Corporation in the State, and

(b) if so, the details there of?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இல்லை.

(ஆ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: சார், இந்த டாக்ஸ் போர்சில் சொல்லப்பட்டு இருப்பது 8.7 டி. எம். சி. அதற்கு ஏராளமான—65 லட்சம் கிணறுகள் பிரயோசனப்படும். இப்போது நம் மாநிலத்தில் இராமநாதபுரம், திருநெல்வேலி நீங்கலாக மற்ற மாவட்டங்களையும் சேர்த்தால் 8.7 டி. எம்.சி. இருக்கிறது. கோடிக்கணக்கான கிணறுகளுக்குத் தண்ணீர் கொடுக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. ஏற்கனவே நீர் எல்லாம் பயன் படுத்தி ஆகிவிட்டது. அடி நீர் கொண்டு வந்தால் தான் பிரயோசனம். இதற்கு தனியாக ஒரு வாரியம் வைக்க சர்க்கார் முயற்சி செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நில நீர் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்துக்கள் ஏற்கக் கூடியவை. ஆனால் அதற்காக தனியாக கார்பொரேஷன், கம்பெனி அல்லது கழகம் நிறுவுவது முடியாது என்று சொன்னேன். ட்யூப்வெல் துவங்குவதற்கு அதிகப்படியாக பவர் ட்ரில் பெறுவதில் அரசு மிகத் தீவிரமாக முயற்சி செய்து இருக்கின்றது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, இந்த நில நீரைக் கொண்டு வர வேண்டும் என்பதில் அமைச்சருக்கு ஆர்வம் உண்டு. இப்போது இருக்கின்ற நில நீர் கோட்ட திட்டங்கள் மூலம் குழாய்க்கிணறுகள் போடுவதற்கு போதிய கை போர்செட் பவர் ட்ரில் இல்லை என்று குறைப் பட்டு இருக்கின்றனர். இக்குறையை நீக்க அரசு என்ன முயற்சி எடுத்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாநில அரசின் கீழ் உள்ள 133 பவர் ட்ரில்கள் இருக்கின்றன. அவற்றில் தற்போது "ஒரு பாதி வறட்சிப் பணிக்கு கொடுப்பட்டு இருக்கின்றது. மற்ற பாதி 2, 3 ஷிப்ட் என்ற அளவில் வேலை செய்து கொண்டு வருகின்றது. மேற்கொண்டு பவர் ட்ரில்கள் தேவை என்பதை நாம் பல ஆண்டுகளுக்கு முன்னால் உணர்ந்து அதற்கான காரியம் ஆற்றி வருகிறோம். உலக பாங்க் ஒப்பந்தம் செய்த போது ஏறத்தாழ 10 கோடிக்கு இந்த புதிதாக பவர் ட்ரில் வரவழைக்க ஒப்பந்தம் செய்து இருக்கிறோம். இது இன்னும் வந்து சேரவில்லை. அண்மையில் யூ. கே. எய்ட், இங்கிலாந்து தேசத்திலிருந்து உதவி என்கிற முறையில் 100 ட்ரில்கள் கிடைக்கலாம்.

(முற்பகல் 9–30)

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த மாநிலத்திலே குழாய்க் கிணறுகளுக்கு ஒரு கழகம் அமைப்பதை விட, போர் டிரில்களை எல்லாம் வரவழைத்து, அதிகமாகக் குழாய்க் கிணறுகள் அமைக்க உதவி செய்வதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். விவசாயிகள் தாங்களே குழாய்க் கிணறுகள் அமைக்கக் கடன் பெறவோ அல்லது பொருளாதார வசதியோ இல்லாத நிலைமையோ இருப்பதால், மாநிலத்திலே உள்ள நிலநீரைப் பயன்படுத்தக் கழகம் அமைப்பதன் மூலம் பாசன வசதி பெறமுடியும். அதனை மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கழகம் அமைப்பதைப்பற்றிச் சொல்லுங்கள். மற்றபடி கிணறு அமைப்பது, மற்றதற்கெல்லாம் போகாதீர்கள்.

(பதிலில்லை)

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்த போர் டிரில்கள் பற்றாக்குறையாக இருக்கின்றன என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவற்றைப் பெறுவதற்கான முயற்சிகள் விரும்பிய பலனைத் தருவதில்லையென்று சொன்னார்கள். இருக்கிற பவர் டிரில்களை, எங்கெங்கே நீர் அதிகமாக இருக்கிறதோ, அங்கு போட, பற்றாக்குறை அளவை வைத்து, பிரையாரிட்டீஸ் போட்டு, அந்த வகையில் பவர் டிரில்களைக் கொடுத்து உதவ அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அந்த முறையில்தான் அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, நில நீர் சம்பந்தமாக தமிழ் நாட்டிலே ஏறக்குறைய 100 அடி, 200 அடி ஆழம் வெட்டினால் தான் இப்பொழுது விவசாயம் செய்ய முடிகிறது. ஆனால் 100 அடி, 200 அடி ஆழம்





வெட்ட, ரூ. 50,000, ரூ. 60,000 செலவழிக்க வேண்டியிருக்கிறது. அதனால், விவசாயிகள் விவசாயம் செய்ய முடியவில்லை. ஆகவே, போரிங் போட தனி வாரியம் அமைத்தால்தான் உற்பத்தி பெருகும், உணவுப் பிரச்னை தீரும். உற்பத்தி பெருகினால்தான் உணவுப் பிரச்னை தீரும். ஆகவே, தமிழ் நாட்டு விவசாயிகளுக்கு நன்மை செய்வதோடு உணவு உற்பத்தியையும் பெருக்க அரசாங்கம் ஏதுவாக இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, எல்லா இடங்களிலும் நிலத்தடி நீர் 100 அடி, 200 அடிக்குக் கீழேதான் கிடைக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. சேலம் மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம். தருமபுரி மாவட்டம் ஆகியவை பற்றி சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். கடலோரங்களில் நிலத்தடி நீர் மிக அருகாமையிலேயே இருக்கிறது. அதோடு, நீங்கள் குழாய்க் கிணறுகளை அமைக்க வங்கிகள் மூலமாகவாவது ஏதாவது கடன் வாங்க ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

திரு. கே. கங்கசாமி: பேரவைத் தலைவரவர்களே, குடிக்கக்கூட தண்ணீர் இல்லாமல வறட்சி ஏற்பட்ட பகுதிகளில் மதுரை மாவட்டத்தில் தான்பெரும் பகுதியும் இருக்கிறது. அப்படியிருந்தும் உசிலம்பட்டிதாலூகா, திருமங்கலம் தாலூகா ஆகிய பகுதிகளில், பவர் டிரில்கள் போட்டுக் கொள்ள கோரிக்கைகள் விடுத்தும் கிடைக்கவில்லை யென்ற புகார்கள் இருக்கின்றன. அதற்கு அமைச்சரவர்கள் உடனடியாக ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஏற்கனவே நான் சொன்னேன், 133 பவர் டிரில்கள் அரசாங்கத்தின் கையிலிருக்கின்றன. அவற்றில், பாதி குடிநீருக்காக ஒதுக்கப்பட்டு, குடி நீருக்குக் குழாய்கள் போடுவதிலே நாங்கள் செயல்பட்டு வருகின்றோம் என்று. கையினாலே டிரில்களை ஆப்பரேட் செய்வதானால், 4, 5 பேர் சேர்ந்து, 30 அடி, 40 அடி ஆழம் வரக்கூடிய டிரில்களாக இருக்கின்றன. Hand-operated drills அவைகளையும் பயன்படுத்தலாம். ஆனால், கோவை மாவட்டத்திலே அல்லது சேலம் மாவட்டத்திலே பாறை கடினமாக இருப்பதால், அங்கே பவர் ரிடில்கள் தேவையானவை அனுப்பப்படுகின்றன.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, கிணறுகள் வெட்டிக்கொள்ள முடியாத, பம்ப் செட்டுகள் வைத்துக்கொள்ள முடியாத ஆயிரக்கணக்கான விவசாயிகள் ½ ஏக்கர், 1 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரு வாரியம் அமைத்து, அதன் மூலமாகக் குழாய்க் கிணறுகள் அமைத்துத் தண்ணீர் சப்ளை செய்து, தண்ணீர் தீர்வை வசூலிக்கலாமே. அதற்காகவாவது வாரியம் அமைப்பது பற்றி மறு பரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u> : அப்படிப்பட்ட வாரியம் ஹரியானா மாநிலத்திலே செயல்படுகிறது. ஆனால், அவர்கள் விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து, அதைக்கொண்டு, விவசாயிகள் குழாய்க் கிணறுகள் தோண்டுவதில்லை. அவர்கள் பவர் டிரில்களை எப்பொழுது கொடுக்கிறார்களோ, அப்பொழுது, உடனடியாக, வாடகை—ரெண்ட்—ஹையர் சார்ஜ்—வாங்கிக்கொள்கிறார்கள். விவசாயிகளுக்குக் கூட்டுறவு வங்கிகளும் மற்ற வங்கிகளும் கடன் கொடுக்கின்றன.

<u>திரு. கே. என். குமாரசாமி</u> : தலைவரவர்களே, கோவை மாவட்டத்திலே அமைச்சரவர்கள் சொல்வது குடிநீருக்காகத்தான், பவர் டிரில்கள், இவைகளெல்லாம் கிடைக்கின்றன. விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. ஆனால், 360 அடி தோண்டியும் தண்ணீர் கிடைப்பதில்லை. அரசாங்கமே 400 அடி தோண்டினால் தண்ணீர் கிடைக்கும் என்ற நிலைமை இருக்கிறதே ; அதற்குச் செலவு அதிகமாகிறது. ஆகவே, அரசாங்கமே பாதி கன்செஷன்ஸ் அல்லது முழு கன்செஷன்ஸ் கொடுத்து, அந்த போர் வெல்களை விவசாயிகளுக்குப் போட ஒரு அமைப்பை, கோவை ஜில்லாவில், எங்கு அதிகமாக இருக்கிறதோ, அங்கு செய்ய முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u> : தலைவரவர்களே, விவசாயத்திற்கு 300 அடி, 400 அடி போனால் கூட, அதன் மூலமாகத் தண்ணீர் கிடைக்குமானால் கோவை மாவட்ட விவசாயிகள் விவசாயத்தில் நட்டப்படுவதாகச் சொல்லவில்லை. விவசாயத்திலே உண்மையாக ஈடுபட்டிருப்பவர்களைச் சொல்கிறேன். ஆகையினால், தேவையான அளவுக்கு வங்கிகளிலே கடன் வாங்கிக்கொள்ள வேண்டுமே தவிர, போர் வெல்களை கொடுக்க வேண்டுமென்றோ, அரை விலையில் கொடுக்க வேண்டுமென்றோ கேட்பது முறையல்ல என்று அரசு கருதித்தான் விவசாயிகளுக்குத் தனியாக வாடகை வைத்திருக்கிறோம். விவசாயத்திற்கு வசூலிப்பதை விட, மற்றவற்றிற்கு அதிகமாக வசூலிக்கிறோம். ஆனால், விவசாயத்திற்கு மிகவும் குறைவாக வசூலித்துச் சலுகை கொடுத்து வருகிறோம்.

### *Agro Engineering Co-operatives*

*626 Q.—THIRUMATHI T.N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) wheter there is a proposal with the Government to establish block level agro engineering co-operatives in the State ; and

(*b*) if so, the details thereof ?

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u> : (அ) & (இ) வளர்ச்சி வட்டார அளவில் அதாவது பிளாக் அளவில 300 வேளாண் பொறியியல் கூட்டுறவு பணி நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 1973–74-ம் வருஷம் தொடங்கப்பட்ட பட்டதாரிகள் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசு ரூ. 1·5 கோடி உதவியுள்ளது.





<u>திரு. சோ. அழகர்சாமி</u> : தலைவரவர்களே, இந்த வட்டார அளவில் அமைக்கப்பட்டிருக்கிற வேளாண் பொறியியல் சங்கங்கள் எந்த மாதிரியான செயல்களை செய்து வருகின்றன ? அதாவது, டிராக்டர் போன்ற விவசாய இயந்திரங்களை வாங்கி வாடகைக்கு விடுகின்றனவா ? அல்லது தனியார் வைத்திருக்கிற டிராக்டர்களைப் பழுதுபார்க்கின்ற வேலைகளைச் செய்கின்றனவா ? அப்படியென்றால், வட்டாரங்களில் இரண்டு மூன்று டிராக்டர்களை மலிவான விலையில் வாங்கிக் கொடுக்க கழகம் மூலம் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u> : தலைவரவர்களே, இந்த வேளாண்மைக் கூட்டுறவுப் பொறியியல் பணி நிலையங்கள் ஏற்கனவே டிராக்டர்களை வாடகைக்குக் கொடுக்கின்றன. அதுவுமல்லாமல், தெளிப்பான் இயந்திரங்களை (Power Sprayers) வாடகைக்குக் கொடுக்கிறோம். அதுவுமில்லாமல் அந்தத் தெளிப்பான்களை ரிப்பேர் செய்கிற பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஏற்கனவே அவர்கள் கொடுக்கிற அந்த வாடகையோ அல்லது சார்ஜோ குறைந்த அளவில்தான்—அது தொடர்ந்து இப்பொழுது வாங்கப்பட்டு வருகிறது விவசாயிகளிடமிருந்து.

<u>திரு. இரா. மாணிக்கவாசகம்</u> : தலைவரவர்களே, இத்தகைய சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டும், இன்னும் பல்வேறு சங்கங்களுக்கு விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டு, டிராக்டர்கள், டிரில்லர்கள், பவர் மெஷின்கள் மற்ற கருவிகள் எல்லாம் இன்னும் அமைக்கப்படாமலும், அதற்கான பணமும் கடன்களும் கிடைக்காமலிருக்கிறது. அதை உடனடியாகக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u> : தலைவரவர்களே, பணம் கிடைக்காமலிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்கெனவே, ரூ. 1·5 கோடியை மத்திய அரசு கொடுத்திருக்கிறது என்பது மட்டுமல்லாமல், ஸ்டேட் பாங்கியிலிருந்து ஒவ்வொரு பிளாக்குக்கும், அதாவது வட்டார வளர்ச்சிப் பகுதிக்கும் ரூ. 2 இலட்சம் அவர்கள் கடன் கொடுத்து உதவி செய்கிறார்கள். ஆகவே, எந்த இடத்திலாவது, குறிப்பாக அதிகப்படியான இயந்திரங்கள் அல்லது டிராக்டர்கள் தேவையென்று சொன்னால், அந்த இடங்களிலே உள்ள சங்கங்களிலே அதிகமாகக் கிடைக்க ஏற்பாடு செய்யலாம்.

<u>திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன்</u>: தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை, சந்தைப்புதுப்பாளையம் பகுதியில் வேளாண் பொறியியல் கழகம் இரண்டு இருக்கிறது. ஆனால், இதுவரையிலும் நிர்வாகப் பொறியாளர் நியமிக்கப்படவில்லை. விரைவில் நியமிக்கப்படுவார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u> : மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைக் குறித்துக் கொண்டிருக்கிறேன். அதை உடனடியாகக் கவனிக்கிறேன்.

திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு இன் ஜினீயரிங் சங்கங்கள் இலாபகரமாக நடந்து கொண்டிருக்கின்றனவா ? அப்படி இலாபகரமாக நடந்து கொண்டிருக்குமானால் ஒரு பிளாக்குக்கு இரண்டு மூன்று திட்டங்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : முதலிலே திட்டமிடப்பட்ட 300 எல்லா இடத்திலும் பூர்த்தியாகவில்லை. அதற்குப் பிறகு மற்றதைப் பார்க்கலாம். சங்கங்கள் எல்லாமே இலாபத்திலே நடக்கின்றனவா என்றால், இல்லை. சில நட்டத்திலேதான் நடக்கின்றன. தொடங்கும் போது நட்டம் ஏற்படத்தான் செய்யும். ஆனால், நாளாவட்டத்தில் போகப் போக, மக்கள்தான் அவற்றின் நன்மைகளைத் தெரிந்துகொண்டு, அதிகமான டிராக்டர்களை வாடிக்கையாக விடச் செய்ய வேண்டும், அல்லது தெளிப்பான்களை ரிப்பேர் செய்ய விடுவதன் மூலமோ தான் இலாபமாக நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சே. எ. வகாப் : தலைவரவர்களே, வந்தவாசியில் இந்த மாதிரியான சங்கம் ஒன்று 1½ வருடமாக பாங்கியிலே பணம் வாங்கி, ஷேர் காப்பிட்டல் போட்டுக்கூட, துவக்கப்படாமலிருக்கிறது. அது துவக்கப்படாமல் காலதாமதம் ஆகிறது, அதிகாரிகளை நியமிக்கவில்லை. இதை விரைவுபடுத்தி, உடனடியாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்ன குறையை இங்கே குறித்துக் கொண்டேன், விரைவிலே இதை கவனிக்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : இந்தக் கூட்டுறவு பொறியியல் சங்கங்கள் தமிழ் நாட்டில் எந்த எந்த ஒன்றியங்களிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன ? இன்னும் எல்லா ஒன்றியங்களிலும் ஆரம்பிக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மொத்தம் 300 என்று சொன்னேன். அதிலே எவ்வளவு தொடங்கப்பட்டன என்ற குறிப்பு கைவசம் இல்லை, எந்த எந்தப் பகுதிகள் என்ற குறிப்பு இல்லை, தனியாக அதைப்பற்றிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரமுடியும்.

டிராக்டர் பணிமனை

* 627 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை அண்ணா விவசாய பண்ணையில் டிராக்டர் சர்வீஸ் சென்டர் ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.





திரு. பெ. சௌந்தரபாண்டியன் : குடுமியான்மலை அண்ணா பண்ணையிலே டிராக்டர் பழுதுபார்க்கும் திட்டம் ஆரம்பிக்கிற முயற்சி கைவிடப்பட்டுவிட்டதா ? கைவிடப்பட்டது என்றால் அதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கேள்வி டிராக்டர் ரிப்பேர் சென்டர் பற்றி அல்ல, சர்வீஸ் சென்டர் பற்றித்தான், அந்த ஆலோசனை தள்ளிவைக்கப்பட்டு இருக்கிறது.

திரு. தி. பொன்னுமலை : சேலத்தில் கல்வராயன்மலை, சேர்வராயன் மலை இவற்றைத் தவிர ஏர்க்காடு..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கேள்வி 628-ல் வருகிறது. இந்தக் கேள்வியில் அல்ல.

## Development of Horticulture

*628 Q.—Thiru N.K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(a) whether there is any proposal to introduce a crash programme for the Development of Horticulture in Kalrayan and Kolli Hills, and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) : கிராஷ் புரோகிராம் அதாவது தீவிரத் திட்டம் இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், அந்தப் பகுதியில் காபித் தோட்டங்களும் டீ தோட்டங்களும் வைப்பதற்கு வசதியிருக்கிறதா ? அதைப்பற்றி ஆய்வு செய்யப்பட்டு இருக்கிறதா ? அதன் முடிவு என்ன ? சர்க்கார் என்ன முடிவு செய்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : காபித் தோட்டங்களும், டீ தோட்டங்களும் இந்த ஹார்டிகல்சர் என்ற குறிப்பிலே வரவில்லை. அதைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

திரு. தி. பொன்னுமலை : கல்வராயன்மலை, சேர்வராயன்மலை, ஏர்க்காடு இவற்றைத் தவிர கொல்லிமலை சிறந்த இடம், நீரூற்று உள்ள இடம், அங்கே ஆராய்ச்சிகள் நடத்தி விவசாயம் முன்னேற ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, கொல்லிமலைப்பற்றி நான் சொன்னேன். கிராஷ் புரோகிராம், தீவிர திட்டம் இல்லை என்று சொன்னேன். அங்கே ஒரு 200 ஏக்கர் தோட்டக் கலை வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டு நிதி உதவி கொல்லிமலையில் உள்ள பழங்குடி மக்களின் நன்மைக்காக உரம் பாதி விலையிலும், பூச்சி கொல்லி மருந்து 10 சதவீதம் விலை குறைவிலும் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி கொல்லிமலை பற்றியது. உதக மண்டலம், ஓசூர் பற்றியெல்லாம் கேள்விகள் வரக்கூடாது.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon Minister whether he will arrange for a crash programme fo horticulture development in Tamil Nadu since there is grea export potential?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, கிராஷ் புரோகிராம் என்ற அளவில் தீவிரத் திட்டம் எதுவும் நடைமுறையில் இல்லை அதற்கான செயற்குறிப்பு இல்லை.

புதிய போக்குவரத்துக் கழகம்

*629. வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா?

திருச்சி-புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு தனி போக்குவரத்துக் கழகம் அமைத்திட அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

எளாவூர் – அம்பத்தூர் பேருந்துப்பணி

*630 வினு—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கும்முடிப்பூண்டி துணை வட்டம் எளாவூரிலிருந்து கும்முடிப்பூண்டி, செங்குன்றம், புழல் வழியே அம்பத்தூர் வரை பேருந்து விடும் செயற்குறிப்பு காலதாமதம் ஆவதேன்?

(இ) இது எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) எளாவூரிலிருந்து கும்முடிப்பூண்டி, செங்குன்றம், புழல் வழியே அம்பத்தூர் தொழிற்பேட்டை வரை பேருந்து விடும் செயற்குறிப்பு எதுமில்லை.



எளாவூருக்கும், புழலுக்குமிடையே நாள் ஒன்றுக்கு 52 தடவைகள் செல்லும் 4 பேருந்துகளையும், அம்பத்தூர் தொழிற்பேட்டையுடன் புழலை இணைக்கும் வகையில் நாள் ஒன்றுக்கு 32 தடவைகள் செல்லும் 2 பேருந்துகளையும் பல்லவன் போக்குவரத்துக் கழகம் நடத்திக்கொண்டு வருகிறது. இது, அம்பத்தூர் தொழிற்பேட்டையிலிருந்து எளாவூருக்கு இணைப்பை ஏற்படுத்துகிறது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, தொழிலாளர்களுக்காக எத்தனையோ செய்துதருகிற போக்குவரத்துத் துறை அந்தப்பகுதியிலே இருக்கிற தொழிலாளர்களுக்கு ஆவடி செல்வதற்கு புழல் வழியாகவும் செங்குன்றம் வழியாகவும் நேரடியாகப் பேருந்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தொழிலாளர்களுக்கு எவ்வளவோ வசதி செய்வதால் கொஞ்சநேரம் இறங்கி ஏறுவதில் எந்த விதமான பாதகமும் ஏற்பட்டுவிடாது.

சென்னை—ஆரம்பாக்கம் பேருந்துப்பணி

*631 வினு—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:

சென்னை—ஆரம்பாக்கம் பேருந்து வழித்தடத்தினை ஏடூர் கிராமம் வரை நீட்டிக்கும் திட்டம் எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சென்னை—ஆரம்பாக்கம் பேருந்து வழித்தடத்தினை ஏடூர் கிராமம் வரை நீட்டிக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, ஏற்கெனவே சாலை சரியாக இல்லை என்பதற்காக விடமுடியாது என்று சொன்னார்கள். இப்போது 10 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டு சாலை போடப்பட்டிருக்கிறது. ஆகவே ஏடூர் வரை போக்குவரத்து ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஆந்திரா—தமிழ் மாநிலங்களிடையே இருக்கின்ற அந்த ஒப்பந்தம் சம்பந்தமாக ஆந்திர உயர்நீதி மன்றத்திலே ஆந்திரத்திலே இருக்கின்ற தனியார் பேருந்து உரிமையாளர்களால் வழக்கு தொடரப்பட்டு பெற்றிருக்கிறது. அந்த ஒப்பந்தம் வருகின்ற வரையில் நாம் மாற்றியமைக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது.

[1975 ஏப்ரல் 1

## சென்னை—கல்பாக்கம் பேருந்துப்பணி

* 632 வினா திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து கல்பாக்கத்திற்கு நேரடி பேருந்து விடும் குறிப ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பல்லவன் போக்குவரத்து கழகம் கீழே குறிப்பிட்டுள்ள வழித்தடங்களில் வெவ்வேறு மார்க்கமாக சென்னையிலிருந்து கல்பாக்கம் நகரியத்திற்கு பேருந்துகளை செலுத்தி வருகிறது.

(1 )வழித்தடம் எண் 108 பிராட்வே (சென்னை)—கல்பாக்கம் நகரிய (எட்டு பேருந்துகள்) வழி வெலிங்டன், சைதாப்பேட்டை, கிண்டி, தாம் பரம், செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் மற்றும் சதுரங்கப்பட்டணம்.

(2) வழித்தடம் எண் 119 பிராட்வேயிலிருந்து (சென்னை) கல்பாக்க நகரியத்திற்கு (மூன்று பேருந்துகள்) வழி சைதாப்பேட்டை, அடையார், கோம்பாக்கம், திருப்போரூர், மகாபலிபுரம் மற்றும் சதுரங்கப்பட்டணம்.

(3) வழித்தடம் எண் 119ஏ பிராட்வேயிலிருந்து (சென்னை) கல் பாக்கம் நகரியத்திற்கு (மூன்று பேருந்துகள்) வழி சைதாப்பேட்டை, திருவான்மியூர், முட்டுக்காடு, கோவளம், மகாபலிபுரம் மற்றும் சதுரங்கப் பட்டணம்.

## பழனி கோயில்

*633 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அற நிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:

பழனி தண்டபாணிசுவாமிக்கு வைர கிரீடம் சாத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பழனி அருள்திரு தண்ட பாணி சுவாமிக்கு வைர கிரீடம் சாத்தும் திட்டம் அறங்காவலர் பரிசீலனை யில் உள்ளது.

திரு பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, அந்த வைர கிரீடத்திற்கு கோயில் நிதியிலிருந்து செலவிட ஆலோசிக்கப்பட்டுள்ளதா? அல்லது பொதுமக்களிடமிருந்து வசூலிக்கிற நிதியிலிருந்து செலவிட ஆலோசிக்கப்பட்டுள்ளதா ?



75 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, வைரக் ரீடம் சாத்தும் திட்டமும் அதைப் போன்று தங்கத்தேர், வெள்ளித் தர் போன்ற திட்டமும் கோயில் நிதியிலிருந்து செய்யாமல் இந்தக் ாரியங்கள் எல்லாம் பொதுமக்கள் தருகின்ற நிதியிலிருந்து சென்ற ண்டிலிருந்து செய்வது என்று தீர்மானித்து அதன்படி செய்யப்பட்டு ருகிறது.

திரு ஆர். பொன்னப்ப நாடார்: சார், இந்தத்திட்டமானது பரிசீலனை ல இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எவ்வளவு ாளாகப் பரிசீலனையில் இருக்கிறது? விரைவிலே முடிக்க அரசாங்கம் டவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, கடந்த 5—4—1974 ஆம் தேதியன்று அறங்காவலர் குழு கூட்டத்திலே இந்தத் ர்மானத்தைப் போட்டார்கள். இதைச் செய்வதற்குப் பல்வேறு ற்பிகளிடத்திலே தொடர்புகொள்ளப்பட்டது. ஆனால் மிகவும் சிறந்த முறையிலே செய்யவேண்டுமென்ற காரணத்தால் இது சம்பந்தமாக வறு பல ஸ்தபதியார்களை அணுகி கேட்கப்பட்டுள்ளது. அதுபற்றி நட வடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே.டி.கே. தங்கமணி : சாதாரணமாக பழனி கோயிலிலே அருமை யான நகைகள் இருக்கின்றன, அதையெல்லாம் மக்களுக்கு எடுத்துக் காட்டலாம், அம்மாதிரியாக இருக்கும்போது வைரகிரீடம் அவசியம் தானா? வைரகிரீடம் வேண்டுமென்று நம் அரசிடம் கேட்கப்பட்டதா? அப்படிக் கேட்கப்பட்டு எற்கனவே இருக்கிற நகைகளை மக்களுக்கு எடுத்துக் காட்டவேண்டுமென்ற முறையிலே ஆலோசனை அவர்களுக்கு சொல்லப் பட்டதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இந்த வைரகிரீடம், தங்கத் தேர் செய்ய வேண்டுமென்ற நோக்கம் அரசாங்[illegible] கிடையாது. ஆனால் அந்தந்தக் கோயிலினுடைய அறங்கா[illegible]ங்கு பக்தர்கள் தெரிவிக்கின்ற விருப்பத்திற்கிணங்[illegible] செய்கிறார்கள். [illegible] போது நாடு இருக்கிற சூழ்நிலையில் அவசி[illegible] என்பதை அறங்கா வலர் எண்ணிப்பார்க்கவேண்டுமென்பதுதா[illegible] அரசினுடைய கொள்கை யாகும்.

## திருச்செந்தூர் கோயில்.

*634—வினா திரு. எம். முத்தையா: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் சு[illegible] ஆல யத்தின் வெள்ளி ரதம், தங்க ரதம் ஆகியவை செய்வதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

[1975 ஏப்ரல் 10

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: வெள்ளி ரதம் ரூபாய் 1,24,540·18.

தங்க ரதம் ரூபாய் 4,19,245·65

திரு. ஏ. சுப்பிரமணியம் : இப்படி வைரக் கிரீடம், வெள்ளி ரதம், தங்க ரதம் என்பதாக ஏழ்மை நிறைந்த நாட்டில் மக்கள் அல்லல் படுகிற நேரத்தில் செய்கிறார்கள். அமைச்சரை கேட்டால் அரசு இல்லை—இந்த காரியத்திற்காக தனியாக பக்தர்கள் வசூல் செய்து செய்கிறார்கள் என்றார், என்றாலும் நாம் சில கோட்பாடுகளை மரபுகளை கடைபிடிக்க வேண்டியிருக்கிறது. இது போன்ற முயற்சியில் அறங்காவலர்கள் ஈடுபடுவதை ஊக்குவிக்காது தடுப்பதற்கு சட்டத்தின் மூலம் இல்லாமல் நாட்டின் நிலையை எடுத்து உணர்த்தி—பர்சுவேட் பண்ணி—இவற்றை வேறு நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் என்று சொல்ல அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இன்றைய சமுதாயத்தின் பொருளாதாரச் சூழ்நிலையில்—மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் ஆலயங்களில் தங்க ரதம், வெள்ளி ரதம்—வைரக் கிரீடம் என்றெல்லாம் செய்வது தேவைதானா என்று கேட்கிறதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. உணர முடிகிறது. ஏற்றுக்கொள்ள முடிகிறது. ஆனால் சில பேர்—உபயங்கள் என்ற பெயரால் இவைகளை செய்யவேண்டுமென்று விரும்புகிறார்கள். அவர்களும் சரி—செய்கிறதை ஏற்றுக்கொள்ளுகிற அறங்காவலர்களும் சரி, சட்டச் சபையில் அடிக்கடி இதைப் பற்றி எழுப்பப் படுகிற கருத்துக்களை எண்ணிப் பார்த்து இதற்கேற்றவாறு நடந்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறார்கள் என்பதை மட்டும்தான் இந்த அரசின் சார்பில் என்னால் சொல்ல இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வி 635. (திரு. சுரேந்திரன், திரு. ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் எழுந்திருந்தார்கள். குறுக்கீடு) இந்தக் கேள்விக்கு முதலமைச்சர்தான் விளக்கம் கொடுத்து விட்டார்களே. (குறுக்கீடு)

திரு. எம். சுரேந்திரன் : மனிதனது கற்பனைப் படைப்புத்தான் கடவுள் என்கிற பகுத்தறிவு வாதத்தை ஒப்புக்கொள்கிறவர்கள்—பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்கிறபோது இம்மாதிரி தங்கக் கிரீடம்—வெள்ளிக் கிரீடம் என காலத்திற்கு ஒவ்வாத ஒன்றை செய்ய முற்படுவதை அனுமதிப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாக இருக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழகத்திலுள்ள ஆலயங்களில் நிர்வாகங்கள் ஒழுங்காக நடைபெற வேண்டுமென்றுதான் அறநிலையத்துறை அமைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் அரசியல் வரலாற்றை கூர்ந்து நோக்கினால் அனைவருக்கும் நன்றாக தெரியும். ஏற்கனவே அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிற அறங்காவல்துறை செம்மையாக நடைபெற உதவியாக இருப்பதுதான் இந்த அரசின் கடமை.



1975 ஏப்ரல் 10]

நண்பர் சுரேந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். "பகுத்தறிவுவாதிகளாகிய நாங்கள் இந்தக் காரியங்களில் ஈடுபடலாமா ?" என்று. எங்களுக்கும் தமிழகத்திற்கும் பகுத்தறிவுக் கொள்கைகளை எடுத்து புகட்டி அறிவு ஊட்டிய பெரியார் அவர்களே—அவரது சமுதாயத்தால் ஏற்படுத்தப்பட்ட கோவிலுக்கு டிரஸ்டியாக இருந்து அந்தக் கடமைகளைச் சரிவர செய்துவந்தார்கள். "எனக்கு ஆண்டவனிடத்தில் நம்பிக்கை கிடையாது—ஆனாலும் என்னிடத்தில் ஒப்படைக்கப்பட்ட கடமைகளைச் செய்வது வேறு விவகாரம்" என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் பெரியார் வழி வந்தவர்கள்.

திரு. கே. கந்தசாமி: இன்று ஏதோ நாட்டில் பொருளாதாரத்தின் பெயரால் மதத்தை தாக்குகின்ற வகையில் கேள்வி கேட்பது—அதைத் தாங்கள் அனுமதிப்பது வருந்தத்தக்கதாக இருக்கிறது. அதை தாங்கள் தடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, மாண்புமிகு சுப்ரமணியம் அவர்களும், சுரேந்திரன் அவர்களும் ஆண்டவனுக்கு அணிவிக்கப்படுகிற வைரக்கிரீடம்—தங்க ரதம் போன்றவை தேவையில்லை என்று தெரிவித்தார்களே. அவர்களது கட்சியை சேர்ந்த இந்திய பிரதமர் அவர்கள் லட்சக் கணக்கில் செலவு செய்து கொண்டு விமானத்தில் சங்கராச்சார்ய சுவாமிகளைத் தரிசிக்க வந்தார்களே—அது எதற்காக என்று அறிய விரும்புகிறேன். அவர்கள் தங்களை உணர்ந்து பேச வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நண்பர் கந்தசாமி அவர்கள் மதத்தை தாக்குவதாக இங்கே கேள்விகள் அமைகின்றன என்று குறிப்பிட்டார்கள். இந்தியாவில் பல மதங்கள் இருக்கின்றன. இந்து மதம் மற்ற மதங்கள் எல்லாம் எப்படி வளர்ந்தன என்பதை கவனித்து பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட அளவோடு இருந்திடல் வேண்டும் என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன். சங்கராச்சார்ய சுவாமிகளைப் பார்ப்பதற்காக இந்திய பிரதமர் எதற்காக லட்சக்கணக்கில் செலவு செய்துக்கொண்டு வந்தார்கள் என்று சுப்பிரமணியத்தை பார்த்து கேட்டார்கள். அதற்கு அவர்கள் பதில் சொல்லக்கூடிய இடத்தில் இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : சார் ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். இங்கே கேள்வி தங்கக் கிரீடம்—வெள்ளி கிரீடம் பற்றியது. அதைவிட்டு அவர்கள் எங்கேயோ போய்விட்டார்கள். அதை நீங்கள் அனுமதித்திருக்கிறீர்கள்.

திரு. கு. காமாட்சி : கேள்வி நேரத்தில் பாய்ண்ட் ஆப் ஆர்டர் எழுப்பக்கூடாது என்று தாங்கள் தீர்ப்பளித்திருக்கிறீர்களே. இதுபோல பாயிண்ட ஆப் ஆர்டர் எழுப்புவது சரியா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் தீர்ப்பளித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள்தான் பேரவைத் தலைவருடன் ஒத்துழைக்க வேண்டும்.

[1975 ஏப்ரல் 10

திரு. ஏ. சுப்பிரமணியம் : சபாநாயகர் அவர்களே, தாங்கள் யாருடைய உதவியின்றியும் தீர்ப்பளிக்க தகுதி பெற்றிருப்பதாக கொஞ்ச நாளைக்கு முன்னால் நீங்களே பேசினீர்கள்.........(குறுக்கீடு) சம்பந்தம் இல்லாத ஒன்றை பற்றி இங்கே பேசியிருக்கிறார்கள். அதற்கு தாங்கள் அனுமதி அளித்திருக்கிறீர்கள். அதற்கு பதில் சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன். இங்கே பேசிய பிரச்சினை—மதத்தை தாக்குகின்ற பிரச்சினை அல்ல. அது அவருடைய கருத்தாக இருக்கிறது. இங்கே கேட்கப்பட்டது—மதத்தின் பெயரால்—கடவுள் பெயரால் இம்மாதிரியான—தேவையில்லாத செலவுகள் —பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய இந்த நாட்டில் அனுமதிக்கப் படலாமா—என்பதுதான். பிரதமர் சங்கராச்சாரியாரைப் பார்க்க வரவில்லை. தமிழகத்திற்கு வந்த நேரத்தில் போய் பார்த்தார்கள். பலபேர் போய்ப் பார்க்கிறார்கள். அவர்களும் போய் பார்க்கிறார்கள். (திரு. கே. கந்தசாமி திரு சுரேந்திரன் எழுந்திருந்தார்கள்—குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் இந்த இரண்டிற்கும் பதில் சொல்லிவிடுகிறேன்: தங்கரதம் செய்வதாக இருந்தாலும் தரிசனம் செய்வதாக இருந்தாலும் பணம் விரயமாகியிருக்கிறது.

மாண்புமிகுதிரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, வைரக் கிரீடம், தங்கரதம், வெள்ளிரதம் போன்றவைகளை திரு சுப்பிரமணியம் அவர்களும் திரு சுரேந்திரன் அவர்களும் செய்வதற்கு அரசு அனுமதிக்கக்கூடாது என்ற கருத்தை சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதுதான் அரசாங்கத்தின் கருத்து என்பதைச் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். ஆனால் சென்ற ஆண்டு இந்திய நாட்டின் பிரதமர் அவர்கள் கன்னியாகுமரி அம்மன் கோவிலுக்கு தனித் தூதுவர் மூலம் வைர நெக்லஸ் ஒன்றை தம் காணிக்கையாகக் கொடுத்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. முவை ஆதி : அறங்காவல்துறையின் கீழ்தான் அறங்காவலர்கள் கோவில்களிலே செயல்பட்டு வருகிறார்கள். கோவிலுக்கு யார் யார் எவ்வளவு காணிக்கை அளித்தாலும்—கோவில் நிர்வாகத்திற்கு செலவிடப்பட்ட தொகை போக பாக்கியுள்ள பணத்தை பொதுமக்களுக்குப் பயன்படுகிற மருத்துவமனை— கல்லூரி போன்றவைகளுக்கே செலவிட வேண்டுமென்று சட்டம் விதிக்க அரசாங்கம் முன்வருமா ?.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அதைத் தான் செய்துக் கொண்டிருக்கிறோம். உபரியாக இருக்கிற பணத்தை ஹாண்டிகாப்டு—உடல் ஊனமுற்றோருக்கும், மக்களது அறிவுக் கண்ணைத் திறப்பதற்கும்தான் பயன் படுத்துகிறோம். உபயம் செய்கிறவர்கள்—தங்க ரதம்—வைரக் கிரீடம் செய்து வைக்க முன்வந்தால் கூட அது போன்ற காரியங்களை அறங்காவலர்கள் ஊக்குவிக்கக்கூடாது என்பதுதான் இந்த அரசாங்கத்தின் நோக்கம்.

(முற்பகல் 10-00)

திரு. எம். சுரேந்திரன் : பகுத்தறிவு வாதிகள் என்ற லேபிளை ஒட்டிக் கொண்டு ஏன் இப்படிச் செய்கிறார்கள் ?



975 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒரு செய்தியை சொன்னீர்கள் அவர்கள் ஒரு செய்தியைச் சொன்னார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, தனிப்பட்டவர்கள் உபயம் என்ற பெயரால் வெள்ளி ரதம், தங்க ரதம், வைரக் கிரீடம் செய்து வைப்பதால் வைரக் கிரீடம் சாமிக்குச் சாத்த வேண்டுமென்றால் அதற்கென்று ஒரு கட்டளை இருக்கிறது, அதைப்போல தங்கரதம் சுற்றுப்புரத்தில் விட என்று கட்டளை வைத்திருக்கிறார்கள். இதன் மூலம் அரசுக்கு, கோயில்களுக்குப் பணம் உபரியாக வருகிறது என்பதை அரசு உணர்ந்திருக்கிறதா ? அந்த உபரி பணத்திலிருந்து சில திட்டங்களையெல்லாம் செய்கிறார்கள் என்பதையும் அரசு உணர்ந்திருக்கிறதா? அவ்வாறு உபயம் செய்பவர்களின் மனம் புண்படும் விதத்தில் வாதங்கள் இருப்பது கூடாது என்பதை அரசு உணருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதைப்போல் பிரதமர் அவர்கள் தனி நெக்லசை அனுப்பியதாகச் சொன்னார்கள், அதைப்போல யாராவது தனியாக உபயம் செய்கிறார்கள், நெக்லஸ் தருகிறார்கள் அல்லது சொந்தப் பணத்தில் வைரக் கிரீடம் செய்து கொடுக்கிறார்கள் என்றால் அது வேறு விவகாரம். அதற்காக குழு அமைக்கப்பட்டு வசூல் செய்து அந்தக் காரியங்களை செய்வது நல்லதல்ல என்பது அரசாங்கத்தின் கருத்து.

## வந்தவாசியில் குளிர்பதன நிலையம்.

*635 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

வந்தவாசியில் ஒரு பால் குளிர் பதன நிலையம் (Chilling Centre) ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, வந்தவாசியில் பாலைக் குளிர வைக்கும் நிலையம் ஒன்றைப் புதிதாக ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதும் இல்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, வந்தவாசி, செய்யாறு தாலுக்காக்கள் பால் வளம் அதிகம் உள்ள பகுதிகளாக இருக்கின்றன. அங்குள்ள பாலை பஸ் மூலமும், லாரிகள் மூலமும் சென்னைக்கு அனுப்புகிறார்கள். எனவே, அங்கே சிறிய அளவிலேயாவது ஒரு "சில்லிங் ப்ளாண்ட்" ஏற்படுத்த இனிமேலாவது அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, வந்தவாசியில்தான் இல்லை என்று சொன்னேன். செய்யாறில் செய்யும் செயற்குறிப்பு உள்ளது.

அரிசனக் குடியிருப்புக்களுக்குக் குடிநீர் வழங்கல்.

*636 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், நெல்வாய் அரிசனக் காலனி மக்களுக்கு குழாய்க் குடிநீர்த் திட்டம் அமைப்பதில் மேலும் காலதாமதம் ஏன்?

(இ) இது எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : (அ) & (இ) வரட்சி நிவாரண திட்டத்தின்கீழ் கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் நெல்வாய் அரிசனக் காலனி மக்களுக்கு குழாய் குடிநீர் வசதி அளிக்கும் பணி 24—2—1975 அன்று மேற்படி ஒன்றிய ஆணையாளரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

* 637 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள காக்கவாக்கம் அரிசனக் காலனியில் குடிநீர்த் திட்டம் அமைப்பதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை?

(இ) இது எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : (அ) எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள காக்கவாக்கம் அரிசனக் காலனியில் குடிநீர் வசதி செய்ய திட்டம் எதுவுமில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த அரிசனக் காலனியில் இப்பொழுது வறட்சி நிவாரணத்தில் "போர்வெல்" மட்டும் போட்டிருக்கிறார்கள். இங்கே மேல்நிலைக் குடிநீர்த் திட்டத்தை ஏற்படுத்த அரிசன நல இலாக்காவில் நிதி ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, 1975–76-இல் அதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று, இந்தக் கேள்விக்குப் பிறகு மாவட்ட ஆட்சியாளர் நேரில் சென்று, பார்த்து திட்டங்களைத் தயாரித்து வருகிறார்கள்.



*638—வினா : திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரிப்பேட்டைத் துணை வட்டம், கன்னிகைப்பேர் காலனி, நெய்வேலி காலனி, ஆலப்பாக்கம் காலனி ஆகியவற்றில் அரிசன மக்களுக்கு வீட்டுமனைகளை ஆர்சிதம் செய்து வழங்கும் திட்டம் மேன்மேலும் காலதாமதம் ஆவதேன் ?

(இ) இது எப்போது நிறைவேறும் ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :

(அ&இ) கன்னிகைப்பேர்—ஆர்சித நிலங்களில் முன் மதிப்பீட்டுப் பட்டியல் தயார் செய்யும்பொழுது, அவ்வூர் அரிசன மக்கள் ஆர்சித நிலங்களில் குடியேறுவதற்கு மறுத்ததால் அவாறு நிறைவேற்றுவதில் கால தாமதம் ஏற்பட்டது. தற்பொழுது அரிசனங்கள் விருப்பம் தெரிவித்து உள்ளார்கள். ஆர்சித நிலங்களில் முன் மதிப்பீட்டுப் பட்டியல் மாவட்ட ஆட்சியாளரின் பரிசிலனையில் உள்ளது.

நெய்வேலி—நில ஆர்சிதத்திற்கான பிரிவு 6 விளம்பல் வரைவு அரசு வாலாய ஆணை எண் 106. ச.ந. நாள் 24—1—1974-ல் ஏற்கப்பட்டு 25—1—1974-ல் தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப் பட்டுள்ளது. ஆர்சித நிலங்களின் முன் மதிப்பீட்டுப் பட்டியல் மாவட்ட ஆட்சியாளரின் பரிசிலனையில் உள்ளது.

ஆலப்பாக்கம்—நில ஆர்சிதத்திற்கான பிரிவு 4 (1) முன் மொழிவு அரசு வாலாய ஆணை எண். 1220 ச.ந. நாள் 9—8—1974-ல் ஏற்கப்பட்டு, 9—10—1974-ல் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. பிரிவு 6 விளம்பல் வரைவு மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த மூன்று அரிசன நலக் காலனிகளிலும் வீட்டுமனை வழங்கும் திட்டங்கள் ஏற்கனவே பல மாதங்களாகத் தாமதமாக இருக்கின்றன. 1975-ம் ஆண்டு இறுதிக்குள்ளாகவாவது அவர்களுக்கு பட்டா தருவதற்கு ஆணை பிறப்பிக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, ஆட்சியாளரிடமிருந்து அவருடைய வரைவு வந்தபிறகு ஏற்றுக் கொள்ளப்படுவதாக அரசு இருக்கிறது.

*639—வினா—திரு. பு. செ. முத்துச் செல்வன் : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி வட்டம், பேரூர் கிராம மக்களுக்கு அரிசன நல இலாகா மூலம் குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அது எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பு. செ. முத்துச்செல்வன் : தலைவரவர்களே, பேரூர் கிராமத்தில் வசிக்கும் மக்கள் முழுவதும் அரிசன மக்கள் ஆவார்கள். ஏறத்தாழ அங்கே 2,000 மக்கள் தொகை கொண்ட அந்த அரிசன மக்கள் வசிக்கும் கிராமத்திற்கு இரண்டு மூன்று ஆண்டுக்காலமாகியும் குடி நீர் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. விரைவில் அந்தக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றும் வகையில் அரிசன நல இலாக்காவின் மூலம் ஏற்பாடு செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, அரிசனங்கள் தற்பொழுது உபயோகித்து வரும் பேரூர் அக்ரஹாரம் கிணற்றை மேலும் அகலப்படுத்தியும் ஆழப்படுத்தியும், ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைப்பது என்றும், அந்த நீரை அதற்கு எடுத்துச் சென்று அங்கிருந்து குழாய் மூலம் அரிசனப் பகுதிக்கு எடுத்துச் செல்லலாம் என்றும், அதற்கு தேவைப்படும் மதிப்பீட்டுச் செல்வான ரூ. 40,000-இல் வேலை செய்யலாம். என்ற நிலை மாவட்ட ஆட்சியாளரின் கவனத்தில் இருக்கிறது.

திரு. பு. செ. முத்துச் செல்வன் : தலைவரவர்களே, அந்த அரிசன மக்களுக்கு அக்கிரஹாரத்திலுள்ள கிணற்றிலிருந்து செல்வதைவிட பக்கத்திலுள்ள ஹேம்லெட்—பேரூரின் கீழ் கிராமத்தில், பிற்படுத்தப்பட்ட, மக்கள் வசிக்கும் பகுதியிலுள்ள கிணற்றில் அதிகமாகத் தண்ணீர் கிடைக்கும் அளவில் இருக்கிறது. அதில் தண்ணீர் வற்றாமல் இருக்கிறது. ஆகவே, அந்த இடத்திலிருந்து தண்ணீர் எடுத்து அரிசன மக்களுக்குக் கொடுக்க ஆவன செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, இதைத்தான் முன்பே குறிப்பிட்டேன். 40,000 ரூபாய் மதிப்பீட்டில் அங்கிருந்து ஒரு குழாய் மூலம் தண்ணீர் கொடுக்கலாமா அல்லது 50,000 ரூபாய் மதிப்பீட்டில் அரிசனக் காலனியிலே குடிநீர்த் தொட்டி அமைக்கலாமா என்ற இந்த இரண்டையும் பரிசீலித்து வருகிறார்கள்.

*640 வினா—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுபாக்கம் தொகுதியில், ஊனமலை அரிசன காலனியில் குடிநீர்த்தேக்கத் தொட்டி அரிசன நல இலாகா மூலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என் இராசாங்கம் : செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் தொகுதி ஊனமலை அரிசன காலனியில் குடிநீர்த்தேக்கத் தொட்டி அரிசன நல இலாகா மூலம் கட்டப்பட்டுள்ளது.





திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு 1½ ஆண்டுக்காலமாக இயங்கவில்லை. இதற்குக் காரணம் அதைக் கட்டி முடித்த "ஒப்பந்தக்காரர் அதிலேயுள்ள பம்பு செட்டை எடுத்துக்கொண்டு சென்று விட்டார் என்ற காரணத்தால் அது இயங்கவில்லை என்று கூறப்படுகிறதே, அதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கை மேற்கண்ட வினா மீது கோரப்பட்டது. அரிசன நல இலாகா மூலம் ஒரு தரை மட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டிருக்கிறது என்றும், தேவையான குழாய்களும், பம்பு செட்டுகளும் வாங்கப்பட்டுள்ளன என்றும், மின்சாரத் தொடர்பு கிடைக்காததினால் வேலை முடங்கியிருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார். மின்சார வாரியத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டு சீக்கிரம் முடிக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, கட்டி முடிக்கப்பட்டு இயங்க ஆரம்பித்த பிறகு ஒப்பந்தக்காரர் எடுத்துச் சென்று விட்டார் என்று நான் சென்று பார்த்த பொழுது கூறினார்கள். அதுதான் உண்மை என்று கருதுகிறேன். எனவே மேற்கொண்டு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, அப்படியானால் உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. நடைமுறைக் கேள்விகள்.

### (அ) கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கும், குறுகிய கால வினாக்களுக்கும் பதில் அளிப்பதில் ஏற்படும் தாமதம் குறித்து.

திரு. க. உரொ. எட்மண்ட் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்ற விதிமுறைகளின் கீழ் சட்டமன்ற உறுப்பினர்கள் சில அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த காரியங்களைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம் விதி 42-இன் கீழ் அல்லது விதி 41-இன் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமும் கொண்டு வருகிறார்கள். இன்னும் சொல்ல வேண்டுமானால் மிக முக்கியமான விஷயங்களைப் பற்றிக் குறுகிய கால கேள்விகளையும் அனுப்புகிறோம். நான் இப்படி விதி 41-இன கீழ் இரண்டு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த

(Mr. Speaker sounded the gong) I am not going into the matter. இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறேன். ஒரு குறுகிய காலக் கேள்வியையும் கொடுத்திருக்கிறேன். ஏறத்தாழ அவற்றை கொடுத்து 3 வார காலம் இருக்கும் என்று நினைக்கிறேன். இன்னும் அந்தக் கேள்விக்குப் பதில் வரவில்லை, கவன ஈர்ப்புத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை. சட்டமன்றத் துறையிலே உள்ளவர்கள், கொடுத்த கேள்வியையும், நாங்கள் கொடுத்திருக்கும் கவன ஈர்ப்புத் தீர்மானங்களையும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு அனுப்பிவிடுகிறார்கள். ஆனால் சட்டமன்றத்தின் விதிமுறைகளில் அதற்கு ஒரு கால வரையறை, லிமிடேஷன் இல்லாததால் நீண்டுகொண்டே போகிறது. எனவே, குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக குறுகிய கால வினாக்களுக்கும் கவன ஈர்ப்பு தீர்மானங்களுக்கும் அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று நம்முடைய பேரவை தலைவரவர்கள் விதியை மாற்றியமைக்க....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அப்படிக் கொடுங்கள்.

திரு. க. உரோ. எட்மண்ட்: "பேரவைத் தலைவரவர்கள் அமைச்சர்களுக்கு லிமிடேஷன், காலவரையறை கொடுக்கலாம், இத்தனை நாட்களில் கொடுக்க வேண்டுமென்று கண்டிப்பான உத்தரவைப் போட்டால் உதவிகரமாக இருக்கும். இன்னும் ஐந்தாறு நாட்களுக்குத்தான் சட்டமன்றக் கூட்டம் நடக்க இருக்கிறது. எனவே. நாங்கள் எழுப்பிய முக்கியமான பிரச்சினைகளுக்குக் கூடிய விரைவில். பதில் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானம், மாண்புமிகு அமைச்சரவர்கள் வந்திருந்தால் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும். அவர்கள் வரும் வழியில் வண்டி இடையிலே நின்றுவிட்டதால் வர முடியவில்லை. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வந்திருந்தால் அது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும்.

திரு. கு. காமாட்சி : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். நம்முடைய அவையிலே கேள்வி நேரத்தின்போது நாங்கள் எந்த விதமான பாயிண்ட் ஆப் ஆர்டரையும் எழுப்ப அனுமதிப்பதில்லை. ஆனால் இன்றைக்கு நம்முடைய விதிகளுக்கு மாறாக தாங்கள் திரு. சுப்பிரமணியம் அவர்கள் எழுப்பிய பாயிண்ட் ஆப் ஆர்டரை அனுமதித்திருக்கிறீர்கள். இந்த முறையை இனி மேலும் அனுமதிக்கப் போகிறீர்களா அல்லது இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப் போகிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காமாட்சி அவர்கள் எழுப்பிய பாயிண்ட் ஆப் ஆர்டர் மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்கு வரும் என்று கருதுகிறேன்.



## 3. தகவல் கோரல்.

(அ) நாச்சியார்கோவில் நெற்களஞ்சியத்திலிருந்து சிவில் சப்ளைஸ் அதிகாரிகள் நெல்லை எடுத்துச் சென்றுவிட்டது குறித்து—

திரு. கோவை செழியன் : நேற்று நான் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். தாங்கள், அந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குப் பதில் கேள்வி நேரத்திலே கேள்வி-பதிலாகச் சொல்லப்பட்டு விட்டதால் அதைப் பற்றி விவாதிக்க அவசியமில்லை என்று சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்கள் என்னுடைய கவனத்திற்கு அந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் வரவில்லை, பின்னாலே பதில் சொல்கிறேன் என்றுதான் சொன்னார்கள். அந்த விவரம் அவருடைய கவனத்திற்கு வருவதற்கு முன்னாலேயே தாங்கள் "அதற்குப் பதில் சொல்லியாகிவிட்டது" என்ற பதிலை எனக்கு அனுப்புகிறீர்கள். நாச்சியார்கோயில் சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மெண்டில் உள்ளவர்கள் நெற்களஞ்சியத்திலிருந்து நெல்லை எடுத்துச் சென்று விட்டதாகவும், அதைப் பற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் பின்னால் சொல்லுகிறேன் என்றும் சொன்னார்கள். ஆனால், அதற்கு முன்னால் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குப் பதில் அனுப்பிவிட்டீர்கள். அமைச்சருடைய பதிலை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்லுகிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நேற்றே கலெக்டர் அவர்கள் இதுபற்றி விசாரணை செய்து அறிக்கை அனுப்ப வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்திருந்தாலும் அது பற்றி விசாரிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே பெரிய பிரச்சினை இருப்பதாகக் கருதவில்லை. அப்படி நெல் எடுத்தது உண்மைதான் என்று தெரிகிறது. எந்தச் சூழ்நிலையில் அப்படி எடுத்தார்கள் என்பது அறிக்கையில் இருந்து தெரியும். தவறு நடைபெற்றிருக்கிறது.

## (4) ஒத்திவைப்புத் தீர்மானம்.

### மின்சார நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே.டி.கே. தங்கமணி என். கே. பழனிசாமி, எம. சுரேந்திரன், கே. என். குமாரசாமி ஆகியவர்கள் தமிழ் நாட்டிலுள்ள மின்சார நிலை குறித்து விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி பேரவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து விவாதிப்பதற்கு உரியது என்பதைப் பற்றி எடுத்துக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, மின்சாரப் பற்றாக்குறை சம்பந்தமாக இதற்கு முன்னால் அமைச்சர் அவர்களே 82-வது பிரிவின்படி ஒரு அறிக்கையைக் கொடுத்தார்கள். அறிக்கை கொடுத்த மறுநாள் விளக்கம் சொல்லும் சந்தர்ப்பம் கிடைத்தபோதும் தெளிவாகச் சொன்னார்கள். வீட்டுக்கு 50 யூனிட் குறைக்கப்படும்; கடைகளுக்கு 7½ மணிக்கு மேல் மின்சாரம் கிடையாது; தொழிற்சாலைகளுக்கு 75 சதவிகித வெட்டு, ஒரு வாரத்திற்குள்ளாக அநேகமாக நிலைமை சீர்பட்டுவிடும், இரண்டு வாரத்திற்குள்ளாக நெய்வேலியிலும், ஒரு வாரத்திற்குள்ளாக எண்ணூரிலும் நிலைமை சீர்பட்டுவிடும் என்று சொன்னார்கள்.

பத்து தினங்களாவது தொழிற்சாலைகளுக்கு இருக்கக்கூடிய மின்சாரம் பூராவுமே வெட்டப்படும் என்று இப்போது அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அப்படியானால் சென்னை நகரத்திலே, குறிப்பாக திருவொற்றியூர், அம்பத்தூர் பகுதியில் புதிய புதிய தொழிற்சாலைகள் உருவாகி நல்ல சாமான்கள் உற்பத்தியாகி வருகின்றன; அந்த இடங்கள் எல்லாம் முடங்கப்படும். கோவையில் இருக்கக்கூடிய பஞ்சாலைகளில் ஏற்கெனவே 75 சதவிகித வெட்டு ஏற்பட்டு முதலாளிகள் "லே ஆப்" செய்யக்கூடிய நிலைமை பற்றியெல்லாம் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது.

அன்றைக்கு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கும் இன்று நடப்பதற்கும் மாறுதலாக இருக்கிறது. மின்சாரம் இந்த அளவுக்குப் பற்றாக்குறையாக இருக்கும் காரணத்தால் அண்டை மாநிலங்களான கர்நாடகம், கேரளத்திலிருந்து மின்சாரம் பெற ஏற்பாடு செய்யாவிட்டால் நூற்றுக்கு நூறு மின்சாரம் தொழிற் சாலைகளுக்கு இல்லாமல் போய்விடும். கடைசியில் மற்ற இடத்திற்கும் இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் ஏற்படும். அன்றைக்குச் சொன்னது தவறுதலா அல்லது இன்று சொல்வது தவறுதலா, என்பதெல்லாம் பற்றி அறிய தீர்மான உருவில் இதைப் பற்றி முழு விவரமும் அறியும் வகையில் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். இல்லாது போனால் மூன்று தினத்திற்கு ஒருமுறை அரசாங்கத்தின் அறிக்கை நடைமுறைக்குச் சம்பந்தம் இல்லாது வரக்கூடிய நிலை ஏற்படும் என்று கூறி இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, சென்ற 4-ம் தேதி மின்சார அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையைக் கொடுத்து அதிலே எண்ணூர் மின் நிலையமும், நெய்வேலி மின் நிலையமும் இன்னும் ஒரு வாரத்திலே சீர்பட்டு விடும் என்று சொன்னார்கள். இன்று நிலைமை என்னவென்றால் 75 சதவிகித மின்வெட்டு 100 சதவிகிதமாக மாற்றப்பட்டு விட்டது. ஒரு வாரத்திற்குள் அந்த நிலைமை மாறி இருக்கிறது. எண்ணூர் மின்சார நிலையமும், நெய்வேலி மின்சார நிலையமும் ஒவ்வொரு ஆண்டும் பார்க்கிறபோது முழு கெபாசிடியை எடுத்துக் கொள்ள முடியாத நிலையிலேதான் இருந்து வருகின்றன. பழுது ஏற்பட்டு விட்டதை சீர் செய்வது என்ற நிலையில் வெளி மாநிலங்களி



லிருந்தெல்லாம் எஞ்சினியர்கள், டெக்னிகல் எக்ஸ்பர்ட்ஸ் வந்து செய்வதாகச் சொன்னார்கள். அது இன்னும் சீர்படுகிற நிலைமை இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. கண்காணிப்பு இல்லை என்று தெரிகிறது.

இதனால் கோவை சிறு தொழில்கள், அதை நம்பி வாழக் கூடிய பத்து லட்சம் மக்கள் பரிதவிக்கிற நிலைமை தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. நூற்றுக்கு நூறு மின்சார வெட்டு என்று இதற்கு முன் எப்போதும் வந்தது இல்லை. ஏற்கெனவே சிறுகச் சிறுக பாதிக்கப்பட்டு வந்த அந்தத் தொழிலாளர்களுக்கு 4-ம் தேதி அறிக்கை நம்பிக்கை அளிக்கும் வகையில் வந்தது. இப்போது அதுவும் போய்விட்டது. தொழில்களும், கிராமங்களில் விவசாயிகளும், வீட்டில் பயன்படுத்துகிறவர்களும் பாதிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

எனவே, இது மிகவும் அவசரமும் அவசியமுமான முக்கிய பிரச்சினை. எந்தெந்த அடிப்படையில் இயங்க வேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் இந்தச் சபையில் விவாதம் பண்ணுவதன் மூலம் ஜனங்களுக்குத் தெளிவு பிறக்கும்; அது இந்தத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கும் நல்ல வாய்ப்பாக இருக்கும். வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரத்தைப் பெறுவது பற்றியும் விவாதிக்க முடியும். ஆகவே, இந்தப் பிரச்சினையில் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதை விவாதிக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, மின்சார உற்பத்தி நிலைமைகளைப் பற்றி இந்த மன்றத்தில் கடந்த 4-ம் தேதி ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தேன். அந்த அறிக்கையைச் சமர்ப்பித்த அடுத்த நாளே சில விவரங்களைச் சொன்னேன்.

மொத்தமாக தமிழ்நாட்டில் 25 மிலியன் யூனிட் உற்பத்தியானால்தான் மின்வெட்டு இல்லாமல் சமாளிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்த மின்சார உற்பத்தி குறைந்த காரணத்தால் 18 மிலியன் யூனிட் என்ற அளவுக்கு வந்த காரணத்தால் 60 சதவிகித மின்சார வெட்டு அமலாக்கப்பட்டது. இன்றைக்குள்ள நிலைமையை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். எண்ணூரிலும், நெய்வேலியிலும் ஏற்பட்ட மின்சார இயந்திரக் கோளாறின் காரணமாக மின்சார உற்பத்தி குறைந்தது. நான் 4-ம் தேதி அறிக்கை கொடுப்பதற்கு முன் தினங்களில் 2, 3 ஆகிய தினங்களில் எண்ணூரிலும், நெய்வேலியிலும் சேர்ந்து கிடைத்த மின்சார உற்பத்தி 2 மிலியன் யூனிட் ஆகும். ஹைட்ரோ எலக்ட்ரிக் ஜெனரேட்டர் மூலம் 5 மிலியன் யூனிட், ஆக மொத்தம் 7 மிலியன் யூனிட் என்ற அளவுக்குத்தான் நிலைமை இருந்தது. 9—4—1975-ல் மின்சார உற்பத்தி எண்ணூரில் 2 மிலியன் யூனிட்; நெய்வேலியில் 3 மிலியன் யூனிட் ஆக 5 மிலியன் யூனிட்தான் நமக்குக் கிடைக்கிறது. தெர்மல் ஜெனரேஷன் 11 மிலியன் யூனிட், ஹைட்ரோ மூலம் 5 மிலியன் யூனிட். 75 சதவிகிதம் மின்சார வெட்டு என்று அறிக்கை கொடுத்தபோது இந்த மன்றத்தில் குறிப்பிட்டிருக்கிறேன்.

மின்சுமையைக் குறைக்கும் நடவடிக்கைகளை அடிக்கடி மேற்கொண்டு அதனால் மின்சாரம் பயன்படுத்துவோருக்கு ஏற்படும் வசதியின்மையைத் தவிர்ப்பதற்காகவும், மின்வாரியம் சில அவசரகால ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டியிருந்தது. இதற்கிணங்க, மின்வாரியம் தொடர்ச்சியாக மின்சாரம் பயன்படுத்தாத இன்றியமையாத மின்சாரத் தேவைபெற்றிராத தொழிற்சாலைகளின் மின் இணைப்பிலிருந்து மின்சாரம் பெறுவதை நிறுத்திக்கொள்ளும்படிக் கேட்டுக்கொண்டது. தொடர்ச்சியான வேலை முறைகளுக்கு உட்பட்ட தொழிற்சாலைகள் கூட, தங்கள் மின் சுமையை மிகக் குறைந்த அளவிற்கு குறைத்துக்கொள்ளும்படியும், 48 மணி நேரத்திற்குள் மின் இணைப்பிலிருந்து மின்சாரம் பெறுவதை நிறுத்திக்கொள்ள ஆயத்தமாய் இருக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டன. இந்த உத்தரவுகள் நேற்று பிறப்பிக்கப்பட்டன.

In order to allow time for the generation to stabilise and also to avoid inconvenience to consumers by unscheduled load-shedding the Board had to resort to certain emergency measures. Accordingly, the Board has requested all non-continuous non-essential industrial consumers to stop drawing power from the grid. Continuous processing industries have also been asked to reduce the load to the minimum and be prepared to suspend drawal of power from the grid within 48 hours. These instructions were issued yesterday.

மின்சாரம் பெறுகிறபோது ஒரு ஒப்பந்தம், ஹை டென்ஷன் தொழிற்சாலைகளானாலும் சரி அல்லது லோ டென்ஷன் கன்ஸ்யூமர்ஸ் ஆனாலும் சரி, ஒரு அக்ரிமெண்ட் எழுதிக்கொடுக்கிறார்கள். தவிர்க்கமுடியாத நேரத்தில், மின்சார வாரியமே நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்றிருக்கிறது.

*Discontinuance of Supply during emergency.*

Save as provided herein, the supply shall be available continuously except in cases of lockout or strike of the employees of the Board, breakdown of machinery or plant, force majeure or any other cause over which the Board has no control in any of which cases the Board shall not be responsible for any discontinuance of the energy but shall restore the supply as soon as it reasonably can.

The consumer agrees to the supply of electricity under this agreement being curtailed or staggered or cut off altogether by the Superintending Engineer/Electricity System, if the power position or any other emergency in the system warrants such a course of action.

மின்சார வாரியம் இந்த நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று ஒப்பந்தத்தில் இருக்கிறது. அரசாங்கத்திலிருந்தும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.





The Tamil Nadu Electricity Board has reported in the reference cited that due to unforeseen mechanical troubles at Neyveli and Ennore Thermal Stations there has been a steep fall in thermal generation. They have also indicated measures that may be taken to meet this emergency.

The Government have examined the position carefully and direct the Tamil Nadu Electricity Board under clause 13 of the Tamil Nadu Restriction on Consumption of Electricity Order, 1974, to adopt the following measures till 20th April 1975.

4-ம் தேதி போடப்பட்ட உத்தரவில் இரண்டு வாரங்கள் என்று கணக்கிட்டு போடப்பட்டிருக்கிறது.

(*a*) Supply of electricity to all non-continuous industries may be suspended immediately.

(*b*) Supply of electricity to all continuous process industries may be so regulated as to allow only the barest minimum required to enable closure within two days. Any specific case of difficulty in enforcing this, may be reported to Government for orders.

The Government further direct that supply may be continued to all essential services specified in Annexure-II to the Tamil Nadu Restriction on Consumption of Electricity Order, 1974 all newspapers including weeklies, fortnightlies and monthlies and other consumers who have been specifically exempted from the provisions of the said Order relating to disconnection.

இதில் சில விதிவிலக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இது இயந்திரக் கோளாறால் ஏற்பட்டது. எண்ணூரில் ஒரு வாரத்தில் சீர்படும். நெய்வேலியிலும் விரைவில் சீர்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மின்சார உற்பத்தி நிலைமை பற்றி அதிகாரிகள் அளவில் பரிசீலிக்கப்படுகிறது. நேற்றைய தினம் கூட நிலைமைகள் எல்லாம் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. அவ்வப்போது பரிசீலித்து வருகிறோம்.

மின்சார உற்பத்தியின் அளவு நாம் எதிர்பார்க்கும் அளவிற்கு அதிகமாகும்போது இந்தநிலையைத் தவிர்க்கமுடியும். ஏற்பட்டிருக்கிற நிலைமை நாம் திட்டமிட்டு செய்யப்பட்ட நிலைமை அல்ல. தவிர்க்க முடியாத நிலைமையில் எதிர்பாராத அளவில் இயந்திரக் கோளாறு ஏற்படும்போது இப்படிப்பட்ட மின் வெட்டு ஏற்படுகிறது. மின்சார வெட்டினால் ஏற்படுகிற கஷ்டங்களை நாங்கள் உணருகிறோம். அதைச் சீர்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

எண்ணூரில் ஏற்பட்ட கோளாறுக்கு முன்னால் பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் என்ஜினியர்களும், டாட்டா கன்செல்டன்ட் என்ஜினியர்களும், நம் என்ஜினியர்களும் சேர்ந்து அதைக் கவனித்து வருகிறார்கள். நெய்வேலி நம் மாநில அரசுக்கு உட்பட்டதல்ல. அந்த எதிர்பாராத வகையில் கோளாறு ஏற்பட்டதாக சொல்லுகிறார்கள். நிலைமையை சீர்படுத்த விரும்புகிறோம். சீர்படும் என்று எதிர்பார்க்கிறோம். பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தவறான விளக்கங்களை மன்றத்திற்குக் கொடுக்கவில்லை. விளக்கம் கொடுக்க வேண்டுமென்று உடனடியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்க அதிகாரிகள், மற்ற அதிகாரிகள், நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

சிறு தொழில்கள், மற்றத் தொழில்களுக்கு ஏற்படுகிற கஷ்டத்தை உணருகிறோம். முடிந்தவரையில் அதைத் தவிர்க்க நடவடிக்கைகள் எடுத்து வரப்படுகின்றன. எனவே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அமைச்சர் அவர்களின் அறிக்கையைக் கேட்டால் எலக்ட்ரிஸிட்டி போர்ட் சொல்வதைத்தான் அரசாங்கம் கேட்பது மாதிரி இருக்கிறது. அரசாங்கத்திற்கு ஏதாவது ஒரு நிரந்தரமான கொள்கை கிடையாதா? ஏற்கனவே எலக்ட்ரிஸிட்டி போர்ட் சொன்னது, ஒரு வாரத்தில் எண்ணூரில் சரியாகும் என்று சொன்னார்கள். ஒரு வாரம் என்பது நாளையோடு முடிகிறது. நாளைக்கு எண்ணூரில் உற்பத்தி பூராவும் வருமா என்று தெரியவில்லை. ஆகவே, எலக்ட்ரிஸிட்டி போர்ட் சொல்கிற கருத்துக்களை எல்லாம் இங்கே வந்து திருப்பிச் சொல்லும் ஒரு முறை இருந்தால் கண்டிப்பாக இந்தப் பஞ்சத்தைத் தீர்க்க முடியாது. இதற்கு ஏதாவது மாற்று யோசனைகள் அரசாங்கம் வைத்திருக்கிறதா? கர்நாடகம், கேரளா போன்ற இடங்களிலிருந்து மின்சாரம் பெற ஏதாவது ஏற்பாடுகள் உண்டா? நெய்வேலி நிலைமைதான் என்ன? மறுபடியும் கேட்டிருக்கிறார்களா?

(திரு என். கே. பழனிசாமி எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அட்ஜேர்ன்மென்ட் மோஷன் கொடுத்தவர்கள் எல்லாம் பேசமுடியாது. நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே சொன்னது போல, எண்ணூரில் இரண்டு மில்லியன் யூனிட்ஸ் உற்பத்தியாகியிருக்கிறது. மூன்றரை மில்லியன் யூனிட்ஸ் என்றிருக்கவேண்டும். நெய்வேலியில் இருந்து எட்டு மில்லியன் யூனிட்ஸ் வரவேண்டும். விவசாயத்திற்கு விதிவிலக்கு கொடுத்திருக்கிறோம். கட்டுப்பாடு இருக்கக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வெளிமாநிலங்கள் என்றால், கர்நாடகாவில் மின்சார வெட்டு இருக்கிறது. கேரளாவைப் பொறுத்தவரையில் அவர்களும் நமக்கு மின்சாரம் கொடுக்கும் நிலைமையில் இல்லை. கிரிட் உற்பத்திக்காக சிறிது கொடுப்பதாகச் சொன்னார்களே தவிர, கிரிட் மெயின்டெயின் செய்யக் கொடுக்கிறார்கள், நமக்குத் தேவையான மின்சாரம் கிடைக்கும் வாய்ப்பு, மற்ற மாநிலங்களில் இருந்து கிடைக்கும் வாய்ப்பில்லை.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு தேவையில்லை என நான் கருதுவதால் இதற்கு என் அனுமதியை மறுக்கிறேன்.

## 5. அமைச்சர் அறிக்கை.

### சென்னை துறைமுகத்திற்கு வந்த சீன மீன்பிடிக் கப்பல்கள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் விதி 82-ன் கீழ் இந்தப் பேரவைக்கு ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 1—4—1975 அன்று சட்டமன்ற விவாதத்தின்போது திரு. வீராசாமி அவர்கள் பின்வரும் பிரச்னையை எழுப்பினார்கள்.

"தமிழகத்தினுடைய எல்லையிலே, கடற்கரையிலே குவாங் ஜான்-3, குவாங் ஜான்-2 என்ற இரண்டு கப்பல்கள் வந்திருப்பதாகவும் அதிலே 36 சீனர்கள் வந்திருக்கிறார்கள் என்றும் செய்தி வந்திருக்கிறது. அந்தக் கப்பல்களிலே எலக்ட்ரானிக் இயந்திரங்கள் எல்லாம் வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். இதனால் நாட்டுக்கு ஆபத்து வருமோ என்ற அச்சம் வந்திருக்கிறது. இதுபற்றி ஏதாவது தகவல் அரசுக்கு வந்திருக்கிறதா?" என்று கேட்டார். அதற்கு நான் பதில் அளிக்கையில், "மத்திய சர்க்காருடைய காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து அவர்களை எல்லாம் பிடித்து வைத்திருக்கிறார்கள். போலீஸார் நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும் கூட ஆந்திர மாநிலம்தான் இதில் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறது. அவ்வளவுதான் அதைப்பற்றிச் சொல்ல முடியும்" என்று கூறினேன். மேலும் இதுபற்றி தெரிய வருவது: கடற்கரைமீது 12 மைல் தொலைவு வரை பிரதேச கடல் எல்லை (டெரிடோரியல் வாட்டேர்ஸ்) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த மீன் பிடி கப்பல்கள் இரண்டும் ஆந்திரப் பிரதேச கடற்கரையில் இருந்து ஆந்திரப் பிரதேச நெல்லூர் மாவட்டத்திலுள்ள கிருஷ்ணபட்டினம் என்ற கடற்கரை ஊரிலிருந்து 6·2 மைல் தொலைவில் பிடிக்கப்பட்டது. எனவே இது பிரதேச கடல் எல்லைக்குட்பட்டது என்ற கருத்தில் ஆந்திர மாநில காவல் துறையினர் நடவடிக்கை எடுப்பார்கள் என்று கருதப்பட்டு இந்த அவையிலும் அறிவிக்கப்பட்டது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 ஏப்ரல் 10

(முற்பகல் 10-30)

இந்த மீன் பிடி கப்பல்களை வட்டம் இட்டு இந்திய கப்பற் படையினர் இவற்றை சென்னை துறைமுகத்திற்குக் கொண்டு வந்தனர். சென்னை துறைமுகத்திற்குக் கொண்டுவந்ததற்குக் காரணம் கப்பல் பிடிபட்ட இடத்திலிருந்து அருகில் உள்ள துறைமுகம் சென்னைதான். அதாவது 70 மைல் தொலைவு. ஆனால் ஆந்திர மாநிலத்திலுள்ள விசாகப்பட்டிணம் துறைமுகம் மீன்பிடி கப்பல்கள் பிடிபட்ட இடத்திலிருந்து 380 மைல் தூரம் உள்ளது. சென்னை துறைமுகத்திலிருந்து மறுபடியும் விசாகப் பட்டிணம் துறைமுகத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்றால் 450 மைல் தூரம் உள்ளது. எனவே, இந்தக் கப்பல்களை சென்னை துறைமுகத்திலேயே பாதுகாப்பில் வைக்கவேண்டுமென்று இந்தியக் கப்பற்படை முடிவு செய்தது.

மேலும் மீன்களை விற்பனை செய்வது, மாலுமிகளைக் கண்காணிப்பது, அதையொட்டி மேலும் பல பணிகளையும் தமிழக அரசே மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதைத் தொடர்ந்து தக்க மொழி பெயர்ப்பாளர்களைக் கொண்டு மீன்பிடி கப்பல்காரர்களை விசாரணை செய்த பிறகு கடற்படை அதிகாரிகள், சட்ட ஆலோசகர்கள் மற்றும் அரசு வழக்குறைஞர்கள் ஆகியவர்களைக் கலந்து ஆலோசித்ததில் வெளிநாட்டினருக்கான சட்டம், மற்றும் அனுமதி வழங்கும் விதிகளின்கீழ், தமிழக சென்னை நகர காவல் துறை இதில் நடவடிக்கை எடுக்கலாம் என அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டதின் பேரில் தமிழக காவல் துறையே, குறிப்பாக சென்னை நகர காவல் துறை ஆணையாளரே மேல் நடவடிக்கை எடுக்கலாம் என அரசு கருதுகிறது.

எனவே, 1946-ஆம் ஆண்டு வெளிநாட்டினருக்கான சட்டம் 3(2)(எ) பிரிவு, மற்றும் 14-வது பிரிவின்கீழ் வழக்கு தொடர வேண்டும். அதாவது இந்தப் பிரிவின்படி "அனுமதியில்லாமல் குறிப்பிட்ட மார்க்கத்திலோ, துறைமுகத்திலோ வெளிநாட்டினர் செல்லக்கூடாது". இப்பிரிவின் கீழ் அவர்கள் மீது சென்னை நகர காவல்துறை அதிகாரி நடவடிக்கை எடுப்பார் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. தகவல் கோரல் —தொடர்ச்சி.

(ஆ) சிக்கிம் இந்திய யூனியனில் அசோசியேட் உறுப்பினராகச் சேருவது பற்றியச் அரசியலமைப்பு சட்டத் திருத்தம் மீது விவாதம் நடத்தாதது குறித்து.

*திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே,

**Under rule 142 (c), I raise a point of order.**



1975 ஏப்ரல் 10] [திரு. என். கே. பழனிசாமி]

கான்ஸ்டிட்யூஷன் 36வது அமென்ட்மெண்ட் அக்டோபர் மாதத்தில் சர்குலேட் செய்யப்பட்டது. சிக்கிம் அசோசியேட் மெம்பராக சேருவது பற்றி இதுவரையிலும் இங்கே விவாதிக்கப்படவில்லை. நான் ஜனவரி 7ஆம் தேதி இந்த மோஷனை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கூறியிருந்தேன். இதுவரையிலும் விவாதம் செய்யப்படவில்லை. பார்லிமெண்டில் இதைப்பற்றி விவாதம் நடத்தியிருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த மெம்பர்கள் ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள், எந்தக் காரணத்தினால் இங்கே இது விவாதிக்கப்படவில்லை என்பதைப் பற்றி தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் நோட்டீஸ் கொடுத்தது ஜனவரி 7ம் தேதி. நம்முடைய சட்ட மன்றம் கூடியது பிப்ரவரி 20ம் தேதி. பிப்ரவரி 22ம் தேதி இதற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதலைக் கொடுத்து விட்டார். ஆகவே விவாதிக்கத் தேவையில்லையென்று கருதுகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, ஒன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானம் இல்லையா, அதைப் படியுங்களேன்.

## 2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) வினா நேரத்திற்குப் பிறகு கவன ஈர்ப்பு அறிவிக்கையை உடனடியாக எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 41ன் கீழ்

**A member may, after questions, and with the previous permission of the Speaker, call the attention of a Minister to any matter of urgent public importance . . . .**

என்று இருக்கிறது.

நம்முடைய அஜெண்டாவிலும் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் பிறகு இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் என்றுதான் இருக்கிறது. ஆனால் 82 ஆம் விதியின் கீழ் அறிக்கை படிப்பதை முதலில் எடுப்பது முறையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது அஜெண்டாவில் வருவதில்லை. கவன ஈர்ப்புத் தீர்மானம் அஜெண்டாவில் வருவதில்லை. இதற்கும் முன்னை எப்படி முதலமைச்சர் ஸ்டேட்மென்ட் கொடுக்கலாம் என்று

கேட்க நினைக்கிறீர்கள். முதலமைச்சரவர்கள் ஸ்டேட்மெண்ட் கொடுத்தது முறைகேடு இல்லை. இதுதான் உங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று எனக்குத் தெரியும்.

ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். இன்றைக்கு விவாதம் ஒரு மணிக்கு முடிய வேண்டும். இந்த விவாதம் மானியக் கோரிக்கையின் கடைசி நாள். பேசுகிற உறுப்பினர்கள் நிறையப் பேர்கள் பேர் கொடுத்திருக்கிறார்கள். பிறகு நேரமில்லை என்று உறுப்பினர்கள் வருத்தப் படக் கூடாது.

## 6. கவன ஈர்ப்பு.

### திருச்சி மாவட்டம், முல்லையூரில் ஏற்பட்ட தீ விபத்தும், அதனால் பலர் பாதிக்கப்பட்டதும் குறித்து.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, திருச்சி மாவட்டம், அரியலூருக்கு அருகில் உள்ள முல்லையூரில் சமீபத்தில் பயங்கரமான தீ விபத்து ஏற்பட்டு பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், முல்லையூர் கிராமத்தில் 21—2—1975 அன்று பிற்பகல் சுமார் 2 மணியளவில் திரு. செங்கன் என்பவருடைய வீடு, அவருடைய குழந்தைகள் சர்க்கரைவள்ளிக் கிழங்கை அடுப்பில் வறுக்கும்போது தற்செயலாக தீப்பிடித்துக் கொண்டது. இத் தீ அருகிலிருந்த வீடுகளுக்கும் பரவியது. இத் தீ விபத்து தகவல் கிடைத்தவுடன், ஸ்ரீரங்கத்திலுள்ள தீயணைப்புப் படையினர் விரைந்து அவ்விடத்தை அடைந்து தீயினை அணைத்தனர். 135 குடியிருப்பு வீடுகள் எரிந்து விட்டன. கால்நடைச் சேதங்கள் எதுவுமில்லை. இந்த விபத்தால் சொத்துக்களுக்கு ஏற்பட்ட மொத்த சேதத்தின் மதிப்பு ரூ. 37,950 ஆகும். இத் தீ விபத்தில் 35 வயதுள்ள கல்யாணி (திரு. செங்கோடனின் மனைவி) என்ற பெண்ணும், ஐந்து வயதுள்ள சிறுமி சந்திராவும் (செங்கனின் புதல்வி) இறந்து விட்டனர். இத் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தலா ரூ. 80 வீதம் (ரொக்க மானியம் ரூ. 60ம் உடை மானியம் ரூ. 20ம் 135 குடும்பங்களுக்கு ரூ. 10,800 நிவாரணமாக மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கியுள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவரின் செய்கையை வருவாய் வாரியம் அங்கீகரித்துள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, முல்லையூரில் ஏற்பட்ட இந்தத் தீ விபத்தால் இறந்து விட்டவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈட்டுத் தொகை தருவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா? அப்படியானால் விரைவில் நிதி வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இது வரையில் அப்படிப்பட்ட தகவல் எதும் வரவில்லை. வந்தால் பிறகு கவனிக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த முல்லையூரில் பல வீடுகள் எரிந்துவிட்டபடியால், புதிய வீடுகளைக் கட்டித் தர அரசு ஏற்பாடு செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, கடன் மனுக்கள் வாங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு பரிசீலிக்கப்படும்.

## (7) 1975-76 ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### நிதிக் கோரிக்கை எண். 7—மாநிலச் சட்ட மன்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 49,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

THIRU N. DENNIS: Sir, to discuss policy, I move "That the allotment of Rs. 49,61,000 under Demand No. 7—State Legislature be reduced by Rs. 100."

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, சட்ட மன்றம் கூடும் நாட்களை அதிகப்படுத்துவது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 7—சட்ட மன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 49,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, எதிர்க்கட்சிகளின் லாபியை விரிவுபடுத்தி, கேண்டீனை அருகாமையில் வைப்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 7—சட்ட மன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 49,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

THIRU K.S. KOTHANDARAMIAH : Sir, to discuss about the need to increase the salary of the Members of the Legislature, I move—

"That the allotment of Rs. 49,61,000 under Demand No. 7—State Legislature be reduced by Rs. 100."

திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : தலைவரவர்களே, தமிழ் நாடு எல்லைக்குள் தமிழக சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் அனைத்தும் அளிப்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 7—சட்ட மன்றம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 49,61,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, to discuss about the need to provide Parliamentary Counsels to the Members of the Legislature to assist them in their Parliamentary activities, I move—

"That the allotment of Rs. 49,61,000 under Demand No.7—State Legislature be reduced by Rs. 100".

THIRU K.T.K. TANGAMANI : Sir, to discuss about the need for legislation for abolition of the Upper House, I move—

"That the allotment of Rs. 49,61,000 under Demand No. 7—State Legislature be reduced by Rs. 100".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : சபாநாயகர் அவர்களே, இன்று மானியக் கோரிக்கையின் கடைசி நாளாக இருக்கிறது. பொதுவாக சட்ட மன்றங்களிலும், நாடாளுமன்றங்களிலும் இந்த லெஜிஸ்லேச்சரைப் பற்றி விவாதிக்கப்படுவதில்லை. காரணம், இதனுடைய நோக்கமே இந்த லெஜிஸ்லேச்சரை நடத்தக்கூடிய சபாநாயகருடைய தவறுகளையெல்லாம் சுட்டிக் காட்டக் கூடிய முறையாக வருகிறது என்ற காரணத்தினால் சபாநாயகருக்கு அந்தஸ்து கொடுக்கக் கூடிய முறையில் இதை விவாதிப்பதில்லை.

ஆனால், இங்கு அமைந்திருக்கக் கூடிய முறை என்னவென்றால் சபாநாயகருடைய பொறுப்பு என்பதைவிட இந்த அரசாங்கத்தின் சார்பில் இருக்கக்கூடிய ஒரு முக்கியமான அமைச்சர்தான் இதற்குப் பொறுப்பு என்ற நிலை இருக்கிறது. இந்தக் காரணத்தை நான் முதலில் சொல்வதன்



நோக்கம் என்னவென்றால் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் There is what is called a Minister for Parliamentary Affairs. அந்த அமைச்சர்தான் மேல்சபை, கீழ்ச்சபை இந்த இரண்டிற்கும் ஒரு பொறுப்பாளராக இருந்து அரசாங்கத்திற்கும் சபாநாயகருக்கும் இடையில் இருந்து செயல்படக்கூடியவராக இருந்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் ஒரு நிரந்தர எக்சிக்யூடிவ்வாகவும் இன்னொரு பக்கத்தில் இந்த லெஜிஸ்லேச்சராகவும் இருக்கக் கூடிய இந்த இரண்டிற்கும் இணைப்பாக இருக்கக்கூடிய மினிஸ்டர் ஃபார் பார்லிமெண்டரி அஃபேர்ஸ் இருப்பது உதவிகரமாக இருக்குமென்று நான் நினைக்கிறேன்.

இப்போது இங்கு பார்க்கக்கூடிய முறை என்னவென்றால் ஆளும் கட்சிக்கு ஒரு விப் இருக்கிறார். அவருடைய கடமை என்னவென்றால், தன் கட்சிக்காரர்கள் எவ்வளவு பேர்களுக்கு பேச இடம் கொடுக்க வேண்டுமென்ற அளவிற்கு வந்திருக்கிறதேயொழிய அவர் அமைச்சராக இருப்பார்களானால் இந்த அமைச்சர் சபாநாயகரோடு சபை நடத்துவது பற்றிய விஷயங்களை முன் ஆலோசனை செய்து, கலந்து கொள்ள உதவிகரமாக இருக்கும். அப்போது அவர்தான் உண்மையிலேயே பிஸினஸ் அட்வைசரிக் கமிட்டியை நடத்துவதற்குக் காரணமாக இருப்பார்.

பிஸினஸ் அட்வைசரிக் கமிட்டியில் வேறு அமைச்சர்கள் இருக்க வேண்டிய அவசியம் இடையாது. மினிஸ்டர் ஃபார் பார்லிமெண்டரி அஃபேர்ஸ் அவர்களும், சபாநாயகர் அவர்களும், கட்சியினுடைய சில முக்கியமானவர்கள் மட்டும் இருந்து இந்தச் சட்ட மன்றம் எப்படி நடக்க வேண்டும், எத்தனை நாள் நடக்க வேண்டும் என்பதையெல்லாம் பற்றி ஆலோசனைகள் கூற முடியும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் நீண்டகாலமாக சத்தியநாராயண சின்ஹா மினிஸ்டர் ஃபார் பார்லிமெண்டரி அஃபேர்ஸ்ஸாக இருந்தார். இந்த அனுபவத்திற்குப் பிறகு அவர் இப்போது மத்தியப் பிரதேசத்தில் கவர்னராக இருக்கிறார். வி. சி. சுக்லா மினிஸ்டர் ஃபார் பார்லிமெண்டரி அபேர்ஸாக இருந்து நல்ல முறையில் இன்றைக்கு நாடாளுமன்றத்தில் செயல்படக்கூடிய இளம் அமைச்சர்களில் ஒருவராக பெயர் வாங்கிக் கொண்டிருக்கிறார். சபை எப்படி நடப்பது என்பதைப் பற்றி மற்ற அமைச்சர்களுக்குக் கவலை இருப்பதைவிட குறிப்பிட்ட அமைச்சரை நியமித்தால் அவருக்கே கவலை ஏற்பட்டு காரியங்களை கவனிப்பார். அப்போது மற்ற மாநிலங்களை விட நல்ல முறையில் நாம் செயல்படுத்த முடியும் என்பது ஆலோசனையாக இருக்கும் என்பதற்காகததான் இந்த விஷயத்தை முதலில் கூறினேன்.

இதே நேரத்தில் இப்போது தங்களைப் பொறுத்த வரையில் என்னுடைய கருத்து என்னவென்றால் இந்தச் சபை உங்களுக்குச் சொந்தமாக இருக்கவேண்டும். உங்களுடைய கண்காணிப்பில் நம்முடைய விடுதி இருக்கின்றது. காமராஜர் இருந்த காலத்தில் வாங்கப்பட்ட "தமிழகம்" இன்றைக்கு அரசாங்கம் கையில் போய்விட்டது. நம் கையில் வர முயற்சி செய்ய வேண்டும். அரசாங்கத்திடம் ஒதுக்குவது என்பது சரியல்ல. உங்கள் கையில் வருமானால் அதிகமான வசதி சட்ட மன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் என்ற முறையில் அமைச்சர்

களுக்கு கொண்டுக்கிற குமுறை ஏற்படும் இன்றைக்கு அரசாங்கம் கண்காணிக்கக்கூடிய ஒரு முறையாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்தச் சபையைப் பொறுத்த வரையில் சில உரிமைப் பிரச்சினைகள் வருகின்றன. உரிமைப் பிரச்சினைகளைப் பொறுத்த வரையில் அவை மிக முக்கியமான விஷயம் என்பதை ஏற்கனவே ஒரு விவாதத்தில் எடுத்துச் சொன்னோம். நேற்றைக்கு முந்தா நாள் நடந்த சம்பவம் ஒரு உதாரணம். முந்தா நாள் ஒரு கமிஷன் அப் என்கொயரி போடுவதா அல்லது ஒரு நீதி விசாரணை வைப்பதா என்பது பற்றி கடுமையான விவாதம் நடந்தது. முடிவாக கமிஷன் ஆப் என்கொயரி போடப்படும் என்று சொன்னார்கள். யாரைப் போடப்போகிறது என்ற தெளிவு இல்லை. ஆனால் வெளியிலே போன உடன் பத்திரிகையிலே வருகிறது. ஒரு குறிப்பிட்ட ஹைகோர்ட் நீதிபதி கமிஷன் ஆப் என்கொயரிக்குப் போடப்பட்டு இருக்கிறது என்று சொல்லி செய்தி வருகிறது. இதற்கு முன்பு பல மன்றங்களில் இதைப் பற்றி எடுத்துச் சொல்கிறபோது ப்ரீச் அப் ப்ரிவிலேஜ் இல்லை என்றாலும்கூட, இட் ஈஸ் நாட் ப்ராபர் என்று தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, இந்த மன்றத்தில் இம்மாதிரியான மிக முக்கியமான செய்திகளை இங்கே அறிவித்து வெளியிலே தெரிவிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

I want to submit that the Executive is treating the Legislature and particularly you, Sir, with scant respect.

அப்புறம் இன்னொன்று. தங்களைப் பொறுத்தவரையில் சில முக்கியமான காரியங்கள் நீங்கள் செய்ய வேண்டி இருக்கின்றது. ரூல்ஸ் கமிட்டிக்கு தாங்கள் தலைவராக இருக்கிறீர்கள். ரூல்ஸ் கமிட்டியில் பல ஆலோசனைகள் வருகின்றன. எந்த உறுப்பினரும் என்ன மாறுதல் வேண்டுமென்று சொல்லாமல் இருக்கலாம். ரூல்ஸ் கமிட்டி கூட்ட வேண்டிய பொறுப்பு உங்களைச் சார்ந்தது. ஒரே ஒரு தடவை கூடி இருக்கிறது. சென்ற ஆண்டு கூடவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு முறை கூடி கோரம் இல்லாமல் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டது. ரூல்ஸ் கமிட்டிக்கு கோரம் வருவது இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: ரூல்ஸ் கமிட்டிக்கு உறுப்பினர்கள் அதிலே அக்கறை உள்ளவர்களாகப் போடுவது உங்கள் பொறுப்பு. ரூல்ஸ் கமிட்டி கான்ஸ்டிட்யூட் பண்ணுவது நீங்கள். இதைச் சட்டப்படி பண்ணுகிற நேரத்தில் யார் பங்கெடுப்பார்கள் என்று பார்த்துச் செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கட்சி உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் கூடிப் பேசி போடுகிறார்கள். அப்படிப்பட்ட உறுப்பினர்கள் வருவது இல்லை என்பதை திரு. தங்கமணியின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.





திரு. கே. டி. கே. தங்கமணி: 1973–74-ல் கூடவே இல்லை. இன்னொரு முக்கியமான விஷயம் சொல்லலாம் என்று இருக்கிறேன். இந்தச் சட்ட மன்றம் எவ்வளவு அரசாங்கம் செலவழிக்க வேண்டுமென்று வோட்டு போடுகிறது. சாங்ஷன் பண்ணுகிறது. அப்படிப் பார்க்கிறபோது ரூ. 500 கோடி செலவழிக்க உத்தரவு கொடுத்து இருக்கிறார்கள். நாம் செலவழிப்பது 49 லட்சம்தான். ஒரு பர்செண்ட். ஜனங்கள் மத்தியில் என்ன தவறான கருத்து என்றால் சட்டசபையில் இருக்கின்றவர்களுக்கு ரொம்ப வசதி, ரொம்ப சம்பளம் வாங்குகிறார்கள், ரொம்ப செல்வாக்கு இருக்கின்றது என்ற கருத்து. மற்ற சட்டமன்றங்களை விட மிகக் குறைவாகச் செலவழித்துக் கொண்டு இருக்கிறோம். நாடாளுமன்றத்தில் அதிகமாக செலவழிக்கிறார்கள். அமெரிக்கா போன்ற நாடுகளில் செனெடர்களுக்கு அதிகமாகச் செலவு செய்கிறார்கள்.

There is no need to limit our expenditure.

அதுமாத்திரம் அல்லாமல் இங்கு பார்க்கிறபோது புது ஆட்கள் வருகிறார்கள். பழைய ஆட்களை நிரந்தரமாக்க வேண்டும். இங்கே சர்க்கார் ஊழியர்களுடைய நிலையைவிட மிகக் கம்மியாக இருக்கிறது. சின்ன உதாரணம் சொன்னால், வாட்ச் அண்ட் வார்ட் ஸ்டாப்—வெளியிலே போலீஸ்காரர்களாக இருந்தால் ரூ. 3 வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். இங்கே வந்தால் 1½ ரூபாயாக இருக்கின்றது. இதைப் பற்றி பேசினால் அரசாங்கத்தில் இருப்பவர்கள் கவனிக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இது கவனிக்கப்படுவது இல்லை.

டெலிபோன் கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். சரி என்று சொன்னார்கள். வருடம் ஒன்றாகி விட்டது. நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

இதேமாதிரி சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ரயில்வே பாஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். சரி என்று சொன்னார்கள். நீங்கள் சரி என்று சொல்லவில்லை. அதற்காகத்தான் சொல்லுகிறேன். அரசாங்கச சார்பிலே ஒருவர் இருக்கவேண்டும். பொறுப்புள்ள அமைச்சராக இருக்கவேண்டும். எக்ஸ்யூடிவ் பொறுப்பு இருக்கவேண்டும். இது வரையில் டெலிபோன் கொடுத்து விட்டார்களா? பாஸ் கொடுத்து விட்டார்களா? கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும். சர்க்காருக்கு என்ன அக்கறை இருக்கிறதோ அதை விட அதிகமாக சட்ட மன்றம் செயலாற்றுவதில் அக்கறை இருக்க வேண்டுமென்று இந்த இடத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இதேமாதிரி இன்னொன்று லைப்ரரி. நம்முடைய லைப்ரரியை பொதுவாக அதிகமான உறுப்பினர்கள் உபயோகப்படுத்துகிறார்கள். ஒரு புத்தகம் கேட்கிறோம். மே வேண்டுமென்றால், ஷக்தர் அண்ட் கவுல் வேண்டும் என்றால் ஒரு காபி இருக்கிறது. அது கூட ஸ்பீக்கர்

அறையில் இருக்கின்றது என்று சொல்லுகிறார்கள். ஒரு காபி என்ன 10 காபி இருக்கட்டுமே. முக்கியமான புத்தகங்கள் 10, 20 காப்பிகள் வெளிநாட்டிலே வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இப்போது வந்திருக்கின்ற புத்தகங்கள் நிறைய இருக்கின்றன. செய்தித் தாள்கள் எல்லாம் வரவேண்டும். என் கட்சி தமிழில் பத்திரிக்கை போடுகிறது—ஜனசக்தி. இங்கே பார்க்க முடியவில்லை. உதாரணத்திற்கு சொல்லுகிறேன். இந்தமாதிரி எல்லாப் பத்திரிக்கைகளும்—தமிழ் ஆங்கிலம் வர ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்த அலுவலக ஸ்டாப் பொறுத்தவரையில் அவர்களுடைய தகுதிக்குத் தகுந்தபடி ப்ரமோஷன் கொடுக்க வேண்டும்.

நமக்கு இங்கே ஒரு ப்ரஸ் இருப்பது நல்லது. லோக் சபையில் ப்ரஸ் இருக்கின்றது.

லோக் சபை நிலை என்ன என்றால் தலைவருக்குக் கீழே செயலாளர் மற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய தனி இலாகா சர்க்கார் இலாகாவை விட செல்வாக்கு பெற்றது. டெபுடேஷன் மூலம் இங்கு வருவதால் இங்கே பயிற்சி உள்ளவர்களாக இருக்கிறவர்கள்; இந்த விஷயத்தில் பாதிக்கப்பட்டு அவர்களுக்கு ப்ரமோஷன் இல்லாத நிலை ஏற்படுகிறது. இந்த முறை கண்டிப்பாக மாற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தங்கள் மேலே இருக்கின்ற குறை, பல தடவை அட்ஜர்ன்மெண்ட் மோஷன் கொண்டு வருகிறோம். வந்த உடன் சில சமயங்களில் நிராகரித்து விடுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2-ம் தேதியே இதைப் பற்றி பேசி ஆகிவிட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி: அதற்காகத்தான் நான் சொன்னேன். **I am speaking within my rights.**

உங்கள் மேலே சில தாக்குதல்கள் வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வரக் கூடாது. இது அந்த விவாதத்திலே வந்தது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இதை வைத்து பிரச்சினை எடுத்துக் கொள்ளவில்லை. சபாநாயகர் மீது குற்றம் சுமத்தப் பட்டால் அதற்கு சபாநாயகர் பதில் அளிக்க இயலாத நிலையில் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலை உருவாகி சபாநாயகர் மீது குற்றம் சாட்டப்பட்டு ஏற்கனவே முடிந்து விட்டது. இரண்டாம் தேதி முடிந்து விட்டது என்று தான் சபாநாயகர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.





திரு. கே.டி.கே. தங்கமணி: மினிஸ்டர் பார் பார்லிமெண்டரி அஃபேர்ஸ் இருந்தால், அரசாங்கம் சார்பாகப் பேசுவார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுதே திரு. கே.டி.கே. தங்கமணியோடு திரு. அழகமுத்து அடிக்கடி பேசுவதாகத் தெரிகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இட் ஈஸ் நாட் எ கொஸ்டின் ஆப் இண்டிவிடுவல்ஸ். பொதுவாக, என்னவென்றால் மினிஸ்டர் பார் பார்லிமெண்டரி அபேர்ஸ்-ஐ எல்லா உறுப்பினர்களும் தெரிந்து கொள்ளவேண்டுமென்ற அவசியம் ஏற்படுகிறது. சத்யநாராயண சின்ஹா எல்லா உறுப்பினர்களோடும் எப்போது பார்த்தாலும் 57 லிருந்து 62 வரையில்அங்கே இருந்தபோது பேசிக்கொண்டு இருப்பார். இப்படித் தான் வி.சி. சுக்லாவைப் பார்த்தால் கேட்பார்கள். உறுப்பினர்கள் பழக வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதற்காகச் சொல்கிறேன். நாடாளு மன்றத்தில் இருக்கின்ற முறைபோல அட்ஜர்ன்மெண்ட் மோஷன் வருகிற நேரத்தில் இதை நிராகரித்து விட்டால் கூட தீர்மான உருவத்தில் கொண்டு வருகிறார்கள். அந்தமாதிரி முறை இங்கு இருந்தால் உதவிகரமாக இருக்கும்.

இன்னொரு முக்கியமான விஷயம். சபாநாயகராக இருக்கக்கூடிய உங்களுக்குக் கீழே சார்ஜெண்ட் இருக்கிறார். இங்கே ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. அதுபற்றி இந்த அவையில் எழுப்பப்பட்டது. அந்த சம்பவம் நடைபெற்ற அன்று நான் சட்டமன்றத்திற்கு வரவில்லை. மறுநாள் வந்தேன். எனக்கு விபரத்தைச் சொன்னார்கள். ஆளும் கட்சி உறுப்பினர்களே சிலர் சொன்னார்கள். நடைபெற்ற சம்பவம் ரொம்ப அவமானமாக இருந்தது; நம்முடைய சட்டசபை சார்ஜண்டை ஒருவர் உதைக்கப்போனார், நாங்கள் தடுத்தோம் என்று சொன்னார்கள். அவர்களுடைய பெயரை இங்கே நான் குறிப்பிட விரும்பவில்லை. அன்றைக்கே நான் சபாநாயகரிடம் சொன்னேன். இதுபற்றி கவனிக்கப்படும் என்று சொன்னார்கள். இது கவனிக்கப்படும் என்று சொல்லக்கூடிய விஷயமா? உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டாமா? இதுவரையில் என்ன செய்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இந்தப் பிரச்சினையைப் பற்றி நாங்கள் எழுப்புவதற்கு காரணம் சார்ஜண்ட் சொல்லித்தான் எழுப்பியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அவர் ஒன்றும் சொல்லவில்லை. சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் சொல்கிறார்கள்.

வெளியே இருந்து வரக்கூடிய ஒருவர் நம்முடைய சார்ஜண்டை நிர்ப்பந்தப்படுத்துகிறார் என்றால் அது எவ்வளவு அவமானம்? உடனடியாக அவர்மீது நடவடிக்கை எடுத்து அவரைச் சிறைக்கு அனுப்பியிருக்க வேண்டாமா? நடவடிக்கை எடுக்க உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. யாரையும் கேட்காமல் அவரை சிறைக்கு அனுப்ப உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. நம்முடைய சார்ஜண்டை அவமானப் படுத்தியவரை நிச்சயமாகத் தண்டிக்கவேண்டும்.

இந்த சார்ஜண்ட் பிரச்சினை எப்படியோ அதேமாதிரிதான் வெங்கா பிரச்சினையும். வெங்கா பற்றிய பிரச்சினையில் பின்னால் ஒரு விவரமும் தெரியவில்லை. போலீஸ்நடவடிக்கை எடுக்கிறது. வழக்கு எந்தநிலையில் இருக்கிறது, எத்தனை பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரங்களை அவ்வப்போது தந்து கொண்டிருக்க வேண்டும். மின்சாரத் துறை அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். விசாரணை செய்திருக்கிறார்கள். கேஸ் நடக்கிறது. 4 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்கின்ற விவரங்களை அவ்வப்போது தந்துகொண்டிருக்கிறார்கள். அதேமாதிரி நீங்களும் இப்படிப்பட்ட முக்கியமான பிரச்சினைகளில் அவ்வப்போது விவரங்களை தந்துகொண்டிருந்தால்தான் உங்களுக்குக் கீழே இருக்கிறவர்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பார்லிமெண்டில் எம். எஸ். பிரான்ச்—மெம்பர்ஸ் சர்வீஸ் பிரான்ச்—வைத்திருக்கிறார்கள். இங்கே அப்படி இல்லை. சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆஸ்பத்திரிக்குப் போகிறார்கள். அங்கே அவர்களைக்கவனிக்க யாரும் இல்லை. ஆஸ்பத்திரிக்குப் போனவர் திரும்பி வந்தால் தான் நமக்குத் தெரியும். அதுவரையில் அவரைப் பற்றிய விவரம் நமக்குத் தெரிய வருவதில்லை. உறுப்பினர்கள் கைதானால் இந்தத்தேதியில் கைதானார் என்றும், இந்தத் தேதியில் விடுதலையானார் என்றும் சொல்கிறீர்கள். வேறு எந்த விஷயமும் சொல்லப்படுவதில்லை. பார்லிமெண்டில் எம். எஸ். பிரான்ச் வைத்திருக்கிறார்கள். அதற்கு ஒரு செக்ரட்டரி இருக்கிறார். ஆஸ்பத்திரியில் மெம்பர்கள் இருந்தால் அவர்களைப் போய் தினமும் காலையில் பார்க்கிறார்கள். அவருக்கு என்ன தேவை, என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்களை கவனித்துக்கொள்கிறார்கள். ஆஸ்பத்திரியில் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்ற விபரங்களையும் அவ்வப்போது தெரிவிக்கிறார்கள். இங்கும் அதைப்போன்ற ஒரு பிரான்ச் இருந்தால் உதவிகரமாக இருக்கும். அதை ஏற்படுத்த சபாநாயகராகிய உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆகவே, அதற்கு தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, செலக்ட் கமிட்டிக்கு பல மசோதாக்கள் விடப்படுகின்றன. 1972-ஆம் ஆண்டு செலக்ட் கமிட்டிக்கு விட்ட மசோதா கூட இன்னும் வரவில்லை. செலக்ட் கமிட்டிக்கு மசோதாவை அனுப்பினால் அடுத்த சட்ட மன்றக்கூட்டம் நடக்கும்போது முதல் நாள் அல்லது கடைசி நாள் அது எந்த நிலையில் இருக்கிறது என்ற விவரத்தைச் சொல்ல வேண்டும். அந்த முறையில் செலக்ட் கமிட்டி விவரத்தை அறிவிக்க வேண்டுமென்று உத்தரவு இருக்கவேண்டும். 2, 3 வருஷம் ஆனால் கூட செலக்ட் கமிட்டிக்குப் போனது திரும்பி வராமல் இருக்கிறது; வருமா என்றும் தெரியவில்லை ஆகவே, எந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு விட்டாலும் அடுத்த சட்டமன்றக் கூட்டத்தில் முதல் நாள் அல்லது கடைசி நாள் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்ற முறை இருக்க வேண்டும். அப்படி வராமல் இருந்தால் சம்பந்தப்பட்ட அமைச்சர் இன்னும் 10 நாள் வேண்டும் என்று கேட்டு, அதற்குள்



சமர்ப்பிக்க வேண்டும். அந்த அளவுக்கு எக்சிக்யூட்டிவை மிரட்டும் அதிகாரம் இருக்க வேண்டும். அப்போதுதான் வேலை ஒழுங்காக நடக்கும்; அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்னொன்று. இந்தச் சட்ட மன்றத்தில் 1972 டிசம்பர் 2-ந் தேதி நடந்த சம்பவம் மீண்டும் நடக்கக்கூடாது. அன்றைக்கு "காலரியில்" வர சில குறிப்பிட்ட உறுப்பினர்களைத்தான் அனுமதித்தார்கள். அன்றைக்கு வேறு சில காரியங்கள் எல்லாம் நடந்தன. அதனால்தான் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் மீண்டும் நடக்கக்கூடாது என்று சொல்கிறேன். காலரியோ லாபியோ உங்களுடைய கண்ட்ரோலில் தான் இருக்க வேண்டும். வேறு யாருடைய கண்ட்ரோலிலும் இருக்கக்கூடாது.

இன்னும் சில காரியங்களை ஏற்கெனவே வெட்டுத் தீர்மானங்களில் பலர் வைத்திருக்கிறார்கள். அதைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பிஸினஸ் அட்வைசரி கமிட்டி ஏதோ ஒன்றிரண்டு தடவை கூடுகிறது. அப்படி இல்லாமல் வாரம் ஒரு முறையாவது கூட வேண்டும். வாரம் ஒரு முறை கூடினால்தான் கடந்த வாரத்தில் என்னென்ன நடந்தது, இந்த வாரத்தில் என்னென்ன நடக்க வேண்டும் என்பதைப்பற்றி பேசுவதற்கு வாய்ப்பு இருக்கும்.

இப்போது இருக்கக்கூடிய "ஓல்ட் ஹாஸ்டலை" "கஸ்ட் ஹவுஸ்" ஆக மாற்றப்போவதாகச் சொல்கிறார்கள். ஏற்கெனவே பக்தவச்சலம் காலத்தில் ஹாஸ்டலாக இருந்த அதை புதுப்பித்து "பாத் ரூம்" அட்டாச் செய்து, டெலிபோன் வசதிகள் எல்லாம் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அது அங்கு வருகின்ற சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வசதியாக இருக்கும்.

அதேமாதிரி உறுப்பினர்கள் சில இடங்களைப் பார்க்க வேண்டுமென்று சொன்னால் அவர்களை அழைத்துச் சென்று அந்த இடங்களைக் காட்ட வேண்டும். டூர் ஏற்பாடு செய்ய வேண்டும். கமிட்டிக்கு போகும்போது கமிட்டி மெம்பர்கள் சில இடங்களைப் பார்த்திருப்பார்கள். பார்க்காத மெம்பர்கள், கமிட்டியில் இல்லாத மெம்பர்கள் பார்க்க வேண்டுமென்று விரும்பினால் டூர் ஏற்பாடு செய்து, அழைத்துச் செல்லக்கூடிய பொறுப்பு சபாநாயகருக்கு இருக்கிறது. அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பார்லிமெண்டில் பிரதம அமைச்சரையோ அல்லது மற்ற அமைச்சர்களையோ சபாநாயகர் பார்ப்பதில்லை. அங்கே பார்லிமெண்டரி அஃபேர்ஸ் என்ற தனிப் பிரிவு இருக்கிறது. அதன் மூலம் என்ன என்ன காரியங்கள் நடைபெறுகின்றன, என்னென்ன நடக்க வேண்டும் என்று முடிவு செய்து தெரிந்து கொள்கிறார்கள். ஸ்பீக்கருக்கும் அமைச்சர்களுக்கும் தொடர்பு இல்லாதது போல் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை இங்கும் இருந்தால் சபாநாயகருடைய "டிக்னிட்டி" உயரும்.

**you can arrange for the visit of Members to some public sector units, new Ventures, leper homes, etc.**

எஸ்டிமேட்ஸ் கமிட்டி பல இடங்களுக்குப் போகிறது. அதில் இல்லாத உறுப்பினர்களும் இருக்கிறார்கள். அவர்கள் சில இடங்களுக்குப் போக வேண்டுமென்று விரும்பினால் அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

இன்னொன்று, எல்லோரும் இங்கே சீரியசாக டிஸ்கஸ் செய்கிறோம். அதற்குப் பின்னால் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொள்ளலாம். இப்போது ஒன்றரை மாதத்திற்குமேல் சட்டசபை நடக்கிறது. முன்பெல்லாம் சட்டசபை கூட்டம் முடியும்போது ஓய்வு எடுத்துக்கொள்ளும் வகையிலும் உறுப்பினர்களுக்கு உற்சாகம் ஏற்படும் வகையிலும் "ஸ்பீக்கர்ஸ் டே" என்று கொடுப்பார்கள். "ஹாஸ்டல் டே." என்று இருந்தது. அதெல்லாம் இப்போது நடக்கவில்லை. அந்தமாதிரி நாட்களில் எல்லா உறுப்பினர்களையும் கூப்பிட்டு வைத்து, பொதுவான காரியங்கள் பற்றிப்பேசுவதற்கு வாய்ப்பு இருக்கும். பல விவரங்களைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு இருக்கும். உறுப்பினர்களிடம் இருக்கின்ற அரசியலில் இல்லாத வேறு சில அபார சக்திகளையும் நாம் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இப்போது 2, 3 வருஷமாக ஹாஸ்டல் டே நடக்கவில்லை. இந்த வருஷம் வரும் என்று பார்த்தோம். ஆனால் வராதுபோல் இருக்கிறது. அடுத்த சட்ட மன்றக் கூட்டத்திலாவது சபாநாயகர் ஒரு நாள் வைத்து, ஹாஸ்டல் டே கொண்டாட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரணமாக உறுப்பினர்களுக்கு டைப்ரைட்டர், டெலிபோன் வசதிகள் இருக்க வேண்டும். கட்சி ஆபீசில் கண்டிப்பாக டெலிபோன் இருக்க வேண்டும்; டைப்ரைட்டர் இருக்க வேண்டும்; ஒரு டைப்பிஸ்ட் இருக்க வேண்டும். அதற்கு இந்த மானியத்திற்கு அதிகத் தொகை ஒதுக்க வேண்டும். இப்போது சுமார் 49 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். சாதாரணமாக மானியங்கள் வரும்போது ஒதுக்கியிருக்கிற தொகையை அதிகமாக்க வேண்டுமென்று கேட்பது வழக்கமல்ல. அதனால் ரொம்ப ஜாக்கிரதையாகக் குறிப்பிடுகிறேன். இந்தக் குறிப்பிட்ட இலாகாவிற்கு இன்னும் அதிகமாக ஒதுக்க வேண்டும். உறுப்பினர்கள் சில வசதிகளைக் கேட்கிறார்கள். அமைச்சருடைய வீட்டுக்கு, அமைச்சர்கள் தங்கியிருக்கிற வீட்டுக்கு பல வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதே அளவுக்கு எம்.எல்.ஏ. தங்கியிருக்கிற வீட்டுக்கு வசதிகள் செய்யாவிட்டாலும் சில குறிப்பிட்ட வசதிகளையாவது செய்து கொடுக்க வேண்டும். அவர்கள் தொகுதியில் அவர்களுக்கு ஒரு ஆபீஸ் இருக்க வேண்டும்; அங்கே டெலிபோன் வசதி இருக்க வேண்டும்; டைப்பிஸ்ட் இருக்க வேண்டும்; ஒன்றிரண்டு கிளார்க்குகள் இருக்க வேண்டும்.

இப்போது பார்லிமெண்டில் ஒரு அதிகாரியிடம் ஏதாவது ஒரு மனுவை தனிப்பட்டவர்கள் கொடுத்தால், அதிகாரிகள் அந்த மனுவை சம்பந்தப்பட்ட தொகுதி எம்.பி.-க்கு அனுப்பி அவர்களுடைய எண்டார்ஸ்மெண்டைப் பார்த்து அதன் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள். அப்படி செயல்படுவதற்கான வாய்ப்புக்களை அவர்களுக்கு உருவாக்கியிருக்கிறார்கள். அந்த முறையில் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு இருந்தால், ஆபீஸ் வசதி இருந்தால், எந்தக் கட்சி எம்.எல்.ஏ.யாக இருந்தாலும் தொகுதிக் காரியங்களைச் செய்வதற்கு உதவிகரமாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, டெம்பரரீஸ் இருக்கிறார்கள். அவர்களில் டவாலி போட்டவர்களைப் பற்றி நான் சென்ற முறையும் சொல்லியிருக்கிறேன். சட்ட மன்ற பியூன் என்பதற்கு டவாலி போட்டு தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. It is a nauseating sight. நம் நாட்டில் இன்னும் அவர்களை அப்படியே வைத்திருக்கிறார்கள். இன்னும் அவர்களை ஐந்தாம் பிரிவு மக்கள்மாதிரி வைத்திருக்கிறது நியாயமில்லை. அவர்களுக்கு வேண்டுமானால் "பாட்ஜ்" கொடுக்கலாம். டவாலி வேண்டியதில்லை. சாதாரணமாக டவாலி போட்டவர்கள் பின்னால் வரும்போது அமைச்சர்கள் எப்படி நினைக்கிறார்களோ தெரியவில்லை. எனக்கு யாரோ வருகிறார்கள் என்ற ஒரு விதமான பயம் ஏற்படுகிறது. யாரோ வெளி ஆள்போல் இருக்கும். இது பிரிட்டிஷ் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதை நாம் மாற்ற வேண்டும். மாற்றிவிட்டு, "பாட்ஜ்" கொடுக்கலாம். அல்லது சட்டமன்றத்தில் இருப்பவர்கள் என்பதைக் குறிக்கும் வகையில் தனி உடை கொடுக்கலாம்.

சட்ட மன்றத்தில் இந்தமாதிரி பணியாற்றக்கூடியவர்களுக்கு உடைப் பஞ்சம் இருக்கக்கூடாது. தாராளமாகக் கொடுக்கவேண்டும். அதே மாதிரி அலவன்ஸ் கொடுப்பது இருக்கிறது. "வாச் அண்ட் வார்டு"-க்கு வெளியே 3 ரூபாய் கொடுத்தால் நாம் 5 ரூபாய் கொடுக்கலாம். அது அவர்களுக்கு சட்டசபையில் இருப்பதால் தனி அந்தஸ்து கொடுப்பதுபோல் இருக்கும். ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சட்ட மன்ற அங்கத்தினர் என்று தெரியாமல் தடுத்து விட்டால் எத்தனையோ கோபம் உறுப்பினர்களுக்கு வந்துவிடும்.

(முற்பகல் 11–00)

அந்தமாதிரி ஒருசில விஷயங்களைக் குறிப்பிட்டு முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். இப்போது "**Regularisation of Junior Assistants now working in the Assembly Department, who have been sponsored by the Employment Exchange and who have put in more than one year's service.**" இம்மாதிரி ஆட்கள் இருக்கிறார்கள். இவர்களது சர்வீசை ரெகுலரைஸ் செய்ய வேண்டும். நமக்கு ப்யூன்கள் என்று வந்தால் ஐந்தாறு வருஷம் சர்வீஸ் செய்கிறார்கள். இவர்களையும் ரெகுலரைஸ் செய்ய வேண்டும்.

இரண்டு வாரத்திற்கு முன்னால் பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. ஆந்திரப் பிரதேசத்தில் சட்ட மன்றம் தொடர்ந்து நடைபெற்ற காரணத்தினால் சட்ட மன்ற ஊழியர்களுக்கு அதிகமாக இருந்த வேலைகளைக் கருத்தில் கொண்டு அங்குள்ள சட்ட மன்ற ஊழியர்கள் அனைவருக்கும் ஒரு மாத போனஸ் அளிக்கப்பட்டிருக்கிறது. இது 30—3—1975 பத்திரிகையில் வந்திருக்கிறது. மாநிலச் சட்டமன்றங்களில் ஒன்றில் இதுபோல கொடுக்கப்பட்டாகிவிட்டது. நாம் ஒரு மாதம் என்று இல்லை. இன்னும் அதிகமாகக் கூடக் கொடுக்கலாம். என்றாலும் அதுபோல இங்கும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

ப்ரமோஷனல் ஆப்பர்சூனிடீஸ் குறைவாக இருப்பதனால் இங்குள்ளவர்களுக்கே ப்ரமோஷன் கொடுக்க வேண்டும்—வெளியில் இருந்து கொண்டு வரக்கூடாது. (திரு. கு. காமாட்சி குறுக்கீடு.)

மெம்பர்களது வசதிகளைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே மூன்று வசதிகள் தரபட்டும் என்று சொன்னார்கள். இதுவரை அதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சுருக்கமாகச் சொல்லப் போனால் கடந்த இரண்டு மூன்று வருஷங்களாக — கடந்த 71 ஆம் வருஷத்தில் இருந்து இந்த மானியத்தின் மீது என்ன என்ன வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டனவோ அவற்றை உடனடியாக அமல் செய்ய வேண்டும். இல்லையென்றால் கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கு இருக்க வேண்டிய அந்தஸ்து இல்லாமல் போய்விடும்.

இரண்டாவது—நம்முடைய "தமிழகம்" உங்களுடைய பொறுப்பில் வந்து அங்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்குத்தான் முதலிடம் அளிக்கப்பட வேண்டும் என்ற நிலை வரவேண்டும். முன்பு சட்டசபைக் கூட்டமே அங்கு நடந்தது. ஆனால் இன்றைக்கு உறுப்பினர்கள் அங்கே போய் பத்து நாள் ஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று விரும்பினால் கூட வசதி இல்லை. கமிட்டிக் கூட்டங்கள் என்று போகிறபோது கூட உறுப்பினர் தனியாக வரவேண்டுமென்று எழுதுகிறார்கள். அந்த நேரத்தில் தான் வீட்டில் உள்ளவர்களும் அங்கே வரவேண்டும் என்கிறார்கள். மெம்பர்களுக்கு இப்படி எழுதுகிறார்களே தவிர மெம்பர்களுக்கு உதவி செய்ய வருகிற அதிகாரிகள் தனியாக வருவதில்லை. அதுவும் மெம்பர்களுக்கு—எங்களுக்கு எல்லாம் நல்ல அனுபவம் உண்டு. கொண்டுபோய் அனெக்சியில் ரூம் கொடுக்கிறார்கள். அதிகாரிகள் வேறுபல நல்ல அறைகளிலே தங்குகிறார்கள். அமைச்சர்களுக்கு என்றால் அவர்களை அணுக முடியாத அறையில் வைக்கிறார்கள். அங்கு எல்லோரையும் சமமான முறையில் வைக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இறுதியாக சட்டமன்றத்தை நடத்துவதற்காக இருக்கக்கூடிய அமைச்சர் அவர் எக்சிக்யூடிவ் பிரதிநிதி – இந்தர்—சட்டமன்றத்தை நடத்த சபாநாயகருக்கு உதவியாக இருக்கிறார் என்ற நிலைமையில் வரவேண்டும்.

கொஞ்சம் தயக்கமாகத்தான் சொல்கிறேன். இங்கே தினசரி உறுப்பினர்கள் வந்து கையெழுத்துப் போடுகிறார்கள். கையெழுத்துப் போடுகிற தினங்களுக்கு தினசரி அலவன்சு என்று இருக்கிறது—இன்றைக்கு ஒருவர் மிக அவசியமாக தொகுதிக்குப் போக வேண்டி நேரிட்டால் இரண்டு மூன்று நாட்கள் கழித்து வந்தாலும்—பாராளுமன்றத்தில் 14 நாட்கள் என்று இருக்கிறது—இங்கே ஒரு ஐந்து நாட்களாவது—நடுநடுவே தொகுதிக்குச் செல்கிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்றால் இந்த நாட்களும் கூட சட்டமன்ற அங்கத்தினர் சட்டமன்றப் பணி செய்ததாகவே கருதப்பட—அத்தகைய அந்தஸ்து கொடுப்பது உதவிகரமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.





இன்னும் ரெயில்வே பாஸ் கொடுக்கிறபோது கூப்பனாக இல்லாமல் பாசாகக் கொடுக்கவேண்டும். அதைச் செய்வார்கள் என்று நினைக்கிறேன்.

இன்னொன்று. இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற இந்த மானியத்திற்கான வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் வற்புறுத்துகிறேன்.

இதில் ஒன்று, செகண்டு சேம்பர் வேண்டாம் என்பது. லீடர் ஆப் த உறவுசே அதுபோல ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து மேல்சபையை எடுத்துவிடலாம். எங்கள் கட்சி ஆட்சியில் இருந்தபோது வங்காளத்தில் மேல்சபை வேண்டாம் என்று எடுத்துவிட்டார்கள். கேரளத்தில் மேல் சபை கிடையாது. நமக்கும் செகண்டு சேம்பர் இருக்க வேண்டியதில்லை. நமது அரசே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து அதை எடுத்துவிடுவது நம் காலத்தில் நாம் செய்த ஒரு நல்ல காரியமாக இருக்கும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

*திரு. ந. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியத்தை வரவேற்று ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சட்டசபை உறுப்பினர்களுக்கு என்ன என்ன வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாமும் சில ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு ஆட்பட்டவர்கள் என்பதை உணர்ந்து செயல்பட்டாக வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே சட்டமன்றம் கூடுவது நாட்டில் உள்ள மக்களது பிரச்சினைகளை உறுப்பினர்கள் இங்கே எடுத்துச்சொல்லி அவர்களுக்கு நல்ல பல காரியங்களை இந்த அரசு செய்யவேண்டும் என்கிற அடிப்படையில்தான். ஆனால், இந்தச் சட்டமன்றத்திற்கு உள்ளேயே வராமல்—பெயர் எழுதிப் போட்டிருக்கிற தம் இடத்தில் வந்து உட்காராமலேயே—லாபியில் வந்து கையெழுத்துப்போட்டுவிட்டு—மாதா மாதம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள சம்பளத்தை வாங்கிக்கொள்வது என்ன ஜனநாயகக் கடமை என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நாம் இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பல வசதிகளைக் கேட்கிறோம். கட்சி அனுவலங்களுக்கு பல வசதிகளைக் கேட்கிறோம். ஆனால், இங்கே ஒருவர் சட்டமன்றத்திற்குள் வராமலேயே, தனக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் வந்து உட்காராமலேயே லாபியில் வந்து கையெழுத்துப்போட்டுவிட்டு சம்பளத்தை மட்டும் பெற்றுப்போகிற நிலை இருக்குமானால் இதுபோன்ற செயலைத் தடுக்க ஒரு சட்டமே கொண்டுவரலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: சட்டமன்றத்திற்குள் வராமல் லாபியில் உள்ள புத்தகத்தில் கையெழுத்துப்போட்டுவிட்டுப் போகலாமா என்று ஆளுங்கட்சி அங்கத்தினர் பேசுகிறார்கள். அவர்களுடைய கட்சியிலேயே

177 உறுப்பினர்களில் எத்தனைபேர்கள் தினமும் இந்த மன்றத்திற்கு வந்து உட்கார்ந்து போகிறார்கள் என்பதைப் பார்த்துப் பேசுவது நலமாக இருக்கும்.

(திரு. கோவை செழியன் எழுந்திருந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் கட்சி துணைத் தலைவர் திரு. எட்மண்ட் அவர்கள்தான் சொல்லிவிட்டார்களே.

திரு. கோவை செழியன்: This is entirely different. அவர்கள் பேசுவது மாண்புமிகு, புலவர் கோவிந்தன் அவர்களையே அவமானப்படுத்துவதாக இருக்கிறது. அவர் தமக்கு சபாநாயகர் பதவி கொடுக்கவில்லை என்றவுடன் இந்தச் சபைக்கே வராமல் இருந்தபோது திரு. தோப்பூர் திருவேங்கடம் அவர்கள்தான் அவரை லாபிக்கு வந்து கையெழுத்துப் போட்டுவிட்டுப் போகச் சொன்னார்கள்.

திரு. கு. காமாட்சி: திரு. செழியன் அவர்கள் சபாநாயகரைப்பற்றி இங்கே சொல்கிறார்கள். அவர் பல தடவை இங்கே வந்து சபையில் உட்கார்ந்து இருக்கிறார். அவர் வரவில்லை என்று சொல்லுவது சரியல்ல. என்றாலும் இந்த நேரத்தில் அதைப்பற்றி பேச வேண்டியதில்லை.

திரு. பெ. சீனிவாசன்: இந்த யோசனையை அந்தப் பக்கத்தில் உள்ளவரிடத்தில் சொல்லுங்கள்.

திரு. ந. சோமசுந்தரம்: நான் யாராக இருந்தாலும் எல்லோருக்கும் சொல்கிறேன். பேரவைத் தலைவர் அவர்கள் இந்தச் சபையில் விவாதம் நடந்த காலத்தில் வந்திருக்கிறார்கள். வோட்டெடுப்பு நடக்கும் போது கலந்துகொண்டிருக்கிறார்கள். நடவடிக்கைக் குறிப்பைப் பார்த்தாலேயே தெரியும். ஆனால், அவர்களது கட்சித் தலைவர்தான் இந்தப் பேரவைக்கு வராமலேயே—லாபியில் உள்ள ரிஜிஸ்தரில் வந்து கையெழுத்துப் போட்டுவிட்டுப் போகிறார். இது எந்த முறையில் ஜனநாயக மரபுகளுக்கு, கோட்பாடுகளுக்கு ஏற்றதாக இருக்கும் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

அப்படி இங்கே வருவதற்கு இஷ்டம் இல்லையென்றால், பதவியை இராஜிநாமா செய்துவிடலாம். நான் வேண்டிக் கொள்வதெல்லாம், சட்டபூர்வமாக இருக்கையிலே இருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாகவேண்டும். சபாநாயகருக்கு அப்படிப்பட்ட அதிகாரம், அவரை சபையிலிருந்து அல்லது பொறுப்பிலிருந்து நீக்க அதிகாரம் வேண்டும். அல்லது, அந்த அதிகாரம் மத்திய அரசின் கையிலிருக்கிறதென்றால், மன்றத்தின் மூலமே ஏகோபித்த தீர்மானம் நிறைவேற்றி அறிவிக்க வேண்டுமென்றுதான் தெரிவித்துக்கொள்கிறேன்.



டாக்டர் எச். வி. ஹாண்டே: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களுக்கு அந்த அதிகாரம் வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படி ஒரு அதிகாரம் அவர்களுக்குக் கொடுப்பதாக இருந்தால், தன்னையே தான் நீக்கிக் கொள்ளக்கூடிய அளவுக்கு அவர்கள் ஆளாவார்கள் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ந. சோமசுந்தரம்: நான் முன்பே குறிப்பிட்டேன். நானாக இருந்தாலும் சரி, மாண்புமிகு ஹாண்டே அவர்களாக இருந்தாலும் சரி, எல்லோருமே ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற இயலாத நிலைமை ஏற்பட்டால் விலகியாக வேண்டுமென்றுதான் சொல்லுகிறேன். கையெழுத்து போட்டுக்கொண்டு, மாதாமாதம் சம்பளத்தை வாங்கிக்கொண்டு, தன்னுடைய கடமைகளை மறந்து செயல்படுவது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நியாயம்தானா என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். 4 நாட்கள் சட்டமன்றத்தில் இருக்கிறோம், ஊருக்குப் போகிறோம், நம்முடைய தொகுதியிலே இருந்து வேலைகளைப் பார்த்துவிட்டு வருகிறோம் என்று. இங்கே 7 நாள் சட்டமன்றத்திலே இருந்தால்தான் ஒரு நாள் ஊருக்குப் போக அனுமதிக்கப்படுகிறது. அதை மீண்டும் பரிசீலனை செய்து, ஒரு வாரத்தில் திங்கள் கிழமையிலிருந்து சனிக்கிழமை வரை சபையிலேயிருந்தால், ஞாயிற்றுக் கிழமையில் ஊருக்குப் போக ஏற்ற வகையிலே மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த 6 நாட்களிலே கூட வாரத்திற்கு ஒரு நாள் கையெழுத்துப் போட்டால்—தினம் கையெழுத்துப் போட வேண்டுமென்று இல்லாமல்—போதும், அந்த வாரம் பூராவும் வந்ததாய்ப் பாவிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பல பெரிய பொறுப்புக்களிலே இருக்கின்ற, ஜனாதிபதி போன்ற பதவிகளிலே இருப்பவர் ஓய்வு பெறும்போது அவர்களுக்கு ஓய்வூதியம் தரப்படுகிறது. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் தங்கள் பதவியிலிருந்து விலகிய பிறகு அல்லது வயோதிகம் காரணமாக விலகும் போது, அவர்கள் வாழ்க்கை நிலையை ஓரளவுச் சரி செய்ய, எல்லோரும் தெரிவித்ததுபோல், பென்ஷன் தருகின்ற முறையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு குறைந்தபட்சம் அவர்கள் இல்லங்களிலோ, அல்லது அவரவர்கள் அலுவலகங்களிலோ தொலைபேசி வைத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அல்லது தொலைபேசி வைக்கின்ற கட்டணத்தை, அல்லது தொலைபேசி வைத்தால் ஆகும் வருட வாடகையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால்தான் உள்ளபடியே சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[ந. சோமசுந்தரம்] [1975 ஏப்ரல் 10

இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, எங்களுக்கு ஏதாவது நோய் வந்தால் அதற்கு இலவச வைத்திய உதவியை அரசு அளிக்கிறது. அதேபோல், சட்டமன்ற உறுப்பினர்களுடைய குடும்பத்திற்கும் மருத்துவ உதவியை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களிலேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களுடைய அஜெண்டாக்கள், கூட்ட நடவடிக்கைகள் எல்லாம் அனுப்பப்படுகின்றன. ஆனல் நகராட்சிப் பகுதியிலேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் எண்ணங்களை, மக்கள் கோரிக்கைகளை நகராட்சிகளிலே தெரிவிக்கின்ற அளவிற்கு நகராட்சிகள் அவர்களை அங்கமாக ஏற்றுக்கொள்வதில்லை. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னென்று இங்கே சொல்லாமலிருக்க முடியவில்லை. ஊர்களிலே விழாக்களை நடத்துகிறார்கள். அதற்கான அழைப்புகளை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்புவதேயில்லை, ஏன் அறிவிப்பதேயில்லை. இதற்கு சில அமைச்சர்கள் உட்படுகிறார்கள், அதிகாரிகளும் அதில் ஈடுபடுகிறார்கள். இங்கே சட்டமன்ற நாட்களில் நாங்களும் கலந்து கொள்ள முடியவில்லை.

இன்றைக்கு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் அல்லது நாங்கள் அங்கம் வகிக்கின்ற சில ஆலோசனைக் குழுக்களின் கூட்டங்கள் நடப்பதில்லை. அவற்றை நடத்துவதற்கு தேதி குறிப்பிட்டாலும்கூட, சட்டமன்றம் நடைபெறுவதால், அவையெல்லாம் ஒத்திபோடப்படுகின்றன. அப்படிப்பட்ட நிலைமைகளிருந்தாலும் சில தொகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்தவிதமான அறிவிப்பும் இல்லாமல் அதையும் மாவட்ட ஆட்சித் தலைவர்களே நடத்தலாமா? சில நேரங்களில் அமைச்சர்கள்கூட அந்த விழாக்களில் பங்கு கொள்ளலாம் என்ற நிலைமையிருப்பதை தயவு செய்து அமைச்சர்கள் பரிசீலிக்க வேண்டும். இந்தச் சபை முன்னவரிடத்திலே அப்படிப்பட்ட புகாரை நானே எழுதிக் கொடுத்திருந்தாலும்கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இங்கே அமைச்சர்களே எங்களுக்கு ஒரு பாதுகாப்பு, எங்களுக்கு ஒரு மரியாதை அளிக்காத நிலைமையிருக்கும்போது, அதுவும் அவை முன்னவரே அவ்வாறிருக்கும்போது, மாவட்டங்களிலே வட்டங்களிலே இருக்கும் நிலைமையை சபை முன்னவர் அவர்கள் கவனிக்க வேண்டும். சபை முன்னவரிடத்திலே கொடுத்தே எங்களுக்கு இந்த நிலைமையென்றல், அவரே எங்களை இவ்வாறு நடத்துகிறார் என்றல், மற்றவர்கள் எங்களை எப்படி நடத்துவார்கள் என்பதைக் கவனிக்க வேண்டுமென்று மிக்க வருத்தத்தோடு கூறிக்கொள்கிறேன்.

நான் இதுவரை சொன்ன கருத்துக்களை, எங்களுக்குரிய பாதுகாப்பையும், எங்களுக்குரிய சலுகைகளையும் அளித்தால் உள்ளபடியே மற்றவர்களைப் போலில்லாமல், எங்களுடைய ஜனநாயகக் கடமைகளை இன்னும் சிறப்பாகச் செய்ய உதவும் என்று தெரிவித்துக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.



1975 ஏப்ரல் 10]

*திரு. பெ. சீனிவாசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் இங்கே பணியாற்றுகிற ஊழியர்களுடைய குறைகளைப் பற்றிச் சொன்னர்கள். அந்தக் குறைகளோடு எம்.எல்.ஏ. ஆஸ்டலில் பத்து ஆண்டுகளாகப் பணியாற்றிய கௌண்டர் கிளார்க்குகளுக்கு எந்த பிரமோஷனும் கொடுக்காமலிருக்கிறார்கள். அசெம்பிளி டிபார்ட்மெண்டில் உயர்வான பதவிகள் வரும்போது, அவர்களையும் கணக்கெடுத்து, அந்தப் பிரமோஷன் லிஸ்டில் அவர்களையும் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் எம்.எல்.ஏக்களுக்கு உள்ள வசதிகளைப் பற்றி சொன்னர்கள். பொதுவாக, எம்.எல்.ஏக்களுக்குப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிருக்கிற அந்தஸ்தைக் கொடுத்தால் என்ன ஆட்சேபணை எந்த வட்டாரத்தில் இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களைவிட, மக்களோடு நெருங்கிய, நேரடியான தொடர்பு கொள்ள வேண்டிய நிலையிலிருப்பவர்கள் எம்.எல். ஏ.க்கள். அவர்களுக்குத் தொகுதிகளிலே எல்லா வசதிகளையும் கொடுக்க வேண்டுமென்று இங்கே பேசிய உறுப்பினர்கள் சொன்னர்கள். ஓரளவு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு என்னென்ன சம்பளம் தரப்படுகிறதோ, என்னென்ன சலுகைகள் தரப் படுகின்றனவோ அவற்றை, சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தருவதில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை. அதை நிச்சயம் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் செய்து தந்து, ஒரு முன்மாதிரியாகக் காட்டிப்போக வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். (ஓர் உறுப்பினர்: போது வேண்டுமென்றல்?) இன்னெரு தடவை இந்த அசம்பிளியைப் பற்றி பேச வாய்ப்பிருக்காது. நானே வராமலிருக்கலாம். அல்லது நீங்களே வராமலிருக்கலாம்.

எங்கே போனலும் எம்.எல். ஏ.க்களுக்கு ஓர் டிக்னிட்டி இல்லை. எங்கே போனலும், பிளாட் பங்களாவிலே இடம் கேட்டால், கலெக்டருக்கு முதலிடம் தருகிறார்கள். உள்ளேயிருக்கிற எம்.எல். ஏக்களைக் காலி செய்கிறார்கள். அந்த அளவு மரியாதையில்லாத நிலைமையிருக்கிறது. எம்.பி.களுக்கு இருக்கிற அந்தஸ்தை எம்.எல். ஏக்களுக்குத் தருவதில்லை. எம்.பிக்களை விட எம்.எல். ஏக்கள் குறைவான பணியாற்றுகிறார்கள் என்று சொல்ல முடியாது. நம்முடைய மாநிலத்தில், மற்ற மாநிலங்களுக்கு முன் மாதிரியாக எம்.எல். ஏக்கள் அந்தஸ்தை, டிக்னிட்டியை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த முறையில் பார்க்கின்ற நேரத்தில், இங்கே திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் சொன்னதைப் போல், பேரவை இலாகா—அசெம்பிளி டிபார்ட்மெண்ட்—பேரவைத் தலைவருடைய கையிலே இருக்க வேண்டும். அது அரசியல் சட்டத்திலே தெளிவாக இருக்கிறது. அரசியல் சட்டத்தில் ஆர்ட்டிகிள் 187-ல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"187 (1)—The House or each House of the Legislature of a State shall have a separate secretarial staff.' 'என்று

தெளிவாக 2, 3 சப்–செக்‌ஷன்களில் போடப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த வகையிலும் இன்றைக்கு இங்கேயிருக்கின்ற பேரவை ஆளுங் கட்சியினுடைய விருப்பத்திற்கு விரோதமாக, நடுநிலைமையோடு பணியாற்றக் கூடிய நிலைமையில் இருக்க முடியாது என்பதை நான் என்னுடைய அனுபவத்தில் மட்டுமல்லாமல், இங்கே பார்க்கின்ற நிகழ்ச்சிகளின் மூலமாகவும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதற்கு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், கமிட்டி ஆஃபீஸர் ஒருவரை அப்பாயிண்ட் பண்ணியிருக்கிறார்கள். ஸ்டெனோ அப்பாய்ண்ட் பண்ணியிருக்கிறார்கள். நியாயமான, எத்தனையோ ஊழியர்கள் தகுதி பெற்றவர்கள், பயிற்சி பெற்றவர்கள் நம் துறையில் இருக்கிறார்கள். ஆனால், அமைச்சருக்கு வேண்டியவர் என்ற காரணத்தால் ஏ.ஜி. ஆஃபீஸில் இருந்து அப்பாயிண்ட் பண்ணி இந்தத் துறையை முழுக்கப் முழுக்கப் பாழ்படுத்தியிருக்கிறார்கள்.

அதைப் போல் ஸ்டெனோவை பேரவையிலிருந்து போடாமல், வெளியிலேயிருந்து போட்டிருக்கிறார்கள்.

இதை எல்லாவற்றையும்விட நான் இங்கு முக்கியமான ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். யாரும் தவறாகக் கொள்ள வேண்டாமென்று சொல்லிக்கொள்கிறேன்.

நம்முடைய பேரவையினுடைய செயலாளர் திரு. சி.டி. நடராசன் பதவியை விட்டுச் சென்றார். அவர் சென்ற நேரத்திலே பேரவைச் செயலாளர் பதவிக்கு யாரைப் போடுவது என்ற பிரச்னை உருவானது. அந்தப் பதவிக்குத் தகுதியானவர், உரிமையானவர் நம்முடைய மேலவைச் செயலாளர் அழகிரிசாமி தான். முறைப்படி, நியாயப்படி, சட்டப்படி அவர்தான் வந்திருக்க வேண்டும். இங்கே இப்போது இருக்கிற செயலாளர் திறமையிலே எனக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. நியாயப்படி பார்த்தால் மேலவைச் செயலாளராக இருக்கிற அழகர்சாமி தான் வரவேண்டும். அப்போது பேரவைத் தலைவர் பொறுப்பிலே நான்தான் இருந்தேன், இப்போது பேரவைத் தலைவருக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை, முழுக்க முழுக்க லீடர் ஆப் தி ஹவுஸ் அவர்கள் செய்கிற முடிவுதான், அவருடைய முடிவுக்கு உட்பட்டுத்தான் பேரவையின் அலுவல்கள் நடைபெற வேண்டிய நிலைமை இருக்கிறது. நிச்சயமாக பேரவைத் துறை செயலாளரும் மற்ற ஊழியர்களும் யாருக்கும் பயப்படாமல் நடக்கவேண்டுமென்ற நிலைமை இல்லாமல் இருக்கிறது, நடுநிலையோடு செயல்பட முடியவில்லை......................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சிறிய விஷயத்தைச் சொல்லி விட நினைக்கிறேன். உறுப்பினர் டெபுடி ஸ்பீக்கராக இருந்தார்.



In the discharge of administrative as well as legislative duties here என்ற முறையிலே எத்தனையோ மேட்டர்கள் வந்திருக்கும், அப்போது நடந்ததை எல்லாம் இந்த அவையிலே இப்போது சொல்வது முறையல்ல.

திரு பெ. சீனிவாசன் : I am fully aware of my responsibility.

அழகர்சாமிதான் இந்தப் பதவிக்கு வந்திருக்க வேண்டும். இந்தப் பேரவைத் துறை இண்டிபெண்டண்ட்டாக, சுயேச்சையாக செயல்படுமானால் இப்படிப்பட்ட நிலைமை இருக்காது, இது சாதாரண விவகாரம்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இங்கே பேசுகிற தி.மு.க. உறுப்பினர்கள், நம்முடைய முதலமைச்சர் மாத்திரமல்ல, எல்லோரும் நாள் தவறாமல் யார் பேசினாலும் ஏதோ சூரிய நமஸ்காரம் பண்ணுகிற மாதிரி எம்.ஜி.ஆர். ஏன் இந்தப் பேரவைக்கு வரவில்லை, வரவில்லையென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய தலைவர் ஏன் வரவில்லை என்பதற்கான காரணத்தைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அவர் சொன்ன குற்றச்சாட்டுகளுக்கு சரியாக நீங்கள் மறுப்புச் சொல்லவில்லை என்று காரணம் சொல்லியிருக்கிறார். முதலமைச்சர் 2, 3 தடவைகள் கூட சவால் விட்டார். நாங்கள் அப்போதும் கேட்டோம், இப்போதும் கேட்கிறோம். எம்.ஜி.ஆர். இங்கே வந்து நீங்கள் அவரிடம் காட்ட வேண்டிய ரகசியங்கள், வீசவேண்டிய குற்றச்சாட்டுகள் எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள். அதற்காக எம்.ஜி.ஆர். வரவில்லை, வரவில்லையென்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள், நாள் தவறாமல்...........

திரு. நா. வீராசாமி: எம்.ஜி.ஆர். வரவில்லை, வரவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நம்முடைய அரசியல் சட்டத்திலே 190 (4)வது பிரிவிலே கூட்டத்திற்கு வரவேண்டுமென்று இருக்கிறதே தவிர லாபியிலே கையெழுத்துப்போட்டுவிட்டுப் போகலாம் என்று இல்லை. அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்தர் இருக்கிறது, கையெழுத்துப் போட்டுவிட்டுப் போகலாம் என்று இல்லை...........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு வீராசாமி என்ன கேட்கிறார், கிளாரிபிகேஷனா?

Thiru P. Seenivasan : The Hon. Member must be very careful and very cautious in accusing our leader or Anna D.M.K.

Thiru N. Veerasami : I have got a right to tell and criticise about any member.

Mr. Deputy Speaker : On what point you are standing up and speaking ?

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய அரசியல் சட்டத்தில்.........................

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : எந்த விதியின்கீழ் பேசுகிறீர்கள்? பாயிண்ட் ஆப் க்ளாரிபிகேஷனா? பாயிண்ட் ஆப் இன்பர்மேஷனா? சொல்லிவிட்டுக் கேளுங்கள்.

திரு. நா. வீராசாமி : தினந்தோறும் நாங்கள் ஏதோ இங்கே வந்து சூரிய நமஸ்காரம் பண்ணுவதாகச் சொல்கிறார், எங்களுக்கு என்ன வேறு வேலை இல்லையா? சட்ட மன்ற உறுப்பினர்கள் என்ற முறையிலே நாங்கள் கருத்துக்களைச் சொல்கிறோம். சூடு இருக்கக்கூடாது என்பதற்காக நான் சொல்கிறேன். நம் அரசியல் அமைப்பு சட்டம் விதி—

**190 (4)—If for a period of sixty days a member of a House of the Legislature of a State is, without permission of the House, absent from all meetings thereof, the House may declare his seat vacant ;**

என்று இருக்கிறது. மீட்டிங் என்றால் லாபியிலேயா போடமுடியும்? இந்த மன்றத்திற்கு உள்ளேதான் போடமுடியும். இந்த மன்றத்திற்கு உள்ளே வரவில்லை என்றுதான் சொல்கிறோம்.

**Thiru Aladi Aruna : What is the definition of that ?**

திரு. நா. வீராசாமி : ஹவுஸ் என்பது நான்கு சுவர்களுக்கு உள்ளே தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் என்ன எழுப்பினார் என்றே எனக்குப் புரியவில்லை.

திரு. க. உரொ. எட்மண்ட் : அவைத் தலைவர் அவர்களே, திரு. வீராசாமி இந்திய அரசியல் சட்டத்தைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறார். தமிழ்நாடு சட்ட மன்ற விதிகளிலே ஒவ்வொரு உறுப்பினரும் உள்ளே வந்து இருந்து கையெழுத்துப் போடவேண்டுமென்றில்லை, கையொப்பமிட்டால் போதும் என்றுதான் இருக்கிறது. நான்கு சுவர்களுக்குள்ளேதான் இந்த மன்றம் என்று சொன்னார்கள்.

**The whole Secretariat is Assembly.**

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முதலமைச்சர் கேட்கிறார், ஏன் என்று தெரியவில்லை என்று சீனிவாசன் கேட்கிறார். ஜனநாயகக் கடமை ஒவ்வொரு எதிர்க்கட்சிக்கும் இருக்கிறது, ஒவ்வொரு உறுப்பினருக்கும் இருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எதற்காகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ அந்தக் கடமையை இந்த மன்றத்திலே ஆற்றுவதுதான் சிறப்புடையதாகும், அதற்குப் பெயர்தான் ஜனநாயகம் ஆகும்.



திரு. பெ. சீனிவாசன் : அந்தக் கடமையிலே பல வகைகள் இருக்கின்றன. பேரவைக்கு வரமாட்டேன் என்பதற்கு எங்களுடைய தலைவர் காரணம் சொல்லியிருக்கிறார்........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : என்ன காரணம் சொன்னார்?

திரு. பெ. சீனிவாசன் : ஒன்றரை மணி நேரம் பேசியது நடவடிக்கைக் குறிப்பில் இல்லை, எனவே வரவில்லை என்று சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படியென்றால் எம்.ஜி.ஆர். பேசியதாக சொல்லப்படும் நாளிலே வேறு அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் யாரும் பேசவில்லையா? அது நடவடிக்கைக் குறிப்பில் வரவில்லை என்று அவர்கள் கூறவில்லையா?

திரு. க. உரொ. எட்மண்ட் : புரட்சித் தலைவர் அவர்கள் டிசம்பர் 2-ஆம் தேதி இங்கே பேசியது சட்ட மன்றக் குறிப்பிலே வரவில்லை. அன்றைக்கு அண்ணா தி.மு.க. உறுப்பினர் யாருமே பேசவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இங்கே பேசியது குறிப்பிலே வரவில்லை, ஆகவே வரவில்லை என்று எம்.ஜி.ஆர். சொல்கிறார். ஒலிபெருக்கியிலே பேசுவதுதான் குறிப்பிலே பதிவாகும். அப்போது திரு. சீனிவாசன் டெபுடி ஸ்பீக்கராக இருந்து சொல்லியிருக்கிறார். ஒலிபெருக்கியிலே பேசாதது அவைக் குறிப்பிலே இடம் பெறுவது கிடையாது என்று. அந்த ஒரு நாளுக்குப் பிறகு அண்ணா தி.மு.க. சார்பில் உறுப்பினர்கள் எவ்வளவோ காரசாரமாக இங்கே பேசியிருக்கிறார்கள், அதற்கெல்லாம் ஆளுங்கட்சித் தரப்பிலிருந்து பதில்கள், விளக்கங்கள் தரப்பட்டு இருக்கின்றன. மேலும் மேலும் விவாதம் நடைபெறுகிறது. அதற்குப் பிறகு எம்.ஜி.ஆர்.-க்கு என்ன தடை?

திரு. பெ. சீனிவாசன் : முதலமைச்சர் வேறு ஒருவகையிலே வாதத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார். அண்ணா தி.மு.க. அத்தனை பேர்களும் அதனால் வராமல் இருக்கலாம். ஏன் அந்த உறுப்பினர்கள் இங்கே வருகிறார்கள் என்று கேட்பதுபோல் சொல்கிறார்கள். அதனால் அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் வராமல் இருக்கிறார்கள் என்ற கண்டனத்திற்கு நாங்கள் ஆளாகமாட்டோம், அப்படிப்பட்ட குற்றச்சாட்டிலிருந்து தப்பிப்பதற்கு நாங்கள் இங்கே வந்துகொண்டிருக்கிறோம். இந்த அமைச்சரவைக்கு எதிராகக் குரலை எழுப்புவதற்காக வந்துக்கொண்டிருக்கிறோம். சீனிவாசன் சொன்னார் என்று சொன்னார்கள். அந்த விஷயத்திற்குள் நான் விவாதத்திற்குப் போகவில்லை. நீங்கள் வேறு அதைப்பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறீர்கள்.. நான் அதற்காகத்தான் சொல்கிறேன். சட்டப் பேரவைத் துறை சுதந்திரமாக இயங்கவேண்டும். அப்படி இயங்கினால்தான் இப்படிப்பட்ட விவகாரங்கள் வராது..

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அன்றைக்கு எம். ஜி. ஆர். ஒலிபெருக்கியில் பேசவில்லை, என்னோடுதான் பேசிக்கொண்டிருந்தார். நானும் அவரும் பல விஷயங்கள் பேசிக்கொண்டிருந்தோம், அதையெல்லாம் இங்கே சொல்லவேண்டுமா? அவர் நின்றுகொண்டே என்னிடத்திலே பேசிக்கொண்டிருந்தார், அவர் பேசியது நடவடிக்கைக் குறிப்பில் வரவில்லை.

(முற்பகல் 11–30)

ஜனநாயகக் கடமையை ஒரு கட்சியின் தலைவரே நிறைவேற்ற முடியவில்லை என்றால் அதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

திரு. ஆலடி அருணா: தலைவரவர்களே, ஒலிபெருக்கியில் பேசியதுதான் பதிவாகும், மற்ற எதுவும் பதிவாகாது என்று சொல்கிறார்கள். அது தவறான தகவல். சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளில், சபாநாயகர் உட்காருகிறார், சபாநாயகர் வெளியேறுகிறார், இன்னொரு சபாநாயகர் உட்காருகிறார் என்று வருகிறது. ஆனால் அவைகள் ஒலிபெருக்கியில் சொல்லப்படுவதில்லை. நாம் சிரிக்கிறோம், குறுக்கீடு செய்கிறோம், இவையெல்லாம் ஒலி பெருக்கியில் வருவதில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அன்றைக்கு விவாதத்தில் அவை முன்னவர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது எம்.ஜி.ஆர். நின்றுகொண்டேயிருந்தால் அது எப்படிப் பதிவாகும்? அவை முன்னவர் பேசியதுதான் பதிவாகும், அதுதான் பதிவாகியது.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, நம்முடைய சட்டமன்ற நடவடிக்கைப் புத்தகத்தைப் பார்த்தால்கூட அதில் சொல்லியிருக்கிறது, ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது இன்னொரு உறுப்பினர் பேச எழுந்தார் என்று இருக்கிறது. என்னுடைய கோரிக்கையெல்லாம் எம்.ஜி.ஆர் அவர்கள் அன்றைக்குப் பேசினார். ஆனால் நம்முடைய முதல்வரவர்கள் சொல்கிறார்கள், அன்றைக்கு அவர் பேசவில்லை, எழுந்து நின்று என்னுடன் பேசிக்கொண்டிருந்தார் என்று சொன்னார்கள். 1½ மணிநேரம் எழுந்து நின்று கொண்டிருந்தார் என்ற குறிப்பாவது புத்தகத்தில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, எத்தனையோ பேர் எழுந்து நிற்கிறார்கள், இப்பொழுதுகூட நிற்கிறார்கள். அவையெல்லாம் குறிப்பேட்டில் வராது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இரண்டாம் தேதி சம்பவம் பற்றி நான் பேசும்பொழுதுகூட மறைமுகமாகக் குறிப்பிட்டேன். இந்தச் சட்டமன்றத்தில் 2 ஆம் தேதி என்ன நடந்தது என்பது பற்றி, அரசாங்கத்திற்கு ஒரு கருத்து இருக்கலாம். ஆனால் எதிர்கட்சியிலே உள்ள பாதிக்கப்பட்ட



எங்களுக்கு அன்றைக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றி, என்ன கருத்து இருக்கிறது என்பதைப் பற்றி உதவி சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த நேரத்தில் சொல்லியிருக்கிறோம். அது பதிவாகியிருக்கிறது. நாங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த நேரத்தில், எம்.ஜி. ஆர். 1½ மணி நேரம் பேசினார், அப்படி அவர் பேசும்பொழுது அவரது பேச்சை யாரும் கேட்கக் கூடாத நிலையில் ஒலிபெருக்கி நிறுத்தப்பட்டது என்றெல்லாம் பேசியது ரிக்கார்ட் செய்யப்பட்டிருக்கிறது. எங்களுடைய "வர்ஷன்" பதிவாகியிருக்கிறது. இரண்டாம் தேதி நடந்த சம்பவத்தைப்பற்றி அரசாங்கத்திற்கு ஒரு வர்ஷன் இருக்கலாம், எங்களுக்கு ஒரு வர்ஷன் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவரவர்கள் வர்ஷன் ரிக்கார்ட் ஆகியிருக்கிறது. கோர்ட்டிலே, இதுமாதிரி நடக்கவில்லை என்ற வர்ஷன் இருக்கிறது. இப்பொழுது நடப்பது சட்டசபை மானியம். இதில் அதிக காண்ட்ரவர்சி இல்லாமல், மெம்பர்களுடைய இண்டரஸ்டைப் பற்றிப் பேசினால் நன்றாக இருக்கும்.

Thiru A. SUBRAMANIAM: Point of order, Sir.

Mr. DEPUTY SPEAKER: No point of order now.

Thiru A. SUBRAMANIAM: I want to raise a point of order.

Mr. DEPUTY SPEAKER: I have to decide the validity. Do not decide about the validity.

Thiru A. SUBRAMANIAM: Please allow me to make the submission. Then you can decide.

முதலமைச்சரவர்கள் இங்கே பேசும்பொழுது ஒன்றைச் சொன்னார்கள். ஒலிபெருக்கியில் பேசுவதுதான் பதிவாகும் என்று சொன்னார்கள். நான் இதுவரையில் தெரிந்து வைத்திருப்பது இந்தச் சட்டமன்றத்திலே, அந்த இருக்கையிலே அமர்ந்திருப்பவர்கள் அனுமதிப்பதுதான் பதிவாகும் என்றுதான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். விதிகள் அதைத்தான் சொல்கின்றன. ஆனால் முதலமைச்சரவர்கள் இப்பொழுது சொல்வது என்னவென்றால் ஒலிபெருக்கியில் பேசுவதுதான் பதிவாகும் என்று சொல்கிறார்கள். அப்படியென்றால் ஒலிபெருக்கியை ஆபரேட் செய்பவர்தான், தங்களுக்கு இருக்கும் அதிகாரத்தைவிட, யார் யார் எதைப் பேச வேண்டும், எது பதிவாக வேண்டும் என்று ஆபரேட் செய்பவர்கள் முடிவு செய்வதுபோல முதலமைச்சரவர்கள் சொல்கிறார்கள். இது முறையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் சொன்னதன் பொருளைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு உறுப்பினர் பேச எழுந்து, அவைத்தலைவர் அதை அனுமதித்தவுடன் ஒலிபெருக்கி

வேலை செய்ய ஆரம்பிக்கும். பேரவைத் தலைவர் அனுமதித்தவுடன் பேச வேண்டும். அன்றைக்கு அவைத்தலைவரின் அனுமதியைப் பெற்று அவர் எதையும் பேசியதாகத் தெரியவில்லை.

திரு. க. உரா. எட்மண்ட்: பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். நம்முடைய முதலமைச்சரவர்கள் அன்றையதினம் எங்கள் கட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் பேசும்பொழுது பேரவைத் தலைவர் அனுமதி கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் அன்றையதினம் பேரவைத் தலைவராக இருந்தவர் யார் என்றால், அந்த நாற்காலியில் யார் இருக்கிறாரோ அவர்தான் பேரவைத் தலைவர். அந்த நாற்காலியிலிருந்து யாருடைய வாயிலிருந்து உத்தரவு வருகிறதோ அதுதான் இந்தச் சட்ட மன்றத்திற்கு இடப்படும் உத்தரவு. அன்றையதினம் எம். ஜி. ஆர். பேசக்கூடாது....

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: அந்த மேட்டர் எல்லாம் ஏற்கனவே டிசைட் ஆகிவிட்டது. யார் பேரவைத் தலைவர் என்று டிசைட் ஆகிவிட்டது. திரும்பவும் அதையே பேசிக்கொண்டிருக்க வேண்டாம். அதை ரெவியூ பண்ணவும் முடியாது.

திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அன்றையதினம் எம். ஜி. ஆர். அவர்கள் பேசும்பொழுது, அவர் பேச வேண்டுமென்று தாங்கள் இருக்கின்ற இருக்கையிலே இருந்து உத்தரவு வந்தது. ஆனால் பேசக்கூடாது என்று அந்த இருக்கையிலே இருந்து உத்தரவு வந்தது என்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. கே. கந்தசாமி: பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். துணைத் தலைவரவர்களே, தங்களுடைய இந்த ஸ்தானத்தில் இருந்துகொண்டு தான் அன்றையதினம் துணைச் சபாநாயகராக இருந்த—இன்றையதினம் பேசும் சீனிவாசன் அவர்கள் பேசினார்கள். அவர்களுடைய முடிவு அன்றைய தினம் எடுத்த முடிவு தவறானது என்றுதான் இன்றைக்கு எம். ஜி. ஆர். அவர்கள் சபைக்கு வராமல், ஜனநாயகம் செத்துவிட்டது என்று கூறுகிறார்கள். ஆனால் அன்றைக்கு முடிவு செய்த, அன்றைய துணைச் சபாநாயகர் தவறு இழைத்தார் என்று சொல்கிறார்களா? அல்லது எம். ஜி. ஆர். கூறுவது தவறு என்று சொல்கிறார்களா?

திரு. க. உரா. எட்மண்ட்: ஜனநாயகம் செத்துவிட்டது என்று சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த ஆர்க்யுமெண்ட்-க்கு நாம் போகவேண்டாம்.



திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, கந்தசாமி அவர்கள் ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டரை எழுப்பியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அதை அன்றைக்கு அங்கேயிருந்த சீனிவாசன் செய்தேன், அன்றைக்கு அங்கேயிருந்த சீனிவாசன் இன்றைக்கு இங்கே இருக்கிறாரே என்பது அவரது எண்ணம். ஆனால் அன்றைக்குச் சபாநாயகராக இருந்த மதியழகன் அவர்கள் இன்றைக்கு அங்கே இருக்கிறார்கள். அன்றைக்கு அவர் சொன்ன தீர்ப்பை நீங்கள் ஒப்புக்கொண்டால் அது சபை நடவடிக்கைக் குறிப்பில் இருந்திருக்க வேண்டும். நான் சொல்வதை ஒப்புக்கொள்வது என்றால் நான் இன்றைக்கு இருக்கிற நிலையை அவர்கள் ஒப்புக்கொள்கிறாரா என்று கேட்க விரும்புகிறேன். அன்றைக்கு நீங்கள் சொன்ன கடமையைச் செய்தேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது மிகவும் தவறு. நான் சொன்ன கடமையைச் செய்தேன் என்று சொல்வது தவறு. சீனிவாசனுக்கு வந்த அபிப்பிராய பேதங்கள் பல. அவைகளை விளக்க வேண்டுமென்று சொன்னால் விளக்குகிறேன்.

எட்மண்ட் அவர்கள் துணைத் தலைவராக இருந்த நேரத்தில் அவருக்கு ஆன டெலிபோன் பில் என்ன? உங்களுக்கு ஆன டெலிபோன் பில் என்ன? அதைப்பற்றி விசாரியுங்கள் என்று கேட்டேன். எட்மண்ட் அவர்கள் துணைத் தலைவராக இருந்தபொழுது அவருக்கான தொலைபேசி பில் ஒரு வருஷத்திற்கு இரண்டாயிரம் ரூபாய் ஆகியிருக்கிறது. மதியழகன் அவர்கள் பேரவைத் தலைவராக இருந்த நேரத்தில் ஒரு வருஷத்திற்கு, 1973–74 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 12,000 ரூபாய் ஆகியிருக்கிறது. ஆனால் ஒரு ஆண்டுக்கு சீனிவாசனுக்கு மட்டும் ஏறத்தாழ 75,000 ரூபாயிலிருந்து 80,000 ரூபாய் வரையில், ஒரு ஆண்டுக்கு, உங்களுக்கு மட்டும் செலவாகியிருக்கிறது. இதையெல்லாம் கேட்டோம், உங்களுக்கு கோபம் வந்து போய்விட்டீர்கள்.

திரு. பெ. சீனிவாசன்: எனக்கு வேதனையாக இருக்கிறது. நான் சொன்னதை முதலமைச்சரவர்கள் வேறு மாதிரியாக எடுத்துக் கொண்டு குற்றச் சாட்டுகளை வீசுகிறார்கள். என்னுடைய டெலிபோன் பில் அதிகமாக இருந்தால் ரெக்கவரி கேட்டிருக்கலாம். இப்பொழுது வேண்டுமானாலும் ரெகவரி போடுங்கள். முடிந்தால் கட்டுகிறேன், இல்லையென்றாலும் என்னுடைய சொத்துக்களை விற்றுக் கட்டுகிறேன். அது ஒன்றும் பெரிய பிரச்னை இல்லை. கட்சிக்காரர்களையே 100 பேர்களை விட்டு மாணவர்கள் என்று சொல்லி ஊர்வலமாக அனுப்பினீர்கள். அவர்கள் வாயில் வராத வார்த்தைகளையெல்லாம் சொல்லிக்கொண்டே மவுண்ட் ரோட்டில் போனார்கள். எனவே இதிலே கொஞ்சமும் விட்டுக்கொடுப்பவர் அல்ல நீங்கள். அப்படியானால் முதலமைச்சர் என்ன சொல்கிறார், 80,000 ரூபாய்க்கு டெலிபோன் பில் வந்திருக்கிறது, ஆகவே, அப்படிச் செய் என்று கட்டாயப்படுத்தினாரா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் சொல்வது இந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் பிறகு, டெலிபோன் பில் பற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட பொழுது, எந்தெந்த ஸ்பீக்கருக்கு, டெப்டி ஸ்பீக்கருக்கு எவ்வளவு பில் ஆகியிருக்கிறது என்று கேட்டேன். மாண்புமிகு பேரவைத் தலைவராக மதியழகன் இருந்தபொழுது 12,000 ரூபாய் அளவிற்கு ஆகியிருக்கிறது. புலவர் கோவிந்தன் அவர்கள் இருந்த காலத்தில் ஏறக்குறைய 10,000 ,12,000 ரூபாய் ஆகியிருக்கிறது. எட்மண்ட் அவர்கள் துணைத் தலைவராக இருந்த பொழுது 3,000 ரூபாய்க்கு மேல் ஆகவில்லை, வீட்டுக்கும் ஆபீசுக்கும் சேர்த்து, 3,000 ரூபாய்க்குமேல் ஆகவில்லை. நண்பர் சீனிவாசன் அவர்கள் பேரவைத் துணைத் தலைவராக இருந்தபொழுது, 1973–74-ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 75,000 ரூபாயிலிருந்து 80,000 ரூபாய் வரையில் ஆகியிருக்கிறது. அதையெல்லாம் கேட்டபொழுது அவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் இதை இன்ஃபர்மேஷன் என்ற வகையில் சொல்லியிருந்தால் ஒன்றுமில்லை, அவர்கள் ஆத்திரத்தில் சொல்கிறார்கள். டெலிபோன் பில் அதிகமாகியிருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்பொழுது என்னுடைய அறைக்கு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் வந்திருக்கிறார்கள், எல்லா எம்.எல். ஏக்களும் போன் செய்திருக்கிறார்கள். வேண்டுமானால் அதைப்பற்றித் தனியாக விவாதித்துக் கொள்ளலாம். ஆனால் இன்றைக்குச் சொல்ல விரும்புவதெல்லாம், சீனிவாசனா, மதியழகனா என்ற பிரச்சினை இல்லை. நான் சொல்ல வந்தது அன்றைக்கிருந்த நிலையில் மதியழகன் அப்படிச் செய்தார், சீனிவாசன் இப்படிச் செய்தார். எப்படிப்பட்ட ஒரு நெருக்கடி அன்றைக்கு வந்தது, சட்டமன்றப் பேரவையின் வரலாறு காணாத நிலை உருவானது, வரலாறு காணாத முடிவுகளை எடுத்து, அந்த முடிவுகள் நீதிமன்றத்திற்குப் போனது, நாம் விரும்பாத ஒன்று, எதிர் பார்க்காத ஒன்று, இனிமேல் நடக்கக்கூடாது என்று நம்புகிற ஒன்று அது.

அந்த நிலைமையை ஒட்டித்தான் எங்களுடைய கட்சியின் தலைவர் மனக் கசப்பில் இந்தப் பேரவைக்கு வரமாட்டேன் என்று சொல்லுகிறார். பேரவைக்கு உள்ளே வந்து பேசமாட்டேன் என்று சொல்லுகிறார். இதை ஒரு பிரச்சினையாக நாள் தவறாமல் யாராவது ஒருவராவது பேசாமல் இருப்பதில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : என்ன செய்திருக்க வேண்டும்? பேரவைக்கு வந்து பேசுவதைத் தடுத்தார்கள், ஆகவே, இந்தப் பதவி தேவையில்லை என்று தூக்கி எறிந்திருக்க வேண்டும். இங்கு ஒரு போர்டு போட்டு அசிங்கப்படுத்தக்கூடாது. "எம். ஜி. இராமச்சந்திரன், தலைவர்" என்ற போர்டைப் போட்டுக் கொண்டு அது காலியாக இருப்பதைப் பார்க்கும் போது, ஜனநாயகத்தை இப்படி மதிக்கிறார்களே என்று வேதனைப்படத் தோன்றுகிறது. மக்களுக்காக வாதிட வாக்குப் பெற்றவர்கள் வாதிட



வேண்டாமா? ஏன் வர மறுக்கிறார் என்று கேட்டால், அவரால் இங்கு வந்து வாதிட இயலாது, ஆகவே வர மறுக்கிறார். அது எனக்குத் தெரியும்.

திரு. பெ. சீனிவாசன் : எங்கள் தலைவர் தூக்கி எறிந்தால் அதை எடுக்க உங்களால் முடியாது. மக்கள் அவரிடந்தான் மறுபடியும் தூக்கிக் கொடுப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர் தூக்கி எறிந்தாலும் அவரிடத்தில்தான் கொடுப்பார்கள் என்று சொன்னார்கள். என்னென்ன தூக்கி எறிந்தார்? எதை எடுத்து இவர்கள் கொடுத்தார்கள் என்று தெரியாதா?

நான் கேட்பதெல்லாம் எதற்காக "தலைவர்" என்ற போர்டை இங்கே வைத்துக் கொண்டிருக்க வேண்டும்? அதை எடுத்து விடச் சொல்லுங்கள். பிறகு என் பதவி? இதைத் தூக்கி எறியச் சொல்லுங்கள். எம்.எல்.ஏ. என்று பேர் போட்டுக்கொள்ள இப்படி வாசல் வரை வந்து கையெழுத்துப் போடுகிறார். திரு. பக்தவத்சலம் அவர்கள் கூட இது பெரிய கிரிமினல் குற்றம் என்று கூறியிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். சம்பளத்தை மட்டும் வாங்கிக் கொண்டு இங்கு வந்து மக்களுக்காகக் கடமையாற்ற, வாதிட வக்கில்லை, வகையில்லை, தெம்பில்லை, திராணி இல்லை; அதனால் வரவில்லை.

திரு. பெ. சீனிவாசன் : அவருக்கு வாதிட வக்கு இல்லை, வகை இல்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். உங்களைப் பற்றி எங்களுடைய தலைவர் அவர்கள் வெளியிலே மக்களிடம் பேசிக் கொண்டுதான் வருகிறார்கள். எங்கள் தலைவருடைய குற்றச் சாட்டுகளுக்குப் பதில் அளிக்க முதல்வர் அவர்களுக்குத்தான் வகையில்லை. மக்களுக்கு அதெல்லாம் தெரியும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உங்கள் தலைவருக்குத் துணிவு இருந்தால், தைரியம் இருந்தால் என்ன குற்றச்சாட்டு என்று பேசட்டும், பத்திரிகையில் வெளிவரட்டும், சந்திக்க வேண்டிய இடத்தில் சந்திக்கத் தயாராக இருக்கிறேன். (ஆரவாரம்.)

திருப்பூர் துரைசாமி விவகாரம் என்னவாயிற்று? திருப்பூர் கூட்டத்தில் வீராதி வீரர் போல் பேசினார். இந்த ஊர் எம்.எல்.ஏ. லஞ்சம் வாங்கினார் என்றார். வழக்கு மன்றத்திற்குச் சென்றபோது அப்படிப் பேசவே இல்லை, யாரோ ஒரு தாளைக் கொடுத்தார்கள், அதைப் படித்தேன், ஆகவே என்னை விட்டுவிடுங்கள் என்று கெஞ்சி மண்டியிடுகிறார். தைரியம் இருந்தால் பேசட்டும், உங்கள் கட்சிப் பத்திரிகையில் போடுங்கள். சந்திக்க வேண்டிய இடத்தில் சந்திக்கத் தயாராக இருக்கிறேன். (கை தட்டல்.)

திரு. பெ. சீனிவாசன் : இங்கே எழும்புகின்ற கைதட்டல் காரணமாக முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு ஆக்கிரோஷமாகப் பேசுவது முறையல்ல. எங்களுடைய தலைவர் இங்கே வரவில்லை என்றாலும் வெளியே பேசிக் கொண்டுதான் இருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேசுகிறார்—நீதி மன்றத்திற்கு அழைத்தால் அங்கு வந்து பேசவில்லை என்கிறார். இதைவிட படு கோழைத்தனம் உலகத்தில் ஒன்றும் இல்லை.

திரு. கோவை செழியன் : பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். அன்று அவர் திருப்பூரில் பேசும்போது "திருப்பூர் நகரத்தில் இருக்கும் எம்.எல்.ஏ. தவறு செய்தார்" என்று சொல்லவில்லை. அவர் பொதுவாகப் பேசிக்கொண்டு வருகிறபோது காகிதத்திலே "இத்தனை வீடுகள் வாங்கியிருக்கிறார் ; இத்தனை லாரிகள் வைத்திருக்கிறார்............" என்ற முறையிலே ஒரு சீட்டு வந்தது. அந்தச் சீட்டைப் படித்தார், இது சரியா என்று கேட்டார். அங்கிருந்த ஜனங்கள் அவ்வளவு பேரும் "ஆமாம், ஆமாம்" என்றார்கள். தாங்கள் கோர்ட் புரோசீடிங்சை மறுபடியும் படித்துப் பார்க்க வேண்டும். ஆரம்பத்திலே இருந்து ரெக்கார்டில் இருக்கிறது. கோர்ட் புரொசீடிங்ஸை மாற்ற வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திருப்பூர் விவகாரம் முன்னாலே சொல்லப்பட்டது. திரு. சீனிவாசன் "எங்கள் தலைவர் வெளியே பேசுகிறார் ; முதலமைச்சர் பதில் சொல்வாரா ?" என்று கேட்கிறார். என் மீது என்ன குற்றச்சாட்டு என்று பேசச் சொல்லுங்கள். அது பத்திரிகையில் வரட்டும். பிறகு கோர்ட்டில் வந்து பேசவில்லை என்று மழுப்பக் கூடாது. அதற்குப் பிறகு நான் அவரை எந்த இடத்தில் வேண்டுமானாலும் சரி, எந்த நீதி மன்றத்தில் வேண்டுமானாலும் சரி, சந்திக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : இதைவிட வெளியிலே எப்படிப் பேசுவது என்று புரியவில்லை. நாள் தவறாமல் எங்கள் தலைவர் பேசிக் கொண்டுதான் இருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உங்கள் தலைவர் எவ்வளவோ பேசுகிறார். உங்களையே சங்கடத்தில் ஆழ்த்துகிறார். இந்தியாவிலுள்ள எல்லா ஆறுகளையும் சேர்த்து மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார். ஏன் இப்படி எல்லாம் பேசுகிறார் என்று நீங்கள் எல்லாம் மனம் புண்படுகிறீர்கள். எவ்வளவோ பேசுகிறார். அவர் பேசுகிறாரா.....................

திரு. பெ. சீனிவாசன் : எங்களுடைய தலைவருடைய பேச்சுக்காக புண்படுத்தும் பொறுப்பை—நீங்கள்தான் ஏற்று இருக்கிறீர்கள். எங்களுக்கு எந்தப் பொறுப்பும் இல்லை. அவர் எங்களைக் கலந்து கொண்டுதான் பேசுகிறார்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் கேட்பதற்குப் பதில் வேண்டும். உங்களுடைய தலைவர் வெளிப்படையாக நான் இன்னின்ன தவறு செய்தேன் ; இந்த அரசாங்கப் பதவியைத் துர் விநியோகப் படுத்தினேன் ; இன்னின்ன தவறுகள் நடந்தன ; இங்கே லஞ்சம் வாங்கினேன் என்று வெளிப்படையாகப் பேசட்டும். அதைப் பத்திரிகையில் தைரியமாக வெளியிடட்டும். அந்தப் பத்திரிகை ஆசிரியர், உங்கள் தலைவர் எல்லோரும் நீதிமன்றத்திற்கு வரட்டும். நான் அவர்களை அங்கே சந்திக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. ஆலடி அருணா : எங்கள் புரட்சித் தலைவர் இந்த அரசாங்கத்தைப் பற்றி, இந்த அரசாங்கத்தில் இருக்கிற அமைச்சர்களைப் பற்றி, செய்த ஊழல்களைப் பற்றி ஜனாதிபதியிடத்தில், மத்திய சர்க்காரிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். பொது மேடையில் பேசுகிறார்கள். இப்போது வேண்டுமென்றாலும் தைரியம் இருந்தால் விசாரணை செய்யட்டும்......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தைரியத்தைப் பற்றி அருணா அவர்கள் சொல்ல வேண்டாம். பிரதம அமைச்சரிடத்தில், ஜனாதிபதியிடத்தில் கொடுத்த குற்றச்சாட்டில் என்ன சொல்லியிருக்கிறார் ? "இப்படி ஊரில் பேசப்படுகிறது ; இப்படி ஊரில் வதந்தி ; இப்படி பேசிக் கொள்ளுகிறார்கள்" என்றுதான் கூறியிருக்கிறார். எம்.ஜி.ஆர். பற்றி என்ன பேசுகிறார்கள் ? அருணா பற்றி என்ன பேசுகிறார்கள் ? என்னென்னமோ பேசிக் கொள்ளுகிறார்கள் என்றெல்லாம் சொல்லலாம். குறிப்பிட்ட குற்றச்சாட்டு என்ன ? நீங்கள் அன்று யார் மீது குற்றச்சாட்டுப் பட்டியல் கொடுத்தீர்களோ அவர்கள் இன்று உங்களுக்குத் தோழமைக் கட்சி. சத்தியவாணிமுத்து மீது குற்றப்பட்டியல் கொடுத்தீர்கள். இன்று உங்களுடைய தோழமைக் கட்சியில் பிரதான கட்சியாக உங்களிடையே இருந்து கொண்டிருக்கிறது.

திரு. ஆலடி அருணா : குற்றச்சாட்டைச் சொல்லும்போது அதை நிரூபிக்கின்ற வரையில்—

**'It is alleged—it is stated'**

என்று சொல்வதுதான் ஆங்கில மரபு. அந்த அடிப்படையில் குற்றச்சாட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வீராணம் ஏரிப் பிரச்சினையாக இருந்தாலும், வேறு எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் இந்த இந்த முறையில் என்று குற்றச்சாட்டுக்களைச் சொல்லி—

**'It is alleged—it is stated'**

என்று சொல்வதுதான் முறை, மரபு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மரபு உமக்குத்தான் தெரியாது ; எமக்குத் தெரியும். ஒரு கட்சியின் சார்பாக நின்று வாக்குகளைப் பெற்று அந்தக் கட்சியின் தொண்டர்களுடைய எல்லாச் சிரமங்களையும் ஏற்றுக்கொண்டு உறுப்பினராக ஆகிவிட்டு அந்த மரபை மீறி நடக்கிற உமக்கு மரபைப் பற்றி இவ்வளவு தூரம் தெரிந்திருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் அருணா "நான் ஒத்துக் கொள்கிறேன். இன்ன குற்றச்சாட்டு; இதிலே தவறு நடந்திருக்கிறது; நான் பொறுப்பேற்கிறேன்" என்று சொன்னவுடன் விசாரணை போட்டிருக்கிறோம். அதைப் போல் எம்.ஜி.ஆர். பொறுப்பேற்றுக் கொண்டு இன்னின்ன குற்றம் என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறாரா என்றால் சொல்லவில்லை. "சொல்லப்படுகிறது, கூறப்படுகிறது" என்றுதான் சொல்லியிருக்கிறார். அதற்கான பதிலை இந்த மன்றத்திலே வைத்து விட்டோம். அந்தப் பதிலை வைத்துக் கொண்டு உங்களுக்குத் தைரியம் இருந்தால் மீண்டும் விசாரியுங்கள். எம்.ஜி.ஆர். வரட்டும், அதைப் பற்றிப் பேசட்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையில் உள்ள ஒரே கட்சியிலுள்ள ஏழு, எட்டுப் பேர் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து திரும்பத் திரும்பப் பேசுவது எப்படி முறையாகும்?

This is not proper. As leader, you should take responsibility to control your members. You should speak or allow the particular member speaking to speak. You should not allow your members to raise the same point of order in your party.

திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னாலே இந்த மன்றத்திலே எங்கள் கட்சியைச் சேர்ந்த ஆலடி அருணா அவர்கள் நம்முடைய மாண்புமிகு ப.உ.ச. அவர்கள் மீது ஒரு குற்றச்சாட்டைக் கொடுத்து அதற்காகப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். ஆகவே, நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். உங்களுடைய கட்சித் தலைவர் அப்படி வந்து சொன்னாலும் அதை ஏற்றுக் கொண்டு விசாரணை செய்கிறேன் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுகொள்வதெல்லாம் கடந்த 1972-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ஆம் தேதி அன்று எங்களுடைய கட்சித் தலைவர் இந்த சட்ட மன்றத்தில் பேசியது பதிவேட்டில் இடம் பெறவில்லை. இங்கே அவர்கள் பேசிய பேச்சை மீண்டும் சட்ட மன்றத்திற்குக் கொடுத்தால், அந்தப் பேச்சில் எந்தெந்த ஊழல் குற்றச்சாட்டு என்று கொடுத்திருக்கிறது. விசாரணைக் கமிஷன் போட முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எம்.ஜி.ஆர். இந்த அவைக்கு வந்து ஆலடி அருணா நேற்று ஆண்மையோடு, துணிவோடு, தெளிவோடு பேசியது போல் குற்றச்சாட்டுக்களைச் சொல்லி அவைகளுக்குத் தான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று தைரியமாக சொல்வார்களானால் நாங்கள் அந்தக் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அவர்கள் குறிப்பிட்ட இன்னின்ன மந்திரிகள் மீது இன்னின்ன குற்றச்சாட்டுகளுக்கு நீதி விசாரணை செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம். (ஆரவாரம்.)



திரு. க. உரா. எட்மண்ட்: இரண்டு வாக்குறுதிகளை முதலமைச்சர் அவர்களிடமிருந்து பெறவேண்டும். எம்.ஜி.ஆர். அவர்கள் வந்து சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். எம்.ஜி.ஆர். வந்து இந்தச் சட்டமன்றத்திலே சொன்னால் அவரைச் சொல்லவிட்டு கொடுக்கிற குற்றச்சாட்டுக்களுக்கு விசாரணைக் கமிஷன் நியமிக்கத் தயாரா? இது ஒன்று.

இன்னொன்று எம்.ஜி. ஆருக்குப் பதிலாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே உள்ள நாங்கள் அந்தக் குற்றச்சாட்டுக்களைக் கொடுத்தால் (குறுக்கீடு)—எம்.ஜி.ஆர். கொடுத்தால் என்ன? எட்மண்ட் கொடுத்தால் என்ன? அருணா கொடுத்தால் என்ன? செழியன் கொடுத்தால் என்ன? பொறுப்புள்ள உறுப்பினர்கள் கொடுக்கிறோம். உங்களுக்கு எம்.ஜி.ஆர். இங்கே வர வேண்டுமென்பதிலே குறிக்கோள் இருக்கிறது என்று தெரிகிறது. நியாயமான குற்றச்சாட்டுக்களை அவர்கள் சார்பில் நாங்கள் கொடுத்தால் விசாரணைக் கமிஷன் அமைக்க முன் வருவீர்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆக, எம்.ஜி.ஆர். வந்தால், அவர் தவறுகளைச் சுட்டிக்காட்டினால், அந்தத் தவறுகள் அடிப்படையில் நீங்கள் விசாரணைக் கமிஷன் வைப்பீர்களா என்று ஆரம்பித்ததும் "நான் உடனே வைப்பேன்" என்று சொன்னதும், பின்வாங்கி "இல்லாவிட்டாலும் நாங்கள் கொடுத்தாலும் வைப்பீர்களா?" என்று கேட்கிறார். அதற்கு ஒரு முன் உதாரணமே ஆலடி அருணா அவர்கள் கொடுத்து, வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதிலே சந்தேகம் ஏற்படத் தேவையில்லை. எட்மண்ட்—உங்களுக்கெல்லாம் இருக்கும் தைரியம் உங்கள் தலைவருக்கு இல்லையே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த அவை எம்.ஜி.ஆர்.க்காக இல்லை, ஒரு தனிப்பட்ட உறுப்பினருக்காக இல்லை, முதல் அமைச்சருக்காக இல்லை, 235 உறுப்பினர்களுக்காகத்தான் இந்த அவை இருக்கிறது. திரு. சீனிவாசன் அவர்கள் நாற்பது நிமிடங்கள் பேசியாகி விட்டது. இன்னும் எட்டு உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். அவை முன்னவர் அவர்களும் பேசவேண்டியிருக்கிறது. எனவே இந்தப் பிரச்சினையை அப்படியே விட்டுவிட்டு மூன்று நிமிடங்களில் முடித்து விடுங்கள்.

திரு. பெ. சீனிவாசன்: நான் ஆரம்பித்த விவாதத்தை எங்கேயோ இழுத்துக் கொண்டுபோய் நீங்கள் இடையில் அறுத்து தனியாகப் பேசச் சொல்லியிருக்கிறீர்கள். பேரவையில் இல்லாத ஒருவரைப் பற்றி பேசக் கூடாது என்று தாங்கள் சொல்கிற மரபையொட்டி, நான் தவறாமல் எங்கள் தலைவரைப் பற்றி........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவராக இருந்தவர் சீனிவாசன் அவர்கள். பேரவையில் இல்லாதவர் என்றால் உறுப்பினராகவே இல்லாதவர் என்று பொருளா? இந்த அவைக்குள்ளே உட்காராதவர் என்று பொருளா? (கைதட்டல்).

திரு. பெ. சீனிவாசன் : உறுப்பினர் என்றால் அரூபமாக இருக்க முடியுமா ? பேரவையில் பிரஸண்டாக இல்லாதவரைப்பற்றி ஏன் பேச வேண்டும்.?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படியானால் நேற்றைய தினம் எல்லாம் ப.உ.ச. அவர்கள் பேரவையில் இல்லை. எவ்வளவு நேரம் பேசியிருக்கிறீர்கள்?

திரு. பெ. சீனிவாசன் : அவர் அமைச்சர், இங்கு தெரிவித்த குற்றச் சாட்டின் மீது பேசியிருக்கிறோம்.

நான் பேச ஆரம்பித்து இடையில் ஏற்பட்ட குறுக்கீடுகள் காரணமாக இவ்வளவு காலதாமதமாகிவிட்டது என்ற நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும். நான் தவறாமல் அவர்களைப் பற்றி பேசுகிறார்கள். அது தேவை இல்லை. எங்கள் தலைவர் எப்போது வரவேண்டுமோ அப்போது வருவார்கள். வரவேண்டிய சமயத்தில் வருவார்கள். முதலமைச்சர் அவர்களைப் பார்க்கத்தான் போகிறார்கள். கேலி கிண்டல் செய்கிறவர்கள் அப்போது செய்யட்டும், அப்போது இன்று கை தட்டுகிறவர்கள் எங்கே இருப்பார்களோ பார்ப்போம்.

பல உறுப்பினர்கள் : இங்கேதான் இருப்போம்.

திரு. பெ. சீனிவாசன் : அங்கு இருந்தால் இந்த நாட்டில் ஜனநாயகம் பிழைக்க முடியாது.

இந்தச் சட்டமன்றத் துறை சுதந்திரமாகச் செயல்படுகிற முறையில் பேரவைத் தலைவரின் நிர்வாகத்தின்கீழ் இத்துறை வரவேண்டும். இது ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பைத் தரக்கூடாது.

நமது சட்டசபை கூடுகிற நேரத்தில் பல பணியாளர்களை நியமிக்கிறார் கள். ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகளாக பேரவை கூடுகிற நாட் களில் வேலை பார்த்து வருபவர்கள் வேலையற்ற நிலையில் இருக்கிறார்கள். எனவே அரசாங்கம் வேலைக்கு ஆட்களை எடுக்கும்போது இப்படிப்பட்ட வர்களைக் கருத்தில் கொண்டு அவர்கள் பேரவையில் பெறுகிற பயிற்சியை, சர்வீஸை கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்களை எல்லாம் நிரந்தர மாக்க வேண்டும் என்று பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று ஸ்டேட் லெஜிஸ்லேச்சர் சார்பாகக் கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக் கையை நான் வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.



எனக்கு முன்பு பேசிய பல உறுப்பினர்களும் சட்ட மன்ற உறுப்பினர் களுக்கு அவர்கள் தங்குகின்ற விடுதிகளில் வேண்டிய பல வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதை நான் மறுபடியும் ஆணித்தரமாக வலியுறுத்தி, அவற்றை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்குள்ள உறுப்பினர்களுக்கு ரெயிலில் பிரயாணம் செய்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எப்படி ரயில்வேயில் பர்ஸ்ட் க்ளாஸ் பாஸ் கொடுத்திருக்கிறார்களோ, அதேபோல் பாஸ் கொடுத்தால் அவர்கள் பிரயாணம் செய்து பல பொதுத் தொண்டுகளை ஆற்ற உதவி கரமாக இருக்கும். ஆகவே, அதையும் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நும்கள் ப்ரீ ஆப் காஸ்ட் என்று கலைஞர் அவர்கள் சொன்னது நினைவிற்கு வருகிறது. அதையும் உடனடியாக அமல் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மெடிக்கல் எய்ட் டு லெஜிஸ்லேடர்ஸ், இப்போது மருத்துவ வசதி சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு மட்டும்தான் அளிக்கப்படுகிறது. அதை அவர் களது டிப்பென்டன்ஸ்க்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் அவர்களை நம்பி இருப்பவர்களுக்கும் இந்த வைத்திய வசதியைச் செய்து கொடுத்தால் உதவிகரமாக இருக்கும்.

வைத்திய வசதி என்று வரும்போது மதுரை போன்றயிடங்களில் பெரிய ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைக்காக "ஏ" கிளாஸ் என்று வைத்திருக் கிறார்கள். முன்பு அங்கு ஏ க்ளாஸ் என்பது இல்லாமல் இருந்தது. "பி" க்ளாஸ் என்று மட்டும் இருந்து அதற்குரிய வசதிகள் இருந்தன. இப்போது அங்கு சில வசதிகளை அதிகப்படுத்தி "ஏ" க்ளாஸ் என்று ஏற்படுத்தி நல்லமுறையில் வைத்திய வசதி அளிக்கப்படுகிறது. முன்பு "பி" க்ளாஸ் என்று இருந்தது. அதற்குத்தான் உறுப்பினர்கள் அருகதை உள்ளவர்களாக இருந்தார்கள். அதற்குரிய சலுகைகள் வழங்கப்பட்டு வந்தன. அதே சட்டம்தான் இப்போதும் நீடிக்கப்படு கிறது. எனவே உறுப்பினர்களுக்கு இப்போது "ஏ" க்ளாஸ் ரூம் கொடுக்கப்படுவதில்லை. "பி" க்ளாஸ் தான் கொடுக்கப்படுகிறது. ஆனால் செகண்ட் க்ளாஸ் ஆபீசர்கள் கூட, தாசில்தார், இன்ஸ்பெக்டர் ஆப் போலிஸ் போன்றவர்களுக்குக் கூட "ஏ" க்ளாஸ் வசதிகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் தங்கள் நேரத்தின் முழுப் பகுதியையும் பொது மக்களின் சேவைக்காக பயன்படுத்துகிற சட்டமன்ற உறுப்பினர் களுக்கு "பி" க்ளாஸ் தான் அளிக்கப்படுகிறது. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் "ஏ" க்ளாஸ் ரூம் கொடுக்கவேண்டும். அதற் குரிய வசதிகளும் செய்து கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். அதை அவர்களுக்கும் விஸ்தரிக்கவேண்டும்.

லௌஞ்ச் ரூமைப் பொறுத்தவரையில் பஞ்சாயத்தைப் போல் குறிப்பிட்ட எண்ணிக்கை உள்ள கவுன்சில், சட்டமேலவை உறுப்பினர்களுக்கு மிக அழகான ரூம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பல சௌகரியங்கள் இருக்கின்றன. ஆனால் அதிக எண்ணிக்கை கொண்ட சட்டசபை உறுப்பினர்களுக்கு உள்ள அவர்களது லௌஞ்ச் ரூமில் வசதி மிகக் குறைவாக இருக்கிறது. வயதான பெரியவர்களுக்கு அளிக்கப்பட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். அதேபோல் இங்கு வயதான பெரியவர்கள் இருக்கிறார்கள். இளைஞர்களும் இருக்கிறார்கள். ஆகவே இங்குள்ள உறுப்பினர்களுக்கு அதிகப்படியான வசதிகளைச் செய்து தந்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

உறுப்பினர்கள் விடுதியில் தங்கும்போது பல நேரங்களில் அவர்கள் சொந்தக் கார்களில் வருகிறார்கள். அந்தக் கார்களை நிறுத்த கார் ஷெட்ஸ் இல்லை. கார் ஷெட்களை ஏன் கட்டக்கூடாது? விஸ்தீர்ணமாக இடம் இருக்கிறது. எனவே பத்து பதினைந்து கார் ஷெட்களாவது கட்டித் தர வேண்டும்.

அடுத்தபடியாக, கான்டின் காப்பி ரொம்ப பரிதாப கரமான காப்பியாக இருக்கிறது. நான் சொல்லியிருக்கிறேன், வேண்டுமானால் கூடுதல் இருபது காசு வையுங்கள், நல்ல காப்பியாகக் கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். இப்போது கொடுக்கிற காப்பி வாந்தி எடுக்கிற நிலையில்தான் இருக்கிறது. எனவே மாண்புமிகு முன்னவர் அவர்கள் தனி கவனம் செலுத்தி நல்ல காப்பியாவது கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போதுதான் பேப்பர்கள் எல்லாம் பார்த்து அப்டுடேட்டாக வந்து அமைச்சர்களிடம் நல்ல பல கருத்துக்களைச் சொல்ல முடியும்.

சாப்பாடு பரவாயில்லை. நான் சொல்வது வெஜிடேரியன் சாப்பாடு. நான்வெஜிடேரியன் மீல்ஸ் பொறுத்த வரையில் என்னவென்று அதிகமாகத் தெரியவில்லை.

பின்னர், மாஜி துணைத் தலைவர் அவர்களைப் போன்றவர்கள் இளைஞர்களாக இருக்கிறார்கள். அவர்களைப் போன்று விளையாட்டுகளில் ஆர்வம் காட்டக்கூடிய பல இளைஞர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். எனவே ப்ளே கிரவுண்ட்ஸ் கொஞ்சம் வைத்தால் நல்லது. பாட்மெண்டன், வாலி பால், டென்னிகாய்ட் போன்றவைகள் விளையாட வசதி செய்து கொடுத்தால் அவை உடல் சிரமமில்லாத விளையாட்டுகளாக இருக்கும். அப்படி விளையாடுவதற்கு வசதி செய்து கொடுத்தால் உறுப்பினர்களிடையே ஒரு ப்ரதர்ஹுட் ஏற்பட வழி ஏற்படும். அவர்கள் நல்ல முறையில் பேசி ஒரு பாச உணர்வு ஏற்பட அது உறுதுணையாக இருக்கும்.

இங்கு வேலை செய்யக்கூடிய ஊழியர்களைப் பற்றி திரு. சீனிவாசன் அவர்கள் சொன்னார்கள். சட்டமன்றம் நடக்கும்போது பலர் வேலை செய்கிறார்கள். அவர்கள் டெம்பரரியாக வேலை செய்கிறார்கள். அவர்களது கோரிக்கையை கருணையோடு பரிசீலித்து அவர்களை நிரந்தரமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1975ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் தேதிய ஸண்டே ஸ்டாண்டர்ட் பத்திரிகையில் ஆந்திராவில் டெம்பரரியாக வேலை செய்பவர்களுக்கு **temporary workers working during Assembly Session,** அப்படி வேலை பார்ப்பவர்களுக்கு ஒரு மாதச் சம்பளம் போனஸ் ஆக வழங்கப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த பஞ்ச காலத்தில் விலைவாசி உயர்வினால், கிடைக்கிற சம்பளம் போதாமல் கஷ்டப்படுகிறவர்களுக்கு. அதிக வேலை செய்பவர்களுக்கு, ஆந்திர மாநிலத்தில் கொடுத்துள்ளதுபோல் ஒரு மாத போனஸ் கொடுத்து ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். **Promotional opportunity to Assembly Staff,** அதை ஸீனியாரிட்டி பேஸிஸில்—ஒன்றிரண்டு பேர்களை ஓவர்லுக் செய்த மாதிரி ரெப்ரசென்டேஷன் வந்தது—செய்யவேண்டும். அப்படி யாராவது பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களது கோரிக்கையையும் கருணையோடு பரிசீலனை செய்து நீதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12–00.)

அவர்களுக்கு கன்வேயன்ஸ் அலவன்ஸ் தரப்படுவதைப் பற்றி கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. செக்ஷன் ஆபீசர்களுக்கு $2\frac{1}{2}$ ரூபாய், ஜூனியர் அஸிஸ்டெண்டுகளுக்கு 2 ரூபாய், ரிகார்டு கிளார்க்குகளுக்கு 1.25 ரூபாய், 1 ரூபாய் என்ற நிலை இருக்கிறது. இதையும் கூட கூட்டித் தந்து அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த முறையில் ............

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, **On a point of order, Sir. Under Rule 235 of the Assembly Rules it is stated as follows. "If the Speaker is of opinion that a word or words has or have been used in debate which is or defamatory or indecent or unparliamentary or undignified".**

..........என்று 4 நிபந்தனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சிறிது நேரத்திற்கு முன்னால் பேசுகிற நேரத்தில் எங்கள் கட்சித் தலைவரவர்களைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லியிருக்கிறார்கள். "வகையற்றவர்கள், வக்கற்றவர்கள், திறமையற்றவர்கள், திராணியற்றவர்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய பாயிண்ட் ஆஃப் ஆர்டரெல்லாம் இந்த 4 வார்த்தைகளும் இண்டீசண்ட் அண்டு அன்டிக்னிஃபைட். இவைகளின் விளக்கத்திற்குள்ளே நான் போகவில்லை. **Though not indecent, I think it is undignified.** இந்த வார்த்தைகள் வருகிற காரணத்தினால் இந்த 4 வார்த்தைகளையும் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குவது பற்றி, பத்திரிகையில் வராமல் இருக்கும்படி துணை சபாநாயகர் அவர்கள் ஆணையிடுவார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, இந்த மன்றத்தில் பல வார்த்தைகளைப் பயன்படுத்திய நேரத்தில் இப்பேர்ப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது என்று ஆணையிட்டிருக்கிறீர்கள். அதே மாதிரியாக ஒரு நேரத்தில் நான் இந்த மன்றத்தில் "கோழை"

என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருந்தேன். அதற்காக உரிமைப் பிரச்சனை கொண்டு வரப்பட்டது. எதற்காகச் சொல்கிறேன் என்றால், "கோழை" என்ற வார்த்தை அவையினுடைய மரபை மீறக் கூடிய வார்த்தையாக இருக்கிறது என்று மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆகவே, இப்போது இந்த விவாதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "கோழை", "வகையற்றவர்கள்" என்று பேசுவது மிக மிக ஆட்சேபத்திற்குரிய ஒன்றாகும். (குறுக்கீடு) இல்லையென்றால் நாங்களும் சொல்கிறோம். ஆகவே திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு)

Sir, we strongly object to such expressions being used on the floor of the House and we demand that those words be expunged from the records. We would like to have a categorical answer.

அவர் சொன்னதை எக்ஸ்பஞ்ச் பண்ணமுடியாது போய்விட்டால் நாங்களும் அப்படிச் சொல்லவேண்டிய சூழ்நிலையை உருவாக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்கு . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படி Chair-ஐ பயமுறுத்தாதீர்கள். You leave it to me to my own Judgment.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவரவர்களே, உதாரணத்திற்கு இங்கே டிசம்பர் 2-ம் தேதி பேசிய பேச்சு சபைக் குறிப்பில்.........

MR. DEPUTY SPEAKER : That is a different thing.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அப்படியானால் அவர்கள் அத்தனை பேர்களும் கோழைகள், வக்கற்றவர்கள் என்று நாங்கள் சொல்ல வேண்டிய நிலை வரும். இந்த விஷயத்தில் திட்டவட்டமாக்

We demand. We are not making any request. We demand on the floor of the House the expunction of those undignified words.

Mr. Deputy Speaker : I think the words used are not undignified. Therefore there is no necessity for expunging those words.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவரவர்களே, அப்படியென்றால் நாங்கள் சொல்கிறோம். டிசம்பர் 2-ம் தேதி அன்று நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு இந்த அவையில் பொறுப்பாக இருந்த அந்த அங்கத்தினர்கள் அவர்கள் வக்கற்றவர்கள், அத்தனை பேர்களும் கோழைகள் என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

They are all a set of cowards.

Mr. K. Periyasamy: Mr. Speaker, Sir, my submission is, on a point of order.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஸ்ரீனிவாசன் அவர்களுடைய பாயிண்ட் ஆஃப் ஆர்டர் முடியட்டும். பிறகு நீங்கள் பேசுங்கள்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சரவர்கள் இங்கே சொல்லும்போது என்னுடைய டெலிபோன் பில்லைப் பற்றிச் சொன்னார்கள். நான் இதற்கு விளக்கம் சொல்லாமல் இருந்தால் பத்திரிகையில் வரும்போது கிளாரிங்காகத் தெரியும். என் அலுவலகம் டெபுடி ஸ்பீக்கர் அலுவலகம் என்றாலும், நான் ஸ்பீக்கர் இன்சார்ஜாக அந்தப் பொறுப்பில் இருந்தேன். அநேகமாக ஒரு 20, 25 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய சொந்த டெலிபோனாக இதைப் பயன்படுத்தி வந்தார்கள். ஆகவே இதைத் தடுப்பதற்கு வழி இல்லாமல் இருந்தது. நண்பர் திரு. வீராசாமி அவர்களுக்கு இது தெளிவாகத் தெரியும். அவர்கள் நிரம்பப் பயன்படுத்தினார்கள். எத்தனை பேர்கள் பயன்படுத்தினார்கள் என்பதும் அவருக்கும் தெரியும். நானும் என்னுடைய சொந்த உபயோகத்திற்கு அதிகம் பயன்படுத்தியிருக்கிறேன். ரெகவரி போட்டால் கட்டத் தயாராக இருக்கிறேன். அதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன. என்குயரி நடக்கிறது. கட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன் என்ற விளக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அப்படியே பார்த்தாலும் இது ஆபீஸ் நம்பர். அவர் வீட்டு நம்பருக்கு எவ்வளவு ஆகி இருக்கிறது என்று பார்க்க வேண்டும். திரு. எட்மண்ட் அவர்களுக்கு ஆயிரம் ரூபாய்க்கு ஆகியிருக்கிறது. அவர்கள் வீட்டு டெலிபோனுக்கு 10 ஆயிரம் ரூபாய் ஆகியிருக்கிறது.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, அன் அபிஷியல் கால்ஸ் அதில் இருக்கலாம். இருந்தால் அதையும் கட்டத் தயாராக இருக்கிறேன். அதேமுறையில் இந்த உணர்வோடு, பொதுப் பணம் விரயம் ஆகக் கூடாதென்று எல்லா அமைச்சர்களும் நடந்து கொள்ளவேண்டும். தங்கள் வீட்டு போன் நம்பரில் பேசப்பட்ட நம்பர் விவரங்கள் என்ன? யார் யாருக்குப் பேசி இருக்கிறார்கள் என்ற விவரங்களை அவர்கள் சொல்வதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். அவர்களுக்குச் சரியான எதிர்க்கட்சியாகச் செயல்படத் தெரியவில்லை. நேற்று முன் தினம் இங்கே மினிஸ்டர்ஸ் டிமாண்ட் நடந்தது. பல பேர்கள் அன்று பேசினார்கள். ஆனால் திரு. சீனிவாசன் அவர்கள் வேறு விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் நேற்று முன் தினம் பேசியிருக்கவேண்டும். கேட்டிருக்க வேண்டும். யார் யாருக்கு எவ்வளவு டெலிபோன் செலவு ஆகியிருக்கிறது, மந்திரிகள் சுற்றுப் பிரயாணச் செலவு எவ்வளவு என்று கேட்டு இருக்க வேண்டும். யாரும் பேசவில்லை.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, இட் ஈஸ் அன் அக்யுசேஷன். தவறாக முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் எதற்காக மைக் சுவிச் செய்பவரைப் பார்க்க வேண்டும். பேச வேண்டுமென்றால் தங்களைக் கேட்கவேண்டும்.

**Mr. Deputy Speaker: Mr. Ponnumalai, This is not proper.**

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, திரு. பொன்னுமலை அவர்கள் அங்கே வேலை செய்வதாக எனக்குக் கவனம் இல்லை. அவர் சட்டசபையில் அங்கத்தினராக இருப்பதாகத்தான் நான் நினைக்கிறேன்.

தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நேற்றைக்கு முன் தினம் இதைச் சொல்லியிருக்கலாம். அல்லது நான் பதவியிலிருந்து இறங்கும்போது சொல்லியிருக்கலாம். துருப்புச் சீட்டை இப்போது பயன் படுத்தியிருக்கத் தேவையில்லை. அவர்களுக்கு இவ்வளவு ஆத்திரம் வர வேண்டியதில்லை. நான் தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன். . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, துருப்புச் சீட்டைப் பயன் படுத்த வேண்டிய நேரத்தில் பயன்படுத்த வேண்டும். தேவையில்லாமல் பயன்படுத்தினால் துருப்புச் சீட்டிற்குப் பயன் இல்லாமல் போகும்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் சீட்டாட்டம் அருமையாக ஆடுவார்கள். ஆட்டம் முடிந்த பிறகு. . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, சீட்டு ஆடுவது தவறு அல்ல. அது அண்ணா அவர்களுடைய பொழுதுபோக்குகளில் ஒன்று.

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, நான் 'தவறு என்று சொல்லவில்லை.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களின் தலைவருக்கும் துருப்புச்சீட்டை எப்படிப் பயன்படுத்துவது என்பது தெரியும்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, திரு. காமாட்சி அவர்களின் சிரமமான கண்டுபிடிப்பிற்கு நன்றி. ஆட்டம் முடிந்ததற்குப் பின்னால் துருப்புச் சீட்டைப் பயன்படுத்துகிறமாதிரி அரசியலில் நிலைமை வந்திருக்கிறது.

திரு. கு. பெரியசாமி: தலைவரவர்களே, இப்போது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்ன வார்த்தைகளை சட்டசபைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று சொன்னார்கள். நான் மிகுந்த வேதனையோடு சொல்லிக் கொள்கிறேன். பண்பற்ற வார்த்தைகளை நான் நேற்று என் காதால் கேட்டேன்.



டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் அமைச்சர் மாண்புமிகு திரு. மன்னை நாராயணசாமி சொன்னதைச் சொல்கிறார்.

திரு. கு. பெரியசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு பெண் உறுப்பினர்கள் மன்னிக்கவேண்டும். ஒரு உறுப்பினர் இந்தப் பக்கத்திலிருந்து கொண்டு. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைப்பற்றிச் சொல்ல வேண்டாம்.

திரு. கு. பெரியசாமி: தலைவரவர்களே, வேண்டாமென்று சொல்கிறீர்களா? சகிக்க முடியாத வார்த்தைகளைப் பேசினார்கள். உங்களுடைய ரிகார்டுகளில். . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படி பேசிக் கொண்டிருப்பது அவரவர்கள் சாமர்த்தியம். மைக்கில் பேசுவதைத்தான் நான் கவனிக்க வேண்டும். மைக்கில் பேசாததையெல்லாம் நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நோ பாயிண்ட் ஆஃப் ஆர்டர் திரு. ஏ. சுப்பிரமணியம், நீங்கள் 5 நிமிஷத்தில் பேசி முடியுங்கள்.

* திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, எனக்கு ஐந்து நிமிடங்கள் கொடுத்தால் எதைப் பேச முடியும், எதையும் பேச முடியாது.

ஐந்து நிமிடங்கள் பல்லவியை ஆரம்பிப்பதற்குள் முடிந்துவிடும். முதலாவதாக, லெஜிஸ்லேச்சர் செக்ரடேரியட்டானது தனியாக எக்சிக்யூடிவ்னுடைய அதிகாரத்திற்கு உட்படாத வகையில் இருக்க வேண்டுமென்று ஏற்கெனவே இங்கே தெரிவிக்கப்பட்ட கோரிக்கையை நான் வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். அதிலேயும் குறிப்பாக, இப்போது இங்கே சற்று முன்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திலிருந்து இது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது, அவசியமானது என்று தெரியும். ஆகவே, இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சட்டசபை ஊழியர்கள், செயலாளர்கள் அனைவரும் சட்டமன்றத் தலைவர் அவர்களின் அதிகாரத்தின் கீழ் முழுமையாக வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வேன்.

அடுத்தபடியாக, ஒத்திவைப்புத் தீர்மானங்கள் சட்ட மன்றத்திலே அடிக்கடி கொடுக்கப்படுகின்றன. ஆனால் நம் சட்ட மன்றத்தில் ஒரு முறை கூட ஒத்திவைப்புத் தீர்மானம் அனுமதிக்கப்பட்ட வரலாறு கிடையாது. நாடாளுமன்றத்தில் முக்கியமான விஷயங்களாக இருந்தால் ஒத்திவைப்புத் தீர்மானங்களை அனுமதிக்கிறார்கள்.

ஒரு சப்மிஷன்; நான் கேட்டுக் கொள்வது. . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இரண்டாம் தேதி பேசி முடித்து ஆகி விட்டது. வேறு ஏதாவது பேசுங்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : குற்றச்சாட்டாக சொல்லவில்லை. நல்ல மரபை உருவாக்க நீங்கள் முக்கியமான விஷயங்களில் அட்ஜர்ன்மெண்ட் மோஷன் அனுமதிக்காமல் இருப்பது என்ற மரபைக் கொள்ளாமல் சில முக்கியமான விஷயங்களில் நேரத்தை ஒதுக்கி வைத்து ½ மணி, ஒரு மணி விவாதிக்க வேண்டிய விஷயமாக அனுமதிக்க வேண்டுமென்ற மரபை உண்டாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

அதேபோன்று கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு காலவரையறை நிர்ணயிப்பது மிக அவசியம் ஆகிறது என்று வலியுறுத்திக் கூறுவேன்.

பப்ளிக் அண்டர்டேகிங்ஸ் கமிட்டியில் நான் உறுப்பினராக இருந்த போது ஆந்திர மாநிலத்திலிருந்து பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டி இங்கு வந்தபோது அந்தக் கமிட்டி பல நாட்கள் நடக்கிறது, ஸ்டாண்டிங் கமிட்டி போல கூடி விவாதிக்கிறது என்றார்கள். அதேபோன்று நம்முடைய பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டி போன்றவைகள் அதிக நாட்கள் கூடி ஸ்டாண்டிங் கமிட்டிபோல் இருந்து செயல்பட்டால் அதிகப் பயன் உள்ள வகையில் செயல் பட முடியும் என்று கருதுகிறேன்.

அடுத்ததாக, லெஜிஸ்லேசர் லைப்ரரிக்கு கொஞ்சம் கூட இடம் போத வில்லை. இந்த லைப்ரரியைவசதியான இடத்திற்கு மாற்ற வேண்டுமென்றும் ரெபரன்ஸ் ரூமில் உட்கார்ந்து படிக்க வசதி செய்து தர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்வேன்.

லாபியும், லவுஞ்சும் மேல் அவையில் வசதியாக இருக்கின்றன. இங்கே வசதி கிடையாது. லாபி, லவுஞ்ச் போன்றவற்றை வசதியுடையன வாக இங்கே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.

அடுத்ததாக, இந்தச் சட்ட மன்ற விடுதி பொறுத்த வரையில் ஓட்டல் போல இருக்கிறதே தவிர சட்ட மன்ற உறுப்பினர்கள் பணியாற்றி கடமை செய்யக் கூடியதாக இல்லை. ஏதோ பெரிய சுழல் மாடி ஓட்டல் கட்டப் போவதாகச் சொல்லப்பட்டது. இதை இம்மாதிரி ஓட்டலாக மாற்றிவிட்டு சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு மற்ற மாநிலங்களில் கட்டி இருப்பது போல் அவர்களுக்கு ப்ரைவசி இருக்க வேண்டும், அமைதி இருக்க வேண்டும், அதற்கான வகையில் கட்டிடம் கட்ட வேண்டும்.

தொலைபேசி உண்மையிலேயே தொல்லைபேசியாக இருக்கின்றது. சட்டமன்ற விடுதியில் தொல்லைபேசியாக இருக்கிறது. இந்த நிலைமை மாற வேண்டும். அங்கே மெய்ன்டெனன்ஸ் வைத்து இருக்கிறார்கள். பொதுவாக டெலிபோன் இலாகா எப்படி இருக்கின்றது என்று தெரியும்.



இந்தக் குறை அங்கேயும் வருகிறது. மிகப் பெரும்பாலான நேரத்தில் தொலைபேசியில் பேச முடியவில்லை. அறையிலிருந்து பேச முடியாமல் அலுவலகத்திலிருந்து பேசலாமென்றால் அங்கேயும் பேச முடிவது இல்லை.

ஹவுஸ் கமிட்டி எதற்கு இருக்கின்றது என்று புரியவில்லை. தாங்கள் அதற்கு தலைவர். அதற்கு ஒரு அதிகாரமும் இருக்கிறதாகத் தெரிய வில்லை. கேட்கிறார்கள், தீர்மானம் போடுகிறார்கள். தீர்மானம் ஒன்று கூட நிறைவேற்றப்படுவது கிடையாது. சட்ட மன்ற இலாகா எப்படித் தனித்தன்மையாக இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணம். ஹவுஸ் கமிட்டியுடைய உத்தரவுகள் நிறைவேற்றப்படுவது இல்லை என்றால் இந்தக் கமிட்டி ஆர்னமெண்டல் கமிட்டியாக இருக்கும்.

இன்னொன்று, முன்னே எல்லாம் அசெம்பளி விடுதியில் தமிழ் டைப்ரைட்டர் ஒன்று இருக்கும். அதற்கு ஒரு டைபிஸ்ட் ஒதுக்கி இருந் தார்கள். இப்போது இல்லை. ஏதாவது அடித்துக் கொள்ள வேண்டி யிருந்தால், ஏதாவது தயார் பண்ண வேண்டி இருந்தால் இன்று வழி இல்லை. ஆங்கிலத்தில்தான் முடியும். ஏற்கெனவே இருந்த வசதிகள் கூட குறைக்கப்படுகிறது என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்ததாக, உறுப்பினர்களுக்கு பல வசதிகள் பற்றிச் சொன்னார் கள். என்னைப் பொறுத்தவரையில் தொலைபேசி வசதியும் அஞ்சல் வசதியும் இலவசமாக வேண்டும். க்ளெரிகல் அசிஸ்டென்ஸ் வேண்டும். இன்னொன்று, இப்போது விடுதியில் தங்குகிறவர்களுக்கு தொலைபேசி வசதி இருக்கிறது. ஆனால் இங்கே நகரத்தில் வாழ்கிற உறுப்பினர்களுக்கு இந்த வாய்ப்பு இல்லை. இலவசமாகப் பேசிக்கொள்ளமுடியாது. அவர்களுக்கு ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விடுதியில் இருக்கின்ற அலுவலகங்களில் தொலைபேசி வசதி செய்து தருவதாக சென்ற ஆண்டு சொல்லப்பட்டது. ஆனால் இன்னும் செய்ய வில்லை. இதனைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

அடுத்ததாக, ஸ்டாப் பொறுத்தவரையில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஸ்டாப்களுக்குக் பதவி உயர்வு கிடையாது. இவர்கள் என்ன பாவம் செய்தார்கள். மாற்றம் தேவை. வாட்ச் அண்ட் வார்ட் ஆக இருந்தாலும் ஸ்டாப் ஆக இருந்தாலும் மற்றவர்களுக்கு இருக்கின்ற வாய்ப்பு இல்லை. ப்ரமோஷன் இல்லை. உதாரணமாக, சட்ட மன்ற விடுதியில் கவுண்டர் கிளார்க்குள் இருக்கிறார்கள். அவர்கள் பதவி உயர்வுக்கு வசதி செய்து செலக்ஷன் க்ரேட் ஏற்படுத்தி பதவி உயர்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

டெம்பரரி ப்யூன்களாக 5, 6 ஆண்டுகளாக இருக்கிறார்கள். என்ன பாவம் செய்தார்கள் ? நிரந்தரமாக டெம்பரரியாக இருப்பதை விட அவர்கள் பதவியை நிரந்தரம் செய்ய வழி செய்ய வேண்டும்.

ப்யூன்களுக்கு டெய்லி அலவன்ஸில் மேல் அவைக்கும் சட்ட மன்றத் திற்கும் பாரபட்சம் இருக்கின்றதாகத் தெரிகிறது. மேல் அவையில், ரூ. 7–30 கொடுப்பதாகவும் இங்கே ரூ. 6–30 கொடுப்பதாகவும் தகவல்

வருகிறது. அது உண்மையாக இருந்தால், இன்னும் சொல்லப்போனால் சட்டப் பேரவை பியூனுக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டும். இந்த ஏற்றத் தாழ்வை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன். விடுமுறை நாட்களுக்கு ஊதியம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

சட்டமன்ற ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் பெண்டாட்டி, குழந்தைகள் இருக்கின்றன. குடி இருக்க குடி இருப்பு வசதி தொலைவிலிருந்து வருவதாக இருந்தால் செய்து கொடுக்க வேண்டும். போலீஸ்காரர்களைப்போல் வேலை செய்ய வேண்டி இருக்கிறது. குடி இருப்பு வசதி வேண்டும்.

கடைசியாக ஒன்று சொல்லிக்கொள்வேன். மேல் சபை உறுப்பினர் வெங்கா அவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்திற்குப் பிறகு சபாநாயகர் அவர்களும் மேல் அவைத் தலைவர் அவர்களும் கூடிக் கலந்து பேசி தக்க ஏற்பாடுகள் செய்யப் போவதாகச் சொன்னார்கள். இரண்டு பேரும் வந்தார்கள். புகைப்படம் எடுக்கப்பட்டது. பின்னால் பல நாட்கள் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. ஒன்றும் நடக்கவில்லை. சட்ட மன்ற விடுதியைப்பற்றி என்ன குறைபாடுகள் சொன்னாலும் அவை அகற்றப் படாத நிலை இருக்கின்றது. இதை மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்வேன்.

இன்னொரு குறை சொல்லிக் கொள்வேன். சட்ட மன்ற உறுப்பினர்களுக்காக விடப்படுகிற பேருந்துகளில் ஓட்டுனர்கள், நடத்துனர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு கலெக்ஷன் பாட்டா குறைவு. ஏன் என்று சொன்னால் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு பாஸ் இருக்கிறது. மற்றவர்கள் கொஞ்சம்தான் பயணம் செய்கிறார்கள். அதனால் இங்கே சட்டமன்றத்திற்கு பஸ் ஓட்டுகின்ற ஓட்டுனருக்கும் நடத்துனருக்கும் பாட்டாவில் ஏற்படுகின்ற குறைவை ஈடு கட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்ட மன்ற மானியத்தின் பேரில் என்னுடைய சிலகருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே, சட்ட மன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பு பெற்று இருக்கின்ற நாங்கள் இப்போது வெளியிலே சில நேரங்களில் பேசுவதற்கு எங்களுடைய நேரத்தை 10 நிமிடம் கூட குறைத்துக் கொண்டு பேச முடியவில்லை. அப்படிப் பழக்கப்பட்டு விட்டோம். எங்களுக்கு 10 நிமிடத்திற்கு மேல் பேச அனுமதியுங்கள்.

இங்கே சட்ட மன்ற நாட்களை அதிகப்படுத்தி, பேசுகின்ற உறுப்பினர்களுக்கு பேசுவதற்கான வாய்ப்புக்களை அதிகப்படுத்தி அவர்கள் சொல்கிற கருத்துக்களை அதிகமாக ஏற்றுக்கொள்கிற விதத்தில் சட்ட மன்றம் கூடுகிற நாட்களை கொஞ்சம் அதிகப்படுத்தினால் நல்லது என்று நினைக்கிறேன்.



சில நேரங்களில் நிறையக் கேள்விகள் கேட்கிறோம். இந்தக் கேள்விகள் சாதாரணமாக சின்னக் காரணங்களுக்காக திருப்பி அனுப்பப்படுகின்றன. சில நேரங்களில் கைக்குக் கூட கிடைக்காமல் போய் விட்டால் திருப்பிக் கேட்க வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது. ஆகவே, பொதுவாக கேள்விகள் வருகின்றபோது அதிலே தேதி கூட இல்லை என்ற காரணத்திற்காக, சிறு தவறுகள் இருந்தாலும் அவைகளைத் திருப்பி அனுப்பாத முறையில் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுடைய வசதிகளைப்பற்றி இங்கே பேசப்படுகிறது என்றால், மற்ற நாட்களில் எல்லாம் நாட்டினுடைய வசதியைப்பற்றிப் பேசுகின்ற நாம் இந்த ஒரு நாள் மட்டும் அப்படிப் பேசுவதில் தவறு இல்லை. பொதுமக்களும் தவறாகப் புரிந்துகொள்ள மாட்டார்கள்.

இங்கே எதிர்க்கட்சிகளுக்கு ஒரு அறை ஒதுக்கியிருக்கிறார்கள். மேலவை உறுப்பினர்களுக்கு ஒரு அழகான அறை வைத்திருக்கிறார்கள். இங்கே, 235 பேர்கள் இருக்கின்ற சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கியிருக்கிற அறையில் 10 பேர்கள் கூட உட்காருவதற்கு வசதி இல்லை. சாதாரணமாக, என்னைப்போன்றவர்களைக் காண வருகின்ற தொகுதி மக்களுக்கு இடவசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

அது மட்டுமல்ல; அங்கே மைக் கூட இப்போது வேலை செய்யவில்லை. சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கியிருக்கிற அறையில் மைக் வேலை செய்யவில்லை. இந்தக் குறை நீக்கப்பட வேண்டும். இது ஒரு சிறு குறைதான். உடனடியாகப் போக்கக்கூடிய குறைதான்.

காலையில் கேள்வி நேரத்தின்போது தவறாமல் வந்து விட வேண்டுமென்ற எண்ணத்தில் சில வேளைகளில் சிற்றுண்டி கூட அருந்தாமல் வந்து விடுகிறோம். ஆகையால் இங்கே பலகாரங்கள், காப்பி போன்றவை வழங்குவதற்கு—இனமாக அல்ல, பணத்திற்கு—ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

குறிப்பாக சட்ட மன்றத்தில் விவாதிக்கப்படும் விஷயங்களை "டேப் ரிக்கார்டு" செய்யும் முறை இருந்தால் நல்லதாக இருக்கும். இப்போது நடவடிக்கைக் குறிப்பு இருக்கிறது. இருந்தாலும் டேப் ரிக்கார்டு இருந்தால் பொது மக்களுக்கும் தெரிந்து கொள்ள வசதியாக இருக்கும். ஏனென்றால் ரேடியோவில் மிகக் குறைந்த நேரம்தான் சட்ட மன்ற நடவடிக்கைச் செய்திகளை ஒலிபரப்புகிறார்கள். ஒரு மணி நேரமாவது ஒலிபரப்பினால் தான் யார் யார் என்னென்ன சொன்னார்கள் என்பது பொது மக்களுக்குத் தெரியும். அதற்கு டேப் ரிக்கார்ட் வசதி இருந்தால்தான் நல்லதாக இருக்கும். இப்போது 5 நிமிடங்கள்தான் ரேடியோவில் ஒலி பரப்புகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 10 நிமிடம் வைக்கிறார்கள்.

திரு. கே. எ. வகாப் : 10 நிமிடம் வைத்தால் கூட போதாது எல்லா விஷயங்களையும் டேப் ரிக்கார்டில் பதிவு செய்யாவிட்டாலும் சில முக்கியஅம்சங்களில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், தலைவர்கள் கேள்விகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர், மற்ற அமைச்சர்கள் அளிக்கும் விளக்கங்களைப் பதிவு செய்து ஒலிபரப்பினால் பொது மக்கள் அதைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வசதியாக இருக்கும். தொகுதி மக்கள் எல்லாம் இங்கே வந்து கேட்பதற்கு பாஸ் கூட சரியாகக் கொடுக்க முடியாது. அதனால் தொகுதி மக்களுக்கு இங்கு வந்து பார்க்க வாய்ப்பு இல்லா விட்டாலும் ரேடியோவில் கேட்டுத் தெரிந்து கொள்வதற்காவது வாய்ப்பு இருக்கும்.

சட்ட மன்ற விடுதியைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஒரு சில குறைபாடுகள் அங்கே இருந்தாலும் செய்யப்பட்டிடிருக்கிற நல்ல காரியங்களைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள் அடிக்கடி எடுத்துச் சொல்லி வந்த சில குறைபாடுகளை அண்மையில் நிவர்த்தி செய்து இருக்கிறார்கள். முன்பு இருந்ததை விட இப்போது சில மாற்றங்களைச் செய்திருக்கிறார்கள். முன்பிருந்ததைப்போன்ற பெருவாரியான மகாஜன கூட்டம் இப்போது இல்லை ; குறைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பாராட்டுகிறேன் ; அதுகுறித்து மகிழ்ச்சியடைகிறேன். வேறு சில காரியங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சில சிறு குறைகள் எல்லாம் இருக்கின்றன. தொலைபேசி வேலை செய்யும் முறையைப்பற்றி எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அது உண்மை. தொலைபேசியில் இப்போது இருக்கிற இந்தக் குறைபாடு போக்கப்படுவதற்கு சட்ட மன்றத்தில் சொன்னால், அந்த போர்டைப் பெரிதாக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்.

நாங்கள் டெலிபோன் பண்ணினால் அதற்கான பணத்தை உடனே கொடுக்கிறோம். ஆனால், பணம் கொடுத்த பிறகும் பின்னால் பணம் கட்ட வேண்டுமென்று பில் வருகிறது. இப்படிப்பட்ட தவறுகள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

உறுப்பினர்களுக்கு பாஸ் வழங்குவது பற்றிச்சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் அதைக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. வெட்டுத் தீர்மானத்திலே பாதி. பேருக்கு மேல் இதுபற்றித்தான் கொடுத்திருக்கிறார்கள். அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஸ் பாஸைப் பொறுத்தவரையில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் இங்கே இல்லாவிட்டாலும் (குறுக்கீடு—பின் பக்கம் இருக்கிறார்கள்) அவர்கள் இங்கே இருக்கிறார்கள். பெரியார் போக்குவரத்தில் நாங்கள் ஏறினால் ஏற்றிக்கொள்ள மறுக்கிறார்கள். எங்களுக்கு இன்னும் உத்தரவு வரவில்லை என்று சொல்கிறார்கள். உத்தரவு வராததால் பாஸ் செல்லாது என்று கண்டக்டர் கூறுகிறார்.



"ஏர் போர்ட்டிலிருந்து" வருவதற்கு ஒரு பஸ் விடுகிறார்கள். நான் ஒரு நாள் அதில் வந்தேன். வரும்போது 5 ரூபாய் கொடுக்கவேண்டியிருந்தது. பாஸ் உள்ளவர்களை ஏற்றிக்கொள்ள வேண்டுமென்று அவர்களுக்கும் உத்தரவு வரவில்லை என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட சிறு விஷயங்களில் நாங்கள் கண்ணியக்குறைவாக நடத்தப்படுகிறோம். பாஸ் கொடுத்தும் அதைப் பயன்படுத்த முடியவில்லை. கொடுக்கப்பட்ட சலுகையை அனுபவிக்க முடியவில்லை. எம்.பி–க்களுக்கு இரயிலில் இருக்கிற உபசரணையைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. அவர்களுக்கு அங்கே இராஜ உபசரணை நடக்கிறது. அந்த அளவுக்கு உபசரணைகளை நாங்கள் எதிர்ப்பார்க்கவில்லை. மரியாதையோடு நடத்துகின்ற முறை இருந்தால் போதும். நாங்கள் பாஸை வைத்துக்கொண்டு பஸ்ஸில் ஏறிய பின்னால், 50 பேர்களுக்கு முன்னால் வைத்து இந்தப் பாஸ் செல்லாது. உங்களை ஏற்றிக்கொள்ள முடியாது என்று சொல்லும்போது எங்களுக்கு மிகவும் அவமானமாக இருக்கிறது.

நான் ஒருமுறை செல்லும்போது பாஸ் செல்லாது என்று சொன்னார்கள். அதனால் நான் பணம் கொடுத்தேன். பணமும் வாங்கிக்கொள்ள மாட்டேன் என்று சொல்லிவிட்டார். பணமும் வாங்க மாட்டேன், இடமும் கிடையாது என்று சொல்லிவிட்டார். அதற்குப் பின்னால் அங்கே இருந்த பிரயாணிகளில் ஒருவர், "ஒரு சட்ட மன்ற உறுப்பினர் சொல்கிறாரே, அதை நம்பக் கூடாதா, ஏன் ஏற்றிக்கொள்ளக் கூடாது" என்று கேட்டார். இப்படிப்பட்ட சிக்கலான சூழ்நிலை எல்லாம் இருக்கிறது. இந்தக் குறைபாடுகள் இருக்கக் கூடாது.

சட்டமன்ற மேலவையில் உறுப்பினர்கள் கையெழுத்துப் போடும் பழக்கம் இல்லை. மேலவைத் தலைவர், உறுப்பினர்களின் தலையைப் பார்த்து எண்ணிக்கை வைத்துக் கொள்கிறார். அப்படிப்பட்ட கௌரவத்தை எங்களுக்கும் கொடுக்கவேண்டும். 4 நாள், 5 நாள் கழிந்த பிறகு, அன்றைக்கு வரவில்லையே என்று கேட்கும்போது, இப்படிப்பட்ட தவறு நடக்கும்போது கையெழுத்துப் போட தவறிவிட்டது என்று சொல்வது மிகவும் சிரமமாக இருக்கிறது.

இங்கே வேலை செய்கின்ற ஊழியர்களுக்கு அதிக ஊதியம் கொடுக்க வேண்டுமென்பதில் எந்தவிதமான தடையும் இல்லை. ஒருமாத போனஸ் தரலாம் என்று திரு. கே.டி.கே. அவர்கள் சொன்னார்கள். அதை நானும் ஆமோதிக்கிறேன். "வாச் அண்ட் வார்டு" களுக்கும் நல்ல முறையில் சலுகைகள் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. முனுஆதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,........

திரு. கோவை செழியன் : திரு. வகாப் அவர்கள் பஸ் பாஸ் பற்றிக் குறிப்பிட்டார்கள். ட்ரான்ஸ்போர்ட் மினிஸ்டர் இங்கே இருக்கிறார்கள். அதற்கு என்ன பதில் சொல்கிறார்கள் ?

திரு. முனு ஆதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டமன்ற மானியக் கோரிக்கையில் என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

முதலில், நான் பேசுவதற்கு முன்னால் தயவு செய்து முதலமைச்சர் அவர்கள் கொஞ்சம் கோபத்தைத் தணித்துக் கொண்டு, நாங்கள் கொடுக்கின்ற கோரிக்கைகளை கருணையோடு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். நான் கேட்பது எனக்கு மட்டுமல்ல ; சட்ட மன்றத்தில் இருக்கிற எல்லா உறுப்பினர்களுக்கும் சேர்த்துத்தான் கேட்கிறேன். அதனால் முனு ஆதி கேட்கிறானே என்று நினைக்க வேண்டாம்.

இரயில் பாஸ் கொடுக்க வேண்டுமென்று சென்ற ஆண்டு சொன்னோம். தருவதாக வாக்குறுதி தந்தார்கள். அடுத்த முறை நாமெல்லோரும் வருகிறோமோ இல்லையோ என்பது வேறு விஷயம். எல்லோரும் என்று சொன்னால்தான் உங்களுக்கு நிம்மதி ; இல்லாவிட்டால் என் மீது கோபப்படுவீர்கள். இரயிலில் "ப்ரீயாக" இத்தனை கிலோ மீட்டர் போகலாம் என்று சில மாநிலங்களில் வைத்திருக்கிறார்கள். அதேமாதிரி நம்முடைய மாநிலத்திலும் தரவேண்டும். அதைப்போலவே ஃப்ரீ ஃபோன் வசதியும் செய்துதர வேண்டும்.

இந்த மானியத்திற்கு 49 இலட்சம் ரூபாய்தான் கேட்டிருக்கிறார்கள். சுமார் 510 கோடி ரூபாய் பட்ஜெட்டில் இந்த 49 இலட்சம் எந்த மூலைக்கு ? இன்னும் கொஞ்சம் தொகையை அதிகமாக ஒதுக்க, உறுப்பினர்களுக்கு சில வசதிகளைச் செய்துதர வேண்டும்.

டெலிபோன் வசதி என்று சொல்லும்போது, ஒரு மாதத்திற்கு இத்தனை "கால்", அல்லது ஒரு வருஷத்திற்கு இத்தனை "கால்" என்று கொடுத்து விட்டால் கூட ஓரளவு வசதியாக இருக்கும்.

ஒரு தொகுதியினுடைய தலைநகரில் எம்.எல்.ஏ.க்கு என்று ஒரு ஆபீஸ் வைக்க வேண்டும். அதில் டெலிபோன் வசதி இருக்க வேண்டும். ஒரு டைப்பிஸ்ட், ஒரு கிளார்க் - இவர்கள் இருக்க வேண்டும். குறைந்தது இந்த வசதிகளாவது இருக்க வேண்டும். எந்த எம்.எல்.ஏ. தொகுதியாக இருந்தாலும் பரவாயில்லை. இப்போது இருப்பவர்கள் போனால் வேறு யார் வந்தாலும் அதை அனுபவித்துக் கொண்டு போகட்டும். ஆபீஸ் நிரந்தரமாக இருக்கவேண்டும். அப்போதுதான் தொகுதி வேலைகளைச் சரியாகச் செய்ய முடியும. யார் வந்தாலும் போனாலும் பரவாயில்லை. ஆபீஸ் நிரந்தரமாக இருக்கவேண்டும் (குறுக்கீடு) ஸ்டெனோ ஆணா, பெண்ணா என்று கேட்கிறார்கள். அது எம்.எல்.ஏ. யினுடைய சாயிசைப் பொறுத்தது. யாரை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளட்டும். அவரவர் பருவத்திற்கும் உருவத்திற்கும் ஏற்ற முறையில் யாரை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளட்டும். அல்லது முதலமைச்சர் ஆண்களைத்தான் வைத்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவு போட்டால் ஆண்களையே வைத்துக்கொள்ளலாம்.



வெளி ஊர்களுக்குப் போனால் டி.பி.-யில் தங்குகிறோம். யாராவது அதிகாரிகள் வருகிறார்கள் என்று தெரிந்தால் எங்களை கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுகிறார்கள். மேலதிகாரி வருகிறார், நீங்கள் வெளியே போங்கள் என்று அனுப்பிவிடுகிறார்கள். அதிகாரி வந்தால் வரட்டுமே, அவர் ஒரு பக்கத்தில் தங்கட்டும். ஒரு எம்.எல்.ஏ.-க்கு இல்லாத மரியாதையா ஒரு அதிகாரிக்கு ? டி.பி.-யில் உட்கார்ந்து 10 வாக்காளர்களோடு பேசிக்கொண்டிருப்போம். அப்போது எங்களைப் பார்த்து, வெளியே போ என்று சொன்னால் எங்களுக்கு எப்படி கௌரவம் இருக்கும் ? ஒரு கிளார்க் வந்து, வெளியே போ என்று சொல்வது எங்களுக்கு மிகவும் கேவலமாக இருக்கிறது. டி.பி. இன்ஸ்பெக்ஷன் பங்களா எங்கெங்கே இருந்தாலும், அங்கு நாங்கள் போய் தங்கினால் எங்கள் வேலை முடிந்து திரும்பும் வரையில் எங்களை அங்கே இருப்பதற்கு அனுமதிக்க வேண்டும்; வெளியே போகச் சொல்லக் கூடாது.

(பிற்பகல் 12-30.)

ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் எம்.எல்.ஏ.க்களுக்கு அதிகாரிகள் எழுந்து வரவேற்புகொடுக்க வேண்டும் என்று சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். வரவேற்பு ஒன்றும் வேண்டாம். போய்ப் பார்க்கவேண்டும் என்று சீட்டு எழுதிக் கொடுத்தால் ½ மணி நேரம் காத்துக்கிடக்க வேண்டியிருக்கிறது. அங்கே இருக்கிற ப்யூன் கூட மதிப்பதில்லை. போய் விட்டு வாங்க சார், ஆபீசர் மீட்டிங்கில் இருக்கிறார் என்கிறார்கள். இது ரொம்ப அவமானமாக இருக்கிறது. அப்படியின்றி எம்.எல்.ஏ.க்கள் சென்றால் உடனே அவர்கள் பிரச்சினை என்ன என்று ஒரு நிமிஷம் விசாரித்து அனுப்பிவிட வேண்டும் என்று சொன்னால் போதும்.

இன்னும் அமைச்சர்களை எல்லாம் இங்கே உள்ளவர்கள்தான் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். என்னமோ எம்.எல்.ஏ. அமைச்சரைப் பார்க்கப் போனால் அவர்கள் எல்லோரும் பயந்துகொண்டு நிற்காமலே ஓடிவிடுகிறார்கள். இப்படி எங்களைக் கண்டு பயப்படவேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பொதுப்படையாகச் சொல்வது சரியல்ல. டிரான்ஸ்போர்ட் அமைச்சர் கூட திரு. ஆலடி அருணாவுடன் ஒன்றாக உட்கார்ந்து பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஓடிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல. (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சொல்லும்போது எல்லா அமைச்சர்களும் என்று குற்றம் சொல்லக்கூடாது. நான் பேசினது இல்லையா ? நாவலர் பேசுவது இல்லையா ?

திரு. முனு ஆதி : நான் இல்லை என்று சொல்லவில்லை. அன்போடு பேசுகிறார்கள். பழைய பாசத்தோடு பேசுகிறார்கள். சிலபேர் என்னமோ பயந்து ஓடுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எதற்கு வந்தீர்களோ என்று நினைத்துக்கொண்டு போவார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. முனு ஆதி : நாங்கள் எதற்கும் தனிப்பட்ட சலுகை தேடிப் போவதில்லை. போனால் அது மறுநாளே சட்டமன்றத்திற்கு வந்துவிடும் என்பது எங்களுக்குத் தெரியும். தொகுதி சம்பந்தப்பட்ட விஷயங்களைச் சொல்லத்தான் போகிறோம்—அதைக் கொஞ்சம் பயப்படாமல் நின்று இருந்து கேட்டுக்கொள்ளக் கூடாதா ?

இன்னும் மெடிகல் பெசிலிடியை எடுத்துக்கொண்டால் கவர்ன்மெண்டு டாக்டர்தான் சர்டிபிகேட் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். கிராமப் புறங்களில் கவர்ன்மெண்டு டாக்டர் கிடைப்பது கஷ்டமாக இருக்கும். எம்.பி. பி.எஸ்., டாக்டர் யார் கொடுத்தாலும் போதும் என்று செய்ய வேண்டும்.

இன்னும் பெட்ரோல் விலை எல்லாம் ஒரேயடியாக ஏறிவிட்டது. எம்.எல்.ஏ.க்களுக்கு ஸ்கூட்டர்-மோட்டார் சைக்கிள் தருவது நல்லது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஸ்கூட்டரோ, மோட்டார் சைக்கிளோ தருவதைப் பற்றி ஆட்சேபனை இல்லை. ஆனால் அதை ஓட்டும் போது எம்.எல்.ஏ.க்கள் ஹெல்மெட் போட்டுக்கொண்டே ஓட்டுவோம் என்கிற சம்மதத்தைத் தருவார்களா ?

திரு. முனு ஆதி : ஹெல்மெட் போட்டுக்கொண்டே ஓட்டுகிறோம். இது என்ன வேஷம் - பொது வாழ்க்கைக்கு வந்த பிறகுதான் எல்லா வேஷமும் போட்டாக வேண்டியிருக்கிறது - ஜனங்களிடத்திலே போகிற போது நம்முடைய அந்தஸ்தைக் கவனிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஹெல்மெட் போடுவதிலே அந்தஸ்தைப்பற்றிக் குறிப்பிடவில்லை. ஸ்கூட்டர் விபத்துகளிலே முதலிலே தலையிலேதான் அடிபடுகிறது. அதனால் பலருக்கு உயிர் போய்விடுகிறது. நான் எம்.எல்.ஏ.க்களை இழக்கத் தயாராய் இல்லை. இன்றைக்கு ஸ்கூட்டர் ஓட்டுகிறவர்கள் எல்லோரும் ஹெல்மெட் போட்டுக்கொண்டாக வேண்டும் என்று சட்டபூர்வமாகக் கட்டாயப்படுத்த முடியவில்லை. ஆகவே, எம்.எல்.ஏ.க்கள் ஹெல்மெட் போட்டுக்கொள்ள சம்மதித்தால் போக்குவரத்துத் துறை அமைச்சரிடத்தில் இதைப்பற்றி பேசி யோசிக்கலாம்.

திரு. முனு ஆதி : உங்கள் முன்னாலேயே எல்லா எம்.எல்.ஏ.க்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன். நாங்கள் ஹெல்மெட் போட்டுக்கொள்ளத் தயார் - இன்னும் பூட்சுகள் போட்டுக்கொள்ளத் தயார். எங்களுக்கு ஸ்கூட்டர் தரவேண்டும். இல்லையென்றால் ஒன்று செய்யுங்கள் - கார் பெட்ரோல் என்ஜினை டீசல் என்ஜினாக மாற்றிக்கொள்வதற்கு உதவி செய்யுங்கள். அப்படி மாற்றுவதற்கு ஏராளமாக ஆகிறது. ஒரேயடியாக எம்.எல்.ஏ.க்களால் அந்தத் தொகையைக் கொடுக்க முடியாது. சர்க்கார் காரண்டி கொடுத்தால் நாங்கள் அதை கொஞ்சம் கொஞ்சமாக வேண்டுமானாலும் கொடுத்து விடுகிறோம்.



இன்னும் ஹோட்டல் பெசிலிடி போதவில்லை. நீங்கள் 35 ரூபாய் கொடுக்கிறீர்களே தவிர- ஒருவேளை நான்வெஜிடேரியன் ஹோட்டலுக்குள் போய்விட்டு வந்தால் பத்து ரூபாய் ஆகிவிடுகிறது. நீங்கள் கொடுக்கிற ரூபாயில் மிச்சமில்லை. தொழிலாளர்களுக்கு கம்பெனியில் சப்சிடியில் 1 அணா இட்டிலி, ½ அணா வடை என்று கொடுக்கிறார்களே அதுபோல சப்சிடி கொடுத்தாவது எங்களுக்கு லோ ரேட்டில் உணவுப் பண்டங்கள் இங்கே கிடைக்க வழி செய்யுங்கள். அலவன்சை உயர்த்தவேண்டும் என்றால் கோபம் வந்தாலும் வந்துவிடும் - இதைச் செய்யுங்கள்.

இன்னும் ஓல்டு ஹாஸ்டலில் போன் இல்லை. ரொம்பதூரம் நடந்து போக வேண்டிய நிலை இருக்கிறது. போன் வசதி ஏற்படுத்தித்தர வேண்டும்.

இன்னொன்று - ஒருவர் தொடர்ந்து 3 முறை எம்.எல்.ஏ. வாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அவைக்கு வந்தார் என்றால் அவருக்கு எக்ஸ் கிரேஷியாவாக ஒரு தொகை பென்ஷனாகக் கொடுங்கள். நான் அதுபோல வந்துவிட்டேன் என்பதற்காகக் கேட்கிறேன் என்று நினைக்காதீர்கள்.

திரு. எம். ஆர். கண்ணன் : எம்.எல்.ஏ. வாக வருவது பார்டி சீட் கொடுப்பதைப் பொறுத்திருக்கிறது. 3 வருடம் என்றால் முனு ஆதிக்கும், முதலமைச்சருக்கும்தான் வரும். ஒரு முறை வந்தாலே போதும் என்று செய்யலாம்.

திரு. முனு ஆதி : முதலமைச்சர் மூன்று முறைக்கு மேலாக வந்திருக்கிறார்கள். நான்கு முறை என்று போட்டால் நான் அவுட் ஆகிவிடுவேன். மூன்று முறை என்று இருந்தால் போதும். மூன்று முறை ஒருவர் தொடர்ந்து வந்தார் என்றால் மக்களிடத்தில் அவருக்கு செல்வாக்கு இருக்கிற காரணத்தினால்தான் வர முடிகிறது. மூன்று முறை இருந்து ரிடையராகும்போது இந்தப் பென்ஷன் தொகை வரலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கவர்ன்மெண்டு சர்வீசில் பத்து வருஷங்களானால் செலக்ஷன் கிரேடு என்று கொடுப்பதுபோல எம்.எல்.ஏ.க்களுக்கும் செலக்ஷன் கிரேடு எம்.எல்.ஏ. என்று கொடுக்கலாமா ?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அந்தமாதிரி செலக்ஷன் கிரேடு எங்கள் போன்றவர்களுக்குத் தேவையில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : மூன்று முறை தொடர்ந்து எம்.எல்.ஏ. வாக தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர் தேர்தலுக்கு நின்றால் அன் அப்போஸ்டாக அந்த இடத்தை விட்டுவிடுவது பற்றி யோசிக்கலாம்.

திரு. முனு ஆதி : ஆந்திர மாநிலம் எடுத்த நடவடிக்கையைப் பாராட்டவேண்டும். அதனை முன்மாதிரியாகக் கொண்டு இங்கும் முதலமைச்சர் அவர்கள் அதுபோல ஒரு அறிவிப்பைத் தருவார்கள் என்று நம்புகிறேன்.

இன்னும் தினசரி கையெழுத்துப் போடவேண்டும் என்று சொல்வது அவமானமாக இருக்கிறது. பார்லிமெண்டில் 15 நாளைக்கு ஒரு முறை கையெழுத்து போடுகிறார்கள். இங்கே வாரத்திற்கு ஒரு நாள் போட்டால் போதும் என்றாவது செய்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மேல்சபையில் இருக்கிற முறையை இங்கே வைத்துக்கொள்ளலாமா ? செயலாளர் அவையில் யார் யார் இருக்கிறார்கள் என்பதைப் பார்த்து மார்க் செய்து கொள்கிற முறை....

திரு. முனு ஆதி : அது ஆபத்து - வேண்டவே வேண்டாம்.

மாண்புமிகு டாக்டர் மு. . கருணாநிதி : என் வேண்டாம் என்று சொல்கிறார்கள் என்பது எனக்குப் புரியும். (சிரிப்பு).

திரு. முனு ஆதி : தலையை எண்ணிப் பார்ப்பது—மறுநாள் எங்கே நீங்கள் நேற்று வரவில்லையே, உங்களுக்கு அலவன்சு கிடையவே கிடையாது என்று சொல்வது—இது எல்லாம் கூடாது. ஒரு வாரத்திற்கு ஒருமுறை அவர்கள் கையெழுத்துப் போட்டால் போதும் என்று செய்தால் மிகவும் உதவியாக இருக்கும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* திரு. நா. வீராசாமி: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். முதலில் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு பேச வாய்ப்புக் கிடைப்பதில்லை. கேள்வி நேரத்திலும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. நாங்கள் 170 பேர்கள் இருக்கிறோம். எங்களுக்கு 75 சதவீத நேரம் கொடுக்க வேண்டும். எங்களுக்கு 10 சதவீத நேரம் கூடக் கிடைப்பதில்லை. எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்கிறார்கள். 50 சதவீதமாவது ஆளுங் கட்சிக்காரர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : ஆளுங்கட்சிக்குக் கொடுக்கப்படுகிற நேரத்தை எல்லாம் திரு. வீராசாமியே எடுத்துக்கொள்கிறார்கள் என்றும் கருதப் படுகிறது.

திரு. பெ. சீனிவாசன் : எதிர்க்கட்சிக்காரர்கள் பேசவேண்டும். ஆளுங்கட்சிக்காரர்கள் செயல்படவேண்டும்.

திரு. நா. வீராசாமி : இங்கே சொல்வதுபோல வெளியிலே மேடையிலே சொல்கிறார்களா? அங்கே பேசும்போது ஆளுங்கட்சிக்காரர்கள் என்ன செய்கிறார்கள், தூங்குகிறார்களா, உங்கள் எம். எல். ஏ. வன் சட்டசபையில் பேசவில்லை என்கிறார்கள்.



இன்னும் எம். எல். ஏ. க்களுக்கு போன் வசதிபற்றிச் சொன்னார்கள் அதில் கருத்து வேறுபாடு இல்லை. எல்லோரும் ஒன்றாக கையெழுத்துப்போட்டு முதலமைச்சரிடத்திலேயே கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவசியம் அதைக் கவனிக்க வேண்டு மென்று தெரிவித்துக்கொள்கிறேன். திரு. கோவை செழியன் கூட முதலமைச்சரிடத்தில் ஒரு கடிதம் கொண்டுபோய்க் கொடுத்ததாக நான் அறிகிறேன்.

(டாக்டர் எச். வி. ஹாண்டே மாண்புமிகு முதலமைச்சரோடு உரையாடிக்கொண்டிருந்தார்.)

முதலமைச்சருடைய காதுக்குப் போனால்தானே அவர் முடிவு எடுக்க முடியும். இந்த நேரத்திலே டாக்டர் ஹாண்டே எல்லாம் அவரோடு பேசிக்கொண்டிருந்தால் எப்படி முடிவு எடுக்க முடியும்?

டாக்டர் எச். வி. ஹாண்டே : நம்முடைய குறையெல்லாம், ஆளுங் கட்சியிலே மாண்புமிகு வீராசாமி அவர்கள் அதிக நேரம் எடுத்துக் கொள்வதுபற்றி எப்படி மற்ற உறுப்பினர்கள் குறைப் படுகிறார்கள் என்றுதான் சொல்ல வருகிறேன்.

திரு. நா. வீராசாமி : எங்களுக்குள்ளே எதற்கு சண்டை மூட்டி விடவேண்டும்? அதை விட்டுவிடுங்கள். நமது கோவை செழியன் அவர்களும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் முதலமைச்சரிடம் கடிதம் கொடுத்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். அதிலே கட்சி வேறுபாடில்லை. போன் ஒவ்வொரு உறுப்பினருக்கும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இலவச ரயில்வே பாஸை பற்றி 1957-லிருந்தே வற்புறுத்து கிறார்கள். நம்முடைய அவை முன்னவர் அவர்கள் கூட சென்ற ஆண்டு இந்த மான்யத்தில் பதில் சொல்லும்போது, " இது பல்லாண்டுக் காலமாக எழுப்பப்பட்டு வருகிற கோரிக்கை. 1957-ல், 58—ல், 61-ல், 62-ல், 68-ல், 69-ல் வைக்கப்பட்டு வந்திருக்கிறது" என்று குறிப்பிட்டுவிட்டு, மேலும் குறிப்பிடுகிறார். " இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் கூட ரயில்வே பாஸ் தருவதன் மூலம்தான் உறுப்பினர்கள் தங்கள் பணிகளைச் செவ்வனே செய்ய வசதி வாய்ப்புகள் ஏற்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரயில்வே பாஸ் தருவதை கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன் " என்று போன ஆண்டு சொன்னார்கள். இந்த ஆண்டாவது கட்டாயம் அதை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிலே கூட, கடந்த ஆண்டு முனு ஆதி அவர்கள் ரயில்வே பாஸ் தருவது எம். எல். ஏ. க்களுக்கு மட்டுமா அல்லது குடும்பத்திற்கும் சேர்த்தா என்று கேட்டார்கள். அதற்கு அமைச்சரவர்கள், உறுப்பினர்களுக்கே இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகு வரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு முதலிலே என்றும் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதை அவசியம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இன்றையதினம் 3 முறை தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு பென்ஷன் வேண்டுமென்று சொன்னார்கள். அரசாங்கத்திலே, 10 ஆண்டு சர்வீஸ் செய்தால் மினிமம் பென்ஷன் என்று வைத்திருக்கிறார்கள். ஆகவே, அப்படிக் கொடுப்பதென்றால், இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கெல்லாம் அந்தப் பென்ஷன் கொடுக்கலாம் என்ற முறையில் மாண்புமிகு அவை முன்னவர் முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, அதை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த மன்றத்திலே அடிக்கடி, பலமுறை வற்புறுத்தி இருக்கிறேன். இங்கே ரிப்போர்ட்டர்கள் இருக்கிறார்கள். ரிப்போர்ட்டர்களுக்கு ஸ்பெஷல் பே எல்லா மாநிலங்களிலும் கொடுக்கிறார்கள். குறிப்பாக, மத்திய அரசாங்கத்திலே இருக்கக்கூடிய பாராளுமன்ற திருபர்களுக்குக் கொடுக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ரூ. 200 ஸ்பெஷல் பே கொடுக்கிறார்கள். நம்முடைய ரிப்போர்ட்டர்களுக்குக் கீழே இருக்கிற ஸ்டெனோகிராஃபர்களுக்கு ஸ்பெஷல் பே கொடுக்கிறார்கள். போலீஸ் ரிப்போர்ட்டர்களுக்கு ஸ்பெஷல் பே கொடுக்கிறார்கள். ஸ்பெஷல் பேயாக ரூ. 75 தான் அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. கடந்த ஆண்டே முதல்வர் அவர்களும் அவையினுடைய முன்னவர் அவர்களும் இதைப் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அவைத் தலைவர், மாண்புமிகு புலவர் அவர்கள், திருபர்கள் சங்க ஆண்டு விழாவிலே பேசும்பொழுது, “சட்டமன்ற நிகழ்ச்சிகளை நல்லமுறையிலே வெளியிடுகின்ற உங்களுடைய நிலை உயர வேண்டும். உங்களுடைய வாழ்க்கையிலே வளம் பெருக வேண்டுமென்பதை நிச்சயமாக மாண்புமிகு டாக்டர் கலைஞர் விரும்புவார் என்பதை நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். நீங்கள் கேட்ட கோரிக்கை நியாயமானது என்பதை மனதிலே வைத்து அந்தக் கோரிக்கையை நிச்சயம் நிறைவேற்றித் தருவோம் என்று—உங்களுக்காக நாங்கள் முதலமைச்சரிடத்திலும், அவை முன்னவரிடத்திலும் வேண்டி வாங்கித் தருகிறோம்” என்று சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால் இந்த நாட்டிலே ஆயிரக்கணக்கான சுருக்கெழுத்தாளர்களுக்கு ஸ்பெஷல் பே கொடுக்கும்போது நம்முடைய சட்டமன்றத்திலே வேலை செய்கின்ற 25 ரிப்போர்ட்டர்களுக்குக் கொடுப்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்காது. நம்முடைய முதலமைச்சரவர்கள் ஸ்டெனோகிராஃபர்ஸ் கில்டிலே பேசும்பொழுதுகூட, அது பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டிலிருந்தே, ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்தே அதைக் கொடுக்க வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போலவே ஆந்திரப் பிரதேசத்திலே ஒரு நல்ல அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். சட்டமன்றம் நடக்கின்ற காலத்திலே சட்டமன்றத் துறையிலே பணியாற்றுகிற எல்லா ஊழியர்களுக்கும் ஒரு மாத போனஸ் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள், பத்திரிக்கையிலே கூட செய்தி வந்திருக்கிறது. அதையும் அவையினுடைய முன்னவர் இங்குள்ளவர்களுக்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இன்றையதினம் இங்கே பல்வேறு கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டன. முக்கியமாக இங்கே இருக்கிற உறுப்பினர்கள் காப்பி சாப்பிட வேண்டுமென்றால் 1 பர்லாங், 1½ பர்லாங் தூரத்தில் தான் ஓட்டல் இருக்கிறது. ஆகவே, இங்கேயே அதற்கு வழி செய்யவேண்டும்.

முதலமைச்சரவர்களை நான் கேட்டுக்கொள்வது, எங்களுக்கெல்லாம் கேட்கிறோம் என்று நினைக்கக்கூடாது. முதலமைச்சரிலிருந்து எல்லோரும் சம்பளத்தைக் கூட்டிக் கொள்ளுங்கள். முதலமைச்சருக்கு ரூ. 1,000, ரூ. 1,500 சம்பளம் என்றால், சீப் செகரட்டரிக்கு ரூ. 3,000. சில அதிகாரிகள் கூட நினைக்கிறார்கள், அமைச்சர்களுக்கு ரூ. 1,000 தானே, நாம் ரூ. 2,000 சம்பளம் வாங்குகிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் ரூ. 3,000 சம்பளம் வாங்கலாம், அமைச்சர்கள் கூட அதிகமாக வாங்கிக்கொள்ளலாம், அமைச்சர்களாக வர வேண்டுமென்று எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் விரும்புகிறார்கள். ஆகவே, அவர்களும் ஒத்துக்கொள்வார்கள்.

அமைச்சர்களுக்கு பெட்ரோல் கொடுக்கிறார்கள். ரொம்ப வருத்தமாக இருக்கிறது எனக்கு. 6 லிட்டர் பெட்ரோல் ஒரு நாளைக்கு. கவுன்சிலுக்கும் வீட்டிற்கும், அசம்பிளிக்கும் வீட்டிற்கும் என்று இருமுறை போய்விட்டு வந்தால் கூட 10 லிட்டர் பெட்ரோல் ஆகும். ஆகவே, பெட்ரோலில் அளவு கூடாது. அவர்கள் தனியாகச் சுற்றப்போவதில்லை. பொதுமக்களுக்காகவும், நாட்டுக்காகவும் சுற்றப் போகிறார்கள். ஆகவே, பெட்ரோலில் சீலிங் வைக்காமல் தாராளமாகக் கொடுக்கவேண்டும். ஒவ்வொருவருக்கும் சம்பளம் ரூ. 2,000 இருக்கவேண்டும், முதலமைச்சருக்கு ரூ. 3,000 இருக்கவேண்டும். ஆகவே, ஒவ்வொருவருக்கும் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எம். எல். ஏக்களுக்கு சம்பளத்தைக் கூட்டிக் கொடுப்பதை விட, வசதிகளை அதிகப்படுத்திக் கொடுக்கலாம். ஃபோன், ரெயில்வே பாஸ், இப்படிக் கொடுக்கலாம்.

திரு. பெ. சீனிவாசன் : சம்பளத்திலே ஒரு குறையிருக்கிறது. ரூ. 450 என்றிருக்கிறது. அதை ரூ. 500 என்றாக்கலாம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

திரு. நா. வீராசாமி : உண்மையிலே சம்பளத்தை வேண்டுமானால் ரூ. 100 குறைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் சொன்ன வசதிகளைச் செய்து கொடுத்தால் போதும். காரணம், டெலிஃபோன் பில் ஒரு மாதத்திற்கு ரூ. 300, ரூ. 200 என்றாகிறது. ஆகவே, அந்தச் சலுகைகளைக் கொடுத்தால் எல்லா உறுப்பினர்களும் வரவேற்பார்கள். ஆகவே, இந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, குறிப்பாக ரிப்போர்ட்டர்களுக்கு ஸ்பெஷல் பே ரூ. 75 கொடுக்கவேண்டுமென்றும், எங்களுக்கு இலவச ரெயில்வே பாஸ், ஃபோன் வசதி ஆகியவற்றை இன்று விவாத முடிவிலே அறிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பைத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, விடைபெறுகிறேன், வணக்கம்.

Thiru B. Venkataswamy : Sir, in support of the cut motion given on behalf of the Swatantra party, I wish to make a few remarks on the State Legislature Demand.

Other members also have given some cut motions regarding some facilities to be given to Members. For example, I have given a cut motion to provide facilities like clerical assistance, telephone, typewriter, etc. As an hon. Member was telling, scooter also should be given to the M.L.A's.

Some of the Members like me are not in a position to travel in cars. For the past two years I am pressing for allotment of scooter to Members. I request the Hon. Chief Minister to declare that scooters will be given to Members. Even if a condition were to be imposed that the Members should wear caps, there is no harm in wearing caps. Only for safety's sake we are wearing caps. I therefore request the Hon. Minister to consider this suggestion very seriously. All the Members in the ruling party also want scooters to be provided for M.L.As.

Coming to the other point, more facilities should be given to the opposition parties also. For example, I came to understand that in the House of Commons they had allotted large amounts for the opposition parties to work efficiently. No amenities or no facilities are being given to the opposition parties here. Phone and other facilities have not been given. We must have a separate Secretariat to the opposition parties and then only they can do their work properly and efficiently.

Regarding Legislature, we must have a separate Secretariat. Now we are having a Legislature Department. Instead of a department, we must have a separate Secretariat. I have already expressed the view





that appointments and other things should be done only by the Speaker and that nobody should interfere with the working of the Legislature. Finally, I request the Hon. Minister to consider all these requests.

Regarding counter clerks they are working since 10 years. Their promotion avenues have been completely stopped. They may be given selection grade and then, quarters also may be provided for them.

Regarding peons also, they can be given more salary. Just as Andhra Government have declared bonus, that also may be given in our State.

Finally, I request the Hon. Minister to give more facilities to the Members. Otherwise, it is highly impossible to function as opposition parties. Thank you, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 155 (3)-ன் கீழ் கடைசி நாளன்று 1 மணிக்கு விவாதம் முடிவடைய வேண்டும். ஆனால் சென்ற ஆண்டு, பேரவையின் அனுமதியோடு அந்த விதியைத் தளர்த்தி, 1 மணிக்கு மேலும் அவையை நடத்தியிருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இங்கு பல்வேறு குறைகளையெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நானும் இந்தச் சபையின் நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நினைக்கவில்லை. அமைச்சரவர்கள் 1 மணி அளவில் முடித்து விட்டால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1 மணிக்குள் முடிக்க முடியாது. நம்முடைய பேரவையின் அனுமதியோடு 155 (3) விதியைத் தளர்த்தி, 1 மணிக்கு மேலும் அவை நடக்க அனுமதி அளிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட மன்ற மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வசதிவாய்ப்புகளை மேலும் பெருக்க வேண்டுமென்று ஆணித்தரமாகக் கூறுகின்ற வகையில் பல்வேறு கருத்துக்களை மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதையும் இந்த அரசு நன்கு கவனிக்கிறது, உணர்கிறது.

இந்தச் சட்டப் பேரவை மண்டபம் கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட ஒன்று. அன்று இருந்த தேவைகளின் அடிப்படையிலே இந்த மண்டபம் கட்டப்பட்டது. ஆண்டுக்காண்டு தேவைகள் வளர்ச்சியுற்று வருகிற சூழ்நிலையில் முழு வசதிகளோடு கூடிய தனி சட்ட மன்றப் பேரவை, மேலவை கட்டப்பட வேண்டுமென்றும் அந்த அந்தக்

கட்சிகளுக்கு என்று அறைகள் முதலியவைகள் எல்லாம் கட்டப்பட வேண்டுமென்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்குவதற்கு இடம், சிற்றுண்டி வசதிகள் இவைகள் எல்லாம் இல்லையென்ற கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டன. நாங்கள் இவற்றையெல்லாம் யோசித்துப் பார்த்து அந்த அளவிற்கு பெருக்க முடியாத அளவிற்கு நிலைமைகள் இருப்பதால்—இப்போதே தலைமைச் செயலகத்தின் தாழ்வாரத்திலே அலுவல்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அதற்காக புதிய கட்டிடம் ஒன்று கட்டிக்கொண்டிருக்கிறோம். அதற்குப் பிறகு சட்டப் பேரவையை ஒட்டியிருக்கிற, சட்டப்பேரவைத் துறையை ஒட்டியிருக்கிற இடங்களைக் காலிசெய்யச் சொல்லி புதிய கட்டடத்திற்கு அனுப்பிவிட்டு அந்த இடங்களையெல்லாம் பேரவையின் வசதிவாய்ப்புகளைப் பெருக்கக்கூடிய அளவிற்குப் பயன்படுத்துவதுபற்றி ஆலோசிக்கலாம்.

விடுதியிலே பல்வேறு குறைபாடுகள் இருப்பதைப்பற்றி இங்கே எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் குறைபாடுகள் எல்லாம் அவ்வப்போது ஆராயப்பட்டு அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

விடுதியைக் கவனிக்க விடுதிக் குழு ஒன்று வைத்திருக்கிறோம். அந்தக் குழு அடிக்கடி சந்திப்பதில்லை, என்னையும் சந்திப்பதில்லை. அடிக்கடி சந்தித்தால் குறைபாடுகளைக் கண்டறிந்து, கேட்டறிந்து அவைகளுக்கு தீர்வு காண வசதியும் வாய்ப்பும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தண்ணீர் குறைபாடு, மற்ற மற்றக் குறைபாடுகளையெல்லாம் அவர்கள் கவனிக்கலாம், இந்த விடுதிக் குழுவினர் அதையெல்லாம் கவனிக்கத் தக்கமுறையில் அடிக்கடி கூட வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த குறைபாடுகள் ஒவ்வொன்றிற்குமாக பதில் சொல்ல இயலாது; அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் எல்லாம் நினைவிலே இருக்கின்றன. அவற்றைச் செம்மைப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சீனிவாசன் பேசும்போது பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டிக்கு ஒரு அதிகாரியை அக்கவுண்டண்ட் ஜெனரல் அலுவலகத்திலிருந்து பெற்றார்கள் என்றும் அவர் அமைச்சருக்கு வேண்டியவர் என்றும் கூறினார். அப்படிப்பட்ட நிலைமை இல்லை. பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டியில் தணிக்கையிலே வல்லமைபெற்ற ஒருவர் இருப்பது நல்லது என்று சொல்லி அக்கவுண்டண்ட் ஜெனரல் அலுவலகத்திற்கு எழுதி, நீண்ட நாள் அதிலே பழக்கப்பட்டவரை அனுப்ப வேண்டுமென்று கேட்டு துறையினுடைய செயலாளர் கடிதம் எழுதினார். அவர்கள் இரண்டு பேர்களை சிபாரிசு செய்தார்கள். அந்த இரண்டு பேர்களிலே ஒருவர் போடப்பட்டு இருக்கிறார். அவர் யார் என்றே எனக்குத் தெரியாது, அவரை இன்னும் பார்த்ததில்லை, அவர் முகத்தைக் கூட நான் பார்த்ததில்லை. அமைச்சருக்கு வேண்டியவர் என்று போடவில்லை. இரண்டு பேர்கள் இவர்கள் கேட்டார்கள், அதிலே ஒருவரைத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள்



அவரை நான் இன்னும் பார்க்கவில்லை, முகத்தைக்கூட பார்த்தது கிடையாது, அக்கவுண்டண்ட் ஜெனரலை இந்த வகைக்கு வேண்டுமென்று கேட்டோம், அவர் சிபாரிசுப்படித்தான் போட்டிருக்கிறோம்.

நீண்ட நாட்களுக்கு முன்பு இரண்டு அவைகளின் துறைகளும் ஒன்றாக இயங்கிய நிலைமை இருந்தது. அதற்குப் பிறகு இப்போது இரண்டு துறைகளுக்கும் தனித்தனி தன்மைகள் ஏற்படுத்தப்பட்டு இரண்டுக்கும் சம வாய்ப்புகள் கொண்டு வரப்பட்டது. ஒன்றாக இருந்தபோதுதான் ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்குக் கொண்டுபோகக் கூடிய நிலைமை இருந்தது. இப்போது பேரவைத் துறை செயலாளர், மேலவைத் துறைச் செயலாளர் ஆகிய இருவரும் சம அளவிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். சம்பளம் ஆகட்டும் மற்ற உரிமைகள் ஆகட்டும் ஒரே நிலைமையிலேதான் இருக்கின்றன. இரண்டு துறைகளும் தனித்தனியாக இயங்குகின்றன. ஆகவே, அதிலே எந்தவிதமான தவறும் இல்லையென்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் தெரிவித்த கருத்து ரயில்வே பாஸ் உறுப்பினர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பது. உறுப்பினர்களுக்கு ரயில்வே பாஸ் கொடுக்கக் வேண்டுமென்பது சென்ற ஆண்டிலேயே கொள்கையளவில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதைப்பற்றி பல்வேறு மாநிலங்களில் என்ன என்ன நிலைமைகள் இருக்கின்றன என்று விவரங்களைக் கேட்டோம். சில மாநிலங்களில் குறிப்பிட்ட அளவிற்கு கூப்பன் கொடுத்து இந்த இடத்திற்கு போய்விட்டு வரலாம் என்ற முறையிலே கொடுத்திருக்கிறார்கள், சில மாநிலங்களில் ஸ்டேட்டுக்குள் பேகலாம் என்றும், சில மாநிலங்களிலே ஸ்டேட்டுக்கு வெளியேயும் போகலாம் என்ற அளவிற்கும் வைத்திருக்கிறார்கள். டி. ஏ. இல்லை என்று சொல்லி சில மாநிலங்களிலே இதைக் கொடுத்திருக்கிறார்கள். சில மாநிலங்களிலே டி. ஏ. வைத்தும் இதைக் கொடுத்திருக்கிறார்கள், இந்த விவரங்களை எல்லாம் ஆராய்ந்து வழக்கம்போல் கூட்டங்களுக்கு, கமிட்டிக் கூட்டங்களுக்குப் போய் கலந்து கொள்வதைத் தவிர பதினாயிரம் கிலோ மீட்டர் அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மாநிலத்திலேயும் இந்தியாவிலேயும் போய்வரலாம், இப்போது தந்து வருகிற டி. ஏ. மற்றவைகள் எல்லாம் வழக்கம்போல் தரப்படும் (ஆரவாரம்).

திரு கோவை செழியன் : செங்கற்பட்டிலே இருக்கிறவர்கள் அடிக்கடி போய்வரலாம், நாகர்கோவிலிலே இருக்கக்கூடியவர்கள் அப்படிப் போய் வரமுடியாது. பக்கத்திலே உள்ளவர்களுக்கு வசதியாக இருக்கும்....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: டி.ஏ. பாதிக்கப்படாது, அது மாத்திரமல்ல, கேரளாவிலே 10 ஆயிரம் கிலோ மீட்டர் எங்குவேண்டுமானாலும் போகலாம், டி.ஏ. பாதிக்கும், ஆனால் அப்படியல்ல, இங்கே டி.ஏ. பாதிக்கப்படாது, 10 ஆயிரம் கிலோ மீட்டர். (ஆரவாரம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பதினாயிரம் கிலோ மீட்டர் உறுப்பினர்கள் யார் வேண்டுமானாலும் எங்கே வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற அளவிற்குக் கொடுத்திருக்கிறோம். (ஆரவாரம்). செழியன் நாகர்கோவிலில் உள்ளவர்களுக்கு பாதிக்கப்படும், செங்கற்பட்டில் உள்ளவர்களுக்குப் பாதிக்காது என்றார். டி.எ. இந்தக் கணக்கிலே வராது, டி.எ. தொடர்ந்து வாங்கலாம், மேற்கொண்டு பதினாயிரம் கிலோ மீட்டர், அதாவது பத்தாயிரம் கிலோ மீட்டர் அளவிற்குப் போகலாம். 10 ஆயிரம் கிலோ மீட்டர் மாநில அளவிலே மட்டுமல்ல, வெளிமாநிலங்களுக்கும் செல்லலாம். அதற்கான ஏற்பாடுகளை ரயில்வே துறையுடன் கலந்து செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு கே. கந்தசாமி : நல்ல அறிவிப்பை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மகிழ்ச்சி. வருடத்திற்கு பத்தாயிரம் கிலோ மீட்டரா அல்லது எம்.எல்.ஏ. பீரியட் பூராவிற்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒரு ஆண்டுக்கு பத்து ஆயிரம் கிலோ மீட்டர் வரையில் போகலாம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தொலைபேசிக் கட்டணம் முதலியவைகளை பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். பல பேர்களுக்கு தொலை பேசி வசதி இருக்கிறது, பல பேர்களுக்கு தொலைபேசி வசதியில்லை. (குறுக்கீடு) ஒரு ஆண்டு என்பது நிதியாண்டு, எப்ரல் 1-ம் தேதி முதல் மார்ச்சு 31-ம் தேதி வரையிலே. இன்னும் ஒரு திங்களுக்குள் இது வந்துவிடும் என்று கருதுகிறேன்.

தொலைபேசி படி என்ற அளவிற்கு இப்போது சம்பளம் 250 ரூபாய் வழங்கப்படுகிறது, படி என்ற வகையிலே 200 ரூபாய் தந்து கொண்டு வருகிறோம். ஒவ்வொரு உறுப்பினருக்கும் 100 ரூபாய் அளவிற்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்). தொலைபேசி இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி எல்லா உறுப்பினர்களுக்கும் 100 ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு முனு ஆதி அவர்களும், திரு. வீராசாமி அவர்களும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் தரப்படவேண்டுமென்று சொன்னார்கள். வேறு பல நாடுகளிலே உறுப்பினர்களுக்கு அப்படிச் தரப்படுகிற முறை இருக்கிறது. நம்முடைய நாட்டிலே இல்லை. பொதுவாழ்க்கையிலே ஈடுபட்டு சட்டமன்ற உறுப்பினர்களாக 15 ஆண்டுக்காலம் அதிலேயே இருக்கிற சூழ்நிலை உள்ளவர்கள் அதற்குப் பிறகு அவர்களுக்கு இருக்கிற மதிப்பு முதலியவை காப்பாற்றப் படவேண்டுமென்ற நோக்கத்திலே சிலபல நாடுகளிலே அந்த முறை உண்டு. அந்த அடிப்படையிலே 3 முறை தொடர்ந்து உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கலாம். (ஆரவாரம்). அதற்குப் பிறகு அவர்கள் மறுபடியும் உறுப்பினர்களாக வராமல் இருக்க வேண்டும், வந்துவிட்டால் கிடையாது, மூன்று முறைகளுக்கு மேல், நாலைந்து முறைகள் இருக்கிறவர்களுக்கும் உண்டு.



திரு. கோவை செழியன் : இரண்டு வருஷத்திலேயே டிஸ்ஸால்வ் பண்ணிவிட்டால அல்லது 3 வருஷத்திலேயே பண்ணிவிட்டால் அவர்களுக்கு எப்படி கணக்கு எடுத்துக் கொள்ளப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதிலே முறைகள்தான் கணக்கே தவிர ஆண்டுகள் அல்ல. வெற்றிபெற்று சட்டமன்றத்திற்கு வந்து விட்டால் வாங்குகின்ற பென்ஷன் நிறுத்தப்பட்டுவிடும். மறுபடியும் அடுத்து தேர்தலில் நிற்காமல் விட்டுவிட்டால் தொடரும்.

(பிற்பகல் 1-00)

திரு. கு. அ. பொம்மன் : மூன்று முறை என்பதை இரண்டு முறை என்று வைத்தால் நல்லது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி. இப்பொழுது சொல்வது மூன்று முறை தொடர்ந்து இருப்பவர்கள் என்று, மூன்று முறை தொடர்ந்து இருந்தால் போதும். அதற்குமேல் நான்காவது முறை, ஐந்தாவது முறை இடையிலே இடை அறுந்துவிட்டால் அதைப்பற்றிக் கவலை இல்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்டவர்களுக்கு 250 ரூபாய் ஓய்வூதியம் வழங்கலாம் என்று முடிவு செய்து, அது அரசால் முறைப்படி கவனிக்கப்படும் என்பதை எடுத்துச் சொல்லி, இந்த அளவிலே என்னுடைய உரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். தங்கமணி அவர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள்.

திரு நா. வீராசாமி : அசெம்பிளி ரிப்போர்ட்டர்ஸ் பற்றி....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வீராசாமி அவர்கள் சுருக்கெழுத்தாளர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நிலைமை முழுதும் ஆராயப்பட வேண்டும். இந்தத் துறையும் ஆராயும் என்பதைக் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆராய்ந்துத்தான் முடிவெடுக்க வேண்டும். ஆராய்ந்து, நியாயத் தன்மைகளையெல்லாம் பார்த்து அந்த முறையிலே பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஆந்திரா அசெம்பளி ஸ்டாப்....

திரு. பி. வெங்கடசாமி : ஸ்கூட்டர் அலாட்மெண்ட்.....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் சட்டமன்றம் நடக்கும் பொழுது மட்டும் பணியாற்றுகிறார்கள்.. சட்டமன்றம் நடக்காமல் இருக்கும்பொழுதும் பணியாற்றும் சில அலுவலர்கள் இருக்கிறார்கள். எனவே, பிரச்சினைகள் வரும். இதில் யோசித்துத்தான் முடிவு சொல்ல முடியும். உடனே சொல்ல முடியாது.

[டாக்டர் மு. கருணாநிதி].

கடந்த ஐந்தாறு ஆண்டுக் காலம் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய எல்லாக் கோரிக்கைகளையும் வரிசையாக 200 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக, 350 ரூபாயாக, பிறகு 450 ரூபாயாக ஆக்கி இருக்கிறோம். இன்னும் இரயில் பாஸ், பஸ் பாஸ் என்று கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். என்னுடைய ஒரேயொரு கோரிக்கையை மட்டும்—வறட்சி நிவாரணம் பற்றிச் சொல்கிறேன்— அதைத் தயவு செய்து மறுபரிசீலனை செய்யுங்கள்.

திரு முனு ஆதி : ஸ்கூட்டர் கேட்டிருந்தோம். டீசல் எஞ்சின்..

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எம்.எல்.ஏக்கள் ஹெல்மெட்டைப் பாதுகாப்புக்காக போட வேண்டும் என்று சொன்னோம். அந்தக் கண்டிஷனோடு வந்தால் ஸ்கூட்டருக்கு முன் உரிமை தருவது பற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. பொதுவாக இதில் வெட்டுத் தீர்மானங்கள் வற்புறுத்தப்படுவதில்லை.

திருவாளர்கள் என். டென்னிஸ், கே. ஏ. வகாப், எம். சுரேந்திரன் கே. எஸ். கோதண்டராமையா, வி. கே. இராஜாப்பிள்ளை, திரு பி. வெங்கடசாமி, கே. டி. கே. தங்கமணி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன்னுள்ள கேள்வி :—

"நிதிக் கோரிக்கை எண். 7— மாநில சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 49,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(8) அறிவிப்பு.

தமிழ்நாடு 1975-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



(9) அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு 1975-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :—தலைவரவர்களே, தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இச்சட்ட முன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது. பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·04 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

(10) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

**A. *Statutory Rules and Orders.***

**NIL**

**B. *Reports, Notifications and other Papers.***

@ 166. The Tamil Nadu Catering Establishments (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 12 of 1975) with annexure.

@ 167. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1975 (L.A. Bill No. 13 of 1975) with annexure.

---

@ Despatched to members on 9th April 1975.

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

### வெள்ளிக்கிழமை, 1975, ஏப்ரல் 11.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 641, 642, 643 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

*Government Dispensary, Saidapet*

*644 *Q*.—Thiru K. M. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the increase in the number of out-patients treated at the Government Dispensary at Saidapet; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) சைதாப்பேட்டை அரசு மருந்தகம் 1973ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து தேவைக்கேற்ற அலுவலர்களைக் கொண்ட 32 படுக்கை வசதிகளுடன் கூடிய மருத்துவ மனையாக மாற்றப் பட்டு இயங்கி வருகிறது.

Thiru K.M. SUBRAMANIAM : My question refers to the number of out-patients treated in the hospital. Is it a fact that there are more than 1,500 out-patients attending every day and that there are only three doctors and each doctor has to attend about 150 patients per hour. Is it possible? Are the Government thinking of increasing the number of doctors?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையில் புற நோயாளிகள் ஆயிரம் பேருக்குமேல் ஒவ்வொரு நாளும் வருகிறார்கள் என்ற குறிப்பு இருக்கிறது. மருத்துவ அலுவலர் ஒருவரும், பெண் மருத்துவ அலுவலர்கள் இரண்டு பேரும், வேறு மருத்துவ மனையிலிருந்து இந்த மருத்துவ மனைக்கு

' பார்ட்-டைம் ' ஆக வருகிற டாக்டர்கள் சிலரும் இருப்பதாக நான் பேசுகிறபோது தெரிந்துகொண்டேன். இராயப்பேட்டை மருத்துவ மனையிலிருந்து வருவதாக இயக்குநர் அவர்கள் தெரிவித்தார்கள். பார்ட்-டைமாக வருகிறவர்கள் புற நோயாளிகளைக் கவனிப்பதற்குத்தான் வருவார்கள். அப்படி இல்லையானால் மேலும் என்ன செய்யலாம் என்பதைப்பற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, சைதை பக்கத்திலே அமைந்திருக்கிற இந்த மருத்துவ மனைக்கு வருகிற புற நோயாளிகள் உள்ளபடியே மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, இந்த மருத்துவ மனையை மேலும் அபிவிருத்தி செய்து அங்கு வருகின்ற புற நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க அரசு வகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசு, நான் முன்னரே சொன்னதைப் போல், பரிசீலனை செய்து கவனிக்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, சைதாப்பேட்டையில் உள்ள இந்த மருத்துவ மனைக்கு ஒவ்வொரு நாளும் அதிக அளவில் புற நோயாளிகள் வருகிறார்கள். ஆகவே, இதில் ஒரு நிரந்தர பரிகாரம் காண்பதற்கு அங்கே பணியாற்றுகின்ற டாக்டர்களோடு, இன்னும் கூடுதலாக சில டாக்டர்களையும் இதர மருத்துவப் பணியாளர்களையும் நியமிப்பதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கேள்வி திரும்பத் திரும்ப அதேதான் ; விடையும் அதேதான்.

## *Nurses Association*

*645 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Government Nurses Association has demanded during 1974 a higher uniform and ration allowance and more selection grade posts; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு அரசு செவிலியர் சங்கம் செவிலியர்களுக்கான உணவுப்படி, சீருடைப்படி உயர்வும், அதிகப்படியான தேர்வு நிலைப் பதவிகள் ஏற்படுத்தவும் கேட்டுள்ளன. ஏற்கெனவே அரசு ஒப்புக்கொண்ட அந்த அடிப்படையில் மேலும் என்ன செய்ய இயலும் என்பது ஆய்வில் உள்ளது.





திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, முக்கியமாக அவர்கள் அடிப்படைச் சம்பளத்தைத ரிவிஷன் செய்யவேண்டும் என்றும், அகவிலைப்படியை ரிவிஷன் செய்யவேண்டும் என்றும் சர்க்காருக்கு விண்ணப்பித்தார்களா ? அதன்மேல் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஏற்கெனவே ஓரிரு ஆண்டுகளுக்கு முன்னால் அவர்கள் உணவுப்படி என்று வழங்கப்படுகிற படியை உயர்த்துவதற்குப் பதிலாக சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்று கோரி, ரூ. 275—450 என்ற விகிதத்தில் இருந்த சம்பளம் ரூ. 300—15—420—20—500 என்று உயர்த்தப்பட்டது. அதன்காரணமாக ரேஷன் அலவன்ஸ் பற்றி அவர்கள் கேட்பது முறையல்ல என்ற கருத்து தான் திரும்பத் திரும்பப் பரிசீலனை செய்து, அரசில் உள்ள பல்வேறு துறையினர் தெரிவிக்கிறார்கள். சீருடைப்படியை உயர்த்த முடியுமா என்பது பொருளாதார நிலை காரணமாகப் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, செவிலியர்களுக்கு சுப்ரிம் கோர்ட் என்று அரசு நிர்ணயம் பண்ணியிருக்கிறார்களே, அந்த சுப்ரிம் கோர்ட்டில் இன்னும் சம்பளம் கொடுக்கப்படவில்லை. ஆகவே,, உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கேள்வி விளக்கமாக இல்லை

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, செவிலியர்களுக்கு தேர்வு நிலைப் பதவிகள் புதிதாக ஏற்படுத்தக் கோரி ஏதாவது முறையீடு வந்ததா? அதுபற்றி அரசாங்கம் என்ன கருத்தினை அப்பொழுது அறிவித்தது, தற்போது எந்தக் கருத்தில் இருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தற்போது அப்படிப்பட்ட தேர்வு நிலைப் பதவிகளை அனுமதிக்கவேண்டுமா, அவசியந்தானா என்பது இன்னும் தீர்மானிக்கப் படவில்லை.

திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : நாகர்கோவில் அரசு தலைமை மருத்துவ மனையில் செவிலியர் பற்றாக்குறை காரணமாக அங்குள்ள நோயளிகளை சரிவர கவனிக்க முடியவில்லை என்று அங்குள்ள தலைமை மருத்துவ அதிகாரி கூறுகிறார். இதனைப்பற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு, க. அன்பழகன் : தனியாகக் கேள்வி போடவேண்டும்.

[1975 ஏப்ரல் 11

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, அவர்கள் ப்ரொமோஷன் விஷயத்தில் சர்க்கார் மிகவும் மெதுவாக இருக்கிறது. நர்சாக வந்தவர்கள் நர்சாகவே இருக்கிறார்கள். அவர்களுக்கு பதவி உயர்வு கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. மேலே இருக்கிறவர்களுக்குத்தான் அதிகமாக ப்ரொமோஷன் கிடைக்கிறதே தவிர கீழே இருக்கிறவர்களுக்கு ப்ரொமோஷன் கிடைப்பதில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மேலே இருக்கிறவர்களுக்கு ப்ரொமோஷன் கிடைக்கிறது, கீழே இருக்கிறவர்களுக்கு ஏன் ப்ரொமோஷன் கிடைக்கவில்லையென்றால், 'ஸீனியாரிட்டி பை சர்வீஸ்' என்ற அடிப்படையில் மேலே இருக்கிறவர்களுக்குத்தான் ப்ரொமோஷன் வரும். அதிலே ஒன்றும் கருத்து வேற்றுமை இருப்பதற்கில்லை.

திரு. என். மருதாசலம் : சுப்ரிம் கோர்ட் சர்வீஸ் உள்ளவர்களுக்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களைக் கூப்பிடவே இல்லையே.

*Primary Health Centre at Tholyavetty*

*646 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state whether there are proposals under the consideration of the Government to provide a second Primary Health Centre at Tholyavetty in Killiyoor Panchayat Union area?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் இருக்கின்ற ப்ரைமரி ஹெல்த் சென்டரை அப்-க்ரேட் செய்து, முப்பது படுக்கைகள் உள்ள ரூரல் ஆஸ்பத்திரியாக உயர்த்தும் திட்டம் இருந்து, அதற்கான ப்ரொபோசல் கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் ஆபீசில் வந்து, அதற்கான ரெகமென்டேஷன் செய்து அனுப்பியிருந்தோம். கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் கடற்கரையோரத்தில் ஒரு டிஸ்பென்சரி ஏற்படுத்துவதாக கன்யாகுமரி மாவட்ட ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபீசர் கூறினார். அதையும் நடைமுறையில் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : முதலில் கேட்ட கேள்வி—ப்ரைமரி ஹெல்த் சென்டரை முப்பது படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக உயர்த்த முடியுமா என்பது. அந்தத் திட்டம் இருந்தது. ஏறத்தாழ 80, 90 ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்கப்பட வேண்டுமென்ற கருத்து மத்திய அரசின் ஆலோசனையில் இருந்தது. ஆனால், மத்திய அரசு அந்தத் திட்டத்தை அடியோடு கைவிட்டுவிட்டு, உயர்த்துவதற்குப் பணம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இப்பொழுது அப்படி ஒரு திட்டம் வர வாய்ப்பு இல்லை. அடுத்து, டிஸ்பென்சரி ஏற்படுத்துவது என்றால், அது ஒன்றியத்தின் மூலமாக நடைபெறவேண்டும். அது ஆர்.டி.ஓ. மூலமாக வந்து ஒப்பம் அளிக்கப்படவேண்டும். தனியாக எழுதி அனுப்பினால், ரூரல் டெவலப்மென்ட் துறையும் மருத்துவத் துறையும் ஆலோசித்து அதற்கு அனுமதி அளிக்கக் கூடிய வாய்ப்பு வட்டாரத்தில் வருமானால் ஒத்துக்கொள்வார்கள்.



1975 ஏப்ரல் 11]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தக் கிள்ளியூர் ஒன்றியத்தின் ஹெட்குவார்ட்டர்ஸ் தொலையாவெட்டை என்ற பகுதியில் அமைந்திருக்கிறது. இந்த ஒன்றியம் மக்கள் அதிகமாக வாழும் பகுதி. ஆகவே, தொலையாவெட்டை பகுதியில் புதிய மருத்துவ மனையையோ அல்லது கூடுதல் டிஸ்பென்சரியையோ ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்போது தொலையாவெட்டையில்தான் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. (Health Centre at Tholyavetty in Killiyoor Panchayat Union) என்றுதான் எழுதியிருக்கிறது. அங்கு இருப்பதாகத்தான் கேள்விக்குப் பதில் இருக்கிறது. தொலையாவெட்டையில் இல்லையென்று சொன்னால் என்ன செய்யலாம் என்று தனியாகப் பரிசீலிக்கலாம்.

கும்பகோணம்-சீர்காழி சாலை

* 647 வினா.— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

மாயூரம் நகரில் உள்ள கும்பகோணம்-சீர்காழி நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

*Causeway near Sulagiri*

*648 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon, the Minister for Public Works be pleased to state whether the work relating to the construction of the causeway over the jungle stream near Sulagiri in Hosur taluk has been completed?

---

*455—ம் பக்கத்தில் மாண்புமிகு அமைச்சர் இவ்விடையைத் திருத்தி அளித்த அறிக்கையைக் காண்க.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: படுகைப் பாலம் கட்டும் பணி 1974 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் முடிவடைந்தது.

சுப்பிரமணியபுரம் அருகே மேம்பாலம்

*649 வினா.— திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை சுப்பிரமணியபுரம் அருகில் கட்டப்பட்டுள்ள ரயில்வே மேம்பாலத்தின் மொத்த மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மொத்த மதிப்பீடு ரூ. 36 லட்சம்.

*Bridge across Gadilam river*

*650 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that a bridge across river Gadilam near Ulundurpet has been opened recently; and

(*b*) if so, the expenditure incurred therefor?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) ரூ. 5,201-84.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்தக் கடிலம் பாலத்தை திறக்க ஏற்கெனவே ஒரு முறை தேதி முடிவு செய்யப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டதா? ஆம் எனில் அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: முதல்வர் அவர்களுக்கு உடல் நலம் இல்லாத காரணத்தால் ஒத்தி வைக்கப்பட்டது.

டீசல் விசையேற்றங்கள் வாங்கக் கடன்கள்

*651 வினா.— திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் மத்திய அரசு நிதி உதவியுடன் விவசாயிகளுக்காக டீசல் என்ஜின் வழங்கும் திட்டம் அமுலில் இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அத்திட்டத்தின் கீழ் 1974-75 நிதியாண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனை விவசாயிகளுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது?

(உ) எந்த அடிப்படையில் நிதி உதவி அளிக்கப்பட்டது?



மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) & (உ) & 1974-75 நிதியாண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் 15-2-1975 வரை 364 டீசல் விசையேற்றங்களுக்கு ரூ. 13.69 லட்சம் கடன் தொகை அளிக்கப்பட்டது.

*Sick textile mills*

*652 Q.—THIRU N. K. PALANISAMY and THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that the Government of India have proposed to take over the sick textile mills including those run by the Tamil Nadu Textile Corporation; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தால் நிர்வகிக்கப்பட்டு வந்த 12 பஞ்சாலைகள் உள்பட இத்தேசத்திலுள்ள 103 நலிந்த பஞ்சாலைகளை இந்திய அரசு நலிந்த பஞ்சாலைகளை அரசுடைமையாக்குவதைக் குறித்த சட்டத்தின் கீழ் 1-4-1974 முதல் அரசுடைமையாக்கியுள்ளது.

(இ) இந்த ஆலைகளின் மேல் முழு உரிமை பெற்ற தேசிய பஞ்சாலைக் கழகம் இம்மாநிலத்திலுள்ள 9 ஆலைகளை தனது இணைக் கழகத்திற்கு மாற்றியுள்ளது. எஞ்சிய 3 ஆலைகள் தற்போது தமிழ் நாடு பஞ்சாலைக் கழகத்தின் நிர்வாகத்தில் இருக்கும்.

திரு. என். கே. பழனிசாமி: இந்த ஆலைகள் நம்முடைய மாநிலத்திலே இருக்கக்கூடியவற்றைப் பொறுத்து ரிப்பேர் செலவு போன்றவற்றை நம்முடைய சர்க்காரே செய்து வந்திருக்கிறது. இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய ஆலைகள் பூராவும் நம்முடைய சர்க்கார் வசம் ஒப்புவிக்கப்பட வேண்டுமென்று மத்திய சர்க்காரை நம்முடைய சர்க்கார் வற்புறுத்தியதா? மத்திய சர்க்கார் என்ன சொல்லிற்று?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாநில அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் சேர்ந்து பணம் போட்டு நிர்வாகம் நடைபெற்று வருகிறது. நாம் 49 சதவிகிதம், அவர்கள் 51 சதவிகிதம். ஆலைகளை எடுக்கச் சொன்னதே நாம்தான். ஆகவே, நாம் அவர்களிடத்திலே கூறியது—இப்போது எப்படி நிர்வாகம் இருக்கிறதோ அதே முறை நீடிக்கவேண்டும் என்று கேட்டபோது அகில இந்திய அளவில் அது முடியாது என்று தெரிவித்தார்கள். அதற்குப் பின்னால் புதிய தொழிலமைச்சர் வந்தவுடனே அவரிடத்தில் பேச்சு

வார்த்தை நடத்தி சில சலுகைகளைப் பெற முடியுமா என்று பார்த்தோம். மாநிலத்தில் நிர்வாகத்தைப் பொறுத்தவரை தலைவர், மானேஜிங் டைரெக்டர், ஜெனரல் மானேஜர் ஆப் தி மில்ஸ், இவர்கள் முழுவதும் மாநில அரசு அதிகாரிகளாக இருக்க வேண்டுமென்று கேட்டோம். அதற்கு அடுத்து, உற்பத்தியாகிற நூல்கள் முழுவதையும் மாநில அரசிடத்தில் ஒப்படைத்து விட வேண்டும், கைத்தறி நெசவாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கொடுப்பதற்கு என்று கேட்டோம். இரண்டையுமே ஒப்புக்கொள்வதாகப் புதிய தொழிலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் ஆதார பூர்வமாக ' இன் ரைட்டிங் ' அவர்கள் ஒப்புக்கொள்வதாகத் தெரியவில்லை. ஆகவே, இன்னும் பேச்சு வார்த்தையில் இருக்கிறது.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : நலிந்த ஆலைகளை அரசு எடுத்துக் கொள்ள எவ்வளவு தொகையை அரசு நட்ட ஈடாகக் கொடுத்தது ? இந்த ஆலைகளிலே உற்பத்தியாகிற நூலை விநியோகிப்பதற்கு தமிழக அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டதா அல்லது மத்திய அரசிடத்தில்தான் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ மாதவன் : நூலை நம்மிடத்தில் ஒப்படைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். புதிய தொழிலமைச்சர் அவர்கள் பொதுவாக கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் சட்டப்படி ஒப்புக்கொள்ளுகின்ற வாய்ப்பு இன்னும் ஏற்படவில்லை. நஷ்ட ஈட்டைப் பொறுத்த அளவில் அது மத்திய அரசாங்கத்தின் பொறுப்பு, நம்முடைய பொறுப்பு அல்ல. நமக்கு வரவேண்டிய பணத்தை எப்படியாவது நம்மிடத்தில் ஒப்படைத்துவிட வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம். சட்டப்படி நம்முடைய நிதி நிறுவனங்களுக்கு வரவேண்டிய பணம், போனஸ் தொகை மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கப் பணம் என்ற முறையில் தர வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM : Is it a fact that the Government of India have refused to give the money advanced by the State Government and also the money advanced by Banks under the guarantee of the State Government? What has happened to the funds?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முன்னால் இருந்த தொழில் அமைச்சர்—இப்போதைய மத்திய நிதியமைச்சர்—அதை மறுத்தது உண்மை. இப்போது புதிதாக வந்திருக்கும் தொழிலமைச்சரிடத்தில் நியாயத்தை எடுத்துச் சொன்னோம். அரசாங்கம் மக்கள் பணத்தைப் போட்டிருக்கும்போது அந்தப் பணத்தை காம்பன்சேஷன் என்ற முறையில் மாநில அரசுக்குக் கொடுக்காமல் இருந்தால் அது ரொம்பத் தவறு என்று எடுத்துச்





சொன்னோம். அவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். எப்படியும் நம்முடைய மாநில அரசுக்கு நிதி நிறுவனங்களுக்கு வர வேண்டிய பணம், தேசீயமாக்கப்பட்ட சட்டப்படி கிடைக்கா விட்டாலும் மத்திய அரசு தருவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதையும் வாயளவில் சொல்லியிருக்கிறார்கள். சட்டப்பூர்வமாக ஆக்கப்படவில்லை.

திரு. கே. என். குமாரசாமி : இந்தியா முழுவதும் இருக்கிற நலிந்த பஞ்சாலைகளை தனி கார்ப்பரேஷன் மூலம் நிர்வகிக்கிற கொள்கையை மத்திய அரசாங்கம் அனுஷ்டிக்கிறது. இந்தக் கொள்கையில் எல்லா மாநிலங்களும் சேர்ந்திருக்கின்றன. இது தமிழ்நாட்டுக்கு மட்டும் தனியான பிரச்சினை அல்ல. இதிலே மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் உள்ள சங்கடங்கள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்லுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சங்கடங்களைப் பற்றி விளக்கமாக இந்த மன்றத்திலே எல்லோரும் சேர்ந்து ஒரு தீர்மானமே போட்டிருக்கிறோம். அன்று அதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எதிர்த்ததாகத் தெரியவில்லை. இப்போது இருக்கும் பிரச்சினை நாம் பணம் போட்டு நம்மை எடுக்கச் சொல்லி நாமே ஆலைகளை நடத்தினோம். அப்படி ஏற்கனவே போட்ட பணத்திலிருந்து அவர்கள் இப்போது ஆலைகளை நிர்வகிப்பது எப்படி நியாயம்? ஒரு காம்ப்ரமைசாக நிர்வாகம் நம்மிடத்தில் இருக்கவேண்டும், நூல் விநியோகம் நம்முடைய பொறுப்பில் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறோம். புதிய அமைச்சர் அவர்கள் ஆதரவாகப் பேசினார்கள். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அதையும் எதிர்ப்பார்கள் போல் தோன்றுகிறது.

திரு. த. சோனையா : தமிழ்நாட்டில் நலிந்து போன ஆலைகளை ஏற்கனவே அரசு எடுத்திருக்கிறது. அதற்குப் பிறகு இப்போதும் சில ஆலைகளை எடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது. இப்படி நட்டத்தில் ஓடிய ஆலைகளை அரசு எடுத்த பிறகு இப்போது பழைய படி நட்டத்திலேயே ஓடுகிறதா அல்லது அதிகமான வருவாய் தருகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய மாநில அரசைப் பொறுத்தவரை நாம் எடுத்து நடத்திய ஆலைகள் நல்ல முறையில் நடைபெற்று ஏராளமான பணம் லாபம் சம்பாதித்திருக்கின்றன என்பதை மத்திய அரசே ஒப்புக் கொண்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : இப்படி நலிந்த மில்களை எடுக்கின்றபோது அந்த மில்களில் உற்பத்தியாகிற நூல்களை மாநில அரசின் பொறுப்பில் கொடுத்து விட்டால் நெசவாளர்களுக்குக் கொடுக்க

வாய்ப்பு ஏற்படும். அதற்கு மாறாக சர்க்கரைக்குச் செய்தது போல் இதற்கும் செய்து விட்டால் நெசவாளர்கள் எதிர்காலத்திலே சிரமப்படுகிற நிலைமை ஏற்படும். ஒருவேளை இதற்கு அவர்கள் மறுத்தால் அந்த விநியோகத்தை நம்முடைய கையில் வைத்துக் கொள்ள தமிழக அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளப்போகிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வருத்தப்பட வேண்டிய விஷயந்தான். நாம் மட்டும் அந்த ஆலோசனையைச் சொல்லவில்லை. கம்யூனிஸ்டு கட்சித் தொழிலமைச்சராக உள்ள கேரள மாநில அமைச்சரும், காங்கிரஸ் கட்சி அமைச்சர்களான கர்நாடக, ஆந்திர அமைச்சர்களும் சேர்ந்து இதுபற்றிப் பேசிப் பார்த்தோம். ஒன்றும் நடப்பதாகத் தெரியவில்லை. நூல்களைப் பங்கிடுவது எங்களுடைய விருப்பந்தான் என்று பேசுகிற தொனி தான் அங்கே இருக்கிறது. இப்போதுள்ள தொழிலமைச்சர் நல்ல நோக்கத்தோடு பேசுகிறார். அது சட்ட ரீதியாக உருவாகுமா என்பது பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த ஸிக் மில்ஸ் லிஸ்டில் கோதண்டராம் ஸ்பின்னிங் மில்ஸ், மதுரையில் எடுக்கப்பட ஏற்பாடுகள் அறிவிக்கப்பட்டன. அது எடுக்கப்படவில்லை. காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு முயற்சி செய்து பார்த்தோம். அதற்கு மத்திய அரசு ஒத்துக்கொள்கிற வாய்ப்பு இல்லை. அந்த கோதண்டராம் ஸ்பின்னிங் மில்ஸ் ரொம்ப மோசமான நிலையில் இருக்கிறது. அதை நடத்த முடியாது என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, அப்படியே விடப்பட்டு விட்டது.

திரு: செ. அரங்கநாயகம் : நாம் போட்ட பணத்தைத் திரும்பக் கேட்பது நியாயமான கோரிக்கைதான். அப்படிக் கிடைக்கவில்லை என்றால் போட்ட பணத்தை பங்குகளாக மாற்றி அந்த நிர்வாக போர்டில் இடம் பெறுகிற வகையில் ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஆலைகளுக்காக போடப்பட்டது 49 சதவீதம் என்று கருதுகிறேன். அப்படியே பங்காக வைத்துக்கொள்வதில் ஆட்சேபனை இல்லை. நிர்வாக முறையில் சில சிக்கல்கள் இருக்கின்றன. இந்த டேக் ஓவருக்கு முன்னாலேயே பண உதவி அந்த ஆலைகளுக்கு செய்யப்பட்டிருக்கிறது. நமக்கு வருவாய் வர வேண்டியிருக்கிறது. அந்தப் பணத்தை சட்டப்படி கொடுக்க முடியாது என்று சொல்லக்கூடாது என்று வற்புறுத்தி வந்தோம். அதை இப்போதைய தொழில் அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.



திரு. என். மருதாசலம் : தேசியவுடைமையாக்கப்பட்ட ஆலைகளில் உள்ள தொழிலாளர்களின் சம்பளம் பாதிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிலாளர்களுக்கு நல்லதுதான் என்று கருதுகிறேன். இப்போது மோசமான ஆலைகளை எடுத்து நடத்தியதற்குப் பின்னால் அவை லாபம் சம்பாதித்து அவர்கள் பாக்கிகளை எல்லாம் கொடுத்திருக்கிறோம். எனவே, தொழிலாளர்களுக்கு இது நல்லதுதான்.

## சண்முகர் மில்ஸ், ராஜபாளையம்

*653 வினா—திரு. க. சுப்பு : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜபாளையம் ஸ்ரீ சண்முகர் மில்ஸ் நூற்பாலைக்கு அரசு கடன் உதவி எதுவும் அளித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ)&(இ) : நொடித்த ஆலைகள் நூல் விற்பனையின்பேரில் செலுத்த வேண்டிய விற்பனை வரியில் ஒரு பகுதியை கடனாக வைத்துக்கொள்ளலாம் என்ற திட்டத்தின் கீழ் இந்த ஆலை ரூ. 65,084.67 காசு பெற்றது.

திரு. க. சுப்பு : அப்படி நேரடியாகச் செய்கிற உதவி தவிர நிதி உதவிக் கழகம் மூலம் கடன் பெற உத்தரவாதம் தரப்படுகிறது. அப்போது பாதிக்கப்பட்ட தொழிலாளர்களை—நிரந்தரமாக இருந்தவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டு தற்காலிகமாகப் போட்டிருக்கிறார்கள்—மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள உத்தரவாதம் கொடுக்கும்படி தொழிலாளர் நல அரசு என்பதால் இந்த அரசு அந்த முதலாளிகளை வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட கோரிக்கைகள் தொழிலாளர்களிடமிருந்து வருமானால், நிச்சயம் அரசின் சார்பில் வலியுறுத்தலாம்.

## *Industrial Co-operative Bank*

*654 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to integrate the Industrial Co-operative Bank into the regular co-operative structure; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ)&(இ) தொழில் கூட்டுறவு வங்கி சில குறிப்பிட்ட மாவட்டங்களில் மட்டுமே மைய வங்கியாக தம்முடைய நடவடிக்கைகளை உட்படுத்திக் கொள்ள வேண்டுமென்று இந்திய ரிசர்வ் வங்கி ஆலோசனை கூறியுள்ளது. இவ்வரசு இந்திய ரிசர்வ் வங்கியின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : இந்த ஸ்பிக் போன்ற ஸ்தாபனங்களுக்கு மெஷினெரிஸ் போன்றவை வாங்குவதற்கு நீண்ட காலக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. ரா மெட்டீரியல்ஸ் வாங்க பல பாங்குகளும் கடன்கள் வழங்குகின்றன. இப்படி பல்வேறு ஸ்தாபனங்கள் பல்வேறு கடன்கள் கொடுக்கின்றன. எனவே, எல்லாவற்றையும் ஒன்றாக இணைத்து ஒரே ஸ்தாபனமாக வைத்து என்னென்ன கடன்கள் வேண்டுமோ இவற்றைக் கொடுக்கக்கூடிய முறையில் ஒரு ஏற்பாட்டினைச் செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ், ஜே. சாதிக் பாட்சா : இப்போது ரிசர்வ் பாங்க் ரீ பைனான்சிங் பெஸிலிட்டீஸ் இல்லை என்ற முறையில் நாட்டில் ஒரு அப்பெக்ஸ் பாங்க் இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னேன்.

திரு. கே. எ. வகாப் : சென்னை மாநிலத்தில் ஒரே ஒரு தொழில் கூட்டுறவு வங்கிதான் இருக்கிறது. அதற்கும் இன்னும் ரிசர்வ் பாங்க் அனுமதி அளிக்கவில்லை. அதற்கு அனுமதி பெற்றுத் தரப்படுமா? 50 லட்சம் கடன் வேறு அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இதைப்பற்றியும் அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நாம் மத்திய அரசுக்கு இதுபற்றி எழுதியிருக்கிறோம், இன்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ் பாங்க்குக்கு ரீ பைனான்சிங் பெஸிலிடீஸ் வேண்டுமென்று. அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்களது யோசனை ஆலோசனையில் இருக்கிறது.

*Assistance for manufacture of clocks*

*655—*Q*. THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

Whether any assistance is given to the firms manufacturing clocks and time pieces in our State?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம், டைம் எய்ட் இந்தியா, சென்னை என்ற கடிகாரங்கள், மேஜை கடிகாரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை கடன் உதவி அளித்திருக்கிறது. அரசினரால் நிறுவப் பட்டுள்ள பல்வேறு கழகங்களினால் தொழிலுக்கு வழங்கப்படும் உதவிகளை கடிகாரம் உற்பத்தி செய்வோரும் பயன்படுத்திக் கொள்ளலாம்.



திரு. என். கே. பழனிசாமி : இதுவரை எவ்வளவு கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது? எந்தளவிற்கு லாபகரமாக அது வேலை செய்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தமிழ்நாடு முதலீட்டுக் கழகம் ரூ. 11 லட்சம் நிதி உதவி வழங்கியது. ரூ. 7.25 லட்சம் இதுவரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது, இந்த நிறுவனத்தை விரிவுபடுத்தும் திட்டத்திற்காக இறக்குமதி செய்யப் படவிருக்கும் இயந்திரம் இன்னும் வராததால் எஞ்சிய ரூ. 3.75 லட்சம் இன்னும் கொடுக்கப்படவில்லை. இந்த நிறுவனத்தின் நிதி நிலைமை போதுமானதாக இல்லை என்ற விவரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : நமது மாநிலத்தில் கடிகாரங்கள், மேஜை கடிகாரங்கள் தயாரிக்கும் நிறுவனம் தற்போது எந்த இடத்தில் நிறுவப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : டைம்ஸ் எய்ட் இந்தியா என்பது டி. டி. கே. குரூப். இது கடிகாரங்கள் தயார் செய்து வருகிறது. 96,000 கடிகாரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இடம், சென்னை.

*Sodium Dichromate Unit, Wallajahpet*

*656 *Q*.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether the Sodium Dichromate Unit at Wallajahpet, has commenced production; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : அங்கு இரண்டு தொழிற்சாலைகள் உள்ளன. ஒன்று புதிதாக ஸிப்காட்-ல் வந்துகொண்டிருக்கிறது. பத்து லட்சம் ரூபாய் முதலீடு உள்ள முதல் தொழிற்சாலை இரண்டு மூன்று ஆண்டுகளாக செயல்படாமல் இருக்கிறது. சில நிர்வாகக் கேடுகளால், வாங்கப்பட்ட மெஷினரி சரியாக வேலை செய்யவில்லை. அந்த அதிகாரிகள் பேரில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? அதை வேறு தனியாரிடம் கொடுத்து நல்ல முறையில் நடத்துவதற்கு அரசுமுன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் தொழிற்சாலை கே. எஸ். சீதாராமையா அன்ட் ஸன்ஸ், பங்களூர் என்ற நிறுவனத்தை இரண்டு டன் அளவிற்கு நாள் ஒன்றுக்கு உற்பத்தி செய்யச் சொல்லி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த அளவிற்கு உற்பத்தி செய்ய முடியாமல் இருப்பதாக அரசுக்குத் தெரிய வந்தது. இந்த நிறுவனத்தை எந்த வகையில் சீர்செய்யலாம் என்ற யோசனையும் இருக்கிறது. இதை விற்றுவிடும் செயற்குறிப்பும் அரசிடம் இருக்கிறது. தக்க நடவடிக்கைகள் எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : இதில் எவ்வளவு முதலீடு போடப்பட்டிருக்கிறது ? எவ்வளவு ஆண்டுகளாக உற்பத்தி செய்யப்படாமல் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ரூ. 4.65 லட்சம் நான்-ரிக்கரிங், ரூ. 3.46 லட்சம் ரிக்கரிங் காஸ்ட். இப்போது இரண்டு மூன்று ஆண்டுகளாக இது நடைபெறவில்லை.

திரு. கே. எ. வகாப் : இந்த சீதாராமையா அன்ட் ஸன்ஸ் கம்பெனிக்கு வேலை முடித்தால்தான் பணம் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஒப்புக்கொண்டு என்ன காரணத்தாலோ முதலில் பணம் கொடுத்து விட்டதால் சரியான மெஷினரிகள் போன்றவற்றைப் பொருத்தவில்லை. இதனால் என் தொகுதியில் ஒரு கெட்ட பெயராகியிருக்கிறது. அரசு முதலீடு போட்டும் செயல்படாமல் இருக்கிறது. ஏற்கனவே இதுபற்றி முன்னாள் தொழில் அமைச்சர் அவர்களிடம் கூறியிருக்கிறேன். எனவே, உடனடியாக தேர்தலுக்குள் இதைப் பைசல் செய்தால் நன்றாயிருக்கும்.

THE HON. THIRU. S. J. SADIQ PASHA : The design, erection and commissioning of the entire plant was entrusted to M/s. K. S. Seetharamiah and Sons, Bangalore on a turn-key basis at a cost of Rs. 2.84 lakhs. The initial 90% payment of the cost, namely Rs. 2.12 lakhs was made to the firm on 2-4-1971 on supply and erection of the various equipment and the balance of 10% of the amount is yet to be paid to the firm as they have not been able to commission the plant and show a production of 2 tonnes of Sodium Dichromate per day as per terms and conditions of supply.

அவர்களால் செய்யமுடியவில்லை என்பதால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இதை விற்றுவிடும் யோசனையும் இருக்கிறது. சில மாற்றங்களைச் செய்ய முடியுமா என்ற குறிப்பும் இருக்கிறது. மாற்றங்கள் செய்வது என்றால் மீண்டும் எட்டு லட்சம் ரூபாய் செலவாகலாம். எனவே, விற்றுவிடலாம் என்ற யோசனையும் இருக்கிறது.





(முற்பகல் 9.30)

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, வாலாஜாவில் இருக்கக் கூடிய சோடியம் டைக்ரோமைட் யூட்னி இப்போது வேலை செய்யவில்லை என்று சொன்னாலும் சிப்காட்டில் பெரிய அளவிலே இதே தொழிற்சாலை யூனிட்டை அரசு ஆரம்பிக்க இருக்கிறது. இதற்கான வேலைகளும் நடந்து கொண்டு வருகின்றன. ஆனால் இந்த யூனிட்டில் ஒரு குறிப்பிட்ட இயந்திரம் தான் வேலை செய்யவில்லையே தவிர, கட்டிடம் இருக்கிறது, கிணறுஇருக்கிறது, வாட்டர் சப்ளை நன்றாக இருக்கிறது. ஆகவே, இதே யூனிட்டில் வேறு தொழில், கெமிகல் இண்டஸ்ட்ரீஸ், திறப்பதற்கு அமைச்சரவர்கள் முயற்சி எடுத்துக் கொள்வார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, கூட்டுத் துறையில் தமிழ் நாடு க்ரோமைட்ஸ் அன்டு கெமிகல்ஸ் என்ற நிறுவனத்தின் மூலம் 3,300 டன் பேசிக் க்ரோமியம் சல்பேட் டானிங் பவுடர், 2,500 டன் சோடியம் டைக்ரோமைட், 2,400 டன் பை—ப்ராடக்ட் சல்பேட் உற்பத்தி செய்யக் கூடிய திட்டம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய யோசனையும் அரசின் கருத்தில் இருக்கிறது.

*System Improvement Schemes at Hosur*

*657 Q.—THIRU G. R. EDMUND : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Electricity Board has been permitted to avail the loans offered by the Rural Electricity Corporation for the System Improvement Schemes at Hosur in Dharmapuri district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) கிராம மின்வசதிக் கழகம், தருமபுரி மாவட்டத்தில் ஓசூரில் மின் நிலைய மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூ. 8.056 லட்சம் கடன் அனுமதித்துள்ளது. இந்தத் திட்டத்திற்கு முதல் தவணைக் கடன் தொகையாகிய ரூ. 6.042 இலட்சத்தை கிராம மின் வசதிக் கழகம் கொடுத்து விட்டது.

திரு. முனு ஆதி : தலைவரவர்களே, சமயநல்லூரில் முன்பு மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. இப்போது அங்கே இயந்திரம் மட்டும் இல்லை. மற்ற எல்லா வசதிகளும் இருக்கிற போது இயந்திரத்தை வாங்கி மின்சாரம் உற்பத்தி செய்கிற உத்தேசம் அரசுக்கு உண்டாவென்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, வேறு நல்ல சமயத்தில் கேள்வியைக் கேட்டதில் பதில் சொல்லலாம்.

## வருவாய் வாரியம்

*572 வினு—திரு. கா. வேழவேந்தன் திரு என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) வருவாய்த் துறை வாரியத்தைக் கலைத்துவிடும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ)&(இ) : வருவாய், வாரியத்தை நீக்குவது பற்றிய நிர்வாக சீர்திருத்த ஆணைக்குழுவின் பரிந்துரையின் மீதான மேல்நடவடிக்கையை ஒத்திவைக்க அரசு முடிவு செய்துள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, ஏற்கெனவே வருவாய் வாரியத்தை, கால தாமதங்கள் ஏற்படுவதன் காரணமாக, செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதன் காரணமாக, பல்வேறு காரணங்களுக்காக, கலைத்து விடலாம் என்ற கருத்து இருந்ததே, அது பற்றி அரசு தீவிர பரிசீலனை செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, அதைத்தான் சொன்னேன். நிர்வாக சீர்திருத்த ஆணைக் குழு 1972-ல் இந்த அறிக்கையைக் கொடுத்திருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து அதற்குப் பிறகு என்ன செய்யலாம் என்பதைப் பற்றி பிறகு முடிவு எடுக்கலாமென்று ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, வருவாய்த்துறை வாரியத்தைக் கலைத்து விடுவது என்று இந்த சபையிலே அப்போது வருவாய்த்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. மதியழகன் அவர்கள் கூறினார்கள். அதற்குப் பின்னால் அமைச்சராக இருந்த அவரும் போய்விட்டார்கள். வருவாய்வாரியத்தை கலைப்பது என்ற இந்தக் கருத்து வலுப்படுவதற்குப் பதிலாக பலஹீனப் படுத்துகிற வகையில் ஆளுங்கட்சிப் பக்கத்தில் இருந்து பதில்கள் வந்து கொண்டிருக்கின்றன. வருவாய் வாரியமானது மிக பழைய காலத்தில் இருந்து தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிற அமைப்பு.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைப் போடுங்கள்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, இன்றையதினம் உள்ள நிலைமைக்கு ஏற்ற முறையில் மாற்றியமைக்கப்படாமல் இதன் கால கெடுவை நீட்டிக் கொண்டு போவதால், பல சிக்கல்கள் இருப்பதை அறிந்திருந்தும், ஏன் அரசு கால தாமதம் செய்யவேண்டும் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, வருவாய்த்துறை வாரியத்தைக் கலைக்க வேண்டுமென்ற நோக்கத்தால் வருவாய்த்துறை வாரியத்தைக் கலைத்து விடலாமாவென்பதைத்தான் நில சீர்திருத்த ஆணைக் குழு பரிசீலனை செய்து, இதற்கு மாற்றுக எப்படிச் செய்வது என்கிற திட்டங்களையெல்லாம் அளித்திருக்கிறது. கால தாமதம் அல்ல. கால காலமாக இருந்து வந்ததை உடனடியாகக்கலைப்பதில் பல கஷ்டங்கள் இருக்கலாம். இவைகளை ஆராய்ந்து அதற்குப் பிறகு முடிவு எடுக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த வருவாய்த் துறை வாரியம் ஒரு சூபர் செக்ரடேரியட்டாக இருக்கிறது என்ற கருத்து இருந்து கொண்டிருக்கிறது. அதிலும் நிர்வாகத்தில் வேலைகள் சுமுகமாக நடக்கவேண்டுமானால் இந்த போர்ட் ஆஃப் ரெவின்யூவை எடுத்து விடுவது சாலச் சிறந்ததாக இருக்கும். செக்ரடரிகள் தன்னிச்சையாக இங்கய இயலும். ஆகவே, இதைப் புனர் பரிசீலனை செய்வதற்கும், சட்ட திட்டங்களைத் திருத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இந்தக் கருத்துக்களையெல்லாம் நிர்வாக சீர்திருத்தச் ஆணைக்குழு அறிக்கையில் கொடுத்திருக்கிறது. அரசு அவைகளைப் பரிசீலனை செய்து கொண்டு உள்ளது. இது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த வருவாய்த் துறை வாரியத்தைக் கலைக்கிற யோசனை சம்பந்தமாக பரிசீலனையில் இருக்கிறதென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்போது சில வறட்சிப் பணிகள் வேகமாக நடப்பதற்கு. கண்மாய்களை அமைப்பது, ஏரிகளை ஆழப்படுத்துவது போன்ற வேலைகள் வேகமாக நடப்பதற்கு இந்த பேப்பர்களுக்குத் தடங்கலாக நிற்பது வருவாய்த்துறை வாரியமாக இருக்கிறது. இந்தத் தடங்கலை நீக்க இந்த வருவாய்த்துறை வாரியத்தை உடனடியாக ரத்து செய்ய முடியாவிட்டாலும் கலைப்பதற்கு முன்னால் இடைக்காலத்தில் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

[ 1975 ஏப்ரல் 11

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, வருவாய்த் துறை மூலமாக சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் பரிசீலனை செய்து தங்களுடைய கருத்துக்களை அளித்திருக்கிறார்கள். இதற்காக வறட்சி சம்பந்தமாக, தனியாக ஒரு செயலாளர் நியமிக்கப்பட்டு, அந்தச் செயலாளர் மூலமாக காரியங்கள் செய்யப்பட்டு வருகிறதே தவிர வாரியத்தின் மூலமாக அல்ல. தனிச் செயலாளர் நியமிக்கப்பட்டு அவர் தலைமையின்கீழ் வறட்சி நிவாரணப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, வருவாய்த் துறை வாரியத்தைக் கலைக்கவேண்டுமென்பது 4 ஆண்டுகளுக்கு முன்னாலேயே அரசாங்கத்தினுடைய முடிவு. இதன் சாதக பாதகங்களை ஆராய்ந்துதான் முடிவு எடுக்கப்பட்டது. இப்படி முடிவு எடுத்தபின்பும் ஏன் அமுல் நடத்தவில்லை, ஏன் இதில் கால தாமதம் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இதைப் பரிசீலனை செய்வதற்குத்தான் நிர்வாக சீர்திருத்த ஆணைக்குழுவின் இடத்தில் ஒப்படைக்கப்பட்டு, அந்தக் குழுவும் பரிவுரை அளித்திருக்கிறது. கலைத்து விட்டு மாற்றாக எப்படிச் செய்யலாம் என்பதையெல்லாம் பற்றி குழு யோசனை தெரிவித்திருக்கிறது. இதைப் பரிசீலனை செய்வதற்குக் கால தாமதம் ஏற்படும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, வருவாய்த் துறை வாரியத்தைக் கலைப்பதற்கு முன்னால் சில நிர்வாகங்கள் பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒப்படைக்கப்பட்டு பரீட்சார்த்தமாகப் பார்த்து விட்டு, பலன், பிரதிபலன் இவைகளைப் பார்த்து முடிவுக்கு வரலாமே. இப்படிப்பட்ட சீர்திருத்தங்களை அரசாங்கம் செய்யுமா? இதனால் தெளிவான முடிவு கிடைக்குமே, ஆகவே செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இப்போது கூட வாரியத்திடமிருந்து சிலவற்றை எடுத்துக் கொண்டு நேரடியாக அரசு பரிசீலனை செய்து உத்தரவு வழங்கி வருகிறது. இதற்கான செயற்குறிப்பு இருக்கிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, வாரியத்திற்கு ஆண்டு நிர்வாகச் செலவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, தனிக்கேள்வி போடவும்.



1975 ஏப்ரல் 11 ]

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, பொது மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே ஒரு தடைக்கல் போல இருக்கிறது இந்த வாரியம். பொதுவான அபிப்பிராயம் வாரியத்தினிடத்திலிருந்து ............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே அமைச்சரவர்கள் பதிலைத் தெளிவாகச் சொல்லிவிட்டார். இது பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லிவிட்டார். திரும்பத் திரும்ப அதே கேள்வியைக் கேட்டால் அதே பதிலைத்தான் அவர் சொல்வார்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இப்படி கால தாமதம் ஏற்படுகிறது என்று சொல்லப் படுவதால், டெம்பரரி ரிலீஃபாக இத்தனை நாட்களுக்குள் பதில் வந்து விடவேண்டுமென்று சொல்லக் கூடிய வகையில் பரிவுரைகளை வாரியத்திற்கு அரசு வழங்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். இவைகளும் பரிசீலனையில் இருந்து வருகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, வருவாய்த்துறை வாரியத்தைக் கலைத்து விடவேண்டுமென்று அரசு எடுத்த முடிவிற்கு ஏற்ப நிர்வாக சீர்திருத்தக் குழு மாற்று யோசனையும் தெரிவித்திருக்கிறதே. என்னென்ன யோசனையைத் தெரிவித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, ஏற்கெனவே அந்த அறிக்கை சபையில் வைக்கப்பட்டிருக்கிறது. தனியாக இப்போது விவரம் தேவையென்று சொன்னால் இதற்காகத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

## தஞ்சை மாவட்டக் கலெக்டர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்

*573 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) : தஞ்சை மாவட்டக் கலெக்டர் அலுவலகத்தில் புதிய கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு நிதி நெருக்கடி நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## தோவாளை வட்ட அலுவலகக் கட்டடம்

*574 வினா—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குமரி மாவட்டம், தோவாளை தாலுகாவில் புதியதாக வட்ட அலுவலகம் (Taluk Office) கட்டுவதற்குரிய செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது கட்டட வேலை ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) தற்சமயம் இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. வீ.கே. இராஜாப்பிள்ளை: தலைவரவர்களே, தோவாளை தாலுகாவில் பூதபாண்டியில் வட்ட அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு 150 வருஷங்களுக்கு மேல் இருக்கும். இது பாழடைந்த நிலையில் இருக்கிறது. அதோடு இட நெருக்கடி மிகுதியால் அங்கே வேலை செய்கிற ஊழியர்களுக்கும், பொது மக்களுக்கும் இடைஞ்சலாக இருப்பதால் புதிய கட்டடத்தைக் கட்ட அரசால் உத்தரவிடப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, பூதபாண்டி அலுவலகம் 1800ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. தோவாளையில் ஊராட்சி ஒன்றிய கட்டடத்திற்கு அருகில் உள்ள காலி இடத்தில் எல்லா வசதிகளுடனும் கூடிய கட்டடம் ஒன்றைப் புதியதாகக் கட்டலாம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அது பரிசீலனை செய்யப்பட்டு இப்போது இந்த ஆண்டு எடுத்துக் கொள்வதில்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.



## *Price of milk in Madras City*

*658 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that the price of milk sold by the Tamil Nadu Dairy Development Corporation in the City of Madras has been increased; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) பால் உற்பத்தி, பால் பதப்படுத்துதல், போக்குவரத்து, விற்பனை ஆகிய ஒவ்வொன்றிலும் பயன்படுத்தப்படும் பொருள்களின் விலை உயர்ந்து விட்டதன் காரணமாக பால் விற்பனை விலை கூடுதலாகி உள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, இப்போது பால் விலை அதிகரித்ததன் காரணமாக சாதாரண மக்கள் அதிக விலை கொடுத்து வாங்க முடியவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? சர்க்கார் மாதவரம் பண்ணையில் இருக்கக் கூடிய மாடுகளின் எண்ணிக்கையைக் குறைத்ததன் காரணமாக வெளியே பால் அதிக விலைக்கு வாங்குவதன் காரணமாக இப்படி விலை ஏறிவிட்டது என்று சொல்லப்படுகிறது. ஆகவே பண்ணையை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடக் கூடாதாவென்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, மாதவரத்தில் இருக்கின்ற கால் நடைகள் எண்ணிக்கை குறைந்துவிட்ட காரணத்தால் பால் விலை ஏற்றப்பட்டது என்பது சரியல்ல. 1974-ம் வருடத்திலே பாலுடைய விலை மதுரை போன்ற இடங்களிலே 18 சத விகிதம் உயர்ந்து இருக்கின்றது. பால் புட்டியுடைய விலை 84 சதவிகிதம் அதிகரித்து இருக்கின்றது. பால் புட்டிக்கு போடுகிற அலுமினியம் மூடி 27 சத விகிதம் அதிகமாகிவிட்டது. போக்குவரத்துச் செலவு, டீசல் விலை உயர்வு போன்றவை 20 சத விகிதம் அதிகரித்து உள்ளது. பாலைக் குளிர வைத்தல், பதப்படுத்துகிற செலவு, இதற்காகும் மின்சாரம் 12 சதவிகிதம் அதிகமாகிறது. பால் பவுடர் விலை 49 சத விகிதம் உயர்ந்து உள்ளது. இதே போல கோதுமைத் தவிடு, கடலைப் பொட்டு போன்ற கால நடைத் தேவைகள் பொருள்கள் விலை 100 சத விகிதம் உயர்ந்

துள்ளது. ஆகவே பால் உற்பத்தியாளர்களுக்கு கூடுதலான விலைக் கூட்டிக் கொடுக்க, அதே போல நிர்வாகச் செலவு பால் வள வாரியம் நஷ்டம் ஆகாமல் இருக்கின்ற முறையில் கூட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

THIRU K.M. SUBRAMANIAM: What is the percentage of increase in the price of Milk from January 1974 to 1st April 1975?

மாண்புமிகு திரு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, லிட்டர் 20 பைசா அதிகரிக்கப்பட்டுள்ளது.

திரு. முனு ஆதி: தலைவர் அவர்களே, அலுமினியம் மூடி, சீசா போன்றவைகள் விலை அதிகரித்துள்ளது என்று சொல்கிறார்கள். பாலிதீன் பையில் விநியோகம் செய்கிறார்கள். இதில் கெடுதல் இருக்கிறதாகச் சொல்கிறார்கள் பாலிதீன் உபயோகப்படுத்துகிறவர்கள். அதற்கு அரசு என்ன செய்யப் போகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, பாலிதீன் பையில் விநியோகிப்பதால் எந்தக் கெடுதலும் கிடையாது. தமிழ்நாட்டில் இந்தத் திட்டம் இப்போது ஆரம்பித்து இருக்கிறோம். வெளிநாடுகளிலே எல்லாம் மூன்று மாதம் கூட இந்தப் பால் கெடாத அளவு இந்த பை மூலம் விநியோகம் செய்கிறார்கள். எந்தக் கெடுதலும் கிடையாது. இந்த புது திட்டத்திற்கு மாசு கற்பித்து மக்கள் மத்தியில் தவறான எண்ணம் உண்டு பண்ண வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இன்று பால் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய இந்த மாடுகளுக்குத் தேவையான புண்ணாக்கு போன்ற பொருள்கள் விலை அதிகரித்து உள்ளதாகச் சொல்கிறார்கள். இன்னும் பால் உற்பத்தியாகிற இடத்திலிருந்து செல்லிங் சென்டருக்கு கொண்டு வருவதில் செலவு அதிகமாகிறது. பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு ரூபாய் கொடுத்தால், இடையிலுள்ள பால் சங்கம், பால் யூனியன்கள் மூலமாகவும் வாங்குகிறவர்களுக்கு விலை அதிகமாகவும் ஆகிறது. மத்தியில் உள்ள இடைத் தரகர்களுக்கு உள்ள மார்ஜினை குறைக்க அமைச்சர் ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பால் கொள்முதல் செய்து சென்னை, மதுரை போன்ற இடங்களுக்கு நீண்ட தூரத்திலிருந்து கொண்டு வருகிறோம். உதாரணமாக ஊட்டி, நீலகிரி பகுதி



யிலிருந்தும் கோவை, ஈரோடு பகுதியிலிருந்தும் சென்னைக்கு கொண்டுவருகிறோம். அதேமாதிரி மதுரைக்கு திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகியபகுதிகளிலிருந்து வரவேண்டும். இப்படிக் கொண்டு வருகிற பாலை நேரிடையாகக் கொண்டு வர முடியாது. இதைப் பக்குவப்படுத்தி லாரிகள் மூலமாகக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். இந்தச் செலவு இன்றியமையாத செலவாக இருந்தாலும் அந்தச் செலவு அநாவசியமான செலவாக இருக்குமானால் குறைக்க வேண்டுமென்று பால் வள வாரியத்தைக் கேட்டுக் கொண்டு இருக்கிறோம்.

திரு. வி. பழனிவேலு: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் பகுதியில் நிறைய பால் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் அங்கு ஒரு லிட்டருக்கு ரூ. 1-10 அல்லது ரூ.1-20 அந்த வட்டத்தில் இருக்கிற உற்பத்தியாளர்களுக்குக்கொடுக்கப்படுகிறது உண்மையா? உற்பத்தியாளர்களுக்கு எவ்வளவு விலை கொடுக்கவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்து இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, இந்த பால் உற்பத்தியாளர்களுக்கு விலை கொடுப்பதைப் பொறுத்தவரையில் இந்த பாலிலே இருக்கின்ற கொழுப்புச் சத்து, இதர சத்துக்கள் அடிப்படையில் கொடுக்கிறோம். தற்போது தமிழ்நாட்டில் சில பகுதிகளில் கூட்டுறவு முறையில் இருக்கின்ற உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை கொடுக்க திட்டம் உருவாகி பால் உற்பத்தியாளர்களுக்கு கூடுதலாக விலை கிடைக்கிற வகையில் ஈரோடு, வடாற்கா, ஆம்பூர் பகுதியிலே, தருமபுரி மாவட்டத்தில் சில பகுதிகளில் இப்போது நடைமுறைக்குக் கொண்டு வந்து இருக்கிறோம். அப்படிப்பட்ட நடைமுறை தமிழ்நாடு பூராவும் வருகின்ற நேரத்தில் கூடுதலான விலை உற்பத்தியாளர்களுக்கு கொடுக்க வேண்டுமென்ற திட்டம் துவக்கி இருக்கிறோம்.

திரு. கே. என். குமாரசாமி: சார், இந்த பால் உற்பத்தியாளர்களுக்கு 3 சதவீதம் விலை இப்போது கூட்டிக் கொடுக்கப்படுகிறது. ஆனால் தீவனம், பிண்ணாக்கு, அதற்கு வேண்டிய உபகரணங்கள் மூலமாக 100 சத வீதம் ஏறுகிறது, எப்படி இதைச் சரிக்கட்டமுடியும்? கொழுப்புச் சத்து எந்த அளவுக்கு இருக்கின்றதோ அந்த அளவுக்குத்தான் பால் விலை கூடுதலாக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது கொழுப்புச் சத்து மிகக் குறைவு. எந்த அளவு சத்து உள்ளது என்று நிரூபிக்க முடியாது. தண்ணீர் பாலுக்கு அந்த விலை கொடுக்கக் கூடாது. அதற்கு அமைச்சர் ஏதாவது ஏற்பாடு செய்வாரா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கொழுப்புச் சத்து எங்கு அதிகமாகக் கிடைக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் குமாரசாமி அவர்களுக்குத் தெரியும். அவர் பசு மாடு வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதிகமாக பசுமையான இடத்தில் மேய்ந்து பால் கொடுக்கிற மாடு அதிக அளவு பால் கொடுக்கலாம். ஆனால் வறட்சி இருக்கின்ற இடத்தில் உள்ள மாடு கொடுக்கிற பால் குறைவாக இருந்தாலும் அதிலே கொழுப்புச்சத்து, இதர சத்து அதிகமாக இருக்கின்றது என்பது நடைமுறையில் கண்ட உண்மை. கொழுப்பு சத்துடைய அடிப்படையில் கொடுக்கிற விலைதான் உற்பத்தியாளர்களுக்கு கூடுதலாக விலை கொடுக்கிறது என்பது நடைமுறையில் கண்ட உண்மையாகும். உதாரணமாக, கொழுப்புச்சத்து இல்லாமல் மொத்தமான அடிப்படையில் வாங்குகிற பாலுக்கு ஒரு ரூபாய் வரையில் கோவாபரேடிவ் சங்கங்கள் வழங்கி வந்தார்கள். இப்போது கொழுப்பு சத்து, இதர சத்து அடிப்படையில் போடுகிற விலை சுமார் 80 பைசாவிலிருந்து ஒரு ரூபாய்க்கு பதிலாக ரூ. 1-80-லிருந்து ரூ. 2 வரை பால் உற்பத்தியாளர்களுக்கு கிடைக்கிறது. இந்த நடைமுறையை தமிழகத்தில் செய்ய வேண்டுமென்று தற்போது சில இடங்களில் அமுல் படுத்திக்கொண்டு இருக்கிறோம்.

திரு. த. சோலையா : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே பால் உற்பத்தியாகி அதைப் பக்குவப்படுத்தி தமிழ்நாட்டில் கொடுக்கிற அளவுக்கு விநியோகிக்கிறீர்கள். பால் கறந்த உடன் விநியோகிக்கிற முறை இருக்கின்றதா என்பதை அறிவிப்பீர்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : உள்ளூர்காரர்களுக்குத் தான் உடனடியாக விநியோகிக்க முடியும். நீண்ட தூரத்திலே இருக்கின்ற நகரங்களில் விநியோகிக்க வேண்டுமென்றால் அதற்கான போக்குவரத்து நேரங்கள் இருக்கின்றன. இதை அனுசரித்துத் தான் கொண்டு வருகின்ற பாலை 24 மணி நேரமானாலும், 48 மணி நேரமானாலும் எந்த வகையிலும் கெடாமல் பக்குவப்படுத்தி சென்னை, மதுரை போன்ற இடங்களில் விநியோகப்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, பாலுக்கு பேர் போன இடம் காங்கேயம் பகுதி. இந்த இடத்தில் கால்சியம் கண்டென்ட் பூமி இருக்கின்றது. கொழுக்கட்டைப் புல் அதிகமாக வளருகிறது. நான் பல முறை இந்த மன்றத்தில் குறிப்பிட்டமாதிரி அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைக்கக் கூடிய அளவுக்கு க்ரேஸிங் லேண்ட் கொடுக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று பலமுறை கேட்டேன். இப்போதும் அதே கேள்வியைக் கேட்கிறேன். சின்ன விவசாயிகளுக்கு, 4 ஏக்கர் 2 ஏக்கர் உள்ளவர்களுக்கு க்ரேஸிங் லேண்ட் தர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே. காங்கேயம் பகுதியை நானும் சுற்றிப் பார்த்து இருக்கிறேன். சிறிய விவசாயிகளாக இருந்தாலும் கூட பெரும்பான்மையான இடங்களில் புல் வளர்த்து கால்நடைகளை வளர்த்து அதன் மூலம் சம்பாதிக்கிறவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் உற்பத்தியாகிற நல்ல பாலை மார்கெட்டுக்குக்கொண்டு வரவேண்டுமென்ற அடிப்படையில்தான் ஈரோட்டில் மில்க் ப்ரொட்யூசர்ஸ் யூனியன் என்று தனியாக அமைத்து அதன் மூலம் செயல்பட்டு வருகிறோம். இப்போது இருக்கின்ற பால் யூனியனை சரியாக நடத்தி பால் உற்பத்தி செய்யலாம் என்று அரசு கருதுகிறது.

## *Milk with fat contents*

*659 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that the possibility of introducing a new type of milk with high fat content for consumers has been considered by the Tamil Nadu Dairy Development Corporation; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) அதிக கொழுப்புச் சத்துள்ள புதிய வகை. பாலை மக்களுக்கு வழங்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், இப்போது பால் பூராவும் டோன்ட் மில்க் ஆக இருக்கின்றது. ஏற்கெனவே பாலை கிராமப் பகுதியிலிருந்து விலைக்கு வாங்கி இங்கே கொண்டுவந்து ஒரு லிட்டருக்கு மிக்ஸ் பண்ணி பதப்படுத்தி விநியோகப்படுத்தப் படுகிறது. இது எந்த விதத்தில் சத்துள்ள பாலாக இருக்க முடியும்? இதைத்தான் ஆஸ்பத்திரியில் விநியோகிக்கிறார்கள். இந்தப் பாலில் சத்து அதிகரிக்க சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே சாதாரணமாக பசு மாட்டுப்பாலில் சுமார் 6 சதவிகித கொழுப்புச் சத்து இருப்பதாகவும், எருமைப்பாலில் 8 சதவீதம், 8½ சதவீதம் கொழுப்புச் சத்து இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் மக்களுக்குத் தேவையான சரிசமமான கொழுப்புச் சத்து 3 சதவீதம் இருந்தால் போதும் என்று விஞ்ஞான ரீதியில் சொல்கிறார்கள். அந்த அடிப்படையில் 3 சதவீதம் கொழுப்புச் சத்துள்ள பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.80-க்கு விற்கிறது. இந்த அளவு கொழுப்புச் சத்துள்ள பால் நம்முடைய பால் பண்ணையில்

மட்டுமல்ல, பம்பாய், பெங்களூர், ஆமதாபாத், பரோடா போன்ற இடங்களில் இருக்கின்ற பால் பண்ணைகளிலும் இதே அளவு கொழுப்புச் சத்துள்ள பால்தான் விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அளவு கொழுப்புச் சத்து நமக்குப் போதும் என்று விஞ்ஞான ரீதியில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

## ஆவுடையார் கோயில், தஞ்சாவூர்

*660. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை ஆவுடையார் கோயிலைப் புதுப்பிக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) மேற்படி திருக்கோயிலின் திருப்பணிக்காக சுமார் $10\frac{1}{2}$ லட்சம் ரூபாய்க்கு மதிப்பீடுகள் ஒப்புதல் அளிக்கப்பட்டு அதில் $2\frac{1}{2}$ லட்சம் ரூபாய் மதிப்புள்ள வேலைகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுவிட்டன. மீதியுள்ள வேலைகள் துவங்கப்பட்டு படிப்படியாக முன்னேறி வருகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஆவுடையார் கோயில் பழம்பெரும் சிறப்புடையது. அந்தக் கோயிலை புதுப்பிப்பதை நான் வரவேற்கிறேன். புதுப்பிப்பதற்கு வெளிநாடுகளிலிருந்து உதவி கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படிக் கொடுக்கப்பட்டிருந்தால் எங்கே இருந்து உதவி பெறப்பட்டது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, வெளிநாட்டு உதவி எதுவும் கிடையாது. அந்தக் கோயில் சார்பில் ஒரு திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் சார்பில் தான் நிதி பொதுமக்களிடமிருந்தும், அரசாங்கத்திடமிருந்தும் பெறப்பட்டு, புதுப்பித்தல் பணி செய்யப்பட்டு வருகிறது.

## *Training for science teachers*

*641 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government propose to retrain B.T. Science Teachers for handling the new upgraded syllabus to be introduced from 1975-76; and

(*b*) if so, the details thereof?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; (அ) ஆம்.

(இ) ஒரு அறிக்கை @ சட்டமன்றப்பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்தியா பூராவும் ஒரே சிலபஸ் சிஸ்டம் என்ற முறையில் வைத்திருக்கிறார்கள் ; அது நல்ல முறை என்றும் சொல்கிறார்கள். நம்முடைய சர்க்கார் சிலபஸ்ஸில் மாற்றம் செய்வதாகச் சொன்னார்கள். அப்படி மாற்றம் செய்வது, இந்தியா பூராவுக்கும் இருக்கிற அந்த சிலபஸை ஒட்டி இருக்கிறதா அல்லது தனிப்பட்ட முறையில் வேறுவிதமாக இருக்கிறதா ? எந்த அளவுக்குத் தரத்தை உயர்த்த சர்க்கார் திட்டம் வைத்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரையில் இந்தியா முழுவதற்கும் ஒரேவிதமான பாடத் திட்டம் வைப்பது என்பது பொருந்தாது. ஏனென்றால் மாநிலத்திற்கு மாநிலம், மாவட்டத்திற்கு மாவட்டம் மாற்றம் இருக்கிறது. அதைப்பொறுத்துத்தான் பாடத் திட்டம் அமையவேண்டும். ஆனால் 'என். சி. ஆர். டி. -யில் மாணவர்களுக்கு கணிதவியலிலும், அறிவியலிலும் எந்தெந்த வகையில் பயிற்சி அளிக்க வேண்டுமென்று ஒரு மாதிரித் திட்டம் வைத்திருக்கிறார்கள். அதை அடிப்படையாகக் கொண்டு புதிய கணித இயலும், அறிவியல் பாடமும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே மேல் வகுப்புகளில் மட்டும் அறிவியல் பாடம் சொல்லிக்கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது உயர் தொடக்கப் பள்ளியிலிருந்து அறிவியல் பாடம் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. அகில இந்திய அடிப்படையில் வகுத்துத் தந்த கொள்கையின் அடிப்படையில்தான் நம்முடைய மாநிலத்தில் இந்தப் புதிய முறை அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இப்போது 'செட்-தியரி' என்று கணிதத்திலே புகுத்தியிருப்பதாகச் சொல்கிறார்கள். ஏற்கெனவே அமெரிக்காவில் இந்த 'செட்-தியரி' புகுத்தப்பட்டு 20 வருஷமாக நடைமுறைப்படுத்திய பிறகு இது பிரயோஜனம் இல்லை என்று தள்ளிவிட்டார்கள். கடைக்குப் போய் கத்தரிக்காய் வாங்குவதற்குக் கூட பயன்படாது என்று தூக்கிப்போட்டு விட்டார்கள். அந்த எக்ஸ். ஒய். இசட். முறையில் இருக்கிற 'செட்-தியரியை', அமெரிக்காவில் பயன்படாது என்று கைவிடப்பட்ட தியரியை நாம் இப்போது புகுத்துவதினால் என்ன பிரயோஜனம் இருக்கிறது? ஆகவே, மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய பாடத்திட்டங்களைக் கொண்டுவருவார்களா ?

@ 554, 555-ம் பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தப் பாடத் திட்டம் நுழைவது சரியா தவறா என்று சொல்கிற ஆற்றல் நமக்கில்லை. அறிவார்ந்த, கற்றறிந்த வல்லுநர் குழு ஆராய்ந்து, அகில இந்திய அடிப்படையில் செய்யப்பட்ட சிபாரிசை அடிப்படையாக வைத்து, இந்த மாநிலத்தில் இப் பணியை ஏற்றிருக்கிற வல்லுநர்கள் மட்டுமே இத்தகைய கருத்துக்களை உருவாக்கித் தருகிறார்கள். அதைத்தான் நாம் செயல்படுத்துகிறோம். ஆகவே, பயன்படுகின்ற கல்வியைப் புகுத்த வேண்டுமென்ற நோக்கத்தில்தான் இந்தப் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இதில் பயன் இல்லை என்று சொல்வதற்கில்லை. ஏற்கெனவே இருந்த குறைபாடுகள் இதனால் நீக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## புகுமுக வகுப்பில் தமிழில் படிக்கும் மாணவர்கள்

*642 வினா—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பி.யு. சி. வகுப்பில் தமிழைப் பாடமொழியாகப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் குறைந்துள்ளதா ?

(இ) அப்படியானால், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 1972-73 ஆம் ஆண்டைவிட 1973-74-ல் புகுமுக வகுப்பில் தமிழைப் பாடமொழியாகப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. ஆனால், 1974-75-ல் இது 1973-74 ஆம் ஆண்டைவிட உயர்ந்துள்ளது.

(இ) 1973-74-ல் ஏற்பட்ட இந்தக் குறைவு தமிழ் போதனா மொழி வகுப்பில் மட்டுமல்லாமல் பொதுவாக பட்டப்படிப்பு வகுப்பிலும், ஆங்கில போதனா மொழி வகுப்பிலும் ஏற்பட்டுள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : சார், தமிழைப் பாடமொழியாகக் கொண்டு படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட அதிகமாக இருப்பதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு விசேஷ சலுகை எல்லாம் அளிக்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருந்தது. அந்தச் சலுகைகள் எல்லாம் முறையாக வழங்கப்படுகின்றனவா? இன்னும் அதிகமான சலுகை அளிக்க புதிய திட்டம் ஏதாவது இருக்கிறதா ?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழைப்பாடமொழியாக எடுத்துப்படிக்கின்ற மாணவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற வகையில் புகுமுக வகுப்பில் நூல்கள் வாங்க 50 ரூபாயும், பட்டப் படிப்பில் ஆண்டு ஒன்றுக்கு 180 ரூபாயும் தந்துவருகிறோம். அவர்களுக்கு இந்த வகையில் எந்த அளவுக்கு ஊக்கம் தரவேண்டுமோ அந்த அளவுக்குத் தந்துவருகிறோம். அந்த முயற்சியில், அவர்களுக்கு கல்லூரிகளில், பல்வேறு கல்லூரிகளில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சில பல கல்லூரிகளில் தமிழ்ப் பாடமொழி வகுப்புகளில் மட்டுமல்லாமல் ஆங்கிலப்பாடமொழி வகுப்புகளில்கூட இடம் காலியாகஇருக்கிறது. ஆனால் சில குறிப்பிட்ட கல்லூரிகளில், பெரும் நகரங்களில் இருக்கிற கல்லூரிகளில் இட நெருக்கடி இருக்கிறது. மாணவர்கள் சிற்றூர்களில் இருக்கிற கல்லூரிகளுக்குச் சென்று படிக்க போதிய ஆர்வம் காட்டாததால் அங்கெல்லாம் இடம் காலி இருக்கிறது; சேருகின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. இது தமிழ் பாட மொழிக்கு மட்டுமல்ல ; ஆங்கில பாட மொழிக்கும்தான். பெரும் நகரங்களில் கூட சில பல கல்லூரிகளில் இடம் காலி இருக்கிறது. 1973—74ஆம் ஆண்டைவிட 1974—75ஆம் ஆண்டில் அதிக மாணவர்கள் படித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு மேலும் உயரும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

*643 Q.—Thirumathi T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the action taken by the Government to avoid delay in payment of incentive money to Tamil medium students in the Colleges?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை அளிப்பதில் வரம்பு கடந்த தாமதம் ஏதும் ஏற்படவில்லை.

திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கல்லூரிகளில் தமிழை பாடமொழியாக ஆக்கும் எண்ணம், தாய்மொழியில் படிக்கின்றவர்களுக்கு அறிவு வளர்ச்சி ஏற்படும் என்ற அடிப்படையில் ஏற்பட்டதாகும் ; அந்த அடிப்படையில் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, அப்படிப் படிக்கின்றவர்களின் தேர்வு, திறமை நல்ல முறையில் போட்டி போடுவதாக இருக்க வேண்டும். ஆனால் நிலைமை அப்படிஇல்லை. அதற்குக்காரணம் கல்லூரிகளில் தமிழைப் பாடமொழியாகக் கொண்டுவருவதை பலர் எதிர்க்கிறார்கள். ஆங்கிலத்தைப் பாட மொழியாகக் கொண்டவர்கள் தங்களுடைய சுயநலத்தைக் கருத்தில் கொண்டு, தங்களுடைய உரிமை, தாங்கள் அனுபவித்து வந்த சலுகை பாதிக்கப்படுகிறது என்ற எண்ணம் கொண்டசிலமேல் சாதிக்கா ரர்கள்எதிர்ப்புதெரிவிக்கிறார்கள் என்ற

புகார் இருந்து வருகிறது. ஆகவே, அவர்களுடைய இந்தத் தவருன எண்ணத்தால் கல்லூரித் தேர்வுகளில் தமிழைப் பாட மொழியாகக் கொண்ட மாணவர்கள் நல்ல முறையில் தேர்ச்சி பெற முடியவில்லை என்ற புகார் வந்திருக்கிறதா ? வந்திருக்கிறது என்ருல் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்ற புகார் எதுவும் இல்லை. தமிழைப் பாடமொழியாக எடுத்தவர்கள் ஆங்கிலத்தைப் பாட மொழியாக எடுத்தவர்களைவிட கூடுதல் எண்கள் பெற்றிருக்கிருர்கள் என்றுதான் வருகிறது. புகுமுக வகுப்பில் தமிழை அல்லது ஆங்கிலத்தைப் பாட மொழியாக எடுத்தவர்கள் மருத்துவக் கல்வி அல்லது பொறியியல் கல்விக்கு வரும்போது அவர்கள் தமிழில் படித்திருக்கிருர்களா அல்லது ஆங்கிலத்தில் படித்திருக்கிருர்களா என்று பார்ப்பதில்லை. அவர்கள் எடுத்திருக்கின்ற மதிப்பு எண்களைத்தான் பார்க்கிருர்கள். தமிழில் படித்தவர்கள் ஆங்கிலத்தில் படித்தவர்களை விட அதிகம் எண்கள் பெற்றிருக்கிருர்கள். ஆகவே, அவர்களுக்கு வாய்ப்பு அதிகம் கிடைக்கிறது. மேலும் எந்தெந்த வகையில் ஊக்குவிக்க வேண்டுமோ அந்த வகையில் ஊக்குவிக்க அரசு முனைந்திருக்கிறது.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, சில மத்திய அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் இவைகளில் எல்லாம் வேலை வாய்ப்பு ஏற்படும்போது தமிழைப் பாடமொழியாக ஏற்றுப் படித்தவர்களுக்கு முதலிடம் தருவது மறுக்கப்படுகிறது. அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மத்திய அரசைப் பொறுத்தவரையில் நாம் நடவடிக்கை எடுக்க முடியாது. மாநில அரசைப் பொறுத்தவரையில் சில குறிப்பிட்ட துறைகளில் தமிழைப் பாடமொழியாக எடுத்துப் படித்தவர்களுக்கு முன்னுரிமை தரவேண்டுமென்று நாம் அறிவிப்பு செய்திருக்கிருேம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், சட்டக் கல்லூரியில் படிக்கக் கூடிய மாணவர்கள் தங்களுக்கு தமிழில் போதுமான புத்தகங்கள் கிடைக்கவில்லை என்று புகார் சொல்கிருர்கள். சட்டக் கல்லூரி மாணவர்களைக் கேட்டபோது தமிழில் போதுமான புத்தகங்கள் கிடைக்கவில்லை என்றும், தமிழில் பரீட்சை எழுத இன்னும் உத்தரவு வரவில்லை என்றும் கூறிஞர்கள். அந்த நிலைமை மாறி, தமிழில் போதுமான புத்தகங்கள் கிடைக்கச் செய்யவும், தமிழில் பரீட்சை எழுத ஊக்கம் அளிக்கவும் அரசு ஏற்பாடு செய்யுமா ?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த ஒரு இடர்ப்பாடு இருந்தது. பல்கலைக்கழக ஆட்சிக் குழுவுக்கு அது கொண்டுவரப்பட்டது. இந்த ஆண்டு கேள்வி ஆங்கிலத்தில் இருந்தாலும் அவர்கள் தமிழில் பதில் எழுதலாம் என்று சிண்டிகேட் அவை ஒப்புதல் அளித்திருக்கிறது. சட்டப் புத்தகங்களைத் தமிழில் கொண்டுவர தனிக் குழு போட்டு, ஏற்பாடு செய்திருக்கிருர்கள். அது மட்டுமல்ல, புகுமுக வகுப்பு, பட்டப் படிப்பு, பட்ட மேல் படிப்பு படிக்கின்றவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனுல், சட்டப் படிப்பைப் பொறுத்த வரையில் அந்த ஏற்பாடுகள், கையாளப்படவில்லை. அதுபற்றி கோரிக்கை வைத்திருக்கிருர்கள் அது அரசின் பரிசிலனையில் இருக்கிறது.

(முற்பகல் 10-00)

திரு. ஆலடி அருணு : தலைவர் அவர்களே, தமிழ் போதனு மொழியில் படிப்பவர்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்க அரசாங்கம் சில சலுகைகளைத் தருகிறது என்ருலும் எதிர்பார்த்த அளவுக்கு நாளுக்குநாள் அந்த எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. ஆகவே, இந்த மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஃப்ரீ எஜுகேஷன்—இலவசக் கல்வியை கல்லூரி மட்டத்தில் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த அடிப்படையில்தான் இப்போது கொடுத்துக்கொண்டு வருகிருேம். புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி இருக்கிறது. பட்டப் படிப்புக்கு ஒரு ஆண்டுக்கு ரூ. 180 தான் கட்டணம். மூன்று ஆண்டுகளுக்கும்—180, 180, 180 என்று அடிப்படையில்தான் சப்சிடி தருகிருேம். ஆக, இது ஒரு வகையில் இலவசக் கல்வி என்ற முறையில்தான் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : இப்போது கல்வி கற்றுக்கொள்வது என்பது அறிவு வளர்வதற்கு என்பதைவிட ஜீவனம் செய்வதற்கான கருவியாகத்தான் பயன்படுத்துகிருர்கள். ஆகவே இந்தக் கல்வியைத் தமிழில் சொல்லிக் கொடுத்தாலும், எந்த வகையில் கற்றுக் கொடுத்தாலும்கூட கல்வி முடிந்தபின்னுல் வாழ்க்கையை நடத்த ஏற்ற வகையில் இந்தக் கல்வியை மாற்றி அமைக்க முடியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உதவியைப் பற்றிக் கேள்வி வந்தால் கல்வியைப் பற்றியே கேட்கப் போய் விட்டீர்களே. திரு. பாலசுந்தரம்.

திரு. வை.பாலசுந்தரம்: தமிழ்மொழியைப் பயிற்சிமொழியாக எடுத்துப்படித்து வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அரசாங்கப் பணியில் முதலிடம் தருவது அரசாங்கத்தின் கொள்கை. இந்த அடிப்படையில் அப்படி தமிழ்மொழியில் படித்து வெற்றி பெற்றவர்கள் எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறதுஎன்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்: தமிழையே ஆட்சிமொழியாகக் கொண்டுள்ள உள்ளாட்சித்துறை, அறநிலையத்துறை ஆகியவற்றில் எல்லாம் தமிழையே பாடமொழியாக எடுத்து வெற்றி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. கந்தசாமி : தமிழில் பயிலும் மாணவர்களுக்கு ஊக்கம் கொடுப்பதற்காகத் தொகை கொடுத்தாலும்—எண்ணிக்கை குறைந்து கொண்டு வருவது—வேலையில்லாத் திண்டாட்டம் காரணமாக—உத்தியோகங்களில்—ப்ரபரென்சியல் ட்ரீட்மெண்டு இவர்களுக்குக் கொடுத்தால்—இது அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதுபற்றிய இரண்டு துணைக் கேள்விகளுக்கு நான் பதில் அளித்திருக்கிறேன். தமிழையே நிர்வாக மொழியாகக் கொண்டுள்ள துறைகளில் இவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : பள்ளிகளில் தமிழில் கற்றுக் கொடுத்து கல்லூரிகளுக்குச் செல்லும்போது ஆங்கிலத்தில் கற்க வேண்டியிருக்கிறது. பல சொற்களைப் புரிந்துகொள்ள முடியாத காரணத்தினால் பலர் தேர்வில் தோற்றுவிடுகிறார்கள். ஆகவே, தமிழில் படித்து வருகிறவர்களுக்கு ஓரியண்டேஷன் முறையில் கல்விப் பயிற்சி கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்காகத் தான் தமிழில் படித்தவர்கள், அறிவியல் படிப்பு, கலையியல் படிப்பு, போன்றவற்றில் பட்டப்படிப்பையும் தமிழிலேயே படிப்பதற்கு வசதி செய்யப்பட்டு வருகிறது, ஆற்றல் திறன், அறிவுத் திறன் வளரும் என்பதற்காக. —டு



## வெள்ளிக் குறியிடாத வினாக்கள்

### *Assistance for Coconut Oil Production*

*Q.* 1—

THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state —

(*a*) whether it is a fact that the Government are offering financial assistance for the processing and manufacture of coconut oil in this State ; and

(*b*) If so, the details thereof?

*A.*—

(*a*) No.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

### *Allotment of Fertilisers.*

*Q.* 2—

THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state —

The details of allotments of fertilisers to this State by the Government of India during 1972.

ப.—

The details of fertilisers allotted to Tamil Nadu during 1972 are furnished below :—

| Period. | Name of fertiliser | 1971-72 allotment made by the Government of India. (M.T.) | 1972-73 allotment made by the Government of India. (M.T.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| Kharif .. | Ammonium Sulphate .. | .. | 18,060 |
| | Urea .. .. .. .. | 20,000 | 88,800 |
| | Di-Ammonium Phosphate | .. | 15,000 |
| | N.P.K. (15:15:15) .. | .. | 18,500 |
| | N.P.K. (10:26:26) .. | .. | 1,500 |
| | In term of 'N' .. | 9,200 | 50,176 |
| Rabi .. .. | Ammonium Sulphate .. | 44,000 | 24,283 |
| | Urea .. .. .. | 65,660 | 1,21,966 |
| | Di-Ammonium Phosphate | .. | 27,047 |
| | Calcium Ammonium Nitrate. | .. | 29,505 |
| | N.P.K. (15: 15:15) .. | .. | 14,317 |
| | N.P.K. (16:16:16) .. | .. | 2,200 |
| | In terms of 'N' .. | 39,223 | 76,223 |



| Period. | Variety. | Quantity allocated by the Government of India. (M.T.) | Quantity allocated by the Government of India. (M.T.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| I. Quarter .. (January—March 1972) | Ammonium Sulphate (20·6 per cent) .. | 39,000 | 8,034 |
| | Urea (46 per cent) .. | 30,660 | 14,104 |
| II. Quarter .. (April—June 1972).. | Ammonium Sulphate (20·6 per cent) .. | 5,000 | 1,030 |
| | Urea (46 per cent).. .. | 19,000 | 8,740 |
| III. Quarter .. (July—September 1972) | Ammonium Sulphate (20·6 per cent) .. | 13,060 | 2,690 |
| | Urea (46 per cent).. .. | 69,800 | 32,108 |
| | D.A.P. (20 per cent) .. | 15,000 | 3,000 |
| | N.P.K. (15:15:15) .. | 18,500 | 2,775 |
| | N.P.K. (10:26:26) .. | 1,500 | 150 |
| IV. Quarter .. (October—December 1972) | Ammonium Sulphate (20·6 per cent) .. .. | 16,283 | 3,354 |
| | Urea (46 per cent).. .. | 63,046 | 29,001 |
| | C.A.N. (26 per cent) .. | 15,270 | 3,970 |
| | D.A.P. (20 per cent) .. | 2,917 | 583 |
| | N.P.K. (15:15:15) .. | 14,317 | 2,147 |
| | N.P.K. (16:16:16) .. | 2,200 | 352 |
| | | 3,25,553 | 1,12,038 |

**திருநெல்வேலி மாவட்டத்தில் சிறு தொழில்களுக்குக் கடன்கள்.**

வினா 3—

திரு. தி.சி.ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அசிஸ்டென்ட் டைரெக்டர் ஆப் இண்டஸ்டிரிஸ் அவர்களால் சிறு தொழிலுக்கான (Small Scale Industries Loan) விண்ணப்பங்கள் இந்த நிதியாண்டில் நாளது தேதி வரை வந்தவைகள் எத்தனை ?

(இ) அவைகளின் பேரில் நடவடிக்கை எடுத்து கடன் சாங்ஷன் ஆனவைகள் எத்தனை ?

விடை—

உதவி தொழில் வணிகத்துறை இயக்குநர், திருநெல்வேலி அவர்கள் தொழில்களுக்கு அரசு உதவியளித்தல் சட்டத்தின்கீழ் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதில்லை. சிறு தொழில் வளர்ச்சி கழகத்தின் கடன் திட்டத்தின்கீழ் வரும் விண்ணப்பங்களை அவர் முறைப்படுத்தியும் பரிசீலிப்பதாலும் அவ்விண்ணப்பங்களை அவர் ஏற்கிறார். ஆனாலும், திருநெல்வேலி உதவி தொழில் வணிக இயக்குநரும், குடிசைத் தொழில் அலுவலரும் முறையே கிராமத் தொழில் திட்டம், தொழில்களுக்கு அரசு உதவியளித்தல் சட்டத்தின்கீழ் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் வரும் விண்ணப்பங்களை ஏற்று பரிசீலித்து கடன் வழங்க ஒப்புதலும் அளிக்கின்றனர். கடன் விண்ணப்பங்கள் எண்ணிக்கை, அனுமதி அளிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, தள்ளுபடி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, அலுவலரால் விண்ணப்பதாரருக்கு திருப்பி அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, 1—4—1973-லிருந்து 31—8—1974 வரையில் நிலுவையில் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளது:—

| எண். | விண்ணப்பங்களை வாங்கும் அலுவலரின் பெயர். | திட்டத்தின் பெயர். | விண்ணப்பங்கள் எண்ணிக்கை. | அனுமதியளிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | தள்ளுபடி செய்யப்பட்ட அல்லது திருப்பி அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | நிலுவையில் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | உதவி தொழில் வணிக இயக்குநர், திருநெல்வேலி. | சிறு தொழில் வளர்ச்சி கழகத்தின் கடன் வழங்கும் திட்டம். | 154 | 13* | 154 | இல்லை. |
| 2. | உதவி தொழில் வணிக இயக்குநர், திருநெல்வேலி. | கிராமத் தொழில் திட்டம். | 55 | 9 | 18 | 28 |
| 3. | குடிசைத் தொழில் அலுவலர், திருநெல்வேலி. | தொழில்களுக்கு அரசு உதவியளித்தல் சட்டம். | 17 | 4 | 13 | இல்லை. |



* 1972—73-ம் ஆண்டுக்கு முன்னால் விண்ணப்பங்கள் பெறப்பட்டு 1973—74-ம் ஆண்டில் கடன் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்ட விண்ணப்பங்கள்.

தொழில்களுக்கு அரசு உதவியளித்தல் சட்டத்தின்கீழ் சிறு தொழில் அதிபர்களுக்கு கடன் வழங்கு திட்டத்தை நிறுத்தி விட அரசு முடிவு செய்தது. மாறாக இதற்கு துணை செய்யும் வகையில், இந்திய அரசு வங்கியின் (State Bank of India) தரமிகு வட்டித் தீர்வை திட்டத்தின் மூலமாக சிறு தொழில் அதிபர்களுக்கு உதவ முன்வந்துள்ளது. ஆகையினால் தான் திருநெல்வேலி உதவி தொழில் வணிக இயக்குநர், குடிசைத் தொழில் அலுவலர் ஆகியவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளன.

The Assistant Director of Industries and Commerce, Tirunelveli, is not entertaining applications for loans under the State Aid to Industries Act. He is only processing the loan applications, under Small Industries Development Corporation Loan Scheme and he has received applications for loans under this scheme . However the Assistant Director of Industries and Commerce and the Cottage Industries Officer, Tirunelveli entertain applications and sanction loans under the Rural Industries Project Loan Scheme and the State Aid to Industries Loan Scheme respectively. The particulars relating to the number of loan applications received number of applications sanctioned, number of applications rejected or

returned by these offices and the number of applications pending during the period 1st April 1973 to 31st August 1974 are furnished below :—

| *Serial number and name of the officers who received the applications.* | *Name of the scheme.* | *Number of applications received.* | *Number of applications sanctioned.* | *Number of applications rejected or returned.* | *Number of applications pending.* |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. Assistant Director of Industries and Commerce, Tirunelveli. | Small Industries Development Corporation Loan Scheme. | 154 | 13* | 154 | Nil. |
| 2. Do. | Rural Industries Project Loan Scheme. | 55 | 9 | 18 | 28 |
| 3. Cottage Industries Officer, Tirunelveli. | State Aid to Industries Loan Scheme. | 17 | 4 | 13 | Nil. |

The Government have declared to stop giving loans to Small Scale Industrialists under the State Aid to Industries Act and to supplement this source of finance by giving assistance to such Industrial under the Differential Interest Rate Scheme of the State Bank of India. Hence the number of applications sanctioned by the Assistant Director of Industries and Commerce/Cottage Industries Officer, Tirunelveli, is low.

### முந்திரி பயிரிடல்

வினா 4—

திரு. த. சோனையா : மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிப்பாரா :—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் சிவகெங்கை—மானாமதுரை சாலையின் இருமருங்கிலும் எத்தனை ஏக்கர்களில் முந்திரி பயிரிடப் பட்டுள்ளது ?

* These cases relate to the applications received prior to 1972–73 but sanctioned during 1973–74.



(இ) 1972–73—1973–74 ஆண்டுகளில் எத்தனை ஏக்கர்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது ?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சிவகெங்கை—மானாமதுரை சாலையின் இருமருங்கிலும் காட்டூரணி காட்டில் 805.33 ஹெக்டர் பரப்பில் முந்திரி பயிரிடப்பட்டுள்ளது.

(இ) முந்திரி பயிரிடப்பட்ட எல்லா இடங்களும், அதாவது 805.33 ஹெக்டர் பரப்பில் பயிர் செய்யப்பட்டவை அனைத்தும் முந்திரி கொட்டைகள் சேகரிப்பிற்காக 1972–73—1973–74ஆம் ஆண்டுகளில் ஏலத்திற்கு விடப்பட்டன.

### குடும்ப நலத் திட்டச் செலவு

வினா 5—

திரு. எம். முத்தையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மாநில குடும்பநலத் திட்டங்கள் கீழ் தீவிர பிரச் சாரத்தின் மூலம் வருஷம் ஒன்றுக்கு அதாவது 1972-லிருந்து 1973 டிசம்பர் முடிய அரசு செலவு செய்த தொகை எவ்வளவு ? மாவட்ட வாரியாக ?

விடை—

(அ) இதுபற்றிய விவர அறிக்கை* ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

### *Filtered Water Supply to Madras City.*

Q. 6—]

THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether it is a fact that filtered water is being supplied by the Corporation of Madras to the people?

* 555-556-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பட்டுள்ளது.

A. —

Yes.

The raw water drawn from Red Hills is being filtered at the Kilpauk Water Works and supplied to the Madras City residents.

ஆலயத் திருப்பணிகள்

வினா 7—

திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

1972–73-ம் ஆண்டில் திருப்பணி செய்யப்பட்ட ஆலயங்களின் எண்ணிக்கை எத்தனை ?

விடை—

700 (எழுநூறு) கோயில்கள்.

பூம்புகார் பணித்திட்ட வேலைகள்.

வினா 8—

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பூம்புகார் வளர்ச்சிப் பணித் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப் பட்டுள்ள வேலைகளின் விவரங்கள் யாவை ?

விடை —

ஏழுநிலைமாடம் என்னும் சிலப்பதிகாரக் கலைக்கூடம்தான் கட்டப்பட்டுள்ளது. இது அரசின் செலவில் கட்டப்படவில்லை அரசு பூம்புகார் பணித்திட்ட வேலைகள் இவ்வாண்டு செயலாக்க பெற்று வருகின்றன.



*Procurement of Paddy*

*Q.* 9—

THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state the quantity of paddy and coarse grains procured by the the State Government and Food Corporation of India du ring 1973 and 1974 as on this date in this State?

*A* —

The particulars relating to the procurement made by the various agencies are given below :—

| | 1973 (*Rice tonnes.*) (1) | 1974 (*Rice tonnes.*) (2) |
|---|---|---|
| State Government (including the purchases by Tamil Nadu Civil Supplies Corporation, Limited). | 132,525 | 184,066 (up to 6th September 1974). 128,654 (from 7th September 1974 till 7th December 1974). |
| Food Corporation of India .. .. | 76,787 | 1,765 (up to 6th September 1974). 8,389 from 6th September 1974 to 7th December 1974). |

Coarse grains have not been procured by the Government.

பல்வேறு முகவரமைப்புகளால் செய்யப்பட்ட கொள்முதல் குறித்த விபரங்கள் வருமாறு :—

| | 1973 (1) | 1974 (2) |
|---|---|---|
| மாநில அரசு (தமிழ்நாடு நுகர் பொருள் வழங்கல் கழகத்தால் கொள்முதல் செய்யப்பட்டவை உட்பட.) | 1,32,525 டன் அரிசி. | 1,84,066 டன் அரிசி (6–9–74 வரை) 1,28,654 டன் அரிசி (7–9–74 முதல் 7–12–74 வரை). |
| இந்திய உணவுப் பொருள் கழகம். | 76,787 டன் அரிசி. | 1,765 டன் அரிசி (6–9–74 வரை) 8,389 டன் அரிசி (7–9–74 முதல் 7–12–74 வரை). |

### House Building Societies

*Q.* 10—

THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) the number of House Building Societies functioning in the State during the period 1973–74; and

(*b*) the number of buildings constructed through loans obtained from such societies?

*A.* —

(*a*) 122 House Building Societies were functioning in the State during the period 1973–74.

(*b*) 2,417 houses.

(அ) இம் மாநிலத்தில் 1973-74-ம் ஆண்டில் 122 கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் செயல்பட்டு வந்தன.

(இ) 2,417 வீடுகள்.



### Yield rate of paddy

*Q.* 11—

THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the yield rate of paddy in the State during the periods 1970–71, 1971–72, and 1972–73?

*A.* —

The particulars regarding the yield rate of paddy in the State during the year 1970–71, 1971–72, and 1972–73 are given below :—

| | Yield in Kg./Hectare (In terms of rice). |
|---|---|
| 1970–71 .. .. .. .. .. .. | 1,900 Kg./Hectare |
| 1971–72 .. .. .. .. .. .. | 1,971 Kg./Hectare. |
| 1972–73 .. .. .. .. .. .. | 1,954 Kg./Hectare. |

(அ) இம்மாநிலத்தில் 1970–71, 1971–72, 1972–73 ஆகிய ஆண்டுகளில் நெல் விளைச்சல் விதம் தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன —

| | ஒரு ஹெக்டேருக்கு விளைச்சல் கிலோ கிராமில் (அரிசி அளவில்). |
|---|---|
| 1970–71 .. .. .. .. .. | 1,900 |
| 1971–72 .. .. .. .. .. | 1,971 |
| 1972–73 .. .. .. .. .. | 1,954 |

*Q.* 12—

THIRU N. K. PALANISAMY :—Will the Hon. the Minister for Agriculture be pleased to state the area under cultivation of foodgrains in the State during the periods 1971–72, 1972–73 and 1973–74?

*A.* —

The particulars of area under cultivation of foodgrains in the State during the periods 1971–72, 1972–73 and 1973–74 are given below :—

| *Year.* | *Area under foodgrains.* (HECTARES). |
|---|---|
| 1971–72 .. .. | 5,161,068 |
| 1972–73 .. .. | 5,281,895 |
| 1973–74 .. .. | 5,260,000 |

The particulars for 1971–72 and 1972–73 are according to season and crop report and the particulars for 1973–74 are according to Final Forecast estimates.

*Schools run by Forest Department*

*Q.* 13—

திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் காட்டிலாகாவினரால் எத்தனைப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன ?

(இ) அதில் ஆரம்பப் பள்ளிகள் எத்தனை ? உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை ?

*A.* —

(*a*) Eighteen.

(*b*) One High School and 17 Elementary Schools are run by the Forest Department. The High School is at Jamnamarathur and the Elementary Schools are located in the following places :—

| | |
|---|---|
| 1. Jamnamarathur .. .. .. .. | North Arcot district. |
| 2. Kovilur .. .. .. .. .. | Do. |
| 3. Veerappanur .. .. .. .. | Do. |
| 4. Athipadi .. .. .. .. .. | Do. |
| 5. Kometteri .. .. .. .. .. | Do. |
| 6. Nellivasal .. .. .. .. .. | Do. |
| 7. Thagarakuppam .. .. .. .. | Do. |
| 8. Perumpalli .. .. .. .. .. | Do. |
| 9. Pudur .. .. .. .. .. | Do. |
| 10. Puliyur .. .. .. .. .. | North Arcot district. |
| 11. Valakadu .. .. .. .. .. | Do. |
| 12. Kalyanamondai .. .. .. .. | Do. |
| 13. Cherambady .. .. .. .. | The Nilgiris. |
| 14. Cherangode .. .. .. .. | Do. |
| 15. Anaigundi .. .. .. .. .. | Coimbatore district. |
| 16. Keeriparai .. .. .. .. .. | Kanyakumari district. |
| 17. Chittar .. .. .. .. .. | Do. |



விடை—

(அ) பதினெட்டு.

(இ) அதில் ஜம்னாமரதூரில் ஓர் உயர்நிலைப் பள்ளியும், கீழ்க்கண்ட இடங்களில் பதினேழு ஆரம்பப் பள்ளிகளும் உள்ளன :-

| | | |
|---|---|---|
| 1. | ஜம்னாமரத்தூர் | வட ஆற்காடு மாவட்டம். |
| 2. | கோவிலூர் | |
| 3. | வீரப்பனூர் | |
| 4. | ஆதிபாடி | |
| 5. | கொமுட்டேரி | |
| 6. | நெல்லிவாசல் | |
| 7. | தகரக்குப்பம் | |
| 8. | பெரும்பள்ளி | |
| 9. | புதூர் | |
| 10. | புலியூர் | |
| 11. | வளக்காடு | |
| 12. | கல்யாண மொந்தை | |
| 13. | சேரம்பாடி | நீலகிரி மாவட்டம். |
| 14. | சேரன் கோடு | |
| 15. | ஆனைக்குந்தி .. .. .. | கோயம்புத்தூர் மாவட்டம். |
| 16. | கீரிப்பாறை | கன்னியாகுமரி மாவட்டம். |
| 17. | சித்தாறு | |

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள தீயணைப்பு நிலையங்கள்

வினா 14—

திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் இப்போது எங்கெங்கு தீயணைப்பு நிலையங்கள் இயங்குகின்றன?

(இ) அம்மாவட்டத்தில் ஒவ்வொரு வட்டத் தலைநகரிலும் அவை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் செங்கற்பட்டு, காஞ்சீபுரம், சைதாப்பேட்டை, எண்ணூர், அம்பத்தூர், மணலி ஆகிய இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் இயங்குகின்றன.

(இ) இல்லை.

### கரிசல்குளம் அருகே உள்ள மேம்பாலம்

வினா 15—

திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை—அருப்புக்கோட்டை இருப்புப் பாதையில் கரிசல்குளம் அருகில் உள்ள மேம்பாலத்தின் மேல் உள்ள ரோடு இருபக்கமும் அடிக்கடி சரிந்து விடுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை —

(அ) & (இ) ஆம். இந்த மேம்பாலத்தில் உள்ள சாலையின் கரையானது, மிகவும் உயரமானதாக உள்ளதாலும், இந்த இடத்தில் கிடைக்கும் மண் அவ்வளவாக நல்ல தரமுள்ளதாக இல்லாதிருப்பதாலும், மழை காலங்களில் மழைத் தண்ணீரால் பெரும் அரிப்புகள் ஏற்பட்டு பள்ளங்கள் உண்டாகின்றன. ஆகையால், மேலே குறிப்பிட்டுள்ள குறைபாடுகளை நிரந்தரமாக நிவர்த்தி செய்வதற்காக இரண்டு வகையான தடுப்பு முறைகள் (1) $1\frac{1}{2}$ : 1 என்ற சரிவில் பக்கா ரிவட்மண்ட் கட்டுவதற்கு ரூ. 91.6 லட்சத்திற்கான மதிப்பீடும், (2) 2 : 1 என்ற சரிவிற்கு நல்ல மண் போட்டு அதன்மேல் புல் பத்தைகள் அடித்து புல் வளர்க்கவும், மழைத் தண்ணீர் வடிந்து போவதற்கு வடிகால்கள் கட்டுவதற்குமாக ரூ. 3.72 லட்சத்திற்கான மதிப்பீடும், மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. அவசரத்தின் காரணமாக மேற்பார்வைப் பொறியாளர் (தேசீய நெடுஞ்சாலை) அவர்களை இரண்டாம் வழிமுறையைப் பின்பற்றி, வேலையைத் தொடங்குமாறு உத்திரவிடப்பட்டு, வேலைகளும் மும்முரமாக செய்யப்பட்டு வருகின்றன.

### *Employment Opportunities in Fisheries Department*

*Q.* 16—

THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—



the details of the action under the Half-a-Million Jobs Programme implemented by Fisheries Department?

*A.* —

A Paper @ is placed on the Table of the House.

பேரவை முன் விவர அறிக்கையொன்று @ வைக்கப்பட்டுள்ளது.

### *Rubber Plantations*

*Q.* 17—

THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the expenditure incurred by the Tamil Nadu Government to grow Rubber Plantations during the financial year 1973–74; and

(*b*) the income derived by the Tamil Nadu Government through Rubber Plantation during the same financial year.

*A.* —

A sum of Rs. 15.63 lakhs was spent for raising rubber plantations over an area of 121 hectares and maintenance of older plantations during the year 1973–74 under Fourth Five Year-Plan.

During 1973–74, rubber plantations was also raised over an area of 216 hectares under Rehabilitation scheme for Sri Lanka repatriates. An expenditure of Rs. 15.16 lakhs was spent under this scheme.

The revenue obtained through the Government Rubber Plantations during 1973–74 was Rs. 30.76 lakhs.

### பவானி வட்டத்தில் தியாகிகளுக்கு நிலம்

வினா 18—

திரு. ஈ. எம். நடராசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கோவை மாவட்டம், பவானி வட்டத்தில் எந்தெந்த கிராமங்களில் தியாகிகளுக்கான நிலங்கள் எத்தனை ஏக்கர்கள் கொடுக்கப்பட்டுள்ளன ?

---

@ 556-561-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

விடை—

கோவை மாவட்டம், பவானி வட்டத்தில் எண்ணமங்கலம், புதூர், நெரிஞ்சிப்பேட்டை ஆகிய மூன்று கிராமங்களில் 9 தியாகிகளுக்கு 72.09 ஏக்கர் நிலங்கள் ஒப்படை செய்து கொடுக்கப் பட்டிருக்கிறது. ஒப்படைபெற்ற தியாகிகளுக்கான நிலங்களின் விவரம் பின்வருமாறு :—

| கிராமத்தின் பெயர். | தியாகிகளின் பெயர். | நிலத்தின் சர்வே எண். | விஸ்தீரணம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | ஏ. செ. |
| எண்ணமங்கலம் | திரு. ஸ்ரீரங்கசாமி ரெட்டியார். | 780<br>781 | 9 34 |
| ஷை | திரு. கே. எம். குருசாமி ரெட்டியார். | 674/3<br>674/10-ஏ | 9 77 |
| ஷை | திரு. டி. வி. கோவிந்தன். | 784/4<br>786/1 | 3 92 |
| ஷை | திரு. எம். எஸ். சுப்பு சேஷய்யர். | 674/17<br>775/2 | 9 95 |
| புதூர் .. | திரு. பி. ஏ. ராஜகோபால் | 43/2 | 9 99 |
| ஷை .. | திரு. துரைசாமி செட்டியார். | 47/2 | 9 01 |
| ஷை .. | திரு. தேவராஜ பண்டாரம் | 47/3 | 9 14 |
| ஷை .. | திரு. நஞ்சப்ப தேவன் | 45/2 | 9 91 |
| நெரிஞ்சிப் பேட்டை. | திரு. ஓவி. ரெட்டியார். | 41-ஏ | 1 06 |

அந்தியூர் தொகுதியில் விவசாயக் கிணறுகளுக்கு மின் இணைப்பு

வினா 19—

திரு. ஈ. எம். நடராசன் : மாண்புமிகு தொழில் மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1973–74-ல் பவானி வட்டம், அந்தியூர் தொகுதியில் விவசாயக் கிணற்றிற்கு மின் இணைப்பு கோரி வரப்பட்ட விண்ணப் பங்கள் எத்தனை ?

(இ) எத்தனை விண்ணப்பதாரர்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டது ?



விடை—

(அ) அந்தியூர் தொகுதியில் 1973–74-ல் விவசாய கிணற்றிற்கு மின் இணைப்பு கோரி வந்துள்ள மனுக்களின் மொத்த எண்ணிக்கை—621.

(இ) அவற்றில் இணைப்பு கொடுக்கப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை—240.

(*a*) Number of applications for power supply to agricultural pumpsets received in Anthiyur Constituency during 1973–74. .. .. 621

(*b*) Number of applications for which supply effected .. .. .. .. .. 240

*Publications of Institute of Education*

THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

The number of publications brought out by the State Institute of Education, subject-wise during 1972–73 and 1973–74 ?

A.—

சட்டப் பேரவை முன் ஒரு அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ மீனாட்சி மகளிர் கல்லூரி விடுதி

வினா 21—

திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை ஸ்ரீ மீனாட்சி மகளிர் கல்லூரி விடுதியில் 1972–73-ல் எத்தனை மாணவிகள் சேர்க்கப்பட்டார்கள் ?

(இ) 1973-74-ல் எத்தனை மாணவிகள் விடுதியில் சேர்க்கப் பட்டார்கள் ?

விடை—

(அ) 565.

(இ) 638.

@ 561-563ம் பக்கங்களில் இணைப்பு IV-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

*Export of Mangoes.*

*Q.* 22—

THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the total quantity of mangoes produced in Tamil Nadu during 1972–73; and

(*b*) the total quantity exported during the same period?

*A.*—

(*a*) The estimated quantity of mangoes produced in Tamil Nadu during 1972–73 is 2,87,440 M. tonnes.

(*b*) 2,658 Kgs. of mangoes.

(அ) 1972–73-ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் உற்பத்தியான மாம்பழத்தின் அளவு 2,87,440 மெட்ரிக் டன்கள் என மதிப்பிடப் படுகிறது.

(இ) 2,658 கிலோ கிராம் மாம்பழங்கள்.

*Visitors to Vaigai Dam.*

*Q.* 23—

THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

The amount collected as entrance fees from persons visiting Vaigai Dam from 1—11—1973 to 31—3—1974.

*A.*—

No amount was collected as entrance fees from persons visiting Vaigai Dam from 1—11—1973 to 31—3—1974.

1-11-1973 முதல் 31-3-1974 வரையில் வைகை அணைக் கட்டைப் பார்வையிட வருபவர்களிடமிருந்து நுழைவுக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படவில்லை.

சர்க்கரை விநியோகம்

வினா 24—

திரு. எம். சுரேந்திரன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :—



(அ) 1974 ஜனவரியிலிருந்து இதுவரை சர்க்கரை விநியோகத்தில் எவ்வளவு பேர் ஊழல் செய்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது ?

(இ) இவர்களின் மீது என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது ?

விடை—

(அ) 1974 சனவரி திங்களிலிருந்து 1975 சனவரி திங்கள் முடிய 243 பேர் ஊழல் செய்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

(இ) உரிமங்களை ரத்து செய்தும், பிணைப்புத் தொகை பறிமுதல் செய்தும், அபராதம் விதிக்கப்பட்டும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சாம்பார் மலைப் பள்ளத்தில் ஏரி அமைப்பு

வினா 25—

திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொளத்தூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பகுதியில் சிறுபாசன திட்டத்தின் கீழான சாம்பார் மலைப்பள்ளம் என்ற ஏரி அமைப்பின் மீது இறுதி முடிவெடுக்கப்பட்டதா—

விடை—

இல்லை. இத்திட்டம் அரசின் முடிவிற்கு அனுப்பப்படவில்லை.

No. The Scheme has not been referred to Government for a decision.

*Purchase of Newsprint paper*

*Q.* 26—

THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether newsprint is secured by the Tamil Nadu Government for its official publications; and

(*b*) if so, the total quota purchased and the amount for which purchased for the calendar year 1971–72?

*A.*—

(*a*) Yes (For Tamil Arasu Journal the Government Publication).

(*b*) 187.76 metric tonnes of newsprint at a cost of Rs. 2,80,000 were purchased for the period from April 1971 to March 1972.

(அ) ஆம் (தமிழரசு இதழுக்காக).

(இ) ஏப்ரல் 1971 முதல் மார்ச் 1972 வரை ரூ. 2,80,000 செலவில் 187.76 மெட்ரிக் டன் நியூஸ் பிரிண்ட் வாங்கப்பட்டது.

### சதர்ன் ஸ்ட்ரக்சுரல் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடன்கள்.

வினா 27—

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு, சதர்ன் ஸ்ட்ரக்சுரல் நிறுவனத்திற்கு கடன் தொகை வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், எந்த எந்த வகைகளுக்கு எவ்வளவு வழங்கியுள்ளது ?

(உ) நாளது தேதியில் அந்த நிறுவனம் அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகை வட்டி முறையே எவ்வளவு ?

விடை —

(அ) ஆம்.

(இ) திருவாங்கூர் ஸ்டேட் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கும் இந்நிறுவனம் மூலப் பொருள் வாங்கி இருப்பு வைக்கவும், திருவாங்கூர் ஸ்டேட் வங்கியிடமிருந்து கடன் வாங்குவதற்கு முதலில் கட்ட வேண்டிய தொகையை முன்னிட்டும் இந்நிறுவனத்திற்கு கடன் தொகை வழங்கப்பட்டது.

(உ) இதுவரை ரூ. 147.5 லட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இன்னும் நிலுவையாக உள்ள கடன் தொகை ரூ. 147.5 லட்சமும் அனுமதிக்கப்பட்ட கடன் தொகையின் மீது 31-3-74 அன்றுள்ளவாறு வட்டியாக உள்ள ரூ. 14.70 லட்சமும் சதர்ன் ஸ்ட்ரக்சுரல் நிறுவனத்திடமிருந்து வரவேண்டியுள்ளது.



*A.* —

(*a*) Yes.

(*b*) The loans were granted to repay the outstanding amounts to the State Bank of Travancore and to build up inventory and margin money from the State Bank of Travancore.

(*c*) The total amount of loan so far sanctioned is Rs. 147.5 lakhs. A sum of Rs. 147.5 lakhs as loan which is still outstanding and a sum of Rs. 14.70 lakhs as interest as on 31—3—1974 on the loan amount sanctioned is due from the Company.

### தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்.

வினா 28—

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) தமிழ் நாடு இயல், இசை, நாடக மன்றம் நாடகங்கள் தயார் செய்து வெளியிட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், சென்ற நிதி ஆண்டு மற்றும் இந்த நிதி ஆண்டுகளில் என்னென்ன நாடகங்களைத் தயார் செய்துள்ளது.

விடை —

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

### திருநெல்வேலி மாவட்டத்தில் குளங்கள் மராமத்து.

வினா 29—

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்தில் 1974-75 நிதியாண்டு ஜூன் மாதம் முடிய அரசாங்கத்தின் Desilting-*cum*-Reclamation Scheme-ன் கீழ் எந்தெந்த இடங்களில் எத்தனை குளங்கள் மராமத்து செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

விடை—

இல்லை.

## Family Planning Propaganda

30 *Q*.—

THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any special staff have been provided for propagating the various Family Planning Schemes; and

(*b*) if so, the details thereof ?

*A*. —

A paper @is placed on the Table of the House.

விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

## Oil Producers Co-operative Societies

31 *Q*.—

THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the places in the rural areas of the State where Village Oil Industry function;

(*b*) whether there is any proposal under the consideration of Government to modernise the Industry ; and

(*c*) if so, the details thereof ?

*A*. —

(*a*) A list* showing the names of Oil Producers Co-operative Societies functioning under the Tamil Nadu Khadi and Village Industries Board and the places where they function is placed on the Table of the House.

(*b*) Yes.

(*c*) A programme to convert the conventional bullock driven ghanis into power driven ghanis has been launched with the assistance of the Khadi and Village Industries Commission. So far, 49 power driven ghanis have been installed and out of them 26 have started functioning. Another set of 78 power drives are under installation. Further installation of 100 more power drives is being planned for the current year.

---

@564-565 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.
566-570 ஆம் பககங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.



(அ) தமிழ்நாட்டில் தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத்
தொழில் வாரியத்தின்கீழ் இயங்கிவரும் எண்ணெய் உற்பத்தி
யாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பெயர்களும் அவைகள்
இயங்கிவரும் இடங்களும் அடங்கிய பட்டியல்* ஒன்று அவை
முன் வைக்கப்பட்டுள்ளது.

(இ) ஆம்.

(உ) வழக்கத்திலுள்ள மாடுகளால் இழுக்கப்படும் செக்கு
களை விசைச் செக்குகளாக மாற்றும் திட்டம் ஒன்று கதர் மற்றும்
கிராமத் தொழில் ஆணைக் குழுவின் உதவியுடன் வைக்கப்
பட்டுள்ளது. இதுவரை 49 விசைச் செக்குசள் நிறுவப்பட்டு
அதில் 26 விசைச் செக்குகள் இயங்கத் தொடங்கியிருக்கின்றன.
அடுத்த பகுதியாக 78 விசைச் செக்குகள் நிறுவும் வேலை நடை
பெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் 100 விசைச் செக்குகள்
நடப்பு ஆண்டில் நிறுவ திட்டமிடப்பட்டிருக்கிறது.

## Stock of seeds.

32 *Q*.—

THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether seeds are stocked in the Agricultural Depots in the State for distribution to farmers ;

(*b*) if so, the varieties of seeds so stocked for the year 1974–75; and

(*c*) the procedure adopted in distributing these seeds ?

*A*. —

(*a*) Yes.

(*b*) IR. 8, IR. 20, Ponni, Cul. 28, CO. 33, Kannagi, Kanchi, Cauvery, Tiruveni, Bhavani and Ratna.

(*c*) The seeds are sold to farmers through the Agricultural Depots at no loss no profit basis. As the department distributes seeds to cover 7 per cent of the area, individual farmers are given seeds for an area of one to five acres according to the area cultivated.

### *Relief measures in Vallam village*

33 *Q.*—

THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Chief Minister be pleased to state —

(*a*) whether it is a fact that there was a serious fire accident on 3rd June 1974 in a Harijan Colony at Vallam village in Wandiwash taluk ;

(*b*) if so, the extent of damage caused; and

(*c*) the steps taken by the Government to afford relief to the affected family ?

*A.*—

(*a*) Yes.

(*b*) 169 houses were destroyed and properties worth about Rs. 2,11,700 were lost in the accident. There was no loss of human life and nobody sustained injuries. But two calves died.

(*c*) Monetary relief of Rs. 13,520 was given to 169 families at the prescribed rates for reconstruction of houses. The victims were given food packets on 3rd June 1974. Tamil Nadu Harijan Housing and Development Corporation Limited has been entrusted with the work of reconstructing the houses destroyed in the accident.

(அ) ஆம்.

(இ) இவ்விபத்தில் 169 வீடுகள் அழிந்தன. சுமார் 2,11,700 ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் சேதமடைந்தன. உயிர்ச்சேதம் எதுவும் இல்லை. எவரும் காயமுறவில்லை. ஆனால், இரு கன்றுகள் மடிந்தன.

(உ) வீடுகளை மீண்டும் கட்டிக் கொள்வதற்கென்று, வரையறுக்கப்பட்ட வீதங்களில் 169 குடும்பங்களுக்கு 13,520 ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 3—6—1974 அன்று உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. இவ்விபத்தில் அழிந்த வீடுகளை மீண்டும் கட்டிக் கொடுக்கும் பணி தமிழ்நாடு அரிசன மேம்பாட்டு வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



### *New hospital in Agricultural University Campus*

34 *Q.*—

THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that a hospital has been opened by the Government recently in the campus of the Tamil Nadu Agricultural University in Coimbatore; and

(*b*) if so, the details thereof ?

*A.*—

(*a*) Yes.

(*b*) A six beded hospital has been opened by the Tamil Nadu Agricultural University in its campus at Coimbatore with effect from 11th June 1974. The expenditure of this hospital are met from the Indian Council for Agricultural Research Fund. This is not a Government Medical Institution.

(அ) ஆம்.

(இ) தமிழ்நாடு விவசாய பல்கலைக் கழகம் தன் எல்லைக்குள் ஆறு படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவ மனையை 11—6—1974 முதல் தொடங்கியுள்ளது. இம் மருத்துவ மனைக்காக செலவுகள் இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியிலிருந்து செய்யப்படுகின்றன. இது அரசு மருத்துவ மனை அல்ல.

### புகுமுக வகுப்பில் இடங்கள்

வினா 35—

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974-75 கல்வி ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகள் அனைத்திலுமாக புகுமுக வகுப்பில் மொத்தம் எத்தனை இடங்கள் இருந்தன ?

(இ) அதில் நிறைவு செய்யப்படாமல் இருக்கும் இடங்கள் எத்தனை ?

விடை—

(அ) 91,773.

(இ) 14,728.

## தமிழை பயிற்றுமொழியாகக் கொண்டு பட்டம் பெற்றவர்கள்

வினா 36—

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சென்ற ஆண்டில் (1973-74) தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு படித்துப் பட்டம் பெற்றவர்கள் எத்தனை பேர் ?

(இ) இந்த ஆண்டில் பட்டப் படிப்பில் தமிழ் பாடமொழி வகுப்புகளில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்கள் எத்தனை பேர் ?

விடை—

(அ) 3,606

(இ) 15,710

## *High Schools taken over by Government*

37 *Q.*—

THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) the names of the High Schools that have been taken over by the Government in the years 1971–73; and

(*b*) compensation paid for each such taken over school towards land, building and other equipments?



விடை—

(அ) 1. நகராட்சி ஜவஹர் உயர்நிலைப் பள்ளி, திருநெல்வேலி

2. அறிஞர் அண்ணா நகராட்சி உயர்நிலைப் பள்ளி, கூனூர்.

3. நகராட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளி, திருவள்ளூர், செங்கற்பட்டு மாவட்டம்.

4. நகராட்சி உயர்நிலைப் பள்ளி, வாலாஜாப்பேட்டை, வட ஆற்காடு மாவட்டம்.

5. நகராட்சி உயர்நிலைப் பள்ளி, ராசிபுரம், சேலம் மாவட்டம்.

6. நகராட்சி உயர்நிலைப் பள்ளி, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.

7. எஸ். டி. ஆர். என். நகராட்சி உயர்நிலைப் பள்ளி, அருப்புக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டம்.

8. பாரதி நாராயணசாமி உதவிபெறும் உயர்நிலைப் பள்ளி, சில்லமரத்துப்பட்டி, மதுரை மாவட்டம்.

9. இந்து உயர்நிலைப் பள்ளி, காளாம்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.

(இ) அப்பள்ளிகளின் சொத்துக்களை எவ்வித நஷ்ட ஈடும் இல்லாமல் அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அப்பள்ளிகளை அரசு மேற்கொண்டது. எனவே அப்பள்ளிகளின் சொத்துக்களுக்கு நஷ்ட ஈடு அளிக்கும் பிரச்சினைக்கு இடமில்லை.

## புள்ளம்பாடியில் நிவாரணப் பணிகள்

வினா 88—

டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், புள்ளம்பாடியில் 1974 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் தேதியில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு நிவாரணப் பணிகள் மேற்கொண்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

விடை—

(அ) ஆம்.

(இ) திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், புள்ளம்பாடியில் 1974 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் தேதி ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, பொருள் உதவி

யாகவும், உடை மானியமாகவும் தலா ரூ. 80 வரை வழங்கப் பட்டுள்ளது. இது தவிர இவ்விபத்தில் பாதிக்கப்பட்ட 124 குடும்பங்களுக்கும் தீயினால் இழந்த வீடுகளைத் திரும்பக் கட்டுவதற்காக குடும்பம் ஒன்றுக்கு ரூ. 2,000 வீதம் ரூ. 2.4 இலட்சம் அரசு கடன் உதவி கொடுக்கப்பட்டுள்ளது. இவை தவிர இந்தியத் தலைமை அமைச்சரின் தேசீய நிவாரண நிதி யிலிருந்தும், விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு குடும்பம் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் 124 குடும்பங்களுக்கு ரூ. 12,400 பொருள் உதவியும் வழங்கப்பட்டுள்ளது.

## கோழிப்பண்ணைகள்

வினா 39—

திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தற்போது மொத்தம் எத்தனை கோழிப் பண்ணைகள் அரசின் மேற்பார்வையில் உள்ளது ?

(இ) அதற்காக ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு செலவிடப் படுகிறது ?

(உ) அரசுக்கு இதன்மூலம் எவ்வளவு இழப்பு ஏற் படுகிறது ?

விடை—

(அ) தமிழ்நாட்டில் தற்போது கால்நடை பராமரிப்புத் துறையின் மேற்பார்வையில் மொத்தம் 27 கோழிப் பண்ணைகள் உள்ளன.

(இ) மேற்படி கோழிப் பண்ணைகள் 1974 ஆம் வருடம் ஜூலை மாதம் 15-ம் தேதிதான் கோழி அபிவிருத்திக் கழகத்திலிருந்து கால்நடை பராமரிப்புத் துறைக்கு மாற்றப் பட்டன. கீழ்க்கண்ட செலவு மதிப்பீடு எதிர்பார்க்கப்படு கிறது.

1974ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் தேதி முதல் 1975 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதி வரை ரூபாய் 18,16,000.

1975-76 மதிப்பீடு—ரூபாய் 33,76,000.





(உ) பொதுமக்களின் நன்மைக்காக செயல்படும் கோழி அபிவிருத்தி நிலையங்கள் இலாப நோக்குடன் ஏற்படுத்தப் பட்டவை அன்று. இந்நிலையங்களில் உள்ள மருத்துவர்களும் ஏனையோரும் கோழி அபிவிருத்தியை ஏற்படுத்த இந்நிலையங் களைச் சுற்றியுள்ள கிராமங்களில் வளர்ப்பதற்குத் தேவையான குஞ்சுகளைக் கொடுத்து வளர்க்கும் விதத்தைக் கற்றுக் கொடுத்தல், நோய்த் தடுப்பு முறைகளைச் சொல்லிக் கொடுத்தல், நோய்த் தடுப்பு ஊசி போடுதல், மற்றும் விஞ்ஞான முறையில் கோழி களை வளர்த்து விவசாயிகளுக்கும் பொது மக்களுக்கும் உபரி வருமானமாக கோழி வளர்ப்பு அமையும்படி செய்தல் ஆகிய விஸ்தரிப்பு வேலைகளில் ஈடுபடுபவர். கோழி அபிவிருத்தி நிலையங்களில் வளர்க்கப்படும் கோழிக் குஞ்சுகள் அப்பகுதியில் கோழி வளர்ப்புக்காக வழங்கப்படுகின்றன. எனவே இந் நிலையங்களை இலாப நோக்குடன் கவனிக்கலாகாது.

## வடாற்காடு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒன்றிய மருத்துவமனைகள்

வினா 40—

திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968 முதல் 1973 வரை வடாற்காடு மாவட்டத்தில் அரசு மேற்கொண்ட ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகள் எத்தனை ?

(இ) அவற்றிற்கான மொத்தச் செலவு எவ்வளவு ?

விடை—

(அ) ஆறு ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளை அரசு மேற்கொண்டுள்ளது.

(இ) இதற்கான மொத்தச் செலவு ரூ. 2,59,883.40

## கொடுமுடி மகுடேஸ்வரர் ஆலயம்

வினா 41—

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கோவை மாவட்டம், கொடுமுடியில் உள்ள அருள்மிகு மகுடேஸ்வரர் கோயிலின் ஆண்டு வருமானம் எவ்வளவு ?

(இ) அந்த ஆலயத்தின் சார்பாக அங்கு பிரயாணிகள் தங்குவிடுதி ஏற்படுத்தும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

(அ) ரூபாய் 1,63,398.00.

(இ) ஆம்.

## மாயூரம் நகரிலுள்ள திருக்கோயில்கள்

வினா 42—

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் நகரிலுள்ள திருக்கோயில்கள் எத்தனை ? எவை, எவை ?

(இ) அவைகளில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைக்கு உட்பட்டவை எத்தனை ? எவை, எவை ?

விடை—

(அ) 45. (அவையின்மீது இதுபற்றிய அறிக்கை* வைக்கப்படுகின்றது).

(இ) 30. (அவையின்மீது இதுபற்றிய அறிக்கை* வைக்கப்படுகின்றது).

## காளிப்பட்டி-வைகுந்தம் சாலை

வினா 43—

திரு. வ. முத்து : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்திலுள்ள காளிப்பட்டி-வைகுந்தம் சாலைக்கு தார் போடும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

விடை—

இச்சாலை யூனியன் பராமரிப்பிலிருந்து அரசுச் சாலையாக எடுத்துக் கொள்ளப்பட்டு, சரளைக்கல் பரப்பும் வேலை முடிவடைந்து விட்டது. ஆனால், மீண்டும் ஒருமுறை சரளைக்கல்

*571-574ம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.



பரப்புதல், சிறு பாலங்களைப் புதுப்பித்தல் போன்ற வேலைகளைச் செய்து முடித்த பின்புதான், தார்ச்சாலை போட இயலும். இவ்வேலைகளை மேற்கொள்வதற்கு தோராயமாக ரூ. 2.50 இலட்சம் தேவைப்படும். நிதி நிலைமையினைக் கருத்தில் கொண்டு இந்த வேலைகளை தற்போது எடுத்துக் கொள்ள இயலாது.

## *National Award to Teachers*

44 *Q.*—

THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to raise the limit fixed for each district in giving National Awards for teachers;

(*b*) if so, the details thereof ;

(*c*) whether any Tamil teacher has been given such an award for the year 1972–73 ; and

(*d*) if so, the details thereof ?

*A.*—

(*a*) No.

(*b*) Does not arise.

(*c*) No.

(*d*) Does not arise.

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) இல்லை.

(எ) கேள்விக்கு இடமில்லை.

## *Gandhi Memorial Scholarships*

45 *Q.*—

THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the number of Harijan students who have been given scholarships under the special scheme "Gandhi Memorial Scholarship" for the period 1972–73; and

(*b*) the basis on which such scholarships are given ?

[1975 ஏப்ரல் 11

A.—

(a) Seventy-nine Scheduled Caste (Fresh 29 and renewal 50) students were awarded Gandhi Memorial Scholarship during 1972-73.

(b) Two students (one boy and one girl) who secure the highest marks in the P.U.C. in each district will be selected for special scholarship.

(அ) 1972-73 ஆம் ஆண்டில் காந்தியின் நினைவாக ஏற்படுத்தப்பட்ட படிப்பு உதவித் தொகையை. எழுபத்தொன்பது தாழ்த்தப்பட்ட (புதிதாக 29 பேரும், ஏற்கெனவே பெறுபவர்களில் 50 பேரும் ஆக) மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

(இ) ஒவ்வொரு மாவட்டத்திலும் புகுமுக வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெறும் இரண்டு மாணவர்கள் (ஒரு ஆணும், ஒரு பெண்ணுமாக) சிறப்புப்படிப்பு தனித் தொகைக்காக தேர்ந்தெடுக்கப்படுவர்.

## கல்வி நிலையங்கள்

வினா 46—

திரு. வி. ஆலடி அருணா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிலையங்கள் எத்தனை ?

(இ) இவைகளில் தனியார் நிர்வாகத்தின் கீழ் உள்ள கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள் எத்தனை ?

விடை—

| | |
|---|---|
| (அ) தமிழ் நாட்டில் உள்ள மொத்த கல்வி நிலையங்கள். | 35,661 |
| 1. கல்லூரிகள் .. .. .. .. | 232 |
| 2. பள்ளிகள் .. .. .. .. | 35,429 |
| (இ) தனியார் நிர்வாகத்தின் கீழ் உள்ளவை— | |
| 1. கல்லூரிகள் .. .. .. .. | 173 |
| 2. உயர்நிலைப்பள்ளிகள் .. .. .. | 935 |
| 3. நடுநிலைப் பள்ளிகள் .. .. .. | 1,992 |
| 4. ஆரம்பப்பள்ளிகள் .. .. .. | 5,108 |



1975 ஏப்ரல் 11]

## காலரா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள்

47 வினா—

டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் காலரா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை கடந்த மூன்று ஆண்டுகளில் (ஆண்டு வாரியாக) எவ்வளவு ? (1972, 1973, 1974.)

(இ) மேற்படி காலங்களில் இறந்தவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு ?

(உ) இந்நிலை தொடராவண்ணம் இருக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய விபரம் என்ன ?

விடை—

(அ) & (இ)

| | பாதிக்கப் பட்டோர். | இறந்தவர். |
|---|---|---|
| 1972 .. .. .. | 3,670 | 205 |
| 1973 .. .. .. | 3,147 | 237 |
| 1974 .. .. .. | 3,590 | 109 |

(உ) கடும் வயிற்றுப் போக்கு நோய் கண்டுள்ளதாக செய்தி கிடைத்தவுடன், நோய் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மக்கள் நலப் பணியாளர்கள் அனுப்பப்பட்டு, நோயைத் தடுக்கவும் தேவையான தடுப்பு நடவடிக்கைகளான காலராத் தடுப்பு ஊசி குத்துதல், பாதிக்கப்பட்ட வீடுகளில் கிருமி நாசினி மருந்து தெளித்தல், நீர் வழிகளில் குளோரின் மருந்து கலத்தல் போன்ற தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நோயாளிகள் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களைச் சேர்ந்த நோயாளர் வண்டிகளில் அருகாமையில் உள்ள சிகிச்சை நிலையங்களில் சிகிச்சைக்காக உடனடியாக அனுப்பப்பட்டனர். நோயாளிகளின் மலங்கள் நுண்ணுயிரியல் ஆய்வுக்காக சென்னை கிண்டியிலுள்ள கிங் நிலையத்திற்கோ அல்லது அருகாமையிலுள்ள மக்கள் நல் பகுப்பாய்வு கூடத்திற்கோ பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன. மேற்கொள்ளப்படவேண்டிய தடுப்பு நடவடிக்கைகளைப் பற்றி மக்கள் நல்வாழ்வு குடும்ப நலத்துறை இயக்குநரிடமிருந்தும், மாவட்ட அலுவலர்களிடமிருந்தும் மக்கள் நலப் பணியாளர்களுக்கு அவ்வப்போது அறிவுறைகளும் வழங்கப்பட்டன. தடுப்பு நடவடிக்கைகளில் மக்கள் நலப்பணியாளர்களுக்கு உதவும் பொருட்டு, கூடுதலாக ஒதுக்க சுகாதார ஆய்வாளர்களும் மற்ற திட்டங்களைச் சேர்ந்த சுகாதார'ஆய்வாளர்களும் நியமிக்கப்பட்டனர்.

காலரா நோய்க்கான மூல காரணங்களைப் பற்றியும் மற்ற கொள்ளை நோய்களைப் பற்றியும், அதற்காக மேற்கொள்ள வேண்டிய தடுப்பு முறைகளைப்பற்றியும் திரைப்பட வாயிலாக மக்கள் நலப் பணியாளர்கள் பொதுமக்களுக்கு அவ்வப்போது போதித்து வருகின்றனர். மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மக்களுக்கு காலரா தடுப்பு ஊசி குத்தப்பட்டு வருகிறது.

கடந்த மூன்றாண்டுகளில், பாதிக்கப்பட்ட இடங்களிலும் அவற்றின் சுற்றுப்புறங்களிலும் காலரா தடுப்பு ஊசி குத்தப் பட்டவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1972 | .. | .. | .. | .. | 1,469,731 |
| 1973 | .. | .. | .. | .. | 1,430,616 |
| 1974 | .. | .. | .. | .. | 1,725,434 |

48 *Q.*—

THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the total number of Cholera attacks in Kanyakumari district n the months of August and September 1974; and

(*b*) the number of Cholera deaths during this period?

*A.*—

(*a*) Three attacks.

(*b*) One death due to Cholera.

Apart from this, there were ninety-two attacks and sixteen deaths due to acute Gastro Enteritis.

(அ) காலரா நோயினால் மூன்று பேர்கள் பாதிக்கப்பட்டனர்.

(இ) காலரா நோயினால் ஒருவர் காலமானார்.

இதைத் தவிர, கடும் குடற்காய்ச்சல் நோயினால் 92 பேர் பாதிக்கப்பட்டனர், 16 பேர் இறந்தனர்.

### திருநெல்வேலி மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை வழங்கல்

49 வினா—

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) 1973–74, 1974–75 நிதியாண்டுகளில் அம்பாசமுத்திரம் தாலுக்கா தாசில்தார் அவர்களால் முதியோர் உதவித் தொகை கோரி பெறப்பட்ட விண்ணப்ப மனுக்கள் எத்தனை ?

(இ) அவைகளில் தீர்வு காணப்பட்டவை எத்தனை ?

விடை—

| | 1973–74-ம் ஆண்டில். | 1974–75-ம் ஆண்டில். (25–11–74 வரை). |
|---|---|---|
| முதியோர் உதவித் தொகை கோரி வரப் பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 582 | 312 |
| முடிவு எடுக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 579 | 245 |
| முடிவுறா நிலையிலுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 3 | 67 |
| Number of Old age pension applications received. | 582 | 312 |
| Number of applications disposed off. | 579 | 245 |
| Number of applications pending | 3 | 67 |

### ஆய்வுக்கூட வல்லுநர் பயிற்சிக்குத் தேர்வு.

50 வினா—

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மருத்துவக் கல்லூரி இயக்குநரின் கீழ் பணி புரிவோர் லெபரடரி டெக்னிஷியன் II கிரேடு பயிற்சிக்கு தேர்ந்து எடுக்கப்படுகிறார்களா ?

(இ) ஆம் எனில், 1974–75ஆம் ஆண்டில் அப்பயிற்சிக்குத் தேர்வு நடைபெற்றதா ?

(உ) மனுச் செய்தவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

விடை—

(அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) தனியாளர்கள்—59 பேர்.

பணியிலுள்ளவர்கள்—39 பேர்.

மருந்து கலக்குவோர் பயிற்சிப் படிப்பு.

51 வினா—

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974–75-ம் ஆண்டு பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரிக்கு கம்பவுண்டர் படிப்புக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டனவா ?

(இ) ஆம் எனில், பெறப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை?

(உ) அவைகளுள் தேர்ந்தெடுக்கப்பட்ட மனுக்கள் எத்தனை?

விடை—

(அ) ஆம்.

(இ) பெறப்பட்ட விண்ணப்பங்கள் 165.

(உ) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் 25.

முதுவன்திடல் வடக்குக் கண்மாய்

52 வினா—

திரு. த. சோனையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், முதுவன்திடல் வடக்குக் கண்மாயில் உள்வாயில் அருகில் ரிவட் மெண்ட் கொடுக்கும் உத்தேசம் அரசிடம் உண்டா ?

(இ) ஆமெனில், அதன் மொத்த மதிப்பீடு என்ன ?

விடை—

(அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.



அரசனூருக்கு சாலை அமைப்பு.

53 வினா—

திரு. த. சோனையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சிவகெங்கை ஒன்றியம் 1,500 ஜனத் தொகைக்குமேல் இருக்கும் அரசனூருக்கு தார்ச்சாலை போடும் வேலை கிராமச் சாலைகள் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மொத்த மதிப்பீடு என்ன ?

விடை—

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருப்புவனம் குடிநீர் திட்டம்.

54 வினா—

திரு. த. சோனையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமை ச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் பேரூராட்சி குடி தண்ணீர் திட்டத்தின் மொத்த மதிப்பீடு என்ன ?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் பேரூராட்சி குடிநீர் திட்டத்தின் நிர்மாணச் செலவு ரூ. 12.00 இலட்சமும், பராமரிப் புச் செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 37,000-ம் ஆகும்.

*Panchayat Union Rest Houses.*

*Q* 55.—

THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the number of Panchayat Unions maintaining Rest Houses equipped with air condition plants ; and

(*b*) the total cost involved on these Rest Houses?

*A.* —

(*a*) Nil

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

### கும்முடிப்பூண்டி எல்லாபுரம் ஒன்றியப் பகுதிகளில் உணவுத் தானியங்கள் வழங்கல்

வினா 56—

திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலும், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலும் எந்தெந்த கிராமங்களில் நியாய விலைக் கடைகளின் மூலம் உணவுத் தானியங்கள் வழங்கப்படுகின்றன ?

(இ) மேற்கண்ட ஒன்றியங்களில் நெசவாளர், மீனவர் தொழிலாளர் வாழும் கிராமங்களிலும் நியாயவிலைக்கடைகளைத் திறக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

விடை—

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் கும்முடிப் பூண்டியிலும், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் ஊத்துக் கோட்டையிலும், இவ்விரு இடங்களும் பேரூராட்சிகளாகவிருப்பதால், இவ்விரு இடங்களில் மட்டும் கார்டுதாரர்களுக்கு அரிசி வழங்கப்படுகிறது.

(இ) இல்லை.

### ஆத்தூர் வட்டத்தில் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

57 வினா—

திரு. மூ. மாரிமுத்து : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் வட்டத்தில் எந்தெந்தக் கிராமங்களில் அரிசனக் குடியிருப்புக்கென . நில ஆர்சிதம்ப் செய்யும்பணி மேற்கொள்ளப் பட்டு உள்ளது ?



விடை—

ஆத்தூர் வட்டத்தில் கீழ்க்கண்ட கிராமங்களில் அரிசனக் குடியிருப்புக்களுக்கு நிலம் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது—

(1) ஆத்தூர்.
(2) தும்பல்.
(3) உளிபுரம்.
(4) பைத்தூர்.
(5) கல்லாநத்தம்.
(6) முள்ளுவாடி.
(7) தாண்டவனூர்.
(8) செந்தாரப்பட்டி.
(9) பெரியேரி.
(10) அம்மன் நகர்.
(11) கடம்பூர்.
(12) பெரிய கிருஷ்ணபுரம்.
(13) நத்தகரை.
(14) கங்கவள்ளி.
(15) நரசிங்கபுரம்.
(16) ஒட்டப்பட்டி.
(17) வடகுமரை.
(18) ஏத்தாபூர் கரடிப்பட்டு.
(19) ஆணையப்பட்டி.
(20) துலுக்கனூர்.
(21) தம்மம்பட்டி.
(22) தொடாவூர்.
(23) கீரிப்பட்டி.
(24) பெத்தநாயக்கன் பாளையம்.

### தஞ்சை மாவட்டத்தில் வழங்கப்பட்ட பட்டாக்கள்.

58 வினா—

திரு. சி. கணேசன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் 1974-ம் ஆண்டில், இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது ?

விடை—

தஞ்சை மாவட்டத்தில் 1974-ம் ஆண்டில், 31,780 பேர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு உள்ளன.

### *Agricultural loans*

59 Q.—

THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

The amount of loan given under the Agriculturists Loans Act and other special loans in Coimbatore District in the year 1972–73

*A.* —

The particulars are furnished below—

| | | Rs |
|---|---|---|
| 1. | Land Improvement Loans under Agriculturists Loans Act. | 5,32,500.00 |
| 2 | Intensive Manuring Scheme (Regular) .. ... | 23,00,000.00 |
| 3 | Intensive Manuring Scheme (Emergency Relief Programme). | 2,78,775.00 |
| 4 | New Well Subsidy Scheme (Subsidies) .. .. | 16.725.00 |
| 5 | Other special loans . .. .. .. .. | *Nil.* |

(The loans sanctioned by Co-operative Banks for agricultural purposes are not included in these figures.)

*Silt clearance in Buckingham Canal.*

60 *Q.*—

THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the number of times silt clearance was undertaken by the Government during the last three years in the Buckingham Canal ; and

(*b*) the expenditure incurred on this work year-wise of the three years

*A.*—

(*a*) Two times.

(*b*) Year-wise expenditure is as follows :—

| | | | | (RUPEES IN LAKHS.) |
|---|---|---|---|---|
| 1972–73 | .. | .. | .. | 5.48 |
| 1973–74 | .. | .. | .. | 0.52 |
| 1974–75 | .. | .. | .. | 1.01 |

(அ) இரண்டு தடவை.

(இ) வருடச் செலவுபற்றிய விவரம் கீழ் வருமாறு:—

| | | | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1972-73 | .. | .. | .. | 5.48 |
| 1973-74 | .. | .. | .. | 0.52 |
| 1974-75 | .. | .. | .. | 1.01 |

மாண்புமிகு பேரவைத்தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு ;—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக்குறிக்கும்.]



## 2. அமைச்சரின் அறிக்கை.

### ஓர் துணைக் கேள்விக்கு தான் அளித்த விடையைத் திருத்தி மாண்புமிகு திரு. க. அன்பழகன் அளித்த அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கேள்வி 646-க்குக் கொடுத்த விடைக்குத் திருத்தம் கொடுப்பார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை கேள்வி 646-க்கு துணைக் கேள்விகளுக்கு பதில் அளிக்கிறபோது திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கிள்ளியூர் ஒன்றியத்தில் தொலையாவெட்டை பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தப்படுமா என்று கேட்டதற்கு —கிள்ளியூர் ஒன்றியத்தில் தொலையாவெட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது என்று நான் சொன்னேன். அது சரியல்ல. கிள்ளியூர் ஒன்றியத்தில் கருங்கல் என்ற ஊரில்தான் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. உரிமைப் பிரச்னை

### இந்தியப் பிரதமர் கன்னியாகுமரி அம்மனுக்கு வைர நெக்லஸ் அளித்ததாக மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்கள் அளித்த விளக்கம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்ததாக, திரு கே. டி. கே. தங்கமணி, திரு ஜே. ஜேம்ஸ், திரு. ஏ. சுப்பிரமணியம், திரு. எம். சுரேந்திரன், திரு. கோவை செழியன் ஆகிய மாண்புமிகு உறுப்பினர்கள் கன்னியாகுமரி அம்மனுக்கு இந்தியப் பிரதமர் ஒரு வைர நெக்லஸ் அளித்தார்கள் என்று மாண்புமிகு திரு. கண்ணப்பன் கொடுத்த விளக்கத்தையொட்டி உரிமைப் பிரச்சினை எழுப்பியிருக்கிறார்கள். அது எப்படி உரிமை மீறிய நிகழ்ச்சியாகும் என்பதை விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. T. K. TANGAMANI : With your permission Mr. Speaker Sir, I would like to read the notice that I have given to you

"I wish to raise the following matter of privilege under Rule 184 today in the House :

Yesterday (10th April 1975) while answering supplementaries to a question touching diamond crown to the Deity at Palni, the Minister for Hindu Religious Endowments, Thiru Kannappan volunteered and stated—

'The Prime Minister Mrs. Gandhi has made a personal offering of a diamond necklace to the Kanyakumari Temple last year and also a special pooja was performed.

This is clearly a deliberate attempt to mislead the House by giving a false information for creating a wrong impression about the Head of the Central Government. Therefore, it invokes privilege." என்ற முறையில் தங்களுக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம். இது சம்பந்தமாக ஏற்கெனவே நம்முடைய பார்லிமெண்டு செயலாளராக இருந்தவரும், இப்போது செயலாளராக இருக்கக்கூடியவரும் வெளியிட்ட புத்தகத்தில்—லேட்டஸ்டு எடிஷன் 252ஆம பக்கம்—முதல் எடிஷன் 216ஆம் பக்கத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

" If any statement is made on the floor of the House by a Member or a Minister which another Member believes to be untrue, incomplete or incorrect, it does not constitute a breach of privilege" என்று முதலில் சொல்லியிருக்கிறார்கள்.

" A breach of privilege can arise only when the Member or the Minister makes a false statement or an incorrect statement wilfully, deliberately and knowingly" என்று சொல்லியிருக்கிறார்கள்.

There was a ruling also in the House of Commons Report which was published on 20th June 1963. In the House of Commons when it was found that Mr. John Profuma, the War Minister, had deliberately made an untrue statement in the House, he was adjudged guilty of a grave contempt of the House and then he was punished accordingly.

இது என்னுடைய வாதம்—இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையில் நான் தெளிவாகச் சொல்கிறேன். நேற்று ப்ரொசீடிங்சை எடுத்துப் பார்த்தால் தெரியும். பழனி கோவிலுக்கு ஒரு வைரக் கிரீடம் செய்யப்படுவது குறித்து கேள்வி வந்தது. பல உப கேள்விகளைக் கேட்டார்கள். அமைச்சர் அவர்கள் அந்தக் கேள்விகளுக்குப் பதில் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களும் இடையில் அந்தப் பிரச்சினையைத் தெளிவுபடுத்தினார்கள். இதற்கு மத்தியில் ஒரு உறுப்பினர் இந்தியப் பிரதமர் அவர்கள் சங்கராச்சாரியாரை வந்து பார்த்தது பற்றியும் கேட்டார்கள். அதற்கும் பதில் சொன்னார்கள்.

ஆனால், யாரும் கேள்வி கேட்காமல்—அறநிலையத் துறை அமைச்சர் அவர்களே—மினிஸ்டர் வாலண்டியர்டு—யாரும் அவரைக் கேள்வி கேட்கவில்லை. எந்தக் கேள்விக்கும் பதில் என்ற முறையில் அவர் சொல்லவில்லை—வாலண்டரியாகவே இப்போது நான் சொன்ன கருத்துக்களைச் சொன்னார்கள். இந்தியப் பிரதம







மந்திரி அவர்கள் கன்னியாகுமரி அம்மனுக்கு ஒரு வைர நெக்லஸை காணிக்கையாக முக்கியமான ஆட்கள் மூலமாகக் கொடுத்தார்கள். அங்கே விசேஷ பூஜை நடந்தது என்று குறிப்பிட்டார்கள். இதில் 'வில்புல்' என்பது எப்படி என்றால்—சாதாரணமாக கேள்வி கேட்டு அதற்குப் பதில் அளிக்கிறபோது தவறு இருந்தால் தவறுதலாகச் சொல்லிவிட்டதாகக் கருதலாம்—ஆனால் இங்கே அவரை யாரும் கேள்வி கேட்கவில்லை—அவராகவே வாலண்டரியாக—கேள்விக்கு அப்பாற்பட்டு—வேறு ஒரு நோக்கத்தில் அந்தப் பதிலை அளித்தார்கள் It is wilful, it is deliberate, it isknowing that to be not true என்பது இப்போது தான் தெரிகிறது. நேற்று இந்தச் செய்தி வந்தவுடன் இந்தியப் பிரதமர் அந்தச் செய்தியை மறுத்து அவர் சார்பாக வந்திருக்கிற அறிக்கை எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. இந்தச் சபையைப் பொறுத்தவரையில் சபைக்கு உண்மையான செய்திகளைத்தான் கொடுக்கவேண்டும். மாறான செய்திகளைத் தவறாகக் கொடுத்துவிட்டால் பேரவை விதி 82-ஏ இன் கீழ் அமைச்சர் அவர்களே ஒரு திருத்தம் கொடுக்க வேண்டுமென்ற பிரிவையும் போட்டிருக்கிறோம். இன்றைக்கு அமைச்சர் திரு கண்ணப்பன் அவர்கள் தவறான ஒரு இம்பிரஷன் ஏற்படும் வகையில் அவராகவே வாலண்டரியாக அந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். கேள்விக்குப் பதில் அளிக்கிறபோது தவறாகச் சொல்லியிருந்தால் இந்தப் பேரவையில் அவர் தவறான தகவலைத் திருத்திக்கொண்டு சரியான விடையை அளிப்பது சரியாக இருக்கும். குறிப்பாக, மத்திய சர்க்காரில் இருக்கக்கூடிய பிரதம அமைச்சரைப் பற்றி, அவர் இந்த மாதிரியான தவறான காரியங்களைச் செய்தார் அல்லது இந்த மாதிரி ஒரு காரியத்தைச் செய்தார் என்ற இம்ப்ரஷன் சபைக்கு உண்டாகக்கூடிய நோக்கத்தோடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி செய்ததால்தான் நான் ஒரு மேற்கோள் காட்டினேன். மேற்கோளில் நான் சுட்டிக் காட்டியதைப் போல், அவர் தனக்கு இருக்கக்கூடிய உறவைச் சொன்ன பிறகு, தெரிந்துகொண்டே தவறாகச் சொன்னேன் என்ற முறை வந்தபிறகு பிரிவிலெஜுக்குப் போய்—It amounted to a Contempt of the House அதுமட்டுமல்ல It is not only a breach of privilege ஹவுசுக்குத் தெரிந்து கொண்டே பொய்யான செய்தியைக் கொடுப்பதுஎன்பது, தனிப்பட்ட உறுப்பினர் செய்தது அல்ல—It amounts a Contempt of the House. ஆகவே, அதை சீரியஸாகப் பார்க்க வேண்டுமென்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதனை இரண்டு முறைகளிலே செய்யலாம். ஒன்று பிரிவிலெஜ் கமிட்டிக்கு அனுப்பலாம். அல்லது, இதுரொம்ப முக்கிய மான விஷயம். இதில் அரசியல் அதிகமாக ஈடுபட்டிருக்கிற காரணத்தாலே

It can be referred to the Committe of the whole House. The House can constitute itself in to a Committee.

எப்படியோ, நீங்கள் அதை பிரிவிலெஜ் கமிட்டிக்கு விட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இந்தப் பிரச்னை சம்பந்தமாக, நானும் ஒரு உரிமை மீறல் தீர்மானத்தை இங்கு கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் தங்கமணி அவர்கள் இந்தத் தீர்மானம் எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடியது என்பதனை வலியுறுத்துகின்ற வகையில் சில மேற் கோள்களையெல்லாம் கூறினார்கள். ஆகவே, நான் மீண்டும் அந்த மேற்கோள்களை எடுத்துக் கூறத் தேவையில்லையென்று கருதுகிறேன். ஆனால், மாண்புமிகு அறநிலைய அமைச்சரவர்கள் வேண்டுமென்றே, உண்மைக்குப் புறம்பான செய்தியை இந்த மன்றத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்கள் கொடுத்த செய்தியைப் பொறுத்தமட்டில் உண்மைக்குப் புறம்பான செய்திதான்.

ஆனால், மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒருவேளை அதற்கு விளக்கம் கொடுக்கலாம். நம்மைப் பொறுத்தமட்டில் இந்த அவைக்கு மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கொடுத்த செய்தி உண்மையா, இல்லையா என்பதைப் பார்ப்பதற்கு, உடன் தானே, பிரதம அமைச்சரின் காரியதரிசி அவர்கள் இந்தச் செய்தியை மறுத்திருக்கிறார்கள். ஆக, இதை உண்மையிலேயே மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் தெரிந்துதான், வேண்டுமென்றேதான் கொடுத்திருக்கிறார்கள், அவர்கள் இன்னொரு கருத்தைக் கூறியிருக்கிறார்கள். நெக்லஸ் ஒன்றைக் காணிக்கையாகத் தனித் தூதர்மூலம் அனுப்பி வைத்தார் கள் பிரதம அமைச்சரவர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், பிரதம அமைச்சர் கொடுத்திருக்கிறார்களா அல்லது வேறு யாரும் கொடுத்திருக்கிறார்களா என்று எள்ளளவும் ஐயப் பாட்டுக்கு இடமில்லாத வகையில் இதைப் பிரதமர்தான் கொடுத்திருக்கிறார்கள், இதை ஒரு தூதர்மூலம் கொடுத்திருக் கிறார்கள் என்று வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள் என்று சொன் னால், இந்த மன்றத்திலேயிருக்கிற எந்த உறுப்பினரும் எள்ளளவும்



ஐயப்பாடில்லாமல் இதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற அளவில்தான் இச்செய்தியைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இந்தச் செய்தியானது, பிரதம அமைச்சரின் காரியதரிசி மறுத்ததன் காரணத்தாலே, உண்மைக்குப் புறம்பான செய்தி யாகவிருக்கிறது. ஆகவே, இது அவையின் உரிமையை மீறிய செயலாக இருக்கிறது.

இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் கூறிக்கொள்ள விரும்பு கிறேன். பிரதம அமைச்சரின் காரியதரிசி இதற்கு விளக்கம் கூறுகின்ற பொழுது, பிரதம அமைச்சர் கன்னியாகுமரி மாவட்டத் திற்குச் சென்றபொழுது குமரியம்மன் கோவிலுக்குத் திடீரென்று தான் விஜயம் செய்தார்கள். யாரோ அழைத்துத்தான் சென்றார் கள். அதற்காக, விசேஷ பூஜைகள் ஏற்பாடு செய்யப்பட வில்லை. தான் வைர நெக்லஸை காணிக்கையாகத் தரவில்லை யென்று மறுப்பு தெரிவித்தார்கள் என்று சொன்னால், அதோடு விட்டிருக்கலாம். ஆனால், அதோடு சேர்ந்து அவரது பெயரில் வேறு யாராவது, எப்போதாவது அளித்திருந்தால் அது அவருக்குத் தெரியாமல், அவரது அனுமதி பெறாமல் நடந்த வேலை என்றும் கூறியிருக்கிறார்கள். ஆகவே, இவ்வளவு விலை உயர்வான வைர நெக்லஸை அவர்களாகக் கொடுக்கவில்லையென்று சொன்னாலும், வேறொருவர் கொடுத்திருக்கிறார். அது ஏற்றுக் கொள்ளக்கூடிய விஷயமல்ல என்று பிரதம அமைச் சரின் சார்பில் அறிக்கை விடப்பட்டிருக்கிறது. ஆக, அவர் தானாகக் கொடுக்கவில்லையென்றால், இந்த வைர நெக்லஸை யார் கொடுத்தது? இந்த வைர நெக்லஸ் எங்கிருந்து வந்திருக் கிறது? பல கடத்தல் மன்னர்கள் எல்லாம் இருக்கிறார்கள். திடீரென்று இந்த நாட்டிலே அவர்களைத் தீவிரமாகப் பிடிக் கிறோம் என்று ஒரு செயற் குறிப்பை வைத்து நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தக் கடத்தல் மன்னர் களை..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடத்தல் மன்னர்கள் இதில் முக்கியமான விஷயம் அல்ல.

திரு. ஜே. ஜேம்ஸ் : இதில் முக்கியமான விஷயம், இந்த வைர நெக்லஸ் எத்தனை இலட்சம் மதிப்பு? எங்கிருந்து வந்தது? இதையெல்லாம் நாம் ஆராயக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே மிகவும் முக்கியமான..........................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பிரிவிலெஜைப் பற்றிச் சொல்லவேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆக, இந்த வைர நெக்லஸானது எவ்வளவு விலை மதிக்கக்கூடியது? இது எங்கிருந்து வந்தது இதையெல்லாம் மத்திய அரசாங்கம் புலனாய்வு செய்யவேண்டிய பொறுப்பிலிருக்கிறது. ஆனால், நமது மாநிலத்தைப் பொறுத்து இந்த விவகாரம் இருக்கிற காரணத்தால், அதில் அக்கறை எடுக்க வேண்டிய விஷயம்—நமது மாநிலத்திற்கு இருக்கிறது. ஆக, நமது மாநில அமைச்சரவர்கள் உண்மைக்கு மாறாக......

திரு. கே. எம். சுப்பிரமணியம் : ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆர்டர், சார்..................

திரு. ஜே. ஜேம்ஸ் : மற்ற அங்கத்தினர்களைவிட எனக்கு இதில் அதிக அக்கறை உண்டு, ஏனென்றால், இது எங்கள் மாவட்டத்திலேயிருக்கிற கோவில். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை என்று கூறுகிறோம். அது மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள அனைத்து மக்களும் கன்னியா குமரிக்கு வருகிறார்கள். அதன் புனிதத்திற்குக் களங்கம் கற்பிக்கின்ற முறையில் இது வந்திருக்கிறது என்று சொன்னால் அதை அனுமதிக்கக்கூடாது. ஆகவே, இதனை முழுமையாக விசாரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உண்மைக்கு மாறாக இந்தச் சபைக்குக் கொடுத்த தகவல் அவை உரிமை மீறல் தகவலாகும். ஆகவே, தலைவர் அவர்கள் ஒன்று இந்த மன்றத்தில் விசாரித்துத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் அல்லது உரிமைக் குழுவுக்கு இந்தப் பிரச்னையை அனுப்பி, இதற்குத் தக்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I rise on a point of order. The question at issue is whether the Honourable Minister for Religious Endowments has made a wrong statement and not the question whether the present was given by the Prime Minister or somebody else. T Honourable Member, Thiru James, says that this is a very important matter. It is not as if bribery has taken place. This is wrong.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுக்கப்படவேயில்லையென்று சொல்லவில்லை. கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் இந்திரா காந்தி அவர்கள் கொடுத்தார்களா, வேறு யாராவது கொடுத்தார்களா என்று கேட்கிறார்கள்.

Thiru. K. M. SUBRAMANIAM: Sir, I strongly object to it.

*திரு. ஏ. சுப்பிரமணியம் : Mr. Speaker Sir, முதலிலே நான் கொடுத்திருக்கிற உரிமை மீறல் பிரச்னைபற்றிய அந்த நோட்டீஸைப் படிக்க....................



மாண்புமிகு பேரவைத் தலைவர் : முழு கன்டென்ட்ஸை நானே பார்க்கவில்லை, ஆகவே, படிக்க வேண்டாம்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : அதைப் படித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கருத்தை மட்டும் சொல்லுங்கள். என்ன எழுதியிருக்கிறதென்று நானே பார்க்கவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் படித்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் பார்த்தேன். உங்கள் நோட்டீஸை நான் பார்க்கவில்லை.

திரு. நா. வீராசாமி : 9 மணிக்குள்ளே கொடுத்தால் தானே, நீங்கள் எடுக்கலாம்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : எல்லாம் முறைப்படிதான் செய்யப்பட்டிருக்கிறது. 9 மணிக்குள்ளே கொடுக்கப்பட்டிருக்கிறது.

தலைவரவர்களே, நேற்றைய தினம் இங்கே கேள்வி நேரத்தின் பொழுது பழனி தண்டாயுதபாணி கோயிலிலேயுள்ள சாமிக்கு வைரக் கிரீடம்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கன்னியாகுமரிக்கு நீங்கள் போங்கள். பழனிக்குப் போனால்..............

திரு. ஏ. சுப்பிரமணியம் : நான் பழனிக்கு போவதில்லை. பிரச்னை வந்ததைச் சொல்கிறேன். அது சம்பந்தமாகக் கேள்வி கேட்கப்பட்டு அது சம்பந்தமாக துணை கேள்விகள் கேட்கப்பட்டுக் கொண்டிருந்தன. அந்த நேரத்திலே மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள், மாண்புமிகு கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதுபோல் யாரும் கேட்காமலே, He volunteered to give the so called alleged information இந்த மாதிரி பிரதம அமைச்சர் வைர நெக்லஸ் கொடுத்து அனுப்பி விசேஷ பூஜை நடந்தது என்றெல்லாம் சொன்னார்கள். நேற்றைய தினமே அம்மாதிரி கிடையாது என்ற குறிப்பு வந்திருக்கிறது. கன்னியாகுமரிக்குச் சென்ற நேரத்திலே அங்கேயுள்ள கோயிலுக்குப் போகிற திட்டம் அவர்களுடைய சுற்றுப்பயண திட்டத்திலே கிடையாது. அங்கே இருக்கிறவர்கள் கட்டாயப்படுத்தியதால் அங்கே போய்விட்டு வந்தேன், அப்போது பூஜை நடத்தப்படவில்லை, எந்தவிதமான காணிக்

கையும் செலுத்தப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இம்மாதிரி தெளிவாகத் திட்டவட்டமாக இது மறுக்கப்பட்டிருக்கிறது. ஆக, மாண்புமிகு அமைச்சர் இங்கே சொன்ன செய்தியானது உண்மைக்குப் புறம்பான ஒன்றாக இருக்கிறது.

வேண்டுமென்றே சொன்னார்களா என்பது அடுத்த பிரச்னை. மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் கோயில்களுக்குப் பொறுப்பாளியாக இருக்கிறார், கோயில்களுக்கு முக்கியமான டிக்னட்டரியிடமிருந்து செலுத்தப்பட்டதா, இல்லையா என்ற தகவல் வந்திருக்கவேண்டும். அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஆகவே, எந்த நோக்கத்தோடு அவர் சொல்லியிருக்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும். இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்களான நானும், சுரேந்திரனும் துணைக் கேள்விகள் எழுப்பினோம். இப்படிப்பட்ட பொருளாதார சூழ்நிலையிலே வைர கிரீடம் சூட்டுகின்றது முறையா என்று கேட்ட நேரத்திலே, நாங்கள் கேட்டோம் என்பதால், எங்கள் கட்சியைச் சேர்ந்த பிரதம அமைச்சர் என்ற காரணத்தினாலே, அவர்களைத் தாக்கவேண்டும், in order to sully her name என்ற முறையிலே, பெயரைக் கெடுக்க வேண்டுமென்று, மாசுபடுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு சொல்லியிருக்கிறார்கள், அப்படிப்பட்ட நோக்கம் இல்லாமலிருந்தால் இப்படி ஒரு ஸ்டேட்மென்ட் வந்திருக்க முடியாது. ஆகவே, நோக்கம் தவறான நோக்கம். இம்மாதிரி அவரைத் தாக்குகிற நோக்கம், இந்த நாட்டின் பிரதம அமைச்சரைத் தாக்குகிற நோக்கம் அவர்களுக்கு மாசு ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கத்தோடு சொல்லியிருக்கிறார்கள். வேறு கான்டக்ஸ்டிலே இதைச் சொல்லியிருந்தால் கூட யாராவது ஒருவர் வைரநெக்லஸ், தங்க நெக்லஸ் கோயிலுக்கு அனுப்பியிருக்கிறார் என்று சொன்னால்கூட தவறாக இருக்காது. இந்த பர்டிகுலர் கான்டக்ஸ்டிலே மாண்புமிகு அமைச்சர் தானாக முன் வந்து தெரிவித்தது

It was a purposeful and wilful statement. Though the Honourable Minister knew very well that it was a wrong information, he made that statement in order to mislead the House. He thought that he coul get away with the statement. என்ற முறையில் செய்திருக்கிறார்கள். ஆகவே, நிச்சயமாக இந்த அவையின் உரிமையை மீறிய செயலாகும். ஆகவே, இதை உரிமைக் கமிட்டிக்கு விட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் கூறிய அந்த வாசகம், பிரதம அமைச்சர் தனியாக பிரதிநிதி மூலமாக கன்னியாகுமரியில் இருக்கின்ற அம்மன் கோயிலுக்கு வைரநெக்லஸ் அனுப்பியிருக்கிறார் என்று சொன்னார்கள். நேற்று அது உண்மையென்று நாம் எல்லாம் நம்பியிருந்தோம். ஆனால் அவசர அவசரமாக



டில்லியிலிருந்து, பிரதம அமைச்சர் ஆபிசிலிருந்து மறுப்பறிக்கை வந்திருக்கிறது. அதை உடனடியாக அவர்கள் தருகிறார்கள் என்கின்றபோது, உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தி வந்து விட்டதாலே உடனடியாக அந்த மறுப்பைத் தந்திருக்கிறார்கள். 1972ஆம் ஆண்டு செப்டம்பர் 6-ம் தேதி கன்னியாகுமரியிலே ரயில்வே அஸ்திவாரக்கல் போடுவதற்கு வந்தபோது—எனக்குக் கிடைத்த தகவல்படி—அவர்கள் முன்னதாக ஏற்பாடு செய்யாமல் கடைசி நேரத்திலே அங்கே வீரபாகு என்பவர் பிரதம அமைச்சர் அங்கே வரவேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். அவர்கள் தான் மட்டும் போகாமல் அங்கே இருந்த முதலமைச்சர் அவர்களையும் அமைச்சர் ராஜாராம் அவர்களையும் கோயிலுக்குக் கூப்பிட்டார்கள். வாருங்கள் என்று. இவர்கள் வெளியே நின்றிருக்கிறார்கள். அவர்கள் போய்விட்டு வந்திருக்கிறார்கள். அது தான் உண்மையாக நடந்த செய்தி.

ஆனால் அமைச்சர் இங்கே சொல்லும்போது தூதுவர் மூலமாக பிரதம அமைச்சர் கொடுத்தனுப்பினார் என்று சொன்னார். அப்படியிருந்தாலும் பிரதமர் வருவது இந்த அரசாங்கத்திற்குத்தான் முதலிலே தெரிந்திருக்கவேண்டும். பிரதம அமைச்சருக்குத் தெரியாமலேயே ஒருவர் பிரதம அமைச்சர் கொடுக்கச் சொன்னதாக வைர நெக்லஸ் கொடுத்திருக்கலாம் என்ற முறையிலே—இந்த மாமன்றத்திற்குத் தெரிந்தாகவேண்டும்—யாராவது கொண்டுபோய் கொடுத்தார் என்று சொல்வது அழகல்ல, முறையல்ல. யார் வேண்டுமானாலும் சொல்லலாம் அப்படி. நான்கூட நம்முடைய முதலமைச்சர் பெயரிலே அபிஷேகம் செய்கிறேன் என்று சொல்லி திருப்பதியிலே செய்யலாம். அப்படிச் செய்தால் முதலமைச்சர் பெயரால் செய்யப்பட்டது என்று பொருள் அல்ல. நான் அல்ல வேறு யாராவது அவர் பெயரால் செய்தால் கூட முதலமைச்சருக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. ஆகவே பிரதம அமைச்சர் மூலமாக வந்தது என்று சொல்வது ஆதாரமற்றது, யாரோ ஒருவர் கொடுத்தார் என்று சொல்வது தவறு. அப்படியே வந்தாலும் பிரதமருக்குக் கடிதம் எழுதி நீங்கள் அனுப்பிய வைர நெக்லஸ் கிடைத்தது என்று கன்பர்ம் செய்திருக்க வேண்டும் அரசாங்கம். அதை விட்டு விட்டு யாரோ கொண்டு வந்தார் என்று சொல்வது தவறானது, இது உரிமை மீறிய பிரச்னை. இந்த மன்றத்திலே நடப்பது எல்லாம் நாட்டிற்குத் தெரிகிறது, இது இந்த நாட்டு மக்களைத் திசை திருப்புகின்ற முறையிலே அமைந்திருப்பதால், இதை உரிமைப் பிரச்னையாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: நான் உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறேன், சில கருத்துக்களை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த முறையில் பேசு கிறீர்கள் ? கட்சிக்கு ஒருவர்தான்.

திரு. எம். சுரேந்திரன் : கட்சிக்கு ஒருவர் என்ற முறையல்ல, நானும் கொடுத்திருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : உரிமைப் பிரச்னையைப் பொறுத்தவரையில் அவரும் அறிவிக்கை கொடுத்திருக்கும்போது அவரும் பேசுவதில் ஒன்றும் ஆட்சேபணையில்லை,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் விரும் பினால்தான். நாம் ஒரு முறையை வைத்துக் கொண்டிருக் கிறோம், கட்சிக்கு ஒருவர் என்று வைத்திருக்கிறோம். கையெழுத்துப் போட்டவர்களுக்கு எல்லாம் வாய்ப்புக் கொடுப்பது என்பது முறைதானா ?

திரு. கே. டி. கே. தங்கமணி : பிரிவிலேஜ் மோஷன் ரொம்ப முக்கியமானதாக இருந்தால்தான் கொடுப்பார்கள். ஆகவே அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்ற முறையிலே பேசலாம். அட்ஜர்ன்மென்ட் மோஷன் என்றால் அம்மாதிரி இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நோட்டீசிலேயே இரண்டு பேர்கள் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக் கிறார்கள், ஒருவர் பேசிவிட்டார், அதே கட்சியைச் சேர்ந்த மற்றொருவரும் பேசுவது முறைதானா ?

திரு. க. உரொ. எட்மண்ட் : பிரிவ்லேஜ் மோஷன் கொடுத் தவர்தான் பேசவேண்டுமென்பதல்ல. To enlighten the Chair, any Member can participate.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ' Any Member can participate ' என்று அல்ல. பேரவைத் தலைவர் விரும் பினால்தான் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கலாம் என்றுதான் விதிகளிலே இருக்கிறது.

THIRU G. R. EDMUND : We have to follow the rules and conventions of the House. There are precedents in which Members of this House who had not moved any privilege motion had participated in the discussion. We have got ample examples.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய மன்றத்திலே ஒரு முறை கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்பதற்காகச் சொல் கிறேன்.



திரு. கே. டி. கே. தங்கமணி : அட்ஜர்ன்மென்ட் மோஷ னாக இருந்தால் பல உறுப்பினர்கள் கொடுத்திருந்தால் ஒரு கட்சிக்கு ஒரு உறுப்பினர் பேசலாம் என்று சொல்லலாம். பிரிவ்லேஜ் மோஷன் கொடுத்தால் ஒரு கருத்தை வைத்துத் தான் கொடுப்பார்கள். ஆகவே நம்முடைய கன்வென்ஷன்படி பார்த்தால்கூட அவரைப் பேசவிடுவதுதான் நல்லது.

[முற்பகல் 10-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் கையெழுத் துப் போட்டுக் கொடுத்து விட்டு, பேச வேண்டும் என்று சொன்னால் வேறு ஒரு பிசினஸும் நடக்காது.

திரு. எம். சுரேந்திரன் : அவர்கள் சொல்லாத பாயிண்டைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே நோட்டீஸில் இரண்டுபேரும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே, இப்பொழுது நீங்களும் பேசவேண்டுமென்று சொல்வது நல்ல முறையல்ல.

திரு. நா. வீராசாமி : ஆளுங்கட்சி சார்பில் எனக்கும் ஒரு சான்ஸ் கொடுங்கள்.

*திரு. எம். சுரேந்திரன் : சார், நேற்றையதினம் கேள்வி- பதிலின்போது அறநிலையத்துறை அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து இந்தப் பிரச்னை கிளம்புகிறது. இப்படிப்பட்ட பதில் ஏன் வந்தது ? இங்கேயுள்ள ஆளுங் கட்சியினர் பகுத்தறிவு வாதிகள் என்று சொல்லிக் கொள் கின்ற நிலையிலே உள்ளவர்கள், கோயிலிலே கிரீடம், தேர் போன்றவற்றிற்கு ஊக்கம் அளிக்கலாமா என்ற கேள்விக்கு, என்னை பலஹீனப்படுத்தவேண்டும், என்னுடைய கட்சியாகிய இந்திரா காங்கிரஸ் கட்சியைக் குறை சொல்ல வேண்டுமென்ற எண்ணத்தோடு, உண்மையை மறைத்து, என்னைத் தாக்கு வதற்கான முறையில் திரு. கண்ணப்பன் அவர்கள் பதில் கூறி னார்கள் என்பது என்னுடைய கருத்து.

நேற்று அவர்கள் பதில் சொல்கின்ற முறையிலே பார்க் கும்பொழுது இந்த அவையிலே இருக்கின்ற ஒரு அமைச்சர், தேசத்தை ஆளுகின்ற பிரதம அமைச்சர் அவர்களின் மீது ஒரு குற்றச்சாட்டு போன்ற ஒரு கருத்தைச் சொல்வது என்றால் மிக ஆழமாக மீண்டும் மீண்டும் ஆலோசனை செய்து சொல்வதுதான் பொறுப்புள்ள அமைச்சரின் கடமையாகும். ஆனால் கேள்வி பதிலுக்குச் சம்பந்தம் இல்லாத நிலையிலே,

கேள்வி கேட்பவர்கள் உண்மையைக் கேட்கிறார்களே என்ற கோபத்தின் காரணமாக, எங்களைப் பலஹீனப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில், சம்பந்தம் இல்லாத ஒன்றைக் கொண்டு வந்து சொல்லி, அது இல்லை எனறு மறுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் பிரச்னை. இந்தப் பிரச்னையிலே ஏதோ சந்தர்ப்பவசத்தால் ஏற்பட்டது அல்லது ஒரு நிலைமையிலே அகஸ்மாத்தாக ஏற்பட்டது என்று சொல்லக்கூடிய வாதமாக இல்லாமல், உள்நோக்கத்தோடு, தங்களைப் பாதுகாத்துக் கொள்ள, தங்களது உண்மை நிலையைத் தட்டிக் கேட்கிறார்களே, அதற்கு சமாதானம் சொல்ல முடியவில்லையே என்ற நோக்கத்துடன், தவறான நோக்கத்துடன், தாங்கள் கடைப்பிடித்து வரும் கொள்கையின் அடிப்படையிலே, உணர்விலே அந்தக் கேள்வியைக் கேட்கிறார்களே என்ற நோக்கத்துடன் இந்த வார்த்தைகள் சொல்லப்பட்டிருப்பதால் இது கட்டாயம் உரிமைப் பிரச்னையாகிறது. இதை இன்னும் ஆழமாக, சாதாரண உரிமைப் பிரச்னை என்று எடுத்துக் கொள்ளாமல் ஆழமாகக் கவனிக்க வேண்டிய பிரச்னை என்று எடுத்துக் கொண்டு இதை உரிமைக் கமிட்டிக்கு விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, இந்தத் தேசத்திலே ஒருவர் இந்துவாகப் பிறந்துவிட்ட காரணத்தினாலே தான் அந்த மதத்தின் மீது நம்பிக்கை வைத்து, அந்த மதத்திலே பக்தி கொண்டு, அந்த மதத்திற்கு என்னென்ன காரியம் செய்ய வேண்டுமென்று ஒருவர் நினைக்கும் பொழுது அவர் எவ்வளவு பெரிய அதிகார பீடத்திலிருந்தாலும் அது தவறு என்ற நினைவு இந்துக்களின் மனத்திலே ஏற்பட்டிருப்பதைக் கண்டு நான் வருந்துகிறேன். இதை ஏன் தவறு என்று கருத வேண்டும் ? ஒருவர் ஆட்சி பீடத்தில் இருப்பதால் அவர் தெய்வத்திற்கு செய்ய வேண்டிய மரியாதையைச் செய்ய அவருக்கு உரிமை இல்லையா ? அதை விட்டு விட்டு ஏதோ தவறான கருத்தை நமது பிரதம அமைச்சரவர்களின் மீது கொண்டு வருவதற்காக ஏற்பட்ட காரியம் என்ற எண்ணத்திலே இரு சாராரும் நினைப்பது சரியான முறையாகாது.

ஆனால், கொடுத்த தகவலைப் பற்றி, அது சரியா இல்லையா என்பதைப் பற்றி நமக்கு அதைச் சொல்வதற்கு முன்பே அதைப் பற்றிக் கேட்டறிந்து, அதற்குப் பிறகு இந்தச் சபைக்குத் தகவல் கொடுத்திருந்தால் சரியாக இருக்கும், இருந்திருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, நேற்றைய தினம் நான் பதில் கூறும் நேரத்தில் பிரதம அமைச்சரைப்பற்றி இங்கே குறிப்பிட்டுக் கூறிய சில செய்திகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே உரிமைப்



பிரச்னையைச் சொல்லியிருக்கிறார்கள். எனக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையிலே, நேற்றையதினம் அந்தப் பதிலைச் சொன்னேனே தவிர, எந்த வகையிலேயும் பிரதம அமைச்சருக்கோ அல்லது அவர்கள் கட்சியைச் சார்ந்திருக்கின்ற இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கோ களங்கம் ஏற்படுத்த வேண்டும் அல்லது மாசு கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்திலே சொல்லியிருப்பதாக அவர்கள் நினைக்கக் கூடாது ஏனபதை ஆரம்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. சுரேந்திரன் அவர்கள், ஏதோ கோபம் வந்த காரணத்தினால் சொன்னதாகச் சொன்னார்கள். நிச்சயமாக எப்பொழுதும் கோபப்பட்டு பதில் சொன்னது கிடையாது. உண்மைக்கு மாறான தகவலை இந்தச் சட்டமன்றத்திலே சொன்னதும் கிடையாது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும் என்று என்னைப் பொறுத்த வரையில் நம்புகிறேன். நேற்றைய தினம் பதில் சொல்லும் நேரத்தில் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் வைர நெக்லஸ் தூதுவர் மூலம் கொடுத்துள்ளார்கள் என்று நான் குறிப்பிட்டேன், வைரக்கற்கள் பதித்த தங்க கிரீடம் என்று சொல்வதற்குப் பதிலாக வைர நெக்லஸ் என்று குறிப்பிட்டேன். இதிலே நடந்ததை நான் கொஞ்சம் விளக்கமாகவே சொல்லிவிட வேண்டுமென்று கருதுகிறேன்.

1973ஆம் ஆண்டு அக்டோபர் அல்லது நவம்பர் மாதம் என்று கருதுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலேயிருக்கின்ற தேவஸ்வம் போர்டு அறங்காவலர் குழு உறுப்பினர்களிடமிருந்து பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் கன்னியாகுமரி கோயிலுக்கு வருகை தருவதாகவும், ஜனவரி மாதம் வருகை தரப்போகிறார்கள் என்றும், அந்த நேரத்திலே அந்தக் கோயிலுக்கு என்னையும் வரவேண்டுமென்று அறங்காவலர்கள் குழு உறுப்பினர்கள் அழைத்தார்கள். நானும் பிரதம அமைச்சரவர்கள் வருகை தரும் பொழுது செல்ல வேண்டுமென்று எண்ணி குறித்து வைத்திருந்தேன். ஆனால் பிரதம அமைச்சரவர்கள் வருவதற்கு சௌகரியம் இல்லை என்ற செய்தி பின்னால் தெரிய வந்தது. வருகை ரத்து செய்யப்பட்டது என்ற செய்தி எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

பிறகு அந்தக் கோயிலுக்கு 6 ஜனவரி 1974இல் காலஞ்சென்ற மத்திய அமைச்சர் திரு. எல். என். மிஸ்ரா அவர்களும் திருமதி மிஸ்ரா அவர்களும் சென்னையிலே உள்ள புரஃபொசர் சுந்தரம் அவர்களும் அந்தக் கோயிலுக்கு வருகை தந்தார்கள். அவர்கள் வந்த நேரத்தில் சுமார் 50,000 ரூபாய் மதிப்புள்ள தங்கக் கிரீடம், வைரக் கற்கள் பதித்த தங்கக் கிரீடம் அந்தக் கோயிலின் அம்மனுக்கு காணிக்கையாகச் செலுத்தப்பட்டது. ஆனால் முதலிலே சொன்ன செய்தி பிரதம அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வருவதாகச் சொல்லப்பட்டது.

பிறகு எல். என். மிஸ்ரா அவர்கள் வருகிறார்கள், இந்தக் காணிக்கையைச் செலுத்தப் போகிறார்கள் என்ற செய்தி என்னிடத்திலே தெரிவிக்கப்பட்டது. அப்பொழுது நான் செல்லவில்லை. அவர்கள் அந்தக் கோயிலுக்கு வந்தார்கள். காணிக்கை செலுத்தப்பட்டது. சான்றுகள் அத்தனையும் போட்டோக்கள் மூலம் வைத்திருக்கிறேன். மாண்புமிகு தலைவரவர்களின் மூலமாக இந்தச் சபை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் (போட்டோவைக் காண்பித்து), இது தங்க கிரீடம். மதிப்பிற்குரிய எல். என். மிஸ்ரா அவர்கள் கோயில் மரியாதையோடு வரவேற்கப்பட்டு, உள்ளே அழைத்துச் செல்லப்பட்ட பிறகு, அந்தக் கிரீடத்தை கோயில் நிர்வாகிகளிடத்தில் காணிக்கையாக வழங்குகிறார்கள். அத்தனையும் போட்டாவாக இருக்கிறது. பேரவைத் தலைவரவர்களுக்கு இந்த ஆல்பத்தை நான் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பத்திரிகையிலே கூட நேற்றையதினம் பிரதம அமைச்சரவர்களின் அலுவலகத்திலிருந்து சொல்லுகின்ற பொழுது

'If anyone else had made an offering in her name at any other time it is without her knowledge or approval'.

என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய பெயரால் வேறு யாராவது கொடுத்திருந்தால் என்னுடைய அனுமதியைப் பெறாமல் கொடுக்கப்பட்டதாகும், என்ற செய்தியைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எனக்குத் தெரிவிக்கப்பட்ட தகவல்கள், செய்திகள் அவர்களுக்காக இது, சென்னையிலே செய்யப்பட்டு, தனி பூசை சென்னையிலே செய்யப்பட்டு, அங்கு கொண்டு போவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிரீடத்தைச் செய்த சிற்பி, சென்னையிலே உள்ள திரு. எஸ். டி. முருக பூஷணம் அவர்கள்தான் அந்தக் கிரீடத்தைச் செய்திருக்கிறார்கள். அவர்களை காலையில் விசாரித்துத் தகவல்கள் கேட்டறிந்து இருக்கிறேன். ஆகவே, பிரதம அமைச்சர் மீது மாசு கற்பிக்கவேண்டுமென்றோ அல்லது அவைக்குத் தவறான தகவலைச் சொல்லவேண்டுமென்றோ அல்லது ஆளும் காங்கிரஸ் கட்சியைப் பற்றி தவறான எண்ணத்தோடு சொல்ல வேண்டுமென்றோ நான் இந்தத் தகவலைத் தரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, என்றைக்கும் இந்த சட்டமன்றத்தை, சட்டமன்றத்திலுள்ள உறுப்பினர்களை மதித்துப் பழக்கப்பட்டிருக்கின்றவன் நான், கோபத்தோடோ, அவதூறாகவோ எந்தச் செய்தியையும் சொல்ல மாட்டேன் என்ற செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் அவையின் கவனத்தைத் திசை திருப்ப வேண்டுமென்ற நோக்கத்தோடு தவறான தகவலைச் சொல்லவில்லை என்பதையும் நான் தெரிவித்து கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : பாயின்ட் ஆப் ஆர்டர், சார். பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தந்த கருத்து எவ்வளவு தவறானது என்பது அவர்களுடைய பேச்



சிலிருந்து நல்லமுறையில் தெரிகிறது. நான் இரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஒன்று, 1973ஆம் ஆண்டிலே பிரதம அமைச்சரவர்கள் இங்கே வருகிறார்கள் என்ற செய்தி எங்கேயோ இருக்கின்ற அறங்காவலர்களுக்குத் தெரிந்து அவர்கள் கடிதம் எழுதியதாகச் சொன்னார்கள். அப்படி பிரதம அமைச்சர் ஒரு இடத்திற்கு வருவதாக இருந்தால் தமிழக அரசுக்குத் தெரிவித்திருப்பார்கள், முதலமைச்சருக்குத் தெரிவித்திருப்பார்கள், அதற்குப் பின்னால்தான் மற்றவர்களுக்குத் தெரியும். ஏதோ அறங்காவலர்கள் சொன்னார்கள், குறித்து வைத்துக் கொண்டேன் என்று சொல்வது முறையல்ல.

இரண்டாவதாக, எல். என். மிஸ்ரா அவர்களும், அவருடைய துணைவியாரும் வந்திருக்கிறார்கள். பிரதமர் அவர்கள் மீதுள்ள அன்பினால் அல்லது அவர்களுக்காக இவர்கள் வேண்டிக்கொண்டோ—ஏதோ ஒரு காரணமாக வந்திருக்கலாம். ஏற்கெனவே அந்தச் செய்தியை நாகர்கோயில் உறுப்பினர்கள் எல்லாம் என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள், எல். என். மிஸ்ராவும், அவருடைய துணைவியாரும் சென்று கொடுத்த காணிக்கையை எப்படி பிரதமர் தன்னுடைய தூதுவர் மூலமாகக் கொடுத்ததாகச் சொல்லுவது சரியாகும் ? தலைவர் அவர்களே, அந்த வார்த்தையைத் தாங்கள் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். தவறாகச் சொல்லிவிட்டேன், மன்னித்துக் கொள்ளுங்கள் என்றால் இந்தப் பிரச்சினையை இதோடு விட்டு விடலாம். அதைச் சொல்லுவதற்குப் பதில் எல். என். மிஸ்ராவும், திருமதி மிஸ்ராவும் தங்கக் கிரீடம் கொடுத்ததாகச் சொல்லுகிறார்கள். எல். என். மிஸ்ரா கொடுத்ததை இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் பிரதம அமைச்சர் சார்பாக வந்தேன் என்று எல். என். மிஸ்ரா எழுதித் தந்திருக்கிறார்களா ? இரண்டும் இல்லையென்று சொல்லும் போது மாண்புமிகு அமைச்சர் உரிமைப் பிரச்சினையிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. அமைச்சர் அவர்கள் உண்மைக்குப் புறம்பாகக் கூறியிருப்பதால் இது உரிமைப் பிரச்னைக்கு உட்பட்டதாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : Sir, I rise on a point of order to be properly given a ruling by the Honourable Speaker. Normally the practice has been that when a privilege issue comes up before the House, we first see whether a *prima facie* case has been made out or not. That is the purpose for which privilege motion is being emergently discussed by various Members who had given notice. In this particular context the fact is that it is not 'diamond necklace' but it is only a 'kireetam'. Therefore there is difference between what the Minister said yesterday and what he has said today.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள். உங்கள் கருத்தை எல்லாம் சொல்லிக்கொண்டு போகக்கூடாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தயவு செய்து இரண்டு நிமிடங்கள் கொடுங்கள் ...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து என்பதெல்லாம் வேண்டாம். எவ்வளவு நேரம் வேண்டுமென்றாலும் கேளுங்கள். பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள். விதிப் புத்தகத்தில் எந்த ரூல் என்று சொல்லுங்கள். எது எதையோ சொல்லுகிறீர்களே.

டாக்டர் எச். வி. ஹாண்டே : விளக்கமாகச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன ? எந்த விதி மீறப்பட்டிருக்கிறது ?

டாக்டர் எச். வி. ஹாண்டே : பிரிவிலேஜ் மோஷன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன ?

டாக்டர் எச். வி. ஹாண்டே : இரண்டு நிமிஷம் கொடுங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 20 நிமிஷம் கூடத் தருகிறேன். பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன ?

(கூச்சல் - குழப்பம்)

Dr. H. V. HANDE : Therefore my point is whether there is a *prima facie* case and whether it can be referred to the Privileges Committee. The Honourable Speaker or the House is entitled to know whether the Honourable Minister confesses that there has been a mistake in his statement yesterday. If the privilege motion is not to go before the Privileges Committee, the House has a right to demand at least an apology on the part of the Honourable Minister for having given a wrong statement to the House.

(Thiruvalargal Thoppur Thiruvengadam and K. Kamatchi rose.

Dr. H. V. HANDE : Sir, just hear me. The normal procedure is that when the motion comes before the House, it should be moved that a *prima facie* case is made out and the matter be referred to the Committee of Privileges. That is done under Rule 143 or so. The Honourable Speaker decides to refer it to the Privileges Committee after listening



to the particular person against whom the privilege motion is sought to be introduced. But here a tricky position has arisen. Neither the Honourable Minister has confessed that there has been a mistake and apologised nor has he refuted the allegations made. So, there is a tricky situation. He has to prove that there is no *prima facie* case. He has not done so. When such is the case, is it in order for the Honourable Minister to say that he had committed a mistake but it is not for the purpose of side-tracking the proceedings ...........

(குறுக்கீடு)

" திசை திருப்புவதற்காகச் சொல்லவில்லை. ஆனால் தவறு நடந்திருக்கிறது என்று மட்டும் சொல்லுகிறேன். " அப்படி அமைச்சர் சொல்லியது முறையா ? ஆகவே, இதை பிரிவிலெஜ் கமிட்டிக்கு அனுப்பவேண்டும். இல்லாவிட்டால் குறைந்தபட்சம் அவர்கள் மன்னிப்பாவது கேட்கவேண்டும்.

(கூச்சல் - குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரைமா பேஸி கேஸ் இருக்கிறது என்று வந்த பிறகு அதைப்பற்றியெல்லாம் சொல்லலாம். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி, குறைந்தபட்சம் மன்னிப்பாவது கேட்க வேண்டும்' என்றெல்லாம் சொல்லுவது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு அமைச்சர் கண்ணப்பன் அவர்கள் இந்தத் தகவலைத் தந்தார்கள். நண்பர் சுரேந்திரன் அவர்கள் நேற்று கோயில்களில் தங்க ரதங்கள், தங்கக் கிரீடங்கள் வைப்பதுபற்றி திரும்பத் திரும்பக் கேள்வியைக் கேட்டு, பகுத்தறிவாளர்கள் என்று சொல்லுகிற நீங்கள் அதை அனுமதிக்கலாமா என்று கேட்டுக் கொண்டு வந்தார்கள். அந்த நேரத்தில் அதற்குரிய பதில்களைச் சொல்லி வந்தேன். ' எனக்குக் கடமையும் இருக்கிறது, அதே நேரத்தில் கொள்கையும் இருக்கிறது ' என்ற வகையில் பதில்களைச் சொல்லி வந்தேன். அப்போது அமைச்சர் கண்ணப்பன் அவர்கள், 'கன்னியாகுமரி ஆலயத்திற்கு பிரதமர் அவர்கள் ஒரு வைர நெக்லசை—இப்போது தங்க கிரீடம் என்று சொன்னார்கள்—தூதுவர் மூலமாக அனுப்பி வைத்தார்கள்,' என்று குறிப்பிட்டார்கள்.

ஏதோ 50,000 ரூபாய் பெறுமானமுள்ள நகையைப் பிரதமர் அவர்கள் எப்படிச் செய்தார்கள், அதற்கு ஏதாவது வருமான வரி உண்டா என்ற வகையில் குற்றம் சாட்டி கண்ணப்பன் அவர்கள் அந்த வாதத்தை எடுத்து வைக்கவில்லை. " நீங்கள், ஆளும் காங்கிரசில் உள்ள நீங்கள் ' இப்படிப்பட்ட கிரீடம், ரதம் செய்யலாமா ?' என்று கேட்கிறீர்கள். ஆனால் ஆளும் காங்கிரஸ் பிரதமராக இருக்கும் திருமதி இந்திரா காந்தி அவர்கள் அம்மன் கோயிலுக்கு இப்படிப்பட்ட உபயம் ஒன்றைச் செய்திருக்கிறார்கள்"

என்ற கொள்கை அடிப்படையில் கருத்தைச் சொன்னார்களே தவிர, பிரதமர் மீது குற்றத்தைச் சாட்ட வேண்டும், 50,000 ரூபாய் பெறுமான கிரீடத்தைச் செய்து கொடுக்க பிரதமருக்கு எங்கே பணம் கிடைத்தது என்று குறறம் சாட்ட வேண்டும் என்ற முறையிலே பதிலைச் சொன்னார்கள் என்று எடுத்துக்கொள்ள முடியாது. நேற்றையதினம் கேள்வி எழுந்த சூழ்நிலைகளையும், நான் தந்த விளக்கங்களையும், கண்ணப்பன் அவர்கள் தந்த பதிலையும் ஒப்பிட்டு இப்போது மீண்டும் படித்துப் பார்த்தாலும் அது நன்றாகப் புலனாகும்.

கேள்வி பதில்கள் நடந்த வகையில் இந்திரா காந்தி மீது குற்றச் சாட்டாகச் சொல்லவில்லை. இந்திரா காந்தி அம்மையாருக்கும் பக்தி உண்டு; சுரேந்திரன் போன்ற பகுத்தறிவாளர்கள் இருக்கின்ற ஆளும் காங்கிரஸ் கட்சியில் (சிரிப்பு)—சிரிப்பதற்காகச் சொல்லவில்லை—அவரவர்களுக்கென்று சில கொள்கைகள் உண்டு; இந்திரா காந்தி அம்மையாருக்குப் பக்தி உண்டு என்பதைச் சொல்லத்தான் கண்ணப்பன் அவர்கள் அதைச் சொன்னார்களே அல்லாமல் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை.

நேற்று இரவு பிரதமர் அலுவலகத்திலிருந்து ஒரு அதிகாரி—நேற்று மாலை தொடர்பு கொண்டார்கள், கிடைக்கவில்லை—இரவு என்னிடம் பேசினார்கள். பேசும்போது சொன்னார்கள் 'அப்படி ஒன்றும் திருமதி இந்திரா காந்தி, அம்மன் கோயிலுக்கு நெக்லசோ, நகைகளோ அவர்களுடைய பெயரால் அனுப்பி வைக்கவில்லை' என்று சொன்னார்கள். 'உடனடியாக நாளைக் காலையில் அதற்குரிய திருத்தத்தை இந்த அவையில் கொடுக்கச் செய்கிறேன்' என்று அந்த அதிகாரியிடத்தில் நேற்று இரவு 10 மணிக்குச் சொன்னேன். ஆனால் அப்படிப்பட்ட திருத்தம் தருவதற்கு முன்பாகவே உரிமைப் பிரச்சினை கோரிக்கைகள் வந்துவிட்ட காரணத்தால் திருத்தத்தைத் தர இயலாது, கூடாது என்கின்ற மரபுக்கேற்ப உரிமைப் பிரச்சினை அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

ஹாண்டே அவர்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும், மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். தவறுகள் நிகழ்கின்ற நேரத்தில் வருத்தம் தெவித்துக் கொள்வதில் எந்தவிதமான தவறும் கிடையாது. ஆகவே, மாண்புமிகு கண்ணப்பன் அவர்கள் விளக்கம் தந்தார்கள். யார் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். செழியன் அவர்கள் சொன்ன வாதத்திலேயும் பொருள் இருக்கிறது. யாருடையு பெயராலேயும் யாரும் செய்து விடலாம் 'இதைக் கருணாநிதி பெயரால் வரவு வைத்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லிவிட்டால் அதற்கு நான் குற்றவாளி ஆகமுடியாது. அந்த வாதத்தை ஏற்றுக்கொண்டு கண்ணப்பன் அவர்கள் தந்த தகவலுக்கு வருத்தம் தெரிவிக்கும் அளவில் இந்த நிகழ்ச்சியை முடித்து விடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்</u> : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த விளக்கத்தின் அடிப்படையிலே, நேற்றையதினம் எனக்குக் கிடைத்த தகவல்களை சென்ற ஆண்டு எனக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் நேற்றைய தினம் நான் சொல்லியபோது சில பிரச்சினைகளைச் சொன்னேன். அது தவறாக இருக்குமானால் அந்தத் தவறுக்கு நான் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. சுரேந்திரன் மற்றும் பல உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்—கூச்சல் குழப்பம்)

<u>திரு, கே. டி. கே. தங்கமணி</u> : இது ஒரு ஆவேசப்படக் கூடிய பிரச்னை அல்ல. ஆகவே தங்களிடம் நான் தனியாகச் சொன்னேன். இங்கு இப்படி ஏதாவது ஒரு ப்ரிவிலேஜ் வருகிறபோது, குறிப்பிட்ட ஒரு அமைச்சர் பேரில் வருகிறபோது, தாங்கள் உண்மையில் எங்களுக்கு வசதி செய்து கொடுத்து—இம் மாதிரியாகிவிட்டது என்று சொல்லி அதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று தங்களிடம் வற்புறுத்தினேன். இந்த விஷயத்தில் there is a *prima facie* case அதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. அமைச்சர் அவர்கள் வருத்தம் தெரிவித்தால் அதை நிராகரிப்பது என்றால், இதில் இரண்டு விஷயங்கள் உள்ளன. வருத்தம் தெரிவித்தால் ஒன்று அதை சபை ஏற்றுக்கொள்ளலாம். மெஜாரிட்டி அவர்களுக்கு இருக்கிறது. ப்ரைமா பேஸி கேஸ் இருந்தாலும் உங்களையும் நிராகரித்து அதைத் தோற்கடித்து விடலாம். அல்லது ப்ரைமா பேஸி கேஸ் இருந்தால் உங்கள் விருப்பப்படி அதை ப்ரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பலாம். இப்படி இரண்டு வகைகள் உள்ளன. அவர்கள் க்வாலிபைடாகச் சொல்கிறார்கள். நாங்கள் ஒரு குற்றச்சாட்டைக் கொண்டு வந்திருக்கிறோம். ''தவறு இருந்தால் மன்னிப்பு கேட்பது'' என்பது அல்ல, நேற்று நான் சொன்ன செய்தி தவறு என்பதால் அதற்கு நான் வருத்தம் தெரிவிக்கிறேன் என்று சொன்னால்தான் வருத்தம் தெரிவிப்பதாக அர்த்தம்.

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u> : வருத்தம் தெரிவிக்கவேண்டும் என்பது தான் எங்கள் ஸ்டாண்ட்.

திரு. <u>ஏ. சுப்பிரமணியம்</u> : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது பிரதம அமைச்சர் அவர்கள் அல்ல இதைக் கொடுத்தது, வேறு யாரோ கொடுத்தார்கள் என்று சொன்னார்கள், அப்படிச் சொன்ன பிறகும் நேற்று சொன்ன தகவல் தவறானது என்று சொல்லாமல் அதை அப்படியே விடுகிறார்கள் . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திருப்பித் திருப்பி அதையே சொல்லிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம் ?

டாக்டர் எச். வி. ஹாண்டே : அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அதுதான் எங்கள் ஸ்டாண்டும். அவர்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டும். இந்த விஷயத்தில் முதல் அமைச்சர் அவர்கள் ஸ்டாண்ட்தான் எங்கள் ஸ்டாண்ட்டும். ஆகவே, அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக வருத்தத்தைத் தெரிவித்தால் இதோடு விட்டுவிடலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நானும் உங்களுடைய அந்த எண்ணத்தை மதிக்கிறேன். ஏற்றுக்கொள்கிறேன் " தவறாக இருக்குமானால் " என்கின்ற அளவிற்கு இல்லாது நேற்று சொன்ன தகவலை "வைர நெக்லஸ்" என்பதற்குப் பதிலாக " தங்கக் கிரீடம் " என்று மாற்றிக்கொள்ளவேண்டும், " இந்திரா காந்தி " என்பதற்குப் பதிலாக " மிஸ்ரா " என்று அந்த இடத்தில் வேறு எழுத்துக்கள் இடம் பெறவேண்டும். அவ்வளவுதான். அவர்கள் சொன்னது குற்றச்சாட்டுக்காக அல்ல. அவர்களுக்கும் பக்தி இருக்கிறது என்பதற்காகச் சொன்ன விவகாரம். ஆகவே அதை ஏற்றுக்கொண்டு அமைச்சர் கண்ணப்பன் அவர்கள் " தவறாக இருக்குமானால் " என்ற வார்த்தையைச் சொல்லாமல் " நேற்று சொன்ன தகவலுக்கு வருத்தம் தெரிவிக்கிறேன் " என்று அவர் கூறுவார்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியபடி நேற்றைய தினம் சொன்ன தகவல் " பிரதமர் இந்திரா காந்தி " என்பதற்குப் பதில் " எல். என். மிஸ்ரா " என்றும் அதேபோல் " வைர நெக்லஸ் " என்பதற்குப் பதில் " தங்கக் கிரீடம் " என்றும் நான் சொல்லிக் கொண்டு, நேற்றைய தினம் சொன்ன தகவலுக்காக வருத்தத்தைத் தெரிவிக்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு.

### (அ) நெல்லை மாவட்டம் சேரன்மாதேவி சன் பேப்பர் ஆலையின் கழிவு நீரை தாம்பிரபரணி ஆற்றில் கலக்க விடுவது குறித்து

* திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, கடந்த ஆண்டு வானம் பொய்த்ததன் காரணமாக தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் நெல்லை மாவட்டம் தாம்பிரபரணி ஆற்றில் விடப்பட்டிருக்கும் குறைந்த அளவு தண்ணீரைக்கூட பயனற்றதாக்கும் வகையில் நெல்லை மாவட்டம் சேரன்மாதேவியிலுள்ள சன் பேப்பர் ஆலையிலுள்ள கழிவு நீரை சட்டத்திற்குப் புறம்பாக ஆற்றில் கலக்க விடுவதைப்பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகர்சாமி அவர்களும், திரு. ஜேம்ஸ் அவர்களும் 41-வது விதியின்கீழ் தீர்மானம் கொடுத்துள்ளார்கள் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், அரியநாயகிபுரத்திலுள்ள " சன் பேப்பர் மில்ஸ் " நிறுவனம், காகித உற்பத்திக்கு மரத்தைக் கரைப்பதற்கு சல்பைட் அல்லது சல்பேட் செய்முறைக்குப் பதிலாக—இதில் வேறு சில இரசாயனப் பொருள்களுடன் அதிக அளவில் காரம் பயன்படுத்த வேண்டியுள்ளது—வீரியம் குறைந்த காரம் பயன்படுத்தும் செய்முறையை மட்டுமே தற்போது பயன்படுத்துகிறது. இதனால் இந்தத் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவுகளை, தற்போது வீரியத்தன்மை குறைத்து, நீர்மைப்படுத்தி அதன்பிறகு நிலங்களில் விட இயலும்.

நீர்—சாக்கடைத் தூய்மைப்படுத்தும் குழுவின் பரிவுரைகளின் அடிப்படையில் இந்த ஆலையிலிருந்து வெளிவரும் கழிவு நீர் முழுவதும் ஆலையின் சொந்த நிலங்களில் பாசனத்திற்காக விடப்படவேண்டுமென்று தொழிற்சாலைக்குக் கூறப்பட்டது. இந்த ஆலை பாசனத்திற்காக 152 ஏக்கர் நிலத்தைப் பெற்றுள்ளது. கழிவு நீர் கலவை, தொழிற்சாலையின் தெற்குப் பக்கத்திலுள்ள புதை குழாய் வழியாக வடிகாலில் இங்கு தென்னை மரங்கள் பயிரிடப்படுகின்றன—அல்லது ஆலையின் வடக்குப் பக்கத்தில் நெல் பயிரிடுவதற்காக உள்ள பகுதிக்கு விடப்பட்டு வருகிறது. நிலத்தில் விடப்படுவதற்காக வரையறுக்கப்பட்டுள்ள கழிவு நிர் தரத்தை அது பெற்று இருக்க வேண்டுமெனவும், அந்தக் கழிவு நீர் எப்போதும் தாமிரபரணி ஆற்றில் நேரிடையாகவோ அல்லது கசிவு முறையிலோ கலக்கவிடக்கூடாது எனவும் ஆலைக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. 1973-74 ஆகிய ஆண்டுகளில் குறிப்பிட்ட காலத்துக்கு ஒருமுறை தலைமை நீர்ப் பகுப்பாய்வாளரால் செய்யப்பட்ட ஆய்வுகளிலிருந்து, புதை குழாய் வழியாக கழிவுநீர் அனுப்பப்படுகிறது என்றும் இதன்வழியாக ஆலையின் நிலங்களில் உள்ள தென்னை மரங்களுக்குப் பாசனமளிக்கப்படுகின்றது என்றும் புலப்படுத்தியது.

வடக்குப் பக்கத்தில் அப்பாலுள்ள ஓரிடத்திற்கு இந்தக் கழிவு நீரை எடுத்துச் செல்வதற்குப் பெருந் திட்டமொன்று முடிவு செய்யப்பட்டுள்ளதென்றும், இதற்காக பம்புகளும், குழாய்களும் இரண்டு திங்களுக்குள் அமைக்கப்படும் என்றும் இந்த ஆலை 1975 மார்ச் திங்களில் அறிவித்தது. ஆலையின் அறிவிப்பிற்கிணங்க, இனி தாமிரபரணி ஆற்றுடன் கழிவுநீர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கலப்பதற்கான வாய்ப்பு ஏதும் இருக்காது. இது பற்றிய நிலைமை உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகிறது என்று இந்தத் துறையைச் சார்ந்தவர்கள் விளக்கம் அளித்திருக்கிறார்கள். மேலும் தொடர்ந்து கவனிக்கும்

படியாகவும் இரண்டு மாத காலத்தில் அதற்குரிய அந்தக் குழாய்கள் போடப்பட்டு ஒரு சிறிய பகுதி தண்ணீரும் தாம்பிரபரணி ஆற்றில் கலந்து அது குடிநீராக சில இடங்களில் பயன்படுவதால் அதைக்கெடுப்பதற்குள்ள இடம் இருக்கக்கூடாது என்றும் அந்தத் துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் தொடர்ந்து கவனிக்குமாறு நான் அறிவுறுத்துவேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : நமது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதில் அளிக்கிற நேரத்தில் ஏற்கெனவே இந்த ஆலை உரிமையாளர்களுக்கு அரசாங்கத்திலிருந்து உத்தரவு அனுப்பப்பட்டிருப்பதாகவும் கடந்த மார்ச் 15-ம் தேதியில் இருந்து கழிவு நீர் ஆற்றில் கலக்கவிடுவதில்லை என்று அவர்கள் உறுதிமொழி அளித்திருப்பதாகவும் இரண்டு மாத காலக்கெடு கேட்டிருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கடந்த வாரம் கூட நான் நெல்லைக்குப் போயிருந்த நேரத்தில் ஆற்றில் மிகக் குறைந்த அளவில்தான் இப்போது தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த ஆற்றுப் பகுதிகளில் வாழ்கிற மக்கள் குளிப்பதற்கும் குடிப்பதற்கும் ஆற்றுத் தண்ணீரைத்தான் பயன்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆற்றில் இருந்து வருகிற வாய்க்கால்களில் கூட இன்று தண்ணீர் இல்லை, கிணறுகளில் தண்ணீர் இல்லை என்ற காரணத்தால் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் இந்தத் தண்ணீரைத் தவிர, வேறு எந்த முறையிலும் பயன்படுத்த முடியாத நிலையில் நாட்டு மக்கள் திண்டாடுகிறார்கள்.

திருநெல்வேலியில் இருந்து பதினைந்து மைல்களுக்கு அப்பால் உள்ள சேரன்மாதேவியில் இது இருக்கிறது. அதிலிருந்து இதுவரை ஆற்றில் வந்துகொண்டிருக்கிறது கழிவுநீர். நான் கூட பாதிக்கப்பட்டிருக்கிறேன். எனக்குள்ள தகவல், அரசாங்கத்திலிருந்து எவ்வளவு உத்தரவுகள் போட்டாலும் அதிகாரிகள் எவ்வளவுதான் மேற்பார்வை பார்த்தாலும் அங்கு இந்த நிறுவனத்தை நடத்திக்கொண்டிருக்கிறவர்கள் அரசாங்க அதிகாரிகளுக்குப் பணிவது இல்லை. காரணம், இந்த அமைச்சரவையில் இருக்கிற ஒரு அமைச்சருக்கு அந்த ஆலையில் பங்கு இருப்பதாகவும் அந்த அமைச்சருடைய மருமகன் . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதெல்லாம் வேண்டாம்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, திரு. எட்மண்ட் அவர்கள் அமைச்சருக்கு பங்கு என்றார். அதற்கு அவர் பொறுப்பு ஏற்கவேண்டும். கொஞ்சங்கூட சிந்தித்துப் பார்க்காதபடி, தவறு சொன்னால் என்ன பேச்சு இது ? கொஞ்சமாவது பொறுப்போடு பேசவேண்டாமா ? ஏ.டி.எம்.கே.வில் இருந்தால் எது வேண்டுமானாலும் பேசலாமா ? எனக்கு என்ன பங்கு இருக்கிறது ? (குறுக்கீடு).



திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, நான் ஒரு அமைச்சர் என்று தான சொன்னேன். இங்கே இருக்கிற 16 அமைச்சர்களில் மற்ற எந்த அமைச்சருக்கும் கோபமில்லை. அவர்களுக்கு மாத்திரம் கோபம் வருகிறது. அதில் யாருக்குச் சொந்தமிருக்கிறது என்பது அவர்களுக்கே தெரியும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அப்படியாருக்காவது பொறுப்பு இருந்தால் எனக்குத்தான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எலுசிடேஷன் என்ற முறையில் இரண்டொரு கேள்விகள் போடுவதுதான் முறை. 41 ஆவது விதியின்கீழ் டிஸ்கஷனைக் கொண்டு வந்திருக்கிறீர்களே.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள், அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று பதில் சொல்கிறார்கள். என்னுடைய கோரிக்கையே, அந்த ஆற்றில் கழிவு நீர் விடப்படக்கூடாது என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை அப்ரோப்பிரியேஷன் பில் வரும்போது பேசுங்கள். 41 ஆவது விதியின்கீழ் இரண்டொரு கேள்விகளை மட்டுமே போடலாம்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, என்னால் ஒரே வார்த்தையில் கேள்வி போட முடியாது. அவ்வளவு அறிவுத் திறமை இல்லை. அமைச்சரவர்கள் அதிகாரிகளுக்கு இங்கே உத்திரவிடப்பட்டிருக்கிறதென்று சொன்னார்கள். அதிகாரிகள் அரசாங்கத்தினுடைய உத்திரவைச் செயல்படுத்தவில்லை. செயல்படுத்தக் கூடாது என்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை. அவர்களால் செயல்படுத்த முடியவில்லை. இதற்குக் காரணம்...

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்படி ஒன்றிலிருந்து ஒன்று தொடர்ந்து எங்கோ போய்விடக்கூடாது. இப்படிப்பட்ட பிரச்சனைகள் தமிழ் நாடு முழுவதும், ஆலைகள் இருக்கின்ற இடங்களில், பர்டிலைசர் பேக்டரி இருக்கிற இடங்களில், தொழிற்சாலை இருக்கிற இடங்களில், இருக்கின்றன. இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு 3 ஆண்டுக் காலமாக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு அதிகாரிகள் ஒத்துழைத்திருக்கிறார்கள். 152 ஏக்கர் நிலத்தில் அவர்கள் கழிவுத் தண்ணீரைப் பாய்ச்சிக் கொள்ளவேண்டுமே தவிர ஆற்றுப் பக்கம் கசியவிடக் கூடாது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்கு மேலும் இப்போது புதை குழாய்கள் போட்டுக் கசிவுத் தண்ணீரைக்கொண்டு

[திரு. க. அன்பழகன்]

போவதற்கு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டுமென்று மார்ச்சு மாதத்தில் அதிகாரிகள் கேட்டபோது இரண்டு மாதங்களுக் குள்ளாக ஏற்பாடு செய்து முடிப்போம் என்று சொல்லி ஏற்பாடு களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். மாவட்ட சுகாதார அதி காரியை அழைத்து, "உங்களால் இந்தப் பொறுப்பைக் கவனிக்க முடியாது, வேறு இடத்தில் நடைபெறுகிற காரணத்தினால் அங்கே இருக்கிற விக்கிரமசிங்கபுரம், அம்பாசமுத்திரம் முனிசிபல் கமிஷ னர்கள் அல்லது பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் ஆகிய இப் படிப்பட்ட அதிகாரிகளிடத்தில் இதை கவனிக்கும்படி, கசிவுத் தண்ணீரை விடாமல் பார்க்கும்படியாகச் செய்யுங்கள்'' என்று அவரிடம் வாய்மொழியாக நேற்றைக்கு முன்னால் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்.

இந்தப் பிரச்சனைகள் அமைச்சர்கள் யாரோ தலையிட்டுக் கெட்டுப் போவதில்லை. இதற்கு நானே பொறுப்பு என்று சொன்னதற்குக் காரணம், எங்களால் முடியாத அளவிற்கு நிலைமைகள் இயற்கையிலேயே இருக்கின்றன. இயற்கையை மாற்றவேண்டும். கசிவுத் தண்ணீரை 152 ஏக்கர் உள்ள ஒரு நிலத்தில் தேக்கி அது தங்கினால் தங்கிய தண்ணீர் கசிந்து ஆற்றுப் பக்கம் போகும். எனக்கு அந்த இடத்தைப் பற்றித் தெரியாது. இருந்தாலும் நிலைமைகள் இப்படி இருக்கும். மரவள்ளிக்கிழங்கு தொழிற்சாலை, சாகோ பேக்டரி நடக்கிற இடத்தில் அரை பர்லாங்கு வரை தண்ணீர் பரவி நின்று பக்கத்தில் உள்ள கிணற்று நீரைக் கெடுக்கிறது. அதே போல தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வருகிற தண்ணீர் 4 குட்டைகளில் தேங்கி அந்த வட்டாரத்தில் இருக்கிற குடி தண்ணீர்க் கிணறுகள் கெடுகின்றன. இது ஒரு பிரச்சினையாக இருக்கிறது. இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு பாதுகாப்பான எல்லா நடவடிக்கை களும் எடுக்கப்பட்டு வருகின்றன. இது குறித்து தொடர்ந்து முயற்சிக்கப்படும். மேலும் எந்த அளவிற்குப் பாதுகாப்பான நடவடிக்கை எடுக்க முடியுமோ அவைகளை எடுப்பதற்கு இந்தத் துறையினர் தொடர்ந்து கவனிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இயக்குனர் இடத்தில் இது பற்றிப் பேசியிருக்கிறேன். இவைகள் நடைமுறைப் பிரச்சனைகளே / தவிர நிர்வாகக் குறை அல்ல. இந்தப் பிரச்சனையைப்பற்றி இதற்கு மேல் வலியுறுத்துவதற்கு அவசியமில்லை என்பதை மற்ற அங்கத்தினர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, நான் வலியுறுத்த விரும்புவதெல்லாம் இதிலே அரசாங்கத்தினுடைய தரப்பிலே குறை இருக்கிறது; அவர்கள் முறைகேடாக நடந்து கொள்கிறார்கள், கவனக் குறைவாக நடந்து கொள்கிறார்கள் என்று சொல்லவரவில்லை. அமைச்சரவர்கள் படித்திருக்கிற அறிக்கையை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன். அமைச்ச ரவர்கள் ஒரு அறிக்கையைச் சொன்னால் அதை உறுப்பினர் ஏற்றுக்





[திரு. க. உரொ. எட்மண்ட்]

கொள்ள வேண்டுமென்பதை உணர்வேன். நான் அழுத்தந் திருத்தமாக சொல்வதெல்லாம் அவர்கள் இப்பேர்ப்பட்ட உத்திரவைப் போட்டிருக்கிறார்கள். என்னுடைய கோரிக்கை, கசிவுத் தண்ணீரை ஆற்றுக்குள்ளே நேரடியாக விடக்கூடாது. அதை ஒரு குறிப்பிட்ட நிலத்தில் தேக்கி வைத்திருக்க வேண்டும். ஆனால் உண்மையில் இப்படி நடப்பதில்லை. அவர்கள் நேரடியாகக் கழிவு நீரை ஆற்றில் விடுகிறார்கள். ஒரு குறிப்பிட்ட பரப்பளவு நிலத்தில் இந்தக் கழிவு நீரை விட்டால் அது பூமிக்குள்ளே போகுமே யொழிய ஆற்றில் வருவதற்கு வழி இல்லை. தாமிர பரணியில் உள்ள தண்ணீர் கறுப்பு நிறமாக இருக்கிறது. இதில் யார் குளிக்க முடியும்? ஆகவே, இந்த கழிவுத் தண்ணீரை நேரடியாக ஆற்றில் விடக்கூடாது என்ற உத்திரவை மாத்திரம் போடாமல், எப்பேர்ப்பட்டவர்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி னாலும் அங்கே இருக்கிற அதிகாரிகள் செல்வாக்குக்கு அடி பணியாமல் இந்த உத்திரவைக் கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டும், அமல் செய்யவேண்டுமென்பதற்கு அமைச்சரவர்கள் உறுதிமொழியைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நான் இதைப் பற்றி விசாரித்த வரையில் யாரும் தலையிட்டுக் கெட்டதாக அந்த அதிகாரிகள் தெரிவிக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் ஆலை நிர்வாகிகளைப்பற்றி அவர்கள் சொன் னார்களாவென்றால் சொல்லவில்லை. அப்படித் தவறுகள் நடை பெறுமானால் அதிகாரிகளுக்குத் தெரியாத வகையில் நடைபெறக் கூடும். தெரியாத வகையில் என்று சொன்னால், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அதிகாரிகள் பரிசீலிக்க வருகிறார்கள் என்று தெரிந்த வுடன் நிறுத்திவிட்டு மற்ற நேரத்தில் செய்யலாம்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, இன்றுள்ள நிலைமை அதிகாரிகள் அங்கே உள்ளே போகவே முடியவில்லை என்பதுதான்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, எட்மண்ட் அவர்கள் அதிகாரியாக முடியாது. அதிகாரிகள் என்றால் 4 படிகள் இருக்கின்றன, மாவட்ட அதிகாரி முதற் கொண்டு. திரு எட்மண்ட் அவர்கள் சொல்வது மட்டும் உண்மை, மற்றவர்கள் பேசுவது இல்லை என்று பேசக் கூடாது.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, நான் அமைச்சரவர்கள் உண்மையைச் சொல்லவில்லையென்று சொல்ல வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைப்பற்றித் தவறு இருந் தால் அப்ரோபிரியேஷன் பில்லில் பேசுங்கள். 41-வது விதி என்ன சொல்கிறது ?

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, அதனால் தான் நான் இதை விதி 42-ன்கீழ் எடுக்கச் சொன்னேன். அங்கே மக்கள் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 41-ல் விளக்கம் பெற ஒன்றிரண்டு கேள்விகள் மட்டுமே கேட்கலாம்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, அந்த ஆலைக் குள்ளே அடியாள் பயிற்சி கொடுக்கிறார்கள். இதற்கு நான் பொறுப்பேற்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னாலே நான் மாவட்ட சுகாதார அதிகாரி அவர்களை நேரடியாகப் பார்த்தேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, No Officer can enter the campus.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பின்னாலே இருக்கிறவர்கள் நீங்கள் சாஃப்டாக இருக்கிறீர்கள் என்று சொல்கிறார்களே, நீங்களே இப்படியே பேசிக்கொண்டு போனால் எப்படி ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நீண்ட நாட்கள் சட்ட மன்ற உறுப்பினராக இருக்கும் திரு. எட்மண்ட் அவர்கள் இயற்கையில் ஏற்பட்டுவிடுகிற குறைகளுக்கு வேறு பல காரணங்களைக் கற்பித்துக் கொள்ளத் தேவையில்லை. அங்கே எங்களுடைய மாவட்ட அதிகாரிகள் போக முடியவில்லையென்றால் திரு. எட்மண்ட் அவர்களைத் துணைக்கு அழைத்துப் போகும்படி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. எட்மண்ட் அவர்களைப் பார்த்தால் பயப்படுவார்கள் என்று எனக்குத் தெரியும். அவர்களை அழைத்துக் கொண்டு போகச் சொல்லலாம். அது அல்ல பிரச்சினை. பல இடங்களில் இப்படிப்பட்ட பிரச்சினை இருக்கிறது. இந்தப் பிரச்சினை வேண்டுமென்று செய்யப்படுவதில்லை. அப்படி செய்யப்படுமானால் நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்படும். அப்படித் தவறு செய்யப்படுமானால் கண்காணிக்கப்பட்டுத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, தாமிரபரணி ஆறு அந்தப்பகுதி மக்களுக்குக் குடி தண்ணீர் வழங்கிக்கொண்டிருக்கிறது. மாடுகள், கன்றுகாலிகள் கூட இந்தத் தண்ணீரைக் குடித்து வாழ வேண்டிய நிலை இருக்கிறது. இந்தத் தண்ணீரைக் குடிக்கிற மக்களுக்குத்தோலில் ஒரு மாதிரியான நோய் ஏற்பட்டுக் கொண்டே



இருக்கிறது. அது மட்டுமல்ல, கன்றுகாலிகள் இதனால் செத்துக் கொண்டே இருக்கின்றன. சன் பேப்பர் மில்லிலிருந்து வருகிற கழிவு நீர் இந்தத் தண்ணீரோடு கலக்கிற காரணத்தினால் இத்தனை கஷ்டங்களும் ஏற்படுகின்றன. இந்த வறட்சிக் காலத்தில் குடி தண்ணீருக்கே வழி இல்லாத காரணத்தினால் அந்தப் பகுதி மக்கள் இந்தத் தண்ணீரை நம்பிக் கொண்டிருக்கிற காரணத்தினால் மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிகாரிகள் பொறுப்பு உள்ளவர்கள். நிர்வாகமும்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 41ஆவது விதியின்கீழ் விவாதத்தையே வைக்கிறீர்களே.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆக உடனடியாக, இவ்வளவு முக்கியத்துவம் இதில் இருக்கிற காரணத்தினால் இந்தக்கழிவு நீர் தாமிர பரணி ஆற்றில் கலக்காமல் இருப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்று சொன்னால் இந்த ஆலையை வறட்சிக் காலம் வரையாவது மூடி வைத்திருக்கவேண்டும். அப்போது தான் மக்களுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் கிடைக்கும். இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, விளக்கத்திற்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. தொடர்ந்து கவனிக்கப்படும். சீரிய காரியங்கள் மேற்கொள்ளப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, நான் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம் பல்வேறு மக்கள் நல்வாழ்வுக்குப் பெரிய ஆபத்து ஏற்படுகின்றது என்பதுதான். பத்தமடை, கோபாலசமுத்திரம் ஆகிய இடங்களில் தண்ணீர் குடிக்க முடியவில்லை என்று அந்த பகுதியிலே இருக்கின்றவர்கள் லெட்டர் எழுதி இருக்கின்றார்கள். இதை ஏன் சொல்கிறேன் என்றால் தொழிற்சாலை நடத்தக் கூடியவர்கள் வல்லவர்களாக இருப்பதால் சர்க்கார் போடுகிற சட்டத்தை ஏற்றுக்கொள்கிறவர்களாக இருப்பது இல்லை. திருச்சியிலே வாடை எப்படி அடிக்கிறது என்று தெரியும். அது ஒரு பெரிய தொழிற்சாலை. அதே மாதிரி மேட்டூர் கெமிகல்ஸ் பகுதியிலே இருக்கின்ற நீர் கெட்டு விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுற்றிப் போகாதீர்கள். தாமிரபரணி பக்கம் வாருங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : இந்தப் பகுதியில் இருக்கின்றவர்கள் தண்ணீர் குடிக்க முடியவில்லை, ஆடுகள் குடிக்க முடியவில்லை. இந்தத் தண்ணீரில் குளித்தால் பத்து ஏற்படுகிற நிலை உள்ளது. உடனடியாக இந்த மக்களுக்குக் குடி தண்ணீர் வர ஏற்பாடு செய்வதற்கு என்ன மாற்று ஏற்பாடு—இதற்கு நான்கு நாள் கூடக் காத்து இருக்க முடியாது—உடனடியான ஏற்பாடு பற்றி அமைச்சர் என்ன சொல்கிறார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அண்மையிலே கிடைத்த செய்தி, சில நாட்களாக மின்சாரம் அந்த தொழிற்சாலைக்குக் கொடுக்கப்படவில்லை. நாம் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை மின்சாரமே எடுத்து இருப்பதாகக் கேள்வி! இப்போது 4,5, 10 நாட்களாக இல்லை என்றால் அந்தத் தண்ணீர் கலங்க வேண்டிய அவசியம் இல்லை. அது மறுபடியும் இயங்கும்போது அதிகாரிகள் தண்ணீரில் கலக்க இடம் செய்யாமல் பாதுகாப்புச்செய்ய ஆணை இட்டு இருக்கின்றோம்.

திரு. பெ. சீனிவாசன் : ரியல் பாயிண்ட் ஆப் ஆர்டர், கலப்படம் இல்லாத பாயிண்ட் ஆப் ஆர்டர்.

திரு எட்மண்ட் அவர்கள் பேசும்போது இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது பேசுகிறபோது உடனே அமைச்சர் எழுந்து சொன்னார்கள், அதில் தனக்குச் சம்பந்தமில்லை என்று. இது சன் பேப்பர் மில்லைப் பற்றியது என்று நினைக்கிறேன், விவாதத்தில் இருப்பது. நாம் வெளியிலே இருக்கும்போது பேசுகிறார்கள். வெளியிலே இருக்கின்ற சம்பிரதாயங்கள், நம்பிக்கையை வைத்துச் சொல்ல முடியும். திருநெல்வேலி மாவட்டத்தில் இது இந்த அமைச்சருக்கு சம்பந்தப்பட்டது என்று சொன்னால் நிரூபிக்கத் தயாரா என்று அமைச்சர் கேட்கிறார்கள். திரு. அழகர்சாமி பேசுகிறபோது ஜாக்கிறதையாகப்பேச வேண்டி இருக்கின்றது. இதைக் கவனமாகப் பரிசீலிக்கிறார்கள். ஆனால் வெளியிலே இது உண்மை. இந்த விஷயத்தில் சம்பந்தம் இல்லை என்று அமைச்சர் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம் மரபுப்படி இந்த மன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்கள் என்ன சொல்கிறார்களோ அதை ஏற்றுக் கொள்வது தான் மரபு. இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

## மின்வாரியம் வாடிக்கையாளர் செலுத்த வேண்டிய கையடைத் தொகையை (டெபாசிட்) அதிகரித்து பல கோடி ரூபாய்களை வசூல் செய்வது குறித்து.

**Dr. H. V. HANDE** : Sir, I wish to call the attention of the Honourable Minister for Industries and Electricity to a matter of urgent public importance, namely, the sudden action of Electricity Board in giving notices to all consumers of electricity to enhance the deposit amount and thereby collecting huge amount running to crores of rupees.



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, முறையாகச் செலுத்தப்படுவதற்காகவும், வாடிக்கையாளரின் இல்லங்களில் பொருத்தப்பட்டுள்ள அளவை மானி (Meter), ஏனைய சாதனங்கள் ஆகியவற்றின் மதிப்புக்கும் ஏற்ற ஒரு கையடைத் தொகையைச் செலுத்துமாறு வாடிக்கைக் காரரைக் கேட்க 1956 ஆம் ஆண்டு இந்திய மின்சக்தி வழங்கு விதிகளைச் சார்ந்து 14 ஆவது விதியின் கீழ் மின் வாரியத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தக்கால அளவில் எந்தச் சமயத்திலும், வாடிக்கைக்காரர்கள் செலுத்த வேண்டிய கையடைத் தொகையை உயர்த்துவதற்கு மின் வாரியத்திற்கு அல்லது உரிமதாரர்களுக்கு மேற்படி விதிகள் அதிகாரமளிக்கின்றன.

இதுவரையில் இக்கையடைத் தொகை நடப்புத் திங்களுக்கான மின் சக்திக் கட்டணத்தைப் போல் மூன்று திங்கள் கால அளவுக்கான தொகையாக இருந்து வந்தது. சாதாரணமாக ஒரு மாத மின் சக்திக் கட்டணத்திற்கான பட்டியலைத் தயார் செய்ய இரண்டு வாரங்கள் ஆகின்றன. கட்டணங்களைச் செலுத்துவதற்கு வாடிக்கைக்காரர்களுக்கு மேற்சொன்ன இரண்டு வாரக் கால அளவுக்கு மேல் முப்பது நாட்கள் அனுமதிக்கப்படுகின்றன. அப்படியும் கட்டணத் தொகை செலுத்தப்படவில்லையெனில், வாடிக்கையாளருக்குப் பதிவு அஞ்சல் மூலம் அறிவிப்பு ஒன்று அனுப்பப்பட்டுத் தொகையைச் செலுத்த ஏழு நாள் தவணைக் காலம் அனுமதிக்கப்படுகிறது. அப்படியும் அத்தொகை செலுத்தப்படவில்லையென்றால், மின்சக்தி இணைப்புத் துண்டிக்கப்படுகிறது. இந்த நடைமுறையைப் பின்பற்ற ஏறத்தாழ 2½ முதல் 3 மாதங்கள் வரை ஆகின்றன. எனவே, மின் வாரியம் முன்பு மூன்று திங்களுக்கான கட்டணத் தொகையைக் கையடைத் தொகையாக வசூலித்து வந்தது.

கட்டணத் தொகை செலுத்த வருபவர்களுக்கு ஏற்படும் கால தாமதத்தை முன்னிட்டு, நடப்பு மாத மின்சக்தியின் கட்டணத்தைப் போல் நான்கு திங்கள் கட்டணம் வசூலிக்க மின் வாரியம் இப்போது முடிவு செய்துள்ளது. முன்பு 3½ சதவீதமாக இருந்த வட்டி வீதம் இப்போது சேமிப்பு வங்கியின் வட்டி வீதத்திற்கு நிகராக 5 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

மின் வெட்டின் காரணமாக வாடிக்கைக்காரர்களுக்கு ஏற்பட்டுள்ள இடையூறுகளைக் கருத்திற்கொண்டு மின் வாரியம் 1974 ஆம் ஆண்டில் 12 திங்களுக்கான மின் கட்டணத்தின் சராசரியை கையடைத் தொகையாக முடிவு செய்துள்ளது. இதனால் கையடைத் தொகை வகையில் கிடைக்கும் தொகை ரூ. 1

கோடி ஆகின்றது. திருத்திய கையடைத் தொகைகளைத் தவணைகளில் செலுத்தவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. தவணைகளின் எண்ணிக்கை கையடைத் தொகையின் அளவைப் பொறுத்ததாகும்.

இச் செயற் குறிப்பினை செயல்படுத்துவதனுல், ரூ. 7 கோடி கூடுதலாக வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய இடர்பாடான நிதி நிலைமையைக் கருதிப் பார்க்கையில் நடப்பாண்டிற்கான பெரிய திட்டங்களுக்கு நிதி வாயில்களைத் திரட்ட இது மின் வாரியத்திற்கு மிகவும் உதவும். உத்தேச வசூல் விவரங்கள் பின் வருமாறு:—

| வகை. | பயன் படுத்தப்பட்ட மின்சக்தியின் அடிப்படையில் எதிர்பார்க்கப் படும் வருவாய் (ரூ. இலட்சத்தில்). | 1974-ன் காலண்டர் ஆண்டில் மாத சராசரி அடிப்படையில் குறையுமென எதிர் பார்க்கப்படும் தொகை (ரூ. இலட்சத்தில்). |
|---|---|---|
| 1. சிறப்புத் தொழில்கள் .. | 30 | 4 |
| 2. ஏனைய தொழில்கள் .. | 2,50 | 34 |
| 3. வேளாண்மை .. .. | 1,58 | 22 |
| 4. வீடுகள் .. .. | 1,05 | 14 |
| 5. வணிக நிறுவனங்கள் .. | 1,70 | 23 |
| 6. தெரு விளக்குகள் .. | 13 | 1 |
| | 726 அல்லது ரூ. 7 கோடி | 98 அல்லது ரூ. 1 கோடி. |

வேளாண்மைக் காரியங்களுக்காக மின் சக்தியைப் பயன்படுத்துபவர்களுக்கு இணைப்புக் கட்டணங்கள் செலுத்துவது இன்னும் விலக்களிக்கப்படுகின்றது. அவர்களிடமிருந்து யூனிட் ஒன்றுக்கு 12 காசு வசூலிக்கப்படுகிறது. இது நாட்டிலேயே குறைந்த மின் கட்டணமாகும். இதற்கு சர்சார்ஜ் கிடையாது. இவர்களுக்கு மின் சக்தி இணைப்புக் கொடுக்கப்படுவதனுல் ஆதாயம் கிடைக்காத போதிலும், சிறப்பு உத்திரவாதக் கட்டணங்களைச் செலுத்துவதினின்றும் அவர்களுக்கு விலக்களிக்கப்படுகிறது. இவர்களுக்குக் கொடுக்கபபடும் மின் இணைப்பு மின் வெட்டுக்கு உட்பட்டதல்ல. எனவே, இவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுவதில்லை. கிணறுகள் வற்றவிடின், செலுத்தப்பட வேண்டிய குறைந்த அளவு கட்டணமும் தள்ளிவிடப்படுகிறது. பஞ்ச நிலையின் காரணமாக வேளாண்மைக்குரிய கையடைத் தொகை தண்டல் செய்வதினின்றும் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.



டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு மன்றத் தலைவர் அவர்களே, இதிலே தவணை கட்டுவதற்கு 7 நாள் கொடுக்கப்படுகின்றது என்று சொன்ஞர்கள். ஆனுல் 7 நாளில் பணம் கட்டி ஆகவேண்டும். உண்மையிலேயே கொஞ்சம் கொஞ்சமாக, மின்சாரம் வாங்குகிறவர்களுக்கு ஏறத்தாழ ரூ. 300 கட்ட வேண்டும். இதுவும் 7 நாளில் உடனே கொடுத்து ஆக வேண்டும். இப்படி இருந்தால் அது எப்படிக் கொடுக்க முடியும் என்று சிந்தித்து சரியான வழியில் உத்தரவு போடவில்லை. ஏற்கெனவேயே 3, 4 மாதத்திற்கு எலக்டிரிசிட்டி பில் வருகிறது. அப்படியாளுல் கன்ஸ்யூமர் ரூ. 500, 400 ஒரே தவணையில் 7 நாளில் கொடுக்க வேண்டும் என்பது கஷ்டமான நிலையாக இருக்கின்ற காரணத்தால் அரசாங்கம் மறு பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறதா? பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில் மறு பரிசீலனை செய்ய அரசு தயாராக இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது அடிஷனல் செக்யூரிடி கேட்கிற தொகை, ஏற்கனவே 3 மாதத்தில் வாங்குகிற தொகையுடன் இப்போது ஒருமாதம் அதிகமாகக் கோரப்படுகிறது. இந்த அடிஷனல் தொகை கட்டுகிறது கஷ்டமாக இருக்கின்றகாரணத்தால் விவசாயிகளைப் பொறுத்தவரையில் ஒத்தி வைக்கப்பட்டது. மற்றவர்களைப் பொறுத்த வரையில் உறுப்பினர் சொல்வது போல கட்ட முடியாத நிலை இருந்தால் தவணையாகக் கொடுக்கலாம் என்று மின்சார வாரியத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. இது எவ்வளவு தொகை என்பதைப் பொறுத்து இருக்கிறது. அதிகமாக இருந்தால் அதிகமான தவணையில் கட்டலாம். ஏறகெனவே போடப்பட்டுக் கணக்கிலே 11 மாத ஆவரேஜ் எடுத்துச் சொல்லும்போது எதிர்பார்த்த தொகை ஒரு கோடிக்குக் குறைவாக இருக்கின்றது. இதில் ஏற்படுகிற தாமதம் அடிப்படையில் 4 மாதம் செக்யூரிடி டிபாசிட் போடப்பட்டது. இதில் அநேகமாக 50 சத விகிதம் பேர் கொடுத்து இருக்கிருர்கள். நிலைமையை அனுசரித்து மின்சாரம் கொடுப்பதைத் துண்டிக்கக் கூடாது என்று மின் வாரியத்திற்குத் தெரிவிர்கப்பட்டு இருக்கின்றது.

Dr. H. V. HANDE : May I know whether it is not possible for the Government to see that in the case of those who have alreadypaid the amount of Rs. 150 or 200, that is, three months' deposit, will it not be possible for the Government to adjust it, in the light of the new order passed by the Government that only one month's amount need be deposited? The Honourable Minister in his reply said that a total of Rs. 7 crores has been collected under this Head. Already the total turnover is Rs. 30 or 40 crores a year. Are the Electricity Board's financial affairs so seriously in jeopardy that they have to collect Rs. 7 crores?

அவ்வளவு மோசமாக நிதி நிலைமை இருக்கிறதா? ஏன் இந்த ஏழுகோடி ரூபாய் கலெக்ட் பண்ணவேண்டிய நிலைமை ஏற்பட்டது? அதற்கான விளக்கங்களை அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டுகிறேன். அதோடு ஏற்கெனவே பணம் கொடுத்திருக்கக் கூடியவர்களுக்குச் சலுகை கொடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒட்டு மொத்தமாக கேள்விகளைக் கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும்? ஒவ்வொன்ருக கேட்டால் விவரம் சொல்கிறேன். ஏற்கெனவே மூன்று மாதம் செக்யூரிடி டெப்பாசிட் கொடுத்திருக்கிருர்கள். இப்போது அடிஷனல் செக்யூரிடியாக ஒரு மாதப் பணம் தான் கேட்கிருேம். இதனுல் எவ்வளவு தொகை கிடைக்கும் என்பதைக் கணக்கிட்டுச் சொன்னேன். அதன் பின்னர் விவசாயக் காரியங்கள், தொழில்கள், வீட்டு உபயோகம் போன்றவைகளுக்குத் தனித் தனியாகக் கணக்கிட்டுப்பார்த்ததில் சுமார் எட்டு கோடி ரூபாய் வந்தது. இப்போது திருத்திய கணக்குப்படி ஏழு கோடி ரூபாய் வருகிறது. விவசாயிகளுக்கு இதிலிருந்து விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அடிஷனல் செக்யூரிட்டி கட்ட அவர்களுக்குச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

டாக்டர் எச். வி. ஹாண்டே: சார், பாண்யிட் ஆப் ஆர்டர், I am on a point of order immediately arising.

## 5. அறிவிப்பு.

### தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு, மின்சாரத் தீர்வை(திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (டாக்டர் எச். வி. ஹாண்டே, பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்டு, நின்றுகொண்டிருந்தார்) உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டரைப் பிறகு கேளுங்கள்.

தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மின்சாரத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



## (6) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு மின்சாரத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு, மின்சாரத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப் படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே (தொடர்ந்து நின்று கொண்டே இருந்தார்.) உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள்.

## 7. நடைமுறைக் கேள்விகள்

### (அ) ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்ப ஓர் உறுப்பினர் எழுந்துநின்ற போது, அதற்கு வாய்ப்பளிக்காமலேஅடுத்த பொருளை பேரவைத் தலைவர் விவாதத்திற்கு எடுத்துக் கொண்டது குறித்து

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டு நின்று கொண்டே இருக்கிறேன். நீங்கள் அதற்குள் வேறு சப்ஜெக்டுக்குப் போய்விட்டீர்கள். ஏன் இவ்வளவு அவசரப்படுகிறீர்கள்? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லத் தயாராக இருக்கிருர்கள். நான் விளக்கம் கேட்டபோது ஒவ்வொன்ருகக் கேட்டால் பதில் சொல்கிறேன் என்று சொன்னுர்கள். அதற்காக நான் கேட்க ஆரம்பித்தேன். அதற்குள் என்னைப் பேசவிடாமல் செய்துவிட்டீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரவர்கள் விரும்பினுலும் பேரவைத் தலைவர் மறுக்கலாம். நம்முடைய விதி 41-ல் விளக்கம் பெறுவதற்கு ஒன்று அல்லது இரண்டு கேள்விகள் தான் கேட்கலாம் என்று தெளிவாக இருக்கிறது. அதற்குமேல் அமைச்சரவர்கள் விளக்கம் சொல்லத் தயாராக இருந்தாலும் பேரவைத் தலைவர் மறுக்கலாம். நீங்கள் கேட்டதில் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

[*1975 ஏப்ரல் 11*

திரு. இராம அரங்கண்ணல் : தலைவரவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்பியிருக்கிறேன். முன்பெல்லாம் விதி 41-ன் கீழ் விளக்கம் கேட்டால் அதன் மீது எந்தவிதமான பதிலும் சொல்லக் கூடாது என்று விதி இருந்தது. அதன் பிறகு லோக் சபாவில் ரூல் 41 முடிவில் இரண்டு கேள்விகள் மட்டும் கேட்கலாம் என்று வைத்திருப்பதைப் போல நாமும் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லி, அந்த முறையில் இரண்டு கேள்விகள் மட்டும் கேட்கலாம் என்று சட்டமன்ற விதி இருக்கிறது. ஆனால் ஹாண்டே அவர்கள் அதை மீறியிருக்கிறார்கள். தாங்கள் அனுமதி அளிக்கவில்லை என்பதற்காக அதன்மீது ஒரு விவாதத்தையே நடத்துவதுபோல் பேசிக் கொண்டிருக்கிறார். அது சரியா ? ரூல் 41 முடிவில் இரண்டு கேள்விகளுக்குமேல் கேட்பது சரியா ? இதற்கு தாங்கள் தெளிவான தீர்ப்பை வழங்கிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் இப்போது தெளிவாகச் சொன்னேன். அமைச்சர்கள் விரும்பினாலும் பேரவைத் தலைவர் மறுக்கலாம் என்று சொன்னேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். விதியைப் பொறுத்த வரையில், நான் டிசிப்பிளின்டாகத்தான் கேட்டேன் இரண்டுகேள்விகளுக்கு மேல் நான் கேட்கவில்லை; நான் கேட்ட கேள்விகளைத் தனித்தனியாகக் கேட்டால் பதில் சொல்கிறேன் ; இப்போது கேட்டது சரியாக விளங்கவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதனால் ஒவ்வொன்றாகக் கேட்பதற்கு எழுந்தேன். That is repeating the second question itself. நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், விதிப்பிரகாரம் முறைப்படி கேள்விகள் கேட்டேன். முறைப்படி கேட்டால் இப்படித்தான் நடந்து கொள்வீர்கள் போலிருக்கிறது. கடுமையாக ஒன்றையும் நான் சொல்லவில்லை. விளக்கம் கேட்டேன். அதற்குக் கூட அனுமதிக்காதது என்னுடைய மனதைப் புண்படுத்துகிறது. ஏதாவது கடுமையாகச் சொன்னால் உங்கள் மனதைப் புண்படுத்துகிறது என்று சொல்கிறீர்கள். நான் ஒரு முக்கியமான பிரச்னை பற்றிப் பேசும்போது வேகம் வேகமாக அடுத்த சப்ஜெக்டுக்குப் போவது எங்களுடைய மனதைப் புண்படுத்தாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய நோக்கும் போக்கும் எல்லோருக்கும் தெரியும். தயவுசெய்து உட்காருங்கள்.



*1975 ஏப்ரல் 11*]

டாக்டர் எச். வி. ஹாண்டே : என்னுடைய நோக்கும் போக்கும் உங்களுக்குத் தெரிகிறது. அதைப் போல உங்களுடைய நோக்கும் போக்கும் எங்களுக்குத் தெரிகிறது.

## (ஆ) பேரவைத் தலைவர் மீது அவதூறு ஏற்படுகின்ற வகையில் ஓர் உறுப்பினர் பேசியது குறித்து

*திரு. செ. கந்தப்பன் : தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னை. தங்கள் மீது அவதூறு ஏற்படுகிற வகையில் ஒரு வாக்கியத்தை டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். அவர் அப்படிக் குறிப்பிட்டது சரியல்ல. அதனால் அவர்களே அந்த வாக்கியத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் சபாநாயகரைக் காப்பாற்றுவதற்காக இப்படிக் குறிப்பிடுகிறேன் என்று யாரும் எண்ணக் கூடாது. என்னைப் போன்றவர்கள் இப்படிக் கேட்பது, சபாநாயகர் இருக்கக் கூடிய அந்த இடத்தைக் காப்பதற்காகத்தான். அந்த நாற்காலியின்மீது களங்கம் ஏற்படக்கூடாது. அதற்காகத்தான் சொல்கிறேன்.

நாம் எல்லோரும் சில பிரச்சனைகளை ஆட்சேபனைக் குரியவை என்று கருதும்போது அதைத் திரும்பப் பெற்றுக் கொள்வதுதான் முறை. ஹாண்டே அவர்கள் வேகமாகப் பேசினார்கள். அவர்கள் திரும்பத் திரும்ப சண்டை போடுவது போல பேசுவது நல்லதல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் ஆட்சேபகரமான வார்த்தை எதையும் சொல்லவில்லையே. பிரச்சனைகளின் முக்கியத்துவத்தைப் பொறுத்து வேகமாகப் பேசுகிறேன். இன்னும் கடுமையாகப் பேசியிருப்பேன். ஆனால் நான் அப்படிப் பேசவில்லை. டிசிப்ளின்ட்டாகத்தான் பேசினேன். நான் கேட்டது புரியவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்காக மீண்டும் கேட்க விரும்பினேன். அதல்லாமல் விதியை மீறி நான் எதையும் சொல்லவில்லை. அமைச்சர் பதில் சொல்லத் தயாராக இருந்தபோதிலும் பேரவைத் தலைவர் அனுமதிக்கவில்லை. ஏன் அனுமதி தரக்கூடாது என்று கேட்டவுடன் சபாநாயகர் ' உங்கள் போக்குத் தெரியும் '. என்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்குத் தெரியும். நாம் வள்ளுவர் படத்தை இங்கே வைத்துக் கொண்டிருக்கிறோம். திருக்குறளில் '' நயனிலன் என்பது சொல்லும் பயனில பாரித் துரைக்கும் உரை '' என்று வள்ளுவர் கூறியிருக்கிறார்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : உங்கள் போக்குத் தெரியும் என்று சொன்னால் அது என்னுடைய மனதைப் புண்படுத்துவதாக இருக்கிறது. நான் தவறான வார்த்தை எதையும் பயன்படுத்தவில்லை, அன்பார்லிமென்டரி வெர்டு ஒன்றும் நான் சொல்லவில்லை. நான் ஆவேசமாகப் பேசினாலும் அது பேசுகின்ற கருத்தின் அடிப்படையில்தான் இருக்கும். அன்பார்லிமென்டரி வார்த்தைகளை அப்போதும் நான் உபயோகிப்பது கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபை நடவடிக்கைக் குறிப்பை பின்னால் பார்க்கப் போகிறீர்கள் ; அப்போது தெரியும்.

" நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை"

என்பதை நடவடிக்கைக் குறிப்பைப் படிக்கிறவர்கள் உணர்ந்து கொள்ளட்டும்.

(இ) உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசியலமைப்புச் சட்டத்தில் விதிமுறைகள் இல்லாதபோது, அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என பேரவை முன்னவர் அறிவித்தது முறைதானா என்பது குறித்து

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். விதி 83, பிரிவு 3-ன்படி என்னுடைய ஒழுங்குப் பிரச்சனையை எழுப்புகிறேன். கொஞ்சம் பொறுமையாகக் கேட்டுவிட்டு, தாங்கள் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

" A point of order shall relate to the interpretation or enforcement of these rules or such Articles of the Constitution as regulate the business of the House and shall raise a question which is within the cognizance of the Speaker."

என்ற விதிமுறையின்படி என்னுடைய ஒழுங்குப் பிரச்சனையை எழுப்புகிறேன். நம்முடைய இந்திய அரசியல் சட்டம் ஆர்ட்டிகிள் 195-ல் விவரமாக இருக்கிறது.

"Members of the Legislative Assembly and the Legislative Council of a State shall be entitled to receive such salaries and allowances as may from time to time be determined, by the Legislature of the State by law ................"

என்று கிளியராக இருக்கிறது. நேற்று நம்முடைய சட்டமன்ற மானியக் கோரிக்கைக்குப் பதிலளித்த மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் மூன்று முறை தொடர்ந்து சட்டமன்ற உறுப்



பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க இந்த அரசு முடிவு செய்திருக்கிறது என்ற அறிவிப்பை வெளியிட்டார்கள். நம்முடைய அரசியல் சட்டம் 195-வது பிரிவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. அதோடு அல்லாமல் ஆர்ட்டிகிள் 246, பிரிவு 38-லும் விளக்கமாக இருக்கிறது.

Seventh Schedule—List II—State List—Item 38.

" Salaries and allowances of members of the Legislature of the State, of the Speaker and Deputy Speaker of the Legislative Assembly and, if there is a Legislative Council, of the Chairman and Deputy Chairman thereof. " என்று இருக்கிறது.

(முற்பகல் 11-30)

அதுமட்டுமல்ல. 42-ல் —Article 246—Seventh Schedule—List II—State List—"State pensions, that is to say, pensions payable by the State or out of Consolidated Fund of the State"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆர்ட்டிகிள் 366-ல் பென்ஷன் என்றால் என்ன என்ற விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. பென்ஷன் சம்பந்தமான விதிகளிலும் சட்டமன்ற உறுப்பினருக்கு பென்ஷன் அளிக்க அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி வழியில்லை. இவற்றை எல்லாம் சொல்வதற்குக் காரணம் சட்டப்படி சட்டமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதியம் பெற வழியில்லை என்பதை எடுத்துக்காட்டத்தான். அதற்காக நான் இதை எதிர்க்கிறேன் என்று பொருள் அல்ல. இதை நானும் வரவேற்கிறேன். ஆனால் நமது அரசியல் சட்டத்திற்கு விரோதமான ஓர் அறிவிப்பை இங்கே செய்யலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மக்களுக்காகச் சட்டமே தவிர சட்டத்திற்காக மக்கள் இல்லை. சட்டத்திலே இடம் இல்லை என்றால் சட்டத்தில் இடம் உண்டாக்கிக் கொள்ள வேண்டுமே தவிர இது பாயிண்ட் ஆப் ஆர்டர் ஆகாது.

(6) அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/75).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, " தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க

(எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 15/75)ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்'' என்று கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. கோவை செழியன், ஐந்து நிமிடத்தில் முடித்து விடுங்கள்—என்னிடம் சொன்னபடி.

<u>திரு. கோவை செழியன் :</u> தயவுசெய்து யாரையும் குறுக்கிடவேண்டாம் என்று சொல்லுங்கள். நான் முடித்து விடுகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, 1975ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவின் கீழ் நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே பல விவாதங்கள் இந்த மன்றத்தில் நடைபெற்ற பிறகு இதே நிதி சம்பந்தமாக ஒரு சட்ட முன்வடிவு வந்திருக்கிற காரணத்தினால் சில கருத்துக்களைக் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் நிதி நிலைமை எந்த அளவில் இருக்கிறது என்பது சமீபத்தில் வெளியிட்ட பட்ஜெட் அறிக்கையில் இருந்தே தெளிவாகத் தெரிகிறது. தமிழகத்தின் எதிர்காலம் எந்த அளவிற்கு அமைய வேண்டுமென்பதில் எல்லாக் கட்சியில் இருக்கிறவர்களுக்கும் அக்கறை இருக்கிறது. எல்லோரும் அது பற்றி ஒருமித்த கருத்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தம்முடைய பட்ஜெட் உரையில் 31-வது பக்கத்தில் "We have no voice in the management of economy" என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

மத்திய அரசை எதிர்நோக்கியுள்ள பொருளாதாரச் சிக்கலுக்குப் பரிகாரம் தேடுகின்ற முறையில் மாநில முதல்வர்களைக் கலந்து கொள்ளவில்லை என்ற ரீதியில் அவர்கள் பேசியிருக்கிறார்கள். என்னுடைய வாதம் எல்லாம் தமிழ்நாட்டில் ப்ளானிங் கமிஷன் என்று ஏற்படுத்தினீர்களே, அது தன்னுடைய ரிப்போர்ட்டை—பரிந்துரைகளை எல்லாம் தந்திருக்கிறதே, அந்தப் பரிந்துரைகளின்மீது என்ன காரியங்களைச் செய்திருக்கிறீர்கள் என்பதைத்தான் நான் தெரிந்து கொள்ள வேண்டும். அதில் ஒரு வார்த்தை போட்டிருக்கிறார்கள் "Task Force—Full Employment and Human Resources" என்பதாக ஆர்மி வேர்டு-task force என்கிறார்களே—இதன்படி நாம் என்ன செய்திருக்கிறோம்.



ஒரு பழமொழி உண்டு. கூரை மீது ஏறி கோழி பிடிக்க முடியாதவன்—கோபுரத்தில் ஏறி வைகுண்டத்தைக் காட்டுகிறேன் என்று சொல்வதைப் போலத்தான் இது இருக்கிறது. இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கக் கூடிய அமைப்புக்களை வைத்துக் கொண்டு—வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க—பொருளாதார முன்னேற்றத்திற்கு ஒரு வழி அமைக்க இவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்பதைத் தான் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

நிதியை முதலில் சேமிக்கக்கூடிய பழக்கத்தை வைத்துக் கொள்ளவேண்டும். இன்றைக்கு நிதி விரயம் செய்யப்படுகிறது. நிதி இலாக்காவினால் பல நேரங்களில் நிதி சம்பந்தப்பட்ட காரியங்கள் முறையாகச் செய்யப்படவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டாகும். தமிழக அரசு ஊழியர்கள் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். 6 1/2 லட்சம் ரூபாய் unposted amount மொத்தமாக ஏ. ஜி. யிடம் இருக்கிறது. நிதி இலாக்காவின் இலட்சணம் இந்த அளவில் இருக்கிறது. இதைத் தெரிந்துக் கொள்ள வேண்டும். முதலமைச்சர் அவர்கள் இவைகளை எல்லாம் பார்த்துத் திருத்தம் செய்ய வேண்டுமென்பது என்னுடைய கருத்தாகும்.

இரண்டாவதாக, அமைச்சர்களுடைய செக்யூரிடி செலவுகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. மாதம் ஒன்றுக்கு லட்சம் ரூபாய்க்குமேல் செலவாகிறது. திரு. ராஜாஜி காலத்தில் 2 பேர்கள் தான் இருந்தார்கள். இப்போது சப் இன்ஸ்பெக்டர்களே எட்டு ஒன்பது பேர்கள் அமைச்சர்களுடைய வீடுகளில் பணியாற்றுகிற நிலைமையை அனுமதிக்கத் தேவைதானா என்பதைப் பார்க்க வேண்டும்.

போலீசுக்கே மதிப்பு இல்லாத நிலைமை வந்து கொண்டிருக்கிறது. அதற்கு உதாரணம் சொல்ல வேண்டுமானால் நமது ஐ. ஜி. அருள் பற்றி கேவலமான கார்ட்டூன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உறவினர்களால் நடத்தப்படுகின்ற முரசொலிப் பத்திரிகையில் போடப்பட்டிருக்கிறது. இதனால் அதிகாரிகள் மத்தியில் அவநம்பிக்கை—தைரியம் இல்லாத நிலைமைதான் ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

போலீஸ் மானியத்தின் மீதே பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன். போலீஸ் துறை எதிர் கட்சிக்காரர்களுக்குப் பயன்படுவதில்லை. ஆளுங்கட்சியில் இருக்கிறவர்களுக்கே பயன்படுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை தேர்தலின்போது பலபேர் வந்து பிரச்சாரம் செய்திருக்கிறார்கள். முதலமைச்சருடைய மகன் அங்கே கலா நிகழ்ச்சி நடத்தவந்தபோது ஜீப் ஒன்றில் ஆட்களை செக்யூரிட்டி

யாகப் போட்டு அனுப்பினார்கள். அந்த ஜீப் வேகமாகப் போக முடியாது. காங்கேயத்தில் நின்றுவிட்டது. எனக்குத் தெரியும். அங்கே இருந்து அவர்கள் ஸ்டேஷனில் கூப்பிட்டுச் சொன்னபோது டி. ஐ. ஜி. கோபித்துக் கொள்கிறார். இது எல்லாம் நியாயம்தானா என்று கேட்க விரும்புகிறேன்.

கலா நிகழ்ச்சிகள் என்ற பெயரால் அதிகாரிகளை வைத்துக் கொண்டு வசூல் செய்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டை ஏற்கெனவே எங்கள் கட்சி உறுப்பினர் திரு. எட்மெண்ட் போன்றவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். முதல்வருடைய குமாரர் கலா நிகழ்ச்சி என்ற பெயரால் குமாரபாளையத்தில் ஒண்ணேமுக்கால் லட்சம், சேலத்தில் இரண்டு லட்சம் வசூல் செய்திருக்கிறார்கள். பதவிகள் எப்படியெல்லாம் பயன்படுத்தப்படுகின்றன என்பதற்குச் சொல்கிறேன்.

கவர்ன்மெண்டு ஹாஸ்பிடலிலே ஏற்கெனவே டீன் ஆக திரு. இராமச்சந்திரா பணியாற்றிக் கொண்டிருந்தார். அவருக்கு சீனியராக இருந்த ஒருவரை பதவியில் இருந்து விலக்கிவிட்டு டாக்டர் அண்ணாமலையைப் போட்டிருக்கிறார்கள். அவருக்கு எக்ஸ்டென்ஷன் தரப்படுகிறது—இரண்டாம் நிலையில் இருந்து முதல்நிலை ப்ரொபசராக ரீ போஸ்டிங் தரப்பட்டிருக்கிறது. அவரை சூப்பிரண்டாக்கியிருக்கிறார்கள்.

இன்னும் ஸ்கின் ஸ்பெஷலிஸ்டு தம்பையாதான். டாக்டர் அண்ணாமலையின் மனைவியார் ருத் அண்ணாமலைக்குத் தர வேண்டுமென்று ஸ்கின் டிபார்ட்மென்டை பைபர்கேட் பண்ணி ருத் அண்ணாமலைக்குக் கொடுத்தார்கள். அது நியாயமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள், நேரமாகிவிட்டது. குறுக்கீடு கூட இல்லை. அப்புறம் திரு. காளிமுத்துக்கு கொடுக்கப்பட்ட நேரம்தான் குறைந்துவிடும்.

திரு. கோவை செழியன் : இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். தமிழ்நாட்டில் புதிய இயக்கம் ஒன்றை ஆரம்பித்து தமிழ்நாட்டில் உள்ள மலையாளி நிறுவனங்களில் போராட்டம் நடத்தப்போவதாக பத்திரிகையில் அறிக்கை வந்திருக்கிறது. அதுவும் குறிப்பாக சென்னையில் உள்ள ஒரு ரப்பர் பாக்டரி—இன்னும் சில கம்பெனிகள் ஆகியவற்றில் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்திருப்பதை முதல் அமைச்சர் அவர்கள் கண்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாரியங்களைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு 40 வாரியங்கள் இருக்கின்றன. டிபார்ட்மெண்டு வேலைகளைவிட சுறுசுறுப்பாக நடக்கவேண்டும் என்பதற்காக வாரியங்களை அமைக்கிறோம். அரிசன் ஹவுசிங் கார்ப்பரேஷன் என்று ஒன்றை



அமைத்திருக்கிறோம். அதற்கு ஐ.ஏ.எஸ். அதிகாரி நம்பியாரைப் போட்டிருக்கிறோம். 'தமிழ்நாடு உட்ஸ் அண்டு மெட்டல் கிராப்ட் லிமிடெட்' என்ற கம்பெனியை அவருடைய மகன் அசோக் நம்பியார்தான் நடத்துகிறார்கள். தம் மகன் கம்பெனியையே காண்டிராக்டராக்கி—5 லட்சம் பெறுமான பொருளை 20 லட்சத்திற்கு இந்தக் கார்ப்பரேஷன் மூலமாக அவர்களிடம் இருந்து இவரே வாங்கியிருக்கிறார். இப்படி எல்லாம் ஒழுங்கீனங்கள் நடைபெற அனுமதிக்கலாமா ?

இன்னும் அதிகாரிகளைப் போடும்போதும்—இன்பர்மேஷன் அண்டு பப்ளிசிடி டிபார்ட்மெண்டில் கருணாநந்தம், ஔவை நடராசன் ஆகியவர்களைப் போட்டிருக்கிறார்கள். இவர்களைவிடத் தகுதி உள்ளவர்கள் நம்முடைய டிபார்ட்மெண்டிலேயே இருக்கிறபோது வெளியில் இருந்து இதுபோலக் கொண்டுவர வேண்டுமா என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள நிதி ஒதுக்கீடு மசோதாவின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நமது மாநிலத்திற்கு நிதி ஒதுக்குகிற நேரத்தில் அரசிலிருக்கும் நிதி நிர்வாகக் கோளாறுகளை, குறைபாடுகளை எடுத்துக் காட்டியாக வேண்டும்.

1972-73 ஆம் ஆண்டு ஆடிடர் ஜெனரல் தனது அறிக்கையில் சில குறைபாடுகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த மாநிலத்தில் பல்வேறு கார்ப்பரேஷன்களும்............

(ஒரு பகுதியில் சில உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருந்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் லாபியிலே போய் பேசுங்கள். இங்கே உட்கார்ந்து கொண்டு, கும்பலாகப் பேசினால் எப்படி ?

திரு. ஜே. ஜேம்ஸ் : பல்வேறு ஸ்டாச்சுட்டரி கார்ப்பரேஷன்ஸ், போர்டுகள், கவர்ன்மெண்ட் கம்பெனிகள், ஆகியவற்றின் ஆடிட் அறிக்கைகள் பிரத்தியேகமாக இந்த மாமன்றத்திற்கு வைக்கப்படும் என்று ஆடிட்டர் ஜெனரல் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், இதுவரையிலும் அந்த அறிக்கைகள் இங்கே வைக்கப்படவில்லையென்று சொன்னால், நிச்சயமாக அந்தக் கார்ப்பரேஷன்கள் எந்தமுறையில் செயல்படுகின்றன என்பதை இந்த மாமன்றம் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படவில்லை. ஆகவே, இந்தக் குறைபாடுகளை உடனே இந்த அரசு மாற்றியமைக்கவேண்டும். கார்ப்பரேஷன்கள், அரசுக் கம்பெனிகள் ஆகியவற்றின் அறிக்கைகளை இந்த மாமன்றத்தில் உடனடியாக வைக்கவேண்டும். ஏனென்றால் பல கம்பெனிகள்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1975 ஏப்ரல் 11

இருக்கின்றன. இந்த அரசாங்கம் ஏராளமான பணத்தை இந்தக் கார்ப்பரேஷன்கள் வழியாகச் செலவு செய்துவருகிறது. அவை ஒழுங்காக செயல்படுகின்றனவா என்பதை இந்த மன்றம் அறியக் கடமைப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, பட்ஜெட்டில் ஒதுக்கியிருக்கின்ற பணம் செலவு செய்யப்படாமல் அதிகமாக மீதி எடுக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. உதாரணமாக, 1972–73-ல் மொத்தத்தில், ரூ. 38 கோடி குறைவாகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதே ஆண்டில், வருவாயில் ரூ. 48 கோடி அதிகமாக வந்திருக்கிறது—என்ற குற்றச்சாட்டுக்களும் இந்த Report of the Auditor-General of India for the year 1972-73-ல் கூறப்பட்டிருக்கிறது. அதோடு, ரெவினியூ அரியர்ஸ் அதிகமாக இருக்கிறது. 1973-ம் ஆண்டிலே மார்ச்சு வரையில் ரூ. 22.66 கோடி வருவாய் வரவேண்டியிருக்கிறது என்று இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அதுபோல் சேல்ஸ் டாக்ஸ் ரூ. 42.54

(பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

கோடி அரியர்ஸ் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதுபோல், ரிட்டன் ஆப் என்ற வகையிலும் பெரும் தொகை. பல இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, இந்த முறைகள் எல்லாம் வருகிற ஆண்டில் தவிர்க்கப் படவேண்டுமென்று நான் கூற விரும்புகிறேன். 1972–73-ல் பல்வேறு மானியங்களில் ஏறத்தாழ ரூ. 114 கோடி மீதி எடுக்கப் பட்டிருக்கிறது. ரூ. 445 கோடி வரவு-செலவு திட்டத்தில், பல்வேறு இலாகாக்களில் ரூ. 114 கோடி செலவு செய்யப்படாமல் நிறுத்தப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1972-ல் எதிர்பாராத வறட்சியினால் உணவுப் பற்றாக்குறை ஏற்படா வண்ணம் பல்வேறு வறட்சி நிவாரணப் பணி நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டது. அதாவது, எமர்ஜன்ஸி அக்ரிக் கல்ச்சுரல் புரடக்ஷன் புரோகிராம் என்ற 6 திட்டங்களுக்காக மத்திய அரசாங்கத்திடமிருந்து இந்த அரசு பணம் வாங்கியிருக் கிறது. ஆனால், அந்தப் பணம் ஒழுங்காகச் செலவு செய்யப்பட வில்லையென்ற குற்றச்சாட்டும் இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக் கிறது. குறிப்பாக, 10 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கவேண்டுமென்ற திட்டத்தை மத்திய அரசாங்கம் இந்த அரசாங்கத்திடம் வற்புறுத்தியும் அதனை இந்த அரசு செய்யத் தவறிவிட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1971 ஆகஸ்ட் மாதத்திற்கும் 1973 மே மாதத்திற்கும் உள்ளாக, குறுகிய காலத்தில் பயன் தரும் பயிருக்கு இந்தப் பணம் செலவு செய்யப்படவேண்டும், அதற்கான பம்ப் செட்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட வேண்டுமென்று நிபந்தனையோடு பணம் கொடுக்கப்பட்டது. ஆனால், செலவு செய்யப்படவில்லை. ஏற் கெனவே மின் இணைப்பு கொடுத்ததை, அரசாங்கத்தை அந்தக் காலத்தில் மின் இணைப்பு கொடுத்ததாகக் கணக்கில் எடுத்துப் பணம் வாங்கியிருப்பதாகவும் இங்கே, இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது.



1975 ஏப்ரல் 11] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அத்துடன், இந்த வேலைகளுக்கு டெக்னிக்கல் செல் ஒன்று இருக்கவேண்டுமென்ற நிபந்தனையும் போடப்பட்டிருக்கிறது. அதனையும் இந்த அரசாங்கம் செய்யத் தவறி விட்டது என்ற குறைபாடும் சொல்லப்பட்டிருக்கிறது. 2,000 பில்ட்டர் பாயிண்ட் கிணறுகளுக்கு டீசல் என்ஜின்கள் வாங்க ரூ. 50,000-ஐ மத்திய அரசாங்கம் வழங்கியிருக்கிறது. ஆனால், அதனை இந்த அரசாங்கம் செலவு செய்து திட்டத்தை நிறைவேற்றவில்லையென்ற குற்றச்சாட்டும் சொல்லப்பட்டிருக்கிறது.

பர்சேஸ் ஆஃப் பவர் ஸ்ப்ரேயர்ஸ் பொறுத்தவரையில் ஏரியல் ஸ்ப்ரேயர்ஸ் நிறுத்தப்பட்டு, 2,000 பவர் ஸ்ப்ரேயர்ஸ் வாங்க ரூ. 20 இலட்சம் மத்திய அரசாங்கம் கொடுத்திருக்கிறது. அந்த ஸ்ப்ரேயர்களை சப்ளை செய்யும் உரிமை 2 கம்பெனிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. வாங்கப்பட்ட ஸ்ப்ரேயர்கள், டிஃபெக்டிவ் ஆகவும், வேலை செய்ய முடியாத நிலைமையிலும், சில பாகங்கள் இல்லாத நிலைமையிலும்—பழுதடைந்த நிலைமையிலும், மொத்தத்தில் வேலை செய்ய முடியாத நிலைமையிலிருந்து, பயன் தரமுடியாத நிலைமையிலிருப்பதாகவும் இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் அந்த வகையில் விவசாயிகளுக்குப் பயன் போய் சேர வேண்டுமென்று கொடுக்கப் பட்ட லோன் விவசாயிகளுக்குப் போய்ச் சேரவில்லை.

" Long term assistance given by the Central Government has not therefore reached the farmers "
என்ற குறைபாட்டையும் இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இப்பொழுது செய்யப்படுகிற வறட்சி நிவாரணப் பணிகள் ஒழுங் காகச் செய்யப்பட வேண்டும் என்பதற்காகத்தான்.

மத்திய அரசாங்கம் கணக்கு கேட்டுவிட்டது, ஆகவே, நாம் மத்திய அரசாங்கத்திடம் பணம் வாங்கமாட்டோம் என்று மாண்பு மிகு முதலமைச்சரவர்கள் நிபந்தனை போட்டது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. இப்பொழுது இருக்கிற நிலைமைகளைப் பார்த் தால் மாநில அரசு ஏற்படுத்தியிருக்கிற வறட்சி நிவாரண நிதிக்கு வரக்கூடிய தொகை கவரக்கூடியதாக இல்லை—இதுவரை ரூ. 54 இலட்சம்தான் வந்திருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கத் திடமிருந்து உடனடியாக நிதி வாங்கவேண்டுமென்றும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், அசைன்மெண்ட் கொடுப்பதில் மிக அதிக அளவில் தவறு ஏற்பட்டிருக்கிறது என் பதை ஏற்கெனவே கூறியிருக்கிறேன். குறிப்பாக, டைரக்டர் ஆஃப் சர்வேவுக்கு ஒரு ஆஃபீஸ் இருக்கிறது. அது ஒழுங்காகச் செயல்படவில்லை. ஏழைகளுக்கு அசைன்மெண்ட் செய்ய, நிலத் தைச் சர்வே செய்ய பணம் வாங்கிக்கொண்டுதான் சர்வே செய்கி றார்கள்.

உதாரணமாக, குலசேகரத்தில் செருப்பாலூரில் ஒரு பாத்வே புறம்போக்கு நிலத்திலிருக்கிறது. அந்த வழியை ஒருவர் அடைத்து விட்டார். அது புறம்போக்கு நிலமா என்று சர்வே செய்ய ஏறத்தாழ 6, 7, 8 மாதங்களாகி, இன்னும் சர்வே செய்யப்படாததால், பல்வேறு கிரிமினல் வழக்குகள் ஏற்பட்டு, அதனால் மக்களுக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, சம்பந்தப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எங்கள் மாவட்டத்தில் ரப்பர் தோட்டங்கள் இருக்கின்றன. தனியார் ரப்பர் தோட்டங்களும் இருக்கின்றன, அரசு ரப்பர் தோட்டங்களும் இருக்கின்றன. அரசு ரப்பர் தோட்டங்களைப் பொறுத்தவரையில் ஃபாரஸ்ட் இலாகா பொறுப்பில் இருக் ன்றன. ஆனால், தனியார் ரப்பர் தோட்டங்கள் எந்த இலாகாவிலும் வரவில்லை—எந்த இலாகாவும் அதற்குப் பொறுப்பேற்கவில்லை. நான் இரண்டு மானியங்களிலும் அதைப்பற்றி பேசினேன். இரண்டு இலாகா அமைச்சர்களும் தாங்கள் அதற்குப் பொறுப்பில்லையென்று கூறிவிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தனியார் ரப்பர் தோட்டங்கள் எந்த இலாகாவில் வரவேண்டுமென்று முடிவெடுக்கவேண்டும். அது விவசாய இலாகாவில் வரவேண்டுமென்ற கருத்தைச் சொல்கிறேன்.

குறிப்பாக, கேரளாவிலும் தமிழ்நாட்டிலுள்ள ரப்பர் தோட்டங்களுக்காக மத்திய அரசாங்கம் கேரள ரப்பர் "போர்டின் மூலமாக, ஏராளமாகப் பணம் கொடுக்கிறது. ஆனால், அவற்றை கேரள ரப்பர் போர்ட் கேரளாவிலே உள்ள ரப்பர் தோட்டங்களுக்கே செலவு செய்கின்றது. தமிழ் நாட்டில் ரப்பர் பயிர் செய்கின்றவர்களுக்கு அந்தப் பணம் கிடைக்கவில்லை. ஆகவே, தமிழ் நாட்டு ரப்பர் தோட்டங்கள் நன்மை அடைய வேண்டுமானால், மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தி, தமிழ் நாட்டில் ஒரு ரப்பர் போர்டை அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, அவ்வகையில் நன்மை செய்யவேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு . சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இன்றைக்கு மத்திய அரசாங்கம் விதித்துள்ள பல்வேறு வரிகளையெல்லாம் பார்க்கும்போது, நம்முடைய தமிழக அரசு எவ்வளவு தூரம் பாமர மக்களுக்கும், பாட்டாளிகளுக்கும், ஏழைகளுக்கும் வரி விலக்கு அளித்துள்ளது என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்வீர்கள். அந்தவிதத்தில் தமிழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பேரறிஞர் அண்ணா அவர்கள் 1958–59-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே குறிப்பிட்ட கருத்துக்கள் இன்றைக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துக்களாக இருக்கின்றன. ' எந்தெந்தப் பொருள்களுக்கு நாம் வரி செலுத்துகிறோம் என்றால், காலையில் எழுந்ததும் பல் துலக்க பிரஷை எடுத்தால், அதற்குரிய வரியை மத்திய அரசாங்கத்திற்குத் தருகிறோம். அதற்குப் பிறகு, பற்பசை எடுத்தால், அதற்குரிய வரியை மத்திய அரசாங்கத்திற்குத் தருகிறோம். பிறகு டீயோ காபியோ குடித்தால், அதற்குரிய வரி மத்திய அரசாங்கத்திற்குப் போகிறது. பிறகு நாம் குளிக்க சோப்பு எடுத்தால், அதற்கும் வரி மத்திய அரசாங்கத்திற்குப் போகிறது. ஷேவிங் செய்வதாக இருந்தால், பிளேடுக்குரிய வரி மத்திய அரசாங்கத்திற்குப் போகிறது. சிகரட் பிடிப்பவர்களாக இருந்தால், அந்த வரியும் மத்திய அரசாங்கத்திற்குப் போகிறது ' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் 1958–59-ம் ஆண்டு நிநிலை அறிக்கையில் பேசிய கருத்துக்கள் இன்றைக்கும் ஏற்புடைய கருத்துக்களாயிருக்கின்றன.

இன்றைக்கு மத்திய அரசு இப்படிப்பட்ட பொருள்களின் மீது வரி விதித்திருப்பதன் காரணமாக, ஏழைகளும் பாட்டாளி மக்களும் மேலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே தமிழக அரசு ஏழைகளின் மீது வரி விதிக்காமலிருப்பதைப் பாராட்டுகிறேன்.

நம்முடைய முதலமைச்சரவர்கள் தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களையெல்லாம் தீட்டி வருகிறார்கள். அதற்காக, அவர்களைப் பாராட்ட வேண்டும். குறிப்பாக, நம்முடைய தமிழ்நாட்டிலே கப்பல் கட்டும் தளத்தை நாம் உருவாக்க சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. இன்றைக்குக் கேரளாவிலே இருக்கிற கப்பல் கட்டும் தளம் பல்வேறு சிரமங்களுக்கிடையே உருவாக்கப்பட்டது. அங்கே 150 ஏக்கர் நிலத்தைப் பெற பள்ளிக்கூடங்கள், தொழிற்சாலைகள், வீடுகள் எல்லாம் இடித்துத் தள்ளப்பட்டு, அதற்குப்பிறகு இடம் பெறப்பட்டது.

ஆனால், நம்முடைய இராமநாதபுரத்திலுள்ள மண்டபத்தில் 150 ஏக்கர் நிலம் அரசுக்குச் சொந்தமாகவுள்ளது ; தொழிலாளர்களும் நிரம்பக் கிடைப்பார்கள். கேரளாவிலே, கொச்சியிலே, தொழிலாளர்களது 4 மணி நேர உழைப்பே கிடைக்கிறது. ஆனால் தமிழ் நாட்டில் உள்ள தொழிலாளர்கள் அதிக நேரம் உழைப்பார்கள். மேலும், மழையினால் அடிக்கடி பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை அங்கே இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டிலே அப்படிப்பட்ட, மழையினால் அடிக்கடி பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை இல்லை. இங்கே பல்வேறு சௌகரியங்களும் சாத்தியக்கூறுகளும நிரம்ப இருக்கின்றன. ஆகவே, மண்டபம் பகுதியிலே கப்பல் கட்டும் தொழிற்சாலையை உருவாக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தொழிற்சாலையை உருவாக்கினால் அதிலே

வேலை வாய்ப்பைப் பெறுபவர்கள், ஐ.டி.ஐ. வெல்டர்கள் 1,000 பேர்; ஐ.டி.ஐ. பிட்டர்கள் 1,000 பேர்; எல்.இ.இ., எல்.எம்.இ. படித்தவர்கள் 1,000 பேர்; பி.இ. பட்டதாரிகள் 500 பேர்; இதர பட்டதாரிகள் 1,000 பேர்; கடைநிலை ஊழியர்கள் 1,000 பேர்; மேலும் 6,000 பேர்களுக்கு மண் வெட்டுதல் போன்ற வேலைகளுக்குவேலை கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, கப்பல் கட்டும் தொழிலை நம்முடைய தமிழ் நாட்டிலே உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக மத்திய அரசாங்கத்தை நம்முடைய அரசாங்கம் தட்டிக்கேட்டு நிதி உதவியும் பெறவேண்டும்.

நம்முடைய தமிழக அரசின் மேல் இங்கே பல்வேறு குற்றச் சாட்டுக்களை சாட்டினார்கள். மத்திய அரசாங்கம் செய்கிற பல்வேறு ஊழல்களைப்பற்றி எதிர்க்கட்சியினர் மறந்துவிட்டார்கள். நம்முடைய இராணுவ வீரர்களுக்கு கொடுக்கப்பட்ட போர்வைகள் கொடுக்கப்பட்டதில் ஊழல் நடந்திருப்பதாக பாராளுமன்றத்திலே பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் அதனுடைய தலைவர் திரு. ஜோதிர்மாய் பாசு அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். யார் குற்றவாளி என்று விளக்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல்வேறு ஊழல்கள் அங்கே நடந்திருக்கின்றன. அதைப்பற்றியெல்லாம் எதிர்க்கட்சியினர் சொல்வதில்லை. நம்முடைய அரசைப்பற்றி ஒன்றுமில்லாவிட்டாலும் ஊழல்ஊழல் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

மத்திய-மாநில உறவுப்பற்றி அஃதாவது மாநில சுயாட்சிப் பற்றி நாடெங்கும் பேசப்படுகிறது. 5-3-75 ஆம் நாளன்று மெயில் பத்திரிகை எழுதிய தலையங்கத்தில் மாநில சுயாட்சியின் அவசியம் பற்றி மிகவும் அழகாக எடுததுக்காட்டப்பட்டிருக்கிறது.

"The word 'Autonomy' in its Greek origin, means self-expression and that is what the States ask for. Why not discuss the matter with them? After all, it should be remembered that no other than the Sheikh gave so much trouble on Kashmir. His demands were considered at one time anti-national. He was even declared an enemy to Indian interests and was prosecuted and detained. The demands he had made at the commencement of the recent dialogue if analysedwill show that he was asking almostfor an independent Kashmir. If talks could be initiated with him as a result of which there has been beneficial consequences, why not a dialogue with the States on Autonomy? Such talks should not be vague, the Prime Minister could list specific issues and discuss with the Chief Ministers individually and collectively. That is the way to settle the issue of autonomy, not by shutting out discussion...."





ஜி. கே. ரெட்டி இந்து பத்திரிகையிலே கட்டுரை எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரையில் மத்திய மாநில உறவுகள் எப்படி இருக்கவேண்டுமென்ற முறையைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"Though Mr. Karunanidhi has taken upon himself to crusade for greater autonomy for the States, he is by no means the first one to raise his voice against the growing Central dominance. A good many Congress Chief Ministers have been complaining privately with equal vehemence but in a less strident tone against the dual overlordship of the Central Government and the Congress High Command indicating policy from Delhi. The D.M.K. leader is at least in the happy position of not being answerable to the Congress Working Committee for his actions and inactions"

"while his fellow Chief Ministers in the Congress-run States have to make frequent pilgrimages to Delhi to ensure continued Central support for themselves...." இதிலேயிருந்து மத்திய அரசாங்கத்தை நோக்கி இங்கே இருக்கிற மாநில அரசுகள் எல்லாம் காவடி தூக்க வேண்டிய நிலைமை இருக்கிறது என்றும், மற்ற மாநில முதல்வர்கள் தங்கள் பதவி பறி போகாமலிருக்க மத்திய அரசின் ஆதரவை நிரந்தரமாகக் கோரிக்கொண்டிருக்கும் பரிதாப நிலைமையில் இருப்பதையும் சுட்டிக் காட்டியிருக்கின்றார். ஆகவே, மாநில அரசுக்கு அதிக அதிகாரங்கள் அவசியம் என்பதை வற்புறுத்த விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதி விஷயங்களைப்பற்றிச் சொல்லிவிட்டு முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். மேலரசம்பட்டு அணைத் திட்டம் வெள்ளைக்காரன் காலத்திலே கேட்கப்பட்டு, நீதிக் கட்சி காலத்திலே எடுத்து இயம்பப்பட்டு, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் வலியுறுத்தப்பட்டு, தி.மு.க. ஆட்சிக் காலத்திலே முடிக்கப்படும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்னுடைய தொகுதி மக்கள். மேலரசம்பட்டு திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் கலைஞர் அவர்களுடைய கரங்களுக்கு வலிவு இல்லையென்றால் நிச்சயமாக வேறு எந்தக் கரங்களுக்கும் அந்த வலிவும், துணிவும் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே கலைஞர் அவர்கள் நிறைவேற்றித்தர வேண்டுமேன்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒடுகத்தூரிலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென்று காட்டு இலாகாவிலே நிலம் கேட்டோம். அந்த நிலம் சம்பந்தப்பட்ட ஃபைல் 2 ஆண்டுகளாக அப்படியே இருக்கிறது. அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தும் இப்படிக் காலதாமதம் ஆவது நியாயந்தானா? தனிப்பட்ட ஒருவருக்காக பட்டா கேட்கவில்லை, பொதுமக்களின் நன்மைக்காகக் கேட்கிறோம். ஆகவே, உடனடியாக அதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

THIRU B. VENKATASWAMY : Sir, I would like to offer a few remarks on the Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1975. In spite of the drought relief works undertaken by the Government, we find that the drinking water supply has become acute. In some parts of the State, and particularly in Hosur, people are suffering a lot and last time also I referred to the acute water supply position there. So far no action has been taken and I request the Hon. Chief Minister to take immediate steps to see that drinking water is supplied to Hosur and other places where the water supply position is acute. Though some steps have been taken to deepen wells, it is not enough. Drinking water is the basic necessity of man and I request the Government to take immediate steps in the matter.

Regarding procurement, the procurement policy of the Tamil Nadu Government has really earned them a very bad name. Though it is stated on behalf of the Government that they are collecting the levy paddy on the basis of acreage, actually the officials are harassing the farmers in so many places. I am given to understand that they are taking away the entire stock of paddy kept in the house in some places. In the case of a person holding ½ acre of land, at first the entire produce of four bags was taken away and then two bags were returned to him. Also in the weighing of paddy, there is a lot of fraud. Even a responsible official like P.A. to the Collector has stated that for 62 Madras measures, only a sum of Rs. 39 was paid for one bag. What is the justice you are doing to the concerned farmers. This kind of thing should not be done. The Government should see that weighment is made in the presence of the president of the local panchayat or some officer. Sir, the farmers in the villages are very innocent and they are cheated. I request the Hon. Chief Minister to issue proper instructions to see that such kind of fraud is not committed.

Coming to loans given for deepening of wells, they should be given immediately. At the Block level, the work of deepening wells may be undertaken so that the Grow More Food Campaign can be given an impetus.

As regards co-operative society loans, I understand that only in the case of few loans, they have postponed the collection of loans. In the case of other loans, some notices have been issued for attaching property of the agriculturists. In spite of the moratorium, why are the co-operative societies attaching properties? I have given representations to the Hon. Minister in that connection.

Sir, 80 per cent of the population live in the villages but we are spending only 40 per cent of the total income for them. But, for the 20 per cent of the people in the urban areas we are spending 60 per cent of the total



revenue. How is it justifiable? The Government should change the pattern of budgeting and see that the income is spent according to the population of an area. Now there is great disparity in the distribution of income between urban and rural areas. I request the Hon. Chief Minister to see that more prominence is given to the rural areas, for their development.

Coming to D.A. and T.A. given to the officials, they are too much. I request the Hon. Chief Minister to see that their tour is curtailed.

So far as municipal and panchayat elections are concerned, no date for the holding of elections has been announced. In this connection, I would request the Government to enumerate voters effectively and voters should not be 'manufactured'. I think this aspect of the matter will be borne in mind.

Coming to M.L.As. and M.L.Cs., they should become automatically members of the L.D. Banks and Co-operative Banks and other public institutions. Otherwise, they would not be in a position to know full information about their constituencies and do justice to the people there.

As regards craft instructors, the services of 40 craft instructors have not been regularised. They are now getting only Rs. 340 instead of Rs. 450. For the last nine years they are losing about Rs. 100 every month. I request the Government to see that their services are regularised.

[நண்பகல் 12-00]

Fire Service Personnel should be made on a par with police men. I understand that some private schools are collecting fees. One of them is reported to be the Christian Middle School at Perambur.

There is a lockout in Kamadenu. Some 120 members are affected. I request the Minister concerned to see that the lockout is lifted. They are suffering a lot.

Regarding pension to M.L.As., it is a constitutional issue. Only salaries and allowances could be given to M.L.As. That is a matter for further examination.

I request that priority should be given for drinking water. Thank you.

*திரு. வீ. தவமணித் தேவர் : மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைய நிதி ஒதுக்கீட்டு மசோதாவிலே நான் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, என்னுடைய தொகுதியில் வெள்ளைக்காரன் காலத்தில், குருத் என்ற வெள்ளைக்காரன் கள்ளருக்கு என்று பிறப்பிக்கப்பட்ட அந்த 1928ஆம் ஆண்டிலே அவருடைய சொந்த ரிப்போர்ட்டிலே எழுதி, பின்னர் வைகை அணை உருவாககப் பட்டது. அதிலிருந்து ஏறத்தாழ கொஞ்சம் பகுதிக்கு, சுமார் 10,000 ஏக்கர்களுக்குத்தான் பாய்கிறது. மீதித் தண்ணீர் நிலக்கோட்டைப் பகுதிக்கும், மற்றப் பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது. ஏற்கெனவே பெரியாற்றிலிருந்தும் அங்கே பாய்கிறது. கள்ளர் பகுதிக்கு 22,000 ஏக்கர்களுக்குப் பாய வேண்டுமென்று எழுதியிருந்தும், ரிப்போர்டில் இருந்தும், இப்பொழுது 10,000 ஏக்கர்களுக்குத்தான் பாய்கிறது. அந்த அளவை அதிகப்படுத்த வேண்டுமென்று அன்றைய தினத்திலே பிரதம எஞ்ஜினியராக இருந்தவர், ஏ. ஆர். வெங்கடாச்சாரி என்பவர் 26-10-1946-ல் விசேஷக் குறிப்பில் எழுதி வைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அடுத்து மேற்பார்வையாளராகப் பணியாற்றிய இன்னொருவர் ஏறத்தாழ சீர்திருத்த முறையில் குழாய் மூலமாகவோ அல்லது நவீன முறைப்படி தண்ணீரை அதிகப்படுத்தினால் இன்னும் 10,000 ஏக்கர்களுக்குப் பாயலாம் என்று எழுதி வைத்திருக்கிறார்கள்.

அந்த அளவில் செய்யாமல் இதற்கு முதலில் ஆட்சியிலிருந்த ஆட்சிபீடம் ஒருதலைப்பட்சமாக எங்களைப் புறக்கணித்தார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பல பகுதிகளுக்கு நிலக்கோட்டைப் பகுதி, திருமங்கலம் பகுதி ஆகிய பகுதிகளுக்குக் கொண்டு சென்று விட்டார்கள். அன்றைய தினம் ஒரு மந்திரி தான் செய்தார் என்று கேள்விப்பட்டேன். இன்றையதினம்கூட மந்திரி செய்வதாகத்தான் கேள்விப்படுகிறேன். முதுகளத்தூர் பகுதிக்கு அல்லாமல் வேறு பகுதிக்கு எடுத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அதெல்லாம் தவறானது. எங்களுக்குத்தான் உரிமை கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நிச்சயமாக அந்த மக்களை இந்த அரசு காப்பாற்றும் என்று நம்பிக்கொண்டிருந்தோம். இருந்தாலும் ஒரு சில பொது வேலைகளிலே எங்களுக்கு அவ்வளவு நல்லபடியாக இல்லை என்பதை ஓரளவு மனக் கசப்புடன் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, ரோடுகளை எடுத்துக்கொண்டால் என்னுடைய தொகுதியிலே எந்த ரோடும் செம்மையாக இல்லை. மள்ளபுரம் மயிலாடும் பாறை ரோடு வேலையை 1952ஆம் ஆண்டிலே பஞ்ச நிவாரண வேலையிலே செய்தார்கள் ஜில்லா போர்டு இருக்கும் நேரத்தில். அன்று முதல் இன்று வரையில் அந்த ரோடு அப்படியே இருக்கிறது. இதற்கு முன்பிருந்த பி.டபிள்யூ.டி. அமைச்சரிடத்திலும், எல்லா அமைச்சர்களிடத்திலும் எங்கள் பிரதிநிதிகள் சொல்லியிருக்கிறோம். ஆனால் இன்றுவரையில் அதைக் கவனிப்பதாகக் காணோம்.



அதே போன்று மங்கல்ரேவ் டு கிருஷ்ணாபுரம், பஸ் செல்லும் ரோடு ரோடாகவே இல்லை. மதுரை டு டி. இராமநாதபுரத்திலும் ரோடு இல்லை. 3ஆம் தேதி கனம் ரெவின்யூ அமைச்சரவர்கள் கூட, டி. இராமநாதபுரத்திற்கு வருவதாகச் சொன்னார்கள். மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. பி. எஸ் மணியம் அவர்கள் சொன்னார்கள். அன்றைக்குக்கூட அவர்களுக்குச் சொல்லத் தயாராக இருந்தோம். இருந்தாலும்கூட என்னுடைய தொகுதியாகிய சேடப்பட்டி தொகுதிக்கு பி.டபிள்யூ.டி.-க்கு அதிக நிதி ஒதுக்கி நல்ல ரோடு வசதிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்ச நிவாரண வேலையில் வாகன வசதி இல்லாததால் சில எஞ்சினியர்கள் வந்து சீக்கிரமாகப் பார்த்து முடிக்க முடியாமல் இருக்கிறார்கள். வேலையாட்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஒரு வேலைக்கு ஆயிரம் பேர் கூட வருகிறார்கள். எனவே, சீக்கிரமாக ஒவ்வொரு வேலையையும் ஆரம்பிக்க வாகன வசதிகளைக கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் 175 சர்வே நெம்பரில் 2 ஏக்கர் 75 செண்ட் கொண்ட ஊர் இருக்கிறது.சுமார் 250 வீடுகள் இருக்கும். அந்த ஊரிலே ஒரு தண்ணீர்க் கிணறு கூட இல்லை. அவர்கள் கள்ளர்பள்ளியிலிருந்து தண்ணீரை எடுத்து வந்தார்கள். இப்பொழுது அங்கேயும் தண்ணீர் இல்லை. ஓவர்ஹெட் டேங்க் மூலம் எடுக்கலாம் என்று தோட்டா வைக்கலாம் என்றால் அதிகாரிகளைப் பார்க்க முடியாமல் இருப்பதால் வேலை நின்று விடுகிறது. அந்த சர்வே நெம்பர் ஒரு மையத்தில் ஒரு பகுதியில் இருக்கிறது. அங்கே கிணறு வெட்டலாம் என்றால் பஞ்சாயத்துச் சட்டம் உறுதியாக இல்லாததால் அவர்கள் எந்த நடவடிக்கையையும் எடுக்க முடியவில்லை. ரெவின்யூ டிபார்ட்மெண்ட் சொல்லி முடிவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. உடனடியாகச் செய்ய பஞ்சாயத்துச் சட்டம் இடம் கொடுக்கவில்லை. அந்தப் பஞ்சாயத்துச் சட்டத்தை உடனடியாகத் திருத்துவார்கள் என்று எதிர்பார்த்தேன். அதை உடனடியாகத் திருத்தி பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டு அந்த நம்பிக்கையோடு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்களால் முன்மொழியப்பட்டிருக்கின்ற இந்த நிதி ஒதுக்க மசோதாவை வரவேற்றுச் சில கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

இப்பொழுதும் நாம் ஒதுக்கியிருக்கின்ற இந்தப் பணத்தின் மூலமாகப் பல்வேறு அருமையான வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றக் காத்திருக்கின்றன. சோதனைகள் பலவற்றை எதிர்

நீச்சலிட்டுச் சாதனைகளைக் கண்டிருக்கும் முதலமைச்சரவர்கள் இந்த நிதி ஒதுக்க மசோதாவிலே மிகச் சிறப்பான அளவிற்கு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்றாலும் தற்பொழுது நம்மையெல்லாம் வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்ற வறட்சியைப் போக்குவதற்குக் கணிசமான நிதியை ஒதுக்கி ஏறத்தாழ ஒரு வாரத்திற்கு ஒரு கோடி ரூபாய் என்ற அளவிற்குத் தமிழ்நாடு முழுவதும் அருமையான பணிகள் நடந்துவருகின்றன.

ஆனால், நாம் பல முறை பேசியதைப்போல், வரவேண்டிய இடத்திலிருந்து எந்தவிதமான நிதியும் வரவில்லை என்றாலும் நமக்கு ஒரு நம்பிக்கை தெரிகிறது. மத்திய அரசு ஏப்ரல் மாதத்திலிருந்து ஒதுக்க வேண்டிய தொகையை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு நம்முடைய முதலமைச்சரவர்கள் டெல்லிக்குப் போகிறார்கள். நாளைய தினம் டெல்லியிலே திருவள்ளுவர் சிலை திறப்பு விழா நடக்க விருக்கிறது. அப்பொழுது, தமிழ்நாட்டிலேயிருந்து போயிருக்கிற நம்முடைய நிதியமைச்சரவர்களும், அந்த விழாவிலே கலந்து கொள்கிறார்கள். ஒருவேளை, வள்ளுவர் சிலை திறப்பு விழாவில் சந்திக்கப் போகின்ற இவர்களெல்லாம் ஒரு நல்ல முடிவு எடுத்து நாம் எதிர்பார்க்கின்ற கனவு நிறைவேறும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. முதல்வரவர்கள் அருமையான வாதத்தைச் சொல்கிறார்கள், திட்டத்திற்கு அப்பால் நமக்குப் போதிய நிதி ஒதுக்க வேண்டும், இதற்கு முன்உதாரணங்கள் ஏராளமாக இருக்கின்றன என்ற கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

பல்வேறு மாநிலங்களில் துண்டு பட்ஜெட் போட்ட நேரத்திலே எல்லாம் மத்திய அரசாங்கம் முன்வந்து அதைச் சரிக்கட்ட தொகை ஒதுக்கியிருக்கும் நேரத்தில் நாம் கேட்கிற நியாயமான இந்த உதவியைச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

''எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்''

என்று வள்ளுவர் சொன்னதுபோல் வள்ளுவர் சிலை முன்னால், சிலை திறக்கப்படும் நேரத்தில் நிதியமைச்சர் அவர்கள் 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்ற கலைஞரின் கருத்துக்கு ஆதரவாக இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

வடக்கே இருக்கும் ஜே. பி. போன்றவர்கள் எல்லாம் முதல்வர் அவர்களுடைய வறட்சி நிதிக்கு ஆயிரம் ரூபாய் மனமுவந்து தந்திருக்கிறார்கள். இன்று அந்த நிதி 55 லட்சம் ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. முதல்வர் அவர்கள் நிதியை வைத்து எல்லாக் காரியங்களையும் நிறைவேற்ற முடியாது என்றாலும் இந்த நல்ல முயற்சியை எல்லோரும் பாராட்டுகிறார்கள்.



1968–69-ல் 'Blessing in disguise' என்பதுபோல் அப்போது நடந்த வறட்சி நிவாரணப் பணிகளின் மூலம் அதிக அளவுக்கு உணவு உற்பத்தி பெருக வாய்ப்பு ஏற்பட்டது. அப்போது நிறைவேற்றப்பட்ட ஏரி மராமத்து வேலைகள், குடிநீர்த் திட்டங்கள் காரணமாக பசுமைப் புரட்சி ஏற்பட்டதோடு மட்டுமல்லாமல் விளைச்சல் அளவு உயர்ந்தது என்பதையும் பார்த்தோம். அந்த வகையில் ஒதுக்கியிருக்கும் தொகையின் மூலம் ஏரி, குளம் மராமத்து வேலைகள், குடிநீர்த் திட்டங்களுக்கு நிரந்தரமான பரிகாரம் கிடைக்க முதல்வர் அவர்கள் முயலவேண்டும்.

போர்வெல் போடப்படுகிறது. ஹாண்ட் பம்ப் செட் வைக்கப்படுகிறது. கிராமத்திற்கு மோட்டார் பம்ப் செட் வைத்து நிரந்தரமாகக் குடி தண்ணீர் வசதிகளை ஏற்படுத்த முயலவேண்டும். இணைப்புச் சாலைகள் இல்லாத ஊர்களுக்குக் குறைந்த பட்சம் கிராவல் சாலையாவது போட வேண்டும். எந்த கிராமத்திற்கு அமைச்சர்கள் போனாலும் மூன்று முக்கியமான கோரிக்கைகளைத்தான் அதிகமாக வைக்கிறார்கள். ஒன்று குடிநீர், இரண்டாவது சாலை வசதி, மூன்றாவது அறிவாலயக் கட்டிடங்கள்–பள்ளிக் கட்டிடங்கள். திருப்பித் திருப்பி இந்தக் கோரிக்கைகளைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற சிறப்பான திட்டத்தை வகுத்து முடிக்க முயல வேண்டும். எல்லாக் கிராமங்களுக்கும் மின் விளக்கு வசதி அளித்தது எல்லா மாநிலத்தாரும் போற்றக் கூடிய அடிப்படையில் இருக்கிறது.

முதல்வர் அவர்கள் புதுமையான செய்திகள் சிலவற்றை சொல்லியிருக்கிறார்கள். வேளாண்மைத் துறை மூலமாக நாட்டில் இருக்கும் 11 லட்சம் ஏக்கர் தரிசுநிலங்கள் விளை நிலங்களாகக் கொண்டு வரப்படும் என்ற திட்டத்தை வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, என்னுடைய தொகுதியில் இருக்கும் 1,100 ஏக்கர் நிலங்களை முதல் முதலாக எடுக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் நல்ல தண்ணீர் கிடைத்து வளர்ச்சிக்கு அறிகுறியான தன்மைகள் காணப்படுகின்றன. தமிழ் நாட்டில் இருக்கும் லட்சக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்களை அந்த முறையில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கவும், உணவு நிலைமையைச் சரிக்கட்டவும் கடல் வளத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வங்காள விரிகுடாவில் நல்ல மீன்கள் பெரிய பெரிய ஷார்க்குகள் எல்லாம் கிடைக்கின்றன. ஆழ்கடல் மீன்பிடிப்புத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. சேலம் உருக்காலை நிறுவப்பெறவில்லை. தொழில் நிறுவனங்களை அதிகமாக நிறுவ மின்சாரத் தட்டுப்பாட்டைப்

க்ராகூதேவிரமான சிந்தனையைச் செலுத்த வேண்டும். கர்நாடக அரசாங்கம் அதிகமாக மின்சாரம் கொடுக்க முடியாவிட்டால் ஆந்திரத்திலிருந்து பெற முயல வேண்டும். எண்ணூரிலிருந்தும், நெய்வேலியிலிருந்தும் கிடைக்கக்கூடிய மின்சாரம் தடைப்படுகிற செய்தி விவசாயிகளுக்குப் பீதியாக இருக்கிறது. முழுக்கவனம் செலுத்தி மின்சார நிலையைச்சரிப்படுத்த வேண்டும்.

இரண்டு கோரிக்கைகளை விடுக்க விரும்புகிறேன். முதல்வர் அவர்கள் எழுத்தாளர். எழுத்தாளர்கள் கொண்ட அமைச்சரவையை அமைத்திருக்கிறார்கள். பல முறை சொல்லியிருக்கிறேன். நாட்டிலே யார் யாருக்கோ பாதுகாப்பு இருக்கிறது. எழுத்தாளர்கள் நிறுவனம் ஒன்றை அமைத்து அவர்கள் எழுதும் நூல்களை வெளியிட வழி செய்ய வேண்டும். இப்போது தனிப்பட்ட புத்தகம் வெளியிடுவோர் ராயல்டியை ஏமாற்றுகிறார்கள். ஆகவே, அப்படி ஒரு தனி நூல் நிறுவனம் ஏற்படுத்தி அந்த வகையில் நல்லவர்களின் தரமான நூல்களை ஆராய்ந்து வெளியிட்டு அரசாங்கமே ஆயிரம், இரண்டாயிரம் பிரதிகளை விற்பனை செய்ய வழிவகைகளைக் காணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்த அளவில் நிதி ஒதுக்கீடு தேவையான அளவு இல்லை. சென்ற ஆண்டும் பாதிக்கப்பட்டோம். சென்ற ஆண்டும் மழை இல்லை. இந்த ஆண்டும் மழை இல்லை. 50 லட்சம் ரூபாய் ஒதுக்கியது முழுவதும் செலவாகிவிட்டது. வளர்ச்சி மன்றக் கூட்டத் தீர்மானத்தின்படி கேட்ட 4½ கோடி ரூபாயில் இரண்டு கோடி ரூபாயாவது தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியபாளையத்தில் அணைக்கட்டுத் திட்டத்தினை நிறைவேற்ற வேண்டும். (மணி அடிக்கப்பட்டது.)

## 9. தன்னிலை விளக்கம்.

முதலமைச்சர் எழுப்பிய ஒரு வினாவிற்கு தான் விளக்கம் அளித்திருந்தும், தான் பதில் கூறவில்லையென "தமிழ்முரசு" நாளேட்டில் வெளியிடப்பட்டது குறித்து திரு. பெ. சீனிவாசன் அவர்களது விளக்கம்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, ஒரு சிறு பிரச்சினை. நேற்றைய தினம் நடந்த விவாதம் பத்திரிகையில் வெளியிடும்போது 'தமிழ் முரசு' என்ற பத்திரிகை தவறான முறையில் என்னுடைய பெயரைக் களங்கப்படுத்தும் நோக்கத்தோடு செய்தியை வெளியிட்டிருக்கிறது. முதல்வர் அவர்கள் பேச்சைப் போட்டுவிட்டு அதற்குக் கீழே இரண்டு வரி எழுதியிருக்கிறார்கள். அதை நான் படிக்கிறேன்—



"முதல்வர்: சபாநாயகர் அறையில் எம்.எல்.ஏ.-க்கள் எல்லாம் வந்து டெலிபோன் செய்ததாகச் சொல்கிறார். இருக்கட்டும், சரி, அறையை விட்டு விடுவோம். வீட்டுக்கு என்ன ஆயிற்று? எட்மண்ட் துணைத் தலைவராக இருந்தபோது அவர் வீட்டு டெலிபோன் கட்டணச் செலவு ரூ. 1,000 தான். நீங்கள் துணைச் சபாநாயகராக இருந்தபோது வீட்டிற்கான டெலிபோன் கட்டணம் ரூ. 10,000 ஆகியிருக்கிறதே"

என்று போட்டுவிட்டு அதற்குக் கீழே 'சீனிவாசன் இதற்குப் பதில் கூறவில்லை' என்று போட்டிருக்கிறது.

மற்றப் பத்திரிகைகள் எல்லாம் நான் கூறிய பதிலைப் போட்டிருக்க 'தமிழ் முரசு' பத்திரிகையில் வேண்டுமென்றே என் பெயரைக் கெடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு போட்டிருக்கிறார்கள். தாங்கள் அந்தப் பத்திரிகைக்கு அறிவுரை கூறினால் போதும். நான் உரிமைப் பிரச்சினையாகக் கொண்டு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பத்திரிகைகள் செய்தியைப் போடும்போது முழுமையாக இருக்க வேண்டும்...

திரு. நா. வீராசாமி: முதலமைச்சர் பேசியதைப் பல பத்திரிகைகள் அந்த மாதிரிப் போடுவதில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பொதுவாக எல்லாப் பத்திரிகைகளுக்குந்தான் கூறுகிறேன். பப்ளிகேஷனுக்கு ப்ரொட்டக்ஷனே அப்போதுதான்.

திரு. என். எஸ். பலராமன்: சட்ட மன்றத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றித் 'தென்னகம்' பத்திரிகையில் எப்படிப் போடுகிறார்கள்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் பொதுவாக எல்லாப் பத்திரிகைகளுக்கும் சொல்லுகிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: நான் அப்படிப் பாதி போடுவதைப் பற்றிச் சொல்லவில்லை. 'சீனிவாசன் பதில் சொல்லவில்லை' என்று செல்வாக்கான பத்திரிகை போடுகிறதே என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இனிமேல் அந்த மாதிரி நடந்தால் பிரிவிலேஜ் ஆக எடுத்துக் கொள்ளலாம்.

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (ஆ) தமிழ்நாடு 1975ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/75)—தொடர்ச்சி.

*திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, இந்தச் சபையிலே வீற்றிருக்கின்ற ஒவ்வொரு அமைச்சருடைய மானியங்களும் அனுமதிக்கப்பட்டு 631 கோடி ரூபாயும், அது வல்லாமல், இருக்கின்ற பல இனங்களிலே தந்திருக்கின்ற எல்லாம் சேர்த்து 845 கோடி, 10 லட்சம், 35 ஆயிரத்துக்கான ஒரு ஒதுக்கீடு இங்கே கோரப்பட்டிருக்கிறது. இந்த ஒதுக்கீடு தொகையை இந்தச் சபையிலே வைத்து விவாதித்து வழங்குவதிலே ஆட்சேபனை இல்லை.

ஆனால், 1974—75 ஆம் ஆண்டு சம்பந்தமான வரவு-செலவுக் கணக்கில் பார்க்கும்போது நம்முடைய மதிப்பீடுகளுக்கும் வரவுகளுக்கும் பல இனங்களில் வேறுபாடுகள் இருந்து பெரிய ஏற்றத்தாழ்வான நிலைமை இருந்தது என்பதைக் கண்டிருக்கிறோம். அதே போல் 1975—76-லும் மதிப்பீடுகள் சரியாக இருக்கும். அதன்பேரில் இந்த வரவு-செலவுகள் சரியாக இருக்கும் என்று எண்ண சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை முதலில் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். அப்படி இந்த நிதி ஒதுக்கீடு மதிப்பீடுகள் சரியாக வருங் காலத்திலாவது இருக்கும் என்று நினைக்கிறேன்.

அடுத்தாற்போல் இந்த நிதி ஒதுக்கீடு சம்பந்தமான பிரச்சினை வரும்போது இது முதலமைச்சராகவும், நிதியமைச்சராகவும் இருக்கின்ற ஒருவரால் கொண்டு வரப்படுகிறது. இப்போது இருக்கின்ற நிலைமையில் நம்முடைய மாநிலம் மிகவும் வறட்சியான நேரத்தில் இருந்து கொண்டிருக்கிறது. இந்த வறட்சிக்காக முதலமைச்சரும் நிதியமைச்சருமான அவர்கள் 55 கோடி ரூபாய் ஒதுக்கி மிகத் தீவிரமான காரியங்களைச் செய்ய முடிவை அறிவித்திருக்கிறார்கள். அந்தப் பணத்திலே கிட்டத்தட்ட 30 கோடி ரூபாய் மத்திய அரசிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட அந்தப் பணமும் கணக்கிலே கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் சமீபத்தில் ஏற்பட்ட ஒரு நிலைமை காரணமாக, நம்முடைய மத்திய நிதியமைச்சர் ஏதோ சொன்னதாக எடுத்துக் கொண்டு அவர்கள் நமக்குத் தருகிற பணத்தை வாங்கமாட்டோம் என்று முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், சொல்லுகின்றபோது 61 கோடி ரூபாய் தரப்பட்டிருப்பதாகவும் பாக்கியிருக்கும் பணம் விரைவில் கிடைக்கும் என்றும் சொல்லப்பட்டது.



அந்த ஆறேகால் கோடி போக பாக்கியுள்ள ஒன்றேகால் கோடி வாங்கப்பட்டதா அல்லது மறுக்கப்பட்டதா என்பதற்கான விவரங்கள் இதுவரை தரப்படவில்லை. அதே நேரத்தில் இந்த மாநிலத்தில் வறட்சி ஏற்பட்டு மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து அதைத் தீர்ப்பதற்கான பெரும் பொறுப்பை ஏற்கிற நேரத்தில் மத்திய நிதி அமைச்சர் அவர்கள் ஏதோ சொன்னார்கள் என்ற காரணத்திற்காக நான் அதை வாங்க மாட்டேன் என்று சொல்லி ஒரு வறட்சி நிதியை இங்கு ஏற்படுத்தி எல்லோரும் அதற்குப் பணம் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

நான் இந்த நேரத்தில் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசின் நிதி அமைச்சர் அவர்கள் அப்படிச் சொன்ன காரணத்திற்காக வாங்க மாட்டேன் என்று ஏன் சொல்கிறார்கள் என்று எண்ணிப்பார்த்தேன். திரு. கருணாநிதி அவர்கள் இந்த வார்த்தையைச் சொல்கிறபோது எந்த முறையில் சொன்னார்கள் என்பதை எண்ணிப் பார்த்தேன். அவர்களுக்கு மூன்று பொறுப்புகள், மூன்று பதவிகள் இருக்கின்றன. ஒன்று, அவர்கள் முதல் அமைச்சராக இருக்கிறார்கள், இரண்டாவதாக அவர்கள் நிதி அமைச்சராக இருக்கிறார்கள். மூன்றாவதாக அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருக்கிறார்கள். ஆகவே, இங்கே சொல்லப்பட்ட, எழுப்பப்பட்ட, வெளிப்படுத்தப்பட்ட குரல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்ற முறையில்தான் இங்கே வெளிப்படுத்தப்பட்டது என்ற அளவில்தான் நான் எடுத்துக் கொண்டேனே தவிர நிதி அமைச்சர் அல்லது முதல் அமைச்சர் என்ற முறையில் அந்தக் குரல் வந்தது என்பதை என்னால் எடுத்துக்கொள்ளமுடியாது. அரசியல் ரீதியாகத்தான் அந்தப் பிரச்னையை அவர்கள் எண்ணிப் பார்த்திருக்கிறார்களே தவிர, இந்த மாநிலத்தின் முதல் அமைச்சர் அல்லது நிதி அமைச்சர் என்ற முறையிலே எண்ணிப் பார்க்காமல் அந்தக் கருத்தைச் சொல்லிவிட்டார்கள் என்பதுதான் என் குற்றச்சாட்டு.

அதேபோன்று அவர்கள் நடந்துகொண்டால் இங்கே இந்த மன்றத்தில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள உறுப்பினர்களானாலும் சரி அல்லது மேலவை உறுப்பினர்களானாலும் சரி அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி அவர்களுக்கெல்லாம் அவர்களின் தலைவர் ஒரு தவறான பாதையைத்தான் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தலைவர் இம்மாதிரி ஒரு தவறான பாதையைக் காட்டிக்கொண்டிருக்கலாமா என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக இந்த வறட்சி நிலைமை இருக்கும்போது தரிசு நிலங்களைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. 11 லட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். நம் மாநிலத்தில் நிலம் இல்லாத ஏழைகள் எவ்வளவோ பேர்கள்

இருக்கிறார்கள். அதோடு வேலையில்லாப் பிரச்சனையும் இருக்கிறது. உணவை வேகமாக உண்டாக்க வேண்டிய ஒரு அவசியமும் இருக்கிறது. எனவே இராணுவத்தைப் போன்று ஒரு விவசாயப் படையை ஏற்படுத்தி அவர்களுக்கு அதில் சம்பளம் கொடுத்து அந்த நிலங்களை எல்லாம் பண்படுத்தி தலைக்கு ஐந்து ஏக்கர் வீதம் தருவதற்கு ஏற்பாடு செய்தால் உற்பத்தி பெருகவும் வாய்ப்பிருக்கும், அதோடு வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்க வாய்ப்பு இருக்கிறது. நூறு ஏக்கர் நிலம் எடுத்து ஒரு பண்ணை அமைப்பது என்றால் நம் நோக்கம் நிறைவேற வாய்ப்பில்லை.

அடுத்து, மின்சாரம் ஒரு முக்கியமான பிரச்சனை. எண்ணூரில் எல்லா யூனிட்களும் விரைவில் இயங்கும், விரைவில் சரியானபடி வேலை செய்யும் என்று சொல்லப்பட்டது. 4-ம் தேதி மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இன்னும் சில நாட்களில் இருக்கிற வெட்டைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அது நிறைவேறும் என்று கூறினார்கள். நான் விசாரித்த வரையில் எண்ணூரில் இருக்கிற இயந்திரங்கள் பூராவும் செக்கோஸ்லெவேக்கியா நாட்டிலிருந்து வந்திருக்கின்றன. அது ஆரம்பத்தில் வைக்கப்பட்ட போது ஏற்பட்ட கோளாறுகள் காரணமாக அங்கு இடைவிடாமல் கோளாறுகள் இருந்து கொண்டே இருக்கின்றன. அது முழுவதும் பிரித்துச் செய்யமுடியாத நிலையில் இருக்கிறது. அதில் இருக்கிற பாய்லர்களின் வெப்பத்தின் வேகம் தாங்க மாட்டாது ட்யூப்கள் ஓட்டையாகப் போய்விடுகிறது. ஓட்டையாகப் போன ட்யூப்களை மாற்ற வேண்டுமென்றால் பல நாட்களாகின்றன என்ற செய்தி சொல்லப்படுகிறது. இது உண்மையா என்று ஆராய்ந்து பார்த்து எண்ணூரில் உள்ள அமைப்பை மாற்றியமைக்காத வரையில் அது சரியாக வராது என்று சொல்கிறார்கள். இதைக் கவனத்தில் கொண்டு தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

அடுத்து, பேசின் ப்ரிட்ஜ் கன்வேயர் வேலை செய்யவில்லை . . . .

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : பேசின் ப்ரிட்ஜ் நல்ல முறையில் வேலை செய்கிறது. அதை ஏன் தொல்லைப் படுத்துகிறீர்கள் ?

(மணியடிக்கப்பட்டு திரு. அபுசாலி பேசுவதற்கு அழைக்கப்பட்டார்.)

<u>திரு. எம். சுரேந்திரன்</u> : என் தொகுதி பற்றி ஒரு வார்த்தை. என் தொகுதியில் உள்ள பாலமலையில் பாதை போட வேண்டும் என்று வெகு நாட்களாகக் கேட்டுக் கொண்டு



வருகிறோம். அது மலை ஜாதி மக்களுக்கு செய்கிற காரியம். அதற்கு முன்உரிமை கொடுத்து அந்தப் பாதையை ஏற்படுத்தித் தர வேணடும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(திரு. எம். ஏ. அபுசாலி எழுந்தார்.)

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : ஒரு உறுப்பினரை பேச அழைத்தால் அவர்கள் பேசவேண்டும். அல்லது பேசிக் கொண்டிருக்கும் உறுப்பினரை பேச அனுமதித்தால் அவர்களது பெயரை விட்டுவிட்டு அடுத்த உறுப்பினருக்குச் சென்று விட வேண்டியிருக்கும்.

<u>திரு. எம். ஏ. அபுசாலி</u> : தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீட்டு மசோதாவை வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக 1975-76-ம் ஆண்டிற்கு இந்த மக்கள் நல் வாழ்வுத் துறைக்காக பல கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் என் சொந்த ஊரான லால்பேட்டையில் ஒரு மருத்துவமனை வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டு வருகிறோம். ஆனால் இன்றுவரையில் அதற்கு ஒரு விமோசனமும் பிறக்கவில்லை. காரணம் எனக்கே புரியவில்லை. அந்த லால்பேட்டையில் 30,000 பேர்கள் முஸ்லிம்கள் வசிக்கிறார்கள் என்ற காரணத்தால் அதை ஒதுக்குகிறார்களோ என்னவோ தெரியவில்லை. நான் அரசைக் குறை சொல்வதாக நினைக்க வேண்டாம். இன்னும் பல மக்கள் அந்த லால்பேட்டையில் இருப்பார்களேயானால் அவர்களும் சேர்ந்து எங்களோடு கேட்டிருப்பார்கள்.

அந்த ஊரில் முஸ்லிம் கோஷா பெண்கள்தான் அதிகம். பல வருடங்களாகக் கேட்டு வந்த போதிலும் எங்களது அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாமல் இருப்பது வேதனையாக இருக்கிறது. லால்பேட்டையில் முஸ்லிம் சமுதாய மக்கள் அதிகமாக இருப்பதால் அந்தத் தொகுதியை ஒரு ஜெனரல் ஸீட்டாகக் கொடுத்தால்தான் நாங்கள் வரமுடியும். ஒரு முஸ்லிம் அந்தத் தொகுதியிலிருந்து எம்.எல்.ஏ. ஆக வர முடியுமோ என்பதே சந்தேகமாக இருக்கிறது. காரணம் தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த காட்டுமன்னார்குடியை ரிசர்வ் ஸீட்டாக ஆக்கிவிட்டார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : அதை எலக்ஷன் கமிஷன் வகுக்கிறது. மாநில அரசு ஒன்றும் செய்யமுடியாது.

<u>திரு. எம். ஏ. அபுசாலி</u>: அங்கு ஒரு மருத்துவமனை அவசியம் தேவை. அதை அவசியம் செய்து கொடுக்க வேண்டும்.

அடுத்து, கொள்முதல் விஷயம் பற்றி பலமுறை சொல்லியிருக்கிறேன். சித்திரையும் பிறந்துவிட்டது. மூன்று மாதமாக லெவி வைத்து நெல் அங்கே போகக்கூடாது இங்கே வரக் கூடாது என்றால் அரைகுறையாக இருப்பவர்கள் விற்கவும் முடியாது வெளியே கொண்டு போகவும் முடியாது என்ற நிலை ஏற்படுகிறது. ஆகவே விலையை சிறிது கூட்டிக் கொடுத்தால் கூட பரவாயில்லை.

அடுத்து, உரம் கொடுக்க கார்டு கொடுக்கப்படுகிறது. அதன் காரணமாக யார் யாருக்கு உரம் மிக அவசியமாகத் தேவைப்படுகிறதோ அவர்களுக்கு உரம் கிடைப்பதில்லை. தேவை இல்லாதவர்கள் அதை வாங்கி வெளியே விற்று விடுகிறார்கள். ஆகவே இந்த கார்டு முறையை மாற்றி மணியக்காரர் சர்டிபிகேட்டை வைத்துக் கொண்டு உரம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தமிழகத்தைப் பொறுத்து தமிழ்ப் புலவர்களுக்கெல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் நல்லதொரு மரியாதை கொடுத்து வாழ்வளித்திருக்கிறார்கள். முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த நாகூர் ஆவிதன் அவர்களின் குடும்பம் கஷ்டமான நிலையில் இருக்கிறது. எனவே, அவர்களது குடும்பத்திற்கு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு நிவாரண நிதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

உமர் புலவர் ஒருவர் இருக்கிறார், அவர்களுக்கும் நிதி உதவி அளிக்கவேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வக்கீல்களுக்குத் தான் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுப்பது வழக்கம். இப்போது வக்கீல் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்கிறார்கள். அது சரியல்ல.

திரு. எம். ஏ. அபுசாலி: விவசாயிகளுக்கு தாமதம் ஏற்படாதவகையில் கடன்கள் வழங்க வேண்டும் என்று கேட்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

[பிற்பகல் 12-30]

திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்க சட்ட முன்வடிவையொட்டி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களை இந்த அவை முன் வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஏற்கெனவே இந்த மன்றத்தில் சொல்லிச் சொல்லி, எதிர்க்கட்சிகளுக்கு நா தழும்பேறிப் போன ஒரு பிரச்சினையை, ஆளுங்கட்சியைச் சேர்ந்த சகோதரர்களுக்குக் கூட கேட்டுக் கேட்டு சலித்துப் போன ஒரு பிரச்சனையை, மீண்டும் நான்



சொல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதனை வருத்தத்தோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். விடை காண முடியாமல், விசுவ ரூபம் எடுத்துக் கொண்டிருக்கிற இந்தக் கேள்விக்குறிக்கு முதலமைச்சரவர்கள் இந்த நேரத்திலாவது நிச்சயம் பரிகாரம் காணுவார்கள் என்ற நம்பிக்கையோடு நான் இங்கே பேசக் கடமைப்பட்டிருக்கிறேன்.

லஞ்ச ஊழல் ஒழிப்பினுடைய ஆணையாளர் அவர்கள் சமீபத்தில் தெரிவித்த ஒரு கருத்தை நான் பத்திரிகையில் பார்த்தேன். ஊழல் என்று சொல்லும்போது, லஞ்சம் என்று சொல்லும்போது, அதிர்ச்சி அடையக் கூடிய மனோபாவம் கூடக் குறைந்துவிட்டதென்று அவர் குறிப்பிட்டிருந்தார். இது சமுதாயத்தில் நெளிந்து கொண்டிருக்கிற பொதுப் பிரச்னை. இந்த லஞ்ச ஊழல் கிருமிகள் எங்கே உற்பத்தியாகின்றன, இதிலே பல லட்சியவாதிகள் பலியாகிறார்களே, பாதிக்கப்படுகிறார்களே, அவர்களைக் காப்பாற்றுவதற்கு என்ன வழி என்பதை எதிர்கால சமுதாயத்தின் மேலே அக்கறை உள்ள அத்தனைபேரும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்றாகும். அது மட்டுமல்ல. இதிலே தங்களுக்கு வேண்டியவர்கள் பலியானாலும், மதிப்பிற்குரிய, மரியாதைக்குரிய, பாசத்திற்குரியவர்கள் பலியானாலும் தயவு தாட்சண்யமில்லாமல் களைந்தெறியப் படவேண்டிய பிரச்சினையாகும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுங்கட்சியின் மேலே புகார்களைச் சொல்லும் போது, குற்றச்சாட்டுகளைச் சொல்லும்போது அவைகளை அழுக்காறு காரணமாகவோ ஆத்திரத்தின் காரணமாகவோ சொல்லப்படுவதாக ஆளும் கட்சியைச் சேர்ந்த சகோதரர்கள் கருதக் கூடும். நான் ஆளுங்கட்சியில் ஊழல் தாண்டவமாடுகிறது, ஊழல் ஊற்றெடுத்துப் பொங்கி வழிகிறது என்று சொல்கிறபோது இன்னொரு பக்கத்தைச் சிந்தித்துப் பார்க்காமல் இல்லை. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இங்கே எதிர்த்தரப்பில் இருப்பவர்கள் புத்தர்களா, காந்தியா; ஏசுக்களா என்று கேட்பதைப் போல அப்படி ஒத்துக் கொள்ள வேண்டுமென்று நான் குறிப்பிடவில்லை.

இங்கே இருப்பவர்கள் மேலும் ஊழல் குற்றங்கள் இருக்குமானால், புகார்கள் இருக்குமானால் அதற்கான ஆதாரங்கள் இருக்குமானால் அதையும் நிச்சயமாகப் பரிசீலித்து உரிய தண்டனை தரவேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு கொள்ளவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உருவான காலத்திலிருந்தே இதைச் சொல்லி வருகிறது. தாயாதிக்காரர்களுக்கிடையில் சண்டை வருவது, போர் மூளுவது, தமிழகத்தில் ஒன்றும் புதுமையல்ல. இந்திய துணைக் கண்டத்தின் மிகப் பெரிய அரசியல் இதிகாசமான மகாபாரதம் இதைத்தான் சொல்கிறது.

ஆகவே நாங்கள் பிரச்சினையை எடுத்துச் சொல்கிறோம். சொல்கிற போது அழுத்தந் திருத்தமாக நாங்கள் ஒன்றைக் குறிப்பிட்டோம். இந்த அரசாங்கம் விசாரணைக் கமிஷனைச் சந்திக்க வேண்டும் என்று அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டோம். முதலமைச்சரவர்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டு நேற்றைக்குக் கூடச் சொன்னார்கள் என் மேலே புகார்கள் சொல்லட்டும், நான் சேர்ந்திருக்கிற கட்சியைச் சேர்ந்தவர்கள் மேலே புகார்கள் சொல்லட்டும், நான் நீதி மன்றத்தில் சந்திக்கத் தயார், எங்கே வேண்டுமானாலும் சந்திக்கத் தயார் என்று குறிப்பிட்டார்கள். நான் கூட அப்படி ஆத்திரத்திலே உணர்ச்சி வசப்பட்டு ஒன்றைச் சொல்ல மாட்டார்களாவென்று எதிர்பார்த்தேன். விசாரணைக் கமிஷனை சந்திக்கத் தயார் என்று சொல்லிவிட்டால் பிரச்சனை முற்றுப் பெற்று விடும் என்று நான் கருதினேன்.

நாடாளுமன்றத்தில் விசாரணைக் கமிஷன் சட்டம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கரு வைத்து பட்டா கத்தியாக உருவாக்கப் பட்ட சட்டமல்ல. இது 1952-ல் உருவாக்கப்பட்ட சட்டம். வட புலத்தில் பல மாநிலங்களுடைய அமைச்சர்கள் மேலே இந்தக் கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. பல அமைச்சர்கள் மேலே பல்வேறு விதமான குற்றச்சாட்டுகள் இந்த விசாரணைக் கமிஷன் முன்னாலே வந்ததற்குப் பிறகு பல நிலைமைகள் வெளிவந்திருக்கின்றன. அதிர்ச்சி தரத்தக்க உண்மைகள் வெளியாகியிருக்கின்றன. இந்த அரசில் தனிப் பட்ட யாரோ ஒருவர் மேல் ஒரு கட்சி உறுப்பினர் மேல் புகார் அல்ல. அராபிய இரவுக் கதைகளில் வருவதைப் போல இந்தப் புகார்கள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து இந்த அரசைச் சூழ்ந்திருக்கிற காரணத்தினால் இந்தக் களங்கத்தைக் கழுவிக் கொள்ள தமிழக மக்களுக்கு நாங்கள் ஒரு சுத்தமான நிர்வாகத்தை நடத்துகிறோம் என்று நிரூபித்துக் காட்ட விசாரணைக் கமிஷனை சந்திக்க வேண்டுமென்பதனை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படிப்பட்ட விசாரணைக் கமிஷனை சந்திப்பதற்கு இந்த அரசு முன் வந்து விடுமானால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரைக்கும் எடுத்துச் சொல்லி வந்திருக்கிற கோரிக்கைக்கு வெற்றி என்பதல்ல. அண்ணாவினுடைய தம்பிமார்களுக்குக் கிடைத்திருக்கிற மிக மகத்தான வெற்றியாகும்.

ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் நான் குறிப்பிட்டேன். விசாரணைக் கமிஷனை ஆளுங் கட்சி சந்திக்கட்டும். ஆளும் கட்சியோடு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த யார் யார் மேலே குறைகளைச் சொல்கிறதோ, புகார்களைச் சொல்கிறதோ அவர்களும் சந்திக்கட்டும். அந்த அக்கினிக் குண்டத்தில் அத்தனைபேர்களும் இறங்குவோம்.



எஞ்சியவர்கள் அண்ணாவின் கொள்கையைக் காப்பாற்றட்டும் என்று சொன்னேன். அதைத்தான் இந்த மாமன்றத்தில் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த அரசாங்கம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நியாயமான, நேர்மையான கருத்துக்களை எடுத்துச் சொல்கிற நேரத்தில் இந்தக் கருத்துக்களை வரவிடாமல் தடுக்க முயற்சி செய்கிறதே தவிர பரிசீலிக்கிற மன நெகிழ்ச்சியைப் பெற்றிருக்கவில்லை என்று வருத்தத்தோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பத்து மணிக்கு மேலே ஒலி பெருக்கி இயங்கக் கூடாது என்ற சட்டம் வந்தது. யாரைக் குறிவைத்து இந்த சட்டம் வந்தது ? நான் முதலமைச்சரவர்களை உருக்கத்தோடு கேட்க கடமைப் பட்டிருக்கிறேன். நம்மையெல்லாம், உங்களையெல்லாம் வளர்த்த ஒலிபெருக்கிக்கு துரோகம் செய்யலாமா, அதனுடைய குரல்வளையை நெறிக்க சட்டம் இயற்றலாமா ? அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மேலே ஏற்பட்டிருக்கிற வெறுப்பு, குரோதத்தால் செய்யலாமா ?

அது மட்டுமல்ல, இன்னொன்றைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். மதுரை மாநகராட்சி உருவாக்கப்பட்டது. என்னுடைய மதிப்பிற்குரிய அண்ணன் முத்து அவர்கள் மேலே அன்பின் காரணமாக உருவாக்கப்பட்டிருந்தாலும் மதுரை மக்கள் சார்பாக நன்றியினை அந்த மக்கள் இந்த அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் முத்தண்ணன் மேலே ஏற்பட்ட கோபத்தின் காரணமாக இந்த மாநகராட்சியை அவ்வளவு அவசரமாகக் கலைக்கவேண்டிய அவசியம் என்ன வந்தது என்றுதான் என்னால் புரிந்துக் கொள்ள முடியவில்லை. இவைகளையெல்லாம் எடுத்துச் சொல்கிற நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு என்மேலே ஆத்திரம் வரக்கூடும்.

ஆனால் முதலமைச்சரவர்களைப் பார்க்கிற போது எனக்கு நிச்சயமாக வருத்தம் ஏற்படுகிறது, கண்களில் நீர் துளிர்க்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆளும் கட்சி நண்பர்கள் இதற்காக இங்கே நகைச்சுவையோடு சொல்லக் கூடும். மிகுந்த வேதனையோடு தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆக, இந்த அரசாங்கம் தன்னுடைய களங்கத்தைக் கழுவிக் கொள்ள விசாரணைக் கமிஷனை சந்தித்தாகவேண்டும். இதுதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேண்டுகோள். அதைச் சந்திப்பதற்கு அரசு பயப்படுகிறதென்றால், நான் நேற்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சரவர்களிடத்தில் கற்றுக் கொண்ட வார்த்தைகளில் பதில் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படுகிறது. விசாரணைக் கமிஷனை சந்திக்க வகையற்ற இந்த அரசாங்கம் வக்கற்ற இந்த அரசாங்கம், தெம்பற்ற இந்த அரசாங்கம்

திராணியற்ற இந்த அரசாங்கம் குற்றச்சாட்டுகளைச் சொல்கிற எங்களுடைய தலைவர் எம். ஜி. ஆர் அவர்களை விமர்சிப்பதற்கு எந்த உரிமையும் இல்லை என்பதைத் தெரிவித்து அமைகிறேன், வணக்கம்.

<u>திரு. கே. டி. கே. தங்கமணி</u> : உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா இன்றைக்குப் பல விவாதத்தின் மூலமாக 631 கோடி ரூபாய் வரையிலும் நாம் செலவழிப்பதற்கு அங்கீகாரம் கொடுத்ததற்குப் பின்னால் நமக்கு முன்னால் வருகிறது. அங்கீகாரம் நாங்கள் கொடுத்து விட்டோம். ஒவ்வொரு மானியத்திலும் இவ்வளவு செலவழிக்க வேண்டுமென்று அங்கீகாரம் கொடுத்திருக்கிறோம். முறையாக செலவழிக்க வேண்டுமென்று சொல்வதற்குத்தான் இந்த மசோதாவின் பேரில் விவாதத்திற்கு தாங்கள் இடம் கொடுக்கிறீர்கள். அப்படி வருகிற போது சில பல விஷயங்களை உங்கள் மத்தியில் எடுத்துச் சொல்ல வேண்டும். ஆனால் நேரமில்லாத காரணத்தினால் சில விஷயங்களை மட்டும் தொட்டு காண்பித்து விடலாம் என்று நினைக்கிறேன். 10—4—1975ல் இந்தியன் எக்ஸ்பிரஸில் தலையங்கம் வந்தது.

அந்தத் தலையங்கத்திலே—

"The Chief Minister of Tamil Nadu has admitted that the contributions to the Drought Relief Fund he has set up are not adequate. It would be surprising if they were..........The money needed........ is so enormous..................The Chief Minister has said that there will be no compulsion on any member of the public to contribute to the Fund. But it is common knowledge that officials in the district strive might and main to fulfil 'targets' in collections of this kind and it is impossible to avoid compulsion."

நான் இதே கருத்தைத் தான் ஏற்கெனவே சொன்னேன். இன்றைக்கு ஒரு சர்குலர் கூட எலெக்ட்ரிசிடி போர்டினுடைய என்ஜினீயர் அனுப்பியிருக்கிறார்கள். ஒரு நாள் சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று இந்த மாதிரியான நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டு இருக்கின்றன.

என்ன இருந்தாலும் தேவையாக இருக்கக் கூடிய 10, 20 கோடி இதில் வருமென்று சொல்கிறார்களாவென்றால் இல்லை. இது ஏதோ கோபத்தின் காரணத்தினால் வேறு காரணத்தினால் கொண்டு வரப்பட்டதே தவிர வேறு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். தனிப்பட்ட கட்சிகள் வசூல் செய்யலாம் என்று சொல்லி, இப்படி கொடுப்பதனால் பேர் வாங்க வேண்டுமென்று சொல்லி, குறிப்பிட்ட முதலாளிகள், வடபாதிமங்கலம் போன்றவர்கள், எம். ஏ. முத்தையா



செட்டியார் வகையறுக்கள் போன்றவர்கள், பணம் கொடுக்கலாம். அதுமாத்திரம் இல்லாமல் இன்றைக்கு நம்முடைய பல இலாகாக்கள் லாபத்திலே இயங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ட்ரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்ட் லாபத்தோடு நடக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதிலிருந்து பணம் எடுப்பது முறை இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆளும் கட்சி வேண்டுமென்றால் தனியாக ஒரு நிதி அமைக்கட்டும். எங்கள் கட்சியைப் பொறுத்த அளவில் குறுகிய அளவில் நிதி வசூல் பண்ணிக் கொண்டு இருக்கிறோம். தொழிலாளர்கள் சாதகமாகக் கொடுக்கிறார்கள். இதுவரையில் சேர்ந்து இருப்பது ரூ. 40,000. இரண்டு மூன்று கிணறுகள் வெட்டி அவர்களுக்கு உதவி செய்யவேண்டியது கடமை என்று செய்கிறோம். இன்றைக்கு இந்த ட்ரௌட் ரிலீப் பண்ட் அரசு வசூலிக்க ஆரம்பித்து இருக்கின்றது சரியல்ல என்ற கருத்தை தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இரண்டாவதாக, நம் மன்றத்தில் பல முக்கியமான விஷயங்கள் விவாதிக்கப்பட வேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டும். பொதுவாக இன்றைக்கு பப்ளிக் சர்விஸ் கமிஷன் பற்றி பல கருத்துக்கள் சொல்கிறார்கள். இதைப் பற்றி விவாதிக்க ஏற்பாடு செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்தது ஆகும்.

அதே போன்று பல்கலைக் கழகத்தைப் பற்றி பலவிதமான கருத்து ஓட்டங்கள் வந்து இருக்கின்றன. யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் அடிப்படையில் கல்லூரி ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை. மற்ற மாநிலங்களில் கொடுக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இதைப்பற்றி தனியாக விவாதித்தால் முழு விவரம் கொண்டுவர ஏதுவாக இருக்கும்.

இரண்டு செய்திகள் வந்தன. ஒன்று பி. யூ. சி. தேர்வில் பிசிக்ஸ், மாதமேடிக்ஸ், பொறுத்த வரையில் கேட்கப் பட்டு இருக்கின்ற வினாக்கள் சிலபஸ்படி கேட்கப் படாததால் மாணவர்கள் வெளியிலே வேதனையோடு வந்து இருக்கிறார்கள். நேற்றைக்கு கடிதம் வந்தது.

பி. ஏ. பொறுத்தவரையில் For the Examination on Social History of England, the Examiner has confused Social History with Political and Economic History.

இப்படிப்பட்ட தவறுகள் வருகின்றன என்பதைப் பல்கலைக் கழகம் ஆடானமஸ் பாடியாக இருந்தால் கூட அதைப்பற்றிச் சொல்ல உதவிகரமாக இருக்கும் என்று உதாரணத்திற்கு எடுத்துக் காட்டுகிறேன்.

அடுத்தாற்போல் இன்றைக்கு சர்க்கரை ஆலைகளைத் தேசிய மயம் ஆக்க வேண்டுமென்று மானியத்தில் சொன்னார்கள். தேசிய மயம் ஆக்கலாம் என்று மத்திய அரசு சொல்லி இருக்கிறார்கள். இன்னொன்று கூடச் சொல்லி இருக்கிறார்கள். எந்த எந்த சர்க்கரை ஆலையைச் சேர்ந்தவர்கள் இப்போது கரும்பு விளைச்சலுக்குச் சரியான விலை கொடுக்காமல் இருக்கிறார்களோ அதை உடனடியாகச் செய்யுங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். இதை செய்யப் போகிறீர்களா என்று தெரிய வேண்டும்.

அதே போன்று ஆடிட் ரிப்போர்ட்டிலிருந்து சில விவரங்கள் கொடுப்பது உதவிகரமாக இருக்கும். ஏற்கெனவே இந்த ட்ரான்ஸ்போர்ட் மானியத்தில் பேசுகிற போது எப்படி மூன்று முதலாளிகள் அவர்களுடைய பஸ்களை எடுக்கிற நேரத்தில், குறிப்பாக கட்டடங்கள், மிஷினரி எடுக்கிற நேரத்தில் ரூ. 17 லட்சம் அதிகமாகக் கொடுத்து இருக்கிறோம் என்று சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். அதே மாதிரி அனிமல் அஸ்பண்ட்ரி பொறுத்த வரையில் பௌல்ட்ரி டெவலப்மெண்ட் கார்ப்பொரேஷன்

was formed in 1972. The Audit Report relating to it refers to serious irregularities and the loss to the tune of about Rs. 7 lakhs.

இந்த விஷயத்தைக் கண்டிப்பாக அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, வடாற்காடு மாவட்டத்தில் பூராவும் 300, 400 ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருந்து கொண்டு இருக்கிறார்கள். ஹெட்மாஸ்டர்களுக்கு ஏற்கெனவே ரூ. 70 சம்பள உயர்வு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கொடுக்கப்பட்டது. இந்த சம்பள உயர்வை திருப்பி வசூல் பண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். அது மாத்திரம் இல்லாமல் சிலபேர் சம்பள உயர்வு வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், சில பேருக்குக் கொடுக்கப்படவில்லை. ஏற்கனவே கொடுத்த இடத்தில் வாபஸ் வாங்கிக் கொண்டு இருக்கின்றார்கள் என்ற விஷயம் வந்து இருக்கிறது. இதைப் பற்றி உடனடியாகக் கல்வி இலாகா கொஞ்சம் துரிதமாக நடவடிக்கை எடுத்து நியாயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ப்ரொஹிபிஷன் சம்பந்தமாக ஒரு விவரம் கொடுக்கிறேன். அது என்ன என்று சொன்னால் 26—10—1974 அன்று ஈரோடு பக்கத்திலே இருக்கின்ற நசியனூரில் கள்ளச் சாராயம் குடித்து கருப்பண்ணன், அப்பண்ணா, ராமன், பெருமாள் அதே இடத்தில் இறந்து போய்விட்டார்கள். ஆஸ்பத்திரிக்குப் போன பிறகு இரண்டுப் பேர் இறந்து விட்டார்கள். ஒரே ஊரில் செத்தவர்கள் 6 பேர். இதை மன்றத்தில் எழுப்புவதற்குப் பல முறை முயற்சி செய்தேன். அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தால்கூட இதைக் கவனிப்பதாகத் தெரியவில்லை. இதைப் பற்றிச் சரியான விவரம் வேண்டும்.



8—3—75 அன்று கோஷா ஆஸ்பத்திரியில் ஒரு சம்பவம் ஏற்பட்டது. சர்க்கார் உத்யோகஸ்தராக இருந்தவர் தாக்கப்பட்டார். அதற்காக மறுநாள் ஐ. ஜி. அவர்களிடம் கம்ப்ளெயிண்ட் கொடுத்து இருக்கிறார்கள். கம்ப்ளெயிண்ட் கொடுத்த பிறகு இது வரையில் என்ன காரணமோ எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இது போலீஸ் இலாகாவைப் பொறுத்தது.

திருவான்மியூரில் பட்டப் பகலில் ரூ. 36,000 கொள்ளை அடிக்கப்பட்டது. என்ன நடவடிக்கை இது வரையில் எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை.

இதே மாதிரி திண்டிவனம் முனிசிபல் டிரஷரியிலிருந்து ரூ. 10,000 காணோம் என்று மூன்று நாளைக்கு முன்னால் பத்திரிகையில் செய்தி வருகிறது. இதையெல்லாம் எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால் ரூ. 10,000, ரூ. 36,000 கொள்ளை அடிக்கிற சம்பவங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. திறமையாகச் செயல்படுகிற போலீஸ் இலாகா என்ன செய்து கொண்டு இருக்கிறது என்று தெரியவேண்டும்.

இன்னொன்று, இது டவுன்ஷிப் சம்பந்தமானது. ராமேஸ்வரத்தை மறுபடியும் தேர்தல் நடத்தி பஞ்சாயத்து ஆக்க வேண்டுமென்று எல்லாக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள் என்று கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ராமேஸ்வரத்தைப் பொறுத்த வரையில் துரதிர்ஷ்டவசமாகப் பஞ்சாயத்திலிருந்து டவுன்ஷிப்பாக ஆகி இருக்கிறது. அதில் திருப்தி இல்லை. மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து ஆக்கி அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

ஹவுஸ் ஸர்ஜன்கள் 21 நாட்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். நேற்று முதலமைச்சரும் சம்பந்தப்பட்ட அமைச்சரும் பேசி ஓரளவுக்குத் தீர்த்து வைத்து இருக்கிறார்கள் என்பது பாராட்டத்தக்க விஷயம். இங்கே வந்து இருக்கின்றன சில விஷயங்கள். 300 பேர் மீண்டும் டாக்டராக எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்றும் ரெசிடன்ஷியல் டாக்டர்கள் எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்றும் யோசனை. நான் ஒரு ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக எல்லா சோஷலிஸ்ட் நாடுகளிலும் பாலிக்ளினி வைத்து இருக்கிறார்கள். இந்த மாதிரி இங்கேயும் டாக்டர்கள் வைத்துக் கொண்டு லட்சக் கணக்கான ரூபாய்கள் சம்பாதித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த பாலிக்ளினிக்கின் நோக்கம் என்னவென்றால் யார் வேண்டுமானாலும் எல்லா டெஸ்டுகளும் எக்ஸ்ரேயும் எடுத்துக் கொள்ளலாம். இப்படி அரசாங்கம், ஏற்பாடு செய்து வார்டுக்கு ஒரு பாலிக்ளினிக்

[ திரு. கே. டி. கே. தங்கமணி ] [ 1975 ஏப்ரல் 11

வைத்தால் கூடுதல் ஊதியமும் இருக்கும் வேலை கொடுக்கிற மாதிரியும் இருக்கும். இன்னும் விவரம் சொல்ல முடியும். இந்த நிலைமையில் அதிகமாகச் சொல்ல முடியவில்லை என்றாலும் இந்த மன்றத்தில் கொஞ்சம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் இந்த சர்க்கார் சம்பந்தமானது. நேற்று நான் நம் மானியத்தில் பேசுகிறபோது இந்த விஷயத்திற்குப் பதில் இல்லை. 1965-ம் வருடத்திலேயே நாலாந்திர சிப்பந்திகளுக்கு படி ரூ. 3 கொடுத்து இருக்கிறார்கள். என்.ஜி.ஓ-க்கள் பல்வேறு சர்வீஸ்களுக்கு ரூ.4 கொடுத்து இருக்கிறார்கள். கெஜட்டட் ஆபீசர்களுக்கு ரூ. 4 கொடுத்து இருக்கிறார்கள். கேரளாவில் அவர்களுக்கு $1\frac{1}{2}$ ரூ. 2 ரூ. அதிகமாகக் கொடுக்கிற நிலைமை இருக்கின்றது. கண்டிப்பாக இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விளாத்திக்குளம் தாலூகாவில் நியாயமான கோரிக்கைக்கு அர்த்தால் நடந்தது. சர்வ கட்சியைச் சார்ந்தவர்கள் தி.மு.க. உட்பட எல்லோரும் அர்த்தால் செய்த அடிப்படையில் 125 பேருக்கு மேலே கேஸ் போட்டு பதினைந்து நாள் சிறையில் இருந்தார்கள். இன்னும் அந்த வழக்குகள் வாபஸ் வாங்கப்படாமல் இருக்கின்றன என்ற செய்தி வந்து இருக்கிறது.

தமிழ்நாடு பூராவும் பருத்தி விலை வீழ்ந்து அதன் விலை 50 சத விகிதம் குறைந்து இருக்கிறது. ஏற்கெனவே லாங் ஸ்டேபிள் காட்டன்—வரலட்சுமி ரூ. 300, ரூ. 400 போல் வீழ்ந்து இருக்கிறது. இங்கே ஒரு காட்டன் கார்பொரேஷன் ஏற்படுத்தி கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தாற்போல கோயமுத்தூர் ஜில்லாவிலே பிச்சனூர் என்கிற இடத்தில் இருக்கின்ற ஒரு குத்தகை விவாயியைப் பிடித்து அவரைப் பலவிதமாக தொந்தரவு பண்ணி இழுத்துப் போய் இருக்கிறார்கள். ரூ. 20,000 பெறுமானமுள்ள நெல்லை கொள்ளை அடித்து விட்டார்கள். பிறகு செக் போஸ்டில் பிடித்து இருக்கிறார்கள். இதைப் பார்க்கும் போது குத்தகை விவசாயிக்கே இந்தப் பாடு என்று சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தமிழ்நாட்டிலே ஒரு திட்டக் குழு இருக்கின்றது. ஒரு பெர்ஸ்பெக்டிவ் ப்ளான் சமர்ப்பித்தார்கள். இதை விவாதிக்கலாம் என்று நினைத்தோம். இது விவாதிக்கப்படவில்லை. இதை ஒவ்வொரு இலாகாவுக்கும் பிரித்து முழுமையாகத் தமிழில் மொழிபெயர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் ஒவ்வொரு இலாகாவுக்கும் அதிக வேலை கொடுக்க முடியும். முழு விவரங்களைத் தமிழ் படுத்துவது நல்லதாக இருக்கும் என்று சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



1975 ஏப்ரல் 11]. [திரு கே. டி. கே. தங்கமணி]

இன்றைக்கு முதியோர் பென்ஷன் 20 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அது மிகவும் குறைவாக இருக்கிறது. அதை 50 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

தமிழக அரசு கூட்டுறவுத் துறையில் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் திட்டத்தைத் தீட்டினார்கள். தஞ்சை மாவட்டத்தில் திருவாரூரில் ஒன்று அமைக்கப்பட்டு, அது இப்போது நல்ல முறையில் லாபத்தோடு நடக்கிறது. அதே மாதிரி பட்டுக்கோட்டை—நாகப்பட்டினம் ரூட்டில் ஒரு ஆலையை 60 ஆயிரம் ரூபாய் வாங்கி ஆரம்பித்தார்கள். அந்த ஆலை நல்லமுறையில் நடக்க இப்போது இருக்கிற அமைச்சர் எந்த விதமான ஏற்பாடும் செய்யவில்லை. சுமார் 5 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள மெஷின் எல்லாம் சும்மா தேங்கிக் கிடக்கிறது. எப்படி திருவாரூரிலே நடக்கிறதோ அதேமாதிரி இந்த ஆலையும் நடக்க ஏற்பாடு செய்ய வேணடும்.

எண்ணூற்று சொச்சம் கோடி ரூபாயை இந்த மாநில அரசு செலவழிக்கப் போகிறது. 630 கோடி ரூபாய் செலவழிக்கலாம் என்று நாம் இந்தச் சபையில் ஒட்டளித்து சொல்லியிருக்கிறோம். இந்த விஷயங்களை எல்லாம் பார்த்து, கொஞ்சம் நாணயமாகச் செலவழிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமீபத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தில் மணலியில் ஒரு முஸ்லீம் தோழர் கைது செய்யப்பட்டு, நன்றாக அடிக்கப்பட்டு, கடைசியில் அவர் தற்கொலை செய்துகொண்டு விட்டார் என்ற விபரம் எல்லாம் என்னிடம் இருக்கிறது. பலரும் அதுபற்றி ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார்கள். நான் அதைப் பற்றி ஒன்றும் கேட்கவில்லை என்று என் மீதும் குற்றம் சொல்கிறார்கள். அதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். குறிப்பாக, போலீஸ் இலாகா, சுகாதார இலாகா, அனிமல் ஹஸ்பண்டரி இலாகா, கல்வி இலாகா போன்ற முக்கியமான இந்த இலாக்காக்களில் கொஞ்சம் முறையாகச் செயல்பட வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*<u>திரு செ. கந்தப்பன்</u>: துணைத் தலைவரவர்களே, நல்ல இனிய தமிழில், எளிதாக எல்லோருக்கும் புரியக் கூடிய வகையில். ஆக்கப் பூர்வமாக, பயனுள்ள வகையில், குறிப்பாக ஏழை எளிய நடுத்தர மக்களின் வாழக்கைத் தரத்தை உயர்த்தும் வகையிலான ஆக்கப் பணிகளைக் கடந்த ஐந்து ஆறு ஆண்டுக் காலமாக தன்னுடைய நிதி நிலை அறிக்கையில் படைத்ததின் மூலம் இந்த மன்றத்திற்கும் மண்ணுக்கும் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெருமை சேர்க்கிறார்கள் என்பதை நான் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

"நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமின்...."

என்பதற்கொப்ப, இத்தகைய பெருமைகளைப் போற்ற, நமக்கு நெஞ்சம் இல்லை என்றாலும் அவர்களை சோர்வடையச் செய்யுமாறு ' கிரிட்டிசிசம் ' இருக்கக் கூடாது என்பதைக் குறிப்பிடுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். கிரிட்டிசிசமே கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் ' அன் இன்ஃபார்ம்டு கிரிட்டிசிசம் ' இருக்கக் கூடாது. ; பொருளற்ற செய்தியற்ற வாதம் இருக்கக் கூடாது.

நேற்றும் அதற்கு முன்பும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை இங்கே சொன்னார்கள். நண்பர் காளிமுத்து அவர்கள் ஊழலைப் பற்றி அடிக்கடி சொல்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். கிட்டத்தட்ட 2,500 ஆண்டுகளுக்கு முன்னால் உலகச் சிந்தனையாளன் சாக்ரட்டீஸ் தன்னுடைய இறுதி கால வாக்குமூலமாக,

'I was really too honest to become a politician'

என்று சொன்னதாக ' பிளாட்டோஸ் அப்பாலஜி ' என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறார். நான் அரசியல்வாதி ஆக முடியவில்லை, ஏனென்றால் நான் நாணயமாக நேர்மையாக இருக்கிறேன் என்று எழுதியிருக்கிறார். 2500 ஆண்டுகளுக்கு முன்னால் உலகச் சிந்தனையாளன் இப்படி எழுதியிருக்கிறார்.

இத்தகைய அரசியல் உலகத்தில் நாம் எல்லாம் இருந்து வருகிறோம். இந்த நாட்டிலே இருக்கிற அரசியல் வாதிகளிடத்தில் இந்த நாட்டு மக்களின் தலைவிதி ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. இன்றைக்கு எதிர் கட்சியிலே இருக்கிறவர்கள் ஆளும் கட்சியினரை எந்த ஆயுதத்தை எடுத்துக் கொண்டு தாக்குகிறார்களோ அதே ஆயுதத்தைக் கொண்டு நாளை மற்றவர்களைத் தாக்கும் நிலை நாட்டிலே வரும் என்பதை உணர்ந்து, விவாதங்களிலே நாம் சொல்வது நியாயமாக இருக்கிறதா, நாம் சொல்வதில் உண்மை இருக்கிறதா என்று சீர்தூக்கி, சிந்தித்துப் பார்த்துச் சொல்ல வேண்டும். அப்படி இருந்தால் தான் அரசியல்வாதிகளை எதிர்காலத்தில் மக்கள் நம்புவார்கள். ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தைக் களங்கப்படுத்த வேண்டுமென்று நினைத்துக் கொண்டு சிந்தனையற்ற சொற்களை அள்ளி வீசுவார்களேயானால், அது திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பின்னால் இருக்கிற மக்களாட்சியின் தத்துவத்திற்கே ஆபத்தானதாக வந்து முடியுமே தவிர கழகத்திற்கு ஆபத்து என்று நான் கருதமாட்டேன்.

பல குற்றச் சாட்டுக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்கெல்லாம் அடிப்படையான ஆதாரம் இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். மக்கள் முன்னால் விளம்பரமாக, இருக்கிற யார் மீதும் மண்ணை வாரித் தூற்றலாம், எல்லோருக்கும் தெரியும்.முதலமைச்சரவர்கள் ஆயிரம் தடவைச் சொல்லிவிட்டார்கள், அதில் நியாயம் இருக்கிறதா இல்லையா என்பதை நல்ல



நெஞ்சம் படைத்தவர்கள் சிந்தித்துப் பார்த்து, ஒப்புக் கொள்ள வேண்டும். பதிலுக்கு நானும் வார்த்தைகளை அள்ளி வீசமுடியும். ஆனால் நான் அதை விரும்பவில்லை. குறிப்பாக நான் கடிய பதங்களைச்சொல்ல விரும்பவில்லை.

என்னுடைய கருத்து, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஊழலினுடைய சில பலகீனங்களின் காரணமாக வளர்ந்திருக்கிற ஒரு கட்சி என்று நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட ஒரு 'இயக்கத்தைச் சேர்ந்திருக்கிறவர்கள், அவர்கள் உட்கார்ந்திருக்கிற இடத்தில் பலகீனம் இருக்கிறது என்ற காரணத்தால் அதைப் போலவே மற்றவர்களும் இருப்பார்கள் என்ற எண்ணத்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து அவதூறு சொல்கிறார்கள். இப்படியே தொடர்ந்து அவர்கள் சொல்லிக் கொண்டே இருப்பார்களானால், எதிர் காலத்திலே அரசியல் வாதிகளுக்கு மக்கள் மத்தியிலே ஒரு களங்கத்தை ஏற்படுத்திவிடும். அரசியல் வாதிகளை மக்கள் நம்பாத நிலை ஏற்பட்டு விடும். அப்போது உலகச் சிந்தனையாளன் சாக்ரட்டீஸின் இறுதி வாக்குமூலத்திற்கு ஒப்ப அரசியல்வாதிகள் ஒதுக்கப் பட்டு விட்டால் இந்த நாட்டில் யாருக்கும் எந்தவிதப் பயனும் ஏற்படப் போவதில்லை.

இங்கே வறட்சிபற்றி திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். கேள்வியை மட்டும் எழுப்பினால் போதாது. அதிலுள்ள தன்மைகளை எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் ஏறத்தாழ 70 கோடி ரூபாய் திட்டத்திற்காக டில்லியிலிருந்து கொடுக்கப்படுகிறது என்று கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். 70 கோடி ரூபாய் தமிழகத்திற்கு அவர்கள் கொடுக்கிறார்கள், என்ற கணக்கைச் சொன்னவர் தமிழ்நாட்டிலிருந்து 4 1/2 கோடி மக்களின் சார்பில் பல்வேறு உருவில் டில்லிக்கு எவ்வளவு மூலதனம் போகிறது என்ற கணக்கை சொல்ல மறந்துவிட்டார்.

டில்லியில் 10,000 கோடி ரூபாய்க்கு பட்ஜெட்டில் போடுகிறார்கள். அந்த 10,000 கோடி ரூபாய் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிலிருந்து போகிற ஒரு குத்து மதிப்பாகச் சொல்கிறேன், 700 அல்லது 800 கோடி ரூபாயும் அடங்குகிறது. இது எந்த அளவுக்குச் சரியாக இருக்கும் என்பதை டில்லியிலிருந்து வேண்டுமானால் சொல்லட்டும். மத்திய அரசு சரியான கணக்கைச் சொல்லட்டும். இந்த நாட்டின் பாதுகாப்புக்காகச் செய்கிற செலவைத் தவிர மத்திய அரசினால் செய்யப்படுகின்ற செலவுகள் எல்லாம் நியாயமான செலவுகள் என்று நான் சொல்ல மாட்டேன். அவர்கள் எப்படிச் செலவிட்டாலும் அதைப்பற்றி இங்கே எதுவும் சொல்வதில்லை. தமிழ்நாட்டிலிருந்து அங்கு போகிற மூலதனத்தைப் பற்றி எதுவும் இங்கே சொல்வதில்லை

ஆனால் அவர்கள் கொடுக்கிற 70 கோடியைப் பற்றி மட்டும் பெரிதாகச் சொல்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் 'பூசணிக்காய் போன இடத்தை விட்டு விட்டு, ஊசி போன இடத்தைத் தேடிக்கொண்டிருப்பது போல' தான் இருக்கிறது.

வறட்சிப் பணம் பற்றி கலைஞர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். ஆறாவது திட்டத்திற்கு இதைக் க்டனாக ஏற்றுக் கொண்டால் ஆட்சேபணை இல்லை என்று சொன்னார்கள். இப்போது இருக்கிற பளுவைக் குறைக்கும் என்ற எண்ணத்தில் சொன்னார்கள். இன்றைக்கு நாம் வாங்கவில்லை என்றால் அதனால் நமக்கு ஏதாவது இழப்பு இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. காரணம், இன்றைக்கு வறட்சி என்ற பெயரால் நாம் பெற்றுக் கொள்ளாவிட்டால் பின்னால் திட்டத்தில் அதை நாம் பெற்றுக் கொள்ளலாம். அன்றைக்கும் இன்றைக்கும் அடிப்படையில் இருக்கிற வித்தியாசம், நம்முடைய மானம் இன்றைக்குக் காப்பாற்றப்பட்டிருக்கிறது. அதைத்தான் நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். அதை உணர்ந்து கொள்ளாமல் வேண்டுமென்றே தவறான கருத்துக்கள் கூறப்படுவதும் 'அன் இன்ஃபார்ம்டு கிரிட்டிசிசம்' செய்வதும் மக்கள் மத்தியிலே அரசியல்வாதிகளுக்கு அவப் பெயரை ஏற்படுத்துமே அல்லாமல் வேறு எந்த விதமான பயனும் இருக்கப் போவதில்லை.

நேற்றையதினம் கூட சில உறுப்பினர்கள் மீன்வளம் பற்றிக் குறிப்பிடும்போது படகுகளிலுள்ள ''மரைன் எஞ்சின்'' பற்றிக் குறிப்பிட்டார்கள். மெஷின் எல்லாம் கெட்டுவிட்டது; இங்கே இருக்கிற மீன்பிடி படகுகள் எல்லாம் காட்சி சாலையில் வைக்கப்பட வேண்டியவைகளாகத்தான் இருக்கின்றனவே அல்லாமல் மீன்பிடிக்க தகுதியற்றவைகளாக இருக்கின்றன. என்று சொன்னார்கள். நம்முடைய தமிழ்நாட்டில் ஜப்பான் கொலாபரேஷனுடன் 'யான்மார் எஞ்சின்' உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்றை எண்ணூரில் தொடங்க நில ஆர்ஜிதம் கூட செய்தோம். ஆனால் பூனாவில் இருக்கிற கிருலோஸ்கரும் மற்றவர்களும் இதனால் பாதிக்கப்படுவார்கள் என்று எண்ணி, நம்முடைய இந்தத் திட்டத்திற்கு அனுமதி கொடுக்க மறுத்துவிட்டார்கள். இந்த யான்மார் எஞ்சின் உற்பத்தி செய்ய அனுமதி கிடைத்திருந்தால் நல்ல முறையில் படகுகள் தயார் செய்து, மீன் வளத்தைப் பெருக்கி கொள்ள முடியும்.

மீன்பிடிப் படகுகளைப் பற்றி மீனவர்களைக் கேட்டபோது சொன்னார்கள். உள்நாட்டு எஞ்சினில் வெப்பம் அதிகமாக வெளிவருகிறது. யான்மார் எஞ்சின் வெப்பத்தை வெளிவிடுவதில்லை; வெப்பம் வெளியிடாத யான்மார் எஞ்சின்தான் மீன்பிடித் தொழிலுக்கு ஏற்றது என்று இங்குள்ள மீனவர்கள் மட்டுமல்ல; எல்லாப் பகுதிகளிலுள்ள மீனவர்களும் சொன்



னார்கள். மத்திய அரசின் மதிப்பீட்டுக் குழுவில் நான் சென்றபோது இக்கருத்துச் சொல்லப்பட்டது. ஆனால் இங்கே பேசியவர்கள் ஏதோ இங்கே இருப்பவர்கள் எதுவும் செய்யவில்லை என்ற முறையில் சொன்னார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: 10 நிமிடம் ஆகிவிட்டது. இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்து விடுங்கள்.

<u>திரு. செ. கந்தப்பன்</u>: இன்னும் விவரங்கள் நிறைய இருக்கின்றன. நேரம் போதாததால் மேற்கொண்டு விவரங்களுக்குள் நான் போக விரும்பவில்லை. ஏராளமான குறிப்பு இருக்கிறது. இந்தத் தொடர் கூட்டத்தில் இன்றைக்குத் தான் முதன் முதலாகப் பேசுகிறேன் என்று நினைக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: அறவுரையில் நேரம் போய்விட்டது. இப்போதுதான் சப்ஜெக்டுக்கு வந்திருக்கிறீர்கள்.

[பிற்பகல் 1-00]

<u>திரு. செ. கந்தப்பன்</u>: இந்த நாட்டு உழவர் பெருங்குடி மக்கள்—உழவையே நம்பிப் பிழைக்கிற பிரிவினர்—கடந்த சில ஆண்டுகளாக ஒரு கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வைத்து வருகிறார்கள். அது முக்கியமான பிரச்சினை. அதைப்பற்றியே நான் இன்றைக்குப் பேச விரும்புகிறேன். நமது மாண்புமிகு கலைஞர் அவர்கள் 1969-ல் முதல்வர் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடனேயே கிராமப்புறங்களில் உழவையே நம்பி வாழ்கிற மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பற்றிக் குறிப்பு எடுக்கக் கேட்டுக்கொண்டார்கள். பின்தங்கிய சமுதாய மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்ற உயர்ந்த கருத்தோட்டத்தில் அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையைப் பாராட்டுகிறோம். ஏதோ காரணத்தினால் அந்தப் பணி அரைகுறையாக நின்றுவிட்டது. மீண்டும் தொடர்ந்து இந்த முயற்சி பலமுனையில் பலரால் மேற்கொள்ளப்பட்டது. அதுபற்றிய புள்ளிவிவரங்கள் எல்லாம் இருக்கின்றன. நேரம் இல்லாத காரணத்தினால் அவற்றை எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கை—தங்களுடைய முக்கியமான தேவை கடந்த காலத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்று அவர்கள் மிகவும் வேதனைக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

பொதுவாக நம் நாட்டில் நகர்ப்புறங்களில் இருக்கிறவர்கள் பெறுகிற வசதிகளைக் கிராமப்புறங்களில் இருக்கிறவர்கள் பெறவில்லை—அதுவும் விவசாயத்தை நம்பி வாழ்கிற மக்கள் பலவித

மான சங்கடங்களுக்கு இன்றையதினம் ஆளாகியிருக்கிறார்கள். இந்தச் சட்ட மன்றத்திலுள்ள பல்வேறு உறுப்பினர்களும் முதலமைச்சரிடத்தில் இது பற்றி மனுக் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு சில மாதங்களில் பள்ளிகள், கல்லூரிகள் திறக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அதற்குள்ளே இந்தச் சமுதாய மக்களுக்கு நியாயமாக அளிக்கப்பட வேண்டிய சலுகைகள் அளிக்கப்பட்டாக வேண்டும். பொதுவாக நம் நாட்டில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரசியல் அமைப்பில் அளிக்கப்பட்டிருக்கிற பாதுகாப்பு பின்தங்கிய சமுதாயத்தினர்களுக்கு அளிக்கப்படவில்லை. நமது முதல்வர் அவர்கள்தான் இதற்காக ஒரு தனி அமைப்பையே ஏற்படுத்தி இந்தப் பின்தங்கிய சமுதாய மக்களுக்கு வாழ்வளிப்பதில், ஒளி காட்டுவதில் முன்னோடியாக இருக்கிறார்கள் என்பதை நாங்கள் உணர்ந்து பாராட்டுகிறோம். அவரது காலத்திலேயே இந்த கொங்குவேளாளர் சமூகத்தையும் பின்தங்கியவர்கள் பட்டியலில் சேர்க்கவேண்டும். அருள்கூர்ந்து அந்த அறிவிப்பினை இன்றே வழங்க வேண்டுமென்று அந்த மாபெரும் சமூகத்தின் சார்பாகக் கேட்டுக்கொண்டு இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கல் மசோதாவில் எங்கள் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

அறுநூறு கோடிக்கும் மேலான நிதி ஒதுக்கல் மசோதாவில் பல்வேறு விஷயங்களுக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மூதன் முதலில் வறட்சியைப் பற்றி ஓரிரு கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். வறட்சி நிதி வசூல் சம்பந்தமாக எங்கள் கட்சியைப் பொறுத்த அளவில் எவ்விதக் கருத்து வேறுபாடும் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். தமிழகத்தில் வாழ்கிற மக்கள் துன்பத்தினால், துயரத்தினால் வாடி வதங்குகிற நேரத்தில் இதை ஒரு புனிதமான கடமையாக ஏற்றுச் செய்ய வேண்டும் என்பதில் ஆட்சேபணை இல்லை. ஆனால், ஒரு சில இடங்களில் அதிகாரிகள் இந்த நிதிக்கு பணம் அளிக்கவேண்டுமென்று மக்களைத் துன்புறுத்துவதாகத் தெரிகிறது. அந்தமாதிரியான தவறுகள் நிகழக்கூடாது என்பதை முதலமைச்சர் அவர்களது கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நாகர்கோவிலில் ஆர்.டி.ஓ. சிறிய சிறிய டாக்சிக்காரர்களை எல்லாம் இத்தனை ரூபாய்கள் கொடுத்தாகவேண்டுமென்று வற்புறுத்துவதாகக் கடிதம் வந்திருக்கிறது. அந்தமாதிரி வற்புறுத்தல் தேவையில்லை. வறட்சியைப் பொறுத்தவரையில் இதை ஒரு தேசியப் பிரச்சினையாக நாம் அணுகவேண்டுமென்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் வறட்சிப் பகுதிகளில் வரி வசூல் கெடுபிடியாக இருப்பதாகவும் பல புகார்கள் வந்திருக்கின்றன.



(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

குறிப்பாக தர்மபுரி மாவட்டத்திலிருந்து வந்துள்ள புகாரை முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

'Farmers particularly Harijans are harassed by the revenue Officials very much in Rangipatti, Uthangarai Taluk, Dharmapuri District, in collecting Kist due to the Government'.

தலைவர் அவர்களே, இந்தக் கிராமம் இப்போது வறட்சிப் பகுதியாக இருக்கிறது. பல்வேறு அரிசன மக்கள் வரி கட்டுவதற்கு வசதி இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் 576/1, 50/2, 50/3, 54/4 இப்படி பல சர்வே நம்பர்கள் கொடுத்திருக்கிறார்கள்—இதற்கெல்லாம் நோட்டீஸ் வழங்கப்பட்டு கட்டவில்லை என்றால் சொத்து பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இதை நான் காலிங் அட்டென்ஷன் நோட்டீசாகக் கொடுத்தேன். தலைவர் அவர்கள் அப்ரோப்ரியேஷன் பில்லில் பேசலாம் என்று கூறிய காரணத்தினால் இப்போது அதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

குடிதண்ணீர்ப் பிரச்சினை எங்கும் மிகக் கடுமையாக இருக்கிறது. சென்னை மாநகரில் உள்ள பிரச்சினை கொஞ்சநஞ்சமல்ல. இன்று மக்கள் எல்லாம் தண்ணீருக்குத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். புது வருஷம்—ராட்சஸ என்ற பெயருடன் பிறக்கிற வருஷத்திலாவது நல்ல மழை பெய்து மக்களுடைய துயர் நீங்குமோ என்னமோ தெரியவில்லை. நல்ல மழை, வருகிற வருடத்திலாவது இருக்குமென்று நம்புகிறோம்.

பழனி முனிசிபாலிட்டி சேர்மென் அவர்கள் ஒரு தந்தி அனுப்பியிருக்கிறார்கள். 'Water supply dried up. Drought Relief Fund fully utilised. Pray for further allotment of funds for drought relief என்று கேட்டிருக்கிறார்கள். இந்த மாதிரிப் பல்வேறு இடங்களில் வறட்சிநிலைமை கடுமையாகியிருக்கிறது. அதிகமாகப் பணம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தில் இருந்து ஒதுக்கியிருக்கிற பணத்தில் அவர்களுக்கும் போதிய அளவில் கொடுத்து உதவவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இளைஞர் அணியைப்பற்றி ஒரு வார்த்தை. கிட்டத்தட்ட இந்த அணியில் 400 இளைஞர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் பட்டதாரிகள்—மேல் படிப்பு பட்டதாரிகளும் இருக்கிறார்கள். இவர்களது நிலையை மறுபரிசீலனை செய்யவேண்டும். பெரிய டைலமாவாக—ஊசலாடுகிற தன்மையில் இவர்களது நிலை இருக்கிறது. எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக இருக்கிறது. அவர்கள் செய்த தவறினை மன்னித்து. அவர்களை மீண்டும் சேர்த்துக்கொள்ள மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்குயரி கமிஷனைப் பற்றி ஒரு வார்த்தை. முன்பு நமது சட்டமன்றத்திலேயே கூறினேன். முன்பு ஒரு என்குயரி கமிஷன் போட்டபோதே—ராமகிருஷ்ணன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ரூல்ஸ் பிறப்பிக்க வேண்டும் என்றார்கள். இப்போதும் ரூல்ஸ் அண்டு ரெகுலேஷன்ஸ் அமைக்கப்பட்டிருக்கிறதா, இல்லாவிட்டால் உடனடியாக அவற்றைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பெரியகுப்பம் பொறுத்தவரை அந்த அறிக்கை விரைவில் இந்த அவைக்குத்தரப்படும் என்று கூறினார்கள். இந்த பட்ஜெட் கூட்ட கடைசி நாளான இன்று அது தரப்படும் என்று எதிர்பார்த்தோம். இன்னும் ஏற்பாடாகவில்லை என்று சொன்னால் அடுத்த வார இறுதிக்குள்ளாவது அந்த அறிக்கையைத் தரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, லெவி ப்ரக்யூர்மென்ட் பற்றி ஒரு வார்த்தை கூற வேண்டுமென்று நினைக்கிறேன். விவசாயிகள் எல்லாம் லெவியைப்பற்றி பல்வேறு ஆட்சேபனைகள் கூறியிருக்கிறார்கள். கஷ்டமான நிலைமையிலே லெவி என்று சொன்னால், யாரும் வரவேற்க மாட்டார்கள், விவசாயப் பெருமக்கள் வாயில்லாப் பூச்சிகளாக இருந்து கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கெல்லாம் பல்வேறு தந்திகள் வருகின்றன. புகார்கள் வருகின்றன. Procurement without tears என்று நாமெல்லோரும் நம்முடைய கொள்கையை அழகாக வகுத்திருந்தாலும் இன்று ப்ரக்யூர்மென்ட் செய்கிற இடத்திலே பல்வேறு முறைகேடுகள் நடப்பதையெல்லாம் எடுத்துக் கூறினார்கள்.

கோவிலிலே பூஜைக்காக வைத்திருந்த நெல்லை எடுத்திருக்கிறார்கள் அதிகாரிகள். அது வருந்தத்தக்கது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்த மாதிரி பல்வேறு இடங்களிலே நடந்திருக்கின்றன.

அதிலும் தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற விவசாயிகள் பல்வேறு புகார்கள் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கிற கஷ்ட நஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அவர்களுக்கு ரூ. 100 தான் கொடுக்கிறார்கள். அது கட்டுபடியாகக்கூடிய விலையில்லையென்று கூறுகிறார்கள். அதைப்பற்றி விரிவாக விவாதிக்க வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. அங்குள்ள விவசாயிகளைப் பாதுகாக்கின்ற வகையிலே அவர்களுக்கும் கொஞ்சம் ஊக்கத்தைக் கொடுக்கவேண்டுமென்று கூற விரும்புகின்றேன். ப்ரக்யூர்மென்டிலே இருக்கிற கஷ்டங்களையும் துன்பங்களையும் நீக்க அரசாங்கம் வழிவகை செய்யவேண்டும்.

நான் நேற்றைய தினமே பேசவேண்டுமென்று நினைத்த இரண்டு விஷயங்களைக் கூறி முடித்துவிடலாம் என்று நினைக்கிறேன். வாச் அண்டு வார்ட்களுக்கு—காவலர்களுக்கு ரூ. 1.50 தான் படி



கொடுக்கிறார்கள் என்று பலர் கூறினார்கள். அது மிகவும் குறைவாக இருக்கிறது. அவர்கள் இலாகாவிலே வேலை செய்கிற நேரத்திலே. அவர்களுக்கு ரூ. 3 கொடுக்கிறார்கள். ஆகவே, குறைந்த பட்சம் ரூ. 3 கொடுக்க வேண்டுமென்பதை நான் முதலமைச்சரவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே மாதிரி, இந்தச் சட்ட மன்றத்திலே பணியாளர்களாக இருக்கக்கூடிய ரிப்போர்ட்டர்களுக்கும் செக்ஷன் ஆபீஸர்களுக்கும் சிறப்பூதியம் ரூ. 75 கொடுக்க வேண்டுமென்று பல்வேறு உறுப்பினர்கள் கூறினார்கள். நானும் அதைக் கொடுப்பது நியாயம் என்றே கருதுகிறேன். அவர்கள் சட்டமன்றம் நடக்கிற நேரத்திலே ஆந்திராவிலே கொடுத்தது மாதிரி போனஸ் வேண்டுமென்று பல்வேறு பிரச்சினைகளைக் கூறினார்கள். அதையும் வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன். பொதுவாக, நமது சட்டமன்ற இலாகாவானது தனி அடிப்படையாக இயங்குவதற்கு அந்த ஊழியர்களையும் ஊக்குவிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூற விரும்புகிறேன்.

அதேமாதிரி பியூன்களுக்குக் கொடுக்கிற ஓவர்டைம் அலவன்ஸைக் குறைந்தபட்சம் ரூ. 3 என்று வைத்துக் கொடுக்கவேண்டும். கேரளத்திலே அப்படிக் கொடுக்கிறார்கள். இப்பொழுது கொடுப்பது மிகவும் குறைவாக இருக்கிறது என்ற கருத்தையும் கூற விரும்புகிறேன். பல்வேறு நாட்கள் டெம்பரரியாகவும், பல்லாண்டுகள் செயலாற்றினாலும், அவர்களுக்கு நிரந்தரப்பதவி வரவில்லையென்ற மனத்தாங்கல் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இந்த மாதிரிப் பிரச்னைகளுக்கும் பைசல் காணவேண்டுமென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கடைசியாக, டிரிப்பிள் வாக்சின் கிடைப்பதிலே, சென்னை நகரத்திலே பல்வேறு கஷ்டங்கள் இருக்கின்றன. இது மிகவும் வேதனையானது. பல்வேறு ஆஸ்பத்திரிகளிலே இது கிடைக்கப் பெறவில்லை. கிடைக்கக்கூடிய பம்பாயிலோ, கிண்டியிலோ ஏன் கிடைக்கவில்லையென்பதைப் பற்றியெல்லாம் விசாரித்து இது முக்கியமான விஷயமாக இருப்பதால், இந்த மருத்துவத் துறை இலாகாவிலே ஈடுபட்டிருக்கிற அதிகாரிகள் அதிக அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, இன்று நாட்டிலே பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. பணத்தைத் தாராளமாக ஒதுக்குகிறார்கள். உதாரணமாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலும் ஒரு விஷயத்தைக் கடைசியாகக் கூறி முடித்துக்கொள்கிறேன். என்னுடையவும், மாண்புமிகு ஜேம்ஸ் தொகுதியிலும் ஒரு பாலத்திற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். ஒரு வருஷத்திற்குள்ளாகப் பாலத்தினைக் கட்டி முடிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தருகிறேன் என்று கூறினார்கள். அதை இந்த வருஷத்தில் எப்படியாவது கட்டிக் கொடுப்பதற்கு வேண்டிய ஆணைகள் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தையை இத்தோடு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. எம். சுப்பிரமணியம் : ஆன் எ பாய்ன்ட் ஆப் கிளாரிஃபிகேஷன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் பேசிய பிறகு கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் பேசிய பிறகு கேளுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம் 7 நாட்கள் நடைபெற்று அதிலே 71 மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொண்டு, விவாதத்திலே ஒளியும் ஏற்றி, சில நேரங்களில் வெப்பமும் ஏற்றி அதற்கான விளக்கங்கள் என்னுடைய பதில் உரையிலே தரப்பட்டன. அதனைத் தொடர்ந்து மானியக் கோரிக்கைகள் இன்றோடு 25 நாட்கள் —மானியக் கோரிக்கைகளைப் பொறுத்து வெள்ளி விழா நாள் என்று கூடச் சொல்லலாம்-நடைபெற்று இந்த 25 நாட்கள் மானியக் கோரிக்கைகள் விவாதிக்கப் பெற்று, அதிலே இறுதியாக இப்பொழுது பேசிய திரு. பொன்னப்ப நாடார் உட்பட 304 உறுப்பினர்கள்—யாராவது கேட்கக் கூடும், இருப்பதே 234 தானே, எப்படி 304 என்று. இந்த மானியக் கோரிக்கைகளில் 25 நாட்களில் எல்லாம் பேசியவர்கள் திரும்பச் சில நாட்கள் பேசி இருக்கிறார்கள். அந்தக் கணக்கின் அடிப்படையில் 304 உறுப்பினர்களும், அந்தக் கட்சிகளினுடைய தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்து ஒவ்வொரு நாளும் தொடர்புடைய அமைச்சர்கள் விளக்கங்கள் அளித்திருக்கிறார்கள்.

இன்று சற்றேறப்ப ரூ. 500 கோடி அளவுக்கான வரவு-செலவுத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்கின்ற இந்தக் கோரிக்கைக்கு உங்களுடைய அன்பான அனுமதியைப் பெறுகின்ற வகையில் வைத்ததையொட்டி உங்கள் முன்னால் நீங்கள் எழுப்பியுள்ள— இன்றைக்கு எழுப்பியுள்ள பிரச்னைகளானாலும் மானியக் கோரிக்கைகளின் மீது எழுப்பியுள்ள பிரச்னைகளிலே ஏதாவது விடப்பட்டிருந்தாலும் அவைகளைக் கவனத்திலே வைத்து, ஓரளவுக்குப் பதில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நண்பர் செழியன் அவர்கள் இந்த விவாதத்தைத் தொடங்கியபோது, தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழு என்ன பணியாற்றுகிறது என்று கேட்டார்கள், தமிழ் நாடு மாநிலத் திட்டக் குழு இந்த மாநிலத்திற்கான திட்டங்கள் பல கோடி ரூபாயிலே நிறைவேற்றப்பட வேண்டுமென்பதற்கான ஆராய்ச்சிகளிலே ஈடுபட்டு, பல பிரிவுகளாக இயங்கி, மாவட்ட அளவிலேயும் இயங்கி, தன்னுடைய திட்டத்தினுடைய மொத்த வடிவினை இந்த அவைக்கு அளித்திருக்கிறது.



மாநிலத் திட்டக் குழுவினுடைய அரிய ஆலோசனைகளின் அடிப்படையிலேதான் நம்முடைய மாநில அரசு, மத்திய அரசிடத்தில் 5-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான குறிப்புகளையும் வைத்துப் பின்னால் உதவி கோரியது என்பதையும் நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். செழியன் அவர்கள் சிலபேருக்குப் பதவி அளிப்பு, உயர்வு பதவி, நீடிப்பு கொடுப்பதைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். ஏற்கெனவே பல நேரங்களில் இந்த மன்றத்தில் அதற்கான விளக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அண்ணாமலை, அண்ணாமலை என்று அடிக்கடி நண்பர் செழியன் அவர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். ராமச்சந்திராவை அனுப்பிவிட்டு, அண்ணாமலையை வைத்து விட்டீர்களே என்று கூறினார்கள். ராமச்சந்திரா ஒன்றும் எங்களுக்கு விரோதமானவர் அல்ல. ராமச்சந்திராவாக இருந்தாலும், அண்ணாமலையாக இருந்தாலும் இரண்டு பேருமே திறமையானவர்கள் என்பதை நாடு ஒத்துக்கொண்டிருக்கிறது. அந்த வகையில் அண்ணாமலை அவர்கள் இந்த இடத்தில் ராமச்சந்திராவிற்குப் பிறகு நிர்வகிக்கத் தகுதியானவர் என்ற வகையிலேதான் அண்ணாமலை இருக்கிறார். சில திறமையானவர்களுடைய பதவிகள் நீடிக்கப்படுகின்றன. செழியன் அவர்களுக்கு ஞாபகம் இருக்கும். ஏன், அவருடைய தலைவரைக் கேட்டாலே சொல்வார் என்று கருதுகிறேன். முன்பொரு முறை ஏ. என். கே. மேனன் என்பவருக்குக் கூட இப்படிப்பட்ட பதவி நீடிப்பு எல்லாம் அவர் நல்ல நிபுணர் என்ற காரணத்தால் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, நிபுணர்கள் . . . . .

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ராமச்சந்திராவுக்கு முன்னாலேயே அண்ணாமலை அவர்கள் ரிடையர் ஆகிவிட்டார்கள். ராமசந்திரா அதற்குப் பின்னாலே ரிடையர் ஆகிவிட்டார்கள். ராமச்சந்திராவும் தனக்குப் பதவி எக்ஸ்டென்ஷன் வேண்டுமென்று கேட்டார்கள். ஆகவே, அவருடைய கோரிக்கையை நிராகரித்துவிட்டு, அவருக்கடுத்தபடியாகவுள்ள அண்ணாமலையை ஏற்றுக் கொண்டு ஒரு படி மேலேயுள்ள பதவியைத் தந்திருக்கிறார்கள். . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ராமச்சந்திராவுக்கு முன்பே அண்ணாமலைக்குப் பதவி நீடிப்புச் செய்யப்பட்டதாகத் தான் நான் அறிகிறேன். இதில் தவறு இருந்தால், பிறகு அதைச் செழியன் அவர்கள் விளக்கினால், நான் திருத்திக் கொள்கிறேன். அதற்கு முன்பு என்பதுதான் எனக்குக் கொடுக்கப்பட்ட தகவல்.

தலைவரவர்களே, அரிசன வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில், அதன் தலைவரைப்பற்றி, சில புகார்களை திரு. செழியன் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். திரு. நம்பியார், ஐ.ஏ.எஸ். என்று பெயரைக் குறிப்பிட்டே சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றியெல்லாம் இந்த அரசு அலட்சியப்படுத்திவிடாது. அப்படிப்பட்ட குறிப்பிட்ட புகார்களைச் சொல்வார்களானால் அதை நிச்சயமாக அரசு விசாரிக்கும், ஏற்ற நடவடிக்கை எடுக்கும்

என்கின்ற உறுதியை, அவர்களுக்கு அவைகள் உண்மையாக இருக்குமானால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்கிற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு பேசிய பொன்னப்ப நாடார் அவர்களும் கே. டி. கே. தங்கமணி அவர்களும் மற்றவர்களும் இன்று தமிழக அரசின் சார்பில் திரட்டப்படுகிற வறட்சி நிதி குறித்து எடுத்துச் சொன்னார்கள். அதிலே கே. டி. கே. அவர்களுடைய கொள்கை வேறுவிதமானது, பொன்னப்ப நாடார் அவர்களுடைய கொள்கை வேறுவிதமானது என்பதை அந்த இரண்டு பேர்களுடைய பேச்சிலிருந்தே புரிந்துகொள்ள முடிந்தது. கே. டி. கே. அவர்கள் வறட்சி நிதியே திரட்டக்கூடாது என்ற வகையிலே சொன்னார்கள். ஏதோ பணக்காரர்கள்தான் தருவதாகச் சொன்னார்கள். பணக்காரர்களும் தருகிறார்கள். இல்லையென்று சொல்லவில்லை. எந்த ஒரு அரசும் இது போன்ற பொதுக் காரியங்களுக்கு நிதி திரட்டினாலும்—கேரள மாநிலத்திலேயே கூட—பொதுக் காரியங்களுக்கு நிதி திரட்டினாலும் பணக்காரர்களும் அதற்கு நிதி கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள் வறட்சி நிதிக்கு பல்லாயிரக்கணக்கில் 5 ரூபாய் என்றும் 10 ரூபாய் என்றும் 1 ரூபாய் என்றும் 2 ரூபாய் என்றும் வாரி வழங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள். பத்திரிகைகளிலே அவற்றையெல்லாம் வெளியிடுவதற்கு இடம் இல்லையே தவிர தினம்தினம் அப்படி மாணவர்களும் தொழிலாளர்களும் ஏழை எளிய மக்களும் வலுவிலேயே வந்து வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

பொன்னப்ப நாடார் அவர்கள் வறட்சி நிதி அளிப்பதிலே எங்களுக்கு வேறுபாடு இல்லை என்று சொன்னார்கள். மற்ற கட்சிக்காரர்களும் எங்களைப்பற்றி விளம்பரப்படுத்தவில்லையே என்று எண்ணக்கூடாது. நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர் திரு. கோபால் அவர்கள், பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள், சற்று முன்புதான் அவருடைய மூன்று மாத ஊதியத்தை வறட்சி நிவாரண நிதிக்கு என்னிடம் தந்து இருக்கிறார்கள். (கரவொலி)

நேற்றைய தினம் கூட அவை முன்னவர் அவர்கள் உறுப்பினர்களுக்கெல்லாம் பல சலுகைகளை அளித்து அறிவித்தபோது நான் தொடர்ந்து விடுத்த வேண்டுகோள் வீண்போகவில்லை என்பதற்கு அறிகுறியாக திரு. கோபால் அளித்த மூன்று மாத சம்பளம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரையில் ஒரு மாதச் சம்பளம் கொடுத்தவர்கள் திரு. கோபால் அவர்களைப் பின்பற்றினால் தவறில்லை என்று நினைக்கிறேன்.

பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள்—வலியுறுத்திப் பெறுதல் கூடாது. புகார்கள் எனக்கு வருகின்றன என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட புகார்கள் வந்தால் தயவுசெய்து ஒரு அஞ்சல் அட்டையிலேயாவது எனக்கு எழுதியனுப்பினால் அந்தப் புகார்கள் உடனடியாக விசாரிக்கப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும். எந்த ஒரு அலுவலகத்திலும் அலுவலர்களானாலும்



மற்ற அதிகாரிகளானாலும் தாமாக முன்வந்து இந்த நிதியைத் தந்தால் தவிர வலியுறுத்திப் பெறக்கூடாது என்றுதான் அரசு திட்டவட்டமாகக் கூறி இருக்கிறது.

ஹாண்டே அவர்கள் கூட போலீஸ் இலாகா பற்றிப் பேசும்போது சொன்னார்கள். நான் உடனடியாக அந்த ஆணையைப் படித்துக் காட்டினேன். கம்பல்சரி என்று அதில் இல்லை. வலிய தரலாம், வாலண்டரி என்றுதான் இருக்கிறது என்று சுட்டிக் காட்டினேன். இதிலே எந்தவிதமான வலியுறுத்தலுக்கும் வற்புறுத்தலுக்கும் இடம் இல்லாத அளவிற்கு அரசு பார்த்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. தோப்பூர் திருவேங்கடம் அவர்கள் மேலரசம்பட்டு திட்டம் பற்றிச் சொல்லி பல ஆண்டுகாலமாக இருக்கிறது, கவனிக்கக்கூடாதா என்று கேட்டார்கள். எப்போதுமே எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கோரிக்கைக்களுக்குப் பதிலளித்து அவைகளை ஏற்று நிறைவேற்றிய நான் இந்த ஒரு நாளாவது ஆளுங்கட்சி உறுப்பினரால் சொல்லப்படுகின்ற கோரிக்கையை எதிர்க்கட்சியினரின் ஒப்புதலோடு ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று கூறி மேலரசம்பட்டு திட்டம் விரைவிலே நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் திருவேங்கடம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் வேழவேந்தன், நண்பர் சுரேந்திரன் மற்றும் வெங்கிடசாமி, கே. டி. கே. ஆகியவர்கள் எல்லாம் இன்றைக்குள்ள மின்சாரத் தட்டுப்பாடு குறித்து விவரமாக எடுத்துச் சொன்னார்கள். இந்த மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க நாம் பல ஆண்டுகாலமாக மத்திய அரசோடு வாதாடி வருகின்ற அனல் மின் நிலையங்கள், அணு மின் நிலையங்கள், நீர் மின் நிலையங்கள் இவற்றிற்கான அனுமதிகள் அவ்வப்போது கிடைத்து இருக்குமானால் இத்தகைய சங்கடத்திற்கு நாம் ஆளாக வேண்டியதில்லை. ஏதோ எண்ணூரிலே—சுரேந்திரன் சொன்னார்—இந்த அரசு வந்த பிறகு தான் செக்கோஸ்லவாக்கியாவிலிருந்து இந்த இயந்திரங்கள் எல்லாம் வரவழைக்கப்பட்டன, அவை எல்லாம் ரிப்பேராகிவிட்டன என்று எண்ணிக் கொண்டிருக்கக் கூடாது. முன்பு இருந்த அரசே கூட நல்ல எண்ணத்தோடுதான் இயந்திரங்களை வரவழைத்தது. அதிலே சில சீர்கேடுகள் வந்த நேரத்தில், அண்மையில் கூட ஆந்திர மாநிலத்திலே மின்சாரத் துறையிலே ஆலோசனையாளராக இருக்கக் கூடிய நிபுணர் டாட்டாராவ் என்பவரை அனுப்பி வைக்கவேண்டுமென்று நான் ஆந்திர மாநில முதலமைச்சருக்குக் கடிதம் எழுதி அவரைக் கொஞ்ச நாட்கள் அனுப்பிவைக்க வேண்டும் என்று கேட்டு ஆந்திர முதலமைச்சர் மிகுந்த பெருந்தன்மையோடு பரந்த மனப்பான்மையோடு அவர்களை உடனடி

யாக அனுப்பிவைத்து, அவர்கள் எண்ணூருக்குச் சென்று இயந்திரங்களைப் பார்வையிட்டார். பிறகு அவர் தெரிவித்த கருத்து: இப்பொழுது பழுதுபார்ப்பதற்கு நிறுத்திவிட்டு வேலையைத் தொடங்கினால். மின்சாரத் தட்டுப்பாடு அதிகப்பட்டுவிடும் என்பதால், எப்போது அவற்றை நிறுத்துவது, எப்பொழுது பழுது பார்ப்பது என்பதைத் தீர்மானிக்கிற உரிமையை அந்த மெஷினுக்கே விட்டு விடலாம் என்ற யோசனையைச் சொன்னார்கள். இப்போது அந்தச் சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. இங்கு மட்டுமல்ல; நெய்வேலியிலே நமக்கு ஏற்பட்டிருக்கிற சங்கடங்களின் காரணமாக இப்படிப்பட்ட தொல்லைகள் உருவாகியிருக்கின்றன.

திரு. வேழவேந்தன் எடுத்துக் காட்டியதைப் போல், மற்றவர்களும் எடுத்துக் கூறியதைப் போல் நாம், மற்ற மாநிலங்களிலிருந்து மின்சாரத்தைப் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்கிறோம். ஆனால் கேரள மாநிலத்திலிருந்து தரப்படும் மின்சாரம், சிமென்ட் உற்பத்திக்கு அங்கே அவர்களுடைய தேவைக்கு ஏற்ற அளவுதான் தரப்படும் என்ற அளவுக்குக் கூறிக்கொண்டிருக்கிறார்கள்; இருப்பினும் நம்முடைய முயற்சிகளைக் கைவிட்டு விடாமல்..........

டாக்டர் எச். வி. ஹாண்டே: இப்போது பேசின்பிரிட்ஜ் பவர் ஹவுஸ் இவைகளில் எல்லாம் புல் கெப்பாசிட்டிக்கு ஓர்க் செய்வதில்லை. ஆகவே எங்கெங்கு பழுதுபடாமல் இருக்கிறதோ அங்கேயெல்லாம் இம்மாதிரி ஸ்டேஷன்களில் நிலக்கரி முழுமையாக சப்ளை செய்தால் மின்சாரத் தட்டுப்பாட்டைப் போக்கலாமே? அந்த வகையிலே அதைப் பார்ப்பதற்கு ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்று சொன்னால் சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மின்சாரத் தட்டுப்பாடு இல்லாமல் இருப்பதற்காக மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன எல்லா யோசனைகளும் கவனிக்கப்படும். அதே வகையிலே ஹாண்டே அவர்கள் சொல்கிற யோசனையையும் பரிசீலித்துப் பார்க்கலாம்.

செழியன் மற்றொரு குற்றச்சாட்டைச் சொன்னார். "அமைச்சர்களுக்கு அதிகப் பாதுகாப்பு அளிக்கப் படுகிறது, எதிர்க்கட்சியில் உள்ளவர்களுக்கு அந்தப் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை, மற்றவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப் படவேண்டாமா" என்று கேட்டார்கள். எல்லோருக்கும் பாதுகாப்பு தேவைதான். அன்றைக்கே சொன்னேன், எதிர்க்கட்சியிலே உள்ள செழியன் அவர்களுக்கே கூட ஏதோ ஒரு தொல்லை டெலிபோன் மூலமாக வந்ததற்கு காவல் துறையினர் உடனடியாக எந்த அளவிற்குக் கவலை எடுத்துக் கொண்டு பாதுகாப்பு அளித்தார்கள் என்பதை அன்றைக்கே சொன்னேன்



முதலமைச்சர் பேசுகின்ற கூட்டங்களுக்கு வருகின்ற காவலர்கள் அதைப் போலவே அண்ணா தி. மு. க. தலைவர் எம். ஜி. ஆர். கூட்டங்களுக்கு வருகின்ற காவலர்கள் எவ்வளவு என்பதைப் பார்த்தால் தெரியும், ஏதோ அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கக் கூடாது என்று இந்த அரசு நடந்து கொள்ளவில்லை என்பது.

மதுரையிலே நான் பேசிய கூட்டத்திற்கு 7 இன்ஸ்பெக்டர்கள்; 14 சப்-இன்ஸ்பெக்டர்கள்; 20 தலைமைக் காவலர்கள்; 120 காவலர்கள்; 72 ஆயுதப் படைக் காவலர்கள்; ஆக மொத்தம் 192 பேர் வந்தார்கள்.

மதுரையிலே எம். ஜி. ஆர். கூட்டத்திற்கு ஒரு இன்ஸ்பெக்டர்; உதவிக் கண்காணிப்பாளர் ஒருவர்; 19 சப்-இன்ஸ்பெக்டர்கள்; 28 தலைமைக் காவலர்கள்; 138 காவலர்கள்; 81 ஆயுதப் படைக் காவலர்கள்; ஆக மொத்தம் 219 பேர்கள் வந்தார்கள்.

ஆகவே எந்தக் கட்சியினுடைய தலைவராக இருந்தாலும் அண்ணா தி. மு. க. தலைவராக இருந்தாலும் அல்லது காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மதிப்பிற்குரிய காமராஜராக இருந்தாலும் அல்லது வேறு கட்சியினுடைய தலைவராக இருந்தாலும் அல்லது வேறு கட்சியிலே இருக்கிற எந்தப் பேச்சாளராக இருந்தாலும், அமைச்சராக இருந்தாலும் பாரபட்சம் இல்லாத முறையில் பாதுகாப்புக் கொடுக்கப்படுகிறது என்பதற்கு இந்த ஒரு எடுத்துக்காட்டு போதுமானது என்று நினைக்கிறேன். ஆகவே எதிர்க் கட்சிக் கூட்டங்களுக்கு பாதுகாப்புத் தரப்படுவது இல்லையென்ற குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்பதை எடுத்துக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நான் வரவுசெலவுத் திட்டத்தை இங்கே வைத்தபோது பல்வேறு திட்டங்களை அரசின் சார்பிலே எடுத்துக் கூறி மீனவர்களுக்கு வீடு கட்டுகிற திட்டம், கூட்டுறவு நெசவாளர்களுக்கு சேமிப்புத் திட்டம், அனாதைச் சிறுவர்கள், ஆதரவற்ற விதவைகள் பாதுகாப்புத் திட்டம், தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம் அமைக்கின்ற திட்டம் இப்படிப் பல்வேறு புதிய திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டு இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்களால் பாராட்டப் பெற்றிருக்கிறது. அவையெல்லாம் விரைவிலே செய்யப்படுவதற்கான வழிவகைகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. கந்தப்பன் பேசிய நேரத்திலே பின்தங்கியோர் நலனுக்காக இந்த அரசு நடத்திக் கொண்டிருக்கிற நல்ல காரியங்களைப் பற்றி எல்லாம் குறிப்பிட்டார்கள். கடந்த சில நாட்களுக்கு முன்பு நடைபெற்ற விவாதத்தில்

பின்தங்கிய மக்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு எந்த எந்த வகையிலே எல்லாம் நன்மைகளைப் புரிகிறது என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மாறான சில கருத்துகளும் வேறு சில உறுப்பினர்களால் எடுத்துச் சொல்லப்பட்டது.

[பிற்பகல் 1.30]

நம்முடைய நண்பர் ஆலடி அருணா அவர்கள் பேசுகின்ற நேரத்தில் கூட இன்றைக்கிருக்கின்ற சர்வீஸ் கமிஷனில், நம்முடைய மாநில சர்வீஸ் கமிஷனில் யார் யாரையோ சேர்த்து விடுகிறார்களே, எப்படி எப்படியோ மார்க் போடுகிறார்களே என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனுடைய விவரத்திற்குள் நுழைய நான் விரும்பவில்லை. ஏனென்றால் சர்வீஸ் கமிஷனைப் பற்றிய விவாதம் அதிகமாக இந்தச் சபையிலே நடைபெறுவது முறையல்ல. திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூறியதைப் போல் இங்கே விவாதிப்பதற்கான சூழ்நிலை வருமேயானால் அப்பொழுது அவைகளைப் பற்றிப் பேசலாம். ஆனால் ஒன்றை மட்டும் நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

1967ஆம் ஆண்டிலிருந்து 1974ஆம் ஆண்டு வரையில், எத்தனையோ பின்தங்கிய மக்கள் என்று இருந்தாலும்கூட, அந்தப் பின்தங்கிய மக்கள் தங்களைப் பின்தங்கியவர்களாகக் கூறிக்கொள்ள தங்களுடைய வகுப்பின் பெயரை, கள்ளர் என்றோ, மறவர் என்றோ, வன்னியர் என்றோ சொல்லித்தான் தீர வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் இதற்கு முன் மாநில சர்வீஸ் கமிஷன் மூலமாக குரூப்-1 சர்வீஸுக்கு எவ்வளவு பேர் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள் என்ற விவரங்களை நாம் இந்த 7 ஆண்டுகால கட்டத்தில், 1967ஆம் ஆண்டிலிருந்து 1974ஆம் ஆண்டு வரையிலுள்ள இந்தக் கால கட்டத்தில் பார்க்கலாம். அந்த வகையில் இந்த ஏழாண்டு காலத்தில் பார்த்தால், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் டெபுடி கலெக்டர்கள் 7 பேர், போலீஸ் டெபுடி சூப்பிரண்ட் 4 பேர், ஜே. சி. டி. ஓ. 4 பேர், டெபுடி ரெஜிஸ்ட்ரார் 5 பேர், அசிஸ்டண்ட் கமாண்டண்ட் (போலீஸ்) 1, டெபுடி ரெஜிஸ்ட்ரார் 1, டிவிஷனல் தீயணைப்பு அதிகாரி 1-ஆக மொத்தம் 23 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

வன்னியர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் டெபுடி கலெக்டர்கள் 5, டி. எஸ். பி. 3, ஜே. சி. டி. ஓ. 4, டெபுடி ரெஜிஸ்ட்ரார் 1, டிஸ்டிரிக்ட் ரெஜிஸ்ட்ரார் 1-ஆகமொத்தம் 14 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.



கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்கள், டெபுடி கலெக்டர் 3, டி. எஸ். பி. 1, ஜே. சி. டி. ஓ. 2, டெபுடி ரெஜிஸ்ட்ரார் 1, அசிஸ்டண்ட் கமாண்டண்ட் 1-ஆக மொத்தம் 8 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

மறவர், டெபுடி கலெக்டர் 1, டி.எஸ்.பி. 2, ஜே.சி.டி.ஓ. 1, டெபுடி ரெஜிஸ்ட்ரார் 2-ஆக மொத்தம் 6 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

அகமுடையார் இனத்தைச் சேர்ந்தவர்கள், டெபுடி கலெக்டர் 5, ஜே. சி. டி. ஓ. 1-ஆக மொத்தம் 6 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

நாடார் இனத்தைச் சேர்ந்தவர்கள், டெபுடி கலெக்டர் 3 பேர், ஜே. சி. டி. ஓ. 6 பேர்; டெபுடி ரெஜிஸ்ட்ரார் 2 பேர்கள்-ஆக 11 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

முஸ்லீம், டெபுடி கலெக்டர் 2 பேர், டி. எஸ். பி. 3 பேர், ஜே. சி. டி. ஓ. 2 பேர், டெபுடி ரெஜிஸ்ட்ரார் 1-ஆக 8 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

செங்குந்தர், டெபுடி கலெக்டர் 1, டெபுடி ரெஜிஸ்ட்ரார், 1, அசிஸ்டண்ட் கமாண்டண்ட் (போலீஸ்) 1, டிவிஷனல் தீயணைப்பு அதிகாரி 1-ஆக 4 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

கௌரா என்ற மிகப் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள், டெபுடி கலெக்டர் 1, டெபுடி ரெஜிஸ்ட்ரார் 1, அசிஸ்டண்ட் கமாண்டண்ட் (போலீஸ்) 1-ஆக 3 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

படகா வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெபுடி கலெக்டர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

வீரக்கொடி வெள்ளாளர் இனத்தைச் சேர்ந்தவர்களில் டெபுடி கலெக்டர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார். சலவைத் தொழிலாளி, டெபுடி கலெக்டர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

பரக்கவகுலநத்தமான் இனத்தைச் சேர்ந்தவர்களில் டெபுடி கலெக்டர் 1, டி. எஸ். பி. 1-ஆக இரண்டு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள்.

துளுவவெள்ளாளர் இனத்தைச் சேர்ந்தவர்களில் டெப்புடி கலெக்டர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

குறும்பர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெப்புடி கலெக்டர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

மூப்பனார் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெப்புடி கலெக்டர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

தொண்டமான் இனத்தைச் சேர்ந்தவர்களில் டெப்புடி கலெக்டர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

வடுகர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெப்புடி கலெக்டர் 1, டி. எஸ். பி. 1-ஆக இரண்டு பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள்.

தேவாங்கர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டி. எஸ். பி ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

வலையர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டி. எஸ். பி. ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

சக்கிலி வகுப்பைச் சேர்ந்தவர்களில் ஜே. சி. டி. ஓ. ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

யாதவர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் ஜே. சி. டி. ஓ. 3 பேர்கள், டெப்புடி ரெஜிஸ்ட்ரார் 2, டிவிஷனல் பயர் ஆபிஸர் 1-ஆக 6 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள்.

சேனைத் தலைவர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெப்புடி ரெஜிஸ்ட்ரார் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

செட்டி பலூஜா வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெப்புடி ரெஜிஸ்ட்ரார் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

வேட்டுவக் கவுண்டர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெப்புடி கலெக்டர் 1, டெப்புடி ரெஜிஸ்ட்ரார் 1-ஆக 2 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள்.

மருத்துவர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெப்புடி ரெஜிஸ்ட்ரார் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

ஒட்டர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டிஸ்ட்ரிக்ட் ரெஜிஸ்ட்ரார் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.



பிள்ளைமார் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெப்புடி ரெஜிஸ்ட்ரார் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

கௌரா நாயுடு வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெப்புடி கலெக்டர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

வாணியர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெப்புடி கலெக்டர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

ஆகமொத்தத்தில் 1967 ஆம் ஆண்டு முதல் 1974 வரையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 122 பேர்களில் 112 பேர்கள் தாழ்த்தப்பட்டோர், பிற்பட்டோர் வகுப்பைச் சார்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்த பட்டியலில் கிறித்தவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வரவில்லையே, அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் இருப்பதைத் தான் சொல்கிறேன். இதையெல்லாம் பார்க்கும் நேரத்திலே தான் நம்முடைய கந்தப்பன் அவர்கள் கூறினார்கள், அவர் மட்டுமல்ல, இந்த மன்றத்திலுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள், கொங்கு வேளாள சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், கட்சி மாறுபாடு இல்லாமல் அண்மையில் என்னைச் சந்தித்து ஒரு கோரிக்கையை என்னிடத்தில் கொடுத்து, கொங்கு வேளாள சமுதாயத்தையும் இதில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டார்கள். இப்பொழுது கந்தப்பன் அவர்கள் விரிவாகப் பேசினார்கள். இதையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு மிகுந்த மகிழ்ச்சியோடு நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன், கொங்கு வேளாள சமுதாயம் பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எங்களுடைய நீண்டகால கோரிக்கையை ஏற்றுக் கொண்டதற்காக நான் நன்றியைச் செலுத்திக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, திரு. வீராசாமி அவர்களுடைய துணையோடு சாத்தூரிலிருந்து சிலர் சந்தித்தார்களே, அதற்கு நிவாரணம் கிடைத்ததா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இப்பொழுது சொன்ன அறிவிப்பைத் தவிர நான் வேறு எதுவும் சொல்லுவதற்கில்லை.

நண்பர் காளிமுத்து அவர்கள் பேசினார்கள். அவர்கள் சொன்னார்கள், ஏதோ ஒரு கேள்விக்குறி விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். மேலும் என்னைப் பார்த்து அவர் கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பதாகவும் சொன்னார்கள். யார் யாரைப் பார்த்துக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது அவரவர்களுடைய மனச்சாட்சிக்குத் தெரியும். திரு. தங்கமணி அவர்கள் மனச்சாட்சியை நம்பாவிட்டாலும் நான் மனச்சாட்சியை நம்புகிறவன், (குறுக்கீடு) அன்றைக்கு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அரசியல் நிலையை எடுக்கும்பொழுது மனச்சாட்சி என்று கேட்பது பொருத்தமற்றது என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அரசியல் நிலையை எடுக்கும் பொழுது மனச்சாட்சி என்று கேட்பது சரியல்ல என்று சொல்கிறார்கள். மனச்சாட்சிப்படிதான் முடிவெடுத்தேன் என்று குடியரசுத் தலைவர் தேர்தலில் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஆதரித்த வி. வி. கிரி அவர்களைத்தான் நாங்களும், நீங்களும் சேர்ந்து ஆதரித்தோம்.

ஊழல் என்று சொல்லும்போது அதிர்ச்சி அடையக் கூடிய நிலைகூடக் குறைந்து வருகிறதே என்று ஒருவர் சொன்னதாக காளிமுத்து அவர்கள் குறிப்பிட்டார்கள். அவ்வாறு குறிப்பிட்டு, இதுபோன்ற நிலைமைகள், குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்களோடு இருக்குமானால் அ. தி. மு. க. வும் எதிர்க்கட்சியும் நீதி விசாரணையை சந்திக்கத் தயார் என்று கூறினார்கள். நானும் அதைத்தான் சொல்கிறேன், ஆதாரம் இருக்குமானால்—காளிமுத்து அவர்கள் ஜாக்கிரதையாக அந்த வார்த்தையைப் போட்டார்கள்—ஆதாரம் இருக்குமானால் எதிர்க்கட்சி தயாராக இருக்கிறது என்று சொன்னார்கள். நானும் அதைத்தான் சொல்கிறேன், கூறப்படுகிறது, சொல்லப்படுகிறது, பேசப்படுகிறது, என்று சொல்லாமல்—நேற்றுகூட சொன்னேன்—அருணா அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஒரு குற்றச்சாட்டில் இன்னாருக்கு இன்ன தொடர்பு, இன்ன தவறு நடந்திருக்கிறது என்று சொல்லப்படுமேயானால் அப்படிப்பட்ட நேரத்தில் நீதி விசாரணை வைக்கத் தடையில்லை; இந்த அரசு அப்போது தயங்காது என்பதற்கு நண்பர் ப. உ. சண்முகம் அவர்கள் மீது சுமத்தப்பட்டக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் வைக்கப்பட்டிருக்கின்ற நீதி விசாரணை ஒன்றே போதுமான சான்றாக அமைந்திருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



இதிலே கூடச் சொன்னார்கள், இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கோவை செழியன் அவர்கள் பேசினார்கள். அவர்கள் பேசும் பொழுது சில தவறான விவரங்களைச் சொன்னார்கள். நான் அவைகளைத் திருத்த வேண்டிய கடமைப்பட்டிருக்கிறேன். லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் தாஷ்கண்ட் நகரத்திற்குச் செல்லுவதற்கு முன்னால் டி. டி. கே. அவர்கள்மீது ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் ரெகுலேஷன் சம்பந்தமாக ஒரு சந்தேகம் இருக்கிறது என்று நீதி விசாரணை ஒன்றைப் போட்டார்கள், அதைப் போட்ட உடனே டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் தன் மந்திரிப் பதவியிலிருந்து இராஜினாமா செய்துவிட்டு, பத்திரிகை நிருபர்களிடத்திலே சொன்னார்கள் என்று நம்முடைய செழியன் அவர்கள் சொன்னார்கள். அப்பொழுது நீதி விசாரணை போடவில்லை ; நடந்தது வேறு விவகாரம். டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களைப் பொறுத்தவரையில் என்ன நடந்தது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால் சில தவறான தகவல்கள் தரப்பட்டிருக்கின்றன. எனவே உறுப்பினர்களுக்கு விளக்க வேண்டுமென்பதற்காக நான் பழைய கதையைச் சொல்கிறேன். டி. டி. கே. மறைந்துவிட்டார். இருந்தாலும் இருந்த நிலைமையைச் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

1952ஆம் ஆண்டு முதன் முதலாக திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் மத்திய அரசின் தொழில், வர்த்தக அமைச்சராக ஆனார். 1955 ஆம் ஆண்டில் இரும்பு உருக்கு இலாக்கா அமைச்சராக அவர் இருந்தபோது தன்னுடைய பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்ற முடியவில்லை என்ற காரணத்தைக் காட்டி இராஜினாமா செய்தார். அவருடைய இராஜினாமாக் கடிதத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும்படி அப்பொழுதிருந்த பிரதமர் கேட்டுக் கொண்டதன் பேரில் அவர் தொடர்ந்து அமைச்சராக இருந்தார். அதற்குப் பிறகு 4—9—1957-ல் முந்திரா ஊழல் பற்றிய பிரச்னை பாராளு மன்றத்தில் ஒரு கேள்வியாக எழுந்தது.

அந்தக் கேள்வி எழுந்ததைத் தொடர்ந்து 25-11-1957 அன்று பாராளுமன்றத்தில் திரு ராம் சுபாக் சிங் அதை ஒரு பெரிய பிரச்னையாக ஆக்கினார். 16-12-1957 அன்று பெரோஷ் காந்தி—இன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் கணவர்—இந்தப் பிரச்னையின் மீது விசாரணை வேண்டுமென்று ஒரு பிரச்சினையை எழுப்பினார். 17-1-1958 அன்று கமிஷன் ஆஃப் என்கொயரி ஆக்ட் சட்டத்தின்கீழ் முந்திரா ஊழல் பற்றி நீதி விசாரணை செய்வதற்கு பம்பாய் உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி திரு. சக்ளா நியமிக்கப்பட்டார். எப்பொழுது ? 17-1-1958 இல். அப்பொழுது டி. டி. கே. அவர்கள் இராஜினாமா செய்யவில்லை. விசாரணை 10-2-1958 இல் முடிந்து. திரு. சக்ளா தன்னுடைய

நீதி விசாரணை அறிக்கையைக் கொடுத்தார். அப்படி 10-ம் தேதி அறிக்கையைக் கொடுத்த பிறகு, நீதி விசாரணை நடந்த நேரத்தில் இராஜினாமா செய்யாத டி. டி. கே. அவர்கள் 10-ம் தேதி சக்ளா அறிக்கை கொடுத்த பிறகு, 14-2-1958 இல் தன் பதவியை இராஜினாமா செய்கிறார். அது முதல் கதை.

இரண்டாவது கதை. 1962ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பின்பு திரு. டி. டி. கே. மறுபடியும் மத்திய அரசின் பொருளாதார இணக்கத்துறை அமைச்சரா்க ஆகிறார்.

முதலில் நீதிவிசாரணைக்குட்பட்டு ராஜினாமாச் செய்யும் அளவுக்குக் குற்றம் சாட்டப்பட்ட டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் 1962ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பின்பு மறுபடியும் மத்திய அரசு பொருளாதார இணக்கத்துறை அமைச்சராக ஆகிறார்—Economic Co-ordination Minister.

பிறகு 1963ஆம் ஆண்டில் 'காமராஜர் திட்டம்' என்ற பெயரால் வகுக்கப்பட்ட திட்டத்தின்கீழ் மொரார்ஜி தேசாய் பதவி விலகியபோது மீண்டும் டி.டி.கே. நிதியமைச்சராகப் பொறுப்பேற்றார்.

27-5-1964 அன்று இந்தியப் பிரதமர் நேரு காலமானார். அதைத் தொடர்ந்து கொஞ்ச நாளைக்கெல்லாம் பாராளுமன்றத்தைச் சேர்ந்த 10 உறுப்பினர்கள் இந்தியப் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரியிடம் சில புகார்களை வரிசைப்படுத்திக் கொடுத்தார்கள்.

இதிலே முக்கியமாக டி.டி.கே. தன் வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தின்போது தன்னுடைய மகன் சம்பந்தப்பட்ட ஒரு கம்பெனிக்கு சில சலுகைகள் அளித்ததாகவும், இவர் அமைச்சராக இருந்த 10 ஆண்டுக் காலத்தில் இந்தியாவினுடைய இறக்குமதிக் கொள்கையை இத்தகைய நோக்கத்தோடு கையாண்டு வந்ததாகவும் குறிப்பாகச் சுட்டிக் காட்டப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்தப் பிரச்சினை பாராளுமன்றத்தில் தொடர்ந்து பேசப் பட்டது. இதைத் தொடர்ந்து டி.டி.கே. மீது நீதி விசாரணை வைக்க வேண்டுமென்று புகார் மனுவைக் கொடுத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினார்கள். இதைத் தொடர்ந்து திரு. லால்பகதூர் சாஸ்திரி இந்த மனுவை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியிடம் அனுப்பி, அவருடைய அபிப்பிராயத்தைப் பெற விரும்பினார். அவ்வளவுதான்—நீதி விசாரணை வைக்கவில்லை. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியிடம் புகார் மனுவை அனுப்பி, அவருடைய கருத்து என்ன என்பதை அறிய விரும்பினார். அந்தக் கருத்தை அறிய விரும்பினார்; அவர் டி. டி. கிருஷ்ணமாச்சாரிக்குக் கடிதம் எழுதுகிறார். அந்தக் கடிதத்தில் ஒரு பகுதி—



"My Dear Krishnamachari" என்று ஆரம்பித்து அந்தக் கடிதத்தில்—இந்துப் பத்திரிகையில் வந்திருக்கிறது. ஜனவரி மாதத்தில் வெளியான தகவல்கள்—

"I propose, therefore, to request the Chief Justice of India to study the papers and give me an opinion confidentially. You are one of my seniormost and closest colleagues and you can well understand how much anxiety and concern this matter must have caused me. But even after protracted deliberation, I find that I have no other alternative.

Yours sincerely,

Lal Bahadur Shastri."

என்று அனுப்புகிறார். இது அப்போதைய இந்து பத்திரிகையில் வத்திருக்கிறது. அந்தப் பத்திரிகையையே வைததிருக்கிறேன். அந்தக் கடிதம் போனதும் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கோபமுற்று சாஸ்திரி அவர்களுககு பதில் எழுதுகிறார்.

"My dear Lal Bahadurji,

Thank you for your letter of 29th instant.

You are seized of the matter and therefore it is for you to decide the course of action to adopt. But that does not prevent me from holding the view that the procedure you proposed to follow is wrong, which would also set up an unhealthy precedent for the future. I shall be relinquishing charge as Finance Minister on the afternoon of the 31st December 1965 and shall ask my Secretaries to seek your directions for carrying on their work thereafter."

விசாரணை செய்வதற்காக—நீதி விசாரணை கூட அல்ல, ஒரு சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி புகார் பற்றி என்ன யோசனை சொல்லு கிறார் என்பதற்காக அனுப்பி வைக்கிறார். இது தவறு, இப்படி அனுப்பி வைக்கக்கூடாது, தவறு என்று கண்டித்து பதவியைவிட்டு கோபத்தால் வெளியேறினாரே அல்லாமல் செழியன் சொன்னதைப் போல் டி. டி. கிருஷ்ணமாச்சாரி வெளியேறவில்லை.

அதைப்போல் கெய்ரோன் மீது ஒரு வழக்கு வந்தது. 13-7-1963-ல் அன்று பஞ்சாப் முதலமைச்சர் கெய்ரோன் மீது இந்தியக்குடியரசுத் தலைவரிடத்தில் புகார் மனு கொடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் இப்பிரச்சினை பல முறை எடுத்துப் பேசப்பட்டது.

25-10-1963 அன்று இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் பஞ்சாப் முதலமைச்சர் கெய்ரோன் மீது நீதி விசாரணைக்கு உத்தரவிட்டிருப்பதாகப் பாராளுமன்றத்தில் அறிவித்தார். அப்போது திரு. கெய்ரோன் தொடர்ந்து பஞ்சா

முதலமைச்சராக இருக்கலாமா என்ற பிரச்சினை எழுப்பப்பட்டது. அதாவது நீதி விசாரணைக்கு ஒருவரை உட்படுத்திய பின்பு அவர் அமைச்சராகத் தொடர்ந்து இருப்பது சரியல்ல என்று விவாதிக்கப் பட்டது. நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டாலே—*prima facie case* இருப்பதாகத்தான் பொருள் என்று அன்று வாதிடப் பட்டது. ஆனால் அதற்குப் பிரதமர் என்ன பதில் அளித்தார் என்று— Political Corruption in India—என்ற புத்தகத்தின் 97-வது பக்கத்திலிருந்து படிக்கிறேன் — "Even while recommending a judicial enquiry into the charges against Mr. Kairon, the former Prime Minister Jawaharlal Nehru maintained that there was no *prima facie* case against Mr. Kairon and that therefore he would not advise him to step down from Chief Ministership during the enquiry" என்ற முறையிலே அவர் பதிலளித்திருக்கிறார். இந்த வகையிலே—

டாக்டர் எச். வி. ஹாண்டே : மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் சொன்னதெல்லாம் சரியாக இருக்கிறது. ஒரே ஒரு சந்தேகம் வருகிறது. டி.டி.கே.யைப் பொறுத்தவரையில் அவர் மேல் ஊழல் விசாரணைக் கமிஷன் வைக்கவில்லை. ஜட்ஜிடத்தில் என்ன தகவல்கள் என்று தெரிந்து கொள்ள அனுப்பியிருக்கிறார்கள். அதையே ஆட்சேபித்து ராஜினாமாச் செய்திருக்கிறார். செழியன் மற்றவர்கள் சொல்லுவது எல்லாம் அதுதான். லால் பகதூர் சாஸ்திரி எடுத்த நடவடிக்கையை விட கடுமையான நடவடிக்கையை இங்குள்ள அமைச்சர் மீது எடுத்துக்கொள்ள முதலமைச்சர் அவர்கள் ஆளாக்கப்பட்டார்கள். பிரைமா ஃபேசி கேஸ் இருக்கிறது என்ற காரணத்தால், ஆலடி அருணா சொன்ன தன் பேரில் அதைவிட கடுமையான நடவடிக்கையை முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கும்போது இங்கே ராஜினாமா செய்ய வேண்டிய காரணங்கள் அதிகமாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : தாங்கள் சொன்ன பத்திரிகையில்தான் நானும் படித்தேன். அன்று மாலை பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் திரு. டி.டி.கே. கோபத்தோடு இதே கருத்தைச் கூறியிருக்கிறார்கள். இந்த அளவுக்குப் போனபிறகு நான் பதவியில் இருக்க மாட்டேன்.—
"No man with an iota of self-respect will continue as Minister and face an enquiry."
என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நீதிபதியிடம் கொடுத்தது என்ன ஆயிற்று ? ஜட்ஜ்மென்ட் கொடுத்தார்களா ? என்ன ஆயிற்று ? சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் கருத்துத் தெரிவித்தாரா ? அதற்குப் பிறகு, 10 நாளைக்குப் பிறகு லால் பகதூர் சாஸ்திரி தாஷ்கண்டில் மறைந்து விட்டார்கள். அதற்குப் பிறகு இந்திரா



காந்தி அம்மையார் பிரதமராக வந்தார்கள். அந்தக் கருத்து என்னவாயிற்று ? அதற்குப் பிறகு டி.டி.கே. மீது விசாரணை போடப்பட வேண்டும், வேண்டாம் என்று கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கிறதா என்ற நிலை உலகத்திற்கு அறிவிக்கப்பட்டதா ? இல்லை.

டி.டி.கே. அவர்கள் எப்படி ஏன் நீதிபதியைக் கேட்கிறீர்கள், நீங்களே அல்லவா முடிவு செய்ய வேண்டுமென்று ஆத்திரத்தில் பிரதமரிடத்தில் கோபித்துக் கொண்டு ராஜினாமாச் செய்தாரே அல்லாமல், நம்மீது விசாரணை வந்துவிட்டது, ஆகவே நாம் பதவியில் இருக்கக்கூடாது என்ற அளவில் அவர் ராஜினாமா செய்யவில்லை. அப்படிச் செய்திருப்பார் என்றால் முதலில் ஒரு விசாரணை நடத்தப்பட்ட போதும் கூட செழியன் சொன்னது போல் அவர் அப்போது ராஜினாமா செய்யவில்லை. அதை மறந்துவிடக் கூடாது. பிரதமர் நேரு அவர்கள் இருந்த காலத்தில் சாக்ளா அவர்கள் நீதி விசாரணை நடத்தியபோது, விசாரணை முடிகிற வரையில் டி.டி.கே. பதவியில் இருந்திருக்கிறார். நீதி விசாரணையின் தீர்ப்புக்குப் பிறகுதான் டி.டி.கே. பதவியிலிருந்து விலகியிருக்கிறார் என்பதையும் மறந்து விடக்கூடாது.

திரு. காளிமுத்து அவர்கள் சொன்னார்கள். ஊழல் ஊழல் என்று பேசுகிறார்கள்—உள்ளபடியே வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது பழைய காங்கிரஸ்காரர்கள் ஊழல் ஊழல் என்ற விவகாரத்தை எழுப்பியதற்கு மூலகாரணமே எம்.ஜி.ஆர்.தான். அவர் தி.மு. கழகத்தில் இருந்தபோது சத்தியா ஸ்டுடியோ விவகாரத்தில் ஒரு நிலத்தைக் குத்தகைக்கு அவர் பெற்றார். அதைக் கொடுத்தது தவறா. இல்லையா என்பது வேறு விவகாரம். அதை பழைய காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் முதல் தொண்டர்கள் வரை 'ஊழல், ஊழல்' என்று பேசத் தலைப்பட்டார்கள். பத்திரிகையிலே எழுதினார்கள். அது ஊழலா, இல்லையா என்பது . . . .

திரு. ஆலடி அருணா : அது ஊழலா இல்லையா என்பது வேறு விவகாரம் என்று சொல்லுகிறார்கள். நீங்கள் போட்ட உத்தரவு. அது சரியா, தவறா என்று திட்டவட்டமாகச் சொல்லுங்கள். ஊழலா இல்லையா என்ற ஊசலாட்டம் தேவையில்லை.

(திரு. ஆலடி அருணா, திரு. சீனிவாசன், திரு. செழியன் ஆகிய மூவரும் எழுந்து குறுக்கிட்டனர்.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்படி மூன்று பேர் ஒரே சமயத்தில் எழுந்து குறுக்கிட்டால் எப்படி ? மரியாதை வேண்டாமா ? யாராவது குறுக்கிட்டுப் பேச வேண்டுமென்றால் நான் உட்கார்ந்து விடுகிறேன். எல்லோரும் ஒரே நேரத்தில் இப்படிப் பேசுவது முறையல்ல.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியா ஸ்டுடியோ நிலம் 89½ கிரவுண்டில் அமைந்திருக்கிறது. ஸ்டுடியோவுக்கும் இந்த நிலத்திற்கும் சம்பந்தம் இல்லை. அதற்கு கீழ் பக்கத்தில் அரசாங்கக் குத்தகை நிலம் 2.23 ஏக்கர் நிலம் 8—1—1968-ல் சத்தியா ஸ்டுடியோவுக்காக குத்தகைக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு வாடகை வருஷம் ஒன்றுக்கு ரூ. 8,186.70 பைசா. வாடகை ரூ. 6,840.57 பைசா ; முனிசிபல் டாக்ஸ் ரூ. 1,366.13. 1968-ம் வருஷத்திலிருந்து இன்று வரை சுமார் 65,472 ரூபாய் அரசாங்கத்திற்கு வாடகையாகச் செலுத்தப்பட்டிருக்கிறது. இதிலே என்ன ஊழல் இருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் அதை ஊழல் என்று சொல்லவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு மீது காங்கிரஸ்காரர்கள் அப்படிச் சொன்னார்கள் என்று சொன்னேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : போர்ட் மெம்பரால் இது ரூ. 15,000 வாடகை பெறும் என்ற ஒரு பரிந்துரை கூறப்பட்டிருந்ததே, அதை இந்த அரசு ஏற்றுக்கொண்டு ரூ. 15,000-க்கு கொடுத்தார்களா அல்லது அதைவிட குறைத்துக் கொடுத்தார்களா? இதைத்தான் நாங்கள் அன்று எடுத்துக் கூறினோம் ஊழல் என்று. இன்றும் அந்த நிலை தான், மாறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : எங்கள் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சத்தியா ஸ்டுடியோஸ் வருவதற்கு முன்பு அந்த இடத்திற்குப் போய் பார்த்தால் வேறு யாரும் அதைப் பயன்படுத்த வழியில்லாதிருந்தது. அங்கு வேறு யார் போய் என்னாய் செய்யமுடியும்?

THIRU R. PONNAPPA NADAR : That insinuation need not be hurled at us. We also know how to insinuate.

THIRU P. SEENIVASAN : I am rather surprised. I am not insinuating the hon. Member.

அந்த இடத்தில் வேறு யாரும் நுழைந்திருக்கவே முடியாது. அப்படிப்பட்ட இடம் அந்த இடம். எங்கள் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அங்கு வருவதற்கு முன்னால் அந்த ஸ்டுடியோ இருக்கும் இடத்தை யாரும் பயன்படுத்தாமல் புறம்போக்காக சும்மா கிடந்தது. ஒரு புறம்போக்கு நிலத்தை குத்தகைக்கு கொடுப்பது பெரிய ஊழலா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் சொன்னது, இப்படி ஒரு வரலாறு ஆரம்பமாவதற்கு முன்னுரை எழுதியவர் எம்.ஜி.ஆர். அவ்வளவுதான். ஆகவே ஊழல் ஊழல் என்று பேசுவதில் அர்த்த





மில்லை என்பதற்காகச் சொல்கிறேன். காங்கிரஸ் கட்சி ஊழல் என்று சொல்லலாம், நான் அதை இல்லை என்று சொல்கிறேன். அது வேறு விவகாரம். நான் அதைக் குத்தகைக்கு எடுத்துக் கொள்ள மாட்டேன், தவறான பிரச்சாரம் வரும் என்று அவர் சொல்லியிருந்தால் இந்தச் சங்கடமே அரசுக்கு வந்திருக்காது.

ஆக, அவரால் நாங்கள் இப்போது காங்கிரஸ்காரர்களிடம் வாங்கிக் கட்டிக்கொண்டிருக்கிறோம். குறைந்த வாடகைக்குக் கொடுத்து விட்டீர்களே என்று சொன்னார்கள். அது அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விசாரணைக்கு வாருங்கள், தீக்குண்டத்தில் குதியுங்கள் என்றெல்லாம் கூறிவிட்டு, நேற்றைய தினம் முதல் அமைச்சர் பேசுகையில் கோபத்தில் நீதி விசாரணைக்குத் தயார் என்று சொல்வார்கள் என்று எதிர்பார்த்தோம் என்று காளிமுத்து அவர்கள் சொன்னார்கள். நான் அப்படிச் சொல்லாமல் விட்டுப்போயிருந்தால் அதைச் சேர்த்துக் கொள்ள வேண்டுகிறேன். நீதி விசாரணைக்குத் தயார், அதை சேர்த்துக்கொள்ளுங்கள்.

ஆனால் வந்து சொல்லுங்கள், இன்னின்ன தவறு, இதிலே விசாரணை வையுங்கள் என்று சொல்லுங்கள். முன்பு என்ன சொன்னார்கள் ? திருவாரூரில் கருணாநிதி ஐந்து லட்சம் ரூபாயில் வீடு கட்டியிருக்கிறான் என்று சொன்னார்கள். என் வீட்டில் குடியிருப்பவர் இன்னும் காலி செய்யவில்லை. என் வீடு மாட்டுத் தொழுவத்தைவிட மோசமான நிலையில் இருக்கிறது என்பதை புகைப்படமே எடுத்து புத்தகத்தில் போட்டு தரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்களால் தன்னுடைய சொந்தக்காரருக்கு கோவையில் பாலம் கட்டுவதற்குக் காண்ட்ராக்ட் கொடுக்கப்பட்டது என்று சொல்லப்பட்டது. காண்ட்ராக்ட்க்கு கொடுக்கப்பட்டவர் பெயர் ராஜகோபாலன். குலாம் காதருக்கும் கோகுலாஷ்டமிக்கும் முடிச்சுப் போட்டார்கள்.

க்ளோப் தியேட்டர் பற்றி எழுதிக் கொடுத்தார்கள். அந்த தியேட்டர் பற்றி எதிர்க்கட்சிக்காரர்கள் அனைவரும் கையெழுத்து போட்டதை வைத்துக்கொண்டுதான் அன்றைய தினம் அரசு ஒரு முடிவு எடுத்தது.

இப்படித்தான் எதையும் குறிப்பிட்டுச் சொல்லாமல் விசாரணைக் கமிஷன் வையுங்கள், விசாரணைக் கமிஷன் வையுங்கள் என்றால், கமிஷன் போடு, கமிஷன் போடு என்று சொன்னால் எங்கே போடுவது ? நான் வாங்கினால் அல்லவா உங்களுக்குக் கமிஷன் போட ? (சிரிப்பு).

அடிக்கடி கமிஷன் போடு, கமிஷன் போடு என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்திரா காந்தி அம்மையார் அவர்களிடம் கொண்டு போய் கொடுத்திருக்கிறீர்கள் அல்லவா, இந்திரா காந்தி அம்மையார் அவர்களே விசாரணை வைக்கட்டுமே? யார் வேண்டாம் என்கிறார்கள்? இந்தியாவிலே அவர்கள் எந்தெந்த அரசாங்கங்கள் மீது விசாரணை வைத்திருக்கிறார்கள்? இந்த அரசின்மீது என்ன பூர்வாங்கம் இருக்கிறது, என்ன ப்ரைமா ஃபேஸி கேஸ் இருக்கிறது என்று அவர்கள் முடிவு எடுக்கட்டும். அதை விட்டுவிட்டு நீங்கள் நீதி விசாரணை வையுங்கள் என்று எங்களைக் கேட்டால் நான் கேட்கிறேன், பேரவையிலே இல்லாதவர் என்ற வகையிலே அல்ல, பேரவையில் இருப்பவர் எம்.ஜி.ஆர். என்ற முறையில்தான் கேட்கிறேன். அவர் மீது எவ்வளவோ குற்றச்சாட்டுக்கள்? விசாரிக்கப்படவில்லையா? மத்திய அரசின் விசாரணைக்கு இன்றைக்கு எம்.ஜி.ஆர். ஆளாகியிருக்கவில்லையா? அன்னியச் செலாவணி விஷயமாக சம்மன்ஸ் அனுப்பப்பட்டு டெப்டி டைரக்டர் முன்னிலையில் நேரடியாக ஆஜராகியிருக்கிறார். தாக்கீதில் சொல்லப்பட்ட புகார்களுக்காக நேரில் ஆஜராகி எம்.ஜி.ஆர். வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்.

தாக்கீதில் சொல்லப்பட்டிருப்பவை சாதாரண குற்றங்கள் அல்ல, பொருளாதாரக் குற்றங்கள். அன்னியச் செலாவணி ஒழுங்கு முறைச் சட்டத்தின் 19 (2) விதியின்படி 12—8—1972 அன்று அன்னியச் செலாவணி விதிகளை மீறியதாக தாக்கீது அனுப்பப்பட்டது இந்த எம்.ஜி.ஆர்.-க்குத்தான். அனுப்பிய தாக்கீதுக்கு அவர் அனுப்பிய பதில் என்ன என்று நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்கப்பட்டது. விவரங்களைத் தெரிவித்தால் எம்.ஜி.ஆர். மீது நடைபெறும் விசாரணை பாதிக்கப்படலாம் என்று மத்திய அரசு நாடாளுமன்றத்தில் பதில் அளித்தது. பின்னர் நேரடி ஆஜராகும்படி இங்குள்ள அதிகாரிகளால் எம்.ஜி.ஆர்.-க்கு சம்மன் அனுப்பப்பட்டது.

7—9—1973 அன்று இதே எம்.ஜி.ஆர். சென்னையில் உள்ள என்போர்ஸ்மெண்ட் அலுவலகத்தில் டெப்டி டைரக்டர் முன்னால் நேரில் ஆஜரானார். அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது என்ற தகவலை 29—11—1973 அன்று பிரதமர் அவர்கள் மாநிலங்கள் அவையில் ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிறபோது சொல்லியிருக்கிறார்கள்.

இப்படி ஒரு விசாரணைக்கு ஆளாகியிருக்கிற ஒருவர் ஏதோ உத்தமபுத்திரனைப்போல் தன்னைக் கருதிக்கொண்டு மற்றவர்கள் எல்லாம் ஊழல் பேர்வழிகள் என்று கூறிக் கொண்டிருப்பது முறையானதல்ல.



இன்றைக்கு "நாங்கள் ஆளும் காங்கிரஸுடன் கூட்டுச் சேருகிறோம்" என்று சென்று இணைவதற்கு என்ன காரணம்? இது தான். இல்லாவிட்டால், ராணுவத்தைச் சந்திப்பேன் என்று மதுரை மாநாட்டில் முழங்கிவிட்டு, ராணுவத்தையா சந்திக்கிறாய், அன்னியச் செலாவணி அதிகாரிகளைச் சந்திப்பாயாக! வருமான வரி அதிகாரிகளைச் சந்தி! என்று சொன்னதும் ஒரு கட்சியைக் காட்டிக் கொடுத்தவர்.

பகிரங்க நீதி விசாரணை வேண்டுமென்று சொல்கிறார்கள். மத்திய அரசு என்ன விசாரிப்பது? எம்.ஜி.ஆர். சொல்லட்டும். மத்திய அரசு விசாரிப்பதற்குப் பதிலாக ஒரு நடுநிலை நீதிபதி தலைமையில் பகிரங்க விசாரணைக்கு உட்பட எம்.ஜி.ஆர். தயாராக இருக்கிறாரா? நான் அவர் மீது இவ்வளவு குற்றச் சாட்டுகளை சொல்லியிருக்கிறேனே.

ஒரு விரலை எங்கள் முன்னால் நீட்டுகிற நேரத்தில் உங்களைப் பார்த்து மூன்று விரல்கள் நீட்டப்பட்டிருக்கின்றன என்பதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மறந்துவிட வேண்டாம். எந்த விசாரணைக்கும் நான் தயாராக இருக்கிறேன், இங்கே வந்து பேசுங்கள் என்றால், ஒன்றரை மணி நேரம் பேசினார், அதை ஒலிப் பெருக்கியில் விடவில்லை, தடுத்தீர்கள் என்று இதை மாத்திரம் சமாதானமாகச் சொன்னால் பயன் இல்லை. பல நேரங்களில் பல நிலைமைகள் இந்த அவையில் ஏற்பட்டிருக்கின்றன. பொன்னப்ப நாடார் அவர்களானாலும் சரி, தங்கமணி அவர்களானாலும் சரி, அல்லது மாரிமுத்து அவர்களானாலும் சரி எத்தனையோ எதிர்ப்புகளை எழுப்பியிருக்கிறார்கள், வெளி நடப்பும் செய்திருக்கிறார்கள்.

பேரவைத் தலைவர் அவர்களை, அல்லது முதல் அமைச்சர் அவர்களை, அல்லது அமைச்சர்களைக் கண்டித்து வெளிநடப்பு செய்தவர்கள் இனிமேல் வரவேமாட்டோம் என்று சொல்லி தங்கள் ஜனநாயகக் கடமைகளை ஆற்ற மறந்து விட்டார்களா? இல்லையே! ஜனநாயகக் கடமைகளை ஆற்றத்தான் இருக்கிறது இந்த மன்றம். இந்த மன்றத்தில் வந்து சொல்லட்டும். கருணாநிதி இன்ன தவறு செய்தார், நாவலர் இன்ன தவறு செய்தார், பேராசிரியர் இன்ன தவறு செய்தார் அல்லது அமைச்சர்கள் இன்னின்ன தவறுகளைச் செய்தார்கள் என்று இந்த அவையில் வந்து சொல்லட்டும். அப்படிச் சொல்கின்ற வழியில் இல்லாமல் நான் சொன்ன வார்த்தையையே திரும்பச் சொல்கிறேன் என்று 'வக்கற்ற அரசாங்கம், வகையற்ற அரசாங்கம்' என்று காளிமுத்து சொல்லிவிட்ட காரணத்தால் நான் வருத்தப்படவில்லை. பல நாட்கள் நான் சொன்ன வார்த்தைகளை திரும்பத் திரும்பச் சொல்லி என் காதுகளுக்கு இனிமையை ஊட்டியவர் தான் நண்பர் காளிமுத்து. அவர் சொன்ன வார்த்தைகளுக்காக நான் கவலைப்படவில்லை. அவர், இங்கே எனக்காக

கண்ணீர் வடிக்கிறேன் என்று சொன்னார். எனது மரணத் தருவாயில், எனது மரணப் படுக்கையில் காளிமுத்துவின் கண்ணீர் என் மீது விழுந்தால் ஒரு துரோகியின் கண்ணீர் என் மீது விழுந்ததே என்றுதான் நான் கவலைப்படுவேன் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் துரோகி என்று. அந்த வார்த்தையை இந்த சட்டமன்றத்தில் உபயோகப்படுத்துவது நியாயம் அல்ல. அந்த வார்த்தையை மட்டும் சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி கேட்டுக்கொள்கிறேன். முதல் அமைச்சர் அவர்களுக்கு உகந்த வார்த்தை அல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நண்பர் ஹாண்டே அவர்கள் சத்தியவாணிமுத்து என்னைப் பார்த்து அன்று சொன்னதை, விரலை நீட்டி துரோகி நம்பர் ஒன் என்று சொன்னார்களே, அப்போது ஹாண்டே எங்கே போயிருந்தார் ?

திரு. கா. காளிமுத்து : முதல் அமைச்சர் அவர்கள் துரோகி என்று சொல்கிறார்கள். அதற்கு என்ன இலக்கணம், கூறுகிறார்கள் என்பதை அவர்களிடம் இருந்து தெரிந்து கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கட்டபொம்மன்-எட்டப்பன் சரித்திரத்தைப் படித்துப் பார்த்தால் புரியும்.

(கூச்சல்—குழப்பம்.)

டாக்டர் எச்.வி. ஹாண்டே: நாங்கள் வாக்அவுட் செய்கிறோம். (அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி ''தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டது.



பிரிவு 1, அட்டவணை, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவு சட்டமாக ஆக்கப்பட வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 15-ம் தேதி, செவ்வாய் கிழமை அன்று காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2—00 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

## (8) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

172. Notification issued in G.O. Ms. No. 47, Prohibition and Excise, dated the 12th February 1975, in regard to an amendment to the Tamil Nadu Liquor (Licence and Permit) Rules, 1960. [*Laid on the table of the House under section* 54(3) *of the Tamil Nadu Prohibition Act*, 1937 (*Tamil Nadu Act X of* 1937).]

@ 173. The Tamil Nadu Governments' Review and the Fifth Annual Report and Statement of Accounts of the Tamil Nadu Textile Corporation Limited for the year ended 31st December 1973. [*Laid on the table of the House under section* 619 (*A*) *of the Indian Companies Act*, 1956 (*Central Act I of* 1956).]

### *B. Reports, Notifications and Other Papers.*

% 168. The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1975 (L.A Bill No. 15 of 1975).

169. List of Unstarred Questions and Answers from Nos. 1 to 60.

---

@ Laid on the table of the Legislature Library with reference to the proviso to Rule 21 (5) of the Tamil Nadu Legislative Assembly Rules.

% Despatched to members on 10th April 1975.

## இணைப்பு—I.

*[409-ம் பக்கங்களில் 641 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]*

உயர்நிலைப்பள்ளிகளில் கணிதம் மற்றும் அறிவியல் கற்பிக்கும் பி. டி. ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சியளிப்பதற்காக 1-6-1974 நாளிட்ட 1121 எண்ணுள்ள கல்வித் துறை அரசாணையில் ரூ. 11.87 லட்சம் ஒப்பளிக்கப்பட்டது. புதிய பாடத்திட்டத்தின்படி' கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களை கற்பிக்க வல்ல அறிஞர்களும், அப்பாடங்களுக்கு புதிய பாடத் திட்டத்தைத் தயாரித்தவர்களும், அப்பாடங்களுக்குப் புதிய பாட நூல் எழுதியோரும் மேற்சொன்ன பணியிடைப் பயிற்சியை எவ்வாறு அளிப்பது என்பது பற்றி சமீபத்தில் கலந்து பேசினர். அவ்வமயம் பணியிடைப் பயிற்சிக்கான செயல் முறையை வகுக்க குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன.

உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு மேற்சொன்ன பணியிடைப் பயிற்சி அளிக்க இருக்கும் பணிப்பயிற்சி தரும் ஆசிரியர்களை (Teacher Educators) உருவாக்கும் வல்லுநர்கள் (Master Educators) தற்சமயம் பயிற்சியின் தன்மையும் நிகழ்ச்சி நிரலையும் நிர்ணயிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பணிப்பயிற்சிதரும் ஆசிரியர்கள் வல்லுநர்களிடம் முதற்கண் பயிற்சி பெற்று, அதன்பின் ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிப்பர்.

1975 ஜனவரி 2–11 நாட்களில் ''பணிப்பயிற்சி தரும் ஆசிரியர்கள்' சென்னை, கோவை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மையங்களில் பயிற்றுவிக்கப்பட்டனர். அவர்கள் 1975, மே, ஜூன் மாதங்களில் பி. டி. ஆசிரியர்களுக்கு பணியிடைப்பயிற்சி அளிப்பார்கள்.

In G.O. Rt. No. 1121, Education dated 1st June 1974, the Government sanctioned a sum of Rs. 11.87 lakhs for giving in service training to B.T. Assistants handling mathematics and science classes in high schools. For the implementation of this scheme, experts in the field of teaching Mathematics and Science according to the new syllabus and those who were involved in the preparation of the new syllabus in Mathematics and Science and in the writing of text books for the classes met recently and committees have been formed to work out the scheme for giving inservice training.

The master educators are meeting now and are setting up working papers for the courses and the programme of work to be done in the centres. They will give orientation training to teacher-educators who in turn would train the teachers.



During January 1975 (from 2nd January 1975 to 11th January 1975) the teacher educators alone were oriented in new Science and new Mathematics by master-educators in the following centres :—

1. Madras.
2. Coimbatore.
3. Tiruchirappalli,
4. Madurai and
5. Tirunelveli.

These teacher-educators will give orientation courses to the B.T. teachers in May and June 1975.

## இணைப்பு-II.

*[421-ம் பக்கத்தில் 5-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிடாத வினாவிற்குரிய விடையைக் காண்க.]*

| தொடர் எண்ணும் மாவட்டமும். | மாநில குடும்பநலத் திட்டங்களில் தீவிர பிரச்சாரத்திற்கான செலவு. | |
|---|---|---|
| | 1972 | 1973 |
| (1) | (2) | (3) |
| | ரூ. | ரூ. |
| 1. செங்கல்பட்டு .. .. | 11,74,489 | .. |
| 2. மதுரை .. .. .. | 54,629 | .. |
| 3. இராமநாதபுரம் .. .. | 11,38,729 | .. |
| 4. திருநெல்வேலி .. .. | 25,92,299 | .. |
| 5. தென்னாற்காடு .. .. | 26,83,303 | 41,08,404 |
| 6. நீலகிரி .. .. .. | 42,409 | .. |
| 7. தர்மபுரி .. .. .. | 3,36,000 | .. |
| 8. சேலம் .. .. .. | 13,14,930 | 7,21,125 |
| 9. வட ஆற்காடு .. | 84,918 | 24,258 |
| 10. கோயம்புத்தூர் .. .. | 23,87,220 | .. |
| 11. தஞ்சாவூர் .. .. | 37,77,263 | 9,51,500 |
| 12. திருச்சிராப்பள்ளி .. .. | 36,12,340 | 1,80,227 |

இந்திய அரசு ஆணையின்படி குடும்பநல தீவிர திட்டத்தின் கீழ் குறைந்த பட்சம் 10,000 கருத்தடை அறுவை சிகிச்சை செய்தாக வேண்டும். சென்னையிலும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் 10,000 கருத்தடை அறுவை சிகிச்சை செய்வதற்கான நபர்கள் கிடைக்கப் பெறுவது கடினமான காரணத்தால் இவ்விரு மாவட்டங்களிலும் 1972, 1973 ஆம் ஆண்டுகளில் குடும்பநல தீவிர திட்டம் அமுல் செய்யப்படவில்லை.

## இணைப்பு—III

(429-ம் பக்கத்தில் 16-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிடாத வினாவிற்குரிய விடையைக் காண்க.)

At the instance of the Government of India, various special employment schemes for the educated unemployed have been formulated for inclusion under the Half-a-Million Jobs Programme for the year 1973—74. The scheme for the department of fisheries is one of the schemes included under this programme.

2. Government have sanctioned the following four types of societies for implementing the schemes through the Fisheries Co-operative Societies to be organised by the educated unemployed persons :

1. Construction of Boards Societies.
2. Operation of Boards Societies.
3. Service Centres Societies.
4. Processing Plants Societies.

For these schemes funds from the Government of India under the Half-a-Million Jobs Programme will be made available as share capital contribution to the extent of three times of the contribution made by the individual share holders. The following amount of share capital has been prescribed to be paid by the candidates and the Government of India contribution in this regard is given below :

| | *Individual share capital.* | *Government of India contribution.* |
|---|---|---|
| | RS. | RS. |
| 1. Engineering graduates .. .. | 5,000 | 15,000 |
| 2. Diploma holders and graduates .. | 3,500 | 10,500 |
| 3. Others .. .. .. | 2,500 | 7,500 |



3. Since it will not be possible for an unemployed candidate to pay so much amount as share capital, the Fisheries Department has collected Rs. 100 as initial share capital and Rs. 2 as entrance fees from the candidates and loan has been arranged from the Commercial Banks for the rest of the amount. After getting further loan from the banks, the scheme will be implemented. The Government of India has also approved this scheme and a sum of Rs. 86.61 lakhs has been sanctioned by them towards share capital of Fisheries Co-operatives.

4. Twenty three Fisheries Co-operative Societies have been registered with 600 members during the year 1973-74 under this scheme. Government of India contribution to the tune of Rs. 45,93,000 has been drawn for 22 Fisheries Co-operative Societies and deposited in the concerned banks so far. Government of India contribution to the tune of Rs. 4, 24, 500 for the one more registered society and for some other members in other societies could not be drawn during the year 1973-74 and this amount has been claimed from the Government of India. A total sum of Rs. 66, 90,000 will be available to implement the scheme for providing jobs for 600 candidates. The types of societies and the places where they are to be established are given in the ' annexure '.

5. The members of the Fisheries Co-operative Societies formed by the educated unemployed are quite new to the fisheries field. Hence, it is considered absolutely necessary to train them properly in the various technicalities of the jobs for such period as will be required to do their jobs efficiently and to pay them stipends according to the guidelines prescribed by the Government of India. Accordingly, all the 600 candidates who are now members in the 23 Fisheries Co-operative Societies, were deputed for training in the various departmental and private institutions on payment of stipend as follows :

| | RS. | |
|---|---|---|
| 1. Engineering Graduates .. .. .. | 400 | per mensem |
| 2. Post-Graduates.. .. .. .. | 200 | „ |
| 3. Graduates ... .. .. .. .. | 150 | „ |
| 4. Diploma holders .. .. .. .. | 250 | „ |
| 5. I.T.I. Certificate holders and others .. .. | 100 | „ |

Accordingly, the candidates underwent training from February 1974 onwards.

6. On completion of training the members will be absorbed by the various Fisheries Co-operatives under self-employment programme.

இணைப்புகள்

| Type of the society. | Place. | Number of societies established. |
|---|---|---|
| 1. Boat construction Society .. | Cuddalore .. | 1 |
| | Tuticorin .. | 1 |
| | Colachel .. | 1 |
| 2. Processing and Freezing Society | Madras .. | 1 |
| | Cuddalore .. | 1 |
| | Tuticorin | 1 |
| | Colachel .. | 1 |
| 3. Service Centre Society .. .. | Madras .. | 1 |
| | Cuddalore .. | 1 |
| | Tuticorin .. | 1 |
| | Colachel .. | 1 |
| 4. Boat Operative Society .. | Madras .. | 5 |
| | Cuddalore .. | 2 |
| | Tuticorin .. | 2 |
| | Colachel .. | 1 |
| | Mandapam .. | 1 |
| | Rameswaram | 1 |
| | Total .. | 23 |

விடை—

இந்திய அரசாங்கத்தின் ஐந்து லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1973–74 ஆண்டிற்கு பல பிரத்தியேக திட்டங்கள் கல்வி கற்ற வேலையற்றோருக்காக உருவாக்கப்பட்டுள்ளது. மீன் துறையில் உருவாக்கப்பட்ட திட்டங்கள் இவற்றுள் ஒன்றாகும்.

2. படித்த வேலையற்றோரைக் கொண்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அவைகளின் மூலமாக, கீழ்க்கண்ட நான்கு திட்டங்களை அமுல்படுத்த அரசு அங்கீகாரம் அளித்துள்ளது:—

1. மீன்பிடி விசைப்படகுகள் கட்டுதல்.
2. படகுகளைக் கொண்டு மீன் பிடித்தல்.
3. விசைப் படகுகள் பராமரிப்பு நிலையங்கள் அமைத்தல்.
4. மீன் பதனிடும் ஆலைகள் நிர்மாணித்தல்.



இத் திட்டங்களை அமுல்படுத்த சங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தினரின் பங்குத் தொகையைப் போன்று மூன்று மடங்கு தொகை இந்திய அரசு அளிக்க அனுமதித்துள்ளது: அங்கத்தினர்களின் பங்குத் தொகையும், இந்திய அரசின் பங்குத் தொகையும், கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது :—

| | அங்கத்தினரின் பங்குத் தொகை. (1) | இந்திய அரசின் பங்குத் தொகை. (2) |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1. பொறியியல் பட்டதாரிகள் .. | 5,000 | 15,000 |
| 2. பொறியியல் டிப்ளமா பெற்றவர்கள், பட்டதாரிகள். | 3,500 | 10,500 |
| 3. ஐ.டி.ஐ., பி.யு.சி., எஸ்.எஸ்.எல்.சி., மெட்ரிக்குலேஷன் மற்றும் மீனவர் பயிற்சி நிலையங்களில் சான்று பெற்றோர். | 2,500 | 7,500 |

3. வேலையற்றோரால் மேற்கொண்ட பங்குத் தொகை கொடுப்பதற்கு சிரமமாதலால் ஒவ்வொருவரிடமிருந்தும் ரூ. 100 பெற்றுக் கொண்டு மிகுதித் தொகையை வங்கிகள் மூலம் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தொகை தேவைப்பட்டால் அத்தொகையும் கடனாக வங்கிகளிடமிருந்து பெறலாம். இத் திட்டத்தை செயல்படுத்த மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலதனத்திற்கென இந்திய அரசு ரூபாய் 86.61 லட்சம் ஒதுக்கியுள்ளது.

4. இத்திட்டத்தின் கீழ் 1973–74-ஆம் ஆண்டில் மொத்தம் 600 படித்த வேலையற்றோர்களுக்குப் புதியதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இருபத்து மூன்று மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வேலை வாய்ப்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவைகளில், 22 சங்கங்களுக்கான 45,93,000 ரூபாய் பங்குத் தொகை இந்திய அரசிடமிருந்து பெற்று வங்கிகளில் வைக்கப்பட்டுள்ளது. மற்றும் ஒரு சங்கத்திற்குரிய பங்குத் தொகையும், சில அங்கத்தினர்களுக்கான பங்குத் தொகையும் சேர்த்து ரூ. 4,24,500 மத்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. அங்கத்தினர்களின் பங்குத் தொகைக்கான 16,72,500 ரூபாய் வங்கிகளிடமிருந்து விரைவில் பெறப்படும், மொத்த ரூ. 69,90,000-யை மூலதனமாகக் கொண்டு 600 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் விவரமும், அவைகள் செயல்படும் இடமும் பிற்சேர்க்கையில் அளிக்கப்பட்டுள்ளது.

இணைப்புகள்—தொடர்ச்சி

5. இக்கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்கள் மீன் துறை தொழில் அனுபவம் அற்றவர்கள். ஆதலால் அவர்களுக்கு தொழில் நுட்பங்களில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பயிற்சி முடிந்தவுடன் அவர்கள் தொழில் நடத்தக் கூடியவர்களாக இருப்பார்கள். பயிற்சி காலத்தில் அவர்களுக்கு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. 600 பேர்கள் ஏற்கனவே சங்கங்களில் சேர்க்கப்பட்டு மீன் துறையில் பல்வேறு தொழிற் கூடங்களிலும், தனியார் தொழிற்கூடங்களிலும், பயிற்சி பெற்றார்கள். அவர்களுக்குக் கீழ்க்கண்ட உதவித் தொகை அளிக்கப் பட்டது:

| | மாதத்திற்கு ரூபாய். |
|---|---|
| 1. பொறியியல் பட்டதாரிகள் .. .. .. | 400 |
| 2. பட்டமேற்படிப்புள்ளவர் .. .. .. | 200 |
| 3. டிப்ளமா பெற்றவர்கள் .. .. .. | 250 |
| 4. மற்ற பட்டதாரிகள் .. .. .. | 150 |
| 5. மற்றவர்கள் .. .. .. .. | 100 |

6. இப்பயிற்சி சென்ற பிப்ரவரி 1974 திங்களிலிருந்து அளிக்கப் பட்டது. இப்பயிற்சி முடிவடைந்த பின் சுயவேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் பயிற்சியாளர் அனைவரும் பல்வேறு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் வேலையில் அமர்த்தப்படுவர்.

பிற்சேர்க்கை.

| கூட்டுறவுச் சங்கத்தின் விவரம். (1) | இடம். (2) | எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 1. விசைப்படகுகள் கட்டும் கூட்டுறவு சங்கம். | கடலூர் .. | 1 |
| | தூத்துக்குடி .. | 1 |
| | குளச்சல் .. | 1 |
| 2. விசைப்படகு பராமரிப்பு நிலைய கூட்டுறவுச் சங்கம். | சென்னை .. | 1 |
| | கடலூர் .. | 1 |
| | தூத்துக்குடி .. | 1 |
| | குளச்சல் .. | 1 |



பிற்சேர்க்கை—தொடர்ச்சி.

| கூட்டுறவுச் சங்கத்தின் விவரம். (1) | இடம். (2) | எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 3. மீன் பதனிடும் கூட்டுறவுச் சங்கம். | சென்னை .. | 1 |
| | கடலூர் .. | 1 |
| | தூத்துக்குடி .. | 1 |
| | குளச்சல் .. | 1 |
| 4. விசைப்படகுகளைக் கொண்டு மீன் பிடிக்கும் சங்கம். | சென்னை .. | 5 |
| | கடலூர் .. | 2 |
| | தூத்துக்குடி .. | 2 |
| | குளச்சல் .. | 1 |
| | மண்டபம் .. | 1 |
| | இராமேஸ்வரம் .. | 1 |
| | மொத்தம் .. | 23 |

இணைப்பு IV.

[431-ம் பக்கத்தில் 20-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிடாத வினாவிற்குரிய விடையைக் காண்க.]

List of publications brought out by the State Institute of Education, Madras during 1972–73.

EDUCATION.

| Name of publication. (1) | Date. (2) |
|---|---|
| 1. கற்பித்தல் பகுதி—வகுப்பு 8 வரலாறு—இத்தாலி, ஜெர்மனிய நாடுகளில் ஒற்றுமை. | July 1972 |
| 2. A study on the functioning of Institutional Planning in High Schools of Saidapet Division. | Do. |
| 3. தரமான கல்வி பெற நாம்செய்யும் பணி | August 1972 |
| 4. A Scheme of Evaluation .. .. .. | Do. |

MATHEMATICS.

| | |
|---|---|
| 1. கனமொழி | July 1972 |
| 2. எண்முறைகள்—எண்களின் அவசியம் | August 1972 |
| 3. அடி இரண்டில் 11+1=100 | Do. |
| 4. எண்கோடுகள் | March 1972 |

LANGUAGE—TAMIL.

| | |
|---|---|
| 1. தமிழ் எழுதுவதில் ஏற்படும் பிழைகளும் நீக்கும் முறைகளும் | August 1972 |

| Name of publication (1) | Date. (2) |
|---|---|

## GENERAL.

| | |
|---|---|
| 1. ஆசிய கல்வி நிறுவனம் | September 1972 |
| 2. தேசிய கல்வி நிறுவனம் | Do. |

### MANUSCRIPTS—EDUCATION.

| | |
|---|---|
| 1. Rating scale for graduate teachers .. | October 1972 |

## HISTORY.

| | |
|---|---|
| 1. இங்கிலாந்தில் பாராளுமன்ற வளர்ச்சி கற்பித்தல் பகுதி—8ஆம் வகுப்பு | August 1972 |
| 2. Hans Anderson Christian Stories (5 stories) | November 1972 |

List of publications brought out by the State Institute of Education, Madras during 1973–74.

## EDUCATION.

| | |
|---|---|
| 1. பேராசிரியர் பள்ளி ஏற்படக்காரணம் | August 1973. |
| 2. Programmed Instructions .. .. .. | October 1973. |
| 3. Humanizing Education .. .. .. .. | November 1973. |
| 4. நீதி போதனை முறைகள் .. .. .. | December 1973. |
| 5. Guidance Personnel .. .. .. | March 1974. |
| 6. How guidance can help in minimising stagnation and wastage. | Do. |
| 7. Action Researches .. .. .. | Do. |
| 8. Junior Red Cross .. .. .. .. | Do. |
| 9. Library Associations .. .. .. .. | Do. |
| 10. Place of art in Life and in Education .. | Do. |

## SCIENCE.

| | |
|---|---|
| 1. இளைஞர் அறிவியல் மன்றம் | November 1973 |
| 2. அறிவியல் ஆர்வமூட்ட சில அறிவியல் சோதனைகள்—பகுதி 1. | March 1974 |

## MATHEMATICS.

| | |
|---|---|
| 1. ஒன்று முதல் 5 வகுப்புகளுக்குப் பாடதிட்டத்தில் ஏற்பட்டுள்ள கணித துணைக் கருவிகள் | April 1973 |
| 2. கணித வாக்கியங்கள் .. .. | October 1973 |
| 3. எண் பண்புகள் .. .. | November 1973 |



| Name of publication. (1) | Date. (2) |
|---|---|

### LANGUAGE—ENGLISH.

| | |
|---|---|
| 1. Teaching of English with reference to new syllabus. | April 1973 |

## MANUSCRIPTS—EDUCATION.

| | |
|---|---|
| 1. தொடக்கப் பள்ளிகளில் நீதி போதனை கற்பித்தலின் இன்றியமையாமை | November 1973. |
| 2. Educational guidance .. .. .. | March 1974 |
| 3. Vocational guidance .. .. .. | Do. |
| 4. Counselling .. .. .. .. .. | Do. |
| 5. Student unrest .. | Do. |
| 6. Television .. .. .. | Do. |
| 7. Team teaching .. .. .. .. .. | Do. |
| 8. Class control .. .. .. | Do. |
| 9. Wastage and continuing education .. .. | Do. |
| 10. Co-curricular activities .. .. .. | Do. |
| 11. Understanding some terms and concepts of curriculum. | Do. |
| 12. பாகுபாடற்ற கல்வித் திட்டம் .. .. | Do. |
| 13. Aims and objectives in education and their significances to curriculum planners. | Do. |

### SCIENCE.

| | |
|---|---|
| 1. Teaching Science in Elementary Schools .. | January 1974 |
| 2. Diagrams in Teaching of Biology .. .. | March 1974 |
| 3. திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டத்தில் முதல் ஐந்து வகுப்புகளுக்கான அறிவியல் துணைக்கருவிகள். | Do. |

### GEOGRAPHY.

| | |
|---|---|
| 1. Some thoughts of Teaching Geography .. | March 1974. |

### LANGUAGE.

| | |
|---|---|
| 1. தமிழ் இலக்கணப் பாடத்தை எளிதாக கற்பிக்கும் முறை. .. | October 1974 |

## இணைப்பு V.

[436-ம் பக்கத்தில் 30-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிடாத வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) குடும்பநலத் திட்டத்தைப் பரப்புவதற்காக நியமிக்கப் பட்டுள்ள தனிப் பணியாளர்களின் விவரங்கள் பின்வருமாறு :—

**மாநில குடும்பநல அலுவலகத்தில் பணியாற்றுபவர்கள்.**

1. மக்கள் நல்வாழ்வு & குடும்பநலத் துறை உதவி இயக்குனர். (குடும்பநலம்-விளக்கப்பணி)
2. மக்கள் கல்வி, தகவல் அலுவலர்.
3. சுகாதாரக் கல்வி அலுவலர்
4. பதிப்பாசிரியர்
5. துணைப் பதிப்பாசிரியர்

**நகர்ப்புற குடும்பநல அலுவலகங்களில் பணியாற்றுபவர்கள்.**

1. மக்கள் கல்வி, தகவல் அலுவலர் (ஒன்று)
2. மாவட்ட விரிவாக்க அலுவலர் (ஆண்) (மாவட்டத்திற்கு ஒன்று வீதம்)
3. குடும்பநல விரிவாக்க அலுவலர் (ஆண்)
4. குடும்பநலப் பணியாளர் (ஆண்)
5. குடும்பநலத் திட்ட கல்வி விரிவாக்க அலுவலர் (பெண்)
6. குடும்பநலப் பணியாளர் (பெண்)

**வளர்ச்சி வட்டாரத்தில் பணியாற்றும் அலுவலர்கள், பணியாளர்கள்.**

1. வளர்ச்சி வட்டார விரிவாக்க அலுவலர் (ஒன்று)
2. குடும்பநல சுகாதார ஆய்வாளர் (நான்கு)
3. உடல்நலப் பார்வையாளர் (ஒன்று)
4. தாய்மை மருத்துவத் துணைச் செவிலி (ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒன்று வீதம்)
5. பத்தாயிரம் ஜனத்தொகைக்குள் அடங்கிய ஒவ்வொரு துணை நிலையத்திற்கும் ஒரு தாய்மை மருத்துவத் துணைச் செவிலி.



Details of staff sanctioned for propagating Family Planning Schemes at the State, District and Block levels are as follows :—

*State level.—*

(i) Deputy Director of Health Services and Family Planning (F.P.M.E.)

(ii) Mass Education and Information Officer.

(iii) Health Education Officer.

(iv) Editor.

(v) Assistant Editor.

All the above personnel are attached to State Family Planning Bureau.

*District level.—*

(i) Mass Education and Information Officer.

(ii) District Extension Educator (Male) in each District Family Planning Bureau in the Districts.

(iii) Family Planning Extension Educator (Male).

(iv) Family Planning Welfare Worker (Male)

(v) Family Planning Extension Educator (Female)

(vi) Family Planning Welfare Worker (Female).

All the above persons are attached to Urban areas.

*Block level.—*

Block Extension Educator (One).

Family Planning Health Inspectors (Four).

Health Visitor (One).

One Auxiliary Nurse Midwife in each Primary Health Centre at Block level.

One Auxiliary Nurse Midwife in each sub-centre with a population of about 10,000.

# இணைப்பு VI.

*[436 ம் பக்கத்தில் 31–ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிடாத வினாவிற்குரிய விடையைக் காண்க.]*

| தொடர் எண்ணும் சங்கத்தின் பெயரும். (1) | இயங்கும் இடங்கள். (2) |
|---|---|
| 1. காஞ்சீபுரம் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | காஞ்சீபுரம் |
| 2. பொம்மராஜாபேட்டை எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 3. மதுராந்தகம் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 4. எலப்பாக்கம் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 5. கொண்டகுப்பம் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | வேலூர் |
| 6. காவேரிப்பட்டணம் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | தர்மபுரி |
| 7, கிருஷ்ணகிரி எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 8. புதுப்பேட்டை எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | கடலூர் |
| 9. மன்னார்குடி எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | திருவாரூர் |
| 10. திருவாலங்காடு எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 11. குடந்தை எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | தஞ்சாவூர் |
| 12. கரந்தை எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 13. பாபநாசம் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 14. பூவாலூர் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | திருச்சிராப்பள்ளி |
| 15. வில்லாங்குடி எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 16. அரியலூர் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |



| தொடர் எண்ணும் சங்கத்தின் பெயரும். (1) | இயங்கும்இடங்கள். (2) |
|---|---|
| 17. நல்லூர் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | நாமக்கல். |
| 18. அமரகண்டி எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | சேலம். |
| 19. பாப்பம்பாடி எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 20. வெள்ளகோயில் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ஈரோடு. |
| 21. அப்பிச்சிமார்மடம் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 22. அவனாசி எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | கோயம்புத்தூர் |
| 23. பஞ்சலிங்கம்பாளையம் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 24. கடம்பாடி எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | திருப்பூர். |
| 25. காடுவெட்டிபாளையம் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 26. பட்டம்பாளையம் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 27. எளத்தூர்சட்டிபாளையம் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 28. என். ஜி. வாளாளு எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | திண்டுக்கல். |
| 29. சின்னாளப்பட்டி எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 30. மதுரை நகர நாட்டு செக்கு எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | மதுரை. |
| 31. உசிலம்பட்டி எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 32. வத்தலகுண்டு எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 33. மேலூர் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 34. மாரியம்மன் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ஸ்ரீவில்லிபுத்தூர். |

| தொடர் எண்ணும் சங்கத்தின் பெயரும். (1) | இயங்கும் இடங்கள். (2) |
|---|---|
| 35. சாத்தூர் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 36. தாயில்பட்டி எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 37. ஆர். என். பட்டி எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 38. கமுதி எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | பரமக்குடி. |
| 39. கடலையூர் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | கோயில்பட்டி. |
| 40. பேட்டை எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | திருநெல்வேலி. |
| 41. வள்ளியூர் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 42. கோட்டூர் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | நாகர்கோவில். |
| 43. ஆசாரிபள்ளம் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 44. இரானியல் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 45. மைலாடி எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 46. பெருங்கோடு எண்ணெய் உற்பத்தியளார் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 47. புதுக்கடை எண்ணெய் உற்பத்தியளார் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 48. செரப்பலூர் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 49. இடைகோடு எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |
| 50. எத்தன்காடு எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். | ,, |



| *Serial number and name of the society.* (1) | *Development district.* (2) |
|---|---|
| 1. Kancheepuram Oil Producers Co-operative Society. | Kancheepuram. |
| 2. Bommarajapet Oil Producers Co-operative Society. | Do. |
| 3. Maduranthakam Oil Producers Co-operative Society. | Do. |
| 4. Elappakkam Oil Producers Co-operative Society. | Do. |
| 5. Kondakuppam Oil Producers Co-operative Society. | Vellore. |
| 6. Kaveripattinam Oil Producers Co-operative Society. | Dharmapuri. |
| 7. Krishnagiri Oil Producers Co-operative Society. | Do. |
| 8. Pudupet Oil Producers Co-operative Society .. | Cuddalore. |
| 9. Mannargudi Oil Producers Co-operative Society. | Tiruvarur. |
| 10. Thiruvalangadu Oil Producers Co-operative Society. | Do. |
| 11. Kudanthai Oil Producers Co-operative Society. | Thanjavur. |
| 12. Karanthai Oil Producers Co-operative Society. | Do. |
| 13. Papanasam Oil Producers Co-operative Society. | Do. |
| 14. Poovalur Oil Producers Co-operative Society. | Tiruchirappalli. |
| 15. Villangudy Oil Producers Co-operative Society. | Do. |
| 16. Ariyalur Oil Producers Co-operative Society. | Do. |
| 17. Nallur Oil Producers Co-operative Society. | Namakkal. |
| 18. Amaragandi Oil Producers Co-operative Society. | Salem. |
| 19. Pappambadi Oil Producers Co-operative Society. | Do. |
| 20. Vellakoil Oil Producers Co-operative Society. | Erode. |
| 21. Appichimarmadam Oil Producers Co-operative Society. | Do. |
| 22. Avanashi Oil Producers Co-operative Society. | Coimbatore. |
| 23. Panchalingampalayam Oil Producers Co-operative Society. | Do. |
| 24. Kadambadi Oil Producers Co-operative Society. | Tirupur. |
| 25. Kaduvettipalayam Oil Producers Co-operative Society. | Do. |

| *Serial number and name of the society.* | *Development district* |
| --- | --- |
| (1) | (2) |
| 26. Pattampalayam Oil Producers Co-operative Society. | Tiruppur. |
| 27. Elathuchettipalayam Oil Producers Co-operative Society. | Do. |
| 28. N. G. Valalu Oil Producers Co-operative Society. | Dindigul. |
| 29. Chinnalapatti Oil Producers Co-operative Society. | Do. |
| 30. Madurai City Nattu Chekku Oil Producers Co-operative Society. | Madurai. |
| 31. Usilampatti Oil Producers Co-operative Society. | Do. |
| 32. Batlagundu Oil Producers Co-operative Society. | Do. |
| 33. Melur Oil Producers Co-operative Society. | Do. |
| 34. Mariamman Oil Producers Co-operative Society. | Srivilliputhur. |
| 35. Sathur Oil Producers Co-operative Society. | Do. |
| 36. Thayilpatti Oil Producers Co-operative Society. | Do. |
| 37. R. N. Patti Oil Producers Co-operative Society. | Do. |
| 38. Kamuthi Oil Producers Co-operative Society. | Paramakudi. |
| 39. Kadaliyur Oil Producers Co-operative Society. | Koilpatti. |
| 40. Pettai Oil Producers Co-operative Society. | Tirunelveli. |
| 41. Valliyur Oil Producers Co-operative Society. | Do. |
| 42 Kottar Oil Producers Co-operative Society | Nagercoil. |
| 43. Asaripallam Oil Producers Co-operative Society. | Do. |
| 44. Eraniel Oil Producers Co-operative Society. | Do. |
| 45. Mailaudy Oil Producers Co-operative Society. | Do. |
| 46. Peruncode Oil Producers Co-operative Society. | Do. |
| 47. Pudukadai Oil Producers Co-operative Society. | Do. |
| 48. Cheruppalur Oil Producers Co-operative Society. | Do. |
| 49. Edaicode Oil Producers Co-operative Society. | Do. |
| 50. Ethancadu Oil Producers Co-operative Society. | Do. |



## இணைப்பு VII.

*[444-ம் பக்கத்தில் 42-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிடாத வினாவிற்குரிய விடையைக் காண்க.]*

### மாயூரம் நகரிலுள்ள திருக்கோயில்கள்.

1. அருள்மிகு பிள்ளையார் ஆலயம், கொரநாடு, மாயூரம் நகர்.

2. அருள்மிகு விசுவநாதசாமி ஆலயம், கொரநாடு, மாயூரம் நகர்.

3. அருள்மிகு பிள்ளையார் ஆலயம் (பெரிய மணவளி தெரு), கொரநாடு, மாயூரம் நகர்.

4. அருள்மிகு பிள்ளையார் ஆலயம் (பேட்டை தெற்கு தெரு), கொரநாடு, மாயூரம் நகர்.

5. அருள்மிகு பிள்ளையார் ஆலயம் (பேட்டை வடக்கு தெரு), கொரநாடு, மாயூரம் நகர்.

6. அருள்மிகு பிள்ளையார் ஆலயம், கொரநாடு, மாயூரம் நகர்.

7. அருள்மிகு பிள்ளையார் ஆலயம் (வடக்குத் தெரு), கொரநாடு, மாயூரம் நகர்.

8. அருள்மிகு அய்யனார் ஆலயம், கொரநாடு, மாயூரம் நகர்.

9. அருள்மிகு மாரியம்மன் ஆலயம், கொரநாடு, மாயூரம் நகர்.

10. அருள்மிகு பிள்ளையார் ஆலயம், கொரநாடு, மாயூரம் நகர்.

11. அருள்மிகு வேணுகோபாலசாமி மடம், கொரநாடு, மாயூரம் நகர்.

12. அருள்மிகு செல்லப்பிள்ளையார் ஆலயம், கொரநாடு, மாயூரம் நகர்.

13. அருள்மிகு கருப்பண்ணசாமி ஆலயம், கொரநாடு, மாயூரம் நகர்.

14. அருள்மிகு திரௌபதியம்மன் ஆலயம், மாயூரம், மாயூரம் நகர்.

15. அருள்மிகு மாரியம்மன் ஆலயம், வண்டிக்காரத் தெரு, மாயூரம் நகர்.

16. அருள்மிகு கண் கொடுத்த பிள்ளையார் ஆலயம், மாயூரம் மாயூரம் நகர்.

17. அருள்மிகு காசி விசுவநாதசாமி ஆலயம், மாயூரம் நகர்.

மாயூரம் நகரிலுள்ள திருக்கோயில்கள்—தொடர்ச்சி

18. அருள்மிகு மாயூரநாத சாமி ஆலயம், மாயூரம், மாயூரம் நகர்.

19. அருள்மிகு படித்துறை விசுவனுதசாமி ஆலயம், மாயூரம் நகர்.

20. அருள்மிகு பசுபதி ஈஸ்வரசாமி ஆலயம், பசுபதி அக்ர காரம், மாயூரம் நகர்.

21. அருள்மிகு ராமசாமி என்கிற வேணுகோபாலசாமி ஆலயம், பட்டமங்கலத் தெரு, மாயூரம் நகர்.

22. அருள்மிகு வெங்கடாசலபதி பெருமாள் ஆலயம், பட்ட மங்கலத்தெரு, மாயூரம் நகர்.

23. அருள்மிகு அகோர சாஸ்திரிகள் அறக் கட்டளை, மாயூரம் நகர்.

24. அருள்மிகு அறுபத்துமூவர் குருபூஜை மடம், கொரநாடு, மாயூரம் நகர்.

25. அருள்மிகு திரௌபதியம்மன், வழிகாட்டும் பிள்ளையார் ஆலயங்கள், மாமரத்து மேடை, மாயூரம் நகர்.

26. அருள்மிகு காமாட்சியம்மன் ஆலயம், நெ. 1 ரோடு, கொரநாடு, மாயூரம் நகர்.

27. அருள்மிகு சாரங்கபாணிசாமி ஆலயம், கொரநாடு, மாயூரம் நகர்.

28. அருள்மிகு புதுமாரியம்மன் ஆலயம், கொண்டாரெட்டித் தெரு, கொரநாடு, மாயூரம் நகர்.

29. அருள்மிகு புனுகீசுவரசாமி ஆலயம், கொரநாடு. மாயூரம் நகர்.

30. அருள்மிகு கற்பக விஞயகர் ஆலயம், மன்மதீஸ்வரர் ஆலயம், வியாபார செட்டித் தெரு, கொரநாடு, மாயூரம் நகர்.

31. அருள்மிகு ராமர் மடம் என்கிற செம்பொன்னீசுவரர் ஆலயம், தனியூர் சாலிய தெரு, கொரநாடு, மாயூரம் நகர்

32. அருள்மிகு கிருஷ்ணன் ஆலயம், மேல ஒத்தச்சரகு, கொரநாடு, மாயூரம் நகர்,

33. அருள்மிகு சுந்தரமூர்த்தி பிள்ளையார் ஆலயம், மேல ஒத்தச்சரகு, கொரநாடு, மாயூரம் நகர்.

34. அருள்மிகு வாதன்யேசுவரசாமி ஆலயம், வள்ளலார் கோவில், மாயூரம் நகர்.

35. அருள்மிகு அய்யஞர் ஆலயம், மாயூரம், மாயூரம் நகர்.

36. அருள்மிகு படைவெட்டி மாரியம்மன் ஆலயம், வள்ளலகரம், மாயூரம் நகர்.

37. அருள்மிகு விசுவநாதசாமி ஆலயம், காவேரிக்கடைத் தெரு, மாயூரம் நகர்.

38. அருள்மிகு நவநீத கிருஷ்ணசாமி ஆலயம், செங்கமேட்டுத் தெரு, கொரநாடு, மாயூரம் நகர்.



மாயூரம் நகரிலுள்ள திருக்கோயில்கள்—தொடர்ச்சி

39. அருள்மிகு விசுவநாதசாமி ஆலயம், திருமஞ்சன வீதி, மாயூரம் நகர்.

40. அருள்மிகு விசுவநாதசாமி ஆலயம், புது அக்ரகாரம், மாயூரம் நகர்.

41. அருள்மிகு வீரபத்ரசாமி ஆலயம் (மாயூரநாதர் மேல் வீதி), மாயூரம் நகர்.

42. அருள்மிகு ஆழிகாட்டும் விஞயகர் ஆலயம், மாயூரம் நகர்.

43. அருள்மிகு அனுமார் ஆலயம் (லாகடம்), மாயூரம் நகர்.

தனிப்பட்ட ஆலயங்கள்.

44. அருள்மிகு சபாநாயகர் ஆலயம், கொரநாடு, மாயூரம் நகர்.

45. அருள்மிகு ஈசான்ய சிவாச்சாரியார் மடம், மகாதானத் தெரு, மாயூரம்.

மாயூரம் வட்டத்தில் ஏற்கெனவே இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைக்குட்பட்ட ஆலயங்களின் பட்டியல்.

1. அருள்மிகு திரௌபதியம்மன் ஆலயம், மாயூரம் நகர்.

2. அருள்மிகு மாரியம்மன் ஆலயம், வண்டிக்காரன் தெரு, மாயூரம் நகர்.

3. அருள்மிகு கண்கொடுத்த பிள்ளையார் ஆலயம், மாயூரம் நகர்.

4. அருள்மிகு காசி விசுவனுதசாமி ஆலயம், மாயூரம் நகர்.

5. அருள்மிகு மாயூரநாத சுவாமி ஆலயம், மாயூரம் நகர்.

6. அருள்மிகு படித்துறை விசுவநாதசாமி ஆலயம், மாயூரம் நகர்.

7. அருள்மிகு பசுபதிஸ்வரர்சாமி ஆலயம், பசுபதி அக்ர காரம், மாயூரம் நகர்.

8. அருள்மிகு ராமசாமி என்கிற வேணுகோபாலசாமி ஆலயம், பட்டமங்கலத் தெரு, மாயூரம் நகர்.

9. அருள்மிகு வெங்கடாசலபதி பெருமாள் ஆலயம், பட்ட மங்கலத் தெரு, மாயூரம் நகர்.

10. அருள்மிகு அகோரசாஸ்திரிகள் அறக்கட்டளை, மாயூரம் நகர்.

11. அருள்மிகு அறுபத்துமூவர் குருபூஜை மடம், கொரநாடு, மாயூரம் நகர்.

12. அருள்மிகு திரௌபதியம்மன் வழிகாட்டும் பிள்ளையார் ஆலயம், மாமரத்துமேடை.

மாயூரம் வட்டத்தில் ஏற்கெனவே இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைக்குட்பட்ட ஆலயங்களின் பட்டியல்—தொடர்ச்சி.

13. அருள்மிகு காமாட்சியம்மன் ஆலயம், நெ. 1. ரோடு, கொரநாடு, மாயூரம் நகர்.

14. அருள்மிகு சாரங்கபாணிசாமி ஆலயம், கொரநாடு, மாயூரம் நகர்.

15. அருள்மிகு புதுமாரியம்மன் ஆலயம், கொரநாடு, மாயூரம் நகர்.

16. அருள்மிகு புனுகீசுவரசாமி ஆலயம், கொண்டாரெட்டி தெரு, கொரநாடு, மாயூரம் நகர்.

17. அருள்மிகு கற்பக விநாயகர் ஆலயம், மன்மதீஸ்வரர் ஆலயம், வியாபார செட்டித் தெரு, கொரநாடு, மாயூரம் நகர்.

18. அருள்மிகு ராமர் மடம் என்கிற செம்பொன்னீசுவரர் ஆலயம், மாயூரம் நகர்.

19. அருள்மிகு கிருஷ்ணன் ஆலயம், மேல ஒத்தச்சரகு, கொரநாடு, மாயூரம் நகர்..

20. அருள்மிகு சுந்தரமூர்த்தி பிள்ளையார் ஆலயம், மேல ஒத்தச்சரகு, கொரநாடு, மாயூரம் நகர்.

21. அருள்மிகு வாதன்யேசுவரர்சாமி ஆலயம், வள்ளலார் கோவில், மாயூரம் நகர்.

22. அருள்மிகு அய்யனார் ஆலயம், மாயூரம் நகர்.

23. அருள்மிகு படைவெட்டி மாரியம்மன் ஆலயம், வள்ளலகரம், மாயூரம் நகர்.

24. அருள்மிகு விசுவநாதசுவாமி ஆலயம், காவேரிக்கரை தெரு, மாயூரம் நகர்.

25. அருள்மிகு நவநீத கிருஷ்ணசாமி ஆலயம், செங்கமேட்டுத் தெரு, கொரநாடு.

சிறு அறநிலையங்கள் பட்டியல்.

26. அருள்மிகு விசுவநாதசாமி ஆலயம், திருமஞ்சன வீதி, மாயூரம் நகர்.

27. அருள்மிகு விசுவநாதசாமி ஆலயம், புது அக்ரகாரம், மாயூரம் நகர்.

28. அருள்மிகு வீரபத்ரசாமி ஆலயம் (மாயூரநாதர் மேல வீதி), மாயூரம் நகர்.

29. அருள்மிகு ஆழிகாட்டும் விநாயகர் ஆலயம், மாயூரம் நகர்.

30. அருள்மிகு அனுமார் ஆலயம் (லாகடம்), மாயூரம் நகர்.



*How to use the Index.*

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.), for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below :—

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | ... | Adjournment Motion. |
| Ann. | ... | Announcement. |
| B.O.H. | ... | Business of the House. |
| C.A. | ... | Calling Attention to a matter of urgent public importance. |
| C.A. (St.) | ... | Calling Attention Statement. |
| Consid. | ... | Consideration stage of a Bill. |
| | ... | This stage includes— (i) Motion to refer to Select/Joint Select Committee. |

PAGES

(ii) Amendment to refer to Select/Joint Select Committee.

(iii) Amendment to circulate.

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit to Select|Joint Select Committee, etc.

| | |
|---|---|
| Consid. Cl. | .. Consideration of clauses of a Bill. |
| D.E.E. | ... Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. | ... Discussion for Short Duration on an urgent matter of administration. |
| D.S.G | ... Demands for Supplementary Grants. |
| G.A. | ... Governor's Address. |
| G.D. | ... General Discussion. |
| H.A.H.Dis/H.H.D. | ... Half-hour Discussion. |
| Int., | ... Introduction stage of a Bill. |
| L.A. | ... Legislative Assembly. |
| L.C. | ... Legislative Council |
| M. | ... Motion. |
| P.M. | ... Privilege Motion. |
| R/Res | ... Resolution. |
| St. | ... Statement. |

# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

THIRTEENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*8th to 11th April* 1975.

VOLUME LXX, NOS. 1 TO 4.

PAGES.

## A


ABUSALI, THIRU M. A.—
Appropriation (No. 2) Bill, 1975 ... ... 513—514

ACCIDENTS—
Fire accident in a Harijan Colony at Vallam, relief measures .. .. .. .. .. 438
Fire accident at Pullambadi, relief measures ... 441—442

ADITANAR, THIRU Si. Pa.—
Sun Paper Mills, Cheranmadevi, Tirunelveli district, release of waste water into Tambiraparani river (C.A.) .. .. .. .. .. 476

AGRICULTURE—
Agro-engineering Co-operatives, establishment ... 294—296
Depots, stock of seeds .. .. .. .. 437
Diesel engine, supply under Centrally-aided scheme, Tirunelveli district .. .. .. .. 388—389
Pumpsets in Anthiyur Constituency, power supply 430—431
Tractor Service Centre, opening at Anna Farm in Kudimianmalai ... ... ... ... ... 296—297
Tube-well organisation, set-up .. .. .. 291—294

PAGES.

*A*—cont.

ALAGARSWAMY, THIRU S.—
Budget, 1975-76, Voting:
Compensation and Assignments .. ..
Elections ... ... ... ... ...
Head of State, Ministers and Headquarters staff
Loans and Advances by State government ... Miscellaneous .. .. .. .. ..
Pensions and Other Retirement Benefits ... 32, 34,
Relief on account of Natural Calamities .. ..
State Excise Department ... ... ... 36
Drainage, death of workers during cleaning work 155—158
Sun Paper Mills, Cheranmadevi, Tirunelveli district, release of waste water into Tambiraparani river (C.A.) ... ... ... ... ... 481—482

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—
Agro-engineering co-operatives, establishment .. 294—296
Budget, 1975-76, Voting:
Compensation and Assignments .. ..
Elections .. .. .. .. ..
Head of State, Ministers and Headquarters Staff
Loans and Advances by State Government ... 92, 95 Miscellaneous .. .. .. .. ..
Pension and Other Retirement Benefits ...
Relief on account of Natural Calamities ..
State Excise Department ... ... ... ... 99—100, 108
Fisheries ... ... ... ... ... 219—222
Social Welfare ... ... ... ... 228, 231 232
Pallavan Transport buses, number of deaths due to accidents during 1973-74 .. .. .. 25—26
Tamil medium students in Colleges, payment of incentive money ... ... ... ... 411—414



PAGES.

*A*—cont.

ANBAZHAGAN, THIRU K.—
Correction of an answer given to a supplementary question (St.) .. .. .. .. .. 455
Sun Paper Mills, Cheranmadevi, Tirunelveli district, release of waste water into Tambiraparani river (C.A. St.) .. .. .. .. .. 475—476, 477—478 479, 480, 481, 482

ANIMAL HUSBANDRY—
Poultry farms under Government management, number .. .. .. ... .. 442—443

ANNAMALAI, THIRU C. V. M.—
Budget, 1975-76, Voting:
Fisheries .. .. .. .. ..
Social Welfare ... ... ... ... 180, 181 194, 199 200, 201 202, 203 221 225—236

ARUNA, THIRU ALADI V.—
Appropriation (No. 2) Bill, 1975 .. .. .. 547
Budget, 1975-76, Voting:
Compensation and Assignments .. .. ..
Elections ... ... ... ... ...
Head of State, Ministers and Headquarters Staff
Loans and Advances by State Government ..
Miscellaneous .. .. .. .. ..
Pensions and Other Retirement Benefits ...
Relief on account of Natural Calamities .. ..
State Excise Department ... ... ... 36, 53, 106, 107—108
State Legislature ... ... ... ... ... 349
Educational institutions, number ... ... 446

PAGES.

*A*—cont.

ARUNA, THIRU ALADI V.—*cont.*

Failure of Thiru P. U. Shanmugam, Minister for Public Works, to resign even after the announcement of judicial enquiry against him (Point of Order) ... ... ... ... ... ... 171, 172

Science Laboratories in Middle Schools, opening. 1—8

*B.*

BALASUNDARAM—THIRU V.—

Budget, 1975-76, Voting :

Compensation and Assignments .. ..

Elections .. .. .. .. ..

Head of State, Ministers and Headquarters staff

Loans and Advances by State Government

Miscellaneous .. .. .. .. ..

Pensions and Other Retirement Benefits ..

Relief on account of Natural Calamities .. ..

State Excise Department .. .. .. 71—76

Community Hall in Harijan Colony at Sunambedu, construction ... ... ... ... ... 28

Harijan Colony at Oonamalai, construction of water tank ... ... ... ... ... ... 308—309

Madras-Kalpakkam, introduction of direct bus service. 300

BILLS(S)—

Appropriation (No. 2) Bill, 1975—

Consid. .. .. .. .. .. 491—508, 510—532,

Consid. Cl. ... ... ... ... ... ... 552—553

Motion to Pass ... ... ... ...

Passed ... ... ... ... ... 553

Electricity Duty (Amendment) Bill, 1975—

Int. .. .. .. .. .. 487

Message from Governor ... ... ... ... 486

Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Re-enacting Bill, 1975—

Int. ... ... ... ... ... ... 179



PAGES.

*B*—cont.

BOMMAN, THIRU K. H.—

Budget, 1975-76, Voting :

Compensation and Assignments .. ..

Elections .. .. .. .. ..

Head of State, Ministers and Headquarters Staff

Loans and Advances by State Government ...

Miscellaneous ... ... ... ... 34

Pensions and Other Retirement Benefit .. ..

Relief on account of Natural Calamities .. ..

State Excise Department ... ... ...

BOOKS AND PUBLICATIONS—

Institute of Education, number of publications .. 431

Official Publication, purchase of newsprint ... 433—434

BRIDGE(S) AND CULVERTS.—

Bridge across Ayyavayyanaru in Korkai, construction. 21—22

Bridge across Gadilam river near Ulundurpet, opening .. .. .. .. .. 388

Bridge across Kuzhithurai river ... ... 142—143

Causeway near Sulagiri, construction .. .. 387—388

Overbridge across Railway line near Subramaniyapuram, estimated cost ... ... ... 388

Overbridge near Karisalkulam, repairs ... ... 428

Thengappattanam-Kuzhithurai road, construction of culvert ... ... ... ... ... ... 141—142

BUILDINGS.—

Collector's Office, Thanjavur, construction of new buildings .. .. .. .. .. 401—402

Taluk Office, Thovalai, construction of building .. 402

Travellers, Bungalow, construction at Jolarpet ... 143

*C*

CALLING ATTENTION—

Action of Electricity Board in enhancing the deposit amount and collecting crores of rupees from consumers .. .. .. .. .. 482—486

PAGES

**C—*cont.***

CALLING ATTENTION—*cont.*

Closure of pathway leading to Thachur Harijan Colony in Aruvikarai village, Kalkulam Taluk, by an individual .. .. .. .. .. 178—179

Fire accident in Mullaiyur and consequent damage 320—321

Sun Paper Mills, Cheranmadevi, Tirunelveli, release of effluent into Tambiraparani river .. .. 474—482

CANAL(S)—

Buckingham Canal, silt clearance ... ... 454

CASHEW—

Extent of cultivation in Sivaganga-Manamadurai .. 420—421

CHAIR—

*Announcements*—

Decisions of Business Advisory Committee 224—225

Rulings and Observations—

Adjournment Motion.

*Electricity supply position in Tamil Nadu*—

Consent was withheld on the ground that the motion was not necessary after the statement made by the Minister ... ... ... 317

*Call attention*—

A member could only put one or two questions for elucidation on a Minister's statement and should not raise a discussion on it ... .. .. .. 477, 480

*Debate*—

Judges should not be criticized .. .. .. 173

Members to speak only when called by Chair ..

When one of the members who jointly signed a privilege motion wanted to speak on the motion, the Chair pointed out that it was the practice in the House that only one Member from each party should speak on the motion. If all the Members of he same party who had signed a motion wanted to speak, they could not consider any other businees. When another Member pointed out that any Member could participate in the discussion on the motion to enlighten the Chair, the Chair observed that any Member could speak on any motion only when he was called upon by the Chair to speak ... .. .. 464



PAGES.

**C—*cont.***

CHAIR—*cont.*

Rulings and Observation—*cont.*

Debate—*cont.*

When the Chair called a Member to speak, he should start speaking immediately. If he allowed the Member who was speaking at that time to continue his speech, the Chair would be constrained to call the next Member to speak .. 513

*Failure to discuss the Constitution (Amendment) Bill regarding Sikkim's joining the Indian Union as an associate member*—

On 10th April 1975, a Member raised a point of order and asked why the House had not discussed the Constitution Amendment Bill regarding Sikkim's joining the Indian Union as an associate member, despite his giving a notice of motion for the discussion of the same on 7th January 1975.

The Speaker observed that though the Member had given notice of the motion on 7th January 1975, the House met only on 20th February. However, as the President had already given his assent to the Bill on 22nd February, he considered that a discussion on the matter was not necessary ... 318—319

*Decorum*—

It is not in order for Members on both sides to raise any voice .. .. .. .. .. 173

*Expressions used in the House*—

A Member raised a point of order alleging that the words 'கோழை' (coward), 'திறமையற்றவர்' (inefficient), 'வகையற்றவர்' (unfit), 'வக்கற்றவர்', (unsuited) used by the Chief Minister against the leader of a party should be expunged from the proceedings, as those words were undignified. The Deputy Speaker ruled that those words were not undignified and therefore there was no necessity for expunging those words .. 356

*Members*—

*Propriety of announcing pension to Members*—

On 11th April 1975, a Member rose on a point of order and stated that the announcement of grant of pension to Members of Legislature by the Leader of the House on the floor of the House the previous day contravened the

PAGES

C—*cont.*


CHAIR—*cont.*

Rulings and Observation—*cont.*

Members—*cont.*

*Propriety of announcing pension to Members*—cont.

provisions of the Constitution inasmuch as there was no provision in the Constitution empowering the grant of pension to Members and wanted to know whether such an announcement could be made in the House.

Holding that it was not a point of order, the Speaker observed that the law was for the people and not the people for the law. If there was no provision in the Constitution, they have to make provision for the same .. 490—491

*Minister's absence*—

On a Member drawing the attention to the absence of the concerned Minister during the discussion on a Demand for Grant, the Deputy Speaker observed that it was not imperative but only a general principle that the Minister concerned should remain in the House. The Minister had gone for consultation after instructing his colleague to take down notes so that he could give a proper reply ... ... ... ... ... 207

*Newspapers*—

Newspapers should publish a particular news item about the proceedings of the House in full as there would be protection for the publication only then ... ... ... ... ... ... 509

*Points of order*—

Members should not make a speech while raising a point of order .. .. .. .. 164

Point of order could be raised only to point out violation of the rules, if any .. .. .. 174

When a member raised a point of order stating that the Chair passed on to the next subject even though the Minister was willing to give clarifications, the Speaker observed that members could ask only one or two questions for getting clarification on a statement under Rule 41. The Chair could refuse permission even if the Minister was prepared to give further clarification .. 487




PAGES

C—*cont.*


CHAIR—*cont.*

Rulings and Observation—*cont.*

*Points of Order*—cont.

When a number of members from a particular party raised similar points of order at one and the same time, the Deputy Speaker observed that the leader of that party should take up the responsibility of controlling his party members from raising one and the same point of order at a time and that any clarification on the subject under discussion should be given either by the leader of that party or by the member speaking at that time 350

*Privilege Matter*—

Statement by Minister for Hindu Religious Endowments about the alleged offering of a diamond necklace by the Prime Minister of India to the Kanniyakumari temple—

On 11th April 1975, the leader of the Communist party raised a matter of privilege against the Minister for Hindu Religious Endowments and quoting the British precedents, pointed out that the Hindu Religious Endowments Minister had stated on 10th April 1975 that the Prime Minister of India had offered through some messenger a diamond necklace to the deity of Kanniyakumari temple and a special pooja had also been performed. As the Minister had made this statement voluntarily on his own when no member had asked him any question about it, it was a deliberate and wilful statement made knowingly that it was not true. So, he wanted that the matter be referred to the Committee of Privileges, as it was a breach of privilege and contempt of the House. This was endorsed by the Members of the Congress (O), Congress and Anna Dravida Munnetra Kazhagam who took part in the short discussion that ensued on the point raised.

The Minister for Hindu Religious Endowments stated that it was not his intention to cast aspersion against the Prime Minister or the members belonging to her party. He added that during the visit of the late L. N. Misra, Union Railway Minister to Kanniyakumari, a gold kreedam was

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observation—*cont.*

*Questions and Answers*—

offered to the temple. He expressed regret for his statement made the previous day. The matter was then dropped ... ... ... ... ... 455—474

Supplementary questions—

Should not contain accusations and should be in the form of questions .. .. .. 21

*Relevancy*—

On a member putting a question which did not relate to the main question, the Speaker observed that it was an irrelevant question and need not be answered ... ... ... ... ... 5

***Statement***—

*Propriety of Chief Minister making a statement after question hour before consideration of Call Attention Notice.*

On 10th April 1975, a Member raised a point of order and asked how the Chief Minister was allowed to make a statement under rule 82 after question hour when the rule clearly stated that after questions, Call Attention Notice should be taken up for consideration.

The Speaker observed that as Call Attention Notice would not usually be included in the agenda, there was nothing irregular in the Chief Minister making a statement after the question hour .. 319—320

CHELLIAH, Thiru Kuzha—

Budget, 1975-76, Voting :

Compensation and Assignments .. .. ..

Elections .. .. .. .. ..

Head of State, Ministers and Headquarters Staff

Loans and Advances by State Government ..

Miscellaneous .. .. .. ..

Pensions and Other Retirement Benefits .. ..

Relief on account of Natural Calamities ...

State Excise Department .. .. .. .. **739**



PAGES

C—*cont.*

CHELLIAH, Thiru Kuzha—*cont.*

Budget, 1975-76, Voting :—*cont.*

Fisheries .. .. .. .. ..

Social Welfare .. .. .. .. .. 189—195

CHEZHIYAN, Thiru Kovai—

Appropriation (No. 2) Bill, 1975 .. .. .. 492—495, 533, 541, 546, 548

Budget, 1975-76, Voting :

Compensation and Assignments ...

Elections .. .. .. .. ..

Head of State, Ministers and Headquarters Staff ..

Loans and Advances by State Government ..

Miscellaneous .. .. .. ..

Pensions and Other Retirement Benefits ..

Relief on account of Natural Calamities ...

State Excise Department .. .. .. 47, 48, 66, 74, 102,

Fisheries .. .. .. .. ..

Social Welfare .. .. .. .. 200—201

State Legislature ... ... ... ... ... 334, 348, 365, 377

Failure of Thiru P. U. Shanmugam, Minister for Public Works to resign even after the announcement of judicial enquiry against him (Point of Order) ...163, 164, 171, 173

Nachiyar Temple, seizure of paddy by Civil Supplies authorities (Point of information) .. .. 311

Statement of Minister for Hindu Religious Endowments *re.* alleged offering of a diamond necklace to Kanniyakumari Amman by Prime Minister of India .. 462—463, 468—469

COLLEGE(S)—

Central Staff College for training high level functionaries of Agricultural Universities, starting .. 290—291

PAGES

C—*cont.*

COLLEGE(S)—*cont.*

Palayamkottai Indian Medical College, Compounder's Training Course .. .. .. .. .. 450

Raja Sarboji Government College, Thanjavur, Post-Graduate Courses ... ... ... ... 135

Seats in P.U.C. .. .. .. .. .. 439—440

CO-OPERATIVES—

Industrial Co-operative Bank, integration with regular co-operative structure .. .. .. 393—394

Oil Producers Co-operative Societies .. .. 436—437

COURTS—

District Courts, supply of badges with Tamil inscriptions to Last Grade Government Servants .. 287

D.

DAM(S)—

Vaigai, entrance fee collected from visitors .. 432

DENNIS, Thiru N.—

Budget, 1975-76, Voting:

Compensation and Assignments .. ..

Elections .. .. .. .. ..

Head of State, Ministers and Headquarters Staff ..

Loans and Advances by State Government ..

Miscellaneous .. .. .. ..

Pensions and Other—Retirement Benefits ..

Relief on account of Natural Calamities ..

State Excise Department .. .. .. 34, 35

Fisheries .. .. .. .. ..

Social Welfare .. .. .. .. 182—187

State Legislature .. .. .. .. 321

Cholera attacks in Kanniyakumari district, number .. 448

Coconut oil, financial assistance for manufacture ... 415

Fertilizers, allotment by Government of India ... 415—417

Kuzhithurai river, bridge across .. .. 142—143

Mullanganavilai-Tholyavetty road repair .. .. 142



PAGES

D—*cont.*

DENNIS, Thiru N.—*cont.*

Primary Health Centre (Second) at Tholyavetty, establishment .. .. .. .. .. 386—387

Rajaji Memorial in Guindy, progress of works .. 9—11

Thengappattanam-Kuzhithurai road, construction of culvert .. .. .. .. .. 141—142

DEVENDIRAN, Thiru A.—

Temples, renovation .. .. .. .. 422

DHARMALINGAM, Thiru A. P.—

Budget, 1975-76, Voting:

Compensation and Assignments ... ... ...

Elections .. .. .. .. ..

Head of State, Ministers and Headquarters Staff ..

Loans and Advances by State Government ..

Miscellaneous .. .. .. .. ..

Pensions and other Retirement Benefits ...

Relief on account of Natural Calamities ..

State Excise Department .. .. .. 103

Fire accident in Mullaiyur and consequent damages (C.A.St.) .. .. .. .. .. 320, 321

Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Re-enacting Bill, 1975 .. .. .. .. 179

DISEASES—

Cholera, attack in Kanniyakumari district, number .. 448

Cholera, number affected .. .. .. 447—448

DORAISAMY, Thiru S.—

Last grade servants in District Courts, supply of badges with Tamil inscriptions .. .. .. .. 287

DRAINAGE—

Death of workers due to cleaning work .. .. 155—158

DRAMA(S)—

Dance Music—Drama Manram, number of dramas exhibited .. .. ... .. .. 435

PAGES

E.

EDMUND, Thiru G. R.—
Budget, 1975-76, Voting :
State Legislature .. .. .. .. 333—334, 340—341, 344—350, 351—355, 356
Delay in replying to Short notice questions and Call Attention notice (Point of Order) .. .. 309—310
Failure, of Thiru P. U. Shanmugam, Minister for Public Works, to resign even after the announcement of a judicial enquiry against him (Point of Order). 168—169, 170, 176, 177, 178
Statement of Minister for Hindu Religious Endowments *re.* alleged offering of a diamond necklace to Kanniyakumari Amman by Prime Minister of India .. 464
Sun Paper Mill, Cheranmadevi, Tirunelveli district, release of waste water into Tambirabarani river (C.A.) .. .. .. .. .. 474, 476, 477, 478—479, 480,
System Improvement Schemes at Hosur, loans offered by Rural Electricity Corporation .. .. 397—398

EDUCATION—
Co-education High Schools, bifurcation .. .. 2—7
Director of School Education, decentralisation of administrative powers .. .. .. .. 1
Educational institutions, number .. .. 446
Laboratory Technicians, training ... ... ... 449—450
Schools in Gummudipoondi and Ellapuram Panchayat Unions, construction of pucca buildings .. 20—21
Science Laboratories in Middle Schools, opening .. 7—8
Tamil Medium, number of students graduated .. 440
Tamil Medium P.U.C. Students, decrease in number 410—411
Tamil medium students in Colleges, payment of incentive money .. .. .. .. 411—414
Text-books, nationalisation ... ... ... ... 136—140



PAGES

E—*cont.*

ELECTRICITY—
Southern Regional Electricity Board, decision taken at the Bangalore meeting .. .. .. 287—289
System Improvement Schemes at Hosur, loans offered by Rural Electricity Corporation .. .. 397—398
Wage Guidelines Committee, functions .. .. 277—283

EMPLOYEES—
Nurses Association, demands ... ... ... 384—386

EXPORT(S)—
Mangoes .. .. .. .. .. .. 432

F.

FAMILY PLANNING—
Scheme, expenditure during 1972-73 ... ... ... 421
Special staff for propagation .. .. .. 436

FERTILIZERS—
Allotment by Government of India .. .. .. 415—417

FINANCIAL BUSINESS—
Budget, 1975-76, Voting :
Compensation and Assignments .. .. ..
Elections .. .. .. .. ..
Head of State, Ministers and Headquarters Staff ..
Loans and Advances by State Government ..
Miscellaneous .. .. .. .. ..
Pensions and Other Retirement Benefits ... ...
Relief on account of Natural Calamities .. ..
State Excise Department .. .. .. 30—113
Fisheries .. .. .. .. ..
Social Welfare .. .. .. .. 180—237
State Legislature .. .. .. .. 321—380

FIRE—
Accident in Mullaiyur and consequent damages (C.A.) .. .. .. .. .. .. 320—321

PAGES

F—*cont.*

FIRE SERVICE—
Stations in Chingleput district, details .. .. 427—428
FISHERIES—
Chinese fishing boats near Madras coast, Police action (St.) .. .. .. .. .. .. 317—318
FOODGRAINS—
Area under cultivation .. .. .. .. 425—426
Gummudipoondi—Ellapuram Panchayat Unions, distribution .. .. .. .. .. .. 452
Paddy, procurement during 1973 and 1974 ... ... 423—424
Paddy, seizure of hoarded stocks .. .. .. 143—153
Paddy, yield rate .. .. .. .. .. 425
FOREST—
Industries, introduction of Economic Plantations scheme .. .. .. .. .. 158—159
FOWLER, Thirumathi ALDA, M.—
Budget, 1975—76, Voting:
Fisheries
Social Welfare .. .. .. .. .. 187—189
FREEDOM FIGHTERS—
Assignment of lands in Bhavani taluk .. .. 429—430

G.

GANESAN, Thiru L.—
Budget, 1975-76, Voting:
Compensation and Assignments.
Elections
Head of State, Ministers and Headquarters Staff
Loans and Advances by State Government 47
Miscellaneous
Pensions and Other Retirement Benefits
Relief on account of Natural Calamities
State Excise Department
GANESAN, Thiru S.—
Housing sites in Thanjavur district, issue of pattas .. 453



PAGES

G—*cont.*

GOPAL, Thiru K. P.
Budget, 1975—76, Voting:
Compensation and Assignments.
Elections
Head of State, Ministers and Headquarters Staff
Loans and Advances by State Government
Miscellaneous 30
Pensions and Other Retirement Benefits
Relief on account of Natural Calamities
State Excise Department.

GURUSAMI, Thiru N. V.—
Budget, 1975—76, Voting:
Compensation and Assignments.
Elections
Head of State, Ministers and Headquarters Staff
Loans and Advances by State Government
Miscellaneous 68—71
Pensions and Other Retirement Benefits
Relief on account of Natural Calamities
State Excise Department.
Sri Meenakshi Women's College Hostel, Madurai, number of students admitted ... ... ... 431

H.

HANDE, Dr. H. V.
Action of Electricity Board in collecting crores of rupees as deposit amount from consumers (C. A.) 482, 485—486
Appropriation (No. 2) Bill, 1975 .. .. .. 536—545, 552

PAGES.

H—*cont.*

HANDE, Dr. H. V.—*cont.*
Budget, 1975—76, Voting:
Compensation and Assignments.
Elections
Head of State, Ministers and Headquarters Staff.
Loans and Advances by State Government
Miscellaneous .......... 30, 34, 35, 53, 54, 55,
Pensions and Other Retirement Benefits
Relief on account of Natural Calamities
State Excise Department.
Cholera, number affected .. .. .. .. 447—448
Failure of Thiru P. U. Shanmugam, Minister for Public Works to resign even after the announcement of judicial enquiry against him (Point of order) .. 165, 172, 173
Fire accident at Pullambadi, relief measures .. 441—442
Newspapers, supply to prisoners in jails .. .. 284—287
Speaker's passing over to the next subject without giving opportunity to a member to raise a point of order (Point of order) ... ... ... ... 487—488, 489
Statement of Minister for Hindu Religious Endowments *re.* alleged offering of a diamond necklace to Kanniyakumari Amman by Prime Minister of India .. 469, 470, 471, 473, 474

HARIJAN WELFARE—
Closure of pathway leading to Thachoor Harijan Colony in Aruvikarai Village, Kalkulam taluk by an individual (C.A.) ... ... ... ... 178—179
Community Hall in Harijan colony at Sunambedu, construction .. .. .. .. .. 28
Harijan students, Gandhi Memorial Scholarships .. 445—446
Housing sites at Attur taluk, assignment to Harijans. 452—453
Kannigaiper colony, delay in assignment of house-sites 307



PAGES

H—*cont.*

HORTICULTURE—
Development in Kalrayan and Kodai Hills ... ... 297—298

HOSPITALS AND DISPENSARIES—
Agricultural University Campus, opening of a new hospital .. .. .. .. .. .. 439
Government Dispensary, Saidapet, increase in number of out-patients .. .. .. .. .. 383—384
Panchayat Union Dispensaries in North Arcot district .. .. .. .. .. .. 443
Primary Health Centre (Second) at Tholyavetty .. 386—387

HOSTEL(S)—
Sri Meenakshi Women's College Hostel, Madurai, number of students admitted .. .. .. 431

HOUSING—
House Building Societies, details ... ... ... [illegible]24

I

ILANGOVAN, Thiru G.—
Silt excluder in Grand Anicut, installation ... ... 8—9

INDUSTRIES—
Clocks, assistance for manufacture .. .. 394—395
Small Scale Industries in Tirunelveli district, details of loans granted .. .. .. .. .. 417—420
Sodium Dichromate Unit, Wallajapet, production ... 395—397
Southern Structurals Limited, loans granted by Government ... ... ... ... ... 434—435

IRRIGATION—
Noyyal Reservoir Scheme in Karur taluk, execution .. 8
"Samber Malaipallam" lake in Kolathur Panchayat Union, formation .. .. .. .. 433
Silt excluder in Grand Anicut, installation ... 8—9

PAGES

J

JAILS
Newspapers, supply to prisoners .. .. .. 284—287

JAMES, Thiru J.—
Appropriation (No. 2) Bill, 1975 ... ... ... 495—498, 541

Budget, 1975—76, Voting:
Compensation and Assignments
Elections
Head of State, Ministers and Headquarters Staff
Loans and Advances by State Government
Miscellaneous
31, 32, 33, 36,
Pensions and Other Retirement Benefits
Relief on account of Natural Calamities
State Excise Department.
Fisheries
Social Welfare
181, 231

Closure of pathway leading to Thachoor Harijan Colony in Arvikarai Village, Kalkulam taluk, by an individual (C.A.) ... ... ... ... 178—179

Failure of Thiru P. U. Shanmugam, Minister for Public Works, to resign even after the announcement of a judicial enquiry against him (Point of order) ... 165—166

Statement of Minister for Hindu Religious Endowments *re* offering of a diamond necklace to Kanniyakumari Amman by Prime Minister of India ... 458—459, 460

Sun Paper Mills, Cheranmadevi, Tirunelveli district, release of waste water into Tambiraparani river (C.A.) ... ... ... ... ... 480—481

JOTHI VENCATACHELLUM, Thirumathi—
Budget, 1975—76, Voting:
Fisheries .. .. .. .. .. 201—202
Social Welfare .. .. .. .. .. 215—216, 233



PAGES.

K

KADHER BATCHA (alias) VELLAICHAMY, Thiru—
Budget, 1975—76, Voting:
Compensation and Assignments
Elections
Head of State, Ministers and Headquarters Staff
Loans and Advances by State Government
Miscellaneous 57—61
Pensions and Other Retirement Benefits
Relief on account of Natural Calamities
State Excise Department.

KALIMUTHU, Thiru, K.
Appropriation (No. 2) Bill, 1975 ... ... ... 514—518, 552

KANDAPPAN, Thiru S.—
A Member's speech abusing the Hon. Speaker (Point of order) .. .. .. .. .. 489
Appropriation (No. 2) Bill, 1975 .. .. .. 523—528

KANDASAMY, Thiru K.—
Budget, 1975—76, Voting:
Fisheries
Social Welfare 216—217
State Legislature .. .. .. .. .. 352—355

KANNAN, Thiru M. R.—
Budget, 1975—76, Voting:
Compensation and Assignments
Elections
Head of State, Ministers and Headquarters Staff
Loans and Advances by State Government
Miscellaneous 83—85
Pensions and Other Retirement Benefits
Relief on account of Natural Calamities
State Excise Department.
State Legislature ... ... ... ... ... 369

PAGES

K—*cont.*

KANNAPPAN, Thiru M.—

Statement of Minister for Hindu Religious Endowments *re.* alleged offering of a diamond necklace to Kanniyakumari Amman by Prime Minister of India ... ... ... ... ... 466—468 473, 474

KARUNANIDHI, Dr. M.—

Appropriation (No. 2) Bill 1975 .. .. .. 491—492 532—552, 553

Budget, 1975—76, Voting:
Compensation and Assignments.
Elections
Head of State, Ministers and Headquarters Staff
Loans and Advances by State Government
Miscellaneous 30, 31, 32, 33, 34, 35, 36, 41, 46, 47, 48, 49, 51, 52, 55, 66, 73, 74, 79, 91, 111
Pensions and Other Retirement Benefits
Relief on account of Natural Calamities
State Excise Department.
State Legislature .. .. .. .. 326, 327, 340, 341, 342, 343, 344, 345, 346, 347, 348, 349, 351, 352, 357, 358, 367, 368, 370, 377, 379, 380

Chinese fishing boats near Madras coast, police action (St.) ... .... .... .... .. .. 317—318



PAGES.

K—*cont.*

KARUNANIDHI, Dr. M.—*cont.*

Failure of Thiru P. U. Shanmugam, Minister for Public Works, to resign, even after the announcement of Judicial enquiry against him (Point of Order) ... ... ... ... ... ... 164, 165 168, 169, 170, 171, 172, 177, 178

Statement of Minister for Hindu Religious Endowments *re.* alleged offering of a diamond necklace to Kanniyakumari Amman by Prime Minister of India. 471—472 474

KASIRAMAN, Thiru N.—
High Schools, take over by Government, number ... 440—441
Panchayat Union Rest Houses, number .. .. 451—452

KITTAPPA, Thiru N.—
Board of Revenue, abolition .. .. .. .. 398—401
Bridge across Ayyavayyanaru in Korkai, construction .. .. .. .. .. .. 21—22
Collector's Office, Thanjavur, construction of new buildings ... ... ... ... ... 401—402
Colleges, seats in P.U.C. ... ... ... 439—440
Kumbakonam-Seerkazhi Road, widening ... 387
Magudeswarar temple in Kodumudi, annual income ... 443—444
Noyyal Reservoir Scheme in Karur taluk, execution ... 8
Official publication, purchase of newsprint ... 433—434
Sick textile mills, taking over by Central Government. 389—393
Siruvani, development as tourist centre ... ... 140—141
Supermarkets (new) in Thanjavur district, opening ... 283—284
Tamil medium, number of students graduated .. 440
Temples in Mayuram town, number ... ... 444
Temples under Religious and Charitable Endowments Department, names ... ... ... 27—28
Tractor Service Centre, opening at Anna Farm in Kudimiamalai ... ... ... ... 296—297
Transport Corporation (new), Constitution in Tiruchirappalli and Pudukottai district ... ... 298
'Vanoli Manram' in Thanjavur district, Selection for 1973—74 .... .... .. .. .. .. 22—23

K—*cont.*

KOTHANDARAMIAH, Thiru K. S.—
Budget, 1975-76, voting:
State Legislature ... ... ... ... 322
Causeway near Sulagiri, construction ... ... 387—388
Ramanayakani tank in Hosur Town, supply of drinking water .. .. .. .. .. 153—154

KUMARASAMI, Thiru K. N.—
Budget, 1975-76, Voting:
Fisheries, Social Welfare . ... ... ... 197—199, 203
Electricity inadequacy of supply (A.M.) .. .. 312—313

L.

LANDS—
Housing sites in Thanjavur district, issue of Pattas ... 453

LOAN(S)—
Agricultural loans in Coimbatore district, amount given ... ... ... ... ... 453—454

M.

MADHAVAN, Thiru S.—
Budget, 1975-76, Voting:
Compensation and Assignments ... ...
Elections ... ... ... ...
Head of State, Ministers and Headquarters Staff ...
Loans and Advances by State Government ...
Miscellaneous ... ... ... ... 42, 43, 44, 45, 46, 48, 49, 50, 54, 55
Pensions and other Retirement Benefits ... ...
Relief on account of Natural Calamities ... ...
State Excise Department ... ... ...





M—*cont.*

MADHAVAN, Thiru S.—*cont.*
Failure of Thiru P. U. Shanmugam, Minister for Public Works, to resign even after the announcement of Judicial enquiry against him (Point of Order) ... 166—167, 168, 175—176

MARIMUTHU, Thiru M.—
Housing sites at Attur taluk, assignment to Harijans 452—453

MARUDACHALAM, Thiru N.—
Budget, 1975-76, Voting:
Fisheries, Social Welfare ... ... ... 214—215

MEAT—
Modern slaughter house, Central assistance ... ... 159

MEMORIAL(S)—
Rajaji Memorial in Guindy, progress of works ... 9—11

MILK—
Chilling centre, opening at Wandiwash ... ... 305
Sale price fixed by Dairy Development Corporation in Madras City, increase .. .. .. .. 403—407
Supply with fat contents ... ... ... ... 407—408

MILLS—
Rice, fixation of hulling charges ... ... 145
Shanmugar Textile Mills, Rajapalayam, loan assistance 393
Sick textile mills, taking over by Central Government 389—393
Sugar, location at Karamadai, Pollachi ... ... 289—290
Sugar, opening in Thiruppuvanam ... ... 289, 290

MONUMENTS—
Poompuhar improvement schemes, details ... 422

PAGES

M—*cont.*

MOTION—
Ad. Motion :
Electricity, inadequacy of supply .. .. .. 311—317

MUNU ADHI, Thiru—
Budget, 1975-76, Voting:
State Legislature ... ... ... 366—370

MUNUSWAMY, Thiru R. R.—
Mettupalayam and Ooty Railway Service, restoration. 11—12

MUTHIAH, Thiru M.—
Family Planning Scheme, expenditure ... ... 421
Tiruchendur temple, construction of silver and golden chariots ... ... ... ... ... ... 301—305
Untouchability offences in Tirunelveli district, cases registered during 1974 ... ... ... 29—30

MUTHU, Thiru V.—
Kalipatti-Vaikundam Road in Tiruchengode taluk, metalling ... ... ... ... ... 444—445
Mallasamudram, drinking water-supply ... ... 153—154

MUTHUSELVAN, Thiru P. S.—
Perur village, drinking water-supply ... ... ... 307—308

N.

NATARAJAN, Thiru E. M.—
Agricultural pumpsets in Anthiyur Constituency, power supply ... ... ... ... 430—431
Freedom fighters, assignment of lands in Bhavani taluk ... ... ... ... ... ... 429—430

NEDUNCHEZHIYAN, Dr. V. R.—
Budget, 1975-76, Voting:
State Legislature ... ... ... ... ... 321, 375—379



PAGES

O.

OFFICES—
Board of Revenue, abolition ... ... ... 398—401
Fisheries Department, employment opportunities ... 428—429
Religious and Endowments Department, working of Common Good Fund ... ... ... ... 26—27

OIL(S)—
Coconut oil, financial assistance for manufacture ... 415

P.

PALANISAMY, Thiru N. K.—
Agricultural loans in Coimbatore district, amount given ... ... ... ... ... ... 453—454
Agricultural Depots, stock of seeds ... ... ... 437
Agricultural University Campus, Opening of a new Hospital ... ... ... ... 439
Archanas in temples, increase in rates ... ... 162—163
Bridge across Gadilam river near Ulundurpet, opening. 388
Budget, 1975-76, Voting:
Compensation and Assignments ... ...
Elections ... ... ... ... ...
Head of State, Ministers and Headquarters Staff ...
Loans and Advances by State Government ... 76—80
Miscellaneous ... ... ... ... ...
Pensions and Other Retirement Benefits ... ...
Relief on account of Natural Calamities ...
State Excise Department ... ...
Buckingham Canal, Silt clearance ... ... 454
Central Staff College for training high level functionaries of Agricultural Universities, starting .. 290—291
Clocks, assistance for manufacture ... ... 394—395
Co-education High Schools, bifurcation ... ... 2—7
Discussion on Constitution Amendment Bill *re.* integration of Sikkim with Union of India (Point of Order) .. .. .. .. .. .. 318—319
Family Planning Schemes, special staff for propagation 436

PAGES

P—*cont.*


PALANISAMY, Thiru N. K.—*cont.*

Filtered water, supply by Madras Corporation ... 421—422

Fire accident in a Harijan Colony at Vallam village, relief measures ... ... ... ... ... 438

Fisheries Department, employment opportunities ... 428—429

Foodgrains, area under cultivation ... ... ... 425—426

Forest-based industries, introduction of economic plantations scheme ... ... ... ... 158—159

Harijan students—Gandhi Memorial Scholarships ... 445—446

Horticulture, development in Kalrayan and Kodai Hills ... ... ... ... ... 297—298

House Building Societies, details ... ... 424

Industrial Co-operative Bank, integration with regular co-operative structure ... ... ... 393—394

Institute of Education, number of publications ... 431

Long distance buses, provision of latrines at stopping places ... ... ... ... 23—25

Mangoes, export ... ... ... ... ... 432

Milk sold by Dairy Development Corporation in Madras City, increase in price ... ... ... 403—407

Milk with fat contents, supply ... ... ... 407—408

Modern slaughter house, Central assistance ... ... 159

Nurses Association, demands ... ... ... 384—386

Oil Producers Co-operative Societies, places ... ... 436—437

Paddy, fixation of hulling charges ... ... 145

Paddy, imposition of levy ... ... ... 143—145

Paddy, procurement during 1973-74 ... ... 423—424

Paddy, yield rate ... ... ... ... 425

Rajaji Memorial in Guindy, progress of works ... 9—11

Raja Sarfoji Government College, Thanjavur, Post-graduate Courses ... ... ... ... 135

Ration cards (new), non-supply in Madras City ... 12—19

Religious and Charitable Endowments Department, working of Common Good Fund ... ... 26—27

Rice Mills, fixation of hulling charges ... ... 145

Rubber Plantations, expenditure and income ... 429

Science teachers, training ... ... ... ... 408—410




PAGES

P—*cont.*


PALANISAMY, Thiru N. K.—*cont.*

Sewage plant (second) in Madras, settingup .. 19—20

Sick textile mills, taking over by Central Government. 389—393

Sodium Dichromate Unit, Wallajahpet, production ... 395—397

Southern Regional Electricity Board, decisions taken at the Bangalore meeting .. .. .. 287—289

Teachers, National Awards ... ... ... 445

Temple guides, Training Centre at Madurai, details of training ... ... ... ... 161—162

Text-books, nationailastion .. .. .. .. 136—140

Tube-well Corporation, settingup .. .. .. 291—294

Vaigai Dam, entrance fee collected from visitors ... 432

PANCHAYAT UNION(S)—

Rest Houses, number ... ... ... 451—452

PAPERS LAID ON THE TABLE—

Agricultural Produce Markets Act, 1959, notification 237

Appropriation (No. 2) Bill, 1975 ... ... 553

Catering Establishments (Amendment) Bill, 1975 .. 381

Entertainments Tax Act, 1939 and Local Authorities Finance Act, 1961—notifications ... ... 237

Entertainments Tax Act, 1939, Notification ... ... 237

Errata to reviews on Road Transport ... ... 114

Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1975 .. .. .. .. 381

Performance Budget on Fisheries, 1975-76 ... ... 237

Performance Budget on Social Welfare, 1975-76 .. 237

Policy Note relating to Youth Service Corps, 1975-76. 114

Prohibition Act, 1937, Notification ... ... 553

Review of Administration and Enforcement of Prohibition and Excise Laws during 1974-75 ... ... 114

Review of working of Stationery and Printing Department during 1974-75 ... ... ... 114

Rules for Election of Chairman of Standing Committees under Madras Corporation, notification in regard to amendment ... ... ... ... 237

PAGES

P—*cont.*


PAPERS LAID ON THE TABLE—*cont.*

Speech of Minister for Transport on Demand No. 44—Stationery and Printing ... ... ... 114

Textile Corporation Limited, Review and Fifth Annual Report and Statement of Accounts for the year ended 31st December 1973 ... ... ... 553

Transport Expert Committee recommendations ... 114

Unstarred Questions and Answers (Nos. 1—60), List ... ... ... ... ... 553

PENSION—

Old age—, Number of petitions in Tirunelveli district. 448—449

PLANTATIONS—

Rubber, expenditure and income ... ... 429

POINT OF INFORMATION—

Discussion on Constitution Amendment Bill regarding integration of Sikkim with Union of India ... 318—319

Nachiaar Temple, seizure of paddy by Civil Supplies Authorities ... ... ... ... 311

POINT OF ORDER—

Announcement of the Hon. Leader of the House *re.* grant of pension to Legislatures and the absence of such a provision in the Rules and Articles of the Constitution, Properiety of ... ... ... ... 490—491

Delay in replying to short notice questions and call-attention notices ... ... ... ... 309—310

Member's speech alleging reflection on the Chair ... 489—490

Non-resignation of Minister for Public Works even after the announcement with regard to a judicial enquiry ... ... ... ... ... 163—178

Passing on to the next subject by the Chair without giving an opportunity to a Member to raise a point of order ... ... ... ... ... 487—489

Taking up of Call Attention Notice immediately after Question Hour ... ... ... ... 319—320




PAGES

P—*cont.*


PONNAPPA NADAR, THIRU R.—

Appropriation (No. 2) Bill, 1975 ... ... 528—531, 548

Budget, 1975-76, Voting :

Compensation and Assignments ... ...

Elections ... ... ... ...

Head of State, Ministers and Headquarters Staff ...

Loans and Advances by State Government ... 35,

Miscellaneous ... ... ... ... 85—90,

Pensions and Other Retirement Benefits ... ... 94

Relief on account of Natural Calamities ... ...

State Excise Department ... ... ... ...

Fisheries. Social Welfare ... ... ... 180

State Legislature ... ... ... 375

Failure of Thiru P. U. Shanmugam, Minister for Public Works, to resign even after the announcement of a judicial enquiry against him (Point of order) .. 167

PRIVILEGE MATTER—

Statement of Minister for Hindu Religious Endowments *re* alleged offering of a diamond necklace to Kanniyakumari Amman by Prime Minister of India .. 455—474

PUBLIC HEALTH—

Sewage Plant (second) in Madras, setting up ... 19—20

R

RAILWAY(S)—

Service between Mettupalayam and Ooty, restoration 11—12

RAJA PILLAI, THIRU V. K.—

Budget, 1975-76, Voting :

State Legislature ... ... ... 322

Marungur-Thovalai Road, repair ... ... ... 154—155

Taluk Office, Thovalai, construction of building .. 402

PAGES

R—*cont.*

RAJANGAM, THIRU N.—

Closure of pathway leading to Thachoor Harijan Colony in Aruvikarai village, Kalkulam taluk, by an individual (C.A. St.) ... ... 178—179

RAMALINGAM, THIRU R.—

Budget, 1975-76, Voting :

Fisheries ... ... ... ... 210—214

Social Welfare

RAMASAMY, THIRU G.—

Travellers' Bungalow, construction at Jolarpet ... 143

RATIONING—

Ration cards (new), non-supply in Madras City ... 12—19

ROAD(S)—

Arasanur in Sivaganga Panchayat Union, metalling of road ... ... ... ... ... ... 451

Kalipatti-Vaikundam Road in Tiruchengode taluk, metalling ... ... ... ... 444—445

Kumbakonam-Seerkazhi Road, widening ... ... 387

Marungur-Thovalai Road, repair ... ... ... 154—155

Mullangananelai Tholyavetty Road, repair .. 142

S

SADIQ PASHA, THIRU S. J.

Action of Electricity Board in collecting crores of rupees as deposit amount from consumers (C.A. St.) 483—484, 485, 486

Electricity Duty (Amendment) Bill, 1975 .. .. 487

Electricity, inadequacy of supply (A.M.) .. .. 313—317



PAGES

S—*cont.*

SATYENDRAN, THIRU M. S. K.—

Budget, 1975-76, Voting :

Fisheries

Social Welfare ... ... ... 203—208

SCHOOL(S)—

High Schools taken over by Government, number ... 440—441

Run by Forest Department, details ... ... ... 426—427

SEENIVASAN, THIRU P.—

Appropriation (No. 2) Bill, 1975 ... ... ... 548

Budget, 1975-76, Voting :

Compensation and Assignments ... ... ...

Elections ... ... ... ... ... ...

Head of State, Ministers and Headquarters Staff ... 44, 65,

Loans and Advances by State Government ... 68, 74,

Miscellaneous ... ... ... ... ... 106, 107

Pensions and Other Retirement Benefits

Relief on account of Natural Calamities

State Excise Department ... ... ... ...

State Legislature .. .. .. .. .. 337, 348 351, 352 357, 358

Publication of a news in "Tamil Murasu" about him (Point of Personal Explanation) .. .. 508—509

Sun Paper Mills, Cheranmadevi, Tirunelveli district, release of waste water into Tambiraparani (C.A.) 482

SIVAPRAKASAM, THIRU D. S. A.—

Dance-Music-Drama Manram, number of dramas exhibited ... ... ... ... ... ... 435

Diesel engines, supply under Centrally aided scheme to Tirunelveli district ... ... ... 388—389

PAGES

S—*cont.*

SIVAPRAKASAM, THIRU D. S. A.—*cont.*
Director of School Education, decentralisation of administrative powers ... ... ... ... 1,
Indian Medical College, Palayamkottai, Compounders training course ... ... ... ... ... 373
Laboratory Technicians, training .. .. .. 449—450
Old age pension, number of petitions in Tirunelveli district ... ... ... ... ... ... 448—449
Small-scale industries in Tirunelveli district, details of loans sanctioned ... ... ... ... ... 417—420
Southern Structurals Limited, loans granted by Government ... ... ... ... ... ... 434—435
Tanks in Tirunelveli district, desilting and reclamation scheme ... ... ... ... ... ... 435

SOMASUNDARAM, THIRU N.—
Budget, 1975-76, Voting :
State Legislature ... ... ... 333—336

SONIAH, THIRU T.—
Arasanur in Sivaganga Panchayat Union, metalling of road ... ... ... ... 451
Cashewnut, extent of cultivation in Sivagangai and Manamadurai ... ... ... ... 420—421
Muduvanthidal North Kanmai, revetment ... 450
Overbridge across Railway line near Subramaniapuram, estimated cost .. .. .. .. 388
Over-bridge near Karisalkulam, repairs ... 428
Sugar Mill, opening at Tiruppuvanam ... ... 290
Thirupuvanam Water Supply Scheme, estimate ... 451

SOUNDARAPANDIAN, THIRU P.—
Avudaiyar temple, Thanjavur, renovation ... 408





PAGES

S—*cont.*

SOUNDARAPANDIAN, THIRU P.—*cont.*
Budget, 1975-76, Voting :
Compensation and Assignments ... ...
Elections ... ... ... ...
Head of State, Ministers and Headquarters Staff ...
Loans and Advances by State Government ... 31, 33, 35
Miscellaneous ... ... ... ...
Pensions and other Retirement Benefits ...
Relief on account of Natural Calamities ...
State Excise Department ... ... ...
Fire accident in Mullaiyur and consequent damages (C.A.) ... ... ... ... 320
Palani temple, adorning deity with diamond crown ... 300—301
Poompuhar Improvement Schemes, details ... 422
Propriety of announcement of Leader of the House for payment of pension to Members in the absence of rules and regulations in the Constitution (Point of Order) ... ... ... ... 490—491
Taking up of Call Attention Notice after adjournment motion (Point of Order) ... ... ... 319—320

SRINIVASAN, THIRU T. P.—
Budget, 1975-76, Voting:
Fisheries ... ... ...
Social Welfare ... ... ... ... 217—219

SUBBIAH, THIRU A. K.—
Budget, 1975-76, Voting :
Compensation and Assignments ... ...
Elections ... ... ... ...
Head of State, Ministers and Headquarters Staff ...
Loans and Advances by State Government ... 80—83
Miscellaneous ... ... ... ...
Pensions and other Retirement Benefits ...
Relief on account of Natural Calamities ...
State Excise Department ... ... ...

SUBRAMANIAM, THIRU A.—
Budget, 1975-76, Voting :
Fisheries ... ... ... ... 180, 201
Social Welfare

PAGES

S—*cont.*

SUBRAMANIAM, THIRU A.—*cont.*

Budget, 1975-76, Voting :

State Legislature ... ... ... ... 343, 359—362

Statement of Minister for Hindu Religious Endowments *re.* alleged offering of a diamond necklace to Kanniyakumari Amman by Prime Minister of India. 400 461—462, 473

SUBRAMANIAM, THIRU K. M.—

Budget, 1975-76, Voting:

Compensation and Assignments ... ...

Elections ... ... ... ...

Head of State, Ministers and Headquarters Staff ...

Loans and Advances by State Government ... 61—64, 68

Miscellaneous ... ... ... ...

Pensions and other Retirement Benefits ...

Relief on account of Natural Calamities ...

State Excise Department .. ... ...

Government Dispensary, Saidapet, increase in the number of out-patients ... ... ... 383—384

Madras-Coimbatore Express Bus Service, operation ... 23

Statement of Minister for Hindu Religious Endowments *re.* alleged offering of a diamond necklace to Kanniyakumari Amman by Prime Minister of India. 460

SUGAR—

Malpractices in distribution ... ... ... 432—433

SUNDARA BHARATHI, THIRU SOWDI S.—

Statement of Minister for Hindu Religious Endowments *re.* alleged offering of a diamond necklace to Kanniyakumari Amman by Prime Minister of India. 466

SUPER MARKETS—

Opening in Thanjavur district ... ... ... 283—284



PAGES.

S—*cont.*

SUPPU, THIRU K.—

Shanmugar Textile Mills, Rajapalayam, assistance ... 393

SURENDRAN, THIRU M.—

Appropriation (No. 2) Bill, 1975 ... ... 510—513

Budget, 1975-76, Voting:

Compensation and Assignments ... ...

Elections ... ... ... ...

Head of State, Ministers and Headquarters Staff ...

Loans and Advances by State Government ... 31,33, 109, 110

Miscellaneous ... ... ... ...

Pensions and other Retirement Benefits ...

Relief on account of Natural Calamities ...

State Excise Department ... ... ...

State Legislature ... ... ... ... ... 321

Failure of Thiru P. U. Shanmugam, Minister for Public Works, to resign even after the announcement of judicial enquiry against him (Point of Order) ... 168

"Sambar Malaipallam" lake in Kolathur Panchayat Union, formation ... ... ... 433

Statement of Minister for Hindu Religious Endowments *re.* alleged offering of a diamond necklace to Kanniyakumari Amman by Prime Minister of India. 463, 464, 465, 466

Sugar, malpractices in distribution ... ... 432—433

Tamil Medium P.U.C. Students, decrease in number ... 410—411

T

TANGAMANI, THIRU K. T. K.—

Appropriation (No. 2) Bill, 1975 ... ... 518—523, 542

Budget, 1975-76, Voting:

Compensation and Assignments ... ...

Elections ... ... ... ... ...

Head of State, Ministers and Headquarters Staff ...

PAGES

T—*cont.*


TANGAMANI, THIRU K. T. K.—*cont.*

Budget, 1975-76, Voting—*cont.*

Loans and Advances by State Government ...

Miscellaneous ... ... ... ... 35, 79

Pensions and Other Retirement Benefits ... ...

Relief on account of Natural Calamities ... ...

State Excise Department ... ... ...

State Legislature ... ... ... ... ... 322—333, 342, 343

Electricity, inadequacy of supply (A.M.) ... 312

Statement of Minister for Hindu Religious Endowments *re.* alleged offering of a diamond necklace to Kanniyakumari Amman by Prime Minister of India. 455—458, 464, 465, 473

TANK(S)—

Mudhuvanthidal North Kanmai, revetment ... 450

Ramanayakani Tank in Hosur Town, supply of drinking water .. .. .. .. .. .. 153—154

Tirunelveli district, desilting and reclamation scheme ... 435

TEACHER(S)—

National Awards ... ... ... ... 445

Science teachers training ... ... ... 408—410

TEMPLE(S)—

Archanas, increase in rates ... ... ... 162—163

Avudaiyar temple, Thanjavur, renovation ... ... 408

Guides Training Centre at Madurai, details of training ... ... ... ... ... 161—162

Magudeswarar temple in Kodumudi, annual income ... 443—444

Mayuram town, number ... ... ... 444

Palani, adorning deity with diamond crown .. 300—301

Renovation .. ... ... ... ... 422

Tiruchendur, construction of golden and silver chariots. 301—305

Under Religious and Endowments Department, names. 27—28




PAGES.

T—*cont.*


THAVAMANI THEVAR, Thiru V.—

Appropriation (No. 2) Bill, 1975 ... ... 503—505

THIRUVENGADAM, Thiru Thoppur—

Appropriation (No. 2) Bill, 1975 ... ... 498—501

Panchayat Union Dispensaries in North Arcot district, number ... ... ... ... 443

Poultry farms under Government management, number 442—443

Schools run by Forest Department, details ... ... 426—427

THOOYAMANI, Thiru M. C.—

Co-operative Sugar Mill, location at Karamadai-Pilichi ... ... ... ... ... ... 289—290

TOURISM—

Siruvani, development as tourist centre ... 140—141

TRANSPORT—

Elavur-Ambathur bus service, delay in introduction ... 298—299

Kannampakkam to Naidukuppam, extension of bus service ... ... ... ... 160

Long distance buses, provision of latrines at stopping places ... ... ... ... 23—25

Madras-Arambakkam bus service, extension to Yedur 299

Madras-Coimbatore Express bus service, operation 23

Madras-Kalpakkam, direct bus service ... 300

Madras to Ponthavakkam, irregular bus service ... 160—161

New Corporation for Tiruchirappalli and Pudukkottai districts ... ... ... ... ... 298

Pallavan Transport buses, number of deaths due to accidents during 1973-74 ... ... ... 25—26


U.


UNTOUCHABILITY—

Offences in Tirunelveli district, cases registered during 1974 ... ... ... ... ... 29—30

PAGES.

V.

'VANOLI MANRAM'—
Thanjavur district, selection for 1973-74 ... ... 22—23

VEDACHALAM, Thiru M.—
Budget, 1975-76, Voting:
Fisheries ... ... ... ... ...
Social Welfare ... ... ... ... 195—197

VEERASAMI, Thiru N.—
Budget, 1975-76, Voting :
State Legislature ... ... ... ... 339, 370—374
Electricity, Wage Guidelines Committee, functions ... 277—283

VENKATASWAMY, Thiru B.—
Appropriation (No. 2) Bill, 1975 ... ... ... 502—503
Budget, 1975-76, Voting:
Compensation and Assignments ... ... ...
Elections ... ... ... ... ...
Head of State, Ministers and Headquarters Staff ...
Loans and Advances by State Government ... 30, 31, 32,34
Miscellaneous ... ... ... ...
Pensions and Other Retirement Benefits ... ...
Relief on account of Natural Calamities ... ...
State Excise Department ... ... ...
Fisheries ... ... ... ... ... 180, 181, 222—224
Social Welfare ... ... ... ...
State Legislature ... ... ... ... 322, 374—375

VEZHAVENDAN, Thiru K.—
Appropriation (No. 2) Bill, 1975 ... ... ... 505—508
Board of Revenue, abolition ... ... ... 398—401



PAGES.

V—*cont.*

VEZHAVENDAN, THIRU K.—*cont.*
Ealavur-Ambathur bus service, delay in introduction. 298—299
Fire Service Stations in Chingleput district, location. 427—428
Gummudipoondi-Ellapuram Panchayat Union areas, distribution of foodgrains ... ... ... 452
Harijans in Kannigaiper Colony, etc., delay in assignment of house-sites ... ... ... ... 307
Kakkavakkam Harijan Colony, delay in implementing water-supply scheme .. .. . .. 306
Kannampakkam to Naidukuppam, extension of bus service ... ... ... ... ... 160
Madras-Arambakkam bus service, extension to Yedur 299
Madras to Ponthavakkam, irregular bus service ... 160—161
Nelvoy Harijan Colony, delay in providing drinking water ... ... ... ... ... 306
Schools in Gummudipoondi and Ellapuram Panchayat Unions, construction of pucca buildings ... ... 20—21

W

WAHAB, Thiru K. A.—
Budget, 1975-76, Voting:
Compensation and Assignments ... ...
Elections ... ... ... ... ...
Head of State, Ministers and Headquarters Staff
Loans and Advances by State Government ... 31, 32, 64—68
Miscellaneous ... ... ... ...
Pensions and Other Retirement Benefits .. ..
Relief on account of Natural Calamities ... ...
State Excise Department ... ... ...
Fisheries ... ... ... ... 180, 181,
Social Welfare ... ... ... ... 208—210
State Legislature ... ... ... ... ... 321, 362—365
Milk Chilling Centre, opening at Wandiwash ... ... 30[illegible]
Paddy, seizure of hoarded stock ... ... ... 145—153

PAGES.

W—*cont.*

WALK OUT(S)—
A.D.M.K. Members ... ... ... ... 552
WATER-SUPPLY—
Filtered water-supply by Madras Corporation ... 421—422
Harijan Colony at Oonamalai, construction of water tank .. .. .. .. .. .. 308—309
Mallasamudram ... ... ... ... 153—154
Nelvoy Harijan Colony, delay in providing drinking water ... ... ... ... ... 306
Perur village, supply of drinking water to residents ... 307—308
Ramanayakani Tank in Hosur town ... ... 153—154
Scheme at Thirupuvanam, estimate ... ... ... 451
Scheme for Kakkavakkam Harijan Colony, delay in implementation ... ... ... ... ... 306

61707
V211, 31 N75
31N75·70